உ

முருகவேள் பன்னிரு திருமுறை

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாதிய நூல்கள்
மூலமும் உரையும் விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

உரையாசிரியர் :

ராவ்பகதூர், தணிகைமணி, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M.A.
Retired Personal Assistant to the Inspector General of Registration.



திருப்புகழ்

தொகுதி - 4

பதிப்பாளர் :

மீனாக்ஷி கல்யாணசுந்தரம்
2, [illegible] தெரு, வடக்குக் கோபால[illegible] சென்னை-6.

விலை ரூ. 9-8-0

தொகுதிகளின் விவரங்கள் :—

தொகுதி	தலங்கள்	பாடல்கள்	பக்கங்கள்	விலை ரூ.
1	முதல் மூன்று படைவீடுகள்	200	456	5-8-0
2	ஏனைய மூன்று படைவீடுகள்	250	636	7-8-0
3	பஞ்சபூதத் தலங்கள்	210	555	6-0-0
4	ஏனையதலங்கள்	340	900	9-8-0

ஏனைய தொகுதிகள் அச்சில்.

முருகவேள் பன்னிரு திருமுறை

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாகிய நூல்கள்
மூலமும் உரையும் விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

உரையாசிரியர் :

ராவ்பகதூர், தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.
Retired Personal Assistant to the Inspector Genl. of Registration.




திருப்புகழ்

தொகுதி - 4


பதிப்பாளர் :


மீனாக்ஷி கல்யாணசுந்தரம்
2, இரண்டாவது தெரு, வடக்குக் கோபாலபுரம், சென்னை-6.

விலை ரூ. 9-8-0




108 முருகனின் திருஉருவங்கள்


திருப்புள்ளிருக்குவேளூர்
(வைத்தீசுவரன்கோயில்)
திருப்பாதிரிப்புலியூர்
திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
திருவல்லிக்கேணி
ஸ்ரீ வில்லிபுத்தூர்
எட்டி குடி.
வள்ளிமலை
விராலிமலை
பிரான்மலை கொடுங்குன்றம்
சீர்காழி.
திருக்கழுக்குன்றம்



108 முருகன் திருஉருவங்கள்



108 முருகன் திருஉருவங்கள்

உ

முருகவேள் பன்னிரு திருமுறை

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாதிய நூல்கள்

[மூலமும் உரையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்]

உரையாசிரியர் :

ராவ்பகதூர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.

(RETIRED PERSONAL ASSISTANT TO THE INSPECTOR-GENERAL OF REGN. MADRAS.)



திருப்புகழ்

தொகுதி 4

பதிப்பாளர் :

மீனாக்ஷி கல்யாண சுந்தரம்

2, வடக்குக் கோபாலபுரம், இரண்டாம் தெரு, சென்னை-6.

காசி.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னையிலிருந்து (கல்கத்தா வழியாய்) சுமார் 1467-மைல். கங்கை நதி இங்கு வடக்கு-முகமாக ஓடுகின்றது. கங்கையின் இடது கரையில் அமைந்துள்ள மஹா விசேஷமான ஸ்தலம். முத்தி ஸ்தலங்கள் எழனுள் ஒன்று. காசியின் எல்லையில் இறந்தோரை உமை தனது உத்தரீயத்தினுல் இளைப்பாற்றச், சிவபிரான் பிரணவப்பொருளை உபதேசிப்பார்; "உருவாரா தென்று தன் எல்லை வட்டத்தினுள் உற்றிருந்தே இறந்தோர்க், குத்தரீ யத்தினல் உமையிளைப்பாற்றவே உம்பர்கோன் விசுவபதிவர், தொருவலச் செவியினுள் தாரகப் பிரமத்தை உபதேசமாயருளியும், ஓரெட்டு வடிவுதரு காசிநகர்." [க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்].

"காசியை நினைக்க முத்தி காசியென் றுரைக்க முத்தி
காசியைக் காண முத்தி காசியைச் சூழ முத்தி
காசியில் வசிக்க முத்தி காசியைக் கேட்க முத்தி
காசியின் வசிப்போர் தம்மைக் கண்டு தாழ்ந் திடுதல் முத்தி"
"காசியுள்ளநர் காசி கேட்குநர்
காசி காணுநர் ஆசில் முத்தரே"—காசி ரகசியம்.

655. ஞானம் பெற

தான தத்தன தான தானன்
தான தத்தன தான தானன
தான தத்தன தான தானன தனதான

தார ணிக்குதி பூவி யாய்வெகு
சூது மெத்திய மூட னய்மன
சாத னைக்கள வாணி யாயுறு மதிமோக—
தாப மிக்குள வீண னய்பொரு
வேல்வி ழிச்சிய ராகு மாதர்கள்
தாமு யச்செயு மேது தேடிய நினைவாகிப்;
*பூர ணச்சிவ ஞான காவிய
மோது தற்புணர் வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறி டாஇரு வினையேனைப்—
பூசி மெய்ப்பத மான சேவடி
காண வைத்தருள் ஞான மாகிய
போத கத்தினை யேயு மாறருள் புரிவாயே;

* சிவஞான காவியம்—தேவார திருவாசகங்கள்.

655.

இப்பூமியில் அதிக பாவியாய், மிக்க சூது நிறைந்த மூடனாய், மனத்தில் அழுந்தின திருட்டுப் புத்தி உடையவனாய், பொருந்திய மிக்க காம மயக்கில் (அல்லது— அறிவு மயங்கும்)

தாகம் (ஆசை) மிக்குள்ள வீணனாய், சண்டைக்கு உற்ற வேல் போன்ற கண்ணியர்களான (பொது) மாதர்கள் தாம் பிழைப்பதற்கு உதவி செய்யும் (ஏது) செல்வத்தைத் தேடித்தரும் நினைவைக் கொண்டு—

பூரணமான சிவஞான நூல்களை [ஓதுதலில் (மனம்) சேர்ந்துள்ள) — ஓதுதலில் விருப்பங் கொண்டுள்ள அன்பர்கள் பூசுகின்ற உண்மைத் திருநீற்றை — (உண்மை மகிமை வாய்ந்த) திருநீற்றை இடாத இருவினையாளனை—

(திருநீற்றைப்) பூச வைத்து, உண்மைப் பதவியான உனது திருவடிகளைக் காணும்படி அருள்புரிந்து, திருவருள் மயமாம் ஞானம் என்கின்ற அறிவும் (எனக்குக்) கிட்டுமாறு அருள் புரிவாயாக;

*வார ணத்தினை யேக ராவுமு
னேவ ளைத்திடு போது மேவிய
மாய வற்கித மாக வீறிய மருகோனே—

†வாழு முப்புர வீற தானது
நீறெ ழுப்புகை யாக வேசெய்த
மாம திப்பிறை வேணி யாரருள் புதல்வோனே;

‡கார ணக்குறி யான நீதிய
ரான வர்க்குமு ளைக வேநெறி
காவி யச்சிவ நூலை யோதிய கதிர்வேலா—

கான கக்குற மாதை மேவிய
ஞான சொற்கும ராப ராபர
காசி யிற்பிர தாப மாயுறை பெருமாளே. (க)

656. மாதர்மீது மயக்கு அற.

தந்தத் தனதன தானன தானன
தந்தத் தனதன தானன தானன
தந்தத் தனதன தானன தானன தனதான

மங்கைக் கணவனும் வாழ்சிவ ணுமயல்
பங்கப் படமிசை யேxபனி போல்மதம்
வந்துட் பெருகிட வேவிதி யானவ னருள்மேவி—

வண்டுத் தடிகைபொ லாகியெ நாள்பல
பந்துப் பனைபழ மோடிள நீர்குட
மண்டிப் பலபல வாய்வினை கோலும வழியாலே;

திங்கட் பதுசெல வேதலை கீழுற
வந்துப் புவிதனி லே०மத லாயென
சிந்தைக் குழவியெ னவனை தாதையு மருள்கூரச்—

---

* இது திருமால் முதலை வாயினின்றும் யானையை மீட்ட வரலாற்றைக் குறிக்கும் (பாட்டு 110-பக்கம் 262 கீழ்க்குறிப்பு)

† திரிபுரம் எரித்த வரலாறு (பாட்டு 285 பக்கம் 206).

‡ இது முருகவேளின் கூறான சம்பந்தர் தேவாரம் பாடினதைக் குறிக்கின்றது.

x இங்குக் குழந்தை உற்பத்தி-வளர்ச்சி-கூறப்பட்டுள. (பாடல்கள் 241, 565 பார்க்க)

० மதலை—மகன் (பிங்கலம்)

யானையை (கஜேந்திரனை) முதலை முன்பு வளைத்து (இழுத்த) போது அங்கு வந்து சேர்ந்து (உதவின) திருமாலுக்கு இன்பம் தரும் வழியில் மேம்பட்டு விளங்கும் மருமகனே!

வாழ்ந்திருந்த முப்புரங்களின் பொலிவு சாம்பலாகவும், புகை எழவும் செய்த சிறந்த திங்கட்பிறை அணிந்துள்ள சடைப்பெருமான் அருளிய புதல்வனே!

(எவைக்கும் மூல) காரண இலக்குப் பொருளான நீதிப் பெருமானை-சிவபிரானுடைய சந்நிதிகளிலே அற நெறியை ஓதும் பிரபந்தமாகிய சிவநூலாம் "திருநெறித் தமிழ்" எனப்படும் தேவாரத்தைச் (சம்பந்த மூர்த்தியாய்) ஓதின ஒளிவேலனே!

காட்டில் குறப்பெண் வள்ளியை விரும்பி அடைந்த, ஞானமொழி பேசும் குமரனே! மேலாம் பொருளே! காசித் தலத்தில் பிரபலமாக வீற்றிருக்கும் பெருமாளே!

(போதகத்தினை ஏயுமாறருள் புரிவாயே)

656

ஒருமாதும் அவள் கணவனும் வாழ்ந்து பொருந்தி காம இச்சை என்னும் சிறுமை தம்மீது அடைய—(அதன் மூலமாய்)ப் பனிபோலச் சுக்கிலம் தோன்றி உள்ளே பரவ, பிரமதேவனது அருள் கூடி—

வண்டு (தடிகை போல) தடித்து வளருவது போல ஆகி, நாள் பல செல்ல, பந்தின் அளவாகிப் (பின்பு) பனம் பழத்தின் (அளவாகி), (பின்னர் இளநீர் போலவும், குடம் போலவும் நெருங்கி வளர்ந்து, பின்னும் பலபல வளர்ச்சியுடன்—புணர்தல் செய்த அந்த இடத்தின் வழியாக—

மாதம் பத்து ஆகத் தலைகீழாக வந்து பூமியில் (மதலாய் என) மகன் எனப் பேர் பெற்று, மனதுக்கு இனிய குழந்தையாகி-(அனை தாதையும்) அன்னையும்—தாயும், தந்தையும் ·அன்புமிக்கு, (அல்லது மருள்-ஆசை மயக்கம் மிக்கு)

செம்பொற் றடமுலை பால்குடி நாள்பல
பண்புத் தவழுநடை போய்வித மாய்பல
சிங்கிப் பெருவிழி யாரவ மாயதி லழிவேனோ;

*அங்கைத் தரியென வேயொரு பாலக
னின்பக் கிருபைய தாயொரு தூண்மிசை
அம்பற் கொடுவரி யா†யிரண யாசுர னுடல்பீறி-

அண்டர்க் கருள்பெரு மான்‡முதி ராவணி
சங்குத் திகிரிக ரோனரி நாரவ
ரங்கத் திருவணை மேல்துயில் நாரணன் மருகோனே;

கங்கைச் சடைமுடி யோனிட மேவிய
Xதங்கப் பவளொளி பால்மதி போல்முக
கங்குற் றரிகுழ லாள்பர மேசுரி யருள்பாலா-

oகந்துப் பரிமயில் வாகன மீதிரு
கொங்கைக் குறமக ளாசையொ டேமகிழ்
கங்கைப் பதிநதி காசியில் மேவிய பெருமாளே (உ)

---

* இரணியன் வதை—வரலாறு பாடல் 327-1. பக்கம் 317 கீழ்க்குறிப்பு.

'அங்கைத்து அரி' என்று கூறிய பிரகலாதனது திடத்தை—

"தூணிலும் உளன் முன் சொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை காணுதி விரைவின் என்றான்"

"யான் முன் சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றானெனின், என்னுயிர் யானே மாய்ப்பல்" எனவரும் கம்ப ராமாயணத்திற் காண்க. (இரணியவதை—124, 126)

† 'அசுரன் உடல்பீறி அண்டர்க்கருள் பெருமான்—"தீயெழப் பிளந்து நீக்கித் தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்"கம்பராமா-இரணி-153.

‡ முதிர்தல்—ஒழிதல்-நீங்குதல் "கதிரொழி காறும் கடவுட்டன்மை முதிரா தங்கீர"—சிலப்பதி-30-65-66.

x தேவி—தங்க நிறம், பவள நிறம் - கொண்டவள் என்பது காகினி, செய்யாள், என்னும் திருநாமங்களாற் பெறப்படும்; பால் மதிபோல் முகம்—தேவி-ஹாகினி வெண்ணிறத்தவளாதலின்-பாடல் 179 பக்கம் 416-417 கீழ்க்குறிப்பு 8; பாடல் 223 பக்கம் 62 கீழ்க்குறிப்பு 'செய்யாள் திருமகளாக உள்ளவள் எனலும் ஆம்; டாகினி, லாகினி என்னும் திருநாமங்களோடு உள்ள அம்பிகையும் ஆம்" (அபிராமி அந்தாதி உரை-பாடல் 21),

o கந்து—குதிரையின் முழுப் பாய்ச்சல்

செவ்விய பொலிவுள்ள பருத்த கொங்கைப் பாலைக் குடிக்கின்ற நாள்கள் பல செல்லப், பின்பு அழகிய தவழ் நடை நாள்களும் செல்ல, ஒழுங்கான பல (சிங்கி) விஷம் அனைய பெரிய கண்களை உடைய பொதுமகளிரொடு பொழுது போக்கும் பயனற்ற வாழ்க்கையில் அழிந்து போவேனோ!

அங்கைத்து அரி யெனவே (திருமால் கையகத்து உள்ளான்—(உள்ளங்கை நெல்லிக் கனிபோல எளிதிற் புலப்படுவான்) என்று ஒரு (பாலகன்) பிள்ளை-பிரகலாதன்-கூறிட—இன்பக் கிருபையதாய்—(அந்தப் பாலகனுடைய பேச்சுக்குக் குறை வராத வழியில்) இன்ப அன்புடனே ஒரு தூணிலிருந்து அழகிய பற்களைகொண்ட (கொடு) பயங்கரமான (அரியாய்) நரசிங்கமாய்த் (தோன்றி) இரணியாசுரனுடைய உடலைக் கிழித்து—

தேவர்களுக்கு உதவி புரிந்த பெருமான், முதிரா அணி (ஒழியாத) தம்மைவிட்டு நீங்காத ஆபரணங்களான (பாஞ்சசன்னியம்என்னும்) சங்கையும், (சுதரிசனம்என்னும்) சக்கரத்தையும், திருக்கரத்திற் கொண்டவன், அரி (ஹரி) நார—(காவிரி-கொள்ளிடம் என்னும் நதியின்) நீரிடையே உள்ள (அரங்கத்து) சீரங்கம் என்னும் தலத்தில் (ஆதிசேடன் என்னும்) சிறந்த-பெரிய அணைமேல் துயில் கொள்ளும்—பள்ளி கொள்ளும் நாராயணமூர்த்தியாகிய திருமாலின் மருகனே!

கங்கையைச் சடையில் தரித்துள்ள சிவபிரானுடைய இடது பாகத்திற் பொருந்தியவளாய்த் தங்கம், பவளம் இவற்றின் ஒளியும்கொண்டவளாய், பால்நிறத்துவெண்மதி போலத் திருமுகம் கொண்டவளாய், இருள் கொண்ட கூந்தலை உடைய பரமேசுரி அருளிய குழந்தையே!

(கந்துப் பரிமயில்) பாயவல்ல குதிரை போன்ற மயில் வாகனத்தின் மேல் இருகொங்கைகளை உடைய குறமகள்—வள்ளியை—ஆசையுடனே மகிழ்கின்ற பெருமாளே! கங்கை நதிக்கரையில் உள்ள (பதி) ஸ்தலமாகிய காசியில் வீற்றிருக்கும் பெருமாளே!

பெருவிழியார் அவமாய் அதில் அழிவேனோ)

657. உய்ய.

தான தந்தன தானன தனதான

*வேழ முண்ட விளாகனி யதுபோல–
மேனி கொண்டு வியாபக மயலூறி;
நாளு †மிண்டர்கள் போல்மிக அயர்வாகி-
நானு நைந்து விடாதருள் புரிவாயே;
‡மாள அன்றம ணீசர்கள் கழுவேற–
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா;
காள கண்ட னுமாபதி தருபாலா–
காசி கங்கையில் மேவிய பெருமாளே. (ரு)

---

* வேழம் உண்ட விளங்கனி :
வேழம் என்னும் நோயால் உண்ணப்பட்ட விளாம்பழம் உள்ளீடில்லாமற் போகும் ..''களிறுண்டதோர் விளங்கனிபோல் வறிதா'' தஞ்சை வாணன்கோவை 56, சீவக சிந்தாமணியில் "வேழந் தற்றிய வெள்ளில்"-எனவரும் 232 பாட்டில் வேழம்-வெள்ளிலுக்கு (விளாம்பழத்துக்கு) வருவதொரு நோய்'—என்றும், 1024-ஆம் பாடலில்—'வெஞ்சின வேழம் உண்ட வெள்ளிலின் வெறியமாக நெஞ்சமு நிறையு நீல நெடுங்கணாற் கவர்ந்த கள்வி' என்ற இடத்துக் 'கொடிய வேழமென்னும் நோயுண்ட விளாம்பழம் போலே வெறுவி யேமாம்படி நெஞ்சையும் நிறையையும் பிறரறியாமற் கண்ணினாற் கவர்ந்த கள்வி'' எனவும், வேழம்—தேரை போயிற் றொன்றாற் போல்வதொரு நோயென்க. இனி யானை யுண்டது வெறுவிதாம் என்றும் உரைப்ப.'' என்வும், 1122-ஆம் பாடலில் 'வெஞ்சின வேழமுண்ட விளங்கனி போன்று நீங்கி'-என்ற இடத்து 'களிறுண்ட விளங்கனி போன்று வெறுவிதாக அறிவு முதலியன நீங்கி' எனவும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.
வேழம்-விளாம்பழத்துக்கு வருகின்ற ஒரு நோய் என்பதே உண்மைப் பொருள் என்பது—'உலங்குண்ட விளங்கனிபோல் உள் மெலியப் புகுந்து என்னை நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே''—எனவரும் நாச்சியார் திருமொழியால் (8-6) நன்கு விளங்குகின்றது. (உலங்கு-கொசுகு)
† 'மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்—திருப்பல்லாண்டு. (‡—பக்கம் 9-பார்க்க)

657.

வேழம் என்னும் நோய் உண்ட விளாம்பழம் போல—

மேனி—(உள்வீடு அற்ற-உள்ளிருக்கும் சத்து அற்ற) மேனியை அடைந்து எங்கும் காம இச்சை ஊறிப் பரவி—

நாள்தோறும் அறிவின்மையில் திண்மை (வலிமை) கொண்ட (மூடர்கள்) போன்று, மிகுந்த தளர்ச்சி யடைந்து—

நானும் மெலிந்து வாட்டமுறாதபடி அருள் புரிவாயாக!

(அன்று ‡அமணீசர்கள் கழுவேற மாள)-முன்பு சமணக் குருக்கள்மார் கழுவிலேறி மாளும் வண்ணம்—

(வாது செய்து அவ்)வாதில் வென்ற சிகாமணியே! மயில் வீரனே!

(காள கண்டன்) விஷமுண்ட கண்டனாகிய உமை கணவனும் சிவபிரான் தந்த-பிள்ளையே!

கங்கை (நதிக்கரையில் உள்ள) காசித் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(நானு நைந்து விடா தருள் புரிவாயே)

---

‡ அமணிசர்கள்—இவர்கள் சமண குருக்கள்மார். எண்ணா யிரவர். "தளம்பு நெஞ்சுடைய எண்ணா யிரஞ்சமண் தலைவ ராயோர், உளம்பரி வொடுகழுக்கண் யோசனை யகல மேற, வளம்பட வாதுசெய்த வாரணம் என்னு நாமம், விளங்கிய தன்று முன்னா மேதகு தராதலத்தே."—திருவாலவா 49-38

"எண்ணாயிரவர்க்கும் விடாதவெதுப் பிவனால் விடுமென்ப திழித்தகவே

"மண்ணா உடம்பு தங்குருதி மண்ணக் கழுவின் மிசை வைத்தார் எண்ணா யிரவர்க் கெளியரோ நாற்பத் தெண்ணா யிரவரே.—தக்கயாகப்பரணி 191, 219

மாயாபுரி.

[இது ஹரித்துவாரம் :—முத்தித் தலங்கள் எழனுள் இதுவும் ஒன்று ; 'அரித்துவார மாயாபுரியே'—பிங்கலம்]

658. நினைந்துய்ய.

தனன தனந்த தானன தனதான

*சிகர †மருந்த ‡வாழ்வது சிவஞானம்-
சிதறி யலைந்து போவது xசெயலாசை
०மகர நெருங்க **வீழ்வது மகமாய-
மருவி ††நினைந்தி டாவருள் புரிவாயே;
‡‡அகர நெருங்கி xxனுமய முறவாகி-
அவச மொடுங்००கை யாறொடு முனமேகிக்;
ககன மிசைந்த ***சூரியர் புக†††மாயை-
‡‡‡கருணை பொழிந்து மேவிய பெருமாளே.

---

* சிகரம்—'சி' ஒன்னும் எழுத்து. சிகரம்—'சி' காரம் மஹாமநு. சிவாயநம என்பதில் 'சி' காரம் சிவத்தை உணர்த்தும்; மகரம்—ஆணவ மலத்தை உணர்த்தும்; திருப்புகழ் 262-பக்கம் 152-கீழ்க்குறிப்பு.

† அருந்த—உச்சரிக்க. ‡ வாழ்வது—உண்டாவது.

x செயலாசை—பற்று. ० மகரம்—'ம' என்னும் எழுத்து.

** வீழ்வது—வந்து சேர்வது.

†† நினைந்திடா அருள்—நினைப்பு மறப்பு அற்ற நிலையருள். 'நினைந்திட' என்பது 'நினைந்திடா' எனச் சந்தம் நோக்கி நீண்டது எனவும் கொள்ளலாம். ‡‡ அகரம்—வீதி,

xx ஆமயம்—நோய். ०० கையாறு—செயலறுதல்.

*** சூரியர்—ஆதித்தர் பன்னிருவர்.

††† மாயை—மாயாபுரி என்னும் ஸ்தலம்.

‡‡‡ இப் பாட்டின் பின் நான்கடிகள் சூரனது அரசாட்சியில் சூரியர்கள் பட்ட துன்பத்தையும் பின்னர் முருகவேளால் அடைந்த சுகத்தையும் விளக்குகின்றன ; தனது நகராகிய வீர மகேந்திரபுரி வழியாகச் செல்லும்போது சூரியன் தனது உக்ரத்தை அடக்கி இளங்கதிர் பரப்பிச் செல்லுதல் வேண்டும் என்பது சூரியனுடைய ஆக்ஞை (கட்டளை)

"அறத்தினை விடுத்த தீயோன் அருக்கனை நோக்கி நம்மூர்ப்
புறத்தினில் அரண மீதாய்ப் போகுதல் அரிது கீழ்மேல்
நிறுத்திய சிகரியூடு நெறிக்கொடு புக்கு; வான்போய்
எறித்தனை திரிதி நாளும் இளங்கதிர் நடாத்தி என்றான்"

—கந்தபுராணம் 2-17-3.

மாயாபுரி.

658

"சிவாயநம" என்னும் பஞ்சாக்ஷரத்தில் உள்ள "சி" என்னும் மஹாமநுவை (அருந்த) உச்சரிப்பதனல் (வாழ்வது) உண்டாவது சிவஞானமாம்—

(அத்தகைய உச்சரிப்பால்) சிதறுண்டு அலேந்து அழிந்து போவது [மனம், வாக்கு, காயம் இவைகளின்] செயலும் ஆசைகளும்—[மோன ஞானம், நிராசை உண்டாகும் என்றபடி].

"ம" என்னும் எழுத்து நெருங்குவதால் வந்து கூடுவதுதான் மகாமாயம் [அல்லது—"ம" என்னும் எழுத்து நெருங்கும் பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பதால் வீழ்வது—தொலேந்து போவது மகாமாயை]—

(மருவி) உன்னே மருவி—தியானித்து, அதன் பயனுக, நினேந்திடா அருள் [நினேப்பு மறப்பு அற்ற நிலேயை] அருள் புரிவாயாக [அல்லது-மருவி ஐந்தெழுத்தை ஓதி நினேந்திட அருள்புரிவாயே]

(மகேந்திரபுரியின்) வீதிகளில் நெருங்கி வந்தால் நோய்க்கு (வருத்தத்துக்கு) உறவாகி—இடம் பெற்று

(அவசமொடும்) மயக்கத்துடனும் (கையாறுடும்) (தன் செயலற்றும் (முனம்) சூரனது அரசாட்சிக்காலத்தில் ஏகி) சென்று—

ஆகாயத்திற் பொருந்தியிருந்த ஆதித்தர் பன்னிருவரும் அவ்வூரிற் (புக) அஞ்சிப் புக, (அல்லது உன்னிடத்திற் சரண்புக) — (சூரசம்மாரஞ் செய்து அவர்களுக்குக்) (கருணே பொழிந்து மேவிய பெருமாளே) மாயாபுரியில் வீற்றிருக்கும் பெருமாளே !

(அவர்களுக்கு) கருணே பாலித்து வீற்றிருக்கும் பெருமாளே !—மாயை (மாயாபுரியில்) மேவிய பெருமாளே !

(நினேந்திட அருள் புரிவாயே)

வயிரவிவனம்.

[இது பஞ்சாப் மாகாணத்திற்ஞ் சரஸ்வதி நதிக்கரையில் இருப்பதாகத் தெரிகின்றது; ஆயினுஞ் சரியான இடம் விளங்கவில்லை.]

659. அடியார்களைப் பணிய

தனதன தனத்த தான தனதன தனத்த தான
தனதன தனத்த தான தனதான

*அருவரை யெடுத்த வீர னெரிபட விரற்க ளூனு
மரனிட மிருக்கு மாயி யருள்வோனே-
†அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு
மணிமயில் நடத்து மாசை மருகோனே;
பருதியி னொளிக்கண் வீறும் அறுமுக நிரைத்த தோள்ப
னிருகர மிகுத்த ‡பார முருகாநின்-
பதமல ருளத்தி னாளு நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே;
சுருதிக ளுரைத்த வேத னுரைமொழி தனக் குxளாதி
சொலுவென வுரைத்த ஞான குருநாதா-
சுரர்பதி தழைத்து வாழ அமர்சிறை யனைத்து மீள
துணிபட அரக்கர் மாள விடும்வேலா;
மருமலர் மணக்கும் வாச நிறைதரு தருக்கள் சூழும்
வயல்புடை கிடக்கு நீல மலர்வாவி-
வளமுறு தடத்தி னோடு சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே.

---

* இராவணன் கயிலையை எடுக்க முயன்று நேர்வு உண்டது:
—பாடல் 188-பக்கம் 44C-கீழ்க்குறிப்பு.

† வானரங்கள் மலைகளையும் மரங்களையும் கொண்டுவந்து போட ஸ்ரீராமர் முன்னிலையில் நளன் (விசுவகர்மாவின் பிள்ளை) ஐந்து நாளில் சமுத்திரத்தில் அணையைக் கட்டினன்.

‡ பாரம்—பெருமை—"பாரமாம் மரபினிற் பிறந்தவர்"
—வில்லி பார சம்பவ-39.

x முருகவேள் பிரமனைப் பொருள் வினவினது
—பாடல் 212-பக்கம் 42 கீழ்க்குறிப்பு.

வயிரவிவனம்.

659.

அருமை வாய்ந்த (கயிலை) மலையை அசைத்து எடுக்க முயன்ற வீரனான ராவணன் நெரிபடும்படி (தமது) விரல்களை ஊன்றிய சிவபிரானது இடது பாகத்தில் இருக்கும் ஆயி (தாய்-பார்வதி) பெற்ற குழந்தையே!

அலை வீசுங் கடலை அணையிட்டு அடைத்த ஸ்ரீராமர் மிகவும் மனமகிழ்ச்சி கொள்ளும ஆசை (மருகனே!); அழகிய மயிலை வாகனமாகக் கொண்டு (ஆசை) (எட்டுத் திக்கிலும்) நடத்தின மருகனே!

சூரியனது ஒளி தம்மிடத்தே விளங்கும் முகங்கள் ஆறு உடையவனே! வரிசையாயுள்ள தோளும், கரமும் பன்னிரண்டு கொண்டவனே! மிக்க பெருமை வாய்ந்த முருகனே! உனது

திருவடி மலரை உள்ளத்தில் நாளும் நினைத்துத் தொழுதிருக்கும் கருத்தை உடைய அடியார்களின் தாள்களைப் பணிந்தொழுகவும் எனக்கு ஞானத்தைத் தந்தருளுக.

வேதங்களைக் கூறும் பிரமன் சொன்ன மொழிகளுள் முதலாவதான சொல்லை (ஓம் என்பதற்குப் பொருளைச்) சொல்லுக என்று தந்தையார் கேட்க,(அங்ஙனமே) பொருள் ஞானகுருநாதனே! (அல்லது உரைத்த சொல்லுக என்று (பிரமனைக்) கேட்ட ஞான குருநாதனே!

தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் செழிப்புடன் வாழத் தேவர்கள் சிறையிலிருந்தோர் யாவரும் (அல்லது இருந்த சிறையினின்றும் (தேவர்கள்) யாவரும்) மீளவும், வெட்டுண்டு அசுரர்கள் இறந்தொழியவும் செலுத்தின வேலாயுதனே!

வாசனை மலர்கள் மணம் வீசும் நறுமணம் நிறைந்துள்ள மரங்கள் சூழ்ந்துள்ள வயல்கள் பக்கத்தில் உள்ள நீலோற்பல மலர் மலர்ந்துள்ள நீர்நிலைகளின்—

வளப்பம வாய்ந்த கரைகளோடு சரஸ்வதி என்னும் ஆற்றினிடத்தே விளங்குகின்ற வயிரவி வனம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(ஞானம் அருள்வாயே)

வெள்ளிகரம்.

[இது அரக்கோணத்துக்கு வடக்கு 22-மைல் தூரத்திலுள்ள வேப்பகுண்டா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கு 12-மைல். வழியில் 10-ஆவது மைலிற் பள்ளிப்பட்டு என்னும் ஊரிருக்கின்றது.]

660. மோனம் பெற

தனதன தனன தனதன தனன
தய்ய தனத்த தந்த தனதான

அடலரி மகவு விதிவழி யொழுகு
மைவ ருமொய்க்கு ரம்பை யுடனேயும்-
அலைகட லுலகி *லலம்வரு கலக
மைவர் தமக்கு டைந்து தடுமாறி;
இடர்படு மடிமை யுளமுரை யுடலொ
டெல்லை விடப்ர பஞ்ச மயல்தீர-
எனதற நினது கழல்பெற †மவுன
வெல்லை குறிப்ப தோன்று புகல்வாயே;
வடமணி முலையு மழகிய முகமும்
வள்ளை யெனத்த யங்கு மிருகாதும்-
மரகத வடிவு ‡மடலிடை யெழுதி
வள்ளி புனத்தில் நின்ற மயில்வீரா;
xவிடதர திகுண ரசசிதர் நிமலர்
வெள்ளி மலைச்ச யம்பு குருநாதா-
விகசித oகமல பரிபுர முளரி
வெள்ளி கரத்த மர்ந்த பெருமாளே. (க)

---

* அலம்—சஞ்சலம்—துன்பம்; 'தக்கதென் கொல் என்றென்று அலம் தலையுற்ற அரும்புலன்கள் ஐந்தும்'
—கம்பராமா—கைகேசி சூழ்—13.

† மவுன எல்லை—ஞானநிலை—"மோனம் என்பது ஞான வரம்பு" (கொன்றைவேந்தன்) என்றாராதலின்.

‡ மடல் எழுதுதல்-பாடல் 235-பக்கம் 87 கீழ்க்குறிப்பு; பாடல் 289—பக்கம் 220; பாடல் 668- பக்கம் 32 கீழ்க்குறிப்பு

x விடத்தைத் தரித்த—தி குண—ஞானத்தையே குணமாகக் கொண்ட—ரச சிதர்—சுவைகளை (ஜிதர் ஜெயித்தவர்)—அல்லது—விஷ-த விஷத்தைத் தருகின்ற ரதிகுண ரசஜிதர்-காம இச்சையாகிய சுவையை ஜெயித்தவர்—எனவும் பொருள் காண்பர்.

o கமலம் — தாமரை; நீர் — (திவாகரம்)--"முடிக்கமலம் சூடினேன்"—கமலம்—கங்கைநீர்—சிதம்பரம் மும்மணிக்கோவை 18

வெள்ளிகரம்.

660.

வலிமை வாய்ந்த (அரி) திருமாலின் (மகவு) பிள்ளையான பிரமா எழுதிவிட்ட விதியின் வழியே செல்லுகின்ற ஐவரும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐவகை உணர்ச்சிகளும் நெருங்கி வேலைசெய்யும் (குரம்பையுடன் குடிலாகிய இவ்வுடலுடன் நாள்தோறும்—

அலைவீசும் கடல் சூழ்ந்த இவ்வுலகில் (அலம் வரு) துன்பம் உண்டாகின்ற கலகங்களைச் செய்யும்—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்-பஞ்சேந்திரியங்களால் மனம் உடைபட்டுத் தடுமாற்றம் அடைந்து—

வருத்தங்களுக்கு ஆளாகின்ற அடிமையாகிய நான் மனம் வாக்கு, காயம்—இவை மூன்றும் (எல்லைவிட ப்ரபஞ்ச மயல் தீர) ப்ரபஞ்ச எல்லைவிட — உலகத்தில் (ஈடுபடுதல்) முடிவு பெற்றொழிய, (பிரபஞ்ச) மயல் தீர—மயக்கம் ஒழிய—

எனதற—எனது எனப்படும் பாசம் (மமகாரம்) நீங்க, உன்னுடைய திருவடியை அடைய, மோன வரம்பைக் குறிப்பதாகிய ஓர் உபதேசத்தை அருள்புரிவாயாக;

(வள்ளியின்) மணிவடம் அணிந்த கொங்கையும், அழகுள்ள திருமுகமும், வள்ளைக்கொடிபோல விளங்குகின்ற இரண்டு காதுகளும்

மரகத நிறமும், இவையெலாம் விளங்க, மடல் (படத்தில்) எழுதி, வள்ளியினுடைய தினைப்புனத்தில் நின்ற மயில்வீரனே!

விடதர் (விஷத்தைக் கண்டத்தில்) தரித்தவர், (அதி குணர்) மேம்பட்ட சிறந்த குணத்தைக்கொண்டவர், — அ சசிதர்) அந்த சசித(ர)ர் — அந்த சந்திரனைச் சடையில் தரித்தவர் (அல்லது அதிகுண ரச சி(த்)தர்— மேலான குண இனிமையைக் கொண்ட சித்தமூர்த்தி), பரிசுத்தர் (வெள்ளிமலை- கயிலை மலையில் வீற்றிருக்கும் சுயம்பு மூர்த்தியாகிய சிவபிரானுக்குக் குருநாதனே!

(விகசிதம்) மலர்ந்த தாமரை சிலம்பணிந்த (முளரி) தாமரை—போன்ற திருவடியை உடைய பெருமாளே! (அல்லது கமல விகசித முளரி—நீரில் மலர்கின்ற தாமரை, சிலம்பணிந்த தாமரை, ஆகிய திருவடியை உடைய பெருமாளே)! வெள்ளிகரம் என்னும் தலத்தில் அமர்ந்த பெருமாளே!

(மவுன எல்லை குறிப்பதொன்று புகல்வாயே)

661. திருவடியைப் பெற

தனதன தனன தனதன தனன
தய்ய தனத்த தந்த தனதான

சிகரிக ளிடிய நடநவில் *கலவி
செவ்வி மலர்க்க டம்பு சிறுவாள்வேல்-

திருமுக சமுக சததள முளரி
திவ்ய கரத்தி ணங்கு பொருசேவல்;

அகிலடி பறிய எறிதிரை யருவி
ஐவன வெற்பில் †வஞ்சி கணவா என்-

றகிலமு முணர மொழிதரு மொழியி
னல்லது பொற்பதங்கள் பெறலாமோ;

நிகரிட அரிய ‡சிவசுத பரம
Xநிர்வச னப்ர சங்க குருநாதா-

---

* கலவி—கலாபி: மயில். "வாசி அடியிட எண் திசைவரை தூள்பட்ட"—கந்தரலங்காரம் 11.

† 'வஞ்சி கணவா என்று மொழியின் அல்லது பொற்பதங்கள் பெறலாமோ' என்றது—"எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச் சிந்தை செய்பவர்க் கல்லால் சென்று கை கூடுவதன்றால் . அரத்துறை அடிகள் தம் அருளே" என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கை நினைவூட்டுகின்றது.

இந்த 661-ஆம் பாடல் மனப்பாடஞ் செய்யவேண்டிய பாடல்களுள் ஒன்று.

‡ 'அதிவித மதுர' என்றும் பாடம்.

X 'நிர்வசன ப்ரசங்கம்'—"சும்மா இரு—சொல்லற" என்னும் கருத்தது. 'அரனுர் முன்—வாசகம் பிறவாதோர் ஞான சுகோதயம் புகல்வாசா தேசிக' என்றார் பிறிதோரிடத்து (திருப்புகழ் 705)

661.

அஷ்டகிரிகளும் பொடிபட நடனம் செய்கின்ற மயில், செவ்விதான [அன்றலர்ந்த-புதிய] கடப்பமலர், சிறுவாள், வேல்,

திருமுகக் கூட்டமாம் [நூற்றிதழ்த்] தாமரை — [தாமரை போன்ற ஆறு திருமுகங்களின் தோற்றம்]— திவ்யமான திருக்கையிற் பொருந்திய போர் செயவல்ல கோழி [இவைகளைக் கொண்ட.... கணவா !] [சேவல்— பொரு...கணவா — கோழி — இவையெலாம் பொருந்திய [வள்ளி] கணவனே ! எனலுமாம்.

அகில் மரத்தின் அடியைப் பறித்து எறியும் திரைவீசும் அருவிகள் பாய்கின்ற [ஜ்வன வெற்பில்] மலை நெல் விளையும் வள்ளி மலையில் வாழ்வுற்ற வஞ்சிக்கொடி போன்ற வள்ளியின் கணவனே ! என்று

உலகெலாம் உணரச் சொல்லும் சொற்களால் அல்லது உனது அழகிய திருவடிகளைப் பெற முடியுமோ ! [பெற முடியாது என்றபடி].

ஒப்பிடுதற்கு அருமையான சிவத்தின் சேயே! பரமனே ! [அல்லது மேலான—அல்லது பரமனிடத்தில்] வாக்குக்கு எட்டாததான [அல்லது வசனம் இல்லாத தான—மௌனப்] பிரசங்கத்தைச் செய்த குருநாதனே !

நிரைதிகழ் பொதுவர் நெறிபடு பழைய
*நெல்லி மரத்த மர்ந்த அபிராம;
†வெகுமுக ககன நதிமதி யிதழி
வில்வ முடித்த நம்பர் பெருவாழ்வே-
விகசித கமல பரிமள கமல
வெள்ளி கரத்த மர்ந்த பெருமாளே. (உ)

662. திருவடியைப் பெற

தனதன தய்ய தனதன தய்ய
தனதன தய்ய தனதான

குவலய மல்கு ‡தவலிகள் முல்லை
குளிர்நகை சொல்லு முதுபாகு-
குழையிள வள்ளை யிடைசிறு வல்லி
Xகுயமுலை கொள்ளை oவிழைமேவிக்;

---

* இங்குக் குறிப்பிட்ட நெல்லிமரம் எங்குள்ளது என்பது விளங்க இல்லை ஆயினும் திரு ஏரக மான்மியத்தில் உள்ள பின் வரும் வரலாற்றால் சுவாமி மலையில் உள்ள நெல்லிமரம் என ஒருவாறு கொள்ளலாம்: "சிவபெருமானும் தேவியும் ஒன்றி யிருந்தபோது—தேவர்கள் தாரகன் என்னும் அசுரனைக் கொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தனர். சிவபிரான் தேவியை விட்டு நீங்கித் தமது ரேதசைப் பூமி தேவியிடம் விட்டனர். "எங்கள் கிரீடைக்கு விக்கினம் பண்ணியதால்—தேவர்களே! நீங்கள் புத்திர ஹீனர்களாகப் போகக்கடவது; பூமிதேவியே! நீ பலருடைய அனுபோகத்துக்கு உரியவளாகக் கடவது எனப் பார்வதி சாபம் இட்டனள். பூமிதேவி ஷண்முகரைப் பிரார்த்தித்து இந்தச் சாபம் நீங்கப் பெற்று, அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் அவருடைய பக்கத்திலே நெல்லி விருக்ஷவடிவமாய் நின்று சதா அவரைச் சேவித்து வந்தாள். குகமூர்த்தி சுவாமிமலைக்கு எழுந்தருளி வந்தபோது பூமிதேவி கூடவே வந்து அந்த க்ஷேத்திரத்தில் நெல்லி விருக்ஷமாய்ச் சுவாமி சந்நிதிக்குத் தென்பால் நின்றுகொண்டு நித்தியம் குக மூர்த்தியைச் சேவித்து வருகின்றாள்"—என்பது திருவேரக மான்மியம்.

இனி 'நெல்லி விருக்ஷம்'—திரு ஆவினன்குடி—பழநியிலும் உள்ளது 'திரு ஆவினன்குடிக் கோயிலின் வட கிழக்கில் சரவணப் பொய்கை அமைந்துளது; காவடி எடுப்போர் இத் தலத்தி னின்றுமே தம் பிரார்த்தனைகளைக் கொண்டு செல்வர்: இத்தல விருக்ஷம் "நெல்லி" யாகும். —பழநித்தல வரலாறு—பக்கம் 38.

(தொடர்ச்சி—பக்கம் 19 பார்க்க)

பசுக்கூட்டங்களை விளங்கக் கொண்ட (பொதுவர்) இடையர்கள் செல்லும் வழியில் உள்ள பழைய நெல்லி மரத்தின் கீழ் அமர்ந்த அழகனே!

ஆயிரமுகமாக ஓடும் ஆகாய கங்கையையும், நிலவையும், கொன்றையையும, வில்வத்தையும் சிரசிற் சூடியுள்ள (நம்பர்) பெருமானுடைய பெருஞ் செல்வமே!

மலர்ந்த தாமரையொத்த திருவடியை உடைய பெருமாளே! நறுமணமுள்ள தாமரையை ஒத்த திருவடியை உடைய பெருமாளே! வேள்ளிகரத்தமர்ந்த பெருமாளே! [அல்லது மலர்ந்த தாமரைகளும் நறுமணத் தாமரைகளும் உள்ள வேள்ளிகரத்தில் அமர்ந்த பெருமாளே எனலுமாம்.]

(பொற்பதங்கள் பெறலாமோ)

662.

உலகில் நிறைந்த குறைபாடுள்ளவர்களாம் [பொது மகளிரின்] [குளிர்நகை முல்லை] குளிர்ந்தபற்கள், முல்லைமலர் போன்றவை; பேசும் சொல் முற்றின வெல்லம் போன்றது—

காது இளங்கொடி வள்ளைக்கொடி, இடை ஒரு சிறிய கொடி, [குயமுலை] இளமுலை—[அல்லது குயம் எனப்படும் கொங்கை]—கொள்ளை—நிரம்பியுள்ளது—என்று எல்லாம் கூறி விருப்பம் மிக்கு அடைந்து—

[18 ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி.]

பின்னும்—திருவாரூருக்குத் தெற்கே 8 மைல் தூரத்தில் உள்ள திரு நெல்லிக்கா என்னும் தேவாரம் பெற்ற தலத்திலும் "நெல்லிமரம்" ஸ்தல விருக்ஷம். அது கோயிலில் இருக்கின்றது.

† "இதழி வெகுமுக ககன நதி . உடுபதி சேர் ஜடாமவுலி" சீர்பாத வகுப்பு.

'வெகுமுக ககன நதி'—கங்கை. ககனத்தில் நின்று இழிந்தது; கங்கைக்குச் "சுவர்க்கத்தில் மந்தாகினி", பூமியில் 'கங்கை', பாதளத்தில் 'போகவதி' எனப் பெயர்—(அபிதான சிந்தாமணி)

கங்கை சூடிய வரலாறு

—பாடல் 446. பக்கம் 622—கீழ்க்குறிப்பு.

‡ தவவிகள்—குறைவானவர்கள். தவல்—குற்றம், குறைவு.

X குயம்—இளமை (திவாகரம்); கொங்கை.

O விழைமேவி—விழைந்து மேவி; விழைதல்மேவி.

கவலைசெய் வல்ல தவலரு முள்ள
*கலவியில் தெள்ளு கவிமாலை-
கடிமல ரைய அணிவன செய்ய
கழலிணை பைய அருள்வாயே;
†தவநெறி யுள்ளு சிவமுனி துள்ளு
தனியுழை புள்ளி யுடனடித்-
தருபுன வள்ளி மலைமற ‡வள்ளி
தருதினை மெள்ள நுகர்வோனே;
அவநெறி சொல்லு மவரவை கொல்லு
மழகிய xவெள்ளி நகர்வாழ்வே-
o அடையலர் செல்வ மளறிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (௩)

663. திருநாமக்கூற

தனதன தய்ய தனதன தய்ய
தனதன தய்ய தனதான

பொருவன கள்ள இருகயல் வள்ளை
புரிகுழை தள்ளி விளையாடும்-
புளகித வல்லி யிளகித வல்லி
புரியிள முல்லை நகைமீதே;

---

* கலவியில்—கலவியிலும்; உம் விகாரத்தால் தொக்கது.
† வள்ளி பிறப்பு வரலாறு. பாடம் 382-பக்கம் 464 —கீழ்க்குறிப்பு.
‡ வள்ளி தினைமா தர, கிழவர் (முருகவேள்) அதை உண்டனர்—"பசிநோய் என்னத் தேனொடு கனியும் மாவும் செங் கையிற் கொடுப்பக் கொண்டு"—கந்த புரா—6-24-100.
'தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த வள்ளிக்கொடி' —கந்தர் கலி வெண்பா
x வெள்ளிநகர் என்பது வெள்ளிகரம்.
o சூரசம்மாரம் ஆனவுடன் முருகவேளின் கட்டளைப்படி சூரனுடைய ஊர் (மகேந்திர நகரம்) கடல் நீரால் உண்ணப்பட்டது: "கருணையங் கடலாகியோன் வருணன் மா முகம் நோக்கியே .. மகேந்திர நகரினை .....உண்குதி ஒல்லையில் தடிந்தென்றான்" "சலபதி . இசைவுற்று தன்று பல்லுயிர் தம்மொடு மகேந்திரத் தொல்லூரை...புணரியுள் அழுத்தினன்." —கந்த புராணம்.4—16—15, 16

கவலை தரவல்ல அந்தக் குறைபாடுள்ளவர்களுடன் உள்ளதான [நான் செய்யும்] கலவியிலும் — கலவிப் பொழுதிலும், தெளிந்த பாடல் மாலைகளையும்—

நறுமணமுள்ள மலர் மாலைகளையும் [ஐய] அழகுபெற [அணிவன செய்ய] அணிதல் செய்ய - அணிய [உனது] (சிவந்த) திருவடி யிணைகளை மெல்ல எனக்கு அருள் புரிவாயாக.

தவநெறியை மேற்பூண்டு தியானித்து இருந்த சிவ முனிவர் துள்ளிச்சென்ற ஒப்பரிய புள்ளிமானுடன் கலவி பூண்டு—

பெறப்பட்டவளான தினைப்புன வள்ளி, அந்த மலையில் இருந்த வேட்டுவக் குலத்து வள்ளி - (அல்லது பெறப் பட்டவளான வள்ளிமலையில் வாசஞ்செய்த வேட்டுவச்சி வள்ளி) கொடுத்த தினைமாவை மெதுவாக உண்டவனே!

பயனற்ற மார்க்கத்தைச் [சொல்லுமவர்] சொல்லி வந்த சமணரின் [அவை] கூட்டத்தைக் [கழுவில்] மாய்த்த செல்வனே! அழகிய வேள்ளிகரம் என்னும் நகரத்தில் வாழும் செல்வனே!

பகைவர்களுடைய [சூராதிகளுடைய] செல்வம் பொருள் எல்லாம் [அள று]-[கடல்] நீரில்மூழ்கி அழியும்படி போர் செயவல்ல பெருமாளே!

[கழலிணை பைய அருள்வாயே]

663.

போர் செய வல்லனவும் கள்ளத்தனம் உள்ளனவுமான இரண்டு கயல்மீன் போன்ற கண்களாளவை வள்ளைக்கொடி போன்ற காதுகளை (அல்லது காதில் உள்ள குழையணிகளைத்) தாக்கித் தள்ளி விளையாடுகின்ற—

புளகாங்கிதம் கொண்ட கொடிபோல நெகிழ்ந்துள இளம்பெண்கள் (புரியிள) புன்னகை புரியும்போது தெரியும் முல்லை யரும்புபோன்ற பற்களின்மீது—பற்களைக் கண்டு—

*உருகிட வுள்ள விரகுடை யுள்ள
முலகுயி ருள்ள பொழுதேநின்-
றுமைதரு செல்வ னெனமிகு கல்வி
யுணர்வொடு சொல்ல வுணராதோ ;
மருவலர் வள்ளி புரமுள வள்ளி
மலைமற வள்ளி மணவாளா-
†வளர்புவி யெல்லை யளவிடு தொல்லை
மரகத நல்ல மயில்வீரா ;
அருவரை விள்ள அயில்விடு மள்ள
அணிவயல் வேள்ளி நகர்வாழ்வே-
அடையலர் செல்வ மள றிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (௪)

664. திருவடியைப் பெற

தய்ய தய்ய தய்ய தய்ய
தய்ய தய்ய தனதான

கள்ள முள்ள வல்ல வல்லி
கையி லள்ளி பொருளீயக்-
‡கல்லு நெல்லு வெள்ளி தெள்ளு
கல்வி செல்வர் கிளைமாய ;
அள்ளல் துள்ளி ஐவர் செல்லு
மல்லல் சொல்ல முடியாதே-

---

* பெண்களைக்கண்டு உருகும் உள்ளம் "உமை செல்வன்" எனச் சொல்ல உணராதா — என்கின்றார் இது "தத்தையங்கனையார் தங்கள்மேல் வைத்த தயாவை நூறாயிரங் கூறிட்டு, அத்தில் அங்கு ஒரு கூறு உன்கண் வைத்தவருக்கு அமருலகு அளிக்கும் நின் பெருமை"—என்னும் திருவிசைப்பாவை நினைவூட்டும்.

† சூரசம்மாரம் ஆனவுடன் (சூர) மயில் மீதேறிப் பார்முற்றும் முருகவேள் அம் மயிலை நடத்தினன்—

"சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி எம்மை என்னப்
பார்திசை வானம் முற்றும் பரியென நடாத்த லுற்றான்."
—கந்தபுரா—4-13-499

‡ கல்லு—நவமணிகள்.

(உருகிட உள்ள தான) உருகத்தக்க, விரகு உடை உள்ளம்—உற்சாகத்தை உடைய (என்) உள்ளம் – இவ்வுலகில் – என் உயிர் இருக்கும் பொழுதே—நின்று—ஒரு வழியாக நிலைத்து நின்று

"உமை பெற்ற செல்வனே"—என்று மிகுந்த கல்வி உணர்ச்சியோடு சொல்லுதற்குத் தெரிந்து கொள்ளாதோ!

வாசனை மலர்கள் உள்ள 'வள்ளிபுரம்' உள்ள — வள்ளிமலை யென்னும் ஊரில் உள்ள 'வள்ளிமலை'யில் வாழ்ந்த வேட்டுவச்சி வள்ளியின் மணவாளனே!

வளர்ந்த – பெரிதாயுள்ள பூமியின் முழு எல்லையையும் அளவிட்ட – பழைய – பச்சை நிறமுள்ள – நல்ல மயில் வீரனே!

அரிய கிரவுஞ்சமலை உடைபட வேலாயுதத்தைச் செலுத்தின போர் வீரனே! அழகிய வயல் சூழ்ந்த வெள்ளி நகரில் வாழும் செல்வனே!

(சூராதிபராம்) பகைவர்களின் செல்வப் பொருள்களெல்லாம் (கடல்) நீரிற் படிந்தழியப் போர் செயவல்ல பெருமாளே!

("உமைதரு செல்வன்" எனச் சொல்ல உணராதோ)

664.

கள்ளத்தனம் உள்ள சாமர்த்தியம் உள்ள (வல்லி) ஒரு பெண்ணின் (பொது மகளின்) கையிலே நான் அள்ளி (என்) பொருள்களை அள்ளிக் கொடுப்பதாலே—

(எனக்கு ஆஸ்தியாயிருந்த) நவரத்னக் கற்களும், நெற்குவியல்களும், வெள்ளிப் பொருள்களும், தெளிந்த கல்விச் செல்வமும், செல்வமுள்ள சுற்றமும் (மாய) — எல்லாம் அழிந்து ஒழிய—எல்லாம் விலக—

(மாயைச்) சேற்றிலே குதித்து, ஐவர் (மெய் – வாய் – கண் – மூக்கு – செவி) என்னும் ஐம்பொறிகளும் செலுத்துகின்ற துன்பம் (ஐவரால்வரும் சஞ்சலம்) சொல்ல முடியாது;

*ஐய ரைய மெய்யர் மெய்ய
ஐய செய்ய கழல்தாராய்;
வள்ளல் புள்ளி நவ்வி நல்கு
வள்ளி கிளவி மொழியாலே-
மைய லெய்து மைய செய்யில்
வையில் வெளவ வாகவேற;
மெள்ள மள்ளர் கொய்யு நெல்லின்
†வெள்ள வேள்ளி நகர்வாழ்வே-
‡வெய்ய சைய வில்லி சொல்லை
வெல்ல வல்ல பெருமாளே. (ரு)

665. நினைந்துய்ய.

தய்ய தய்ய தய்ய தய்ய
தய்ய தய்ய தனதான

xதொய்யில் செய்யில் நொய்யர் கையர்
தொய்யு மைய இடையாலும்-

---

* ஐயர் ஐய—முனிவர்க்கு முனிவனே. † வெள்ளம்—மிகுதி
‡ வெய்ய — விரும்பத்தக்க — "வெய்ய நெய்அவி"—தக்கயாகப் பரணி 506 "நாதர் கற்க ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே"—எனவருவதைக் காண்க-பாட்டு 327 ;இறையனாரகப் பொருளுக்குச் சங்கப் புலவர்கள் செய்த பொருள்களில் இன்னது தான் உண்மைப் பொருள் என விளக்கித் தம் மேன்மையை நாட்டின பெருமாள் எனவுமாம் (பாட்டு 350-பக்கம் 378-கீழ்க் குறிப்பு : பின்னும், பிரமனைச் சிறையினின்றும் விட்டு விடும்படி சிவபிரான் சொல்லச் சொன்னார் என்று நந்தி தம்மிடம் வந்து சொன்னபோதும், இறைவனே வந்து நேரிற் கூறியபோதும், சிறையினின்றும்-விட முடியாது என்று அவர் சொல்லையும் முதலிற் கடந்து சொன்ன தீரத்தையும் இது உணர்த்தலாம்.

(i) நந்தி வந்து கூறினபோது முருகவேள் கூறினது :
"அன்ன வூர்தி அருஞ்சிறை நீக்கலன்
நின்னையுஞ் சிறை வீட்டுவன் நிற்றியேல்
உன்னி வருதி ஒல்லையில்" கந்தபுரா I 17-13

(ii) சிவபிரான் நேரிற் கூறியபோது முருகவேள் கூறினது :
"நின்னை வந்தனை செய்யினும் நித்தலும்
தன்னகந்தைத் தவிர்கிலன் ஆதலால்
அன்ன வன்தன் அருஞ்சிறை நீக்கலன்"-கந்த புரா I-17-28

[தொடர்ச்சி பக்கம்-25 பார்க்க.]

முநிவர்க்கு முநிவனே! மெய்யர்க்கு மெய்யனே! அழகிய சிவந்த உனது திருவடியைத் தந்தருளுக:

வள்ளலே! (அல்லது வள்ளல் தன்மை வண்மைக் குணம் வாய்ந்த) புள்ளி (நவ்வி)மான் (லக்ஷ்மி) ஈன்ற வள்ளிக் கிளியின் மொழிகளைக் கேட்டு

மோகம் கொண்ட ஐயனே! வயல்களில் (வையில்) புல்லில் – வெள்ளைச் சங்குகள் ஏற—

மெதுவாக உழவர்கள் பறித்தெடுக்கும் நெல்லின் மிகுதி (பெருக்கு) உள்ள வேள்ளி நகரில் வீற்றிருக்கும் செல்வனே!

விரும்புதற்குரிய மலை வில்லி (மேருமலையை வில்லாக வளைத்த சிவபிரானுடைய சொல்லை (பிரணவமொழியின் பொருளை அவருக்கும் குருவாயிருந்து) வெற்றியுடன் மொழியவல்ல பெருமாளே!

(செய்ய கழல் தாராய்)

665.

(கொங்கைமேல்) பத்திக்கீற்றை (எழுதுதல்)செய்தால் எழுதினால் நெகிழ்ந்து தளர்பவர்கள், கீழ் மக்கள் – ஆகிய பொது மகளிருடைய, தொய்யும் — இளைத்து உள்ள, (ஐய) – நுண்ணிய இடையாலும்—

(24-ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி.)

சையவில்லி—மலையாகிய வில்லை உடையவர்.

x தொய்யில் ...பத்திக்கீற்று மகளிர் கொங்கையில் சந்தனக் குழம்பால் எழுதும் கோலம் (பிங்கலம்);
'தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை' ... மதுரைக் காஞ்சி 416. கரும்பையும் வல்லியையும் தோளில் எழுதித் தொய்யிலை முலைமேல் எழுதுவது

"கரும்பும் வல்லியும் பெருந்தோள் எழுதி"-சிலப்பதி-2 29
"திருமுலைத் தடத்திடைத் தொய்யில்'...ஷை-2 69

o நொய்யர்... தளருந் தன்மை யுடையோர்.

துள்ளி வள்ளை தள்ளி யுள்ளல்
சொல்லு கள்ள விழியாலும் ;
மைய செவ்வி மவ்வல் முல்லை
மல்கு நல்ல குழலாலும்—
மையல் கொள்ள எள்ளல் செய்யும்
வல்லி சோலை மகிழ்வேனே ;
செய்ய துய்ய புள்ளி நவ்வி
செல்வி கல்வ ரையிலேனல்—
*தெய்வ வள்ளி மையல் கொளுஞ்
செல்வ பிள்ளை முருகோனே ;
†மெய்யர் மெய்ய பொய்யர் பொய்ய
‡வெள்ளை வேள்ளி நகர்வாழ்வே—
வெய்ய சைய வில்லி சொல்லை
வெல்ல வல்ல பெருமாளே. (ஈ)

---

* வள்ளி உன்மீது மையல் கொண்டாள், வள்ளிமீது நீ மையல் கொண்டாய் என இரண்டு வழியாகவும் பொருள் கொள்ள அமைந்துள அழகு வியக்கற்பாலது. "தொழுகணவற் கணிமண மாலிகை சூட்டி . அரசளித்த பெண்ணரசி" என்னும் திருவிளையாடல்—தேவி துதிபோல.

† 'மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும் பொய்யானை"
"மெய்யானைப் பொய்யரொடு விரவாதானை"
...அப்பர் VI-66 5 ; 46-8 :

‡ வெள்ளை...வேங்கைமரம் ; கள்ளமில்லாத மனத்தவன் நிஷ்களங்க சிந்தை யுள்ளவன் "வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை" (கொன்றைவேந்தன்); 'கள்ளமே செய்கிலார்'...சம்பந்தர்...3-26-6 ; வெள்ளை வெள்ளி நகர் . வெண்மணி மாடங்கள் நிரம்பினதால் "வெள்ளை வெள்ளி நகர்" எனலுமாம்...பாடல் 666-பார்க்க.

எழுந்து பாய்ந்து, வள்ளைக்கொடி போன்ற காதைத் தள்ளி - காது வரைக்கும் பாய்ந்து தள்ளி, (உள்ளல்) மனத்தில் நினைத்துள்ள எண்ணத்தைச் (சொல்லும்) வெளிப்படுத்தும் திருட்டு விழியாலும்—

(மைய) கருநிறம் உடையதும், செம்மை வாய்ந்த (மௌவல்) காட்டு மல்லிகை, முல்லை நிறைந்துள்ளதுமான நல்ல கூந்தலாலும்

காம இச்சைகொள்ள (என்னை) எள்ளல் செய்யும்-இகழ்கின்ற (வல்லி) பெண்களின் பேச்சுக்கு மகிழ்ச்சி கொள்வேனே!—கொள்ளலாகாது என்றபடி

செந்நிறத்தவனே! தூய்யனே! (அல்லது) செவ்விய, பரிசுத்தமான, புள்ளிமான் (லக்ஷ்மியின்) (செல்வி) குமாரி, (கல் வரையில்) கல் நிறைந்த வள்ளி மலையில் தினைப் புனத்தில் இருந்த—

தெய்வ வள்ளிமேல் மோகம் கொண்ட (அல்லது தெய்வ வள்ளி மோகங்கொண்ட) செல்வ பிள்ளையான முருகனே!

மெய்யர்க்கு மெய்யனே! பொய்யர்க்குப் பொய்யனே! (வெள்ளை) கள்ளம் இல்லாதவனே (அல்லது, வேங்கை! மரங்கள் உள்ள) வேள்ளி நகரில் வாழும் செல்வனே!

விரும்பத்தக்க மலை வில்லி (சிவபிரானது) சொல்லை—பிரணவ மொழியின் பொருளை - (அல்லது இறையனார் அகப்பொருளின் பொருளை) இன்னதென விளக்கி வெற்றியைக் காட்டின (அல்லது - சிவபிரான் சொல்லைக் கடந்து பிரமனைச் சிறையினின்றும் விடேன் என்று தன் திரத்தைக் காட்டின) பெருமாளே!

(வல்லி சொல்லை மகிழ்வேனே)

666.

தய்யதன தான தய்யதன தான
தய்யதன தான தனதான

*இல்லையென நாணி யுள்ளதின் மறும
லெள்ளினள வேனும் பகிராரை-
†எவ்வமென நாடி யுய்வகையி லேனை
யெவ்வகையு நாமங் கவியாகச்;
சொல்லவறி யேனை யெல்லைதெரி யாத
தொல்லைமுத லேதென் றுணரேனைத்-
தொய்யுமுடல் பேணு பொய்யனைவி டாது
துய்யகழ லாளுந் திறமேதோ;
‡வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
xமையவரை பாகம் படமோது-
oமையுலவு சோலை செய்யகுளிர் சாரல்
வள்ளிமலை வாழுங் கொடிகோவே;
வெல்லுமயி லேறு வல்லகும ரேச
வெள்ளிலுட னீபம் புனைவோனே-
**வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வெள்ளிநகர் மேவும் பெருமாளே. (எ)

---

* 666-ஆம் பாடல் மனப்பாடஞ் செய்யத் தக்கதொரு பாடல். "இலனென்னும் எவ்வம் உரையாமை . குலனுடையான் கண்ணே உள", 'சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம் ஈதல்இயையாக்கடை' திருக்குறள் 223, 230.

"இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க"
'இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின்"
"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு" என வரும் நாலடியார்ச்
செய்யுள்கள் ஈண்டு ஒப்பிடற் பாலன.

† எவ்வம்...வெறுப்பு.. (சிந்தாமணி உரை 874); துன்பம்.
‡ இந்த அடி 313-ஆம் பாடலிலும் வருகின்றது.
x மை—குற்றம்
o மை.. இருள் "மைதழைத்தெழு சோலை"... சம்பந்தர் 2-4-10.
** வெள்ளி...வெண்மை. 'வெள்ளி நோன்படை'-புறநா-41-10.

666.

இல்லை என்று சொல்வதற்கே வெட்கப்பட்டு, உள்ள பொருளளவுக்கு மறுக்காமல், *ஒரு எள்ளின் அளவாவது பகிர்ந்து கொடுக்காதவர்களை—

வெறுக்கத் தக்கவர்கள் என ஆய்ந்தறிந்து பிழைக்கும் வகையில்லாத என்னை, (அல்லது- கொடுக்காதவர்களிடம் என் துன்பத்தை எடுத்துக்கூற நாடிச்சென்று-பிழைக்கும் வகை தெரியாத என்னை) எந்த முறையினும் உன்னுடைய திருநாமங்களைப் பாடலாக அமைத்துச்—

சொல்லத் தெரியாத என்னை - முடிவெல்லை காண முடியாத பழைய மூலப்பொருள் இன்னது என்று உணராத என்னை—

(தொய்யும்) இளைத்துத் துவளும் இந்த உடம்பை விரும்பிப் போற்றும் பொய்யனாகிய என்னைப் புறக்கணித்து ஒதுக்கிவிடாமல் பரிசுத்தமான உனது திருவடி ஆண்டருளும் வழி எதுவோ (அறிகிலேன்)— வழி ஏதேனும் உண்டோ (அறிகிலேன்)

வலிய அசுரர்கள் மாளவும் நல்ல தேவர்கள் வாழவும் (மை அவரை) குற்றமுள்ளவர்களை (அல்லது மைய வரை - குற்றமுள்ள கிரவுஞ்சகிரியை) (பாகம்பட) கூறுபட்டழிய மோதின...(கோவே).

இருள் சூழ்ந்த சோலைகளையும், செவ்விய குளிர் வாய்ந்த மலைப் பக்கங்களையும் உடைய வள்ளிமலையில் வாழ்ந்த கொடிபோன்ற வள்ளியின் தலைவனே!

வெல்ல வல்ல மயிலில் ஏறுதல் வல்ல குமரேசனே! (வெள்ளில்) விளாத்தளிருடன் கடப்பமலரை அணிபவனே!

வெண்ணிற அழகிய மாடங்கள் நிறைந்த அழகிய (செல்வ நிறைந்த) வீதிகளை உடைய வேள்ளி நகரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(பொய்யனை விடாது ஆளுந் திறமேதோ)

---

* "நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்"—கந்தர் அலங். 18

667. ஐய்ய

தய்யதன தான தய்யதன தான
தய்யதன தான தனதான

*பையரவு போலு நொய்யஇடை மாதர்
பையவரு கோலந் தனைநாடிப்-
பையலென வோடி மையல்மிகு மோக
பவ்வமிசை வீழுந் தனிநாயேன்-
உய்யவொரு கால மையவுப தேச
முள்ளுருக நாடும் படிபேசி;
உள்ளதுமி லாது மல்லதவி ரோத
†உல்லசவி நோதந் தருவாயே;
வையமுழு தாளு மையகும ரேச
வள்ளிபடர் கானம் புடைசூழும்-
வள்ளிமலை வாழும் வள்ளிமண வாள
மையுததி யேழுங் கனல்மூள;
வெய்யநிரு தேசர் சையமுடன் வீழ
வெல்லயில்வி நோதம் புரிவோனே-
வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வெள்ளிநகர் மேவும் பெருமாளே. (அ)

---

* அரவுபோலும் இடை...'அரவேரிடையாள்' சம்பந்தர்-3-3-5 "அரவுபோல் இடை"...திருப்புகழ் 1110.

† உல்லச...உல்லாச. "நீயான ஞான விநோதந்தனை யென்று நீயருள்வாய்"...கந்தரலங்காரம்(46); 'உல்லாச நிராகுலவிநோதன்" (கந் அநு-2)

667.

படங்கொண்ட அரவுபோன்ற நுண்ணிய இடையை (மத்யப் ப்ரதேசத்தை) உடைய மாதர்கள் மெல்லச் செய்து கொள்ளும் அலங்காரங்களை விரும்பி—

சிறுவன் அற்பன் எனும்படி ஓடி மோகம் மிக்க காமக் கடலில் விழுகின்ற தனித்த நாய்போன்றவனான நான்—

பிழைப்பதற்கு ஒரு காலத்தில், ஐயனே! (உனது) உபதேசத்தை என்னுடைய உள்ளம் உருகி விரும்பும்படி ஓதி

உள்ளது என்றும் இல்லாதது என்றும், உண்டென்றும் இல்லையென்றும், இவை யிரண்டும் அல்லாததும் அவிரோத--மாறு - விரோதம் இல்லாததும், (உல்லாச) உள்ளக் களிப்பைத் தருவதும், (விநோதம்) வியப்பைத் தருவதுமான (பொருளைத்) தந்தருளுக.

உலகம் முழுமையும் ஆள்கின்ற ஐயனே! குமரேசனே! வள்ளிக் கொடிகள் படர்ந்துள்ள காடுகள் பக்கத்திற் சூழ்ந்துள்ள—

வள்ளிமலையில் வாழும் வள்ளியின் மணவாளனே! கரிய கடல்கள் ஏழிலும் -- நெருப்பெழ—

கொடிய அசுரத் தலைவர்கள், அவர்களிருந்த கிரௌஞ்சகிரி, எழுகிரியுடன் மாண்டு விழ வென்ற வேலாயுதத்துடன் விளையாடல் புரிந்தவனே!

வெண்ணிற அழகிய மாடங்கள் நிறைந்த லக்ஷ்மீகரம் பொருந்திய வீதிகள் உள்ள வேள்ளி நகரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(அவிரோத உல்லச விநோதம் தருவாயே)

668. நாம விசேடம்.

தனன தனதன தனன தனதன தய்ய தனத்த தந்த
தானதன தானந் தானன தந்ததான

*வதன சரோருக நயன சிலீமுக வள்ளி புனத்தில் நின்று
†வாராய்பதி காதங் காதரை யொன்றுமூரும் -
வயலு மொரேவிடை யெனவொரு காவிடை வல்லப மற்றழிந்து
மாலாய்‡மட லேறுங் காமுக எம்பிரானே;

---

* இந்தப் பாடல் மிக அருமையான சந்தங் கொண்டது; மேலான பொருள் நிரம்பியது. மனப்பாடஞ் செய்யத் தகுந்தது; இறைவனுடைய நாம விசேஷத்தை எடுத்துரைப்பது.

† பதி.. திருத்தணிகை; 'இது 'இடமணித்து' என்னுந் துறை. தலைவன் தலைவியிடம் என்னுடைய ஊர் மிகச் சமீபததில் இருக்கின்றது என்று உரைப்பது: "என்னுடைய ஊரில் உள்ள வெண் மாடங்களின் வெள்ளொளி வீச உன்னுடைய ஊரில் உள்ள கரிய மலை வெள்ளைச் சட்டை அணிந்தது போல வெண்ணிறத்தைப் பெற்று விளங்கும், அவ்வளவு சமீபத்தில் உள்ளது என்னுடைய ஊர்"—என்னும் கருத்தமைந்தது கீழ்க்காட்டும் திருக்கோவையார்ப் பாடல் 15.

"வருங்குன்ற மொன்றுரித் தோன்தில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யே!யிட ரெய்த லெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாய நும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணி றக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே!"

எம் ஊர் தணிகையில் குவளை மலர்த்தேனைப் பருகும் வண்டுகள் பாய்ந்து உம் ஊர்ச் சோலையில் தேனை நுகரும்: அவ்வளவு அருகில் உள்ளன நும் ஊரும் எம் ஊரும்,

"எம்மூர்வரைச் காவியிற்றேன், மாந்தளி பாய்ந்து நும்மூர்
வரைச் சோலை மது நுகரும்"...தணிகைப் புராணம் களவு—79

‡ மடலேறுதல்...பாடல்235, பக்கம் 87 கீழ்க்குறிப்பு,
வள்ளியின் பொருட்டுத் தணிகேசர் மடலேறுவேன் என்றது,
"தவளத்த நீறு, என்பு, எருக்குந் தரித்துத் தகு மடல்மா
பவளத்த வாய் நங்கை பண்பினைப் பாடிப் படங்கைதழீஇ
நம்மூர்வயிற் றாண்டுதுமே".. தணிகைப் புராணம் களவு 262.

மடல் ஏறலாவது—"தலைவன் ஒவ்வாக் காமத்தாற் பனங் கருக்காற் குதிரையும், பனந்தருவினுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ் செய்து அக்குதிரையின்மேல் ஏறுவது. மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசிக், கிழி ஓவியர் கைப்படாது

(தொடர்ச்சி பக்கம் 33 பார்க்க)

668

(வதனம்) முகம்—(சரோருகம்) தாமரை போலவும், (நயனம்) கண் (சிலீமுகம்) அம்பு அல்லது வண்டு போலவும், கொண்ட வள்ளி நாயகியின் தினைப்புனத்தில் போய் நின்று — 'வருவாயாக (எம்முடன், (எம்) ஊர் — (திருத்தணிகை) காதம்) பத்தும், (காதம்) பத்தும் (இந்த அரை) (அரைப்பத்தும்) ஐந்தும் — ஆக இருபத்தைந்து மைல்தான் (நேராய்க் கணக்கிடின்) — ஒன்றுமூரும்—(ஒன்று உம் ஊரும்) - எம்பதி தணிகையும் உம் ஊர் வள்ளிமலையும் ஒன்று - ஒன்றேதான்; (ஒன்றுக் கொன்று அவ்வளவு சமீபம்); (அல்லது ஒன்றும் ஊரும் - நம் இருவர் ஊரும் நெருங்கி நிற்கின்றன).

(வயலும் ஒரே இடை)-(இரண்டு ஊருக்கும்) மத்தியில் ஒரே ஒரு வயல்தான் உள்ளது; என - என்றெல்லாம் கூறி—(ஒரு கா இடை)—(வள்ளியைச் சந்தித்த அந்த) ஒரு சோலையிலே—(வல்லபம் அற்று அழிந்து)—உன் வலிமை தொலைந்து அழிந்து, (வள்ளிமீது) இச்சை பூண்டவனாய் *மடல் ஏறின மோகம் கொண்டவனே! எம்பெருமானே! (என்றும்),—

(32 ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி)

தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவன்பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர் நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி, அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையுமிருத்தி, வேட்கை வயத்தனாய் வேறுணர்வின்றி, ஆ வூரினும் அழல்மேற்படினும் அறிதலின்றி,மழை வெயில் காற்றால் மயங்கா திருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங்கூடி வந்து 'நீ மடலேறுதியோ? அவளைத் தருதும், சோதனை தருதியோ என்ற வழி இயைந்தானாயின், அரசனுக்கறிவித்து அவன் ஏவலால் அவன் இனைந்து நையத் தந்து மடலேறு என்ற வழி ஏறுமுறைமை - பூளை, எலும்பு, எருக்கு இவைகளாற் கட்டிய மாலை யணிந்துகொண்டு அம் மாவிலேற, அவ் வடத்தை வீதியில் ஈர்த்தலும், அவ்வுருளை உருண்டோடும்பொழுது, பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் இரத்தம் தோன்றாது வீரியந் தோன்றின், அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது; இரத்தங் கண்டுழி அவனைக் கொலை செய்து விடுவது...இவை புலவரால் நாட்டிய வழக்கென்றுணர்க" —தஞ்சைவாணன்கோவை பாடல் 101 உரை.

* முருகன்மடலேறுவது — "மாறுடப் பெண்டினரக் கடவுள் நயப்பது"—தொல்காப்-புறத்திணை 28 [பாடல் 697 கீழ்க்குறிப்பு.

*இதவிய காணிவை தனையென வேடுவ னெய்திடு மெச்சில் தின்று
லீலாசல மாடுந் தூயவன் மைந்த†நாளும்—
இளையவ ‡மூதுரை மலைகிழ வோனென xவெள்ள
மெனக்கலந்து
o நூறாயிர பேதஞ் சாதமொ ழிந்தவாதான்;
**கதைகண சாபதி கிரிவளை வாளொடு கைவசி வித்த††ந்த
கோபாலம கிபன் தேவிம கிழ்ந்துவாழக்—

---

* இது கண்ணப்ப நாயனார் சரிதம்—பாடல் 651-பக்கம் 526 கீழ்க்குறிப்பு

† "என்றும் இளையாய்"—திருமுருகாற்றுப்படையைச் சார்ந்த வெண்பா 3, 4 அடிகள் முருகன் திருநாமவிசேடத்தால் முடிவிலாத பிறவி ஒழியும் என்னும் உண்மையை விளக்கும் அருமை வாய்ந்தன.

"மஞ்சனே மணியே மணிமிடற் றண்ணலே யென உள் நெகிழ்ந்தவர் துஞ்சுமாறறியார் பிறவார் இத்தோன்னிலத்தே—" என்னும் திருவாக்கு இங்கு கருதற்பாலது. (சம்பந்தர் II-52-6)

‡ மூதுரை-திருமுருகாற்றுப்படை—திருமுருகாற்றுப்படையில் "பழமுதிர்சோலைமலை கிழவோனே" எனவருவதைக் குறிக்கின்றது. திருமுருகாற்றுப்படை மிகப் பழைய நூலாதலின் 'மூதுரை' எனப்பட்டது. திருமுருகாற்றுப்படையைப் "பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுபபடை" என்றார்—சிவப்ரகாச சுவாமிகள்.

x 'வெள்ளம்'—ஒரு பேரெண் (பிங்கலம்)

o "நூறயிரபேதஞ் சாதம்"—"உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம்யோனிபேதம்"-சம்பந்தர் I-132-4. "ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனி எண்பான் ஆரவந்த நான்கு நூறாயிரத்துள்" கந்தர் கலிவெண்பா: நால்வகைத் தோற்றம் எழு வகைப் பிறப்பு—இவற்றின்வகை-தொகை-விவரத்தை—

'ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானிடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம்—சீரிய
பந்தமாம் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து'..

$(11+9+30+14+20=84)$

என்னும் பழம்பாடல் விளக்குகின்றது.

(தொடர்ச்சி 35 ஆம் பக்கம் பார்க்க)

இனிப்புள்ளவை இவை நிறைய நெருங்கியுள்ளன என்று கூறக்கேட்டு (அந்த) வேடுவன் (கண்ணப்பர்) எய்திடும் — சேர்த்திட்ட எச்சில் உணவைத் தின்று — (கண்ணில் ரத்தம் காட்டின) லீலாசலம் (சலம் லீலை) பொய்ம்மையான விளையாடலை விளையாடிய சுத்த மூர்த்தியாம் சிவகுமாரனே! (என்றும்), நாளும்-எப்போதும்,

இளையவனே என்றும், ஏறுதுறையாம் திருமுருகாற்றுப் படையிற் சொன்னபடி—'மலை கிழவோனே' என்றும், ஓதினால் — (வெள்ளம் எனக் கலந்து) — வெவ்வேறு கணக்காக எண்ணியதாய்க்கூடி நூறுயிர பேதமாய் வருவதான — (எண்பத்து நான்கு) நூறுயிர பேதமாக வருவதான (சாதம்-ஜாதம்) பிறப்புக்கள்-ஒழிந்தவா தான்—(ஒழிந்த ஆறு என்ன அற்புதம் தான்) ஒழிந்துபோயின— இது என்ன அற்புதந் தான்!

(கௌமோதகி என்னும்) கதையும், (கன சாபமும்) பெருமை பொருந்திய சாரங்கம் என்னும் வில்லும், (திகிரி) சுதரிசனம் என்னும் சக்கரமும், (வளை) பாஞ்ச சன்னியம் என்னும் சங்கமும், (வாள்) நாந்தகம் என்னும் வாளும்— ஆகப் பஞ்சாயுதங்களை (ஐம்படைகளை) கை வசிவித்த— கையில் தங்கவைத்த...(கள்வன்); நந்தகோபால மகிபன் என்னும் (கோகுலத்து) அரசனது தேவி—அசோதை மகிழ்ந்து வாழ

(34 ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி)

** "நாந்தகம், சங்கு, தண்டு, நாணொலிச் சாங்கம், திருச்சக்கரம் ஏந்து பெருமை இராமனை" . பெரியாழ்வார் 4-1-2.

†† நந்த கோபாலன்—நந்தன் கண்ணபிரானை வளர்த்த தந்தை, 'நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்' திருப்பாவை 18. நந்த கோபாலன் தேவி—அசோதை.. கண்ணபிரானை வளர்த்த தாய் "கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த பேதைக்குழவி" பெரியாழ்வார் 1-2-1,

*கயிறொ டுலூகல முருள வுலாவிய கள்வ னறப்†பயந்து
ஆகாயக பாலம் பிறநி மிர்ந்துநீள;
‡விதரண மாவலி வெருவ மகாவ்ருத வெள்ள வெளுக்க நின்ற
நாராயண மாமன் ×சேயைமு னிந்தகோவே!
விளைவய லூடிடை வளைவிளை யாடிய வேள்ளிநகர்க் கமர்ந்த
வேலாயுத மேவுந் தேவர்கள் தம்பிரானே. (கூ)

திருவல்லம்.

[ரெயில்வே ஸ்டேஷன். வேலூருக்குக் கிழக்கு 8 மைல். நீவா என்னும் நதியின் மேற்கரையிலிருக்கின்றது. திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. கந்தரந்தாதியிற் சொல்லப்பட்டுள்ளது.]

669. திருநாமங் கூற

தனதன தானந் தனதன தானம்
தனதன தானம் தனதான

நசையொடு தோலுந் தசைதுறு நீரும்
நடுநடு வேயென் புறுகீலும்-

---

* கண்ணபிரான் உரலொடு உலாவிய கள்வன்,

வெண்ணெய் திருடினதற்காக உரலொடு கண்ணன் கட்டப் பட்டான்...''நவநீதமுந் திருடி உரலோடெ யொன்றும் அரி''... திருப்புகழ் 109 உலூகலம் உரல் ''ஓர் உலூகலம் உடன் தவழ்ந்தவன்''...வில்லிபாரதம் . உலூகன் 5.

பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேலேறி
தித்தித்த பாலும் தடவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறார விழுங்கிய அத்தன்''...

பெரியாழ்வார் 1-9-7. கள்வன் என்பது:—''கள்ளக் குழவியாய்க் காலால் சகடத்தைத் தள்ளி உதைத்திட்டு'' பெரியதிருமொழி 10-5-9,

† பயந்து ... பயப்பட .. நோக்கி - நோக்க - என்புழிப்போல ...பாட்டு404 பக்கம் 524 கீழ்க்குறிப்பு.

(தொடர்ச்சி 37 ஆம் பக்கம் பார்க்க.)

கயிறொ டுலூகலம் உருள—(உலூகலம்) உரலொடு கயிற்றினாற் கட்டப்பட்டு அந்த உரலை இழுத்து உருள—உலாவின (கள்வன்) (வெண்ணெய், தயிர் திருடி உண்டவன்), அல்லது உருள உலவி (சகடத்தை உதைத்தவன்; (அல்லது கள்வனாய் — (கண்டவர்கள்) (அறப்பயந்து- அறப் பயப்பட), மிகப் பயப்படும்படி, ஆகாயத்தையும் தமது (கபாலம்) தலை கிழிக்கும்படி நிமிர்ந்து ‡நீண்டு—

(விதரண மாவலி) கொடையிற் சிறந்த மகாபலிச் சக்கரவர்த்தி அச்சம் உற, மகா விரதசீல உருவத்து வாமனனாய்-(வெள்ள வெளுக்கநின்ற)-பகிரங்கமாய் எதிரில் நின்ற நாராயண மூர்த்தியாம் மாமனுடைய (திருமாலுடைய) சேயை — குழந்தையாகிய பிரமனைக் கோபித்த தலைவனே!

விளைச்சல் உள்ள வயலிடையே சங்குகள் தவழ்ந்து விளையாடுகின்ற வேள்ளி நகரில் வீற்றிருக்கும் வேலாயுதனே! (உன்னை) விரும்பும் தேவர்கள் தம்பிரானே!

(மலைகிழவோனென...சாதம் ஒழிந்தவா)

திருவல்லம்.

669.

(நசை) ஈரத்துடன் தோலும், (தசை) மாமிசமும், (துறு) அடைந்துள்ள நீரும், இடையிடையே எலும்பும், எலும்புகளைப் பூட்டியுள்ள பூட்டுப் பொருத்துக்களும்—

---

‡ மாவலிமுன் நீண்ட உருவம் கொண்டது.
பாட்டு 268 பக்கம் 166; பாடல் 458 பக்கம் 24 கீழ்க்குறிப்பு, மாவலியிடம் சென்றது: கள்வனாய் நீண்டது ..'கள்ளக்குறளாய் மாவலியை வஞ்சித்து'' .. பெரியதிருமொழி 5-1-2,
மகாவ்ருதவெள்ள வெளுக்க நின்ற திருக்கோலத்தை...
"புனையிழை யதிதி தன்பாற் புதல்வனாய்த் தோற்றிப் பூநீர்
நனைதரு குடுமி, மார்பில் நயந்தநூல், கரகம், தண்டு
துனைதரு கரிய மானின் தோலொடுத் தரீயம் முஞ்சி
இனையன பிரமசாரி யெனப் புனைந் திலங்கும் எல்லை''
—என வேதாரணிய புராணம் அகோரதேவர் அருளியது கூறும்;
x சேய்-பிரமன் — பிரமனைக் கோபித்தது ... பாடல் 603 பக்கம் 406 பாடல் 571-பக்கம் 308 கீழ்க்குறிப்பு,

நலமுறு வேயொன் றிடஇரு கால்நன்
றுறநடை யாருங் குடிலூடே ;
விசையுறு காலம் புலனெறி யே*வெங்
கனலுயிர் வேழந் திரியாதே-
விழுமடி யார்முன் பழுதற வேள்கந்
தனுமென வோதும் விறல்தாராய் ;
இசையுற வேயன் றசைவற வூதும்
எழிலரி †வேழம் எனையாளென்-
றிடர்கொடு மூலந் தொடர்வுட னேதும்
இடமிமை யாமுன் வருமாயன் ;
திசைமுக னுருந் திசைபுவி வானுந்
‡திரிதர வாழுஞ் xசிவன்மூதூர்-
தெரிவையர் தாம்வந் தருநட மாடுந்
திருவல மேவும் பெருமாளே.

வேலூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். காட்டுப்பாடி ஜங்ஷனிலிருந்து 4-மைல். காஞ்சீபுரத்துக் கடுத்த வாலாஜாபாத் ஸ்டேஷனுக் கருகில் "இளையனர் வேலூர்" என்னும் சுப்ரமண்ய ஸ்தலம் இருக்கின்றது.]

670. மாதர்மீது மயக்கற்றுத் தாள் சேர

தனன தாத்தன தாண தானன
தனன தாத்தன தாண தானன
தனன தாத்தன தாண தானன தந்ததாண

அதிக ராய்ப்பொரு ளிவார் நேர்படில்
ரசனை காட்டிக ளியார் கூடினும்
அகல வோட்டிகள் மாயா ரூபிகள் நண்புபோலே-

---

* ஐம்புல வேழம்—'(தொண்டர்) அஞ்சுகளிறும் அடக்கி'—சம்பந்தர்-2-114 1; 'பஞ்சேந்தியக் குஞ்சரம்' — பொன்வண்ணத் தந்தாதி-23.

† கஜேந்திரனுக்குத் திருமால் உதவினது — பாடல் 110-பக்கம் 262.

‡ திரிதர—வலஞ்சூழ்ந்து திரிய. இதனல்-திருமால், பிரமா முதலியோர் பூசித்த தலம் திருவலம் என்பது தெரிகின்றது.

x 'பழைய வல்லம்'—திருப்புகழ் 274.

நலம் உறும்வண்ணம் (வேய்) வேய்தல்- பொருந்துதல் (அல்லது உறுவே—உறுதலே) ஒன்றிட—சேர, இரண்டு கால்கள் நன்குபொருந்த நடை நிரம்பிய (இவ்)வுடலுக்குள்—

வேகம் பொருந்திச் செல்லும் காலத்தே (வாழும் பொழுது). ஐம்புலன்களின் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்)வழியாகக் கொடிய தீப் போன்றனவும், உயிருள்ள யானை போன்றனவுமான ஐம்பொறிகளும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) திரிந்து அலையாமல்

(உனது திருவடியில்) விழுந்து வணங்கும் அடியார்களின் முன்னிலையில், (பழுதற) குற்றமில்லாத வகையில், (அல்லது என் மாசு கழிய) வேளே! கந்தனே!' என ஓதும் சக்தியைத் தந்தருளுக.

(இனிய) இசை பொருந்தும்படி, (அன்று) முன்பு சராசரங்கள் அசைவின்றி நிற்கும்படி, (புல்லாங்குழலை) ஊதவல்ல அழகிய கண்ணன் (திருமால்)...கஜேந்திரன் எனையாண்டருளுக என்று—

வருத்தத்துடனே 'மூலப்பொருளே' என்று (தொடர்வுடன்) பேரன்புடனே கூச்சலிட்டு அழைத்த இடத்துக்கு, கண் இமை இமைக்கும் நேரத்துக்கு முன்பே வந்து (உதவிய) திருமால்- திருமாலும்,

(திசை முகனாரும்) நான்முகனும்- பிரமனும்—திசைகளில் உள்ளோரும், மண்ணுலகத்தவரும், வானுலகத்தவரும் வலம் வந்து சூழ வாழ்கின்ற சிவபெருமானது பழைய ஊரும்

மாதர்கள் வந்து அரிய நடனங்களை ஆடுகின்ற தலமுமான—திருவலத்தில் மேவும் பெருமாளே!

(வேள், கந்தன என ஓதும் விறல் தாராய்)

வேலூர்.

670.

அதிகமாக (நிரம்பப்) பொருள் கொடுப்பவர் நேர்பட்டால் (கிடைத்தால்) ரசனை...இரசனம்—சுவை... இன்பம் காட்டுபவர்கள், பொருள் கொடாதவர் கூடவந்தால் அவர்களைத் தம்மை விட்டு நீங்கும்படி ஓட்டுபவர்கள், மாயையே ஒரு உருவம் எடுத்தது போல்பவர்கள், நட்பு பாராட்டுவது போல

அசட ராக்கிகள் மார்மே லேபடு
முலைகள் காட்டிகள் கூசா தேவிழும்
அழகு காட்டிக ளாரோ டாகிலு மன்புபோலே;

சதிர தாய்த்திரி வோயா வேசிகள்
கருணை நோக்கமி லாமா பாவிகள்
தருமு பேட்சைசெய் தோஷா தோஷிகள் நம்பொணாத-

சரச வார்த்தையி னாலே வாதுசெய்
விரக மாக்கி விடாமூ தேவிகள்
தகைமை நித்துன தாளே *சேர்வதும் எந்தநாளோ;

†மதுரை நாட்டினி லேவாழ் வாகிய
அருகர் வாக்கினி லேசார் வாகிய
வழுதி மேற்றிரு நீறே பூசிநி மிர்ந்துகூனும்-

மருவு மாற்றெதிர் வீறே டேறிட
அழகி போற்றிய மாரு லாகிய
மகிமையாற் சமண் வேரோ டேகெட வென்றகோவே;

புதிய மாக்கனி வீழ்தே னூறல்கள்
பகலி ராத்திரி யோயா ஆலைகள்
புரள மேற்செல வூரூர் பாயஅ ணைந்துபோதும்-

---

* சேர்வது—இடைவிடாது நினைத்தல்—'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்'—திருக்குறள் 3-உரை.

† சம்பந்தர் வரலாறு—பாடல் 181-பக்கம் 420-கீழ்க்குறிப்பு.

(வந்தவர்களை) அசடர்களாக ஆக்குபவர்கள், மார்பு மேலே உள்ள கொங்கைகளைக் காட்டுபவர்கள், கூச்சம் இல்லாமல் (மேலே) விழுந்து தமது அழகைக் காட்டுபவர்கள், யாராயிருந்தாலும் (அவர்கள் மீது) அன்புள்ளவர்கள் போலச்

சாமர்த்தியமாய்த் திரிதலில் ஒய்தல் இல்லாத (எப்போதும் திரியும்) வேசிகள், அருள் நோக்கம் என்பதே இல்லாத மகா பாவிகள், வேண்டுமென்றே அலக்ஷியம் செய்கின்ற – புறக்கணிக்கின்ற – (தோஷா தோஷிகள்) பலவித (தோஷம்) குற்றம் – பாவம் – செய்பவர்கள் – நம்புதற்கு முடியாத—

பக்குவ வார்த்தைகளால் – இனிய காம சேஷ்டையை வளர்க்கும் பேச்சினால் – வாதுசெய்து – காமத்தை மூட்டி – (வந்தவர்களை) விடாது – போக ஒட்டாது பிடிக்கவல்ல மூதேவிகள்—(அத்தகைய பொது மகளிருடன்) (தகைமை நீத்து) கூடும் நிகழ்ச்சிகளைவிட்டு உன்னுடைய திருவடிகளை நான் (சேர்வதும்) இடைவிடாது சிந்திப்பதுமான ஒரு நாள் உண்டோ? ஒரு நாள் கிடைக்குமா!

மதுரைப் ப்ரதேசத்திலே வாழ்ந்திருந்த சமணர்களின் பேச்சிலே — கொள்கையிலே ஈடுபட்டிருந்த பாண்டியன் உடல்மீது திருநீறு பூசி, அவனுடைய கூன் நிமிரவும்—

பொருந்திய (வைகை) யாற்று வெள்ளநீரை எதிர்த்து (வீறுடன்) சிறப்புடன் (அவ் வெள்ளநீரில்) இட்ட ஏடு மேற்செல்லவும், (அழகி போற்றிய மகிமையால்) ... அழகு நிறைந்த பாண்டிமாதேவி – மங்கையர்க்கரசி உன்னைத் துதித்துப் போற்றிய பத்தியின் சிறப்பாலும், (மாறுலாகிய மகிமையால்) மாறுபட்ட (பகைமை பூண்ட) சமணர் வாதத்தினால் ஏற்பட்ட நிகழ்ச்சிச் சிறப்பாலும்— அல்லது அழகி போற்றிய—மாறுல்-வகையினால் ஏற்பட்ட சிறப்பாலும்) அந்த சமணர்கள் வேருடன் அழிய வெற்றிகொண்ட தலைவனே!

புதிய மாங்கனிகளினின்றும் விழுகின்ற தேன் ஊறல்களும், பகலும் இரவும் ஓயாது வேலை செய்யும் கரும்பாலைகளின் மேலே புரண்டு, மேற்சென்று, அயலில் உள்ள பல ஊர்களிலும் பாயும்படி சேர்ந்து போகின்ற—

புகழி னுற்கடல் சூழ்பார் மீதினி
லளகை போற்பல வாழ்வால் வீறிய
புலவர் போற்றிய வேலூர் மேவிய தம்பிரானே. (க)

671. இறைஞ்ச.

தானன தந்த தந்த தானன தந்த தந்த
தானன தந்த தந்த தனதான

சேலால மொன்று செங்கண் வேலாலும் வென்று மைந்தர்
சீர்வாழ்வு சிந்தை பொன்ற *முதல்நாடித்-
தேன்மேவு செஞ்சொ லின்சொல் தானேதி வந்தணைந்து
தீராத துன்ப இன்ப முறுமாதர்;
கோலாக லங்கள் கண்டு மாலாகி நின்ற னன்பு
கூராமல் மங்கி யங்க மழியாதே-
கோள்கோடி பொன்ற வென்று நாடோறு நின்றி யங்கு
கூர்வாய்மை கொண்டி றைஞ்ச அருள்தாராய்;
†மாலாலு ழன்ற ணங்கை யார்மாம தன்க ரும்பின்
வாகோட ழிந்தொ டுங்க முதல்நாடி-

* முதல்—'முதலிலார்க்கு ஊதியம் இல்லை'—திருக்குறள் 449.
† காமனை எரித்த வரலாறு:
—பாடல் 399 பக்கம் 510-கீழ்க்குறிப்பு

மாலால் உழன்று மன்மதன் அணங்கு [வருத்தம்] உற்றது: சிவபிரான்மீது நீ சென்று உனது மலர்ப்பாணத்தை எய்யவேண்டுமென்று பிரமன் காமனுக்குச் சொன்னபோது—காமன் அஞ்சி, மயங்கி, ஏக்கம் உற்றான்:

"கிலேசமதாகி, வாட்டிய மென் மலர்போல் அணிமாழ்கி"—

'ஐங்கணைக் கரத்தினேன் அரந்தை எய்தி ஆதியாம் புங்கவற்கு மாறுகொண்டு பொருகிலேன்" என்றான்; சிவபிரான்மீது அம்பு எய்ய மாட்டேன் என்று காமன் கூறப் பிரமன் உனக்குச் சாபம் இடுவேன் என்றனன்; உனது சாபத்தால் துன்பம் அடைவதை விட ஈசன்மீது அம்பு செலுத்தி மாளுதல் நன்றெனக் காமன் கூறினன்.

"மதனவேள் அழுங்கி வெய்துயிர்த்து நினது வாய்ச் சூளின் ..துன்புழந்து படுதலிற் காளகண்டன் முன்பு சென்று... கணைகள் தூஉய் மாளினுஞ் சிறந்த தம்ம மற்றும் உய்யலாகுமே"—என்று கூறி ஏகினன், அங்ஙனமே சென்று சிவன்மீது அம்பு எய்து அவர் நெற்றிக்கண் தீயால் மாண்டனன் -(கந்தபுரா-I.4-8,54,56,57)

(தொடர்ச்சி—பக்கம் 43 பார்க்க)

புகழ்பெற்ற காரணத்தால், கடலாற் சூழப்பெற்ற இப் பூமியில் (குபேரனது நகர்) அளகாபுரிபோல் பல வகையான வாழ்வால் மேம்பட்டு விளங்கும் (வேலூரில்), (புலவர்கள்) பண்டிதர்கள் அல்லது தேவர்கள் போற்றிய வேலூரில் வீற்றிருக்கும் தம்பிரானே!

(உனதாளே சேர்வதும் எந்த நாளோ)

671.

சேல்மீன் போலவும், (ஆலம்) விஷம் போலவும் உள்ள செவ்விய கண்ணுகிய வேலாலும் (மைந்தர்களை — ஆண்களை) வென்று அவர்களுடைய சீரும் நல் வாழ்வும் மனமும் குலைந்து அழியும்படி, (முதல் நாடி) முதலிலேயே யோசித்து— அல்லது அம் மைந்தர்களுக்கு உள்ள (முதல்) பொருளை—மூலதனத்தைத் விரும்பித்—

தேன் போன்ற செம்மை வாய்ந்த சொற்களையும், இனிய சொற்களையும் பேசி வந்து அணைந்து முடிவு இல்லாத துன்பத்தையும் இன்பத்தையும் அடைகின்ற மாதர்களின்—

ஆடம்பரங்களைப் பார்த்து மோக மயக்கம் கொண்டவனுய், (நின்றன் அன்பு) உன்மீது அன்பு பெருகாமல், பொலிவுகுறைந்து, உடல் அழிந்துபோகாமல்—

(கோள்) தீமை- இடையூறு கோடிக் கணக்கானவைகள் அழிந்து போகும்படி வென்று, தினந்தோறும் ஒழுக்க வழியிற் செல்வதான சிறந்த உண்மைப் பத்தியை மேற்கொண்டு (உன்னை) வணங்கும்படியாக உனது திருவருளைத் தந்தருளுக.

*(மாலால்) (இன்னது செய்வது என்று தெரியாத) மயக்கத்தினுல் மனம் அலைப்புண்டு (அணங்கை) வருத்தத்தை (ஆர்) நிரம்பக்கொண்ட (மா) பெருமை பொருந்திய (மதன்) மன்மதன் (கரும்பின்) கையிற்கொண்ட கரும்புவில்லின், (வாகு) அழகுடனே (அழிந்துஒடுங்க) அழிபட்டு மறைய, (முதல்) முன்பு (நாடி) நாடினவரான — (எண்ணி எரித்தவரான) சிவபிரானுடைய—

* இனி, மாலால் உழன்று—வள்ளிமீது கொண்ட மோகத்தால் அலைப்புண்டு, அணங்கை—வள்ளியை, ஆர் மாமதன்—மா ஆர் மதன்—பெருமை நிறைந்த மன்மதன்—(அவன்) கரும்பும், அழகும்

[தொடர்ச்சி பக்கம்-44 பார்க்க.]

வாழ்வான கந்த முந்த மாருகி வந்த டர்ந்த
மாசூரர் குன்ற வென்றி மயிலேறீ ;
மேலாகு மொன்ற மைந்த மேனுடர் நின்றி ரங்க
வேலாலெ றிந்து குன்றை மலேவோனே-
வேய்போல வுந்தி ரண்ட தோள்மாதர் வந்தி றைஞ்சு
வேலூர்வி ளங்க வந்த பெருமாளே. (உ)

விரிஞ்சிபுரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். வேலூருக்கு மேற்கிற் காட்டுப்பாடி ஜங்ஷனிலிருந்து 8-மைல். வரகவி-மார்க்க சகாய தேவாருளிய "திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்" என்னும் மிக அருமையான நூல் அச்சிடப்பட்டுள்ளது. "கரபுரி" "கரபுரம்" எனவும் இத்தலத்துக்குப் பெயர் வழங்கும். ஸ்தல புராணம் உண்டு.]

672. திருவடியை நினைத்திட

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத் தனதான

*ஒருவரைச் சிறுமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட் டதனாலே-

* இப் பாடலின் முதல் இரண்டு அடிகள் வேசையர் தந்திரத்தையும் அவரால் வரும் துன்பங்களையும் விளக்குகின்றன.

[43-ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி.]

அழிந்து ஒடுங்க—தனது கரும்பு வில்லும் அழகும் குலைபட்டு ஒடுங்க—மன்மதன் பாணங்கள் முருகவேளினிடம் வெற்றி பெறாது (காமனது ஐந்தாம் பாணம் அவரைக் கொல்லமாட்டாது பிழைபட) காமன் நாணமுற்று ஒடுங்க—முதல் நாடி—முன்பு—அந்த அணங்கை நாடி—விரும்பிச் சென்று (அவளை மணந்து) வாழ்வு பெற்ற கந்த—என்றும் ஒருவாறு பொருந்தும்; முருகவேள் மாலால் உழன்றது:—

"குறமானொடு மகிழ் கருத்தாகி...உனது கட்பாணம் எனதுடை நெஞ்சு பாய்தல் காணாது மமதை விட்டாவி யுயவருள் பாராய்". (பாடல் 209)—என வருவனவற்றைக் காண்க;

காமன் கரும்போடு...ஒடுங்கியது.

"காமன்கை மலர்கள் நாண வேடம்பெண் அமளிசேர்வை காண் எங்கள் பழநிமேவு பெருமாளே"—என்றஇடத்திற் காண்க. (பாடல் 179)

செல்வப் புதல்வனான கந்தனே! முற்பட்டுப் பகைமை பூண்டு வந்து நெருங்கி எதிர்த்த பெரிய சூராதிகள் அடங்க வெற்றி மயில்மேல் ஏறியவனே!

மேலான (ஒன்று) — மேலான (எண்ணம் ஒன்று) பரம்பொருளின் தியானம் (அமைந்த) பொருந்திய (மேனாடர்) விண்ணோர் நின்று பரிதபித்து வேண்ட வேலாயுதத்தைச் செலுத்திக் கிரௌஞ்ச மலையை எதிர்த் தழித்தவனே!

(பச்சை) மூங்கில்போலத் திரட்சியுள்ள தோள்களை உடைய மாதர்கள் வந்து வணங்கும் (பெருமாளே!) வேலூர் விளங்கும்படி வந்து வீற்றிருக்கும் பெருமாளே!

(இறைஞ்ச அருள்தாராய்)

விரிஞ்சிபுரம் *(கரபுரி)

672.

(தம்மிடம் வந்த) ஒருவரைத் (தங்களது) சிறிய வீட்டில் உள்ள படுக்கை மெத்தையில் இருக்கவைத்து, ஒருவரைத் தங்களுடைய கடைத்தலை வாசலில் (புறக்கடையில்) மனக்குழப்பத்துடன் சுழலவைத்து, ஒருவரை (வேகத்துடன்) ஆத்திரத்துடன் தெருவில் திரியவைத்து, (அத்தகைய) செய்கைகளாலே—

---

* (காம்) கழுதை முகமுள்ள அசுரராஜன் பூசித்த தலமாதலின் 'கரபுரி' எனப் பெயர் வந்தது; "நிருதர் தங்குலத் துதித்தனன் கரனெனும் நிருதன் .... சூலபாணியாம் வழித்துணை மருந்தைத் தொழுதான்". விரிஞ்சிபுரத்துச் சிவபிரான் திருநாமம் 'வழித்துணை நாதர்" (திருவிரிஞ்சைப் புராணம்)—கரபுரிச் சருக்கம்)

(விரிஞ்சன்)-பிரமன் பூசித்ததால் 'விரிஞ்சன் புரம்' ஆயிற்று; "'கரபுரி யெனும்பதி விரிஞ்சைப் பெயர்படைத்து பிரமனுஞ் சிவகதி பெற்றான்" [திருவிரிஞ்சைப் புராணம்—விரிஞ்சைப்புரி சருக்கம்]

"பூவிலுறையுந் தேவன் மாமுனி கரன்தூய பூசை புரியும் பாதனர், ஆரணி விரிஞ்சேசனர்"—விரிஞ்சை பிள்ளைத்தமிழ்—20

ஒருவருக் கொருவர்சக் களமையிற் சருவவிட்
டுருவுபத் திரமெடுத் தறையின்மற் புரியவிட்
*டுயிர்பிழைப் பதுகருத் தளவிலுச் சிதமெனச் செயுமானர் ;

தருமயற் ப்ரமைதனிற் றவநெறிக் கயலெனச்
†சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்வுறத் திரிவேனைச்-

‡சகல துக் கமுமறச் சகலசற் குணம்வரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடஅருட்
டருவாயே ;

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையில்வைத்
தறவுமுக் கிரம்விளைத் திடுமரக் கரைமுழுக்
கொடியதுர்க் குணஅவத் தரைமுதற் றரிசறுத் திடும்வேலா-

xகுயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே ;

---

*'உயிர் பிழைப்பது கழுத்தளவி லுப்பிசம் எனச் செயுமானர்-' —எனவும் ஒரு பாடம். (கழுத்தளவும் வீக்கம் கண்டால் பிழைப்பது அரிது போல).

† சரியை—கிரியை — விளக்கம் — பாடல் 331 - பக்கம் 330-கீழ்க்குறிப்பு.

‡ இந்த நாலாவது அடி—சொல்லழகும் பொருளழகும் கொண்டு அருமையாக அமைந்துள்ள வேண்டுகோளாகும். மனப்பாடஞ் செய்யத் தக்கது.

x இந்த ஆறுவது அடி — அருணகிரியாரின் வாக்கு வல்லமையைக் காட்டுகின்றது. "வாக்குக் கருணகிரி" என்ற முது மொழிக்கு இது எடுத்துக் காட்டாகும்.

ஒருவருக் கொருவர் (சக்களமையில்) சக்களமைப் பகைமையில் — போட்டிப் பகைமையில் — (சருவவிட்டு)— போராட விட்டு, அவர்கள் (உருவு பத்திரம் எடுத்து) வாளை உருவி எடுத்து — அரையிலேயே மல் யுத்தம் செய்யும்படி வைத்து, உயிர் பிழைப்பதே—யோசித்துப் பார்க்கில் — (உச்சிதம் என)— தக்கது, மேல் என்னும்படிச் செய்கின்ற (மானர்) பொதுமகளிர்—

தருகின்ற காம இச்சை மயக்கத்தினல்—தவ வழிக்கு மாறுபட்டவனுகி - புறம்பாகி - சரியை மார்க்கத்திலும்— கிரியை மார்க்கத்திலும் செய்வதற்குள்ள தவ ஒழுக்கம் இல்லாதுபோய், எனது கையிலிருந்த பொருள் வீணுகச் செலவழித்து—(ஊரில் உள்ள) யாவரும் எனை நெருங்கி இகழ (இழித்துப்பேசத்) திரிகின்ற என்னுடைய—

எல்லாவித துக்கங்களும் நீங்கவும், எல்லாவித நற்குணங்களும் கூடவும், பூமியில் நான் புகழை அடையவும் புகழ் விளங்கி வாழவும் வேண்டிய (தகைமை) யோக்யதையை — மதிப்பைப் பெற்று, உன்னுடைய அழகிய திருவடிகளை எப்போதும் (நட்புடன்) அன்புடன் (நான்) நினைக்கும்படியாக (உனது) திருவருளைத் தந்தருளுக ;

தங்களுடைய குரு [பிரகஸ்பதி] சொன்ன சொற்படி தவநெறியில் இருந்த [புலவரை] தேவர்களைச் சிறையில் வைத்து மிகவும் [உக்கிரம்] கொடுமை செய்துவந்த அரக்கர்களாகிய, முற்றிலும் கொடிய கெட்ட குணத்து வீணர்களை முன்பு - அவர்கள் செய்த குற்றங்களுக்காக அறுத்தெறிந்த வேலாயுதனே !

குயில்போன்ற மொழியையும், கயல்மீன் போன்ற கண்களையும், பவளம்போன்ற வாயிதழையும், வில்போன்ற நெற்றியையும், சந்திரன் போன்ற முகத்தையும், புன்னகையையும், கருமேகம் போன்ற கூந்தலையும், (கிரிதனம்) மலைபோன்ற கொங்கைகளையும், கொடிபோன்ற இடையையும், (பிடி) பெண் யானையின் நடைபோன்ற நடையையும், கொண்டிருந்த குறமகள் — குறமகளாம் லக்ஷ்மியை (கிராத லக்ஷ்மியை) வள்ளியை அணைபவனே !

கருதுசட் சமயிகட் கமைவுறக் கிறியுண்டப் —
*பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக் —
கலகமிட் டடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத் திடுவோனே-
கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் †கயல்குதித் துலவுநற்
கனவயற் றிகழ்திருக் காபுரத் தறுமுகப் பெருமாளே. (௪)

673. ஆண்டருள

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதானு

குலையமயி ரோதி குவியவிழி வீறு
குருகினிசை பாடி முகமீதே-
குறுவியர்வு லாவ அமுதினினி தான
குதலையுமொ ராறு படவேதான்;
பலவிதவி நோத முடனுபய பாத
பரிபுரமு மாட அணைமீதே-
பரிவுதரு மாசை விடமனமொ வாத
பதகனையு மாள நினைவாயே;
‡சிலைமலைய தான பரமர்தரு பால
சிகிபரிய தான குமரேசா-

---

* 'பறிதலை'ச் சமணர்—பாடல் 172-பக்கம் 398-கீழ்க்குறிப்பு.

† மீன் குதித்தலால் கமுகங்குலை விழுதல் :—'கமுகு செங்கனி யுதிர்த்திட... வாளை குதிகொள்ள'—சம்பந்தர்-3-70-3.

'வாளையம் பகடு தாவிக் கள்ளுலாம் பசிய தாற்றுக் கமுகிளம் பாளைகீறும்'—நைடதம்—சுயம்வரம் 137

கமுகம் குலைவிழ கதலியின்கனி உகுதல் 'தெங்கம்பழங் கமுகின்குலை சாடிக் கதலி செற்று'—திருக்கோவை-100

‡ சிலைமலை — திரிபுரம் எரித்தபோது — பாடல் 285 — பக்கம் 206-கீழ்க்குறிப்பு.

ஆராய்ச்சி செய்துள்ள ஆறு சமயத்தாருக்கும் பொருந்தியுள்ள (கிறி) தந்திரம் உடையவர்களும், மயிர் பறிபடும் தலையருமான சமணர்களின் குலம் முன்பு பொடிபட்டு ஒடுங்க; வாதப்போர் செய்து, அவர்களுடைய உயிருள்ள உடலைக் கழு முனையில் வைத்திட்டவனே!

(கமுகமரத்தின்) பாக்குமரத்தின் குலை அற்றுவிழ—(அந்த குலை தன்மீது விழுவதால்) கதலியில் — வாழை மரத்தினின்றும் பழங்கள் விழ—(அந்தப் பழங்கள் தன்மீது விழும் அதிர்ச்சியால்) கரும்பினின்றும் முத்துக்கள் விழ—(அல்லது, கமுகங்குலை விழவும், கதலிக்கனி விழவும், கரும்பு முத்து உதிரவும்) (அத்தகைய வேகத்துடன்) கயல்மீன்கள் குதித்து விளையாடும் நல்ல பெருமைவாய்ந்த வயல்கள் விளங்கும் அழகைக் கொண்ட காபுரம் எனப் பெயருள்ள விரிஞ்சிபுரத்தில் (வீற்றிருக்கும்) ஆறுமுகப் பெருமாளே!

(நினைத்திட அருட்டருவாயே)

673.

(குலையமயி ரோதி)—ஓதி மயிர் குலைய—கூந்தல் மயிர் குலைந்துபோக, கண்கள் குவிய, விளக்கத்துடன் குருகின் இசை—கோழி முதலிய எட்டுப் பறவைகளின புட்குரல் இசைபாடி (ஒலிசெய்து) முகத்தின் மேலே—

சிறு வியர்வை தோன்றி உலவ, அமுதம்போல இனிமை கொண்ட குதலைச் சொற்களும் ஒரு வழியாகத் தோன்றவே (அல்லது ஆறுபோலப் பெருகவே)—

பலவகைப்பட்ட விநோதங்களுடன் இரண்டு கால்களிலும் உள்ள சிலம்பும் அசைந்தொலிக்கம் படுக்கையின்மேல்—

அன்பு எழுகின்ற ஆசையை விடுவதற்கு மனம் ஒத்துக்கொள்ளாத இப் பாதகனையும் ஆண்டருள நினைந்தருளுக.

வில்லாக (மேரு) மலையைக்கொண்ட பரமர் தந்த குமரனே! மயிலைக் குதிரையாகக் கொண்ட குமரேசனே!

*திருமதுரை மேவு மமணர்குல மான
திருடர்கழு வேற வருவோனே;
†கலின்வடிவ மான அகலிகைபெ ணான
கமலபத மாயன் மருகோனே-
‡கழனிநெடு வாளை கமுகொடிய மோது
கரபுரியில் வீறு பெருமாளே. (உ)

674. திருவடியைப் பெற

தனன தந்த தானன தனன தந்த தானன
தனன தந்த தானன தனதான

நிகரில் பஞ்ச பூதமு நினையு நெஞ்சு மாவியு
நெகிழ வந்து நேர்படு மவிரோதம்-
நிகழ்த ரும்ப்ர பாகர நிரவ யம்ப ராபர
நிருப அங்கு மாரவெ ளனவேதம்;
சகர சங்க சாகர மெனமு ழங்கு வாதிகள்
சமய பஞ்ச பாதக ரறியாத-
தனிமை கண்ட தானகிண் கிணிய தண்டை சூழ்வன
சரண புண்ட ரீகம தருள்வாயே;
மகர விம்ப சீகர முகர வங்க வாரிதி
மறுகி வெந்து வாய்விட xநெடுவான-
வழிதி றந்து சேனையு மெதிர்ம லைந்த சூரனு
மடிய இந்தி ராதியர் குடியேறச்;

---

* சமணர் கழு ஏறினது. பாடல் 181-பக்கம் 422 கீழ்க்குறிப்பு.

† அகலிகை பெண் ஆனது:
—பாடல் 379 பக்கம் 458-பாடல் 624 பக்கம் 448 கீழ்க்குறிப்பு.

‡ 'கழனி நெடுவாளை கமுகொடிய மோது கரபுரியில் வீறு பெருமாளே'--என இவ்வாறே முடிவதாக பல பாடல்கள் இருக்கக்கண்டு என் தந்தையார் அப் பாடல்கள் அருணகிரியார் வாக்காக இரா என்று அச்சிற் சேர்க்காது விட்டு விட்டனர். யாமும் அவைதமைச் சேர்க்கவில்லை

x சூரனொடு போர் புரிந்தபோது அண்டத்துக்கு அப்பால் இருந்த அசுர சேனைகள் வராதவண்ணம் அண்டவாயிலை முருகவேள் அடைத்தனர். அப்போது சூரன் கணைகள் ஏவி ஆகாயவழியைத் திறந்து தன் சேனைகளை வரவழைத்தான். "வள்ளல் பகழி தன்னால் அண்டம தடைந்த வாயில் அடைத்ததும்..... தருவர் கோமான் கண்டனன்"; அவுணர் செம்மல் செஞ்சரந் தூண்டி அண்டநெறிப் படுவாயில் பொத்து நெடுங்கணைக் கதவ முற்றும் அறுத்து நுண்தூளி ஆக்கி......கபாடம் நீக்கி மாவொடு களிறந் தேரும்

அழகிய மதுரையில் இருந்த சமணர் குலமான திருடர்கள் கழுவிலேற வந்தவனே!

கல் ரூபமாய்க்கிடந்த அகலிகை பெண்ணுக் வரும்படிச் செய்த தாமரையன்ன திருவடியைக் கொண்ட திருமால் (ஸ்ரீராமரின்) மருமகனே!

கழனியில் இருக்கும் பெரிய வாளைமீன்கள் கமுகமரம் ஒடியும்படி மோதுகின்ற கரபுரியில் (விரிஞ்சிபுரத்தில்) வீற்றிருக்கும் பெருமாளே!

(பதகனையும் ஆள நினைவாயே)

674.

ஒப்பில்லாத (மண், நீர், தீ, காற்று, வான்) என்னும் ஐந்து பூதங்களும், நினைக்கின்ற நெஞ்சும், (ஆவியும்) உயிரும் நெகிழும்வடி வந்து கூடுகின்ற 'விரோதமின்மை'யை (அவிரோத ஞானத்தை)க்

கூட்டுவிக்கின்ற (பிரபாகர) (ஞான) ஒளி உருவனே! (ஞான சூரியனே!) (நிரவயம்) அழிவிலாத 'பராபரனே)! மேலாம் பொருளே! பரம்பொருளே! அரசே! அழகிய குமரவேளே என்று வேதங்கள் முழங்குவதும்—

சகரரால் ஏற்பட்டதும், சங்குகள் உள்ளதுமான கடல்போல ஒலி எழுப்பி வாதஞ் செய்வோராம் சமய வாதிகளாகிய பஞ்சபாதகர்கள் அறியாததும்—

தனிமை கண்டதுமான (ஊழிக் காலத்தில் தனித்து நிற்பதுமான) – கிண்கிணியும் தண்டையும் சூழ்ந்துள்ள உனது திருவடித் தாமரை யதனைத் தந்தருளுக;

மகரமீன்கள் உள்ளதும், (விம்ப, ஒளி கொண்டதும்— (சிகரம்) அலையுள்ளதும், (முகரம்) ஒலி கொண்டதும் – அல்லது சங்குகள் உள்ளதும், (வங்கம்) மரக்கலங்கள் செல்வனவுமான கடல் கலங்கி, சூடுண்டு, கொந்தளிக்கவும், பெரிய ஆகாய

வழியைத் திறந்து (வந்த) சேனைகளும், எதிர்த்துப் போர்செய்த சூரனும் மாண்டுபோக, இந்திராதி தேவர்கள் (விண்ணிற்) குடியேற—

வயவரும் வரம்பின்றாகி...வருக என்று தோள்கொட்டி ஆர்த்தான்; அவுணவெள்ளம் திண்ணென ஈண்டை எகி .....சூழ்ந்த" கந்தபுரா. 4-13-249-251.

சிகர துங்க மால்வரை தகர வென்றி வேல்விடு
சிறுவ சந்த்ர சேகரர் பெருவாழ்வே-
திசைதொ றும்பர பூபதி திசைமு கன்ப ராவிய
திருவி ரிஞ்சை மேவிய பெருமாளே. [௩]

675. பசிப்பிணி போக்க

தனன தனதனத் தனன தனதனத்
தன்ன தனதனத் தனன தனதனத்
தனன தனதனத் தனன தனதனத் தனதானா

பரவி யுனதுபொற் கரமு முகமுமுத்
தணியு முரமுமெய்ப் ப்ரபையு மருமலர்ப்
பதமும் விரவுகுக் குடமு மயிலுமுட் பரிவாலே-
படிய மனதில்வைத் துறுதி சிவமிகுத்
தெவரு மகிழ்வுறத் தரும நெறியின்மெய்ப்
*பசியில் வருமவர்க் கசன மொருபிடிப் படையாதே;
சருவி யினியநட் புறவு சொலிமுதற்
பழகு மவரெனப் பதறி யருகினிற்
சரச விதமளித் துரிய பொருள்பறித் திடுமானார்-
தமது ம்ருகமதக் களப புளகிதச்
சயில நிகர்தனத் திணையின் மகிழ்வுறத்
தழுவி யவசமுற் றுருகி மருளெனத் திரிவேனோ;
கரிய நிறமுடைக் கொடிய அசுரரைக்
கெருவ மதமொழித் துடல்கள் துணிபடக்
கழுகு பசிகெடக் கடுகி அயில்விடுத் திடுதீரா-
கமல அயனுமச் சுதனும் வருணனக்
கினியு நமனுமக் கரியி லுறையுமெய்க்
கணனு மமரரத் தணையு நிலைபெறப் புரிவோனே;

---

* "பசித்து வந்தே எற்கு மவர்க்கெனின் எங்கேனும் எழுந்திருப்பார்"—" இருபிடிசோறு கொண்டிட்டுண்டிரு"
—கந்தரலங்காரம் 66, 57.

சிகரங்களை உடைய உயர்ந்த மாயையில் வல்ல கிரௌஞ்சமலை பொடிபட்டழிய, ஜெயவேலைச் செலுத்தின இளையோனே! சந்திரனை முடியிற் சூடியுள்ள சிவனது பெருஞ் செல்வமே!

திசைகள் தோறும் உள்ள மேன்மை பொருந்திய அரசர்களும், பிரமனும் பரவிப் போற்றின திருவிரிஞ்சையில் வீற்றிருக்கும் பெருமாளே!

(சரணபுண்டரிகம தருள்வாயே)

675.

உன்னைப் போற்றி உன்னுடைய அழகிய திருக்கரங்களையும் திருமுகங்களையும் முத்தமாலை அணிந்துள்ள திருமார்பையும், தேக ஒளியையும், நறுமண மலர்போன்ற திருவடிகளையும், உனதிடத்திற் பொருந்தியுள்ள சேவலையும், மயிலையும் உள்ளத்து அன்புடனே—

அழுந்திப் படியும்படி மனத்தில் வைத்துத் திடமான (சிவம்) சிவபத்தி மிகப் பெற்று, யாவரும் மகிழ்ச்சியுற, அறநெறியில் நின்று, உண்மையான பசியுடன் வருகின்றவர்களுக்கு, உணவு ஒருபிடி அளவேனும் இடாமல்—

(சருவி) கொஞ்சிக் குலவி, இனிய நட்பும் - உறவும் காட்டும் வார்த்தைகளைச் சொல்லி முதலிலிருந்தே பழகியவர்கள் போலப் (பதறி) அங்கலாய்த்து அருகில் இருந்து காமலீலைகளை விதம் விதமாகச் செய்து, வேண்டிய பொருளைப் பறிக்கின்ற (பொது)மகளிருடைய—

(மகளிர் தம்) கஸ்தூரிக் கலவை கொண்டதும், புளகாங்கிதம் கொண்டதும், மலைக்கு ஒப்பானதும் ஆன கொங்கை இரண்டையும் மகிழ்ச்சியுடன் தழுவி, தன்வசம் இழந்து, உருகி, அந்த மோக மயக்கத்துடனே திரிவேனோ!

கறுத்த நிறமுள்ள பொல்லாத அசுரர்களின் கர்வத்தையும், ஆணவத்தையும் ஒழித்து, அவர்கள் தேகம் துண்டுபடவும், கழுகுகளின் பசி கெடவும், வேகமாகச் சென்று வேலாயுதத்தைச் செலுத்தின தீரனே!

தாமரைமலரில் உள்ள பிரமனும், திருமாலும், வருணனும், அக்கினியும், யமனும், அந்த (வெள்ளை) யானையில் ஏறிவரும் உடற் கண்ணனும் (உடலெலாம் கண்கொண்ட— ஆயிரங் கண்ணனாகிய இந்திரனும், தேவர்கள் அனைவரும் தத்தம் பதவி நிலைக்கப்பெற்று விளங்கச் செய்தவனே!

இரையு முததியிற் கடுவை மிடறமைத்
*துழுவை யதளுடுத் தரவு பணிதரித்
திலகு பெறநடிப் பவர்மு னருளமுத் தமவேளே !
இசையு மருமறைப் பொருள்கள் தினமுரைத்
தவனி தனி†லெழிற் கரும முனிவருக்
கினிய கரபுரப் பதியி லறுமுகப் பெருமாளே. [௬]

676 திருவடியைப் பெற

தனன தந்த தான தனன தந்த தான
தனன தந்த தான தனதான

மருவு மஞ்சு பூத முரிமை வந்தி டாது
மலமி தென்று போட அறியாது-
மயல்கொ ளிந்த வாழ்வு அமையு மெந்த நாளும்
வகையில் வந்தி ராத அடியேனும் ;
உருகி யன்பி னோடு உனைநி னைந்து நாளும்
உலக மென்று பேச அறியாத-
உருவ மொன்றி லாத பருவம் வந்து சேர
உபய துங்க பாத மருள்வாயே ;
‡அரிவி ரிஞ்சர் தேட அரிய தம்பி ரானும்
அடிப ணிந்து பேசி கடையூடே-
அருளு கென்ற போது பொருளி தென்று காண
அருளு மைந்த ஆதி குருநாதா ;

---

* புலித்தோல், அரவாபரணம் பூண்டது.—
.. பாடல் 286-பக்கம் 210 கீழ்க்குறிப்பு

† எழிற்கரும முனிவர்—திரிவிரிஞ்சை மான்மியத்தை அறுமுகன் பால் கேட்ட வசிட்டர் பல முனிவர்களுக்கும் அந்த மான்மியத்தை எடுத்துக் கூறினதாகத் திருவிரிஞ்சைப் புராணம் கூறும். வசிட்டருக்கு முருகவேள் உபதேசித்த காரணத்தால்—'எழிற்கரும முனிவர்'—வசிட்டர் என்றும் கொள்ளலாம் ஸ்தல மான்மியம் கேட்ட முனிவர்கள் என்றும் கொள்ளலாம்.

‡ சிவபிரான் உபதேசிப்பாயாக என முருகவேளைக் கேட்ட வரலாற்றைப் பாடல் 628-பக்கம் 462 கீழ்க்குறிப்பு †† பார்க்க.

ஒலிக்கின்ற கடலில் (எழுந்த) விஷத்தைக் கழுத்தில் நிறுத்திவைத்துப், புலியின்தோலை உடுத்து, பாம்பாகிய ஆபரணத்தைப் பூண்டு, விளக்கம் உற நடனம் செய்பவராகிய சிவபிரான் முன்பு ஈன்றளித்த உத்தம வேளே!

பொருந்திய அரிய வேதங்களின் பொருள்களை நாள்தோறும் ஆய்ந்துரைத்து, இப் பூமியில் அழகிய தமது கடமைகளைச் செய்யும் முனிவர்க்கு இனிய (பெருமாளே!) (கரபுரம்) திருவிரிஞ்சைப் பதியில் ஆறுமுகப் பெருமாளே!

(அசனம் ஒரு பிடிப் படையாதே திரிவேனே)

676.

பொருந்தியுள்ள [மண், நீர், தீ, காற்று, வான்] என்னும் ஐந்து பூதங்களுக்குச் சொந்தமாகாத வண்ணம்—இது [இவ் வுடல்] மலம் [அழுக்கு] என்று உதறித்தள்ள அறியாமல்—

மயக்கம் கொண்ட இந்த வாழ்வு போதும் என்று எந்த தினத்திலும் அத்தகைய எண்ணம் நன்றாக மனத்தில் தோன்றுதல் இல்லாத அடியேனும்—

உள்ளம் உருகி அன்போடும் உன்னை நினைந்து நாளும்—(நாளும் உன்னை நினைந்து) (உலகம்) பிரபஞ்ச விஷயங்கள் என்று பேசும் பேச்சே பேச அறியாத—

இவ் வடிவினதாம் இது என்பது இல்லாத நிலை வந்துகூட (நிலையை நான் அடைவதற்கு) உனது இரண்டு பரிசுத்தமான திருவடிகளைத் தந்தருளுக.

திருமாலும், பிரமனும் தேடுதற்கு அரியவரான தம்பிரானும் சிவபெருமானும் உனது திருவடிகளிற் பணிந்து பேசிக், கடைசியாக—(அந்த பிரணவப் பொருளை எனக்கு உபதேசித்து)

அருளுக என்று கேட்டபோது (பொருளிதென்று) இதுதான் பொருளென்று அவர் உணர்ந்து கொள்ளும்படி உபதேசித் தருளிய குழந்தையே! (அல்லது வீரனே!) (அங்ஙனம்) அந்த ஆதி சிவனுக்கும் (குருநாதன் ஆனவனே) குருநாதனே!

*திரியு மும்பர் நீடு கிரி பிளந்து சூரர்
செரு வடங்க வேலை விடுவோனே-

செயல மைந்த வேத தொனிமு ழங்கு வீதி
திருவி ரிஞ்சை மேவு பெருமாளே. [௫]

திருவாலங்காடு.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னைக்கு மேற்கு 37-மைல். மூவர் தேவாரம் பெற்ற முதூர். காரைக்கால் அம்மையார் பதிகம் பாடி அப்பன் திருவடிக் கீழமர்ந்தருளும் தலம். பஞ்ச சபைகளுள் இது "ரத்ந சபை". 'பழையனூர்' என்னும் ஸ்தலம் திருவாலங் காட்டுக்குக் கிழக்கு 1-மைல் தூரத்திலுள்ளது. ஸ்தலபுராணம் உண்டு]

677. தியானிக்க

தனதானந் தானன தானன
தனதானந் தானன தானன
தனதானந் தானன தானன தனதான

கனவாலங் கூர்விழி மாதர்கள்
†மனசாலஞ் சால்பழி காரிகள்
கனபோகம் போருக மாமிணை முலைமீதே-

கசிவாருங் கீறுகி வாலுறு
வசைகாணுங் காளிம வீணிகள்
‡களிகூரும் பேயமு தூணிடு கசுமாலர் ;

மனவேலங் கிலக லாவிகள்
மயமாயங் கீதவி நோதிகள்
மருளாருங் காதலர் மேல்விழு மகளிர்வில்-

* எழுகிரியின் வரலாற்றை—பாடல் 257-பக்கம் 140-கீழ்க் குறிப்பிற் காண்க. சூரனுடன் இம் மலை அவனுக்கு அரணாகித் திரிந்த தென்பதைத் தக்கயாகப்பரணி 5 ன் விசேடக் குறிப்பைப் (பக்கம் 259) பார்க்க.

† மனசால்-அஞ்சால்-ஐந்தால்-ஐம்பொறிகளால் ; "நெஞ்சால்-அஞ்சால்"—என்றார் 678 ஆம் பாடலில்.

‡ பேயமுதூண்—'ஆவேச நீர்' என்றார் பிறிதோரிடத்து—பாடல் 362

(சூரன் செல்லும் இடமெல்லாம் உடன்) திரிந்து (உம்பர்) விண் அளாவி நீண்டிருந்த எழுகிரியைப் பிளந்து சூரருடைய போர் ஒடுங்கும்படி வேலாயுதத்தைச் செலுத்தியவனே!

(செயல்) ஒழுக்கம் அமைந்த — ஒழுக்கத்துடன் ஓதப்பட்ட வேதத்தின் ஒலி முழங்கும் வீதியைக் கொண்ட திருவிரிஞ்சையில் வீற்றிருக்கும் பெருமாளே!

(உபய துங்க பாதம் அருள்வாயே)

திருவாலங்காடு.

677.

பெருத்த கொடிய (ஆலம்) விஷம் மிக்குள்ள கண்களைக்கொண்ட மாதர்கள், (மன—சாலம்) மனத்திலே (ஜாலம்) வஞ்சனை நடிப்பு வண்ணம் மிக்குள்ள பழிகாரிகள், (அல்லது மனசால் — அஞ்சால் — மனதாலும் ஐம்பொறிகளாலும் — பழிகாரிகள் — பழிப்புக்கிடமான செயல் செய்பவர்கள்), (கன — போக — அம்போருகம்) மிகுந்த போக சுகத்தைத் தரக்கூடியதும், தாமரை மொட்டுக்கு ஒப்பானதுமான கொங்கையின் மீதே—

(கசிவு ஆரும்) மன நெகிழ்வு - அன்பு மிகுதிக்கு அடையாளமாக அமைந்துள்ள (கிறு) கிறல்களாலும் (கிள்ளால்) கிள்ளின் குறிகளாலும் பழிப்புக்கு இடம் தரும் (காளிமவீணிகள்) கறுப்பை — களிம்பை — அழுக்கைக் கொண்ட வீணர்கள்—(களி) களிப்பை—ஆவேசத்தைத் தரும் (பேய் அமுது ஊண்) தீய, வெறித்தன்மையைத் தரும் உணவை ஊணுகத் தருகின்ற அசுத்தர்கள்—

(மனவேலங் கிலக கலாவிகள்) மனம் - ஏல் - அம் - கிலக - கலாவிகள் - மனத்தில் - (ஏல்) - பொருந்திய - (கிலக) தந்திரம் வாய்ந்த (அம்) அழகிய (கலாவிகள்) தந்திரவாதிகள்; மயமாயம் (மாயமயம்) - மாயம் நிறைந்த- வஞ்சனை—பாசாங்கு நிறைந்த—(கீத விநோதிகள்)— இசை ஞானத்தில் இன்பம் கொள்பவர்கள்—(மருள் ஆரும்) காம மயக்கம் நிறைந்த காதலர்கள் (தம் மீது மோகம் கொண்டு வந்தவர்கள்) மேலே விழுகின்ற (பொது) மகளிர்—ஒளி பொருந்திய—

மதிமாடம் வானிகழ் வார்மிசை
மகிழ்கூரும் பாழ்மன மாமுன
மலர்பேணுந் தாளுன வேய்ந் ... ள்நுளாயோ ;

தன தானந் தானன தானன
எனவேதங் கூறுசொல் மீறளி
ததைசேர்தண் பூமண மாலிகை ... யணிமார்பா-

*தகரேறங் காரச மேவிய
குகவீரம் பாகும ராமிகு
தகைசாலன் பாரடி யார்மகிழ் ... பெருவாழ்வே ;

தினமாமன் பாபுன மேவிய
தனிமானின் †தோளுட ணடிய
‡தினைமாவின் பாவுயர் தேவர்கள் ... தலைவாமா-

---

* முருகவேள் ஆட்டுவாகனம் கொண்ட வரலாறு :—நாரதர் ஒரு வேள்வி செய்தார். அந்த யாகத்தில் ஒரு ஆடு எழுந்தது. அது வடவாக்கினி போலக் கொதித்தெழுந்தது. யாவரும் அச்சம் உற்றனர். அந்த ஆட்டை அடக்கும்படித் தேவர்கள் வேண்ட வீரவாகுவை அனுப்பி அந்த ஆட்டைப் பிடித்துவரச் செய்து அதன்மேல் முருகவேள் ஏறி விளையாடினர் ; அந்த ஆடு "ஒரு பேருருவு கொண்டே.. இப் புவியும் வானும் தூரந்து... தாக்கி வரை பராகமெழ ஓடி திசைக்கரி இரிந்தலறி யேங்க— இரவி தேரொடு தகர்ந்து முரிவாக—முட்டும். பாயும் யாண்டும் உலவுற்றே ... உயிர்கட்கிறுதி செய்து பெயர்காலை வீரவாகு கோடவை பற்றி யீர்த்து .." இளையவன் முன்னர் உய்த்தான் .. அன்று தொட் டமலமூர்த்தி உவகையால் அனைய மேடம் ஊர்ந்தனன் ஊர்தியாக" கந்தபுரா—தகரேறுபடலம் 4-25).

"நெருப்பிலுதித் தங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்று கொணர்ந்
தெங்கோன் விடுக்குதியென் றுய்ப்ப அதன்மீதிவர்ந்து
எண்டிக்கு நடத்தி விளையாடு நாதா !"-கந்தர் கலிவெண்பா.

'குறமாது...கவினுறு புயத்தில் உலாவி விளையாடி' என்றார் பிறிதோரிடத்து (பாடல் 293)

‡ முருகவேள் தினைப்பிரியர்..."தேமார் தேமா காமீ"—என்றார் 381-ஆம் பாடலில்.

(மதிமாடம் வானிகழ்வார்) மாடம் மதி - வான் - நிகழ்வார்—(உபரிகை உள்ள) வீடுகள்—மேல்மாடம் உள்ள வீடுகள் நிலவையும் வானத்தையும் (அளாவி) விளங்க இருப்பவர்கள் மீது மகிழ்ச்சி நிரம்பக்கொள்ளும் பாழான மனம் ஆம் (இது) - (உன) உன்னுடைய (மலர் பேணும்) தாமரைமலரை ஒத்த — (தாள்) திருவடியை, (உனவே) உன்னவே—தியானிக்கவே—(அருள்) உனது திருவருளை (அருளாயோ) பாலிக்க மாட்டாயோ!

தனதானந் தானன தானன என்று—வேதம் கூறு சொல்—வேதஞ் சொல்லுவோரது சொல்லொலியினும் மிகுந்ததான ஒலியுடன் (அளி) வண்டுகள்—நிறைந்து சேர்ந்துள்ள குளிர்ந்த பூவாலாகிய நறுமண மாலைகளை அணிந்த மார்பனே!

தகரேறங் காரச மேவிய குக—தகர் - ஏறு - அங்கு - ஆர் - அசம் மேவிய குக! (தகர்) நொறுங்குதலும் * (ஏறு) அழிவும் - அங்கு - அப்போது - ஆர் - நிறையச் செய்த - அசம் - ஆட்டின்மேல் - மேவிய - ஏறி அமர்ந்த-குகனே! (அல்லது ஆர் தகர் ஏறு அசம் மேவிய குக — அன்று நிறைவுடன் எழுந்த (தகர் ஏறு) ஆட்டுக்கிடா ஆகிய (ஆண் ஆடாகிய) அஜத்தின்மேல்—ஏறி யமர்ந்த குகனே! வீரனே! (அம்பா குமரா) தேவி பார்வதியின் குமரனே! மிக்க (தகை) மேம்பாடு நிறைந்த அன்பு நிறைந்த அடியார்கள் மகிழ்கின்ற பெருஞ் செல்வமே!

தினம் ஆம் அன்பா க)—தினந்தோறும் (உன்மீது) கொண்ட அன்புடனே தினைப்புனத்தில் இருந்த ஒப்பற்ற (மானின்) மான்போன்ற வள்ளியுடைய (தோளுடன் ஆடிய) தோளுடன் விளையாடிய (தினை மா இன்பா) தினைமாவில் பிரியம் உடையவனே! மேலான தேவர்களின் தலைவனே! (அல்லது தலை+வாமா—தலைவனான வாமா— அழகனே) (மா) பெருமை—

---

* ஏறு—அழிவு படுதல் — "சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ் வெயில் ஏறு பெற்றுதிர்வன போல்" கலித்தொகை 2

திகழ்வேடங் *காளியொ டாடிய
†ஜெகதீசங் கேசந டேசுரர்
திருவாலங் காடினில் வீறிய பெருமாளே. [க]

678. அருள் பெற

தந்தானந் தாத்தம் தனதன
தந்தானந் தாத்தம் தனதன
தந்தானந் தாத்தம் தனதன தனதான

பொன்றுமன் றுக்கும் புதல்வரும்
நன்றுமன் றுர்க்கின் றுறுதுணை
‡பொன்றனென் றுட்டம் பெருகிய புவியூடே
பொங்காவெங் கூற்றம் பொதிதரு
சிங்காரஞ் சேர்த்திங் குயரிய
புன்கூடொன் றுய்க்கொண் டுறைதரு முயிர்கோல;
நின்றுனின் றேத்தும் படிநினை
வுந்தானும் போச்சென் றுயர்வற
நிந்தாகும் பேச்சென் பதுபட நிகழாமுன்
நெஞ்சாலஞ் சாற்பொங் கியவினை
விஞ்சார்தென் பாற்சென் றகலிட
நின்தாள்தந் தாட்கொண் டருள்தா நினைவாயே;

---

* சிவபெருமான் காளியுடன் நிருத்தம் செய்தருளிய தலம் இத் தலம்.

"ஆடினர் காளி காண ஆலங்காட் டடிகளாரே"

—அப்பர் 4—68—8

'அண்டம் புழைபட இடத்தாள் நீட்டி யற்புதன் காளிதோற்க ஆடியதிது'—திருவிளை-அருச்சனை 13.

† 'சங்கமேச' என்பது சந்தம் நோக்கி 'சங்கேச' என ஆயிற்றுப் போலும். 'சங்கமேசர்' — காவிரியுடன் பவானி நதியும் கூடும் இடமாகிய பவானி (திருநணு) என்னும் தலத்துச் சிவன்.

இனி 'சங்கு' என்பது ஒரு பேரெண். 'சங்கேச' என்பதற்குப் பல உயிர்களுக்கும் தலைவனே' எனவும் பொருள் கொள்ளலாம்.

‡ பொன் தான் என்று—எனப்பிரிக்க. புவியிற் கூற்றம் பொதிதரு சிங்காரம் - இதனுடன்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

—என்னும் திருக்குறளை (336) ஒப்பிடுக.

திகழ்கின்ற வேடத்துடன் காளியுடனே நடனம் ஆடின-ஜெகதீச-சங்கேச-நடேசுரர்—ஜெகதீசனும் சங்கமேசனுமான (அல்லது சங்கேசனுமான) நடேசப் பெருமானுடைய (தலமாகிய) திருவாலங்காட்டில் விளங்கி நிற்கும் பெருமாளே!

(தாள் உ(ன்)னவே அருள் அருளாயோ)

678.

(பொன்று) அழிவிலாத வகையில், (மன்று ஆக்கும்) சபையில் புகழைப் பெருக்கும் (புதல்வரும்) பிள்ளைகளும், (நன்றும் அன்று) நல்லபடி நிலையான உதவியன்று (நிலைத்த உதவியாகாது); (ஆர்க்கு இன்று உறுதுணை பொன்தான்) யாருக்கு இக்காலத்தில் உற்ற துணையாகப் பொன்தான உள்ளது—அதுவும் நிலைத்திருப்பதன்று (மக்கட் செல்வம், பொருட் செல்வம் இவையெலாம் நிலையில்லாதன)—என்னும் இந்தக் கூத்தாட்டமே நிறைந்துள்ள (இப்) பூமியிலே—பூலோக வாழ்க்கையிலே—

(பொங்கா) கோபித்து எழும் கொடிய யமன் (உயிரைக் கொண்டுபோக) மறைந்து நிற்கும் அலங்காரம் கொண்டதாய் இங்கு மேம்பட்டு நிற்கும் இழிவு நிறைந்த கூடு ஒன்றைக் கொண்டு அதனுள் உறைகின்ற உயிர் இடங்கொள்ள—

நிற்கின்றுன் (இவன்), இப்போது உன்னைப் போற்றும்படியான நினைவுகூட (இவனுக்கு) இல்லாமற் போயிற்று என்னும்படியான மேன்மையற்ற நிந்தையாடுகின்ற பேச்சு என்பது உண்டாகிப் பரவுதற்கு முன்பாக—

மனத்தாலும், (அஞ்சாலும்) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் உண்டாகிப் பெருகும் வினையானது (அதிகமாகாமல்) வளராமல், என்னிடத்தினின்றும் விட்டு நீங்க, (அவ்வினை ஒழிய) உனது திருவடிகளைத் தந்து என்னை ஆட்கொண்டு உனது திருவருளைத்தர நினைந்தருள வேண்டுகின்றேன்—

*குன்றால்விண் டாழ்க்குங் குடைகொடு
கன்றாமுன் காத்துங் †குவலய
முண்டார்கொண் டாட்டம் பெருகிய மருகோனே-

கொந்தார்பைந் தார்த்திண் குயகுற
மின்தாள்சிந் தாச்சிந் தையில்மயல்
கொண்டேசென் ‡றட்கொண் டருளென மொழிவோனே;

அன்றாலங் xகாட்டண் டருமுய
நின்றாடுங் கூத்தன் திருவருள்
அங்காகும் ०பாட்டின் பயனினை யருள்வாழ்வே-

அன்பால்நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
** அஞ்சாநெஞ் சாக்கந் தரவல பெருமாளே. [உ]

---

* குன்றேந்தி பசுக்களைக் காத்தது: திருவாய்ப்பாடியில் மழை வேண்டி ஆயர்கள் இந்திரனை வழிபடச் சமைத்த சோற்றைக் கண்ணன் இந்திரன் செருக்கை அடக்க நினைத்துக் கோவர்த்தன மலைக்கு அதை நிவேதித்து அதைத் தானே தேவதாரூபமாய் அமுது செய்தான். இந்திரன் கோபித்து கண்ணன் மேய்க்கும் கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் இடையர்களுக்கும் தீங்கு வரும்படி ஏழு நாள் கல்மழையைப் பெய்விக்க, கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மழையை அங்ஙனம் தடுத்து, உயிர்களைப் புரந்தனன்

"இந்திரனுக் கென்று ஆயர்கள் எடுத்த எழில் விழவில் பழ நடை செய், மந்திர விதியில் பூசனை பெறாது மழை பொழிந்திடத் தளர்ந்து ஆயர், எந்தம்மோடு இன ஆ நிரை தளராமல் எம்பெருமான் அருளென்ன, அந்தமில் வரையால் மழைதடுத்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே"—பெரிய திருமொழி 2-3-4

"காளநன் மேகமவை கல்லொடு கால் பொழியக்
கருதிவரைக் குடையாச் காலிகள் காப்பவனே".
—பெரியாழ்வார் 1 5-2

† குவலயம் உண்டது:
—பாடல் 267-பக்கம் 164 கீழ்க்குறிப்பு.

‡ வள்ளியை வேண்டினது:
"உய்திறம் வேறெனக் குளகொல் ஈண்டு நின்
கைதனில் இவ்வுயிர் காத்துக் கோடியால்"
—கந்தபுரா 6-24-86.

(தொடர்ச்சி பக்கம் 63 பார்க்க)

மலையைக் (விண்) மேகங்களைத் தடுக்கும் குடையாகக் கொண்டு, கன்றுகளையும் பசுக்களையும் முன்பு காத்தவரும், பூமியை உண்டவருமான திருமாலின் பாராட்டு மிக்குள்ள மருகனே!

பூங்கொத்து நிறைந்த பசிய மாலை யணிந்துள்ள திண்ணிய கொங்கைகளை உடைய (குறமின்) வள்ளியின் திருவடிகள் (சிந்தாச் சிந்தையில்) நீங்காத தன் மனத்தில் காம மயக்கம் கொண்டு (அவளிடம்) போய் (என்னை) 'ஆட்கொண்டு அருளுக' எனக் கூறினவனே!

அன்று திருவாலங்காட்டில் தேவர்களும் பிழைக்க நின்று ஆடின (கூத்தன்) சிவபெருமானது திருவருள் அங்கு கூடும்படியான பதிகப் பாடல்களின் பயனை எடுத்து ஓதி அருளிய செல்வமே!

அன்பால் உனது திருவடியைக் கும்பிடுவர்களுடைய பாவத்தைத் தொலைத்து இப் பூமியிலே (அவர்களுக்கு) அஞ்சாத நெஞ்சத்தையும் (ஆக்கம்) செல்வங்களையும் தரவல்ல பெருமாளே!

(நின் தாள் தந்து ஆட்கொண்டருள் தர நினைவாயே)

---

x அண்டர் உய்ய ஆடினது:

"கொடிய வெஞ்சினக் காளியிக் குவலயம் முழுதும்
முடிவு செய்வனென் றெழுந்த நாள் முளரியான் முதலோர்
அடைய அஞ்சலும் அவள் செருக் கழிவுற, அழியாக்
கடவுள் ஆடலால் வென்ற தோர் வடவனம் (கண்டான்)'
—கந்த புரா—வழிநடை—8'

0 பாட்டின் பயனினை யருளினது: சம்பந்தப் பெருமானுகத் தாம் பாடின ஒவ்வொரு பதிக ஈற்றிலும் அப் பதிகப் பயனை ("ஞான சம்பந்தன் உரை செய்த திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" முதல் "ஞான சம்பந்தன் ... ஒண்டமிழ் வல்லார்க் கரும்பழி பாவ மவல மிலரே" வரை) என உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். (1–1—11. 3 . 125--11)

** "அஞ்சா நெஞ் சாக்கந் தரவல பெருமாளே"—இது மனப்பாடம் செய்ய வேண்டிய அடி
—பாடல் 1183 ஈற்றடியையும் பார்க்க.

"பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத் தஞ்சமென் றிரமாந் திவளாரையும் அஞ்சுவா ளல்லள்"—அப்பர் 5-29-7

679. கதி பெற

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த தனதான

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன *மானும் பூட்டி யிடையூடே-
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகல்வழி நாலைந் தாக்கி வருகாயம்;
பவவினை நூறுங் காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
பசுபதி பாசங் காட்டி புலமாயப்-
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
பாசதி தானுங் காட்டி யருள்வாயே;
சிவமய ஞானங் கேட்க †தவமுனி வோரும் பார்க்க
திருநட மாடுங் கூத்தர் முருகோனே-
திருவளர் மார்பன் போற்ற திசைமுக னானும் போற்ற
ஜெகமொடு வானங் காக்க மயிலேறிக்;
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு குமரேசா-
குவலயம் யாவும் போற்ற ‡பழனையி லாலங் காட்டில்
xகுறமகள் பாதம் போற்று பெருமாளே. (௩)

---

* மான்—குதிரை, புத்தி தத்துவம்.

† தவமுனிவோர்—திருவாலங்காட்டிற் கார்க்கோடகன், முஞ்சி கேசர் என்னும் முனிவர்கள் சிவபிரானது அருளைப் பெற்று அவரது நடன தரிசனத்தைப் பெற்றார்கள். (திருவாலங்காட்டுப் புராணம்)

‡ பழனை — பழையனூர். இந்த ஊர் திருவாலங்காட்டுக்கு மிக அருகில் உள்ளது. தேவாரத்திலும் "பழையனூர் ஆலங் காட்டெம் அடிகளே" எனச் சம்பந்தரும், 'பழனைமேய ஆலங்காட்டடிகள்', 'பழனைமேயார், பழனைபதியா உடையார்', என அப்பரும், "பழையனூர் மேய அத்தா! ஆலங்காடா"—எனச் சுந்தரும் பழையனூர் ஆலங்காடு என இரண்டு ஊரையும் சேர்த்தே பாடியுள்ளார்கள்.

x குறமகள் பாதம் போற்று பெருமாள்—என்பது குறமகள், முருகவேளின் பாதம் போற்றுகின்றாள், குறமகளின் பாதத்தை முருகவேள் போற்றுகின்றார்—என இருவகையும் பொருள்பட நிற்கின்றது. (பாடல் 665- பக்கம் 26 பார்க்க)

679.

மண், நீர், காற்று இவைகளைக் கூட்டியும், நெருப்பு, வான், இவைகளைச் சேர்த்தும், புதுமை வாய்ந்த மனம் என்னும் குதிரையைப் பூட்டியும், [அல்லது புத்தி தத்துவத்தையும் சேர்த்து]— இவையுடன்

ஐம்பொறி, ஐம்புலன் என [இரண்டு ஐந்து] பத்து பொருள்களை ஆக்கியும், [இவையுடன்] மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கு கருவிகளைப் பிணைத்தும், சொல்லப்படுகின்ற வழிகளாக [துவாரங்களாக] [நால் ஐந்து] ஒன்பது வாயில்களை உண்டுபண்ணியும் ஏற்படுகின்ற இந்த உடலுக்கு ஏதுவான—

பாவ வினைகள் [நாறும்] நாறுதலை—பொடிபட்டு அழிதலைக் காட்டி [பொடிபடச்செய்து], [சுவமதி| சுபமதி— நல்ல அறிவை எனக்குப் பொருந்தவைத்து, [பசு, பதி, பாசம்] உயிர், கடவுள், தளை—என்னும் இம் முப் பொருள்களின் இலக்கணங்களை எனக்கு விளக்கி, ஐம்புலன்களும் மாய்ந்து ஒடுங்க—

இந்தப் பூமிக்குப் போ என்று என்னை விரைவில், அனுப்பி [ஒடச்செய்து], உனக்கு அடிமையான என்னை நீ வந்து வாழ்த்தி [பரகதியை] முத்தியையும் அடையச் செய்து அருள்புரிவாயாக.

சிவமயமான ஞானோபதேசத்தைக் கேட்டு [மகிழவும்], தவ நிறைந்த முனிவர்கள் பார்த்து [மகிழவும்] திருநடமாடுகின்ற கூத்தப் பெருமானுடைய*[முருகோனே] குழந்தையே!

இலக்குமி இருக்கும் [மார்பன்] திருமால் போற்றவும், பிரமன் நாள்தோறும் போற்றவும், மண்ணுலகையும் விண்ணுலகையும் காக்கும் பொருட்டு மயில் மீதேறி—

எழுகிரிகளுடன் சூரன் தோல்வியுற, எழுகடலையும் மாமரத்தையும் தாக்கி, எடுத்துக் கூர்வேலை அங்குச் செலுத்தின குமரேசனே!

உலகெலாம் போற்றப் பழையனூரிலும் ஆலங்காட்டிலும் வள்ளி பாதம் போற்றுகின்ற பெருமாளே!

[பரகதி தானுங் காட்டி அருள்வாயே]

---

* முருகன்—குழந்தை—பாடல் 693 பார்க்க.

680. தமிழ்ப்பாடல் பாட.

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த தனதான

வடிவது நீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்-
மகனொடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி யுயிர்போமுன் ;
படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்து னடியேனைப்-
பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பாபுகழ் பாடேன் றட்கோ டருள்வாயே ;
*முடிமிசை சோமன் சூட்டி வடிவுள †ஆலங் காட்டில்
‡முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே-
முருகவிழ் தாருஞ் சூட்டி யொருதனி வேழங் கூட்டி
முதல்மற மானின் சேர்க்கை மயல்கூர்வாய் ;
இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி
யெதிர்பொரு சூரன் தாக்க வரஏகி-
இலகிய வேல்கொண் டார்த்து உடலிரு கூறன் றாக்கி
யிமையவ ரேதந் தீர்த்த பெருமாளே. (௪)

---

* 'பிறை சூடின வரலாறு'
—பாடல் 415-பக்கம் 548 கீழ்க்குறிப்பு.

† "சிதம்பரத்தினியற்று நடம் உத்தமமாம் இன்ப மேன்மை தாங்கியிடும் ஆனந்தத் தாண்டவம்; ஆருயிர்க் கிருளைத்தடுத்து ஆனந்தம் ஓங்கியிட அளிப்பதுவாம்"

" ஆலவனம் அனைத்தினுக்கும் முதலான நடத்தானம், அருளார் நட்ட, மூலமதார், அதனகத்துச் சண்ட தாண்டவங் ககன முகடு நோக்கி, மேலணுக இடத்தாளை எடுத்து, வலத்தாள் ஊன்றி விளைக்கு நட்டம், சாலுமிது சங்கார தாண்டவமாம் பிறப் பிறப்புத் தவிர்த்தலாலே.-(திருவாலங்- புராணம்-சுநந்தர் உபதேச-35, 36)

சிதம்பரத்தில் செய்யப்பட்ட நடனம்—ஆனந்த தாண்டவம். அது ஆன்மாக்களுக்கு ஆணவமல இருளைநீக்கும். திருவாலங்காட்டிற் செய்யப்படும் நடனம் 'சண்டதாண்டவம்'' 'ஊர்த்துவதாண்டவம்'' —இது ஆகாய உச்சியை நோக்கி மேலே செல்லும்படியாக இடது பாதத்தைத் தூக்கி வலது பாதத்தை ஊன்றிச் செயப்படும் 'சங்கார தாண்டவ'மாகும்—இது ஜனன மரணங்களை நீக்கும் தன்மையது;

‡ முதிர் நடம்--'ஆலவனம்—முதலான நடத்தானம், நட்ட மூலமதாம்''—என்றபடியால்.

680.

(வடிவது) நிறம் அதை [நீலம்] கறுப்பாகக் காட்டி [முடிவுள] முடிவு காலத்தில் [உள்ள] வருகின்ற காலன் [கூட்டிவர விடு] கூட்டி அனுப்புகின்ற [தூதன்] யமதூதன் [கோட்டிவிடு] வளைத்து எறிகின்ற [பாசம்] பாசக் கயிற்றினல் [உயிர்போமுன்]—

மகனும், மாமனும், பாட்டி முதலான உறவினர்களும் [இருக்கின்ற நிலையைக்] கேட்டு, [மதிகெட] புத்தி கலங்கும்படி, [மாயம்] பிரபஞ்ச மாயம்—உலகமாயை— [தீட்டி] அதிகம் கூர்மையடைந்து உச்ச நிலையடைய உயிர் போவதற்கு முன்—

[படிமிசை] இப் பூமியிலே உனது திருவடிகளைக் காட்டி [இந்த] உடலுக்கு ஏற்பட்ட நோய்கள், பண்டு ஏற்ற பழவினை — முன் செய்த வினைப்பயனல் அடைந்துள்ள பழைய வினைகளாகிய பாவங்களை ஒழித்து உன் அடியவனுகிய என்னை—

அன்புடனே நாள்தோறும் காத்தளித்து விரிந்த [தமிழாலங்கூர்த்த] அம் தமிழால் கூர்த்த—அழகிய தமிழால் மேம்பட்ட [அல்லது விரிதமிழால்...விரிந்த தமிழ் மொழியால்...அம் கூர்த்த ..அழகு மிக்க] [பரபுகழ்] மேலான திருப்புகழைப் பாடுவாயாக என்று ஆட் கொண்டு அருளுவாயாக.

சிரசின் மேல் நிலவைத் தரித்து, அழகுள்ள திருவாலங்காட்டில் [முதிர் நடம்] [முற்பட்ட] முதன்மையான நடனத்தை ஆடுகின்ற கூத்தர் [சிவபெருமானுடைய] புதல்வனே!

நறுமணம் கமழும் மாலையையும் சூட்டி, ஒப்பற்றுத் தனித்துவர யானையையும் வரவழைத்து முன்பு [வேடர்மான்]வள்ளியொடு கூடுதலில் மோகம் மிக்கவனே;

இடிபோல வேகத்தைக் காட்டி (நெடிதரு) புலால் நாற்றம் கொண்ட (அல்லது, நீண்ட) சூலாயுதத்தைத் தயாராக எடுத்து எதிரிலே சண்டைசெய்த சூரன் தாக்குதற்கு வந்தபோது சென்று

விளங்குகின்ற வேலாயுதத்தை நுகரும்படி அனுப்பிச் சூரனுடைய உடலை இரண்டு கூருக அன்று ஆக்கித் தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்த பெருமாளே!

(புகழ்பாடென் ருட்கொ டருள்வாயே)

680.

(வடிவது) நிறம் அதை [நீலம்] கறுப்பாகக் காட்டி [முடிவுள] முடிவு காலத்தில் [உள்ள] வருகின்ற காலன் [கூட்டிவர விடு] கூட்டி அனுப்புகின்ற [தூதன்] யமதூதன் [கோட்டிவிடு] வளைத்து எறிகின்ற [பாசம்] பாசக் கயிற்றினால் [உயிர்போமுன்]—

மகனும், மாமனும், பாட்டி முதலான உறவினர்களும் [இருக்கின்ற நிலையைக்] கேட்டு, [மதிகெட] புத்தி கலங்கும்படி, [மாயம்] பிரபஞ்ச மாயம்—உலகமாயை—[தீட்டி] அதிகம் கூர்மையடைந்து உச்ச நிலையடைய, உயிர் போவதற்கு முன்—

[படிமிசை] இப் பூமியிலே உனது திருவடிகளைக் காட்டி [இந்த] உடலுக்கு ஏற்பட்ட நோய்கள், பண்டு ஏற்ற பழவினை—முன் செய்த வினைப்பயனால் அடைந்துள்ள பழைய வினைகளாகிய பாவங்களை ஒழித்து உன் அடியவனாகிய என்னை—

அன்புடனே நாள்தோறும் காத்தளித்து விரிந்த [தமிழாலங்கூர்த்த] அம் தமிழால் கூர்த்த—அழகிய தமிழால் மேம்பட்ட [அல்லது விரிதமிழால்...விரிந்த தமிழ் மொழியால்...அம் கூர்த்த .. அழகு மிக்க] [பரபுகழ்] மேலான திருப்புகழைப் பாடுவாயாக என்று ஆட்கொண்டு அருளுவாயாக.

சிரசின்மேல் நிலவைத் தரித்து, அழகுள்ள **திருவாலங்காட்டில்** [முதிர்நடம்] [முற்பட்ட] முதன்மையான நடனத்தை ஆடுகின்ற கூத்தர் [சிவபெருமானுடைய] புதல்வனே!

நறுமணம் கமழும் மாலையையும் சூட்டி, ஒப்பற்றுத் தனித்துவர யானையையும் வரவழைத்து முன்பு [வேடர்மான்]வள்ளியொடு கூடுதலில் மோகம் மிக்கவனே;

இடிபோல வேகத்தைக் காட்டி (நெடிதரு) புலால் நாற்றம் கொண்ட (அல்லது, நீண்ட) சூலாயுதத்தைத் தயாராக எடுத்து எதிரிலே சண்டைசெய்த சூரன் தாக்குதற்கு வந்தபோது சென்று

விளங்குகின்ற வேலாயுதத்தை நுகரும்படி அனுப்பிச் சூரனுடைய உடலை இரண்டு கூறுக அன்று ஆக்கித் தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்த பெருமாளே!

(புகழ்பாடென் றாட்கொ டருள்வாயே)

திருவோத்தூர்.

[காஞ்சீபுரத்துக்குத் தென்மேற்கு 19-மைல்; கோயிலுக்கு மேற்புறத்திற் சேயாறு ஓடுகின்றது திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது; ஆண்பனை பெண்பனை யான ஸ்தலம்; ஸ்தலபுராணம் உண்டு] சிவபிரான் *(ஒத்து) வேதத்தின் பொருளை முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் அருளிச் செய்த தலம்.

681. யார் முன்னிலையிற் பாடவேண்டுமென்பது

தனனத் தானன தானந் தனனத் தானன தானம்
தனனத் தானன தானம் தனதான

†தவர்வாட் டோமர சூலந் தரியாக் காதிய சூருந்
தணியாச் சாகர மேழுங் கிரியேழுஞ்-
சருகாக் காய்கதிர் வேலும் ‡பொருகாற் சேவலு நீலந்
தரிகூத் தாடிய மாவுந் தினைகாவல்;
துவர்வாய்க் கானவர் மானுஞ் சுரநாட் டாளொரு தேனுந்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே-
துணையாய்க் காவல்செய் வாயென் றுணராப் பாவிகள் பாலுந்
தொலையாப் பாடலை யானும் புகல்வேனோ;
xபவமாய்த் தாணது வாகும் பனைகாய்த் தேமண நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் படிவேதம்-

---

* "சேயாற்றின் தடங்கரைக்கண் இமையோர் கட்கும் மெய்த்தவர்க்கும் ஓதுவித்தோம் ஆதலினல் மேவு திரு ஒத்தூர் என்னும், அத்தலத்தில் எமைத் தொழுவோர் அருமறை நூல் முழுதுணர்ந்து வீடு சேர்வர்" ---காஞ்சிப்புரா—திரு ஏகம்பம் —80.

"ஒத்தின் உரைவரம்பு அகன்ற முக்கண் உத்தமன் சந்தைகூட்டி
அருமறை அறவோர்க் கோது வித்திட மதனைக் காண்மின்"
—திருவிளை— அருச்சனை—14

† தவர்--வில், தோமரம்—தண்டாயுதம், கைவேல். 'தவர்' முதல் 'காவல் செய்வாய்' வரையில் மனப்பாடஞ் செய்யவேண்டிய ஒரு நல்ல பகுதி—வேல், மயில், சேவல், தேவிமார், இறைவன் யாவரும் கூறப்பட்ட காரணத்தால் இப் பாடலை மனப்பாடம் செய்ய அது நற்றுணையாகும்.

‡ சேவல்—கால் கொண்டு பொருவதால்—காலாயுதம், பதாயுதம் எனப் பேர் பெறும்.

x பவ மாய்த்து ஆணது வாகும் எனப்பிரிக்க.

ஆண்பனைகள் காய்த்ததும், அப்பனைகளின் பிறவி ஒழிந்ததும்:— திருவோத்தூர்ப் பெருமானைச் சம்பந்தப் பெருமான் தரிசித்து

திருவோத்தூர்.

681.

(தவர்) வில், வாள், (தோமரம்) தண்டாயுதம் (அல்லது கைவேல்), சூலம் இவைகளைத் (தரித்து)க், (காதிய) கொலைகளைச் செய்த சூரனும் (தணியா) வற்றாத கடல் ஏழும், மலைகள் ஏழும்—

சருகுபோல உலர்ந்து போம்படி எரித்தழித்த ஒளி வேலும், சண்டை செய்யவல்ல கால்களை உடைய சேவலும், நீலநிறம் கொண்டதும் நடனம் ஆட வல்லதுமான மயிலாம் குதிரையும்—தினைப்புனம் காத்த—

பவளம்போன்ற வாயைக் கொண்ட வேடர் மான் (வள்ளியும்), தெய்வலோகத்தவளாகிய ஒப்பற்ற தேன் அனைய தேவசேனையும் துணையாகக் கொண்டு குறைவு ஒன்றுமின்றி, வாழ்கின்ற பெரியோனே!

(நீ) துணையாகக் காவல்செய்து புரப்பாய் என்று உணராத பாவிகளிடத்திற் சென்று, அழிவிலாத அருமைப் பாடல்களை நானும் சொல்லுவேனோ! (சொல்லித் திரிவேனோ)!

(பவம்) பிறப்பை ஒழித்து, ஆணாயிருந்த பனை காய்த்து நறுமணம் வீசும் பழங்களாய்ப் பூமியின்மீது விழும்படியாக—வேதத்தைப்

இருந்தபொழுது, அங்கு ஒரு அடியார் பெருமானிடம் வந்து—'சிவபெருமானுடைய உபயோகத்துக்காக அடியேன் வைக்கின்ற பனைகள் எல்லாம் ஆண்பனையாகவே வளர்கின்றன; அதைக்கண்டு சமணர்கள் பரிகசிக்கின்றனர்'—என முறையிட்டனர். பெருமான் உடனே திருக்கோயிலுக்குச் சென்று திருப்பதிகம் பாடினர்: அப்பதிகத்தில்—"குரும்பை ஆண்பனை யீன்குலை ஒத்தூர்" எனவர, இறைவன் அருளால் ஆண்பனை யெல்லாம் நிறைந்த குலைகளாய்க் குரும்பை காட்டிப் பெண் பனைகளாகக், கண்டோரெல்லாம் அதிசயித்தனர்.

பெருமானது திருவாக்கில் பட்டமையால் அந்த பனைகள் பாசம் விட்டு அகலப் பிறவியையும் ஒழித்துச் சிவத்தைக் கூடின.

"குரும்பை ஆண்பனை யீனும் என்னும் வாய்மை
குலவுதலால், நெருங்கும் ஏற்றுப் பனையெல்லாம்
நிறைந்த குலைகளாய்க் குரும்பை அரும்பு பெண்ணை
யாகியிடக் கண்டாரெல்லாம் அதிசயித்தார்"
(ஏற்றப்பனை ஆண்பனை)

(தொடர்ச்சி 70 ஆம் பக்கம் பார்க்க.)

படியாப பாதகர் பாயன் றியுடாப் பேதைகள் கேசம்
பறி*கோப் பாளிகள் யாருங் கழுவேறச் ;
சிவமாய்த் தேனமுதூறுந் †திருவாக் காலொளி சேர்வெண்
டிருநீற் றலமராடுஞ் சிறியோனே-
செழுநீர்ச் ‡சேய்நதி ய்யாரங் கொழியாக் கோமளம் வீசுந்
திருவோத் தூர்தனில் மேவும் பெருமாளே.

பாக்கம்.

[சென்னையிலிருந்து அறக்கோணம் போகும் வழியில் உள்ள தின்னனூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல்.]

682. திருநாமம் கூறும் அறிவு பெற

தாத்தத்த தானதன தாத்தத்த தானதன
தாத்தத்த தானதன தனதான

கார்க்கொத்த மேனிகடல் போற்சுற்ற மானவழி
காய்த்தொட்டொ ணுதவுரு ஒருகோடி-

(69-ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி)

"பிள்ளையார்தந் திருவாக்கிற் பிறத்த லாலத் தாலமுமுன்
புள்ளபாசம் விட்டகல ஒழியாப்பிறவி தனையொழித்து
......சிவமே கூடினவால்"

—(பெரிய புரா—சம்பந்தர்)—980, 983.

o சமணர்கள்—' வேதம் படியாப் பாதகர், பாயன்றியுடாப் பேதைகள், கேசம்பறி கோப்பாளிகள்"—என வருவது "மறை வழக்கமிலாதமா பாவிகள் பறிதலைக் கையர், பாயுடுப்பார்களை"—என வரும் சம்பந்தர் தேவாரத்தைத் [3-108-3] தழுவுகின்றது.

பறிதலையர்—பாடல் 172 பக்கம் 398 கீழ்க்குறிப்பு

---

* கோப்பாளி—வரிக்கூத்து வகை—(சிலப் 3—13—உரை) 3-ஆம் பதிப்பு பக்கம் 88; கோப்பன்—கெட்டிக்காரன்—தேர்ந்த போக்கிரி.

† கழுவேறத் திருவாக்கால்...அமராடும்: ' வீதி கண்டவர் சீசீ சீயென வேதவஞ்சகர் பாழ்வாய் வீணர்கள் வாதிடுஞ்சமண் வேரோ டேயற வாழ்க அந்தணர் வானோ ரானென ஓது பண்டித ஞான சாரியன்"-திருவையாற்றுப் புராணம்.

" அமணர் கூட்டத்தைச் செந்தமிழ்ப்பா ஒன்றினால் வென்றி நிரைகழுமேல் உய்த்தானை"—ஆளுடைய பிள்ளையார் திருவுலா.

(தொடர்ச்சி பக்கம் 71)

படியாத பாதகர்கள், பாய் அல்லாமல் வேறு உடை அணியாத பேதைகள், (தலை) மயிர் பறிக்கும் (கோப்பாளிகள்) கூத்தாடிச் சமர்த்தர்கள் (ஆகிய சமணர்கள்)—எல்லாரும்—கழுவில் ஏறும்படி—

சிவமயமானதும், தேனும் அமுதும் ஊறின போலத் தித்திக்கும் (உனது) திருவாக்கினாலும் (பாடல்களாலும்), (ஒளி) பெருமைவாய்ந்த வெள்ளைத் திருநீற்றாலும் வாதுப் போர் புரிந்த இளையோனே!

செழுமைவாய்ந்த நீரைக்கொண்ட சேயாறு முத்துக்களைக் கொழித்து அழகு வீசும் திருவோத்தூர் என்னும் தலத்தில் மேவும் பெருமாளே!

(பாவிகள் பாலும்...பாடலை யானும் புகல்வேனே)

பாக்கம்.

682

(கார்க்கு) மேகத்துக்கு நிகரான (மேனி) நிறத்தை உடைய கடல்போலப் பரந்த (சுற்றமான - வழி) சுற்றத்தார்கள் பொருந்திய (வழியிலே) இடத்திலே காய்த்து) பிறந்து தோன்றி, (ஒட்டொணாத) நிலத்து நிற்காத (உரு) (தோற்றம்) உடல்; ஒருகோடிக் கணக்கான–

(70 ஆம் பக்கம் தொடர்ச்சி)

"சமணை நிரைகழு நிறுத்தியன... தமிழ்விரகன கவித்தொகையே"—ஆளுடைய பிள்ளையார் கலம்பகம்-35

திருநீற்றல் அமராடினது :

"ஆலவாய் அண்ணல் நீறே மன்னு மந்திரமு மாகி
மருந்துமாய்த் தீர்ப்ப தென்று...திருப்பதிகம் பாடி"
"திருவளர் நீறுகொண்டு திருக்கையால் தடவ...
வெப்பகன்று...வழுதியு முழுது முய்ந்தான்"
—பெரிய புரா—சம்பந்தர் 764, 765, 770

‡ சேய் நதி...சேயாறு.

x ஆரம் கொழியா...முத்துக்களைக் கொழித்து.

o உரு—உடல் "உருவினில் நிறைந்து நின்றங் குணர்ந்திடும் உயிர்" (சிவஞானசித்தி—சுபக்கம் சூத்திரம் 4-17.

*காக்கைக்கு நாய்கழுகு பேய்க்†கக்க மானவுடல்
காட்டத்தி லீளெரியி லுற‡வானிற;
கூர்ப்பித்த சூலனத றுற்குத்தி யாவிகொடு
போத்துக்க மானகுறை யுடையேனைக்-
கூப்பிட்டு சாவருளி வாக்கிட்டு xநாமமொழி
கோக்கைக்கு நாலறிவு தருவாயே;
oபோர்க்கெய்த்தி டாமறலி போற்குத்தி மேவசுரர்
போய்த்திக்கெ லாமடிய வடிவேலாற்-
**பூச்சித்தர் தேவர்மழை போற்றூர்க்க வேபொருது
போற்றிச்செய் வார்சிறையை விடுவோனே;
பார்க்††கொற்ற நீறுபுனை வார்க்கொக்க‡‡ஞானபர
ணய்ப்பத்தி கூர் மொழிகள் பகர்வாழ்வே-
xxபாக்கொத்தி னுலியலர் நோக்கைக்கு வேல்கொடுயர்
பாக்கத்தில் மேவவல பெருமாளே. (௧)

* பாடல் 651 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

† அக்கம்—அருகு, தானியம், கண்.

‡ வான்—ஆகாயம், வலிமை, பெருமை.

x நாமமொழி கோக்கைக்கு வேண்டிய அறிவை வேண்டுவது அவசியம். 'சோதி நாமமே ஓதி உய்ம்மினே' என்றாராதலின்.
—சம்பந்தர் I-96-3

o மறலியின் வன்மை :
'கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பு'-திருமுருகாற்றுப்படை
"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்"—புறநானூறு 56.

** தேவர்கள் பூமழை பொழிதல்
—பாடல் 645—பக்கம் 510-கீழ்க்குறிப்பு

†† 'கொற்ற நீறு'—'பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு' சம்பந்தர்' (2-66-4) என்றாராதலின்

‡‡ சம்பந்தர் பாடல்களைப் "பத்தி மிக இனிய ஞானப்பாடல்" என்றார் பிறிதோரிடத்து-திருப்புகழ் 1025.

xx பாக்கொத்து — பாமாலை.

காக்கைகளுக்கும், நாய்களுக்கும், கழுகுகளுக்கும், பேய்களுக்கும் (அக்கமான) (உணவுத்) தானியமான (அல்லது கண்ணுன-அருகான) உடல்-(இது காட்டத்தில்) சுடுகாட்டில் பெரு நெருப்பிற் சேரும்படி—(வானில்) ஆகாயத்தை அளாவினதாயுள்ள (அல்லது) வலிமை கொண்டதான—

கூர்மை கொண்டதான சூலாயுதத்தை உடைய எமன் அந்த சூலத்தாற் குத்தி (எனது) ஆவியைக் (கொடுபோ) கொண்டுபோகின்ற துக்கமான ஒரு குறையை (குறைபாட்டை) உடைய என்னை—(நீ)—

(கூப்பிட்டு) உன் அருகே அழைத்து, (உசா அருளி)–உசாவுதல் அருளி—விசாரித்துத் திருவருள் பாலித்துத் (பாடும்படியான) வாக்கை எனக்கு (இட்டு) அருளி, (நாமமொழி கோக்கைக்கு) உன் திருநாமங்களை சொற்களிற் (பாடலாக) அமைத்துக் கோப்பதற்கு வேண்டிய நூல் அறிவைத் தந்தருளுக.

போருக்கு இளைக்காத யமனைப்போல (குத்தி... வேலினல்) எதிர்த்து வந்த அசுரர்கள் ஓடிப்போய்த் தோறும் இறக்கும்படி கூரிய வேலினல்-(குத்தி)—

பூவைச் சித்தர்களும் தேவர்களும் மழைபோலத் (தூர்க்க) மிகப்பொழியச் சண்டைசெய்து, போற்றி வணங்கினவர்களாகிய தேவர்களுடைய சிறையை விட்டவனே!

(பாரில்) (பூமியில்) (கொற்ற நீறு) வெற்றி தருகின்ற திருநீற்றை அணிகின்ற சிவபிரானுக்கு மிக்க ஞானத்திற் சிறந்தவனுய் (ஞானசம்பந்தனுய்ப், பத்தியை நன்கு வளர்க்க வல்ல (மொழிகளை)ப் பாடல்களைச் சொன்ன செல்வனே! (அல்லது — சிவபிரானுக்கு மிக்க ஞான மூர்த்தியாய் பத்தியை வளர்க்கவல்ல (உபதேச) மொழிகளைக் கூறின குருமூர்த்தியாம் செல்வனே!)

பாமாலைகளால் (இயலர்) இயற்றமிழ் வல்ல புலவர்கள் (நோக்கைக்கு) விரும்பிப் பார்ப்பதற்கு, வேல் ஏந்தி சிறந்த **பாக்கம்** என்னும் தலத்தில் வீற்றிருக்க வல்ல பெருமாளே!

(நாமமொழி கோக்கைக்கு நூலறிவு தருவாயே)

683. தியானிக்க

தாத்தத் தனந்த தந்த தாத்தத தனந்த தந்த
தாத்தத் தனந்த தந்த தனதான

பாற்றுக் கணங்கள் தின்று தேக்கிட் டிடுங்கு ரம்பை
நோக்கிச் சுமந்து கொண்டு பதிதோறும்-
பார்த்துத் திரிந்து முன்று ஆக்கத் தையுந்தெ ரிந்து
ஏக்கற்று நின்று நின்று தளராதே;
வேற்றுப் புலன்க ளைந்து மோட்டிப் புகழ்ந்து கொண்டு
கீர்த்தித்து நின்ப தங்க ளடியேனும்-
வேட்டுக் கலந்தி ருந்து *ஈட்டைக் கடந்து நின்ற
வீட்டிற் புகுந்தி ருந்து மகிழ்வேனோ;
மாற்றற்ற பொன்து லங்கு வாட்சக்கி ரந்தெ ரிந்து
வாய்ப்புற்ற மைந்த சங்கு தடிசாப-
மாற்பொற்க லந்து லங்க நாட்டச்சு தன்ப ணிந்து
வார்க்கைத்த லங்க ளென்று திரைமோதும்;
பாற்சொற்ற டம்பு குந்து வேற்கட்சி னம்பொ ருந்து
பாய்க்குட் டுயின்ற வன்றன் மருகோனே-
பாக்குக் கரும்பை கெண்டை தாக்கித் தடம் படிந்த
பாக்கத் தமர்ந்தி ருந்த பெருமாளே. (உ)

---

* ஈடு—வருத்தம். "நாடுமின் இனி நாங்கள் செய்வதென் நீடிணவிருந்து எண்ணி நால்வரும்"—சிந்தாமணி 1762.

683.

(பாறு-பருந்து) பருந்துகளின் கூட்டங்கள் தின்று ஏப்பமிடும் வயிறு நிறைதற்கு இடமான இந்த (உடற்) கூட்டை (நோக்கி) விரும்பிச் சுமந்துகொண்டு ஊர்கள் தோறும்—(காட்சிகளைப்)

பார்த்தும், திரிந்தும், அலைச்சல் உற்றும், செல்வத்துக்கு வழியைத் தெரிந்தும் (அதன்பொருட்டு) (ஏக்கற்று) இளைத்துவாடி (நின்று நின்று) அங்கங்கு நின்று தளராமல்

(நான் முன்வருவதற்கு) வேறுக—மாறுக நிற்கின்ற ஐம்புலன்களையும் (ஒட்டி) அப்புறப்படுத்திப் பிரித்து— ஒருமைப்பட்ட மனத்தினனாய்-உன்னைப் புகழ்ந்துகொண்டு (கீர்த்தித்து) உன் கீர்த்தியையே பாடிப்பாடி உனது திருவடிகளை அடியேனும்—

விரும்பி (உள்ளம் உன்பால்) கலந்திருந்து, (ஈட்டை) வருத்தங்களை - துன்பங்களைக் கடந்து நின்ற மோக்ஷ வீட்டிற் புகுந்து இருந்து மகிழ்வேனோ!

உரைமாற்றுக் கடந்த பொன் விளங்கும் (நாந்தகம் என்னும்) வாளும், (சுதரிசனம் என்னும்) சக்கரமும் தெரிந்து பொருந்த அமைந்த (பாஞ்ச சன்னியம் என்னும்) சங்கமும், (தடி) கௌமோதகி என்னும் தண்டமும்— கதையும், (சாபம்) கோதண்டம்என்னும் வில்லும்—

(மால்) அழகிய (பொற்கலம்) பொன் ஆபரணங்களும் (துலங்க) விளங்க, (நாட்டு) நிலையாக வைத்துள்ள (அச்சுதன்) திருமாலைப் பணிந்து நீளும் (கைத்தலங்கள்) கைகள் என்று சொல்லும்படி (கைகள்போல உள்ள) அலைகள் மோதுகின்ற—

பால் என்று சொல்லும்படியான இடம்— (திருப்பாற்கடலில்) இடம் கொண்டு வேல்போலக் கூரிய கண்ணையும் கோபத்தையும் கொண்ட பாயான— ஆதிசேடன் என்னும் பாம்பணையில் துயில்கொண்டவனை திருமாலின் மருகனே!

(பாக்கு) கமுகமரத்துப் பாக்கையும், கரும்புகளையும் கெண்டை மீன் தாக்கிவிட்டுத் தடாகத்திற் படிகின்ற பாக்கம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற பெருமாளே!

(வீட்டிற் புகுந்திருந்து மகிழ்வேனோ)

திருவேற்காடு.

[சென்னைப்பட்டணத்துக்கு மேற்கேயுள்ள ஆவடி ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து தென்கிழக்கு சுமார் 4-மைல். பூவிருந்த வல்லிக்கு வடக்கு 2-மைல். திருஞானசம்பந்தஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. இதற்கு ஸ்தலபுராணம் இருக்கின்றது.] 935-ஆம் பாடலிலும் இத்தலம் கூறப்பட்டுளது. சுவாமி வேதபுரீசுரர், வேற்கண்ணி யம்மை, வேலாயுத தீர்த்தம்

684 தமிழ்ப்பாடல் பாட.

தானந்தா தனதான தானந்தா தனதான
தானந்தா தனதான தனதான

ஆலம்போ லெழுநீல மேலங்காய் வரிகோல
*மாளம்போர் செயுமாய விழியாலே-
ஆரம்பால் தொடைசால ஆலுங்கோ புரவார
ஆடம்பார் குவிநேய முலையாலே ;
சாலந்தாழ் வுறுமால ஏலங்கோர் பிடியாய
வேளங்கார் துடி †நீப இடையாலே-
‡சாரஞ்சார் விலனைய நேகங்கா யமன்மீறு
காலந்தா னெழிவேது உரையாயோ ;
xபாலம்பால் மணநாறு காலங்கே oயிறிலாத
மாதம்பா தருசேய வயலூரா-

* மாளப்போர்—மாளம்போர் (சந்தம்நோக்கி).
† நிபம்—உவம உருபு சந்தநோக்கி நீண்டது.
‡ சாரம்—இனிமை.
x பால்—இடம் : அம்பு—நீர் ; மணம்—சேர்க்கை, கூடுகை ; நாறுதல்—தோன்றுதல்.
o இறிலாத—ஈறிலாத. "அந்தரி நீலி அழியாத கன்னிகை" அபிராமி அந்தாதி 8.

684. திருவேற்காடு

(ஆலம்) (விஷம்) போல எழுந்து, *(நீலம் மேல் அங்கு ஆய்) நீலோற்பல மலருக்கும் மேலானதாக அங்கு அமர்ந்து, ரேகைகள் கொண்டு, அழகு வாய்ந்து, (கண்டோர்) மாளும்படியாக (இறந்துபோம்படி) போர் செய்யவல்ல மாயம் நிறைந்த கண்களாலே—

ஆரம்) முத்துமாலை—(பால்) தம்மிடத்தே-(தொடை) மாலையாக (சால) மிகவும்—நன்றாக-(ஆலும்) அசைகின்ற (கோபுர) கோபுரம்போல எழுச்சிகொண்டு, (ஆர) மிகவும், (ஆடம்பார்) ஆடம்பரத்ததாய் - குவிந்துள்ளதாய், அன்புக் கிடமானதான கொங்கைகளாலே—

(சால) மிகவும், அம் - அழகுடன், தாழ்வுறும் - இளைத்துநிற்கும் அடங்கி நிற்பதாய் - மால - (மால் அ) ஆசை தரக்கூடியதாய்ப் (ஏல்) பொருந்தி, அங்கு ஒரு பிடியளவே யிருப்பதாய், (வேள் அங்கு ஆர்) விருப்பத்துக்கு அங்கு இடமாய் நிறைந்துள்ளதாய் (அல்லது காமன் அங்கு விளங்குவதான) துடி-உடுக்கை (நிபம்) போல்வதான இடையாலே—

(சாரஞ் சார்விலனாய்) சாரச்சார்விலனாய்—சார—சார்வதினால் மோகம் ரொள்வதால்—மோகம் கொள்ளும் குறைபாட்டினால் (அல்லது—சாரம்—(விழியாலே, முலையாலே, இடையாலே) (வரும்) இனிமை (காரணமாக) சார்வு இலனாய் (உய்வதற்குப்) புகலிடம் இல்லாதவனாய், (அனேகம்) அனேக முறை—அனேக பிறப்புக்களில்—(காய்) என்னைக் காய்ந்து—என் உயிரைக் கொண்டுபோன யமன் (மீறு காலந்தான்) என்னை இங்ஙனமே அதிகாரம் செய்து வென்று செல்லும் காலம்தான்-ஒழிவு-நீங்குவது-(ஏது) எப்படி,-என்றைக்கு? சொல்ல மாட்டாயோ!...(யமன் கையிற் சிக்காதிருப்பது எப்படி சொல்லி யருளுக என்றபடி)

(பால்) (பூமியின்) இடமெல்லாம்—(அம்பால், (கடல்) நீரால். (மணம்) சேர்க்கை—கூடுகை, (நாறுகால்) (தோன்றுங்கால்) (பிரளயகாலத்து), (அங்கே) அப்போதும் (ஈறிலாத) அழிதல் இல்லாத (மாது, அம்பா,) தேவி அம்பிகை தந்துள்ள குழந்தையே! வயலூரனே!

---

* (நீலம் எல்விழி — அம்விழி — காய்விழி எனப் பிரித்து நீலோற்பலம் போன்ற கண், அழகியகண், காய்கின்ற கோபிக்கின்ற கண்—எனலுமாம்.

*பாடம்பார் திரிசூல நீடந்தா கரவீர
†பாசந்தா திருமாலின் மருகோனே ;
வேலம்பார் குறமாது மேலும்பார் தருமாதும்
வீறங்கே யிருபாலு முறவீறு-
வேதந்தா வபிராம நாதந்தா வருள்பாவு
வேலங்கா டுறைசீல பெருமாளே. (க)

685. அருள் மொழி பெற

தாத்தாதன தானன தானன
தாத்தாதன தானன தானன
தாத்தாதன தானன தானன தனதான

கார்ச்சார்குழ லார்விழி யாரயி
லார்ப்பால்மொழி யாரிடை நூலெமு
வார்ச்சாரிள நீர்முலை மாதர்கள் மயலாலே-

---

* அந்தகனைச் சூலத்தாற் குத்தி அடக்கினது :
அந்தகாசுரன் இரண்யாக்ஷனுக்கு மைந்தன். பிரகலாதனுக்குத் தம்பி; இவன் திருமால் முதலிய தேவர்களை வருத்தினன்; சிவபிரான் வைரவ மூர்த்தியை ஏவ, அவர் சென்று சூலத்தினால் இவனைக் குத்தி எடுத்து மேலே உயர்த்திப் பிடித்து அடக்கினர். அங்ஙனம் இவனைப் பைரவர் காய்ந்த இடம் திருக்கோவலூர்.

"அவுணரிற் கள்வனான அந்தகற் காய்ந்து மூன்று
புவனமுங் கவலை தீர்த்த புண்ணியன் புரமீதாகும்"
—திருவிளை-அருச்சனை-16.

"அமர ரானவர் ஏத்த அந்தகன் தன்னைச் சூலத்தில்
ஆய்ந்ததே"—சம்பந்தர்—3-38-10.

"அந்தன் தனை அயில் மூவிலை அழகார் கறையார்
நெடு வேலின் மிசை யேற்றான்" —சம்பந்தர் 1-12-5.

"அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்"
—அப்பர்-6-96-5.

இதன் விரிவைச் சிவபராக்ரமம்—"அந்தகாசுர விஜய பராக்ரமத்திற்" காண்க.

அந்தக அர—அந்தகனைச் சங்கரித்த வீரன்—சிவனுடைய பாசம்—அன்புக்கு—தா—இடம் பெற்றவன்—அவர் உடலில் இடப் பாகத்தைப் பெற்றவன்—எனலுமாம்.

அர-சங்கரித்தவன்-"தீவினையின் சேகு அர"—கந்தரந்தாதி 68.
தா—இடம்—"தத்தி தா"—கந்தரந்தாதி—54.

† பாசம்—அன்பு—பக்தி : 'பாசம் பரஞ்சோதிக் கென்பாய்"
—திருவாசகம்—திருவெம்பாவை 2.

(தொடர்ச்சி—பக்கம் 79 பார்க்க)

(பாடு) பெருமை வாய்ந்த (அம்பு) அம்புபோல (ஆர்) கூர்மை கொண்ட (திரிசூலம்) முத்தலைச் சூலத்தால்— (நீடு) மேம்பட்டு நின்ற — (அந்தக) அந்தகாசுரனை — (அரவு) வருத்தின (வீர) வீரனை (அல்லது ஈர — கருணையாளனை) சிவன்மீது (பாசம்) பத்தி — அன்பு (தா) தாவுதல்—பாய்தல் உடைய திருமாலின் மருகனே!

வேல் போலவும் அம்பு போலவும் உள்ள கண்களைக் கொண்ட (குறமாது) வள்ளியும், மேல் (உம்பர்) விண்ணோர் வளர்த்த மாது தேவசேனையும் பெருமிதத்துடன் அங்கே இரண்டு புறமும் பொருந்த விளங்கும்—

வேத முடிவில் இருப்பவனே! அழகனே! நாத (ஒலி) முடிவில் இருப்பவனே! திருவருளைப் பாலித்துப் பரப்பும் பெருமாளே! (வேலங்காடு) திருவேற்காடு என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற தூய பெருமாளே.

(யமன்மீறு காலந்தான் ஒழிவேது உரையாயோ)

685.

மேகத்தைச் (சார்ந்த) ஒத்த கூந்தலை உடையவர்கள், கண் (ஆர்) கூரிய (அயிலார்) வேல் போன்றவர்கள், பால்போல இனிய மொழியை உடையவர்கள், இடையானது நூல்போல நுண்ணிதாகக் கொண்டுள்ளவர்கள், பொருந்திய இளநீருக்கு ஒப்பான கொங்கையை உடைய மாதர்கள் மீதுள்ள மோக மயக்கத்தாலே—

சிவபிரானது உடலிடத்தே திருமால் இடம் பெற்றுள்ளார்:
"மாலுமோர் பாகம் உடையார்"...சம்பந்தர் 2-67-1
"பாதியாவுடன் கொண்டது மாலையே".. சம்பந்தர் 3-115-2
"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து"
...பெரிய திருமொழி 3-4-9.
"மலைமங்கை தன் பங்கனை பங்கில் வைத்துகந்தான்"
...பெரிய திருமொழி 7-10-3.
"மாலை இடப் பாகத்தே மருவக் கொண்டார்"
...அப்பர் 6-96-3.
"மறிகடல் வண்ணன் பாகா"...அப்பர் 4-62-8.
...திருப்புகழ் பாடல் 37...பக்கம் 105 கீழ்க்குறிப்பு.

காழ்க்கா தல தாமன மேமிக
வார்க்காமுக ஞுயுறு சாதக
மாப்பாதக ஞமடி யேனை*நி னருளாலே;
பார்ப்பாயலை யோவடி யாரொடு
சேர்ப்பாயலை யோவுன தாரருள்
கூர்ப்பாயலை யோவுமை யாள்தரு குமரேசா—
†பார்ப்பாவல ரோதுசொ லால்முது
நீர்ப்பாரினில் மீறிய கீரரை
யார்ப்பாயுன தாமரு ளாலொர்சொ லருள்வாயே;
வார்ப்பேரரு ளேபொழி காரண
நேர்ப்‡பாவச காரண மாமத
ஏற்பாடிக ளேயழி வேயுற அறைகோப—
வாக்காசிவ மாமத மேமிக
வூக்காதிப ×யோகம தேயுறு
○மாத்தாசிவ பாலகு காவடி யர்கள்வாழ்வே;
வேற்காடவல் வேடர்கள் மாமக
ளார்க்கார்வநன் மாமகி ணைதிரு
வேற்காடுறை **வேதபு ரீசுரர் தருசேயே—

* "நின் அருளாலே பார்ப்பாயலையோ குமரேசா". இந்தப் பகுதி...பத்திச்சுவை-சொட்டும் பகுதி...மனப்பாடத்துக்குத் தக்கது.

† பாவலர்களுள் நக்கீரரின் தலைமை :

"பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த ஐயற் கெனது சிறு சொல்லும் ஒப்பாகும்" —கந்தபுரா 6-264

திருமுருகாற்றுப்படை கேட்டு முருகவேள் மகிழ்ந்தது "வள்ளி கன்னலும் அமுதும் தேனும் கைக்குமின் தீஞ்சொல் மாற்றித் தன்னிகர் புலவன் கூறுந் தமிழ்செவி தாழ்த்துக் கேளா அங்கிலை மனங்களிப்புற் றறுமுகம் படைத்த கோமான்".காளத்-புரா.

இறையனர் அகப்பொருளின் உரையை நக்கீரர் சொல்லக் கேட்டு முருகவேள் மகிழ்ந்தது-பாடல் 350 பக்கம் 378-379 பார்க்க.

‡ பாவ சகாரணமாம்—பாவத்துக்குத் துணைக்காரண மாகிய.

× "யோகமதே உறும் மாத்தா"!—முருகவேளுக்கு "யோகாசாரிய மூர்த்தி" என்று ஒரு பெயர்; கபிலர், கௌதமர், துர்வாசர், பைங்கலர் முதலிய முனிவர்களின் தவத்துக் கிரங்கி முருகவேள் யோக இயலை உணர்த்தும் திருக்கோலத்துடன் வீற்றிருந்து பலவகைத்தான யோகங்களின் இலக்கணங்களை அவர்களுக்கு உபதேசித்தார்.—சுப்பிரமணிய பராக்ரமத்தில் இதன் விரிவைக் காண்க. "யோகத்தாறுபதேசத் தேசிக"—திருப்புகழ் 68.

(தொடர்ச்சி பக்கம் 81 பார்க்க)

(காழ்) திண்ணிய தான — உறுதிகொண்ட அன்பு பூண்டுள்ள தான மனமே (மிக) மேல் எழுச்சிகொள்ள, (வார்) பெரிய காமப்பித்தனு யிருக்கின்ற ஜாதகத்தைக் கொண்ட மகா பாதகனுகின்ற அடியேனை உனது திருவருள் கொண்டு—

பார்க்க மாட்டாயா! (உனது) அடியார்களொடு சேர்க்கமாட்டாயா, உனது நிரம்பிய திருவருளை நிரம்பத் தரமாட்டாயா? உமையவள் பெற்ற குமரேசனே!

பூமியில் உள்ள பாவலர்கள் (ஓது சொலால்) ஓதும் புகழ்ச் சொல்லால், பழைய நீர் சூழ்ந்த இப் பூமியில், மேம்பட்டு, முதல் தானத்துப் (பாவலராக)விளங்குபவரான நக்கீரரை (ஆர்ப்பாய்) மகிழ்ந்து ஏற்பவனே! உன்னுடைய திருவருளைப் பாலித்து ஒரு உபதேசச் சொல்லை (எனக்கு) உபதேசித்தருளுக.

(உலகத்துக்கு நீடிய பேரருளையே பொழிந்த மூல காரணனே! (நேர்) நேரிட்டு எதிர்த்த—பாவத்துக்குத் துணைக்காரணமாகிய (சமண) மதத்தை ஏற்பாடு செய்த (பரப்பிவந்த) சமண குருக்கள்மார் எண்ணாயிரவர் அழிதலை அடைய (தேவாரப் பாடல்களைச் சொன்ன) கோபங்கொண்ட—

திருவாக்கை உடையவனே! மா — சிவமதமே —பெருமை வாய்ந்த சிவமதமே பெருகும்படி (ஊக்கு) முயற்சிகளைச் செய்த (அதிபனே) தலைவனே! யோக நிலையில் இருக்கும் (மாத்தா) பெரியவனே! சிவனது குமாரனே! குகனே! அடியார்களின் செல்வமே!

வேல் ஏந்திக் காட்டில் வசிக்கும் (அல்லது — வேல மரங்கள் உள்ள காட்டில் வசிக்கும்) வலிய வேடர்களுடைய சிறந்த மகளாம் வள்ளியின்பால் (ஆர்வம்) அன்பு பூண்ட நல்ல அழகிய கணவனே! திருவேற்காடு என்னும் தலத்தில் வீற்றிருக்கும் வேதபுரீசுரர் பெற்ற குழந்தையே!

---

o ஆத்தா—கடவுளே. மாத்தான்-பெரியோன் 'மால்பிரமன் அறியாத மாத்தானை'—சுந்தரர்-7 67·4; (வலிவலம்) மாத்து-பெருமை 'மாத்தாயுள்ள அழகனே'—அப்பர் 4·62·7

** வேத வித்தகன் வேற்காடு'—சம்பந்தர்-1·57·3.

திருவேற்காட்டுக்கு "வேதபுரி" என்று ஒரு பெயர் உண்டு— "வேதபுரி என்று பெயர் பொன்னுலக நீடுதிரு வேலவனம் என்று பெயரே"—திருவேற்காட்டுப் புராணம்·வேதவனச் சருக்கம்.

வேட்டார்மக வான்மக ளானவ
*ளேட்டார்திரு மாமண வாபொனி
னட்டார்பெரு வாழ்வென வேவரு பெருமாளே. (௨)

வட திருமுல்லைவாயில்.

[சென்னைப்பட்டணத்துக்கு மேற்கேயுள்ள ஆவடி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு 3-மைல். அம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கு 1½-மைல். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

686. கரையேற.

தனதய்ய தானன தானன
தனதய்ய தானன தானன
தனதய்ய தானன தானன தனதான

அணிசெவ்வி யார்திரை சூழ்புவி
தன †நிவ்வி யேகரை யேறிட
அறிவில்லி யாமடி யேனிட ரதுதீர—
அருள்வல்லை யோநெடு நாளின
மிருளில்லி லேயிடு மோவுன
தருளில்லை யோ‡இனமான வை யறியேனே;
குணவில்ல தாxமக மேரினை
யணிசெல்வி யாயரு ளுசல
குருவல்ல மாதவ மேபெறு குணசாத—

---

* எடு—மேன்மை—"எடுடைய மேலுலகு"—'எடமர் கோதை' சம்பந்தர்—1-49-2, 3-17-5:

† நீவுதல் (i) தடவுதல்—"தேவசேனை செந்தனம் நீவி நிற்கும் நேசனே"—(கலாவதி). (ii) கடத்தல்—கை விடுதல்—"அருங்கடி நீவி"—குறிஞ்சிப்பாட்டு-20.

‡ 'இனமானவை அறியேனே'—இதனால்தான் 'அடியாரொடு சேர்ப்பாயலையோ' என்று முறையிட்டார் பிறிதோரிடத்து (பாடல் 685), "இனத்தானும் இன்னான் எனப்படுஞ்சொல்"—என்றார் நாயனாராதலின்-திருக்குறள் 453; இனம்—இங்கு அடியார் கூட்டத்தைக் குறிக்கும்

x மேருவைத் தேவி தரித்தது—வில்லைப் பிடிக்கும் இடது கை-தேவியின் கை: "மலைசிலை ஒருகையில் வாங்கு நாரணி"—திருப்புகழ் 507. 'புரமெரிய இரணியதனுக் கைப்பற்றி...மேவும் புகழ்வனிதை—திருப்புகழ் 899.

வேள்வி நிரம்பிய அல்லது விரும்பிய—மகவான்—யாகபதியாகிய இந்திரனுடைய மகளானவளாம் தேவசேனையின் ஏடு ஆர்—மேன்மை நிறைந்த அழகிய சிறந்த மணவாளனே! (பொன்னின் நாட்டார்) பொன்னுலகத்தினரான தேவர்களுடைய பெருஞ் செல்வமென வந்துள்ள பெருமாளே!

(உனதாம் அருளால் ஓர் சொல் அருள்வாயே)

வடதிருமுல்லைவாயில்.

686.

(அணி செவ்வியார்) அழகில் செம்மை வாய்ந்த மாதர்கள், கடல் சூழ்ந்த பூமி, (தனம்) பொன்—ஆன பெண் — மண் — பொன் என்னும் மூவாசைகளை — (நிவ்வியே) கடந்தே கரையேறிட — (அல்லது) — (அணி செவ்வியார் திரை சூழ்புவி)—(திரை சூழ்புவி) கடல் சூழ்ந்த இவ் வுலகில்—(அணி செவ்வியார்) — அழகிய — அல்லது ஆபரணம அணிந்துள்ள — செவ்வியார் — செம்மைவாய்ந்த மாதர்களுடைய, (தனம்) கொங்கைகளை — (நிவ்வியே) (நீங்கியே அல்லது) நீவியே- தடவுகின்றவனாய்—கரையேறுதற்கு — அறிவிலாதவனாகிய அடியேனுடைய துயர் தீருதற்கு வேண்டிய—

திருவருளை வலிய அருள்வாயோ! அப்படி யன்றி நெடுங்காலத்துக்குக் கூட்டமான இருள் வீடாகிய பிறவிகளிலே (இடுமோ) கொண்டு விடுமோ (உனது அருள் இல்லையோ) — உனது திருவருள் என்மீது இல்லையோ? (இனமானவை அறியேனே) — உன்னொடு சம்பந்தப்பட்ட அடியார் கூட்டத்தை அறிந்தேனில்லையே! (அல்லது — * இனமானவை — தக்க நல்லவைகளை அறியேனே— எனலுமாம்)

(குணவில்லதா) சீரான வில்லாக-மகா மேருமலையைத் தரித்த செல்வி — ஆய் — (தாய்) பார்வதி தேவியுடன் கூடிய—அருணசல குரு—அண்ணாமலையார்க்கு குருவாக வந்தவனே! வல்ல — திண்ணிய — மாதவமே — பெரிய தவநிலையையே பெறும்படியான நற்குணத்தொடு கூடிய (சாத—ஜாத) பிறப்பிற் கிடைத்த—

---

*"இன வல்ல மான மன தருளாயோ"-என்றார் 689-ஆம் பாடலில்.

குடிவில்ல மேதரு நாளெது
 மொழிநல்ல யோகவ ரேபணி
 குணவல்ல வாசிவ னேசிவ குருநாதா;
*பணிகொள்ளி மாகண பூதமொ
 டமர்†கள்ளி கானக நாடக
 பரமெல்லி யார்பர மேசுரி தருகோவே-
‡படரல்லி மாமலர் பாணம
 துடைவில்லி மாமத னரனை
 xபரிசெல்வி யார்மரு காசுர முருகேசா;
மணமொல்லை யாகி oநகாகன
 தனவல்லி மோகன மோடமர்
 மகிழ்தில்லை மாநட மாடின ரருள்பாலா;
மருமல்லி மாவன நீடிய
 பொழில்மெல்லி காவன மாடமை
 **வடமுல்லை வாயிலின் மேவிய பெருமாளே. (க)

687. கதி பெற

தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன தனதான

சோதி மாமதி போல்முக முங்கிளர்
 மேரு லாவிய மாமுலை யுங்கொடு
 தூர வேவரு மாடவர் தங்கள்மு னெதிராயே-
சோலி பேசிமு னிலிணங்கிய
 மாதர் போலிரு தோளில்வி ழுந்தொரு
 சூதி னல்வர வேமனை கொண்டவ ருடன்மேவி;

* "நாகபூஷணத்தி" என்றார் 839-ஆம் பாடலில் 'கானிடைக் கணமேத்த ஆடியஅழகன்', 'காவியங்கண் மடவாளொடும் காட்டிடை ஆடுதிர்'; 'பூதஞ்சூழப் பாடலாடலார்—என வருவன காண்க—சம்பந்தர் 2-52 5; 3-124-6; 2-62-5

† "உள்ளங்கவர் கள்வன்" உடன் இருத்தலின் தேவி 'கள்ளி' ஆயினள். 'மாமாயைக் கள்ள ஒளியின் கருத்தாகும் கன்னியே' திருமந்திரம்-1117.

‡ 'மதன் பாணங்கள்'—பாடல் 19 பக்கம் 60 கீழ்க்குறிப்பு.

x பரி—பெருமை (திவாகரம்) o நகா—நகம்-மலை.

** சோழிக்கு அருகில் உள்ளது "தேன் திருமுல்லை வாயில்"; அது சம்பந்தர் தேவாரம் பெற்றது

(குடில் இல்லமே) உடலாகிய வீட்டை (அடியேனுக்கு) நீ தருகின்ற நாள் எது? (எப்போது தருவாய்)—மொழி— கூறுவாயாக! நல்ல யோகிகள் பணிகின்ற நற்குணம் வாய்ந்தவனே! சிவனே! சிவனுக்குக் குருமூர்த்தியே!

(பணி கொள்ளி) பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவள்; பெரிய கணங்களான பூதங்களொடு அமர்ந்துள்ள (கள்ளி) — திருடி; காட்டில் நடனம் (சிவனுடன் ஆடுகின்ற) மேலான மென்மை வாய்ந்தவள், பரமேசுரி–பெற்ற தலைவனே!

(நீரிற் படரும்) அல்லி — தாமரை — நீலோற்பலம் ஆதிய சிறந்த மலர்ப்பாணங்களை உடைய வில்லியாகிய அழகிய மன்மதனுடைய (அனை)—அன்னை—தாய், (பரி செல்வியார்) — பெருமைவாய்ந்த செல்வி — இலக்குமி தேவியின் மருகனே! தெய்வ முருகேசனே!

திருமணம் விரைவிற் செய்துகொண்டு (நகா கன தனவல்லி) கனதன நகவல்லி — பருத்த கொங்கைகளை உடைய — (நகவல்லி) — மலைக்கொடியாம் பார்வதி (மோகன மோடமர்) — வசீகரிப்புடன் அமர்ந்து மகிழும்— தில்லையில் (சிதம்பரத்தில்) பெரிய நடனத்தை ஆடி அருளினவர் அருளிய குழந்தையே!

வாசனையுள்ள மல்லிகை பெருங்காடாக வளர்ந்துள்ள சோலையும் மென்மைவாய்ந்த(கா)பூந்தோட்டங்களும்(வனம்) நீர் நிலைகளும் மாடு அமை—பக்கங்களிற் சூழ்ந்து அமைந்துள்ள வடமுல்லை வாயிலில் வீற்றிருக்கும் பெருமாளே!

(கரையேறிட...இனமானவை அறியேனே)

687.

ஒளி பொருந்திய சிறந்த நிலவைப்போல முகமும், விளங்கும் மேருமலை போன்ற பெரிய கொங்கையும் கொண்டு, தூரத்தில் வருகின்ற ஆண்மக்களின் முன்பு எதிர்ப்பட்டு—

தங்கள் (ஜோலி) வியாபாரப் பேச்சை (அவர்களுடன் பேசி (முன் நாளில்) பழமையாகவே (இணங்கிய) பழகின பெண்கள்போல அவர்களுடைய இரண்டு தோள்களிலும் விழுந்து அணைந்து, ஒரு வஞ்சகப் பேச்சினால் (அவர்களை) வரும்படி செய்து தங்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்ஙனம் வந்தவருடன் பொருந்தியிருந்து—

மோதி யேகனி வாயத ரந்தரு
நாளி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
மோன மாயவ மேசில சண்டைக ளுடனேசி-
மோச மேதரு தோதக வம்பியர்
மீதி லேமய லாகிம னந்தளர்
மோட னாகிய பாதக னுங்கதி பெறுவேனோ;
ஆதி யேயெனும் வானவர் தம்பகை
யான சூரனை மோதிய ரும்பொடி
யாக வேமயி லேறிமு னிந்திடு நெடுவேலா-
ஆயர் வாழ்பதி தோறுமு கந்துர
லேறி யே*யுறி மீதனை யுங்கள
வாக வேகொடு போதநு கர்ந்தவன் மருகோனே;
†வாதி னுல்வரு காளியை வென்றிடு
மாதி நாயகர் வீறுத யங்குகை
வாரி ராசனு மேபணி யுந்திரு நடபாதர்-
‡வாச மாமல ரோனெடு செந்திரு
மார்பில் வீறிய மாயவ னும்பணி
xமாசி லாமணி யீசர்ம கிழ்ந்தருள் பெருமாளே. (உ)

---

* உறியார் வெண்ணெயுண்டு உரலோடும் கட்டுண்டு
—பெரிய திருமொழி 6-5-4.

† வாதினுல் காளியை வென்றது.—பாடல் 677, பக்கம் 60.

‡ திருமுல்லைவாயிலில் பிரமன் பூசித்துப் பேறுபெற்றான்.
"பிரமனுடி நல்வரமெல்லாம் பெற்றிடு சிறப்பாற்
பிரமதீர்த்த மென்றொருபெயர் பேசிடப் பிறங்கும்"
இந்திரன், வருணன் முதலிய அஷ்டதிக்குப் பாலகர்கள் பூசித்தது—
"இந்திரன் முதல் எண்மரும் இறைவனை நாடி தீர்த்தங்கள் தம்பெயரானே முந்து தொட்டனர்"--திருமுல்லைவாயிற் புராணம்-தீர்த்த—5, 17.

x மாசிலாமணீசுரர்—வடதிருமுல்லைவாயிலில் அமர்ந்தருளி யிருக்கும் சிவபெருமான். "பாலிவடகரை முல்லைவாயிலாய் மாசிலாமணியே"—சுந்தரர் 7-69-5.

வலிய அணைந்து கொவ்வைக்கனி போன்ற வாய் இதழைத் தருகின்ற நாளிலே (வந்துள்ளவருடைய) பொருளை யெல்லாம் (சூறைகள்கொண்டு) கொள்ளையடித்து பின்பு (அவருடைய பொருள் வற்றிப்போனபின்) மௌனமாயிருந்தும், வீணுகச் சண்டைகள் போட்டு இகழ்ந்து பேசியும்

மோசமே செய்கின்ற (தோதக வம்பியர்) வஞ்சனை செய்யும் துஷ்டர்கள் மீது காம இச்சைகொண்டு மனம் தளர்கின்ற மூடனுகிய பாதகனுகிய நான் நற்கதி பெறுவேனே!

ஆதிமூர்த்தியே என்று போற்றின தேவர்களுக்குப் பகைவனுயிருந்த சூரனைத் தாக்கி அவன் நன்கு பொடியாக மயிலில் ஏறிக் கோபித்த நெடிய வேலாயுதனே!

இடையர்கள் வாழ்ந்திருந்த ஊர்கள் தோறும் மகிழ்ந்து சென்று உரலில் ஏறி உறிமேல் உள்ள வெண்ணெயைத் திருட்டுத்தனமாகக் *(கொடுபோத) கொண்டுபோய் வேண்டிய அளவு (அல்லது விரைவாக) உண்டவனுடைய (கண்ணனுடைய) மருகனே!

வாது செய்துவந்த காளியை வென்ற ஆதிநாயகர், மேலிட்டு விளங்கும் (கைபோல வரும்) திரைகளை உடைய (வாரி ராஜன்) கடலரசு வருணனும் பணிகின்ற அழகிய நடன பாதங்களை உடையவர்,

நறுமணமுள்ள சிறந்த தாமரையில் வீற்றிருக்கும் பிரமனேடு அழகிய இலக்குமி மார்பில் விளங்கும் திருமாலும் பணிந்து வணங்கின (வடதிருமுல்லைவாயில் இறைவர்) மாசிலாமணியீசர் மகிழ்ந்து அருளிய பெருமாளே!

(கதிபெறுவேனே)

* அளை.. நுகர்ந்தவன்; போதம் நுகர்ந்தவன்-ஞானபோஜனன் ஞானகரன்—எனலுமாம்.

688 ஞானம் பெற

தய்யதன தான தந்தன
தய்யதன தான தந்தன
தய்யதன தான தந்தன தனதான

மின்னிடை*க லாப †தொங்கலோ
டன்னமயில் நாண விஞ்சிய
மெல்லியர்கு ழாமி சைந்தொரு தெருமீதே-
மெள்ளவுமு லாவி யிங்கித
சொல்குயில்கு லாவி நண்பொடு
வில்லியல்பு ரூர கண்கணை தொடுமோக;
கன்னியர்கள் போலி தம்பெறு
மின்னணிக லார கொங்கையர்
கண்ணியில்வி ழாம லன்பொடு பதஞான-
கண்ணியிலு ளாக சுந்தர
பொன்னியல்‡ப தார முங்கொடு
Xகண்ணுறுவ ராம லின்பமோ டேனையாள்வாய்;
சென்னியிலு டாடி ளம்பிறை
வன்னியும ராவு கொன்றையர்
செம்மணிகு லாவு மெங்கைதயர் குருநாதா-
oசெம்முகஇ ராவ ணன்தலை
விண்ணுறவில் வாளி யுந்தொடு
தெய்விகபொ ளுழி வண்கையன் மருகோனே;

---

* கலாபம்—பதினாறு கோவையுள்ள மாதர் இடையணி, மேகலை-7 கோவை; பருமம்-18 கோவை; விரிசிகை-32 கோவை; காஞ்சி-8 கோவை; "காஞ்சி எண்கோவை எழுகோவை மேகலை, கலாபம் நானான்கு, பருமம் பதினெட்டு, விரிசிகை எண்ணான்கு கோவை யென்ப"—பிங்கலம்.

† தொங்கல்—முன்றானை- ஆடையின் முந்தானை.

‡ பதாரம்—பாதாரவிந்தம்—பாதாரம்—பதாரம்.

—திருப்புகழ் 220 பார்க்க.

X கண்ணூறு — கண்ணேறு — திருஷ்டி தோஷம் 'ஆய்ந்து கண்ணூறழித்தாள் அணி நீறளித்தே"—தணிகை புரா-களவு 329.

o இராவணன் நிறம் கறுப்பு — "இருள் நிறத்தவன்"—சம்பந்தர் 3—79—8 இராமபிரானது வாளி பட்டு ரத்தம் பீறிட்டுச் "செம்முக இராவணன்" ஆயினன்...

(தொடர்ச்சி பக்கம் 89 பார்க்க.)

688.

மின்னல்போல உள்ள இடையில்(கலாபம்) கலாபமும், இடையணியும், தொங்கல் — புடைவை முந்தானையும் விளங்க, அன்னமும், மயிலும் நாணம் அடையும்படி (சாயலும்) நடையழகும், அவைகளின் மேற்பட்டு விளங்குவனவான மாதர் கூட்டம் ஒருமித்து ஒரு தெருவிலே

மெள்ள உலாவி இன்பகரமான சொற்களைக் குயில்போலப் பேசிக் குலவி நட்பு பாராட்டி வில்லைப் போன்ற புருவமும், கண் (கணை) அம்பு போலவும் கொண்டு மோக

கன்னியர்கள் போல இன்பநலம் பெறுகின்ற மின்னல்போல ஒளிவீசும் அணிகலன்களையும், [கல்லாரம்] செங்கழுநீர் மாலையையும் பூண்டுள்ள கொங்கையர்களாம் பொது மாதர்களுடைய [கண்ணியில்] வலையில் [நான்] விழாமல் அன்புகூர்ந்து ஞானபதமான [ஞான நிலையதான]

வலையினுள் அகப்படும்படி [உனது] சுந்தர— அழகிய [பொன்னியல்] பொலிவு நிறைந்த [பதாரமும்] பாதார விந்தத்தையும் [கொடு] கொடுத்து, [கண்ணுறு] கண்திருஷ்டி வராதபடி இனிமையுடன் என்னை ஆண்டருளுக.

சிரசில்...உலவித்திரியும் இளம்பிறையையும் வன்னியையும்பாம்பையும், கொன்றையையும் கொண்டவர், சிவந்த [மணிகள்] நாகரத்னங்கள் விளங்கும் எந்தை சிவபெருமானுடைய குருமூர்த்தியே!

[ரத்தத்தால்] செந்நிறங்காட்டிய இராவணனுடைய தலை ஆகாயத்தில் தெறித்து விழும்படி வில்லினின்றும் அம்பினைப் பிரயோகித்த தெய்விக பொன்மயச் சக்கரத்தை யேந்திய அழகிய திருக் கையனாகிய திருமாலின் மருகனே!

"அயன்படை யாண்டகைச் சக்கரப்படை யோடுந்
தழீஇச் சென்று"

"புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்தன்
புனித வாளி"

"தருதி போங்கத் தேர் நின்று நெடுநிலத்துச் சிரமுங்
கீழ்ப்பட விழுந்தான் சிகரம் போல்வான்"

—கம்ப ராமாயணம்—ராவணன் வதை 197, 198, 200.

துன்னியெதிர் சூரர் மங்கிட
சண்முகம தாகி வன்கிரி
துள்ளிடவெ லாயு தந்தனை விடுவோனே-
*சொல்லுமுனி வோர் தவம்புரி
முல்லைவட வாயில் வந்தருள்
துல்யபர ஞான வும்பர்கள் பெருமாளே. (3)

திருவலிதாயம்.

[இந்த ஸ்தலம் பாடியென வழங்கிவருகின்றது. இது சென்னைப் பட்டினத்துக்கு மேற்கேயுள்ள வில்லிவாக்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு 2-மைல். குறட்டூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு ½ மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய தேவாரம் பெற்றது. ஸ்தல மான்மியம் உளது.]

689. அடிபேண

தனதய்ய தானதன தனதான

மருமல்லி யார்குழலின் மடமாதர்-
மருளுள்ளி நாயடிய னலையாமல்;
இருநல்ல வாகுமுன தடிபேண-
†இனவல்ல மானமன தருளாயோ;
‡கருநெல்லி மேனியரி மருகோனே-
கனவள்ளி யார்கணவ முருகேசா;
திருவல்லி தாயமதி லுறைவோனே-
திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே.

---

* பிருகு, வசிட்டர், துருவாசர்—பூசித்த தலம். வசிட்டர் பூசித்துக் காமதேனுவைப் பெற்றார். (திருமுல்லைவாயிற் புராணம்.)

† 'இனமானவை அறியேனே'—என்றார் 686 ஆம் பாடலில்.

‡ 'கருசெல்விமேனி' என்றும் பாடம். திருமாலின் நிறம்—கறுப்பு, நீலம், பச்சை என்ப; "கார், மலர்ப்பூவை, கடலை, யிருள், மணி அவையைந்து உறழு மணிகிளர் மேனியை"
—பரிபாடல் 13-42.

நெருங்கி எதிர்த்துவந்த சூரர்கள் அழிய ஆறு திருமுகத்துடன் விளங்கி, வலிய கிரவுஞ்சகிரி எழுகிரி இவை (துள்ளிட) பதைபதைத்து மாள வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

(சொல்லும்) பேர்பெற்ற முனிவர்கள் (பிருகு, வசிட்டன் முதலானோர்) தவஞ்செய்த வட திருமுல்லை வாயிலில் வந்தருள் சுத்தமான மேலான ஞானனே! தேவர்கள் பெருமாளே! (அல்லது ... வந்தருள் பெருமாளே! சுத்த மேலான ஞானமுள்ள தேவர்கள் பெருமாளே!

(ஞானகண்ணியிலுளாக......எனையாள்வாய்)

திருவலிதாயம்.

689.

வாசனை பொருந்திய மல்லிகை மலர் நிறைந்த கூந்தலையுடைய அழகிய (பொதுமகளிர் மீதுள்ள)

காமமயக்க நினைவுகொண்ட அடிநாயேன் அலைச்சல் உறுமல்,

(இரு நல்ல) நல்ல இரண்டாகும் உன்னுடைய திருவடிகளை விரும்பிப் போற்ற,

தக்கதான கற்பு மனத்தை (பெருமை வாய்ந்த மனத்தை) அருள்புரிய மாட்டாயோ!

கருநெல்லி போன்ற திருமேனியை உடைய திருமாலின் மருகனே!

பெருமை பொருந்திய வள்ளியம்மையாரின் கணவனே! முருகேசனே!

திருவலிதாயம் என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே!

விளக்கம் வாய்ந்த மகா தவசிகளின் பெருமாளே!

(இனவல்ல மானமன தருளாயோ)

திருவொற்றியூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னைக்கு வடக்கு 5-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். ஸ்தல புராணம் உண்டு.]

690. ஞான ம்பெற

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான

கரியமுகில் போலு மிருளளக பார
கயல்பொருத வேலின் விழிமாதர்-
கலவிகளில் மூழ்கி ம்ருகமத படீர
களபமுலை தோய அணையூடே;
விரகமது வான மதனகலை யோது
வெறியனென நாளு முலகோர்கள்-
விதரணம தான வகைநகைகள் கூறி
விடுவதன்முன் ஞான அருள்தாராய்;
அரிபிரமர் தேவர் முனிவர்சிவ யோகர்
அவர்கள்புக ழோத புவிமீதே-
அதிகடராஜர் பரவுகுரு ராஜ
அமரர்குல நேச குமரேசா;
சிரகர கபாலர் அரிவையொரு பாகர்
திகழ்*கநக மேனி யுடையாளர்-
திருவளரு †மாதி புரியதனில் மேவு
ஜெயமுருக தேவர் பெருமாளே. (க)

---

* சிவபிரான் பொன் வண்ணத்தவர் :
"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி ஈசனுக்கே"—பொன்வண்ணத்தந்தாதி (1)

† ஆதிபுரி யென்பது திருவொற்றியூர்.

"திருந்துமொரு பூலோக சிவலோக மென்னப்
பொருந்தி அருளே பரவுபுரி யென வகுத்தே
இருந்தருளி ஆதியில் இயற்றியிட லாலே
அரும்புரியின் நற்பெயரை "ஆதிபுரி" என்றான்".
—திருவொற்றியூர்ப் புராணம் இலிங்கோற் 36

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள "பேரூர்" என்னுந் தலத்திற்கும் "ஆதிபுரி" என்னும் பெயர் உண்டு.

திருவொற்றியூர்.

690.

கரிய மேகம் போன்ற இருண்ட கூந்தற்பாரத்தையும், கயல்மீனுக்கு இணையான (மீனொடு சண்டைசெய்யும், வேல்போன்ற கண்களையும் உடைய மாதர்களின்

காம போகங்களில் முழுகிக் கஸ்தூரி, சந்தனம் இவைகளின் கலவையைப் பூசியுள்ள கொங்கையிற் படியப் படுக்கையிலே

காம சம்பந்தமான 'மன்மதநூலே' கொக்கோக சாத்திரத்தைப் படிக்கின்ற வெறிகொண்டவன் (இவன்) என நாள்தோறும் உலகத்தினர்

(விதரணமதான) சுறுக்கு என்று தைக்கும்படியான வகையில் (நகைகள்) பரிகாச மொழிகளைப் பேசி (இகழ்ந்து) விடுவதற்கு முன்பாக 'ஞானம்' என்பதை அளித்து அருளுக.

திருமால், பிரமா, தேவர்கள், முனிவர்கள், சிவயோகிகள், ஆகிய இவர்கள் (உனது) திருப்புகழைப் பரவி ஓதப் பூமியில்—

மேம்பட்டு விளங்கும் நடராஜப் பெருமான் போற்றுகின்ற குருராஜ மூர்த்தியே! தேவர் குலத்துக்கு அன்பனே! குமரேசனே!

(பிரம) கபாலத்தைக் கையில் ஏந்தியவர், தேவி ஒரு பாகத்தினர், விளங்கும் பொன் மேனியை உடையவர் (ஆகிய சிவபிரான்) வீற்றிருக்கும்

லக்ஷ்மீகரம் விளங்கும் 'ஆதிபுரி' (என்கின்ற திருவொற்றியூரில்) விளங்கிடும் ஜெய முருகனே! தேவர் பெருமாளே!

(ஞான அருள்தாராய்)

691. சிவகதி பெற

தனதத்தன தானதன தனதத்தன தானதன
தனதத்தன தானதன தனதான

சொருபப்பிர காசவிசு வருபப்பிர மாகவிசு
சுக*விப்பிர தேசரச சுபமாயா-
துலியப்பிர காசமத சொலியற்றர சாசவித
தொகைவிக்ரம மாதர்வயி றிடையூறு;
கருவிற்பிற வாதபடி யுருவிற்†பிர மோதஅடி
களை‡யெத்திடி ராகவகை யதின்மீறிக்-
கருணைப்பிர காசவுன தருளூற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ஈனவையை யொழிவேனோ;
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர Xஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே-
குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
oகுணமுட்டர வாவசுரர் குலகாலா;
**திருவொற்றியு ருமருவு நகரோற்றியூர் வாரிதிரை
யருகுற்றிடு மாதிசிவ னருள்பாலா-

---

* விப்பிரதேச-"புகலிக்கரசாகிய திருவளர் விப்பிரசிகாமணி" (சம்பந்தர்)—ஆளுடை கலம்பகம்-6, (11-ஆம் திருமுறை)

† பிரமோத—விரும்பத்தக்க. 'நின்னிற் சிறந்த நின்தாளிணை யவை'—பரிபாடல்-4-62.

‡ எத்திடு இராகவகை எனப்பிரிக்க.

X ஆதபயில்—ஆதப அயில்.

o குண முட்டர் அவா அசுரர் எனப்பிரிக்க.

** திரு வொற்றி யுரு மருவு—லக்ஷ்மி சேர்ந்து உற்றிருக்கும்.

691.

(சொருபப் பிரகாச) பிரகாச சொரூபனே! (ஒளி உருவனே!) [விசுவரூப] சராசரம் அனைத்தையும் கொண்ட பேருருவனே! (பிரமாக) பிரமப் பொருளாய் நின்று— முழுமுதற் பொருளாய் நின்று, [நிசசுக] உண்மையான சுகத்தைத்தரும்பொருளே! (விப்பிரதேச-பிராமண தேஜசு கொண்டவனே! (ரச சுப) இன்ப சுபப் பொருளே! [மாயா] அழியாத

[துலியப் பிரகாச] சுத்த ஒளியே! [மதசொலியற்ற] மதங்களின் [சோலி] தொந்தரவைக் கடந்த-ரசா—சவித— தொகை – விக்ரம – இன்பம் கூடிய வகையதான பராக்ரமத்தை உடையவனே! மாதர்களின் வயிற்றினிடையே ஊறுகின்ற

கருவிற் பிறவாதபடி, உருவில் [உனது] திருவுருவத்தில் [பிரமோத] விரும்பத்தக்க திருவடிகளை ஏத்திடு [போற்றுகின்ற] இராகவகையதில்— கீதவகைகளில் [அல்லது ஆசை வழிகளிலே] [மீறி] மேம்பட்டவனாய்

கருணை ஒளியனே! உன்னுடைய திருவருள் கூடுவதால் குற்றமிலாத சிவகதியை [நான்] பெற்றுத் துன்பங்களான யாவற்றையும் கடக்கமாட்டேனோ!

[குரு] நிறமுள்ள [குக்குட வார [ஆர] கொடி [கோழி [ஆர] விளங்கி நிறையும் கொடி...அல்லது [வார குக்குட கொடி]...உனது அன்புக்கு உகந்த கோழிக் கொடியையும், போரில் உக்ரமாய் வெயில் ஒளி கொண்டதான வேலையும் பிடித்துள்ள திருக்கரங்களை உடைய ஆதியே! திருமாலின் மருகனே! [அல்லது கைத்தலங்களை உடையவனே! ஆதி அரியின் மருகனே].

குமரனே! கீர்த்தி விளங்கும் குகனே! [மா] அழகிய சிவசுப்பிரமணியனே! [அல்லது சிவ ...[சுப்பிர] மிக்க தூய்மையான மாமணி...பேரொளியனே! [குணம் முட்டர்] குணம் [முட்டு] குறைவுடையவரும் [அவா] ஆசைமிக்க வருமான அசுரர் குலத்துக்குக் [காலனே] யமனே!

[திரு] இலக்குமி [ஒற்றி உருமருவு] சேர்ந்து பொருந்தியிருக்கும் நகரமான திருவொற்றியூரில் கடலலைக்குச் சமீபத்திலிருக்கும் ஆதிசிவன் அருளிய குழந்தையே!

திகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
ளிதயத்திட மேமருவு பெருமாளே. (2)

திருமயிலை.

[இது மயிலாப்பூர் என வழங்கும். சென்னைக்குத் தெற்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. ஸ்தல புராணம் உளது. 22-ஆம் எண்ணுள்ள பாடலும் பாட வேற்றுமைப்படி இத் தலத்துக்கு உரியதாம்.

692. குக சாயுஜ்யம் பெற

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன தனதான

அமரு மமரரினி லதிக னயனுமரி
யவரும் வெருவவரு மதிகாளம்-
அதனை யதகரண விதன பரிபுரண
மமைய னவர்கரண அகிலேச;
நிமிர வருள்சரண நிபிட மடெதனவுன
நிமிர சமிரமய நியமாய-
நிமிட மதனிலுண வலசி வசுதவர
நினது பதவிதர வருவாயே;
*சமர சமரசுர †அசுர விதரபர
‡சரத விரதஅயில் விடுவோனே-

---

* சமரச அமர சுர—ஒற்றுமையான பெருந்தன்மையுடைய தேவர்களுக்கு,

† அசுர இதர பர—பகைவராகிய கீழான அசுரர்மேல்.

‡ சரத விரத அயில்—உண்மையான ஆக்ஞாசத்தி யாகிய வேலை.

[திகழுற்றிடு] விளக்கம் கொண்ட யோகத்திலும் தவத்திலும் மிக்க விசேடமடைந்த மகா தவசிகளின் [இதயத்திடமே] நெஞ்சம் என்னும் இடத்திலேயே பொருந்தி விளங்கும் பெருமாளே!

[கதிபெற்று இடரானவையை ஒழிவேனோ]

திருமயிலை.

692.

'பொருந்திய தேவர்களில் (அதிகன்) மேம்பட்டவனான இந்திரன், பிரமன், திருமால் ஆதிய இவர்கள் அச்சங் கொள்ளும்படி வருகின்றது (அதிகாளம்) பெருத்த விஷம்

அதனை—அந்த விஷத்தை—அதகரண விதன—கரண விதன அத—மனோதுக்கத்தை ஹதம் செய்பவனே! பரிபூரணம் அமை அன்)னவர் கரண—சிந்தை நிறைவு—சாந்தம் அமைந்தவர்கள் மனத்தில் இருப்பவனே! சகலத்துக்கும் ஈசனே!

(நிமிர அருள் சரணம்) - நிமிர சரணம் அருள்—இத்தாழ்வு நீங்கி நாங்கள் உய்ந்து உயர்ச்சிபெற உனது திருவடி துணை செய்யவேண்டும், (நிபிடம்) நெருங்கி வருகின்றது — (அது) அந்த விஷம்'—(என) என்று (தேவர்கள்) முறையிட, (உன நிமிர) - உன்னநிமிர — நினைக்கின்ற அவ்வளவு பரப்பிலே—நினைக்கு மளவிலே—நினைத்தவுடனே, (சமிரமய) சமீரன்மய — வாயுவின் தன்மையில்—வாயு வேகத்திலே — (நியமாய) — (சரணம் அடைந்தவர்களைக் காப்பதே) கடமையாக-முறைமையாக—

நிமிஷநேரத்தில் (அந்த விஷத்தை) உ(ண்ண) வல்ல—உண்டருளின-சிவனுடைய (சுதவர) வரசுத-சிரேஷ்டமான குமரனே! (நினது பதவிதர) உனது குகசாயுஜ்ய (பதவியை) நிலையைத்தர வந்தருளுவாயாக.

(சமரச அமர சுர) ஒற்றுமையான பெருந்தன்மை உடைய தேவர்களுக்கு (இதர பர அசுர) பகைவராகிய கீழான அசுரர்மேல் (சரத விரத அயில்) உண்மையான ஆக்நா சத்தியாகிய வேலைச் செலுத்தியவனே!

தகுர்த தகுர்தகிகு திகுர்த திகுர்த்திகு
தரர ரரரிரி தகுர் தாத
எமர நடனவித மயிலின் முதுகில்வரு
மிமைய மகள்குமர எமதீச-
இயலி லியல்மயிலை நகரி லினிதுறையு
மெமது பரகுரவ பெருமாளே. (க)

693. மாதர்மீது மயக்கு அற

தன்னத் தனத்ன தனதான

அயிலொத் தெழுமிரு விழியாலே-
அமுதொத் திடுமரு மொழியாலே ;
சயிலத் தெழுதுணை முலையாலே-
தடையுற் றடியனு மடிவேனோ ;
கயிலைப் பதியரன் *முருகோனே-
கடலக் கரைதிரை யருகேசூழ் ;
மயிலைப் பதிதனி லுறைவோனே-
†மகிமைக் கடியவர் பெருமாளே, (2)

694. அருளின்பம் பெற

தனன தானன தானன தந்தத் தனதான

அறமி லாவதி பாதக வஞ்சத் தொழிலாலே-
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் றிளையாதே ;

---

* முருகோனே — குழந்தையே என்னும் பொருளில் வந்துள்ளது

"சிவகாமி பத்தினியின் முருகோனே"—திருப்புகழ் 580
"காசிபற்கு நேய முருகா"; "வெஞ்சிறை செய்த முருகாவோ"-கந்தபுராணம்—2-8-94; 4-11-196-என்புழிப் போல.

† மகிமைக்கு—மகிமை உடைய (உருபு மயக்கம்).

தகுர்த தகுர்ததிகு... த்ரர ரரரரிரி தகுர்தாத என்று-(எமர)-முருகனடியாராகிய எம்மவர்க்கு வேண்டியதும், நடனவகைகள் கொண்டுள்ளதுமான மயிலின் முதுகிலே வருகின்ற (இமயராஜன் மகள்)—பார்வதி குமரனே! எங்கள் ஈசனே!

இயற்றமிழ் விளங்கும் (அல்லது — தகுதி வாய்ந்துள்ள)—மயிலாப்பூர் என்னும் நகரிலே இன்பமுடன் வீற்றிருக்கும் எங்கள் மேலான குருமூர்த்தியே! பெருமாளே!

(நின்து பதவிதர வருவாயே)

693.

வேலை நிகர்த்து எழுந்துள்ள இரண்டு கண்களாலும்

அமுதத்துக்கு ஒப்பான அருமைப் பேச்சாலும்

மலைக்கு இணையாக எழுந்துள்ள இரண்டு கொங்கைகளாலும்

(வாழ்க்கை) தடையுண்டு அடியேனும் இறப்பேனோ!

கயிலைப் பதியில் வீற்றிருக்கும் சிவபிரானது குழந்தையே!

கடலினுடைய கரையும் அலையும்சமீபத்திற்சூழ்ந்துள்ள

மயிலைநகரில் வீற்றிருப்பவனே!

பெருமை பொருந்திய அடியவர் பெருமாளே! (அல்லது—உன் பெருமைக்கு அடியவர் யாரோ அவர்தம் பெருமாளே!)

(தடையுற் றடியனு மடிவேனோ)

694

தருமமே இல்லாத மிக்க பாவகரமான வஞ்சனை கொண்ட செயல்களாலே—

அடியவனாகிய நான் (மெலிவு) தளர்ச்சியுற்று, மனம் கொஞ்சமும் சோர்வு அடையாமல்—

திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்-
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே;
விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் பொரும்வேலா-
விமல மாதபி ராமித ருஞ்*செய்ப் புதல்வோனே;
மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா-
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே. (3)

695. கிருபை பெற

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவு முலகினி லிகழுறு பிறவியி
னினிமை பெறவரு மிடருறு மிருவினை யதுதீர-
இசையு முனதிரு பதமலர் தனைமன
மிசைய நினைகிலி யிதமுற வுனதரு
†ளிவர வுருகிலி அயர்கிலி தொழுகிலி உமைபாகர்;
மகிழு மகவென அறைகிலி ‡நிறைகிலி
மடமை குறைகிலி மதியுணர் வறிகிலி
வசன மறவுறு மவுனமொ டுறைகிலி மடமாதர்-
மயம தடரிட இடருறு மடியனு
மினிமை தருமுன தடியவ ருடனுற
மருவ அருள்தரு கிருபையின் மலிதவ தொருநாளே;

---

* செய்—சிவப்பு "செய்யார் எரியாம் உருவம்"
—சம்பந்தர் 2-72-9

† இவர்தல்—பொருந்துதல். 'மாதிவர் பாகன்'.
—திருவாசகம்-43-1.

‡ நிறைதல் — திருத்தியாதல் - "நிறைந்த மனத்து மாதருங் களித்தடி வணங்கிட"—திருவால வாய்-புராணம்-38-5
'செல்வமென்பது சிந்தையின் நிறைவே'—சிதம்பரமும்மணி-26.

வெற்றி விளங்கும் உனது செவ்விய திருவடியைப் போற்றி செய்து வணங்கி உனது திருவருள் கூடுமாறு—

நாள்தோறும் நல்ல வாழ்வு தரும் இன்பத்தைத் தந்தருளுக.

வீரம் வாய்ந்த அசுரர்களுடைய சேனைகள் பயப்படும்படி சண்டை செய்த வேலனே!

பரிசுத்த மூர்த்தியே! தாய் அபிராமி பெற்ற செந்நிறத்த குழந்தையே!

வேடருடைய ஒள்ளிய நெற்றிகொண்ட வள்ளிப் பெண்மீது (வேடை) வேட்கை—(காம) விருப்பம் (பற்றுள்ளம்) கொண்ட அழகிய புயவீரனே!

மயிலை மாநகரில் வீற்றிருக்கும் கந்தப் பெருமாளே! (இன்பைத் தருவாயே)

695.

ஒன்றோடொன்று மாறுபட்டு எழுகின்ற அலைகள் பெருகியுள்ள கடல் சூழ்ந்துள்ள உலகத்தில் இப்போது (இம்மையில்) உள்ள பிறப்பினுடைய இன்பத்தைப் பெறவும், வருகின்ற துன்பத்தோடு தடைகளோடு கூடிய (நல்வினை–தீவினை என்னும்) இருவினைகள் ஒழியவும—

பொருந்திய உனது இரண்டு பாதமலர்களை மனம் பொருந்த நினையாதவன்; இன்பம் பெற உன்னுடைய திருவருள் கைகூடிக் கிடைக்க உருகுதல் இல்லாதவன்; (பத்தியால்) தளர்ச்சியுறாதவன்—தன்வசம் அழியாதவன், வணங்காதவன், உமாதேவியைப் பாகங்கொண்ட சிவபிரான்—

மகிழ்கின்ற குழந்தையே என்று கூறாதவன்; திருப்தி யில்லாதவன்; அறிவின்மை (பேதைமை) குறையாதவன்; அறிவு, தெளிவு அறியாதவன்; பேச்சு அற, பொருந்திய மௌனநிலையினில் இருத்தல் இல்லாதவன், அழகிய மாதர்களின்

(மயம் அது) அழகானது (அடரிட) அடர்தல் செய்ய-மனத்திற் செறிந்து இடங்கொள்ள அதனால் துன்பம் அடைகின்றவன்-ஆகிய அடியேனும் இன்பசுகம் தருகின்ற உன்னுடைய அடியார்களோடு கூடிப் பொருந்தியிருக்கும் திருவருளைத் தருவதான உனது கிருபைக்கு நிறைந்த பாத்திரனாகி விளங்குவதான ஒரு நாள் கிடைக்குமா!

சிகர தனகிரி குறமக ளினிதுற
*சிலத நலமுறு சிலபல வசனமு
திறைய அறைபயி லறுமுக நிறைதரு மருணீத-
†சிரண புரணவி தரணவி சிரவண
‡சரணு சரவண பவகுக சயனொளி
திரவ பரவதி சிரமறை முடிவுறு பொருணீத!
அகர உகரதி மகரதி சிகரதி
யகர அருளதி தெருளதி வலவல
அரண முரணுறு மசுரர்கள் கெட அயில் விடுவோனே-
அழகு மிலகிய புலமையு மகிமையும்
வளமு முறைதிரு மயிலையி லநுதின
மமரு மரகர சிவசுத அடியவர் பெருமாளே. (4)

696. மாதர்மீது மயக்கு அற

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான

இணையதில தாமி ரண்டு கயல்களென வேபு ரண்டு
இருகுழையின் மீத டர்ந்து அமராடி-

---

* சிலதன்—ஏவல் செய்வோன் : தோழன்—முருகன், (வள்ளி) வேளைக்காரன், "வேடிச்சி காவலன்" ஆதலின் "சிலதன்" எனப்பட்டார்.

† சிரவண புராண—கேள்விக்குரிய பழையவனே (கடவுளே)- எனலுமாம்.

உ—இறைவன் - கந்தரந்தாதி - (காப்பு 2)

உயர்ச்சியுற்ற கொங்கை மலைகளைக் கொண்ட (குறமகள்) வள்ளி இனிமைபெற (அந்த வள்ளிக்கு) சிலத நலமுறு—தோழன் (அல்லது ஏவல் செய்வோன்) (போன்று) நன்மைகொண்ட சிலபல பேச்சுக்களாய அமுதத்தை (அமுத மொழிகளை) வீசிப் பரப்பி (அவளுடன்) பேசப்பயின்ற அறுமுக வேளே! நிறைந்து விளங்கும் அருள்கொண்ட நீதிமானே!

சீரண (சீரண - சீர் - அண் - அ) பெருமை செறிந்த (சேர்ந்த) (புரணம்) நிறைவே! (விதரண) தயாள குணத்தனே! (விசிரவண) நிரம்பிய கேள்வி யுடையவனே! சரணு (சரண் + உ) அடைக்கலம் புகுதற்கு உரிய (உ) இறைவனே! சரவணமடுவில் தோன்றியவனே! குகனே! (சயன்)-சயந்தன்—சிவனுடைய ஒளி (திரவ) பாய்ந்தவனே! ஒளி சாரமே! பரனே! அதிக (சிரம்) மேன்மை உடையவனே! வேதத்தின் (மறைகளின்) முடிந்த பொருளான நீதியனே!

(அகர) அகரம் போல்பவனே முதற்பொருளே! உகர தீ-சிவசக்தியாய் விளங்கும் நல்லறிவே! (மகர தீ) ஆணவ மதத்தை (தீ) தகிப்பவனே! (சிகர தீ) சிவமாகிய அறிவே! [யகர) — ஜீவான்மாவில் விளங்குபவனே! (அருளதி) — அதிக அருளே! (தெருளதி)- அதிக (தெருளே) ஞானமே! வலவல—மிக்க வலிமை வாய்ந்த (அரணம்) காவற் கோட்டைகளிலிருந்த முரணுறு அசுரர்கள் — (மாறு) பகைமை பூண்ட அசுரர்களும் அழியும்படி வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

அழகும், விளங்கும் புலமையும் (கல்வி ஞானமும்) பெருமையும், வளப்பமும் நிலைத்திருக்கும் மயிலாப்பூரில் நாள்தோறும் வீற்றிருந்தருளும் "ஹர ஹர" ஒலிக்கு உரிய சிவனுடைய குமாரனே! அடியவர்தம் பெருமாளே!

(கிருபையின் மலிகுவ தொருநாளே)

696.

தமக்கு ஒப்பில்லாதனவான இரண்டு கயல் மீன்களென்று சொல்லும்படி புரண்டு, இரண்டு செவிகளின்—(அல்லது குழைகளின்) மேலே நெருங்கிப் போர் செய்து—

இலகுசிலை வேள்து ரந்த கணையதிலு மேசி றந்த
இருநயனர் வாரி ணங்கு மதிபாரப்;

பணைமுலையின் மீத ணிந்த தரளம ணி யார்து லங்கு
பருவரதி போல வந்த விலைமாதர்-

பயிலுநடை யாலு ழ்ன் று அவர்களிட மோக மென்ற
படுகுழியி லேம யங்கி விழலாமோ;

கணகணென வீர தண்டை சரணமதி லே விளங்க
கலபமயில் மேலு கந்த குமரேசா-

கறுவிவரு சூர னங்க மிரு*பிளவ தாகவிண்டு
கதறிவிழ வேலெ றிந்த முருகோனே;

மணிமகுட வேணி கொன்றை அறுகுமதி யாற ணிந்த
மலையவிலி றைய கன்றன் ஒருபாக-

மலையரையன் மாது தந்த சிறுவனென வேவ ளர்ந்து
மயிலைநகர் வாழ வந்த பெருமாளே. (5)

697 அகப்பொருள் [அணைய விரும்புவது]

தன தனன தான தத்த தன தனன தான தத்த
தன தனன தானதத்த தன தான

களபமணி யார முற்ற வசனமுலை மீது கொறற
கலகமத வேள்தொ டுத்த கணையாலுங்-

---

* 'போரவுணன் அங்க மிருகூறாய் அடல் மயிலும் சேவலுமாய்'
—கந்தர் கலிவெண்பா.

'ஒருடல் இரண்டு கூறுபட விடுத்த நெடுவேலோய்' - கல்லாடம்.
"சூரருங் கிழித்துப் பின்னும் அங்கம திருகூ றாக்கி * * *
பெருமான் செங்கை எய்தி வீற்றிருந்த தவ்வேல்"
—கந்த புராணம்-4-13-490-91.

விளங்கும் வில்லை உடைய மன்மதன் செலுத்தின அம்பைக் காட்டிலும் மிகச் சிறந்தனவான இரண்டு கண்களை உடையவர்கள், (வார்) கச்சு (ரவிக்கை) பொருந்தியுள்ளனவும் அதிக பாரமானவைகளுமான—

பருத்த கொங்கைகளின் மேலே அணிந்துள்ள முத்துமணி (மாலைகள்) நிரம்பி விளங்கும் (பருவ ரதி) இளமைவாய்ந்த ரதி (மன்மதன் மனைவி) போல வந்த விலை மாதர்கள்—

(பயிலு நடையால்) மேற்கொண்டு ஒழுகும் தொழிலிலே நான் சுழன்று அலைந்து அந்த மாதர்கள் மீதுள்ள மோகம் என்கின்ற (காம இச்சை என்கின்ற) பெருங்குழியிலே மயங்கி விழலாமோ? (விழலாகாது என்றபடி).

கணகணென ஒலிக்கின்ற வீர தண்டைகள் (சரணமதிலே) திருவடிகளிலே விளங்கத், தோகைமயில் மேல் மகிழ்ந்து விளங்கும் குமரேசனே!

கோபித்துவந்த சூரனுடைய உடலை இரண்டு பிளவாகப் பிரியப் பிளந்து அவன் அலறி விழும்படி வேலைச் செலுத்தின முருகனே!

அழகிய முடியாகிய சடையிற் கொன்றை, அறுகு, நிலவு, கங்கையாறு இவைதமை அணிந்தவரும் (மேரு) மலையையே வில்லாகக் கொண்ட (நாயகன்) தலைவருமான சிவனது ஒரு பாகத்தில் உள்ள

(மலையரசன்) பர்வதராஜன் ஈன்ற மகள் பார்வதி பெற்ற குழந்தை யென்னும்படியாகவே வளர்ந்து, மயிலைப் பதியில் வாழ வந்துள்ள பெருமாளே!

(மோகமென்ற படுகுழியிலே மயங்கி விழலாமோ)

697.

கலவைச் சாந்தும் மணிமாலையும், கொண்ட தாமரை மொட்டுப்போன்ற கொங்கையின் மேலே—வீரம் வாய்ந்தவனும் குழப்பத்தை உண்டு பண்ணுகின்றவனும், காமவிகாரந் தருபவனுமான மன்மதன் செலுத்தின அம்புகளாலும்—

கனிமொழிமி னூர்கள் மூற்று மிசைவசைகள் பேச வுற்ற
கனலெனவு லாவு வட்ட மதியாலும ;
வளமையணி நீடு புஷ்ப சயன அணை மீ* து ருக்கி
வனிதை†மடல் நாடி நித்த நலியாதே-
வரியளியு லாவு துற்ற இருபுயம ளாவி வெற்றி
மலாணையில் நீய ணைக்க வரவேணும் ;
துளபமணி மார்ப சக்ர தரனரிமு ராரி சர்ப்ப
துயிலதர னாத ரித்த மருகோனே-
‡சுருதிமறை வேள்வி மிக்க மயிலைநகர் மேவு முக்ர
துரகதக லாப பச்சை மயில்வீரா ;

---

* உருக்கி—உருகி.

† மடல் — மடலேறுதல் — பாடல் 668, பக்கம்-32 பார்க்க. கடவுள் சம்பந்தமாக மட்டும் பெண்பாலார் மடலேறுதல் கூறப்படும்;
' மானேக்கின்—அன்ன நடையார் அலர்எச ஆடவர்மேல்
மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு — அதனையாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் — வேண்டாதார்
***உம்பர்வாய்த்—துன்னும் மதியுகுத்த தூங்கிலா நீள் நெருப்பில்
தம்முடலம் வேவத் தளராதார் —காமவேள்
மன்னும் சிலைவாய் மலர்வாளி கோத்தெய்ய
பொன்னெடு வீதி புகாதார்''—எனவரும் " இயற்பா—பெரிய திருமடல்" இந்தப் பாடலுக்கு விளக்கம் தருகின்றது.
" காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் - தொல். புறத்திணை 28 என்பதன் கீழ்—' கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மாநுடப் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மாநுடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம், — எனவரும் உரையைக் காண்க. புறநானூறு-83, நெய்தற்கலி 25.30 செய்யுள் உரைகளை யும் காண்க. இந்தப் பாடல் (697) கடவுள் மாட்டு மாநுடப்பெண் நயப்பதுகூறிற்று: 1020-ஆம் பாடல் மாநுடப் பெண்மாட்டு கடவுள் நயப்பது கூறுகின்றது

‡ " சுருதிமறை ''—சுருதி - வேதம். மறை உபநிடதம் எனக் கொள்ளலாம். ''வேதத்து மறைநீ'' — எனவரும் பரிபாடலின் (3--66) உரை காண்க.

(கனி) இனிமைகொண்ட மொழிகளை உடைய மின் அனைய ஒளிகொண்ட மாதர்கள் எல்லாரும் (இசை) பொருந்தும் பழிச்சொற்களைப் பேசுவதாலும், சேர்ந்துள்ள நெருப்புப்போல உலவிவரும் வட்டமான (பூரண) நிலவாலும்—

செழுமைகொண்ட விரிந்த பூவால் அமைந்த படுக்கை மெத்தைமீது உருகும் (இப்) பெண் மடலேற விரும்பி நாள்தோறும் துன்பம் உறுமல்—

ரேகைகள் கொண்ட வண்டுகள் உலவி நெருங்கியுள்ள இரண்டு புயங்களாலும் கலந்துகூடி, என் எண்ணம் கைகூடி வெற்றிதர (இந்த) மலர்ப்படுக்கையில் நீ (என்னை) அணைக்க வரவேண்டுகின்றேன்,

துளசிமாலை அணிகின்ற மார்பன், சக்கரம் தரித்தவன், அரி, (முராரி) முராசுரன் பகைவன், (சர்ப்பம்) ஆதிசேடன் என்னும் பாம்பில் (துயில்தரன்) தூக்கம் கொள்பவன்—ஆன திருமால்—(ஆதரித்த) ஆசைகொண்ட மருகனே!

வேதம், மறை (உபநிஷதம்—அல்லது தமிழ்மறை) வேள்வி இவை நிரம்பிய மயிலைப்பதியில் விற்றிருக்கும் உக்ரமான குதிரையாகிய தோகையுடைய பச்சை மயில் வீரனே!

அளகைவணி கோர்குலத்தில் *வனிதையுயிர் மீளழைப்ப
†அருள்பரவு பாடல்சொற்ற குமரேசா—
அருவரையை நீறெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
அமரர்பதி வாழவைத்த பெருமாளே. (சு)

698 தரிசனம் பெற

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான

கடிய வேக மாருத ‡விரத சூத ராபாதர்
கலக மேசெய் பாழ்மூடர் வினைவேடர்—
கபட வீன ராகாத இயல்பு நாடி யேநீடு
கனவி கார மேபேசி நெறிபேணுக்;
கொடிய னேது மோராது விரக சால மேமூடு
குடிலின் மேவி யேநாளு மடியாதே—
குலவு தோகை மீதாறு முகமும் வேலு மீராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே;
படியி னோடு மாமேரு அதிர வீசி யேசேட
பணமு மாட வேநீடு வரைசாடிப்—

* வனிதை—பூம்பாவை.

† உயிர் அழைப்ப அருள்பரவு பாடல் சொன்னது:

மயிலாப்பூரில் திருஞான சம்பந்தப் பெருமானிடத்திற் பேரன்பு வைத்திருந்த சிவநேசச் செட்டியார் என்பவரின் புதல்வி பூம்பாவை பாம்பு கடிக்க இறந்தனள். திருஞான சம்பந்தர் மயிலாப்பூருக்கு வரும் வரையில் அவளது எலும்பையும் சாம்பலையும் அப்படியே குடத்திற் சேமித்து வைத்திருந்தார் செட்டியார். சம்பந்தப்பெருமான் வந்ததும் இந் நிகழ்ச்சி அவருக்குத் தெரிவிக்கப் பட்டது; அவர் அந்தக் குடத்தை மயிலைக் கபாலீசர் முன்னிலையிற் கோயில் மதிற்புறத்து வெளியில் வைக்கச்சொல்லி,

"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்!"

எனத் தவக்கும் அருள்பரவு பதிகத்தைப் பாடி, அப்பதிகத்திற் 'போதியோ பூம்பாவாய்' எனப் பாடல்தோறும் பாட—அக் குடம் உடைபட்டு அந்த எலும்பினின்றும் "பூம்பாவை" என்னும் பெண் உயிர்பெற்று 12 வயது நிரம்பப்பெற்று எழுந்தனள் என்பது வரலாறு. ‡ விரதர்...அருவருப்பான சங்கற்பச்செயல் உடையோர். "விரதமாயை புரி சகுனி பொருசூது"—பாரத. நாடுகரச் 32.

(அளகை) அளகாபுரி—குபேர நகரத்துச் செல்வம் கொண்ட வணிகர் குலத்திலே (பிறந்த) பூம்பாவை என்னும் பெண்ணின் (இறந்த) உயிரை மீளும்படி அழைக்கவேண்டி (இறைவன்) திருவருளைப் பரவின பதிகத்தைச் சொன்ன குமரேசனே!

அருமைச் செயல்கள் கொண்டிருந்த (கிரௌஞ்ச) கிரியைத் தூளாக்கி, அசுரர்களை வேரறுத்து, தேவர் ஊரைப் (பொன்னுலகை) வாழவைத்த பெருமாளே!

(மலரணையில் நீ யணைக்க வரவேணும்)

698.

கடுமையான (வேகம்)கோபம் குறையாத சங்கற்பங்களை உடைய வஞ்சகர்கள், (ஆபாதர்) கீழானோர் (தீயர்), கலகத்தையே செய்கின்ற பாழான மூடர்கள்-(தீ) வினையே விரும்புவோர்—

வஞ்சனை கொண்ட இழிந்தோர், இத்தன்மையோருடைய நல்லது ஆகாத முறைகளை விரும்பியே, பெரிய வலியுள்ள *(விகாரமே) அவலட்சணங்களையே பேசி, நன்னெறியைப் போற்றாத—

கொடியவனாகிய (நான்) எதையும் ஆராய்ந்து அறியாமல், (காமம்) ஆசைக் கூட்டங்களே மூடியுள்ள இந்தக் குடிசையாகிய உடலில் இருந்து கொண்டே தினந்தோறும் அழிவுறாமல்—

விளங்கும் மயில்மீது (உனது) ஆறுமுகமும், வேலும், (ஈராறு) பன்னிரண்டு குவளை மலர்மாலை அணிந்த (வாகும்) தோள்களும் அடியேன் நேராக எதிரே காணும்படி வருவாயே.

(படியினோடு) பூமியோடு, பெரிய மேருமலை அதிரும்படியாகச் செலுத்தி, ஆதிசேடனுடைய பண மகுடங்கள் அசைவுறவும், பெரிய மலைகளை மோதி—

---

* விகாரம்: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடம்பு, அசூயை என எண் வகைப்பட்ட தூர்க்குணம்.

பரவை யாழி நீர்மோத நிருதர் மாள வாளுடு
பதிய தாக வேலேவு மயில்வீரா ;
வடிவு லாவி யாகாச மிளிர்ப லாவி னீள்சோலை
வனச வாவி பூவோடை வயலோடே-
மணிசெய் மாட மாமேடை சிகர மோடு வாகான
மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே.(எ)

699. அருள் மொழி பெற

தனனா தனனாதன தனனா தனனாதன
தனனா தனனாதன தனதான

திரைவார் கடல்சூழ்புவி தனிலே யுலகோரொடு
திரிவே னுனையோது தல் திகழாமே-
தினநா ளுமுனே துதி மனதா ரபினேசிவ
சுதனே *திரிதேவர்கள் தலைவாமால் ;
வரைமா துமையாள் தரு மணியே குகனேயென
அறையா வடியேனுமு னடியாராய்-
வழிபா டுறுவாரொடு அருளா தரமாயிடு
மகநா ளுளதோசொல அருள்வாயே ;
இறைவா ரணதேவனு மிமையோ ரவரேவரு
மிழிவா கிமுனேயிய லிலராகி-
இருளா மனதேயுற அசுரே சர்களேமிக
இடரே செயவேயவ ரிடர்தீர ;

* திரி தேவர்கள்—மும் மூர்த்திகள்.

பரப்புள்ள கடலில் நீர் மோதவும், அசுரர்கள் இறக்கவும், வானுளோர் நாடு(பொன்னுலகம்) செழிப்புள்ள நகரமாகவும், வேலாயுதத்தைச் செலுத்தின மயில் வீரனே!

அழகுடன் வளர்ந்து ஆகாயமவரை வளர்ந்து விளங்கும் பலாமரங்களின் பெரிய சோலையும், தாமரைக் குளமும், நீர்ப்பூக்கள் உள்ள ஓடைகளும், வயல்களும்,

அழகுள்ள மாடங்களும், சிறந்த மாடங்களின் சிகரங்களும் ஒன்றுகூடி அழகு விளங்கும் மயிலாப்பூரில் வீற்றிருந்து வாழுகின்ற தேவர் பெருமாளே!

(நேர்காண வருவாயே)

699

திரைகள் கொண்ட நீண்ட கடலாற் சூழப்பட்ட பூமியிலே உலகத்தாரோடு (திரிவேன் உனை ஓதுதல் திகழாமே) உனை ஓதுதல் திகழாமே திரிவேன்—உன்னை ஓதிப் புகழ்தல் இல்லாது திரிகின்றேன்; [இனி]

(தினநாளும்) நாள்தோறும்—முனே துதி மனது ஆர—முன்னதாகத் துதிக்கும் மனநிலை நிரம்பப்பெற்று-பின்னே—(அப்படிப்பட்ட மனம் வாய்ந்த பின்னர்) சிவ குமரனே! மும்மூர்த்திகளின் தலைவனே! பெரிய

(இமய) மலை மாது - உமையாள் பெற்ற மணியே! குகனே என்று (அறையா) ஓதி அடியேனும் உன்னுடைய அடியாராய்

வழிபாடு செய்பவர்களோடு அருளன்பு கூடியவணுகின்ற (மகாநாள்) விசேட நாள் ஒன்று உண்டோ—(மேற்கூறியவாறு) உன் நாமங்களைச் சொல்ல அருள் புரிவாயாக—

தலைமைபூண்ட - வெள்ளையானை-ஐராவதத்துக்குரிய—தேவனம் இந்திரனும், (பிற) தேவர்கள் யாவரும் இழிவான நிலைகளையை அடைந்து — முன்பு, தமது தகுதியை இழந்தவர்களாகி—

(இருளாம் மனதே உற) மயக்க இருள்கொண்ட மனங்கொண்டவராக, அசுரத் தலைவர்கள் நிரம்ப இடர் துன்பச் செயல்களைச் செய்துவர, அந்தத் தேவர்களின் துன்பம் நீங்க—

மறமா வயிலேகொடு வுடலே யிருகூறெழ
மதமா மிகு*சூரனை மடிவாக-
வதையே செயுமாவலி யுடையா யழகாகிய
மயிலா புரிமேவிய பெருமாளே.(அ)

700. கதி பெற

தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன தனதான

திரை தரு மணியணி யார்ந்த பூரித
ம்ருகமத களபகில் சாந்து சேரிய
இளமுலை யுரமிசை தோய்ந்து மாமல ரணைமீதே-
நெகிழ்தர அரைதுகில் வீழ்ந்து மாமதி
முகம்வெயர் வெழவிழி பாய்ந்து வார்குழை
யொடுபொர இருகர மேந்து நீள்வளை யொலிகூர;
விரைமலர் செறிகுழல் சாய்ந்து நூபுர
மிசைதர இலவிதழ் மோந்து வாயமு
தியல்பொடு பருகிய வாஞ்சை யேதக வியனுடும்-
வினையனை யிருவினை யிண்டு மாழ்கட
லிடர்படு †சுழியிடை தாழ்ந்து போமதி
யிநுகதி பெறஅருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே;
பரையபி நவைசிவை சாம்ப வீயுமை
‡யகிலமு மருளரு ளேய்ந்த கோமளி
பயிரவி திரிபுரை யாய்ந்த நூல்மறை சதகோடி-

* "சூரனை — வதையே செயு மாவலி யுடையாய்" — இது 'சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி' என வரும் திருமுருகாற்றுப் படையின் கருத்தது.

† சுழி—தீக்குணம்: "சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சி யால்"—கம்பராமாயணம். பள்ளி 74

‡ "பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே"—அபிராமி அந்தாதி 13.

வீரம் வாய்ந்த சிறந்த வேலாயுதத்தைக்கொண்டு உடல் இரண்டு கூறுபட, ஆணவம் கொண்ட மாமரமாய் மிக்கெழுந்து நின்ற அல்லது ஆணவப் பெருமை மிக்க சூரனை அழிவுற—

வதைசெய்த மஹா வலிமையைக் கொண்டவனே! அழகு வாய்ந்துள்ள மயிலாப்பூரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(அருளாதரமாயிடு...நாளுளதோ...அருள்வாயே)

700.

வரிசையமைந்த ரத்னபரணங்கள் நிறைந்ததாய், மிக்கெழுந்ததாய், கஸ்தூரி—கலவை, அகில், சந்தனம் சேர்ந்துள்ள இள முலைகள் உள்ள (உரம்மிசை) மார்புமீது—அணைந்து நல்ல மலர்ப் படுக்கை மேலே—

(நெகிழ்தர அரைதுகில்) அரைதுகில் நெகிழ — இடுப்பில் உள்ள ஆடை தளர, விழுந்து, நல்ல சந்திரன் ஒத்த முகத்தில் வெயர்வு உண்டாக, கண்கள் பாய்ந்து நீண்ட குழைகள் உள்ள காதுகளொடு சண்டைசெய, இரண்டு கைகளிலும் உள்ள பெரிய வளைகள் ஒலி மிகச்செய—

நறுமண முள்ள மலர் நிறைந்துள்ள கூந்தல் சரிவுற்று, (கால்களில்) உள்ள சிலம்பு ஒலிசெய, இலவ மலர்போலச் சிவந்த வாயிதழை மோந்து அந்த வாயூறலை (இயல்பொடு) முறையே பருகும் விருப்பத்தையே தக்க சிறப்பாக—தக்க ஒழுக்கமாகத் தேடுகின்ற—

வினைக்கு ஈடானவனை, இருவினையிலே (ஈண்டும்) இம்மையிலும்—இப் பிறப்பிலும், ஆழ்ந்த கடல்போன்ற துக்கத்திற் படுகின்ற தீய குணத்திலே (அல்லது துக்கமாகிய பெருஞ் சுழியிலே) தாழ்ந்து போகின்ற என் புத்தி பெருமைவாய்ந்த நல்லகதியைப் பெறுமாறு (உனது) திருவருளைக்கூடி வாழ்ந்து இன்புறுவதுமான ஒரு நாள் கிடைக்குமா!

(பரை) பராசக்தி, (அபிநவை) சிவத்தினின்றும் பிரிவு படாதவள், (புதியள்) சிவன் தேவி, சம்புவின் சக்தி, உமை, எல்லா உலகங்களையும் (அல்லது யாவற்றையும்) அருளின அருள்கொண்ட அழகி, (பயிரவி) அச்சந் தருபவள் அல்லது பைரவராம் சிவபிரானது பத்தினி, (திரிபுரை), மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், (ஆய்ந்த நூல் மறை சதகோடி) சதகோடி நூல்மறை ஆய்ந்த—நூறுகோடிக் கணக்கான நூல்களும் உபதேச ரகசியப் பொருள்களும் ஆய்ந்துள்ள—

பகவதி *யிருசுட ரேந்து காரணி
மலைமகள் கவுரி†வி தார்ந்த மோகினி
படர்சடை யவனிட நீங்கு ருதவள் தருகோவே-

குரைகடல் மறுகிட மூண்ட சூரர்க
‡ளணிகெட நெடுவரை சாய்ந்து தூளெழ
முடுகிய மயில்மிசை யூர்ந்து வேல்விடு முருகோனே-

குலநறை மலரளி சூழ்ந்து லாவிய
மயிலையி லுறைதரு சேந்த சேவக
குசகர வணபவ வாய்ந்த தேவர்கள் பெருமாளே.(கூ

701. அருள் பெற

தனதன தத்தன தானு தானன
தனதன தத்தன தானு தானன
தனதன தத்தன தானு தானன தனதான

வருமயி லொத்தவ ரீவார் மாமுக
மதியென வைத்தவர் தாவா காமிகள்
வரிசையின் முற்றிய வாகா ராமியல் மடமாதர்-

மயலினி லுற்றவர் மோகா வாரிதி
யதனிடை புக்கவ ராளாய் நீணிதி
x தருவிய லுத்தர்கள் மாடா மாமதி மிக°மூழ்கி ;

---

* இருசுடர் ஏந்து காரணி : சந்திர சூரியரிடையே அம்பிகை எழுந்தருளியிருத்தல் : 'பானு மண்டல மத்யஸ்தா'' (லலிதா 275); "சந்த்ர மண்டல மத்யகா" — "உறைகின்றநின் திருக்கோயில் அமுதம் நிறைகின்ற வெண்திங்களோ'' "தான் போயிருக்கும் ..... அலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே''. "இரவு பகல் சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே"—அபிராமி அந்தாதி—உரை...20, 34, 47 'இளநிலாத் தோன்று மதிமண்டலத் தமுதமயமாய் அம்மை தோன்றுகின்றதும்'. மீனாட்சி பிள்ளைத் தமிழ் 95.

† "ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே"
...அபிராமி அந்தாதி 30.

‡ அணி—படை வகுப்பு (பிங்கலம்)

x தரு—மரம் என்பது ஒருவரைக் குறிக்கும்போது [இழிவு] வைத்துச் சொல்லாகும். [உ—ம்.] 'மரமனையானுக் கிந்த மானை விதித்த பிரமனை யான் காணப்பெறின்''—தனிப்பாடல்.

° மூழ்கி—மூழ்குகிறவன்.

பகவதி, சூரியன் சந்திரன் என்னும் இரு சுடர்களும் [மத்தியில்] தரிக்கின்ற மூல தேவதை; இமயமலையின் புத்திரி, கவுரி, [விதார்ந்த மோகினி] விதம் பல கொண்ட—[பல உருவினளான அழகி]—அல்லது விது ஆர்ந்த மோகினி...சந்திர மண்டலத்திற் பொருந்தி நிரம்பிய அழகி, படர்ந்த சடையுடைய சிவனது இடது பாகத்தில் நீங்காது விளங்கும் தேவி பார்வதி பெற்ற தலைவனே!

ஒலிக்கின்ற கடல் கலங்க, [கோபம்] பொங்கி எழுந்த சூரர்களின் படை வகுப்புக்கள் அழிய, பெரிய [கிரவுஞ்ச] மலை வீழ்ந்து பொடிபட, வேகமாகச் செல்லும் மயில்மேல் ஏறி வேலாயுதத்தைச் செலுத்தின முருகனே!

நல்லதேன் உள்ள மலர்களில் வண்டுகள் சூழ்ந்து உலாவும் மயிலாப்பூரில் வீற்றிருக்கும் சேந்தனே! பராக்ரமம் வாய்ந்தவனே! குகனே! சரவணபவனே! பொருந்திய தேவர்கள் பெருமாளே!

[கதிபெற ... வாழ்வதும் ஒரு நாளே!]

701.

அசைந்து வரும் மயில் போன்றவர்கள், பொருள் கொடுப்பவர்கள் வந்தால் அவர் முன்பு தமது அழகிய முகத்தைப் பூரண நிலவுபோல வைத்துக் கொள்பவர்கள். (தாவா) தாவாத...எதிர் பாய்தல் இல்லாத (பதிலுக்கு உண்மையில்...மோகம் கொள்ளாத) காமிகள் ஆசைக் காரிகள் [அல்லது...தாவாத—கெடாத-நீங்காத ஆசைக் காரிகள்] [வரிசையின் முற்றிய] ஒழுங்கு நிறைந்துள்ள (வாகு ஆர் ஆம் இயல் மடமாதர்) அழகு நிறைந்த தகுதி வாய்ந்த மெல்லிய மாதர்களுடைய—

மோகமயக்கத்திற் பட்டு அவர்கள் மீதுள்ள மோகம் என்னும் கடலிடையே புகுந்து அவர்களுக்கு (ஆளாய் நீணிதி) நீணிதி ஆளாய் (என்னுடைய) பெரிய சொத்துக்களெல்லாம் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டு—(என் பொருள்களை எல்லாம் அவர்களுக்கே தத்தம் செய்து), தரு இயல் மரமனைய (அருட்குணமே இல்லாத) அந்த (லுத்தர்கள்) லோபிகளாம் (அப்பொதுமகளிர்) மாடா—மாடாக — பக்கலிலே — பொதுமகளிர் மாட்டு — (எனது (மா மதி)—நல்ல புத்தியானது மிகவும் முழுகிக் கிடக்கின்ற (நான்)—

தருபர வுத்தம வேளே சிருறை
அறுமுக நற்றவ லீலா கூருடை
அயிலுறை கைத்தல சீலா பூரண பரயோக
சரவண வெற்றிவி நோதா மாமணி
தருமர வைக்கடி நீதா வாமணி
மயிலுறை *வித்தவு னதாரா †மணி பெறுவேனே;
திரிரிரி தித்திதி தீதீ திதிதி
தொகுதொகு தொத்தொகு தோதோ தோதிகு
திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி தொதிதிதோ—
தென ‡வரி மத்தள மீதார் தேமுழ
திடுவென மிக்கியல் வேதா வேதொழு
திருநட மிட்டவர் காதே மூடிய குருபோதம்;
உரைசெயு முத்தம வீரா நாரணி
உமையவ Xளுத்தர பூர்வா காரணி
உறுஜக ரக்ஷணி நீரா வாரணி தருசேயே-
உயர்வர முற்றிய கோவே யாரண
மறைமுடி வித்தக தேவே காரண
ஒருமயி லைப்பதி வாழ்வே தேவர்கள் பெருமாளே.(கo

---

* வித்தம்...ஞானம், அறிவு. "வித்தமிலா நாயேற்கும்" —அருட்பா 1, சிவநேச 64 'அறிவே! உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே' சுந்தரர் 7-26-4 † அணி...பெருமை (பிங்கலம்).

‡ சிவபிரானது நடனத்தின்போது — திருமால் மத்தளம் வாசிப்பர், நந்தி முழவங் கொட்டுவர், பிரமா தாளம் போடுவர்; வாணன் (வாணாசுரன்) குடமுழவு வாசிப்பான்:

"வரத்தின் அருள்பெற்ற மத்தள மாயோன் தன் கரத்தினனி யொத்திக் களிப்ப ... நரைத்தலையோன் தாளம் பிடிக்க"—கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டு விடுதூது 193, 194.

வாணன் வேண்டுகோள்: "ஒரு கணமாய் இருந்து குடமுழ எடுத்துன் இலயம் பார்த்துக் குஞ்சிதத் தாளுக் கொக்கக் கொட்டி நடங்கண் டெனுளங் குளிரவேண்டும்"...ஞான உபதேச 2436.

பிரமன் வேண்டுகோள்: 'நந்தியம் பகவான்! எனக்குமே தாளம் நல்குதி நிருத்த நோக்குதற்கே".. ஞான உபதேச 1983.

திருமாலும் மத்தளமும்: 'கன்றுகொண் டெதிர்ந்து கனி யுதிர்த்திடு செங்கண்ணன் ..நடத்துக்கு ஒன்றவே படகம் மத்தளம் சதியோ டொத்திட முழக்கியுண் மகிழ்ந்தான்'-ஞான உபதேச 1945

நந்தி முழவம் வாசித்தல்: "நந்தி முழவங் கொட்ட நட்டம் காத ளுடுமே"—திருவிசைப்பா (கோயில் 3.)

x 'சண்டிகை நாற்றிசை தாங்கி நின்றாளே'-திருமந்திரம் 1050.

(தரு பர உத்தம) திருவருளைத் தரும் (பாலிக்கும்) மேலான உத்தமனே! வேளே! பெருமை வாய்ந்த ஆறுமுகனே! நல்ல தவ விளையாடல்களை உடையவனே! கூர்மை கொண்ட வேலைப் பிடித்த கரத்தனே! (சிலா) தரும மூர்த்தியே! பரிபூரண மூர்த்தியே! மேலான யோக மூர்த்தியே!

சரவணபவனே! வெற்றி விநோதனே! உயர்ந்த ரத்னத்தைத் தரும் பாம்பை அடக்குகின்ற (நீதா ஆம்) நீதியுள்ளதான அழகிய மயில்மேல் வீற்றிருக்கும் (வித்த) ஞான மூர்த்தியே! (உன் ஆதாரம் அணி) உன் ஆதரம்—உன் அன்பு அல்லது ஆதாரம்—உனது பற்றுக்கோடு என்கின்ற—(அணி) பெருமையைப் பெறுவேனோ,

திரிரிரி தித்திதி-தீதீ தீதிதி—ஜேஜே தீதிமி தொதிதீதோ—

தென என்று (அரி) திருமால் மத்தளம் மீதார் (மீது-ஆர்) மேலே நிரம்ப வாசிக்கும் (தேம்) இடத்தில், (அல்லது மீதார்தே—மேலே கூடித் தரிசிக்க நின்ற தேவர்கள்) முழ—முழவு வாத்தியத்தை திடு என (திடுதிடு என்று வாசிக்க), மிகுந்த தகுதி வாய்ந்த (வேதாவே) பிரமன் (தொழு) (தாளம் போட்டுத்) தொழுகின்ற அழகிய நடனம் செய்யும் சிவனுடைய செவிகளை *(உபதேசம் பெறவேண்டி) பொத்திய (மூடிக்கேட்கும்படி வைத்த) குருமூர்த்தியாய் ஞானப்பொருளை

(உரைத்த) உபதேசித்த மேலான வீரனே! நாரணி, உமையவள், (உத்தர பூர்வ காரணி) வடக்கு-கிழக்கு முதலிய திசைகளின் மூல தேவதை! (அல்லது வட-உத்தர-பூர்வ-ஆகார-அணி-உறு) அல்லது வடக்கு, கிழக்கு ஆதிய திக்குகளின் உருவம் கொண்ட அழகு பொருந்திய — திகம்பரியாகிய ஜகரக்ஷணி) — உலகை ரக்ஷிப்பவள்! (நீராவாரணி)—நீர் ஆவாரணி—ஆவாரண நீர்—மறைக்கின்ற சக்திக் குணம் (திரோதான சக்தி) உடைய சக்தி ஈன்ற குழந்தையே!

மேலான வரங்கள் நிரம்பத் தருந்தலைவ! வேத உபநிடத முடிவில் விளங்கும் ஞானனே! மூலகாரணனே! ஒப்பற்ற மயிலாப்பூரில் வாழ்பவனே! தேவர்கள் பெருமாளே!

(ஆதாரமணி பெறுவேனோ

---

* உபதேசம் பெறும்போது செவியை மடக்கிக் கவனமாய்க் கேட்பது: 'காது பொத்தரைக் கின்னரர்', போர்த்த நீள்செவியாளரந்தனர்க்கு... ஆல் நிழற் கீழறம்புரிந்து—சுந்தரர்-65-6, 55-7,

திருவான்மியூர்.

[சைதாப்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 4 மைல். மயிலாப்பூருக்குத் தெற்கு 3 மைல். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்தம் பாடல் பெற்றது. ஸ்தலபுராணமும் உளது.

702 திருவடியைப் பெற

தனதான தானதன தனதான தானதன
தனதான தானதன தனதான

*குசமாகி யாருமலை மரைமாநு ஞாலினிடை
குடிலான ஆல்வயிறு குழையூடே-
குறிபோகு மீனவிழி மதிமாமு காருமலர்
குழல்கார தானகுண மிலிமாதர்;
புசவாசை யால்மனது உனைநாடி டாதபடி
புலையேனு லாவிமிகு புணர்வாகிப்-
†புகழான பூமிமிசை ‡மடிவா யிருதவகை
பொலிவான பாதமல ரருள்வாயே;
நிசநார ஞதிதிரு மருகாவு லாசமிகு
நிகழ்போத மானபர முருகோனே-
xநிதிஞான போதமர னிருகாதி லேயுதவு
நிபுணநி சாசரர்கள் குலகாலா;
oதிசைமாமு காழியரி மகவான்**மு னோர்கள்பணி
சிவநாத ராலமயில் அமுதேசர்-
திகழ்பால மாகமுற மணி††மாளி மாடமுயர்
திருவான்மி யூர்மருவு பெருமாளே.

---

* குசவாமியான என்றும் பாடம். † புகழான பூமி-பூமிக்குள்ள பெருமை: 'நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை உடைத்திவ்வுலகு'-திருக்குறள்-336 ‡ 'அடியேன் உருதவகை'—என்றும் பாடம். x நிதிஞானபோதம்—சிவஞான போதம்,

o திருவான்மியூரில் (i) பிரமன் பூசித்துத் திருவிழாவும் நடத்தினதாகப் புராணம் கூறுகின்றது, (ii) கண்ணபிரான் பூசித்துத் தன்னைப் பற்றிய பாவம் தொலையப் பெற்றனன்; இராமர் பூசித்து ராவணனைக் கொல்ல வரத்தைப் பெற்றனர்; இந்திரன் பிருகு முனிவரின் மகளை முத்தமிட்ட காரணத்தால் அவரால் அரக்கனுமாறு சபிக்கப்பட்டு நாரத முனிவரால் திருவான்மியூருக்குக் கொண்டுவரப் பெற்று, அங்கு தீர்த்தத்தில் முழுகப் பெற்றுச் சாபம் நீங்கப் பெற்றனன்,—திருவான்மியூர்ப் புராணம், ** திருவான்மியூரிற் பூசித்த பிறர்-வான்மீகர், சந்திரன், சூரியன், வேதம், காமதேனு, இயமன், பிருங்கி. †† மாளி...மாளிகை என்பது கடைக் குறை.

திருவான்மியூர்.

702.

(குசமாகி) கொங்கை எனப்பட்ட நிறைந்துள்ள மலை, (மரை) தாமரையின் அழகிய நுண்ணிய நூல்போன்ற இடை, (குடிலான) குடிசை, அல்லது கருவுக்கு இருப்பிடமான ஆலிலை போன்ற வயிறு, காதின் குழைக்குளே—

குறிபோகின்ற மீன் போலும் கண், சந்திரன் போன்ற அழகிய முகமாகிய நிறைந்த மலர், (அல்லது நிறைந்த மலர்சூழ விளங்கும்) கூந்தலாகிய மேகம்—(எனக்கொண்ட) நற்குணம் இல்லாத (பொது) மகளிரின்—

(புசம்) தோள்மீதுள்ள ஆசையினால் என் மனது உன்னை நாடாதபடி, இழிதகையனான நான் (அங்கும் இங்கும்) உலவித்திருந்து, (அத்தகைய வழிகளிலே) அதிக சேர்க்கையடையவனாகி—

புகழ்பெற்ற இப் பூவுலகிலே (மடிவாய்) அழிவு உற்றவனாய் (இருதவகை) முடிந்து போகாத வண்ணம்) பிரகாசமுள்ள உனது திருவடித் தாமரையை அருள்வாயே!

மெய்யனான நாராயணமூர்த்தி என்னும் தலைவனது அழகிய மருகனே! உள்ளக் களிப்பு மிகுந்து உண்டாகும் அறிவு-ரூபமான மேலான முருகனே!

நிதிச் செல்வமான (பொக்கிஷம் போன்ற) ஞான போதத்தை—(ஞானபோதம்) சிறந்த ஞானோபதேசத்தைச் சிவனது *இரண்டுகாதிலே உபதேசித்தருளிய சாமர்த்திய சாலியே! (நிசா சரர்கள்) இருளிற் சஞ்சரிப்பவர்களான அசுரர் குலத்துக்கு யமன் போன்றவனே!

(திசைமாமுகன்) நான்முகன் — பிரமன், ஆழியரி— சக்ரதரனாகிய திருமால், (மகவான்) இந்திரன் (முனோர்கள) முதலானவர்கள் பணிகின்ற (சிவநாதர்) சிவமூர்த்தி, [ஆலம்] விஷத்தை, [அயில்] உண்ட (அமுதேசர்) அமுதன்ன ஈசன்...(அத்தகைய பெருமானது)

விளக்கமுற்ற (பால) குழந்தையே! (மாகம் உற) ஆகாயத்தை அளாவும்படி அழகிய மாளிகை மாடங்கள் உயர்ந்துள்ள திருவான்மியூரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(பாதமலர் அருள்வாயே)

---

* பாடல் 109, பக்கம் 259-கீழ்க்குறிப்பு * பார்க்க.

கோசைநகர்.

[கோசைநகர் என்பது கோயம்பேடு. சென்னைக்கு மேற்கு 6 மைல். பூவிருந்தவல்லிக்குப் போகும் வழி]

703. திருவடியை நினைக்கும் அருள்பெற

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தனதான

*ஆதவித பாரமுலை மாதரிடை நூல்வயிற
தாலிலையெ னுமதன கலைலீலை–
யாவும்வினை வானகுழி யானதிரி கோணமதி
லாசைமிக வாயடிய னலையாமல்;
நாதசத கோடி†மறையோலமிடு நூபுரமு
னபத மாமலரை நலமாக–
நானநுதி னுதினமு மேகினைய வேகிருபை
நாடியரு ளேயருள வருவாயே;
சீதமதி யாடரவு வேரறுகு மா‡இறகு
சீதசல மாசடில பரமேசர்–
சீர்மைபெற வேயுதவு கூர்மைதரு வேலசிவ
சீறிவரு மாவசுரர் குலகாலா;
கோதைகுற மாதுxகுண தேவமட மாதுமிரு
பாலுமுற வீறிவரு குமரேசா–
கோசைநகர் வாழவரு மீசடியர் நேசசரு
வேசமுரு காவமரர் பெருமாளே.(க)

---

* ஆதம்—விருப்பம். † நூபுரம் மறை ஒலமிடுவது—பாடல் 333, பக்கம் 336 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

‡ இறகு—கொக்கின் இறகு—பாடல் 180, பக்கம் 418 கீழ்க் குறிப்பைப் பார்க்க

x முருகவேள் வள்ளியை மணந்தபின் வள்ளியுடன் தேவசேனையிடம் சென்றனர் தேவசேனையைக்கண்டதும் வள்ளி வணங்கினள்; வணங்கின வள்ளியைத் தேவசேனை 'எடுத்துப் புல்லி...எங்கொரு தமியளாகி இருந்திடு வேனுக் கின்றோர் பாங்கிவந் துற்றவாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்''; பின்னர், வள்ளியின் வரலாற்றை முருகவேள் தேவசேனைக்கு விளக்கினர். அவ் விளக்கத்தைக் கேட்ட தேவசேனை வள்ளியைப் புல்லி "இன்றனைத் துணையாப் பெற்றேன் எம்பிரான் அருளும் பெற்றேன்''-என மகிழ்ந்தாள். —(கந்த புராணம் 6 21-235, 254) இந் நிகழ்ச்சியைக் கருதித் தேவசேனையைக் "குணதேவ மடமாது" என்றார் அருணகிரியார்.

கோசைநகர்.

703.

விருப்பம் தருவதான கனம்—கொங்கை, (மாதர் அழகுள்ள இடை-நூல், வயிறு ஆலிலை, (என) என்று உவமை கூறி, காம சாத்திர விளையாடல்கள்—

எல்லாம் உண்டாகும் குழியான முக்கோணம் அதில் (அல்குலில்) ஆசை மிகவும் கொண்டு, அடியேன் அலைச்சல் உறாமல்,

(நாதனே!)(அல்லது ஒலியுடன்) நூறுகோடி (மறைகள்) ஆகம மந்திர உபதேசப் பொருளகளைச் சத்தத்தால் தெரிவிக்கும (உனது) சிலம்பு முன்னதாக விளங்கும் திருவடியாம் அழகிய மலரை—நன்மைபெறுமாறு

நான் நாள்தோறும் நிதமும் நினைக்கும்படி உனது கிருபையை நாடி (அங்ஙனம் நாடுவதால்) உனது திருவருளை நீ (அருள்) பாலிக்க வரவேண்டுகின்றேன்.

குளிர்ந்த நிலவு, ஆடும் அரவு, குறுவேர், அறுகு, (அல்லது) ஏர் அறுகு—அழகிய அறுகு, நிறம் உள்ள (கொக்கின்) இறகு, குளிர்ந்த (கங்கை) நீர், இவைதமைக் கொண்ட அழகிய சடையை உடைய பரமேசர்—

(உலகங்கள்) செம்மை பெறவே தந்த கூரிய வேலனே! சிவனே! கோபித்து வரும் பெரிய அசுரர்களின் குலத்துக்கு யமனே!

பெண்ணினல்லவளான குறமாது (வள்ளி) நற்குணம் உள்ள தேவ அழகிய மாது தேவசேனை—ஆக இருவரும் இரண்டு பக்கத்திலும் பொருந்த விளக்கத்துடன் வரும் குமரேசனே!

கோசை நகரில் வீற்றிருக்க வந்துள்ள ஈசனே! அடியார்க்கு நேசனே! சர்வேசனே! முருகா! தேவர் பெருமாளே!

(அருள வருவாயே)

பெருங்குடி.

[சரியான இடம் விளங்க இல்லை. சைதாப்பேட்டை, மதுரை, திருவாரூர், வலங்கைமான், (திருநெல்வேலி ஜில்லாவில்) ராதாபுரம், ஆகிய சப்டிஸ்ட்ரிக்டுக்களிற் 'பெருங்குடி' என்னும் பெயருடைய கிராமங்கள் இருக்கின்றன.

704.

தனந்தன தனந்தன தனந்தன தனந்தன
தனந்தன தனந்தன தனதான

தலங்களில் வருங்கன *இலங்கொடு மடந்தையர்
தழைந்தவு தரந்திகழ் தசமா தஞ்-
சமைந்தனர் பிறந்தனர் கிடந்தன ரிருந்தனர்
தவழ்ந்தனர் †நடந்தனர் சிலகாலந்;
துலங்கு நலபெண்களை முயங்கினர் மயங்கினர்
தொடுந்தொழி லுடன்‡தம க்ரகபாரஞ்-
சுமந்தன ரமைந்தனர் குறைந்தன ரிறந்தனர்
சுடும்பிணை யெனும்பவ மொழியேனோ;
x இலங்கையி லிலங்கிய இலங்களு ளிலங்கரு
ளிலெங்கணு மிலங்கென முறையோதி-
இடுங்கனல் குரங்கொடு நெடுங்கடல் நடுங்கிட
எழுந்தருள் முகுந்தனன் மருகோனே;
பெலங்கொடு விலங்கலு நலங்கஅ யில்கொண்டெறி
ப்ரசண்டகர தண்டமிழ் வயலூரா-
oபெரும்பொழில் கரும்புக ளரம்பைகள் நிரம்பிய
பெருங்குடி மருங்குறை பெருமாளே.(க)

---

* இலம் கொடு—இல்லம் கொண்டு.
† "நல்லூழில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்திற்
சொல்லாய்க் கழிகின்றது"--சுந்தரர்-7-3-1.
‡ தம—தம்முடைய. x 'வாக்குக்கு அருணகிரி'—என்னும் மூதுரைக்கு எடுத்துக் காட்டு இந்த ஒரு அடியே போதுமானது. கண்ணகி மதுரைக்கு நெருப்பிட்டபோது—
"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"—என்று சிலப்பதிகாரத்தில் (21-53) வருவதும் இங்கு கருதற்பாலது. o "பெரும்பொழி லரம்பைகள் கரும்புக ணெருங்கிய" என்றும் பாடம்.

பெருங்குடி.

704

(தலங்களில்) பூமியில் உள்ள இடங்களில் இருக்கின்ற பெரிய இல்லம் (வீட்டில்) இருந்துகொண்டு, மாதர்களின் பூரித்துள்ள (உதரம்) வயிற்றிலே செம்மையாகப் பத்து மாதம்—

வளர இருந்தனர், (பின்னர்) பிறந்தனர், (பின்னர்) படுக்கையிற் (குழந்தையாய்க்) கிடந்தனர், (பின்னர்) உட்கார்ந்தனர், அதன் பின் தவழ்ந்து சென்றனர், (அதன் பின்னர்) நடக்கலுற்ருர், பின்பு சிலகாலம்

விளக்கமுள்ள நல்ல பெண்களொடு பொருந்தி இருந்தனர்; அவர்மீது மோக மயக்கம் கொண்டனர், அவர்களைத் தொட்டுத்தழுவும் தொழிலுடனே—(அல்லது தொட்ட — தான் மேற்கொண்ட தொழிலிலே தமது இல்லற வாழ்க்கைப் பாரத்தைச்

சுமந்தனர், அவ் வாழ்க்கையிலே உடன்பட்டு இருந்தனர், பின்பு தமது தொழில், பொலிவு, வலிமை இவையெலாம் குறைந்து மங்கி இருந்தனர்; (ஈற்றில்) இறந்தனர்; இப் பிணத்தைச் சுட்டெரியுங்கள் இனி; என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இப் பிறப்பை ஒழிக்க மாட்டேனே!

இலங்கை நகரில் விளக்கமுற்றிருந்த வீடுகளுள் விளக்கமுற்ற அருள் (தயை—அன்பு) இல்லாத எல்லா இடத்தும் (ஏ! அக்கினியே! (நீ) பற்றி எரிவாயாக என்று கட்டளையிட்டு (அல்லது நீதியை எடுத்துரைத்து)

(இடுங்கனல்) கனல் இடும் — நெருப்பை வைத்த குரங்கு அநுமனொடு, *பெரிய கடலும் நடுக்கம் கொள்ள எழுந்தருளின (முகுந்தன்) ராமபிரானது நல்ல மருகனே!

பலத்துடனே கிரவுஞ்சகிரி அசைவு உற வேல்கொண்டு எறிந்த மிக்க வீரம் கொண்டவனே! தண்ணிய தமிழ் விளங்கும் வயலூரனே!

பெரிய பொழில்களில் கரும்பும் வாழையும் நிரம்பி விளங்கும் பெருங்குடி என்னும் தலத்துக்கு அருகே வீற்றிருக்கின்ற பெருமாளே!

(பவம் ஒழியேனே)

* உடல் நடுங்கினது: பாடல் 177, பக்கம் 412 கீழ்க்குறிப்பு.

மாடம்பாக்கம்.

[செங்கற்பட்டு ஜில்லா வண்டலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 7-மைல்]

---

705. ஆண்டருள

தான தந்தன தான தானன
தான தந்தன தான தானன
தான தந்தன தான தானன தனதான

தோடு றுங் *குழை யாலே கோல்வளை
சூடு செங்கைக ளாலே யாழ்தரு
கீத மென்குர லாலே தூமணி நகையாலே—
†தூம மென்குழ லாலே யூறிய
தேனி லங்கித ழாலே யாலவி
லோச னங்களி னலே சோபித அழகாலே ;
பாட கம்புனை தாளா லேமிக
வீசு தண்பனி நீரா லேவளர்
பார கொங்கைக ளாலே ‡கோலிய விலைமாதர்—
xபாவ கங்களி னலே யான்மயல்
மூழ்கி நின்றய ராதே நூபுர
பாத பங்கய மீதே யாள்வது கருதாயோ ;
oநாட ருஞ்சுடர் தானு வோதுசி
வாக மங்களி னை பேத**வ
நாத தந்த்ரக லாமா போதக வடிவாகி—
நால்வி தந்தரு வேதா வேதமு
நாடி நின்றதொர் மாயா தீதம
னேல யந்தரு நாதா ஆறிரு புயவேளே ;

---

* குழை—காது ; இஃது ஆகுபெயர்.

† தூமம்—புகை : கூந்தலுக்கு அகிற் புகை ஊட்டுவது வழக்கம். "நறிய அகிற் புகையிட் டாற்றுங் குழற்காடு"—முத்துக் குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழ்-தால-3. ‡ கோலிய—வளைத்த.

x பாவகம் — வஞ்சக நடிப்பு. "அடைக்கலப் பொருளை வெளவிப் பாவகம் பலவுஞ் செய்து"—பெரிய புரா-திருநீல-26.

o நாடருஞ் சுடர்—சிவபெருமான்.

** அநாதன்--"விண்ணோர் பரவி நின்ற நாதனை ஞாலம் விழுங்கும் அநாதனை"—இயற்பா திருவிருத்தம் 79.

மாடம்பாக்கம்.

705.

தோடு என்னும் ஆபரணமுள்ள காதினாலே, திரட்சி உள்ள வளையல்களை அணிந்துள்ள செவ்விய கைகளாலே, யாழ்போல இனிய இசை கொண்ட மெல்லிய குரலாலே, பரிசுத்தமான ஒளிவீசும் பற்களாலே—

(அகிற்) புகையூட்டிய மெல்லிய கூந்தலாலே, (ஊறிய தேன் இலங்கு இதழாலே) தேன் ஊறிய இலங்கு இதழாலே—தேன் ஊறின விளக்கம் உள்ள வாயிதழாலே, (ஆலம்) விஷம் போன்ற (விலோசனங்களினாலே) கண்களாலே, ஒளி வீசும் அழகாலே—

பாடகம் என்னும் அணி புனைந்த கால்களாலே, நிரம்ப வீசப்பட்ட குளிர்ந்த பன்னீராலே, வளர்ந்துள்ள பாரமான கொங்கைகளாலே, (ஆடவர்களை) வளைக்கின்ற பொது மகளிருடைய—

வஞ்சக நடிப்புச் செயல்களாலே நான் மோகத்தில் முழுகி நின்று தளர்ச்சியுறாமல் சிலம்பணிந்த உனது பாத தாமரை மீதே என்னை ஆட்கொண்டு சேர்க்கும் வகையை நீ நினைக்கமாட்டாயோ!

(நாடுதற்கு) தேடிக் காண்பதற்கு அருமையான சோதிப் பொருள் சிவபிரானாகி—முருகவேளாக-ஓதுகின்ற சிவாகமங்களில் பலவித பேதங்களாற் போற்றப்படும் (அநாதனே)-தனக்குமேலே தலைவன் இல்லாதவனே! மந்த்ர தந்த்ர சாஸ்திரங்களிற் கூறப்படும் சிறந்த ஞான வடிவினனாகி—

(இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்) எனப்படும் நால்வகைப்பட்ட வேதங்களை ஓதித் தரும் (வேதா)-பிரமனும் (அல்லது சராயுசம் (கருப்பையிற் பிறப்பன), அண்டசம் (முட்டையிற் பிறப்பன), உற்பிசம் (வித்திற் பிறப்பன), சுவேதசம் (வேர்வையிற் பிறப்பன), என நால்வகை உயிர்த் தோற்றங்களைப் படைக்கின்ற (வேதா) பிரமனும், வேதங்களும் நாடி நின்றதான, ஒப்பற்ற மாயைகளைக் கடந்து நிற்கும் மன ஒடுக்கத்தை (சாந்தியை)த் தரும் நாதனே! பன்னிரு திருப்புயங்களை உடையவனே!

*வாட யங்கிய வேலா லேபொரு
†சூர்த டிந்தருள் வீரா மாமயி
லேறு கந்தவி நோதா கூறென அரனூர்முன்—
‡வாச கம்பிற வாதோர் ஞானசு
கோத யம்புகல் xவாசா தேசிக
oமாடை யம்பதி வாழ்வே தேவர்கள் பெருமாளே.(க)

706. ஆண்டருள

தனன தத்தன தனன தத்தன
தனந்தந் தந்த தந்தா
*** *** *** தனதன தனன

விலைய றுக்கவு முலைம றைக்கவு
மணந்துன் றுஞ்செ ழுந்தார்
புனைமு கிற்குழல் தனைய விழ்க்கவும்
விடங்கஞ் சஞ்ச ரஞ்சேர்
விழிவெ ருட்டவு மொழிபு ரட்டவு
நிணந்துன் றுஞ்**ச லம்பா யுதிரநி ருடனே—
வெளியி னிற்கவும் வலிய முட்டரை
யெதிர்ந்தும் பின்தொ டர்ந்தே
யிலைசு ணப்பொடி பிளவெ டுத்திடை
திரும்பும் பண்ப ரன்றே
யெனவு ரைத்தவர் தமைவ ரப்பணி
யுடன்கொண் டன்பு டன்போய் சயனபா யலின்மேல்;

---

* வா டயங்கிய—வாள் தயங்கிய—ஒளி பொருந்திய.

† "சூர்த டிந்தருள் வீரா மாமயில்
வாசிகொண்ட விநோதா தாரக மரனூர்முன்
வாசகந் தவறுதே ஓதுப
தேச நன்குரு வானய் வானுயர்
மா பரங்கிரி மீதே மேவிய பெருமாளே"-என்றும் பாடம்.

‡ "நிர்வசனப் பிரசங்கம்" என்றார் 661-ஆம் பாடலில்.

x வாசா தேசிகன்—உபதேச குரு,

o மாடையம்பதி யென்பது மாடம்பாக்கம்.

** சலம்-சுழற்சி. 'சலம் வரும் குயவன திகிரித் தன்மைபோல்' —கம்ப ராமாயணம் ராவணன் வதை-63,

ஒளி பொருந்திய வேலாயுதத்தாலே, சண்டை செய்த சூரனை அழித்தருளின வீரனே! அழகிய மயிலில் ஏறும் கந்தனே! விநோதனே! 'நீ சொல்லுக' என்று கேட்ட சிவபிரானது முன்னிலையில்—

வாக்கால் தோற்றுவிக்க முடியாததான ஞான சுகத்தைப் பிறப்பிப்பதான பொருளை உபதேசஞ் செய்த தேசிகமூர்த்தியே (குருமூர்த்தியே)! மாடம்பாக்கம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் செல்வமே! தேவர்கள் பெருமாளே!

(ஆள்வது கருதாயோ)

706.

விலைபேசி முடிவுசெய்யவும், கொங்கையை(ஆடையால்) மறைக்கவும், நறுமணம் நிறைந்துள்ள செழுமை கொண்ட பூ மாலையை அணிந்துள்ள மேகம்போன்ற (கரிய) கூந்தலை அவிழ்த்து விடவும், விஷம், (கஞ்சம்) தாமரை, (சரம்) அம்பு இவைகளுக்கு நிகரான கண்கொண்டு (ஆடவர்களை) வெருட்டவும், சொன்ன சொல்லைப் புரட்டிப் பேசவும்— மாற்றிப் பேசவும், மாமிசம், (துன்றும் சலம்பாய் உதிர நீருடனே) நிரம்பிய ஜலமும், பாய்கின்ற ரத்த நீருடன் (ரத்தத்துடனே) (அல்லது) நெருங்கிச் [சலம்] சுழற்சியுடன் பாய்கின்ற ரத்த நீருடனே—

வெளியிலே வந்து நிற்கவும், வலிய (வேண்டுமென்றே) (முட்டரை) மூடராயுள்ளோரை எதிர்ப்பட்டு அவர்களுடன் பேசியும்) அவர்களைப் பின் தொடர்ந்தும், வெற்றிலை, சுண்ணும்பு, தூள்பாக்கு) இவைதமை எடுத்துக்கொடுத்து, '(நீங்கள்) இடையிலே (அப்படியே) நமது வீட்டுக்குத் திரும்பி வரும் நற்குணத்தவர் அன்றோ'. (என உரைத்து) என்று நன்மொழி பேசி (அவர்தமை) அவர்களை (வரப் பண்ணி) தமது வீட்டுக்கு வரச் செய்து (உடன்கொண்டு) தம்முடனே அழைத்துச் சென்று அன்புடன் போய் உறங்கும் படுக்கையின் மேலே—

கலைநெ கிழ்க்கவு மயல்வி ளைக்கவு
நயங்கொண் டங்கி ருந்தே
குனுகி யிட்டுள பொருள்ப றித்தற
முனிந்தங் கொன் று கண்டே
கலக மிட்டவ ரகல டித்தபின்
வரும்பங் கங்கு ணங்கோர் புதியபே ருடனே—
கதைகள் செப்பவும் வலச மர்த்திகள்
குணங்கண் டுந்து ளங்கா
மனித னிற்சிறு பொழுது முற்றுற
நினைந்துங் கண்டு கந்தே
கடிம லர்ப்பத மனுகு தற்கறி
விலன் பொங்கும்பே நம்பா தகனையா னவையோ ;
*சிலைத ளைக்கொடு மிகஅ டித்திட
மனந்தந் தந்†த ண‡ந்தா
மரைமலர்ப்பிர மனைந டுத்தலை
யரிந்துங் கொண்டிரந்தே
x திரிபு ரத்தெரி புகந கைத்தருள்
சிவன்பங் கங்கி ருந்தா ளருளுமா முருகா—

---

* **அருச்சுனனுடைய வில்லால் சிவன் அடிபட்டது :**

தவஞ் செய்துகொண்டிருந்த அருச்சுனனைக் கொல்ல, துரியோதனனுடைய ஏவலின்படி மூகாசுரன் என்ற அசுரன் பன்றி ரூபமாய் அருச்சுனனிடம் வந்தான். அப்போது சிவபிரான் வேடனாக வந்து பாணம் செலுத்தி அந்தப் பன்றியைக் கொன்றனர். அருச்சுனனும் அந்தப் பன்றியின்மீது ஒரு அம்பைச் செலுத்தினான். முன்னதாக ஒருவர் அம்பு விட்டிருக்கும்போது நீ ஒரு அம்பு செலுத்தினது சரியன்று என்று வேடனுடன் வந்தவர்கள் உரைக்க, அதனால் கலாம் ஏற்பட்டு விஜயனுக்கும் வேடனுக்கும் வில் யுத்தமும் மல் யுத்தமும் ஏற்பட, அருச்சுனனுடைய வில் முறிபட்டது. முறிபட்ட வில்லால் அருச்சுனன் வேடனை முடிமீது அடித்தான், அந்த அடி பிரமன், திருமால் முதலிய யாவர்மீதும் பட்டது. மற்போரில் விஜயனை வேடன் தனது பத மலரால் உந்தி விண்ணில் எறிந்தான் கீழே விழும் அருச்சுனனுக்கு இறைவன் காட்சி தர அவன் வணங்கி நின்றான்; இறைவன் அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் முதலிய தந்து மறைந்தார்.

"நின்னுடன் அமர்செய்து நின்வில் நாணறுத்
தந்நெடு வில்லினால் அடியும் உண்டனன்"

—வில்லி பாரதம், அருச்சுனன் தவம்-27.

(தொடர்ச்சி பக்கம் 129 பார்க்க.)

ஆடையை (நெகிழ்க்கவும்) தளர விடவும், மோகத்தை உண்டுபண்ணவும், [நயத்துடனே] உபசார வார்த்தைகள் பேசி அங்கிருந்தபடியே, [குணுகியிட்டு] கொஞ்சிப் பேசி, (வந்தவரிடம்) உள்ள பொருள்களை எல்லாம் பறித்துப் பின்னர் [வந்தவருடைய] பொருள் வற்றினவுடன் (அற) மிகவும், கோபித்து; அச்சமயத்தில் ஏதேனும் ஒரு சாக்கு [ஒரு வியாஜம்) ஒரு போலிக் காரணம் (கண்டே) கற்பித்துக் கொண்டே, [கலகமிட்டு] கலகப் போர்செய்து, வந்தவரை அகன்று ஓடும்படி அடித்து, அனுப்பின பின்னர் [வரும் பங்கு அங்கு உணங்க ஓர் புதிய பேருடனே], அப்படி ஓட்டப் பட்டவர்களால் வந்த பங்குப் பொருள் [அங்கு] ஒரு நாள் சுருங்க ஒரு புதிய பேர்வழியைப்பற்றி அவருடனே

பொய்க் கதைகளைச் சொல்லவும் வல்ல சாமர்த்திய சாலிகள்—அத்தகையோர்களின் குணத்தைக் கண்டும் நிலை கலங்காத மனிதனைப் போல ஒரு சிறுபொழுதேனும் நன்கு மனம் பொருந்த [உன்னை] நினைந்தும், [உன்னைத்] தரிசித்து மனம் களித்தும், நறுமணமுள்ள மலர்கள் பொருந்திய உனது திருவடியை அணுகிச் சேர்வதற்கு உரிய அறிவு இல்லாதவனாய், மிக்கு எழுகின்ற பெரிய பாவியாகிய என்னை ஆண்டு அருளுவையோ (ஆண்டு அருளுக என்றபடி)

வில்லைக்கொண்டு (வில்லால்) நன்றாய்த் தன்னை அடிக்கும்படியான மனத்தைத் [தந்து] அருச்சுனனுக்குக் கொடுத்தும், (அந்தணன்) மறையோனும தாமரை மலர் மீது வீற்றிருப்பவனுமான பிரமனுடைய (நடுத் தலையை உச்சித் தலையை அரிந்தும், அந்தத் தலையிலே பலிப்பிச்சை ஏற்றும், திரிபுரத்தில் எரிபுகும்படி சிரித்தும்—அருள் விளையாடல்கள் செய்த சிவனுடைய [இடது] பாகத்தில் இருப்பவளாம் பார்வதிதேவி அருளிய அழகு முருகனே!

---

† 'அந்தணன் தா' என்பது 'அந்தணந்தா' எனச் சந்தநோக்கி மருவிற்று. இனி 'அம் தண் அம் தாமரை' எனப் பிரித்து 'அழகிய குளிர்ந்த நீரில் தோன்றும் தாமரை எனலுமாம்' (அம்-அழகு-நீர்.)

‡ பிரமன் நடுத் தலையை அரிந்தது :—
—பாடல் 285, பக்கம்-209 கீழ்க்குறிப்பு.

(தொடர்ச்சி பக்கம் 130 பார்க்க.)

செருவி டத்தல கைகள் தெனத்தென
தெனந்தெந் தெந்தெ னந்தா
என இ டக்கைகள் மணிக ணப்பறை
டிகுண்டிங் குண்டி குண்டா
டிகுகு டிக்குகு டிகுகு டிக்குகு
டிகுண்டிங் குண்டி குண்டி யென இரா வணனீள்;

மலையெ னத்திகழ் முடிகள் பத்தையு
மிரண்டஞ் சொன்ப தொன்றேய்
பணைபு யத்தையு மொருவ கைப்பட
வெகுண்*டம் பொன்றெ றிந்தோன்
மதலை †மைத்துன அசுர ரைக்குடல்
திறந்தங் கம்பி ளந்தே மயிலின்மேல் வருவாய்-

வயல்க ளிற்கய லினமி குத்தெழு
வரம்பின் கண்பு ரண்டே
பெருகயற் ‡கொடு சொரியு நித்தில
நிறைந்தெங் குஞ்சி றந்தே
வரிசை பெற்றுயர் xதமனி யப்பதி
யிடங்கொண் டின்பு றுஞ்சீர் இளைய நாயகனே.(2)

(129-ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி)

பிரமன் தலையிற் பலி ஏற்பது: வயிரவக் கடவுள் பிரமனது அறுபட்ட தலையைக் கையில் ஏந்தி முனிவர், தேவர், திருமால் முதலியோரிடம் சென்று ரத்த பிச்சை வாங்கி அவரவர் தம் ஆணவத்தை அடக்கினர்

சிவபிரான் வயிரவ மூர்த்திக்கு இட்ட கட்டளை:

"கமலத்தோன் சென்னி இகழ்ந்தது நம்மை உச்சி, இருந்ததே அதனை வல்லே அகழ்ந்தனை கரத்தி லேந்தி .... முனிவர் தேவர் புரந்தொறும் போதி. சோரிதானே.....ஐயமாக வாங்குதி— அன்னோர் அகந்தை மாற்றி அடைதி"

—கந்த புராணம்-6-13-167 168.

x திரிபுரம் எரித்தது—பாடல் 285, பக்கம் 2(?)6 பார்க்க.

---

* "அம்பு ஒன்று எறிந்தோன்"—பாடல் 452, பக்கம் 6 கீழ்க் குறிப்பைப் பார்க்க.

(தொடர்ச்சி பக்கம் 131 பார்க்க.)

[செரு இடத்து] போர்க்களத்திலே பேய்கள் 'தெனத் தென தெனந்தெந் தெந்தெனந்தா' எனக் கூறிக் குதித்தாட, இடக் கைகள் [இடக்கையாற் கொட்டப்படும் வாத்தியங்கள்—பெரு முரசு வகை), மணிகளும், கணப்பறை [பறைவகை — அதமக் கருவி]களும் டிகுண்டிங் குண்டி குண்டா...குண்டி குண்டி என ஒலிக்க, இராவணனுடைய பெரிய

மலைபோல விளங்கின தலைகள் பத்தையும், இரண்டு அஞ்சு [10] ஒன்பது [9]+[1]—சேர்ந்த) இருபது பெரிய புயங்களையும் ஒரு வழிப்பட்டு ஒழியும்படி கோபித்து ஒரு அம்பை எறிந்தவனாகிய திருமாலின் பிள்ளை (பிரமனுக்கு —அல்லது மன்மதனுக்கு) மைத்துன முறையினனே! அசுரர்களுடைய குடலை வெளிப்படுத்தி அவர்களுடைய உடலைப் பிளந்து மயில்மேல் வந்தவனே!

வயல்களிற் கயல்மீன் கூட்டங்கள் மிக்கு எழுந்து வரம்பினிடத்தே புரண்டு பெருகும் பக்கங்களிலே சங்குகள் சொரிகின்ற முத்துக்கள் நிறைந்து, எங்கும் விளக்கம் தரும் (வரிசை பெற்று) மேம்பாட்டினைப் பெற்று, விளங்கும் (தமனியப்பதி) மாடம்பாக்கம் என்னும் தலத்தை இடமாகக் கொண்டு இன்புறுகின்ற மேன்மை மிக்க [இளைய நாயகனே] இளமை வாய்ந்த தலைவனே!

(பெரும் பாதகனை ஆளுவையோ)

(130-ஆம் பக்கம் கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி.)

† "வேதா மைத்துன வேளே"—திருப்புகழ்-823.
'காமவேள் மைத்துனப் பெருமாளே"—திருப்-1108, 1109.

‡ கொடு—கோடு—சங்கு.

x தமனியப்பதி என்பது மாடம்பாக்கம். தமனியம் மாடு—பொன். திரு அன்னியூர் என்னும் தேவாரம் பெற்ற தலம்—திருநீர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 3-மைலில் உள்ளது. பொன்னூர் என வழங்குகின்றது.

கோடைநகர்.

[இது 'வல்லக்கோட்டை' என வழங்கும். திருவள்ளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 11-மைல் தூரத்திலுள்ள ஸ்ரீபெரும்பூதூருக்குத் தெற்கு 6 மைல். வண்டலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 12-மைல். சிங்கபெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 10 மைல். வாலாஜாபாத் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 12-மைல். ஸ்வாமி பெயர் "கோடையாண்டவர்". இரண்டு தேவிமார்களுடனும் வீற்றிருக்கின்றார்.]

---

707. அன்பு பெற

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான

ஆதிமுத ஞளி லென்றன் தாயுடலி லேயி ருந்து
ஆகமல மாகி நின்று புவிமீதில்-
ஆசையுட னேபி றந்து நேசமுட னேவ ளர்ந்து
ஆளழக ஞகி நின்று விளையாடிப்;
பூதல மெலாம லைந்து மாதருட னேக லந்து
பூமிதனில் வேணு மென்று பொருள்தேடிப்-
போகமதி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே;
சீதைகொடு போகு மந்த ராவணனை மாள வென்ற
தீரனரி நார ணன்றன் மருகோனே-
தேவர்முநி வோர்கள் கொண்டல் மாலரிபிர் மாவு நின்று
தேடஅரி தான வன்றன் *முருகோனே;
கோதைமலை வாழு கின்ற நாதரிட பாக நின்ற
கோமளிய நாதி தந்த குமரேசா-

---

* முருகன்—குழந்தை என்னும் பொருளில் வந்துள்ளது.
—பாடல் 679, 693 பார்க்க.

கோடைநகர்.

707.

முதல் முதலிலே என்னுடைய தாயின் உடலில் இருந்து, உடல் அழுக்குடன் இருந்து, (பின்பு) இந்தப் பூமியிலே —

(ஆசையுடனே பிறந்து - பிறக்கும்போதே ஆசையுடன் பிறந்து, (பெற்றோர் - சுற்றத்தார் இவர்தம்) அன்பால் வளர்ந்து, ஆள் அழகன் என்னும்படியாக விளங்கி விளையாடி—

பூமியில் எல்லா இடங்களிலும் அலைந்து திரிந்து, பெண்களுடனே மருவிக் கலந்து, பூமியில் வேண்டியிருக்கிறதென்று பொருள்களைத் தேடி—

(போகங்கள்) சுகங்களிலேயே திரிதலுற்று, பாழான நரகத்தை நான் அடையாமல் உன்னுடைய மலரன்ன திருவடிகளைச் சேர அன்பு தந்தருளுக.

சீதையைக் கொண்டுபோன அந்த (அல்லது—மந்த— அறிவு மழுங்கிய) ராவணனைக் கொன்று வென்ற தைரியசாலி, ஹரி, நாராயணனுடைய மருகனே!

தேவர்கள், முநிவர்கள், மேக நிறங்கொண்ட திருமாலாம் ஹரி, பிரமா இவர்களெல்லாம் நின்று தேடியும் காணுதற்கு அரியவராய் நின்ற சிவனது குழந்தையே!

(*கோதை) தேவி, (மலை) கயிலைமலையில் வாழ்கின்ற நாதர் — சிவபிரானது இடது பாகத்தில் இடங் கொண்டிருக்கும் (கோமளி) அழகி, (அநாதி) தொடக்கம் இல்லாதவள் தந்த குமரேசனே!

---

* கோதை — பார்வதி—"கொம்பியல் கோதைமுன் அஞ்ச, 'கோதை துணையாதி முதல் வேத விகிர்தன்"

—சம்பந்தர்-3-18-4; 68-6.

'கோதைமலை' என்ற ஒரு தலம் சேலம் ஜில்லாவில் இருக்கிறது என்பர்.

*கூடிவரு சூரர் தங்கள் மார்பையிரு கூறு கண்ட
†கோடைநகர் வாழ வந்த பெருமாளே.(க)

708. அன்பு பெற

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான

சாலநெடு நாள்ம டந்தை காயமதி லேய லைந்து
சாமளவ தாக வந்து புவிமீதே-
சாதகமு மான பின்பு சீறியழு தேகி டந்து
தாரணியி லேத வழ்ந்து விளையாடிப்;
பாலனென வேமொ ழிந்து பாகுமொழி மாதர் தங்கள்
பாரதன மீத ணைந்து பொருள்தேடிப்-
பார்மிசையி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லொன்று
பாதமலர் சேர அன்பு தருவாயே;
‡ஆலமமு தாக வுண்ட ஆறுசடை நாதர் திங்கள்
ஆடரவு பூணர் தந்த முருகோனே-
Xஆனைமடு வாயி லன்று மூலமென வோல மென்ற
ஆதிமுதல் நார ணன்றன் மருகோனே;

---

* கூடிவரு சூரர் — சூரபத்மா—(சூரனும் பதுமனும்.) சூரன் பதுமன் என்னும் இருவரே ஒரு வடிவமாகி சூரபத்மா என ஆனர்.

'நீவிர்தாம் இருவிர் ஒருவடிவாகி நிருதரிற் சூரபத்மா வென்
றோவிலா விறல்கூர் பெயர்தரித் திமையோர்க் குறுபகையா
யுடற்றிடுநாள், தாவில்சீர் எமதாணையில் உமக்கொழுகு தாழ்பசுஞ்
சிறகர்மாயூரஞ், சேவலாம் வடிவுண் டாமென முறுவல் சிறிது
கூர்ந்துரைத் தனுப்பினனால்'--உபதேச காண்டம் ஞானவரோ-84

மாமரமாய் நின்ற சூரனது உடல் வேலால் தடியப்பட்டு, அறுபட்டு விழுந்தும் தவச்சிறப்பால் கூறுபட்ட உடல் அழியாது ஒன்று கூடிட பழைய உருவத்துடன் சூரன் போருக்கு வந்தான்.

வேல் அவன் உடலை மறு முறையும் கிழித்து இருகூறாக்கிற்று.

"சூரராங் கிழித்துப் பின்னும் அங்கம திருகூறாக்கி
எஃகம் வான் போயிற்றம்மா"
"மெய்பகிர் இரண்டுகூறும் சேவலு மயிலுமாகி"
—கந்த புரா-4-13-490, 492.

† 'கோவைநகர் வாழவந்த பெருமாளே'—என்றும் பாடம்.
'கோவல் நகர் வாழவந்த பெருமாளே'—என்றும் பாடம்.
(கோவை-கோயமுத்தூர்; கோவல்—திருக்கோவலூர்).

(தொடர்ச்சி பக்கம் 135 பார்க்க)

ஒன்று கூடி வந்த சூரர்களுடைய மார்பை இரண்டு கூறாகக் கண்ட பெருமாளே! கோடை நகரில் வாழ்ந்திருக்கும் பெருமாளே!

(பூவடிகள் சேர அன்பு தருவாயே)

708.

மிகவும் நீண்ட நாள்கள் ஒரு பெண்ணின் (கருவிலே) உடலிலே (கிடந்து) அலேச்சலுற்று, (பின்பு) சாவும் அளவுக்குள்ள துன்பத்துக்கு ஆளாகி வந்து பூமியிலே—

(சாதகமும் ஆன பின்பு) பிறப்பு என்பதை அடைந்த பின்னர், பலமாக அழுது, கிடந்து, தரையிலே தவழ்ந்து விளையாடிப் (பின்பு)

பால உருவினனுய்ப் பேச்சுக்கள் பேசிச் சர்க்கரை போல இனிக்கும் சொற்களைக் கொண்ட மாதர்களின் பெருத்த கொங்கைமீது அணேந்து, பொருள்தேடவேண்டி-

பூமியிலே திரிந்து (ஈற்றில்) பாழான நரகத்திற்போய்ச் சேராமல், பொருந்திய (உனது) திருவடி மலரைச் சேர்வதற்குரிய அன்பைத் தந்தருளுக.

விஷத்தை அமுதமாக உண்ட கங்கையாற்றைச் சடையிற் சூடியுள்ள நாதர், சந்திரனையும், படமெடுத்தாடும் பாம்பையும் பூண்டுள்ளவர் — (ஆன சிவபிரான்) தந்த முருகனே!

(ஆனே) கஜேந்திரனல் (அன்று) மடுவிடத்தே 'ஆதி மூலமே' என்றும் 'நீயே தஞ்சம்', என்றும் கூவி அழைக்கப் பட்ட ஆதி முதல்வனன நாராயணமூர்த்தியின் மருகனே!

‡ சிவபிரான் ஆலம் உண்டது-பாடல் 509-பக்கம் 162 பார்க்க,
x ஆனே அழைக்கத் திருமால் வந்து உதவினது— பாடல் 110. பக்கம் 262 பார்க்க

கோலமலர் வாவி யெங்கு மேவுபுனம் வாழ்ம டந்தை
கோவையமு தூற லுண்ட குமரேசா-
கூடிவரு சூர டங்க மாளவடி வேலெறிந்த
*கோடைநகர் வாழ வந்த பெருமாளே.(2)

709 அகப்பொருள்—கடப்பமாலை பெற

தான தான தான தான
தான தானத் தனதான

†ஏரு ணலே நீருய் மாயா
‡வேளே வாசக் xகணையாலே-
ஏயா வேயா மாயா வேயா
லாமே ழோசைத் தொளேயாலே ;
மாரு யூரு யீருய் மாலாய்
oவாடா மானேக் கழியாதே-
வாராய் பாராய் **சேரா யானல்
வாடா நீபத் தொடைதாராய் ;
சீரு வீரு ††சூரேழ் பார்சூழ்
சீரார் தோகைக் குமரேசா-
தேவா சாவா மூவா நாதா
தீரா கோடைப் பதியோனே ;

---

* "கோவை நகர் வாழவந்த பெருமாளே"—'கோவல் நகர் வாழவந்த பெருமாளே'--என்றும் பாடம்.

'கோடை நகர்' என்பது திருங்செங்கோடு அன்று என்பது "அருணை திருத் தணிநாக மலைபழநிப் பதிகோடை அதிப"—(திருப்புகழ் 800) என வருவதில் நாகமலை திருச்செங்கோடு வேருகக் கூறப்பட்டிருத்தலாற் பெறப்படும்.

† ஏறு ஆ .ணு லே—இடபமும் பசுவும் கலந்து வருதலாலும், ‡ வேள் ஏ வாசம் கணையாலே—மன்மதன் ஏவுகின்ற புஷ்ப பாணத்தாலும். x கணையாலே எய்ந்து எய்ந்து கணைபட்டுப் பட்டு மாய்ந்து எனலுமாம் o வாடுதல்—நீங்குதல் "சூலமும்... கரத்தினில் வாடா திருத்தி"—கல்லாடம்-88, 29. ** 'சேரா யானல் நீபத் தொடை தாராய்'-என்பது 'தொடங்கினள் மடலென் றணி முடித் தொங்கற் புற இதழாகிலும் அருளான்'—எனவரும் திருவிசைப்பாவை நினேவூட்டுகின்றது. †† "சூர்திகழ் மஞ்ஞை ஏறிச் சுமச்குதி எம்மை என்னுப் பார்திசை வானமுற்றும் பாரியென நடாத்த லுற்ருன்"—கந்த புராணம்-4-13-499. பாடல் 267-பக்கம் 164,

அழகிய மலர்த் தடாகங்கள் எங்கும் இருந்த தினைப் புனத்தே வாழ்ந்த பெண் (வள்ளியின்) கொவ்வைக் கனி போன்ற வாயின் அமுதூறலை உண்ட குமரேசனே!

இரண்டு கூறுகியும் ஒன்று கூடி வந்த சூரன் அடங்கி ஒடுங்கக் கூரிய வேலைச் செலுத்தின பெருமாளே! கோடை நகரில் வாழ வந்த பெருமாளே!

(பாதமலர் சேர அன்பு தருவாயே)

709.

*(ஏறு ஆனலே) இடபமும் பசுவும் கலந்து வருதலாலும், சாம்பலாயும் அழிவு படாத மன்மதவேள் ஏவுகின்ற மணமுள்ள புஷ்ப பாணத்தாலும்,

ஏயா ஏயா—பொருந்துதலுற்றுப் பொருந்துதலுற்று (மாயா)—கவலை மிகுதியால் வருந்தி, (வேயால் ஆம் ஏழு ஓசைத் தொளையாலே)—புல்லாங்குழலில் உண்டாகின்ற ஏழிசையைத் தருகின்ற தொளைகளாலே—

(மாருய்) எழிலும் நிறமும் மாறுதல் அடைந்து, (ஊருய்) (ஊறு) துன்பமுற்று, (ஈருய்) முடிவடைந்தது போலாகி, (மாலாய்) ஒரே மோக மயக்கமாய், (உன்மேல் நினைவு) நீங்குதல் இல்லாத மான்போன்ற இவளை (இந்தப் பெண்ணை) [நீ] ஒதுக்காமல்—

வந்து பார்த்துச் சேராவிட்டால் — [அல்லது வருவாயாக, பார்ப்பாயாக! இவளுடன் சேர்வதற்கு மனமில்லாவிட்டால்] உனது வாடாத கடப்ப மாலையையாவது தந்தருளுக.

பொங்கி மேலெழுந்து வெற்றியுடன் பதினன்கு லோகங்களையும் வலம் வந்த சிறப்பு நிறைந்த மயில்வாகனக் குமரேசனே!

தேவனே! இறப்பு இல்லாத, மூப்பு இல்லாத நாதனே! தைரியமுள்ளவனே! கோடைப்பதியில் வீற்றிருப்பவனே!

---

* ஏருனலே நீருய் மாயா — ஏருனலே நீருகி மாய்ந்தது போலாகி-எனவும் பொருள் காணலாம்.

வேருய் மாரு யாரு மாசூர்
வேர்போய் வீழப் பொருதோனே-
*வேதா போதா வேலா பாலா
வீரா வீரப் பெருமாளே.(ரு.)

710. அகப்பொருள்—அணையப் பெற

தான தந்த தனத்த தத்த தனதானு

ஞால மெங்கும் வளைத்த ரற்று கடலாலே-
நாளும் வஞ்சி யருற்று ரைக்கும் வசையாலே;
ஆல முந்து மதித்த ழற்கும் †அழியாதே-
ஆறி ரண்டு புயத்த ணைக்க வருவாயே;
கோல மொன்று குறத்தி யைத்த ழுவுமார்பா-
கோடை யம்பதி யுற்று நிற்கு மயில்வீரா;
கால னஞ்ச வரைத்தொ ளைத்த ‡முதல்வானோர்-
xகால்வி லங்கு களைத்த றித்த பெருமாளே.(சு)

---

* குட்டுண்டு சிறையிலிருந்தமையால் பிரமன் அறிவு வரப் பெற்றான்—

'போதினன் ஐய உன்றன் புதல்வன் ஆற்றியவித் தண்டம்
ஏதமன் றுணர்வு நல்கி யானெனும் அகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனிதம் என்றான்"
கந்த புராண.-1-17-34

† கடலொலி, மாதர்வசை, எறிநிலவு — இவை காமங் கொண்டாரை வருத்துவன—பாடல் 218, பக்கம் 54 கீழ்க்குறிப்பு 1.

‡ முதல்—முதல்வனே.

x 'அரியரி பிரமாதியர் கால் விலங்க விழ்க்கும் பெருமாளே' என்றார் 218-ஆம் பாடலில்.

[வேருய்] வேறுபட்ட மனத்தனுய், [மாருய் ஆரும்] மாறுபட்ட [பகைமை பூண்ட] வழியிற் செல்பவனுன பெரிய சூரன் (வேரற்று) அடியோடு விழும்படிச் சண்டை செய்தவனே !

[வேதனுக்கு] பிரமனுக்கு அறிவு ஊட்டினவனே ! [அல்லது, வேதம் வல்லவனே ! அறிவாளியே!] வேலனே! குழந்தையே ! வீரனே ! வீரம் வாய்ந்த பெருமாளே !

[நீபத் தொடை தாராய்]

710.

பூமியின் எல்லாப் பக்கங்களிலும் வளைந்துகொண்டு ஒலிக்கின்ற கடலாலும்—

தினந்தோறும் மாதர்கள் சேர்ந்து சொல்லும் வசை மொழியாலும்—

விஷத்தைச் செலுத்துகின்ற சந்திரன் என்னும் நெருப்பாலும் அழிவுருமல்—

(உனது) பன்னிரண்டு புயங்களாலும் (இவளை) அணைக்க வந்தருளுக ;

அழகு பொருந்திய குறத்தி வள்ளியைத் தழுவின மார்பனே !

கோடையம்பதியிற் பொருந்தி நிற்கின்ற மயில் வீரனே !

காலனும் (யமனும்) அஞ்சும்படி (கிரௌஞ்ச) கிரியைத் தொளை செய்த முதல்வனே ! (வானேர்) தேவர்களுடைய கால் விலங்குகளை உடைத்தெறிந்த பெருமாளே !

(அணைக்க வருவாயே)

711. நரகினில் விழுவோர் இவர் இவரெனல்

தானன தந்தன தந்த தந்தன
தானன தந்தன தந்த தந்தன
தானன தந்தன தந்த தந்தன தனதான

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்த குண்டர்கள் பெரியோரைத்-
தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்;
வாழுநி லைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே-
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் *சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதை†ந மன்றன்வ நந்தி டுந்தழி விழுவாரே;
‡ஏழு மரங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையு மடைவேமுன்-
ஈடழி யும்படி சந்த்ர னுஞ்xசிவ
சூரிய னுஞ்சுர ரும்ப தப்பெற
ராம சரந்தொடு புங்க வன்திரு மருகோனே;
oகோழி சிலம்பந லம்ப யின்றக
லாப நடஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மெங்கும்வி ளங்கு மங்கல வயலூரா-
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேல னெனும்பெய ரன்பு டன்புகழ்
கோடை யெனும்பதி வந்த இந்திரர் பெருமாளே.(நி)

---

* சொம்—சொத்து; உடைமை,
† இங்ஙனம் நரகில் வீழ்வோரின் அட்டவணையை—428, 769, 1031, 1149 எண்ணுள்ள பாடல்களிற் காணலாகும்.
‡ மராமரம்—வாலி-அழிபட்டது—பாடல் 231, பக்கம்-78 பார்க்க. கடல்மேற் பாணம் : பாடல் 177 பக்கம் 412.
x சிவசூரியன் : 'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில் அருக்கனுவான் அரனுரு வல்லனோ'-அப்பர் 5.100-8.
o 'கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்'-திருவெம்பாவை-8.

711.

நட்பை வெளிக்காட்டி நண்பருக்கு வஞ்சனை செய்யும் கீழோர், போதித்த நன்றியை மறந்த கீழோர் அநுட்டிக்க வேண்டிய விரதங்களை விலக்கி அழித்த கீழோர், பெரியோரை

வைது நிந்தித்து இகழ்ந்து பேசின கீழோர், ஒருவருக்கு ஈதலைப் பார்த்து அதைத் தடை செய்த கீழோர், சத்திய வார்த்தைஎன்பதை ஒழித்த கீழோர், எப்போதும் அழிதலின்றித் தாமே)

வாழ நினைத்து அதற்காக வருந்தும் கீழோர், நீதியும் தருமமும் இல்லாத (அல்லது, அழித்த) கீழோர், குற்றமும் ஆணவமும் மிக்குள்ள கீழோர்–(பாச) வலையினால்—ஆசை வலையால்

(உலக) மாயையில் நின்று வருந்துகின்ற கீழோர், தேவர்களின் (கடவுளரின்) சொத்தை அபகரித்த கீழோர் —ஆகிய இவர்கள் யாவரும்—வேதனைக்கு இடமாகிய— யமனார் வருத்துகின்ற (நரகக்) குழியில் விழுவார்கள் ;

மராமரம் ஏழும், வலிமை மிக்க குரங்காகிய வாலியும், (அம்பரமும்) கடலும், சிறந்த பரம்பரையில் — சம்பிரதாயத்தில் வந்த ராவணனும், அவனது சதுரங்க சேனைகளிருந்த — (யானை, தேர், குதிரை, காலாட்படை இருந்த) இலங்கையும் எல்லாம் முன்பு

வலிமை குன்றி அழியும்படியும், சந்திரனும் சிவ சூரியனும் தேவர்களும் தத்தம் பதவியிலே நிலைபெற "ராமசரம்" என்னும் ராம மந்திரம் கூடிய அம்பைச் செலுத்தின சிறப்புற்ற மூர்த்தியாகிய ஸ்ரீராமபிரானது அழகிய மருகனே !

கோழி ஒலி செய்ய, அழகுமிக்க தோகையையுடைய மயில் நடனம் செய்ய மேகங்கள் தங்கிய கோபுரங்கள் எங்கும் விளங்குகின்ற மங்களகரமான வயலூர் வாசனே !

அழகிய தேவர்களும், தொண்டர்களும், மண்டலாதிபர் களும், 'வேலன்' என்கின்ற பெயரை அன்புடனே புகழ்கின்ற பெருமாளே ! கோடை எனும் பதியில் வந்துள்ள பெருமாளே ! இந்திரர்களுக்குப் பெருமாளே !

(குண்டர்கள் நமன்தன்...குழிவிழுவாரே)

712. கழல் பெற

தானத் தானத் தானத் தானத்
தானத் தானத் தனதான

தோடப் பாமற் *றேய்தப் பாணிச்
சூழ்துற் றூர்துற் †றழுவாருந்-
தூரப் போகக் கோரப் பாரச்
சூலப் பாசச் சமனாரும்;
பாடைக் கூடத் தீயிற் றேறிப்
பாழ்பட் டேபட் டழியாதே-
பாசத் தேனைத் தேசுற் றூர்பொற்
பாதத் தேவைத் தருள்வாயே;
‡ஆடற் சூர்கெட் டோடத் xதோயத்
தாரச் சீறிப் பொரும்வேலா-
oஆனைச் சேனைக் கானிற் றேனுக்
காரத் தாரைத் தரும்வீரா;
**கூடற் பாடிக் கோவைப் பாவைக்
கூடப் பாடித் திரிவோனே-
கோலச் சாலிச் சோலைச் சீலக்
கோடைத் தேவப் பெருமாளே.(சு)

---

* தோய்தற் பாணி-தோய்தப் பாணி என வந்துளதுபோலும்.

† இது ஒருவர் இறந்துபோக மாதர்கள் சுற்றி உட்கார்ந்து ஒருவர் தோள்மேலே ஒருவர் கைகோத்து அழுகின்ற வழக்கத்தைக் குறிக்கின்றது.

‡ ஆடல்—போர்; திவாகரம். x தோயம்—சமுத்திரம்.

o தேவசேனைக்கு முத்துமாலையும், வள்ளிக்குக் கடப்ப மலர் மாலையும் முருகவேள் தந்தனர் போலும்.

** கூடற்பாடி—மதுரைநகர்-கோவை.(ஆலவாய்ச் சொக்கரை) பாவை (அங்கயற்கண்ணியுடன்) கூடப்பாடின பாட்டு; இது—

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டி மாதேவி
பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூத நாயகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே"—சம்பந்தர் 3-120-1

—என வரும் தேவாரப் பாடலைக் குறிக்கின்றது.

712.

ஒவ்வொருவர் தோள்மேலும் (தப்பாமல்) சரியான தோய்தல் உற(பாணி) கையாற் பற்றிச் சூழுதல் நெருங்கிச் (சூழ்ந்திருந்து) அழுகின்றவரும்—

தூரப் போகும்படி கோரமான கனத்த சூலத்தையும் பாசக்கயிற்றையும் கொண்ட (சமன்) எமன், (ஆரும்) வந்து பொருந்துவான்—வந்து சேர்வான்—(அப்போது)

பாடை (கூட) கட்டப்பட்டு (தீயில் தேறி) நெருப்பில் கூட்டப்பட்டு பாழ் அடைந்து குலைந்து அழிந்துபோகாமல்;

(உலக) ஆசைகளிற் கட்டுண்ட என்னை (உனது) (தேசு) ஒளி, (உற்று பொன் ஆர் பாதத்தே) பொருந்தி அழகு நிறைந்ததிருவடியில்(வைத்து) சேர வைத்து அருள் புரிவாயாக—(அல்லது) தேசு (ஞானஒளி) ஞானம் உற்றூர் (உள்ளவர்)—தேசுற்றூர்-ஞானிகளின் திருவடியிற் சேர்த்து வைத்து அருள் புரிவாயாக;

(ஆடல்) போர் புரிந்த சூரன் கேடுற்று ஓட (அவன் சென்று மாமரமாய்க் கிடந்த) கடலிலே, (ஆர) மிகவும்(சீறி) கோபித்துச் சண்டை செய்த வேலனே!

(ஆனைச் சேனை) தெய்வயானையாம் தேவசேனைக்கும், (கானில் தேனுக்கு) வனத்தில் வாழ்ந்த தேன்போன்ற வள்ளிக்கும் (ஆரம்) முத்து மாலையையும், (தாரை) கடப்ப மாலையையும் தந்த வீரனே! (அல்லது) ஆனைகளின் (சேனை) கூட்டம் நிறைந்த—மிக்கிருந்த கானில்-வள்ளிமலைக் காட்டில், தேனுக்கு-தேன்போன்ற வள்ளிக்கு (ஆரத்தாரை) முத்துமாலையைத் தந்த வீரனே!

(கூடற்பாடி) கூடல் நகரில் உள்ள (கோவை) சிவபிரானைப், (பாவை) தேவி அங்கயற்கண்ணியுடன் கூட ஒன்று சேர்த்துப் பாடித் திரிந்த வள்ளலே!

அழகிய நெல்லின் பொழில்கள் உள்ள, நல் ஒழுக்கத்தார்கள் உள்ள, கோடையில் தெய்வப் பெருமாளே!

(பாதத்தே—வைத்தருள்வாயே)

713. இறத்தல் ஒழிய

தானத்த தான தந்த தானத்த தான தந்த
தானத்த தான தந்த தனதான

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக—
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
*வாயுப்பி ராண னென்று மடைமாறி;
†யோசித்த யாரு டம்பை நேசித்து ரூத லைந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக—
யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ;
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா—
வீரப்ர தாப ‡பஞ்ச பாணத்தி னல்ம யங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே;
கூசிப்பு காவொ துங்க xமாமற்றி காத ரிந்த
oகூளப்பு ராரி தந்த சிறியோனே—
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார**கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமாளே.(எ)

---

* வாயுப் பிராணன் ... யோசித்து — பிராணவாயுவைச் சுழு முனையிற் கூட்டி நிறுத்தி, (விந்து வாய்மைப் ப்ரகாசம் என்றும் நிலையாக)—ஆன்மாவைப் பரசிவனொடு கூட்டி நிலைக்கச் செயது— என்பது கருத்தாகும்.

இங்குக் கூறிய யோக நிலைக் கருத்தை—

"வாயுவினைப் பிங்கலையால் வாங்கியே சுழுமுனையில்
நேயமுற நிறுவியா ரூதார நிலையொருவி
ஆயபர சிவனொடுதன் ஆன்மாவை யோசித்தே
காயமதை மூலத்திற் கனலாலே கழித்திட்டான்"
—திருவொற்றியூர்ப் புராணம்-இலிங்கோற்பத்தி-21.

† யோசித்து—கூட்டி.

‡ பஞ்சபாணங்களின் தன்மை — பாடல் 19-பக்கம் 60 பார்க்க.

x மாமன் திகாது அரிந்த — மாமனாகிய தக்கனைத் தடை படாது தலையரிந்த—பாடல் 390-பக்கம் 484-கீழ்க்குறிப்பு.

o கூளப் புரம்—எளிய திரிபுரம்.

** கண்டன்—வீரன். "புரங்கள் மூன்றெரித்த கண்டனே" திருவிசைப்பா 13.6 'தெவ்வர்புரமெரி கண்டா'-கோயிற் புராணம் நடராச-26.

713.

கற்றுள்ள நூல்களும் மதங்களும் விளக்கம் தந்து (கொடுக்காத) சொல்லாத (விந்து)—சிவ தத்துவமாகிய உண்மை ஒளியானது என்றும் நிலைத்திருக்கவேண்டி—

(மாசிக் கபாலமன்றில்) மேகம்போலப் படர்ந்த மண்டை ஓடாகிய வெளியிடத்தும், மூக்குக்குள்ளும் ஓடுகின்ற பிராணவாயுவாகிய ஒன்றை, (மடை மாறி) அது) செல்லும் மதகு வழியை மாற்றி—

(யோசித்து) (சுழு முனையிற்) கூட்டி (அதனல்) (அயர் உடம்பை) தளர்ச்சியுறும் உடம்பின்மீது நேசம் வைத்து (உருது) சிவயோக நிலையில் நில்லாது அலைந்து, மயிர்த் தொளை எங்கும் உயிர் போகும் வண்ணம்—

(கரும) யோக சமாதி நிலையைப் பூண்டு, மோகம் என்கின்ற பேய் நிரம்பியுள்ள இந்த உலகிலே இறந்து போதல்—என்றைக்கும் நீங்காதா!

(அலை) வீசுகின்ற பயோதி கடல் (துஞ்ச) வலிமை குன்ற, பிரமன் என்கின்ற குயவன் அஞ்சி நிற்க, மேலே எதிர்த்து வந்த சூரனைச் சங்கரித்த ஒளிவேலனே!

வீரம் உள்ளன என்னும் கீர்த்தியைப் பெற்றுள்ளன வான (மன்மதனது) ஐந்து மலர்ப் பாணங்களால் (காம) மயக்கம் கொண்டு (வேடிச்சி) வள்ளியின் காலில் அன்று விழுந்து வணங்கினவனே!

(கூச்சம்) அச்சம் அடைந்து போய் ஒதுங்கும்படி, மாமனகிய தக்கனைத் தடைபடாது தலையரிந்தவரும், எளிய திரிபுரத்தைப் பகைத்து எரித்தவருமான சிவன் தந்த இளையோய்!

கோழிக்கொடி கொண்ட அழகிய குமரனே! (கண்ட) வீர! கோடைப்பதியில் வாழ்கின்ற பெருமாளே!

(மாய்வதென்றும் ஒழியாதோ)

திருப்போரூர்.

[இது செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 16-மைல். சென்னையிலிருந்து மோட்டார் பஸ்ஸில் போகலாம். சிதம்பர ஸ்வாமிகள் பாடிய "திருப்போரூர்ச் சந்நிதி முறை" இத் தலத்து மூர்த்தியின் பெருமையை நன்கு விளக்கும்.]

714. மாதர்மீதுள்ள மயக்கு அற

தனத்தா தானன தானு தானன
தனத்தா தானன தானு தானன
தனத்தா தானன தானு தானன தனதான

அனுத்தே னேர்மொழி யாலே மாமய
லுடைத்தார் போலவு மோர்நா ளானதி
லடுத்தே தூதுகள் நூறுரு னதும் விடுவார்கள்—
அழைத்தே வீடினி லேதா னேகுவர்
நகைத்தே மோடிக ளாவார் காதலொ
டடுத்தே மாமுலை மீதே மார்புற அணைவார்பின்;
குனித்தே பாகிலை யீவார் பாதியில்
கடிப்பார் வாயிதழ் வாய்நீ ரானது
குடிப்பார் தேனென நானு லீலைகள் புரிவார்கள்-
குறித்தே மாமய லாலே நீள்பொருள்
பறிப்பா ராசுகள் சூழ்மா பாதக
குணத்தார் மாதர்கள் மே*லா சாவிட அருள்வாயே;
†வனத்தே வேடுவர் மாதா மோர்மினை
யெடுத்தே தான்வர வேதான் யாவரும்
வளைத்தே சூழவு மோர்வா ளால்வெலும் விறல்வீரா-
‡மலர்த்தே னுடையி லோர்மா வானதை
பிடித்தே நீள்கர xவா தா டாழியை
மனத்தா லேவிய மாமா லானவர் மருகோனே;
சினத்தே சூரர்கள் போராய் மாளவு
மெடுத்தோர் வேல்விடு தீரா தாரணி
திருத்தோ ளாஇரு ०பாதா தாமரை முருகோனே-

* ஆசா—ஆசை. † வேடர்கள் வள்ளியை எடுத்துச் சென்ற முருகவேளை வளைத்துப் போரிட்டது — பாடல் 341-பக்கம் 354 கீழ்க்குறிப்பு. ‡ யானையை முதலைவாயினின்றும் மீட்டது —பாடல் 110 பக்கம் 262 கீழ்ச்குறிப்பு x வாதாடாழியை— வாதாட ஆழியை. ० பாதா தாமரை—பாத தாமரை.

திருப்போரூர்.

714.

(அனுத் தேன் நேர்) தேன் அனு நேர்—தேன் கூடினதற்கு ஒப்பான — பேச்சுக்களாலே மிக்க மோகம் கொண்டவர்கள் போல நடித்தும், ஒரே தினத்தில் (அடுத்தே) மேலுக்குமேலே தூதுகள் (நூருறு) அறுநூறு (அல்லது நூற்ருறு-106) விடுவார்கள்—

அழைத்துக்கொண்டு தங்கள் வீட்டுக்குள்ளே போவார்கள், சிரிப்புடனே பிணக்கத்தையும் செருக்கையும் காட்டுவர், ஆசையுடனே சமீபத்தில் தங்கள் பெரிய கொங்கையின்மேலே மார்பு பொருந்தும்படி அணைவார்கள் பின்பு—

ஆடியும் (வளைந்தும்) பாக்கு, வெற்றிலை கொடுப்பார்கள், (அங்ஙனம் கொடுக்கும்போது) பாதியிலே கடிப்பார்கள், வாய் இதழிலிருக்கும் நீரை [இதழூறலைத்] குடிப்பார் (தேனென) தேன்போலப் பாவித்துக் குடிப்பார்கள், விதம் விதமான விளையாடல்களைச் செய்வார்கள்

(குறித்தே) ஒரு காரியத்தைக் குறிப்பாக வைத்துக் கொண்டு மிக்க மோகவிளைவு ஊட்டிப் பெரும்பொருள் அனைத்தையும் பறிப்பார்கள்; (ஆசுகள்) குற்றங்களைக் கொண்ட மஹா பாவ குணத்தவர்கள் — அத்தகைய மாதர்கள்மேல் எனக்கு உள்ள ஆசையை நான் விடுவதற்கு நீ அருள்புரிவாயாக.

காட்டில் வேடர் குலத்துப் பெண்ணாகிய ஒரு (மின்னை) மின் போன்ற ஒளிகொண்ட வள்ளியை (நீ) எடுத்துப்போகவே (வேடர்) யாவரும் (உன்னை) வளைத்துச் சூழ (அப்போது) ஒரு வாள் கொண்டு அவர்களை வென்ற (ஜெயவீரனே !) பெருமை வாய்ந்த வீரனே !

மலர்களின் தேன் சொட்டும் ஓடையில் (நீர் நிலையில்) ஒரு மிருகமான யானையைப் பிடித்துக்கொண்டு ஒரு பெரிய முதலை (வாதாட) போர்செய்ய, சக்கரத்தை மனங்கொண்டு செலுத்தின (அல்லது மனோபாவனையால் அனுப்பின) சிறந்த திருமாலுக்கு மருகனே !

கோபித்துச் சூரர்கள் போர்செய்து இறக்கும்படி எடுத்து ஒரு வேலைச் செலுத்தின தீரனே! மாலை அணிந்த அழகிய தோளனே! இரண்டு பாத தாமரைகளைக் கொண்ட முருகனே !

திருத்தேர் சூழ்மதி ளேரார் தூபிக
ளடுக்கார் மாளிகை யேநீ ளேருள
திருப்போ நூறை தேவா தேவர்கள் பெருமாளே.(க)

715 சனம் அற

தனத்தா தான தந்த தனத்தா தான தந்த
தனத்தா தான தந்த தனதான

உருக்கார் வாளி கண்கள் பொருப்பார் வார்த னங்கள்
உகப்பார் வால சந்த்ர னுதனூலாம்-
உருச்சேர் நீண்ம ருங்குல் பணைத்தோ ளோதி கொண்ட
லுவப்பா மேல்வி ழுந்து திரிவோர்கள்;
அருக்கா மாதர் தங்கள் *வரைக்கே யோடி யின்ப
வலைக்கே பூணு நெஞ்ச னதிபாவி-
அசட்டால் மூடு கின்ற மசக்கால் மாயு மிந்த
அவத்தா லீன மின்றி யருள்வாயே;
எருக்கார் †தாளி தும்பை மருச்சேர் போது கங்கை
யினைச்சூ டாதி நம்பர் புதல்வோனே-
‡இருக்கா லேநி னைந்து துதிப்பார் xநாவி னெஞ்சி
லிருப்பா oயானை தங்கு மணிமார்பா;
செருக்கா லேமி குந்த கடற்சூர் மாள வென்ற
திறற்சேர் வேல்கை கொண்ட முருகோனே-

---

* வரை—இடம். "மலைவரைமாலை யழிபெயல் காலை."
—பரிபாடல் 10-1.

† தாளி—"தாளி அறுகாம் உவந்த தார்—திருவாசகம் 19-9.
'தாளி அறுகின் தாராய் போற்றி'—4-201.

‡ "இருக்காலே நினைந்து"—'ஒருக்கால் நினைத்திட் டிருக்கால் மிகுத்திட் டுரைப்பார்கள்'—திருப்புகழ்-534 பக்கம் 220.

x 'நாவிலும் நெஞ்சிலும்' இறைவன் மன்னுதல்—
"சிந்தையுள்ளும் நாவின்மேலும் (சென்னியும்) மன்னினான்"
—சம்பந்தர் I-73-9.

o யானை — தேவசேனை—"ஆனை தன் நாயக" "குறத்தி ஆனையொ டருக்கொணுமலை...பெருமாளே"—திருப்புகழ் 235,431.

அழகிய தேரும், சூழ்ந்துள்ள மதிலும், அழகு நிறைந்த கோபுரங்களும், அடுக்கு மெத்தைகள் கொண்ட மாளிகைகளும் — ஆக நீடிய அழகுகள் வாய்ந்த திருப்போரூரில் உறைகின்ற தேவனே! தேவர்கள் பெருமாளே!

(மாதர்கள்மேல் ஆசாவிட அருள்வாயே)

715

உருக்கி எடுத்த (அல்லது உருக்கு—எஃகாலாகிய) அம்பு போன்ற கண்கள், மலை போன்று நிறைந்து பெருத்த (கச்சு அணிந்த) கொங்கைகள், உகப்பு (மகிழ்ச்சி) ஆர்—நிரம்பும்-நிரம்பத்தரும், (வால சந்திரன்) இளம்பிறை ஒத்த (நுதல்) நெற்றி, நூல் போன்ற—

உரு அமைந்த நீண்ட இடை, பெரிய (அல்லது மூங்கில் அனைய) தோள், (ஓதி கொண்டல்) கொண்டல்—மேகம் போன்ற, ஓதி — கூந்தல் — இவைகளின்மேல் (உவப்பா) உவப்பாக — மகிழ்ச்சியாக (விரும்பி), மேல் விழுந்து—(மாதர்) மேல் விழுந்து திரிகின்றவர்களை—

(அருக்கா) விரும்பாத அல்லது அசட்டை பண்ணுகின்ற பொது மாதர்களின் இருப்பிடத்துக்கே (அல்லது மலையன்ன கொங்கையை விரும்பியே) ஓடி, அந்த காமசுக வலைக்கே பூண்ட மனத்தினன், மகாபாவியாகிய நான்—

(எனது) அசட்டுத் தனத்தால் மூடுகின்ற (மசக்கால்) மனந் தடுமாறுதலால் மழுங்கும் இந்த (அவத்தால்) கேட்டினால் நான் (ஈனம்) இழிவு அடையாதவாறு அருள்புரிவாயாக.

எருக்கு, (ஆர்) ஆத்தி, (தாளி) அறுகு, தும்பை, வாசனை பொருந்திய மலர்கள், கங்கையாறு இவை தமைச் சூடியுள்ள ஆதி, நம்பர்—ஆகிய சிவபிரானது புதல்வனே!

இருக்கு என்னும் மறையால் (வேத மந்திரத்தால்) நினைத்து (அல்லது இருகால்—இரண்டு திருவடிகளையே நினைந்து) போற்றி செய்வோருடைய நாவிலும் நெஞ்சிலும் இருப்பவனே! தேவசேனை அணையும் அழகிய மார்பனே!

ஆணவத்தால் மிக்கெழுந்த (கடற்சூரன்) கடலில் மாமரமாய் நின்ற சூரன் அழிய வென்ற வெற்றி வாய்ந்த வேலாயுதத்தைக் கையிற்கொண்ட முருகனே!

தினைக்கோர் காவல் கொண்ட குறத்தேன் மாது பங்க
திருப்போ நா மர்ந்த பெருமாளே. (உ)

716 தாளில் விழ

தான தானன தானன தான தானன தானன
தான தானன தானன தனதான

சீரு லாவிய வோதிம மான மாநடை மாமயில்
சேய சாயல்க லாமதி முகமானார்—
தேனு லாவிய மாமொழி மேரு நேரிள மாமுலை
சேலு லாவிய கூர்விழி குமிழ்நாசி;
தாரு லாவிய நீள்குழல் வேய ளாவிய தோளியர்
சார்பி லேதிரி வேனைநி னருளாலே—
சாம வேதியர் வானவ ரோதி நாண்மலர் தூவிய
தாளில் வீழ *வினுமிக அருள்வாயே;
காரு லாவிய நீள்புன வேடர் மால்வரை மீதுறை
காவல் மாதினொ டாவல்செய் தணைவோனே—
†காண ஆகம வேதபு ராண நூல்பல வோதிய
கார ணாகரு ணாகர முருகோனே;
போரு லாவிய சூரனை ‡வாரி சேறெழ வேல்விடு
பூப சேவக மாமயில் மிசையோனே—
போதன் மாதவன் மாதுமை பாதி யாதியு மேதொழு
போரி மாநகர் மேவிய பெருமாளே. (ங)

---

* வினு—ஆராய்ச்சி அறிவு, விவேகம்; 'வினுவோடுபாடி அருள் வழிபட' 'வினுவுடனே தொழ'—திருப்புகழ் 149, 732.

† சம்பந்தராய் வேதாகமங்களைக் கூறின ரென்பது:—

"பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுது மொழிவின்றி நவின்றனையே"
—ஆளுடை கலம்பகம் 1.

‡'வாரிசேறெழ-'கலக்கினும்தண்கடல் சேறாகாது'-என்றிருந்தும் வாரிசேறுபடும்படி வேல்கலக்கிற்று என்பது வேலின் பிரபாவத்தைக் காட்டுகின்றது. 'மகா சலதி அளறாக' என்றார் 718-ஆம் பாடலிலும்.

தினைப்புனத்துக்கு ஒரு காவல் கொண்டிருந்த [குறத்தேன் மாது) குறக்குலத்துத் தேன்போல் இனிய மங்கையின் பங்கனே! திருப்போரூர் அமர்ந்த பெருமாளே!

(ஈனமின்றி அருள்வாயே)

716.

அழகு விளங்கும் அன்னத்துக்கு ஒப்பான அழகிய நடை, நிறம் சிறந்த மயிலுக்கு ஒப்பான செம்மை வாய்ந்த சாயல், பூரணகலைத் திங்களுக்கு ஒப்பான முகம் — இவைகளைக் கொண்ட மாதர்கள்—

தேன் போன்ற அழகிய பேச்சு, மேருக்கு ஒப்பான இளமை விளங்கும் பருத்த கொங்கை, சேல்மீன் போன்ற கூரிய கண், குமிழம்பூப் போன்ற மூக்கு—

மாலை குலவும் நீண்ட கூந்தல், மூங்கில் போன்ற தோள் இவைகளை உடையவர்கள்-(இத் தகையோர்களின்) இணக்கத்திலே திரிகின்ற என்னை உனது திருவருளாலே—

சாமவேதம் வல்ல மறையோர்களும் தேவர்களும் போற்றி செய்து புது மலர்கள் தூவின (உனது) திருவடியில் விழுந்து வணங்கும் (வினை) ஆராய்ச்சி அறிவை நிரம்ப அருள் செய்வாயாக.

மேகம் உலவும் பெரிய புனத்தில் உள்ள வேடர்கள் வாழ்ந்த பெரிய (அந்த வள்ளி) மலை மேலே இருந்து (தினை) காவல் புரிந்த மாது (வள்ளிமீது) (ஆவல் செய்து-) விருப்பம் காட்டி அவளை அணைந்தவளே!

(காண) யாவரும் அறியும் வண்ணம் ஆகமம், வேதம், புராண நூல் (இவைகளின் சாரம்) பலவற்றையும் ஓதின (தேவாரமாகப் பாடி அருளிய) காரணனே — அல்லது ஆகமம், வேதம், புராண நூல் பலவும் ஓதித் துதித்துள்ள தலைவனே! மூல புருஷனே (அல்லது தலைவனே!) கருணாகரனே! முருகனே!

போர் செய்யவந்த சூரன்மீது-கடலும் சேறு படும்படி-வேலாயுதத்தை விட்ட அரசே! பராக்ரமனே! அழகிய மயில்மீது அமர்வோனே!

போதன் — மலரில் வாழ்பவன் — பிரமன், திருமால், மாது உமையை பாதி பாகத்திற் கொண்ட ஆதியாகிய சிவன்—ஆக இம் மூவரும் தொழுகின்ற பெருமாளே! திருப்போரூர் மாநகரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(தாளில்வீழ வினைமிக அருள்வாயே)

717. துதி

தனன தானன தானன தனன தானன தானன
தனன தானன தானன தனதான

திமிர மாமன மாமட மடமை யேனிட ராணவ
திமிர மேயரி சூரிய திரிலோக-

திகை ராசிவ காரண பனக பூஷண ஆரண
சிவசு தாவரி நாரணன் மருகோனே;

குமரி சாமளை மாதுமை அமலி யாமளை பூரணி
குணக லாநிதி நாரணி தருகோவே-

குருகு காகும ரேசுர சரவ ணாசக ளேசுர
*குறவர் மாமக ளாசைகொள் மணியேசம்;

பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக
†பசுர பாடன ‡பாளித xபகளேச-

பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்
பரவு oபாணித பாவல பரயோக;

---

* குறவர்மகள் ஆசைகொள் மணி"—இரு பொருள் கொண்ட அழகு—பாடல் 679 கீழ்க்குறிப்பு x போல.

† பசுரம்—'பாசுரம்' குறுகிற்று. இது 'வாழ்க அந்தணர்' எனத் துவக்கும் சம்பந்தர் திருப்பதிகம்; பாடல் 181 பக்கம் 422 கீழ்க்குறிப்பு. "பாசுரம் பாடலுற்றார் பரசமயங்கள் பாற"
—பெரிய புராணம் ஞான சம்பந்தர்-818

‡ பாளிதம் பட்டு வர்க்கம், கண்ட சருக்கரை—(பிங்கலம்). சந்தனம். பகளா-என்பது சக்தியின் ஓரம்சம் என்பர். பகளேச—சக்தீசுரன்—முருகவேள்—'கோமள சக்திப் பெருமாள்" ஆதலின் (திருப்புகழ் 158). அல்லது, பகளேச பசித பாரண—சக்திக்கு நாயகனான சிவனுக்கு உரிய திருநீற்றில் திருப்தியுள்ளவனே!

பாளித பகள—பட்டணிந்த தேவி—எனலுமாம்—
'செம்பட்டுடையாளை—அபிராமி அந்தாதி 84.

x பளகேச-என்பது பகளேச-மொழிமாற்று எனலுமாம்.

o பாணிதம்... கற்கண்டு, கருப்பஞ்சாறு.

717.

இருள் கொண்டதாம் மனத்தையும் மிக்க அறியாமையையும் கொண்டவனை என்னுடையவருத்தம், ஆணவம், என்னும் இருட்டை (அரி) விலக்கும் சூரியனே! மூவுலகங்களுக்கும் ஒளிதரும்

சூரியனே! சிவனே! மூலபுருஷனே! [பன்னக பூஷண]–நாகாபரண வேத முதல்வரான சிவகுமாரனே! ஹரி நாராயணரது மருகனே!

குமரி, (சாமளீ) சாமள நிறம் (கருமை கலந்த பச்சைநிறம்) பொருந்தியவள், மாது, உமை, (அமலி) மலமற்றவள், (யாமளீ) சியாமள நிறத்தை (பச்சை நிறத்தை) உடையவள், பூரணி (நிறைந்தவள்), குணச் செல்வி, கலைச் செல்வி, நாரணி பெற்ற தலைவனே!

குருமூர்த்தியே! குகனே! குமரேசனே! சரவணனே! (சகளேசுர) உருவத் திருமேனி கொண்ட ஈசனே! குறவர்தம் சிறந்த மகள்—வள்ளி (மீது) ஆசை கொண்ட மணியே! (அல்லது) வள்ளி (உன் மீது) ஆசை கொண்ட மணியே! நன்றாக

(பமரம்) வண்டுகள் (மொய்க்கும்) பாரமான (ப்ரபா) ஒளி வீசுகின்ற (அருண) சிவந்த (படல) கூட்டமான (வெட்சி) மாலைகளை அணிந்தவனே! (தாரக) பிரணவப் பொருளானவனே! (மாசுக) பெரிய சுகப்பொருளே! (பசுரபாடன) 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பாசுரம் பாடி (உலகுக்கு நீதி) (பாடன) உபதேசித்தவனே! (பாளித) — (செம்) — பட்டு அணிந்தவனே! (பகளேச) பளகேச (பளகம் — மலை) மலைக்கு அதிபனே — குறிஞ்சிவேந்தே!

(பசித) (பாரண) திருநீற்றில் திருப்தியுள்ளவனே! (வாரண துவச) கோழிக் கொடியனே! ஏடகமா அயில் இலைத் தன்மையைக் கொண்ட அல்லது மேன்மை கொண்ட சிறந்த வேலாயுதத்தை ஏந்திய (பாணித) கையனே! அல்லது கற்கண்டு போன்றவனே! பாடலில் வல்லவனே! மேலான யோக மூர்த்தியே!

சமப ராமத சாதல *சமய மாறிரு தேவத
சபை நாயக மாமயில் முதுவீர—
சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே (ச)

உத்தரமேரூர்.

[செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு 18-மைல்.]

718. அறிய

தனன தனன தனதான தனன தனன தனதான
தனன தனன தனதான தனதான

சுருதி மறைக ளிருநாலு திசையி லதிபர் முநிவோர்கள்
துகளி †லிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்—
சொலவில் முடிவில் முகியாத ‡பகுதி புருடர் நவநாதர்
தொலைவி லுடுவி னுலகோர்கள் மறையோர்கள்;
அரிய Xசமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
ㅇஅரியு மயனு மொருகோடி யிவர்கூடி-

---

* சமயம் ஆறிரு: உட்சமயம்6: வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் (பிங்கலம்)
சைவம், வைஷ்ணவம், சாத்தம், சௌரம், காணுபத்தியம், கௌமாரம்...என வைதிக மதம் ஆறு.

† முநிவர் எழுவர்: அகத்தியன், புலத்தியன், அங்கிரசு, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன் — (பிங்கலம்): அத்திரி, பிருகு, குச்சன், வசிட்டன், கௌதமன், காசிபன், அங்கிரசு எனவும், மரீசி, அத்திரி, அங்கிரசு, புலத்தியன், புலகன், கிரது, வசிட்டன்—எனவும், அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், ஜமதக்னி; பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன்—எனவும் கூறப்படும்.

‡ பகுதி புருடர்—பிரகிருதி புருஷர்.

X 'சமயகோடிகளெலாம்'—தாயுமானார்.

ㅇ "நூறுகோடி பிரமர்கள் நொங்கினர், ஆறுகோடி நாராயணர் அங்ஙனே"—அப்பர் 5-100-3.

(சமம்) வாதப்போர் செய்யும், பரமத (புறமதங்களான) (சமணம், புத்தம்) இவை தம் (சாதல) நசிவுக்கு (இறப்புக்குக்) காரணமா யிருந்தவனே! (சமயம் ஆறிருதேவத) ஆறு சமயங்களுக்கும் உரிய (இருதேவத) பெரிய தேவனே! அல்லது அகச்சமயம் ஆறு, புறச்சமயம் ஆறு என்ற பன்னிரு சமயங்களிலும் உள்ள தெய்வமே! சமயங்களுக்கெல்லாம் (நாயகனே) தலைவனே! அல்லது *நல்ல சமயத்தில் உதவும் நாயகனே! அழகிய மயில்மேல் வரும் (முது) பேரறிவு வாய்ந்த வீரனே!

எல்லா லோகங்களும் குற்றமற்ற எல்லா வேதங்களும் (மறைகளும்) தொழுகின்ற பெருமாளே! (சமரமாபுரி) திருப்போரூர் என்கிற பெரியநகரில் வீற்றிருக்கும் பெருமாளே!

உத்தரமேநூர்.

718.

(சுருதி) வேதங்கள், [மறைகள்] உபநிஷதம் ஆகமங்கள், [இரு நாலு திசையில் அதிபர்] எட்டுத் திக்குப் பாலகர்கள் [இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்], [முநிவோர்கள்] முநிவர்கள், குற்றமில்லாத [ரிஷிகள்] இருடிகள் ஏழுபேர் [அகத்தியன், புலத்தியன், அங்கிரசு, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்], சூரியன், சந்திரன், அக்கினி எனப்படும் மூன்று சுடர்கள்—

சொல்லுதற்கு முடிவில் முடியாத [பிரகிருதி புருஷர்] பிரபஞ்ச மாயா அதிகாரிகள், [நவநாதர்கள்]-சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அனுதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்], ஆகிய பிரதானசித்தர் ஒன்பதின்மர், தூரத்தில் உள்ள நக்ஷத்திர உலகில் உள்ளவர்கள், வேதம் வல்லோர்கள்—

அருமையான சமயங்கள் கோடிக் கணக்கானவை, தேவர்கள், சரணர்கள் [அடியார்கள், வீரசைவப் பெரியோர்கள்] அல்லது சாரணர்-[பதினெண் கணத்துள் ஒரு சாரார்] நூற்றுக் கோடிபேர், திருமால், ஒரு கோடிபேர்—இவர்களெல்லாம் கூடி—

---

* "ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாளே"—பாடல்

அறிய அறிய அறியாத அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியு மறிவூற அருள்வாயே;
வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியு மழிவாக
*மகர சலதி அளறுக முதுசூரும்-
மடிய அலகை நடமாட விஜய வனிதை மகிழ்வாக
மவுலி †சிதறி இரைதேடி வருநாய்கள்;
நரிகள் கொடிகள் பசியாற உதிர நதிக ளலைமோத
நமனும் வெருவி யடிபேண மயிலேறி-
நளின வுபய கரவேலை முடுகு முருக ‡வடமேரு
நகரி யுறையு மிமையோர்கள் பெருமாளே. (க)

719. நீனைக்க

தான தந்த தான தந்த தான தந்த தான தந்த
தான தந்த தான தந்த தனதான

தோலெ லும்பு சீந ரம்பு பீளை துன்று கோழை பொங்கு
சோரி பிண்ட மாயு ருண்டு வடிவான-
தூல பங்க காயம் வம்பி லேசு மந்து நான்மெ லிந்து
சோரு மிந்த நோய கன்று துயராற-
ஆல முண்ட கோன கண்ட லோக முண்ட மால்வி ரிஞ்ச
ரா ணங்க ளாக மங்கள் புகழ்தாளும்;

---

* சலதி அளறுக—பாடல் 716-பக்கம் 150 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

'மவுலி—தலை' 'தும்பையஞ் சிகழிகை மவுலி சூட்டினன்'
—கந்த புராணம் 4-3 24

† சிதறி-சிதற—பாடல் 404-பக்கம் 524-கீழ்க்குறிப்பு.

‡ வட மேரு நகரி—உத்தரமேரூர்.

அறிந்து பார்க்க, அறிந்து பார்க்க, அறிய முடியாத [உனது] திருவடிகளை அறிய அடியேனும் எனது அறிவுக்கு உள்ளேயே அறிய வல்லதான அறிவு ஊறும்படி நீ அருள்புரிவாயாக,

கிரெளஞ்சம் ஆதிய மலைகள் தவிடுபொடியாக, அசுரர்களுடைய ஊர்கள் அழிவுபெற, மகர மீன்கள் உள்ள கடல் சேறுகப், பழைய சூரனும

அழிவுற, பேய்கள் நடனம் செய்ய, விஜயலக்ஷ்மி மகிழ்ச்சிகொள்ள, [அரக்கர்களுடைய] தலைகள் சிதறிவிழ, உணவுதேடி வந்த நாய்களுடன்,

நரிகளும, காக்கைகளும், பசி நீங்க, ரத்த ஆறு அலைமோதி ஓட, யமனும் அச்சமுற்று [உனது] திருவடியைத் துதிக்க, மயிலில் ஏறி—

தாமரை போன்ற [உபயம்] மகிமை வாய்ந்த திருக்கரத்து வேலாயுதத்தை விரைவிற் செலுத்தின முருகனே! [வட மேருநகரி] உத்தராமேரூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! தேவர்கள் பெருமாளே!

[அறியும் அறிவூற அருள்வாயே]

719.

தோல், எலும்பு, (சீ) சீழ், நரம்பு, பிளை, நெருங்கியிருக்கும் கோழை, மேலெழும் ரத்தம் — இவை ஒரு பிண்டமாய் உருண்டு ஒரு வடிவு ஏற்பட்டு—

கண்ணுக்குப் புலனுய (பருத்த), (பங்க) பாவத்துக்கு இடமான, (காயம்) உடலை வீணுகச் சுமந்து நான் மெலிவுற்றுத் தளருகின்ற இந்த, (நோய்) பிறவிநோய் விலகி என் துயரம் முடிவுபெற—

விஷத்தை உண்ட தலைவன் (சிவன்), (அகண்ட லோகம் உண்ட மால்) விரிந்த (அல்லது எல்லா) உலகங்களை(யும்) உண்ட திருமால், பிரமன், வேதங்கள், ஆகமங்கள் — இவையெலாம் — புகழ்கின்ற உனது திருவடிகளையும்—

ஆன னங்கள் மூவி ரண்டு மாறி ரண்டு தோளு மங்கை
யாடல் வென்றி வேலு மென்று நினைவேனோ ;
வால சந்த்ர சூடி சந்த *வேத மந்த்ர ரூபி யம்பை
†வாணி ‡பஞ்ச பாணி தந்த முருகோனே-
xமாயை யைந்து வேக மைந்து பூத மைந்து நாத மைந்து
வாழ்பெ ருஞ்ச ராச ரங்க ளுறைவோனே ;
xவேலை யன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேடர் மங்கை யோடி யஞ்ச அணைவோனே-
வீர மங்கை ०வாரி மங்கை பாரின் மங்கை மேவு கின்ற
மேரு மங்கை யாள வந்த பெருமாளே. (உ)

---

* வேதமந்த்ர ரூபி ..'அருமறைக்கு முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்வி'—"எழுதா மறையின் ஒன்றும் அரும்பொருளே" —அபிராமி அந்தாதி 10, 55.

†வாணி—கா என்னும் வாணியையும், மா என்னும் இலக்குமியையும் அக்ஷத்தினின்றும் தோற்றுவித்தும், அக்ஷமாகக் கொண்டும் "காமாக்ஷி" எனப் பெயர் போந்தது (அக்ஷம்-கண்)

"தாமரைத் தவிசின் மாதும்...வாணியுந் தன் கண்ணென உடைய பச்சைக் கவின்பெறும் உமைமாது"-வீரசிங்காதன புராணம். பாடல் 653-பக்கம் 540 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

‡ பஞ்சபாணி என்பது பார்வதிக் கொருபெயர், தேவிக்கு ஆயுதம் பஞ்சபுட்ப பாணம் ஆதலின்; 'தாமங் கடம்பு, படை பஞ்ச பாணம்'—அபிராமி அந்தாதி-73.

x மாயை ஐந்து : தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம், (1) ஜீவ சைதன்னியத்தை மறைக்கையால் தமம், (2) ஜக ரூபமான அந்நிதாத் தோற்றத்துக்குக் காரணமாகையால் மாயை, (3) விபரீத ஞானம் உண்டாக்குகையால் மோகம், (4) உணர்வு அழிக்கையால் அவித்தை, (5) சத்து ரூபத்துக் கந்நியமாகையால் அநிர்தம்,

வேகம் ஐந்து : இது காற்றின் ஐந்து குணங்களை குறிக்கின்றது போலும். அவைதாம்—போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம் என்பன; வேகம்—விரைந்தகதி.

'வேகம்'—சத்தியெனக் கொண்டு சிற்சத்தி, பராசத்தி இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி இவைகளைக் குறிக்கின்றன எனக்கொள்ளலாம். உயிர்க்கு ஒளியாக நிற்பது சிற்சத்தி, பிராணன் முதலிய வாயுவாக நிற்பது பராசத்தி, பஞ்சபூதமாக நிற்பது இச்சா சக்தி, ஐம்பொறி யுணர்ச்சியாக நிற்பது ஞானசத்தி, மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியா சத்தி இனி ஐம்புலன்களை

(தொடர்ச்சி பக்கம் 159 பார்க்க.)

திருமுகங்கள் ஆறினையும், பன்னிரண்டு தோள்களையும், அழகிய திருக்கரத்தில் உள்ள போரில் வெற்றி கொள்ளும் வேலாயுதத்தையும் என்று நான் தியானிப்பேனோ (அல்லது) என்றும் — எப்போதும் நினைக்கமாட்டேனோ! (நினைக்க வேண்டும் என்றபடி),

(பால சந்திரனை) இளம் பிறையைச் சூடியுள்ள சிவனும், அழகிய (அல்லது சந்த சுரங்கள் கொண்ட) வேத மந்த்ர உருவத்தளான அம்பிகை, (வாணி) கலைமகளை ஒரு கூறாக உடையவள், ஐந்து மலர்ப் பாணங்களைப் படையாகக் கொண்டவள்—பார்வதி பெற்ற குழந்தையே!

ஐந்து மாயை, ஐந்து வேகம், ஐந்து பூதம், ஐந்து நாதம், வாழ்கின்ற பெரிய (சராசரங்கள — இயங்கு திணை—நிலைத்திணைப் பொருள்கள் — அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள்) இவைகள் எல்லாவற்றிலும் உறைபவனே!

வேலை—வேண்டிய வேளையில் — சமயத்தில் — அன்பு மிக்கு வந்த (ஒற்றைக் கொம்புடைய விநாயக மூர்த்தியாம் யானையைக் கண்டு வேடர்பெண் — வள்ளி ஓடி அஞ்சி வந்தபோது (அவளை) அணைந்தவனே!

(வீர மங்கை) வீரலக்ஷ்மி, வாரி மங்கை-பாற்கடலில் தோன்றிய லக்ஷ்மி, (பாரின் மங்கை) பூதேவி—இவர்கள் (மங்களமாக) விளங்கும் — மேருமங்கை எனப்படும் உத்தரமேரூரில் ஆட்சி புரியும் பெருமாளே,

(தாளும், ஆனனங்களும், தோளும், வேலும்-நினைவேனோ)

வேகமாகச் செலுத்தும் சுவை, ஒளி, ஊறு ஒலி, நாற்றம் எனவும் கொள்வர்; மனோவேகம், வாயுவேகம், ஒலிவேகம், ஒளிவேகம், அசுவவேகம். அசுவகதி 5:—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வியாக்ரகதி, விடபகதி (அல்லது சரகதி, சசகதி) எனவும் கூறலாம். பஞ்ச தாரை--இவை விக்கிதம், வற்கிதம். உபகண்டம், சவம், உபசவம், அல்லது மாசவம் என்ற ஐவகைக் குதிரைநடை

—திருவாலவா—28.47

பூதம் ஐந்து: நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

நாதம் ஐந்து: (இது சத்தம் — ஓசை 5) தோற் கருவி, துளைக் கருவி, நரப்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி என்பன. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'—அப்பர் 6-38-1.

'நாதத்தினி லாடி...தேவர் பிரானே'—திருமந்திரம்-2756.

x வேலை—வேளை: o வாரி கடல், நீர்: வாரிமங்கை—கங்கை எனலுமாம்.

720. கண் பார்த்தருள

தானனத் தனதான தானனத் தனதான
தானனத் தனதான தனதான

நீள்புயற் குழல்மாதர் பேரினிற் க்ருபையாகி
நேசமுற் றடியேனு நெறிகேடாய்-
*நேமியிற் பொருள்தேடி யோடியெய்த் துளம்வாடி
நீதியிற் சிவவாழ்வை நினையாதே;
பாழினுக் கிரையாய நாமம்வைத் தொருகோடி
பாடலுற் றிடவேசெய் திடுமோச-
பாவியெப் படிவாழ்வ னேயர்கட் குளதான
பார்வைசற் றருளோடு பணியாயோ;
ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
†மாகமப் பொருளோரு மனைவோரும்-
ஆனைமத் தகவோனும் ஞானமுற் றியல்வோரு
‡மாயிரத் திருநூறு மறையோரும்;
வாழுமுத் தாமேருர் மேவியற் புதமாக
வாகுசித் திரதோகை மயிலேறி-
மாறெனப் பொருசூர னீறெழப் பொரும்வேல
மான்மகட் குளனான பெருமாளே. (௩)

721. அருள் பெற

தான தந்தன தத்தா தத்தன
தான தந்தன தத்தா தத்தன
தான தந்தன தத்தா தத்தன தனதான

மாதர் கொங்கையில் வித்தா ரத்திரு
மார்பி லங்கியல் முத்தா ரத்தினில்
வாச மென்குழ லிற்சே லைப்பொரும் விழிவேலில்-

---

* நேமி—பூமி (திவாகரம்).

† ஆகமப் பொருளோர்: ஆகமம் — முதல்வன் வாக்கு; சிவனிடமிருந்து தோன்றிய காமிகம் முதல் வாதுளம் வரை உள்ள ஆகமங்கள் இருபத்தெட்டு.

‡ உத்தரமேரூரில் 'ஆயிரத் திருநூறு மறையோர்' என்றார். இவ்வாறே நூல்களிற் கூறப்படுவன:—தில்லையில் மூவாயிரவர், திருப்பெருந்துறை முந்நூற்றுவர், திரு ஆக்கூர் ஆயிரவர், திருவீழி மிழலை ஐந்நூற்றுவர், †சீகாழி நானூற்றுவர், மதுரையில் 'நண்ணுபுகழ் மறையோர் நாற்பத்தெண்ணாயிரவர்'—(தக்கயாகப்பரணி-பக்கம்-92, †ஆளுடைய பிள்ளை-உலா)

720.

நீண்ட, மேகம்போல இருண்ட, கூந்தலை உடைய மாதர்களின் மேல் அன்பு வைத்து நட்புவைத்து அடியேனும் நன்னெறியை இழந்தவனாகி—

பூமியில் பொருள் தேடுவதற்காக ஓடி, இளைத்து, உள்ளம் சோர்ந்து, நீதியான சிவவாழ்வை-மங்களகரமான வாழ்க்கையை நினையாமல்—

பாழுக்கே உணவாயிற்று என்று சொல்லும்படியாகப், பேர்களை வைத்து ஒரு கோடிக் கணக்கான பாடல்களை அமையும்படியாக இயற்றுகின்ற மோசக்கார

பாவியாகிய நான் எங்ஙனம் வாழ்வேன்! உனது அன்பர்களுக்கு என்று நீ வைத்துள்ள பார்வையைக் (கிருபாகடாக்ஷத்தை) கொஞ்சம் திருவருள் வைத்து (எனக்கும்) பாலிக்க மாட்டாயோ!

கடலிலே பள்ளி கொண்டுள்ள திருமாலும், சிறந்த மலராம் தாமரையில் வீற்றிருக்கும் பிரமாவும், சிவாகமத்துக்கு உரிய மூல முதல்வராம் சிவபிரானும் பிறர் யாவரும்,

ஆனை மத்தகம் கொண்ட கணபதியும், ஞானம் அடைந்து உலவும் ஞானிகளும், ஆயிரத் திருநூறு மறையவர்களும்

வாழ்கின்ற உத்தரமேரூரில் வீற்றிருந்து அற்புதமாக அழகிய விசித்திரமான கலாபத்தைக் கொண்ட மயிலில் ஏறி—

பகைவன் எனச் சண்டை செய்ய வந்த சூரன் தூளாகச் சண்டை செய்த வேலனே! மான்மகள் வள்ளிக்கு உரியவனால் விளங்கி இருப்பவனாகிய பெருமாளே!

(பார்வைசற் றருளோடு பணியாயோ)

721.

மாதர்களுடைய கொங்கையிலும், விரிந்த அழகிய மார்பில் விளங்குந் தன்மையை உடைய முத்துமாலையிலும், நறுமணம் உள்ள மெல்லிய கூந்தலிலும், சேல்மீன் போன்ற கண்ணாகிய வேலிலும்—

மாமை யொன்றும லர்த்தாள் வைப்பினில்
வாகு வஞ்சியில் மெய்த்தா மத்தினில்
வானி ளம்பிறை யைப்போல் நெற்றியில் மயலாகி;

ஆத ரங்கொடு கெட்டே யிப்படி
ஆசை யின்கட லுக்கே மெத்தவும்
ஆகி நின்றுத வித்தே நித்தலும் அலைவேனோ;

ஆறி ரண்டுப னைத்தோ ளற்புத
*ஆயி ரங்கலை கத்தா மத்திப
ஞயு முன்றலை கிற்பே னுக்கருள் புரிவாயே;

†சாத னங்கொடு தத்தா மெத்தென
வேந டந்துபொய் பித்தா வுத்தர
மேதெ னும்படி தற்காய் நிற்பவர் சபையூடே;

தாழ்வில் சுந்தர னோத்தா னெற்றிகொள்
நீதி தந்திர நற்சார் புற்றருள்
சால நின்றுச மர்த்தா வெற்றிகொ ளரன்வாழ்வே;

வேத முங்கிரி யைச்சூழ் நித்தமும்
வேள்வி யும்புவி யிற்று பித்தருள்
வேர்வி யும்படி செய்த்தேர் மெய்த்‡தமிழ் மறையோர்வாழ்-

மேரு மங்கையி லத்தா வித்தக
வேலொ டும்படை குத்தா வொற்றிய
வேடர் மங்கைகொள் சித்தா பத்தர்கள் பெருமாளே. (சு

* ஆயிரங்கலை கத்தன்—சகலகலா வல்லவ மூர்த்தி-பாடல் 320 பக்கம் 296-கீழ்க்குறிப்பு.

† சுந்தரர் சரிதம்—பாடல் 545, பக்கம் 242 கீழ்க்குறிப்பு.

‡ தமிழ் மறையோர் — 'செந்தமிழர் தெய்வமறை நாவர்'... அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனார்...வேதியர் விரும்புபதி வீழிநகரே"—சம்பந்தர்-3.80.4 —என வருவதும் காண்க.

(மாமை) அழகு பொருந்திய மலருக்கு ஒப்பான பாதமாகிய இடத்திலும், (வாகு) அழகிய, (வஞ்சிக்கொடி போன்ற இடையிலும், உடலில் அணிந்துள்ள (தாமத்தினில்) மாலையிலும், வானில் உள்ள இளம் பிறைக்கு ஒப்பான நெற்றியிலும் மோகங் கொண்டவனாய்ப்-

பற்று வைத்துக் கெட்டுப்போய், இவ் வண்ணம் ஆசைக் கடலுக்கே மிகவும் ஈடுபட்டவனாய் நின்று தவி தவிப்புற்று தினந்தோறும் அலைச்சல் உறுவேனோ!

பன்னிரண்டு பெருமை வாய்ந்த தோள்களை உடைய அற்புதனே! ஆயிரக் கணக்கான கலைகளுக்குத் தலைவனே! (மத்திபனாய்) சாமானிய மனிதனாய்த் திரிந்து அலைகின்ற எனக்கு அருள்புரிவாயாக.

(சாதனம் கொடு) ஆவணச் சீட்டு ஒன்று எடுத்துக் கொண்டு (தத்தா மெத்தெனவே) முதுமையால் மிகவும் தத்தி தத்தி நடந்து சென்று, "பொய் பேசும் பித்தனே—மறுமொழி என்ன பேசுவாய்" என்னும்படி யெல்லாம் (சுந்தரர்) தம்மைக் (காயும்படி) கடிந்து கூறும்படி (திருமணப் பந்தலின் கீழ்) நின்றவராய்ச்-சபை நடுவிலே—

தாழ்வு இல் சுந்தரனை — (தம்மாட்டு) வணக்கம் இல்லாத (அல்லது மேலான) சுந்தரனை [சுந்தர மூர்த்தியை]த் தான் [ஒற்றி கொள்] தமக்கு அடிமையாக அனுபவிக்கும் பாத்தியதையை [வழக்காடி] அடைய நீதி முறையாலே நல்ல துணைக் காரணங்களைக் கொண்டு கிருபை மிகவும் கொண்டு கிருபை மிகவும் வைத்து சாமர்த்தியமாக வெற்றிபெற்ற சிவனாரது செல்வனே!

வேதப் பயிற்சியையும், கிரியை மார்க்கமாக நாள்தோறும் யாகங்கள் செய்வதையும் பூமியிலே நிலையாக ஏற்படுத்தி (இறைவனது) அருள் வேரூன்றி விழும்படி—அருள் வேர் நன்கு பதியும்படி (செய்த்தேர்) (செய்த-ஏர்)-செய்த அழகிய உண்மையாளராகிய செந்தமிழ் அந்தணர்கள் வாழ்கின்ற

உத்தரமேநூர் என்னும் தலத்தில் அத்தனே! அதிசயத் தன்மை உடையவனே! வேற்படை முதலிய படை கொண்டு குத்துதலும் அடித்தலும் செய்யும் வேடர்களுடைய மகள் (வள்ளியை)க் கொண்ட மனத்தினனே—வள்ளி தன் மனத்திற் கொண்ட சித்த மூர்த்தியே! பக்தர்கள் பெருமாளே!

(அலைகிற்பேனுக்கு அருள் புரிவாயே)

மதுராந்தகம்.

[ரெயில்வே ஸ்டேஷன். செங்கற்பட்டுக்குத் தெற்கு 15-மைல்]

---

722. திருவடியைப் பற்ற

தனதாந்த தத்த தனன தத்தத்
தந்த தத்த தந்த தனதான

குதிபாய்ந்தி ரத்தம் வடிதொ ளைத்தொக்
கிந்த்ரி·யக்*கு ரம்பை விளைகூர் தூர்-
குணபாண்ட முற்ற கிலமெ னக்கைக்
கொண்டி ளைத்த யர்ந்து சுழலாதே ;
உதிதாம்ப ரத்தை †யுயிர்கெ டப்பொற்
கிண்கி ணிச்ச தங்கை விதகீத-
உபயாம்பு யப்பு ணையையி னிப்பற்
றுங்க ருத்தை யென்று தருவாயே :
கதைசார்ங்க கட்கம் வளைய டற்சக்
ரந்த ரித்த கொண்டல் மருகோனே-
கருணுஞ்ச னக்க மலவி ழிப்பொற்
பைம்பு னக்க ருப்பின் மணவாளா ;
மதனுந்த கர்க்கு மகவெ னப்‡பத்
மந்த னிற்பி றந்த குமரேசா-
மதுராந்த கத்து Xவடதி ருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே. (க)

---

* "பொருந்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா"—அப்பர் 4—42—1.

† உயிர் கெட—ஆன்மத்துவம் நீங்க.

‡ முருகவேள் தாமரையிற் பிறந்தது :—திருப்புகழ் 133, 150, 1005, 1152, 1267, 316-ன் கீழ்க்குறிப்பு x (பக்கம் 284) பார்க்க.

x மதுராந்தகத்தில் 'வடதிருச்சிற்றம்பலம்' எனப் பெயர் வழங்கின முருகனுலயம் ஒன்று அருணகிரியார் காலத்து இருந்தது போலும்.

மதுராந்தகம்.

722

ருதித்துப் பாய்ந்து ரத்தமானது வடிகின்ற தொளைகளை உடையதும், (தொக்கு) தோலொடு கூடியதும், (இந்திரியம்) ஐம் பொறிகளுடன் கூடியதுமான (குரம்பை)- உடல்; வினை மிகுந்து (தூர்) நிரம்பியுள்ள—

(குணபாண்டம்) குணங்களுக்கு கொள்கலமான உடம்பு—இதனை (உற்று) அடைந்து அகிலமெனக் கைக்கொண்டு- இந்த உடம்பே (உடம்பைப் போற்றுதலே) எல்லாம் — சகல செல்வமாம் என மேற்கொண்டு — அதனால் இளைத்துச் சோர்வுற்றுத் திரியாமல்—

(போற்றித் துதிக்க மனத்தில்) உதிக்கின்றதாகும் (பரத்தை) பரம்பொருளை, (உயிர்கெட) ஆன்மத்துவம் நீங்க, அழகிய கிண்கிணி, சதங்கை இவை விதம் விதமாக கீதங்களைச் செய்யும்,

(உபய அம்புய) இரண்டு தாமரையன்ன (உனது) திருவடிகளாம் (புணையை) தெப்பத்தை — இனியேனும் பற்றி உய்யும் கருத்தை (எனக்கு) எப்போது தருவாய்!

கதை, சாரங்கம், வாள், சங்கு, வலிமை வாய்ந்த சக்கரம் எனப்படும் பஞ்சாயுதங்களைத் தரித்துள்ள மேக நிறத்துத் திருமாலின் மருகனே!

கருணையும் (அஞ்சனம்) மையும் கொண்ட தாமரை யனைய கண்களைக் கொண்ட அழகிய பசிய தினைப் புனத்திருந்த கரும்புபோல இனித்த வள்ளியின் மணவாளனே!

மன்மதனுக்கு யமனாயிருந்த-(மன்மதனை எரித்தழித்த) சிவபிரானுக்குக் குழந்தையாகத் தாமரையிற் பிறந்து விளங்கின குமரேசனே!

மதுராந்தகத்தில் வட திருச்சிற்றம்பலத்தில் அமர்ந்து விளங்கும் பெருமாளே!

(உபயாம்புயப் புணையைப் பற்றுங் கருத்தைத் தருவாயே)

723. உபதேசம் பெற

தனதாந்த தத்த தனன தத்தத்
தந்த தத்த தந்த தனதான

சயிலாங்க னைக்கு ருகி*யி டப்பக்
கங்கொ டுத்த கம்பர் வெகுசாரி-
சதிதாண்ட வத்தர் சடையிடத்துக்
கங்கை வைத்த நம்பர் உரைமாளச்;
செயல்மாண்டு சித்த மவிழ நித்தத்
த்வம்பெ றப்ப கர்ந்த வுபதேசஞ்-
சிறியேன்த னக்கு முரைசெயிற்சற்
றுங்†கு நுத்து வந்த றையுமோதான்;
அயில்வாங்கி யெற்றி யுததி யிற்கொக்
கன்ற னைப்பி ளந்து சுரர்வாழ-
‡அகிலாண்ட முற்று நொடியி னிற்சுற்
றுந்தி றற்ப்ர சண்ட முழுநீல;
மயில்தாண்ட விட்டு xமுதுகு லப்பொற்
குன்றி டித்த சங்க்ர மவிநோதா-
மதுராந்த கத்து வடதி ருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே, (உ)

---

* பார்வதி சிவனது இடது பாகத்தைப் பெற்றது:- பாடல் 301 பக்கம்-246, பாடல் 548 பக்கம் 248 கீழ்க்குறிப்புக்களைப் பார்க்க.

† குருத்துவம் குறையுமோதான்—என முருகவேளை வினவுதல் அவரொடு "அசதியாடுதல்" ஆகும், அசதியாடுதல் — பரிகசித்தல்.

‡ சூரனைச் சங்கரித்த பின் மயில்மீது அகிலாண்டங்களைச் சுற்றினது :—பாடல் 267, பக்கம் 164 கீழ்க்குறிப்பு ‡ பார்க்க.

x மேருவைச் செண்டா லடித்தது — திருப்புகழ் 2, பக்கம் 23 கீழ்க்குறிப்பு. பொற்குன்று—கிரெளஞ்சம் எனவும் கொள்ளலாம். "சொன்ன (சொர்ண) கிரெளஞ்சகிரி"—கந்தரலங்காரம் 19; 'கனகிரெளஞ்சம்' திருப்புகழ் 454. 'குருகு பெயர் பெற்ற கனவடசிகரி'—வேடிச்சி காவலன் வகுப்பு (கனம்--பொன்)

723.

(சயில அங்கனைக்கு) மலைமகளாகிய பார்வதிக்கு (உருகி) அவள் பக்திக்கு உருகித் (தமது) இடது பாகத்தைத் தந்தருளின் (கம்பர்) சிவனார், பலவிதமான (சாரி) வட்டமாய் ஓடுதல் முதலான கூத்துக்களையும்

(சதி) தாள ஒத்துக்களையும் கொண்ட ஆடலை உடையவர், சடையிடத்திலே கங்கையை வைத்துள்ள (நம்பர்) பெருமான் ஆகிய சிவபிராற்கு—வாக்கு அழியவும்.

செயல் அழியவும், மனம் அழியவும், (நித்தத்துவம்) என்றும் உளதாம் தன்மையைப் பெற — நீ செய்த உபதேசத்தைச்

சிறியவனாகிய எனக்கும் நீ சொல்லி உதவினால் கொஞ்சமேனும் உனது குருத்துவம் குருமூர்த்தியாம் பதவி குறைந்துவிடுமா என்ன!

வேலாயுதத்தை எடுத்துச் செலுத்திக் கடலிலிருந்த மாமரமாய் நின்ற சூரனைப் பிளந்து, தேவர்கள் வாழ—

சகல அண்டங்கள் முழுமையும் ஒரு நொடிப் போதில் சுற்றின வலிமை வாய்ந்த, கடுமை கொண்ட, முழு நீல நிறங்கொண்ட —

மயிலைப் பாய்ந்தோடச் செய்தவனும், பழைய சிறந்த பொன்மயமான (குன்று) மேருமலையை (இடித்த)செண்டால் அடித்தவனுமான (சங்கிராம-விநோதா) போர்விநோதனே! (போர் விளையாடலை உடையவனே)!

மதுராந்தகத்தில் வட திருச்சிற்றம்பலம் என்னும் திருக் கோயிலில் வீற்றிருக்கும் பெருமாளே!

(குருத்துவங் குறையுமோ தான்)

724. திருவடியைப் பெற

தனதாந்தன தானன தந்தன
தனதாந்தன தானன தந்தன
தனதாந்தன தானன தந்தன தந்ததான

*மனைமாண்சுத ரான சுணங்கரு
†மனம்வேந்தினை யான தனங்களு
மடிவேன்றனை யிணை அணங்குறு வம்பராதி-
மயமாம்பல வான கணங்குல
மென‡ப்ராந்தியும் xயானென தென்றுறு
வனவாம்பிர மாத குணங்குறி யின்பசார :
இனவாம்பரி தான்ய தனம்பதி
விடஏன்றெனை oமோன தடம்பர
மிகுதாம்பதி காண கணங்கன வும்பரேசா-
இடவார்ந்தன**சானு நயம்பெறு
கடகாங்கர சோண வியம்பர
இடமாங்கன ††தாளரு ளும்படி யென்றுதானே ;

---

* மனை, மக்கள் இவரால் சோர்வு உண்டாதல் :—

'மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும் வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே'—அப்பர் 4-71-1.

† தனங்கள் (செல்வம்) அல்லலிற் படுத்தி மனத்தை வேகச் செய்யும் : 'செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்'-திருவாசகம் போற்றித்திரு 39,

‡ ப்ராந்தி — மாயை — மயக்கம் — "மனை மக்கள் சுற்றம் எனுமாயாவலை"—திருப்புகழ் 13?1.

x 'யான் எனது' — பிரமாத குணம் — எனெனில் இவை அற்றால்தான் உண்மைப் பொருள் விளங்கும்.

"யான்தான் எனுஞ்சொல் இரண்டுங் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றாது சத்தியம்"—கந்தர் அலங். 95

o மோன நிலையில்தான் கடவுளைக் காண இயலும் :—

"நினது கழல் பெற மவுன எல்லை குறிப்ப தொன்று புகல்வாயே"—என்றார் பிறிதோரிடத்து (திருப்புகழ் 660)

** முருகவேளின் விசுவரூப நிலையில் தேவர் கூட்டம் அவருடைய "சானு"வில் (முழந்தாளிற் காணப்பட்டது).

'சானு வடிவமை முழந்தாள் விஞ்சை வானவராதியானோர்'—கந்த புராணம் 4-13-424,

†† தாளே—இறைவனுடைய அங்கங்களில் மேலான தென்பதற்கு— (தொடர்ச்சி பக்கம் 169 பார்க்க).

724.

மனைவி, பெருமை பொருந்திய மக்கள் ஆகிய (சுணங்கரும்) சோர்தல் தருபவர்களும், (மனம் வேகும்) மனம் நொந்து வெந்து போதற்குத் (திணையான) இடந் தருவதான (தனங்களும்) செல்வங்களும், இறந்து போகின்ற எளியேனைப் பெற்ற (அணங்கு) தெய்வத்துக்கு ஒப்பான தாய், (உறு வம்பர் ஆதி) உற்றாராய்ப் பயனற்றவர்களான பிறர் - முதலானோர் தம்—

மயமான பலவகைப்பட்ட கூட்டத்தார், குலத்தார், என்கின்ற (பிராந்தியும்) மயக்கமும்; 'யான்', 'எனது' என்று உறுவனவாம் — கூடியுள்ளனவாம், (பிரமாத) அளவு கடந்து செல்லும் — குணமும், நோக்கமும்; இன்பத்துக்கும், (சாரம்) இனிமைக்கும்—

(இன) தக்கதாகப் பொருந்திய (வாம்பரி) வாவும்பரி— தாண்டிச்செல்லும் குதிரைகள், தான்யங்கள், தனங்கள் (சொத்துக்கள்), (பதி) இருக்கும் ஊர் — இவையெலாம் விட்டு நீங்கும்படி, என்னை (என்று) என்றுகொண்டு (மோனதடம்) மோன நிலையையும் (பர மிகுதாம் பதிகாண) மேம்பட்டு மிக்கு நிற்கும் பதி — தெய்வத்தையும்—நான் கண்டு களிக்கக்—கூட்டமான பெருமை தங்கிய (உம்பர்) தேவர்கள் ஏசுதலின்றி (நன்கு) பொருந்திய

இடங்கொண்டு நிறைந்துள்ள (சானு) முழந்தாள்), (நயம் பெறு) நல்லதான கடகம் அணிந்துள்ள கரம், (சோண) சிவந்த (வியம்) உடல், (இவைகளுக்கு) மேலான இடமான பெருமை பொருந்திய (உனது) திருவடியை நீ (எனக்கு) அருளும் (படி), நிலை அல்லது வாய்ப்பு என்று தானோ) என்றைக்கோ! எந்தத் தினத்திலோ—அறிகிலேனே!

'நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை"—பரிபாடல் 4-62 பாடல் 691 பக்கம் 94 பார்க்க.

இனி:— "இடவார்ந்தன சானு நயம்பெறு ... கரம்" என்பதற்குக் "கீழே தொங்கப்போட வார்ந்தன---நீண்டனவாகிய, சானு நயம்பெற முழங்காலினோடு நட்புப் பெறுகின்ற, கடக அம் கர—வளைகளையுடைய அழகிய திருக் கரங்களை உடையவனே (ஆஜானு பாகுவே என்றபடி); சோண—சிவப்பான, இயம் பரவு இடமாம்—வாத்தியங்களோடு புகழ்வதற்கு இடமாகிய, கனதாள்... பெருமையை உடைய திருவடிகளை" எனப் பொருள் காண்பர் வாகீச கலாநிதி பிரமஸ்ரீ கி. வா. ஜகந்நாத ஐயரவர்கள்.

தனதாந்தன தான தனந்தன
தெனதோங்கிட தோன துனங்கிட
தனவாம்பர மான நடம்பயில் எம்பிரானார்-
தமதாஞ்சுத *தாபர சங்கம
மெனவோம்புறு தாவன வம்படர்
தகு†தாம்பிர சேவித ரஞ்சித வும்பர்வாழ்வே;
முனவாம்பத‡மூடிக வந்தன
முயல்வான்xபிடி மாடிமை யைங்கரர்
oமுகதாம்பின மேவுறு சம்ப்ரம **சங்கணாறு-
முககாம்பிர மோடமர் சம்பன
மதுராந்தக மாநக ரந்திகழ்
††முருகாந்திர மோடம ரும்பர்கள் தம்பிரானே. (௩)

---

* "தாபர சஙகமம் என ஓம்புறு தாவல்; நவம் படர்தகு தாம்பிர சேவித"-எனப் பிரித்துத் தாவரமும் சங்கமும் என்று பாதுகாத்தற் குரிய பரந்த பொருள்களிலும், புதுமை பரவுதற்கு எற்ற செப்பு விக்ரகங்களிலும் சேவிப்பதற்கு உரியவனே"—எனப் பொருள் காண்பர்—வித்துவான் பிரமஸ்ரீ கி. வா ஜகந்நாத ஐயரவர்கள்,

† தாம்பிர சேவித—தாம்பிரம்-சிவப்பு, இது செஞ்சுட்டை உடைய சேவலை ஆகு பெயராய்க் குறிக்கின்றது. தாம்பிர சூடம் என்பது சேவல். வம்பு அடர் தகு தாம்பிரம் என்பது புதிதாக (இறைவனை) நெருங்கித் தக்கநிலையை அடைந்த சூரனது ஒருகூறாகிய சேவல்;'தாம்பிர சேவித'-என்றது முருகவேளின்சொற்படி(சேவகம்) பணியைச் சேவல் செய்ததைக் குறிக்கும், சேவலை நோக்கி முருகவேள் 'நீ கொடியாகி நமது தேரை அலங்கரிப்பாயாக' என்றார்: சேவல் அங்ஙனமே செய்தது,

"நீ கொடியே ஆகி... நமதுதேரின் மேவினை ஆர்த்தி என்னத் தக்கதே பணியிதென்று எழுந்தது...விண்மேல்": செந்நிறங் கெழீஇய சூட்டுச் சேவலங்கொடி யொன்றாகி"...தேர்மீப்போய்... உருமேறுட்க... ஆர்த்து மற்றவண் உற்றதன்றே"—கந்த புராணம், 4-13-497, 498 பின்னும் ஒருமுறை சேவல் முருகவேளின் பணியை எற்றுச் செய்தது;—வள்ளியைக் களவாடிச் சென்ற முருகனை வேடர்கள் சூழ்ந்து அம்பு வீச, இறைவன் ஆணையை அறிந்து சேவல் ஒரு ஆர்ப்புக் கொள்ள வேடர்கள் மாண்டு வீழ்ந்தார்கள்,

'எம்பிரான் அருளால் பாங்கர்.. சேவல் ஆர்ப்புக் கொள்ள... யாரும்.. மாண்டு.. புவியில் வீழ்ந்தார்"—கந்த புராணம் 6-24-184,

‡ மூடிக வந்தனம் முயல்வான்:—கஜாமுகாசுரன் என்பவன் மூஷிக ரூபத்துடன் விநாயகரை எதிர்ப்பதற்கு வந்தான், அப்போது அதன்மீதேறி விநாயகர் அந்த மூஷிகத்தை வணங்கச் செய்தனர்.

[தொடர்ச்சி பக்கம்-170 பார்க்க]

தன தாந்தன தான தனந்தன ... தன—என்னும்படியான சிரேஷ்டமான நடனத்தைச் செய்கின்ற எம்பிரான் சிவனார்—

தமக்குரிய குழந்தையே! (தாபரம்) அசையாப் பொருள், (சங்கமம்) அசையும் பொருள் — எனப் பொருள்களை (ஓம்புறு) பாதுகாத்தல் செய்ய (தாவன) ஸ்தாபன — சிருஷ்டித்தவனே! ஏற்படுத்தினவனே! (வம்பு அடர்) புதுமை நிறைந்த, (தகு) தக்கதான (தாம்பிர) தாம்பிர சூடம் எனப்படும் சேவலாற் சேவித - சேவைசெய்யப் படுபவனே! (ரஞ்சித) இன்பந்தருகின்ற தேவர் செல்வமே!

[முன] முன்ன—[அண்ணா! வா என்று முருகவேள்] நினைத்த உடனே—வாம் பத—[வாவும் பத] தாண்டி வேகமாய் வந்த திருவடிகளை உடையவரும, மூடிக— பெருச்சாளி [வந்தனம்] [வணக்கம்] செய்யும்படி [முயல்வான்] முயற்சி எடுத்துக் கொண்டவனும், [பிடி] பெண்யானை போன்ற வள்ளியின் [மாடு] பக்கத்தில் [இமை] இமைத்த [காட்டானையாக] ஒளிவிட்டு விளங்கினவருமான [ஐங்கரர்] விநாயக மூர்த்தியின் எதிரில் தோற்றிய தம்பியே! பொருந்தியுள்ள [சம்ப்ரம] களிப்பு நிறைந்த [சங்கணாறு] — அழகு செய்கின்ற கூட்டமாகிய ஆறு—

[திரு] முகங்களுடன் [காம்பிரமோடு] கம்பீரமோடு வீறுடனே வீற்றிருக்கும் [சம்பன்ன] பாக்கியவானே! சம்பத்து உள்ளவனே! மதுராந்தக மகா நகரத்தில் விளங்குகின்ற முருகா! [அம் திரமோடு அமர்] நல்ல உறுதியான (பத்தியுடன்) உள்ள தேவர்களின் தம்பிரானே!

(கன தாள் அருளும்படி என்று தானே)

"இபமுகத்தவுணன் சீற்றத்தோர் ஆகு ஆனன்
செம்மல் தன்னைத் தாக்கிய வருதலோடும் துப்பின்தாக்கி
நீ நமைச் சுமத்தி யென்று மேக்குயர் பிடரில் தாவி
வீற்றிருந் தூர்தல் உற்றான்"...கந்தபுராணம் 6-14-250,252,
(ஆகு-மூஷிகம்-பெருச்சாளி)

x பிடிமாடு இமை ஐங்கரர்—வள்ளியின் பக்கல் நெருங்கி வந்த கணபதி—பாடல் 587-பக்கம் 348 கீழ்க்குறிப்பு.

௦ முகதா ஆம் பின்ன—எதிரில் தோற்றிய தம்பீ,

** சம் கண...அழகு செய்கின்ற கூட்டமாகிய,

†† முருக அம் திரமோடு அமர் எனப்பிரிக்க.

சேயூர்.

[இது 'செய்யூர்' எள வழங்கும். மதுராந்தகத்துக்குக் கிழக்கு 16-மைல், அந்தகக் கவி-வீரராகவ முதலியார் பாடியருளிய "சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்" அச்சிடப்பட்டுள்ளது.]

---

725. மாதர்மீது மயக்கு அற

தனனாதன தானன தானன
தனனாதன தானன தானன
தனனாதன தானன தானன தனதான

முகிலாமெனும் வார்குழ லார்சிலை
புருவார்கயல் வேல்விழி யார்சசி
முகவார்தர ளாமென வேநகை புரிமாதர்-

முலைமாலிணை கோபுர மாமென
வடமாடிட வேகொடி நூலிடை
முது*பாளித சேலைகு லாவிய மயில்போல்வார்;

†அகிசேரல்கு லார்தொடை வாழையின்
அழகார்கழ லார்தர வேய்தரு
அழகார்கன நூபுர மாடிட நடைமேவி-

அனமாமென யாரையு மால்கொள
விழியால்சுழ லாவிடு பாவையர்
அவர்பாயலி லேயடி யேனுட லழிவேனோ;

கனார்பதி யோர்முறை கோவென
இருள்காரசு ரார்படை தூள்பட
கட‡லேழ்கிரி நாகமு நூறிட விடும்வேலா-

xகமலாலய நாயகி வானவர்
தொழுமீசுர னாரிட மேவிய
கருணாகர ஞானப ராபரை யருள்பாலா;

---

* பாளித சேலை...பாடல் 627-கீழ்க்குறிப்பைப் பார்க்க.

† அகி—அம்பு.

‡ எழ்கிரி—பாடல் 43—பக்கம் 117—கீழ்க்குறிப்பு.

x கமலாலய நாயகி—பார்வதி—பாடல் 31—பக்கம் 91—கீழ்க் குறிப்பு.

சேயூர்.

725.

மேகம் என்று சொல்லும்படியான நீண்ட கூந்தலை உடையவர்கள், வில்லைப் போன்ற புருவத்தை உடையவர்கள், கயல்மீன் போன்ற வேலைப் போன்ற கண்களை உடையவர்கள், (சசி) சந்திரன் போன்ற (முகவார்) முகத்தை உடையவர்கள், தரளாம் எனவே—தரளம்—முத்துப் போலவே பற்களைக் கொண்டு சிரிக்கின்றவர்களாகிய மாதர்கள்;

கொங்கைகள் பெருமை பொருந்திய இரண்டு கோபுரங்கள் என்று சொல்லும்படி விளங்க, (அவைகளின் மேலே) வடம் - மணிவட மாலைகள் (ஆடிடவே) அசைந்து விளங்கக், கொடிபோலவும் நூல் போலவும் நுண்ணிய இடையில், (முது) வேலைப்பாடு முற்றின, (பாளிதசேலை) பட்டுப்புடைவை விளங்கவுள்ள மயிலனைய மாதர்கள்—

பாம்பு போன்ற அல்குலை உடையவர்கள், வாழை போன்ற தொடை அழகினர்கள், கழல்-சிலம்பு (அல்லது கால் மோதிரம்) ஒலிக்கப் பொருந்திய அழகினர்கள், (கனம்) பொன்னாலாய நூபுரம் (பாத கிங்கிணி) ஒலிசெய நடந்து சென்று

அன்னப்பறவை என்னும்படி யாரையும் விருப்பம் [மோகம்] கொள்ளும்படி கண் கொண்டே சுழல விடுகின்ற பாவையர்—இத்தகையோரது படுக்கையிலே அடியேன் உடல் அழிபடுவேனே!

விண்ணுலகிலுள்ள ஊரினர்கள் [தேவர்கள்] கோ என்று முறையிட இருளைப்போலக் கரிய நிறம் உடைய அசுரர் படைகள் தூளாக, கடலும், எழுகிரியும், [நாகமும்] [பிற] மலைகளும் தூளாகச், செலுத்தின வேலாயுதனே!

தாமரையில் கோயில் கொண்டிருக்கும் நாயகி, தேவர்கள் தொழுகின்ற ஈசனுடைய இடது பாகத்தில் உள்ளவள், கருணைக்கு இருப்பிடமானவள், ஞான பரதேவதை ஆகிய பார்வதி பெற்ற குழந்தையே!

மகிழ்மாலதி நாவல்ப லாகமு
குடனுட*நி லாமயில் கோகில
மகிழ்நாடுறை மால்வளி நாயகி மணவாளா-
†மதிமாமுக வா‡வடி யேனிரு
வினைதூள் பட வேயயி லேவிய
ஜவளவாபுரி வாழ்மயில் வாகன பெருமாளே. (க)

பேறைநகர்.

726.

" நீலமயில் சேரும் " எனத் தொடங்கும் இத்தலத்துப் பாடல் 327 — 1-ஆம் பாடலாகக் குன்றுதோருடலிற் சேர்க்கப்பட்டுள்ளது. தொகுதி-2, பக்கம்-316 பார்க்க.

---

* நிலா—ஒளி—"அணி நிலா வீசுமாலை—சிந்தாமணி 2531.

† முருகன் திருமுகம் மதிக்கு ஒப்பு.
"முழுமதியன்ன ஆறு முகங்களும்"—கந்தபுரா. 1-20-126.

‡ இது அருணகிரியாரின் வரலாற்றுக் குறிப்பாகும்,— முருகவேள் வேல் கொண்டு அருணகிரியாரின் (நாவிற் பொறித்து) இருவினையைப் போக்கினது,—

"விடியாமல மாயைகளாம் இருள் தீர்த்துத்தீர்த்து ... பாட்டு மிக ஓத முனள் ஒரு நேயனுள் நாக்கில் தீட்டும் வடிவேலுடனே" — " அருணகிரிநாதர் ... நாவிற் பொறித்து" —திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்—காப்பு-2. சிறுதேர்-1.

(தொடர்ச்சி பக்கம் 175 பார்க்க)

மகிழமரம், [மாலதி] மல்லிகை, நாவல்மரம், பலா மரம், [கமுகு] பாக்குமரம், இவைகளில் விளையாடும் [நிலா] ஒளி பொருந்திய மயிலும், குயிலும் மகிழ்ந்திருக்கும் பிரதேசமாகிய வள்ளிமலையில் இருந்த பெருமை தங்கிய வள்ளி நாயகியின் மணவாளனே!

சந்திரனைப் போன்ற அழகிய முகத்தனே! அடியேனுடைய இருவினையும் தூளாகவே வேலை உபயோகித்த பெருமாளே! வளவாபுரி எனப் பெயரிய சேயூரில் (செய்யூரில்) வீற்றிருக்கும் பெருமாளே! மயில் வாகனப் பெருமாளே!

[அடியேன் உடல் அழிவேனோ)

பேறைநகர்.

726.

இப் பாடலின் உரையைத் தொகுதி 2-பாடல் 327-1 பக்கம் 317—பார்க்க.

[பக்கம் 174 கீழ்க்குறிப்புத் தொடர்ச்சி]

x வளவாபுரி என்பது சேயூர்; இதனைச் 'சேயூர் முருகன் பிள்ளைத் தமிழிற்' காண்க.

'மதுராபுரி மேவி யுலாவிய பெருமாளே' என்றும் பாடம்.

வளவநகர் — வளவாபுரி — இவை சேயூரைக் குறிக்கும். சோழனுடைய நகரம் என்பது பொருள். "செம்பிய வளவன் வந்தனக் காலயம் சகலமும் தந்ததிற் பின்"—

'தெரிதமிழ் வளவ னகரியின் முருக!' திருமகள்மருக! வருகவே!,
—சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்.

திருவக்கரை.

[தென்னாற்காடு ஜில்லாவி லுள்ள மயிலம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல் சென்று, மயிலம் சேர்ந்து அங்கிருந்து வானூர் போகும்வழியில் 4½-மைல் சென்று. அங்கு வழியைவிட்டு வயல் வழியாகச் செல்லும் வண்டிப் பாதையில் 5-மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

---

727. அடிமைப் பட

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தனதானா

கலகலெ னச்சில கலைகள் பிதற்றுவ
தொழிவ துணைச்சிறி துரையாதே-
கருவழி தத்திய மடுவ தனிற்புகு
கடுநர குக்கிடை யிடைவீழா ;
உலகு தனிற்பல பிறவி தரித்தற
வுழல்வது விட்டினி யடிநாயேன்-
*உனதடி மைத்திரள் அதனினு முட்பட
வுபய மலர்ப்பத மருள்வாயே ;
குலகிரி †பொட்டெழ அலைகடல் வற்றிட
நிசிசர னைப்பொரு மயில்வீரா-
குண தர வித்தக குமர புனத்திடை
குறமக ளைப்புணர் மணிமார்பா ;
அலைபுன லிற்றவழ் வளைநில வைத்தரு
மணிதிரு வக்கரை யுறைவோனே-
‡அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே. (க)

---

* "இவ் வேண்டுகோள் அருணகிரியார்க்கு நிறைவேறிற்று என்பதற்குச் சான்று—"இடுதலைச் சற்றுங் கருதேனைப் போத மிலேனை யன்பாற் கெடுதலிலாத் தொண்டரிற் கூட்டியவா கிரவுஞ்ச வெற்பை அடுதலைச் சாதித்த வேலோன்" என வரும் கந்தரலங்காரம் (100).

† "பொட்டாக வெற்பைப் பொருத கந்தா".—கந்தரலங்.31.

‡ இது முருகன் திருவருட் பெருமையைக் காட்டும் அருமையான அடி: மனப்பாடஞ்செய்ய வேண்டிய அடி.

திருவக்கரை.

727.

'கலகல' என்னும் ஓசையுடன் சில நூல்களைக் கற்றுப் பிதற்றல் (ஒழிவது) ஒழிய வேண்டியது; உன்னைக் கொஞ்சமேனும் துதிக்காமல்—

கருவிற் புகுதற்கு வேண்டிய வழியில் வேகமாகச் செலுத்தும் மடுவில் (பள்ளத்திற்) புகுந்து, பொல்லாத நகரத்தின் மத்தியில் வீழாமல்—

உலகிலே பல பிறப்புக்களை எடுத்து மிகவும் திரிதலை விட்டு, இனியேனும் அடிநாயேனாகிய நான்—

உன்னுடைய அடியார் கூட்டத்திலும் உட்பட்ட ஒருவனாக உனது இரண்டு மலர்ப்பாதங்களை அருள்வாயே.

(குலம்) கூட்டமான எழுகிரி தொளைபட்டுப் பொடிபட, அலைகடல் வற்றிப்போக அசுரனும் சூரனொடு (பொரும்) சண்டைசெய்த (அயில் வீரா) வேல் வீரனே!

நற் குணத்தவனே! ஞானமூர்த்தியே! குமரனே! [தினைப்] புனத்திடையே குறமகள் வள்ளியை அணைந்த அழகிய மார்பனே!

அலைவீசும் நீரிலே தவழ்கின்ற சங்குகள் ஒளியை வீசுகின்ற அழகிய திருவக்கரை என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே!

அடியார்களுடைய ஆசையில் என்ன என்ன ஆசைகள் உள்ளனவோ அன்ன அன்ன ஆசைகளை வரவழைத்துப் பூர்த்திசெய்யும் [தந்து உதவும்] கருணை மூர்த்தியாம் பெருமாளே!

[அடிமைத்திரள் அதனினும் உட்பட பதம் அருள்வாயே]

728 நற்குணம் வர

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன தனதான

பச்சிலை யிட்டுமு கத்தைமி னுக்கிகள்
குத்திர வித்தைமி குத்தச மர்த்திகள்
*பப்பர மட்டைகள் கைப்பொருள் பற்றிட நினைவோர்கள்-

பத்திநி ரைத்தவ ளத்தர ளத்தினை
யொத்தந கைப்பில்வி ழிப்பில்ம யக்கிகள்
பக்ஷமி குத்திட முக்கனி சர்க்கரை யிதழூறல்;

எச்சி லளிப்பவர் †கச்சணி மெத்தையில்
இச்சக மெத்தவு ரைத்துந யத்தொடு
மெத்திய ழைத்துஅ ணைத்தும யக்கிடு மடமாதர்-

இச்சையி லிப்படி நித்தம னத்துயர்
பெற்றுல கத்தவர் சிச்சியெ னத்திரி
இத்தொழி லிக்குணம் விட்டிட நற்பத மருள்வாயே;

நச்சர விற்றுயில் பச்சைமு கிற்கரு
ணைக்கடல் பத்மம லர்த்திரு வைப்புணர்
நத்துத ரித்தக ரத்தர்தி ருத்துள வணிமார்பர்-

நட்டந டுக்கட லிற்பெரு வெற்பினை
நட்‡டர வப்பணி சுற்றிம தித்துள
xநத்தமு தத்தையெ டுப்பிய ளித்தவர் மருகோனே;

---

* பப்பரமட்டைகள்—பாடல் 508, 570, 1228 பார்க்க.

† கச்சணி மெத்தை - ரவிக்கை பூண்ட கொங்கை என்பது தொனிக்கின்றது.

‡ அரவப்பணி - பாம்பு - ஒரு பொருள் இரட்டைச்சொல்; அல்லது கடைதல் ஆற்றாது (அரவம்) ஒலி செய்த (பணி) பாம்பு—எனலுமாம்.

x திருமால் கடலைக் கடைந்து அமுதத்தை அளித்தது பாட்டு 509, பக்கம் 162 கீழ்க்குறிப்பு

728.

பச்சிலைப்பொடி பூசி முகத்தை மினுக்குபவர்கள், வஞ்சகமான வித்தைகளில் மிக்க சாமர்த்திய சாலிகள், (பப்பர மட்டைகள்) கூத்தாடும் பயனிலிகள், (வருபவர்தம்) கைப்பொருளை அபகரிப்பதிலேயே எண்ணம் வைத்துள்ளவர்கள்—

(பத்தி நிரை) வரிசை வரிசையாக உள்ள (தவள) வெள்ளை நிறத்து (தரளத்தினை) முத்துக்களை ஒத்த பற்களாலும், கண் பார்வையாலும் மயக்குபவர்கள், அன்பு மிகும்படி மா, பலா, வாழை — என்னும் முப்பழங்களையும், சர்க்கரையையும் (போன்ற) வாயிதழ் ஊறலாம்—

எச்சிலைத் தருபவர்கள், (கச்சு அணி மெத்தையில்) சுச்சைக் கயிற்றாலாய அழகிய மெத்தையில்—கயிற்றுக் (கட்டிற்) படுக்கையில் — (இச்சகம்) முகஸ்துதியான வார்த்தைகள் நிரம்பப்பேசி (நயத்தொடும்) பக்குவமாக (எத்தி) ஏமாற்றி—வஞ்சித்து அழைத்து, அணைத்து, மயக்குபவர்கள் ஆகிய அழகிய (பொது) மாதர்களின் மேலுள்ள—

ஆசையிலேயே இவ்வண்ணம் தினந்தோறும் மனவருத்தத்தை அடைந்து. உலகோர்கள் சீசீ என வெறுப்புக்காட்டத் திரிகின்ற (எனது இந்தத் தொழிலும், எனது இந்தக் குணமும் நான் விட்டொழிக்க (உனது) நல்ல திருவடியைத் தந்தருளுக;

விஷமுள்ள (அரவம்) ஆதிசேடனும் பாம்பின்மேல் துயில்கின்ற பச்சை மேகம் போன்றவரும், கருணைக் கடலானவரும், தாமரைமலரில் வாசம் செய்யும் இலக்குமியைச் சேர்பவரும், சங்கு தரித்த கரத்தினரும், திருத்துளப மாலையை அணிந்துள்ள மார்பினரும்,

நட்டநடுக்கடலில் — கடலில் நடுமத்தியில் பெரிய (மந்தர) மலையை நாட்டி, (அரவப்பணி) பாம்பை (வாசுகிப் பாம்பைக் கயிறாகச்) சுற்றி, (மதித்து) மர்த்தித்து— கடைந்து, உளம் நத்து அமுதத்தை—உள்ளத்தில்— மனத்தில் ஆசைப்பட்ட அமுதத்தை வரப்பண்ணித் (தேவர்களுக்கு) அளித்தவருமான திருமாலின் மருகனே!

*கொச்சைமொ ழிச்சிக றுத்தவி ழிச்சிசி
றுத்தஇ டைச்சிபெ ருத்தத னத்திகு
றத்தித னக்குமு னப்ரிய முற்றிடு குமரேசா-
†கொத்தவிழ் பத்மம லர்ப்பழ னத்தொடு
குற்றம றக்‡கடி கைப்புனல் சுற்றிய
கொட்புள நற்றிரு வக்கரை யுற்றுறை பெருமாளே. (௨)

சிறுவை.

[இது 'சின்னம்பேடு' எனவும், 'சிறுவரம்பேடு' எனவும் வழங்கும் பொன்னேரிக்கு மேற்கு 7-மைல் தூரம். சென்னை—ஆரணி வழியில் 20 மைல் சென்று பனப்பாக்கத்துக்கு அருகில் இறங்கித் தெற்கு 1-மைல்சென்றால் இத்தலத்தை அடையலாம். சிறுவரம்பேடு என்பது சிறுவர் [குசலவர்] அம்பெடுத்ததைக் குறிக்கும். 731-ஆம் பாடலைப் பார்க்க. இத் தலத்துத் திருமாலுக்கு 'திருவூரகப் பெருமாள்' என்று பெயர். 732 ஆம் பாடலைப் பார்க்க. முருகருக்கு தனிக்கோயில் உளது. காஞ்சீபுரத்துக்கு வடக்கு 5-மைலில் சிறுவாக்கம் என்று ஒரு தலம் உளது, விக்கிரவாண்டிக்குச் சமீபத்திலும் சிறுவை என ஒரூர் இருப்பதாகத் தெரிகின்றது.]

729. தரிசனம் பெற

தந்ததன தனதான தந்ததன தனதான
தந்ததன தனதான தனதான

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ் மீற xவருளாலே-
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக;
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
oமஞ்சினனு மயனாரு மெதிர்காண-

---

* 'வாக்குக் கருணகிரி' — என்பதற்கு இந்த அடியையும் எடுத்துக் காட்டலாம் (பாடல் 672-நான்காவது, ஆறாவது அடிகள், பாடல் 373-மூன்றாவது அடி—போலச் சிறந்தது). 'பருத்தமுலை சிறுத்த இடை...மறச்சிறுமி'—வேல் வகுப்பு.

† கொக்கு மரிக்கு மயிற் படை[விட்டருள்!
கொற்றவ சத்த கிரிப்புனல் சுற்றிய
கொட்புள நற்பழ நிப்பதி யுற்றிடு பெருமாளே' —
என்றும்பாடம். [‡, x, o தொடர்ச்சி பக்கம் 181 பார்க்க.]

திருந்தாப் பேச்சினளும், கரிய கண்களை உடையவளும், சிறிய இடையை உடையவளும், பெரிய கொங்கைகளை உடையவளும் ஆன குறவள்ளியின் மனத்தில் ஆசை கொண்ட (நிரம்பக்கொண்ட) குமரேசனே!

இதழ்க் கொத்துக்கள் விரிகின்ற தாமரை மலர்ப் பழனங்களும்) வயல்களும்—மருத நிலங்களும், (குற்றமற நன்றாக — கடிகைப்புனல் — கடிகை என்னும் ஆற்றின் நீரும் சுற்றியுள்ள - வளைந்துள்ள நல்ல திருவக்கரை என்னும் தலத்தில் பொருந்தி வீற்றிருக்கும் பெருமாளே!

(நற்பதம் அருள்வாயே)

சிறுவை.

729.

தேவர் தலைவனும் இந்திரன் (தனது பொன்னுலகத்திற் குடியேறவும், நெருங்கி வந்த அசுரர்கள் உருமாறி இறக்கவும், தேவர்கள் மனத்தில் மகிழ்ச்சி அதிகமாகக் கொள்ளவும், அன்று காட்டின அந்த அருளோடு—அத்தகைய அருளோடு—

காளியுடன் ஆடின சங்கரன் மகிழ்ச்சி மிகக் கொள்ளவும் விநாயகரும் பார்வதியும் களிப்பு மிகக் கொள்ளவும்,

பூமியில் உள்ளோரும், முநிவர்களும், எட்டுத் திசைகளில் உள்ளவர்களும், இந்திரனும், பிரமனும், எதிர் நின்று காணவும்,

---

(180-ஆம் பக்கம் தொடர்ச்சி)

‡ கடிகை: ஒரு ஆறு: 'கொடுக்கூர் ஆறு' என வழங்குகின்றது. கடிகை—'வேகம்' எனவும் பொருள் கொள்ளலாம்.

x மகிழ்மீற அன்று வந்த அந்த அருள் போலவே இன்று மயிலுடனடி (என்முன்) வரவேணும் எனமுடிக்க.

o மஞ்சிளன்—இந்திரன்.

மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
*மைந்துமயி லுடனுடி வரவேணும் ;
†புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள வுயர்தோளா-
பொங்குகட லுடனுகம் விண்டுவரை யிகல்சாடு
‡பொன்பரவு கதிர்வீசு வடிவேலா ;
x தண்டரள மணிமார்ப ०செம்பொனெழில் செறிரூப
**தண்டமிழின் மிகுநேய முருகேசா-
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே. (க)

---

* மைந்து—வலிமை.

† புண்டரிக விழி—"முண்டக மலர்ந்ததன்ன(மூவிரு முகமும்) கண்ணும்—கந்த புரா 4-4-235.

‡ பொன்-தேவகுரு பிரகஸ்பதி பரவினது :—

(1) சூரனுதிய அசுரர்களின் வரலாற்றைப் பிரகஸ்பதி முருகவேளுக்கு அவர் கேட்டபோது எடுத்துரைத்து 'எல்லாம் தெரிந்த நின்முன் நான் இவ் வரலாற்றை உரைத்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்' எனக் கூறிப் பணிந்தனர். முருகவேளும் "கூறுக" என யாம் கேட்க நீ கூறினுய்—ஆதலின், பிழையொன்றும் இல்லை எனக் கூறிப் பிரகஸ்பதியைத் தேற்றினர். "பொறுத்தி யென் குற்றம் என்று பொன்னடித் துணையைப் பொன்னேன்... அன்பிற் பூண்டு வணங்கினன் தொழுது போற்றி" "கதிர்வே லண்ணல் எம் முரை கொண்டு சொற்ருய் உறத்தகு பிழையில் யாதும் உன்னலை இருத்தி என்ருன்"—(கந்த புரா—2-43 138)

முருகன் குழந்தையாய் விளையாடின பொழுது தன்னை எதிர்த்த இந்திராதி தேவர்களை மாய்த்தனன்—இதை நாரதர் மூலம் அறிந்த தேவகுரு முருகவேளிடம் சென்று அவரைப் போற்றி இறந்துபட்ட தேவர்கள் உயிர் பெற்றெழுமாறு செய்தனர். "பொன்னவன் ... வேண்டிட வான் மன்னவனுதியர் — அங்கிலை எழும்வகை அருள் செய்தானரோ"—கந்த புரா 1-14-78

x தரளமணி மார்பன்—"முத்தணியும் உரமும்"
—திருப்புகழ் 675.

० எழில் செறிரூப — "அந்தம் வெகுவான ரூபக்கார", "அழகான மேனி தங்கிய வேளே", 'மற்றவர் ஒப்பில ரூபா",
—திருப்புகழ் 41, 101, 838.

** தமிழின் நேய —"தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன்"
—திருவாலவா. திருவிளை 44-26.

(அலர்மேல் மங்கை) இலக்குமியுடன் திருமாலும் இன்பத்துடன் தமது மகிழ்ச்சியை எடுத்து ஓதவும், வலிமை நிறைந்த மயிலுடன் ஆடி (என்மு.ன்) வரவேணும்: (அல்லது மயிலுடன் என்னை நாடி—விரும்பி என்முன் வரவேணும்).

தாமரைமலரொத்த கண்களை உடையவனே! தேவர் வளர்த்த மகள் — தேவசேனையின் மணவாளனே! அறிவு நிறைந்த ஞானமும் கொண்டவனே, உயர்ந்த புயங்களை உடையவனே!

பொங்கின கடலுடன், நாகம் விண்டு—எழுகிரிகள் பிளவுபட (வரை) கிரௌஞ்சகிரியின் (இகல்) வலிமையைச் சாடு—பாய்ந்தழித்த, பொன்னொளி பரப்பிச் சுடர் வீசும் கூரிய வேலனே! (அல்லது — பொன் — தேவகுரு — பிரகஸ்பதி போற்றி நின்ற கதிர்வீசு வடிவேலனே! (அல்லது பொங்கு கடலுடன் வரை ஆகம் விண்டு—கிரௌஞ்சகிரியின் உடல் (விண்டு) விள்ள — உடைபட்டழிய, அந்த மலையின் இகல் — வலிமையைச் சாடின வேலா எனலுமாம்)

குளிர்ந்த முத்துமாலை அணிந்த அழகிய மார்பனே! செம்பொன்னின் அழகு செறிந்த உருவத்தனே! நல்ல தமிழில் மிகுந்த நேசம் கொண்டுள்ளவனே! முருகேசனே!

எப்போதும் அடியார்களின் மனதே இடமாகக் கொண்ட பெருமாளே! குளிர்ந்த சிறுவை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(மயிலுடனாடி வரவேணும்)

730. அருள் வேண்டுதல்

தானன தானன தானா தனதன
தானன தானன தானா தனதன
தானன தானன தானா தனதன தனதான

சீதள வாரிஜ பாதா நமோநம
*நாரத கீதவி நோதா நமோநம
சேவல மாமயில் ப்ரீதா நமோநம மறைதேடுஞ்

சேகர மானப்ர தாபா நமோநம
ஆகம சாரசொ ரூபா நமோநம
தேவர்கள் சேனைம கீபா நமோதம கதிதோயப்;

பாதக †நீவுகு டாரா நமோநம
மாவசு ரேசக டோரா நமோநம
‡பாரினி லேஜய வீரா நமோநம மலைமாது-

பார்வதி யாள்தரு பாலா நமோநம
நாவல ஞானம னோலா நமோநம
பாலகு மாரசு வாமீ நமோநம அருள்தாராய்;

போதக மாமுக னேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி யிகல்சூரா-

* நாரதகீத விநோதர்—முருகவேள் ; முருகவேள் இசைப்ரியர் பாடல்-173, பக்கம் 400 கீழ்க்குறிப்பு x

† நீவு—அழிக்கும்.

‡ இது சம்பந்தராயப் புவியிலே சமணர்களை வென்று ஜயம் பெற்ற வீரத்தைக் குறிக்கும்.

730.

குளிர்ந்த தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; நாரத முநிவருடைய இசையில் (விநோதம்) மகிழ்ச்சி கொள்பவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், கோழிக் கொடியை உடையவனே! சிறந்த மயில்மீது பிரியமுள்ளவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், வேதங்கள் தேடுகின்ற

(சேகரமான) அழகான கீர்த்தியை உடையவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், ஆகமங்களின் சாரமே சொரூபமாகக் கொண்டவனே! உன்னைவணங்குகின்றேன்-உன்னை வணங்குகின்றேன், தேவர்களின் சேனைக்கு (மகிபனே) அரசனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; (அடியார்கள்) நற்கதியை அடையும் பொருட்டு (அவர்களுடைய)

பாதகத்தைப்பிளந்து அழிக்கின்ற(குடார)கோடாலியே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; பெரிய அசுரர் தலைவர்கள் அஞ்சும்படியான (கடோரா) கொடுமை காட்ட வல்லவனே! உன்னை வணங்குகின்றேன்! வணங்குகின்றேன்; பூலோகத்திலே ஐயவீரனாய் விளங்குபவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; இமயமலைப் பெண்—

பார்வதிதேவி பெற்ற குழந்தையே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; வாக்கு வல்லமை உடையவனே! ஞான (மன - உலா) மனத்தில் உலாக் கொள்பவனே (உலவுகின்றவனே)! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; பால குமார சுவாமியே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; உனது திருவருளைத் தந்தருளுக.

(போதகம்) யானையின் அழகிய முகத்தைக் கொண்ட விநாயகருக்கு இளைய சகோதரனே! திருநீறு அணிந்த சடைப் பெருமான் சிவனுடைய அன்புக்கு உரியவனே! (அல்லது சடையர்களாம் முநிவர்களின் அன்பனே); ஒளிக்கு இடமானவனே (ஞான சூரியனே)! இலக்குமியின் மருகனே! ஈசனே! கடலைப் பகைத்து (அது சுவற வேல்விட்ட) சூரனே!

போதக மாமறை ஞானதயாகர
தேனவிழ் நீபநறுவாரு மார்பக
*பூரண மாமதி போலாறு மாமுக முருகேசா;

மாதவர் தேவர்க ளோடே†முராரியு
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
‡மாநில மேழினு மேலான நாயக வடிவேலா-

வானவ ரூரினும் வீறுகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் பெருமாளே. (உ)

731. திருவடியைப் பெற

தனன தான தனன தந்த, தனன தான தனன தந்த
தனன தான தனன தந்த தனதான

பிறவி யான சடமி றங்கி வழியி லாத துறைசெ றிந்து
பிணிக ளான துயரு ழன்று தடுமாறிப்-

பெருகு தீய வினையி னொந்து கதிக டோறு மலைபொ ருந்தி
பிடிப டாத ஜனன நம்பி யழியாதே;

நறைவி ழாத மலர்மு கந்த வரிய மோன வழிதி றந்த
நளின பாத மெனது சிந்தை யகலாதே-

நரர்சு ராதி பரும்வ ணங்கு மினிய சேவை தனைவி ரும்பி
நலன தாக அடிய னென்று பெறுவேனோ;

---

* "முழுமதியன்ன ஆறுமுகங்களும்"—கந்த புரா—1-20-126
"மதிமா முகவா"—திருப்புகழ் 725

† முராரி—பாடல் 522-பக்கம் 196 கீழ்க்குறிப்பு.

‡ நிலம் எழு—பாடல் 157-பக்கம் 364-365 கீழ்க்குறிப்பு.

(போதக மாமறை) மாமறை போதக — சிறந்த வேதங்களை உபதேசிக்க வல்லவனே! ஞானனே! (தயைக்கு) கிருபைக்கு இருப்பிடமானவனே! தேன் சொட்டும் கடப்பமாலையின் நறுமணம் நிறைந்து வீசும் மார்பிடத்தை உடையவனே! அழகிய பூரண சந்திரன் போல விளங்கும் ஆறுமாமுகனே! முருகேசனே!

மாதவர் (தவமுநிவர்கள்), தேவர்கள், அவர்களுடன் (முராரி) முரன் என்னும் அசுரனைக் கொன்ற திருமால், சிறந்த தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமா — இவர்கள் யாவரும் புகழும் (நாயகனே!) பெரிய உலகுகள் ஏழினும் மேலான தலைவனாக விளங்குபவனே! கூரிய வேலனே!

தேவர்கள் ஊரினும் மேம்பட்டதாகி விளங்கி (அளகாபுரி)—குபேரன் திருநகர் அளகாபுரி வாழ்வினும் மேம்பட்ட சிறப்பினதாக இலக்குமி வாசஞ் செய்யும் சிறுவாபுரி என்னும் தலத்தில் வாழும் செல்வமே! தேவர் தலைவர்களுக்குப் பெருமாளே!

(அருள் தாராய்)

731.

பிறப்புக்கு ஏற்பட்ட உடலிற் புகுந்து, நல்வழி யல்லாத வழிகளில் நெருங்கிப்போய், நோய் முதலிய துக்கங்களில் வேதனைப்பட்டுத் தடுமாற்றம் அடைந்து—

வளர்ந்து பெருகும் கெட்ட வினைகளின் பயனால் கஷ்டப்பட்டு, இங்ஙனம் - பிறப்புகள்தோறும் அலைச்சலை அடைந்து, (பிடிபடாத) (அதன் உண்மைத்) தன்மை புலப்படாத பிறப்பை விரும்பி அழிந்து போகாமல்—

தேன் நீங்காத மலர் நிரம்பக் கொண்டுள்ளதும், அருமையான மௌன வழியைத் திறந்துகாட்டின (உனது) தாமரை போன்ற திருவடி என் மனத்தை விட்டு நீங்காமல்—

மனிதரும், தேவர் தலைவர்களும் வணங்குகின்ற உனது இனிமையான தரிசனத்தை விரும்பி நன்மை பெறும்படியான பாக்கியத்தை அடியேன் என்று பெறுவேனோ!

*பொறிவ ழாத முனிவர் தங்கள் நெறிவ ழாத பிலனு ழன்று
பொருநி சாச ரனைநி னைந்து வினைநாடிப்-

பொருவி லாம லருள்பு ரிந்து மயிலி னேறி நொடியில் வந்து
புளக மேவ தமிழ்பு னைந்த முருகோனே;

†சிறுவ ராகி யிருவ ரந்த கரிப தாதி கொடுபொ ருஞ்சொல்
சிலையி ராம னுடனெ திர்ந்து சமராடிச்-

செயம தான நகர மர்ந்த அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே. (௩)

732. இடர் அற

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன தனதான

வேலி ரண்டெனு நீள்விழி மாதர்கள்
காத லின்பொருள் மேவின பாதகர்
வீணில் விண்டுள நாடிய ரூமைகள் விலைகூறி-

* இங்கு கூறப்பட்ட சரித்திரம் இன்னதென்று நன்கு புலப்படவில்லை. ஆயினும் நக்கீரரின் வரலாறு ஒருவாறு பொருந்துகின்றது. நக்கீரரைக் குதிரை முகத்தைக் கொண்டிருந்த பெண் பூதத்தினின்றும் முருகவேள் காத்தலர் என்று அருணகிரியார் கூறுவர்.
—பாடல்கள் 91, 156-கீழ்க் குறிப்புக்களைப் பார்க்க.
[இங்கு பூதம் என்னுது 'நிசாசரன்' என வருகின்றது]

† ஸ்ரீராமருடைய புதல்வர்கள் லவன்--குசன் என்பவர்கள் ஸ்ரீராமரோடு பொருது ஜெயித்த ஸ்தானம் இந்தச் சிறுவாபுரி என்பது இத்தலத்து வரலாறு. சிறுவர்கள் அம்பெடுத்துச் செலுத்தி வெற்றி பெற்றதால் "சிறுவர் அம்பெடு" — சிறுவரம்பேடு (சின்னம்பேடு) என இத் தலத்தின் பெயர் வழங்குகின்றது.

(பொறி) ஐம்பொறிகளும் (வழாத) வழுவாத வண்ணம்—தவறான வழியிற் போகாதபடி காத்திருந்த (முனிவர்) நக்கீர முனிவர் (தங்கள்) தமது (நெறி)—நித்ய அநுட்டான நெறியை. (வழாத) தவறுதல் இல்லாத வழியில் நின்று காத்த (குகையில் அகப்பட்டு எப்போதும் போல சிவத்யானத்திலேயே இருந்த) பிலன்—குகையில், (உழன்று) மன அலேச்சலுற்று, பொரு நிசாசரனை — (குகையில் அகப்பட்டவர்களைப்) பொருது அழிக்க நினைந்திருந்த அரக்கனை ராக்ஷசனை—நினைந்து, வினை நாடி அந்த அரக்கனிடமிருந்து பிழைக்கும் செயலை நாடினவரான நக்கீரருக்கு—

(பொரு இலாமல்) ஒப்பில்லாத வகையில்—(தனித்த அன்பு வழியில்) — அருள்புரிந்து — கிருபை கூர்ந்து, மயில்மேல் ஏறி ஒரு நொடிப்பொழுதில் வந்து (கற்சிறையி னின்றும் அவரை மீட்டு) புளகம் மேவ—புளகாங்கிதம் கொள்ளுமாறு மிக்க மகிழ்ச்சி பூத்து (தமிழ் புனைந்த) திருமுருகாற்றுப்படை என்னும் தமிழ் மாலையை ஏற்றுப் புனைந்த—அணிந்துகொண்ட முருகனே!

சிறுவரான லவகுசர் என்னும் (ஸ்ரீ ராமரின் புதல்வர்கள்) இருவரும் அந்த யானைப்படை, காலாட்படை இவைகளைக் கொண்டு, போரிடையே சொல்லும் சொற்களுடன் வில் ஏந்திய ஸ்ரீராமருடன் எதிர்த்துப் போர்செய்து—

வெற்றிகொண்ட நகரமான சிறுவை, குபேரனது அளகாபுரி போல வளப்பம் மிக்கதான சிறுவை (சிறுவாபுரி)யில் வீற்றிருந்து வரங்களை நிரம்பத்தரும் பெருமாளே!

(நளினபாதம் என்று பெறுவேனே)

732.

வேல் இரண்டு என்று கூறும்படியான நீண்ட விழிகளை உடைய மாதர்கள், ஆசையுடனே பொருளை விரும்பும் பாதகத்தினர், (வந்தவருடன்) வீணாக (விண்டு) பகைத்து உள்ளத்தை ஆராய்பவர், (சில சமயத்தில்) ஊமைகள் போல இருப்பவர்கள்—விலைபேசி

வேளை யென்பதி லாவசை பேசியர்
வேசி யென்பவ ராமிசை மோகிகள்
மீது நெஞ்சழி யாசையி லேயுழல் சிறியேனும் ;

மால யன்பர னரிமை யோர்முனி
வோர் புரந்தர னாதிய ரேதொழ
மாத வம்பெறு தாளிணை யேதின மறவாதே-

வாழ்த ருஞ்சிவ போகந னூனெறி
யேவி ரும்பி*வி னாவு டனேதொழ
வாழ்வ ரந்தரு வாயடி யேனிடர் களைவாயே ;

நீல சுந்தரி கோமளி யாமளி
†நாட கம்பயில் நாரணி பூரணி
நீடு ‡பஞ்சவி xசூலினி oமாலினி யுமைகாளி-

நேயர் பங்கெழு மாதவி யாள்சிவ
காம சுந்தரி யேதரு பாலக
நீர்பொ ருஞ்சடை யாரருள் தேசிக முருகேச ;

ஆலில் நின்றுல கோர்நிலை யேபெற
மாநி லங்களெ லாநிலை யேதரு
**ஆய னந்††திரு வூரக மால்திரு மருகோனே-

---

* வினா—ஆராய்ச்சி அறிவு—பாடல் 149, 716 பார்க்க.

†'நாடகம் பயில் நாரணி';-'பாடக மெல்லடிப் பாவையோடும்... நாடகமாடு நம்பெருமான்'—சம்பந்தர் 1-7-1,

‡ பஞ்சவி—பஞ்சமி—''கவுரி பஞ்சவி யாயீமாயீ''
—திருப்புகழ் 1136

x சூலினி ''தூய சடைமுடிச் சூலினி''—திருமந்திரம் 1104

o மாலினி—அக்ஷரங்களின் தெய்வமாக இருப்பவள்-எனலும் ஆம் [அபிராமி அந்தாதி 77 உரை].

** ஆயன்—திருமால்—''ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய அஞ்சன வண்ணன்''—பெரியாழ்வார் 1-7-11.

†† **திருவூரகமால்:** சிறுவாபுரியில் பெருமாளுக்குத் 'திருவூரகப் பெருமாள்' என்று பெயர். திருவூரகம் என்பது காஞ்சீபுரத்தில் உள்ள 'உலகளந்த பெருமாள் கோயில்'—என்பர். திருமழிசை யாழ்வார், திருமங்கை யாழ்வார் — இவர்களாற் சொல்லப்பட்ட தலம். ''குன்றிருந்த மாட நீடு பாடகத்தும் ஊரகத்தும் நின்றிருந்து வெஃகணைக் கிடந்ததென்ன நீர்மையே''—[திருமழிசை யாழ்வார்—திருச்சந்த விருத்தம்—63], 'காமரு பூங்கச்சி ஊரகத்தாய்''—திருமங்கையாழ்வார்—திருநெடுந்தாண்டகம் 13.

சமயம், நேரம் என்பது இல்லாமல் (வசைப் பேச்சுக்களை) பழிப்புச் சொற்களைப் பேசுபவர்கள், (வேசிகள்) பரத்தையர் எனப்படுவோர்களாவார், இசையில் ராகங்களில் (மோகிகள்) ஆசை கொள்பவர் — (ஆகிய விலைமாதர்) மீது மனம் கசிதலுற்று அழியும் ஆசையில் திரிகின்ற சிறியேனும்—

திருமால், பிரமா, சிவனார், தேவர், முனிவர்கள், இந்திரன் முதலானோர் தொழும்படியான மகா தவத்தைப் பெற்ற (உனது) இரண்டு திருவடிகளையே நாளும் மறவாமல்—

நல்வாழ்வைத் தரவல்ல சிவபோகத்தை விளக்கும் நல்ல நூல்கள் கூறிய வழியையே (நான்) விரும்பி, (வினவுடனே) ஆராய்ச்சி அறிவுடன் உன்னைத் தொழுது வாழும் வரத்தைத் தருவாய், அடியேனுடைய வருத்தங்களை நீக்கி யருள்வாயே,

நீலநிற அழகி, (கோமளி) இளமை வாய்ந்தவள், (யாமளி) பச்சை நிறத்தை உடையவள், கூத்துக்கள் பல பயிலும் நாரணி, (பூரணி) நிறைந்தவள், சிறந்த (பஞ்சவி)—பஞ்சமி—ஐந்தாவது சக்தியாகிய அநுக்கிரக சக்தி, (சூலினி) திரிசூலத்தைத் தரித்தவள், (மாலினி) மாலையை அணிந்தவள், உமையவள், காளி,

அன்பர்கள் (அல்லது— தன் அன்புக்கு உரிய சிவன்) பக்கம் விளங்கி உதவும் (மாதவியாள்) (குருக்கத்திக்கொடி போன்றவள்) துர்க்கை-, சிவகாமசுந்தரி- தந்த குழந்தையே! கங்கை நீர் தங்கும் பெருஞ் சடைப்பிரான் பெற்ற (தேசிக) குருமூர்த்தியே! முருகேசனே!

ஆலிலையி லிருந்தபடியே உலகத்தில உள்ளவர்கள் நிலைபெற்று வாழவும், பெரிய உலகங்களெல்லாம் நிலை பெற்று விளங்கவும் காக்கின்ற (ஆயன்) இடையர் குலத்துத் திருமால், நம் நமக்கு உரிய (அல்லது அம்— அழகிய) திருவூரகம் என்னும் தலத்தில் விளங்கும் திருமாலின் அழகிய மருகனே!

*ஆட கப்பயில் கோபுர மாமதி
லால யம்பல வீதியு மேநிறை
வான தென்சிறு வாபுரி மேவிய பெருமாளே. (ச)

திருவாமாத்தூர்.

[விழுப்புரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 4-மைல். மூவர் தேவாரமும் பெற்றது, ஸ்தல புராணம் உண்டு.]

733. மாதர்மீதுள்ள மயக்கற

தனதன தான தானன, தனதன தான தானன
தனதன தான தானன தனதான

அடல்வடி வேல்கள் வாளிக ளவைவிட வோடல் நேர்படு
மயில்விழி யாலு மாலெனு மதவேழத்-

தளவிய கோடு போல்வினை யளவள வான கூர்முலை
யதின்முக மூடு மாடையி னழகாலுந்;

துடியிடை யாலும் வாலர்கள் துயர்வுற மாய மாயொரு
துணிவுட னூடு மாதர்கள் துணையாகத்-

தொழுதவர் பாத மோதியுன் வழிவழி யானெ னுவுயர்
துலை †யலை மாறு போலுயிர் சுழல்வேனோ;

அடவியி னூடு வேடர்க ளரிவையொ டாசை பேசியு
‡மடிதொழு தாடு மாண்மையு முடையோனே-

---

* 'ஆடசமாடம் நெருங்கு கூடல்'--சம்பந்தர் I-7-1.

† அலைமாறு—(கடல்) அலையிற்பட்ட (மாறு) துரும்பு—
"பௌவத் தெவ்வத் தடந்திரையால் எற்றுண்டு"
—திருவாசகம் சதகம்-27

‡ அடி தொழுதாடும் ஆண்மை--ஆண்மை—தமது கடமையைச் சீர்பெற நிறைவேற்றுதல். இறைவன் கடமை "தன் கடன் அடியேனையும் தாங்குதல்"—யான் எனது அற்ற அடியார்க்கு எளியனுதல் இறைவன் கடமை—பாடல் 199-பக்கம் 13, பாடல் 317-பக்கம் 288 கீழ்க்குறிப்புக்களைப் பார்க்க.

பொன்போல விளங்கும் கோபுரம், பெரிய மதில், கோயில், பல வீதிகளும் நிறைந்துள்ள அழகிய சிறுவாபுரியில் வீற்றிருக்கும் பெருமாளே!

(அடியேன் இடர் களைவாயே)

திருவாமாத்தூர்

733

வலிமை வாய்ந்த கூரிய வேல்கள், அம்புகள் இவைகளைக் காட்டிலும் (ஓடுதல்) ஓடிப்பாய்தல் அல்லது கலக்குதல் (நேர்படும்) நன்கு பயின்ற கூரிய கண்களாலும், (மால் எனும்) காம மயக்கம் எனப்பட்ட (மதவேழத்து) மதங்கொண்ட ஆனையின் — (அல்லது — 'மால்' எனத் திருமாலை அழைத்த மதவேழமாம்-கஜேந்திரனுடைய)

(அளவிய) இடத்துள்ள (கலந்துள்ள) தந்தம் போன்றதும், வினையின் அளவே அளவாகக் கொண்டதுமான (வினை அளந்து தோன்றியதான) மிக்கெழுந்ததான கொங்கையாலும், அதன் (முகம்) தோற்றத்தை மூடி மறைக்கும் ஆடையின் அழகாலும்

(துடி) உடுக்கை போன்ற இடையாலும், (வாலர்கள்) பாலிய வயதுள்ள ஆண் பிள்ளைகள் (துயர்வு) துயரம் அடைய, (மாயமாய்) மாயவித்தையுடனும் ஒப்பற்ற தைரியத்துடனும் (ஊடும்) பிணங்குகின்ற (மாதர்கள்) பொது மகளிர்களையே துணையாகக் கொண்டு—

(தொழுது) வணங்கி, (அவர் பாதம் ஓதி) அவர்தம் பாதங்களைப் புகழ்ந்து, உன் வழி வழி யான் என) — உன்னுடைய பரம்பரை (மனிதன்) யான் என்று கூறி, (உயர்துலை) துலை (தொலைதூரம்) வெகுதூரம்—உயர்— உயர்ந்து எழுகின்ற (அல்லது (துலை) ஏற்ற மரம்போல உயர்ந்து எழுகின்ற (அலை)- அலையிற்பட்ட, (மாறுபோல்) உலர்ந்த கொம்பு. (குச்சு — மிலாறு) — போல, உயிர் அலைச்சல் உறுவேனோ!

காட்டிலுள்ளே இருந்த வேடர்களின் பெண்ணும் வள்ளியுடன் (உன்) காதலைத் தெரிவித்துப் பேசும் பேச்சையும் அவளுடைய திருவடியைத் தொழுது விளையாடும் ஆண்மைக் குணத்தையும் (அல்லது வாய்மையையும்) உடையவனே!

அழகிய தோளி ராறுடை அறுமுக வேளே னவுனே
அறிவுட் னேது மாதவர் பெருவாழ்வே ;
விடை *யெறு மீசர் நேசமு மிகநினை வார்கள் தீவினை
யுகநெடி தோட மேலணை பவர்மூதூர்-
†விரைசெறி தோகை மாதர்கள் விரகுட னடு மாதையில்
விறல்மயில் மீது மேவிய பெருமாளே.(க)

734. திருவடியை விரும்ப

தந்த தத்தன தானதன தந்த, தத்தன தானதன
தந்த தத்தன தானதன தனதான

கண்க யற்பிணை மானொடுற வுண்டெ னக்கமைதோளான து
நனை‡க மைக்கின மாமாமென முகையான-
கஞ்ச மொத்தெழு கூர்மாமுலை குஞ்ச ரத்திரு கோடோடுற
விஞ்சு மைப்பொரு கார்கோதைகொ டுயர்xகாலன்;
பெண்ட னக்குள கோலாகல மின்றெடுத்திளை யோராவிகள்
மன்பி டிப்பது போல்நீள்வடி வுடைமாதர்-
பின்பொ ழித்திடு மாமாயையி லன்பு வைத்தழியாதேயுறு
oகிஞ்சி லத்தனை தாள்பேணிட அருள்தாராய் ;

---

* ஏறும்—ஏறும்.

† "மாதர்கள் ஆடும் மாதை'—இக் கருத்தைப் 'பாலினேர் மொழி மங்கைமார் நடம் ஆடி யின்னிசை பாட நீள்பதி ... ஆமாத்தூர்" என வருமிடத்தும் காண்க—(சம்பந்தர் 2-50.4)

‡ அமை—மூங்கில்.

x மாதரைக் காலனுக்கு ஒப்பிட்டது:

"மாதரை மாய வருங்கூற்றம் என்றுன்னக், காதல தாகிய காமம் கழிந்திடும், சாதலும் இல்லை சதகோடி ஆண்டினும், சோதியி னுள்ளே துரிசறுங் காலமே"—திருமந்திரம் 1953.

'பெண்ணே அவளல்லள் பெண்ணுருவு கொண்டிருந்து
மண்ணோர்களை யெல்லாம் மாய்க்க வருங் கூற்றே"
—ராமாயணம்—உத்தரகாண்டம்—திக்கு விசயம் 177

o மாதர்மீது வைக்கும் ஆசையில் கிஞ்சித்தேனும் உன் தாளில் வைக்க அருள்புரிவாயாக—என்னும் இவ் வேண்டுகோள்—

'தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த தயாவை நூறுயிரங் கூறிட்(டு) அத்தில் அங்கொரு கூறு (உன்) கண் வைத்தவருக்(கு) அமருல களிக்கும் நின்பெருமை" என வரும் திருவிசைப்பாவை (13-8) நினைவூட்டுகின்றது.

அழகிய தோள் பன்னிரண்டு உடைய ஆறுமுக வேளே என்று உன்னை ஞானத்துடன் ஓதுகின்ற மகா தவசிகளுக்குப் பெருஞ் செல்வமா யுள்ளவனே!

ரிஷப வாகனத்தில் ஏறும் சிவபிரான்மீது அன்பு மிகவும் உள்ளத்திற் கொண்டவர்கள் (சிவனடியார்கள்) (தமது) தீவினையானது (உக, நெடிது ஓட) சிதறுண்டு தூரத்தே விலகிஓட, (மேல்) தன்னிடத்தே (அணைபவர்) வந்து சேர்ந்து தரிசிப்பதான பழைய ஊராகிய (ஆமாத்தூர் என்னும் தலத்தில்)

நறுமணம் நிறைந்த மாதர்கள் (விரகுடன்) சாமர்த்தியத்துடன், (ஆடும்) நடனம் செய்யும் (மாதையில்) ஆமாத்தூர் என்னும் தலத்தில்-வீரம் வாய்ந்த மயில்மீது வீற்றிருக்கும் பெருமாளே!

(மாதர்கள் துணையாக-உயிர் சுழல்வேனோ)

734

கண்ணனது கயல்மீன், பெண்மான், இவைகளுக்குச் சம்பந்தம் கொண்டது எனவும், கரும்பு போன்ற தோள் நல்ல மூங்கிலுக்கு ஒப்பாகும் ஒப்பாகும் எனவும், மொட்டான—

தாமரை போன்று வளர்ந்து மிக்கெழுந்துள்ள அழகிய கொங்கைகள் யானையின் இரண்டு தந்தங்களுக்கு ஒப்பாகப் பொருந்தியுள்ளன எனவும், நிரம்பி மேம்பட்டு (மை) அஞ்சனத்துக்கு (அல்லது இருளுக்கு) ஒப்பான கருமேகம் போன்றது கூந்தல் எனவும் — இவைகளைக் கொண்டு பெருமை வாய்ந்த யமனே—

'பெண்' என்னும் ஒரு உருவுக்கு உள்ள கோலாகலத்தை ஆடம்பரங்களை இன்று எடுத்து இளைஞர்களுடைய உயிர்களை (மன்) நன்றாகப் பிடிப்பதுபோல வந்துள்ள பெருமை வாய்ந்த அழகுள்ள மாதர்களின்—

(பின்பு) பிறகே செலவழியும் மகா மாயையில் (பெரு மோகத்தில்), அன்பை வைத்து (நான்) அழிந்து போகாமல், அந்த ஆசையில் உள்ள (கிஞ்சில் அத்தனை) சிறிய ஒரு அளவுக்கு (உள்ள ஆசையை) (உனது) திருத்தாள்களை விரும்ப உனது திருவருளைத் தந்தருளுக.

விண்ட னக்குற வானேனுடல் கம்ப டைத்தவன் வேதாவொடு
விண்டு வித்தகன் வீழ்தாளினர் விடையேறி—

*வெந்த னத்துமை யாள்மேவிய சந்த னப்புய மாதீசுரர்
வெங்க யத்துரி யார்போர்வையர் மிகுவாழ்வே;

†தண்பு டைப்பொழில் சூழ்மாதையில் நண்பு வைத்தருள் தாராதல
முங்கி ளைத்திட வானீள்திசை யொடுதாவித்—

தண்டரக் கர்கள் கோகோவென விண்டிடத்தட மாமீமிசை
சண்ட விக்ரம வேலேவிய பெருமாளே. (உ)

735 அருள் பெற

தனதன தானத் தானன, தனதன தானத் தானன
தனதன தானத் தானன தனதான

கருமுகில் போல்மட் டாகிய அளகிகள் தேனிற் பாகொடு
கனியமு தூறித் தேறிய மொழிமாதர்—

கலவிகள் நேரொப் பாகிகள் மதனிகள் காமக் க்ரோதிகள்
கனதன பாரக் காரிகள் செயலோடே;

பொருகயல் வாளைத் தாவிய விழியினர் சூறைக் காரிகள்
‡பொருளள வாசைப் பாடிகள் புவிமீதே—

---

* வெம்—விருப்பம்.

† திரு ஆமாத்தூரிற் சோலைகள்:
"அம்மா மலர்ச்சோலை ஆமாத்தூர்"—சம்பந்தர் 2-44-2.

‡ பொருளளவாசை காட்டுவர் பொதுமகளிர் என்பது :—
'கைக் காசுக்கள வருள்பவர்' 'காசள வுறவாடி'-திருப்புகழ் 156, 329.

விண்ணுலகுக்கு (அல்லது விண்ணவர்க்கு) உறவு பூண்டவனும், உடலெல்லாம் கண் கொண்டவனுமான இந்திரன், (வேதா) பிரமன், (விண்டு) திருமால் என்னும் (வித்தகன்) பேரறிவாளன்—இவர்கள் விழுந்து வணங்கும் திருவடியை உடையவர், ரிஷப வாகனத்தில் ஏறுபவர்—

விருப்பத்துக்கு இடமான (தனத்து) கொங்கையை உடைய உமையாள் விரும்பி அணையும் சந்தனம் பூசின புயங்களை உடைய (மாதீசுரர்) அர்த்த நாரீசுரர் அல்லது ஆமாத்தூர் ஈசர், கொடிய யானையின் உரியையே நிரம்பின போர்வையாகக் கொண்டவர் - ஆகிய சிவபிரானது - பெருஞ் செல்வமே!

குளிர்ந்த பக்கங்களில் உள்ள சோலைகளாற் சூழப்பட்ட திரு ஆமாத்தூரில் பிரியம் வைத்துத் திருவருளால் (தாராதலம்) தராதலமும் (உலகும்) கிளைத்திட — செழிப்புற்று ஓங்க, வானிலும், பெரிய திசைகளிலும் பரந்து நிறைந்து,

(தண்டு) (யாவரையும்) வருத்தின அரக்கர்கள் கோகோ என்று அலறி (விண்டிட) இரிந்து ஓடத், (தட மா மிசை)- பெரிய மயில் மீதேறிக், கோபமும் பராக்ரமும் கொண்ட வேலாயுதத்தைச் செலுத்தின பெருமாளே!

(தாள் பேணிட அருள் தாராய்)

735.

கரிய மேகம் போன்று, (மட்டு) வாசனை கொண்டுள்ளதாகிய கூந்தலை உடையவர்கள், தேனில் வெல்லத்துடன் பழம் அமுதம் இவைகள் ஊறித் தெளிந்தது போன்ற பேச்சுக்களை உடைய மாதர்கள்—

(கலவிகள்) புணர்ச்சியையும் தருதற்கு நேராக ஏற்புடையவர்கள், (மதனிகள்) செருக்கு உடையவர்கள், காமமும் (குரோதமும்) கோபமும் கொண்டவர்கள், (கனம்) (வட்டமான) கொங்கைப் பாரத்தை உடையவர்கள், தொழில் முயற்சியுடன்

சண்டை செய்யும் கயல் மீனையும், வாளை மீனையும் கடக்கவல்ல கண்களை உடையவர்கள், கொள்ளைக் காரிகள, (தங்களுக்குக் கிடைத்த) பொருள் எவ்வளவோ அவ்வளவுக்கே தங்கள் ஆசையைச் செலுத்துபவர்கள்— பூமியில்

பொதுவிகள் போகப் பாவிகள் வசமழி வேனுக் கோரருள்
புரிவது தானேப் போதது புகல்வாயே;
தருவடு தீரச் சூரர்கள் அவர்கிளை மாளத் தூளெழ
சமனிலை யேறப் பாறொடு கொடிவீழத்-
தனதன தானத் தானன என இசை பாடிப் பேய்பல
தசையுண வேல்விட் டேவிய தனிவீரா;
அரிதிரு மால்சக் ராயுத னவனிளை யாள்*முத் தார்நகை
அழகுடை யாள்மெய்ப் பாலுமை யருள்பாலா-
†அரவொடு பூளைத் தார்மதி அறுகொடு வேணிச் சூடிய
‡அழகர்தென் xமாதைக் கேயுறை பெருமாளே. (ரு)

736. தவநெறி யுற

தான தனதன தனதன தனதன
தான தனதன தனதன தனதன
தான தனதன தனதன தனதன தனதான

கால முகிலென நினைவுகொ டுருவிலி
காதி யமர்பொரு கணையென வடுவகிர்
காணு மிதுவென இளைஞர்கள் oவிதவிடு கயலாலுங்-

* "முத்தாம்பிகை யம்மை"—திருவாமாத்தூரில் தேவியார் திருநாமம். இந்த அம்மை மிக்க சக்தி வாய்ந்தவள், "இந்த முத்தம்மான் என்னைத் தூத்திக் கொத்துவாளோ" எனக் கூறித் தன் முன்னிலையிற் பொய் சொன்ன ஒருவனைப் பாம்பாக வெருட்டித் தூத்திக் கொத்தின தேவி. "முத்தை வென்ற முறுவலாள் உமை பங்கன் ஆமாத்தூர் அம்மானே."
—சம்பந்தர் 2-50-10.

† சிவன் அரவு பூளை அணிதல்:
'விளவு சிறுபூளை .. விட அரவு சூடு . இறைவர்'-(திருப்புகழ்273)

‡ ஆமாத்தூர் உறை சிவன்—அழகர்
"அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே"
"ஆமாத்தூர் அழகனைச் சிந்தியாதவர் தீவினையாளரே"
—அப்பர் 6-9, 5-44-2

x மாதை—திரு ஆமாத்தூர்—
'பாதி கொண்டதும் மாதையே பணிகின்றேன் மிகு மாதையே"—சம்பந்தர் 3-116-2
"வண்ண மதிமுடி நாயகரே மாதை யழகிய நாயகரே"
—திரு ஆமாத்தூர்க் கலம்பகம் 49.

o விதவிடல்—விசேடித்துரைத்தல்.

பொதுமகளிராய்க் காலம் கழிப்பவர்கள், போகம்—காம இன்பத்தைத் தரும் பாவிகள், - ஆகிய இவர்கள் பால் வசம் அழிகின்ற எனக்கு, ஒப்பற்ற உனது திருவருளைப் புரிவதுதான் எப்போது—அதைச் சொல்லி யருளுக.

(தரு) கற்பக விருக்ஷங்களை (பொன்னுலகை) (அடு) அழித்த தைரியத்தை உடைய அசுர சூரர்கள், அவர்களின் சுற்றத்தார் — ஆக யாவரும் மாண்டு பொடியெழ, யமனுடைய (நிலை) கொலைத்தொழில் (ஏற) பெருக, பருந்துகளுடன் காக்கைகள் (வீழ) விரும்பி வந்து சேரவும்—

தனதன தானத் தானன என்று இசை பாடிப் பேய்கள் பலவகைப்பட்ட மாமிசங்களை உண்ணும்படியும் வேலாயுதத்தை விட்டனுப்பின ஒப்பற்ற வீரனே!

ஹரி, திருமால், சக்ராயுதத்தை உடையவன் — (எனப்படும் பெருமானுக்குத்) தங்கை, முத்தார்நகை அம்மை எனும் பெயருடைய அழகி, (சிவனுடைய) மெய்யில் (உடலில்) (பால்) ஒரு பாகத்தில் (பாதியில்) உள்ள (அல்லது சத்திய குணம் கொண்ட) உமாதேவி அருளிய குழந்தையே!

பாம்பையும், பூளை என்கின்ற பூவால் ஆகிய மாலையையும், நிலவையும், அறுகுடன் சடையிற் சூடியுள்ள அழகருடைய அழகிய திருவாமாத்தூரில் வீற்றிருக்கின்ற பெருமாளே!

(அருள் புரிவதுதான் எப்போது புகல்வாயே)

736.

உரிய காலத்திற் பெய்த மழையென்று நினைவுகொண்டு — (அத்தகைய மழையைக் கண்டால் வரும் மகிழ்ச்சிபோல் மகிழ்ச்சி பூண்டு), (உருவிலி) உருவில்லாதவனை மாமதன் கொல்வதற்குப் போர் புரிந்து விட்ட அம்பு என்றும், மாவடுவின் வகிர் பாருங்கள் இது என்றும், இளைஞர்கள் விசேடித்து உரைக்கும் கயல் மீன்போன்ற கண்களாலும்—

கான மமர்குழ லரிவையர் சிலுகொடு
காசி னளவொரு தலையணு மன தினர்
காம மிவர்சில கபடிகள் படிறுசொல் கலையாலுஞ்;

சால மயல்கொடு புளகித கன தன
பார முறவண முருகவிழ் மலரணை
*சாயல் தனின்மிகு கலவியி லழிவுறும் அடியேனைச்_

சாதி குலமுறு படியினின் முழுகிய
தாழ்வ தறஇடை தருவன வெளியுயர்
தாள தடைவது தவமிக நினைவது தருவாயே;

வேலை தனில்விழி துயில்பவ னரவணை
வேயி னிசையது நிரை தனி லருள்பவன்
வீர †துரகத ‡நரபதி வனிதையர் கரமீதே-

xவேறு வடிவுகொ டுறிவெணெய் தயிரது
வேடை கெடவமு தருளிய பொழுதினில்
०வீசு கயிறுட னடிபடு சிறியவ னதிகோப

---

* சாயல்—துயிலிடம்—(பிங்கலம்)
† துரகதம்—குதிரை—கற்கி.

கற்கி அவதாரம் :—திருமாலின் தசாவதாரங்களில் இனி நிகழும் அவதாரம்; திருமால் குதிரை உருவாய் வந்து உலகில் நேர்மையை நிலைநிறுத்துவர்.

‡ நரன்—அருச்சுனன் "ஞாலமுண்டவனுக் குயிரெனச் சிறந்தோன், நரனெனு நாமமும் படைத்தோன்--பாரத அருச்சுனன் தவம்-75 பதி—குரு—பிங்கலம்

x வேறுவடிவு :—தொட்டிற் குழந்தையா யிருந்த போதிலும் உறி எட்டும்படியான அளவுக்குக் கையை நீட்டி வெண்ணெயைத் திருடி உண்ட வடிவினர்—

'நாரார் உறி யேற்றி நன்கமைய வைத்ததனை**
தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி
ஆராத வெண்ணெய் விழுங்கி—ஒராதவன்போல்
கிடந்தானை"—இயற்பா சிறிய திருமடல் 31.

० 'அளையது திருடியடிபடு சிறியவன் நெடியவன்' திருப்புகழ் 132; கோகுலத்தில் உள்ள இடையர் மனைகளிலெல்லாம் சென்று பால் தயிர், வெண்ணெய் இவைகளைத்திருடி உண்ண, இடைச்சிகள் முறையிட, யசோதை கண்ணனை வயிற்றில் கயிற்றினுற் கட்டி உரலொடு பிணித்து வைத்தாள—என்பது வரலாறு.

—திருப்புகழ் 231-பக்கம் 78 கீழ்க்குறிப்பு.

(கானம்) அமர் குழல் — காடுபோன்ற கூந்தலை (அல்லது வாசனை பொருந்திய கூந்தலை) உடைய மாதர்கள், (சிலுகொடு) சண்டைக் கூச்சலுடன், (தாம்பெற்ற) காசின் அளவு—பொருள் அளவே, ஒருதலை அ(ண்)ணும் மனதினராய்—ஒருதலைக் காமம் பொருந்திய மனத்தினராய் — காமம் (இவர்) கொண்ட சில கபட நெஞ்சத்தினராய் (படிறு) வஞ்சனைப் பேச்சு பேசும் சாத்திரங்களாலும்—

மிக்க மோகம் கொண்டு புளகாங்கிதம் பூண்ட கனத்த கொங்கைப் பாரம் பொருந்த, அழகிய, வாசனை வீசுகின்ற மலர்ப்படுக்கை உள்ள (சாயல் தனில்) துயிலிடத்தே மிகுந்த புணர்ச்சியில் அழிவுறும் அடியேனை-

சாதி, குலம் என்கின்ற இவையுள்ள (படியினில்) இப் பூமியில் (முழுகிய) வந்து உதித்து முற்றும் அனுபவிக்கின்ற சிறுமை நீங்க, (இடை தருவன) வழி தந்து உதவுகின்ற—பராகாச வெளியில் உள்ள உனது (தாளது அடைவது) திருவடியை அடைவதையும், தவநெறியை மிகவும் நினைப்பதையும், தந்து உதவுக.

(வேலைதனில் அரவணை விழி துயில்பவன்) கடலில் ஆதிசேடனும் பாம்பணையில் கண் துயில்பவன், புல்லாங்குழலின் இசை கொண்டு பசுக் கூட்டங்களுக்கு அருள் புரிபவன், (பார்த்த சாரதியாய்) வீரமுள்ள குதிரைகளைச் செலுத்தின கண்ணபிரான் (நரபதி) — அருச்சுனனுக்குப் (பதி) குரு — அல்லது — வீரமுள்ள துரகதம்—குதிரை கற்கி அவதாரம் கொள்ளும் அரசு, மாதர்களின் கையால்

வேறே உருவம் கொண்டு (கள்ள வேடம் பூண்டு) உறியில் இருந்த வெண்ணெய், தயிர், இவைகளை உண்ணும் (வேடை) வேட்கை—தாகம் தீர அமுதைப் பங்கிட்டு அருளின சமயத்தில், எறியப்பட்ட சயிற்றால் அல்லது கரமீதே வீசுகயிறு — கையினால் வீசப்பட்ட கயிற்றினால் அடிபட்ட சிறியவன் மிக்க கோபம் கொண்டிருந்த

*வாலி யுடனெழு மரமற நிசிசரன்
வாகு முடியொரு பதுகர மிருபது
மாள †வொருசரம் விடுமொரு க்ரியவன் மருகோனே-
வாச முறுமலர் விசிறிய பரிமள
மாதை நகர்தனி லுறையுமொ ரறுமுக
வானி லடியவ ரிடர்கெட அருளிய பெருமாளே. (௪)

தச்சூர்.
[ஆண்டார் குப்பம்.]

["தச்சூர் வடக்காகும் மார்க்கத்தில்" உள்ளது. இது ஆண்டார் குப்பம் என்னும் பிரபல சுப்ரமண்ய ஸ்தலம். பொன்னேரி ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் உள்ளது: ஆரணி, கள்ளக்குறிச்சி, திட்டக்குடி ஆகிய சப்டிஸ்டிரிக்டுக்களிலும். புதுக்கோட்டைக்குச் சமீபத்திலும், "தச்சூர்" எனப் பெயரிய கிராமங்கள் இருக்கின்றன.]

737. அருள் வேண்டுதல்

தத்தா தனத்தான தாத்தத் தனந்த
தத்தா தனத்தான தாத்தத் தனந்த
தத்தா தனத்தான தாத்தத் தனந்த தனதான

அச்சா யிறுக்காணி காட்டிக் கடைந்த
செப்பார் முலைக்கோடு நீட்டிச் சரங்க
ளைப்போல் விழிக்கூர்மை நோக்கிக் குழைந்து உறவாடி
அத்தா னெனக்கா்சை கூட்டித் தயங்க
வைத்தா யெனப்பேசி ‡மூக்கைச் சொறிந்து
x அக்கா லொருக்கால மேக்கற் றிருந்தி ரிலையாசை;
வைச்சா யெடுப்பான பேச்சுக் கிடங்க
ளொப்பா ருனக்கீடு பார்க்கிற் கடம்பன்
மட்டோ எனப்பாரின் மூர்க்கத் தனங்க ளதனாலே

---

* வாலி—மராமரம்—வீழ்த்தியது—திருப்புகழ் 231-பக்கம் 78 கீழ்க்குறிப்பு.

† ஒரு சரம் விட்டது—பாடல் 452-பக்கம் 6 கீழ்க்குறிப்பு.

‡ மூக்கைச் சொறிதல் — காரியம் நிறைவேற வேண்டி ஒருவருடைய மூக்கைச் சொறிந்து தனது வேண்டுகோளைத் தெரிவித்தல், தனது எளிமையைக் காட்டுதல்.

x "அன்று வந்தொரு நாள் நீர் போனீர் பின்பு கண்டறியோம் நாம்"—என்பது போன்ற தந்திரப்பேச்சு — திருப்புகழ் 46.

வாலியுடன் ஏழு மராமரங்களும் அற்று விழவும், அரக்கன் ராவணனுடைய அழகிய தலை ஒருபத்தும், கைகள் இருபதும் அழியும்படியும் ஒரு அம்பை விட்ட ஒப்பற்ற கரியவனும் ஆன திருமாலின் மருகனே!

நறுமணம் உள்ள மலர்கள் வீசின வாசனையைக் கொண்ட திரு ஆமாத்தூர் என்னும் நகரில் வீற்றிருக்கும் ஒப்பற்ற அறுமுகனே! விண்ணுலகில் இருந்த அடியார்களின் துன்பம் நீங்க அருளின பெருமாளே!

(தவமிக நினைவது தருவாயே)

தர்சூர்

737.

(அச்சாய்) வலிமை உடையதாய், இறுக்கு (அழுந்தப் பதிந்துள்ள) ஆணி காட்டி — இரும்பாணி போன்றும் கடைந்தெடுக்கப்பட்ட செப்புக்குடம் போன்றும் உள்ள சிமிழ்போன்ற கொங்கையாம் மலையை முன் காட்டியும், அம்புகள் போன்ற கண்களால் கூர்மையுடன் — நுண்மையாகப் பார்த்தும், (குழைந்து) மனம் நெகிழ்ச்சி காட்டி உறவாடியும்—

அத்தான் என்று அழைத்து, ஆசையும் கலந்து, (தயங்க வைத்தாய் எனப் பேசி) நீ என்னை வாடும்படி வைத்து விட்டாய் என்று பேசி, (மூக்கைச் சொறிந்து)— (வந்தவருடைய) மூக்கை (ஆசையுடன்) சொறிந்து, அந்தக் காலத்தில் (முன்பு) ஒரு காலத்தில் (ஏக்கற்று)— ஆசையால் விரும்பி எம்மிடம் வந்திருந்தாய், (ஆனால்) இப்போது (இலையாசை) ஆசை எம்மீது இல்லை—

வைச்சாய் எடுப்பான பேச்சுக் கிடங்கள் — (ஆகையால்) (எடுப்பான பேச்சுக்கு இடங்கள் வைச்சாய்) நிந்தையான பேச்சுக்கு நீ இடம் தந்துவிட்டாய் (ஒப்பார் உனக்கீடு பார்க்கிற் கடம்பன் மட்டோ) — பார்க்கில் — யோசித்துப் பார்க்கில், உனக்கு ஒப்பு — ஈடு — உனக்கு ஒப்பானவர்கள், ஈடானவர்கள் — உன்னைப் போலத் தகுதியுள்ளவர்கள் யார் இருக்கிறார்கள், கடம்பன்-முருகன் முதலாக—(முருகன் முதலாக உனக்கு ஒப்பார் யாரும் இல்லை) என்று கூறிப், (பாரில்) இவ்வுலகில் மூர்க்கத்தனம் கொண்ட செய்கைகளாலே—

மைப்பா கெனக்கூறி வீட்டிற் கொணர்ந்து
புற்பா யலிற்காலம் வீற்றுக் கலந்து
வைப்பார் தமக்காசை யாற்பித் தலைந்து திரிவேனோ;

எச்சாய் மருட்பாடு மேற்பட் டிருந்த
பிச்சா சருக்கோதி *கோட்டைக் கிலங்க
மிக்கா நினைப்போர்கள் †வீக்கிற் பொருந்தி நிலையாபே

‡எட்டா மெழுத்தேழை யேற்குப் பகர்ந்த
முத்தா வலுப்பான போர்க்குட் டொடங்கி
xயெக்கா லு மக்காத oசூர்க்கொத் தரிந்த சினவேலா!

தச்சா ! மயிற்சேவ லாக்கிப் பிளந்த
சித்தா ! குறப்பாவை தாட்குட் படிந்து
சக்காகி யப்பேடை யாட்குப் புகுந்து மணமாகித்-

---

*கோட்டைக்கிலங்க மிக்க நினைப்பார்கள் வீக்கிற்பொருந்தி-
"சிறையிடல்போற் சுடர்மனக் குகையுள் ஏகம்பத்
தோமெனும் பொருளை அடக்கி ஆனந்தம் உறுநர்"
(காஞ்சிப் புராணம்)

† வீக்கில் பொருந்தி—"பத்திவலையிற் படுவோன் காண்க" (திருவாசகம் 3-42)

"சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே"
(திருவாசகம் 37)

‡ எட்டாம் எழுத்து—தமிழில் "அ" என்னும் எழுத்து; இது சிவத்தைக் குறிக்கும்; ஏனைய விவரங்களைப் பாடல் 453 பக்கம் 8 கீழ்க்குறிப்பிற் பார்க்க.

இந்த அடி அருணகிரியாரின் வரலாற்றைக் குறிக்கும்.

x எக்காலு மக்காத சூர்க்கோத்து அரிந்த சினவேலா! தச்சா! இங்கு முருகவேளை ஒரு தச்சனுக்கு ஒப்பிட்டார். முருகவேள் என்னும் தச்சன் மக்கிப்போய்க் கெட்டுப்போகாத (அழியா வரம்பெற்ற) சூரன் என்னும் மாமரத்தை வேலால் அரிந்து அந்த மரத்துண்டுகளைக் கொண்டு மயில், சேவல் என்னும் உருவங்களை ஆக்கினன் (இது சூர்மாவை வேலால் அழித்து, அவன் மயில் சேவலாய் வர-சூரனும் மயிலைத் தமக்கு வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஏற்றதைக் குறிக்கும்.) இந்த அருமைச் செயலைச் செய்ததனால் முருகனை "மயில் சேவலாக்கிப் பிளந்த சித்தா" என்றார், சித்த மூர்த்திகளே இத்தகைய அற்புதச் செயல்களைச் செய்வார்களாதலின். இந்தத் திருவிளையாடலை

(மைப்பாகு)—கரிய வெல்லக்கட்டி போல இனிக்கப் பேசித் தமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், கோரைப்புல் பாயில் தக்க சமயத்தில் (வீற்றுக் கலந்து வைப்பார் தளித்துக் கலக்கும் (பொதுமகளிர்) தங்கள்மேல் ஆசை பூண்ட காரணத்தால் (பித்து) பைத்தியம் நிலை கலப்புண்டு திரிவேனோ!

(எச்சாய்) உயர்ந்த பொருளாய், அல்லது எஞ்சி நிற்கும் பொருளாய்—எஞ்சி நிற்பவராய், (மருட்பாடு மேற்பட்டிருந்த) மருள் (மயக்கம்) கடந்தவராய் இருந்த, பிச்சு ஆசருக்கு — பித்து என்னும் குற்ற முள்ளவருக்கு (பித்தராம் சிவபிரானுக்கு) ஓதி — உபதேசித்தவனே! கோட்டைக்கு இலங்க—மதிலரண் கொண்ட கோட்டையிற் சிறையிட்டது போல (மனமெனும் கோட்டையில்) விளங்கும்படி அதிகமாக—மிகவும் நன்றாய்த் தியானிப்பவர்களின் (வீக்கில்) பக்தி என்னும் கட்டிலே (பொருந்தி) அகப்பட்டு நிலைப்பவன் அன்றோ நீ! (நிலைப்பவன் என்றபடி)

(எட்டாம் எழுத்து) எட்டாம் எழுத்தை ஏழை யேனுக்கு உபதேசித்த முத்தனே (முத்திக்கு வித்தே)! பலமான போரில் தலையிட்டு (போரைத் தொடங்கி), எப்போதும் (மக்கிப் போகாத) அழியாத சூரனும் மாமரத்தையும் அவனுடைய குடும்பத்தையும் அரிந்து தள்ளின கோபம் கொண்ட வேலாயுதனே!

தச்சனே, [மாமரத்தினின்றும்] மயில், சேவல் வரும்படி அதனைப் பிளந்த சித்த மூர்த்தியே! குறப்பாவை வள்ளியின் தாளுக்குள் படிந்து வணங்கி, அவளுக்குச் [சக்காகி] கண்போல இனியனாகி, அந்தப் பெண்ணை அடையும் பொருட்டு அவளிருக்கும் இடத்திற்புகுந்து சென்று, அவளை மணந்து—

(204-ம் பக்கத் தொடர்ச்சி)

"முருகப்பாசாரி" என்னும் தலைப்பில் யான் எழுதின கட்டுரையைக் காண்க ... (அமிர்தவசனி அக்டோபர் ... நவம்பர் 1952-மலர் 4 இதழ் 7)

o "சூர் அரிந்த சினவேலா" ... முருகன் சீற்றம் — "வெஞ்சூர் தடிந்த அஞ்சுவரு சீற்றத்து முருகவேள்"...பெருங்கதை —1.42.230.

தப்பாம லிப்பூர்வ மேற்குத் தரங்கள்
தெற்காகு மிப்பாரில் கிர்த்திக் கிசைந்த
*தச்சூர் வடக்காகு மார்க்கத் தமர்ந்த பெருமாளே. (க)

திருக்கோவலூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். தென்னாற்காடு ஜில்லாவிலுள்ளது. அஷ்ட வீரத் தலங்களுள் ஒன்று. அந்தகாசுரனைச் சம்ஹரித்த ஸ்தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல்கள் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு. 707. 708-ஆம் பாடல்களும், பாட வேற்றுமையின்படி இத் தலத்துக்கு உரியனவாம்.]

738. மாதர்மீது மயக்கு அற

தான தானன தானன, தான தானன தானன
தான தானன தானன தனதான

பாவ நாரிகள் மாமட மாதர் வீணிக ளாணவ
பாவை யாரிள நீரன முலையாலும்-
பார்வை யாமிகு கூரயி லாலு மாமணி யார் குழை
பார காரன வார்குழ லதனாலுஞ்;
சாவ தார விதாரமு தார்த ராவித ழாலித
சாத மூரலி தாமதி முகமாலுஞ்-
சார்வ தாவடி யேனிடர் வீற மாலறி வேமித
சார மாயதி லேயுற லோழிவேனே;
ஆவ ஆர்வன நான்மறை யாதி மூல பராவரி
யாதி காணரி தாகிய பரமேச-
ஆதி யாரருள் மாமுரு கேச மால்†மரு கேசுர
ஞதி தேவர்க ளியாவர்கள் பணிபாத;

* பொன்னேரி தாலூகா, ஜமீன் கிராமம் தச்சூருக்கு வடக்கில் "ஆண்டார் குப்பம்" என்னும் சுப்பிரமண்ய ஸ்தலம் இருக்கின்றது.

† மருகேசுர அனுதி எனப் பிரிக்க.

[தவறுதலின்றி] எப்போதும் இந்த கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனும் நாலு திசைகள் கொண்ட இந்தப் பூமியில் பிரபலமான பேருடன் விளங்கும் தச்சூர் என்னும் ஊர் வடக்கே அமைந்துள்ள [மார்க்கத்து] வழியில் — ஆண்டார் குப்பம் என இப்போது வழங்கும் ஸ்தலத்தில்— வீற்றிருந்தருளும் பெருமாளே!

[பித்தனாந்து திரிவேனோ]

திருக்கோவலூர்

738.

பாவச்செயல் செய்கின்ற மாதர்கள், அழகும் மேன்மையும் உள்ள மாதர்கள், வீண் பொழுது போக்குபவர்கள், (ஆணவம்) செருக்கு உடைய (பாவையார்) மாதர்கள், இளநீர்போன்ற கொங்கையாலும்,

கண் ஆகிய மிக்க கூர்மையான வேலாலும், சிறந்த ரத்னம் நிறைந்த குழையாலும், பாரமான, மேகத்துக்கு நிகரான நீண்ட கூந்தலாலும்,

(சாவது) கொல்லுவ்சூணம், (ஆர) நிறைந்துள்ளதும், விதாரம்—செவ்விய இலவு போன்றதும் ஆன அமுது ஆர்தரா இதழால்—அமுது ஆர்தரு இதழால்—அமுது நிறைந்துள்ள வாயிதழாலும், (இத சாத மூரல்) இதம்—இனிமை, சாத (ஜ்யாத — தோன்றுவதாகும், (மூரல்) புன்சிரிப்பாலும், (இதாமதி) இதம் மதி முகமாலும் — இனிமை ஊட்டும் நிலவு போன்ற முகத்தாலும்—

(சார்வதா) சர்வதா—எப்பொழுதும், அடியேனுடைய துன்பங்கள் (வீற) (மிக) அதிகமாக, (மால் அறிவே) காம மயக்கப் புத்தியே அதிக இனிமை தருவதாய்-அத்தகைய புத்தியின் வழியிலே பொருந்துதலை விலக்கேனோ!

ஆவ —) ஆகவேண்டியனவற்றை, (ஆர்வன) நிரம்பக்கூறும் நான்குமறைகள்(வேதங்களின்)முதல்வனும், மூலப் பரமனும், (அரி ஆதி) திருமால் முதலான தேவர்களும் காண்பதற்கு அரியவருமான பரமேசருமாகிய-

ஆதிமூர்த்தியார் பெற்ற அழகிய முருகேசனே! திருமாலின் (மருகேசுர) மருகேசனே! அநாதி மூர்த்தியே! (ஆதி—தொடக்கம் இல்லாதவனே)! தேவர்கள் யாவரும் பணிகின்ற பாதனே!

*கோவ தாமறை யோர்மறை யோது மோதம் விழாவொலி
கோடி யாகம மாவொலி மிகவீறும்-
கோவை மாநகர் மேவிய வீர வேலயி லாயுத
கோதை யானையி னோடமர் பெருமாளே. (க)

தேவனூர்.

[இது தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக்கு வடகிழக்கு 5-மைல். திருக்கோவலூருக்கு 2-மைலிலும் செய்யூர், கள்ளக்குறிச்சி, ஜயங்கொண்ட சோழபுரம் ஆகிய சப் டிஸ்டிரிக்ட்டுக்களிலும், 'தேவனூர்' என்னும் கிராமங்கள் உள்ளன. தேவார வைப்புஸ்தலம்.]

739. ஆசைகள் அற

தான தான தந்த தந்த, தான தான தந்த தந்த
தான தான தந்த தந்த தனதான

ஆறு மாறு மஞ்சு மஞ்சும் ஆறு மாறு மஞ்சு மஞ்சும்
ஆறு மாறு மஞ்சு மஞ்சும் அறுநாலும்-
†ஆறு மாய சஞ்ச லங்கள் வேற தாவி ளங்கு கின்ற
ஆர ணாக மங்க டந்த ‡கலையான :
ஈறு கூற ரும்பெ ருஞ்சு வாமி யாயி ருந்த நன்றி
யேது வேறி யம்ப லின்றி யொருதானாய்-
யாவு மாய்ம னங்க டந்த மோன வீட டைந்தொ ருங்கி
யா௦ன வாவ டங்க என்று பெறுவேனோ ;

---

* திருக்கோவலூரும் மறையவரும்
"தூய நான் மறையாளர் சோமுச் செய்ய
** திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே."
(சோமு—சோமயாகம்)
"சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவலூர்"—பெரிய திருமொழி 2.10-1, 8.

† தத்துவங்கள் (96 —பாடல் 157-பக்கம் 366-கீழ்க்குறிப்பு

‡ கலையான ஈறு—உபதேச கலையாகிய சித்தாந்தம்.

௦ அவா—"அநாதியாய அவிச்சையும் (அஞ்ஞானமும்), அது பற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டும் என்னும் அவாவும், அது பற்றி அப் பொருட்கட் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறு தலைக்கட் செல்லும் கோபமுமென வடநூலார் குற்றம் ஐந்தென்றார்-(குறள் 360 உரை)

(கோ அதா-) மேன்மையாக—சிறப்பாக, மறையோர் வேதங்களை ஓதும் (ஓதம்) (ஓசை) வெள்ளமும் (அல்லது மோதம்—மகிழ்ச்சியும்), திருவிழாக்களின் ஒலியும் கோடிக் கணக்கான ஆகமங்களின் பேரொலியும் மேம்பட்டு மிக்கு எழுகின்ற

திருக்கோவலூர் என்னும் பெரிய நகரில் வீற்றிருக்கின்ற வீரனே! வேல் என்கின்ற கூரிய ஆயுதத்தை உடையவனே! கோதை யானையினோடு — மாது தேவசேனையுடன் (அல்லது) கோதை (வள்ளி), (யானை) தேவசேனை இவர்களோடு) வீற்றிருக்கும் பெருமாளே!

(மாலறிவே—அதிலேயுற லொழிவேனோ)

தேவனூர்.

739.

(ஆறும் ஆறும்) பன்னிரண்டும், (அஞ்சும் அஞ்சும்) பத்தும், (ஆறும் ஆறும்) பன்னிரண்டும், (அஞ்சும் அஞ்சும்) பத்தும், (ஆறும் ஆறும்) பன்னிரண்டும், (அஞ்சும் அஞ்சும்) பத்தும், (அறு நாலும்) இருபத்து நான்கும்—

ஆறும் ஆய (12+10+12+10+12+10+24+6) தொண்ணூற்று ஆறு ஆன (சஞ்சலங்கள்) (துன்பங்களுக்குக் காரணமான) தத்துவங்களுக்கும் வேருக விளங்குகின்றதும், வேதம், ஆகமம் இவைகளைக் கடந்ததும், உபதேச கலையாகிய—

(ஈறு) சித்தாந்தமே சொல்லுதற்கு அரியதான பெரிய தெய்வ நிலையா யிருந்ததுமான (நன்றி) நன்மைப் பொருளை, (ஏது) மூலகாரணம் வேறு சொல்லுதற்கு இல்லாமல்—ஒப்பற்ற தானகவே நின்று—

எல்லாமாய் விளங்கி, மனங்கடந்ததான மோன இன்ப வீட்டை, அடைந்து (ஒருங்கி மனம் ஒருமைப்பட்டு ஒடுங்கி நான் (எனது ஆசைகளெல்லாம் அடங்கும்படியான (பாக்கிய நிலையை) என்று பெறுவேனோ!

மா று கூ றி வந்தெ திர்ந்த சூரர் சேனை மங்க வங்க
வாரி மேல்வெ குண்ட சண்ட விததாரை-

வாகை வேல கொன்றை தும்பை மாலை கூவி ளங்கொ ழுந்து
வால சோம னஞ்சு பொங்கு பகுவாய;

சீறு மாசு ணங்க ரந்தை ஆறு வேணி கொண்ட நம்பர்
தேசி காக டம்ப லங்கல் புனைவோனே-

தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூர்வி ளங்க வந்த பெருமாளே. (க)

740 புகழ்ந்து துதிக்க

தான தான தந்த தந்த, தான தான தந்த தந்த
தான தான தந்த தந்த தனதான

தார காசு ரன்ச ரிந்து வீழ வேரு டன்ப றிந்து
*சாதி பூத ரங்கு லுங்க முதுமீனச்-

†சாக ரோதை யங்கு ழம்பி நீடு தீகொ ளுந்த அன்று
‡தாரை வேல்தொ டுங்க டம்ப மததாரை;

ஆர வார வும்பர் கும்ப வார ணசை லம்பொ ருந்து
மானை யாளு நின்ற குன்ற மறமானும்-

ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேனே;

---

* ஏழுமலை, கிரவுஞ்சம், கடல், இவையெலாம் வேலால் தீக்கொளுந்தப் பட்டது.

"களவுடை வாழ்க்கை யுளமனக் கொடியோன்
படர்மலை ஏழும் குருகமர் பொருப்பும்
மாவெனக் கவிழ்ந்த மறிகட லொன்றும்
கடுங்கனற் பூழி படும்படி நோக்கிய
சாரையெட் டுடைய கூரிலை நெடுவேல்"—கல்லாடம் 61.

† "வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்"
"வேலுக் கணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே"
—கந்தரலங்காரம் 40, 62.

‡ தாரை—கூர்மை—
"தாரை எட்டுடைய கூரிலை நெடுவேல்"—கல்லாடம் 61.

பகையைச் சொல்லி வந்து எதிர்த்த சூரருடைய சேனைகள் மங்கி அழிய, கப்பல்கள் உலவும் கடலைக் கோபித்ததும், (சண்டவித) விரைவு—கோபம் இவை வாய்ந்ததும், கூர்மை கொண்டதும்

வெற்றி கொண்டதுமான வேலை ஏந்தியவனே! கொன்றை, தும்பை இவற்றுலாய மாலைகள், வில்வக் கொழுந்து, பாலசந்திரன் (இளம்பிறை), விஷம பொங்கி எழும் பிளப்பு வாயையுடையதும்

சீறிக் கோபிப்பதுமான (மாசுணம்) பாம்பு, (கரந்தை) திருநீற்றுப் பச்சை, கங்கை ஆறு இவைகளைச் சடையிற் கொண்ட (நம்பர்) பெருமான்—சிவனுக்குத் (தேசிகா) குருமூர்த்தியே! கடப்பமாலை அணிபவனே!

தேவர்கள் யாவரும் ஒன்றுகூடிப் பூமியிலே வந்து வணங்கும் தேவனூர் விளங்க வந்த பெருமாளே!

(யான் அவா அடங்க என்று பெறுவேனோ)

740.

தாரகாசுரன் நிலை பெயர்ந்து வீழ்ந்து (மாள), வேருடன் பறிபட்டுச் சிறந்த மேருமலையும் (குலுங்க)நடுக்கம் கொள்ள, முற்றின மீன்களைக் கொண்ட

சாக ரோதையங் குழம்பி (அம் ஓதை சாகரம் குழம்பி) அழகும் ஆரவாரமும் கொண்டுள்ள கடல் கலக்க முற்று பெருந் தீயிற்பட அன்று கூரிய வேலைச் செலுத்தின கடம்பனே! மதநீர் ஒழுக்கையும்

ஆரவாரத்தையும் கொண்டதும், தேவலோகத்தில் உள்ளதும், [கும்பம்) மத்தகத்தைக் கொண்டதும் ஆன (அசலவாரண) மலைபோன்ற ஐராவதம் என்னும் யானைமீது வீற்றிருந்த (மானையாளும்) (மானாள்) மான்போன்ற தேவசேனையும், (நின்ற குன்ற மறமானும்) குன்றம் நின்ற — வள்ளிமலையில் இருந்த வேடப்பெண் மான்போன்ற வள்ளியும்—

(ஆக இருவரும்) ஆசை மிகவும் கொள்ளும் நண்பனே என்றும், சிறந்த மயில்வாகனனே, கந்தனே என்றும் என் ஆசைதீர என்று நான் மனம் ஒருமைப்பட்டு நின்று புகழ்வேன்! (அல்லது) என்றைக்கும் மனம் ஒருமைப்பட்டு நின்று புகழ மாட்டேனே!

*பார மார்த ழும்பர் †செம்பொன் மேனி யாளர் கங்கை வெண்க
பால மாலை கொன்றை தும்பை சிறுதாளி-

பார மாசு ணங்கள் சிந்து வார வார மென்ப டம்பு
பானல் கூவி ளங்க ரந்தை அறுகோடே;

சேர வேம ணந்த நம்ப ரீச னரி டஞ்சி றந்த
‡சீத ளார விந்த வஞ்சி பெருவாழ்வே-

தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூர்வி ளங்க வந்த பெருமாளே. (உ)

741 பரம்பொருள்

தான தானன தனனு தனதன
தான தானன தனனு தனதன
தான தானன தனனு தனதன தந்ததான

ˣகாணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்-

காய பாசம தனிலே யுறைவது
மாய மாயுட லறியா வகையது
காய மானவ ரெதிரே யவரென வந்துபேசிப்;

* பாரமார் தழும்பர்—பாடல் 463—பக்கம் 44—கீழ்க்குறிப்பு.

† செம்பொன்மேனி—"பொன்னியலுந் திருமேனி"
—சம்பந்தர்—3.1?6.3.

‡ பார்வதி—தாமரையில் வீற்றிருப்பது
—பாடல் 31 பக்கம் 91—கீழ்க்குறிப்பு.

x பரம்பொருள் இலக்கணம் — இவ்வாறு விளக்கப்பட்ட பாடல்கள் 343, 489, 501, 980, 1052 எண்ணுள்ளன.

(பாரமார் தழும்பர்) தேவியின் மிக்க கொங்கைப் பாரத்தின் தழும்பு கொண்டவர், செம்பொன் போன்ற திருமேனியை உடையவர், கங்கை, வெண்ணிறத்த கபால மாலை, கொன்றை, தும்பை, (சிறு தாளி) ஒருவகைச் செடி(ப்பூ.)

பாரமான பாம்புகள், (சிந்து வாரம்) நொச்சி, (ஆரம்) கடம்பு, (என்பு) எலும்பு, அடம்பு-ஒருவகைக் கொடிப் பூ, (பானல்) கருங்குவளை, (கூவிளம்) வில்வம், காந்தை, அறுகுடனே

சேர்ந்து விளங்கி மணக்கும் (நம்பர்) பெருமான், ஈசனார் ஆகிய சிவனது இடது பாகத்திற் சிறந்து விளங்கும் குளிர்ந்த (அரவிந்த) தாமரையில் வீற்றிருக்கும் மாது பார்வதி தேவியின் பெருஞ் செல்வமே!

தேவர்கள் எல்லாரும் ஒன்றுகூடிப் பூமியில் வந்து வணங்கும் தேவனூருக்கு விளக்கம் தர வந்துள்ள பெருமாளே!

(ஆவல்தீர என்று நின்று புகழ்வேனோ)

741.

காண்பதற்குக் கூடாததும், உருவமும் அருவமும் கொண்டதும். *பேசுதற்கு முடியாததும், (பலவித) உரை விளக்கங்களுக்கும் இடம் தருவதும் (அல்லது—பேசும் திறத்தைத் தருவதும்), காணப்படும் நான்கு மறைகளுக்கும் (வேதங்களுக்கும்) முடிவான பொருளாய் நிறைந்து நிற்பதும்—(மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும்) ஐம்பூதங்களால் ஆய—

(இந்த) உடல் மீதுள்ள பாசத்திலே (ஆசையிலே) இருந்து விளங்குவதும், மாயப்பொருளாய் நின்று இவ்வுடலால் அறிய முடியாத வகையில் இருப்பதுவும், † (காயமானவர்—காய சித்திபெற்றவராலும் தம் எதிரே அவரைப்போல மனிதனாய் வந்து பேசினாலும்—இன்னாரென அறிந்து

---

* 'உரையே தருவது—ஆகமப் பிரமாணத்தால் அறியப்படுவது.

† 'காயமானவர் எதிரே அவரென வந்து பேசிப் பேனுறாதது'—சரீரத்தை உடைய மனிதர்கள் முன்னே பக்குவ காலத்தில் அவரைப் போல மானிடச் சட்டை சாத்திவந்து உபதேச முதலியவை செய்தும், மனிதருள் ஒருவராக மதிக்கமுடியாது,

பேணொ ணாதது வெளியே யொளியது
மாய னாய னறியா வகையது
*பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்-
பேரு மாய்கலை யறிவாய் துரியவ
தீத மானது வினையேன் முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே;
வீணொ ணாதென அமையா தசுரரை
நூறி யேயுயிர் நமனீ கொளுவென
வேல்க டாவிய கரனே யுமைமுலை யுண்டகோவே-
வேத நான்முக †மறையோ னெடும்விளை
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா குறவர்கு றிஞ்சியூடே;
சேணொ ணாயிடு மிதண்மே லரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
‡சேர நாடிய திருடா வருடரு கந்தவேளே-
xசேரொ ணாவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிக ளுளமே யுறைதரு
oதேவ னூர்வரு குமார வமரர்கள் தம்பிரானே. (௩)

திருவதிகை.

[இது தென்னாற்காடு ஜில்லா பண்ணுருட்டி ரெயில்வே ஸ்டேஷனிக்குத் தென்கிழக்கு $1\frac{1}{2}$ மைல். கெடில நதியின் வட கரையி லுள்ளது. மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

---

* "வேறாய் உடனானான்"—சம்பந்தர்—1-11-2.

† பிரமனைக் குட்டிய லீலை—பாடல் 6?8 பக்கம் 4?6 —கீழ்க்குறிப்பு.

‡ செம்மான் மகளைத் திருடுந்திருடன்'—கந்தரநுபூதி—12.

x ஞானிகள் பறவைபோலத் திரிவது; யாரும் தம்முடன் ஒட்டாத வகையில் திரிவது—பாடல் 235-பக்கம் 88—கீழ்க்குறிப்பு.

o "தேவை யூர்வரு" என்றும் பாடம்: தேவை என்பது இராமேசுரம்.

போற்ற முடியாததும், ஆகாய வெளியில் ஒளியாய் நிற்பதும், திருமால் பிரமா இவர்களால் அறியமுடியாத வகையில் இருப்பதும், பேதம் அபேதம் (வேற்றுமை ஒற்றுமை) எனப்படும் தன்மைகளுடன் உலகமாய் வளர்வதும்-(விந்து) (பீடம்), நாதம் (இலிங்கம்)-எனப்படும் பேருடையதாயும், கலை அறிவாயும் (நூலறிவாகவும்), துரியத்துக்கு) (யோகியர் தம் மயமாய் நிற்கும் உயர் நிலைக்கும் (அதீதமானது) மேற்பட்டதானதும், (வினையேன்) வினைக்கு ஈடான என்னுடைய முடிந்த தவத்தின் பேருக உள்ளதும், திருவருள் நிறைவாய் விளைகின்றதும் — ஆக இந்த இலக்கணங்களெல்லாம் பொருந்தியவன் நீ ஒருவனே!

‡ (வீண்) வீணான காரியம் கூடாதென (விலக்கி) (அமையாத) அடங்கியிராத அசுரர்களைப் பொடியாக்கி அவர்கள் உயிரை—"யமனே! நீ கொள்வாயாக" என்று கூறி வேலைச் செலுத்தின திருக்கரத்தனே! உமையின் கொங்கைப் பாலை உண்ட அரசே!

வேதம் கற்றவனும் நான்கு முகத்தவனும் ஆன அந்தணன் பிரமனெடும்—பேசி விளையாடியே—அவன் குடுமியிலே திருக்கரத்தால் பலமாகக் குட்டின வீரனே! குறவர்களின் மலை நிலத்து ஊராம் வள்ளிமலையில்—

மிக உயரம் பொருந்தியுள்ளதாய்க் கட்டப்பட்டிருந்த பரண் மீதிருந்த பெண் வள்ளியிடம் சென்று காம மயக்கம் கொள்ளும்படியான திருவிளையாடல்களைச் செய்து அவளுடன் அணைய விரும்பின திருடனே! அருள்பாளிக்கும் கந்தவேளே!

x யாரும் தம்மிடம் அணுக முடியாதவகையில் வெளியிலேயே திரிந்து கொண்டிருக்கும் மெய்ஞ்ஞான யோகிகளின் உள்ளத்தே விளங்கி வீற்றிருக்கும் தம்பிரானே! தேவனூரில் எழுந்தருளியுள்ள குமரனே! தேவர்கள் தம்பிரானே!

(அருள் நிறைவாய் விளைவது ஒன்று நீயே)

---

‡ 'வீண ஒணது என அடையாது'—யுத்தஞ் செய்தல் வீண், அது தகாது என்று சும்மா இராது (அசுரரைக் கொன்று)

x "ரேரோணவகை"—கருவிகள் ஒன்றும் தாக்காவண்ணம்—இவையும், பக்கம் 213-கீழ்க் குறிப்புக்கள் *, †அவையும்—கொழும்பு ஆசிரியர் மு. திருவிளங்கம் அவர்களின் உரை.

742. கலவி மயக்கு ஒழிய

தனதனனத் தனதனனத் தனதனனத் தனதனனத்
தனதனனத் தனதனனத் தனதான

பரவுவரிக் கயல்குவியக் குயில்கிளியொத் துரைபதறப்
பவளநிறத் ததரம்விளைத் தமுதூறல்-

பருகிநிறத் தரளமணிக் களபமுலைக் குவடசையப்
படைமதனக் கலையடவிப் பொதுமாதர்;

சொருகுமலர்க் குழல்சரியத் தளர்வுறுசிற் றிடைதுவளத்
துகிலகலக் க்ருபைவிளைவித் துருகாமுன்-

சொரிமலர்மட் டலரணைபுக் கிதமதுரக் கலவிதனிற்
சுழலுமனக் கவலையொழித் தருள்வாயே;

*கருகுநிறத் தசுரன்முடித் தலையொருபத் தறமுடுகிக்
கணைதொடுமச் சுதன்மருகக் குமரேசா-

கயிலைமலைக் கிழவனிடக் †குமரிவிருப் பொடுகருதக்
கவிநிறையப் பெறும்வரிசைப் புலவோனே;

திரள்கமுகிற் றலையிடறிப் பலகதலிக் குலைசிதறிச்
செறியும்வயற் கதிரலையத் திரைமோதித்-

‡திமிதிமெனப் பறையறையப் பெருகுபுனற் கெடிலநதித்
திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே, (க)

---

* கருகுநிறத்த சுரன்—ராவணன்—"கறுத்த அரக்கன்"
—சம்பந்தர் 2.57 8.

† தமரி விருப்பொடு கருதக், கவி நிறையப் பாடினது:
"பண்முலை மெத்தப் பொதிந்து பண்புறுகின்ற பாலைப் பலதிசை மெச்சத் தெரிந்த செந்தமிழ் பகர் என இச்சித்து உகந்து கொண்டருள் தம்பிரானே"

"நுகர் வித்தகமாகு மென்று உமை
மொழியிற் பொழிபாலை உண்டிடு...பாலன்"
—திருப்புகழ் 136, 110.

‡ ஆற்றில் வெள்ளம் வருவதை ஊராருக்கு உணர்த்த திமிதிமென்று பறை அறைவிப்பது அக்காலத்திய வழக்கம்.

742

அகன்று, ரேகைகளோடு கூடியதாய்க் கயல்மீன் போல உள்ள கண்கள் குவியக், குயில் போலவும் கிளி போலவும் பேசும் மொழி [பதறு] கலங்கி வெளிவரப், பவளத்தின் நிறங்கொண்ட வாயிதழ்கள் விளைவிக்கும் அமுதன்ன ஊறலை—

உண்டு, ஒளிகொண்ட முத்து மணிமாலை அணிந்த [சந்தனக்] கலவைபூண்ட கொங்கை மலை அசைதர, [படை மதனக் கலையடவி] ஐந்து மலர்ப் பாணங்களை உடைய மன்மதனது சாஸ்திரக் காட்டை—சாஸ்திரக் குப்பையை—உணர்ந்துள்ள [கொக்கோக சாஸ்திரத்தைக் கற்றுள்ள] பொது மாதர்கள்—

மலர் சொருகியுள்ள கூந்தல் சரியவும், தளர்ந்துள்ள சிற்றிடை துவண்டுபோகவும் [துவட்சியுறவும்] கட்டியுள்ள ஆடை விலகவும் காம ஆசையை விளைவித்து [ஆசையை எழுப்பி] [மனம்] உருகி எதிரே—

சொரியப்பட்ட மலர்களின் வாசனை பரந்துள்ள படுக்கையிலே புகுந்து இன்பந்தரும் இனிமைப் புணர்ச்சியிலேயே சுழலுகின்ற என் மனக்கவலையை ஒழித்தருளுவாயாக.

கரிய நிறத்தையுடைய அசுரன் (ராவணனது) மகுடமணிந்த தலை ஒருபத்தும் அற்றுவிழ வேகமாகச் சென்று அம்பைச் செலுத்தின திருமாலின் மருகனே! குமரேசனே!

கயிலைமலைக்கு உரியவனும் சிவனது இடது பாகத்தில் உள்ள குமரி [பார்வதி] விருப்பத்தொடு கருதிப் பிரசாதிக்க [பாலமுது ஊட்ட] [அந்தப் பிரசாதத்தின் பலத்தால்] பாடல்கள் நிறையப் பாடும் திறத்தைப் பெற்ற [வரிசை] மேம்பாட்டைத் தகுதியையுடையஞானசம்பந்தப்புலவனே!

திரண்ட கமுகமரத்தின் உச்சியில் இடறியும் பல வாழைகளின் குலைகள் சிதறிடவும், நிறைந்த வயல்களில் நெற்கதிர்கள் அலைச்சல் படவும், அலைகள் வீசி—

திமிதிமி என்று பறைகள் முழங்கப் பெருகிவரும் வெள்ளநீர் கொண்ட கெடில நதிக்கரையில் உள்ள திரு அதிகைப் பதியில் வீற்றிருக்கும் முருகப் பெருமாளே!

[மனக்கவலை யொழித்தருள்வாயே]

743 பன்னிரு புயங்களை ஓத

தனன தானன தனதன தனதன
தனன தானன தனதன தனதன
தனன தானன தனதன தனதன தனதான

விடமும் வேலன மலரன விழிகளு
மிரத மேதரு மமுதெனு மொழிகளும்
விரகி னுலெழு மிருதன வகைகளு மிதமாடி—
மிகவு மாண்மையு மெழினல முடையவர்
வினையு மாவியு முடனிரு வலையிடை
வெளியி லேபட விசிறிய விஷமிக ளுடன்மேவா;
இடரு ருதுனை நினைபவர் துணைகொள
இனிமை போ*லெழு பிறவியெ னுவரியி
னிடைகெ டாதினி யிருவினை யிழிவினி லிழியாதே—
இசையி னுடொறு மிமையவர் முனிவர்கள்
ககன பூபதி யிடர்கெட அருளிய
இறை†நி னறிரு புயமென வுரைசெய அருள்வாயே;
படரு மார்பினி லிருபது புயமதொ
டரிய மாமணி முடியொளி ரொருபது
படியி லேவிழ ‡வொருகணை தொடுபவ ரிடமாராய்—
xபரவை யூடெரி பகழியை விடுபவர்
பரவு வார்வினை கெடஅரு ளுதவியெ
பரவு பால்கட லரவணை துயில்பவர் மருகோனே;
அடர வேவரு மசுரர்கள் குருதியை
அரக ராவென அலகைகள் பலியுண
அலையும் வேலையும் அலறிட எதிர்பொரு மயில்வீரா—

---

* எழுபிறவி—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்—[பாடல் 658-பக்கம் 34 கீழ்க்குறிப்பு]

†நின் ஆறிருபுயமென உரைசெய அருள்வாயே—எனத் திரு அதிகையில் அருணகிரியார் வேண்டினர். இவ் வேண்டுகோளுக்கு இசையப் பின்னர்—

"முற்றிய பனிருதோளும் செய்ப்பதியும் வைத்துயர்
திருப்புகழ் விருப்பமொடு செப்பு" (விநா-துதி-ரு—பக்கம் 10)
—என வயலூரில் அநுக்கிரகிக்கப் பெற்றார்.

‡ ஒரு கணை தொடுபவர்—பாடம் 452-பக்கம் 6 கீழ்க்குறிப்பு.

xகடல்மீது பாணம்விட்டது—பாடல் 177-பக்கம் 412 குறிப்பு.

743

விஷமும் வேலும் போன்றனவும், மலர் போன்றனவுமான கண்களும், ருசியைத்தரும் அமுது என்று சொல்லும்படியுள்ள மொழிகளும், உற்சாகத்துடன் வளர்ந்துள்ள இரண்டு கொங்கை உறுப்புக்களும் இன்பம் தருவனவாய்க் கொண்டு—

மிக்க அகங்காரத்தையும் அழகு நலத்தையும் கொண்டவர்கள், (ஆண்மக்களின் தொழில் திறமும், ஆவியும் இரண்டும் ஒரு சேரவே தங்களுடைய பெரிய வலையிலே பகிரங்கமாகவே சிக்கும்படி (அந்த வலையை) வீசுகின்ற விஷமிகளுடன் மேவி—சேர்ந்து—

துன்பப்படாமல், உன்னை நினைக்கின்றவர்களின் துணையைப் பெறுதற்கு, இன்பம் போலக் காணப்படுகின்ற எழு பிறவி என்கின்ற (உவரியினிடை) கடலிடையே (கெடாது) அகப்பட்டு அழியாமல், இனியேனும் இருவினை என்கின்ற இழிந்த நிலையில் இறங்காமல் —

புகழுடனே நாள்தோறும் தேவர்கள், முனிவர்கள், விண்ணுலக அரசன் இந்திரன் ஆதிய தேவர்களின் துன்பம் தொலைய அருள் புரிந்த இறைவனே! உன்னுடைய பன்னிரு புயங்களைப் (போற்றி) உரைக்க அருள்புரிவாயாக.

பரவி அகன்றுள்ள மார்பின் பக்கத்திலுள்ள இருபது புயங்களும், அருமையான சிறந்த ரத்ன கிரீடங்கள் விளங்கும் ஒப்பற்ற பத்துத் தலைகளும் பூமியில் அற்றுவிழ ஒரு அம்பைச் செலுத்தினவர், (இடம்) சந்தர்ப்பம் (ஆராய்) ஆராய்ந்தறிந்து

கடலின் மீது எரி அம்பைப் பிரயோகித்தவர், தம்மைப் போற்றுபவர்களுடைய வினைகெட அருள் பாலித்துப், பரந்துள்ள பாற்கடலில் பாம்பணையில் துயில் கொள்பவரின் மருகனே!

நெருங்கி வந்த அசுரர்களின் ரத்தத்தை (உணவு கிடைத்த மகிழ்ச்சியால்) அரகரா என்று மகிழ்ந்து கூவி பேய்கள் உணவு உண்ண, அலை வீசி அலையும் கடலும் கூச்சலிட, எதிர் பொருத—சண்டை செய்த மயில் வீரனே!

அமர ராதிய ரிடர்பட அடர்தரு
கொடிய தானவர் *திரிபுர மெரிசெய்த
அதிகை மாநகர் மருவிய சசிமகள் பெருமாளே. (2)

திருவாமூர்.

[இது திருவதிகைக்குச் சமீபத்தி லுள்ளது. பண்ணுருட்டியி லிருந்து 5-மைல். இது திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தமக்கையாராகிய திலகவதியார் என்பவர் அவதரித்துச் சிவபுண்ணியஞ் செய்து புகழை வளர்ப்பதற்கு ஆதார ஸ்தானமாக இருந்த தலம்.]

744. அகப்பொருள்

தான தனன தனத்தந் தனதான

சீத மதிய மெறிக்குந் தழலாலே-
சிறி மதனன் வளைக்குஞ் சிலையாலே;
ஓத மருவி யலைக்குங் கடலாலே-
ஊழி யிரவு தொலைக்கும் படியோதான்;
† மாது புகழை வளர்க்குந் திருவாமூர்-
வாழு மயிலி லிருக்குங் குமரேசா;
காத லடியர் கருத்தின் பெருவாழ்வே-
†காலன் முதுகை விரிக்கும் பெருமாளே.

---

* திரிபுரத்தை எரித்த இடம் திருவதிகை.
"பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை"...
தேமன்னு கொன்றையுந் திங்களும் சூடிதன் சேவகமே"
(தனிப்பாடல்)

"முற்ற வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந் தீயெழ
விற்றான் கொண்டெயில் எய்தவர் வீரட்டம்
கற்றா லல்லதென் கண்துயில் கொள்ளுமே"—அப்பர் 5-53-4.

† மாது—திலகவதியார். அப்பர் சுவாமியின் தமக்கையார். "தமது தமக்கையாரால் சைவ சமயத்திற்கு மீட்கப் பெற்றுச் சூலைநோய் நீங்கத் திருவருள் பெற்ற புனிதத் தலமாகிய திருவதிகை வீரட்டானத்தில் அப்பருக்குத் தனி ஆலயம் இருக்கிறது. அதில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் "புகழ்மாது விளங்க" என்ற தொடக்கத்துக் குலோத்துங்கன் I காலத்துக் கல்வெட்டும் (ஒன்று) இருக்கின்றது"—பெரிய புராண உரை
—திருநாவுக்கரசு நாயனார் புராணம்—பக்கம் 770.

(தொடர்ச்சி பக்கம் 22')

தேவர் முதலானோர் துன்பப் படும்படி மேல் விழுந்து நெருங்கி எதிர்த்த பொல்லாத அசுரர்கள் வாழ்ந்திருந்த முப்புரங்களை எரித்த இடமாகிய (திரு) அதிகை மகா நகரில் வீற்றிருக்கும் பெருமாளே! இந்திராணியின் மகள் தேவசேனையின் பெருமாளே!

(நின் ஆறிரு புயமென உரைசெய அருள்வாயே)

744

திருவாழூர்

குளிர்ந்த நிலவு வீசுகின்ற நெருப்பாலும்—

கோபித்து மன்மதன் வளைக்கின்ற வில்லாலும்—

அலைகள் வீசி அலைக்கின்ற கடலாலும்

ஊழிபோல (நீடித்துள்ள) இராப்பொழுது தொலைக்குந் தன்மையதோ தான் (தொலைக்க முடியவில்லையே, என் செய்வேன் என்றபடி)

(மாது) திலகவதியாரின் புகழை வளர்க்கும் தலமாம் திருவாழூரில்

வாழும் குமரேசனே! மயிலில் வீற்றிருக்கும் குமரேசனே!

அன்புள்ள அடியார்களின் கருத்தில் உறையும் பெருஞ் செல்வமே!

யமனுடைய முதுகைப் பிளவு கொள்ளும்படி அடித்து வெருட்டும் பெருமாளே!

(இரவு தொலைக்கும் படியோ தான்)

'மாது புகழை வளர்க்குந் திருவாயா'-என்றும் பாடம்-இந்தப் பாடங்கொண்டால் 'மாது' என்பது 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவையைக் குறிக்கும்". முதுகை விரித்தல் — புறங்காட்டச் செய்தலும் முதுகு விரியும்படி அடித்தலும்; முருகன் அடியவராகிய அருணகிரியாரே—

"அந்தகா! உனைப் பாரறிய வேட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய சூரனைப் போய் முட்டிப் பொருத செவ்வேற் பெருமாள் திருமுன்பு நின்றேன்" கந்-அலங் 64 — என யமனை வெருட்டுகின்றார் எனில்—முருகவேள் 'காலன் முதுகை விரிக்கும் பெருமாள்' என்பது மிகவும் பொருத்தமே.

† 'காம னழகில் மிகுக்கும் பெருமாளே'--என்றும் பாடம்

வடுகூர்.

[இஃது 'ஆண்டார் கோயில்' என வழங்குகின்றது புதுச்சேரிக்கு மேற்கு 10-மைலி லுள்ள சின்னபாபு சமுத்திரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 2-மைல், திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

745. திருவடியைத் தொழ

தனதன தனனா, தனதன தனனா
தனதன தனனா தனதான

அரியய னறியா தவரெரி புர*மூ
ணதுபுக நகையே வியநாதர்-
அவிர்சடை மிசையோர் வனிதையர் பதி†சீ
றழலையு மழுநேர் பிடிநாதர் ;
‡வரைமக ளொருகூ றுடையவர் xமதனை
கமும்விழ விழியே வியநாதர்-
மனமகிழ் குமரா எனவுன திருதாள்
மலரடி தொழுமா றருள்வாயே ;
அருவரை யிருகூ றிடவொரு மயில்மேல்
oஅவனியை வலமாய் வருவோனே-
அமரர்க ளிகல்நீ டசுரர்கள் சிரமேல்
அயில்தனை விசையாய் விடுவோனே ;
வரிசையொ டொருமா தினைதரு வனமே
மருவியொர் குறமா தணைவேடா-
மலைகளில் மகிழ்வாய் மருவிநல் வடுகூர்
வருதவ முநிவோர் பெருமாளே. (க)

---

* மூணு—மூன்று என்பதன் மரூஉ.

† அழல்-மழு-ஏந்துவது-பாடல் 286-பக்கம் 210 கீழ்க்குறிப்பு.

‡ பார்வதி ஒரு கூறு:—பாடல் 301 பக்கம் 246 கீழ்க்குறிப்பு.

x மன்மதனை எரித்தது-பாடல் 288-பக்கம் 216 கீழ்சகுறிப்பு.

o உலகை மயில்மேல் வலம் வந்தது ; பாடல் 267 பக்கம் 164 கீழ்க்குறிப்பு ‡ பார்க்க.

745.

திருமாலாலும் பிரமனாலும் காணமுடியாதவர், நெருப்பு புரம் மூன்றிலும் புகும்படித் தமது சிரிப்பை ஏவிய தலைவர் — (புரம் மூன்றையும் சிரித்தெரித்த தலைவர் என்றபடி) ;—

விளங்கும் சடைமீது ஒரு மாது கங்கையைக் கொண்டவர், (பதி) கடவுள், (அல்லது—கங்கையாம் மாதின் (பதி) தலைவர்), காய்ந்து வந்த நெருப்பையும் மழு ஆயுதத்தையும் நேராகக் கையில் ஏந்தியுள்ள தலைவர்—

மலைமகள் பார்வதியை ஒரு பாகத்தில் உடையவர், மன்மதனுடைய உடலும் (எரிபட்டுவிழ) கண்ணினின்றும் (தீயை)ச் செலுத்தின தலைவர்—

மனம் மகிழும் குமரனே! என்று உன்னுடைய இரண்டு தாளாகிய மலர்ப்பாதங்களை தொழும்படியாக அருள்புரிவாயாக.

அருமை வாய்ந்த (கிரவுஞ்ச) கிரி இரண்டு கூறுகப் பிளவு படும்படி (செய்து) ஒப்பற்ற மயில்மேலே (ஏறி) உலகை வலமாக வந்தவனே!

தேவர்களோடு பகைமை பூண்டிருந்த பெரிய அசுரர்களின் தலைகள்மீது வேலாயுதத்தை வேகத்தொடு செலுத்தினவனே!

(வரிசையொடு) நல்ல நிலையில் ஒப்பற்ற சிறந்த (தினை தரு வனமே) தினை வளரும் காட்டுக்குச் சென்று ஒப்பற்ற குறப்பெண் வள்ளியை அணைந்த வேடனே!

மலையிடங்களிற் ப்ரீதி கொண்டவனே! (மனம்) பொருந்தி நல்ல வடகூர் என்னும் தலத்தில் வருகின்ற தவமுநிவர்களின் பெருமாளே!

(மலரடி தொழுமா றருள்வாயே)

திருத்துறையூர்.

[இது 'திருத்தளூர்' என மருவி வழங்குகின்றது. பண்ணுருட்டிக்கு வடமேற்கு 5-மைல். திருத்துறையூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 1½ மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது]

746. பொதுமாதர் உறவு அற

தானத்தன தானத்தன தானத்தன தானத்தன
தானத்தன தானத்தன தனதான

ஆரத்தன பாரத்துகில் மூடிப்பலர் காணக்கையில்
யாழ்வைத்திசை கூரக்குழ லுடைசோர-
ஆகப்பனி நீரப்புழு கோடக்குழை யாடப்பிறை
யாசப்படு வார்பொட்டணி சசிநேர்வாள்;
கூரக்கணை வேல்கட்கயல் போலச்சுழல் வார்சர்க்கரை
கோவைக்கனி வாய்பற்கதி ரொளிசேருங்-
கோலக்குயி லார்பட்டுடை நாலொத்திடை யார்சித்திர
கோபச்செய லார்பித்தர்க ளுறவாமோ:
பூரித்தன பாரச்சடை *வேதக்குழ லாள்பத்தர்கள்
பூசைக்கியல் வாள்பத்தினி சிவகாமி-
பூமிக்கடல் †மூவர்க்குமு ளள்பத்திர காளிப்புணர்
போகர்க்குப தேசித்தருள் குருநாதா;
சூரக்குவ டாழித்தவி டாய்முட்டசு ராருக்கிட
சோர்விற்கதிர் வேல்விட்டருள் விறல்வீரா-
‡சோகைச்செய லாள்பொற்பிர காசக்குற மான்முத்தொடு
சோதித்துறை யூர்நத்திய பெருமாளே. (க)

---

* வேதக் குழலாள்—தேவி வேதாகரம் உடையவளாதலின் வேதக் குழலாள் என்றழைக்கப் பெற்றாள்.

"ஆரணகாரி — தருணவாணிலா வீசு சடிலமோலி" என்றார் தக்கயாகப் பரணியில்; ஆரணம் — வேதம்; ஆகாரம் — உடம்பு (107)

'சுருதிகளின் ... கொழுந்தும் — வே ரு ம் ... திரிபுரசுந்தரி யாவதறிந்தனமே'—அபிராமி அந்தாதி 2.

வள்ளியை 'வேதச் சொருபி' என்றார் 636-ஆம் பாடலில்.

† "முதல் மூவருக்கும் அன்னே"—அபிராமி அந்தாதி 25.

‡ இந்த எட்டாவது அடியுடன் 648 ஆம் பாடலின் எட்டாவது அடியை ஒப்பிட்டுப் பார்க்க.

746.

மூத்துமாலை அணிந்துள்ள கொங்கைப் பாரங்களைப் புடைவையால் மூடிப், பலரும் காணக் கையிலே யாழ்-வைத்து இசை நிரம்பப் பாடிக், கூந்தலும் உடையும் சரிய-

(ஆகம்) தேகத்தில் பன்னீருடன் புனுகு சட்டமும் ஓட—கலந்து பாய, (காதில்) குழைகள் ஆட, (பிரயாசைப் படுவார்) கஷ்டம் எடுத்துக் கொள்பவர்கள், பொட்டு அணிந்துள்ள சசி—சந்திரன் (நேர்) போன்ற (முகத்தில்), வாளாயுதம்—

கூர்மை கொண்டுள்ள அம்பு, வேல் இவை போன்ற கண்ணை மீன்போலச் சுழற்றுபவர்கள், சர்க்கரை (யொத்த மொழிகள் வரும்) கொவ்வைக்கனி போன்ற வாயிற் பற்கள் சூரிய சந்திரன் ஒளிபோல ஒளி வீச

அழகிய குயில் போலப் பேசுபவர்கள், பட்டுப் புடைவையை நூல் போன்ற நுண்ணிய இடையில் அணிந்துள்ளவர்கள், சித்திரம்போல அழகியராய்க் கோபச் செய்கைகள் நிரம்பியுள்ள (பி த் த ர் க ள்) பித்துப் பிடித்தவர்களாம் பொது மகளிரின் உறவு ஆமோ! (உறவு கூடாது என்றபடி)

(பூரி) நிறைந்துள்ள (த ன பா ர ம்) கொங்கைப் பாரத்தையும் சடையையும் கொண்டுள்ள (வேதக்குழலாள்) வேத சொரூபக் கூந்தலை உடையவள், பக்தர்களின் பூஜையை ஏற்றுக் கொள்பவள், பத்தினி, சிவகாமி—

பூமி, கடல், மூவர்-(அரி, அயன், உருத்திரன்)—ஆகிய எல்லாவற்றுக்கும் முன்னவள், பத்ரகாளி — ஆ கி ய பார்வதி அணைந்து சேரும் (போகர்க்கு) இன்ப அனுபவம் உடையவர்க்கு (சிவனுக்கு) உபதேசித்து அருளின குருமூர்த்தியே!

சூரனும், (குவடு) கிரௌஞ்சகிரியும், கடலும் தவிடு பொடிபட, முட்டிப் பொருத அசுரர்கள் மெலிந்து அழிய, (சோர்வு இல் கதிர் வேல்) அயர்ச்சி இல்லாத வீரம் உள்ள ஒளி வேலைச்செலுத்தி அருளின வெற்றி வேலனே!

மயில் போன்ற இயலினள், அழகிய ஒளி கொண்ட (குறமான்) வள்ளி என்கின்ற முத்துப்போன்ற தேவியுடன் ஒளி வீசும் துறையூர் என்னும் தலத்தை விரும்பியுள்ள பெருமாளே!

(பித்தர்கள் உறவாமோ)

746-I பிறவிநோயற

தனதான தனத்தன தானன
தனதான தனத்தன தானன
தனதான தனத்தன தானன தனதான

வெகுமாய விதத்துரு வாகிய
திறமேபழ கப்படு சாதக
விதமேழ்கட லிற்பெரி தாமதில் சுழலாகி—

வினையான கருக்குழி யாமெனு
மடையாள முளத்தினின் மேவினும்
விதியாரும் விலக்கவொ ணாதெனு முதியோர்சொல்;

தகவாம தெனப்பிடி யாமிடை
கயிறுலு மிறுக்கிம காகட
சலதாரை வெளிக்கிடை யேசெல வுருவாகிச்—

சதிகாரர் விடக்கதி லேதிரள்
புழுவாக நெளித்தெரி யேபெறு
மெழுகாக வுருக்கு முபாதிகள் தவிர்வேனோ;

உககால நெருப்பதி லேபுகை
யெழவேகு முறைப்படு பாவனை
யுறவே குகை யிற்புட மாய்விட வெளியாகி—

உலவாநர குக்கிரை யாமவர்
பலவோர்கள் தலைக்கடை போயெதிர்
உளமாழ்கி மிகக்குழை வாகவு முறவாடித்;

தொகலாவ தெனக்கினி தானற
வளமாக அருட்பத மாமலர்
துணையே பணியத்தருவாய்பரி மயில்வேலா!

746-I

எண்ணிலாத மாய வகைகளால் (உருவாகிய திறமே) உடலெடுக்கும் இயல்பிலே—பழகப் படுகின்ற பிறப்பு வகைகள் ஏழு கடலினும் பெரிதாகும்; அத்தகைய பிறப்பிற் சுழலுதல் உற்று—

வினைக்கு ஈடான கருக்குழியானது சேரும் என்கின்ற அறிகுறியானது உள்ளத்திலே பதிந்து இருந்தபோதிலும், விதியை யாராலும் விலக்க முடியாது என்கின்ற பெரியோர் வாசகம்—

பொருத்தமுளதே ஆகும்; (ஏனெனில்) (அது) அந்த விதி (எனைப்பிடியா) என்னைப் பிடித்து, நெருங்கிய கயிற்றால் அழுத்தமாகக் கட்டி பெரிய (கடம்) உடம்பிலுள்ள (சலதாரை) சாக்கடை வழியே வெளியிடத்தே (செல உருவாகி) — உருவாகிச் செல — உருவம் அடைந்து வெளிவரச் (செய்கின்றது) — (அதனால்) ஏற்படும்:—

(சதிகாரர்) மோசக் காரராகிய ஐம்புலன்களின் சேட்டைகளையும், (விடக்கதிலே) மாமிசத்திலே திரண்டு புழுப்போல நெளிவுண்டு, நெருப்பிற்பட்ட மெழுகுபோல உடலை உருக்குகின்ற (உபாதிகள்) வேதனைகளையும் நான் ஒழிக்க மாட்டேனே!

உகாந்த காலத்தில் நெருப்பிலே புகை உண்டாகி வேகின்ற மாதிரியாய்க் கோப பாவனையைக் (குறிகளை) (இரக்க வந்தவரிடம்) காட்டிக், குகையில் (உலோகங்களை உருக்கும் கலத்திலே — பாத்திரத்திலே) புடமிட்டது போல (புடம் வைத்ததுபோல) உள்ளம் கொதிப்பைப் பெற்று வெளி வருவதால்

அழியாத நரகத்துக்கு இரையாகுபவர்களாகிய பலபேர்களின் வீட்டு வாசலண்டை போய், (அவர்கள்) எதிரே நின்று உள்ளம் வேதனைப்பட்டு மிகவும் குழைந்த நெஞ்சினனாய் அவர்களுடன் உறவு பூண்டு—

சேர்தலானது (சேரும் வினை) எனக்கு இனியேனும் ஒழிவதாக; நான் செப்பம் உற, உனது திருவருள் பெருகும் சிறந்த பாத மலர்களை எனக்குத் துணை செய்யும்படி தருவாயாக; குதிரையாம் மயிலையும் வேலையும் உடையவனே!

துதிமாதவர் சித்தர்ம கோரர்
அரிமால்பிர மர்க்கருள் கூர்தரு
துறையூர்நக ரிற்குடி யாய்வரு பெருமாளே (உ)

திருநாவலூர்.

[இது 'திருநாமநல்லூர்' என வழங்குகின்றது. பண்ணுருட்டிக்கு மேற்கு 11 மைல், உளுந்தூருக்குப் போகும் பாதை. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருஅவதாரம் செய்த ஸ்தலம்; அவருடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

747. அகப்பொருள்

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான

கோல*மறை யொத்த மாலைதனி லுற்ற
கோரமதன் விட்ட கணையாலே-
கோதிலத ருக்கள் மேவுபொழி லுற்ற
கோகிலமி குத்த குரலாலே;
ஆலமென விட்டு வீசுகலை பற்றி
ஆரழலி றைக்கு நிலவாலே-
†ஆவிதளர் வுற்று வாடுமெனை நித்த
மாசைகோட ணைக்க வரவேணும்;
‡நாலுமறை கற்ற xநான்முகனு தித்த
நாரணனு மெச்சு மருகோனே-
நாவலர்ம திக்க வேல்தனையெ டுத்து
நாகமற விட்ட மயில்வீரா;
சேலெனும் விழிச்சி வேடுவர் சிறுக்கி
சீரணி தனத்தி லணைவோனே-
சீதவயல் சுற்று நாவல்தனி லுற்ற
தேவர்சிறை விட்ட பெருமாளே. (க)

---

* மறை—உருக்கரந்த வேடம்—மறைந்த வேஷம்—
"மறைவல்லன் மடவாய் யான்"—சிந்தாமணி 2027.

† மன்மதன் கணை, குயிலின் குரல், நிலவொளி—இவை காமம் கொண்டவர்க்கு வேதனை தருவன—(பாடல் 218-பக்கம் 54)

‡ "மறைவல்ல நான்முகனும்"—சம்பந்தர் 3-54 10.

x "நான்முகனை நாராயணன் படைத்தான்" — இயற்பா —நான்முகன் திருவந்தாதி—1,

துதிக்கின்ற மகா தவசிகளும், சித்தர்களும் மகேசுரன், (அரி) இந்திரன், திருமால், பிரமா இவர்களுக்கெல்லாம் திருவருள் பாலிக்கும் பெருமாளே! துறையூர் நகரில் குடியாய் வந்து வீற்றிருக்கும் பெருமாளே!

(உபாதிகள் தவிர்வேனே)

திருநாவலூர்.

747.

அழகிய (மறை) உருக்கரந்த (மறைந்த) வேஷத்துடன் மாலைப் பொழுதில் வந்து சேர்ந்துள்ளவனும், (கோரம்) கொடுமை வாய்ந்தவனுமான மன்மதன் செலுத்தியுள்ள (புட்ப) பாணங்களாலும்,

(கோது இல தருக்கள்) குற்றம் — பயனின்மை இல்லாத—நல்ல செழிப்பான மரங்கள் பொருந்திய சோலையில் உள்ள குயிலின் பலமான குரலாலும்—

(ஆலம் என) விஷச் சுவாலைகளை எறிந்து வீசும் ஒளி மூலமாக நிறைந்த நெருப்பைப் பரப்பி இறைக்கின்ற நிலவாலும்—

ஆவியானது தளர்ச்சியடைந்து வாடுகின்ற என்னை தினந்தோறும் ஆசையுடனே அணைக்க வரவேணும்;

நான்கு வேதங்களையும் கற்ற பிரமனைத் தோற்றுவித்த நாரணனும் மெச்சுகின்ற மருகனே!

(நாவலர்) புலவர்கள் மதிக்கும்படி வேலாயுதத்தை எடுத்து (நாகம்) (கிரவுஞ்சமலை) பொடிபடச் செலுத்தின மயில் வீரனே!

சேல்மீன் போன்ற கண்ணை உடைய வேடுவப் பெண்ணின் சீரும் அழகும் கொண்ட கொங்கையில் அணைபவனே!

குளிர்ந்த வயல்கள் சூழ்ந்துள்ள நாவலூரில் வீற்றிருக்கும் பெருமாளே! தேவர்களைச் சிறையினின்றும் மீட்ட பெருமாளே!

(ஆசைகொடணைக்க வரவேணும்)

திருவெண்ணெய்நல்லூர்.

[பண்ணுருட்டிக்கு மேற்கு 15-மைல். திருக்கோவலூருக்குப் போகும் பாதை. விழுப்புரம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 12-மைல். திருக்கோவலூரி லிருந்து 14-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது;]

748. யோகநிலை

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தனதன தத்தன தனதான

பலபல தத்துவ மதனை யெரித்திருள்
பரையர ணப்படர் வடவன லுக்கிரை
படநட நச்சுடர் பெருவெளி யிற்கொள விடமேவிப்-
பவன மொழித்*திரு வழியை யடைத்தொரு
பருதி வழிப்பட விடல்கக னத்தொடு
பவுரி கொளச்சிவ மயமென முற்றிய பரமூடே;
கலகலெ னக்கழல் பரிபுர பொற்பத
வொலிமலி யத்திரு நடன மியற்றிய
கனக சபைக்குளி லுருகி நிறைக்கட லதில்மூழ்கிக்-
கவுரி மினற்சடை யரனொடு நித்தமொ
டனக †சகத்துவம் வருதலு மிப்படி
கழிய நலக்கினி நிறமென விற்றுட லருள்வாயே;
புலையர் ‡பொடித்தளும் அமண ருடற்களை
நிரையில் கழுக்களி லுறவிடு சித்திர
புலவனெ னச்சில விருது படைத்திடு மிளையோனே-

---

* இருவழி யடைத்தலும்—நடனப்பதம் சேர்தலும்
—பாடல் 647-பக்கம் 514-மூலமும் கீழ்க்குறிப்பும்.

† 'சகத்துவம் வருதல்' — 'உலகத்தொரு நீயாகத் தோன்றும்' நிலை—திருமுருகாற்றுப்படை 294,
"உலகத்திடத்தே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி" — என்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை—பாடல் 173-பக். 398, 402 பார்க்க.

‡ சமணர்—திருநீற்றை விலக்குபவர்கள்—
"நீற்று மேனிய ராயினர் மேலுள்ள
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரை"—சம்பந்தர் 3-108-8

748.

பலபல வான (தத்துவம் அதனை) தத்துவ சேஷ்டைகளையும், (எரித்திருள்) (இருள) — அஞ்ஞான இருளையும் (எரித்து) எரிசெய்து, (பரை) சிவபிரானது அருட்சத்தியே (அரணம்) – காவலாகப், (படர்) துக்கங்களை (வட அனலுக்கு இரைபட) வடவா முகாக்கினிக்கு இரையாகும்படி ஆக்கி, (நடனச்சுடர்) நடன ஜோதியை (பெருவெளியில்) பரந்த பராகாச வெளியிலே (கொள்) கண்டுகொள்ளும் படியாக, (இடம் மேவி)—(பொருந்திய இடத்தை) விந்து நாதம் கூடும் முகப்பிற் சேர்ந்து—

வாயுவை அடக்கி, (இருவழியை) இடைகலை, பிங்கலை என்னும் இரண்டு வழிகளையும் மாற்றி அடைத்து, (ஒரு பருதி வழிப்பட விடல்) ஒப்பற்ற சூரிய ஜோதியின் பிரகாச நிலையில் அமைந்து, (ககனத்தொடு) ஆகாய வெளியில், (பவுரிகொள) நடனம் கொள்ளச், சிவமயமாய் முற்றும் பரந்த பரவெளியில்—

கலகலென்று கழலும் சிலம்பும் அழகிய திருவடியில் ஒலி நிரம்பத் திருநடனம் இயற்றிய பொற்சபையில் உருகி நின்று (நிறைக்கடல்) நிறைந்த சுகானந்த கடலில் முழுகுவதால்—

(கவுரி) தேவி பார்வதி, மின்னல் ஒத்த சடையுடைய பரசிவன் இவரொடு—(அல்லது) (இவர் தம் திருவருளால்) எப்போதும் குற்றமற்ற (சகத்துவம்) "உலகத்தொரு நீயாகத் தோன்றும்" நிலை வந்து கூடவும், இவ்வாறு கழியும்படியான (நலக்கு) நன்மையால் இனி (நிறம்) புகழொளி (என் நவிற்று உடல்) எனக் கூறப்படும் உடலைத் தந்தருளுக, (புகழுடலே நிலைத்து நிற்குமாதலின்);

(புலையர்) இழிந்தோர், (பொடித்தளும்) திருநீற்றை விலக்கித்தள்ளும் (அமணர்) சமணர்களின் உடல்களை (நிரையில் கழுக்களில்) கழு நிரையில்- கழுமுனை வரிசைகளில் (உறவிடு) பொருந்தவிட்ட, சித்திர புலவன் என — விசித்திரமான — அல்லது, சித்திரகவி பாடவல்ல—புலமை கொண்டவன் எனச் சில வெற்றிச் சின்னங்களைப் பெற்ற இளையவனே!

புனமலை யிற்குற மகளை யாளுற்றொரு
கிழவ னெனச்சுனை தனில வளைப்புய
புளகித முற்றிபம் வரவணை யப்புணர் மணிமார்பா ;

மலைசிலை பற்றிய கடவு ளிடத்துறை
கிழவி யறச்சுக குமரி * தகப்பனை
மழுகொடு வெட்டிய நிமலிகை பெற்றருள் முருகோனே-

மகிழ் † பெணை யிற்கரை பொழில்முகில் சுற்றிய
திருவெணெய் நற்பதி புகழ்பெற அற்புத
‡ மயிலின் மிசைக்கொடு திருநட மிட்டுறை பெருமாளே. (க)

திருப்பாதிரிப்புலியூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். கூடலூருக்கு வடக்கு 3-மைல். கெடில நதியின் தென்கரையி லுள்ளது. திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

749. உபதேசம் பெற

தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன
தனதன தனன தனந்த தானன தனதான

நிணமொடு குருதி நரம்பு மாறிய
தசைகுடல் மிடையு மெலும்பு தோலிவை
நிரைநிரை செறியு முடம்பு நோய்படு முதுகாயம்-

நிலைநிலை யுருவ மலங்க ளாவது
நவதொளை யுடைய குரம்பை யாமிதில்
நிகழ்தரு பொழுதில் முயன்று மாதவ முயவோரும் ;

* தகப்பனை மழுகொடு வெட்டிய நிமலிகை—பிதாவாகிய (மதியாத) தக்கனை (வீரபத்திரரால்) மழுக்கொண்டு வெட்டுவித்த நின்மலி—பாடல் 390-பக்கம் 481-485 கீழ்க்குறிப்பு.

† 'பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறை'' —சுந்தரர் தேவாரம் 7-1-1

‡ மயிலின் மிசை நட்டம்: திருவெண்ணெய் நல்லூரில் அருணகிரியார்க்கு மயில்மேல்) நடன தரிசனத்தை முருகவேள் தந்தனர் என்பது இசைனுற் பெறப்படும்,

(புனமலையில்) தினைப்புனம் உள்ள வள்ளி மலையில் (குறமகள்) வள்ளியின் (அயல் உற்று) பக்கத்திற் சென்று, ஒரு கிழவன் என—ஒரு கிழவன் என வேடம் பூண்டு, சுனையிலே அவளது புயத்தைப், புளகாங்கிதத்துடன், யானை வந்து எதிர்ப்பட, அணைந்து புணர்ந்த அழகிய மார்பனே !

(மலை) மேரு மலையை வில்லாகப் பிடித்த சிவபிரானது இடது பாகத்தில் இருக்கின்ற உரிமை வாய்ந்தவள், தருமமே புரியும் சுக குமாரி, பிதாவாகிய தகப்பனை— தக்கனை-மழுக்கொண்டு வெட்டுவித்த நின்மலி பெற்றருளிய குழந்தையே !

மகிழ்ச்சி தரும் பெண்ணை யாற்றின் கரையில் சோலையும் மேகமும் சூழந்த திருவெண்ணெய் என்னும் நல்ல ஊரில் புகழ் விளங்க அற்புதகரமான மயிலின்மேல் வீற்றிருந்து திருநடனம் புரிந்து விளங்கும் பெருமாளே !

(நிறமெனவிற்றுடல் அருள்வாயே)

திருப்பாதிரிப்புலியூர்.

749.

(நிணம்) மாமிசத்தொடு ரத்தம், நரம்பு இவை, கலந்துள்ள சதை, குடல், நெருங்கியுள்ள எலும்பு, தோல், இவை வரிசை வரிசையாக நெருங்கியுள்ள உடம்பு, நோய் உண்டாகும் பழைய உடல்—

அந்த அந்த நிலைக்கு ஏற்ப (வயதுக்குத் தக்கபடி) உருவமும் (மலங்களும்)—உடல் மாசுகளும் உண்டாவதும், ஒன்பது தொளைகளை உடைய (குரம்பையாம் இதில்) சிறு குடிலாகிய இந்த உடலில் (நிகழ்தரு பொழுதில்) இந்த உயிர் உலவும் பொழுதே — உயிருடன் இருக்கும்போது — வேண்டிய முயற்சிகளைச் செய்து (மாதவம்) சிறந்த தவங்களை—(உய) உய்யும் பொருட்டு, (ஓரும்) உணரும்

உணர்விலி செபமுத லொன்று தானிலி
நிறையிலி முறையிலி யன்பு தானிலி
உயர்விலி யெனினுமெ னெஞ்சு தா *னினை வழியாமுன்-

ஒருதிரு †மரகத துங்க மாமிசை
யறுமுக மொளிவிட வந்து நான்மறை
யுபநிட மதனை விளங்க நீயருள் புரிவாயே;

புணரியில் விரவி யெழுந்த ‡ஞாயிறு
விலகிய புரிசை யிலங்கை வாழ்பதி
பொலமணி மகுட சிரங்கள் தாமொரு பதுமாறிப்-

புவியிடை யுருள முனிந்து கூர்கணை
யுறுசிலை வளைய வலிந்து நாடிய
புயலதி விறலரி விண்டு மால்திரு மருகோனே;

அணிதரு கயிலை நடுங்க வோர்xரெழு
குலகிரி யடைய இடிந்து தூளெழ
அலையெறி யுததி குழம்ப வேல்விடு முருகோனே-

o அமலைமு னரிய தவஞ்செய் பாடல
வளநகர் மருவி யமர்ந்த தேசிக
அறுமுக குறமக ளன்ப மாதவர் பெருமாளே. (க)

---

* நினைவு அழியாமுன்—இறந்து படுமுன் நினைவு அழிதல்—
"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு"—சம்பந்தர் I 130-1.
'ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும்
போதுணர மாட்டேன்'—அப்பர் 6-99-1.

† மரகத துங்கமா—மயில்.

‡ ஞாயிறு விலகிய புரிசை இலங்கை: பாடல் 426-பக்கம் 572 கீழ்க்குறிப்பு பாடல்1184-ம் பார்க்க.

x மலை ஏழு: கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி அன்றிக் கந்த மாதனங் கூட்டி எட்டெனவும் படும்.

o "நற்றவம் உமையாள் நங்கை பாதிரி நீழல் தங்கிப் புரிதவம் பகர்தலுற்றும்'.
'மடவிழ்ந்தலர் பாதிரி யின்னிழல்...
'எண்ணருந்தவம் செய்தனள் யாவரும்
கண்ணருஞ் சிவன் தன்னருள் காணவே"
—திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்.
—தேவி பாடலவனம்—சருக்கம் 36 தேவி தவ சருக்கம் 1, 2.

உணர்ச்சி இல்லாதவன் (நான்), ஜெபம் முதலான ஒரு நல்லொழுக்கமும் இல்லாதவன் (நான்), (நிறையிலி)— காப்பன காத்துக் கடிவன கடியும் ஆண்மைக் குணம் இல்லாதவன் (நான்), (முறையிலி) ஒழுக்கம் இல்லாதவன் (நான்), அன்புகூட இல்லாதவன் (நான்), மேன்மைக்குணம் இல்லாதவன் (நான்)—இவ் வண்ணம் (பல குறைகள் என்னிடம் இருப்பினும்)—என் நெஞ்சு நினைவு என்பதை இழக்கு முன்னரே—

ஒப்பற்ற அழகிய பச்சை நிறமுடைய உயர்ந்த மயில் என்னும் குதிரைமேல், (உனது) ஆறு திருமுகங்களும் (ஒளிவிட) பிரகாசிக்க (நீ எதிர்) வந்து, நான்கு வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகிய இவைகள் எனக்கு விளங்கும்படி நீ அருள்புரிவாயாக.

கடலிற் கலந்து படிந்து எழுகின்ற சூரியன் அஞ்சி விலகும் மதில்களை உடைய இலங்கையில் வாழ்ந்த தலைவன் ராவணனுடைய பொன்மய ரத்னமகுடங்கள் அணிந்திருந்த தலைகள் ஒரு பத்தும் நிலை பெயர்ந்து (அறுபட்டு)

பூமியில் உருளும்படிக் கோபித்துக் கூரிய அம்புகள் பொருந்திய, கையிலிருந்த, வில்லை வளைத்து, முயற்சி எடுத்துக்கொண்டு தேடிச் சென்ற மேகநிறத்துப் பெருமான், மிக்க வீரம் வாய்ந்த அரி, விண்டு, மால் எனப் பெயர்கள் கொண்ட திருமாலின் அழகிய மருகனே!

அழகுள்ள கயிலைமலையும் நடுங்க, (ஓரெழு குலகிரி) மலை எழு அல்லது (1+7) அஷ்ட குலகிரிகள் எல்லாம் இடிந்து தூளபறக்க, அலை வீசும் கடல் குழப்பங் கொள்ள வேல்விடு முருகனே!

தேவி முன்பு அரிய தவஞ் செய்த தலமாகிய பாடல வள நகரில் (திருப்பாதிரிப் புலியூரில்) பொருந்தி வீற்றிருக்கும் தேசிக மூர்த்தியே! அறுமுகனே! (குறமகள்) வள்ளியின் அன்பனே! பெரிய தவசிகளின் பெருமாளே!

(உபநிடமதனை விளங்க நீ அருள் புரிவாயே)

திருமாணிகுழி.

[இந்த ஸ்தலம் திருப்பாதிரிப்புலியூருக்கு 4-மைல் தூரத்தி லுள்ளது. மாணி—பிரமசாரி உருவம் கொண்ட வாமனர் பூசித்த தலம் "பண்டு வாமனனாய் மண்ணிரந்த செங்கணவன் வழிபட்ட திருமாணிகுழி" — பெரிய புரா — தடுத்தாட் 90, திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

750. தியானிக்க

தனத்த தானன தானன தானன
தனத்த தானன தானன தானன
தனத்த தானன தானன தானன தந்ததான

மதிக்கு நேரெனும் வாண்*மூகம் வான்மக
நதிக்கு மேல்வரு சேலேனு நேர்விழி
மணத்த வார்குழல் மாமாதராரிரு கொங்கைமூழ்கி-

மதித்த பூதர மாமாமனோலயர்
செருக்கி மேல்விழ நாடோறு மேமிக
வடித்த தேன்மொழி வாயூற லேநுகர் பண்டநாயேன்:

பதித்த நூபுர சீர்பாத மாமலர்
‡படைக்கு மேவிய †சீராவொ டேக்கலை
‡பணைத்த தோள்களொ டாறு தோடுகள் தங்குகாதும்-

பணிக்க லாபமும் வேலோடு சேவலும்
வடிக்கொள் சூலமும் வாள்வீசு நீள்சிலை
படைத்த வாகையு நாடாது பாழில்ம யங்கலாமோ;

கதித்து மேல்வரு மாசூரர் சூழ்படை
நொறுக்கி மாவயர் தேரோடு மேகரி
கலக்கி யூர்பதி தீமூள வேவிடும் xவஞ்சவேலா-

---

* மூகம்—முகம்.

† இதனால் "சீரா" என்பது ஒரு படை எனத் தெரிகின்றது. அது "உடைவாள்". 'சீராவினால் அறுத்தறுத் தொதுக்கிய பெருமாளே"—திருப்புகழ் 1132. 'கட்டிய சீராவும்', 'அரையிற் கட்டும் சீராவும்'—கந். அலங்காரம்—27, 81.

‡ இங்ஙனம் தோள்கள் முதலியவற்றை நாட விரும்பிய தம்முடைய வேண்டுகோளின் படியே, பின்னர் "ரகைஷதரு சிற்றடியு முற்றிய பன்னிருதோளும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பு" — (விநா-துதி-3) என அருணகிரியார் அநுக்கிரகிக்கப் பட்டார். (x தொடர்ச்சி-பக்கம் 237)

750.

சந்திரனுக்கு ஒப்பு என்று சொல்லும்படியான ஒளி பொருந்திய முகம், சிறந்த மகா நதியாகிய (அல்லது ஆகாய மகா நதியாகிய கங்கையிலே உலாவும் சேல் என்று கூறுமபடியான கண், நறுமணமுள்ள நீண்ட கூந்தல் — இவைதமை உடைய அழகிய மாதர்களின் இரண்டு கொங்கைகளிலே முழுகி—

மதிப்பு வைத்திருந்த (பூதரம் ஆம் ஆம்) மலைகளே இவை யாகும், ஆகும் என்று (மனேலயர்) அவைகளிலே மனம் லயப்பட்டவராய்ச் (செருக்கி) பெருமிதம் உற்று அவைதம் மேல் விழுந்து, நாள்தோறும் மிக நன்ருக வடித்தெடுக்கப்பட்ட தேன் போன்ற மொழியும், வாயிதழ் ஊறலுமே அநுபவிக்கின்ற (பண்டம்) ஒரு பொருளாகிய நாயனைய அடியேன்—

[பதித்த நூபுரம்] [நூபுரம்] சிலம்பு சூழ்ந்துள்ள சீரான பாதமாம் சிறந்த மலரும், ஆயுதங்களுள் ஒன்ருகப் பொருந்திய சீரா [உடைவாளும்], [கலை] ஒளி கொண்ட, பருத்த தோள்களோடு, பன்னிரண்டு [தோடுகள்] காதணிகள் தங்கி விளங்கும் காதுகள்—

பாம்பை அடக்கும் மயிலும், வேலும், சேவலும், கூர்மைகொண்ட சூலாயுதமும், ஒளி வீசுகின்ற நீண்ட வில்லைப்பிடித்த வெற்றியையும் நான் விரும்பித் தியானிக்காது பாழான எண்ணங்களிலும் செய்கைகளிலும் மயக்கம் கொள்ளலாமா! (கொள்ளலாகாது என்றபடி)

கொதித்து மேலெழுந்து வருகின்ற பெரிய சூரர்கள் சூழ்ந்துள்ள சேனைகளைப் பொடியாக்கியும் குதிரைகள், பெரிய தேர்கள், யானைகள் இவைகளைக் கலக்கியும், ஊர்களையும் நகரங்களையும் தீ மூண்டு எரியும்படிச் செலுத்தின வஞ்சகங்கொண்ட வேலனே!

(236-ஆம் பக்கம்-தொடர்ச்சி)

x "வஞ்சவேல்" — வேல் — அடியார்களுக்கு நிழலாகவும் பகைவர்க்குத் தழலாகவும் இருக்கும்—இதுவே இறைவன் தன்மை; "வாரமதாம் அடியார்க்கு வாரமாகி, வஞ்சனை செய்வார்க் கென்றும் வஞ்சனுகும் சீராசை" என்ருர் அப்பர்—(6-86-4). "வஞ்சவேல் கொடு முனிபவ" என்ருர் பிறிதோரிடத்து (திருப்புகழ் 773)

களித்த பேய்கண மாகாளி கூளிகள்
திரட்பி ரேதமெ லேமேவி மூளைகள்
கடித்த பூதமொ டேபாடி யாடுதல் கண்டவீரா;
குதித்து வானர மேலேறு தாறுகள்
குலைத்து *நீள்கமு கூடாடி †வாழைகொள்
குலைக்கு மேல்விழ வேரோறு போகமும் வஞ்சிதோயுங்-
குளத்தி லூறிய தேனூறல் ‡மாதுகள்
குடித்து லாவியெ சேலோடு xமாணிகொள்
குழிக்குள் மேவிய வானோர்க ளேதொழு தம்பிரானே. (க)

திருவேட்களம்.

[சிதம்பரத்திற்குக் கிழக்கு 2-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது.]

751. மறவேன் என்றது

தனனத்தன தாத்தன தானன
தனனத்தன தாத்தன தானன
தனனத்தன தாத்தன தானன தனதான

○சதுரத்தரை நோக்கிய பூவொடு
கதிரொத்திட ஆக்கிய கோளகை
தழையச்சிவ பாக்கிய நாடக அநுபூதி-
சரணக்கழல் காட்டியெ ணவ
மலமற்றிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறுங்;

* கமுகங்குலை அற்று வாழைக்குலைமேல் விழுதல்—
"கமுகின் எற்றி வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கதம்"
—சிந்தாமணி 31.
"தெங்கம்பழம் கமுகின்குலை சாடிக் கதலி செற்று"
—திருக்கோவை-100.
—பாடல் 672 பக்கம் 48 கீழ்க்குறிப்பும் பார்க்க.

† "வாளைகள்" என்றும் பாடம்.

‡ மாதுகள்—மிகுந்த மகரந்தங்கள்.

x 'வாளைகள் குதித்துலாவிய வேளூரில் மேவிய தம்பிரானே"
"வாளைகள் குதித்துலாவிய வேலூரில் மேவிய தம்பிரானே"
—என்றும் பாடங்கள்.

○ மூலாதார கமலம்—'ஆசை நாலு சதுரக் கமலம்' என்றார் 439-ஆம் பாட்டில்.

மகிழ்ச்சிகொண்ட பேய்க்கூட்டங்களும், பெரிய காளியும், கூளிகளும் (பெருங்கழுகுகளும்) திரண்டுகிடக்கும் பிணங்களின் மேலே விழுந்து, அப் பிணங்களின் மூளைகளைக் கடித்துத்தின்ற பூதங்களோடே, பாடி ஆடுதலைக் கண்ட வீரனே!

குதித்து, குரங்குகள் மேலே உள்ள குலைகளைக் குலைத்து நீண்ட கமுக மரங்களினிடையே ஊடாடுவதால், (குதித்து விளையாடுவதால்) அக் கமுகங்குலைகள் அறுபட்டு வாழைக்குலைகள் மேல் விழும்படியான அழகு நிறை செழுமையையும், பெண்கள் குளிக்கும் (அல்லது (பூக்) கொடிகளைக் கொண்டுள்ள)

குளத்திலூறி உள்ள (மலர்த்) தேன்களின் சாரத்தையும் மிகுந்த மகரந்தங்களையும் உண்டு உலாவுகின்ற மீன்கள் ஓடுதலையும் உடைய (மாணி கொள் குழிக்குள்) திருமாணிகுழி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் (தம்பிரானே)! தேவர்களும் தொழுகின்ற தம்பிரானே!

(பாழில் மயங்கலாமோ)

திருவேட்களம்.

751.

நான்கிதழ் கொண்டதாய், தரையின் நான்கு திசைகளையும் நோக்கியதாய் உள்ள பூவொடு (மூலாதார கமலம் முதல்) கதிரொத்திட ஆக்கிய கோளகை — முச்சுடர்களால் ஆன மண்டலங்கள் (அக்கினியாதி மும்மண்டலங்கள் வரையில்)— ஆறுதார நிலைகளெல்லாம்— குளிர்ந்து தழைய சிவப்பேற்றைத் தருவதான நாடக (அநுபூதி) பெரும்பேறு ஆகிய

திருவடிக் கழலை (அடியேனுக்குக்) காட்டி என்னுடைய ஆணவமலம் (யான் எனது எனும் அகங்காரம்) (அற்றிட) தொலைந்து போம் வண்ணம் அதை (வாட்டிய) கெடுத்து ஒழித்த உனது பன்னிரண்டு (சயிலக்குலம்) குலசயிலம்— சிறந்த மலைகள் போன்ற தோள்களையும் (முகமாறும்) ஆறுமுகங்களையும்,

கதிர்சுற்றுக நோக்கிய பாதமு
மயிலிற்புற நோக்கிய னுமென
கருணைக்கடல் காட்டிய கோலமும் அடியேனைக்-
கனகத்தினு நோக்கினி தாயடி
யவர்முத்தமி ழாற்புக வேபர
கதிபெற்றிட நோக்கிய பார்வையு *மறவேனே ;
சிதறத்தரை நாற்றிசை பூதர
நெரியப்பறை மூர்க்கர்கள் மாமுடி
சிதறக்கட லார்ப்புற வேயயில் விடுவோனே-
சிவபத்தினி †கூற்றினை மோதிய
பதசத்தினி ‡மூத்தவி நாயகி
xசெக०மிப்படி தோற்றிய பார்வதி யருள்பாலா
**விதுரற்கும ராக்கொடி யானையும்
விகடத்துற வாக்கிய மாதவன்
விசையற்குயர் தேர்ப்பரி யூர்பவன் மருகோனே-

---

* முதல் நான்கு அடிகள் அருணகிரியாரின் வரலாற்றைக் குறிக்கும்.

† யமனை உதைத்த திருவடி—இடது திருவடி—தேவியின் திருவடி—"சிதைத்தான் வாமச் சேவடி தன்னால்" — கந்தபுரா ... மார்க்கண் (2-5-253). 'கூற்றுவனைக் காய்ந்த அபிராமி', 'கூற்று மரித்திடவே உதை பார்வதி'—திருப்புகழ் 760, 789 (பாடல் 93-ம் பார்க்க).

‡ 'கறைக் கண்டனுக்கு மூத்தவளே'—அபிராமி அந்தாதி 13, 'சத்திதான் சிவத்தை யீன்றும்'—சிவஞான சித்தியார் சுபக். 167.

x தேவி—செகங்களைத் தோற்றுவித்தது
—திருப்புகழ் 267 பக்கம் 164.

० இப்படி—பாடல் 33 பக்கம் 97 கீழ்க்குறிப்பு.

** விதுரனுக்கும் துரியோதனனுக்கும் மனம் வேறுபடக் [கண்ணபிரான்] வைத்த வரலாறு :—

பாண்டவர்களுக்கு உரிய பாகத்தைத் துரியோதனனிடம் கேட்கும் பொருட்டு தூது சென்ற கண்ணபிரான் துரியோதனனுடைய மாளிகையில் தங்காமல் விதுரனுடைய இல்லத்தில் தங்கினர். ராஜ சபையில் துரியோதனன் தனது சிறிய தந்தை விதுரரை இகழ்ந்து, 'என் வீட்டில் உண்டியை மறுத்தவனுக்கு நீ அமுதளித்தாய்; நீ தாசிமகன் தானே; என்னுடைய அன்னத்தை அருந்திப் பாண்டவர் மீது அன்பு கொண்டுள்ளாய்' எனப்

ஒளி சுற்றிலும் பரவி(ஆன்மாக்களைப்) பாதுகாக்கின்ற திருவடியும், (மயிலின்புறா) மயில்மேலிருந்து (நோக்கியனுமென) பாதுகாக்கின்றவனும் என வந்து (உனது) கருணைக்கடலைக் காட்டி அருளிய திருக்கோலத்தையும், அடியேனைப்

பொன்னினும் இனிமையான பார்வையுடனே அடியார்கள் (யான்பாடும்) முத்தமிழ்கொண்டு பாடிக் (கதி) புகவும், அல்லது அடியவர் பாடும் முத்தமிழ்கொண்டு யான் பாடிப் புகவும் (அடியேன்) மேலான நற்கதியைப் பெறவும், கடாக்ஷித்துப்பார்த்த பார்வையையும் மறவேன்;

தரை சிதற—பூமி அதிர, நாலு திசைகளிலுள்ள மலைகள் நெரிந்து பொடிபடப் பறையடித்துவந்த ஏற்க்க அசுரர்களின் பெரியமுடிகள் சிதறுண்டு விழக், கடல் ஒலி செய்து வாய்விட, வேலைச் செலுத்தினவனே!

சிவனது பத்தினியும், எமனை உதைத்த பாதங்களைக் கொண்ட சக்தி வாய்ந்தவளும், யாவர்க்கும் மூத்தவளும், (விநாயகி) தடைகளை (இடர்களை) நீக்குபவளும், அண்டங்களை இவ்வாறு சிருஷ்டித்தவளுமாகிய பார்வதி அருளிய குழந்தையே!

விதுரனுக்கும், (அரவுக்கொடி) பாம்புக்கொடி கொண்ட துரியோதனனுக்கும் (விகட) வேறுபடும்படியான (துறவை) பிரிவினை (அல்லது விடகத்து உறவை) (மனம் வேறுபட்ட உறவை) (ஆக்கிய) உண்டு பண்ணின (இருவர் உறவையும் பேதப்படுத்தின) (மாதவன்) கண்ணபிரான், அருச்சுனனுடைய பெரிய தேர்க்குதிரைகளைப் (பார்த்தசாரதியாய்)ச் செலுத்தினவன் ஆகிய திருமாலின் மருகனே!

[240 ம் பக்கம் தொடர்ச்சி]

பேசினன். விதுரர் வெகுண்டு 'இங்ஙனம் பேசிய உன் வாயைத் துணிப்பன். ஆயினும் பொறுக்கின்றேன். நாளை நடக்கும் போரில் அறமே வெல்லும். இதோ என்னுடைய ஒப்பற்ற வில்லையும் ஒடித்துத் தள்ளுகின்றேன்' எனக் கூறி ஒடித்தெறிந்தார்.

"வசையென்னை நீ சொன்னவாய் குருதி சோர வாள்கொடு "துணிப்பன் யான்" ** இனிச் சமரில் நின்று வெங்கணை தொடேன் என வில்லிரண்டினும் உயர்ந்த வில்லதனை வேறிரண்டு பட வெட்டினன்." (வில்லி. கிருஷ்ணன் தூது—129-131,

வெளியெட்டிசை *சூர்ப்பொரு தாடிய
கொடிகைக்கொடு கீர்த்தியு லாவிய
விறல்மெய்த்திரு வேட்கள மேவிய பெருமாளே.(க)

752. ஆசை அற

தாத்தன தானன தாத்தன தானன
தாத்தன தானன தனதான

†மாத்திரை யாகிலு நாத்தவ ருளுடன்
வாழ்க்கையை நீடென மதியாமல்-
மாக்களை யாரையு மேற்றிடு சீலிகள்
மாப்பரி வேயெய்தி அநுபோக;
பாத்திர மீதென மூட்டிடு மாசைகள்
பாற்படு ஆடக மதுதேடப்-
பார்க்கள மீதினில் மூர்க்கரை யேகவி
பாற்கட லானென வுழல்வேனோ;
‡சாத்திர மாறையு நீத்தம னோலய
xசாத்தியர் மேவிய பதவேளே-

---

* சூரனுடைய இருபிளவில் ஒரு பிளவு சேவலாகி வர முருகவேள் அதனைக் கொடியாக நியமித்தனர்,

"மாறிவரு சேவற் பகையைத் திறல் சேர் பதாகை என மேவத் தனித்துயர்த்த மேலோனே"—கந்தர் கலி வெண்பா.

"பசுந்தழைத் தோகையும் செஞ்சிறைச் சேவலும் தாங்கியும் மலர்க்கரம் தங்கியும் நீலத்த பேரொளி மேனியன்"—கல்லாடம் 75.

† இதனால் அருணகிரியார் பொது மகளிரையே விலக்குதல் வேண்டும் என்றனர் என்பதும், இல்லற மகளிரைப் போற்றுகின்றனர் என்பதும் தெளிவாக ஏற்படுகின்றன

‡ சாத்திரம் ஆறு: வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை, (1) வேதாந்தம்—உபநிடதம்; (2) வைசேடிகம்—கணாதரால் தாபிக்கப்பட்ட மதம் (கணாதமதம்); தர்க்க சாஸ்திரம்: பொருள் நிச்சயம் பண்ணுதற்கு உபகாரமாயுள்ளது; (3 பாட்டம்—குமாரில பட்டரால் பிரசாரம் செய்யப்பட்ட பூர்வ மீமாஞ்சை மதம்; வேதமே தெய்வமென்று ஏற்படுத்திய மதம்; (4) பிரபாகரம்—பிரபாகரன் என்பவனால் பிரசாரஞ் செய்யப்பெற்ற மீமாஞ்ச மதவகை: (மீமாஞ்சை—பூர்வமீமாஞ்சை உத்தர மீமாஞ்சை என்ற இரு பிரிவினையுடையதாய் வேத வேதாந்தப் பொருள்களை விசாரித்தற்குக் கருவியாயுள்ள சாஸ்திரம் —வேதார்த்தம் இது என்று நிச்சயித்துக் கூறும் நியாய சாஸ்திரம்). (5) பூருவ மீமாஞ்சை. மீமாஞ்சையின்

வெளியிலே எட்டுத் திசைகளிலும் சூரனாய் நின்று சண்டைசெய்து (சேவலாய் மாறி நின்ற — கொடியைக் கையிலேந்திப் புகழ் விளங்க உலவின பெருமாளே! வெற்றியும் சத்தியமும் விளங்கும் பெருமாளே! திருவேட்களம் எனும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(தோள், முகம் ஆறு, பாதம், கோலம், பார்வை மறவேன்)

752.

ஒரு சிறிய அளவுகூட வாக்கு தவறாத (மனைவியுடன் நடத்தும் (இல்லற) வாழ்க்கையைப் பெரிதெனமதிக்காமல்—

(அறிவுகெட்ட) பேர்வழிகள் யாராயிருந்தாலும் அவர்களை எல்லாம் ஏற்று அனுபவிக்கும் ஒழுக்கத்தை உடைய (பொது மாதர்களின்மீது) மிக்க அன்பைப் பூண்டு (அவர்களை) அனுபவிக்கும்—

பாத்திரம் இவன் என்று (பிறர்கூற), மூண்டு எழுகின்ற ஆசைகளிலே ஈடுபட்டு, (ஆடகம்) பொன் (பொருள்) ஆசைத் தேட—

பூமியிடத்தேயுள்ள மூர்க்கர்களை (உலோபிகளையே) எனது பாடலில், பாற்கடலிற் (பள்ளி கொண்டிருக்கும்) திருமாலே இவன் என்று புகழ்ந்து திரிவேனோ!

ஆறு சாஸ்திரங்களையும் கடந்து மனம் லயப்பட (மனவேகம் ஒடுங்கும்படி) வைத்த சாமர்த்தியம் உள்ளவர்கள் (மனோலயம் சாத்தியம் ஆகும்படி செய்த பெரியோர்கள்) விரும்பிப் போற்றும் திருவடிகளை உடைய வேளே!

(242-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகுதி, வேதத்திற் கரும காண்ட ஆராய்ச்சி பற்றிச் சைமினி முனிவர் இயற்றிய சாஸ்திரம். (6) உத்தர மீமாஞ்சை. வேதத்தின் பிற்பகுதியான ஞானகாண்ட விசாரணைச் சாத்திரம் (பிரமசூத்திரம் முதலிய நூல்கள். பிரமசூத்திரம்—வேதாந்த சூத்திரம்—வேத வியாசரால் செய்யப்பட்ட நூல்)

x சாத்தியர். தேவருள் ஒருவகையினரும் 'சாத்தியர்' எனப் படுவர், 'விசுவதேவர் வசுக்கள் சாத்தியராதி விண்ணவர்''.

சேது புராணம்-கலிதீர்த்த-7.

தாத்தரி தாகிட சேக்கெனு மாநட
  தாட்பர ஞர்தரு குமரேசா ;
*வேத்திர சாலம தேற்றிடு வேடுவர்
  †மீக்கழு தாமயில் மணவாளா-
வேத்தம தாமறை யார்த்திடு சீர்திரு
  வேட்கள மேவிய பெருமாளே. (உ)

திருநெல்வாயில்.

[இது சிவபுரி என வழங்கும். சிதம்பரத்துக்குத் தென்கிழக்கு 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

753. அருள் வேண்டுதல்

தனன தானன தானனத் தனந்த
தனன தானன தானனத் தனந்த
தனன தானன தானனத் தனந்த தனதான

அறிவி லாதவ ரீனர்பேச் சிரண்டு
  பகரு நாவினர் லோபர்தீக் குணங்க
  ளதிக பாதகர் மாதர்மேற் கலன்கள் புனை‡யாதர்-
அசடர் பூமிசை வீணராய்ப் பிறந்து
  திரியு மானுடர் பேதைமார்க் கிரங்கி
  யழியு மாலினர் நீதிநூற் பயன்கள் தெரியாத;
நெறியி லாதவர் சூதினுற் கவர்ந்து
  பொருள்செய் பூரியர் மோகமாய்ப் ப்ரபஞ்ச
  நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறி-
நினைவு பாழ்பட வாடிநோக் கிழந்து
  xவறுமை யாகிய தீயின்மேற் கிடந்து
  தெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே ;

* வேத்திர சாலம்—அம்புக் கூட்டம்.

† மீக் கழுது—மிக்க அமுது.

‡ ஆதர்—அறிவிலார்.

x இது அருணகிரிநாதரின் அடிநாள் வரலாற்றைக் குறிக்கும்.

'தாத்தரிதாகிட சேக்' என்று சிறந்த நடனம் செய்கின்ற திருவடிகளை உடைய சிவபிரான் தந்த குமரேசனே !

அம்புக் கூட்டங்களைக் கொண்டு திரியும் வேடர்களின் மிக்க அமுதன்ன மயில் இயல் வள்ளியின் மணவாளனே !

(வேத்தமதாம்)-வேத்தியமதாம்—அறியப் படுவதான வேதங்கள் ஒலிசெயும் சீரான திரு வேட்களத்தில் வீற்றிருக்கும் பெருமாளே !

(உழல்வேனோ)

திருநெல்வாயில்.

753.

அறிவு இல்லாதவர்கள், (ஈனர்) இழிவானவர்கள், பேச்சு இரண்டு பேசும் நாவினை உடையவர்கள் (சொன்ன சொற்களை மாற்றுபவர்கள்), உலோபிகள், கெட்ட குணங்களையே கொண்டு மிக்க பாபச் செயல்களைச் செய்பவர்கள், மாதர்களுக்கு (பொது மகளிருக்கு) ஆபரணங்களைப் புனைந்து பார்க்கும் அறிவிலிகள்,—

அசடர்கள், பூமியில் வீண் காலம் போக்குபவர்களாய்ப் பிறந்து திரிகின்ற மனிதர்கள், பெண்கள்மீது (காம) இரக்கம் கொண்டு அழிந்துபோகும் ஆசை மனத்தினர்கள் நீதி நூல்களின் பயன்களை அறியாதவராய்—

நன்னெறியிற் போகாதவர்கள், சூதாட்டத்தால் சூதினால் பொருள கவர்ந்து அப் பொருளைச் சேகரிக்கும் (பூரியர்) கீழ் மக்கள், ஆசைப் பெருக்கால் உலக நிலையையே (உலக இன்பத்தையே) விரும்பும் மூடர்கள்—இத்தகையோரிடம் சென்று நல்ல தமிழ்ப் பாடல்களை பாடிக்காட்டி—

நினைவு தேய்ந்து பாழாக, வாட்டமுற்று, கண்பார்வையும மங்கிப்போய், 'தரித்திரம்' என்கின்ற நெருப்பிலே கிடந்து நெளிகின்ற பெரிய புழுப்போல ஆன என்மீது இரங்கி — இரக்கங்கொண்டு அருள்புரிவாயாக.

நறிய வார்குழல் வானநாட் டரம்பை
மகளிர் காதலர் தோள்கள்வேட் டிணங்கி
நகைகொ *டேழிசை பாடிமேற் பொலிந்து களிகூர-

நடுவி லாதகு ரோதமாய்த் தடிந்த
தகுவர் மாதர்ம ணாளர்தோட் பிரிந்து
நசைபொ ருதழு தாகமாய்த் தழுங்கி யிடர்கூர;

மறியு மாழ்கட லூடுபோய்க் கரந்து
†கவடு கோடியின் மேலுமாய்ப் பரந்து
வளரு மாவிரு கூறதாய்த் தடிந்த வடிவேலா-

மருவு காளமு கில்கள்கூட் டெழுந்து
மதியு லாவிய மாட்மேற் படிந்த
வயல்கள் மேவுநெல் வாயில்வீற் றிருந்த பெருமாளே. [க]

விருத்தாசலம்.

[ரெயில்வே ஸ்டேஷன், விழுப்புரத்துக்குத் தென்மேற்கு 34-மைல்; கூடலூருக்குத் தென்மேற்கு 35-மைல். சிதம்பரத்தி லிருந்து 28-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். ஸ்தல புராணம் உண்டு.]

754 விலைமாதர்களின் உறவு அற

தனத்தானன தானன தானன
தனத்தானன தானன தானன
தனத்தானன தானன தானன தனதான

குடத்தாமரை யாமென வேயிரு
தனத்தார்மதி வானுத லாரிருள்
குழற்காடின மாமுகில் போல்முது கலைமோதக்-

---

* ஏழிசை—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்; சத்த சுரம்; ஷட்ஜம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் (ச ரி க ம ப த நி).

† சூரன் பல கிளைகளை உடைய மாமரமாய் கடல் நடுவில் கவிழ்ந்து நின்றான்.

'கவடு கோத்தெழும் உவரி மா'—திருப்புகழ் 1062.

'துன்னு பல் கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்.

(தொடர்ச்சி பக்கம் 247) கந்த புராணம் 4-13-468.

நறுமணங்கொண்ட நீண்ட கூந்தலை உடைய தேவலோகத்து அரம்பை மகளிர் தத்தம் காதலர்களுடைய தோள்களை விரும்பிப் பொருந்திக் களிப்புச் சிரிப்புடனே ஏழிசை பாடியும் குதூகலித்து மகிழ்ச்சி பொங்கவும்—

நடுநிலைமை (நியாயம்) இல்லாதவராய், (குரோதமாய்) கோபம் மிக்கவராய், (தடிந்த) அழிதொழிலைச் செய்த அசுரமகளிர் தங்கள் கணவர்களின் தோள்களைப் பிரிந்து, தங்கள் ஆசையை அடக்கமுடியாமல் அழுது தங்கள் தேகத்தை ஒறுத்துத் துன்பம் கொண்டு வருத்தமே பெருகவும்—

(மறியும்) அலைகள் கிளர்ந்து எழும் ஆழ்கடலின் உள்ளே சென்று மறைந்து கிளைகள் கோடிக்கணக்கின் மேலாக விரிந்து வளர்ந்த (சூரனும்) மாமரம் இரண்டு கூறுகும்படி வெட்டிப் பிளந்த கூரிய வேலாயுதனே!

பொருந்திய கருமேகங்கள் கூட்டமாய் எழுந்து, நிலவு உலவுகின்ற மாடங்களின் மேற் படிகின்ற திருநெல்வாயிலில், வயல்கள் உள்ள, திருநெல்வாயிலில் வீற்றிருக்கும் பெருமாளே!

(புழுவாயினேற் கிரங்கி அருள்வாயே)

விருத்தாசலம்.

754.

சூடம் என்றும், தாமரை மொட்டு என்றும், உவமிக்கத்தக்க இரண்டு கொங்கைகளை உடையவர் பிறைபோன்ற ஒளி பொருந்திய நெற்றியர், இருள்போல இருண்ட கூந்தல்-காடுபோல அடர்ந்து, மேகம்போலக் கறுத்து, முதுகில் அலைமோதுவது போலப் புரள,

---

246-ம் பக்கத்தொடர்ச்சி

'கவடு பலபோக்கிக்***கீழ்மேல் நின்ற அக்கொடுந் தொழிற் கொக்கு'—கல்லாடம்.

குலக்*கார்மயி லாமென வேகயல்
விழித்தார்கர மேல்கொடு மாமுலை
குடத்தியாழ்கிளி யாமென வேகுயில் குரலோசை;

படித்தார்மயி லாமென வேநடை
நெளித்தார்பல காமுகர் வார்கலை
பழிப்பாரவ ராசையை மேல்கொடு விலைமாதர்-

படிக்கார்மின லாமென வேநகை
புரித்தார்பலர் வாயிதழ் சேர்பொருள்
பறிப்பார்பழி காரிகள் நாரிக ளுறவாமோ;

†அடைத்தார்கட லோர்வலி ராவண
குலத்தோடரி ‡யோர்சர ஞர்சின
மழித்தார்முகி லேய்நிற ராகவர் மருகோனே-

x அறுத்தாரய ஞர்தலை யேபுர
மெரித்தாரதி லேபுல ஞருயி
ரளித்தா**ருடல் பாதியி லேயுமை அருள்பாலா;

---

* கார்மயில் — மேகத்தைக் கண்டால் மயிலுக்கு மகிழ்ச்சி. "கார்பெற்ற தோகையோ"—நளவெண்பா-கலிநீங்கு-92.

† கடலை அடைத்தது—சேதுபந்தனம் செய்தது—பாடல் 149-அடி 5 பாடல் 177-பக்கம் 412 கீழ்க்குறிப்பு

இராமர் பாணத்துக்கு அஞ்சின வருணன் கடலில் அணை செய்து நீங்கள் போகலாம் என்று ஸ்ரீராமருக்கு உரைக்க, அங்ஙனம் அணைகட்டிக் கடலை அடைத்து ஸ்ரீராமர் சேனைகளுடன் சென்றனர்.

'செல்லுதி சேது வென்ளுென் றியற்றியென் சிரத்தின்மேலாய்
** குன்றி கொண்டடுக்கிச் சேது குயிற்றுதிர் என்று கூறிச் சென்றனன் இருக்கை நோக்கி வருணனும்"
—கம்பராமா-வருணனை வழி 84, 85

"எய்த யோசனை யீண்டொரு நூறிவை
ஐயிரண்டின் அகலம் அமைந்திடச்
செய்ததால் அணை என்றது செப்பினுர்
வையநாதன் சரணம் வணங்கியே"
—கம்பராமா சேதுபந்தனம் 71

‡ ஓர் சரம்—பாடல் 452-பக்கம் 6 கீழ்க்குறிப்பு.

(249-ஆம் பக்கம் பார்க்க)

சிறப்புற்ற மேகத்தைக் கண்ட மயிலின் களிப்புப்போலக் களிப்பைக் கொண்டதும், கயல்மீன் போன்றதுமான கண்களைக் கொண்டவர்களாய், மாலை அணிந்ததும், கையின்மேல் ஏந்தியுள்ளதும், அழகிய கொங்கை போன்றதுமான குடத்தை ஒருபாற் கொண்டதுமான யாழ் என்றும், கிளி என்றும் சொல்லும்படியான குயில் ஓசைபோன்ற குரலோசையைக்

கற்றவராய், மயில் என்று சொல்லும்படியான நெளிந்த நடையினராய்ப், பல (காம) தூர்த்தர்களின் பெரிய காம சாஸ்திர அறிவைப் பழிப்பவர்களானவராய் ஆசையை மேற்பூண்டு, விலைமாதராய்,

(படி) படிந்துள்ள மேகத்தில் தோன்றும் மின்னல் என்று சொல்லும்படியான ஒளிகொண்ட பற்கள் தெரியச் சிரிப்பவர்களாய்ப், பல பேர் வழிகளின் வாயிதழ் அனுபவிப்பவர்களாய்ப், பொருளைப் பறிப்பவர்களாம் பழிகாரிகளாகிய மாதர்களின் உறவு ஆமோ (உறவு ஆகாது என்றபடி)

(அடைத்தார் கடல்) கடலை அணையிட்டு அடைத்தவராய், ஒப்பற்ற வன்மை வாய்ந்திருந்த ராவணனை அவன் குலத்தோடு அரிந்து தள்ளி அழித்த ஓர் அம்பைக் கொண்டவர், (அசுரர்களின்) (சினத்தை) கோபத்தை இவ்வாறு அழித்தொழித்தவர், மேகத்துக்கு ஒப்பான (கறுத்த) நிறம் கொண்டவராகிய ராகவ மூர்த்தியின் மருகனே!

(அறுத்தார் அயனார் தலையே) பிரமனது தலையை அறுத்துத் தள்ளினவர், திரிபுரத்தை எரித்தவர், அந்தத் திரிபுரத்தில் இருந்த அசுரர்களில் (புலனார்) அறிவுள்ள மூன்று அசுரத் தலைவர்களின் உயிரைக் காத்தருளினவர் ஆகிய சிவபிரானது பாதி உடலில் உள்ள உமாதேவி அருளிய குழந்தையே!

---

248 ஆம் பக்கத் தொடர்ச்சி

x அயன்தலை அறுத்தது-பாடல் 285-பக்கம் 209 கீழ்க்குறிப்பு.

o புரம் எரித்தது—பாடல் 285-பக்கம் 206 கீழ்க்குறிப்பு.

** பாதி உடல் உமை—பாடல் 301-பக்கம் 246 கீழ்க்குறிப்பு.

விட்த்தாரசு ரார்பதி வேரற
அடித்தாய்கதிர் வேல்கொடு சேவகம்
விளைத்தாய்குடி வாழம ரோர்சிறை மிடிதீர-
*விழித்தாமரை போலழ கா†குற
மகட்கான ‡வ ணாxஎன தாயுறை
விருத்தாசலம் வாழ்மயில் வாகன பெருமாளே. (க)

755. அருள் பெற

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதான

०திருமொழி யுரைபெற அரனுன துழிபணி
செயமுன மருளிய **குளவோனே-
††திறலுயர் மதுரையி லமணரை யுயிர்கழு
தெறிபட மறுகிட விடுவோனே;
‡‡ஒருவரு முனதருள் பரிவில ரவர்களி
னுறுபட நுஜமேனை யருள்வாயோ-
xxஉலகினி லனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடி தனில்வரு மயில்வீரா;
००கருவரி யுறுபொரு கணைவிழி குறமகள்
கணினெதிர் தருவென முனமானாய்-

---

* "முண்டக மலர்ந்ததன்ன .... கண்ணும்"
கந்தபுரா 4-4-235.
† குறமகட் கான வணா—'நினக்கு நேரழ குள்ளவ ரில்லவள் தனக்கு நேர ழகுள்ளவர் நாமில்லை"—தணிகைப்புரா-களவு-31.
‡ வணா—வண்ணா—அழகனே.
x "எனதாய்" — பார்வதி தேவியையும் அருணகிரியார் அருமையுடன் போற்றுவர் — "எனதுயிரெனுந் த்ரியம்பகி" "என்றனை ஆள் உமைபரத்தி", "என்மாசுசேர் எழுபிறப்பையும் அறுத்த உமை" என்றார் பிற இடங்களில் (திருப்புகழ் 52, 647, 439)
० சிவனுக்கு உபதேசித்தது—பாடல் 628-பக்கம் 462 குறிப்பு.
** குளவோன்—குளம்—நெற்றி, எனக் கொண்டு சிவனது நெற்றிக்கண்ணில் தோன்றியவனே எனலுமாம்-"விடமாக் கொன்ற நெடுவேற் குளவன்"—கல்லாடம் 83.
†† சமணரைக் கழுவில் ஏற்றியது—பாடல் 181-பக்கம் 422.

[தொடர்ச்சி 251 ம் பக்கம் பார்க்க.]

(விடத்தார்) விஷகுணம் கொண்ட அசுரர்களுடைய ஊர்கள் வேருடன் அற்றுவிழ (அடித்தாய்) சங்காரம் செய்தாய், ஒளிவேல் கொண்டு பராக்ரமச் செயல்களைப் புரிந்தாய் (குடிவாழ் அமரோர்) தேவர்கள் குடிபுகவும் அவர்களுடைய சிறையும் வறுமையும் நீங்கவும்—

தாமரை போன்ற கண்களை உடைய அழகனே! குறமகள் (வள்ளிக்கும்) பிரியமுள்ள (வண்ண) அழகனே! என்னுடைய தாய் (விருத்தாம்பிகை) அமர்ந்துள்ள விருத்தாசலத்தில் வாழும் மயில்வாகனப் பெருமாளே!

(நாரிகள் உறவாமோ)

755

முத்தி மொழியாம் பிரணவப் பொருளின் விளக்கப் பொருளைப் பெறச் சிவபிரான் உன்னிடத்தே வணங்க, முன்பு (அவருக்கு) அப் பொருளை உபதேசித்த (குளவனே) குளத்தில் உற்பவித்தவனே! (சரவணபவனே!)

ஒளிமிக்க மதுரையில் சமணர்களின் உயிர் கழுவில் (தெறிபட மறுகிட) மறுகிட்டுத் தெறிபட—கலக்க முற்றுச் சிதறுண்ண—வைத்தவனே!

(ஒருவு அரும்) நீக்குதற் கரிதான உன்னுடைய திருவருளில் அன்பில்லாதவர்களைப் போலத் துன்பத்தை அனுபவிக்கின்ற என்னைக் கண்பார்த்தருளாயோ!

உலகத்தில் யாவரும் புகழும்படித் திருவண்ணமலையில் ஒரு நொடிப் பொழுதில் வந்து உதவிய மயில்வீரனே!

கரிய ரேகைகள் பொருந்திப் பொருதற்கு உற்ற அம்புபோன்ற கண்களை உடைய குறமகள் (வள்ளியின்) கண்களின் எதிரே (வேங்கை) மரமாக முன்பு ஆனவனே!

(250-ஆம் பக்கத் தொடர்ச்சி)

‡‡ முருகனது அருள் பெறாதவர் துன்பப்படுவர்:
"வெல்லலர் வினை தற அறத்தின் மேவினும்
வல்விதன் கேள்வனை மனத்துன்னார்களே"
—தணிகைப் புராணம்-இராம. (௧)

xx இது அருணகிரியாரின் வரலாற்றைக் குறிக்கும் —பாடல் 331-பக்கம் 330 கீழ்க்குறிப்பு ‡ பார்க்க.

oo முருகர் வேங்கை மரமானது:
—பாடல் 287-பக்கம் 214 கீழ்க்குறிப்பு σ பார்க்க.

கருமுகில் பொருநிற அரிதிரு மருமக!
*கருணையில் மொழிதரு முதல்வோனே;
முருகலர் தருவுறை யமரர்கள் சிறைவிட
முரணுறு மசுரனை முனிவோனே—
†முடிபவர் வடிவறு சுசிகர முறைதமிழ்
முதுகிரி வலம்வரு பெருமாளே (உ)

756. அருள் பெற

தனதத்த தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த தனதான

பசையற்ற வுடல்வற்ற வினைமுற்றி நடைநெட்டி
பறியக்கை சொறியப்பல் வெளியாகிப்—
‡படலைக்கு விழிகெட்ட குருடுற்று மிகநெக்க
பழமுற்று xநரைகொக்கி னிறமாகி;
விசைபெற்று வருபித்தம் வளியைக்க ணிலைகெட்டு
மெலிவுற்று விரல்பற்று தடியோடே—
வெளிநிற்கும் விதமுற்ற இடர்பெற்ற ஜனனத்தை
விடுவித்து னருள்வைப்ப தொருநாளே;
0அசைவற்ற நிருதர்க்கு மடிவுற்ற பிரியத்தி
னடல்வஜ்ர கரன்மற்று முளவானோர்—

---

* தனக்கு முருகவேள் உபதேசித்தது:
"அன்புற உபதேசப் பொருள் ஊட்டி மந்திர தவஞானக்
கடலாட்டி என்றனை" என்றூர் பிறிதோரிடத்து—திருப் 814.
"எனைமரண மாற்றிய கருணைவார்த்தை யிருந்தவாறென்"
—திருப்புகழ் 1061.

† முடிபவர் வடிவறு சுசிகரம் உறை முதுகிரி:—உயிர் விடும் பிராணிகளுக் கெல்லாம் பார்வதி தேவியார் தமது ஆடையால் வீசி இளைப்பாற்றச், சிவபிரான் ஐந்தெழுத்தை உபதேசம் செய்து அப் பிராணிகளுக்குத் தமது சிவரூபத்தைத் தந்தருளும் தலம் திருமுதுகுன்றம். 'தூசினால் அம்மை வீசித் தொடையின் மேற் கிடத்தித் துஞ்சு மாசிலா உயிர்கட் கெல்லாம் அஞ்செழுத் தியல்பு கூறி, ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் அந்தக் காசியின் விழுமிதான முதுகுன்ற வரையும் கண்டான்' கந்தபுரா-வழிநடை-13.

‡ படலை—படலம்.

x "தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து"—திருப் 447-பக்கம் 622.

0 அசைவு—சலிப்பு.

கரிய மேகத்தை ஒத்த நிறத்தை உடைய திருமாலின் அழகிய மருமகனே! கருணையுடன் (உபதேச) மொழியை (எனக்குத்) தந்த முதல்வனே!

நறுமண மலர்கொண்ட (கற்பக) விருக்ஷ நீழலில் இருக்கும் தேவர்களின் சிறையை விடுமாறு, மாறுபட்டு நின்ற (அசுரனை) சூரனைக் கோபித்தவனே!

(விருத்தாசலத்தில்) இறப்பவர்கள் (வடிவறு) பிறப்பு அறுகின்ற (சுசிகரம்) தூயபெற்றி, (உறை) உள்ள *தமிழில் முதுகிரி எனப் பெயர் பெற்ற (அல்லது தமிழ் விளங்கும் முதுகிரியில்), (வலம்வரு) வெற்றியுடன் எழுந்தருளியுள்ள பெருமாளே!

(படர் உறும் எனை அருள்வாயோ)

756.

ஈரமில்லாத இவ்வுடல் (வரவர) வற்றிப்போக செய்த வினை முதிர்ச்சி அடைந்து, நடையும் (நெட்டி)— பறிய-ஒழுங்கற்றுக் கோணலாகத் தள்ளாடுதலை அடைந்து நிலை பெயரக் கை சொறியும் தொழிலையே மேற்கொள்ள, பற்கள் வெளியே நீண்டுவர—

கண் பூஞ்றைப்பால் பார்வை யிழந்து குருட்டுத்தன்மை அடைந்து, மிகவும் நெகிழ்ந்து—கரைந்து பழம்போலப் பழுத்து நரைத்து மயிர் கொக்குப்போல வெண்ணிறமாகி—

வேகத்துடன் வருகின்ற பித்தத்தாலும் வாயுவினாலும் (கண்) இடமும் நிலைத்திருக்கும் தன்மையும் தடுமாறிக்கெட்டு, மெலிதலை அடைந்து, கைவிரலினால் பிடிக்கப்பட்ட தடியுடனே—

வெளியே நிற்கின்ற தன்மை மிகும்படியான துன்பமே கொண்டதான (இந்த) பிறப்பினின்றும் (என்னை) விடுதலை செய்து உனனுடைய திருவருளைத் தந்து காக்கும் ஒரு நாள் உண்டா!

சலிப்பு—கலக்கம் இல்லாத அசுரர்கள் மடிந்து இறந்தொழிதலில் பிரியங்கொண்ட வலிய வஜ்ராயுதக் கையனாகிய இந்திரனும் மற்றும் உள்ள தேவர்களும்—

* வடமொழியில் 'விருத்தாசலம்', 'விருத்தகிரி' என்று இத் தலத்துக்குப் பெயர். தமிழில் 'முது குன்றம்', 'பழமலை' எனப் பெயர்.

அளவற்ற *மலர்விட்டு நிலமுற்று மறையச்செய்
†அதுலச்ச மரவெற்றி யுடையோனே;
வசையற்று முடிவற்று வளர்பற்றி ‡னளவற்ற
வடிவுற்ற முகில்கிட்ணன் மருகோனே-
xமதுரச்செ மொழிசெப்பி யருள்பெற்ற சிவபத்தர்
வளர் விர்த்த கிரியுற்ற பெருமாளே. (௩)

வேப்பூர்.

[வட ஆற்காடு ஜில்லா ஆற்காட்டுக்குச் சமீபம்; பாலாற்றங் கரையில் உள்ள தலம்.]

தனதன தனதன தனதன தாந்த
தாத்தான தந்த தனதான

757. உபதேசம் பெற

குரைகட லுலகினி லுயிர்கொடு போந்து
கூத்தாடு கின்ற குடில்பேணிக்-

---

* வானோர் நிரம்பப் பூமாரி பொழிதல்
—பாடல் 645-பக்கம் 510-குறிப்பு. † அதுல—சமான மில்லாத

‡ தம் பொருட்டுக் கண்ணபிரான் துரியோதனனிடம் தூது செல்லவேண்டும் என்று பாண்டவர்கள் யோசித்தபொழுது, சகாதேவனை நோக்கிக் கண்ணபிரான் உன் யோசனை என்ன என்று கேட்கச் சகாதேவன் — 'பெருமானே! துரியோதனன் எங்களுக்குப் பூமி கொடுத்தால் என்ன? கொடாவிட்டால் என்ன? உங்கள் மாயையை யார் அறிவார்? உங்கள் திருவுளத்துக் கருத்து எதுவோ அதுவே எனக்கும் கருத்து' என்றான். இவன் நமது எண்ணத்தை வெளிவிட்டு விடுவான் என அறிந்து கண்ணபிரான் தனியாக ஓரிடத்திற் சகாதேவனை அழைத்துக் கொண்டுபோய்— பாரதப்போர் நடவாதிருக்க வழி என்ன சொல் என்றார். அப்போது சகாதேவன் 'பெருமானே' — நீ பூபாரம் தீர்க்க வந்துள்ளாய்; உன்னையல்லால் வேறு யாராலும் அந்தப் போரை நிறுத்த முடியாது; உன்னை நான் கட்டிப்போட்டால் பாரதப்போர் வாராது" "என்றான்; அதைக் கேட்ட கண்ணபிரான் என்னை நீ எவ்வண்ணம் கட்டுவாய் எனச் சகாதேவன் "உன் வடிவத்தை காட்டு, கட்டுகிறேன் என்றான்" — கண்ணனும் உடனே கட்டு பார்க்கலாமென்று தன்போலவே உருவம் " பதினாறயிரம் " கொண்டான், சகாதேவன் மூல உருவம் இதுதான் என்று அறிந்து கண்ணபிரானது அடியிணைகளைத் தன் கருத்தினாற் கட்டினான். கண்ணபிரான் மகிழ்ந்து என் பாதத்தை இனி விடுக — இந்த

(தொடர்ச்சி பக்கம் 255)

அளவு கடந்த (நிறைய) மலர்விட்டு-பூமாரி பொழிந்து தேவர்கள்—பூமி முழுமையும் மறையும்படிச் செய்கின்ற ஒப்பில்லாதவனே! போரில் வெற்றியே உடையவனே!

பழிப்புக்கு இடமில்லாமல் முடிவிலாது வளர்ந்திருந்த—மிக அதிகமாயிருந்த — பற்றின் — (பாண்டவர் மீதிருந்த) ஆசை காரணத்தால் அளவு கடந்த வடிவை அளவற்ற வடிவைக் கொண்ட மேக நிறத்தவனும் கண்ணபிரானது மருகனே!

இனிமைதரும் செம்மையான புகழ் மொழிகளை ஓதி உனது திருவருளைப் பெற்ற சிவபக்தர்கள் நிரம்பியுள்ள விருத்தாசலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(உன் அருள் வைப்ப தொருநாளே)

வேப்பூர்

757.

ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்திலே உயிர் எடுத்து வந்து கூத்தாடுகின்ற (இந்த) உடலை விரும்பிப் போற்றி—

விஷயத்தை எவருக்கும் வெளியிடாதே என்று உரைத்தார்; பின்பு பாண்டவர் ஐவருக்கும் துரோபதைக்கும் ஆறுதல் மொழிகூறித் தூதுக்குப் புறப்பட்டுச் சென்றூர் — என்பது பாரதவரலாறு. பாண்டவரிடத்தில் தமக்கு வளர்ந்திருந்த பற்றினுல் தனது அளவற்ற வடிவத்தைக் கண்ணபிரான் சகாதேவனுக்குக் காட்டினுர்—என்னும் வரலாறு இங்கு குறிக்கப்பட்டுள்ளது.

"மாயனும் அன்பன் மனமறிவான் கட்டுக என்
ருய வடிவுபதி ஞறயிரங் கோண்டான்
தூயவனும் மூலமாந் தோற்ற முணர்ந் தெவ்வுலகுந்
தாய அடியிணைகள் தன்கருத்தினுற் பிணித்தான்."

—என்பது வில்லிபாரதம் கிருஷ்ணன் தூது-37

இதனையே அருணகிரியார் 'வளர்பற்றின் அளவற்ற வடிவுற்ற முகில்கிட்ணன்' என இங்கே குறித்துள்ளார்.

x 'அணிகலைச் செஞ்சொலார் பயில்தரும் திரு முது குன்றமே'

"சாவாதவர் பிறவாதவர் தவமே மிக உடையார் மூவாதபன் முனிவோர் தொழும் முதுகுன்று" "முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியும் முதுகுன்றம்" 'தெரிந்த அடியார் சிவனே யென்று... இரவும் பகலும் எத்தும் சீர் முதுகுன்றே"

"பூசை செய்த அடியார் நின்று புகழ்ந்தேத்த முதுகுன்றே"

—சம்பந்தர் 3-34-7 · 1-12 6; 1-131-10; 2 64-4, 8.

குகையிட மருவிய கருவிழி மாந்தர்
*கோட்டாலை யின்றி யவிரோதம்;

வரஇரு வினையற †உணர்வொடு தூங்கு
வார்க்கே விளங்கு மநுபூதி-

யடிவினை யுனதழ கியதிரு வார்ந்த
வாக்கால்மொ ழிந்த நுளவேணும்;

திரள்வரை பகமிகு குருகுல வேந்து
‡தேர்ப்பாகன் மைந்தன் மறையோடு-

தெருமர நிசிசரர் மனைவியர் சேர்ந்து
தீப்பாய இந்த்ர புரிவாழ;

விரிதிரை யெரியெழ முதலுற வாங்கு
வேற்கார கந்த புவியேழும்-

மிடிகெட விளைவன வளவயல் சூழ்ந்த
வேப்பூர மர்ந்த பெருமாளே. (க)

---

* கோட்டாலை—துன்பம்.

† "தூங்காமல் தூங்கி" தாயுமானவர்—காண்பேனோ—10

"ஆங்கார மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே"
—தாயுமா-பராபர-74.

"முருகன் உருவங் கண்டு தூங்கார்"—கந்-அலங்-55,

"தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வதெவ் வாறே"
—திருமந்திரம் 129.

‡ பிரமன் மறையொடு கலங்க வேலாற் சிறையிடப் பட்டான்—பாடல் 95-பக்கம் 224; பாடல் 212-பக்கம் 42; பாடல் 571—பக்கம் 310 கீழ்க்குறிப்பு.

மலைக்குகை யிடமபோல உள்ள கருவிலே (இழி) இறங்கி விழுகின்ற மாக்களுக்கு (மனிதர்களுக்கு) ஏற்படும் (கோட்டாலை) துன்பங்கள் இல்லாமல், (அவிரோதம்) விரோதமின்மை என்னும் உள்ளப்பண்பு—

வர, (இருவினை) நல்வினை தீவினை இரண்டும் ஒழிய, உணர்வொடு தூங்குவார்க்கே — ஞான உணர்வொடு இருப்பவர்க்கே விளங்கும்படியான (அநுபூதி) அனுபவஞான (அல்லது அருட்ப்ரசாத)

வடிவத்தை உனது அழகிய லக்ஷ்மீகரம் பொருந்திய திருவாக்கால் உபதேசித் தருளவேண்டும் ;

திரண்டு பருத்த (கிரவுஞ்ச) மலை பிளவுபடவும், குருகுல வேந்தனாகிய அருச்சுனனுடைய தேர்ப்பாகனாய் விளங்கிய கண்ணன்—திருமாலின்—மைந்தனும் பிரமன் தான் கற்ற வேதமும் தானுமாய்—

கலக்கம் உற, அசுரர்களின் மனைவிமார்கள் ஒன்று கூடி தீயில் பாய்ந்து இறக்கவும், தேவேந்திரனுடைய (புரி) ஊர்-பொன்னுலகம் வாழவும்—

விரிந்த கடலில் தீ எழவும்—தான் முதன்மையாம் தன்மை விளங்க, (வாங்கு) பிரயோகித்த (செலுத்தின) வேலாயுதத்தை உடையவனே! கந்தனே! உலகேழின்

வறுமை நீங்கும் அளவுக்கு செழிப்பான விளைச்சலைத் தருகின்ற வயல்கள் சூழ்ந்த வேப்பூரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(வாக்கால் மொழிந்தருள வேணும்)

நிம்பபுரம்.

[நிம்பபுரம் என்பதும் வேப்பூரா யிருக்கலாம்; நிம்பம்—வேம்பு. ஹம்பிக்கு அருகிலும் நிம்பபுரம் என்று ஓர் ஊர் இருக்கின்றது.]

758. வீடுபெற

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான தனதான

அஞ்சுவித பூத முங்*கரண நாலு
†மந்திபகல் யாது மறியாத-
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு பெறுமாறு;
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது-
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோத மருள்வாயே;
குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமப டீர வதிரேகக்-
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்றுதடு மாற இகல்கோப;
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே-
விம்பமதில் சூழு நிம்பபுர வாண
விண்டலம கீபர் பெருமாளே. (க)

---

* கரணம் 4:—சித்தம் — இஃது யாதாகற்பாற்று எனச் சிந்திக்கும்: பின்பு மனம்—இஃது இன்னது ஆகற்பாற்று எனப் பற்றும்; அதன்பின் அகங்காரம்—இஃது ஆமோ அன்றோ இதனை இன்னதெனத் தெளிவேன் யான் எனத் தெளிவு பிறவாதெழும்; அதன்பின் புத்தி—இஃது இன்னதெனத் தெளிவுறும்.

—[சிவஞான போதம் 4 சூத்திரம் 'சிந்தித்தாய்ச் சித்தம்' என்ற வெண்பாவின் உரை]

† அந்தி — இரவு "அந்தி காவலன் (சந்திரன்) அமுதுறு பசுங்கதிர்"—பெரிய திருமொழி 8-5-1.

அந்தி பகல் — இரவு பகல் — கேவலம் சகலம் — மறப்பு நினைப்பு என்பர் பாடல் 303-பக்கம் 250 கீழ்க்குறிப்பு.

நிம்பபுரம்

758.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படும் கரணங்கள் நான்கும், இரவு — பகல் — எவையும் அறியாத—

முடிவு, நடு, முதல் ஒன்று இல்லாததான—அந்த ஒப்பற்ற வீட்டின்பத்தைப் பெறுமாறு—

மேகம் தவழ்கின்ற மலைப்பக்கங்களை உடைய அழகிய மலை வேடர்களின் மங்கைதனை (வள்ளியை) விரும்பி—வள்ளிமலைக் காட்டில்—

வந்து சேர்ந்த திருவடித் தாமரைகளைப் பாட (அடியேனுக்கு) வண்தமிழ அற்புத அழகைத் தந்தருளுக.

யானை வளர்த்ததும், (கலாபம்) இடையணி அணிந்துள்ளதும் ஆன வஞ்சி (அல்லது மயில்போன்ற சாயலுடையவளும் ஆன) வஞ்சி—பெண் (தேவசேனையின்) அழகிய செஞ்சாந்தும் சந்தனமும் (அதிரேகம்) மிகுதியாகக் கொண்டுள்ள

குடம்போன்ற கொங்கை மீது (மனம்) பாய்ந்து அணைகின்ற மார்பனே! கிரௌஞ்சகிரி தடுமாற்றம் அடையும்படி அதைப் பகைத்துக் கோபித்தவனே! (அல்லது தடுமாற்றம் அடையவும், பகையும் கோபமும் கொண்டு)

கொடிய போர்செய்த சூரனுடைய நெஞ்சு பிளவுபடவும் வீரம் வாய்ந்த வெற்றிதரும் கூரிய வேலைச் செலுத்தினவனே!

ஒளி பொருந்திய மதில் சூழ்ந்துள்ள நிம்பபுரம் என்னும் தலத்தில் வாழ்கின்ற பெருமாளே! விண்தலமகிபர்—விண்ணுலகத் தரசர்களுக்குத்—தேவேந்திரர்களுக்குப் — பெருமாளே!

(வீடு பெறுமாறு வண்டமிழ் அருள்வாயே)

வேப்பஞ்சந்தி.

[இது வேப்பூரோ வேறு தலமோ விளங்கவில்லை.]

759. திருவடியைப் பெற

தாத்தம் தந்தத் தந்தத் தனனத் தனதான

நாட்டந் தங்கிக் கொங்கைக் குவடிற் படியாதே—
நாட்டுந் தொண்டர்க் கண்டக் கமலப் பதமீவாய்;
வாட்டங் கண்டுற் றண்டத் தமரப் படைமீதே—
*மாற்றந் தந்துப் பந்திச் சமருக் கெதிரானோர்;
கூட்டங் கந்திச் சிந்திச் சிதறப் பொருவோனே-
†கூற்றன் பந்திச் சிந்தைக் குணமொத் தொளிர்வேலா!
வேட்டந் தொந்தித் தந்திப் பரனுக் கிளையோனே-
வேப்பஞ் சந்திக் கந்தக் குமரப் பெருமாளே. (க)

திருக்கூடலையாற்றூர்.

[இது மணிமுத்தநதியும் வெள்ளாறுங் கூடு மிடத்தில் இருக்கின்றது. விருத்தாசலத்தி லிருந்து 14-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

760. காலன் அணுகா வகை

தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன தந்ததான

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப் பாய்ந்துகட வோட்டமொ டாடிவிடு
விஞ்சையாலே-

---

* மாற்றம்—வஞ்சின மொழி
'மாற்றம் மாறான் மறலிய சினத்தன்' (புறநானூறு 341)

† நடுவன்—தருமன்—அறக்கடவுள் எனப் பெயர் பெற்ற யமதருமராஜனைப் போல ஒழுங்கான நீதி நெறியில் நிற்கும் வேல் அதனால் 'கூற்றன் பந்தி (ஒழுங்கு),...வேல்' என்றார்: "நீதிவேல்" என்றார் 350 ஆம் பாடலிலும்.

வேப்பஞ்சந்தி

759.

(நாட்டம்) நோக்கமும் விருப்பமும் (உன்பால்) தங்க வைத்துக் கொங்கை மலைகளிற் படியாமல்—

(தங்கள் கருத்தை உனது திருவடியில்) நாட்டவல்ல தொண்டர்களுக்கு, அண்ட (கிட்டும்படியாக) கமலப்பதம்—திருவடித் தாமரையை (ஈவாய்) நீ கொடுத்துதவுவாய்.

சோர்வு காணும்படியாக விண்ணில் உள்ள தேவர்களின் படைமேலே—

(மாற்றம்) வஞ்சினமொழி- எதிர்த்துப் பேசும் மொழி—(தந்து) பேசிக் கூட்டமாகப் போருக்கு எதிர்த்து வந்தவராம் (அசுரர்கள்)

கூட்டமெல்லாம் (*கந்தி) கெட்டு, (சிந்திச்சிதற) பிரிபட்டுச் சிதறுண்ணச் சண்டை செய்தவனே!

யமனுடைய (பந்தி) ஒழுங்கான (சிந்தைக்குணம்) மனத்தின் பண்பை நிகர்த்து விளங்கும் வேலை உடையவனே!

அடியார்களின் விருப்பத்தை (நிறைவேற்றும்) பெருமான், (தொப்பையை) உடையபெருமான், யானைமுகப் பெருமான் ஆகிய கணபதிக்கு இளையவனே!

வேப்பஞ்சந்தி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் கந்தப் பெருமாளே! குமரப் பெருமாளே!

(கமலப் பதமீவாய்)

திருக்கூடலையாற்றூர்

760.

(வாட்டி எனை) என்னை வாட்டிச் சூழ்ந்துள்ள வினையும், († ஆசைய) பொன்னாசை முதலான மூவாசை—மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூவாசைகளும், (அனல் மூட்டி) தீயை மூட்டி, உலையில் காய்ந்த (மழுவாம் என)—பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புபோல, (விகாசமொடு)—மலர்ச்சியொடு—(நன்றாக) (மாட்டி எனை) என்னை மாட்டிவைத்துப் பாய்தலுற்றுக், ‡(கடவு ஓடு) வழியில்—வாழ்க்கை வழியில், (அடமோடு) பிடிவாதமாய் (ஆடிவிடு) ஆட்டி வைக்கின்ற மாயவித்தை காரணமாய்—

---

* கந்துதல்—கெடுதல்.　† ஆசை—பொன்.　‡ கடவு—வழி.

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ் வன்புகூரத்;

தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னுடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் பேர்ந்துவினை மூடியடி யேனுமுன
தன்பிலாமல்-

தேட்டமுறத் தேர்ந்து *மமிர் தாமெனவெ யேகி†நம
னேட்டிவிடக் காய்ந்துவரி ‡வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுநலி காலனணு காநினரு ளன்புதாராய்;

வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடி xயிருள்
நாட்டவரைச் சேந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கநிலை யாக oவைகும்
விஞ்சையோனே-

**வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் றுங்குமழு வாளியென தாதைபுர
††மேட்டையெரித் தாண்டசிவ லோகன் விடை யேறியிட
முன்கொளாயி;

---

* அமிருத்து ஆம் எனவே—சாவு இல்லை யென்று.

† நமன் ஏவ காலன் வருவான்: 'எமனுல் ஏவி விடுகாலன்'—திருப்புகழ் 1051. காலன் — இயமன் மந்திரியும் தூதனும்-'தருமரா சற்கா வந்த கூற்றனைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனரே' — அப்பர் 4-49-2. 'தருமனும் மடங்கலும்' —பரிபாடல்-3-8

‡ பிரமன் எழுதி அனுப்பும் சீட்டு: "எட்டின் விதிப்படியே" —பாடல் 789, 'அக்ஷரதேவி கோவின் விதிப்படி'—பாடல் 1204. பிரமன் எட்டின்படி காலன் வருதல்—திருப்புகழ் 1183, 1242 பார்க்க.

x இருள் நாட்டவர் — அசுரர்; தேவர்கள் உலகை "இருட்டிலாச் சுரர் உலகு" என்றூர் 344-ஆம் பாடலில். இருள்—அஞ்ஞானமுமாம்.

o வைகும்—வைக்கும்.

** இது பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல்—பாடல் 439-பக்கம் 601; பாடல் 443-பக்கம் 614.

†† மேடு—எடு—பெருமை, மேன்மை,

கிடைத்துள்ள மலர், சாந்து, புனுகுசட்டம், பன்னீர் இவைகளுடனே நல்ல காற்றுவர அனுபவித்து, தாங்குவனவாய் மார்பில் ஆபரணங்கள், முத்துமாலைகள் நன்கு கிடைத்ததென அணிந்து அழகுபெற, (பவிசோடு) சோபையுடனே—விளக்கத்துடனே—(மகிழ்வு) மகிழ்ச்சியும் அன்பும் மிக்குப் பெருக—

(மை) தீட்டின (அல்லது கூரிய) கண்களை உடைய ஒளி பொருந்திய மாதர்களுடனே விளையாடி, அந்த (காம) வலையிலே மனம் பூட்டப்பட்டு, போய், நோய்களுடன் வலிகளும், வாதநோயும் என (ப்பல நோய்கள்) ஒன்று சேர்ந்துவிட, (பேர்ந்து) — நிலைமாறி, வினைகள் மூடி, அடியேனும் உன்மீது அன்பு இல்லாமல்—

(தேட்டம் உற) சேகரித்த பொருள் (நிரம்ப) இருப்பதால் மனம் ஒருவாறு தெளிவு பெற்று சாவு என்பதே இல்லை என்னும் எண்ணத்துடனே வாழ்நாளைச் செலுத்த—நமனர் (தமது தூதர்களை) ஒட்டி அனுப்ப, (காய்ந்து) மெலிந்து, (வரி) எழுத்துள்ளதும், பிரமனது அடையாளம் கொண்டதுமான (சீட்டு) ஓலைச்சீட்டு வரப் பார்க்கும்படி (நலிகின்ற) வருத்துகின்ற காலன் (என்னை) அணுகாதபடிக்கு உன்னுடைய அருளையும் அன்பையும் எனக்குத் தந்து உதவுக.

வேடர்கள் மீது வெகுண்டு (குறமாது) வள்ளியுடன் உறவு கொண்டாடியும், (இருள் நாட்டவரை)—அஞ்ஞான நிலையினராம் அசுரர்களைச் சிவந்த ஒளிவீசும் வேல்கொண்டு போர்செய்து, (தேவர்களைச்) சிறையினின்றும் மீட்டு, அத் தேவர்களின் ஆண்டவன் தலைவனும் இந்திரனை வாழும்படியாக வாழ்க்கை நிலையாக வைத்த கலைஞனே!

வேறு உருவில் (கூலியாள் உருவில்) சென்று மதுராபுரியில் (மண் சுமப்பவனாக) விளையாடி, வைகை யாற்றில் மணலைச் சுமந்த மழு ஏந்தினவரும், என்னுடைய தந்தையும், திரிபுரத்தினுடைய (ஏட்டை) அல்லது மேட்டை-மேன்மையை (பெருமையை) எரித்து ஆண்ட சிவலோகனும், இடபவாகனத்தில் ஏறினவரும் ஆகிய சிவபிரானது இடது பாகத்தைக் கொண்ட தாய்;

கோட்டுமுலைத் தாங்குமிழை யானஇடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ கானசிவ காமிவிறல்
*கூற்றவனைக் காய்ந்தஅபி ராமிமன தாரஅருள் கந்தவேளே!

கூட்டுநதித் தேங்கிய†வெ ளாறுதா ளாறுதிகழ்
நாட்டிலுறைச் சேந்தமயி லாவளிதெய் வானையொடே
கூற்றுவிழத் தாண்டி‡யென தாகமதில் வாழ்குமர
தம்பிரானே.

கடம்பூர்.

[சிதம்பரத்துக்குத் தென்மேற்கு 15-மைலிலுள்ள மன்னார்குடிக்குத் தெற்கு 4-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

761. திருவடி பெற

தானனம் தானன தானனம் தானன
தானனம் தானன தனதான

வாருமிங் கேவீடி தோபணம் பாஷாண
மால்கடந் தேபோமெ னியலூடே-
வாடிபெண் காள்பாயை போடுமென் றுசார
வாசகம் போல்கூறி யணைமீதே;
சேருமுன் காசாடை வாவியும் போதாமை
தீமைகொண் டேபோமெ னடமாதர்-
சேரிடம் போகாம லாசுவந் தேருமல்
சீதளம் பாதார மருள்வாயே;

---

* கூற்றவனைக் காய்ந்த அபிராமி—பாடல் 751-பக்கம் 240 குறிப்பு.

† வெள்ளாறு தாளாறு திகழ் நாடு—வெள்ளாறும் மணிமுத்த நதியுங் கூடும் இட மாகிய கூடலையாற்றூர்; தாள ஆறு--மணி முத்த நதி. தாளம்—முத்து.

‡ எனது ஆகமதில் வாழ் குமரன்—"இறைவனே...(ஈசா) உடலிடங்கொண்டாய்"—திருவாசகம்—22.5, 10.

மலையன்ன கொங்கைகளைத் தாங்கும் நூல்போன்ற இடையையும், கோடி சந்திரர்களுடைய தோற்றங்கொண்டு வந்தது போன்ற அழகையும் கொண்ட சிவகாமி, வலிமை கொண்ட யமனை (உதைத்து) அழித்த (அபிராமி) அழகியாம் பார்வதிதேவி மனங்குளிரப் பெற்றுகந்த கந்தவேளே!

(கூட்டுநதித் தேங்கிய வெளாறு தராறு) வெள்ளாறும் தராறு (மணிமுத்த நதியும்) கூட்டுநதி தேங்கிய—ஒன்றுகூடி நிறைந்துவரும், விளக்கங்கொண்ட (நாட்டில்) இடத்தில் — கூடலையாற்றூர் என்னுந்தலத்தில் வீற்றிருக்கின்ற சேந்தனே! மயிலனே! வள்ளி தெய்வயானையுடன்,—(என்னிடம் வரமுடியாமல்; யமன் ஒதுங்கித் தாண்டி ஓடி விழும்படியாக,—என்னுடைய உடலிடத்தேயே (குடிகொண்டு) வாழ்கின்ற குமரனே! தம்பிரானே! (காலன் அணுகா(த) நின் அருளன்பு தாராய்)

கடம்பூர்

761

வாரும் இங்கே! என் வீடு இதோ இருக்கின்றது! பணம் எனக்கு விஷம் மாதிரி! உம்முடைய ஆசையை தீர்த்துக் கொண்டே போங்கள் என்னுடைய-இயலூரடே—அன்புடனே கலந்து;

வாருங்களடி பெண்களே, பாயைப் போடுங்கள் என்று (ஆசாரவாசகம்) மரியாதைப் பேச்சுக்கள் போன்றவைகளைப் பேசிப் படுக்கையில்

சேர்வதற்கு முன்பாக காசு (பொருளையும்) ஆடைகளையும் *(வாவியும் வேண்டிய அளவுக்கு வவ்வியும் (பற்றிக்கொண்டும்), (போதாமை தீமை கொண்டே) அவை போதா என்று குற்றம் கூறிப் (போமென் அடம்—மாதர்) ஓடிப்போம் என்கின்ற அடம் பிடிக்கும் (பிடிவாதம் பிடிக்கின்ற) அல்லது போம் என்று (நடம்+மாதர்) நடிக்கின்ற விலைமாதர்கள்

உள்ள இடத்தில் (நான்) போகாமலும், (ஆசுவந்தேருமல்) குற்றங்கள் என்னைச் சேர்ந்து பெருகாமலும், உனது குளிர்ந்த பாத தாமரையைத் தந்தருள்வாயே!

---

* வாவியும்—வவ்வியும், அல்லது அவாவியும் (ஆசைப்பட்டும்).

நாரணன் சீராம கேசவன் கூராழி
நாயகன் பூவாயன் மருகோனே -
*நாரதும் பூர்கீத மோதகின் றேயாடு
நாடகஞ் சேய்தாள ரருள்பாலா ;
சூரணங் கோடாழி போய்கிடந் தேவாட்
†சூரியன் தேரோட அயிலேவீ -
தூரநறுங் காவேரி சேருமொண் சீருறு
சூழ்கடம் பூர்தேவர் பெருமாளே.

திருவரத்துறை.

[இது 'திருநெல்வாயில் அரத்துறை' எனப்படும். விருத்தாசலத்துக்குத் தென்மேற்கு 11-மைல் தூரத்தி லுள்ள பெண்ணுகடம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு 4-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். இங்குச் சிவபெருமான் திருஞான சம்பந்த ஸ்வாமிகளுக்கு முத்துக் குடையும் முத்துச் சிவிகையும் அளித்தருளியது இத் திருப்புகழிற் கூறப்பட்டுளது.]

---

* சிவ சந்நிதியில் நாரதரும் தும்புருவும் கீதம் இசைத்தல்
"இலங்கும் எழிசை யாழெடுத் தியாவரும் உருகத்
துலங்கு நாரதர் தும்புரு முதலியர் பாட"
—சிதம்பர புராணம்---திருச்சிற்றம்பல 44.

"கோல இசைத் தும்புரு நாரதர்.. துதிகள் கூறுவாரால்"
—திருநெல்வேலி புராணம்—தாம்பிரசபை நடனம்-42.

"வந்து தும்புரு நாரதாதியர் மகரயாழ் இசை பகரவே
சந்த்ரசேகரர் தையல் காட்டு சிங்கா சனத்தில் இருந்தனர்"
ஷை ஆனந்த சவுந்தரிய நடனம்-19.

நாரதர் பூசிக்க இறைவன் தந்த வரம் :
"பண்தரும் வீணை நம்பால் வாசிக்கும் பதமும் தந்தோம்"

வரம் பெற்று நாரதர் வாசிப்பது :
"முனி தோளின் மன்னிய வீணை நாவிரு திசையும் மருவி யோர் யோசனை கேட்க இன்னிசை சிறந்தேப் போதினு மூக்கண் இறைவனையே துதி செயுமால்"
—திருநெல்வேலிப் புராணம்—நாரதச் சருக்கம்—19, 22.

† சூரியன் தேர் சூரன் சொற்படி வழிமாறிப் போய்க் கொண்டிருந்தது :—பாடல் 658-பக்கம் 10 கீழ்க்குறிப்பு.

நாராயணன், ஸ்ரீராமன், கேசவன், கூர்மை கொண்ட சக்ராயுதந் தரித்த நாயகன்,—பூவாயன் (பூ-பூலோகத்தில் ஆயன்—(ஆயர்) இடையர் குலத்துவந்த கண்ணபிரான்: அல்லது (*பூ — தாமரைப்பூ அன்ன — வாயன் — திருவாயையை யுடையவன்), அல்லது (பூ—பூதேவிக்கு— வாயன்—நாயகனுக வாய்த்தவன்), அல்லது (பூ-†பூவுலகை (உண்டு அதைத் தன் தாய் யசோதைக்கு) வாய் திறந்து காட்டினவன்) ஆகிய திருமாலின் மருகனே!

நாரதர் தும்புரு இவர்கள் இசைபாட நின்று ஆடுகின்ற நடனத்தைச் செய்கின்ற திருவடியையுடைய சிவபெருமான் அருளிய குழந்தையே!

சூரனும் அவன் வருத்துஞ் செயல்களும் கடலிற்போய் (மாமரமாய்க் கிடந்தே) அழியவும், சூரியனுடைய தேர் (பழைய முறைப்படித் தடையின்றி) ஓடவும் வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

பரிசுத்தமான மணம் வீசுகின்ற காவிரியுடன் சேர்கின்ற ஒள்ளிய சிற்ருறு சூழ்கின்ற கடம்பூரில் வீற்றிருக்கின்ற பெருமாளே! தேவர் பெருமாளே!

(சீதளம் பாதாரம் அருள்வாயே)

---

* பூ—"ஆம்பூ முழங்கி"—திருப்புகழ் 1187.

† வராக அவதாரத்திலும், இறைவனது திருவடியைத்தேட வராகமாய் அமைந்தபோதும், மண்ணை வாயாற் கிண்டினவன்; அடியார்களின் இதயப் பூவில் இருப்பவன் எனலுமாம்; ' அகண்டலோகம் உண்ட மால்"—பாடல் 719.

762. மாதர் சிக்கு அற

தனன தத்தனத் தனன தத்தனத்
தனன தத்தனத் தன தான

கறுவி மைக்கணிட் டினித ழைத்தியற்
கவிசொ லிச்சிரித் துறவாடிக்-
களவு வித்தையிட் டுளமு ருக்கிமுற்
கருதி வைத்தவைப் பவைசேரத்;
தறுக ணிற்பறித் திருக ழுத்துறத்
தழுவி நெக்குநெக் குயிர்சோரச்-
சயன மெத்தையிற் செயல ழிக்குமித்
தருணி கட்சுகப் படலாமோ;
பிறவி யைத்தணித் தருளு நிட்களப்
பிரம சிற்சுகக் கடல்மூழ்கும்-
பெருமு னித்திரட் பரவு செய்ப்பதிப்
ப்ரபல *கொச்சையிற் †சதுர்வேதச்;
சிறுவ ‡நிற்கருட் கவிகை நித்திலச்
சிவிகை யைக்கொடுத் ×தருளீசன்-

---

* கொச்சை--சீகாழிக்கு உரிய பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று கொச்சை: பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை வயம், கழுமலம்—எனப் பன்னிரு பெயர்கள் சீகாழிக்கு உண்டு.

† 'நான்மறை வல்ல ஞான சம்பந்தன்' எனச் சம்பந்தப் பெருமானே தம்மைக் குறித்துள்ளார்—சம்பந்தர் 3-1-11.
சம்பந்தரை 'வேத பாரகன்' என்றார் சேக்கிழார் —
"மணிமுத்தின் சிவிகை நின்றும் வேத பாரகர் இழிந்து"
"சண்பையாளி வேதபாரகன் மும்மைத் தமிழின் வேந்தன்"
—திருஞான. புரா—913, 1019.

‡ பெண்ணுகடம் என்னும் தலத்தைத் தரிசித்துச் சம்பந்தப் பெருமான் திருநெல்வாயில் அரத்துறைக்குப் போக விரும்பி, திருவடித் தாமரை நோவ நடந்து மாறன்பாடி என்னும் தலத்தில் தங்கினர். அன்றிரவு திரு அரத்துறை ஈசன் தனது குமாரரின் வழி வருத்தத்தைத் திருவுளத்தடைத்து, அவர் ஏறிச்செல்ல முத்துச் சிவிகையும், நிழல்தர முத்துக் குடையும், ஊதுதற்கு முத்துச் சின்னங்களும் தந்தருளினர். திருஅரத்துறை முதலிய தலங்களை முத்துச் சிவிகையிலேறிச் சென்றே சம்பந்தர் தரிசித்தனர்.

(தொடர்ச்சி-பக்கம் 269)

திருவாத்துறை.

762

கோபித்து, மையைக் கண்ணில் இட்டு, இனிதாக அன்புடனே அழைத்து இயற்றமிழ்ப் பாடல்களைச் சொல்லி, சிரித்து, உறவுகொண்டு விளையாடி—

களவு வித்தைகளைக் கொண்டு உள்ளத்தை உருக்கி முன்னதாகவே யோசித்து வைத்த (வைப்பு அவை) சேமப் பொருள்கள் எல்லாம் தம்மைச் சேரும்படி—

கொடுமை காட்டிப் பறித்து, (அங்ஙனம் பறித்த பின்பு) இருவர் கழுத்தும் ஒன்றும்படி அணைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உயிரும் சோரும்படி

படுக்கை மெத்தையிலே செய்வதின்னது என்று தெரியாத வகைக்குச் செயல் அழிக்கின்ற இந்த இளம் பெண்களிடையே அகப்படலாமோ (அகப்படல் கூடாது என்றபடி).

பிறவிப் பிணியைத் தொலைத்தருளக் கூடிய உருவமில்லாத, முழுமுதற் பொருளான ஞானனந்தக் கடலில் முழுகும்

பெரிய முனிவர் கூட்டங்கள் போற்றுகின்ற வயலூரில் புகழ் விளங்க வீற்றிருப்பவனே! சீகாழியில் நான்கு வேதங்களும் வல்லவனாய் வந்த

(திருஞான சம்பந்தச்) சிறுவனே! உன்பால் திருவருள் வைத்து (முத்து)க் குடையும், முத்துப் பல்லக்கும் கொடுத்தருளின சிவன் (வீற்றிருக்கும்)

"வருந்துங் கொலாம் கழல் மண்மிசை யேகிடின்என்று மென்றூர்த்
திருந்தும் புகழ்ச் சண்பை ஞான சம் பந்தர்க்குச் சீர்மணிகள்
பொருந்துஞ் சிவிகை கொடுத்தனன் காண் புண ரித்திகழ் நஞ்
சருந்தும் பிரான் நம் அரத்துறை மேய அரும் பொருளே."

—ஆளுடைய பிள்ளை அந்தாதி-83.

x அருள் ஈசன்—என்றூர்: ஏனெனில் தான் பெற்ற அருளை நினைந்து மகிழ்ந்து ஈசன் அருள் யாருக்குக் கிட்டும் என்பதையே கருத்தாகவைத்துச் சம்பந்தப்பெருமான் திரு அரத்துறையிற் பதிகம் பாடினர். உ-ம்

"எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவ தன்றால்
** நெல்வாயில் அரத்துறை யடிகள் தம் அருளே"

—சம்பந்தர் 2-90-1.

செகத லத்தினிற் புகழ்ப டைத்தமெய்த்
திருவ ரத்துறைப் பெருமாளே. (க)

யாழ்ப்பாணயன்பட்டினம்.

['யாழ்ப்பாணயன்பட்டினம்' என்பது அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவ ராகிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருடைய ஊராகிய திரு எருக்கத்தம்புலியூ ராக இருக்கலாம். நடுநாட்டில் விருத்தாசலத்துக்குத் தெற்கு 7-மைல். ஈழநாட்டில் 'யாழ்ப்பாணம்' என்னும் ஊர் இருக்கின்றது.]

763. ஞானம் பெற

தாத்தா தானம் தத்தன தனதன
தாத்தா தானம் தத்தன தனதன
தாத்தா தானம் தத்தன தனதன தனதான

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்-
*போற்றுய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்று ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்;
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமத மகிலாரம்-
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
†வேட்பூ ணுகங் கெட்டெனை யுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ;
ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகையுமை
கூத்தா டாநந் தச்சிவை திரிபுரை
‡யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவநேசை-

* போற்றுய்—போல் தாய் ; தாய்—தாவி.
† வேட்பூணு—வேட்கை பூண்டு.
‡ தேவி ஆளும் பேய்ப்படை, பூதப்படை :
"தொல்லை நாயகியுடைய பேய்க்கணங்கள் சொல்லுவாம்"
—தக்கயாக-120.
** இறைவி...பூதமும் கழுதுமே ககன முழுதுமே"
—தக்கயாக-55.

பூமியிடத்தே புகழ் பெற்ற சத்திய (வாசகப்) பெருமாளே! திரு அரத்துறைப் பெருமாளே!

(தருணிகட் ககப் படலாமோ)

யாழ்ப்பாணயன் பட்டினம்

763

பூவாலாகிய மாலையைச் சூடும் கூந்தலை உடையவர், பூங்கொத்துக்களைச் சூடும் கூந்தலை உடையவர், பார்த்தால் பார்வையானது வேல், (கட்கம்) வாள் போலவும், மன்மதன் செலுத்தும் போருக்கு என்றே நிறைந்த பெருகியுள்ள (கள் சரம்) தேன் கொண்ட பூ அம்புகள் போலவும், யமன் ஏவி அனுப்பியுள்ள தூதும்

போலவும் பாய்ந்து, நாள்தோறும் (யார் கையிற்) பொருள் உளதோ அந்தப் பொருள் உடையவர்கள் மீது (தாள் ஆர் தம்பற்றிடு) முயற்சி நிறையச் செய்து தம்மீது (பற்று) அன்பு வரும்படியான (ப்ரமையது) ஆசை மயத்தை ஏற்றி, மாய வித்தைகளைக் கற்றுள்ள அஞ்சனம் பூசின கண்ணினர்; வாயிதழ் அமுது ஊறல்

வாய்ந்தவர்கள், மனம் மாறுபடுதல் உண்டாகும்படிப் பேசும் (பொய் விரகியர்) பொய் நிறைந்த உபாயத்தினர், நூல் தேய் நூலின் — நூலிலும் தேய்ந்து மெலிந்த அல்லது (நூறும் நம்பர் எண்ணுக) வெகு நுண்ணிதாக நூற்கப்பட நூல்போன்ற சிறிய இடை துன்பப்படும்படி (வாட்டாய் வீசும்)-வாள் தாய் வீசும்-ஒளி தாவி வீசுவதும் பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, அகில், (ஆரம்) மாலை—

சிறந்த ஆபரணங்கள், முத்து மாலை, ரவிக்கை இவைதமை அணிந்துள்ள கொங்கையினர்-இவர்கள்மேல் வேட்கை (ஆசை) பூண்டு, உடல்நலம் கெட்ட என்னை உனது சத்தியவாக்கால் நான் ஞானத்தை அடைந்து இனி (உன்னை) வழிபடுமாறு திருஅருள் புரிய மாட்டாயா!

தாய், திருமாலின் தங்கை, (கனிகை) கன்னிகை, உமை, நடனம் செய்யும் ஆனந்த சிவாம்பிகை, திரிபுரை, தான் ஆளும் பேய்களும் பூதங்களும் சுற்றியுள்ள பயிரவி, (புவனேசை)—புவனங்களுக்கு ஈசுவரி,

*ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளை
யாட்டா †லீசன் பக்கம துறைபவள் பெறுசேயே;
ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
‡நீததார் ஞானம் பற்றிய குருபர
xயாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு முருகோனே-
oஏற்போர் தாம் **வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணயன் பட்டின மருவிய பெருமாளே.(க)

ஸ்ரீ முஷ்டம்.

[சிதம்பரத்திலிருந்து 24-மைல். விருத்தாசலத்துக்குத் தெற்கு 7 மைலிலுள்ள 'ராஜேந்திர பட்டணம்' எனப்படும் எருக்கத்தம் புலியூருக்குக் கிழக்கு 4-மைல். விஷ்ணு க்ஷேத்திரம்.]

764. தரிசனம் பெற

தனனத்த தான தனனத்த தான
தனனத்த தான தனதான

††கழைமுத்து மாலை புயல்முத்து மாலை
கரிமுத்து மாலை மலைமேவுங்-

* ஆக்கல் — பற்றுதல் — செறுதல் — முத்தொழிலும் தேவி பூண்டவள்: 'பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே பின் கரந்தவளே'—அபிராமி அந்தாதி 13

† ஈசன் பக்கம துறைபவள்—பாடல் 301-பக்கம் 246.

‡ 'முற்று வற்று மெய்ப் போதத்தே யுற்றார் சித்தத்துறை வோனே'—திருப்புகழ் 1120.

"ஞானம் புகலுடையோர் தம் உள்ளப்
புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்"—சம்பந்தர் 1-132-6.

x "யாப்பாராயும் சொற்றமிழ்"—முத்தமிழ்க்கும் இலக்கியமா யுள்ள சம்பந்தர் தேவாரம்.

o ஏற்பவர்க்கு மகிழ்ச்சியுடன் ஈதல் உடையவர் வாழும் ஊர் யாழ்ப்பாணயன் பட்டினம் என்கின்றார்—இது 'இரப்போர்க் கெந்நாளும் காலம் பகராதார் காழிந் நகர்' என்னும் தேவாரத்தையும் (சம்பந்தர் I-81-9) 'ஈத்துவக்கும் இன்பம்' என்னும் திருக்குறளையும் (228, நினைவூட்டுகின்றது ** வந்து—வர.

(†† தொடர்ச்சி பக்கம் 273)

ஆக்கா யாவும் பற்றியே (யாவும் ஆக்கா பற்றியே) எல்லாவற்றையும் ஆக்கியும், (பற்றியும்) கொண்டு காத்தும் திரிபு உற நோக்கா—வேறுபாடு பொருந்தப் பார்த்தும் எதையும் (செற்றவள்) அழித்தவள் —(படைத்தல், காத்தல், அழித்தல் — முத்தொழிலையும் செய்பவள்—திருவிளையாடலாக ஈசனுடைய (இடது) பக்கத்தில் வீற்றிருப்பவள் — ஆகிய பார்வதி பெற்ற குழந்தையே!

(ஏத்தா நாளும்) நாளும் ஏத்தா — தினந்தோறும் போற்றிசெய்து, (தர்ப்பணம்) நீர்க்கடன், ஜெபம் இவை செய்து, (அல்லது இவை தமைத்) துறந்தோராயினோர் தமது ஞான நிலையிற் பற்றிய குருபர மூர்த்தியே; யாப்பிலக்கணத்தை ஆய்ந்தெடுத்த (யாப்பிலக்கணம் ஆய்ந்தமைந்த) சொற்களைக் கொண்ட தமிழ்ப் பாடல்களை அருளிய முருகனே!

ஏற்பவர்கள் தாம் வர (அவர்களுக்கு) இஷ்டத்துடனும் மகிழ்ச்சியுடனும் (பொருளை) வாய்க்கும்படி — சேரும்படி வீசுகின்ற (கொடையாளிகள் உள்ள) யாழ்ப்பாணயன் பட்டினம் மருவிய பெருமாளே! (பொற்பிரபை நெடுமதிள்) பொன்னொளி வீசும் நீண்ட மதில் சூழ்ந்துள்ள யாழ்ப்பாணயன் பட்டினத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(ஞானம் பெற்றினி வழிபட அருளயே)

ஸ்ரீ முஷ்டம்.

764

(கழை) மூங்கில் அல்லது கரும்பு தரும் முத்தாலாய மாலை, (புயல்) மேகம் தருகின்ற முத்தாலாயமாலை, (கரி) யானை தரும் முத்தாலாய மாலை, மலையிற் கிடைக்கும்

(272-ஆம் பக்கம்-தொடர்ச்சி)

†† முத்து பிறக்கின்ற இடங்கள்—பாடல் 306-பக்கம் 260 கீழ்க்குறிப்பு; பாடல் 278-பக்கம் 192 கீழ்க்குறிப்பு

பலவித முத்துமாலைகளையும் மார்பில் அணிந்துவர வேண்டும் என்கின்றார்—இக் கருத்து—

"மழையின் முத்தும், தவள மதியின் முத்தும், கமல மலரின் முத்தும், கரியினீள்—வளர் மருப்பின்கண் ஒளிகிளரு முத்தும்

(தொடர்ச்சி 274 ஆம் பக்கம் பார்க்க)

கடிமுத்து மாலை வளைமுத்து மாலை
கடல்முத்து மாலை யரவினும்;

அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பி
னடைவொத்து லாவ அடியேன்முன்-

அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு
*மடிமைக்கு ழாமொ டருள்வாயே;

†மழையொத்த சோதி குயில்தத்தை போலு
‡மழலைச்சொ லாயி யெமையீனு-

(273 ஆம் குறிப்புத் தொடர்ச்சி)

கதலிவரு கனிக்கண் பொழி நிலா, விழையு முத்தும், குருகு தலையின் முத்தும் கமுகின் மிடையு முத்தும், தெரிவைமார் மிடறின் முத்தும், கிருடி யெயிறு முத்தும், கிளையின் விளையு முத்தும், பணையினர்-கழையின் முத்தும் பணில முதவு முத்தும், செநெலின் கதிரின் முத்தும், புனலுலாம், கயலின் முத்தும், சலவர் முழுகு நத்தின் வயிறு கனுலு முத்தும், புகழதாய்த், தழையு முத்தும் புனையு மணி யுரத்தின் குமா! தருக முத்தம் தருகவே, தணிகை வெற்பின் கண் அமர் அறுமுகப் பொன்குழவி! தருக முத்தந் தருகவே"
—தணிகைப் பிள்ளைத்தமிழ்

(1) மூங்கில்முத்து (எங்ஙனம் பெறப்படும்) என்பது 'முதுவேய் கலகலென ஒலிகொள் கதிர் முத்தம் அவை சிந்து காளத்திமலை" 327-5

"வேரல் நரன்றுக்க வெண்மணிக் குப்பை"
—தணிகையாற்றுப் படை 384.

(2) கரிமுத்து—யானை முத்து எங்ஙனம் பெறப்படும் என்பது:

"பருக்கை யானை மத்தகத்து அரிக்குலத் துகிர்ப்புக, நெருக்கி வாய நித்திலம் நிரக்கும் நீள் பொருப்பனூர்"—சம்பந்தர் 2-101-1.

"வேழத்தின் வெண்மருப்பினைக் கீழ்ந்து சிங்கங்
குருகுண்ண முத்து உதிரும் கேதாரமே" சம்பந்தர் 2-114-9.

"பிறழ்பற் பேழ்வாய்ப் பின்முன் பார்வைச்
சிங்க வல்லேறு பொங்குசினந் திருகி
எழுந்து தாய்த் தமிப்ப இருங்கடா யானை
மத்தகம் பிளந்து மாயிருங் குன்றத்து
வெண்புன லருவி வீழ்வன போலச்
சலசல வுக்க தரளக் குவாலும்"
—தணிகை யாற்றுப்படை 385.

(தொடர்ச்சி பக்கம் 275)

(கடி) சிறப்பு வாய்ந்த முத்தாலாய மாலை, (வளை) சங்கிற் கிடைக்கும் முத்தாலாயமாலை, கடலிற் கிடைக்கும் முத்தாலாய மாலை, பாம்பு தரும்

சூடுள்ள முத்தாலாயமாலை—இப்படிப்பட்ட எல்லா மாலைகளும் மார்பிலே (அடைவு ஒத்து) தகுதி பெறவே புரண்டசைய அடியேன் எதிரே—

அடர்ந்த — நெருங்கிய பச்சைநிறக் குதிரை — மயில்மீதே — திருவருள் சுரந்து — பெண்ணோடு (உனது பத்தினிகள்) தேவசேனை — வள்ளியுடனும் (அல்லது — அருளிற்பெண் — *இச்சா சத்தியாம் வள்ளியுடனும்) அடியார் கூட்டத்தோடும் வந்து அருள்புரிவாயாக.

[மழை யொத்த சோதி] மேகம்போலு நிறத்தை உடைய சோதியுமை, குயிலும் கிளியும் போன்றவள், மழலைமொழி பேசும் தாய், எம்மைப் பெற்ற

* "இச்சா சக்தி தெய்வ வள்ளிக்கு ஹர ஹரேர ஹரா"—திருமுருகன் ஹர ஹரோ ஹரா கும்மி.

பக்கம் 274 தொடர்ச்சி

3 அரவினும் அழல் மூத்து என்பர் — பாம்பு உமிழும் முத்துமணி ரத்னம் சுடும் என்பது—

"சுடுமணி உமிழ் நாகம்"—சம்பந்தர் 1-118-1.

4 கடல் முத்து (எங்ஙனம் பெறப்படும் என்பது)

"கடல்வாழ் பரதர் மனைக்கே நுனை மூக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பை"—சம்பந்தர் 1-66-1.

"சங்கு கடல் திரையால் உதையுண்டு சரிந்து இரிந்து, ஒசிந்து, அசைந்து, இசைந்து சேரும் வெண்மணற் குவைமேல் தங்கு கதிர்மணி நித்திலம்"—சம்பந்தர் 1-136-2

* 'அடிமைக் குழாம் உடன் வாவேண்டும் என்பது அருணகிரியார் வேண்டுகோள் — "பழைய அடியவருடன்.. ஒரு விசை வரவேணும்"—திருப்புகழ் 387.

† மழை—நீருண்டமேகம்—தேவியை "மைம் மலர் நீலநிறங் கருங்கண்ணி" என்பர் அப்பரும்—IV-89-5.

‡ தேவி — 'மழலைச் சொல் ஆயி' என்பர் 'கிளி மழலைக் கேடில் மங்கையோர் கூறுடையான்' —சம்பந்தர்—1-105-6.

*மதமத்த நீல களநித்த நாதர்
மகிழ்சத்தி யினு முருகோனே;

செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை
†திருமுத்தி மாதின் மணவாளா-

சிறையிட்ட சூரர் தலைவெட்டி ஞான
திருமுட்ட மேவு பெருமாளே. (க)

765. மாதர் உறவு அற

தனனத் தத்தன தானன தானன
தனனத் தத்தன தானன தானன
தனனத் தத்தன தானன தானன தனதான

சரம்வெற் றிக்கய லாமெனும் வேல்விழி
சிலைவட் டப்புரு வார்குழல் கார்முகில்
தனமுத் துக்கிரி யாமெனு நூலிடை மடவார்கள்-

‡சனுமெத் தப்பரி வாகிய மாமய
லிடுxமுத் தித்திகழ் மால்கொடு பாவையர்
தகுதத் தக்கிட தோதகு திதெென விளையாடும்;

விரகத் துர்க்குண வேசைய ராசையர்
பணமெத் தப்பறி காரிகள் மாறிகள்
விதமெத் தக்கொடு மேவிகள் பாவிகள் அதிபோக-

---

* மதமத்தம்—(ஊமத்தை) 'வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம் பொன்னியன்ற சடையிற் பொலிவித்த புராணனார்'—சம்பந்தர் 2-71.

† தேவசேனை—முத்திமாது—
"முத்தித்தரு பத்தித் திருநகை அத்தி"—திருப்புகழ் 1.
"ஆரிய கேவலி"—திருப்புகழ் 918.
"கோழி பிறப்பு குலமஞ்ஞை காப்பு, கரந்
தாழு மயிற்கையிற் சங்காரம்—வாழ்குறவர்
ஏர்மகள்தி ரோபவம் இந்திரன் பெண் இன்பழத்தி
தேர்முருகன் ஐந்து திறம்"
—என்னும் பாடலும் இதற்குச் சான்றாம்.

‡ சனு—சரசம், தயவு.

x உத்தி—யுக்தி; முத்தி முத்தம்.

[மத மத்தம்] மதமத்தை — பொன்னூமத்தை — ஊமத்தம் பூவை அணிந்தவரும்] நீலநிறம் கொண்ட கழுத்தை உடையவரும், [நித்த நாதர்] என்றும் அழியா திருப்பவருமான தலைவர் அல்லது, நி(ர்)த்தம் கூத்தாடும் தலைவர் [சிவபிரான்] மகிழ்கின்ற [சத்தி] பார்வதிதேவி பெற்ற குழந்தையே!

செழிப்புள்ள முத்துமாலை அணிந்த மார்பை உடைய அமுதமயமான் தெய்வயானை ['அமுதவல்லி' யாயிருந்த தேவசேனை], அழகிய முத்தியைத் தரவல்ல மாதுஆம் [தேவசேனையின்] மணவாளனே!

சிறையில் [தேவர்களை] வைத்த சூரர்கள் [அந்தத் தேவர்களுக்கு இட்ட] தளை-விலங்கை தறித்தெறிந்தவனே! அல்லது சூரர்களின் (கூட்டக்) கட்டை வெட்டித் தொலைத்த—ஞானனே! திரு முட்டம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

[அருளிற் பெணேடும் அடிமைக் குழாமொ டருள்வாயே]

765.

(சரம் வெற்றி) வெற்றிச்சரம்—ஜயத்தையே தரும் அம்பு, கயல்மீன் என்று உவமிக்கப்படும் வேல் போன்ற கண்கள், வில்லைப்போல வட்டமாக வளைந்த புருவம், (வார்குழல் கார்முகில்) கார்முகில் வார்குழல்—கரியமேகம் போல நீண்ட கூந்தல், (தனமுத்துக்கிரி) — கிரிமுத்துத்தனம் — மலை போன்றதும் முத்துமாலை அணிந்ததுமான கொங்கை, (ஆமெனு நூலிடை) நூல் இடையாம் எனும்—நூலுக்கு ஒப்பாகும் இடை என்று சொல்லத்தக்க மாதர்கள்

(சனு) சரசத்தில்—காம விளையாட்டில் அதிக அன்பு கூடுகின்ற பெரிய காம மயக்கத்தைத் தருகின்ற யுக்தி விளங்குகின்ற (அல்லது — முத்தம் விளைவிக்கும்) ஆசையோடு கூடிய பெண்கள், தகுதத் தக்கிட தோ தகுதீதென நடித்து விளையாடுகின்ற

சாமர்த்தியத்தையுடைய துர்க்குணத்தவரான வேசையர், ஆசையொடு கூடியவர், பணத்தை அதிகமாகப் பறிக்கின்ற பேர்வழிகள் (அடிக்கடி குணம்) மாறுபவர்கள், பலவிதமான (நடை — பாவனை) மேற் கொள்பவர்கள், பாவிகள், அதிக போகம் (அநுபவித்ததனால்)—

மெலிவுற் றுக்குறி நாறிகள் பீறிகள்
கலகத் தைச்செயு மோடிகள் பீடிகள்
விருதிட் டுக்குடி கேடிகள் சேடிகள் உறவாமோ ;

*பொருவெற் றிக்கழை வார்சிலை யானுட
லெரிபட் டுச்சரு காய்விழ வேநகை
புகுவித் தப்பிறை வாழ்சடை யானிட மொருமாது-

புகழ்சத் திச்சிலு காவண மீதுறை
†சிவபத் திப்பர மேஸ்வரி யாள்திரி
புவனத் தைப்பரி வாய்முத லீனுமை யருள்பாலா ;

திரையிற் பொற்கிரி யாடவும் வாசுகி
புணைவித் துத்தலை நாளமு தார்சுவை
‡சிவபத் தர்க்கிது வாமென வேபகி ரரிராமர்-

xதிருவுற் றுப்பணி யாதிவ ராகர்த
மகளைப் பொற்றன வாசையொ டாடிய
திருமுட் டப்பதி வாழ்முரு காசுரர் பெருமாளே. (௨)

---

* மன்மதனைச் சிரித்து எரித்தது—பாடல் 399-பக்கம் 510.

† சிவபத்திப் பரமேசுரி :

—தேவி சிவனிடத்தில் மிக்க பத்தி உடையவள்.

இது காஞ்சியில் இறைவி இறைவனைப் பூசித்த பான்மையிற் பெறப்படும்.

"இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அருச்சனை புரியப்
பொங்குகின்ற தென் ஆசை என்றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினாள் போற்ற"

—பெரிய புராணம்-திருக்குறிப்பு-52.

‡ திருப்பாற்கடல் அமுதைத் திருமால்—சிவபத்தர்க் கிதுவாம்-எனப் பகிர்ந்தனர் என்கின்றார் தேவர்கள் யாவரும் சிவபக்தர்களாதலின். அமுதத்துக்கு முன்பு நஞ்சு எழுந்தபோதும் தேவர்களே சிவனை அடுத்துத் துதித்தனர்.

"அண்ட வானவர்களும் அமரரும் ..பணிய ஆலமுண்ட மாகண்டனார்"—சம்பந்தர் 3-89-7.

"ஒரு தோழம் தேவர் விண்ணிற் பொலிய அமுதம் அளித்த ...அண்ணல்—சம்பந்தர் 1-74-7.

"வானவர் வேதத்தின் இசைபாடி விரை மலர்கள் சொரிந்தேத்தும் பாதத்தீர்—சம்பந்தர் 2-81-1.

[தொடர்ச்சி 279-ஆம் பக்கம் பார்க்க.]

(உடல்) மெலிவடைந்து, குறி துர்நாற்றமுள்ளவர்கள், (பீறிகள்) கிழிவுண்டவர்கள், கலகமே செய்யும் மூதேவிகள், (பீடிகள்) பிடித்துத் துன்புறுத்துபவர்கள், விருதுபேசி— பெருமைப் பேச்சுகளைப் பேசிக் குடியைக் கெடுப்பவர்கள், (சேடிகள்) இளமை உடையோர், இத்தகையோரது உறவு ஆமோ! (உறவு ஆகாது என்றபடி)

போரில் வெற்றியையே தரும் கரும்பாகிய நீண்ட வில்லை உடைய மன்மதனது உடல் எரிபட்டு உலர்ந்த சருகுபோல் விழும்படி (தீச்) சிரிப்பைச் செலுத்திய பிறை நிலா வாழ்கின்ற சடையரின் இடது பாகத்தில் உள்ள ஒப்பற்ற மாது,

எல்லாராலும் புகழ்ப் படுகின்ற (பரா) சக்தி, நிலை குலையாத மனப்பான்மையை மேற்கொண்டுள்ள சிவபக்தி நிறைந்த பரமேஸ்வரியாள், மூவுலகையும் அருளுடனே முன்பு (ஈன்றவள்) படைத்தவளான உமாதேவி அருளிய குழந்தையே!

கடலில் பொன்மலையாகிய மேரு (மத்தாக)ச் சுழன்று ஆடும்படி வாசுகி என்கின்ற பாம்பைக் கயிறுகக் கட்டி முன்பொரு காலத்தில் (அமுதார்சுவை) சுவையாரமுது— சுவை நிறைந்த அமுதத்தை சிவபக்தர்களுக்கே (இது ஆம் என்று) இது உரியதாம் என்று பங்கிட்டுக் கொடுத்த திருமாலாம் இராமர்,

லக்ஷ்மி தேவி சென்று பணிந்து பூசித்த ஸ்ரீ ஆதிவராகப் பெருமாள் — அவரது மகளாகிய வள்ளியுடைய அழகிய கொங்கை மீது ஆசைகொண்டு அவருடன் விளையாடின (முருகா)! திரு முட்டப்பதி எனுந்தலத்தில் வாழ்கின்ற முருகா! தேவர்கள் பெருமாளே!

(குடிகேடிகள் சேடிகள் உறவாமோ)

---

x ஸ்ரீ முஷ்ணம் திருமாலின் திருநாமம் "ஆதிவராகப் பெருமாள்" என்பது. லக்ஷ்மி பூசித்ததலம். ஸ்ரீமுஷ்ணம் எட்டு ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களில் ஒன்று — மற்றவை — ஸ்ரீரங்கம், திருவேங்கடம், வானமாமலை, புஷ்கரம், நைமிசாரணியம், பத்ரிகாசிரமம், சாளக்கிராமம் என்பன

திருநல்லூர்.

[சிதம்பரத்துக் கடுத்த கொள்ளிடம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 3-மைல். இஃது 'ஆச்சாபுரம் நல்லூர்' என வழங்கும். 'திருநல்லூர்ப் பெருமணம்' என்ப திதுவே. திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. அவருடைய திருமணம் நடந்த திருப்பதி. ஸ்தல புராணம் உண்டு.]

766. யோக தரிசனம்

தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன தந்ததான

*மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் †மூணு மண்டல ‡அ
தார சந்திமுக மாறு xஇந்த்ர தரு வுந்தளாமேல்—
மூது ரம்பலவர் பீட மந்தமுமி
லாத பந்தவொளி யாயி ரங்கிரண
மூணு மிந்துவொளிர் சோதி விண்படிக oவிந்துநாதம் ;
ஓல மென்று**பல தாள சந்தமிடு
சேவை கண்††டமுதை வாரி யுண்‡‡டுலகி
ரேழு கண்டுவிளை யாடி யிந்துகதி ரங்கிxxசூலம்—

---

* இப் பாட்டின் முதல் நான்கடியின் கருத்து—
"மூல நிலத்தில் அதோ முகமாய் முகிழ்த்து விழியின்பொடு துயிலும், மூரிப்பாம் பெக் காலனலை மூட்டி யெழுப்பி நிலமாறும், சீலமொடும் போய்த் தரிசித்துச் செழுமா மதியின் அமுதகடல், தேக்கி யகத்தங் கசைவறுமோர் தெய்வத் தவத்தோர் உளவிழியில், காலும் தீப மினல்பஞ்சம் கடிகூர் விரிசு கதிர் மதிபோற், காட்டும் ஒளியாய் இவையாவும் கடந்தாங் கழிவில் பேரொளியாய்ச், சால விளங்கும் விந்துவெனும் தடமா மயிலோய் தாலேலோ! தமரக் கடலைக் கடைந்தமுதம தருவோன் மருகா தாலேலோ" - எனவரும் திருப்போரூர்ப் பிள்ளைத்தமிழிலும் காணக் கிடக்கின்றது.

† மூணு மண்டல அதாரசந்தி—'மண்டல சந்தி ஆறில்' என்றார்
‡ அதார—ஆதார. —647-ஆம் பாடலில்.
x இந்த்ர தரு—"கற்பகந்தரு" என்றார் 612-ஆம் பாடலில்
o விந்து நாதம் ஓலம்—"கோ என முழங்கு சங்கொலி விந்து நாதம்"—என்றார் 647-ஆம் பாடலில்.
** பலதாள சந்தமிடு சேவை—"கோடி நடனப்பதஞ் சபை என்று சேர்வேன்"—பாடல் 647 பார்க்க.

(தொடர்ச்சி-பக்கம் 281)

766

திருநல்லூர்

(மூல முண்டகம்) மூலாதார கமலத்தில் உள்ள (அனுபூதி மந்திரம்) அனுபவ ஞானத்தைத் தரும் மந்திரம், (பராபரஞ் சுடர்கள் மூனு மண்டலம்) மேல் நிலையில் உள்ள சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலம் எனப்படும் மும்மண்டலங்கள், (ஆதார சந்திமுகம் ஆறும்) ஆதாரங்களாக சந்திக்கப்படும் இடங்களான (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை) எனப்படும் ஆறு ஆதாரங்கள், (இந்த்ர தருவும்)—கற்பக விருக்ஷம்போல விரும்பிய எல்லாம் அளிக்கத்தக்க மேலைச் சிவவீதி — இவைகளை எல்லாம் (தளாமேல்) தள்ளா—தாண்டி அவைகளின்மேல்—(சென்று—

பழைய (அம்பலவர் பீடம்)—எல்லாத் தத்துவங்களும் ஒடுங்கும் பரவெளிப் பீடமாம் லலாடஸ்தான மண்டபத்தில் (அந்தமும் இலாத) முடிவு இல்லாத, பந்தஒளி ஆயிரம் கிரணம்—திரண்டஒளியாய் விளங்கும் ஆயிரம் கிரணங்கள் வீசும், மூனு—மூன்றாம்பிறை நிலவின் வடிவைக் கொண்ட ஆஞ்ஞை ஆதாரத்தில் — (இந்து ஒளிர்சோதி) சந்திர ஒளியுடன்கூடி, (விண்படிக) மேல் நிலையில் பளிங்குபோல விளங்கும் (விந்து நாதம்)—விந்து சம்பந்த நாத ஒலி

ஓலம் என்று—அபயம் இட்டு அழைத்தல் போன்ற ஒலியுடன்—பல வகைய தாளங்கள் சந்தங்கள் கலக்கும் நடன தரிசனத்தைக் கண்டு, (அமுதவாரி உண்டு) தேவாம்ருத கடலைப்பருகி, (உலகு ஈரேழு கண்டு) — பதினாலுலகங்களையும் அங்கே விளக்கமுறத் தரிசித்து அனுபவித்து, இந்து - கதிர் - அங்கி - சந்திரன்-சூரியன்-அக்கினி என்னும் — இடைகலை, பிங்கலை, சுழுமுனை எனப்படும் மூன்று நாடிகளின் வழியே-சூலம்போல—

---

†† அமுதை வாரிஉண்டு—"இந்திர வான அமுதத்தை உண்டு" —என்றார் 647-ஆம் பாடலிலும்.

‡‡ உலகு இரேழு கண்டு "லோகங்கள் வலமதாட"பாடல் 179. "அகில புவனாதி யெங்கும், வெளியுற மெய்ஞ்ஞான இன்ப அமுது" என்றார் 141 ஆம் திருப்புகழில்.

xx சூலம் ஓடு — பாடல் ... "சூலம் பெற ஓடிய வாயுவை" சூலமென ஓடு சர்ப்ப வாயுவை" என்றார் 190, 790-ஆம் பாடலில்.

ஒடு மந்தகலி காலொ டுங்க*நடு
தூணில் தங்கவரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி †சந்த்ரவொளி சந்தியாதோ;

சூலி யந்தரிக பாலி சங்கரிபு
ராரி யம்பரிகு மாரி ‡யெண்குணசு
வாமி பங்கிசிவ காம சுந்தரியு கந்தசேயே-

சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பருப கார சுந்தரகு
கான னுஞ்சுருதி யோல மொன்றநட னங்கொள்வேலா;

சீல ×வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி லேறு மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி ०சந்த்ரமுக கந்தவேளே-

தேவ ரம்பையமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர **சங்கரதி
யாகர் வந்துறைந லூர மர்ந்துவளர் தம்பிரானே.(க)

---

* நடுதூண்...'சூலம்பெற ஒடிய வாயுவை மூலந்திகழ் தூண் வழியே அளவிட ஒடி" என்றார் 190-ஆம் பாடலில்.

† சந்த்ர ஒளியைச் சந்தித்தல் — "சந்திர வெளிக்குவழி அருள்வாயே"...என்றார் 398-ஆம் பாடலில்.

‡ சிவபிரான் என் குணத்தவர்: 'எண்ணமருங் குணத்தார்' சம்பந்தர் 2-69-1.

× வெண்பொடி யிடாத வெஞ்சமணர்
...பாடல் 748-பக்கம் 230 கீழ்க்குறிப்பு,

० சந்த்ரமுக கந்தவேள்
...பாடல் 725-பக்கம் 174-கீழ்க்குறிப்பு.

** "சிவலோகத் தியாகர்" என்பது ஆச்சாபுர நல்லூரிற் சிவபெருமான் திருநாமம்.

கும்பகோணத்துக் கடுத்த சுந்தரபெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 2-மைல் தூரத்தி லுள்ள நல்லூர் என்னும் தேவாரம் பெற்ற ஸ்தலத்தில் வீதிவிடங்கத் தியாகர் மூன்று நாள் வந்து உறைந்ததாகத் திருநல்லூர்ப் புராணம் கூறும்.

ஒடுகின்ற - (அந்த கலிகால் ஒடுங்க) அந்தப் பிராணவாயு ஒடுங்க—நடு தூணில் தங்க—வீணா தண்டம் எனப்படும்—முதுகு எலும்பில் தங்கி, வரி ஞானவண் கயிறு மீதணைந்து அமைவதான ஞான வளப்பம் பொருந்திய சுழுமுனைக் கயிற்றின் மீதணைந்து—(அல்லது முதுகெலும்பில் தங்க மயமான ஞானவளப்பம் பொருந்திய சுழுமுனை நாடி)-மீதணைந்து - வழியே மேலே அணைந்து நூறுகோடி சந்திரர்களின் ஒளியை (சிவப்பேரொளியைச்) சந்திக்கும் பாக்கியம் கிட்டுமா!

சூலாயுதத்தை ஏந்தியவள், பராகாசவடிவை உடையவள், கபாலம் ஏந்தியவள், சங்கரி, புரத்தைப் பகைத்து எரித்தவள், (அம்பரி) அம்பு + அரி, திரிபுரசம்மாரத்தில் அம்பாயிருந்த அரி - வைஷ்ணவி - அல்லது·சிதாகாசத்தில் உறைபவள், என்றும் இளையவள், எண் குணத்தவரான சிவபெருமான் பங்கில் உறைபவள்-ஆகிய சிவகாமசுந்தரி (சிவனை விரும்பும் கவுரி) மகிழும் குழந்தையே!

சூரனைச் (சங்கர குமார) சங்கரித்த குமரவேளே! இந்திரனுக்கு உதவி செய்பவனே! அன்பர்களுக்கு உபகாரம் செய்பவனே! அழகனே! குகனே! என்றெல்லாம் வேதங்கள் (ஓலம்ஒன்ற) முறையிட்டு உரைப்பத் திருநடனம் கொண்ட வேலனே!

பரிசுத்தமான திருவெண்ணீற்றை, அணியாதவர்களும் பொல்லாதவர்களுமான சமணர்கள் இறக்கும்படி கொடிய கழுவில் ஏறுங்கள் என்று திருவிளையாடல் இயற்றிப் பொடி — நீற்றை (கூன் பாண்டியன் முதலான) அடியார்களுக்கு அளித்த தாமரைக்கையனே! சந்திரன் போன்ற முக விலாசத்தை யுடையவனே! கந்தவேளே!

தேவரம்பை போன்றவளும், (அமுது ஈன்ற மங்கை) பாற்கடலமுதுடன் ஈனப்பட்ட (தோன்றிவந்த) (மங்கை) லக்ஷ்மி யளித்த மானாகிய வள்ளி (அல்லது அமுது ஈண மங்கை - அமுதவல்லி என்ற பெயர் பொருந்தி இருந்த மங்கை, தருமான் - கற்பகத்தரு நிழலில் இருந்த மான் தேவசேனை—அணைந்த திருப்புயத்தை யுடையவனே! தீரனே! சங்கரதியாகர்—சிவலோகத் தியாகர் என்னும் திருநாமம் உடைய சிவபிரான் வந்து உறைகின்ற திரு நல்லூரெனுந் தலத்தில் பொருந்தி வீற்றிருக்கின்ற தம்பிரானே! (சதகோடி சந்த்ர ஒளி சந்தியாதோ)

திருமயேந்திரம்.

[ஆச்சாபுரத்துக்கு வடகிழக்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

767. மாதர் மயக்கு அற

தந்தன தந்தன தாந்த தானன
தந்தன தந்தன தாந்த தானன
தந்தன தந்தன தாந்த தானன தனதான

வண்டணி யுங்கமழ் கூந்த லார்விழி
அம்பிய லுஞ்சிலை போந்த வாணுதல்
வண்டர ளந்திக ழாய்ந்த வார்நகை குயில்போல-

வண்பயி லுங்குவ டாண்ட மார்முலை
யின்பொறி யங்குமி ழாம்பல் தோள்கர
வஞ்சியெ னுங்கொடி சேர்ந்த நூலிடை மடவார்பொன்;

கண்டவு டன்களி கூர்ந்து பேசிகள்
குண்டுணி யுங்குரல் சாங்க மோதிகள்
கண்சுழ லும்படி தாண்டி யாடிகள் சதிகாரர்-

கஞ்சுளி யுந்தடி யீந்து போவென
நஞ்சையி டுங்கவ டார்ந்த பாவிகள்
கம்பையி லுஞ்சட மாய்ந்து நாயனு முழல்வேனோ;

அண்டரு டன்தவ சேந்து மாதவர்
புண்டரி கன்திரு பாங்கர் *கோவென
அஞ்சலெ னும்படி போந்து வீரமோ டசுராரை-

அங்கமொ டுங்கிட மாண்டோ டாழிக
ளெண்கிரி யுமபொடி சாம்பர் நூறிட
அந்தக னுங்கயி றுங்கை வீசிட விடும்வேலா;

---

* கோ... இரங்கற் குறிப்பு. "அலைகொண்ட வாரிதி கோ கோ கோ கோ எனநின்று வாய்விட"—திருப்புகழ் 328 : பாடல்கள் (826, 1139)ம் பார்க்க.

767.

திருமயேந்திரம்

வண்டுகள் மொய்க்கும் நறுமணக் கூந்தலை உடையவர்கள்; கண்ணனது அம்பு போன்றிருக்கும்; வில்லைப் போன்ற ஒளி பொருந்திய நெற்றி, வளப்பம் பொருந்திய முத்தை நிகர்த்து விளங்குவனவாய் நன்கு அமைந்த ஒழுங்கான பற்கள், குயில்போல

நன்கு பயிலும் (மொழிகள்), மலைபோன்று மார்பில் உள்ள கொங்கை, அதில் அழகிய (பொறி) தேமல், அழகிய குமிழம்பூப் போல மூக்கு, (ஆம்பல்) மூங்கில் போன்ற தோளும் கையும், வஞ்சிக்கொடி போன்ற நூலுக்கு இணையான இடை, இவைதமை உடைய மாதர்கள்—பொன் (பொருளைக்)

கண்டவுடனே மகிழ்ச்சி மிக்குப் பேசுபவர்கள், (குண்டுணியுங் குரல்) கலகத்தை மூட்டும் குரலுடனே (சாங்கம்) எல்லா விஷயங்களையும் பேசுபவர்கள், கண்கள் சுழலும்படித் தாண்டுவதும் ஆடுவதுமாய் உள்ள வஞ்சனைப் பேர்வழிகள்—

(கஞ்சுளி) பரதேசிப் பையையும் தடியொன்றையும் கொடுத்துப் (பிச்சைக் காரனுக்கி)ப் போ என்று, விஷத்தையும் கலந்து கொடுக்கும் வஞ்சம் நிறைந்த பாவிகள் — (அத்தகையோரது) கம்பையிலும் — அதிகார வரம்பில் — எல்லையில், சடம் மாய்ந்து — இவ்வுடல் நலிவுற்று - கெடுதலடைந்து—அடியேனும் திரிவேனோ!

தேவர்கள், தவநிலையை (ஏந்தும்) மேற்கொண்டுள்ள மகா தவசிகள், (புண்டரிகன்) தாமரையோன் — பிரமன், திரு பாங்கர் — லக்ஷ்மியின் கணவர் — இவர்களெல்லாம் (கோ என) இரங்கி ஓலம் என, அவர்களை அஞ்சாதீர்கள் என்னும்படிச் சென்று வீரத்துடனே, அசுரர்களை—

அவர்களுடைய உடல் ஒடுங்கி (மாண் - மாண்டல்) தொட - இறத்தல் உண்டாக - அல்லது மாண்டு (ஒட்) ஒட - இறந்தொழிய, கடல்களும் எட்டு மலைகளும் பொடி சாம்பராய்த் தூளாக, யமனும் அவனது பாசக்கயிற்றை, ஆங்கு- அவ்விடம் (ஐ) வியப்புடன் வீச, வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

செண்டணி யுஞ்சடை பாந்தள் நீர்மதி
யென்பணி யன்கன சாம்பல் பூசிய
செஞ்சட லன்சுத சேந்த வேலவ முருகோனே—

திங்கள்மு கந்தன சாந்து மார்பின
*ளென்றனு ளம்புகு பாங்கி மாறெடு
சிந்தைம கிழ்ந்தும யேந்த்ர மேவிய பெருமாளே. (க)

சீகாழி.

[ரெயில்வே ஸ்டேஷன். சிதம்பரத்திற்குத் தெற்கு 11-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருவவதாரஞ் செய்தருளிய திருப்பதி. மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். புகலி, சண்பை, பிரமபுரம், கோச்சை, கழுமலம், பூந்தராய் என்பன ஸ்ரீகாழியின் திருநாமங்கள். ஸ்தல புராணம் உண்டு.]

768. அகப்பொருள்

தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன
தனதன தனதன தந்த தானன தந்ததான

†அலைகடல் சிலைமதன் அந்தி யூதையும்
அரிவையர் வசையுட னங்கி போல்வர
அசைவன விடைமணி யன்றில் கோகிலம் அஞ்சிநானும்—

அழலிடு மெழுகென வெம்பி வேர்வெழ
அகிலொடு ம்ருகமத நஞ்சு போலுற
அணிபணி மணிபல வெந்து நீறெழ அங்கம்வேறாய்;

முலைகனல் சொரிவர முன்பு போல்நினை
வழிவச மறஅற நின்று சோர்வுற
முழுதுகொள் விரகனல் மொண்டு வீசிட மங்கிடாதே—

முருகவிழ் திரள்புய முந்து வேலணி
முளரியொ டழகிய தொங்கல் தாரினை
முனிவற நினதருள் தந்தேன் மாலைழ விந்திடாதோ;

---

* இது அருணகிரியார்க்கு வள்ளியம்மை பாலிருக்கும் பத்தியைக் காட்டுகின்றது.

† கடல் முதலானவை காமத்தை வளர்ப்பன ;
—திருப்புகழ் 218-பக்கம் 53 கீழ்க்குறிப்பு.

பூச்செண்டை அணிந்துள்ள சடையில் (பாந்தள்) பாம்பு, கங்கைநீர், சந்திரன், எலும்பு இவைகளை அணிந்தவன், பெருமை பொருந்திய திருநீற்றைப் பூசியுள்ள சிவந்த தேகத்தினன் — ஆகிய சிவனது குமாரனே! சேந்தனே (சிவப்பு நிறமுடையவனே! வேலனே! முருகோனே!

சந்திரன் போன்ற திருமுகத்தையும், கொங்கையிற் சந்தனம் கொண்ட மார்பையும் உடையவள், என்னுடைய உள்ளத்திற் புகுந்துள்ள "பாங்கி மாதொடு" — தோழி வள்ளியுடன் — உள்ளம் மகிழ்ந்து மயேந்திரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(நாயனும் உழல்வேனே)

768.

அலைவீசும் கடல், வில்லேந்திய மன்மதன், மாலைக்காலத்துக் காற்று, மாதர்களின் வசைப்பேச்சு இவையெலாம் நெருப்புப்போல (என்னிடம்)வர, அசைந்து வருவனவாம் விடைகளின் (மாடுகளின்) மணி, அன்றில் பறவை, குயில் இவைகளின் ஓசைக்குப் பயந்து நானும்—

நெருப்பிலிட்ட மெழுகுபோல வாடி, வியர்வை உண்டாக, அகிலும் கஸ்தூரியும் விஷம்போலப் பொருந்த, அணிந்துள்ள ஆபரணங்கள், ரத்னமாலைகள் பலவும் வெந்து சாம்பலாக, உடலின் நிலை வேறுபட்டு,

கொங்கை நெருப்பைச் சொரிய, முன்புபோல — முன்பிருந்த—நினைவானது அழிந்து தன்வசம் (அற அற) மிகக்கெட நின்று தளர்ச்சியுண்டாக, முழு நிலையில் வந்துள்ள காம உணர்ச்சி நெருப்பை மொண்டுவீச — அதனால் நான் வாட்டமுற்றுச் சோர்வு அடையாமல்

வாசனை வீசுகின்ற திரண்ட புயங்கள், (உந்து வேல்) செலுத்தப்படும் வேலாயுதம் (அல்லது முந்துவேல் — எதிர்ப்பட்டு விளங்கும் வேல்), அழகிய (முளரி) (பாத) தாமரை, (அல்லது வேல் அணிந்துள்ள திருக்கரத் தாமரை) இவையுடன் அழகிய தொங்கும் மாலையை (அல்லது தொங்கல் தார் — பூமாலைகளை — (என்மீது) முனிவு அற - வெறுப்பு கோபமில்லாமல் உன்னுடைய திருவருளானது எனக்குத் தந்து எனக்குள்ள மாலை-காம மயக்கத்தைக் கோபித்து நீக்காதோ!

சிலைநுதல் கயல்விழி *செஞ்சொல் வானவி
திரிபுரை பயிரவி திங்கள் சூடிய
திகழ்†சடை நெடியவள் ‡செம்பொன் மேனியள் xசிங்கமேறி-
oதிரள்படை யலகைகள் பொங்கு கோடுகள்
திமிலையொ டறைபறை நின்று மோதிட
**சிவனுட னடம்வரு மங்கை மாதுமை தந்தவேளே;
மலைதனி லொருமுனி தந்த ††மாதுதன்
மலரடி வருடியெ நின்று நாடொறு
‡‡மயில்பயில் குயில்கிளி வம்பி லேகடி தொண்டினேனே;
மழைமுகில் தவழ்தரு மண்டு கோபுர
xxமதிள்வயல் புடையுற விஞ்சு காழியில்
வருமொரு கவுணியர் மைந்த தேவர்கள் தம்பிரானே. (௪)

769. மாயை கழல

தனன தான தானன, தனன தான தானன
தனன தான தானன தனதான

இரத மான தேனூற லதர மான மாமாத
ரெதிரி லாத பூணார முலைமீதே-
இனிது போடு மேகாச உடையி னாலு மாலால
விழியி னாலு மாலாகி யநுராக;

---

* "அஞ்சொல் மங்கை"—சம்பந்தர் 1-108-4.

† "பேழைவார் சடைப் பெருந் திருமகள்"-சம்பந்தர் 2-107-6.

‡ "பொன்னங் கொடிநிகர் இமையவல்லி"—கூர்மபுராணம்—உத்தர காண்டம். 'பொன்மேனி உமை'—திருப்புகழ் 448; பொன்மேனி ஆதலின் பிங்கலை, காகினி எனப் பெயர்

x "வன்மான் உகைத்த கொடி" — (வன்மான் — சிங்கம்) —தக்கயாகப்பரணி 76.

o தேவிக்குப் பேய்ப்படை: "தொல்லை நாயகி யுடைய பேய்க் கணங்கள்—தக்கயாக 120,

** சிவனும் தேவியும் ஆடல்—"அணங்கினொ டாடல்புரி எந்தை"—சம்பந்தர் 1-133-1.

†† முருகவேள் வள்ளியின் மலரடியை வருடுதல்,' 'குறமகள் பாதம் வருடிய மணவாளா' திருப்புகழ் 225; திருப்புகழ் 790 1143-ம் பார்க்க.

(தொடர்ச்சி 289-ஆம் பக்கம் பார்க்க)

வில்லைப் போன்ற நெற்றி, கயல்மீன் போன்ற கண், செம்மைவாய்ந்த சொல் - இவைதமை உடைய (வானவி) தேவி. (திரிபுரை) — மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், பயிரவி (பைரவராகிய சிவனது பத்தினி), சந்திரனைச் சூடிய விளக்கமுற்ற சடையை உடைய பெரியவள், செம்பொன்மேனி நிறத்தவள், சிங்கவாகனம் கொண்டவள்,

கூட்டமான படையாகப் பேய்களை உடையவள், ஒளிபொங்கி மேலெழும் (கோடுகள்) - ஊது கொம்புகள், (திமிலை) ஒருவகைப பறை, ஒலிக்கின்ற பறை, இவையெலாம் இருந்து பேரொலி மோத - எழுப்பச், சிவனுடனே நடம்செயும் மங்கை, மாது, உமை, — என்ற பார்வதி பெற்ற வேளே!

(வள்ளிமலைச் சாரலில் (தவஞ் செய்திருந்த) ஒரு முநி (சிவமுநிவர்) பெற்ற மாது — வள்ளியின் மலரன்ன திருவடியை வருடியே நின்று (கால்பிடித்து நின்று), நாள்தோறும், மயில். நெருங்கிவரும் குயில், கிளி இவைகளை (ஓட்டும்தொழிலில்) புதியவனாய் (கடி) கவண்கல் கொண்டு கடிந்து ஓட்டி (வள்ளிக்கு ஆயால் ஓட்டும் தொழிலில்) உதவித் தொண்டு செய்தவனே!

மழைகொண்ட மேகங்கள் தவழும் நெருங்கிய கோபுரங்கள், மதில், வயல் இவை சூழ மேம்பட்டு விளங்கும் சீகாழியில் அவதரித்த ஒப்பற்ற கவுணிய குலத்துப் பிள்ளையே! தேவர்கள் தம்பிரானே!

(நினதருள் என் மாலை முனிந்திடாதோ)

769.

சுவை நிரம்பிய தேன் போல ஊறும் வாயிதழ் ஊறலை உடைய அழகிய மாதர்கள் அணிந்துள்ள நிகரொப்பு இல்லாத ஆபரண மாலைகள் கொண்ட கொங்கையின் மேலே—

அழகாக அணிந்துள்ள மேலாடை உடையினாலும், ஆலகால விஷம்போன்ற கண்ணாலும், காம மயக்கம் கொண்டு, காமப்பற்றினால்—

---

‡‡ வள்ளியை மகிழ்விக்கத் தானும் ஆயால் ஒட்டினன் போலும் முருகன்;

xx மதில் — வயல் — காழியில்: "மாமதில்சூழ் கடற்காழி" —சம்பந்தர் 2-9-11; 'வயற்காழி"—சம்பந்தர் I-59-11.

விரக மாகி யேபாய லிடைவி டாமல் நாடோறு
ம்ருகம தாதி சேரோதி நிழல்மூழ்கி-
விளையு மோக மாமாயை கழலு மாறு நாயேனும்
விழல னுய்வி டாதேநி னருள்தாராய்;
*அரக ராள னாமூடர் †திருவெ ணீறி டாமூடர்
‡அடிகள் பூசி யாமூடர் கரையேற-
அறிவு நூல்க லாமூடர் நெறியி லேநி லாமூடர்
x அறம்வி சாரி யாமூடர் நரகேழிற்;
புரள வீழ்வ ரீராறு கரவி நோத சேய்சோதி
**புரண பூர ணாகார முருகோனே-
புயலு லாவு ††சேணுடு பரவி நாளு மீடேறு
புகலி மேவி வாழ்தேவர் பெருமாளே. (உ)

---

* அரகரா—என்பதன் சிறப்பு

"அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே"—திருமந்திரம் 916.

† வெண்ணீற்றின் சிறப்பு:

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே"—திருமந்திரம் 1666.

திருநீற்றுப் பதிகம்—சம்பந்தர் 2.66 பார்க்க.
'துயர் கெடுகெனப் பூசு வெண்ணீறு' 2.78.2.

‡ அடிகள்—சிவபிரான்—'அனலெரி ஆடும் எம் அடிகள்'
—சம்பந்தர் 3.21.1.

அடிகளைப் பூச்தலின் சிறப்பு:

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால் முனி வுண்பதே"—அப்பர் 5.91.6.

x அறம் விசாரியா மூடர்—வட மொழியில் 'தருமம் சார'—தருமத்தைச் செய் எனவும், ஔவையார் 'அறஞ்செய விரும்பு' எனவும், கூறின உபதேசத்தினும் நயம் உடையது 'அறத்தை விசாரி' என அருணகிரியார் சொல்லியுள்ள உபதேசம்—என ஒரு அறிஞர் கூறினர்.

(தொடர்ச்சி-பக்கம் 291)

காய வேதனைப்பட்டு படுக்கையில் எப்போதும் நாள்தோறும் கஸ்தூரி முதலிய நறுமணங்கள் சேர்ந்துள்ள கூந்தலின் நிழலிலே முழுகினவனாய் - அதனால்

ஏற்படும் காம மயக்கம் என்கின்ற பெரிய (மாயை) மாயாசக்தி என்னை விட்டு அகலுமாறும், அடியேன் வீணனாகாதவாறும் (பயனற்றவனாகாதவாறும்) உன்னுடைய திருவருளைத் தந்து உதவுக.

அரகரா என்று கூறுத மூடர்களும், திருவெண்ணீற்றை — விபூதியை — இடாத மூடர்களும், (அடிகள்) கடவுளைப் பூசியாத மூடர்களும், கரையேறுதற்கு வேண்டிய—

அறிவைத்தரும் நூல்களைப் படியாத மூடர்களும், நன்னெறியில் நில்லாத மூடர்களும், தருமம் இன்னதென்றுகூட விசாரணை செய்யாத (ஆய்ந்தறியாத) மூடர்களும் - நரகம் ஏழிலும்

புரளும்படி விழுவார்கள், பன்னிரண்டு (திருக்கரங்களை உடைய விநோதனே! சேயே! ஜோதியே! நிறைந்த அல்லது ஒளி பொருந்திய பூரண உருவத்தனே! முருகனே!

மேகங்கள் உலவும் விண்ணுலகத்தவர் போற்றிப் பரவி நாளும் ஈடேறுகின்ற சீகாழியில் வீற்றிருந்து வாழும் தேவர் பெருமாளே!

(நின் அருள் தாராய்)

(பக்கம் 290 தொடர்ச்சி)

o நரகில் வீழ்வோர்—இவரிவர் என்பதை—711-ஆம் பாடல் பக்கம் 140 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

** புரணம் — ஒளி — "புரணவாட் கண்ணி சொல்வாள்,"
—சேது புராணம்—சாத்தியா 18.

†† விண்ணவர் பரவுவது :
"விண்ணவர் தொழு புகலி"—சம்பந்தர் 3-3-10.
"வானுளோர் அடுத்தடுத்துப் புகுந்தீண்டும்...புகலி
—சம்பந்தர் 2-122-10.

770. கழல் பெற

தானத்தன தான தனந்த, தானத்தன தான தனந்த
தானத்தன தான தனந்த தனதான

ஊனத்தசை தோல்கள் சுமந்த காயப்பொதி மாய மிகுந்த
ஊசற்சுடு நாறு குரம்பை மறைநாலும்—

ஓதப்படு நாலு முகன்ற னுலுற்றிடு கோல மெழுந்து
ஓடித்தடு மாறி யுழன்று தளர்வாகிக்;

கூனித்தடி யோடு நடந்து ஈனப்படு கோழை மிகுந்த
கூளச்சட மீதை யுகந்து புவிமீதே-

கூசப்பிர மாண ப்ரபஞ்ச மாயக்கொடு நோய்க ளகன்று
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே;

* சேனக்குரு கூடலி லன்று ஞானத்தமிழ் நூல்கள் பகர்ந்து
சேனைச்சம ணோர்கழு வின்கண் மிசையேறத்-

தீரத்திரு நீறு புரிந்து மீனக்கொடி யோனுடல் துன்று
† தீமைப்பிணி தீர வுவந்த குருநாதா;

கானச்சிறு மானை நினைந்து ஏனற்புன மீது நடந்து
காதற்கிளி யோடு மொழிந்து சிலைவேடர்-

காணக் ‡ கணியாக வளர்ந்து ஞானக்குற மானை மணந்து
காழிப்பதி மேவி யுகந்த பெருமாளே, (௩)

---

* சேனக்குரு—சமண குருமார்கள் 'சேனன்' என்னும் பட்டம் தாங்கி இருந்தனர்:

"சந்து சேனனும் இந்து சேனனும் தரும சேனனும் கருமைசேர், கந்து சேனனும் கனக சேனனும் முதலதாகிய பெயர் கொளா"—சம்பந்தர் 3-39-4.

குருகூடல் — சம்பந்தர் காலத்தில் மதுரையிற் பாண்டி நாட்டிற் சமணகுருமாரால் சமணர் மதம் மிகப் பரவியிருந்தது.

"கன்னி நாடெங்கு மிந்தக் காரமண் காடு மூடித் துன்னின"—திருவிளை—சமணரைக் 3.

† சம்பந்தரது இந்த லீலை
—பாடல் 181-பக்கம் 420, 421, 422 கீழ்க்குறிப்பு.

‡ கணி—வேங்கைமரம்.

வள்ளி முன்பு வேங்கைமரமாய் முருகவேள் நின்றது
—பாடல் 416-பக்கம் 551-553.

770.

அழிந்து போகும் தன்மையதான மாமிசம், தோல்கள், இவைகளைச் சுமக்கும் உடற்சுமை, மாயம் மிக்கதும், பதன் அழியும் தன்மையொடு கூடியதும், ஈற்றில் சுடப்படுவதும், காறுவதுமான கூடு (அல்லது சிறுகுடில்), வேதம் நான்காலும்

ஓதப்படுகின்ற நான்குமுகன் (பிரமனால்) ஏற்படுத்தப்பட்டு அழகுடன் உருப்பெற்று எழுந்து ஓடியும், தடுமாறியும், திரிந்தும், தளர்வடைந்து

உடல் கூனி, தடியுடனே நடந்து இழிவைத்தரும் கோழை மிக்க (கூளச்சடம்) குப்பையான உடலான இதை மகிழ்ந்து பூமியில்—

கூசும்படியாக (நாணம் உறும்படியாக), விதிப் பிரகாரம் செல்வதான (இந்த) உலக மாயத்தில் உண்டாகும் கொடிய நோய்கள் நீங்கி, உனது அழகிய திருவடியையே பெறுமாறு இன்று அருள்புரிவாயாக.

'சேனன்' என்னும் பட்டப்பெயர் வைத்திருந்த சமண குருமார்கள் இருந்த (கூடலில்) மதுரையில் (அல்லது குரு கூடல் – பெருமை வாய்ந்த மதுரையில்) அன்று ஞானத்தமிழ் நூல்களாகிய தேவாரப் பாக்களைப் பாடிக் கூட்டமான சமணர்களைக் கழுவின்மேல் ஏறும்படி –

திடத்துடன் திருநீற்றைத் தந்து பரப்பி மீன்கொடி ஏந்தும் பாண்டியனுடைய உடலில் சேர்ந்த கொடிய [சுர] நோய் தீர அருட்சுரந்த குருநாதனே!

[வள்ளிமலைக்] காட்டில் இருந்த சிறுமானாகிய வள்ளியை நினைந்து தினைப்புனத்தின் மீது நடந்து சென்று ஆசைக்கிளியாம் அவளுடன் பேசியும், வில் ஏந்திய வேடர்கள்

காணும்படியாகக் [கணி] வேங்கை மரமாய் வளர்ந்து நின்றுப், அந்த ஞானமானை, குறமானைத் திருமணஞ்செய்து சீகாழிப் பதியில் அமர்ந்து மகிழும் பெருமாளே!

[கோலக் கழலே பெற இன்று அருள்வாயே]

771. கரைசேர

தய்யா தத்தன தானன தானன
தய்யா தத்தன தானன தானன
தய்யா தத்தன தானன தானன தனதான

ஒய்யா ரச்சிலை யாமென வாசனை
மெய்யா ரப்பணி பூஷண மாலைக
ளுய்யா நற்கலை யேகொடு மாமத விதமாகி-

ஒவ்வா ரிப்படி யோரென வேயிரு
கையா ரக்கனை மோதிர மேய்பல
வுள்ளார் செப்பிட ஏமுற நாளிலு முடல்பேணிச்;

செய்வா ரிப்படி யேபல வாணிப
மிய்யா ரிற்பண மேயொரு காசிடை
செய்யார் *சற்பனை காரர்பி சாசரு னடிபேணுச்-

செய்வா ரிற்படு நாஞெரு பாதகன்
மெய்யா எப்படி யோர்கரை சேர்வது
செய்யா யற்புத மேபெற வோர்பொரு ளருள்வாயே;

மையா ரக்கிரி யேபொடி யாய்விட
பொய்சூ ரப்பதி யேகெட வானவர்
வையாய் பொற்சர ணென வேதொழ விடும்வேலா-

*வையா ளிப்பரி வாகன மாகொளு
துவ்வா ழிக்கட லேழ்மலை தூளிசெய்
† மைபோ லக்கதி ரேய்நிற மாகிய மயில்வாழ்வே;

---

* சற்பனை—வஞ்சகம். "சாமங்கள் தோறும் இவர் செய்யும் பூசைகள் சர்ப்பனையே"—பட்டினத்தார்—பொது 44.

* "வாசி விசை கொண்ட வாகனப் பீலியின் கொத் தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிட எண் திசை வரை தூள்பட்ட, அத் தூளின்வாரி திடர்பட்டதே"—கந்- அலங்காரம் 11.

'வையாளிவரு பச்சைப் ப்ரவாளமயிலாம்'-மயில் விருத்தம் 7.

† "மை போலக் கதிர்" — "மாமுகிலென்னவே...ககனமுக டுறவீசி நிமிருமொரு நீலக்கலாப மயிலாம்."—மயில் விருத்தம் 9.

771.

அலங்கார ஒழுங்கு அமைந்த சிலை யுருவம் என்று சொல்லும்படி நறுமணம் உடலில் நிரம்ப, அணி ஆபரண மாலைகளைச் சுமந்து, நல்ல ஆடையை அணிந்து, மாமத இதமாகி – [அல்லது விதமாகி] மிக்க காம இன்பத்தராகி, அல்லது – காமவகையிற் பட்டவராய்த்—

தமக்கு ஒப்பாகமாட்டார் [இப் படியோர்] இந்தப் பூமியில் உள்ளோர் என்று சொல்லும்படி, இரண்டு கைகள் நிறையக் [கணைமோதிரம்] முத்திரை மோதிரம் பல அணிந்துள்ளவர்களாய், சொல்லப்புகின் [ஏம்] கலக்கம் உறும் [அந்த] நாள்களிலும் உடலை விரும்பிப் பாதுகாத்து—

இப்படியே பல வாணிபம் செய்வார் இவ்வாறே பல வியாபாரங்கள், செய்வார்கள் கொடாதவர்கள்போல பணம் ஒரு காசு அளவுகூட வெளிவிடார்கள் [கொடார்கள்], [சற்பனைகாரர்] வஞ்சகப் பேர்வழிகள், பிசாசு போன்றவர்கள், உன் திருவடியைப் போற்ருது

[தமது தொழிலைச்] செய்பவர் கூட்டத்திற் பட்டவனுகிய நான்—ஒரு பாவி, உண்மையாக எப்படி ஒரு கரை நான் சேர்வதும் செந்நிறச் சேயே! அற்புதம் ஆகும் வண்ணம் அந்த ஒப்பற்ற பொருளை எனக்கு உபதேசித் தருளுக.

இருள் நிறைந்த அந்த கிரவுஞ்சகிரி பொடியாகிப் போகவும், பொய் நிறைந்த சூரனுடைய ஊர் பாழாகவும் [அல்லது சூரனும் தலைவன் அழியவும்] தேவர்கள் – 'எங்களை நல்ல நிலையில் வைத்தருள்வாய் — பாது காத்தருள்வாய் – அழகிய திருவடிகளை உடையவனே! என்று தொழ வேலைச் செலுத்தினவனே!

[வையாளிப்பரி வாகனமா கொளும் மயில் வாழ்வே!] சவாரிக்கு உதவும் குதிரை வாகனமாகக் கொண்டுள்ள மயில் வாழ்வே! [துவ்வு ஆழி] [அகத்தியரால் உண்ணப்பட்ட] ஆழ்கடல், ஏழு மலைகள் இவைகள் கலக்கமுறவும், தூளாகவும், செய்த மயில் வாழ்வே! [மைபோலக்கதிர்] பசுமை நிறம்கொண்ட [அல்லது கருமேக நிறம்கொண்ட] ஒளி பொருந்திய நிறத்தை உடைய மயில் வாழ்வே! [மயில்மேல் வரும் செல்வமே!]

தெய்வா னைக்கர சேகுற மான்மகிழ்
* செய்யா † முத்தமி ழாகர னேபுகழ்
தெய்வீ கப்பர மாகுரு வேயென விருதூதத்-

திய்யா ரக்கழு வேறிட நீறிடு
கையா அற்புத னே‡பிர மாபுர
செய்கா ழிப்பதி வாழ்முரு காசுரர் பெருமாளே, (௪)

772. அலைதல் அற

தத்தா தத்தா தத்தா தத்தா
தத்தா தத்தத் தனதான

கட்கா மக்ரோ தத்தே கட்சி
மிழ்த்தோர் கட்குக் கவிபாடிக்-

கச்சா பிச்சா கத்தா வித்தா
ரத்தே யக்கொட் களைநீளக்;

கொட்கா லக்கோ லக்xகோ ணத்தே
யிட்டா சைப்பட் டிடவேவை-

o கொட்டா னக்கூ னுக்கா எய்த்தே
லித்**தி தத்தைக் களைவாயே;

---

* செய்யா — அழகா; செய்யன் — சிவந்தவன் — "செய்யன் சிவந்த ஆடையன்"—திருமுருகாற்றுப்படை 206.

† திருஞானசம்பந்தர் தம்மைத் "தமிழாகரன்" என்றும் "முத்தமிழ் விரகன்" என்றும் கூறியுள்ளார்
—சம்பந்தர் 3-117-11 ; 115-11.

‡ பிரமாபுரம்—பிரமன் பூசித்த தலம் சீகாழி. 'பிரமன்... அரன்.. சரண இணை பரவ வளர் பிரமபுரம்' சம்பந்தர் 3-67-1.

x கோணம்—திரிகோணம் போன்ற உறுப்பு—அல்குல்— "குழியான திரிகோணம்"—பாடல் 7-3

o கொள் தானக்கு-கொள் தானத்துக்கு; தானத்துக்கு என்பதில் அத்துச் சாரியை தொக்கி நிற்பதால் 'தானக்கு' என நின்றது.

** தீத்தை—தீது+அ(த்)தை — தீது அதை.

தெய்வயானைக்குத் தலைவனே! குறமான் [வள்ளி] மகிழ்கின்ற செய்யனே [செந்நிறம் உடையவனே]! முத்தமிழுக்கு இருப்பிடமானவனே! புகழத்தக்க தெய்விகம் பொருந்திய பரம்பொருளே! குருவே! என்று வெற்றிச் சின்னங்கள் ஊதத்

[தீய்யார்] தீயராம் [சமணர்கள்] கழுஏற, திருநீறு பரப்பியிட்ட திருக்கரத்தனே! அற்புதனே! பிரமாபுரம் என்னும் பெயர் பெற்றதும், [செய்] வயல்கள் சூழ்ந்ததுமான காழிப்பதியில் வாழ்கின்ற முருகா! தேவர் பெருமாளே!

[ஓர் பொருள் அருள்வாயே]

772

கள்ளிலும், காமத்திலும், [குரோதத்தே] கோபத்திலும் [கண் சிமிழ்த்தோர்கட்கு] கண் சிமிழ்த்தவர்கள்மீது — கண் கொட்டுபவர்கள்மீது — கடைக்கணிப்பவர்மீது-(கள், காமம், கோபம் இவைதமைத் தள்ளாது ஏற்றுக் கொள்ளுபவர்கள்மீது) இவைகளின் கட்டிற் பட்டவர் மீது - பாடல் பாடிக்...

[கச்சா பிச்சாக] தெளிவு முறையில்லாத வழியில் [தாவித்து ஆரத்தே] [பாடப்பட்டோன் பெருமையை] ஆரத்தே தாபித்து-பாமாலையில் நிலைநாட்டி, அக் கொட்களை—[அங்ஙனம் பாடினதால்] கொள்களை— கொண்ட பொருள்களை - நெடுக - நெடுநாளாக ...

கொள்கால் - சேகரிக்கும்பொழுது - அப் பொருளை அக்கோலக் கோணத்தே - அந்த அழகிய திரிகோணம் போன்ற அல்குலுக்கே [இட்டு] கொடுத்து ஆசைப் பட்டிடவே வைத்து (இங்ஙனம்)

கொள் தானத்துக்கு [ஏற்கும் தானத்துக்கு - தானப் பொருளுக்காகவும், [இந்த] ஊனுக்கா - உடலுக்காகவும் [தேடி] [எய்த்தேன்] இளைத்தேன்; [இத் தீதத்தை) இத் தீது அதை - [எனக்குள்ள] இந்தத் தீய குணத்தை நீக்கி அருளுவாயாக.

*வெட்கா மற்பாய் சுற்றா மர்ச்சேர்
†விக்கா னத்தைத் தரி‡மா றன்-
வெப்பா றப்பா டிக்கா ழிக்கே
புக்காய் வெற்பிற் குறமானை;
மூட்கா னிற்கால் வைத்தோ டிப்போய்
முற்சார் செச்சைப் புயவீரா-
xமுத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே. (ரு)

773. மறவேன் என்றது

தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன தனதான

கொங்கு லாவிய குழலினு நிழலினு
நஞ்சு ளாவிய விழியினு மிரணிய
குன்று போல்வளர் முலையினு நிலையினு மடமாதர்-
கொம்பு சேர்வன இடையினு நடையினு
மன்பு கூர்வன மொழியினு மெழில்குடி
கொண்ட சேயித ழமுதினு நகையினு மனதாய;
○சங்கை யாளியை அணுவிடை பிளவள
வின்சொல் வாசக மொழிவன இவையில
சம்ப்ர தாயனை அவலனை ஒளிதிக ழிசைகூருந்-
தண்டை நூபுர மணுகிய இருகழல்
கண்டு நாளவ மிகையற**விழியருள்
தந்த பேரருள் கனவிலு நனவிலு மறவேனே;

---

* வெட்காமல் பாய் சுற்று ஊமர்—சமணர்...''நாணழிந் துழல்வார் சமணர்''...சம்பந்தர் 25 3-10.
''பாயுடுப்பார்கள்''—சம்பந்தர் 3 108-3.
நின்றுண் சமணர்... ஒன்றும் உணரா ஊமர்'—சம்பந் 1-71-10.
† விக்கானம் ... விக்கனம்...விக்கினம்—(தீது) ''விக்கனங்கள் அந்தொண்டர்க்கு அடாமைச் சென்றுண்டருள்'' மருதூரந்தாதி 28.
‡ மாறன் வெப்பாறப் பாடியது—பாடல் 181-பக்கம் 420 குறிப்பு.
x இம் முடிவுள்ள திருப்புகழ்ப் பாடல்களின் எண் 377, 483, 1119—1126:

(† தொடர்ச்சி பக்கம் 299)

நாணமில்லாமல் (பாய் சுற்று ஊமர்) ஆடையாக அரையிற் பாயைச் சுற்றிக்கொள்ளும் (ஊமர்), அறிவிலிகளாம் சமணர்களைச் சேர் (சேர்ந்த) விக்கினத்தை — தீதை — தரி—கொண்டிருந்த பாண்டியனுடைய

சுரம் தணியும்படி "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடிச் சீகாழியிற் புக்கிருந்தவனே! (வள்ளி) மலையில் குறப்பெண் வள்ளியை—

முள்ளுள்ள காட்டிற் கால்வைத்து ஓடிப்போய் (முற்சார்) முன்பு (வள்ளியின் தினைப்புனத்தே) சார்ந்த வெட்சி மாலையை அணிந்த புயவீரனே!

முத்தி முதல்வனே! (சூரியன், சந்திரன், அக்கினி என்னும்) முச்சுடர்களுக்கும் தலைவனே! சுத்தனே! முத்தனையவனே, முத்திதரும் பெருமாளே!

(தீதைக் களைவாயே)

773

வாசனை வீசும் கூந்தலிலும், அதன் நீழலிலும், அல்லது ஒளியினும், விஷம் கலந்த கண்களிலும், பொன் மலைபோல வளர்ந்துள்ள கொங்கையிலும், இருக்கும் நிலையிலும் (தன்மையினும்) அழகிய மாதர்களின்—

கொம்புபோல மெல்லிய இடையிலும், நடையிலும், அன்பு மிக்கெழும் பேச்சிலும், அழகு குடிகொண்ட சிவந்த வாயிதழ் அமுதினும், அவர்களுடைய நகையிலும் (சிரிப்பிலும்) மனது பாய்கின்ற

எண்ணங் கொண்டவன், அணு அளவேனும், அதன் பிளவளவேனும் இனிய சொற்பேச்சு பேசுவதே இல்லாததான வழக்கம் கொண்டவன், வீணன் ஆகிய நான் விளங்குவதும் ஒலி மிக்கதுவுமான (கீதம் மிக்க)

தண்டை, சிலம்பு, இவை அணிந்துள்ள (உனது) இரண்டு கழலடிகளைக் கண்டு, (என்) நாள் வீணாகப் பெருகுதல் அற, (உனது) திருக்கண்ணோக்க அருளை நீ (எனக்குத்) தந்த பேரருளைக் கனவிலும் நனவிலும் மறவேன்;

---

o சங்கை—எண்ணம் "சங்கையிற் சழக்கிலன்"—கம்பராமா— சம்பாதிப்படலம் 28.

**இது அருணகிரியார் சக்ஷு தீக்ஷை பெற்ற வரலாற்றை விளக்கும்.

வங்க வாரிதி முறையிட் நிசிசரர்
துங்க மாமுடி பொடிபட வடவனல்
மங்கி நீறெழ அலகைகள் நடமிட மயிலேறி-
* வஞ்ச வேல்கொடு முனிபவ அழகிய
† சண்பை மாநக ருறையுமொ ரறுமுக
வந்த வானவர் மனதினி லிடர்கெட நினைவோனே;
பங்க வீரியர் ‡பறிதலை விரகினர்
மிஞ்சு பாதக ரறநெறி பயனிலர்
பந்த மேவிய பகடிகள் கபடிகள் நிலைகேடர்-
பண்பி லாதவர் கொலைசெயு மனதின
ரிங்கெx ணுயிர ருயரிய கழுமிசை
oபஞ்ச பாதகர் **முனைகெட அருளிய பெருமாளே. (சு)

---

* வஞ்சவேல்—பாடல் 750-கீழ்க்குறிப்பைப் பார்க்க

† சீகாழியின் பன்னிரு பெயர்களின்—பெயர்க் காரணம் :—

(1) கணபதியால் கொல்லப்பட்ட கஜமுக அசுரனுக்கு அஞ்சின வேணு என்னும் இந்திரன் பூசித்த தலமாதலின் "வேணுபுரம்".

(2) சூரனுக்கு அஞ்சின தேவர்கள் புகலிடமாக வந்த தலமாதலின் "திருப்புகலி."

(3) தேவகுருவாம் பிரகஸ்பதி தான் இழந்த அதிகாரத்தை மீட்டும் பெறப பூசித்து அதிகாரத்தைப் பெற்ற தலம் வெங்குரு.

(4) பூவுந் தாராயும் பூசித்ததால் பூந்தாராய் எனப் பெயர்

(5) அமிர்தம் பங்கிட்டபொழுது திருமாலால் சிரம் தறிபட்ட ராகு கேதுக்களின் இரண்டு சிரங்களும் தமது உடல் வேண்டிப் பூசித்ததால் சிரபுரம் :

(6) கௌதம முனிவர் சாபத்தால் புருவான பிரசாபதி என்னும் ரிஷி—தான் உண்ணத் தன் உடல் மாமிசத்தைக் கொடுத்த அரசன் நல்ல உடல் பெறவும், தன் சாபம் தீரவும் பூசித்துப் பேறு பெற்ற தலமாதலின் புறவம்

(7) துர்வாசருடைய சாபத்தால் கிருஷ்ணபகவானைச் சார்ந்த கோபாலரெல்லாரும் சண்பைக் கதிர்களால் குத்துண்டு மாண்டார் கள்; கிருஷ்ணபகவானும் பரமபதம் அடைந்தார். அந்தத் தோஷம் தம்மைத தாக்காதிருக்க துர்வாசர் பூசித்த தலமாதலின் துர்வாசர் சண்பைமுனி எனப்பட்டார், தலம் சண்பை எனப்பெயர் பெற்றது; இந்தச் சாப வரலாற்றை பாடல் 268 பக்கம் 166 கீழ்க்குறிப்பிற் x பார்க்கவும். († தொடர்ச்சி 301 பக்கம் பார்க்க.)

கப்பல்கள் உலவும் கடல் முறையிட (கலங்கி ஒலிக்க), அசுரர்களின் உயர்ந்த பெரிய முடிகள் (தலைகள்) பொடியாக, வடவாக்கினியும் அடங்கிச் சாம்பலாக, பேய்கள் நடமாட, மயிலில் ஏறி,

வஞ்ச வேல்கொண்டு (துஷ்டர்களை வஞ்சித் தழிக்கும் வேல்கொண்டு) கோபித்தவனே! அழகிய 'சண்பை' எனப் பெயரிய சீகாழி மகாநகரில் வீற்றிருக்கும் ஒப்பற்ற ஆறுமுகனே! உன்னிடம் (அடைக்கலம் புக) வந்த தேவர்களின் மனத்தில் உள்ள வருத்தம் நீங்குமாறு நினைத்தவனே!

(பங்க வீரியர்) பங்கப்பட்ட—தோல்வியடைந்த வலிமைவாய்ந்தவர், தலையின் மயிர் பறிக்கும் உற்சாகத்தினர், மிகுதியான பாவம் செய்தவர்கள், தருமநெறியின் பயன் இல்லாதவர் (பயனை அடையாதவர்கள்), பாசத்திற் கட்டுண்ட வேஷக்காரர்கள், வஞ்சகர்கள், நிலை கெட்டவர் (தன்மை கெட்டவர்)

நல்ல பண்பு (குணம்) இல்லாதவர், கொலை செய்ய இசையும்மனத்தினர், இங்கு அவர்கள் எண்ணாயிரம்பேரும் உயரமாயிருந்த கழுவின்மேலே, பஞ்சபாதகர் ஆதலினாலே, அவர்களுடைய (முனை) முதன்மை கெட்டழியும்படி அருளின பெருமாளே!

(பேரருள் கனவிலும் நனவிலும் மறவேனே)

---

(8) காளி என்கின்ற நாகம் பூசித்ததால் சீகாழி என்று பெயர் போந்தது.

(9) மற்ற ரிஷிகளின் சாபத்தால் பராசர முனிவர் மச்சகந்தியை மணந்து மச்ச கந்தம்--துர்க்கந்தம் உடலிற் பற்றப் பெற்றார். அவர் சீகாழியிற் பூசித்து அந்தக்கொச்சை நாற்றம் நீங்கப் பெற்றார் ஆதலின் 'கொச்சை' என்று சீகாழிக்குப் பெயர் வந்தது.

(10) இத் தலத்திற் ஆன்மாக்களின் மலம் கழுவப்படலாற் 'கழுமலம்' என்பது பெயர்.

(11) பிரமன் பூசித்ததால் 'பிரமபுரம்' எனப் பெயர்.

(12) பிரளய காலத்தில் தோணிபோல மிதந்த காரணத்தால் 'தோணிபுரம்' எனப் பெயர்.

‡ பறிதலை—பாடல் 172 பக்கம் 398 கீழ்க்குறிப்பு

x எண்ணாயிரர்—சமணர்—பாடல் 657-பக்கம் 9 கீழ்க்குறிப்பு.

o பஞ்சபாதகம்—பாடல் 79-பக்கம் 183.

** 'உறையவு மருளிய' என்றும் பாடம்.

774. மிடி அகல

தந்த தந்தன தனதன தனதன
தந்த தந்தன தனதன தனதன
தந்த தந்தன தனதன தனதன தனதான

சந்த னம்பரி மளபுழு கொடுபுனை
கொங்கை வஞ்சியர் சரியொடு கொடுவளை
தங்கு செங்கையர் அனமென வருநடை மடமாதர்-

சந்த தம்பொலி வழகுள வடிவினர்
வஞ்ச கம்போதி மனதின ரணுகினர்
தங்கள் நெஞ்சக மகிழ்வுற நிதிதர அவர்மீதே;

சிந்தை வஞ்சக நயமொடு பொருள்கவர்
தந்த்ர மந்த்ரிகள் தரணியி லனைபவர்
செம்பொ னிங்கினி யிலையெனில் மிகுதியு முனிவாகித்-

திங்க ளொன்றினில் நெனல் பொரு ளுதவில
னென்று சண்டைகள் புரிதரு மயலியர்
சிங்கி யுங்கொடு மிடிமையு மகலநி னருள்கூர்வாய்;

*மந்த ரங்குடை யெனநிரை யுறுதுயர்
சிந்த அன்றடர் மழைதனி லுதவிய
மஞ்செ னும்படி வடிவுறு மரிபுகழ் மருகோனே-

மங்கை யம்பிகை மகிழ்சர வணபவ
துங்க வெங்கய முகன்மகிழ் துணைவநல்
வஞ்சி தண்குற மகள்பத மலர்பணி மணவாளா;

தந்த னந்தன தனதன தனவென
வண்டு விண்டிசை முரல்தரு மணமலர்
தங்கு சண்பக முகிலள வுயர்தரு பொழில்மீதே-

---

* மலையைக் குடையாகக் கொண்டு பசுக்களைக் கண்ணபிரான் காத்தது—பாடல் 145-பக்கம் 336 கீழ்க்குறிப்பு அவர் எடுத்த கோவர்த்தனமலை பெரிய மலை ஆதலின் அதை மந்தர மலைக்கு ஒப்பிட்டு மந்தரங்குடை' என்றார். கோவர்த்தனகிரி பெரியமலை—"வண்ணமால் வரையே குடையாக மாரி காத்தவனே"—என்றார் பெரியாழ்வார் [5-1-8].

774

சந்தனம், நறுமணமுள்ள புனுகு சட்டம் இவைதமை அணிந்துள்ள கொங்கைகளை உடைய மாதர்கள், (சரி) கைவளையலொடு வேறு வளைவுள்ள வளையல்களும் அணிந்துள்ள செவ்விய கையினர், அன்னம்போல நடந்து வரும் நடையை உடைய அழகிய மாதர்கள்—

எப்போதும் விளக்குமுள்ள அழகுள்ள வடிவத்தினர், வஞ்சக எண்ணங்கள் நிறைந்துள்ள மனத்தினர், தம்மை நெருங்கி வந்தவர்கள் தங்கள் மனம் மகிழும்படி பொருளைத்தர அவர்கள்மேல்—

மனதில் (அகத்தே) வஞ்சனை கொண்டு, (புறத்தே) நயமான பேச்சுக்களைப் பேசிப் பொருளைக் கவர்கின்ற தந்திரம் வாய்ந்த யோசனைக்காரர்கள், பூமியில் தம்மை அணைபவர்கள் (இங்கு) தங்களிடம் செம்பொன் (என்னிடம்) இல்லையே எனச் சொன்னால், அதிகமாகக் கோபித்து

(திங்கள் ஒன்றினில்) ஒருமாத காலத்தில் (நெனல்) நேற்றுக்கூட பொருள் உதவி செய்தானில்லை (இவன்) என்று சண்டைகள் விளைக்கும் ஆசைக்காரிகள் (ஆகிய இப் பொதுமகளிருடைய) விஷம் போன்ற உறவும் (அதனால் வரும்) பொல்லாத வறுமையும் என்னை விட்டு அகல உனது திருவருளைப் பாவிப்பாயாக.

(மந்தர) மலையைக் குடையாகப் பிடித்து பசுக்களுக்கு உற்ற துயர் ஒழியும்படி அன்று அடர்ந்த மழையில் உதவி புரிந்த (அரி) திருமால், (மஞ்சு) மேகம் என்னும்படியான நிறத்தைக் கொண்ட (அரி) திருமால் புகழ்கின்ற மருகனே!

மங்கை அம்பிகை (பார்வதி) மகிழும் சரவணபவனே! உயர்வும் விரும்பத்தக்க தன்மையும் கொண்ட யானைமுகப்பெருமான் விநாயகர் மகிழும் சகோதரனே! நல்ல வஞ்சிக்கொடி போன்றபெண், குளிர்முகக்குறமகளாம் வள்ளியின் பதமலரைப் பணியும் மணவாளனே! (அல்லது) வள்ளி உன் பதமலரைப் பணிய நின்ற மணவாளனே!

தந்த னந்தன தனதன தனவென்று வண்டு (இசைவிண்டு முரல்தரு) இசையை வெளிவிட்டு ஒலிசெயும் நறுமண மலர்கள் உள்ள சண்பக விருக்ஷங்கள் மேகத்தின் அளவுக்கு உயர்ந்து வளரும் சோலையிலே—

சங்கு நன்குமிழ் தரளமு மெழில்பெறு
துங்க வொண்பணி மணிகளும் வெயில்விடு
சண்பை யம்பதி மருவிய அமரர்கள் பெருமாளே. (எ)

775. துரிக்க

தனதன தந்தன தந்தன தந்தன
தனதன தந்தன தந்தன தந்தன
தனதன தந்தன தந்தன தந்தன தனதான

*சருவி யிகழ்ந்து மருண்டு வெகுண்டுறு
சமயமு மொன்றிலை யென்ற வரும்†பறி
தலையரு நின்று கலங்க விரும்பிய தமிழ்கூறுஞ்-

‡சலிகையு நன்றியும் வென்றியு மங்கள
பெருமைக ளுங்கன முங்குண மும்பயில்
சரவண மும்பொறை யும்புக ழுந்திகழ் தனிவேலும்;

விருது துலங்க சிகண்டியி லண்டரு
முருகி வணங்க வரும்பத மும்பல
விதரண முந்திற முந்தர முந்தினை புனமானின்-

ம்ருகமத குங்கும கொங்கையில் நொந்தடி
வருடிம ணந்துபு ணர்ந்தது வும்பல
விஜயமு மன்பின்மொ ழிந்துமொ ழிந்தியல் மறவேனே;

---

* முதல் நான்கடியில் சம்பந்தர் பெருமையும் முருகவேளின் பெருமையும் கலந்து வருவன கண்டு களிக்கத்தக்கன. 5, 6, 7 அடிகளில் திருமாலின் பராக்ரமச் செயல்கள் கூறப்பட்டுள்ளன: இந்தப் பாடல் ஒரு அழகிய பாடல்—மனப்பாடம் செய்யத்தக்கது.

† பறிதலையர்—சமண குருமார் — பாடல் 172-பக்கம் 398 கீழ்க்குறிப்பு.

‡ சலிகை—செல்வாக்கு. முருகவேளின் சலிகை முதலான பதினாறு அருமை லக்ஷணங்களை இங்கு வெகு அழகாக அருணகிரியார் அடுக்கியுள்ளது படிக்கப் படிக்க இன்பம் பயக்கின்றது.

சங்கு நன்கு வெளிக் கக்குகின்ற முத்தும், அழகுள்ள பரிசுத்தமான ஒள்ளிய நாகரத்னங்களும் ஒளிவீசும் சண்பை என்னும் நகரில் (சீகாழியில் வீற்றிருக்கும் பெருமாளே! தேவர்கள் பெருமாளே!

(மிடிமை...அகல நின் அருள் கூர்வாய்)

775

மதப் போராட்டத்தில் ஒருவரை ஒருவர் இகழ்ந்தும், மருட்சி அடைந்தும் (விளக்கமின்றி மயங்கியும), (இடையிடையே) கோபித்தும் வருவதான சமயங்களும், சமயம் என்பதே (அல்லது தெய்வம் என்பதே) ஒன்று இல்லை என்பவரும், பறிதலையராம் சமண மதத்தினரும் — இங்ஙனம் யாவரும் நின்று கலங்கும்படியாக, யாவரும் விரும்பத்தக்க தமிழ்ப்பாடல்களைச் சொல்லும்—

செல்வாக்கையும், உபகார குணத்தையும், வெற்றியையும், மங்களகரமான (பல) பெருமைகளையும், சீர்மையையும், நற்குணத்தையும், நீ குழவியாய்ப் பயின்ற சரவண தீர்த்தத்தையும் (மடுவையும்), உனது பொறுமையையும், புகழையும், விளங்கும் ஒப்பற்ற வேலாயுதத்தையும்,

வெற்றிச் சின்னங்கள் விளங்க மயில்மீது தேவர்களும் மனம் உருகி வணங்கும்படியாக வருகின்ற திருவடியையும், உனது பலவிதமான (விதரணமும்) கொடைப் பெருமைகளையும், உனது சாமர்த்தியத்தையும், (தரமும்) தகுதியையும் (மேன்மையையும்), தினைப்புனத்து மான் — வள்ளியின்—

கஸ்தூரி, குங்குமம் (செஞ்சாந்து) அணிந்துள்ள கொங்கையில் மயங்கி நொந்து, அவளது திருவடியை வருடி (கால்பிடித்து), மணஞ்செய்து, அவளைப் புணர்ந்து அணைந்து நின்றதையும், பின்னும் உனது பல (விஜயமும்) வெற்றிச் செயல்களையும் அன்புடனே (மொழிந்து மொழிந்து) பலமுறை எடுத்துப் போற்றித் துதித்து— உனதுபெருமையை (என்றும்) மறவேன், மறக்கமாட்டேன்.

கருதியி லங்கை யழிந்துவி டும்படி
அவுணர டங்கம டிந்துவி ழும்படி
கதிரவ னிந்து விளங்கி வரும்படி விடுமாயன்-

*கடகரி யஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வும்புய லிந்திரை
கணவன ரங்க முகுந்தன் வருஞ்†சக டறமோதி;

‡மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன லங்கல் புனைந்தரு ளுங்xகுறள்
வடிவனெ டுங்oகடல் மங்கவொ ரம்புகை தொடுமீளி-

மருக**பு ரந்தர னுந்தவ மொன்றிய
††பிரமபு ரந்தனி லுங்குக னென்பவர்
மனதினி லும்பரி வொன்றிய மர்ந்தருள் பெருமாளே. (அ)

776. அகப்பொருள்

தந்தத்தன தானன தந்தத் தனதான

‡‡சிந்துற்றெழு மாமதி அங்கித் திரளாலே-
தென்றற் xxறரு வாசமி குந்துற் றெழலாலே;
அந்திப்பொழு தாகிய கங்குற் றிரளாலே-

---

* கஜேந்திரனை மடுவிற் காத்தது:
—பாடல் 110-பக்கம் 262-கீழ்க்குறிப்பு.

† சகடுதைத்தது:—பாடல் 111-பக்கம் 264-கீழ்க்குறிப்பு.

‡ மருது தவழ்ந்தது:
—பாடல் 143 பக்கம் 332-கீழ்க்குறிப்பு.

x குறள் வடிவு:—பாடல் 458-பக்கம் 24- கீழ்க்குறிப்பு.

o கடல்மேற் பாணம் தொட்டது:
—பாடல் 177 பக்கம் 412-கீழ்க்குறிப்பு.

** சீகாழி — இந்திரன் தவமிருந்த தலம் —'தேவேந்திரன் ஊர்'—'புரந்தரன் ஊர்'—'இந்திரன் ஊர்'
—(சம்பந்தர் 2-73-2. 410, 11; 2-74-10,

†† "பிரம புரமும் குகாமமும் — உன்னுதலின் சிறப்பு:
உமையொடிருந்த பிரான் பிரமா புரம் உன்னுமினே"
—சம்பந்தர் 3-56-8.

குகனென்று மொழிந்தருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்—கந்தர் அநுபூதி-15.

[தொடர்ச்சி 307-ஆம் பக்கம் பார்க்க.]

(ராவணன் செய்த பிழையை) மனத்தில் எண்ணி, இலங்கை அழிந்து போம்படியும், அரக்கர்கள் எல்லாரும் இறந்து விழும்படியும், சூரியனும் சந்திரனும் (பழைமை முறைப்படி) விளக்கத்துடன் வரும்படியும் செய்த திருமால்—

மதகரி (கஜேந்திரன்) பயந்து நடுக்கமுற்று வருத்த முற்றிருந்த மடுவினிடத்தே வந்து உதவின மேகநிறப் பெருமான், இலக்குமி கணவன், சீரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் முகுந்தன், தன்னைக் கொல்லவந்த அசுரன் மாளும்படி வண்டியை உதைத்து மோதினவன்,

மருதமரம் சூலுங்கி நொந்துபோகக் கோபித்த வரதன், மாலை சூடியருளும் (குறள்) வாமன வடிவமூர்த்தி, பெரிய கடல் நொந்து வாட்டமுற ஒரு அம்பைக் கையால்தொட்ட (மீளி) பராக்ரமசாலி - (திண்ணியன்)— ஆகின்ற திருமாலின்

மருகனே! இந்திரன் தவம் பொருந்திச் செய்த (பிரமபுரம்) சீகாழி என்னும் தலத்திலும், குகன் என்பவர் மனத்திலும் அன்பு பொருந்தி அமர்ந்தருளும் பெருமாளே!

(பல விஜயமும் மொழிந்தியல் மறவேனே)

776.

(சிந்து) கடலிற் பொருந்தி எழுகின்ற அழகிய சந்திரன் (வீசும்) நெருப்புப் பிழம்பாலே - (மிகுதியாலே)

தென்றல் காற்று — சந்தனச் சோலையின் நறுமணத்துடன் எழுந்து வருவதாலே—

மாலைப் பொழுதாகிய இரவின் செறிவாலே — (இருட் கூட்டத்தாலே)

"குகா குகா என வகை வாராதோ"—திருப்புகழ் 326

திருநீறிடும்போது தியானிக்கவேண்டிய மூன்று தலங்களில் ஒன்று சீகாழி—"கழுமலம், கற்பகவூர், செருத்தணி செப்பி" —கந்தரந்தாதி 29.

‡‡ நிலவு, தென்றல், கங்குல்,-காமத்தை வளர்த்தி வருத்துவன —திருப்புகழ் 218-பக்கம் 53 கீழ்க்குறிப்பு.

XX தரு வாசம்—சந்தனச் சோலையின் பரிமளம்.

அன்புற்றெழு பேதைம யங்கித் தனியாளுள் ;
நந்துற்றிடு வாரியை மங்கத் திகழாயே-
நஞ்சொத்தொளிர் வேலினை யுந்திப் பொருவேளே ;
*சந்தக்கவி நூலினர் தஞ்சொற் இனியோனே-
சண்பைப்பதி மேவிய கந்தப் பெருமாளே. (கூ)

777. பெண்ணுசை அற

தத்தன தத்தனத் தத்தன தத்தனத்
தத்தன தத்தனத் தனதான

†செக்கர்வா னப்பிறைக் கிக்குமா ரற்கலத்
தெற்கிலூ தைக்கனற் றணியாத-
சித்ரவீ ணைக்கலர்ப் பெற்றதா யர்க்கவச்
சித்தம்வா டிக்கனக் கவிபாடிக் ;
‡கைக்கபோ லக்கிரிப் பொற்கொள்ரா சிக்கொடைக்
கற்பதா ருச்செகத் த்ரயபாநு-

---

* சந்தக்கவி :—இறைவனுக்கு உகந்தது; அதனால்தான் சந்தக் கவியாக 'முத்தைத்தரு' என்னும் முதலெடுத்து, முருகவேள் அருணகிரியார்க்குத் தந்தனர் போலும்; யமன் வந்தபோது மார்க்கண்டேயர் வடநூற் சந்தக் கவியால் துதிசெய்திருந்தனர் என்றும் கந்தபுராணம் கூறுகின்றது :—

"அந்தக் காலத் தெம்முயிர் காப்பான் அரனுண்டால்
வந்தக் கூற்றன் என் செய்வன் என்ன வடதொன்னூல்
சந்தப் பாவில் போற்றுதல் செய்தே தனிநின்ற
மைந்தற் காணூஉ எம்பெரு மானும் மகிழ்வுற்றான்
--(கந்தபுரா 2-5-246)

† பிறை, காமன்வில், தென்றல், வீணை ஓசை, வசைமொழி—இவை காமத்தை வளர்ப்பன—பாடல் 218-பக்கம் 53 கீழ்க்குறிப்பு.

‡ கைக்க -- அலங்காரம் செய்ய "கைஇ கோலஞ்செய்து" மதுரைக் காஞ்சி 419.

அன்புகூடி மிகுந்தெழும் இப்பேதைப் பெண் மயக்கங்கொண்டு தனித்திருக்கின்றாள்;

சங்குகள் உள்ள கடல் மங்கிக் கலங்கின தோற்றம் (விளக்கம்) ததும்பும்படியாக

விஷம்போன்று விளங்கும் (விஷாக்கினிபோலச் சுடர்வீசும்) வேலாயுதத்தைச் செலுத்திச் சண்டை செய்த வேளே!

சந்தக்கவி நூல் சொல்லும் புலவர்களுடைய சொல்லிற் பிரியம் உடையவனே (சுவை காண்பவனே)!

சண்பைப்பதி (சீகாழியில்) வீற்றிருக்கும் கந்தப்பெருமாளே! (பேதை மயங்கித் தனியானாள்)

777.

செவவானத்து நிலவுக்கும், (இக்கு மாரற்கு) கரும்புவில் ஏந்தும் மன்மதனுக்கும், அ(ல்)ல, இவை மாத்திரம் அல்ல – தெற்கிலிருந்து வரும் (ஊதைக்கு) காற்றுக்கும் (அல்லது – அலத் தெற்கில் ஊதைக்கு – அல் – இரவில் வீசும் – அத் தெற்கில் ஊதைச்கு அந்தத் தென்றல் காற்றுக்கும்) அனல் தணியாத – நெருப்புப்போலச் சுடுகின்ற தன்மை குறையாத—

(சித்ரவீணைக்கு) இன்பகரமான ஓசையைத் தரும் வீணைக்கும், அலர் – வசைமொழி கொண்ட தாயர்க்கும், அவச் சித்தம் வாடி – வீணான உள்ளமானது வாட்டம் அடைந்து, (பொது மாதர்க்குக் கொடுக்கப் பொருள்வேண்டிப் பணம் உள்ளவர்களைத் தேடிச்சென்று அவர்கள்மீது) கனக் கவிபாடி-பெருத்த பாடல்களைப்பாடி—

(அவர்களை அப் பாடல்களில்)-(கை) துதிக்கையையும் (கபோலம்) கன்னத்தையும் உடைய (கிரி) மலைபோன்ற ஐராவதம் (போலப் பெருமை உடையவர்) என்றும், (பொன் கொள்) பொன் சேரும் (ராசி) அதிர்ஷ்டம உள்ளவர் என்றும், (அல்லது – கைக்க – போல – அலங்கரித்ததுபோல அலங்காரவகையில் – துதித்து (கிரிப்பொற் கொள் ராசி) பொன் ராசி கொள்கிரி — பொற் குவியலைக்கொண்ட கிரி (மேருமலை) என்றும், கொடையில் (ஈதலிற்) பேர்போன கற்பக விருக்ஷம் என்றும், செகத்ரயபாநு (லோகம் மூன்றிலும் விளங்கும் சூரியன்) என்றும்,

கற்றபேர் வைப்பெனச் செத்தையோ கத்தினர்க்
கைக்குறான் வேட்கிநிற் பதுபாராய்;
சக்ரபா ணிக்குமப் *பத்மயோ னிக்குநித்
தப்ரதா பர்க்குமெட் டரிதாய-
தத்வவே தத்தினுற் பத்திபோ தித்தஅத்
தத்வரூ பக்கிரிப் புரைசாடிக்;
கொக்கிலே புக்கொளித் திட்டசூர் xபொட்டெழக்
குத்துரா †வுத்தபொற் குமரோனே-
கொற்றவா வுற்பலச் செச்சைமா லைப்புயக்
கோச்சைவாழ் முத்தமிழ்ப் பெருமாளே. (கo)

778. காயம் நிலையாமை

தனதன தாந்த தான, தனதன தாந்த தான
தனதன தாந்த தான தனதான

தினமணி சார்ங்க பாணி யென மதிள் நீண்டு சால
தினகர னேய்ந்த மாளி கையிலாரஞ்-
செழுமணி சேர்ந்த பீடி கையிலிசை வாய்ந்த பாடல்
‡வயிரியர் சேர்ந்து பாட இருபாலும்;
இனவளை பூண்கை யார்க வரியிட வேய்ந்து மாலை
புழுககில் சாந்துபூசி யரசாகி-

---

* "சக்ரபாணியுடனே சகத்ரயந்தரு தசப்பிதா மகர்கள் தம் மொடும் ** கூடி நின்றனன் பத்மயோனியே"

"பத்மயோனி என்றது பிறந்த வழிக்கூறல்" அதுதான் இருபெயரொட்டு ஆகுபெயர்"—தக்கயாகப் பரணி 472-உரை.

'உந்தியெழுந்த உருவ மலர் தன்னில் சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன்'—பெரியாழ்வார் 2 5-8.

† ராவுத்தன்—குதிரை வீரன்

"சூர்க்கொன்ற ராவுத்தனே" "கலாபத் தனி மயிலேறும் இராவுத்தனே"—கந்தாலங்காரம் 37, 50.

"இவுளி முகியைப் பொருத ராவுத்தனனவனும்"
—வேடிச்சி காவலன் வகுப்பு.

‡ வயிரியர்—பாணர் : புகழ்ந்து பாடுவோர் "வயிரியர் தோள் வலி புகழ" என்பர் பொதுப்பாடலினும் 1254.

கற்ற புலவர்களின் (வைப்பு) சேமநிதி நீ என்றும், (பொய்யான புகழ்கூறிக்) குப்பையாம் செல்வயோகம் படைத்த மனிதர்களின் கையில் நான் அகப்பட்டு வெட்கம் அடைந்து நிற்கின்றநிலையை நீ கண் பார்ப்பாயாக,

சக்கரம் திருக்கையிற் கொண்ட திருமாலுக்கும், (திருமாலின் உந்தித்) தாமரையில் தோன்றிய பிரமனுக்கும், அழியாதவர் என்னும் சீர்த்தி வாய்ந்த பரமசிவத்துக்கும் எட்டுதற்கு அரியதான—

உண்மையான வேதத்தின் உற்பத்தியை (தோற்றத்தை) உபதேசித்த அந்த ஞான சொரூபனே! (கிரி) கிரௌஞ்சகிரியின் (புரை) பெருமையைக் குலைத்து,

மாமரத்திலே புகுந்து ஒளித்திருந்த சூரன் தொளைபடக் குத்தின ராவுத்தனே (வீரனே)! அழகிய குமரனே!

அரசனே! நீலோற்பலம், வெட்சிமாலை இவைகளை அணிந்த புயங்களை உடைய பெருமாளே! (கொச்சை) சீகாழியில் வாழ்கின்ற முத்தமிழ்ப் பெருமாளே!

(வெட்கி நிற்பது பாராய்)

778.

(தினமணி) சூரியன், (சார்ங்கபாணி) சாரங்கம் என்னும் வில்லைக் கையிற்கொண்ட திருமால், என்று சொல்லும்படி, மதில் நீளமுள்ளதாய், (சால) மிகவும் (தினகரன்) சூரியனை (சூரியன்ஒளியை) (ஏய்ந்த) பொருந்திய மாளிகையில் – அரண்மனையிலே, முத்தாலும்

(செழு) அழகுள்ள ரத்னத்தாலும் அலங்கரிக்கப்பட்ட (பீடிகையில்) பீடத்திலே (அமர்ந்து), இசை – கீதம் பொருந்திய பாடல்களைப் புகழ்ந்து பாடுவோர் ஒன்று கூடிப் பாடவும், இரண்டு பக்கங்களிலும்—

ஒரேமாதிரியான வளையல்களைப் பூண்ட கையை உடைய மாதர்கள் (நின்று) கவரிவீச, வேய்ந்துமாலை – மாலைகளைச் சூடி – புனுகு சட்டம், அகில், சந்தனம் இவைகளைப் பூசிக்கொண்டு, அரசபதவியிலிருந்து—

இனிதிறு மாந்து வாழு மிருவினை நீண்ட காய
*மொருபிடி சாம்ப லாகி விடலாமோ ;
வன்சர ரேங்க வான முகடுற வோங்கி ஆசை
மயிலொடு பாங்கி மார்க ளருகாக-
மயிலொடு மான்கள் சூழ வளவரி †வேங்கை யாகி
மலைமிசை தோன்று மாய வடிவோனே ;
‡கனசமண் xமூங்கர் கோடி கழுமிசை oதூங்க நீறு
கருணைகொள் பாண்டி நாடு பெறவேதக்-
கவிதரு காந்த பால கழுமல பூந்த ராய
**கவுணியர் வேந்த தேவர் பெருமாளே. (கக)

779 கந்த புராணம்

தாஞதன தானன தானன
தாஞதன தானன தானன
தாஞதன தானன தானன தந்ததான

††பூமா துர மேயணி மான் மறை
வாய்நா லுடை யோன்மலி வானவர்
கோமான்முனி வோர்முதல் யாருமி யம்புவேதம்-
பூராயம தாய்மொழி நூல்களும்
ஆராய்வ திலா தட லாசுரர்
பேரால்மறை வாயுறு பீதியின் வந்துகூடி ;

---

* 'ஒருபிடி பொடிக்கும் இலையெனும் உடலாமோ' என்றால் 585-ஆம் பாடலிலும்.

† வேங்கை மரமானது—பாடல் 416-பக்கம் 551 கீழ்க்குறிப்பு.

‡ சமணர்கள் கழு ஏறினதும் — மதுரையில் திருநீறு பரவினதும்— பாடல் 181 பக்கம் 42 ; பாடல் 283 பக்கம் 202 கீழ்க்குறிப்பு.

x மூங்கர்—ஊமையர் — 'கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து'— அப்பர் 4-99-2.
'நின்றுண சமணர்...ஒன்றும் உணராஊமர்'. சம்பந்தர் 1-71-10.

o தூங்குதல்—தொங்குதல் —
"சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கு"—குறுந்தொகை-18.
"பைங்காய் தூங்கும் பந்தர்"—பெரும்பாண் 267.

** சம்பந்தர் கவுணியர்குலம்—
"கவுணியர் குலபதி காழியர்கோன்"—சம்பந்தர் 1-112-11
"கழுமலவூரிற் கவுணியன் ஞானசம்பந்தன்"-சம்பந்தர் 1-98-11.

†† லக்ஷ்மி திருமால் மார்பில்:
"பங்கயத் திருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான்"
—கம்பராமா-மாரீசன்-76; 'திருமருமார்பிலவன்'—சம்பந்தர் 2-68-9.

இன்ப மயமாய் மிக்க பெருமையுடனே வாழ்கின்ற இருவினைக்கு ஈடான (இந்தப்) பெரிய உடலானது (ஈற்றில்) ஒருபிடி சாம்பலாகி அழிந்து படலாமோ!

(வனசரர்) காட்டில் திரிபவர்கள்—வேடர்கள் (ஏங்க) அதிசயித்து ஆரவாரிக்க, வானத்தின் உச்சியைத் தொடும்படி வளர்ந்து, (தான்) ஆசையாய் (வளர்த்த) மயிலும் தோழிமார்களும் சமீபத்தில் இருக்க

மயில்களும் மான்களும் சூழ, செழித்துள்ள உயர்ந்த வேங்கைமரமாகி (வள்ளி) மலை மேலே தோன்றின மாய வடிவத்தனே!

பெருத்த சமண் ஊமையர்கள் (கோடி) பலரும் கழுவின்மேல் (தூங்க) தொங்க, திருநீறு-உன் கருணைக்குப் பாத்திரமான பாண்டிநாடு பெற-பாண்டிநாட்டிற் பரவ-வேதப்பொருள் கொண்ட

பாடல்களை அருளிய (காந்த) ஒளிகொள் மேனியனே — அழகனே! (பால) குழந்தையே! கழுமலம், பூந்தராய் எனப் பெயர்கள் உள்ள சீகாழிப் பதியனே! கவுணிய குலத்தனே! அரசே! தேவர் பெருமாளே!

(காயம் ஒருபிடி சாம்பலாகி விடலாமோ)

779.

பூமாது [தாமரையில் வீற்றிருக்கும் லக்ஷ்மி தேவியை] [உரமேயணி] மார்பிடத்தே வைத்துள்ள [மால்] திருமாலும், வேதம் சொல்லும் வாய் நான்கு உடையவனாகிய பிரமனும், கூட்டமான தேவர்களின் தலைவனான இந்திரனும், முனிவர்கள் முதலான யாவரும், சொல்லப்படும் வேதப்பொருளை

ஆராய்ச்சியுடன் கூறும் நூல்களில் ஆராய்ச்சி செய்யாத [அடல் அசுரர்] வலிய அசுரர்கள் செய்யும் போருக்குப் பயந்து மறைந்து, தாம்கொண்ட பயம் காரணமாக வந்து ஒன்றுகூடி — [ஒருங்கே வந்து]

நீமாறரு ளாயென ஈசனை
பாமாலைக ளால்தொழு தேதிரு
நீறூர் தரு மேனிய தேனியல் கொன்றையோடு-
நீரேர் தரு *சானவி மாமதி
காகோதர மாதுளை கூவிளை
நேரோடம் விளாமுத லார்சடை யெம்பிரானே;
போமாறினி வேறெது வோதென
வேயாரரு ளா†லவ ரீதரு
போர்வேலவ நீலக லாவியி வர்ந்துநீடு-
‡ பூலோகமொ டேயறு லோகமு
நேரோர் நொடி யேவரு வோய்சுர
x சேனாபதி யாயவ னேயுனை யன்பினோடுங்;
காமாவறு சோம ஸமானன
தாமாமணி மார்தரு நீபசு
தாமாவென வேதுதி யாதுழல் வஞ்சனேனைக்-
காவாயடி நாளசு ரேசரை
யேசாடிய கூர்வடி வேலவ
o காரார்தரு காழியின் மேவிய தம்பிரானே. (கஉ)

780. திருவடி பெற

தனனத்தத் தானத் தானன, தனனத்தத் தானத் தானன
தனனத்தத் தானத் தானன தனதான

மதனச்சொற் காரக் காரிகள் பவளக்கொப் பாடச் சீறிகள்
மருளப்பட் டாடைக் காரிக ளழகாக-

---

* சானவி கங்கை-சன்னு முநிவரிடத்தினின்று தோன்றியவள்- "சன்னுவின் செவிவழி வரலால் நிகரில் சானவி யெனப் பெயர் படைத்து"—கம்பராமா—அகலிகை 61.

† அவர் ஈதரு போர் வேலா—அவர் கொடுத்துதவிய (போர்) வேலை உடையவனே!—எனவும் பொருள் தொனிக்கும்-இவ்வாறே பாடல் 61-ல் 'இருண்ட கண்டர் தந்த அயில் வேலா' என்ற இடத்தும் பொருள் தொனிக்கும்: இது முருகவேள் போருக்குப் புறப்படுமுன் சிவபிரான் அவருக்கு வேல் கொடுத்த நிகழ்ச்சியைக் குறிக்கும். 'எப் படைக்கும் நாயகமாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே மதலைக்குக் கொடுத்தான்' கந்தபுரா 1-18-38.

‡ எழுலகம்—பாடல் 46 பக்கம் 123 கீழ்க்குறிப்பு.

x இந்தப் பாடலில் முதல் ஆறு அடிகள் தேவர் முறையீடு முதல் முருகவேள் தேவசேனாபதியாகப் போருக்கு எழுந்தருளும் வரையில் கந்த புராணச் சுருக்கமாய் அமைந்துள்ளன.

o 'காருலவும் பொழிற் காழி'—சம்பந்தர் 2-11-5.

நீ (மாறு) (அந்த அசுரர்களாம் பகைவர்களை அழிக்கவல்ல ஒரு) பகைவனை நீ தந்தருள் என்று ஈசனைப் பாமாலைகள பாடித் தொழுது, திருநீறு விளங்கும் மேனியனே! தேன் பொதியும் கொன்றைப் பூவுடனே—

நீர் அழகுடன் ததும்பும் (சானவி) கங்கையையும், சிறந்த நிலவையும், (காகோதரம்) பாம்பையும், மாதுளம் பூ, வில்வம், (நேரோடம்) நாவல் இலை, விளா இலை, முதலியன நிறைந்துள்ள சடையணி எம்பெருமானே!

(எங்களுக்கு உய்ந்து) போகும் வழி இனி (உன்னை ஒழிய) வேறு எது உளது, சொல்லி யருளுக (எனவே) என்று முறையிடவே, நிறைந்த கருணை அருளால் (அவர்) அந்த சிவபெருமான் (ஈதரு) தந்தருளிய வேலவனே! நீலத் தோகை மயிலில் ஏறி நீண்ட

(இந்தப் பூலோகத்துடனே பாக்கி ஆறு லோகங்களையும் நேராக ஒரே நொடிப் பொழுதில் (சுற்றி) வந்தவனே! தேவர்களின் சேனாதிபதியானவனே! உன்னை அன்பினால்—

(காமா) மன்மத அழகு உடையவனே! ஆறு (பூரண) சந்திரருக்குச் (சம) சமமான (ஆனன) திருமுகங்களை உடையவனே! (தாமா மணமார்தரு நீப) மணமார்தரு நீப தாமா! மணம் நிறைந்து வீசும் கடப்பமாலை அணிந்தவனே! (சுதாமா) நல்ல ஒளியை உடையவனே! என்றெல்லாம் (உன்னைத்) துதிக்காமல் திரிகின்ற வஞ்சகனாகிய என்னைக்

காத்தருளுக! முன்பு அசுரர் தலைவர்களாகிய சூரன் முதலானவர்களைச் சங்கரித்த மிகக் கூரிய வேலாயுதத்தை உடையவனே! மேகங்கள் நிறைந்துள்ள சீகாழியில் வீற்றிருக்கும் தம்பிரானே!

(வஞ்சனைக் காவாய்)

780.

மன்மதன் சம்பந்தமான சொற்களை உறைப்புடன் (உற்சாகத்துடன்) பேசுபவர்கள், பவளக்கொப்பு காதில் ஆடும்படிக் கோபிப்பவர்கள், கண்டோர் மருளும்படியாக பட்டு ஆடைகளை அணிந்தவர்கள், அழகாக,

மவுனச்சுட் டாடிச் சோலிகள் இசலிப்பித் தாசைக் காரிகள்
வகைமுத்துச் சாரச் சூடிகள் விலைமாதர் ;

குதலைச்சொற் சாரப் பேசிகள் *நரகச்சிற் சாடிப் பீடிகள்
† குசலைக்கொட் சூலைக் காலிகள் மயல்மேலாய்க்-

கொளுவிக்கட் டாசைப் பாசனை பவதுக்கக் காரச் சூதனை
குமுதப்பொற் பாதச் சேவையி லருள்வாயே ;

கதறக்கற் சூரைக் கார்கட லெரியத்‡திக் கூறிற் பாழ்பட
xககனக்கட் டாரிக் காயிரை யிடும்வேலா-

கதிர்சுற்றிட் டாசைப் பால்கிரி யுறைபச்சைப் பாசக் கோகில
கவுரிப்பொற் oசேர்வைச் சேகர முருகோனே ;

---

* நரக அச்சில் சாடி பீடிகள்—நரகமாகிய அச்சிற் சாய்வித்துத் துன்பப் படுத்துவோர்.

† குசலை கொள் சூலை காலிகள்—(தமது செய்கைக்குத்) தடையாக வந்த கர்ப்பத்தை வெளிப்படுத்துவோர்.

‡ எட் 'டிகை நீசமுட்டரை ஓட வெட்டிய பானு சத்திகை எங்கள் கோவே'—திருப்புகழ் 277.

x ககனம்—சேனை.

o தேவி முருகவேளை அணைதலால் --- தேவியின் மார்பில் உள்ள சந்தனக் கலவை முருகவேளின் மேலே பட்டு அதை அவர் பூசிக்கொள்வதாகின்றது.

"இமைய மயில் தழுவு மொரு திருமார்பில்
ஆடுவதும்...மணநாறு சீறடியே"—சீர்பாத வகுப்பு.

மௌனத்தாலேயே தங்களுக்கு வேண்டியதைச் சுட்டிக்காட்டிக் காரியத்தைச் சாதிப்பவர்கள், (இசலிப்பித்து) பிணங்குதலால் தங்கள் ஆசையை வெளிப் படுத்துபவர்கள், வகை வகையான முத்துமாலைகளைப் பொருந்த அணிந்து கொள்பவர்கள், விலைமாதர்கள் (உடலை விலைக்கு விற்பவர்கள்)—

மழலைப் பேச்சுக்களைப் பொருந்தப் பேசுபவர்கள், நரகமாகிய அச்சில் சாய்வித்துத் துன்பப் படுத்துவோர். (தமது செய்கைக்குத்) தடையாக வந்த கர்ப்பத்தை வெளிப்படுத்துவோர், (அல்லது) கொள்சூலை குசலை காலிகள்-கொண்ட காப்பத்தைத் (குசலை) தந்திரவகையில் காலி செய்பவர்—கலைத்து ஒழியச் செய்பவர்—(மேல்), மோகம் மேற்பட்டு

(அதனால்) கொள்ளப் பட்டவனைக் கட்டுண்டு அந்த ஆசையில் பாசம் (பற்று) கொண்ட என்னை, (பவம்) பிறப்பால்வரும் துக்க நிகழ்ச்சிகளிற் பட்ட (சூதனை), வஞ்சகனைக் (குமுதமலர்) ஆம்பல்மலர் அணிந்த உனது அழகிய திருவடிச் சேவைதந்து புரந்தருளுவாயாக.

(கதறக்கற்சூரை) கற்சூர்கதற — கல் — ஏழுகிரியும், அவை காவலாயிருந்த சூரனும் கதறி அழவும், (கார்கடல்) கரியகடல் எரியவும், திக்கு—எட்டுத் திசைகளும் (திசை அசுரர்களும்) ஊறில் பாழ்பட ஊறுபட்டுப் பாழ்பட— இடையூறு பட்டுப் பாழ்படவும், அல்லது கூறில் — கூறுமிடத்து திக் (திக்கு அசுரர்கள்) பாழ்படவும், ககனம்—(அசுர) சேனைகளை, (அல்லது க—தீப்போன்ற— கனம் — பெருமை வாய்ந்த (கட்டாரிக்கா) — வாளுக்கு, இரையிடும் இரை—உணவாகும்படி செய்த வேலனே !

(கதிர் சுற்றிட்ட) சூரியன் வலம்வரும் (ஆசைப்பால்கிரி) ஆசை-கிரி-பால் (ஆசைகிரி) பொன்மலை மேருவின், பால்-பக்கத்திலுள்ள இமயமலையில் அல்லது கயிலையில், உறை—வீற்றிருக்கின்ற—(பச்சைப்பாசக் கோகில கௌரி பச்சை நிறமுள்ள கௌரி, பாசம்-அன்பு நிறைந்த(அல்லது பாசாங்குசம் கொண்ட) கௌரி, கோகிலம் குயில் போன்ற கௌரி-பார்வதியின்-அழகிய (சேர்வை) சந்தனக்கலவை (சேகர) மேற்படும்படி கொள்ளும் முருகவேளே !

திதலைப்பொற்*பாணிக் கார்குயி லழகிற் பொற் றேகைப்பாவையை
தினமுற்றுச் சாரத் தோள்மிசை யணைவோனே—

†திலதப்பொட் டாசைச் சேர்முக மயிலுற்றிட் டேறிக்காழியில்
சிவன்மெச்சக் ‡காதுக் கோதிய பெருமாளே. (கரு)

781. அருள

தனதனன தத்ததன தனதனன தத்ததன
தனதனன தத்ததன தனதான

விடமெனமி குத்தவட வனலென வுயர்த்துரவி
விரிகதி ரெனப்பரவு நிலவாலே—

விதனமிக வுற்றுவரு ரதிபதி கடுத்துவிடு
விரை தரு விதட்கமல கணையாலே;

---

* பாணி—அன்பு, அழகு, (பிங்கலம்); சொல் (சூடாமணி)

† முருக வேளின் நெற்றியிற் பொட்டு:
"புண்டரம் பூத்த நுதற் பொட்டழகும்"
—கந்தர் கலிவெண்பா 38.

‡ உமை முலைப் பாலுண்ட சம்பந்தர் முதல் முதல் காழியிற் பாடின "தோடுடைய செவியன் விடையேறி" எனத் தொடங்கும் பதிகம் இறைவன் செவியைச் சிறப்பிக்கின்றது.

(திதலை) தேமலையும், (பொன்) அழகிய (பாணி) அன்பையும் அல்லது சொல்லையும் கொண்ட, (கார்குயில்) கரியகுயில் (போன்று) அழகுடைய பொலிவு நிறைந்த (தோகைப்பாவையை) மயில் போன்ற பாவையை (பதுமைபோன்ற வள்ளியை (சாரத் தின முற்று) — சாரும்பொருட்டு - அவளைத் தழுவும் பொருட்டுத் - தினம் உற்று — நாள்தோறும் அவளிடம் சேர்ந்து அவள் தோள்மிசை அணைந்தவனே!

(திலதப் பொட்டு) சிறந்த பொட்டு, (ஆசைச்சேர்முக) விருப்பமுடன் அணியும் திருமுகத்தையுடையவனே! (அல்லது பொட்டு அணிந்துள்ள (ஆசைச்சேர்) பொன்னை நிகர்க்கும் திருமுகங்களையுடையவனே! மயில் உற்றிட்டு ஏறி—மயிலில் பொருந்தி ஏறி காழியில் (அமர்ந்துள்ள பெருமாளே!); சிவன் மெச்சும்படியாக அவர் காதில் உபதேசம் செய்த பெருமாளே! (அல்லது) மயிலில் பொருந்தி ஏறியவனே! சீகாழிப் பதியில் சிவபிரான் விரும்பும்படியாக அவர் காதைச் சிறப்பித்துத் "தோடுடைய செவியன்" என்ற தேவாரப்பாவை ஓதின பெருமாளே!

(பாதச் சேவையி லருள்வாயே)

781.

விஷம்போலப் பொருந்திய வடவாக்கினி என்று சொல்லும்படியாக (உயர்த்து) மேலெழுந்து, (ரவிவிரிகதிரென) சூரியனது வெப்பம் மிக்க கிரணங்களென்று சொல்லும்படியாகத் தனது கிரணங்களைப் பரப்பும் சந்திரனால்

துன்பம் மிக அடைந்து (அச் சமயத்தில்) வருகின்ற (அல்லது சந்திரனால் வருகின்ற வருத்தும் தொழிலை மிகக் கொண்டு), ரதியின் கணவனாகிய மன்மதன் (கடுத்துவிடு) கோபித்துச் செலுத்துகின்ற (விரைதரு) வாசனை தருகின்ற இதழ்களுடைய (பூங்கணைகளுள்) தாமரைக்கணை கொண்டு

அடலமரி யற்று *திசை யினில்மருவி மிக்கவனல்
அழலொடு கொதித்துவரு கடைநாளில்-
அனுகிரம னெற்றமயல் கொளு†மநிலை சித்த முற
அவசமொ டணைத்தருள வரவேணும்;
அடவி தனில் மிக்கபரு வரையவ ரளித்ததிரு
அணையமயில் ‡முத்தமணி Xசுரயானை-
அழகிய மணிக்கலச முலைகளில் மயக்கமுறு
மதிவிரக 0சித்ரமணி மயில்வீரா;
**கட தடக ளிற்றுமுக ரிளையவ கிரிக்குமரி
கருணையொ டளித்ததிற முருகோனே-
††கமலமல ரொத்தவிழி யரிமருக பத்தர்பணி
கழுமல நகர்க்குமர பெருமாளே. (கசு)

கரியவனகர்.

[இது ஸ்ரீகாழி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 3½-மைல் தூரத்திலுள்ள 'கொண்டல் வண்ணன்குடி' என்னுந் தலமாய் இருக்கலாம். 'கொண்டல் வண்ணன்குடி' என்பது 'கொண்டல் வள்ளுவக்குடி' என மருவியதுபோலும். 'கொண்டல்' எனத் தேவாரத்தில் வைப்பு ஸ்தல மொன்றுண்டு.]

782. இடர் தொலைய

தனதன தனனத் தான தாத்தன
தனதன தனனத் தான தாத்தன
தனதன தனனத் தான தாத்தன தனதான

†‡அளிசுழ லளகக் காடு காட்டவும்
விழிகொடு கலவித் தீயை மூட்டவும்
அமளியில் முடியப் போது போக்கவும் இளைஞோர்கள்-

---

* திசையினில்-சமயத்தில். † அநிலை-அந்நிலை: அச் சமயம்.

‡ தேவசேனைக்கு முத்தமாலை உரியது—'செழு முத்து மார்பின் தெய்வானை' — திருப்புகழ் 761: பாடல் 712 பக்கம் 142 —கீழ்க்குறிப்பு.

X சுர யானை--தேவ யானை.

0 மயில் காலில் மணி நடமிடும் பொழுது சப்தித்தல் —"வருதுரக மயில் மணிகள் சத்திக்க நிர்த்தமிட"—பாடல் 147.

** சடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே"

—கந்தரலங்காரம்.

(தொடர்ச்சி 321-ஆம் பக்கம் பார்க்க)

(அடல் அமர் இயற்று) வலிய போரைச் செய்யும் (திசையினில்) சமயத்தில்—காம மிக்கு வேதனைப்படும் சமயத்தில்—மருவி—(பொருந்தினவனாய்) (மிக்க அனல் அழலொடு) மிக்க நெருப்புத் தணல்போலக் கோபக் கொதிப்புடன் படுகின்றகடை நாளில்- ஈற்றுப் பொழுதில்—

(என்னை) அணுகி யமன் (எற்ற) தாக்க (நான்) மயக்கம் கொள்ளும் அந்த சமயத்தில், (சித்தம் உற) நீ மனதுவைத்து (அவசமொடு) பரவசத்துடன் (மிக்க களிப்புடன்) என்னை அணைத்தருள வரவேணும்;

காட்டில் (மிக்க) நிறைந்திருந்த (பருவரையர்) பெருத்தமலை வாசிகளாகிய வேடர்கள் போற்றி வளர்த்த லக்ஷ்மி போன்ற மயிலாம் வள்ளி, முத்தமாலை அணிந்த தேவயானை (இவ் விருவர்களின்)

அழகிய மணிமாலைகளுள்ள (கலசம்) குடம் போன்ற கொங்கைகளின் மோகம் கொள்ளும் அதிக காமங்கொண்டவனே, அழகிய மணிகள் புனைந்த மயில் வீரனே!

(சடதட) மதமும் பெருமையுங் பொருந்திய யானைமுகப் பெருமானும் விநாயகருக்கு (இளையவ) தம்பியே! இமயமலைப் புத்திரியாகிய பார்வதி (தேவர்கள்மீது) கருணை பூண்டு அளித்த (திறம்) சாமர்த்திய சாலியாகிய முருகனே!

தாமரைமலர் போன்ற கண்களையுடைய திருமாலின் மருமகனே! பக்தர்கள் பணிகின்ற கழுமல நகர் எனப்படும் சீகாழிக் குமரனே! பெருமாளே!

(அணைத்தருள வரவேணும்)

கரியவனகர்

782

(அளி) வண்டுகள் (சுழல்) மொய்க்கும் கூந்தலாகிய காட்டைக் காட்டுதற்கும், கண் கொண்டு (கண்ணுற்) காமத்தீயை மூட்டுதற்கும், படுக்கையில் (முடிய) சதா—எப்போதும் பொழுதுபோக்கவும், இளவயதினராயுள்ள

---

†† 'கண்ணுங் கமலம் கமலமே கைத்தலமும் மண்ணளந்த பாதமும் மற்றவையே... திருமாமணிவண்ணன் தேசு'—இயற்பா... மூன்றாம் அந்தாதி-9.

‡‡ 'அளி முரல்'—என்றும் பாடம்.

அவர்வச மொழுகிக் காசு கேட்கவும்
அழகிய மயிலிற் சாயல் காட்டவும்
அளவிய தெருவிற் போயு லாத்தவும் அதிபார;

இளமுலை மிசையிற் றூசு நீக்கவும்
முகமொடு முகம்வைத் தாசை யாக்கவும்
இருநிதி யிலரைத் தூர நீக்கவும் இனிதாக.

எவரையு மளவிப் போய ணுப்பவும்
நினைபவ ரளவிற் காதல் நீக்கியென்
இடாது தோலையத் தாள்கள்காட்டிநின் அருள்தாராய்;

நெளிபடு களமுற் றூறு போற்சுழல்
*குருதியில் முழுகிப் பேய்கள் கூப்பிட
†நிணமது பருகிப் பாறு காக்கைகள் கழுகாட.

நிரைநிரை யணியிட் டோரி யார்த்திட
அதிர்தரு சமரிற் சேனை கூட்டிய
நிசிசரர் மடியச் சாடு வேற்கொடு பொரும்வீரா;

களிமயில் தனில்புக் கேறு தாட்டிக
அழகிய கனகத் தாம மார்த்தொளிர்
கனகிரி புய ‡முத் தார மேற்றருள் திருமார்பா.

கரியவ னசுரிற் றேவ பார்ப்பதி
யருள்சுத குறநற் பாவை தாட்பணி
கருணைய தமிழிற் பாடல் கேட்டருள் பெருமாளே.

---

* பேய்கள் ரத்தத்தில் முழுதுவது:

"ஒழுகு உதிரந்தனில் முழுகி எழுந்தன.. நிருதரை முனிந்த போர்க் களத்தில் அலகையே" —போர்க்களத்தலகை வகுப்பு.

† மாமிசத்தை உண்பன பருந்து முதலிய:—

"நரிநாய்பேய் பாறொடு கழுக்கள் கூகைதாமிவை புசிப்ப தான பாழுடல்"—திருப்புகழ் 898.

"நரிகள் கங்கு காகமிவை தின்ப தொழியாதே"
— திருப்புகழ் 120.

‡ முருகனும் முத்துமாலையும்—'தண்டரள மணிமார்ப'
திருப்புகழ் 729.

அவர்களின் வசத்தில் பழகி அவர்களைக் காசு கேட்பதற்கும், அழகிய மயில்போன்ற (தங்கள்) சாயலைக் காட்டுதற்கும், அளவிய (சந்திக்கும் பொருட்டு)த் தெருவில் போயுலாத்துதற்கும், அதிக பாரமான

இளமுலை மேலுள்ள ஆடையை நீக்குதற்கும், முகமொடு முகம் வைத்து ஆசை யுண்டுபண்ணுதற்கும், நிரம்ப சொத்து இல்லாதவரைத் தூரத்தே வெருட்டி நீக்குதற்கும், இனிய சொற்களுடன்

எல்லாருடனும் கலந்துபோய் (அணுப்பவும்) அவர்களை ஏமாற்றவும், (நினைபவரளவில்) நினைக்கின்றவர்களாகிய பொதுமகளிர் சம்பந்தப்பட்டவரையில் என் ஆசையை நீக்கி, என் வருத்தமெல்லாந் தொலைய உன் திருவடிகளைக் காட்டி உன் திருவருளைத் தந்தருளுக;

(நெளிபடு) சுழற்சியுறும் (களம் — உற்று) போர்க்களத்தில் சேர்ந்து (அங்கே) ஆறுபோலச் சுழன்று ஓடும் ரத்தத்தில் முழுகிப் பேய்கள் கூச்சலிட, மாமிசத்தை உண்டு (பாறு) பருந்துகளும், காக்கைகளும், கழுகுகளும் விளையாட

கூட்டங் கூட்டமாக வரிசையாக நின்று, ஓரி (நரிகள்) ஆரவாரஞ்செய்ய, (இவ்வாறு) அதிர்ச்சியுறும் போரில் சேனைகளைக் கூட்டிவந்த அசுரர்கள் இறக்கும்படி சங்காரஞ்செய்யும் வேல்கொண்டு போர்செய்த வீரனே!

செருக்கைக் கொண்டிருந்த மயில்மேல் புகுந்து ஏறும் (தாட்டிக) பலவானே! அழகிய பொன்மாலை நிறைந்து விளங்கும் பொன்மலை (மேரு) போன்ற புயங்களை உடையவனே! முத்துமாலை ஏற்றணிந்துள்ள அழகிய மார்பனே!

கரியவனகர் எனுந் தலத்தில் வீற்றிருக்கும் தேவனே! பார்வதி யருளிய (சுத) பிள்ளையே! (குறநற்பாவை) நல்ல குறப்பாவையாம் வள்ளியின் தாளைப் பணிகின்ற (அல்லது, பாவை உனது தாளைப் பணிகின்ற) கருணை மூர்த்தியே! தமிழ்ப்பாடல் கேட்டருளும் பெருமாளே!

(இடரது தொலைய நின் அருள் தாராய்)

வைத்தீசுரன் கோயில்

[ரெயில்வே ஸ்டேஷன். இது தேவாரத்திற் 'புள்ளிருக்கு வேளூர்' எனப்படும் ஸ்ரீகாழிக்கு மேற்கு 3½-மைல், திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு. முருகவேள் — முத்துக்குமரர் — விசேஷ சந்நிதி: இவருக்குக் குமரகுருபரர் சுவாமிகள் பாடிய 'பிள்ளைத்தமிழ்' ஒன்று உண்டு.]

783.

தனத்தன தானத் தனதான

உரத்துறை போதத் தனியான-
உனைச்சிறி தோதத் தெரியாது ;
* மரத்துறை போலுற் றடியேனும்-
† மலத்திருள் மூடிக் கெடலாமோ ;
பரத்துறை சீலத் தவர்வாழ்வே-
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே ;
‡ வரத்துறை நீதர்க் கொருசேயே-
x வயித்திய நாதப் பெருமாளே. (க)

784 திருவடியைப் பெற

தத்தன தான தான, தத்தன தான தான
தத்தன தான தான தனதான

எத்தனை கோடி கோடி விட்டுட லோடி யாடி
யெத்தனை கோடி போன தளவேதோ-

---

* மரம்-ஊக்கம் ஞானமில்லாதவனை 'மரம் அனையான்' என்பர்.
''மரமனையா னுக்கிந்த மானை விதித்த பிரமனையான் காணப் பெறின்''—தனிப்பாடல்
'உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார் மரம் ; மக்களாதலே வேறு'—திருக்குறள் 600.
'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நல் மரம்—மூதுரை-14.

† மலத்திருள் : 'ஞானச் செல்வங்களைச் சாதகனுக்குத் தெரியாமற்படி மறைத்துக் கொண்டு திரைபோல நிற்கும் இருட்டாகிய மாயா மலமும், விஷ்ணுகிரந்தி யாகிய காமிய மலமும், ருத்திர கிரந்தியாகிய ஆணவ மலமும்' — என்றார் திருவாசக உரையாசிரியர் ஸ்ரீ சுந்தரமாணிக்க யோகீஸ்வரர்—பக்கம் 674

(தொடர்ச்சி பக்கம் 325)

வைத்தீசுரன் கோயில்

783.

(உரத்துறை) உரம் — துறை) வன்மைக்கிடமான அல்லது (உரத்து—உறை வன்மையொடு பொருந்திய (போதம்) ஞானத்தின் தனிப் பொருளான—

உன்னைக் கொஞ்சமேனும் போற்றத் தெரியாமல்;

மரத்து உறை—மரப்பண்டம், மரத்துறை—மரமாம் இடம்—மரக்கட்டை போல இருந்து அடியேனும்—

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் இருள் மூடி நான் கெட்டுப்போகலாமா! (கெட்டுப்போகலாகாது என்றபடி

மேலான நிலையில் உள்ள புனித வாழ்க்கையர்களின் செல்வமே!

(பணித்து அடி) அடியிற் பணிவித்து வாழ்வு உறும்படி அருள்வோனே!

வரந்தரும் வழியையே தமது நீதியாகக் கொண்ட சிவனது ஒப்பற்ற குழந்தையே!

வயித்தியநாதராம் பெருமாளே! (அல்லது) வயித்தியநாதராம் சிவபிராற்குப் பெருமாளே!

(மலத்திருள் மூடிக் கெடலாமோ)

784

எத்தனை கோடி கோடிக் கணக்கான (உடலை) விட்டுப் (புது) உடலில் ஓடிப்புகுந்தும், ஆடியும், இங்ஙனம் எத்தனை கோடி(ப்பிறப்பு) வந்து போய்விட்டது! இதற்கு அளவும் உண்டோ!

---

‡ சிவபிரான் வரத்துறை நீதர்—அதனால்தான் 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்றார் அப்பர் 6-23-1.

x முருகவேளைப் 'பவரோக வயித்தியநாதப் பெருமாள்' என்பர் அருணகிரியார் பாடல் 293-பார்க்க. வைத்தீசுரன் கோயிற் சிவபிரானுக்கு 'வைத்தியநாதப் பெருமாள்' என்று பெயர்.

''மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை''-அப்பர் 6-54 8.

''நடம் நவிற்று திறல் வேளூர் வயித்திய
நாதனைப் போற்றுதும்''
—முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ் காப்பு (௫)

இப்படி மோக போக மிப்படி யாகி யாகி
யிப்படி யாவ தேது இனிமேலோ;
*சித்திடில் சீசி சீசி குத்திர மாய மாயை
சிக்கினி லாயு மாயு மடியேனைச்-
சித்தினி லாட லோடு முத்தமிழ் வாண ரோது
சித்திர ஞான பாத மருள்வாயே;
†நித்தமு மோது வார்கள் சித்தமெ வீட தாக
நிர்த்தம தாடு மாறு முகவோனே-
நிட்கள ரூபர் பாதி பச்சுரு வான மூனு
நெட்டிலை சூல பாணி யருள்பாலா;
பைத்தலை நீடு மாயி ரத்தலை மீது பீறு
‡பத்திர பாத நீல மயில்வீரா-
பச்சிள பூக பாளை செய்க்கயல் தாவு வேளூர்
பற்றிய மூவர் தேவர் பெருமாளே. (உ)

785. வேசையர் உறவு அற

தான தத்தனந் தான தத்ததன
தான தத்தனந் தான தத்ததன
தான தத்தனந் தான தத்ததன தனதான

பாட கச்சிலம் போடு செச்சைமணி
கோவெ னக்கலந் தாடு பொற்சரணர்
பாவை சித்திரம் போல்வர் பட்டுடையி னிடைநூலார்-

---

* வாழ்க்கையை இங்ஙனமே அப்பரும் வெறுக்கின்றார் "படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனிதர் வாழ்க்கை கெடுவதிப் பிறவி சீசீ"—4-76-10

† "சொற் கோலத்தே நற்கா லைச் சேவிப்பார் சித்தத் துறைவோனே"— திருப்புகழ் 1125.

‡ மயிலின் அடியை நொச்சியின் இலைக்கு உவமை கூறுவது; "மயிலடி யிலைய மாக்குரல் நொச்சி"
—குறுந்தொகை 138; நற்றிணை 115-5.
"மயிலடி யன்ன மாக்குரல் நொச்சி"—நற்றிணை 305-2.
"நொச்சிப் பாசிலை யன்ன பைந்தாள மஞ்ஞை"
—திருவிளை இந்திரன் 74.
"நொச்சி யிலைபுரை பைந்தாட் கலாப மாமயில்"
"பரவு நொச்சியின் பாசிலை யன்ன பைந்தாளும்"
—மாயூரப்புரா-பக்கம் 2, 48 (தக்கன் மகம்புரி)

இவ்வாறு மோகமும் போகமும் கலந்து, இவ்வாறே பிறந்து பிறந்து, இவ்வாறு ஆய்க்கொண்டு வருவது ஏனோ! இனிமேல் (ஓ—சித்திடில்)

யோசித்துப் பார்க்கின் சீசி சீசி இழிவானது இந்த மாயமான மாயை (வாழ்க்கை); இதன் சிக்கினிலே அகப்பட்டு மாய்கின்ற அடியேனை—

அறிவுத்துறையில் பயில்வித்து முத்தமிழ் வல்ல புலவர்கள் ஓதுகின்ற உனது விசித்திரமான அல்லது அழகிய ஞானமயத் திருவடியைத் தந்தருளுக:

நாள்தோறும் உன்னை ஓதிப் போற்றுபவர்களின் உள்ளமே இருப்பிடமாக அதில் நடனம் புரியும் ஆறுமுகவனே!

அருவமும் (உருவ மின்மையும்) உருவம் உண்மையும் உள்ளவர், பாதி உருவம் பச்சை நிறத்தினர், மூன்று நீண்ட இலைகளை உடைய சூலத்தைக் கையில் ஏந்தியவர் பெற்ற குழந்தையே!

(ஆதிசேடனது) (பை) படங்கொண்ட தலைகள்— பெரிய ஆயிரந் தலைகளின் மேலே கிறிக்கிழிக்கும் (பத்திர பாதம்) நொச்சிப் பத்திரம்—நொச்சியிலை போன்ற கால்களை உடைய (அல்லது—பத்திரம்)—வாள் போன்ற நகக் கால்களை உடைய) நீலமயில் வீரனே!

பசிய இளங் கமுகமரத்தின பாளையின் மீது (மடலின்மீது) செய்—வயலில் உள்ள கயல்மீன் தாவுகின்ற வேளூர் என்னும் தலத்தில் விருப்புடன் வீற்றிருக்கும் (அரி, அயன, அரன், எனும்) மூவர் பெருமாளே! தேவர் பெருமாளே!

(ஞான பாதம் அருள்வாயே)

785

பாடகம் [ஒருவகைக் காலணி], சிலம்பு, இவையுடன் சிவந்த மணிகள் கோக்கப்பட்டது போல ஒன்று சேர்ந்து அசைகின்ற அழகிய கால்களை உடையவர்கள், [பாவை சித்திரம்] சித்திரப்பதுமை போல்பவர்கள், பட்டு உடை அணிந்துள்ள [நூல் இடையார்] நூல்போல நுண்ணியதான இடையை உடையவர்கள்

பார பொற்றனங் கோபு ரச்சிகர
மாமெ னப்படர்ந் தேம லிப்பரித
பாகு நற்கரும் போடு சர்க்கரையின் மொழிமாதர் ;

ஏடகக்குலஞ் சேரு மைக்குழலொ
டாட ளிக்குலம் பாட நற்றெருவி
லேகி புட்குலம் போல பற்பலசொ லிசைபாடி-

ஏறி யிச்சகம் பேசி யெத்தியிதம்
வாரு*முற்பணந் தாரு மிட்டமென
†ஏணி வைத்துவந் தேற விட்டிடுவர் செயலாமோ ;

சேட னுக்கசண் டாள ரக்கர் குல
மாள அட்டகுன் றேழ லைக்கடல்கள்
சேர வற்றநின் ருட யிற்கரமி ரறுதோள்மேல்-

‡சேணி லத்தர் பொன் பூவை விட்டிருடி
யோர்கள் கட்டியம் பாட எட்டரசர்
சேசெ யொத்த செந் தாமரைக்கிழவி புகழ்வேலா ;

---

* முற்பணந்தாரும் இட்டமென—முற்பணம் தாரும்; தாரும் இட்டமென—எனத் 'தாரும்' என்ற சொல் இடைநிலைத் தீபமாய் அமைந்தது.

† "ஏறிட்டிட் டேணியை வீழ்விடு முழுமாயர்" என்றார் 979-ஆம் பாடலில்.

ஏறவிட்டு ஏணியைப் பிடுங்கிச் செல்லுதல் ஒரு பழமொழி.

தங்களை நம்பினவர்களை மேல் நிலைக்கு ஏணி கொண்டு ஏற்றி, அந்த அருள் நிலையில் நின்று கீழிறங்கா வண்ணம் ஏணியை வாங்கிவிடுவார்—எடுத்து விடுவார் இறைவன். வேசையரோ தங்களை நம்பினவர்களை ஆபத்து நிலையில் ஏற்றி அந்த ஆபத்தில் நின்றும் அவர்கள் மீள முடியாத வகையில் ஏணியை எடுத்து விடுவார்கள். ஆதலின் வேசையர் ஏணிச் செய்கை இறைவன் ஏணிச் செய்கைக்கு நேர் மாறும் என்க

"எறிகதிரோன் மண்டலத்தூ டேற்றி வைத்து ஏணி வாங்கி அருள் கொடுத்திட் டடியவரை யாட்கொள்வான்"
—பெரியாழ்வார் 4-9-3.

"திருப்புகழை யோதீர் பரகதிக் கஃதேணி"
—திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம்-பக்கம் 4.

‡ வானோர் பொன்பூ பொழிதல்
"வானவர் பொற்பூ விட்டிடு சேசெ சேயென"
—திருப்புகழ் 645-பக்கம் 510.

பாரமான அழகிய கொங்கை கோபுர உச்சி என்று சொல்லும்படியாக விரிந்து [ஏமலிப்பர்] — ஏமரு தல் கொள்வர்—களிப்புறுவார்கள், இதம் — இன்பகரமான [பாகு] வெல்லம், நல்ல கரும்பு, சர்க்கரை போல இனிக்கும் பேச்சினை உடைய மாதர்கள்

[ஏடகக்குலம்] [ஏடகம்] மலர்க்கூட்டங்களைக் கொண்ட கரிய கூந்தலில் விளையாடும் வண்டின் கூட்டங்கள் பாட, அழகிய தெருக்களிற் சென்று, பறவை யினம்போலப் பலபல சொற்கள் அமைந்த ராகங்களைப் பாடி—

மிகுந்த [இச்சகம்] முகஸ்துதியான பேச்சுகளைப் பேசி, வஞ்சித்து, இன்ப மொழியாலே வாருங்கள், [முற்பணம் தாரும்] முன்னதாகப் பணத்தைக் கொடுங்கள், [தாரும் இட்டமென] — பணத்துடன் உங்கள் இஷ்டத்தையும் [அன்பையும்] கொடுங்கள் என [அல்லது முன்னதாகப் பணத்தைக் கொடுங்கள், அதுவே எங்கள் விருப்பம் என, அல்லது முன்னதாகப் பணத்தைக் கொடுங்கள், அப்பால் உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என—என்றெல்லாம் கூறி ஏணிவைத்து வந்து ஏறும்படி செய்து பின்னர் ஏணியை—[இறங்க ஒட்டாது] எடுத்துச் செல்பவர்களான [வேசையர்களின்] செயல்களை நம்புதல் ஆமோ—நம்புதல் கூடாது என்றபடி].

[சேடன்] ஆதிசேடன் [உக்க] — மெலிய, சண்டாளரான—கொடும்பாதகர்களான அரக்கர்கள் குலம் மாண்டொழிய, நீ [அட்ட] அழித்த [குன்று ஏழு] ஏழுகிரியும், அலைவீசும் ஏழுகடல்களும் ஒன்று சேர வற்ற- [நீர்மை குறையும்படி] உலர்ந்துபோக நின்று விளையாடின வேல் ஏந்திய திருக்கரங்களாம் [ஈராறு தோள்மேல்] பன்னிரண்டு தோளின்மேல்—

[சேண் நிலத்தர்] விண்ணுலகத்தவர் பொன் மலரைப் பொழிய [பூமாரி பெய்ய], [இருடியர்கள்] ரிஷிகள் [கட்டியம்] புகழ்ப் பாடல்கள் பாட, எட்டுத் திக்கிலும் உள்ள அரசர்கள் ஜேஜே என்று தாளமிட்டு முழங்க, [செந்தாமரைக் கிழவி] இலக்குமிதேவி புகழும் வேலனே!

*நாட கப்புனங் காவ லுற்றசுக
மோக னத்திமென் தோளி சித்ரவளி
நாய கிக்கிதம் பாடி நித்த†மணி புனைவோனே !
‡ஞான வெற்புகந் தாடு மத்தர் xவைத்தபல்
நாய கிக்குநன் பாக ரக்கணியும்
நாதர் மெச்சவந் தாடுoமுத்தமருள் பெருமாளே. (௩)

786. அருள் பெற

தான தான தத்த தந்த, தான தான தத்த தந்த
தான தான தத்த தந்த தனதான

மாலி னாலெ டுத்த கந்தல் **சோறி னால்வ ளர்த்த பொந்தி
மாறி யாடெ டுத்த சிந்தை யநியாய-
††மாயை யாலெ டுத்து மங்கி னேனை யாள னக்கி ரங்கி
‡‡வாரை யாயி னிப்பி றந்து இறவாமல் ;
xxவேலி னால்வி னைக்க ணங்கள் தூள தாள ரித்து உன்றன்
வீடு தாப ரித்த அன்பர் கணமூடே-

* அகம்—மலை—'பொற்பக விநயகன்" பொற்பு—அக—வில் நாயகன்—அழகிய மலையாகிய வில்லைக் கொண்ட நாயகன் —(திருவாலவாயுடை புரா-காப்பு 2.

† "அணி புனைதல்-அணி திருத்தல்' -பாடல் 96-ஈற்றடிகாண்க. முருகன் வள்ளியின் கூந்தலை வாரி அலங்கரித்து, நெற்றியைத் தடவி, இடையணி புனைந்து, காலிற் சிலம்பை ஒழுங்காக அணி புனைந்து, வள்ளியின் அங்கமெல்லாம் தொட்டு மகிழ்ந்தனரும்.

"கருமந் தழுநர் மனம்போல் இருள் குழல் மகுடபுனைந்து
தருமந் தழைநர் உளம்போல் ஒளிர்நுதல் தைவந்துமின்
பருமந் தழையப் பயிற்றிப் பதநூ புரந்திருத்தி
அருமந்த மெய்முழு துந்தொட என்னே அருந்தவமே"
—தணிகைப்புரா-களவு 186.

(பருமம்—18 வடங்கொண்ட இடையணி)

‡ஞானமலை என்றே ஒரு தலம் உளது பாடல் 391, 392 பார்க்க.

x வைத்தபல் நாயகி என்பது வைத்தீசுரன்கோயிலி லெழுந்தருளியிருக்கும் உமாதேவியாரின் பெயர்

o "முத்தமருள் பெருமாளே" — வைத்தீசுரன் கோயில் முருகவேளுக்கு "முத்துக் குமரர்" என்று பெயர் "குமரனை முத்துக்குமரனைப் போற்றுதும்"-மீனாட்சி பிள்ளைத்தமிழ் காப்பு 4.

** 'சோற்றுத் துருத்திச் சுமை சுமப்ப'-தாயுமான. பராபர-217

(தொடர்ச்சி பக்கம் 331)

நாடகப்புனம் (அகம்நாடு புனம்)—நீ மனத்தில் நாடி (விரும்பி)ச் சென்ற தினைப் புனத்தில் (அல்லது நாடு— நீ தேடிச் சென்ற அகம் — புனம் — மலைப்புனம் — மலை வள்ளிமலையில் (தினைப் புனத்தில்) காவல் இருந்த சுக மோகனத்தி (முருகனை மயக்கினவள்), மெல்லிய தோளை உடையவள், ஆகிய அழகிய வள்ளி நாயகிக்கு இன்பகரமான பாடல்களைப் பாடி நாள்தோறும் அணி ஆபரணங்கள் புனைபவனே (அணிவித்து அழகு பார்ப்பவனே)!

ஞானம் என்னும் மலையில் மகிழ்ந்து விளையாடுபவர், 'தையல் நாயகி' என்னும் திருநாமமுடைய தேவியை நல்ல தமது பாகத்திற் கொண்டவர், (அக்கு) ருத்ராக்ஷமாலை அல்லது எலும்பு மாலையை அணிந்துள்ள தலைவராம் சிவபிரான் மெச்ச வந்து விளையாடும் பெருமாளே! முத்தம் அருள்—முத்தம் அவருக்குத் தந்தருளும் பெருமாளே! அல்லது உத்தமர் உள் பெருமாளே — உத்தமர்களின் உள்ளத்தே விளங்கும் பெருமாளே!

(ஏணி ஏற விட்டிடுவர் செயலாமோ)

786.

ஆசையே ஒரு உருவாகி அமைந்த கந்தல் (கந்தை) — சோறுகொண்டு வளர்க்கப்படும் (பொந்தி) சரீரம், மாறி மாறி எண்ணங்கொள்ளும் உள்ளம், இவை தமை அநியாயமான

மாயையால் (பிரபஞ்ச மயக்கத்தால்) எடுத்தவனுகி வாட்டம் உறுகின்றேன், ஐயனே! எனக்கு இரங்கி வந்தருளுக ஐயனே! இனிப் பிறப்பதும் இறப்பதும் இல்லாமல்—(உனது திருக்கை)

வேலினுல் (எனது) வினைக் கூட்டங்களைத் தூளாம்படி எரிசெய்து (உனது) மோக்ஷ வீட்டைத் தந்தருளுக; பரித்த) பரிந்த-அன்பு நிறைந்த அடியார் கூட்டத்திலே—

†† "மாயா ப்ரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்தே
யோயா சனனம் ஒழித்திலேன் பூரணமே"—பட்டி. பூரண 90.

‡‡ வாரையா—வாரும் ஐயா-என்பதன் மரூஉ.

xx வேல்கான் வினைகளைத் தொலைத்தும் :
"வினையோட விடுங் கதிர்வேல்"—கந்தரநுபூதி 40.
"வினை எறியும் வேல்"—திருப்புகழ் 1200.

மேவி யானு னைப்போல் சிந்தை யாக வேக ளித்து கந்த
*வேளை யாமெ னப்†ப ரிந்து அருள்வாயே;

காலி னைலெ னப்ப ரந்த சூரர் மாள வெற்றி கொண்ட
‡கால xபா நு சத்தி யங்கை முருகோனே-

oகாம பாண மட்ட நந்த கோடி மாத ரைப்பு ணர்ந்த
**காளை யேறு கர்த்த னெந்தை யருள்பாலா;

சேலை நேர்வி ழிக்கு றம்பெ ணைசை தோளு றப்பு ணர்ந்து
சீரை யோது பத்த ரன்பி லுறைவோனே-

தேவர் மாதர் சித்தர் தொண்டர் ஏக ††வேளூ ருக்கு கந்த
சேவல் ‡‡கேது சுற்று கந்த பெருமாளே. (௪)

---

* "ஞான சத்தி தரனை அகத்துற நினைப்போர் அவனே ஆவர்"
—தணிகைப் புராணம்-குமாரே-45.

† பரிந்து—பரிய; அன்புகூர்ந்திருக்க.

‡ வேலுக்கு — காலன் உவமை — காலன் — கூற்றம் —
சீற்றத்துக்கும், வலிமைக்கும் பேர் பெற்றவன்.

"கூற்றத் தன்ன மாற்றரு முன்பு"—புறநானூறு 362,
"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்"—ஷை 56
"கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பு"—திருமுருகா-81.

x வேலின் ஒளிக்கு —சூரிய ஒளி-உவமை—
"திவாகரர் வடிவை உருக்கி வடித்த
திருக்கை வேல்"—பூத வேதாள வகுப்பு.
"சுடர்ப்பரிதி யொளிப்ப ஒளிர் ஒளிப்பிரபை
வீசும்—குகன் வேலே"—வேல் வகுப்பு.

o காளை—திருமால்—பல மாதரைப் புணர்ந்தது—

"கண்ணபிரான் நரகாசுர வதஞ்செய்து அவனாற் கொண்டு போகப்பட்ட மந்தர கிரியினுடைய சிகரமான ரத்ன கிரியிற் பல திசைகளிலிருந்தும் கொணர்ந்து சிறை வைக்கப் பட்டிருந்த தேவ சித்த கந்தர்வாதி கன்னிகைகள் பதினாறாயிரம் பேரையும் தான் மணந்து கொண்டு, அவர்களும் தானுமாக ஒரு ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்கும்போது ஸ்ரீ த்வாரகையிற் கண்டாருண்டு. பதினாறாயிரத் தொரு நூற்றுவர் என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திற் கூறப்படுகின்றது"

"மாமணி வண்ணனை மருவுமிடம் நாடுதிரேல்—பல்லாயிரம் பெருந்தேவி மாரொடு பௌவம் எறிதுவரை, எல்லாருஞ் சூழச் சிங்காசனத்தே யிருந்தானைக் கண்டாருளர்" — பெரியாழ்வார் திருமொழி 4-1-6. திவ்யார்த்த தீபிகை (உரை) பக்கம் 349·50.

(தொடர்ச்சி பக்கம் 333)

யானும் மேவி — நானும் கலந்து — உன்னைப் போல் (பரிசுத்த) உள்ளம் பெறவே, மகிழ்ந்து மகிழ்ச்சிகொள்ளும் வேளே (கந்தவேளே) (ஆம்) நமக்கு உற்ற துணையாகும் என்று (அல்லது வேளே யாம் என்னும் சிவோக நிலையை அடைந்து) அன்பு கூர்ந்திருக்க அருள் புரிவாயாக.

காற்றினாற் பரந்ததுபோலப் பரவியிருந்த சூரர்கள் இறக்கும்படி, ஜெயம் பெற்ற யமன் போன்ற வலிமையையும், (பாநு) சூரியன் போன்ற பேரொளியையும் கொண்ட சத்திவேலை அங்கையிற் கொண்ட முருகனே!

மன்மதனுடைய பாணம் (அட்டதனால்) வருத்தினதால் (கணக்கிலாத) பலகோடி மாதர்களைப் புணர்ந்த காளையாகிய திருமாலாம் (விடை) இடபத்தின்மேல் ஏறின தலைவன், எந்தை சிவபிரான் அருளின குழந்தையே!

சேல்மீனுக்கு ஒப்பான கண்ணை உடைய குறப்பெண்ணை ஆசையுடன் அவள் தோள் பொருந்தச் சேர்ந்து உறைவோனே! (உனது) சீரை - புகழை ஓதும் பக்தர்களின் அன்பில் வீற்றிருப்பவனே!

தேவர்களும், மாதர்களும், சித்தர்களும், தொண்டர்களும் சென்று வணங்க (வேளூர்) புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுரன்கோயில் எனனும் தலத்தை மகிழ்ந்த பெருமாளே! சேவற்கொடி சுற்றியிருக்க மகிழும் பெருமாளே! (வேளே யாமெனப் பரிந்து அருள்வாயே)

** காளை ஏறு கர்த்தன் எந்தை:

திரிபுர சம்மாரத்துக்குச் சிவபிரான் எழுந்தருளினபோது. இறைவன் வெற்றி அடையப் போவது நம்மால் என்று தேவர்கள் நினைத்தனர். இதை உணர்ந்த இறைவன் தேரைச் சற்று அழுத்த தேர் ஒடிந்து யாவரும் நிலை கலங்கினர். அப்போது திருமால் ரிஷபமாகி இறைவனைத் தாங்கினர்—என்பது வரலாறு.

"தேர் ஒடிந்திட அக்காலை...இடபமாகி
மாதவன் தாங்கினனால்" திருவதிகைப் புரா திரிபுர தகன 40.

"தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ"
—திருவாசகம்—சாழல் 15

†† வேளூருக்கு உகந்த எனப்பிரிக்க

‡‡ கேது—கொடி. சேவற்கோடியில் முருகனுக்கு மகிழ்ச்சி:
'கோழி யோங்கிய கொடி வாழிய பெரிதென் றேத்தி'
'வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ'
—திருமுருகா-38, 219.

787. யோகப்பேறு

தானா தானன தாத்த தந்தன
தானா தானன தாத்த தந்தன
தானா தானன தாத்த தந்தன தனதானா

*மூலா தாரமொ டேற்றி யங்கியை
ஆறா தாரமொ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்று நன்சுழி முனையூடே

மூதா தார†ம ருப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்;

மாலா டுனொடு சேர்த்தி தம்பெற
நாலு வேத‡ம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னபுரி யேற்றி மந்திர தவிசூடே

மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூன்றொளி காட்டி சந்திர
வாகார் தேனமு தூட்டி யேன்றனை யுடனாள்வாய்;

சூலாள் மாதுமை தார்த்த சம்பவி
மாதா ராபகல் xகாத்த மைந்தனை
சூடோ டீர்வினை வாட்டி oமைந்தரெ னெமையாளுந்—

---

* இப் பாடலின் கருத்து — பாடல் 190, 439, 647 எண்ணுள்ள பாடல்களால் விளக்கமுறும்.

† மருப்பில்—மருப்பில்; ‡ ம சாத்திரம்—மகா சாஸ்திரம்.

x காத் தமைந் தனை—காத்து அமைந்த அன்னை.

o மைந்தர் என எமையாளும் எனப்பிரிக்க.

787.

மூலாதார கமலத்தில் (அங்கியை ஏற்றி) அக்கினியை எழுப்பி, அந்த அக்கினியை ஆறு ஆதாரங்களிலும் செல்லும்படி ஒட்டிச் செலுத்தி, ஆதார யந்திரங்களின் மூலமாக (அல்லது ஆதார யந்திரங்களின் வழியே (மூலா வாயுவை) பிரதானமான பிராணவாயுவை (ஏற்று நன்சுழி முனையூடே—நன்சுழி முனையூடே ஏற்று) நல்ல சுழுமுனைவழியே (கணக்காக) ஓடச் செய்து—

(மூதாதார) (சம்மார கிரமத்தில்) மூத்ததான—முதல் ஆதாரமான லலாடஸ்தானத்து 'ஆஞ்ஞை' ஆதாரத்தின் — பிறைச்சந்திர வடிவின் (மருப்பில்) கோட்டில் (அந்தரம்) புருவமத்தியிடமாம் ஆகாச ஸ்தானத்தில் — நாதகீதமது — நாத கீதங்கள் — (சங்கத் தொனிகள்) (ஆர்த்திடும்) ஒளிசெயும் மேலான இடத்தில்- பிரமரந்திர நிலையில்—ஒளித்து நிற்கும் (ஆத்துமந்தனை) ஜீவாத்மாவைத் தவறிப்போகாத வழியில்—

ஆசை ஊடாடும் இந்த உடலிலே ஈடுபட வைத்து இன்பம் பெருக, பலவகைய வேதங்களும் மகா சாஸ்திரங்களும் சொல்லிப் புகழும் — தழைத்த ஞானதனத்தில்-ஞான நிலையில் (துவாத சாந்தவெளியில்) ஏற்றி — (அந்த நிலையில்) (ஐந்தெழுத்தாம்) மந்திர பீடத்திடையே—

மாதா நாதனும் — ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரர் வீற்றிருந்தருளும் வீடே — திருச்சபையில், அக்கினி, சூரியன், சந்திரன்—என்னும் முச்சுடர்களின் ஒளியைத் தரிசிப்பித்து அங்கே சந்திரவாகார் தேனமுது— மதிக்கலா தேனமுதம் பொங்கி எழ, அதை ஊட்டுவித்து என்னை உடனிருந்து ஆண்டருளுக;

சூலத்தை ஏந்தினவள், *மாது உமை, தூர்த்த அருள் பொழியும் சாம்பவி சம்புவின் மனைவி—சத்தி, மாதா—தாய், இரவும் பகலும் காத்து அமைந்த அன்னை, சூட்டோடு — சுடுதலோடு நம்மை ஈர்த்து இழுத்துச் செல்கின்ற வினைகளை வாட்டி-தொலைத்து மைந்தர் என - குழந்தையைக் காப்பதுபோல் நம்மை காத்து ஆளுகின்ற

* மாது-'மைதூர்த்த'—'மை நிரம்பிய' எனவும் கொள்வர்.

தூயாள் *மூவரை நாட்டு மெந்தையர்
வேளூர் வாழ்†வினை தீர்த்த சங்கரர்
‡தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவ ளருள்பாலா;
வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே-
xவேதா நால்தலை சிக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே. (ரு)

788. வேசையர் உறவு அற

தான தானதன தானதன தானதன
தான தானதன தானதன தானதன
தான தானதன தானதன தானதன தனதான

மேக வார்குழல தாடதன பாரமிசை
யார மாடகுழை யாடவிழி யாடபொறி
மேனி வாசனைகள் வீசஅல்குல் மோதிபரி மளமேற-
மீனு லாடையிடை யாடமயில் போலநடை
oயோல மோலமென பாதமணி நூபுரமு
மேல்வில் வீசபணி **கீரகுயில் போலகுரல் முழவோசை;

---

* மூவரை நாட்டும் எந்தையர்:
"சங்கேந்து மலர்க் குடங்கைப் புத்தேளும், மறைக்கோவும், தழல்கால் சூலம், அங்கேந்தும் அம்மானும் தத்தமது தொழில்தலை நின்றூற்றச் செய்து . குனித்தருளும் பெருவாழ்வு'
—காஞ்சிப்புராணம் கடவுள் வாழ்த்து.
† "வினையாயின தீர்த்தருளே புரியும் விகிர்தன்"
—சம்பந்தர் 1-70-7
"தீவினைக்கோர் மருந்தாவான்" ஷை—2-43 11
‡ உருவமேனி அரனுடன் உமை:—"கருணை திருவுருவாகிப் பேரணங்கி னுடனுடும்" —கோயிற் புராணம் பாயிரம்.
x முருகவேள் பிரமனைக் குட்டியது: பாடல் 608 பக்கம் 40
—கீழ்க்குறிப்பு
o தனபாரம் ஆட, இடை ஆட, ஒலம் ஒலம் என்று பாதம் அணி நூபரம் (ஒலித்தல்)—கொங்கையின் பாரம் தாங்காது இடை ஒடியுமே என்று பயந்து காற் சிலம்பு புலம்புகின்ற தென்பதாம்—இக் கருத்தை— (தொடர்ச்சி பக்கம் 337)

பரிசுத்த தேவதை; பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்னும் மூவரையும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் பதவியில் தாபித்த எம்பெருமான், புள்ளிருக்கு வேளூரில் வாழ்கின்ற வினைதீர்த்த சங்கரர் வைத்திய நாதராய் — பவவினை தீர்க்கும் சங்கரர் — சிவபிரான், சாரூபம தோய்ந்தவர்—உருவத் திருமேனி கொண்டவர் — ஆகிய பெருமானொடு ஏற்று — பொருந்தி இருப்பவளாம் பார்வதி அருளிய குழந்தையே!

வேலனே! ஏழு கடலையும் வாட்டி, வஞ்சக மூடர்களாகிய சூரர்களையும் வாட்டி, யமபுரிக்கு அவர்களை அனுப்பின கோபத்தைக் கொண்ட மயில்வாகனனே! (அல்லது, குதிரையாக மயிலைக்கொண்ட செல்வனே!)

பிரமனுடைய நான்கு தலைகளும் சீ (சீழ்) கொள்ளும்படி (குட்டி) ஆடம்பரம் செய்த மந்திர வேலனே! திருமாலின் மகள்—வள்ளிமீது கருணை காட்டிய பெருமாளே!

(என்றனை உடனுள்வாய்)

886.

மேகம்போலக் கறுத்து நீண்ட கூந்தலானது ஆட கொங்கைப் பாரங்களின் மேலே முத்துமாலை ஆட, காதில், குழைகள் ஆட, கண்கள் ஆட, தேமல் அல்லது பொலிவு பரந்துள்ள உடல் நறுமணங்களை வீச, அல்குலின் மேற்பட்டு நல்ல மணம் அதிகரிக்க—

மீனுல் — மின் நூல் — ஒளிவீசும் நூலாடையானது இடையில் ஆட, மயில்போல நடை நடக்க, பாதமணி நூபுரம் ஒலம் ஒலம் என, ஒலம் ஒலம் என்று முறையிடும் ஒலியுடன் பாதத்தில் அணிந்துள்ள சிலம்பு சப்திக்க (அல்லது பாதத்தில் ரத்னச் சிலம்பு சப்திக்க) மேலே வில்—ஒளியை, வீசபணி—பணிவீச—ஆபரணங்கள் வீச, கீரம் பால் போலவும் குயில் போலவும் உள்ள குரலுடன் முழவோசை—முரசொலிபோல

"மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு" எனவரும்—நளவெண்பாவிற்
காண்க (சுயம்வர 33) ** கீரம்.. பால்.

ஆக வேயவைகள் கூடிடுவர் வீதிவரு
வோரை வாருமென வேசரச மோடுருகி
ஆசை போலமனை யேகொடணை வார்கள்குவ டதிபார-
*ஆணி மாமுலையின் மூழ்கிசுக வாரிகொடு
வேர்வை பாயஅணை யூடமளி யாடியிட
ரான சூலைபல நோய்கள்கட லாடியுட லுழல்வேனோ;
நாக லோகர்மதி லோகர்பக லோகர்விதி
நாடு ளோர்களம ரோர்கள்†கண நாதர்‡விடை
நாதர் வேதியர்கள் ஆதிxசர சோதிதிகழ் முநிவோர்கள்-
oநாத ரேநரர்ம ஞரணர்பு ராணவகை
வேத கீதவொலி பூரையிது பூரையென
நாச மாயசுரர் மேவுகிரி தூளிபட விடும்வேலா;
தோகை மாதுகுற மாதமுத மாதுவினல்
**தோழி மாதுவளி நாயகிமி ஞளேசுக
சோக மோடிறுகி மார்முலைவி டாயலணை புணர்வோனே-

* ஆணி—ஆதாரம். "ஆணியாய் உலகுக்கு எல்லாம் அறம் பொருள் சிறப்பும் அண்ணல்" கம்பராமா கடல் தாவு-26.

† கணநாதர்—பதினென் கணங்களுக்கு நாதர்—

பதினென் கணங்கள்: அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முநிவர், உரகர், ஆகாய வாசிகள், போக பூமியர்.

‡ விடை நாதர்—நந்தி நாதர்—'நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின் நந்திகள் நால்வர்' (சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்) திருமந்திரம் 67. கயிலையில் திருக்கோயிலைக் காக்கும் நந்திகளும் உண்டு 'நந்திகள் உய்ப்ப'

—கந்தபுரா 1-7-18 10 40; 17-4; IV-18-3.

x சரசோதி—பாடல் 590-பக்கம் 354 கீழ்க்குறிப்பு.

o நாதர்—எண்மர்

"நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுநி,
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே.—திருமந்திரம் 67.

நவநாதர்கள்—பாடல் 718-அடி 2-பக்கம் 155.

** தோழிமாது—துணைமாது—

"இன்றனைத் துணையாப் பெற்றேன் எம்பிரான் அருளும் பெற்றேன்" (தேவசேனை வள்ளியை நோக்கிக் கூறுவது)

(—கந்தபுரா 6-24-254.)

ஒலி பெருகவே, அவைகள் — சபைகள் கூட்டங் கூட்டமாகக் கூடுவார்கள், அங்ஙனம் கூடி வீதியில் வரும் ஆடவர்களை வாருங்கள் என்று நயமுடன் இனிய வார்த்தைகள் சொல்லி, மன உருக்கத்துடன், ஆசை பூண்டவர்கள போலத் தங்களுடைய வீட்டிற்கு கொண்டுபோய்ச் சேர்வார்கள்; அங்கே குவடு மலைபோன்றதும் அதிகபார முள்ளதுமான,

ஆணி—காமத்துக்கு ஆதாரமாயுள்ள, மா—அழகுள்ள கொங்கையில் முழுகிச் சுககடலை அநுபவித்து வேர்வை பாயப் படுக்கையில் அமளி யாடி — கோலாகலத்துடன் இன்பம் அநுபவிக்க, அதனால் பின்னர் வருத்தம் வருவதான சூலைநோய் முதலான பல நோய்களாம் கடலில் ஆடி — வேதனைப்பட்டு இத் தேகத்துடன் அலைச்சல் உறுவேனோ;

நாகலோகத்திலுள்ளவர்கள், சந்திரமண்டலத்தில் உள்ளவர்கள், பகல் லோகர் — சூரியமண்டலத்தில் உள்ளவர்கள் விதி நாடுளோர்கள் — பிரமலோகத்தில் உள்ளவர்கள், தேவர்கள், கணநாதர்கள், நந்திகண நாதர்கள், அந்தணர்கள், முதன்மையான யோகமார்க்கத்தில் ஏற்படும் ஜோதி விளங்கும் முனிவர்கள்—

நாதரே-நவநாத சித்தர்கள், நரர்கள்-மனிதர்கள், மன்—நாரணர் நிலைபெற்ற நாராயண மூர்த்திகள்—புராணவகை, பதினெண்புராணங்கள், வேத கீத ஒலிகள் இவையெலாம், அசுரர்களின் முடிவு காலம், இதுவே — முடிவு காலம் என்று சொல்ல, நாசமாயசுரர்—அசுரர் நாசமாக, அவர்களிருந்த கிரி கிரவுஞ்சம் — எழுகிரி முதலானவை பொடிபடச் செலுத்திய வேலனே!

மயிலனைய மாது, குறமாது, அமுதமாதின், அமுதவல்லி எனப் பெயர் பூண்டிருந்த தேவசேனையின் நல்ல தோழிமாது, துணையா யமைந்தமாது ஆகிய வள்ளி நாயகி என்கின்ற மின்னை மின்னொளி கொண்டவளைச் சுகத்துடனும், சோகம் - விரக தாபத்துடனும் இறுகி - அழுந்தக்கட்டி மார்பில் அவளது *கொங்கையை விடாது அணைத்துச் சேர்ந்தவனே!

* "வள்ளியின் முலைவிடாமல் அணைதல்"
—பாடல் 644-மக்கம் 508 கீழ்க்குறிப்பு.

தோளி ராறுமுக மாறுமயில் வேலழகு
மீதெய் வானவடி வாதொழு*தெ ஞ†வயனர்
சூழு ‡காவிரியும் xவேளூர்முரு காவமரர் பெருமாளே. (௬)

திருக்கடவூர்.

[மாயூரத்துக்குத் தென்கிழக்கு 13-மைல். ரெயில்வே ஸ்டேஷன். சீகாழி ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கு 14-மைல். தரங்கம்பாடிக்குப் போகும் வழி; மூவர் தேவாரமும் பெற்றது. அட்ட வீரத் தலங்களுள் யமனை உதைத்தருளிய தலம்.]

789. சாம்போது அருள் பெற

தாத்த தனத்தன தானன தானன
தாத்த தனத்தன தானன தானன
தாத்த தனத்தன தானன தானன தனதான

oஎட்டின் விதிப்படி யேகொடு மாபுர
வீட்டி லடைத்திசை வேகசை **மூணதி
லேற்றி யடித்திட வேகட லோடம தெனவேகி-
ஏற்கு மெனப்பொரு ளாசைபெ ணாசைகொ
ளாத்து வெனத்திரி யாபரி யாதவ
மேற்றி யிருப்பிட மேயறி யாமலு முடல்பேணிப்;
பூட்டு சரப்பளி யே††மத னமென
ஆட்டி யசைத்திய லேதிரி நாளையில்
‡‡பூத்த மலக்குகை யோபொதி சோறென கழுகாகம்-

---

* எஞ—எண்ணி † வயனர்—சடாயு சம்பாதியென்னும் பறவை வடிவினர். வயானம்—பறவை.

‡ கா விரியும்—சோலை விரிகின்ற.

x புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுரன் கோயில்) சம்பாதி—சடாயு பூசித்த தலம்

"தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"
—சம்பந்தர் 2-43-1.

o எட்டின் விதிப்படி—பிறத்தல் நாள், இறத்தல் நாள் பிரமனது சீட்டுப்படி—பாடல் 760-ம் பார்க்க.

** மூணு—பாடல் 190-1, 2, அடிகளைப் பார்க்க.

†† 'மதன சரக்கென' என்றார் 285-ஆம் பாடலில்.

‡‡ 'பூத்த மலத்ரய பூரியை'—(291-ஆம் பாடல்)

தோள்கள் பன்னிரண்டு, திருமுகங்கள் ஆறு, மயில், வேல், இவைகள் அழகுக்கு மேலான ஏய்வான,— உவமைப்பொருளா யிருக்கின்ற -- மேம்பட்டுப் பொருந்தியிள்ள வடிவா — அழகு உருவம் உள்ளவனே! தொழுது வணங்கி, ஏறு எண்ணி — தியானித்து வயனர் — ஜடாயு சம்பாதி என்னும் பறவை வடிவினர் சூழ்ந்து பரவும் வேளூர் — புள்ளிருக்கு வேளூரில் —வைத்தீசுரன் கோயிலில், கா—சோலைகள் - விரியும்— விரிந்து பரந்துள்ள வேளூரில் வீற்றிருக்கும் முருகா! தேவர்கள் பெருமாளே!

(உடல் உழல்வேனே)

திருக்கடவூர்.

789

பிரமனது (ஏடு) சீட்டிற் கண்ட விதியின் பிரகாரம் (இந்த உயிரைக்) கொண்டுபோய் நல்ல (புரம்) உடலாகிய ஒரு வீட்டிலே சேர்த்துப், பொருந்தவே (கசை மூனு) (அடிக்கும்) சவுக்குப்போன்ற மூன்று (சுழுமுனை, இடைகலை, பிங்கலை)-என்னும் நாடிகளை அதிற்பொருத்தி, (அடித்திட) அடித்துச் செலுத்தக், கடலில் (ஓடம்) படகு ஓடுவதுபோலப் போந்து (காலம் கழித்து)

நல்லதென்று பொருளாசை, பெண்ணாசை (கொளா கொண்டு, (து) - தூ - என) 'தூ' என்று (பலர் இகழத்) திரிந்தும் வருந்தியும், தவம் சேர்ந்துள்ள இருப்பிடம் இன்னதென்றே அழியாமலும் இவ் வுடலை விரும்பிப் பாதுகாத்து—

(பூட்டப்பட்ட) சரப்பளியே (சரப்பணியே) வயிரமழுத்திய கழுத்தணி விளங்க - மதனுமென - மதனனுமென - மன்மதன் இவன் என்னும்படி ஆட்டியும், அசைத்தும், ஒழுங்காகத் திரிகின்ற காலத்தில் - நிரம்பின மலஞ்சேர்ந்த குகையோ இது, பொதிசோறோ இது என்று கழுகும் காகமும்—

போற்றி நமக்கிரை யாமென வேகொள
நாட்டி லொடுக்கென வேவிழு போதினில்
*பூட்டு பணிப்பத மாமயி லாவருள் புரிவாயே ;

†வீட்டி லடைத்தெரி யேயிடு பாதக
னோட்டை விடுத்திட வேபல சூதினில்
வீழ்த்த விதிப்படி யேகுரு காவலர் வனமேபோய்-

‡வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது
பார்த்து முடித்திட வேயொரு பாரத
மேறபுனை வித்தம காவிர மாயவன் மருகோனே ;

கோட்டை யழித்தசு ரார்பதி கோவென
மூட்டி யெரித்தப ராபர சேகர
கோத்த மணிக்கதி ரேநிக ராகிய வடிவேலா-

*கூற்று மரித்திட வேயுதை பார்வதி
யார்க்கு மினித்தபெ ணாகிய மான்மகள்
கோட்டு முலைக்கதி பாகட வூருறை பெருமாளே. (க)

---

* 'நாகபந்த மயூரா'—(10-ஆம் பாடல்)

† பாரத வரலாறு :

தருமனாகிய ஐவரையும் கொல்லத் துரியோதனன் ஒரு அரக்கு மாளிகையைக் கட்டி அதில் அவர்களை இருக்கச் செய்தான்; நடு நிசியில் நெருப்பு வைத்து அவ் வீட்டைக் கொளுத்த ஏற்பாடு செய்திருந்தான்; இந்தச் சூதின் ரகசியத்தை அந்த மாளிகையைக் கட்டினவன் பீமனுக்குத் தெரிவித்திருந்தான். பீமன் அந்த மாளிகைக்குத் தானே நெருப்பு வைத்துவிட்டு தனது சகோதரர்களையும் தாயையும் எடுத்துக்கொண்டு ஒரு சுரங்கத்தின் வழியே மாளிகையினின்றும் வெளியேறினான்

‡ பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்தபோது மாறு வேடத்துடனும் மாறு பெயர்களுடனும் விராட ராஜனிடம் காலம் கழித்து வந்தார்கள் தருமர்—கங்காபட்டர் என்னும் பெயருடன் சந்நியாசி கோலத்துடனும், வீமன்—வல்லன் என்னும் பெயருடன் சுயம் பாகி வேலையிலும், அருச்சுனன் நபுஞ்சகனாகி ஸ்திரீ வேஷத்துடன் பிரகந்நளை என்னும் பெயருடனும், நகுலன் — தந்திரிபாலன் என்னும் பெயருடன் குதிர வைத்தியனாகவும் சாரதியாகவும், சகாதேவன்—தாமக்கிரந்தன் என்னும் பெயருடன்

(தொடர்ச்சி பக்கம் 343)

விரும்பி நமக்கு (இவ்வுடல்) உணவாம் என்று கொள்ளும்படிப் பூமியில் (அடங்கியாயிற்று) என்று இவ்வுடல் விழுகின்ற-இறந்துபோம் அச் சமயத்தில்-தன் காலில் அழுத்திக் கட்டிவைத்துள்ள பாம்பைக் காலிற்கொண்ட அழகிய மயிலனே! அருள்புரிவாயாக.

(வீட்டில்) (அரக்கு) மாளிகையில் தருமனுதிய பஞ்சபாண்டவரை இருக்கச் செய்து எரியிட்ட பாதகனும் துரியோதனனுடைய நாட்டை விட்டுப் போகும்படி பல சூதாட்டங்களில் ஏற்பட்ட விதிப்ரகாரம் குருகுலத்து அரசராம் (ஐவரும்) காட்டுக்குப்போய்—

வேறு வேடம்பூண்டு அஞ்ஞாதவாசம் (மறைவு வாசம்) செய்திருந்த நாளின் முடிவு பார்த்து, அந்த நாள் முடிந்திடவே, அல்லது நூற்றுவரை முடித்திடவே (அழிவு செய்யவே), ஒரு பாரத யுத்தத்தை மேற் புனேவித்த-மேலே நடக்கும்படிச் செய்த மகா வீர மாயவராம் திருமாலின் மருகனே!

சூரனது பட்டணமாம் மகேந்திரபுரியின் கோட்டைகளே அழித்து, அசுரர் தலைவனை சூரன் 'கோ' என்று அலற, அவனது நகரத்தை நெருப்பு மூட்டி எரித்த பராபரம் பொருளே! (சேகரனே) அழகனே! கோக்கப்பட்ட ரத்ன ஒளிக்கு நிகரான கூரிய வேலனே!

கூற்றுவன் இறந்து போம்படி உதைத்த பார்வதி யம்மையாருக்கு இனிமைதரும் பெண்ணுகிய மான் மகள் (மானின் மகள் — அல்லது மால்மகள் — மாலின்மகள்) வள்ளியின் மலையன்ன கொங்கைக்கு உரிய தலைவனே! திருக்கடவூரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(அருள்புரிவாயே)

(342 ஆம் பக்கம் தொடர்ச்சி)

மாடு மேய்ப்பவனுகவும் திரோபதை—மாலினி என்னும் பேருடன் விராடராஜன் மனைவியி—த்திலும் — அமர்ந்து காலம் கழித்த வரலாறு இங்கு குறிசகப்பட்டுளது.

† கூற்றைப் பார்வதி உதைத்தது:

—பாடல் 751-பக்கம் 240, பாடல் 399-பக்கம் 510.

790. அருள் பெற

தானதன தான தத்த தானதன தான தத்த
தானதன தான தத்த தனதான

*சூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாதடக்கி
தூயவொளி காண முத்தி விதமாகச்—

சூழிருள் பாவ கத்தை வீழஅழ லூடெ ரித்து
சோதிமணி பீட மிட்ட மடமேவி;

மேலைவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவி†யரு ணாச லத்தி னுடன்மூழ்கி—

‡வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க அருள்தாராய்;

ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பு
மூடுருவ வேல்தொ டுத்த மயில்வீரா—

ஓதுகுற மான்வ னத்தில் மேவியவள் §கால்பி டித்து
ளோமெனுப தேச வித்தொ டணைவோனே;

---

* சூலமென ஓடுதல— 'சூலம்பெற ஓடிய வாயுவை"
—பாடல் 190.

† "அருணசலம்—சிவ ஒளி ஆருதாரங்களுள்—அருணசலம்—மணிபூரகம் மணிபூரகம்; அப்பு ஸ்தானம் (தொகுதி 3) — பக்கம் 549-க்கு அடுத்த அநுபந்தம் பார்க்க, அப்பு ஸ்தானமாதலின் அருணசலத்தின் உடன் மூழ்கி" என்றார்.

இதனையே 'நூறு பத்தினுடன் எட்டு இதழாகி . அருண விற்பதி' என்றார் 439-ஆம் பாடலில்.

குரு கமலத்தில் — அருண விற்பதியில் — இறைவனை அடையலாம்.

"நாடி யாராயிரம் வந்த தாமரை மீதிலமர்ந்த
நாயகர் பாதம் இரண்டும் அடைவேனே"
—என்றார் 1263-ஆம் பாடலில்.

‡ வேலு மயில் ..தரித்து—
"இயல் வேலுடன் மா அருள்வாயே"—பாடல் 563
"வேல் மயில் கொடுத்து" (பாடல் 413)
"உனது மயில்மேல் இருத்தி ஒளிர் இயல் வேல் அனித்து"
—(பாடல் 1218)

(தொடர்ச்சி 345 பக்கம் பார்க்க)

790

சூலம்போல மூன்று கிளைகளாக — ஓடுகின்ற பாம்பு போன்ற பிராணவாயுவை வெளியேறாது அடக்கிப், பரிசுத்தமான பரவெளி ஒளியைக் காணவும் முத்தி நிலை கைகூடவும்—

சூழ்ந்துள்ள ஆணவ இருளாம் உருவம் அழிபட யோக நெருப்பில் அதை எரித்து, ஜோதி ரத்னபீடம் அமைந்துள்ள (மடம் மேவி) நிர்மல வீட்டை அடைந்து –

(மேலை வெளி) அந்த மேலைப் பெருவெளியிலே (பர ஆகாச வெளியில்) ஆயிரத்தெட்டு இதழோடும் கூடியதான மேலான குருகமலத்தில் சேர்ந்து (அருணசலத்தின் உடன் முழ்கி) துவாதசாந்தத் தானத்தில் சிவஞான ஒளியாம் இன்பப் புனலில் முழுகி —

வேல் மயில் வாகனம் இவைதம் தரிசன ஒளியை அந்த நிலையிலே கிடைக்கப்பெற்று, முத்தி நிலையைச் சிறப்புடன் பெறும் அருளினைத் தந்தருளுக.

ஓலமிட்டு (இரக்க ஒலியிட்டு) அசுரரும் கடல் எட்டும் (எண் திசைக் கடலும்) சக்ரவாளகிரியும் அழிபடவும், கிரௌஞ்சகிரி தொளை பட ஊடுருவும்படியாகவும் வேலாயுதத்தைச் செலுத்தின மயில் வீரனே!

சொல்லப்பட்ட (குறமான்) வள்ளியின் (வனத்தில்) தினைப் புனக்காட்டிற் சென்று அவளுடைய காலைவருடி (அன்புகாட்டி) (அவளது) உள்ளத்தே பதிய 'ஓம்' என்கின்ற பிரணவ உபதேசமாகிய (வித்தொடு) மூலப்பொருளோடு (அவள் உள்ளத்தே பதிய ஓம் எனும் பிரணவ உபதேசம் செய்து) அணைந்தவனே!

(344-ஆம் பக்கம் தொடர்ச்சி)

x கால் பிடித்து—என்பதற்கு (வள்ளியின்) பிராணவாயுவை அடக்கி எனவும் பொருள் காண்கின்றனர் (உபதேச வித்து—'ஓம் என்னும் பிரணவப்பொருள்—பாடம் 224-பக்கம் 64 பார்க்க); இனி, "உள் ஓம் என் உபதேசவித்தோடு அணைவோனே"—என்றது— ஓம் எனும் பிரணவ உபதேசத்துக்கு வித்தாகிய - மூலப்பொருளாகிய விநாயக மூர்த்தியைத் தமது உள்ளத்தே தியானித்து—(அவர் உதவி கொண்டு)—வள்ளியை அணைந்தவனே — என்னும் பொருளும் கொள்ளக் கிடக்கின்றது—பாடல் 639-பக்கம் 493 கீழ்க் குறிப்பைப் பார்க்க.

*காலனுெடு மேதி மட்க வூழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி யருள்பாலா—
†காலமுதல் வாழ்புவிக்க தாரநகர் கோபு ரத்துள்
கானமயில் மேல்த ரித்த பெருமாளே. (உ)

திருப்படிக்கரை

[இது 'திருமண்ணிப்படிக்கரை' யெனவும், 'இலுப்பைப்பட்டு' எனவும் வழங்கும். வைத்தீசுரன்கோயிலுக்கு மேற்கு 6-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

791. திருப்புகழ்ப் பகர

தனத்த தத்தனத் தனத்த தத்தனத்
தனத்த தத்தனத் தனதான

அருக்கி மெத்தெனச் சிரித்து மைக்கணிட்
டழைத்தி தப்படச் சிலகூறி-
அரைப்ப ணத்தைவிற் றுடுத்த பட்டவிழ்த்
தணைத்தி தழ்க்கொடுத் தநுராகத்;
துருக்கி மட்டறப் பொருட்ப றிப்பவர்க்
குளக்க ருத்தினிற் ப்ரமைகூரா-
துரைத்து செய்ப்பதித் தலத்தி னைத்துதித்
துனைத்தி ருப்புகழ்ப் பகர்வேனே;

---

* திருக்கடவூர்—மார்க்கண்டேயருக்காகச் சிவபிரான் யமனை உதைத்த ஸ்தலம்—
"மார்க்கண்டர்க்காக அன்று காலனை உதைப்பர் போலும்
கடவூர் வீரட்டனுரே"—அப்பர் 4-31-9.
"கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ்சாத்திச்
சிறுவனுக் காயுள் ஈந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழனமூதூர்"—திருவிளை—அருச்சனை-22.

† புவிக்கு ஆதாரநகர்—சிதம்பரம் எனவும் கொள்ளலாம். சிதம்பரம்—பிரபஞ்சவடிவமான சுராட்புருஷனது இருதய ஸ்தானம். "சுராட் புருடனுள்ளத்து அண்டரு மதிக்கலாற்ற அற்புதத் தனிக் கூத்தாடல்"—கந்தபுரா வழிநடை-15. 'விண்டலமே போற்றும் விராட் புருடனிதய புண்டரிகமான புலியூரே'—புலியூர் வெண்பா இந்தப் பொருளில் இந்தத் திருப்புகழ் சிதம்பரத்துத் திருப்புகழாகும்

காலனும் (அவன் ஏறிவந்த) மேதி — எருமையும் அழிய (ஊழி) விதிப்படியே பூமியின்மேல் விழும்படி உதைத்துக் கிடத்தின (கால்) பாதத்தை உடைய (காலகாலனும்) சிவனது இடது பாகத்தில் உள்ள (சத்தி) அபிராமி அருளிய பாலனே !

ஊழிக்காலம் முதலாக வாழ்ந்துவரும் இந்தப் பூமிக்கு ஆதாரநகர் — ஆதாரஸ்தான நகராயுள்ள (திருக்கடவூரில்) கோபுரத்துள்ளே காட்டுமயில் போன்ற மயில்மீது வீற்றிருக்கும் பெருமாளே !

(வீடுமதுவே சிறக்க அருள்தாராய்)

திருப்படிக்கரை.

791.

*(அருக்கி) அருமை பாராட்டி, அமைதியாகச் சிரித்து, மைபூசின கண் கொண்டு அழைத்து, இன்பம் பெருகும்படி சில (வார்த்தைகள்) பேசி,

(அரைப்பணம்) (அரையில் பாம்புபோன்ற உறுப்பு) அல்குலைப் பணம்பெறும் பொருட்டு விற்பனைசெய்து, கட்டியுள்ள பட்டாடையை அவிழ்த்து அணைத்து, வாயிதழ் ஊறலைத் தந்து, காமலீலையில்

உள்ளத்தை உருகவைத்து, குறைவிலா வகையில் (நிரம்பப்) பொருள் பறிக்கின்ற பொதுமகளிர்பால், (எனது) உள்ளக் கருத்தில் மயக்கம் மிக்கெழாது,

(உரைத்து செய்ப்பதித் தலத்தினை) — செய்ப்பதித் தலத்தினை உரைத்து—†வயலூர் என்னும் தலத்தைப் போற்றி உரைத்து, (துதித்து உனை) உனைத்துதித்து— உன்னைப் புகழ்ந்து திருப்புகழ்ப் பாடல்களைச் சொல்வேனே ! (சொல்லவேண்டும் என்றபடி)

---

*இப் பாடலின் துவக்கம் 252-ஆம் பாடலின் துவக்கத்தை ஒக்கும்.

† வயலூரைத் துதித்துத் திருப்புகழ்ப் பகர்வேனே—என்னும் இந்த ஆசை பின்னர் வயலூரில் அருணகிரியாருக்கு நிறைவேறிற்று— [விநாயகர் துதி-3, திருப்புகழ் 105-அடி 4-பார்க்கவும்]—

"அருணகிரிநாதர் வரலாறு—பக்கம்-35, 36 பார்க்கவும்.

[தொடர்ச்சி 348 ஆம் பக்கம் பார்க்க]

தருக்கு மற்கடப் படைப்ப லத்தினிற்
றடப்பொ ருப்பெடுத் தணையாகச்-
சமுத்தி ரத்தினைக் குறுக்க டைத்ததிற்
றரித்த ரக்கர்பொட் டெழவேபோர் ;
செருக்கு விக்ரமச் சரத்தை விட்டுறச்
செயித்த வுத்தமத் திருமாமன்-
திருத்த கப்பன்மெச் சொருத்த முத்தமிழ்த்
*திருப்ப டிக்கரைப் பெருமாளே. (௧)

மாயூரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

792. திருவடியைப் புகழ

தனதன தத்தத் தனந்த தானன
தனதன தத்தத் தனந்த தானன
தனதன தத்தத் தனந்த தானன தனதான

‡அமுதினை மெத்தச் சொரிந்து மாவின
தினியப ழத்தைப் பிழிந்து பானற
வதனெடு தித்தித் த‡கண்ட ளாவிய விதழாராய்-

(347 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமண்ணிப் படிக்கரையில் அருணகிரியாருடைய கனவில் முருகவேள் தோன்றித் "திரிசிராப்பள்ளிக்கு அருகில் உள்ள வயலூரில் உள்ளேம். நமது திருப்புகழை நித்தம் பாடும் அன்பை அத் தலத்திற் பிரசாதிப்போம். நீ அங்கு வருக" எனக் கட்டளையிட்டு மறைந்தார். அருணகிரியார் விழித்தெழுந்து 'பெருமாளே! நீ அடியேற்குப் புலப்படவைத்த வயலூரை என்று காண்பேன்' உன் திருப்புகழை நித்தம் பாடும் பாக்கியத்தை என்று பெறுவேன்' என உள்ளம் உருகி — "புயற்பொழில் வயற்பதி நலப்படுப்ரியத்தொடு புலப்பட எனக்கருள் பெருமாளே' என்றும், "செய்ப்பதித் தலத்தினைத் துதித்துனைத் திருப்புகழ்ப் பகர்வேனே— திருப்படிக்கரைப் பெருமாளே" என்றும் போற்றினர்—இந்த வேண்டுகோள் வயலூரில் நிறைவேறிற்று என்பது—

(*, †, ‡ - பக்கம் 349 பார்க்க.)

செருக்கு உள்ள குரங்குப்படைப் பலத்தினுல் பெரிய மலைகளை எடுத்துப்போட்டு அணைகட்டிக்—

கடலைக் குறுக்கே அடைத்து, (அதில்) அந்த அணைவழியாகச் சென்று அங்கிருந்த அரக்கர்கள் பொடியாகப் போர்—

மிக்கெழ வீரம் உள்ள அம்பைச் செலுத்திப் படவைத்து வெற்றிகொண்ட மேலான அழகிய மாமன் (திருமாலும்)

அழகிய அப்பா (சிவனும்) மெச்சுகின்ற ஒப்பற்றவனே! முத்தமிழ்ப் பெருமாளே! *திருப்படிக்கரை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(உனைத் திருப்புகழ்ப் பகர்வேனே)

மாயூரம்

792.

†தேவாமிர்தத்தை நிரம்ப ஊற்றி, மாமரத்தின் இனிப்பான பழத்தை அதனுடன் பிழிந்து, (அவையுடன்) பாலும், தேனும் (கூட்டி) (அவையுடன்) தித்திக்கின்ற ‡கற்கண்டையும் கலந்த அத்தனைச் சுவையுள்ள வாயிதழ் (ஊறலை) உடையவர்களாய்—

[348 ஆம் பக்கத் தொடர்ச்சி]

"செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கருள்கை மறவேனே" (விநா-துதி-3)

"திருப்புகழ் நித்தம் பாடும் அன்பது செய்ப்பதியில் தந்தவன் நீயே" (திருப்புகழ் 105) என வருவனவற்ருல் நன்கு தெரிகின்றது—(அருணகிரிநாதர் வரலாறு-பக்கம் 35-36-பார்க்கவும்)

* "திருத்தணிப்பதிப் பெருமாளே"—என்றும் பாடம்.

† அமுதை நிரம்பச் சொரிதலும், அதனொடு இனிய மாம்பழச் சாறு, பால், தேன், கற்கண்டு இவைகளைச் சேர்ப்பதும், செய்து கிடைக்கும் ருசியது - வாயிதழ் ஊறல்-என வரும் அருணகிரியாரின் இத் திருவாக்கினின்றே—அவர் பாடிய திருப்புகழ்தான் அத்தகைய கூட்டுச் சுவையது என்க் காண்கின்ருர் திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய கவிராஜ பண்டாரத்தையா—

"உதிருங் கனியை நறும்பாகில் உடைத்துக் கலந்து தேனைவடித், தூற்றி யமுதின் உடன்கூட்டி ஒக்க குழைத்த ருசி பிறந்து மதுரங் கனிந்த திருப்புகழ்ப் பாமாலை"—என்ருர்

‡ கண்டு—கற்கண்டு.

அழகிய பொற்றட் டி*நொண்டு வேடையின்
வருபசி யர்க்குற் றவன்பி ரைலுண
வருள்பவ ரொத்துத் தளர்ந்த காமுகர் மயல்தீரக்;

†குமுதம் விளர்க்கத் தடங்கு லர்விய
நிலவெழு முத்தைப் புனைந்த பாரிய
குலவிய சித்ரப் ப்ரசண்ட பூரண தனபாரக்-

குவடிள கக்கட் டியுந்தி மேல்விழு
மவர்மய லிற்புக் கழிந்த பாவியை
குரைகழல் பற்றிப் புகழ்ந்து வாழ்வுற அருள்வாயே;

வமிசமி குத்துப் ப்ரபஞ்சம் யாவையு
‡மறுகிட வுக்ரக் கொடும்பை யானபுன்
மதிகொ டழித்திட் டிடும்பை ராவணன் மதியாமே-

மறுவறு கற்பிற் சிறந்த சீதையை
விதனம் விளைக்கக் குரங்கி னுலவன்
வமிச மறுத்திட் டிலங்கு மாயவன் மருகோனே;

xஎமதும லத்தைக் களைந்து பாடென
அருள அதற்குப் புகழ்ந்து பாடிய
இயல்கவி மெச்சிட் டுயர்ந்த பேறருள் முருகோனே;

எழில்வளை மிக்கத் தவழ்ந்து லாவிய
oபொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய
இணையிலி ரத்னச் **சிகண்டி யூருறை பெருமாளே.(க)

---

* நொண்டு—மொண்டு.

† குமுதம் விளர்க்க—வாய் வெளுக்க.

‡ மறுகிட—கலக்கமுற.

x இது அருணகிரியார் வரலாற்றைத் தெரிவிக்கும் பகுதி.

o "காவிரி கலந்து வரு தென்கரை...மயிலாடுதுறை"
—சம்பந்தர் 3-70-7. ** சிகண்டியூர்—மாயூரம்.

அழகான பொன் தட்டில் மொண்டு காம தாகத்துடன் வரும் மோகப்பசி யுள்ளவர்மேல் வைத்த அன்பினால் அவர்கள் உண்ணும்படி (அருள்பவர்) கொடுப்பவர்கள் போன்று, இளைப்புள காமிகளின் மோகமயல் நீங்க

வாய்வெளுக்க, இடம்பரந்த நிலவொளி வீசும் முத்துமாலை அணிந்த, பருத்து விளங்கும் அழகிய, மிக்கெழுந்த நிறைந்த கொங்கைப் பாரமாம்—

மலை இளகும்படி (கட்டி) அணைத்து வயிற்றின்மேல் விழுகின்ற அவர்களின் மோகவலையிற் பட்டு அழிந்த பாவியாகிய நான்—(உனது) ஒலிக்கும் கழல் அணிந்த திருவடியைப் பற்றிப் புகழ்ந்து நல்வாழ்வை அடைய அருள்புரிவாயாக—

(வமிசம்) தன் குலத்தினர் பெருக, உலகம் எல்லாம் கலக்கம் உற, உக்கிரமான (கொடும்ஸ்பயான) கொடுமையான இழிவான புத்தியைக் கொண்டு அழிவுதரும் செயல்களைச் செய்து துன்பம் விளைவித்த ராவணன்-பொருட்படுத்தாமல்-

குற்றமற்ற கற்பில் மேம்பட்ட சீதைக்குத் துக்கம் விளைவிக்க, குரங்குகளின் உதவியைக் கொண்டு அந்த ராவணனுடைய குலத்தை அறுத்து விளங்கும் திருமாலின் மருகனே!

என்னுடைய மும்மலங்களையும் அறுத்துத் தொலைத்து, பாடுவாயாக என நீ எனக்குத் திருவருள் பாலிக்க, அதன்படி அடியேன் உன்னைப் புகழ்ந்து பாடின, உழுவலன்புடன் பாடின பாடல்களை மெச்சிப் பிரியப்பட்டு மேலான பேற்றினை எனக்கு அருளின முருகனே!

அழகிய சங்குகள் நிரம்பத் தவழ்ந்து உலாவுகின்ற (பொன்னி நதி) காவிரியின் தெற்குக் கரையில் விளங்குகின்ற தனக்கு ஒப்பு இல்லாத ரத்னமயமான மயிலாடுதுறையில் வீற்றிருக்கும் பெருமாளே!

(வாழ்வுற அருள்வாயே)

பாகை.

[இது மாயூரத்துக்குச் சமீபத்திலுள்ள "பாகசாலை" என்னும் சுப்பிரமணிய ஸ்தலமா யிருக்கலாம். 'கடல் கழி பாயும் பாகை'— என 794-ஆம் பாடலிற் கூறப்பட்டுளதால் கடற்கரைத் தலம் இது. மணலூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கு சுமார் 2 மைலிலும் 'பாகை' என்றொரு தலம் உண்டு.

793. திருவடி உற

தான தானன தானம், தான தானன தானம்
தான தானன தானம் தனதான

ஆடல் மாமத ராஜன் பூசல் வாளியி லேநொந்
தாகம் வேர்வுற மால்கொண் டயராதே-

ஆர வாணகை யார்செஞ் சேலி னேவலி லேசென்
றுயு வேதனை யேயென் றுலையாதே ;

சேடன் மாமுடி மேவும் பாரு ளோர்களுள் நீடுந்
த்யாக மீபவர் யாரென் றலையாதே-

தேடி நான்மறை நாடுங் காடு மோடிய தாளுந்
தேவ நாயக நானின் றடைவேனே ;

பாடு நான்மறை யோனுந் தாதை யாகிய மாலும்
பாவை பாகனு நாளுந் தவறுதே-

பாக நாண்மலர் சூடுஞ் சேக ராமதில் சூழ்தென்
பாகை மாநக ராளுங் குமரேசா ;

*கூட லான்முது கூனன் றேட வா†துயர் வேதங்
கூறு நாவல மேவுந் தமிழ்வீரா-

கோடி தானவர் தோளுந் தாளும் வீழ வுலாவுங்
கோல மாமயி லேறும் பெருமாளே. (க)

---

* பாண்டியன் கூனை நீக்கியது — பாடல் 181-பக்கம் 422 கீழ்க்குறிப்பு.

† **உயர் வேதம் கூறும் நாவலம் மேவும் தமிழ் வீரா:** உயர்ந்த தமிழ் வேதமாகிய தேவாரப் பாக்களை—திருப்பாசுரம் முதலிய பாக்களைக் கூறின நா வன்மை கொண்ட தமிழ் வீரனே !

பாகை.

793.

காமலீலைகளை விளக்கும் சிறந்த மன்மத ராஜனுடைய காமப்போரிற் செலுத்தப்படுகின்ற (மலர்ப்) பாணங்களாலே மனம் நொந்து, உடலில் வேர்வை வர மோகங்கொண்டு தளராமலும்—

(ஆரம்) முத்துப்போன்ற ஒளிவீசும் பற்களை உடையவர்களாம் (பொது) மகளிர்களின் செவ்விய சேல்மீன் போன்ற கண்களின் கட்டளைக்கு இணங்கிச் சென்று ஆயுள்காலம் வரையில் துன்பமே என்னும்படி நிலைகுலைந் தழியாமலும்

ஆதிசேடனுடைய சிறந்த முடிகளின்மேல் தாங்கப்படுகின்ற (இந்தப்) பூமியில் உள்ளவர்களுள், பெருகிய கொடை கொடுப்பவர்—(பேர் சிறந்த கொடையாளிகள்) யார் யார் என்று தேடி அலையாமலும்—

தேடி நான்கு வேதங்களும் நாடுகின்றதும், (வள்ளியின்) தினைப்புனக் காட்டில் ஓடி அலைந்ததுமான— உனது திருவடிகளை — தேவநாயகனே! நான் இன்று அடையப் பெறுவேனே!

பாடுகின்ற நான்கு மறைகளும் வல்ல பிரமாவும், அவனுக்குத் தந்தையாகிய திருமாலும், பெண்ணொரு பாகனும் சிவனும், நாள்தோறும் தவறுமல்—

பக்குவமாய் அன்று மலர்ந்ததான மலர்களைச் சூட்டுகின்ற (சேகரனே) திருமுடியை உடையவனே! மதில்கள் சூழ்ந்த அழகிய **பாகை** மாநகரில் வீற்றிருந்தருளும் குமரேசனே!

மதுரைப்பதியரசன் (கூன்பாண்டியனுடைய) நெடுநாளாயிருந்த கூன் அன்று தொலைந்து (முதுகு) நிமிரும்படி, (சமணரொடு)செய்தவாது சம்பந்தமாய் உயர்ந்த வேதப்பொருள் கொண்ட தமிழ்ப் பாடல்களைப் பாடின நாவின் வெற்றிபெற்ற தமிழ் வீரனே!

கோடிக்கணக்கான அசுரர்களின் கையும் காலும் அற்றுவிழ உலவின பெருமாளே! அழகிய சிறந்த மயிலேறும் பெருமாளே!

(தாள்...அடைவேனே)

794. சிவயோகபதம் பெற

தான தனந்தன தான தனந்தன
தான தனந்தன தனதான

ஈளை சுரங்குளிர் வாத மெனும்பல
நோய்கள் வளைந்தற இளையாதே-
ஈடு படுஞ்சிறு கூடு புகுந்திடு
காடு பயின்றுயி ரிழவாதே;
மூளை யெலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படுந்தழல் முழுகாதே-
மூல மெனுஞ்சிவ யோக பதந்தனில்
வாழ்வு பெறும்படி மொழிவாயே;
*வாளை நெருங்கிய வாவியி லுங்கயல்
சேல்கள் மறிந்திட வலைபீறு-
வாகை துதைந்தணி கேதகை மங்கிட
மோதி வெகுண்டிள மதிதோயும்;
பாளை நறுங்கமழ் பூக வனந்தலை
சாடி நெடுங்கடல் கழிபாயும்-
பாகை வளம்பதி மேவி வளஞ்செறி
†தோகை விருப்பிய பெருமாளே. (உ)

795. மவுனம் உற

தனன தனதன தனன தனதன
தான தானன தனதான

குவளை பொருதிரு குழையை முடுகிய
கோல வேல்விழி மடவார் தங்-
கொடிய ம்ருகமத புளக தனகிரி
கூடி நாடொறு மயலாகித்;
துவள வுருகிய சரச விதமது
சோர வாரிதி யலையூடே-

---

* வாளையின் பராக்ரமத்தைக் கூறுகின்றன 5—7 அடிகள்; இவ் வடிகளின் கருத்து 272-ஆம் பாடலின் 5—7 அடிகளின் கருத்தை ஒக்கும்.

† தோகை—793—ஆம் பாடலில் "கோலமா மயில் ஏறும் பெருமாளே" என்றதனால் இங்கும் **தோகை** என்பதற்கு 'மயில்' எனவும் பொருள் கொள்ளப்பட்டது.

794.

(ஈளை) கோழை, சுரம், குளிர், (வாதம்) வாயு மிகுதலாகிய பிணிக்கூறு, என்னும்பல நோய்கள் சூழ்ந்து மிக்க இளைப்பு அடையாமல்—

(ஈடுபடும்) வலிமையை யிழந்து துன்புறும் சிறிய கூடாகிய இந்த உடலிற் புகுந்து, (ஈற்றில்) இடுகாடு சுடுகாட்டிற் சேரும்படி உயிரை இழக்காமல்—

மூளை, எலும்புகள், நாடிகள், நரம்புகள், இவையெலாம் வேறுபட்டொழியத் தீயில் முழுகி வேகாமல்—

மூலப்பொருளான சிவயோகபதவியில் (நான்) வாழ்வு பெறும்படி உபதேசித்தருளுக.

வாளை மீனானது தனக்குச் சமீபத்தில் உள்ள குளத்தில் இருக்கின்ற கயல்மீன், சேல்மீன் இவைகள் முதுகிட்டு ஓட வலைகளைக் கிழித்துத் தாவி—

வெற்றியே மிகுந்து, வரிசையாயிருந்த தாழைகள் உருக்குலைய அவைகளின் மேல் மோதிக் கோபித்து, பிறைச்சந்திரன் படியும்

பாளைகளைக்கொண்ட நறுமணம் வீசும் கமுகமரக் காட்டில் அம்மரங்களின் உச்சியிற் பாய்ந்து ஒடித்து, பெரிய கடலின் கழியிற் பாய்கின்ற

பாகை என்னும் செழும் பதியில் மேவி வளப்பம் நிறைந்த மயிலை (அல்லது வள்ளியம்மையை) விரும்பிய பெருமாளே!

(வாழ்வு பெறும்படி மொழிவாயே)

795.

குவளை மலருக்கு ஒப்பென்று போர்செய்வதாகி, இரண்டு குழைகளையும் வெருட்டுவதான அழகிய வேல்போன்ற கண்களை உடைய பெண்களின்—

பொல்லாதனவும், கஸ்தூரி யணிந்தனவும், புளகம் கொண்டனவுமான கொங்கை மலைகளைக்கூடி நாள்தோறும் மோகம் கொண்டவனாய்

துவட்சியுற உருகின லீலை விதங்களில் தளர்ச்சியுற அக் காமக் கடல்களின் அலைகளுக்குள்ளே—

சுழலு மென*துயிர் மவுன பரமசு
கோம கோததி படியாதோ;
கவள கரதல கரட விகடக
போல பூதர முகமான-
கடவுள் கணபதி பிறகு வருமொரு
கார ணகதிர் வடிவேலா;
பவள மரகத கனக வயிரக
பாட கோபுர †அரிதேரின்-
பரியு மிடறிய புரிசை தழுவிய
பாகை மேவிய பெருமாளே. (௩)

திருவிடைக்கழி.

[மாயூரத்துக்குத் தென்கிழக்கு 13-மைல் தூரத்தி லுள்ள திருக்கடவூரி லிருந்து 4-மைல். இதற்குத் திருவிசைப்பாவிற் சேந்தனார் பாடல் உள்ளது. இங்குத் திருக் குராமர நீழலில் முருகக்கடவுள் வீற்றிருக்கின்றார்]

796 பெண்கள் மயக்கு அற

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனதான

அனலப் பரிபுக் கருணத் ரயம்வைத்
தடர்பொய்க் குருதிக் குடில்பேண-
அவலக் கவலைச் சவலைக் கலைகற்
றதனிற் பொருள்சற் றறியாதே;
குனகித் தனகிக் கனலொத் துருகிக்
குலவிக் கலவிக் கொடியார்தங்-
கொடுமைக் கடுமைக் குவளைக் கடையிற்
குலைபட் டலையக் கடவேனோ;

---

* மவுன சுகத்திற் படிய வேண்டும் என்ற வேண்டுகோளின்படி மவுனநிலை அருணகிரியார்க்குக் கிடைத்தது என்பது—
"மௌனத்தை யுற்று . . நிர்க்குணம் பூண்டென்னை மறந்திருந் தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே"—கந்தரலங்—19
"அரியமோன வழிதிறந்த நளின பாதம்"—திருப்புகழ்—731,
† அரி—சூரியன்; சூரியனது தேர்வழியைத் தடைசெயும் உயரம் உள்ள மதில்கள்—"எல்லை தேர்வழித் தடைசெயும் இம்மதில்"—(எல்லை—சூரியன்)—திருவிளை—திருநகர—23.

சுழல்கின்ற என்னுடைய உயிர் 'மௌனநிலை' என்கின்ற 'பரம சுகம்' ஆகிய பெரிய கடலிற் படிந்து திளைக்காதோ!

கவளம் – வாயளவு கொண்ட உணவைக் கொள்ளும் துதிக்கையையும், மதம்பாயும் சுவடுகொண்ட அழகிய கன்னத்தையும் உடைய மலையின் (அதாவது யானையின்) முகத்தைக் கொண்ட

கடவுளாம் கணபதியின் பின்னர்த் தோன்றிய ஒப்பற்ற மூலப்பொருளே! ஒளியும் கூர்மையும் கொண்ட வேலனே!

பவளத்தின் (செந்நிறத்தையும்), மரகதத்தின் (பச்சை நிறத்தையும்), கனகம் - பொன்னின் (மஞ்சள் நிறத்தையும்), வயிரத்தின் (வெண்ணிறத்தையும்) கொண்ட திருக்கதவத்தையும், கோபுரத்தையும் கொண்டு, சூரியன் தேரின்—

குதிரைகளும் இடறும்படி உயர்ந்துள்ள மதில்கள் சூழ்ந்துள்ள பாகை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! (உயிர் மவுன பரம சுக மகோததி படியாதோ)

திருவிடைக்கழி

796

(அனல்) நெருப்பு, (அப்பு) நீர், (அரி) காற்று, முதலான பஞ்ச பூதங்கள் சேர்ந்ததும், (குணத்ரயம்) சத்துவம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்கள் வைக்கப்பட்டதும், நிரம்பப்பொய்யானதும் (சற்றும்நிலைத்துநிற்காததும்) ரத்தத்தோடு கூடியதுமான (இந்தக்)குடிசை (உடலை) விரும்பி—

பயனற்றதும், கவலைகளுக்கு இடம் தருவதும், மனக் குழப்பம் தருவதுமான நூல்களைக்கற்று - அந்நூல்களில் உள்ள பொருளையும் கொஞ்சம்கூட அறியாமல்

(குனகி) கொஞ்சிப்பேசியும், (தனகி) உள்ளம் களித்தும், நெருப்பில் (பட்ட மெழுகுபோல) உருகியும், (குலவி) நெருங்கி உறவாடியும், (கலவி)புணர்ச்சிசெயும்(கொடியன்ன) [அல்லது பொல்லாத] பெண்களின்—

கொடுமையிலும், கடுமையிலும், *(குவளை) குவளை மலர்போன்ற கண்ணின் கடைப்பார்வையிலும், (குலைபட்டு) நிலைகெட்டு நான் அலைச்சல் உறக்கடவேனோ! அந்த அலைச்சல் வேண்டாம் என்றபடி:

---

* குவளை-கண்ணுக்கு உவமை—"தேனிமிர் குவளைக்கண் திரு மகள் அனையாளை"— சிந்தாமணி 2429.
"பசலை யார்ந்தன குவளை யங்கண்ணே" — குறுந்தொகை 13.

இனைவித் தினநற் புனமுற் றகுறத்
திருவைப் புணர்பொற் புயவீரா-
தெளியத் தெளியப் பவளச் சடிலச்
*சிவனுக் கொருசொற் பகர்வோனே;
† கனகச் சிகரக் குலவெற் புருவக்
கறுவிப் பொருகைக் கதிர்வேலா-
கழியைக் கிழியக் கயல்தத் துமிடைக்
கழியிற் குமரப் பெருமாளே. (க)

797 திருவடியைப் பெற

தனத்தனதத் தனத்தனதத் தனத்தனதத் தனத்தனதத்
தனத்தனதத் தனத்தனதத் தனதான

இரக்குமவர்க் கிரக்கமிகுத்
தளிப்பனசொப் பனத்திலுமற்
றெனக்கியலுக் கிசைக்கெதிரெப் புலவோரென்-
றெடுத்துமுடித் தடக்கைமுடித்
‡ திரட்டையுடுத் திலச்சினையிட்
டடைப்பையிடப் ப்ரபுத்துவமுற் றியல்மாதர்;
குரக்குமுகத் தினைக்குழலைப்
பனிப்பிறையொப் பெனப்புயலொப்
பெனக்குறுகிக் xகலைக்குள்மறைத் திடுமானின்-

---

* சிவனுக்கு உபதேசம்—பாடல் 628—பக்கம் 462—463

† கனகவெற்பு—கிரௌஞ்சம்—"பொன்னஞ்சிலம்பு புலம்ப வரும் எங்கோன்"—கந்தரலங்காரம் 89

‡ இரட்டை — அரையாடை மேலாடைகள், 'இரட்டைகள் அழுக்காளுலும், மடி குலையாமல், வைக்குமாபோலே, [ஈடு--5--9--3] இரட்டை ஆடை—மேலாடை அவசியமென்பது—

"மேலாடை யின்றிச் சபை புகுந்தால் இந்த மேதினியோர் நூலாயிரம் படித்தாலும் எண்ணார்"—நையாண்டிப்புலவர்.

புலவர்கள் கைக்கு மோதிரம் முதலிய ஆடம்பரங்கள்
"நெளிய முதுதண்டு சத்ர சாமர நிபிடமிட வந்து கைக்கு மோதிரம் நெடுகியதி குண்டல ப்ரதாபமும் உடையோராய்" திருப்புகழ்—181

x கலைக்குள் (ஆடைக்குள்) அல்குலை மறைத்தல்:

"மருவொரு குறியுளாரும் வான்பெரும் புடவை கொண்டு
பெருகுறச் சூழ்ந்து சூழ்ந்து பெருந்திரோ தானஞ் செய்வார்"—
திருநாகைக்காரோணப்புராணம்—காகதீர்த்த—25.

மானின் குளம்படி—அல்குலுக்கு உவமை — "பருவமேழுக்கு அல்குல்தனைத் தொடரும் உவமை பெண்குறிக்குச் சொல்லத்தகு-

தினை விதைக்கப்பட்ட நல்ல கொல்லையில் இருந்த குறலக்ஷ்மி—வள்ளியை அணைந்த அழகிய தோள்களை உடைய வீரனே!

தெளியத் தெளிய (தெள்ளத்தெளியும்படி—நன்கு தெளியும்படி, பவளநிறத்ததான—செந்நிறமான சடையை உடைய சிவபிரானுக்கு ஒப்பற்ற (பிரணவச்) சொல்லை உபதேசித்தவனே!

தங்கமயமான சிகரங்களைக்கொண்ட சிறந்த (கிரவுஞ்ச) மலை (ஊடுருவும்படிக் கோபித்துப் பொருத ஒளி வேலனே! கையில் ஏந்தியுள்ள ஒளி வேலனே!

கழியை (உப்புநீர்ப்பரப்பு) கிழியும்படிக் கயல் மீன்கள் குதிக்கின்ற (திரு) இடைக்கழி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் குமரப் பெருமாளே!

(அலையக் கடவேனே)

797.

யாசிப்பவரிடத்தே இரக்கம் மிகக்கொண்டு கொடுப்பன என்பது கனவிலும்கூட இல்லாத எனக்கு இயற்றமிழ் வல்லபத்திலோ இசைத்தமிழ் வல்லபத்திலோ (எதிர்ஒப்பு) ஒப்பாக எதிர்நிற்கக்கூடிய—எந்தப் புலவர் உளர் என்று—

(எடுத்து) பாடல் அமைத்து எடுத்து, (முடியையும்) தலையையும் பெரிய கைகளையும் (முடித்து) அலங்கரித்து, இரட்டை உடுத்து—அரையாடை, மேலாடைகளை உடுத்து (இலச்சினையிட்டு) முத்திரை மோதிரம் அணிந்து, ஒருவர் வெற்றிலைப் பை ஏந்திவர (பிரபுத்வம்உற்று) பெரிய பிரபுவின் தன்மையை மேற்கொண்டு—பெரிய பிரபுபோல ஆடம்பரம் கொண்டு, பொருந்திய மாதர்களின்—

குரங்கு முகத்தினை—பனிப்பிறை ஒப்பென, குழலை-புயல் ஒட்பென—குரங்குபோன்ற முகத்தைக் குளிர்ந்த நிலவுக்கு ஒப்பென்றும், கூந்தல் மேகத்துக்கு ஒப்பென்றும் சொல்லி அணைந்து, (கலைக்குள்)ஆடைக்குள்—மறைத்துவைக்கப்படும் மானின்—

மான் குளம்பென்றே"—உசிதசூடாமணி.—கலை—ஆண்மான் எனவும் பொருள் கொண்டதாதலின் கலைக்குள் மறைத்திடுமான்— என்பதிற் சொற்சாதுரியமும் உளது

குளப்படியிற் சளப்படுமிப்
பவக்கடலைக் கடக்க இனிக்
குறித்திருபொற் கழற்புணையைத் தருவாயே ;

அரக்கரடற் கடக்க அமர்க்
களத்தடையப் புடைத்துலகுக்
கலக்கணறக் குலக்கிரிபொட் டெழுவாரி-

அனைத்தும்வறப் புறச்சுரர்கற்
பகப்புரியிற் புகக் * கமலத்
தனைச்சிறையிட் டிடைக்கழியிற் பயில்வோனே ;

கரக்கரடக் † களிற்றுமருப்
புலக்கையினிற் கொழித்தமணிக்
கழைத்தரளத் தினைத் ‡ தினையிற் குறுவாளைக்-

கணிக்குறவக் குறிச்சியினிற்
சிலைக் x குறவர்க் கிலச்சைவரக்
கயத்தொடுகைப் பிடித்தமணப் பெருமாளே(உ)

---

* பிரமனைச் சிறையிட்டது: பாட்டு 212—பக்கம் 42 கீழ்குறிப்பு

† யானையின் தந்தத்தை உலக்கையாகக் கொள்ளுதல்:

1 "கு (ற்) றக், குறச்சத்திக்கு, அத்திக்கோடு பறித்துக் கொடு ஆதி"—கந்தரந்தாதி 11. (குற—குற்றுதற்கு)
2 'யானைவெண் மருப்புலக்கை' சீவகசிந்தாமணி 1562.
3 "களிற்றுக் கோடு உலக்கையாக" கலித்தொகை 41
4 'யானைக்கோட்டால் வெதிர் நெற் குறுவா' ஷை 42
5 'மகளிர் குறுவரே வான்கோட்டால்'—சிலப்-29
6 'வேழத்துப் பணை மருப்புலக்கை'—பெருங்கதை 2—14—49
7 'கொல்யானைத் தந்த வுலக்கைதனை யோச்சி'-கலிங்கத் 133,513
8 'உயர்ந்த வாரணக் கொம்பே உலக்கையா'-(மோகவதை 764
9 'ஆனைக்கோடு அனைத்தும் பொற்பூண் முசலமே யாக'—
தக்க யாகப் பரணி—735
10 'கருங்களிற்றின் வெண்கொம்பால் கல்லுரல்வாய் நல்லார் பெருந்தினை வெண் பிண்டி யிடிப்ப'—ஈங்கோய் 20.

‡ தினையிற் குறுவாள்—தினைபோலக் குற்றி விளையாடுபவள்.

x குறவர்க்கு இலச்சை: அவர்கள் அறியாமல் வள்ளியை வெளவியதால் வந்த கூச்சம், வெட்கம்.

[தொடர்ச்சி 361 ஆம் பக்கம் பார்க்க.]

குளம்படி போன்ற அல்குலில் (சளப்படும்)—துன்பப்படும் இந்தப் பிறப்பு என்னும் கடலை நான் தாண்டி உய்ய இனி (அடியேனைக்) குறித்து—கண்பார்த்து—உனது இரண்டு அழகிய திருவடி என்னும் (புணையை) தெப்பத்தைத் தந்தருளுக.

அசுரர்களின் (அடல்) வலிமையைத் தொலைத்தழிக்க (அமர்க்களத்து) போர்க்களத்தில் (அடையப் புடைத்து) நன்றாக அலைத்து அடித்து, உலகின் (அலக்கண்) துன்பம் நீங்கக், (குலக்கிரி) உயரிய கிரௌஞ்ச கிரி பொடிபட்டுதிரக், கடல்கள்

எல்லாம் வற்றிப்போகத், தேவர்கள் கற்பக லோகத்தில் (பொன்னுலகில்) குடியேற, (கமலத்தனை) தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனைச் சிறையிற்போட்டு திரு இடைக்கழி என்னும் தலத்தில் பொருந்தி யிருப்பவனே!

துதிக்கையையும் (கரடம்) மதம்பாய் சுவட்டையும் உடைய யானையின் தந்தமாகிய உலக்கைகொண்டு கொழித்து எடுக்கப்பட்ட ரத்னங்களையும், மூங்கில் முத்தையும் தினை குத்துவதுபோல (இடிப்பதுபோல)க் (குற்றி) இடித்து விளையாடுபவளை — (விளையாடின வள்ளியை)

(கணி) வேங்கை மரங்கள் உள்ள குறவர் (குறிச்சியினில்) மலைநில ஊரில் (அல்லது சோதிடம்—குறி சொல்லவல்ல குறவர் குலத்து ஊரில்) (வள்ளிமலையில்), வில்ஏந்திய குறவர்கள் நாணும்படி, (கயத்தொடு) ஐராவத ஆனை வளர்த்த தேவசேனையுடன்—கைப்பிடித்த (மணஞ்செய்த) மணவாளப் பெருமாளே!

(கழற்புணையைத் தருவாயே)

(360 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"அடுந்திறல் எயினர் சேரி அளித்திடு நீயே எங்கள்
மடந்தையைக் கரவில் வௌவி வரம்பினை அழித்துத் தீரா
நெடுந்தனிப் பழிய தொன்று நிறுவினை ; புதல்வர் கொள்ள
விடந்தனை அன்னை ஊட்டின் விலக்கிடு கின்றா ருண்டோ!
கந்தபுராணம்—6—24—191.

798 வாழ்வுற

தனன தத்தனத் தனன தத்தனத்
தனன தத்தனத் தனதான

பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனு மெப்படிப் பலவாழ்வும்-
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும்;
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்-
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்ப லத்தினைத் தரவேணும்;
*தகரி லற்றகைத் தலம்வி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே-
தனிவ னத்தினிற் புனம றத்தியைத்
தழுவு பொற்புயத் திருமார்பா;
சிகர வெற்பினைப் பகிரும் வித்தகத்
திறல யிற்சுடர்க் குமரேசா-
*செழும லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி டைக்கழிப் பெருமாளே. (௩)

---

* சிவபிரானது நெற்றிக்கண்ணினின்றும் வந்த ஆறு பொறிகளின் சூடு தாங்க முடியாமல் வாயு அப்பொறிகளை அக்கினியின் கையிற் கொடுக்க, அக்கினியும் தாங்கமுடியாமல் அப்பொறிகளைக் கங்கையில் விட, கங்கையும் தாங்க முடியாமல் பொறிகளைச் சரவண மடுவில் விட்டனள்: 'காலினோன்-திறற்படு வன்னிதன் சென்னிசேர்த்தினன்;
" தீயின் பண்ணவன் வேர்த்துடல் புழுங்குற : ஒரு பதம்
இடப் பெறாது, கங்கையின் அகத்துய்த் தானரோ;
கங்கைதன் சிரமிசை ஏந்தியே...சரவணம் எனுந் தடந் தன்னிற் சேர்த்தனள் "—கந்தபுராணம்—1—11—84-7.

" தீக்கடவுள் சீதப்பகீரதிக்கே சென்றுய்ப்பப் போதொருசற் றன்னவளும் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற் சென்னியிற் கொண்டுய்ப்ப " —கந்தர் கலி வெண்பா.

தகரில் அற்றகை—தக்கன் யாகத்துப் பூசலில் தகர்க்கப்பட்டதால் அறுபட்ட கை—(பாடல் 390—பக்கம் 487 கீழ்க்குறிப்பு)

தகரில்—வீரபத்திரர் தகர்த்தலால் எனவும், தகரில்-ஆட்டு முகத்தன் (தக்கன்) யாகத்தில்—எனவும் பொருள் கொள்ளலாம்.

(தொடர்ச்சி 363 ஆம் பக்கம் பார்க்க)

798

சொல்லப்படுகின்ற முத்தமிழ் நூல்களின் பொருளையும், உண்மைத் தவத்தாற் பெறப்படும் பயனையும், எத்தன்மையான பலவகைய வாழ்வையும்,

பழைமையாய் வரும் முத்திச் செல்வ நிலையையும், யாவரும் நண்புவைத்துப் போற்றும் கற்பகத்தரு வாழ்வையும்-கற்பகவிருக்ஷ தேவலோக வாழ்வையும்,

(புகர்இல்) குற்றம் இல்லாத புத்தியுடன் அரசவாழ்வைப் பெறப்பெற்று விளங்கும் அற்புதமான சிறந்த வாழ்வையும்,

ஐம்புலச் சேட்டைகள் நீங்கப்பெற பலவகையாலும் (உன்னை) (அல்லது உனது பலவகைப்பட்ட பெருமைகளையும்) புகழும் திடத்தினை அறிவின் பலத்தையும், நாவின் வன்மையையும் தந்தருளவேண்டும்;

(தக்கன் யாகத்தில் நடந்த பூசலில்) தகர்க்கப்பட்டு அற்றுப்போன கைகளைக்கொண்ட அக்கினி தேவனது கைத் தலம் விட (கைத்தலங்கள்) கைகள் (பொறிகளின் சூடு தாங்காது கங்கையில் விட்டுவிட, (பிணை) சேர்ந்த சரவண மடுவில் பொருந்தி இருந்தவனே!

தனியாக (வள்ளிமலைக்) காட்டில் தினைப்புனம் காத்திருந்த வேடப்பெண்ணைத் தழுவின அழகு புயங்களையும் திரு மார்பையும் உடையவனே!

சிகரங்களைக் கொண்டிருந்த கிரெளஞ்ச மலையைப் பிளந்து பகிர்ந்த (வித்தகம்) ஞானத்தையும் வெற்றியையுங் கொண்ட (சுடர் அயில்) ஒளிவீசும் வேலாயுதத்தை உடைய குமரேசனே!

செழுவிய பூஞ்சோலையிற் குராமரங்கள் உள்ள அழகிய **திருவிடைக்கழிப்** பெருமாளே!

(புகழ் பலத்தினைத் தரவேணும்)

---

* **திருவிடைக்கழியும் பொழிலும்:** "தேனமர் பொழில்சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற.. குல இளங்களிறு" தினையிளம்பொழில்சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற முளை யிளங்களிறு"-"செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற எழுங் கதிர்ஒளி"—(திருவிசைப்பா)

திருக்குரா நிழற்கீழ் முருகன் — என்பது திருவிடைக்கழி முருகனையே குறிக்கும். "கொந்துவார் குரவடியினும்" என்னும் இடத்தும் (பாடல் 289) காண்க. பாடல் 201-ம் பார்க்க.

799. அடியாரொடு சேர்க்க.

தனனதன தத்தனத் தனதனன தத்தனத்
தனனதன தத்தனத் தனதான

படிபுனல்நெ ருப்படற் பவனம்வெளி பொய்க்கருப்
பவமுறைய வத்தைமுக் குணநீடு-
பயில்பிணிகள் மச்சைசுக் கிலமுதிர மத்திமெய்ப்
பசிபடுநி ணச்சடக் குடில்பேணும்;
உடலது பொறுத்தறக் கடைபெறுபி றப்பினுக்
குணர்வுடைய சித்தமற் றடிநாயேன்-
உழலுமது கற்பலக் கழலிணையெ னக்களித்
*துன துதம ரொக்கவைத் தருள்வாயே;
†கொடியவொரு குக்குடக் கொடியவடி விற்புனக்
கொடிபடர்பு யக்கிரிக் கதிர்வேலா-
குமரசம ரச்‡சினக் குமரவணி யத்தன்மெய்க்
குமரமகிழ் xமுத்தமிழ்ப் புலவோனே;
தடவிகட மத்தகத் தடவரைய ரத்தரத்
தடலனுச வித்தகத் துறையோனே-
தருமருவு மெத்தலத் தருமருவ **முத்தியைத்
தருதிருவி டைக்கழிப் பெருமாளே. (௪)

---

* உனது தமர் - முருகன் அடியார்களைக் குறிக்கும்.

† கொடிய சூரனே மயிலும் சேவலும் ஆனன் ஆதலின் **கொடிய** ஒரு குக்குடக்கொடி என்றார். "**கொடிய** ஒரு குக்குடக் **கொடிய**" என்பதிற் சிலேடைச் சொல்லழகைக் காண்க.

‡ சினக்கும் அரவு அணி அத்தன் எனப் பிரிக்க. சினக்கும்— கோபிக்கும்.

x முத்தமிழ்ப் புலவன் — "நூலறி புலவன்"—திருமுருகாற்றுப் படை. —"பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவன்"—கல்லாடம். "தோலாத முத்தமிழ் நாவா"—முத்துக்குமார. பிள்ளைத்தமிழ்" 30— "கொழு தமிழ் உணரு முதற் புலமைக் குக கொட்டுக சப்பாணி குரவடி யமரும் இடைக்கழி யற்புத கொட்டுக சப்பாணி"—
திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ்.
"மதித்த முத்தமிழிற் பெரியோனே" —திருப்புகழ் 294.
"தமிழ்தனைக் கரைகாட்டிய திறலோனே" — ஷை 1286.

4, 5, 6, 7 அடிகளில் கொடிய கொடிய, குமர குமர, தடவி தடவ, தருமருவு தருமருவ என வழி எதுகையும் சிலேடையும் விரவி வருகின்றன. ** திருவிடைக்கழி "முத்திதரும் தலம்" என்று இங்கு கூறப்பட்டது கவனிக்கற்பாலது.

799

(படி) பூமி, (புனல்) நீர், நெருப்பு, (அடற் பவனம்) வலிமை கொண்ட வாயு, (வெளி) ஆகாயம், பொய், கருவிற் பிறப்பு கூடும் அவஸ்தை, (சாத்துவிகம், ராஜசம், தாமதம் என்னும்) முக்குணங்கள் நெடிதாய்க்—

கூடிவரும் நோய்கள், (மச்சை) மூளை, அல்லது எலும்பின் சத்து, சுக்கிலம் (உதிரம்), ரத்தம், (அத்தி) எலும்பு, (மெய்ப்பசி) உடலில் உண்டாகும் பசி, உள்ள (நிணம்) மாமிசம், இவை கூடிய சடக் குடில்—அறிவிலாத பொருளாகிய சிற்றிலாகப் போற்றப்படும்

(இந்த) தேகத்தைத் தாங்கி மிகவும் கீழான தாய்ப் பெறப்பட்ட இப்பிறப்பிலே ஞானத்தோடு கூடிய உள்ளம் இல்லாதுபோய் அடி நாயேனாகிய நான்—

திரிகின்ற இது, (கற்பு அல) நீதியன்று—ஆதலால் (நீ) உனது திருவடியிணையை எனக்குத் தந்து, உனது (தமர்)—உன்னை அண்டியுள்ள பழைய அடியார் கூட்டத்துடன் என்னையும் ஒருசேர வைத்து அருள்புரிய வேண்டுகின்றேன்.

கொடுமை வாய்ந்ததும் ஒப்பற்றதுமான கோழியைக் கொடியாக உடையவனே! அழகுள்ள தினைப்புனத்து (வள்ளிக்) கொடிபடரும் புயமலைகளை உடைய ஒளிவேலனே!

(குமர) இளையோய்! (சமர சினக்கும் அரவு) போரில் மிகக் கோபிக்கும் பாம்பை அணியும் (அத்தன்) ஐயன் சிவபிரானது மெய்ப் புதல்வனே! (யாவரும்) மகிழும், முத்தமிழிலும் வல்ல புலவனே!

விசேடமான அழகிய மத்தகத்தோடு கூடிய பெரிய மலையை ஒத்தவரான கணபதியின் (அத்தர்) தந்தையின் (அத்த) குருவே! (அந்தக் கணபதியின்)—அடல் அனுச—பராக்ரமம் வாய்ந்த தம்பியே! அல்லது தடவரையர்—கணபதியின்—அத்தரத்து அடல் அனுச—அந்த மேன்மையும் வீரமும் வாய்ந்த தம்பியே! ஞானநிலையில் உறைபவனே அல்லது ஞானத்துறையில் விளங்குபவனே!

(தரு) விருக்ஷங்கள் (மருவும்) பொருந்தி விளங்கும் திருவிடைக்கழிப் பெருமாளே! (எத்தலத்தரும்) எந்தப் பூமியில் உள்ளவரும் தன்னிடம் அடைந்தால், அவர்க்கு முத்தி நிலையைத் தரும் திருவிடைக்கழிப் பெருமாளே!

((உனது தமர் ஒக்கவைத்து அருள்வாயே)

800. திருப்புகழ் ஓத

தனதனனத் தனதான தனதனனத் தனதான
தனதனனத் தனதான தனதான

பழியுறு*சட் டகமான குடிலையெடுத் திழிவான
பகரும்வினைச் செயல்மாதர் தருமாயப்-

படுகுழிபுக் கினிதேறும் வழிதடவித் தெரியாது
பழமைபிதற் றிடுலோக முழுமூடர் ;

உழலும்விருப் புடனோது பலசவலைக் கலைதேடி-
யொருபயனைத் தெளியாது விளியாமுன்-

உனகமலப் பதநாடி யுருகி†யுளத் தமுதூற
உனதுதிருப் புகழோத அருள்வாயே ;

தெழியுவரிச் சலராசி மொகுமொகெனப் பெருமேரு
திடுதிடெனப் பலபூதர் விதமாகத்-

திமிதிமெனப் பொருசூர னெறுநெறெனப் பலதேவர்
ஜெயஜெயெனக் கொதிவேலை விடுவோனே ;

அழகுதரித் திடுநீப சரவணவுற் பவவேல
அடல்தருகெற் சிதநீல மயில்வீரா-

அருணைதிருத் தணி‡நாக மலைபழநிப் பதிகோடை
அதிபஇடைக் கழிமேவு பெருமாளே. (ரு)

---

* சட்டகம்—உடல். "உயிர்புகுஞ் சட்டகம்" கல்லாடம் 8. "உயிரன்னாள் சட்டகம்"—திருவிளை.—பழியஞ்சின. 16.

† அமுதூறினால் இறைவனைக் காணலாகும்: 'காயத்துள்ளமுதூற ஊற நீ கண்டுகொள் என்று காட்டிய'—திருவாசகம் — 42—5.

‡ ஆறு தலங்கள் சொல்லப்பட்ட இந்த அடியினால் நாகமலை வேறு கோடை வேறு என்பது புலப்படுகின்றது. கோடை— வல்லக் கோட்டை—பாடல் 707—713 பார்க்க.

800.

(பழி) பாவம்—குற்றம் இவைகளுக்கு இடமான (சட்டகம்) உடலாகிய இந்தக் குடிசையை எடுத்து இழிவான சொற்களைச் சொல்லும் தொழில் வினைகளை—வினையைப் பெருக்கும் செயல்களை உள்ள மாதர்கள் தருகின்ற மாயமான

படுகுழியில் வீழ்ந்து நல்லபடி கரையேறும் வழி உண்டோ எனத் தடவிப் பார்த்தும் தெரியாமல், பழங்கொள்கைகளையே (ஆராய்ச்சியின்றி)ப் பிதற்றுகின்ற லோகத்தில் உள்ள முழுமூடர்கள்—

திரிந்து ஆசையுடன் ஓதுகின்ற பல மனக்குழப்பம் தரும் நூல்களைத் தேடி, ஒரு பயனையும் தெளிந்துகொள்ள முடியாமல் இறந்து போவதற்கு முன்பாக—

உன்னுடைய தாமரைப் பதங்களை விரும்பி, உருகி, உள்ளத்தே பத்தி அமுதரசம் ஊற உனது திருப்புகழை ஓதுதற்கு அருள்வாயே;

(தெழி) முழங்குகின்ற (உவரி) உப்பு நீரைக்கொண்ட (சலராசி) கடல் மொகு மொகு என்று கொந்தளிக்கவும், பெரிய மேருமலை திடு திடு என்று இடிபட்டுப் பொடிபடவும், பலவகைய பூதர்கள் விதம் விதமாகத்

திமி திமி என்று களிப்புறவும், சண்டைசெய்த சூரன் (மாமரம்) நெறு நெறு என்று முறியவும், (இதைக்கண்ட) பல தேவர்களும் ஜெய ஜெய என்று போற்றவும் கொதிக்கின்ற (கோபித்து எழும்) வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

அழகு கொண்டுள்ள கடப்பமாலையை அணிந்தவனே! சரவணத்தில் (உற்பவித்தவனே) தோன்றினவனே! வேலனே! வெற்றியைத் தருவதும், (கெற்சிதம்) முழங்கி ஒலிப்பதும், நீலநிறம் உள்ளதுமான மயில்வீரனே!

திரு அண்ணமலை, திருத்தணி, (நாகமலை) திருச்செங்கோடு, பழநிநகர், (கோடை) வல்லக்கோட்டை இத்தலங்களில் வாழும் தலைவனே! திரு இடைக்கழி மேவும் பெருமாளே!

(உனது திருப்புகழ் ஓத அருள்வாயே)

801. வேசையர் மயக்கு அற

தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன தனதான

பெருக்க மாகிய நிதியினர் வரின்மிக
நகைத்து வாமென அமளிய ருகுவிரல்
பிடித்து போயவர் தொடையொடு தொடைபட வுறவாடிப்-

பிதற்றி யேயள விடுபண மதுதம
திடத்தி லேவரு மளவுந லுரைகொடு
பிலுக்கி யேவெகு சரசமொ டணைகுவர் கனமாலாய்;

முருக்கி னேரித ழமுதுப ருகுமென
வுரைத்து லீலைக ளதிவித மொடுமலை
முலைக்கு ளேதுயில் கொளமயல் புரிகுவர் *பொருள்தீரின்-

முறுக்கி யேயுதை கொடுவசை யுரைதரு
மனத்து ரோகிக ளிடுதொழில் வினையற
முடுக்கி யேயுன திருகழல் மலர்தொழ அருள்தாராய்;

நெருக்கி யேவரு மவுணர்கள் குலமற
வுறுக்கி யேமயில் முதுகினில் விசைகொடு
நிலத்தி லேசமர் பொருதவ ருயிர்பலி கொளும்வேலா-

†நகத்தி லேஅயன் முடிபறி யிறை‡திரி
புரத்தி லேநகை புரிபர னடியவர்
நினைப்பி லேயருள் தருசிவ னுதவிய புதல்வோனே;

செருக்கு வேடுவர் தருமொரு சிறுமியை
மருக்கு லாவிய மலரணை மிசைபுணர்
திருக்கை வேல்வடி வழகிய குருபர முருகோனே-

* பொருள் தீர்ந்தால் வேசையர் செய்யும் செயல்—1147 ஆம் பாடலைப் பார்க்க. வேசையர் பொருள் உள்ள வரையில்தான் நேசிப்பார் என்பது—

"விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே யறுமே அவரன்பும்
கைய்ற்ற கண்ணே அறும்" —நாலடியார்.

† பிரமன் தலையை நகத்தால் கிள்ளியது—பாடல் 286—பக்கம் 209 கீழ்க்குறிப்பு.

‡ திரிபுரம் எரித்தது—பாடல் 285 பக்கம் 200 கீழ்க்குறிப்பு.

801

திரண்டு பெருகியுள்ள செல்வத்தை உடையவர்கள் தம்மாட்டு வந்தால், மிகவும் களித்துச் சிரிப்புடன் வாரும் என்று படுக்கை அருகில் வந்தவரின் விரலைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் அவர் தொடையோடு தம் தொடை நெருங்கிப்பட உறவு மொழிகளைப் பேசி விளையாடி—

பல (அன்பு மொழிகளைப்) பிதற்றி, தாம் கணக்கு வைத்திருந்த பண (முழுமையும்) தம்முடைய இடத்திலே வந்து சேரும் வரைக்கும் நல்ல இன்பகரமான வார்த்தைகளால் (பிலுக்கி)—பகட்டுப் பேச்சுக்களை (தந்திரப் பேச்சுக்களை)ப் பேசி மிக்க இனிய வழியில் அணைவார்கள் — (பின்னும்) பெருத்த அன்பு பூண்டவர்கள் போல

முருக்கம் பூப்போலும் சிவந்த வாயிதழ் அமுதூறலை உண்ணும் என்று கூறி காமலீலைகளிற் பல விதங்கள் காட்டி மலைபோன்ற கொங்கைமீது (சாய்ந்து) தூங்கும்படி மோகம் ஊட்டுபவர்; பொருள் வற்றிப்போனால்—

முறுக்கும் திருப்புமாய்க் கோபக்குறி காட்டி உதையும் உதைத்து வசைப்பேச்சும் (இகழ்ந்துபேசும் பேச்சும்) பேசுகின்ற நன்றி கெட்டவர்கள், மனத்திலே பாதக நினைவு கொண்டவர்கள் — (ஆகிய வேசையர்களின்) செய்யும் செயல்களில் ஈடுபடும் கருத்து அற்றுப்போம்படி விரைவில் என்னைத் திருப்பி உன்னுடைய இரண்டு திருவடிமலர்களைத் தொழும்படியான திருவருளைத் தந்தருளுக.

நெருங்கிவந்த அசுரர்களின் கூட்டம் அழிபடக் கோபித்து, மயிலின் முதுகில் வேகமாய் வந்து இந்தப் பூமியிற் போர்செய்தவர்களாகிய அந்த அசுரர்களின் உயிரைப் பலிகொண்ட வேலனே!

கைந்நகத்தால் பிரமனுடைய தலையைக் கிள்ளிப்பறித்த இறைவன், திரிபுரத்தில் (தீயெழ)ச் சிரித்த பரமன், அடியவர் நினைப்பிலே (நினைத்து வேண்ட) அருள்பாலிக்கும் சிவன் பெற்ற பிள்ளையே!

அகந்தை கொண்ட வேடர்கள் வளர்த்த ஒப்பற்ற (சிறுமி) வள்ளியை, நறுமணம் வீசும் மலர்ப் படுக்கையின்மேல் அணைந்த திருக்கை வேலுடன் திருவுருவம் அழகுள்ள குருபரனே! முருகனே!

சிறக்கு மாதவ முனிவரர் மகபதி
யிருக்கு வேதனு மிமையவர் பரவிய
திருக்கு ராவடி நிழல்தனி லுலவிய பெருமாளே. (சு)

---

802. அகப்பொருள்

தனத்த தானன தனதன தனதான

*மருக்கு லாவிய மலரணை கொதியாதே-
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே;

கருக்கு லாவிய அயலவர் பழியாதே-
கடப்ப மாலையை யினிவர விடவேணும்;

தருக்கு லாவிய கொடியிடை மணவாளா-
சமர்த்த னேமணி மரகத மயில்வீரா;

*திருக்கு ராவடி நிழல்தனி லுறைவோனே-
*திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே. (எ)

---

803. மாதர்மீது மயக்கு அற

தனன தத்தன தனதன தனன தத்தன தனதன
தனன தத்தன தனதன தனதான

முலைகு லுக்கிகள் கபடிகள் வடிவு முக்கைக ளசடிகள்
முறைம சக்கிகள் திருடிகள் மதவேணால்-

மொழிப சப்பிகள் விகடிகள் அழும னத்திகள் தகுநகை
முகமி னுக்கிகள் கசடிகள் இடையேசூழ்;

* இந்த மூன்று அடிகளை 801-ஆம் பாடலிற் காணலாகும்.

சிறப்புற்ற மகாதவசிகளும், முநிசிரேஷ்டர்களும், இந்திரனும், இருக்குவேதம் வல்ல பிரமனும், தேவர்களும் போற்றிப் பரவின பெருமாளே! திருக்குராமரத்தின் அடிநிழலில் விளங்கிப் பொலியும் பெருமாளே!

(இருகழல் மலர்தொழ அருள்தாராய்)

802.

நறுமணம் கமழும் மலர்ப்படுக்கை கொதித்துச் சுடுதராமலும்—

வளர்த்த தாயும் சுற்றத்தாரும் வசைமொழிகளைப் பேசாமலும்—

(கரு) காரணம் வைத்துக்கொண்டு (குலாவிய) நட்பாடின (அல்லது கருக்கு உலாவிய — புத்திகூர்மை கொண்ட) அயலார்கள் பழிச்சொல் கூறுமலும் (நீ உனது)

கடப்ப மலர்மாலையை இனி அனுப்பிவைக்க வேண்டுகின்றேன் ;

கற்பக விருக்ஷத்தின் கீழ்விளங்கிய கொடிபோன்ற இடையை உடைய தேவசேனையின் மணவாளனே !

சமர்த்தனே ! மணிநிறம் மரகத நிறம் கொண்ட மயில் வீரனே !

திருக்குராமரத்தின் அடிநிழல் தன்னில் வீற்றிருப்பவனே!

திருக்கையில் வேல் (ஏந்தின), திருவுருவம் அழகுள்ள, பெருமாளே! (கடப்பமாலையை இனிவர விடவேணும்)

803.

கொங்கையைக் குலுக்குபவர்கள், வஞ்சனை நெஞ்சினர், வடித்து எடுக்கப்பட்ட புழுக்கைகள் (பிழுக்கைகள்), முட்டாள்கள், (மாமா, அத்தான் என) முறை கூறி (அல்லது) அவர்கள் குலதரும முறைப்படி) மயங்கச் செய்பவர்கள், திருடிகள், காமவேளினுடைய நூலிற் (கொக்கோக சாத்திரத்திற்) கூறியபடி—

பேச்சினால் ஏய்ப்பவர்கள், (விகடிகள்) கபடம் (அல்லது செருக்கு) உடையவர்கள், சிணுங்கி அழுகின்ற மனத்தை உடையவர்கள், தக்க சிரிப்புடன் முகத்தை மினுக்குபவர்கள், குற்றம் உள்ளவர்கள், இடையில் — இடுப்பிற் சூழ்ந்துள்ள—

தலைநெ கிழ்த்திக ளிளைஞர்கள் பொருள்ப றித்தம ளியின்மிசை
கனியி தழ்ச்சுருள் பிளவிலை யொருபாதி-

கலவி யிற்றரும் வசவிகள் விழிம யக்கினில் வசமழி
கவலை யற்றிட நினதருள் புரிவாயே ;

அலைநெ ருப்பெழ வடவரை பொடிப டச்*சம ணர்கள்குலம்
அணிக ழுப்பெற நடவிய மயில்வீரா-

†அரன ரிப்பிர மர்கள்முதல் வழிப டப்பிரி யமும்வர
அவர வர்க்கொரு பொருள்புகல் பெரியோனே ;

‡சிலைமொ ழுக்கென முறிபட மிதிலை யிற் *சந கமனருள்
திருவி ணைப்புண ரரிதிரு மருகோனே-

திரள்வ ருக்கைகள் கமுகுகள் சொரிம துக்கத லிகள்வளர்
திருவி டைக்கழி மருவிய பெருமாளே. (அ)

தான்தோன்றி.

[இஃது ஆக்கூர் என்னும் ஸ்தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல்பெற்றது. மாயூரத்துக்குக் கிழக்கு 10-மைல். இத்தலத்தி லுள்ள ஆலயத்துக்குத் "தான்தோன்றி மாடம்" எனப் பெயர். "தான் தோன்றி யப்பர்" என்பது ஆக்கூரிற் சிவபிரான் திருநாமம். 'தான் தோன்றிமலை' கருவூரிலிருந்து 2 மைல். மலை சிறிது.

---

* சமணர்களைக் கழுவேற்றினது—பாடல் 181-பக்கம் 422 கீழ்க் குறிப்பு.

† முருகவேள் மூவர்க்கும் உபதேசித்தது.

1. சிவனுக்கு உபதேசித்தது—பாடல் 327—பக்கம் 314.

2. திருமாலுக்கு உபதேசித்தது. (ராமாவதாரத்தில்)—சிவஞானம் உபதேசிக்கப் பெற்றார்.

"மன்றல் கமழ் கடம்பணிந்த வரைமார்பன் எதிர்தோன்றி
நன்றருளுஞ் சிவஞானம் நயந்தேற்றுப் பதிபுக்கான்"—
(தணிகைப்புராணம்—இராமனருள்பெறு—44)

3. பிரமனுக்கு உபதேசித்தது :—திருவேரகத்தில் பிரமன் முருகவேளை நோக்கித் தவஞ்செய்ய பிரணவத்தின் உண்மையை உபதேசிக்கப் பெற்றான்.—(திரு ஏரக மான்மியம் பக்கம் 103)

[தொடர்ச்சி 373 ஆம் பக்கம் பார்க்க]

ஆடையைத் தளர்த்தி விடுபவர்கள், இளைஞர்களின் பொருளைப் பறித்துப் படுக்கையிலே கனிபோன்ற தங்கள் வாயிதழில் உள்ள சுருள் பாக்கு வெற்றிலையில் ஒரு பாதி—

புணர்ச்சி வேளையில் தருகின்ற (வசவிகள்) தேவதாசிகள் (அல்லது) கெட்ட நடத்தை உடையவர்கள், (ஆகிய பொதுமகளிரின்) கண் மயக்கிலே நான் வசம் அழியும் கவலை எனைவிட்டொழிய உன்னுடைய திருவருளைப் பாலித்தருளுக.

கடல் திக் கொப்புளிக்க, வடக்கிலுள்ள (வரை) (கிரௌஞ்ச)மலை பொடியாக, சமணர்களின் கூட்டம் வரிசையாய் வைக்கப்பட்டிருந்த கழுவில் ஏறக் காரியத்தை நடத்தின மயில் வீரனே!

அரன், அரி, பிரமன் மூவரும் முன்பு வழிபட்டுப் போற்ற அவர்கள்மேல் அன்பு பூண்டு, அவரவர்க்கு ஒப்பற்ற ஒரு (உபதேசப்) பொருளை உபதேசித்த பெரியவனே!

‡ வில் மொளுக்கென்று முறிபட மிதிலாபுரியில் சநகராஜன் அருளின (திருவினை) லக்ஷ்மீகரம் கொண்ட சீதையை அணைந்த திருமாலின் திருமருகனே!

திரண்டுள்ள பலா, கமுகு, சொரிகின்ற தேன்கொண்ட வாழை இவை யெல்லாம் வளர்கின்ற திருவிடைக்கழி என்னும் ஊரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(கவலை யற்றிட நினதருள் புரிவாயே)

(372-ஆம் பக்கத் தொடர்ச்சி)

‡ **ராமபிரான் சனகர் முன்னிலையில் வில்லை முறித்தது :**

வில்லதனை ஆண்டகை நாணினி தேற்றினன் **
தாள்மடுத்து முன்பயில் சூத்திரமிது எனத் தோளின்வாங்கினன்
ஏத்தினர் இமையவர் இழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே -(கம்பராமா-கார்முக-61.)

† சநக மன்—ஜநக ராஜன்.

804. கழல் தொழ

தாந்தாந்த தத்ததன தாந்தாந்த தத்ததன
தாந்தாந்த தத்ததன தனதான

*சூழ்ந்தேன்ற துக்கவினை சேர்ந்தூன்று மப்பில்வளர்
†தூண்போன்ற இக்குடிலு முலகூடே-

சேர்ந் ‡தாய்ந்து மக்கினியில் நூண்சாம்பல் பட்டுவிடு
தோம்பாங்கை யுட்பெரிது முணராமே;

வீழ்ந்திண்டி நற்கலைகள் தான்தோண்டி மிக்கபொருள்
வேண்xமங்கை யிட்டுவர குழுவார்போல்-

வேம்பாங்கு மற்றுவினை யாப்பாங்கு மற்றுவினை
வாம்பாங்கில் நற்கழல்கள் தொழஆளாய்;

வாழ்ந்தான்ற கற்புடைமை வாய்ந்தாய்ந்த நற்றவர்கள்
வான்தோன்று மற்றவரு மடிபேண-

oமான்போன்ற பொற்றொடிகள் தாந்தோய்ந்த நற்°°புயமும்
வான்திண்ட வுற்றமயில் மிசையேறித்;

தாழ்ந்தாழ்ந்த மிக்ககடல் வீழ்ந்திண்டு வெற்பசுரர்
சாய்ந்தேங்க வுற்றமர்செய் வடிவேலா-

தான்தோன்றி யப்பர்குடி வாழ்ந்தீன்ற நற்புதல்வ
தான்தோன்றி நிற்கவல பெருமாளே. (க)

---

* சூழ்ந்து என்ற வினை—வினை நம்மைச் சூழ்ந்துளது. அது காலணி 'பாடகம்' போலச் சூழ்ந்துளது என்றார் கல்லாடத்தில் "பழவினை புகுந்த பாடகம் போல"

† தூண் — பாரந் தாங்குவது — "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்து சால் பூன்றிய தூண்" திருக்குறள் 983

‡ ஊய்தல்—பத னழிதல்.

x ஈங்கையிட்டு வர குழுவார் போல்—பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுபவர்போல; ஈங்கை—ஈகை: பொன். 'பொற் கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்' என்பர் உய்யவந்த தேவ நாயனாரும். (திருவுந்தியார்-38.)

o இப் பொற்றொடிகளை 'அருட்கொடி யிரண்டு' என்றார் கல்லாடத்தில் 59

°° புயமும்—புயமும் பிற அங்கமுந் தோன்ற.

804

சூழ்ந்து சம்பவிக்கின்ற துக்கந்தரும் வினைகள் ஒன்றுகூடி நிலைபெறுவதற் கிடமானதுப், நீரால் வளருவது மான தூணை யொத்த இந்த உடலும் உலகிடையே—

தளர்ச்சியுற்று, பதன் அழிந்து, அக்கினியில் நுண்ணிய சாம்பற் பொடியாகிவிடும் குற்றம் வாய்ந்த தன்மையை நெஞ்சினுள் நன்கு ஆய்ந்து உணராமல்—

(வீழ்ந்து) விரும்பி, விரைவுடன் சென்று, நல்ல கல்வி நூல்களில் ஆழ்ந்து ஆய்ந்து அறிந்து, நிரம்பப் பொருள் தேடவேண்டி, பொற்கொழுக் கொண்டு (பொன்னலாய ஏர்க்காறு கொண்டு) வரகுக்கு உழுபவர்போல

மனம்வேகும் தகைமையும் ஒழிந்து, வினை பெருகும் தகைமையும் ஒழிந்து, நல்ல (கதி) விளையும்படியான தகைமையில் உனது நல்ல திருவடிகளை நான் தொழும்படி என்னை ஆண்டருளுக.

வாழ்வுற்று மேலான செந்நெறி வாய்க்கப்பெற்று ஆய்ந்த ஒழுக்கத்தில் உள்ள நல்ல தவசிகளும், வானில் உள்ள பிறரும் (தேவர்களும்) (அல்லது—வான்—பெருமை) விளங்கும் பிறரும் உனது திருவடியை விரும்பிப் போற்ற

மான் போன்ற (பொற்றொடிகள்) பொன்வளையல்களை அணிந்த மாதர் (வள்ளி தெய்வயானை) இருவரும் அணைந்துள்ள நல்ல புயமும் (பிற அங்கங்களும்) தோன்ற, ஆகாயத்தை அளாவும்படி உயர்ந்துள்ள மயில்மேல் ஏறி—

கீழே மிக ஆழ்ந்துள்ள பெரிய கடலில் வீழ்ந்து நெருங்கியிருந்த (எழு) கிரியிலிருந்த அசுரர்கள் தளர்வுற்று வருந்தும்படிப் போய்ப் போர்புரிந்த கூர்வேலனே!

*'தான் தோன்றியப்பர்' என்னும் திருநாமத்தை உடைய சிவபிரான் (திரு ஆக்கூர்ச் சிவன்) தேவியுடன் குடிகொண்டிருந்து வாழ்ந்து தந்த நல்ல குமரனே! தானே தோன்றி (சுயம்பு மூர்த்தியாய் விளங்கி) நிற்கவல்ல பெருமாளே!

(நற்கழல்கள் தொழ ஆளாய்)

---

* 'தானே தழைந்து சிவமாகித் தானே வளர்ந்து தானே இருந்த தார்வேணி யெந்தை'—திருப்புகழ் 1220.

கந்தன் குடி.

[சோழநாட்டிற் பேரளம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல்; அம்பகரத்தூர் ஸ்டேஷனி லிருந்து 1-மைல்.]

805. பவம் அற

தந்தந்தன தந்தந்தன தந்தந்தன தந்தந்தன
தந்தந்தன தந்தந்தன தனதான

*எந்தன்சட லங்கம்பல பங்கம்படு தொந்தங்களை
யென்றுந் துயர் பொன்றும்படி யொருநாளே-
இன்பந்தரு செம்பொன்கழ லுந்துங்கமுல் தந்தும்பினை
†யென்றும்படி பந்தங்கெட மயிலேறி;
வந்தும்பிர சண்டம்பகி ரண்டம்புவி யெங்குந் திசை
மண்டும்படி நின்றுஞ்சுட ரொளிபோலும்-
வஞ்சங்குடி கொண்டுந்திரி நெஞ்சன்துக ளென்றுங்கொளும்
வண்டன்தமி யன்றன் **பவம்** ஒழியாதோ;
தந்தந்தன திந்திந்திமி யென்றும்பல சஞ்சங்கொடு
தஞ்சம்புரி கொஞ்சுஞ்சிறு மணியாரம்-
சந்தந்தொனி கண்டும்புய லங்கன்சிவ னம்பன்பதி
சம்புந்தொழ நின்றுந்தினம் விளையாடும்;
கந்தன்குக னென்றன்குரு வென்றுந்தொழு ‡மன்பன்கவி
கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே-
கண்டின்கனி சிந்துஞ்சுவை பொங்கும்புனல் x தங்குஞ்சுனை
கந்தன்குடி யின்தங்கிய பெருமாளே. (க)

---

* எந்தன் —என்றன்; மரூஉ.

† என்றும்படி — எப்போதும் போல.

‡ அன்பன்—நக்கீரர்; அவர் வரலாற்றைப் பாடல் 91—பக்கம் 212 கீழ்க்குறிப்பிற் காண்க.

x 'தங்கும் பொழில் கந்தங்கொள் பரங்குன்றமர்' எனவும் பாடம்

805.

என்னுடைய (சடலமாகிய அங்கம்) உடலாகிய உறுப்பு பல வகைத்தான (பங்கம்) இடர்களிற்படும் (தொந்தங்கள்) தொடர்புகள், எக்காலத்தும் உள்ள துயர்நிலை இவை ஒழியும்படியான ஒரு நாள் உண்டா!

இன்பத்தைத் தரும் (உனது) செம்பொன்னலாய கழல் என்னும் காலணிகள் பொருந்திய (கழல் தந்தும்) திருவடிகளைத் தந்து பின்பு எப்போதும்போலப் (பந்தம் கெட) பாசபந்தங்கள் அழிய நீ மயிலில் ஏறி—

வந்து—(பிரசண்டம் பகிரண்டம் புவியெங்கும் திசை மண்டும்படி சுடரொளிபோலும் நின்று) வீரத்துடன் வெளியிலே உள்ள அண்டங்கள், பூமி எங்கும், திசையெல்லாம் நிறையும்படி பெருஞ்சோதி போல நின்று—(தரிசனந் தந்து) நின்று, அவ்வாறு நீ நிற்பதால்—

வஞ்சகமே குடிகொண்டு திரிகின்ற நெஞ்சினனும், குற்றமே என்றும் செய்கின்ற (வண்டனும்) தீயோனுமான தனியனேனுடைய (பவம்) பிறப்பு ஒழியாதோ–நீங்காதோ!

தந்தந்தன திந்திந்திமி என்றும், (பல சஞ்சம்கொடு) சஞ் சஞ் என்னும் பல ஒலியுடனேயும், தஞ்சம்புரி (அடியார்களுக்கு அடைக்கலம் — புகல் அளிக்கின்றேன் என்று சொல்வதுபோலக்கொஞ்சி ஒலிக்கும் சின்னமணி மாலைகளின்

சந்த ஒலியைக் கண்டும், புயல் அங்கன்—மேகநிற உடலை உடைய திருமால், (சிவனம்பன்)—சிவன் என்னும் பெரியோன், (படைப்புப்) பதி–தலைவனுகிய (சம்பு) பிரமன்—(மூவரும்) தொழ விளங்கி நின்று, தினந்தோறும் (அடியார் உள்ளத்தில்) விளையாடுகின்ற—

கந்தனே! குகனே! என்றன் குருவே! என்று தொழுத (அன்பன்) நக்கீரருடைய பாடலைக் கேட்டு (அவர்) (அடைபட்ட குகையினின்றும்–பூதத்தினின்றும்) பிழைத்து உய்யும்படி அன்று அன்புடன் (அவர்முன்) வந்தவனே!

(கற்கண்டுபோல இனிக்கும்) பழங்கள் சிந்துவதால் சுவை மிக்க நீர் உள்ள சுனைகள் விளங்கும் **கந்தன்குடி** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(தமியன் தன் பவம் ஒழியாதோ)

திலதைப்பதி.

[இத்தலம் "கோயிற்பத்து" என வழங்கும். பேரளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு சுமார் 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

806. மலம் அற

தனனத் தனன தனதான

*இறையத் தனையோ அதுதானும்-
இலை†யிட் டுணலேய் தருகாலம் ;
அறையிற் பெரிதா மலமாயை-
அலையப் படுமா றினியாமோ ;
‡மறையத் தனைமா சிறைசாலை-
வழியுய்த் துயர்வா னுறுதேவர் ;
சிறையைத் தவிரா விடும்வேலா-
திலதைப் பதிவாழ் பெருமாளே. (க)

807. சிற்றின்பம் அற

தனனத் தனன தந்த தனனத் தனன தந்த
தனனத் தனன தந்த தனதான

பனகப் படமி சைந்த xமுழையிற் றரள நின்று
oபடர்பொற் பணிபு னைந்த முலைமீதிற்-

---

* இறை—அற்ப அளவு—அணு அளவு ;
"இறையு ஞானம் இலாத என் புன்கவி"
—கம்பரா-சிறப்பு 10.
"விரலால் இறை ஊன்றினான்"—சம்பந்தர் 2-121-8.

† "நித்தம் இருபிடி சோறு கொண் டிட்டுண்டிரு"
—(கந்தரலங்காரம் 57)
"நாம் போம் அளவும் எமக்கென்னென்
றிட்டுண் டிரும்"—ஔவையார்-நல்வழி 11.

‡ மறை அத்தனை—பிரமனை.
பிரமனைச் சிறையிட்டது : பாடல் 212-பக்கம் 42 கீழ்க்குறிப்பு

x 'பனகப்பட மிசைந்த மணியில்' என்றும் பாடம். மணி—பெண்குறியின் ஓர் உறுப்பு.

o 'பவளப் பணி புனைந்த' என்றும் பாடம்.

திலதைப்பதி

806

(இறை யத்தனையோ அது தானும்) அணு எவ்வளவோ அவ்வளவு கூட—

இல்லை (ஒருவருக்கு) இட்டபின் நாம் உண்ணுதல் என்னும் அறநெறி என்னிடத்தில்; இங்ஙனம் பொருந்திய காலம் [இறை யத்தனையோ அது தானும் இலையிட்டுணல்—இட்டு உண்ணல் இறை யத்தனையோ அது தானும் இலை — ஒருவருக்கு இட்டபின் நாம் உண்ணுதல் என்னும் அறநெறி என்னிடத்தில்) இறை யத்தனை அற்ப அளவு கூட—(கொஞ்சமேனும்) (இலை) கிடையாது; ஏய்தரு காலம்—இங்ஙன் (பொருந்திய) வீணுகச் சென்ற காலம்]—

[அறையில்] சொல்லப்புகின் மிகப் பெரிதாம் — எவ்வளவோ நீண்டகாலம் இங்ஙனம் 'இட்டு உணலை'க் கைவிட்டேன்; மலத்தினும் மாயையினும்—

அலைச்சல் உறும் [இத் தீ]நெறி இனி ஆமோ—இனிக் கூடாது என்றபடி;

வேதம்கற்ற தலைவன் பிரமனைப் பெரிய சிறைச்சாலைக்குப்

[போகும் வழியில் விட்டு] போம்படி வைத்து, உயர்ந்த வானத்தில் உள்ள தேவர்களின்

சிறையை நீக்கிவிட்ட வேலனே!

திலதைப்பதி என்னும் தலத்தில் வாழ்கின்ற பெருமாளே.

[அலையப்படுமா றினியாமோ]

807.

(பன்னகம்) பாம்பின் படம்போல் உள்ள [முழையில்]—குகைபோன்ற அல்குலிலும், [தரளம்] முத்துமணி நின்று அசைந்து உலவும் அழகிய, அல்லது பொன்னலாய, ஆபரணங்களைப் பூண்டுள்ள கொங்கை மேலும்—

பரிவற் றெரியு நெஞ்சில் முகிலிற் கரிய கொண்டை
படுபுட் பவன முன்றி லியலாரும் ;

அனமொத் திடுசி றந்த நடையிற் கிளியி னின்சொல்
அழகிற் றனித ளர்ந்து மதிமோக-

மளவிப் புளக கொங்கை குழையத் தழுவி யின்ப
அலையிற் றிரிவ னென்று மறிவேனோ ;

தனனத் தனன தந்த தனனத் தனன தந்த
தனனத் தனன தந்த தனதான-

தகிடத் தகிட தந்த திமிதத் திமித வென்று
*தனிமத் தளமு ழங்க வருவோனே ;

செநெனற் கழனி பொங்கி திமிலக் கமல மண்டி
†செறிநற் கழைதி ரண்டு வளமேவித்-

திருநற் சிகரி துங்க வரையைப் பொருவு கின்ற
தில்லைப் பதிய மர்ந்த ‡ பெருமாளே. (உ)

808. புகழ் கூ.ற

தனனத் தனத்த தந்த தனனத் தனத்த தந்த
தனனத் தனத்த தந்த தனதான

மகரக் குழைக்கு ளுந்து நயனக் கடைக்கி லங்கு
வசியச் சரத்தி யைந்த குறியாலே-

வடவெற் பதைத்து ரந்து களபக் குடத்தை வென்று
மதர்விற் பணைத்தெ ழுந்த முலைமீதே ;

---

* இசை முழங்கும் இடத்தில் முருகன் வருவான் : "இன்னியம் கறங்க..... ஆண்டு உறைதலும்"—திருமுருகாற்.

† "தெளியப் புனலியங்கு புலியூரா—
திருபொற் புகழிலங்கு மருணைப் பதியில் வந்து
தில பொற்பதி யமர்ந்த பெருமாளே"—என்றும் பாடம்
—தில பொற்பதி-தில்லையம்பதி-சிதம்பரம்.

‡ இந்த 807-ஆம் பாடலில்—'முருகர்' சொல்லப்படவில்லை. 'பெருமாளே' என்றதனால்—வழக்கம்போல 'முருகப்பெருமாளே' எனப் பொருள் கொள்ளவேண்டும்.

[பரிவு] உண்மை அன்பு [அற்று] இல்லாமல், [எரியும் நெஞ்சில்] பொருள் வேண்டியே எரிச்சல்படும் [வேசையர்களின்] உள்ளத்திலும், மேகம்போலக் கறுத்த கூந்தலிலும், படுபுள் பவன முன்றில்–புட்குரலுக்கு [எட்டுப் பறவைகள் செய்யும் புட்குரல்களுக்குப்] பவனம் — இருப்பிடமான [முன்றிலில்]—வெளியிடமாம் [கழுத்திலும்], இயல் ஆரும் — தகுதி நிறைந்துள்ள—

அன்னநடைக்கு ஒத்த சிறந்த நடையிலும், கிளியின் இனியமொழிக்கு ஒப்பானசொல்லிலும், அழகிலும், தனித்து நின்று தளர்ந்தும், அதிக மோகம் [காம இச்சை] (அல்லது (மதி) அறிவானது மோகத்தை)

[அளவி] கொண்டு—அதில் மனம் கலந்து, புளகங் கொண்டுள்ள கொங்கைகள் குழையும்படியாகத் தழுவி இன்பக்கடலில் திரிகின்றவனை நான் என்றேனும் [அல்லது எப்போதும்] [உன்னை] அறிவேனோ! [அறிந்து உய்வேனோ]!

தனனத் தனன தந்த...தன தானு

தகிடத் தகிட தந்த திமிதத் திமித என்று தனியாக மத்தளம் ஒலிக்க வருபவனே!

செம்மையான நெற்பயிர் விளையும் நல்ல கழனிகள் செழிப்புற்று ஓங்கி, [திமிலம்] பெரிய மீன்களும், தாமரையும் நிறைந்து, நெருங்கிய நல்ல கரும்புகள் திரட்சியாக வளர்ந்து வளப்பம் உற்று,

அழகிய நல்ல சிகரங்களை உடைய உயர்ந்த மலைக்கு நிகராக விளங்கும் திலதைப்பதி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! [என்று மறிவேனோ]

808.

மகர மீன்போல அமைந்த குழைகள் மீது தாவிப்பாயும் கண்களின் (கடையில்) ஓரத்தில் விளங்கும் (வசி) கூர்மை வாய்ந்த(அச்சரத்தில்)—அல்லது வசியம் செய்யவல்ல— அந்த அம்பால் ஏற்பட்ட குறியாலும்—

(வடவெற்பு) மேருமலையை (துரந்து) (வடக்கே) ஓட வைத்து, சந்தனக்கலவை அணிந்த குடத்தை ஜெயித்து, (மதர்வில்) செழிப்புடன் பெருத்து எழுந்த கொங்கைமேலும்—

உகமெய்ப் பதைத்து நெஞ்சும் விரகக் கடற்பொ திந்த
வுலைபட் டலர்ச்ச ரங்கள் நலியாமல்-
உலகப் புகழ்ப்பு லம்பு கலியற் றுணர்ச்சி கொண்டு
*னுரிமைப் புகழ்ப்ப கர்ந்து திரிவேனோ;
†புகர்கைக் கரிப்பொ திந்த முளரிக் குளத்தி ழிந்த
பொழுதிற் கரத்தொ டர்ந்து பிடிநாளிற்-
பொருமித் திகைத்து நின்று வரதற் கடைக்க லங்கள்
புகுதக் கணத்து வந்து கையிலாருந்;
திகிரிப் படைத்து ரந்த வரதற் குடற்பி றந்த
சிலைதற் பரைக்கி சைந்த புதல்வோனே-
‡சிவத்தர் முத்த ரும்பர் தவசித்தர் சித்த மொன்று
திலதைப் பதிக்கு கந்த பெருமாளே. (ந)

திருவம்பர்.

[பேரளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு சுமார் 4-மைலி லுள்ள 'அம்பர் மாகாளம்' என்னும் தலத்துக்குக் கிழக்கு சுமார் 1-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய தேவாரம் பெற்றது.

809. (பிறவி யற)

தான தந்தனந் தான தந்ததன
தான தந்தனந் தான தந்ததன
தான தந்தனந் தான தந்ததன தந்ததான

சோதி மந்திரம் போத கம்பரவு
ஞான கம்பரந் தேயி ருந்தவெளி
தோட லர்ந்தபொன் பூவி ருந்த இட முங்கொளாமல்-

---

* 'புகழ்ப் பகர்ந்து திரிவேனோ'-இவ் வேண்டுகோள் வயலூரில் அருணகிரியார்க்குச் சித்தித்தது. "திருப்புகழ் நித்தம் பாடும் அன்பது செய்ப்பதியிற் றந்தவன் நீயே" என வருதல் காண்க; (திருப்பு. -105) இந்த 4-ஆம் அடி மனப்பாடத்துக்குத் தக்கது.

† கஜேந்திர மோக்ஷம்—பாடல் 110-பக்கம் 262.

‡ இந்த அடி (திலதைப்பதி) சம்பந்தர் தேவாரத்தில் வரும்—
[தொடர்ச்சி 383 ஆம் பக்கம் பார்க்க]

உகமெய்ப் பதைத்து (மெய் உகப் பதைத்து) உடல் நடுங்கிப் பதைப்புற என் நெஞ்சும் காமமோகக் கடலில் ஏற்பட்ட விரகாக்கினி உலையில் அவஸ்தைப்படுமாறு (மன்மதனது) மலர்ப்பாணங்கள் என்னை வேதனைப் படுத்தாமல்—

உலகினரின் புகழ்க் கூச்சல் என்னும் (கலி) செருக்கு நீங்கி, ஞான உணர்ச்சிகொண்டு உனக்கு உரித்தான திருப்புகழைச் சொல்லி நான் திரியலாகாதா! (திரியவேண்டும் என்றபடி)

புள்ளியை உடைய துதிக்கையை உடைய யானை (கஜேந்திரன்)—(முளரி பொதிந்த குளத்து) - தாமரை நிறைந்திருந்த குளத்தில் (இழிந்த பொழுதில்) இறங்கினபோது (கர) முதலை, (அந்த யானையைத்) தொடர்ந்து பிடித்த அந்த நாளில்—

துன்புற்றுத் திகைத்து நின்று, வரதராம் திருமாலுக்கு அடைக்கல முறையீடுகள்செய்ய, ஒரு க்ஷணப்பொழுதில் வந்து தமது திருக்கையில் விளங்குகின்ற

சக்கரப்படையை ஏவின அந்த வரத (ராஜப்) பெருமானுக்கு உடன் பிறந்தவளாகிய சிவை, (தற்பரை) பராசத்திக்கு இனிய குழந்தையே!

சிவபக்தர்கள், முத்தர் (முத்திநிலை பெற்றவர்), தேவர், தவம்நிறை சித்தர் இவர்கள் மனது பொருந்தி (வணங்கும்) **திலதைப்பதித்** **தளத்தில்** மகிழும் பெருமாளே!

(புகழ்ப் பகர்ந்து திரிவேனோ)

திரு அம்பர்

809

(யோகத்தால் அடையப்படும்) ஜோதி ஒளி மண்டபம், (ஞான) உபதேச அனுக்கிரகத்தால் அடையக்கூடிய (ஞான—கம்—ஞான அகம்) ஞானாகாச மாம் பரந்த பெருவெளி, (புண்ணியத்தால் அடையப்படும்) இதழ் அவிழ்ந்த பொன்மலர் இருந்த இடம் (கற்பகப் பொன்மலர் மணக்கும் தேவருலகம்) இத்தகைய மேலான பதங்களை அடையும் முயற்சியைக் கொள்ளாமல்—

'பத்தர் சித்தர் பணிவுற் றிறைஞ்சுந் திலதைப்பதி'-2-118-10. என்பதைத் தழுவுகின்றது. முத்தர் — (ஆவி முத்தர்) இவர்கள் விழிக்குத்தான் இறைவன் புலப்படுவான் — "ஆவி முத்தர்தம் விழியினன்றி முன்னுறா நிமல மூர்த்தி"—கந்தபுரா 1-14-30.

சூது பந்தயம் பேசி யஞ்சுவகை
சாதி விண்பறிந் தோடு கண்டர்மிகு
தோத கம்பரிந் தாடு சிந்துபரி கந்துபாயும்;
வீதி மண்டலம் பூண மர்ந்துகழி
கோல மண்டி நின் றுடி யின்பவகை
வேணு மென்று கண் சோர ஐம்புலனொ டுங்குபோதில்-
*வேதி யன்புரிந் தேடு கண்டளவி
லோடி வெஞ்சுடுங் காட ணைந்துசுட
வீழ்கி வெந்†துகுந் திடு மிந்த இட ரென்றுபோமோ;
‡ஆதி மண்டலஞ் சேர வும்பரம
சோம மண்டலங் கூட வும்பதும
வாளன் மண்டலஞ் சார வுஞ்சுழிப டர்ந்ததோகை-
ஆழி மண்டலந் தாவி யண் டமுத
லான மண்டலந் தேடி யொன் xறதொமு
கான மண்டலஞ் சேட னங்கணயில் கொண்0டுலாவிச்;
சூதர் மண்டலந் தூளெ ழுந்து பொடி
யாகி விண்பறந் தோட மண்டி யொரு
சூரி யன்திரண் டோட கண்டு**நகை கொண்டவேலா-
‡‡சோடை கொண்டுளங் கான மங்கைமய
லாடி இந்திரன் தேவர் வந்து தொழ
சோழ மண்டலஞ் சாரு மம்பர் வளர் தம்பிரானே. (க)

---

* 'வேதியன் ..எடு'—பாடல் 760 பார்க்க. † உகுந்தீடும்—உகுந்திடும்; சந்தநோக்கி நீண்டது. ‡ ஆதி மண்டலம்—ஆதித்த மண்டலம். x அதோமுகமான மண்டலம்—பாதாள லோகம்.

0 மயில் இங்ஙனம் உலவும் ஆற்றல்—"தடக்கொற்ற" என்னும் அலங்காரச் செய்யுள் 96 பார்க்க.

** இந்தப் பாடலில் 5-6-7 அடிகள் முருகன் திருவிளையாடல்களைக் குறிக்கின்றன.

'ஆதவ முதல்வன் தன்னை அவிர்மதிப் பதத்தில் ஓச்சும்
சீதள மதியை வெய்யோன் செல்நெறிப் படுத்திச் செல்லும்'
—கந்தபுரா 1-14-26.

'ககன வட்டத்திைெடு பருதி வட்டத்தைவளை
திகிரி வட்டத்திலிட்டு'
—முத்துக்குமார...பிள்ளைத்தமிழ்-செங்கீரை-3.

‡‡ சோடை—விருப்பம் "சமர்புரி சோடை கொண்டனன்"
—விநாயகர் புரா-74-64.

சூதாட்டப் பந்தயங்கள் பேசி, அஞ்சுவகை சாதி—ஐந்து வகைப்பட்ட ஜாதியர்-(இனத்தினராம்) ஐம்புலன்கள் - விண்ணையும் நிலை பெயர்த்து ஓடவல்ல (கண்டர்) வீரர்கள், மிக்க (தோதகம்) வஞ்சகச் செயல்களை அன்பு காட்டுவதுபோலப் புரிந்து, (சிந்துபரி) - கடற் குதிரை - வடவா முகாக்கினி (கந்துபாயும்) முழுப்பாய்ச்சல் பாய்வது போலப் பாய்ந்து செல்லும்

வீதி மண்டலம் — வீதி வட்டத்தில், பூண் அமர்ந்து — பூணுதலைக் கொண்டு - சிக்கிக்கொண்டு, கழி - மிக்க, கோலமண்டி - அலங்காரங்கள் நிறையும்படி நின்று அனுபவித்து - இன்பவகையே வேண்டுமென்னும் கண் நோக்கத்தால் தளர்ந்து — (ஈற்றில்) ஐம்புலன்களும் ஒடுங்குகின்ற அந்தச் சமயத்தில்

(வேதியன்) பிரமன்—(புரிந்து) தெரிந்து அனுப்பின (ஏடு—சீட்டைப் பார்த்த அளவில், (ஓடி) உயிர் பிரிந்து ஓட, கொடிய சுடுகாட்டைச் சேர்ந்து (உற்றார்) என் உடலைச் சுட்டெரிக்கக் கழிந்துபோய் வெந்து (உகுந்திடும்) சாம்பலாகச் சிதறிப் போகின்ற இந்த வருத்தம் என்று ஒழியுமோ!

(ஆதித்த மண்டலம்) சூரிய மண்டலங்கள் ஒன்று சேரவும், சிறந்த சந்திரமண்டலம் அதனுடன் கூடவும், தாமரையில் வீற்றிருக்கும் பிரமனது உலகம் அங்கு கூடவும், வளைவு காட்டும் (கண் போன்ற வளைவுகள்) படர்ந்துள்ள தோகையைக் கொண்ட (உனது) மயில்

கடல் வட்டத்தைக் கடந்து அங்கங்கே உள்ள அண்டங்களாம் பிரதேசங்களைத் தேடிப் பொருந்தியும், (அதோ முகான மண்டலம்) கீழே உள்ள பாதாள லோகத்தில் உள்ள ஆதிசேடனை அங்குக் கொத்தி அதை (அயில்) உணவுகொண்டு உலாவவும்

(சூதர்) சூரியர்களின் மண்டலங்கள் தூளெழுந்து பொடியாகி விண்ணிற் பறந்தோடவும் நெருங்கி, அங்ஙனம் நெருங்கி வருவதைக் கண்டு ஒவ்வொரு சூரியனும் உருண்டு புரண்டு ஓடுவதைக் கண்டு (நகை கொண்ட) சிரித்து விளையாடின வேலனே!

(சோடை கொண்டு உளம்) உள்ளத்தில் (சோடை) விருப்பம் கொண்டு, காட்டு மங்கையாம் வள்ளிமீது எழுந்த மோகத்தில் அவளுடன் விளையாடி, இந்திரனுடி தேவர்கள் வந்துதொழச் சோழ மண்டலத்தைச் சார்ந்த **அம்பர்** என்னும் தலத்தில் வாழ்ந்து வீற்றிருக்கும் தம்பிரானே! (இடர் என்று போமோ)

திருமாகாளம்.

[இஃது அம்பர் மாகாளம் என்னும் ஸ்தலமாய் இருக்கலாம். பேரளத்துக்குத் தென்கிழக்கு சுமார் 4-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல்பெற்றது. கீழ்வேளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சுமார் 3-மைல் தூரத்தில் 'ஆனைமாகாளம்' என்னும் ஒரு ஸ்தலம் இருக்கின்றது.]

810. நாம விசேடம்

தானன தானதன தானதன தானதன
தானன தானதன தானதன தானதன
தானன தானதன தானதன தானதன தனதான

காதோடு தோடிகலி யாடவிழி வாள்சுழல
கோலாக லாரமுலை மார்புதைய பூணகல
காரோடு கூடளக பாரமல ரோடலைய அணைமீதே-

காலோடு காலிகலி யாடபரி நூபுரமொ
டேகாச மானவுடை வீசியிடை நூல்துவள
காவீர மானஇத ழூறல்தர நேசமென மிடறூதை;

நாதான கீதகுயில் போல அல்குல் மால்புரள
மார்போடு தோள்கரமொ டாடிமிக நாணழிய
நானுவி நோதமுற மாதரொடு கூடிமயல் படுவேனை-

நானுரு நீயெவனெ னுமலென தாவிகவர்
சீர்பாத மேகவலை யாயுமுன வேகிதமு
*நாதாகு மாரமுரு காஎனவு மோத அருள் புரிவாயே;

பாதாள சேடனுட லாயிரப ணமகுட
மாமேரொ டேழுகட லோதமலை சூரருடல்
பாழாக தூளிவிணி லேறபுவி வாழவிடு சுடர்வேலா-

* 'நாதா குமார முருகா'—'நாதா குமரா நம' என்பது மந்திரம்; 'நாதா குமரா நம' என்றரனர் ஓதாய் என ஓதியது' —கந்தரநுபூதி 36.

திருமாகாளம்

810.

காதிலுள்ள தோடுடன் (இகலி) மாறுபட்டுப் பாயும் கண் வாள்போலச் சுழல, (கோலாகல — ஆரம் — முலை) ஆடம்பரமுள்ளதும் முத்துமாலை அணிந்ததுமானகொங்கை (மார்—புதைய) மார்பை மறைக்க, (மார்பில் உள்ள) ஆபரணங்கள் அகன்றுபோக, மேகம்போன்ற கூந்தற்பாரம் அதிற் சூடியுள்ள மலர்களுடன் அலைய, படுக்கையின்மேல்—

காலுடன் கால் இகலி—மாறுபட்டு அசைய, (பரி) தரித்துள்ள, சிலம்புடன், மேலே அணிந்துள்ள ஆடைவீசப்பட்டு நூல்போன்ற இடை துவட்சியுற, காவீரமான—கவீரமான—செவ்வலரிபோலச் சிவந்த வாயிதழ் ஊறலைத்தர, அன்பு காட்டுவதுபோலக் கண்டத்து ஒலி—

(நாதமான) இனிய ஒலியான கீதம்போல ஒலிக்கும் குயில்போல விளங்கி, அல்குலில் அன்பொழுக்கம் புரள, மார்பும், தோளும், கையும் ஒன்றோடொன்று பிணைபட்டு ஆடி, மிகவும் நாணம் கெட்டழிய, பலவித விநோதங்களை அனுபவித்து, பெண்களோடு கூடி மோக மயக்கம் கொள்கின்ற என்னை—

நான் ஆர், நீ எவன் (எவன் நீ) என்று என்னைப் புறக்கணிக்காமல் என்னுடைய உயிரை வசீகரிக்கின்ற (உனது) சீரிய திருவடித் தியானமே எனக்குள்ள கவலையாய், (முன்னவே, நினைக்கவும்) நாள்தோறும் "நாதா! குமார! முருகா" என்று ஓதவும் திருவருளைத் தந்தருளுக!

பாதாளத்தில் உள்ள ஆதிசேடனுடைய உடல், ஆயிரம் படங்களாம் மகுடங்கள், மகாமேரு இவைகளுடன் ஏழுகடல் வெள்ளம், கிரௌஞ்சமலை, சூரர்களின் உடல்—இவையெலாம் பாழ்பட, பொடிபட்ட தூள் விண்ணிலே போய்ப்படிய, உலகுவாழச் செலுத்தின ஒளிவேலனே!

பர்லாழி மீதரவின் மேல்திருவொ டேயமளி
சேர்நீல ரூபன்வலி ராவணகு மாம்ரிய
பாரேவை யேவிய*மு ராரியைவர் தோழனரி மருகோனே ;

மாதாபு ராரிசுக வாரிபரை நாரியுமை
ஆகாச ரூபியபி ராமிவல மேவுசிவன்
† மாடேறி யாடுமொரு நாதன்மகிழ் ‡ போதமருள் குருநாதா-

xவானோர்க ளீசன்மயி லோடுகுற மாதுமண
வாளாகு காகுமர மாமயிலின் மீது திரு
மாகாள மாநகரில் மாலொடடி யார்பரவு பெருமாளே. (க)

இஞ்சிகுடி.

[இது பேரளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம். திருமாகாளத்துக்கு வடக்கு 2 மைல்.]

811. பாட

தந்ததனத் தான தான தனதன
தந்ததனத் தான தான தனதன
தந்ததனத் தான தான தனதன தனதான

குங்குமகற் பூர நாவி யிமசல
சந்தனகத் தூரி லேப பரிமள
கொங்கைதனைக் கோலி நீடு முகபட நகரேகை-

---

* முராரி—பாடல் 522-பக்கம் 196 கீழ்க்குறிப்பு.

† இடபத்தின் மேலிருந்தபடியே இறைவன் நடம் புரிதல்:
"பேரிடபமோடும் ... நின்று நடமாடி"—
"எருதுகைத்து அருநட்டம் ஆடல் பேணுவர்'
– சம்பந்தர் 3-82-7 ; 2-107-2.

‡ சிவனுக்கு உபதேசித்தது :
—பாடல் 327-பக்கம் 314; பாடல் 628-பக்கம் 462.

x வானோர்க ளீசன் மயில்—தேவேந்திரனுடைய மகளாகிய தெய்வயானை.

பாற்கடலின்மேல் பாம்பின்மேல் இலக்குமியுடன் படுக்கை கொண்ட நீல உருவத்தினன், வலிமை பொருந்திய ராவணனும் அவன் கூட்டத்தாரும் அஞ்சி ஓடி விலகப் பூமியில் (ஏவை) அம்பைச் செலுத்தின முராரி, (முராசுரனுடைய பகைவனும்), பஞ்சபாண்டவர் ஐவரின் தோழனுமான திருமாலின் மருகனே!

மாதர், (புராரி) திரிபுரத்தை எரித்தவள், சுகக்கடல், பரதேவதை, நாரி (பெண்), உமை, ஆகாச சொரூபி, (அபிராமி) அழகி, ஆகிய பார்வதியின் வலப்பால் உள்ள சிவன், ரிஷப (விடை) வாகனன், நடனம் செய்யும் ஒரு தலைவன் (அல்லது விடையின்மேல் நடிக்கும் ஒப்பற்ற தலைவன் ஆகிய சிவன்) மகிழும்படியான ஞானப்பொருளை அவருக்கு அருளின குருமூர்த்தியே;

(வானோர்கள் ஈசன்) தேவேந்திரன் (வளர்த்த) மயில்போன்ற தேவசேனையுடன் (குறமாது) வள்ளியை மணந்த மணவாளனே! குகனே! குமரனே! சிறந்த மயிலின்மீது திருமாகாள மகா நகரில் ஆசையுடனே அடியார்கள் பரவி வழிபடும் பெருமாளே!

(நாதா, குமாரமுருகா எனவும் ஓத அருள்புரிவாயே)

இஞ்சிகுடி

811

குங்குமம், பச்சைக் கற்பூரம், (நாவி) புனுகுச்சட்டம்) (இம சலம்) பனிநீர்—பன்னீர், சந்தனம், கஸ்தூரி, இவைகளின் (இலேபம்) பூசுகையால் நறுமணம் கொண்டுள்ள, நகரேகை கொண்டுள்ள, கொங்கை வளையும்படி பெரிய (முகபடம்) மூடு துணியை—ரவிக்கை மேலாடை முதலிய அணிந்து,

கொண்டைதனைக் கோதி வாரி *வகை வகை
துங்கமுடித் தால கால மென வடல்
கொண்டவிடப் பார்வை காதி னெதிர்பொரு மமுதேயாம்;

அங்குளநிட் டுர மாய விழிகொடு
வஞ்சமனத் தாசை கூறி யெவரையு
மன்புடைமெய்க் கோல ராக விரகினி லுறவாடி-

அன்றளவுக் கான காசு பொருள்கவர்
மங்கையர்பொய்க் காதல் மோக வலைவிழ
லன்றியுனைப் பாடி வீடு புகுவது மொருநாளே;

சங்கதசக் ரீவ னோடு †சொலவள
மிண்டுசெயப் போன வாயு சுதனொடு
சம்பவசுக் ரீவ னாதி ‡யெழுபது வெளமாகச்-

சண்டகவிச் சேனை யால்மு Xனலைகடல்
குன்றிலடைத் தேறி மோச நிசிசரர்
தங்கிளைகெட் டோட ஏவு சரபதி மருகோனே;

0எங்குநினைப் போர்கள் நேச சரவண
சிந்துரகர்ப் பூர ஆறு முகசுக
எந்தனுடைச் சாமி நாத வயலியி லுறைவேலர்-

---

* **பெண்கள் கூந்தலை வகை வகையாக முடித்தல்**: முடித்தல் ஐவகை என்ப; அவைதாம் — கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள், (திவாகரம்): கொண்டை, குழல், பனிச்சை, அளகம், துஞ்சை எனவும் கூறுவர். இவைகளுக்கு 'ஐம்பான் முடி' எனப்பெயர்:

"குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும்" என விளக்கினர்—சிந்தாமணி 2437-உரையில்.

† **'சொலவள மிண்டு செயப்போன அநுமான்'**—

அநுமானைச் 'சொல்லின் செல்வன்' என்றார் கம்பர்— "யார் கொல் இச் சொல்லின் செல்வன்......விரிஞ்சனோ விடை வல்லானோ"—கம்பரா-மராமர-20.

‡ **எழுபது வெள்ளம் சேனை**:

—பாடல் 515-பக்கம் 180-கீழ்க்குறிப்பு.

X **கடல் அடைத்தது**:

—பாடல் 149-அடி 5; பாடல் 754-பக்கம் 248-கீழ்க்குறிப்பு.

0 இது உருக்கமுள்ள அடி: மனப்பாடம் செய்யத் தக்கது.

கூந்தலைச் சீவி வாரி விதம் விதமாக அழகிய வகையில் முடித்து, ஆலகால விஷம்போல வலிமை கொண்டதான விஷப் பார்வை (கண் ஆனது) காதின் எதிரில் போய்ச் சண்டையிடும் அமுத மயத்ததாம்;

அவ்வண்ணம் அங்கு உள்ள (நிஷ்டூரம்) கொடுமை கொண்டதான மாய சக்தி உள்ள கண்கொண்டு, உள்ளே வஞ்சகமுள்ள மனத்துடனே, (புறத்தே) ஆசை மொழிகளைக் கூறிச் (சந்தித்த) எவருடனும் அன்பு காட்டி, மெய்யே உருவெடுத்ததோ என்னும்படி ஆசைகூடிய சாமர்த்தியத் துடன் மொழி பேசி—

அன்றைய பொழுதுக்கான காசுப் பொருளைக் கிரகிக்கின்ற (பொது) மங்கையரின் பொய்யன்பாகிய மோகவலையில் விழுதல் இல்லாமல் உன்னைப்பாடி மோக்ஷ வீட்டில் புகும்படியான ஒரு நாள் (எனக்குக்) கிடைக்குமா?

(சங்கம்) கூட்டமான (தசக்ரீவனோடு) பத்துத்தலையனும் ராவணனோடு (சொல) தூது சொல்லுதற்கு வேண்டிய (வளம்) சொல்வளம் முதலிய ஆற்றல்கொண்டு (மீண்டு செயப்போன) வீரச்செயல்கள் செய்வதற்குச் சென்ற (வாயு சுதனோடு) அநுமாரோடு, (சம்பவ) நிகழ்ச்சிகளிற் சம்பந்தப்பட்ட சுக்ரீவன் முதலான எழுபது வெள்ளம் சேனையுடன்—

(சண்ட) வலிமை வாய்ந்த (கவிச் சேனையால்) குரங்குப் படையால் முன்பு அலைகடலைக் குன்றுகள் (சிறுமலைகள்) கொண்டு அடைத்து — அணைகட்டிக் — (கடலைத் தாண்டி) அக்கரையில் (இலங்கையில்) ஏறி, மோச எண்ணமுடைய அசுரர்களுடைய சுற்றம் அழிந்து ஓடச்செலுத்தின அம்பினைக் கொண்ட தலைவன் ஸ்ரீராமரின்—திருமாலின் மருகனே!

எந்தப் ப்ரதேசத்திலிருந்து நினைப்பவர்களுக்கும் நேசனே! சரவணனே! (சிந்துரம்) செம்பொடி—*(கர்ப்பூரம்) பச்சைக்கர்ப்பூரம் இவை அணிந்துள ஆறுமுகனே! குகனே! அடியேனுக்கு உரிய சாமிநாதப் பெருமானே! வயலூரில் உறைகின்ற வேலனே!

* 'கர்ப்பூரச் சொக்கர்'—மதுரைக் கலம்பகம் 54.

இன்புறுபொற் கூட மாட நவமணி
மண்டபவித் தார வீதி புடைவளர்
இஞ்சிகுடிப் பார்வ தீச ரருளிய பெருமாளே. (க)

திருநள்ளாறு.

[ரெயில்வே ஸ்டேஷன். காரைக்காலுக்கு மேற்கு 3-மைல். மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

812. குமரா என உருக

தத்த தந்தன தானன தானன
தத்த தந்தன தானன தானன
தத்த தந்தன தானன தானன தனதான

*பச்சை யொண்கிரி போலிரு மாதன
முற்றி தம்பொறி சேர்குழல் வாளயில்
பற்று புண்டரி காமென ஏய்கயல் விழிஞான-
பத்தி வெண்டர ளாமெனும் வாணகை
‡வித்ரு மஞ்சிலை போல்நுத லாரிதழ்
பத்ம செண்பக மாமநு பூதியி னழகாளென்;
றிச்சை யந்தரி பார்வதி மோகினி
தத்தை பொன்கவி னுலிலை போல்வயி
றிற்ப சுங்கிளி யானமி னூலிடை யபிராமி-
எக்கு லங்குடி லோடுல கியாவையு
‡மிற்ப திந்திரு நாழிநெ லாலற
மெப்பொ தும்பகிர் வாள்கும ராஎன வுருகேனே;

---

* "பச்சை" எனத்தொடங்கி உமாதேவியாரின் பெருமையை ஓதும் இச் செய்யுள், மதுரையிற் சமணர்கள் சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளுடன் வாது செய்கையில், ஸ்வாமிகள், தேவாரத் திருப் பதிகங்களுள், திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் உமாதேவியாரின் பெயராகிய "போக மார்த்தபூண் முலையினுள்..." என்னும், அத் தலத்துப் பாடலுள்ள ஏட்டைத் திருவருளாற் பெற்ற அதனை நெருப்பிலிட, அது பச்சையாகவே இருந்த அற்புதத்தைக் குறிப் பால் விளக்குகின்றது.

‡ வித்ருமம் - சிலை - இதழ் - நுதல் என வரிசைப் படுத்தாது நுதல்-இதழ் என்று இடம் மாறி உவமை கூறினது முரண் நிரனிறை யணி - (நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது)

‡ இருநாழி நெல்லால் அறம் வளர்த்தது
—பாட்டு 460-பக்கம் 34 கீழ்க்குறிப்பு.

இன்பம் தரத்தக்க அழகிய கூடங்கள், மாடங்கள், புதிது புதிதான நவரத்னங்கள் இழைக்கப்பட்ட மண்டபங்கள் அகன்ற தெருக்களின் பக்கத்தே வளர்கின்ற இஞ்சிகுடி என்னும் தலத்தில் பார்வதிபாகர்—சிவன் அருளிய பெருமாளே !

(உனைப் பாடி வீடு புகுவதும் ஒரு நாளே !)

திருநள்ளாறு.

812.

பச்சைநிற முள்ளதும், ஒளி உள்ளதும் மலைபோன்றதுமான இரண்டு பெரிய கொங்கைகளைக் கொண்டு இன்பம் அனுபவிக்கும் (பொறி) வண்டுகள் (அல்லது பொலிவு) சேர்கின்ற கூந்தலையும், (வாள்) ஒளி கொண்ட வேல் போன்றதும், தாமரையின் தகைமையது என்று சொல்லத் தக்கதும், (கயல்ஏய்) மீன் போன்றதுமான கண்களையும், ஞானஒளி

வரிசையில் உள்ள வெள்ளை முத்துக்கள் என்னும்படியான ஒளிவீசும் பற்களையும், (வித்ருமம் சிலைபோல் நுதலாரிதழ்) சிலைபோல் நுதல்-வித்ருமம்போல் இதழ்—வில்லுக்கு ஒப்பான நெற்றியையும், வித்ருமம்— பவளம், (பத்மம்) தாமரை, செண்பகம் இவைக்கு ஒப்பான இதழையும் (உடைய) ஞான அருட்பிரகாச அழகி, எனப்படுபவள்,

இச்சையெலாம் பூர்த்திசெயும் (அந்தரி) பராகாசவடிவி, பார்வதி, (மோகினி)·பேரழகி, (தத்தை) கிளி, பொன்னின் அழகுவாய்ந்த ஆலிலைபோன்ற வயிற்றினள், இல்லறம் நடத்தும் பசுங்கிளி போல்பவள், மின்னலும் நூலும் போன்ற இடையை உடைய (அபிராமி) அழகி—

எல்லாக் குலத்தாருக்கும், எல்லா உடலுக்கும், உலகங்கள் எவைக்கும், இருந்த இடத்தில் இருந்தே இரண்டு (நாழி) படி நெல்கொண்டு (முப்பத்திரண்டு) அறங்களையும் எப்போதும் பங்கிட்டு அளிப்பவள்—ஆகிய பார்வதி—(ஏலவார் குழலியின்) குமரனே! என்று (கூறி) உள்ளம் உருகமாட்டேனே!

கச்சை யுந்திரு வாளுமி ராறுடை
பொற்பு யங்களும் வேலுமி ராறுள
கட்சி வங்கம லாமுக மாறுள முருகோனே-

கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகர்* ச பாசென
கட்ட வெங்கொடு சூர்கிளை வேரற விடும்வேலா ;

†நச்சு வெண்பட மீதணை வார்முகில்
பச்சை வண்புய னூர்கரு டாசனர்
நற்க ரந்தநு கோல்வளை நேமியர் மருகோனே-

நற்பு னந்தனில் வாழ்வளி நாயகி
யிச்சை கொண்டொரு வாரண மாதொடு
நத்தி வந்துந ளாறுறை தேவர்கள் பெருமாளே. (க)

வழுவூர்.

[இது தேவார வைப்பு ஸ்தலம். மாயூரத்துக்குத் தெற்கில் உள்ள இலந்தங்குடி ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்குக் கால் மைல். அஷ்டவீரத் தலங்களுள் ஒன்று. தாருகாவன இருடிகள் ஏவிய யானையைச் சிவபிரான் உரித்தருளிய ஸ்தலம்.]

813. சிவநேசம் வர

தனனதன தானன தானன
தனனதன தானன தானன
தனனதன தானன தானன தனதான

‡தருவூரிசை யாரமு தார்நிகர்
குயிலார்மொழி தோதக மாதர்கள்
தணியாமய லாழியி லாழவு மமிழாதே-

தழலேபொழி கோரவி லோசன
மெறிபாசம காமுனை சூலமுள்
சமனார்முகில் மேனிக டாவினி லணுகாதே ;

---

* 'சபாஷ்' என்ற இந்தச் சொல்லினின்றும்—மகமதியர் கால அரசாட்சி வந்துவிட்ட காலம் அருணகிரியார் காலம் என்பது பெறப்படும்.

† வெண்படம்—ஆதிசேடன் வெண்ணிறம் உடையவன்
—(தக்கயாகப்பரணி 282-உரைக்குறிப்பு.)

‡ தரு-மரம்—மூங்கில் ; ஒருவகை இசைப்பாட்டு.

அரையிற் கச்சை, அழகிய வாள், பன்னிரண்டு அழகிய புயங்கள், வேல், பன்னிரண்டு கண்கள், மங்களமான தாமரை யன்ன திருமுகங்கள் ஆறு இவை கொண்ட முருகனே!

கற்பகமரம் உள்ள செல்வ நிறைந்த நாடு-பொன்னுலகம்-உயர்ந்த வாழ்வைப்பெறச் சித்தர்களும், விஞ்சையர்களும், (மாகர்) விண்ணுலகத்துத் தேவர்களும், 'சபாஷ்' என்று மெச்சக், கஷ்டம் கொடுத்து வந்த மிகக் கொடிய சூரனது சுற்றத்தார் யாவரும் வேரறச் செலுத்தின வேலனே!

விஷமுள்ள வெண்ணிறப்படம் கொண்ட ஆதிசேடன் மீது (அணை) படுக்கை கொண்டவர், மேகநிறம், பச்சைநிறம் கொண்ட வளமார்ந்த புயத்தை உடையவர், கருடவாகனங் கொண்டவர், நல்ல கரத்தில் வில், அம்பு, சங்கு, சக்கரம் கொண்டவர் மருகனே!

நல்ல தினைப்புனத்தில் வாழ்ந்திருந்த வள்ளி நாயகியின்மீது காதல்கொண்டு (அல்லது வள்ளிநாயகியின் காதலைப் பெற்று), ஒப்பற்ற வாரணமாதொடு (யானை வளர்த்த தேவசேனையுடன் விரும்பி வந்து **திருநள்ளாறு** என்னும் தலத்தில் உறைகின்ற பெருமாளே! தேவர்கள் பெருமாளே! (குமரா என உருகேனோ!)

வழுவூர்

813.

(தருவூர் இசையார்) மரம்-மூங்கிலில்-புல்லாங்குழலில் ஏற்படுகின்ற இசையார் — குழலிசையார் — குழல்போல் இசைபாட வல்லார், அமுதனையவர், (குயிலார் நிகர்மொழி— குயிலின் குரலுக்கு ஒப்பான (இனிய) மொழியரர், (தோதக மாதர்கள்) வஞ்சகஞ்செயும் மாதர்கள் — (இவர்மீதுள்ள குறைவுபடாத காம இச்சைக் கடலில் ஆழ்ந்தும் ஆழாமல்— (ஆழ்ந்து அமிழாமல்) அமிழ்ந்து போகாமலும்—

நெருப்பையே பொழிகின்ற பயங்கரமான கண்கள், எறிந்து வீசப்படும் பாசக்கயிறு, விசேடமான முனைகளை (நுனியை) உடைய சூலம் (உள்) இவைகளை உடைய அல்லது முள் முனை சூலம்—முள்போன்ற கூர்மையுடைய சூலம் (உடைய) யமனார், கரு மேகம் போன்ற நிறங்கொண்ட (தனது) எருமைக் கடாவின்மேல் ஏறிவந்து (என்னை) அணுகாமலும்—

கருவூறிய நாளுமு நூறெழு
மலதேகமு மாவலு மாசைக
படமாகிய பாதக நீதற மிடிதீரக்-

*கனிவீறிய போதமெய் ஞானமு
மியலார்சிவ நேசமு மேவர
கழல்சேரணி நூபுர நாளிணை நிழல்தாராய்;

புருகூதன்மி னுளொரு பாலுற
சிலைவேடுவர் மானொரு பாலுற
†புதுமாமயில் மீதணை யாவரு மழகோனே-

புழுகார்பனிர் மூசிய வாசனை
யுரகாலணி கோலமென் மாலைய
‡புரிநூலுமு லாவுது வாதச புயவீரர்;

மருவூர்குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமு மேபுனை வளமூதூர்-

மகதேவர்பு ராரிச தாசிவர்
சுதராகிய தேவசி காமணி
வழுவூரில்நி லாவிய வாழ்வருள் பெருமாளே. (க)

---

* இந்த அடி மிக நயமானது; மனப்பாடஞ் செய்யவேண்டிய அடி. 813-ஆம் பாடலே அழகிய பாடல்; மனப்பாடத்துக்கு உரியது.

† புதுமை — எழில், அதிசயம்:
'புதுமயி லூர்பரன் புராணம்'—கந்தபுரா-அவையடக்கம் 13.
'புதிய மயில் ஏறுகந்த'—திருப்புகழ் 142.

‡ புரிநூல்—"பத்மக் கரங்களும் செம்பொனூலும்"
—திருப்புகழ் 1277.
'மணிப்பூண் அகன்மார்பும் பைம்பொற் புரிநூலும்'
—கந்தர்கலி வெண்பா 54.

(கருவூரிய நாளு முநூறு) (கருவில் ஊறிநின்ற முந்நூறு நாள்களும், (பின்பு எழுகின்றதான மலங்களுக்கு இடமான தேகமும், (ஆவலும் ஆசை) ஆசை ஆவலும்— பொன் ஆசை (முதலான மூவகை ஆசைகளும்—மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளும்), கபடமாகிய பாதகதீது — வஞ்சகத்தால் ஏற்படும் பெரும் பாபத் தீமைகள் அற்றுப்போகவும், வறுமை தொலையவும்—

(கனி) இனிமை மிக்க அல்லது முதிர்ந்த அறிவும், மெய்ஞ்ஞானமும், தகுதி மிக்க சிவ நேசமும் (எனக்கு) உண்டாக, கழலும் அதனுடன் சேர்ந்துள்ள அழகிய (அல்லது ஆபரணமாம்) சிலம்பும் (கொண்ட உனது) தாளிணை நிழலைத் தந்தருளுக.

இந்திரனுடைய [மின்ஒத்த] மகள் தேவசேனை ஒரு பக்கம் வீற்றிருக்க, வில் ஏந்திய வேடர்மான் வள்ளியம்மை ஒரு பக்கம் வீற்றிருக்க, [புது மாமயில்] அதிசயிக்கத்தக்க, [அல்லது எழில் உடைய] சிறந்த மயில்மீது [அணைந்து] ஏறிவரும் அழகனே !

புனுகுசட்டம், நிறைந்த பன்னீர் இவை நெருங்கக்கூடிய வாசனையுள்ள...மாலைய [மாலையை உடையவனே]! உரகாலணி கோலமென் மாலைய—[உரம் கால்] மார்பிடத்தே [அல்லது மார்பிலும் திருவடியிலும்] அணிந்துள்ள அழகிய மெல்லிய மாலையனே [மாலையை உடையவனே]! முப்புரிநூல் [பூணூல்] அசைகின்ற [துவாதச] பன்னிரண்டு புயங்கள் கொண்ட வீரனே !

வாசனை குலவும் குளிர்ந்த குளங்கள், சோலைகள் செழிப்புள்ள நெல் தழைத்துள்ள [கார் வயல்] அழகிய [அல்லது பசுமைகாட்டும்] வயல்கள்...[புனை] சேர்ந்துள்ள [வள மூதூர்] வளப்பம் உள்ள பழைய ஊர், மகதாபத சீலமு மேபுனை வள முதூர் — விசேடமான [தாபதம்] முனிவர் வாசங்களைக் கொண்ட அழகினை உடைய வளப்பம் உள்ள பழைய ஊராகிய [வழுவூரில்]...பெருமாளே] !

மகாதேவர், புரத்தை எரித்தவர், சதாசிவர் ஆகிய சிவனது பிள்ளையாகிய தேவசிகாமணியே ! வழுவூரில் வீற்றிருந்து [அடியார்க்கு] வாழ்வு அருளும் பெருமாளே !

[தாளிணை நிழல் தாராய்]

814. சரித்திர வரலாறு

தனனா தத்தன தாத்த தந்தன
தனனா தத்தன தாத்த தந்தன
தனனா தத்தன தாத்த தந்தன தனதான

*தலைநா ளிற்பத மேத்தி யன்புற
வுபதே சப்பொரு ளூட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி யென்றனை யருளாலுன்-

சதுரா க்த்தொடு கூட்டி யண்டர்க
ளறியா முத்தமி ழூட்டி முண்டக
தளிர்வே தத்துறை காட்டி மண்டலம் வலமேவுஞ்

கலைசோ திக்கதிர் காட்டி நன்சுட
ரொளிநா தப்பர மேற்றி முன்சுழி
கமழ்வா சற்படி நாட்ட முங்கொள விதிதாவிக்-

கமலா லைப்பதி சேர்த்து முன்பதி
வெளியா கப்புக ஏற்றி யன்பொடு
கதிர்தோ கைப்பரி மேற்கொ ளுஞ்செயல் மறவேனே;

சிலைவி ழக்கடல் கூட்ட முங்கெட
அவுணோ ரைத்தலை வாட்டி †யம்பர
சிரமா லைப்புக வேற்ற வுந்தொடு கதிர்வேலா-

---

* இது அருணகிரிநாதர் திருவடி தீக்ஷை, உபதேசம் முதலிய பேறுகளைப் பெற்ற வரலாற்றைக் குறிக்கும்.

† அம்பர சிர மாலைப் புக ஏற்ற—ஆகாயத் துச்சியி லுள்ள சுவர்க்கத்தில் இந்திரனைக் குடியேற்ற ; மால்—இந்திரன்.

814

எனது அடிநாளில் [வாழ்க்கைத் தொடக்கத்தில்] உனது திருவடியை [என் தலைமீது] வைத்து, அன்புடனே உபதேசப் பொருளை [எனக்குப்] போதித்து, சிவமந்திரங்களாலே [என்னைத்] தவஞானக் கடலில் ஆட்டுவித்து—தவநிலை ஞானநிலை இவை தமிழ்ப் புகவைத்து—என்னை [உனது] திருவருளினாலே உன்னைச் சார்ந்த—

[சதுராகத்தோடு] சதுர் — சாமர்த்தியம் உள்ள, ஆகத்தொடு — ஆகத்தினரோடு — உடலினரோடு — [உன் சதுராகத்தொடு] உன்னைச் சார்ந்துள்ள தேர்ச்சிபெற்ற அடியார் கூட்டத்துடன்—[என்னைக்] கூட்டி வைத்துத், தேவர்களும் அறியாத முத்தமிழையும் எனக்குப் போதித்து, முண்டக தளிர் வேதத்துறை [முண்டக உபநிஷத் முதலான உபநிடத உண்மைகளையும் வேதத்துறை — வேத வழிகளையும் புலப்படுத்தி, அக்கினியாதி மும்மண்டலங்களும் உள்ள மேலிடத்தே

கலைசோதிக் கதிர்காட்டி — இடைகலை — பிங்கலை என்னும் நாடிகளின் மார்க்கமாக எற்படும் ஜோதி ஒளியைத் தரிசிப்பித்து, (ஆன்மாவை) அந்த—நல்ல பேரொளியுள்ள பரநாதத்தொடு—பரசிவத்தொடு கூட்டி, முன்னதாக சுழிமுனை நாடி விளங்கும் (வாசற்படி) முதல் வாயிலினிடத்தே—கவனம் கொள்ள, விதிதாவி—பிரமபீடமாகிய சுவாதிஷ்டான ஆதாரத்தைக் கடந்து—

கமலாலைப்பதி சேர்த்து—மூலாதார ஸ்தலமான திருவாரூர் முதலிற் சேர, அது முதலாக உள்ள தலங்கள் — பிற ஆதார ஸ்தலங்களாகிய திரு ஆனைக்கா, திருஅண்ணாமலை, சிதம்பரம், காளத்தி, காசி இவைகள் புலப்பட யோக ஒளியை எற்றிவைத்து, அன்புடனே ஒளிவீசும் தோகையை உடைய மயில்வாகனத்தின் மேல் நீ வந்து அருளிய செயலை மறக்க மாட்டேன், (யோகாநுபூதி தந்து, யோகநிலைக் காட்சிகளை யான் காணவைத்த அன்பையும், மயில்மேல் தந்த தரிசனத்தையும் மறவேன் என்றவாறு).

விற்படைகள் வீழவும், கடல்போன்ற கூட்டம் கெட்டழியவும், அசுரர்களின் தலைகளை அழித்து, (அம்பர சிரத்தில்) ஆகாயத்து உச்சியில் உள்ள சுவர்க்கத்தில் (மாலை) இந்திரனை—புக எற்ற—குடியேற்றிவைக்கச் செலுத்தின ஒளிவேலனே!

சிவகா மிக்கொரு தூர்த்த ரெந்தையர்
வரிநா கத்தொடை யார்க்கு கந்தொரு
சிவஞா னப்பொரு ளூட்டு முண்டக அழகோனே;

மலேமே வித்தினை காக்கு மொண்கிளி
யமுதா கத்தன வாட்டி யிந்துள
மலர்மா லைக்குழ லாட்ட ணங்கிதன் மணவாளா-

வரிகோ ழிக்கொடி மீக்கொ ளும்படி
நடமா டிச்சுரர் போற்று தண்பொழில்
வழுவூர் நற்பதி வீற்றி ருந்தருள் பெருமாளே. (உ)

கன்னபுரம்.

[இது 'கண்ணபுரம்' என்னுந் தலமா யிருக்கலாம்; நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்குச் சமீபம்.] கொங்கு மண்டலத்திற் காங்கேய நாடு என்னும் பகுதியில் † 'கன்னபுரம்' என ஒருதலம் உளது.

815. வீடுபெற

தன்னதனத் தன்னதனத் தன்னதனத் தன்னதனத்
தன்னதனத் தனதாத்த தந்ததான

அன்னமிசைச் செந்நளிநச் சென்மிகணக் கந்நியமத்
தன்னமயப் புலால்யாக்கை துஞ்சிடாதென்

றந்நினைவுற் றன்னினைவுற் றன்னியரிற் றன்னெறிபுக்
கன்னியசற் றுலாமூச்ச டங்கயோகம்;

என்னுமருட் கின்னமுடைப் பன்னவைகற் றின்னவைவிட்
டின்னணமெய்த் தடாமார்க்க மின்புறுதென்-

---

† "தேங்கு கன்னபுரம்...செழிக்குங் காங்கேய நாடெங்கள் நாடே"—கொங்கு மண்டல ஊர்த்தொகை. பக்கம் 5, 6.

(சிவகாமி) சிவகாம சுந்தரியின் ஒப்பற்ற (தூர்த்தர்)—காமுகர், என் தந்தையார், கோடுள்ள பாம்புமாலை அணிந்தவர்—ஆகிய சிவனுக்கு — மகிழ்ச்சியுடன் ஒப்பற்ற சிவஞானப் பொருளை உபதேசித்த அழகனே! தாமரை மலரில் விளங்கின அழகனே!

(வள்ளிமலையில்) இருந்து தினைப்புனம் காத்த அழகுக் கிளி, அமுதன்ன உடலும் கொங்கையும் கொண்டவள், (இந்துளம்) கடப்பமலர் மாலையைக் கூந்தலில் விளங்கக்கொண்ட (அணங்கி) அழகு வடிவை உடையவளாம் (அல்லது குழலாள், தண் அங்கி—குளிர்ந்த அங்கத்தை உடையவளாம்) வள்ளியின் மணவாளனே!

(வரி) — நீண்ட கோழிக்கொடி மேலே விளங்கும்படி நடனமாடித், தேவர்கள் போற்றுகின்ற குளிர்ந்த சோலை சூழ்ந்த **வழுவூர்** என்னும் நல்ல ஊரில் வீற்றிருந்தருளும் பெருமாளே!

(மறவேனே)

கன்னபுரம்.

815.

அன்னப்பறவையின் மேல் (ஏறுபவனும்), செவ்விய நளினம் (திருமாலின் உந்தித்) தாமரையில் (சென்மி) ஜென்மித்தவனுமான (பிறந்தவனுன) பிரமனுடைய (கணக்கு) (சீட்டிற் கண்ட) கணக்கில் உள்ள (அந் நியமத்து) அந்தவரை யறுக்கையின்படி-அந்தக் கணக்கின்படி, (அன்னமயம்) சோற்றின் மயமான (புலால்) மாமிசத்தோடு கூடியதுமான (யாக்கை) உடலானது இறந்து போகாது—அழியாது என்ற

அந்த நினைவு கொண்டே, (அல் நினைவு) மயக்க நினைவுகள் கொண்டே, (அன்னியரில்) (தன்னெறிபுக்கு) அயலார் போன்ற—பகைவர் போன்ற—ஐம்புலன்களின் — வழியே புகுந்து சென்றும், (ஐம்புலன்கள்) ஆட்டுவித்தபடியே ஆடியும்), (அன்னிய) வேறும்—(பின்னும்) சிறிது சிறிதாக உலவுகின்ற மூச்சு அடங்கும்படி **யோகம்**

என்கின்ற (மருள்) மயக்கத்தைத்தரும் உணர்ச்சிகொண்டு—(கின்னம் உடை) துன்பத்தைத்தரும் (பன்னவை கற்று—பல் நவை கற்று — பலவிதமான குற்றத்துக்கு இடமான (நூல்களை)ச் செயல்களைப் படித்து மேற்கொண்டும், பின்பு (இன்னவை விட்டு)—அங்ஙனம் கற்ற இவைகளையும் விடுத்து (இன்னணம்) இவ்வாறாக (எய்த்து)—இளைப்புற்று—(அடாமார்க்கம்) அடாத மார்க்கம்—தகாதவையான வழிகள் இன்பத்தைத் தருவன அல்ல என்று உணர்ந்து—

றின்னதெனக் கென்னுமதப் புன்மைகெடுத் தின்னல்விடுத்
தின்னதெனப் படாவாழ்க்கை தந்திடாதோ;

கன்னல்மொழிப் பின்னளகத் தன்னநடைப் *பன்னவுடைக்
கண்ணவிரச் சுருவீட்டு கெண்டையாளைக்-

†கன்னமிடப் பின்னிரவிற் றுன்னுபுரைக் கன்முழையிற்
கன்னிலேயிற் புகாவேர்த்து நின்றவாழ்வே;

பொன்னசலப் பின்னசலச் சென்னியினற் கன்னபுரப்
பொன்னிநதிக் கராநீர்ப்பு ‡யங்கனுதா-

பொன்மலையிற் பொன்னினகர்ப் புண்ணியர்பொற் பொன்மவுலிப்
பொன்னுலகத் திராசாக்கள் தம்பிரானே. (க)

---

* 'பன்னஉடை'—இலை ஆடை—'தழை உடுத்த குறத்தி —(திருப்புகழ் 296).

† பின் இரவில் காத்து நின்றது :
'கருமால் இருள்கழி யாமுன்னர் இவ்வரை கையகன்றே.' —தணிகைப்புரா-களவு-578
'குரம்பையின் புறம்போய் நின்முன் ** 'நீர் கங்குற் போதில் ஈங்குவந்திடுவ தொல்லாது'—கந்த புரா-வள்ளி-161-162.

‡ புயங்கன்-சிவன்—(1) புயங்க நடனம் செய்பவன் ;
(2) பாம்பை அணிந்தவன்.
"அந்த ஒண் புயங்க நட்டம் ஆடிட வேண்டும்" —திருவாலவா-புரா-32-8.
"அதிரவீசி ஆடுவாய் அழகன் நீ புயங்கன் நீ" —சம்பந்தர்-3-52-4.
"இராவணன் தோள் நெரித்த புயங்கராகமா நடத்தன்" —சம்பந்தர் 1-53-8.
புயங்கனுதா—புயங்கனுக்கும் நாதா—"சிலைமகள் நாயன்... தொழும்வேலா"—திருப்புகழ் 261.

[இன்னது] இவ் வழிதான்—[எனக்கு என்னும்] எனக்கு உயர்ந்ததாம் என்கின்ற, [மதப் புன்மை கெடுத்து] கொள்கையின் இழிவாந் தன்மையை ஒழித்து, [இன்னல் விடுத்து] துன்பங்கள் யாவற்றையும் ஒட்டி விலக்கி—[இன்னதெனப்படா வாழ்க்கை] இத்தன்மைத்து என்று [வாய்விட்டு] விளக்க முடியாத பேரின்ப வாழ்க்கையை [உனது திருவருள்] [தராதோ] பாலிக்காதோ !

[கன்னல்மொழி] கரும்பு [அல்லது கற்கண்டு] போன்ற மொழியையும், பின் அளகம் — பின்னப்பட்ட கூந்தலையும், அன்னம் போன்ற நடையையும், [பன்னம் உடை] தழையிலைகளால் ஆய ஆடையையும் [கொண்டவளாய்க்] கண்ணுனது—கண் அவிர்—விளக்கம் கொண்டுள்ள அந்த சுருமீனையும் அடக்கவல்ல [ஒட்டி விலக்கவல்ல] கெண்டைமீன் போன்றவளைக்—

களவிற் கொண்டு போவதற்காக — [பின் இரவில்] இராப்பொழுதின் பிற்பாகத்தில் — பொழுது விடியுமுன் துன்னு — பொருந்திய [புரை] இடமான — வீடுபோன்ற ஒரு கல் முழையில் ஒருகற் குகையில், கன்னிலையில்—கல் நிலையில்—கற்சிலைபோல அசைவற்ற நிலையில்—புகுந்திருந்து வேர்வையுற நின்று காத்திருந்த செல்வனே !

[பொன் அசலம்] [பொன்மலை] மேருமலைக்குப் [பின்], அசலம்-பின்பு அசைவற்ற தன்மையில் அடுத்ததான-அசைவில்லாத-எதனுலும் கலக்கம் உருத — சென்னியின் — சோழராஜனுடைய [ஆளுகையில் உள்ள] நற்கன்னபுரம் - நாதா - அழகிய **கன்னபுரம்** என்னும் தலத்தில் நாதா [தலைவனே]! [பொன்னி நதிக்கரா நீர்ப் புயங்களுதா]—கரா நீர்ப் பொன்னி நதி [கன்னபுரப்] புயங்களுதா ?—முதலைகள் வாசம் செய்யும் காவிரி நதிக்கரைக்) **கன்னபுரத்தில்** [புயங்க] புயங்க நடனம் செய்யும் சிவபிரானுக்குத் தலைவனே ! [அல்லது புயங்கன்—பாம்பணிந்த சிவனுக்கும் நாதனே] !

[பொன்மலையில்] கயிலைமலையிலும், பொன்னின் நகர்—லக்ஷ்மி வாசம் செய்யும் வைகுண்டத்திலும் [உள்ள] புண்ணியர்களுக்கும், பொற்பொன் மவுலி-அழகிய பொற்கிரீடங்களை அணிந்துள்ள [பொன்னுலகத்து] தேவலோகத்து-இராசாக்களுக்கும்-இந்திரர்களுக்கும் தம்பிரானே !

[இன்னதெனப் படா வாழ்க்கை தந்திடாதோ]

திருவாஞ்சியம்.

[நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு சுமார் 7-மைல். திருவாரூருக்கு வடமேற்கு 11-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம்.]

816 செல்வம், யாக்கை நிலையாமை.

தனதாந்த தத்த தனதன
தனதாந்த தத்த தனதன
தனதாந்த தத்த தனதன தனதான

இபமாந்தர் சக்ர பதிசெறி
படையாண்டு சக்ர வரிசைக
ளிடவாழ்ந்து திக்கு விசயம ணரசாகி-

இறுமாந்து வட்ட வணைமிசை
விரிசார்ந்து வெற்றி மலர்தொடை
யெழிலார்ந்த பட்டி வகைபரி மளலேபந்;

தபனங்க ரத்ந வணிகல
னிவைசேர்ந்த விச்சு வடிவது
தமர்சூழ்ந்து மிக்க வுயிர்நழு வியபோது-

தழல்தாங்கொ ளுத்தி யிட்டொரு
*பிடிசாம்பல் பட்ட தறிகிலர்
தனவாஞ்சை மிக்கு னடிதொழ நினையாரே;

உபசாந்த சித்த குருகுல
பவபாண்ட வர்க்கு வரதன்மை
யுருவோன்ப்ர சித்த நெடியவன் †ரிஷிகேசன்-

* இந்தப் பாடலின் முதல் நான்கடியின் கருத்து—
"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடி சாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னி னம்பலவர்
அடிசார்த்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே"-என
வரும் பட்டினத்தார் திருவாக்கின் கருத்தை ஒக்கும்; திருப்புகழ் 778-ஆம் பாடலின் கருத்தும் இதுவே.

'இறந்தால் ஒருபிடி சாம்பருங் காணது மாய உடம்பிதுவே'
—கந்-அலங்-57.

† 'இருடீகேசன் எம்பிரான்'—திருவாய்மொழி 2-7-10.

திருவாஞ்சியம்

816.

(இபம்) யானைப்படை, (மாந்தர்) காலாட்படை முதலிய படைகளை உடைய சக்ரவர்த்தியாய், நிறைந்துள்ள நால்வகைப் படைகளையும் ஆண்டு (கொண்டு) அரசுபுரிந்து, தனது ஆக்ஞா சக்கரம் வேலை முறைகளை நடத்த அங்ஙனம் வாழ்ந்து, திக்குவிஜயம் செய்து, உலகுக்கு அரசனாகி (ஏக சக்ரவர்த்தியாகி)

பெருமை மிக அடைந்து, வட்டவடிவான சாய்வு மெத்தை அணையின் மேல் உள்ள விரிப்பிற் சார்ந்து—சாய்ந்தமைந்து—ஜெயத்தைக் குறிக்கும் (வாகை) மலர்மாலை (என்ன), (எழிலார்ந்த) அழகு நிரம்பின (பட்டி வகை)—ஆடை (துணி) வகைகள் என்ன; நறுமணக் கலவைப் பூச்சு (என்ன),

(தபனங்க ரத்ன அணிகலன்) சூரிய ஒளியைத் தன் உறுப்பிலே கொண்ட — தன்னகத்தே கொண்ட ரத்ன மணியாலாய அணிகலன் (ஆபரணங்கள்) என்ன! இங்ஙனம் இவையெலாம் சேர்ந்த — (விச்சு வடிவது) ஒரு (மனித) வித்துவின்—வித்தின் வடிவு இது; (இவ்வடிவினின்றும்—உடலினின்றும்) உறவினர் சூழ்ந்திருக்கப் பெருமை மிக்க—உயிரானது நழுவியபோது—பிரிந்துபோன பொழுது—

நெருப்பிலே இட—அந்த நெருப்பு கொளுத்திவிட (ஈற்றில்) அவ்வுடல் ஒருபிடிசாம்பலான நிலையை அடைவதை அறிந்திலர், பொருளாசை மிகுந்து உனது திருவடியைத் தொழ நினைக்கின்றார் இல்லை—நினைப்பதில்லை—

(உபசாந்த) மன அமைதி கொண்ட சித்தம் — உள்ளத்தை உடையவர்களும், குருகுலத்தில் (பவ) உதித்தவர்களுமான (தருமன் முதலிய பஞ்ச) பாண்டவர்க்கு (வரதன்) வேண்டிய வரங்களைக் கொடுத்தவன், மை உருவோன்—கரு மேகநிறத்தவன், பிரசித்த நெடியவன், கீர்த்தி பெற்றவன், விசுவரூபம் கொண்டவன், ரிஷிகேசன் (இருடிகேசன்)

*உலகின்ற பச்சை யுமையண்ணன்
†வடவேங்க டத்தி லுறைபவ
னுயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே-

த்ரிபுராந்த கற்கு வரசுத
‡ரதிகாந்தன் மைத்து னமுருக
திறல்பூண்ட xசுப்ர மணியஷண் முகவேலா-

திசைபாய்ந்த பத்ம தடவய
லியில்வேந்த oமுத்தி யருள்தரு
திருவாஞ்சி யத்தி லமரர்கள் பெருமாளே. (க)

திருச்செங்காட்டங்குடி.

[நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 6-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர்பாடல் பெற்றது. சிறுத்தொண்ட நாயனருடைய ஸ்தலம்.]

817. உபதேசம் பெற

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதான

**வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசஇதழ் மலர்போல-

---

o 'பூத்தவளே புவனம் பதினான்கையும்'-அபிராமி அந்தாதி 13.

† 'வேங்கடமே...ஆழிப்படை தொட்டு வானவரைக் காப்பான் மலை' - இயற்பா - நான்முகன் 48.

‡ ரதிகாந்தன் மைத்துனன் - முருகன் -'காமவேள் மைத்துனப் பெருமாளே'—திருப்பு. 835, 1108, 1109.

x 'மாமயிலூருஞ் சுப்பிரமண்ணியன்'—திருவிசைப்பா 7-3.

o திருவாஞ்சியம் முத்தியளிக்குந் தலங்களுள் ஒன்று ;
" தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்."—என்னும் பாடல்
கவனிக்கற்பாலது. திருவாஞ்சியத்தில் இறப்பவர்க்கு யம வாதனை இல்லை. 'கடிய கூற்றமும் கண்டகலும், புகல்தான்வரும்...திருவாஞ்சியத்தடிகள் பாதம் அடைந்தார் அடியார் அடியார்கட்கே— சம்பந்தர் 2-7-9. [தொடர்ச்சி 407 ஆம் பக்கம் பார்க்க.]

உலகங்களைத் தந்த பச்சைநிற உமையம்மையின் அண்ணனும், வடவேங்கடம் என்னும் தலத்தில் வீற்றிருப்பவனும், மேலான சாரங்கம் (வில்), சக்கரம் (சுதரிசனம்) இவைதமைக் கையகத்தே கொண்டுள்ளவனும் ஆன திருமாலின் மருகனே!

முப்புரங்களுக்கு (அந்தகனயிருந்த) யமனயிருந்த—(திரிபுரத்தை அழித்த) சிவபிரானுக்கு (வர சுத) சிரேஷ்டமான பிள்ளையே! ரதியின் கணவன் மன்மதனுக்கு மைத்துன முறை உடையவனே! முருகனே! பராக்ரமம் வாய்ந்த சுப்பிரமணியனே! ஷண்முகனே! வேலனே!

அலைகள் பாயும் தாமரைத் தடாகங்கள் உள்ள வயலூர் அரசே! முத்தியைத் தருவதான **திருவாஞ்சியம்** என்னும் தலத்தில் தேவர்கள் பெருமாளே!

(உன் அடிதொழ நினையாரே)

———

திருச்செங்காட்டங்குடி

817

(மார்பிலணி வங்கார தாரொடு) மார்பில் அணிந்துள்ள (வங்கார தார்) பொன்மாலையுடனே மேலான மலையன்ன கொங்கைகள் அசைய, (பூங்கொத்துக்கள் நிறைந்த மாலையணிந்துள்ள கூந்தலும் (ஹாரம்) மணிமாலையும் தோளிற் புரண்டசைய, வளப்பம் உள்ள காதிலே ஓலை (காதணி) சூரிய ஒளி போன்ற ஒளியை வீச, வாயிதழ்—(குமுத) மலர்போல விளங்க—

(406-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசியில் இறந்த உயிருக்கு வயிரவர் சூலத்தழுத்தும் வாதனை சிறிது உண்டு. அதுவும் கிடையாது திருவாஞ்சியத்தில் இறப்போர்க்கு; ஆதலால் இத்தலம் காசியினும் சிறந்ததென்று தலபுராணம் கூறும் :—

"செயிரறு காசி முத்தி சிறந்திடும் இறந்த மாக்கட்
கயின்முனை நெடிய சூலத் தழுந்துநோய் சிறிதுண் டந்த
வயிரவ வாதை தானும் இல்லைஅந் நகரின் மாய்ந்த
உயிர்வலச் செவிக்கெ ழுத்தைந் துரைத்தரன் அளிப்பன் முத்தி."

* வங்காரம்—பொன்.

மஞ்சாடு சாபநுதல் வாளணையவேல் விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ னுசைமய லிடுமாதர் ;

*சங்காளர் சூதுகொலை கர்ரர்குடி கேடர்சுழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீசியவர் மாயவலை யோடடியெ னுழலாமற்-

†சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெங்கோட மூலஅழல் வீசவுப தேசமது
தண்காதி லோதியிரு பாதமலர் சேரஅருள் புரிவாயே ;

சிங்கார ரூபமயில் வாகனந மோநமென
கந்தாகு மாரசிவ தேசிகந மோநமென
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென விருதோதை-

சிந்தான சோதிகதிர் வேலவந மோநமென
கங்காள வேணிகுரு வானவந மோநமென
திண்சூர ராழிமலை தாள்பட வேலைவிடு முருகோனே ;

---

* சங்கம்—சங்கமம் : கூடுகை.

† சங்கோதை நாதம்—பாடல் 179-பக்கம் 416-கீழ்க்குறிப்பு.

(மஞ்சு ஆடு சாபம்) - அழகு விளங்கும் வில் (அல்லது மேகத்தின் வானவில்) போன்ற நெற்றி, வாள், வேல்போன்ற விழிகள், கொஞ்சுதல் மிக நிறைந்த ஆசைக் கிளிபோன்று சிரிப்பு மொழிகளைப் பேசித் தம்மை நண்ணி வந்தவர்களை 'வாரும், இரும், நீர் (நமக்கு) உறவினராயிற்றே' என்றெல்லாம் ஆசை மயக்கத்தை ஊட்டுகின்ற (பொது) மாதர்கள் -

கூடிக் களிப்பவர்கள், (சூது) வஞ்சக ஒழுக்கத்தினர், கொலையும் செயுங் குணத்தினர், குடி கெடுப்பவர், திரிகின்றவர், அலங்கார தோளினர், பண ஆசை உள்ளவர்கள், சாதிபேதம் கவனிக்காத சண்டாளர்கள், சீசி, இத்தகையோரது மாயவலைகளிலே அடியேன் சிக்கி அலையாமல்—

(யோக வழியிற் கிடைக்கும்) சங்க ஓசை ஒலியை (தசநாதங்களை) அனுபவித்து, மிக்க மாயையாம் இருள் வெந்து ஒழிந்துபோக, மூலாக்கினி வீசிட, உபதேசத்தை (எனது) குளிர்ந்த காதில் ஓதி, (உனது) இரண்டு பாதமலரைக் கூடும்படியான திருவருளைத் தந்தருளுக.

அலங்காரமான உருவத்தொடு கூடிய மயில் வாகனனே! (அல்லது—அலங்காரமான உருவத்தனே! மயில்வாகனனே!) உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; கந்தனே! குமரனே! சிவனுக்குக் குருமூர்த்தியே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; (சிந்தூரம்) செம்பொடி — குங்குமம் அணிந்துள்ள பார்வதியின் (சுத—ஆகர) பிள்ளையாய் அமைந்தவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், என்று வெற்றிச் சின்னங்களின் ஓசை—

கடல்போல முழங்க ஜோதிஒளி கொண்டவேலாயுதனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன் — எலும்பாபரணனும், சடாமுடி உடையவனுமான சிவனுக்குக் குருமூர்த்தியானவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், (என்று முழங்கவும்), வலிமை மிக்க சூரனுதியரும், கடலும், எழுகிரி — கிரவுஞ்சம் ஆகிய மலைகளும் பொடியாக (வை) கூரிய—வேலைச் செலுத்தின முருகனே!

*இங்கித வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
யின்பான தேனிரச †மார்முலைவி டாதகர மணிமார்பா-

‡எண்டோளர் xகாதல்கொடு oகாதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் °°மாலைமுடி ஆறுமுகவாவமரர் பெருமாளே.(க)

திருவிற்குடி.

[திருவாரூருக்கு வடக்கு சுமார் 5-மைல் தூரத்திலுள்ள விற்குடி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 3-மைல். அஷ்டவீரத் தலங்களுள் ஒன்று. சலந்தரனைச் சங்கரித்த தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

818.

தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன தந்ததான

சித்திரத்திலுமி குத்த பொற்பவள
மொத்த மெத்தஅழ குற்ற குத்துமுலை
சிற்ப சிற்பமயி ரொத்த சிற்றிடைய வஞ்சிமாதர்-

††சித்த மத்தனையு முற்ற ள்ப்பகடல்
மொய்த்த சிற்றுமண லுக்கு மெட்டியது
‡‡சிக்கு மைக்குழல்கள் கஸ்து ரிப்பரிம ளங்கள்வீசப்;

---

* பிரமனை மோதினது—பாடல் 608-பக்கம் 406 கீழ்க்குறிப்பு.
† முலைவிடாத கர-பாடல் 522; 644-பக்கம் 508 கீழ்க்குறிப்பு.
‡ **சிவபிரான் எண் தோளர்** : "எண்டோளர் முக்கண்ணர் எம்மீசர் இறைவர்"—சம்பந்தர். 1-130-10

x இது சிறுத்தொண்ட நாயனார் சரிதம்:
பிள்ளைக்கறி வேண்டுமென்று சிவனே ஒரு மகா விரதியர் போல வந்து உணவை விரும்ப, சிறிதும் தயங்காது தனது பிள்ளையையே அரிந்து சமைத்து உணவாகத் தந்த திடவிய பத்திப் பெருந்தகை சிறுத்தொண்டர், அவரது ஊர் திருச் செங்காட்டங்குடி:

o காதல் கறி—காதலன் கறி: பிள்ளைக்கறி; பிள்ளை—சீராளன்.

°° மாலை—பாடல், "காழியர் மன்னன் உன்னிய †† மாலை யீரைந்து", "ஞானசம்பந்தன் சொல் ஈரைந்து மாலையும்" —சம்பந்தர் 3-22-11; 3-34-11. (தொடர்ச்சி-பக்கம் 411)

(இங்கித) இங்கிதமான — இனிமை வாய்ந்த வேதம் படித்த பிரமன் விரும்படி அவனை மோதியும், ஒப்பற்ற பெண்ணாகிய வள்ளிமேற் கொண்ட காதலோடு (அவள் வசித்த) (தினைக்) காட்டுக்குச் சென்று அந்த வள்ளிநாயகியின் இன்பமயமான தேன்போல இனிப்பதான மார் முலையை விடாத கரதலமும், அழகிய மார்பும் கொண்டவனே!

எட்டுத் தோள்கொண்ட சிவபிரான் ஆசையுடனே (காதல்கறியை) பிள்ளைக்கறியை உண்ட திருச் திருச்செங்காட்டங்குடி என்னும் தலத்தைச்சேர்ந்து, ஒளிவீசும் மயில்மேல் அழகாக வீற்றிருந்து — அடியேனுடைய ஆசையால் எழுந்த இத் தமிழ்ப்பாட்டை (அல்லது எனது தமிழ் மாலைகளை) புனைந்தருளும் ஆறு முகத்தனே! தேவர் பெருமாளே! (இருபாத மலர் சேர அருள் புரிவாயே)

திருவிற்குடி

818.

சித்திரத்திலும் மிக்க விசித்திரத்தைக் கொண்டதாய், பொன்னிறம்—பவளநிறம் இவை கொண்டதாய் மிக அழகிய திரட்சியை உடையதான கொங்கை, (சிற்ப சிற்பம்) மிக நுண்ணிதான — நுட்பமான — மயிரிழை போன்று நுண்ணிதான சிறிய இடை — இவைதமை உடைய வஞ்சிக்கொடி போன்ற மாதர் (பொதுமகளிர்) (இவர்களுடைய)—

உள்ளம் அத்தனையும் முழுமையும் அளந்தால் அது கடலில் மொய்த்துள்ள சிறுமணல் அளவையும் *எட்டத் தக்கதாம்-(சிறுமணலின்தொகையையும் எட்டும் அப்போது மகளிரின் உள்ளத்து எண்ணங்கள் என்பதாம்); சிக்குள்ள (தங்கள்) கரிய கூந்தல்களில் கஸ்தூரி வாசனை வீச—

(410 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

†† பொது மகளிரின் சித்தம்-கடல் மணலின் அளவினது, கடல் மணலுக்கும் தொலைவானது—மேற்பட்டது :—
"முப்பதுகோடி மனத்தியர்"—திருப்புகழ் 1190;
"நூறுயிர மனமுடை மாபாவிகள்" "வஞ்சமே கோடி கோடிகள்"
—திருப்புகழ் 583-பக்கம் 330-கீழ்க்குறிப்பு; பாடல் 237.
‡‡ "குழல் முக்கலச் சிக்கும் பிடிக்கும்" —(காளமேகம்)

---

* மணலுக்கும் (எட்டியது)—தொலைவானது எனலுமாம்.

பத்தி ரத்திலுமி குத்த கட்கயல்கள்
வித்து ருத்தநுவ ளைத்த நெற்றிவனை
பற்க ளைப்பளிரெ னச்சி ரித்துமயல் விஞ்சைபேசிப்-

பச்சை ரத்நமயி லைப்பொ லத்தெருவி
லத்தி யொத்தமத மொத்து நிற்பர்வலை
பட்டு ழைத்து *குழி யுற்ற அத்தியென மங்குவேனோ;

தத்த னத்தனத னத்த னத்தனன
தித்தி மித்திமிதி மித்தி மித்திமித
தக்கு டுக்குடுடு டுக்கு டுக்குடென சங்குபேரி-

சத்த முற்றுகடல் திக்கு லக்கிரிகள்
நெக்கு விட்டுமுகி லுக்கு சர்ப்பமுடி
சக்கு முக்கிவிட கட்க துட்டசுர ரங்கமாள;

வெற்றி யுற்ற †கதிர் பத்தி ரத்தையரு
ளிச்சு ரர்க்கதிப திப்ப தத்தையுறு
வித்த ளித்து‡மதி பெற்ற தத்தைமண முண்டவேலா-

xவெட்கி டப்பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துசிறை வைத்து முத்தர்புகழ்
விற்கு டிப்பதியி லிச்சை யுற்றுமகிழ் தம்பிரானே. (க)

---

* குழி யுற்ற அத்தி—படுகுழியில் வீழ்ந்த யானை.
அது மிகவும் துன்புறும்—"குழிப்படு களிற்றிற்
படர்கூர் எவ்வமொடு பதைத்தனர்"—பெருங்கதை 1-46-53.
"நீடுகுழி யகப்பட்ட...களிறுநிலை கலங்க"-புறநானூறு 17.
"குழி கொன்று பெருங்கை யானை பிடிபுக் காங்கு"
—பட்டினப்பாலை 223-4.

† கதிர் பத்திரம்—வேலாயுதம்.

‡ மதி—யானை - பாடல் 590-கீழ்க்குறிப்பு.

x "வெட்கி டப்பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துநட லைச்செ ருக்கையழி
வித்த றத்தர்புகழ் கச்சி யுற்றுமகிழ் தம்பிரானே" என்றும்
பாடம். பிரமன் முடியைக் குலைத்தது
—பாடல் 608-பக்கம் 406-கீழ்க்குறிப்பு.

(பத்திரத்திலும்) வாளினும் மிக்க கூரிய கண்ணும் (கயல்) மீன்கள்—கயல் மீன்களாம் கண்கள், (வித்துரு) மின்னல்போல ஒளிவிடுவதாய், வில்லை வளைத்தது போன்ற நெற்றி, (இவைகளுடன்) உரு அமைந்த பற்களைப் பளீரெனச் சிரித்துக் காட்டிக் காமத்தை ஊட்டும் மாயவித்தைப் பேச்சுக்களைப் பேசி—

பச்சை ரத்ன மயில்போலத் தெருவில் ஆனைக்கு உற்ற மதம்போன்ற மதத்துடன் நிற்பார்கள்—இத்தகைய பொதுமாதர்களின் வலையிற்பட்டு, உழைத்து, படுகுழியில் விழுந்த யானைபோல மனம் குலைந்து நிற்பேனே!

தத்த னத்தனத ... டுக்குடுக்குடென்று சங்கும், பேரியும் (முரசும்)—

ஒலிசெய்து, கடலும், திக்கில் உள்ள சிறந்த அஷ்டகிரிகளும் நெகிழ்ந்து கட்டுவிட, மேக இடியைக் கேட்டு (சர்ப்பம்) ஆதிசேடனது முடிகளும் (சக்கு) கண்களும் — (முக்கிவிட) — துன்பம் உற, வாள் ஏந்திய துஷ்ட அசுரர்களின் உடல் அழிதர—

ஜெயம் கொண்ட ஒளி வாளை — வேலாயுதத்தை (அருளி) பிரயோகித்து, தேவர்களுக்கு (அதிபதிப் பதத்தை) தலைமையாம் நிலையை, (உறுவித்து அளித்து)— சேரும்படி அருள் செய்து, (மதி) யானை—ஐராவதம் வளர்த்த கிளியாம் தேவசேனையைத் திருமணஞ் செய்துகொண்ட வேலனே!

வெட்கப்படும்படிப் பிரமாவைப் பிடித்து அவனது குடுமித்தலையை அலைவித்து, அவனைச் சிறையிலிட்டு, ஜீவன் முத்தர்களாம் பெரியோர் புகழ்கின்ற **திருவிற்குடி** என்னும் தலத்தில் ஆசை பூண்டு மகிழ்கின்ற தம்பிரானே!

(குழியுற்ற அத்தியென மங்குவேனே)

விஜயபுரம்.

[இது திருவாரூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து திருவாரூருக்குப் போகும் வழியில் உள்ளது.]

819. திருவடி அடைய

தனதன தந்தன தானன, தனதன தந்தன தானன
தனதன தந்தன தானன தனதான

குடல்நிண மென்புபு லால்°கமழ் குருதிந ரம்பிவை தோலிடை
குளுகுளு னும்படி மூடிய மலமாசு—
குதிகொளு மொன்பது வாசலை யுடையகு ரம்பையை நீரெழு
குமிழியி னுங்கடி தாகியெ யழிமாய;
†அடலையு டம்பைய வாவியெ அநவர தஞ்சில சாரமி
லவுடத மும்பல யோகமு முயலாநின்—
றலமரு சிந்தைதயி னுகுல மலமல மென்றினி யானுநி
னழகிய தண்டைவி டாமல ரடைவேனோ;
இடமற மண்டு நிசாசர ரடைய மடிந்‡தெழு பூதர
மிடிபட இன்ப மகோததி வறிதாக—
இமையவ ருஞ்சிறை போயவர் பதியு ளிலங்க xவிடாதர
எழில்பட மொன்று oமொராயிர முகமான;
விடதர கஞ்சுகி மேருவில் வளைவதன் முன்புர** நீறெழ
வெயில்நகை தந்த புராரி††ம தனகோபர்—
விழியினில் வந்து பகீரதி மிசைவள ருஞ்சிறு வாவட
விஜய புரந்தனில் மேவிய பெருமாளே. (க)

° கமழ்தல்—பரத்தல். 'வியலிடங் கமழ இவணிசை யுடையோர்க்கு' (புறநானூறு 50) என்புழிப்போல, 'கமழ்தல்' ஈண்டுப் பரத்தற் பொருட்டாய் நின்றது.

† அடலை - துன்பம். 'அடலைக் கடல் கழிவான்நின் அடியிணையே அடைந்தார்'—அப்பர் 4-110-6.

‡ எழுபூதரம் - எழுகிரி - பாடல் 43-பக்கம் 117 கீழ்க்குறிப்பு.

x விடு ஆதர—விடும் ஆதரவானவனே.

o "செம்பொன் வரையோர் பினைகமதாய்ச் சேடன் நாணாய்" ஞானவரோ ... உபதேச காண்டம் 2121; o சேடன் "மணிசேர் ஆயிரம் இருந்தலைகளாய் விரி பணம்"—மயில் வகுப்பு.

** திரிபுரம் எரித்தது: பாடல் 285 பக்கம் 206 பார்க்க.

†† காமனை எரித்தது—பாடல் 399-பக்கம் 510 கீழ்க்குறிப்பு.

விஜயபுரம்
819

குடல், கொழுப்பு, எலும்பு, மாமிசம், (ஊன்), பரந்துள்ள ரத்தம், நரம்பு, இவைகள் தோலின் இடையே குளுகுளு என்று அமையும்படி வைத்து மூடப்பட்டுள்ளதும், மலமும் பிற அழுக்குகளும்,

பொதிந்துள்ள ஒன்பது துவாரங்களை உடைய சிறு குடிலாகிய இவ்வுடலை — நீரிலே தோன்றுகின்ற மொக்குளினும் வேகமாக அழிகின்ற மாயமான—

(அடலை) சாம்பலாகப் போகின்ற (அல்லது துன்பத்துக்கு ஈடான) உடம்பை விரும்பி எப்போதும் சில சாரம் இல்லாத (உபயோகமில்லாத) மருந்துகளையும் பலவித யோகவகைகளையும் உபயோகித்துப் பார்த்து— அநுட்டித்துப் பார்த்து—

வேதனைப்படுகின்ற மனத்தில் படும் (ஆகுலம்) துன்பம் (அலம் அலம்) போதும் போதும்; என்றைக்குத்தான் இனி (அல்லது, போதும் போதும் என்றுணர்ந்து இனி) நானும் உன்னுடைய அழகிய தண்டை எப்போதும் சூழ்ந்துள்ள திருவடிமலரை அடைவேனோ (தெரிய இல்லையே)!

காலி இடம் சற்றும் இல்லாமல் நெருங்கும் அசுரர்கள் எல்லாரும் இறந்துபடவும், (எழுபூதரம்) எழுகிரிகள் இடிபட்டுப் பொடியாகவும், காட்சிக்கு இன்பம் தரும் கடல் வற்றிப்போகவும்—

தேவர்களும் சிறை நீங்கி அவர்களுடைய (அமராவதி) என்னும் ஊரில் விளங்கவும் விட்ட (செய்வித்த) ஆதரவானவனே! அழகிய படங்கள் பொருந்தும் ஒரு ஆயிரம் முகங்களைக் கொண்ட

விஷம் தரிப்பதான பாம்பாகிய ஆதிசேடன் மேருமலை என்னும் வில்லில் (நாணகப்) பூட்டப்பட்டு அவ் வில் வளைபடு முன்னரே, திரிபுரங்கள் சாம்பலாக ஒளிவீசும் சிரிப்பை வெளியிட்ட புராரி (திரிபுரப் பகைவர்), மன்மதனைக் கோபித்து (எரித்தவர்)—ஆகிய சிவபிரானது

கண்களிற் (பொறியாகப்) பிறந்து, கங்கையின் மீது வளர்ந்த சிறுவனே! வட விஜயபுரத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! (தண்டைவிடாமல ரணவேனோ)

திருவாரூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். நாகப்பட்டினத்துக்கு மேற்கு 14-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர்.

தன் மகன் ஏறிச்சென்ற தேரின் கீழ்ப்பட்டு மடிந்த கன்றின் தாயான பசுவின் துயரைச் சகியாது அம் மகன் பட்டுமடிய அவன் மீது தேர் ஊர்ந்து சென்ற "மநுநீதி கண்ட சோழன்" அரசு புரிந்த திருப்பதி. இதனை யித்தலத்துக் குரிய திருப்புகழ் 6-ஆம் பாடலிற் காண்க; ஸ்தல புராணம் உண்டு.]

820. வாழ்நாள் வீணாளாகாமல்

தாந தாந தாந தாந
தாந தானத் தனதான

கூசா தேபா ரேசா தேமால்
கூரு நூல்கற் றுளம்வேறு-

கோடா தே*வேல் பாடா தேமால்
கூர்கூ தாளத் தொடைதோளில்;

வீசா தேபார் பேசா தேசீர்
வேதா தீதக் கழல்மீதே-

வீழா தேபோய் நாயேன் வாணாள்
†வீணே போகத் தகுமோதான்;

நேசா வானோ ரீசா வாமா
நீபா கானப் புனமானை-

நேர்வா யார்வாய் ‡சூர்வாய் சார்வாய்
நீள்கார் சூழ்கற் பகசாலத்;

---

* வேலைப் பாடுங்கள்—என்பது அருணகிரியார் அழுந்தச் சொல்லும் உபதேசங்களுள் ஒன்று—

"ஆடும்பரி **வேல்** அணிசேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்"

"வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்"-கந்தரநுபூதி 1, 40.
"காய்வேல் பாடேன்"—திருப்புகழ் 1062.

† கூச்சமில்லாமலும், உலகினரின் ஏசுதல் இல்லாமலும், உள்ளம் கோணல் வழியிற் செல்லாமலும் நான் வேல் பாடவேண்டும். அத்தகைய நிலையில் இருந்து, நான் வேலைப் பாடாமலும், மாலையை

[தொடர்ச்சி 417 ஆம் பக்கம்]

திருவாரூர்

820.

(நான்) நாணங்கொள்ளாமல், உலகினர் என்னை ஏசாமல் (இகழாமல்), (மால்)—(உனது)—பெருமையைக் கூருத நூல்களை (அசட்டு நூல்களைக் கற்று—அதனுல் உள்ளம் வேறு—மாருகி—(அல்லது—மால் கூரு நூல்—மூவாசையைக் கூருத (எழுப்பாத) (ஞான) நூல்களைக் கற்று, உள்ளம் மாருகி)

(கோடாதே) கோணல் வழியைப் பின்பற்ருமல் நன்னெறியில் இருப்பதை விட்டு விட்டு (உனது) வேலாயுதத்தைப் பாடாமலும், ஆசை மிக்கெழக் கூதாள மாலையை உனது (பன்னிரு) தோள்களில்

வீசாமலும், (உனது) பேர்—புகழைப் பேசாமலும், சிறப்புற்றதும், வேதத்துக்கு மேற்பட்டு எட்டாததுமான உனது திருவடியின் மேல்—

வீழாமலும் போய், அடியேனுடைய வாழ்நாள் வீண் நாளாகப் போதல் நீதியோதான்—போகலாகாது என்றபடி;

அன்பனே! தேவர்களுக்குத் தலைவனும் ஈசனே! (வாமா—அழகனே! கடப்பமாலையனே! காட்டில் தினைப்புன மான் வள்ளியைச்—

சந்தித்தவனே! (உள்ளம்) குளிர்ந்தவனே! (திருப்தி அடைந்தவனே)! (சூர்வாய் சார்வாய்) சூரனிருந்த இடம் மகேந்திர நகரைச் சென்று சார்ந்தவனே! (சூரனைத்தேடிச் சென்றவனே!) பெரிய மேகங்கள் சூழ்ந்துள்ள கற்பக விருக்ஷக் கூட்டங்கள் உள்ள—

(416-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உனது தோளில் வீசாமலும், உன் பேர் (புகழைப்) பேசாமலும், உன் கழலில் வீழாமலும் (போய்)—காலம் கழித்து - என் வாழ்நாள் வீணே போகத் தகுமோ!—என்றவாறு.

கூசாமலிருக்கவும், பார் ஏசாமலிருக்கவும், உளம் கோடாமலிருக்கவும் நான் வேலைப் பாடவேண்டும் — அங்ஙனம் வேலைப் பாடாதே—எனவுமாம்.

‡ சூர்வாய் சார்வாய் - சூரனுகிய மயிலைச் சார்வாய் (வாகனமாக நடத்துவாய்) - எனவுமாம்.

தேசா *தீன †தீன ரீசா
சீரா னூரிற் பெருவாழ்வே-
சேயே வேளே ‡பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. [க]

---

821. அகப்பொருள் (நாரையை வினவுதல்)

தான தான தான தான
தான தானத் தனதான

xகூர்வாய் நாராய் வாராய் போனார்
கூடா ரேசற் றலஆவி-
கோதா னேன்oமா தாமா ருனள்
கோளே கேள்மற் றிளவாடை;
ஈர்வாள் போலே மேலே வீசா
ஏரு வேறிட் டதுதியின்-
ஏயா வாழ்வோர் பேரே பாடா
ஈடே ருரிற் கெடலாமோ;
சூர்வா ழாதே மாரு தேவாழ்
சூழ்வா னோர்கட் கருள்கூருந்-
**தோலா வேலா வீரு ரூர்வாழ்
சோதி பாகத் துமையூடே;

---

* ஆதீனம் - உரிமை, வசம், ஆளுகை.

† தீனர்—வறியவர் "தீனரைத் தியக்கறுத்த திருவுரு வுடையர் போலும்"—அப்பர் 4-56-9.

‡ பூ - பொலிவு, அழகு, தீப்பொறி.

x "பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"
—சத்திமுத்தப் புலவர்.

o மாதா, கேளிர், வாடை, - காமங் கொண்டார்க்குப் பகை
—(பாடல் 218-பக்கம் 53 கீழ்க்குறிப்பு பாடல் 802;

** முருகன் தோல்வி அறியாதவர்; நினைத்ததை முடிப்பவர்— "மாறுவென்றி...செய்யோன்" "முருகொத்தீயே முன்னியது முடித்தலின்"—புறநானூறு 56.

(தேசாதீன) தேச ஆதீன — தேசமாகிய பொன்னுலகத்துக்கு உரிமையாளனே! (ஆதீனர்—உன்னை நம்பி இருந்த தேவர்களுக்கு (அல்லது தீனர் - ஏழைகளுக்கு) ஈசா - தலைவனே! சிறப்பு வாய்ந்த திருவாரூரில் (வீற்றிருக்கும்) பெருஞ் செல்வனே!

சேயே! வேளே! பொலிவு உள்ளவனே (அல்லது தீப்பொறியாய்த் தோன்றினவனே)! தலைவனே! தேவனே! தெய்வப் பெருமாளே! (தேவர்கள் பெருமாளே)!

[வாணாள் வீணே போகத் தகுமோதான்]

821.

கூரிய வாயை உடைய நாரையே! [இங்கே] வா! என்னை விட்டுப் பிரிந்துபோனவர் திரும்பி வந்து [என்னைக்] கூடாரோ—சேராரோ! கொஞ்சமல்ல என் ஆவி [உயிர்] [மிகவும்]

குற்றம் அடைந்தது; [பயனற்றதாயிற்று]; [என்] மாதா—தாயும் [மாறுனாள்] என்னொடு மாறுபட்டுப் பகையானாள்; [கோளேகேள்] கேள் — கேளிர் — சுற்றத்தார்கள்—கோள் மூட்டுதலிலேயே [என்மேல் அலர் தூற்றுதலிலேயே) ஈடுபட்டுள்ளார்கள்; மற்றும் இளவாடைக் காற்றானது—

அறுக்கின்ற வாள்போல என் மேலே வீசி, ஏறு— ஏறி, [ஏறிட்டது தீயின்] தீப்போல—நெருப்புப்போல [ஏறிட்டது] மேலே படுகின்றது:

ஈயாமல் ஒருவருக்கு ஒன்றும் கொடாமல் வாழ்கின்றவர்களின் பேரைப் பாடி ஈடேறாது தவிப்பவர் போல (நானும்) கெடலாமோ!

சூரன் வாழா தவண்ணம், (மாறாதே வாழ்சூழ்)- தங்களது (சுக) நிலை மாறாமல் உள்ள வாழ்வைச் சூழும் (ஆய்ந்து தேடும்) தேவர்களுக்கு அருள் நிரம்பப் பாலித்த—

தோல்வியே அறியாத வேலனே! மேம்பட்டு விளங்கும் திருவாரூரில் வாழ்கின்ற ஜோதி (சிவன்), அவரது ஒரு பாகத்தில் உள்ள உமை—இவர்கள் (ஊடே) மத்தியிலே—

சேர்வாய் *நீதீ வானோர் வீரா
சேரா ரூரைச் சுடுவார் தரு-

†சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (உ)

---

822. இகழ்ச்சி யற

தான தான தான தான
தான தானத் தனதான

பாலோ தேனோ பாகோ வானோர்
பாரா வாரத் தமுதேயோ-

பாரோர் சீரோ வேளேர் வாழ்வோ
‡பானோ வான்முத் தெனநீளத்;

தாலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் துனுசாரந்-

தாரா தேபே ரீயா தேபே
சாதே யேசத் தருமோதான்;

xஆலோல் கேளா மேலோர் நாண்மா
லானா தேனற் புனமேபோய்-

ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா oவேளைப் புகுவோனே;

---

* "நீதீ நின்னையல்லால் நெறியாது நினைந்தறியேன்"
—சம்பந்தர் 3-55-6.

† இந்த அடியைப் பாடல்கள் 1041—1045 எண்ணுள்ள பாடல்களிலும் காணலாம்.

‡ 'பானோ'—பாநுவோ—பாடல் 826 பார்க்க.

x ஆலோலம்—பறவை யோட்டு மொலி.

o 'வேளைப் புகுவோனே'-பாடல் 166-பக்கம் 387, பாடல் 625-பக்கம் 451 கீழ்க்குறிப்பு.

(சேர்வாய்) (சோமாஸ்கந்த மூர்த்தி உருவில்) விளங்குவாய்! நீதிப் பெருமானே! தேவர்களுக்கு வீரனே! (சேரார்) பகைவர்களுடைய ஊரை (திரிபுராதிகளின் ஊரைச்) சுட்டவராகிய சிவனது

குழந்தையே! வேளே! (பூவே)—பொலிவு உள்ளவனே! தலைவனே! தேவனே! தேவப் பெருமாளே!

(ஈடேறுரிற் கெடலாமோ)

822.

பால் தானோ நீ, தேன் தானோ நீ, வெல்லக்கட்டி தானோ நீ, தேவர்கள் (பாராவாரத்து) — கடலினின்றும் கடைந்தெடுத்த அமுதமோ நீ—

உலகோரின் சிறப்புப் பொருளோ நீ, மன்மதன்போன்ற அழகிய வாழ்வோ நீ, (பானோ)—பானுவோ (சூரியனோ நீ), (வான்) சிறந்த முத்தோ நீ என்று விரிவாகத் (தாய்மார்)

தாலோ தாலேலோ என்று என்னை (அருமையுடன்) பாடாமலும், தாய்மார்கள் (நேசத்து) அன்புடனே (உனு—உன்னு) நினைத்து, (சாரம்) தனசாரமாம்—முலைப்பால்—

தராமலும், (பேர் ஈயாதே)—*புகழ்ச்சிக்கு உரிய பேர் ஒன்றும் கொடாமலும், (அன்புடனே என்னுடன்) குலவாமலும் இகழ்ச்சிக்கிடமாய் நான் வளர்வது நீதியோ தான்!

(ஆலோலம்) வள்ளி ஆயால் ஓட்டும் ஒலியைக் (கேளா) கேட்டு, மேலோர் நாள்—முன்பு ஒரு நாள், (மால்) ஆசை—(ஆனது) —கெடாவகையில் (குறையா வகையில்), (ஏனற்புனமேபோய்) அவளிருந்த தினைப்புனத்துக்குச் சென்று—

(ஆயாள்)—தாய் வள்ளியின் கால்மேலே வீழ்ந்தும், (வாழா) அதனால் வாழ்வு பயன்பட்டதென்று வாழ்ந்தும், (ஆளா) வள்ளிக்கு ஆளாக—(வேளைப் புகுவோனே)—சமயத்திற் புகுந்து நின்றவனே! (அல்லது பொழுது போக்கினவனே!) (வள்ளி வேளைக்காரனாக விளையாடினவனே)!

---

* 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று' - திருக்குறள் 236-ன் கருத்தது.

சேலோ டேசே ராரால் சாலார்
சீரா ரூரிற் பெருவாழ்வே-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (கூ.)

823. கழல் பெற

தானனத் தனதான

நீதானெத் தனையாலும் - நீடுழிக் க்ருபையாகி;
மாதானத் தனமாக - மா*ஞானக் கழல்தாராய்;
†வேதாமைத் துனவேளே - வீராசற் குணசீலா;
ஆதாரத் தொளியானே - ஆரூரிற் பெருமாளே. (௨)

824. திருவடியை நினைக்க

தனதன தனன தனதன தனன
தானன தந்த தனதான

மகரம துகெட இருகுமி ழுடைசி
வாரார்ச ரங்க ளெனநீளும்-
மதர்விழி வலைகொ டுலகினில் மனிதர்
வாணாள டங்க வருவார்தம்;
பகர்தரு மொழியில் ம்ருகமத களப
பாடீர கும்ப மிசைவாவிப்-

* ஞானக்கழல்—
"சுத்த ஞானமென்னும் தண்டையம் புண்டரிகம்"
—(கந்தரலங்காரம் 92)

† வேதா — திருமாலின் மகன்; முருகவேள் — திருமாலின் மருகனுதலால், முருகவேள் வேதாவின் மைத்துனர் — பாடல் 929-ம் பார்க்க.

"மதனனுக்கும் சதுமுகற்கும் மைத்துனன் காண் அம்மே"
—திருமலையாண்டவர் குறவஞ்சி. 52-(2)

சேல் மீனேடே சேர்ந்து (ஆரால்) ஆரல் மீன்கள் (சாலார்) மிகுந்து நிறைந்துள்ள சீர்பெற்ற திரு ஆரூரிற் பெருஞ்செல்வமே!

சேயே! வேளே! பொலிவுள்ளவனே! தலைவனே! தேவனே! தேவப்பெருமாளே!

(ஏசத் தகுமோ தான்)

823.

(முருகா) நீதான் எவ்வகையாலும்—எல்லா வகையாலும்—(என்மீது)—நீண்ட ஊழிகாலம் வரையில் (எப்போதும்) கிருபை கூர்ந்தவனுகி—

சிறந்த (தானத் தனமாக) தானப் பொருளாக — மேலான ஞானபீடமாகிய உனது திருவடியைத் தந்தருளுக.

பிரமாவின் மைத்துனனுகிய செவ்வேளே!—வீரனே! சற்குண சீலனே!

*ஆருதாரங்களிலும் ஒளியாய் விளங்குபவனே! — திருவாரூரிற் பெருமாளே!

(மாஞானக் கழல்தர்ராய்)

824.

மகரமீனும் தன்முன் (நிலைகலங்கிக்) கெட, இரண்டாய், குமிழம்பூப் போன்ற மூக்கை (அடைசி) நெருங்கிச் சேர்ந்து, நீளம் மிக்க அம்புகள் என்று சொல்லும்படி நீண்டுள்ள தாய்—

செழிப்பு மிக்க கண் என்னும் வலை கொண்டு உலகில் மனிதர்களின் — ஆண்மக்களின் வாழ்நாள் (அடங்க) முழுமையும் (அல்லது சுருங்கும்படி) (வருவார் தம்) எதிர்தோன்றி வருகின்ற மாதர்களின்—

பேசும் பேச்சிலும், கஸ்தூரி, (களப பாடீரம்) (பாடீர களபம்) சந்தனக் கலவை கொண்டுள்ள குடம் போன்ற கொங்கைமீது (வாவி) தாவிப்

* ஆருதாரங்கள்—பாடல் 220-பக்கம் 56 பார்க்க.

படி* மன துனது பரிபுர சரண
பாதார விந்த நினையாதோ;
நகமுக சமுக நிருதரு மடிய
நாஞவி லங்கல் பொடியாக-
நதிபதி கதற †வொருகணை தெரியு
நாராய ணன்றன் மருகோனே;
அகனக ‡கனக சிவதல முழுது
மாராம பந்தி யவைதோறும்-
அரியளி விததி முறைமுறை கருது
மாரூர மர்ந்த பெருமாளே. (நூ)

825. திருவடி பெற

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

கரமு xமுளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொழி கனிகதிர் முலைநகை
கலக மிடுவிழி கடலென விடமென மனதூடே-
கருதி யனநடை கொடியிடை யியல்மயில்
கமழு மகிலுட னிளகிய ம்ருகமத
களப புளகித கிரியினு மயல்கொடு திரிவேனும்;
இரவு பகலற இகலற மலமற
இயலு மயலற விழியினி ரிழிவர
இதய முருகியெ யொரு oகுள பதமுற மடலூடே-

---

* பெண்களை நினைக்கும் மனது உன்னை நினைக்க லாகாதா !—
" தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறுயிரங் கூறிட்டு, அத்தில் அங்
கொரு கூறுன்கண் வைத்தவருக் கமருல களிக்கும்
நின் பெருமை "—திருவிசைப்பா—13-8.

† 'ஒருகணை தெரியும் நாராயணன்'-பாடல் 452-பக். 6 கீழ்க்குறிப்பு.

‡ 'கனக மாணிக்க வடிவனே'—திருப்புகழ் 427.

x 'முளரியின்' என்பது இடைநிலைத் தீபமாகக் கொண்டு 'முளரியின் கரம்', 'முளரியின் மலர்முகம்' எனப் பொருள் காணலாம். " திருமுகங்கமலம் ... துணைக்கரம் கமலம் "
—தணிகைப் புராணம் - களவு 43.

o குள பதம்—சர்க்கரைப் பாகு பதம்.

படியும் (என்) மனம் உனது சிலம்பணிந்த சரணம் - அடைக்கல ஸ்தானமாகிய திருவடித் தாமரையை நினைக்கமாட்டாதோ!

(நகமுக சமுக) மலை இடங்களின் முன்புள்ள அசுரர்கள் இறந்துபட, பலவித மலைகளும் பொடிபட—

(நதிபதி) கடல் கதற, ஒரு அம்பைச் செலுத்தின நாராயணனுடைய மருமகனே!

(அகல் நக) அகன்ற மலையிடங்களுக்கு உரியவனே! கனக—(செம்) பொன் வடிவனே!—சிவதல முழுதும்— சிவ ஸ்தலங்கள் எல்லாவற்றிலும் (அமர்ந்த பெருமாளே!) *(ஆராம பந்தி) சோலைகளின் வரிசைகள் தோறும்

அழகிய †வண்டுகளின் கூட்டம் வரிசை வரிசையாக் (மலர்த்தேனை) எண்ணி விரும்பும் திருவாரூரில் அமர்ந்த பெருமாளே! (மனது உனது...பாதாரவிந்தம் நினையாதோ).

825.

கரங்கள் (முளரியின்மலர்) தாமரையையும், முகம் நிலவையும், கூந்தல் (கனமது) மேகத்தையும், எண்ணும் மொழி—மதிக்கத்தக்க சொற்கள் கனி—பழத்தையும், கதிர் மு(ல்)லை நகை-கதிர் நகை-ஒளி பொருந்திய பற்கள் (முலை) முல்லைமலரையும், (கலகம்) போரை (சச்சரவை) விளைக்கும் கண்கள் கடலையும், விஷத்தையும் ஒக்கும் என்று மனதுக்குள்ளே—

எண்ணி, அன்னம்போன்ற நடை, கொடிபோன்ற இடை(இயல் மயில்) மயில் போன்ற சாயல், நறுமணம் வீசும் அகிலுடன் இழைந்துள்ள கஸ்தூரிக்கலவை, புளகாங்கிதம் — கொண்ட கிரி(யினும்) கொங்கை இவைகளில் மோகம் கொண்டு திரிகின்ற நானும்—

‡இரவு பகல் அற, பகை எண்ணம் அற, (அவிரோத ஞானம் உற), மும் மலங்கள் அற, வந்து பொருந்துகின்ற ஆசைகள் அற(ஒழிய)க், கண்களில் நீர் இழிவர—நீர் ஒழுக, உள்ளம் உருகி ஒரு பாகுவெல்லம் போன்ற (பதத்தை) நிலையப் பொருந்த-மடலில்—

---

* சோலைகளின் வரிசைகள் தோறும் அமர்ந்த பெருமாளே எனவும் சேர்க்கலாம்—"காடும் **காவும்** கவின் பெறு துருத்தியும்... புதுப் **பூங் கடம்பும்**" என்றாரா தலின்—திருமுருகாற்.

† இங்கே வண்டுகள்—முனிவர்கள் எனலுமாம் (உருவகம்): 'அலந்து மதுகர முனிவர் பரவ வளர் கமலம் அனைய திருவடியிணைகள்'—எனவரும் சிவப்ரகாசச் செய்யுளையும்—'முனிவராகிய வண்டுகள் ஆசைப்பட்டுத் தோத்திரம் பண்ண'—என வரும் அதன் உரையையும் காண்க. 'மதுப முகரித...கவிமாலை சூடுவதும்... சீறடியே'-சீர்பாத வகுப்பு-(அருணகிரிநா. நூலாராய்ச்சி-பக். 180).

‡ இரவு பகல் அற-பாடல் 303-பக்கம் 250 கீழ்க்குறிப்பு.

*யெழுத் தரியவள் குறமக ளிருதன
  கிரியில் முழுகின் இளையவ னெனுமுறை
  யினிமை பெறுவது மிருபத மடைவது   மொருநாளே ;
†சுரபி மகவினை யெழுபொருள் வினவிட
  மனுவி னெறிமணி ‡யசைவுற விசைமிகு
  துயரில் செவியினி லடிபட வினவுமி   னதிதீது-
துணிவி விதுபிழை பெரிதென வருமநு
  உருகி யரகர சிவசிவ பெறுமதொர்
  சுரபி யலமர விழிபுனல் பெருகிட   நடுவாகப் ;
பரவி யதனது துயர்கொடு நடவிய
  Xபழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
  0படிய ரதமதை நடவிட மொழிபவ   னருளாரூர்ப்-
படியி லறுமுக சிவசுத கணபதி
  யிளைய குமரநி ருபபதி சரவண
  பரவை முறையிட அயில்கொடு நடவிய   பெருமாளே. (சு)

---

* 'எழுதிட அரிய எழில் மறமகள்'—திருப்புகழ் 1080.

† திருவாரூரில் மநுநீதிச் சோழன் மகன் செலுத்தின தேர் அவன் அறியாமல் ஒரு பசுவின் கன்றின்மேல் ஏற அக் கன்று இறந்தது. கன்றை இழந்த தாய்ப்பசு துயரம் எய்தி, சோழனது அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைத்து அடித்தது. சோழன் திடுக்கிட்டு நடந்த விவரங்களை அறிந்து தன் மகன்மீது தன் தேரைச் செலுத்தி மகனை மடிவித்துப் பழிக்குப் பழிவாங்கி அறத்தை நிறுவினன். சோழனது நீதித் திறத்தைக் கண்ட இறைவன் இறந்த கன்றும் மகனும் உயிர்பெற் றெழுமாறு அருளினர். இத்னவிரிவைப் பெரிய புராணத்திற்காண்க.

"தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்த ஆ தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே"

‡ அசைவுறவிசை—அசைவு உறு அ இசை. விசை மிகுதுயர்—வேகம் மிக்க துயர்-எனலுமாம்.

X பழுதின் மதலை—குற்றமடைந்த மதலை, பழுதுஇல்மதலை—குற்றம் இல்லாத மதலை—என இரு பொருள்பட உளது.

0 "ஒரு மைந்தன் தன் குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்"
(மருமம் - மார்பு) —பெரிய புரா-திருவாரூர் 27, 44.

எழுதுதற்கு முடியாத அழகினளாம் குறமகளின் வள்ளியின் - இரண்டு கொங்கை மலைகளில் முழுகின இளையவனே என்கின்ற (உரையானது) சொல்லானது எனக்கு இன்பம் தருவதும், நான் உன் இரண்டு பாதங்களை அடைவதுமான ஒரு நாள் (என்றேனும்) வருமா!

(சுரபி) பசு (மகவினை) இறந்துபட்ட தன் கன்றினை, எழுபொருள் வினவிட—எழுப்புதற்கு வழியை ஆராய்ந்து நாடி—(மனுவின்) மநுநீதி சோழனுடைய (நெறி மணி)—அறநெறியைக் காட்டும் ஆராய்ச்சி மணியை (அசைவு உற) சென்று அசைத்து ஆட்ட, அ இசை—அந்த மணி ஒலியானது மிக்க துயரை விளைத்து (அரசனது) காதில் (அடிபட) ஒலிக்க, (அரசன் அச்சம் உற்று) வினவுமின்—போய் விசாரியுங்கள், அதிதீது—மிகவும் கொடுமையான செயல் ஏதோ நடத்திருக்கின்றது—

(துணிவில்) நிச்சயித்துப்பார்க்கில்—ஆய்ந்து பார்க்கில்—ஏதோ பெரிய பிழை வந்துளது என எழுந்து வந்த மநுச்சோழன் — உள்ளம் உருகி, அவன் வாயினின்றும் "ஹரஹர சிவசிவ" என்ற வார்த்தைகளை வரச்செய்த ஒப்பற்ற அந்தப் பசு வேதனைப்பட்டு கண்ணீர் பெருக்குதலைக் கண்டு, நடுநிலைமை அறிந்து—

(இறைவனைத்) தியானித்து, அந்தப் பசுவுக்குத் துயரத்தைத் தரும்படியாகத் (தேரை) (நடவிய) ஓட்டின (பழுதின் மதலையை) குற்றத்துக்கு ஆளான தன துபிள்ளையின் உடல் இரண்டு பிளவுபடும்படி அவன்மேல் படியும்படித் தேரை நடத்தும்படிச் சொன்னவனாகிய மநு ஆண்டருளின திருவாரூர் (அல்லது மநுவுக்கு அருள்பாலித்த திருவாரூர்)ப்

(படியில்) பூமியில் — தலத்தில் ஆறுமுகனே! சிவகுமாரனே! கணபதியின் தம்பியே! குமரனே! அரசர் தலைவனே! சரவணனே! கடல் முறையிட்டலற வேல்கொண்டு செலுத்தின பெருமாளே!

(இருபதம் அணைவதும் ஒரு நாளே)

826. மனம் உருக

தானா தானா தனதன தனதன
தானா தானா தனதன தனதன
தானா தானா தனதன தனதன தனதான

பாலோ தேனோ பலவுறு சுளையது
தானோ வானோர் அமுதுகொல் கழைரச
பாகோ வூனோ *டுருகிய †மகனுண வருண்ஞானப்-
பாலோ வேறோ மொழியென அடுகொடு
வேலோ கோலோ விழியென முகமது
‡பானோ வானூர் நிலவுகொ லெனxமகண் மகிழ்வேனை;
0நாலாம் ரூபா கமலஷண் முகவொளி
யேதோ **மாதோம் எனதகம் வளரொளி
நானோ நீயோ படிகமொ டொளிரிட மதுசோதி-
நாடோ வீடோ ††நடுமொழி யெனநடு
தூணோர் தோளா சுரமுக கனசபை
நாதா தாதா எனவுரு கிடஅருள் புரிவாயே;
மாலாய் ‡‡வானோர் மலர்மழை பொழியவ
தாரா சூரா எனமுனி வர்கள்புகழ்
மாயா ரூபா அரகர சிவசிவ XXஎனவோதா-
00வாதா டூரோ டவுணரொ டலைகடல்
கோகோ கோகோ எனமலை வெடிபட
வாளால் வேலால் மடிவுசெய் தருளிய முருகோனே;

---

* உருகிய—ஒன்றுபட்ட † மகன்—திருஞான சம்பந்தர்.
‡ பானோ—பாநுவோ. X மகள்—பெண்கள். 0 நாலாம்—பல.
"ஒன்றாய் இருதிறமாய்...அளப்பிலவாய்
நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாம் நீங்கஅற்றி
நன்றாவி கட்கு நலம் புரிதற் கேயன்றே. —கந்தபுரா-3-9-78.
** மா தோம்—பெருங் குற்றம். †† நடுமொழி-உண்மையை மொழி.
‡‡ முருகன் அவதரித்த பொழுது வானோர் மலர்மாரி பொழிந்தனர்.
"அயனும் மாலும் வான்திகழ் மகத்தின் தேவும்
முனிவரும் மலர்கள் தூவி, என்றெமை அருளு கென்றே
எத்திசை எடுத்துச் சூழ்ந்தார்" —(கந்தபுரா-திருஅவதார-93)
XX ஓதா—ஓதாமல்.
00"வாதாடு அவுணரொடு ஊரொடு" என மாற்றிப் பொருள்கொள்க.

826.

பாலோ ! தேனே ! பலாப்பழத்தில் உள்ள சுளை தானே! தேவர்கள் உண்ணும் அமுதம் தானே! கரும்புரச வெல்லப்பாகோ ! ஊன் ஒன்றுபட்ட — (குழந்தையாய் அவதரித்த) அல்லது ஊன் உருகப்பாடிய மகன் — திருஞானசம்பந்தர் உண்ணும்படி (தேவி) அருளின ஞானப்

பால்தானே ! வேறு—வேறு ஏதாவதோ—(மகளிரின்) மொழி என்றும், அடு கொடு—கொல்லுதலைக் கொண்ட வேல்தானே, அம்புதானே (அவர்களின்) கண்கள் என்றும், முகமானது—பானுவோ—சூரிய ஒளியதோ, ஆகாயத்தில் ஊர்ந்து செல்லும் சந்திர ஒளியோ என்றும், (மகள்) பெண்கள்பால் மகிழ்ச்சிகொள்ளும் நான்—

(நாலாம் ரூபா)–பல உருவமும் கொண்ட உருவத்தனே! தாமரை போன்ற ஆறுமுக ஒளியே! வேறு எதுவோ ! (மாதோம் எனது அகம்) பெருங்குற்றம் கொண்ட என்னுடைய மனத்தில் வளர்கின்ற சோதியே! நானே நீயோ பளிங்குபோல விளங்கும் இடம்; அது (ஒரு) சோதி

நாடுதானே அல்லது மோக்ஷவீடோ ! நடுநிலைமையான உண்மையை மொழி என்று வேண்டி, நடுவில் உள்ள தூணுக்குச் சமமான தோள்களை உடையவனே ! தேவர்கள் முன்னிலையில் பெருமைதங்கிய சபையில் நாதனாய் விளங்குபவனே ! (தாதா) கொடையாளனே ! [(அல்லது உனது திருவருளைத் தா (கொடு) தா (கொடு)] என்று என்மனம் உருகுமாறு திருஅருள் புரிவாயாக ;

காதல் பூண்டவராய்த் தேவர்கள் பூமாரி பொழிய (அவதாரா) அவதரித்தவனே—தோன்றியவனே ! சூரனே ! என்று முனிவர்கள் புகழும் மாயாரூபனே ! 'ஹர ஹர ! சிவ சிவ ! என்று ஓதாமல்

வாதாடி நின்ற அவுணர்களும், அவர்தம் ஊரில் இருந்தவர்களும், அலைகடலும் கோகோ கோகோ என்று அலறவும், மலைகள் (கிரவுஞ்சம் எழுகிரி)—வெடிபட்டுப் பொடியாகவும், வாளாலும் வேலாலும் அவர்களை அழிவு செய்தருளிய முருகனே !

*சூலாள் மாலாள் மலர்மகள் கலைமகள்
†ஓதார் சீராள் ‡கதிர்மதி குலவிய
தோடாள் கோடா ரிணைமுலை குமரிமுன் அருள்பாலா-
தூயா ராயார் இதுசுக சிவபத
வாழ்வா xமீனே வதிவமெ னுணர்வொடு
சூழ்சீ ராரூர் மருவிய இமையவர் பெருமாளே. (எ)

பெரியமடம்.

[கும்பகோணத்தில் ஸ்ரீ மகாமக தீர்த்தத்தின் வடகரையிலுள்ள வீர சைவமடம்.]

"குடந்தையம் பதியிற் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே"
—தக்கயாகப்பரணி பக்கம் 255.

827. தீக்ஷை பெற

தனதனன தானதன தத்தன தாத்த
தனதனன தானதன தத்தன தாத்த
தனதனன தானதன தத்தன தாத்த தனதான

கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்பொய்
களவுமத னூல்பலப டித்தவா வேட்கை
கனதனமு மார்புமுற லிச்சையா லார்த்து கழுநீரார்-
கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வார்த்து
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்ச்செய்
கருமமறி யாதுசிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே;
தலமுடைசு சாளரமு கப்பிலே காத்து
நிறைபவுசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தெனவுருகி யோடியொரு சற்றுளே வார்த்தை தடுமாறித்-

* சூலாள்—துர்க்கை.

† ஓது ஆர் சீராள். "தவளரூப சரச்சுதி யிந்திரை...சேவித... சத்தி பரம்பரி"—திருப்புகழ் 337.

‡ கதிர் (சூரியனையும்) மதி (சந்திரனையும்) தோடாகக் கொண்டவள்-எனலுமாம். சூரியன், சந்திரன்-தேவிக்குக் குழை—
'வயங்கு குழை மதியமோ வாளிரவி மண்டலமே'. தேவிக்கு மதியம் முத்தக்குழை; இரவி மண்டலம் மாணிக்கக் குழை
—தக்கயாகப்பரணி 116-உரை

x ஈனே வதிவம்—இத்தலத்திலேயே உறைவோம்.

(சூலாள்) துர்க்கை, (மாலாள்) — திருமாலுக்கு உரியவளாம், மலர்மகள்—பூமகள்—லக்ஷமி, கலைமகள்—சரஸ்வதி, இவர்கள் ஓதி நிற்கும் சீர்படைத்தவள், ஒளிவீசும் நிலவின் ஒளிகொண்ட தோடு—என்னும் அணியை அணிந்தவள், (கோடார் இணைமுலை) மலைபோன்ற கொங்கை இரண்டை உடைய குமரி, தேவி — முன்பு அருளொடு அளித்த குழந்தையே!

பரிசுத்தமாக இருப்பவர்கள், இதுவே (இத் திருவாரூர் வாழ்வே) சுகமான சிவபத வாழ்வு—இத்தலத்திலேயே நாம் இனித் தங்கிவாழ்வோம் என்ற ஞான உணர்ச்சியொடு வந்து சூழ்கின்ற சிறப்புள்ள திரு ஆரூரில் சேர்ந்துள்ள **தேவர்** பெருமாளே! (உருகிட அருள் புரிவாயே)

பெரியமடம்

827.

கலகத்தை விளைக்கக்கூடிய கண்களை உடைய அழகிய மாதர்களின் கைக்குள்ளே (ஆய்) அகப்பட்டு, பொய், களவு, காம சாத்திரம் (பல படித்து) பலவும் கற்று, (அவா, வேட்கை)—ஆசை, விருப்பத்துடன் கனத்த கொங்கைகளும் மார்பிற் பொருந்துதலை இஷ்டத்துடன் சேர்த்துக், கழுநீர்ப்பூ நிரம்பி

மணக்கும் நறுமண ஜவ்வாது, புனுகு இவைகளைக் கலந்து ஊற்றிப் பரிமளிக்கவைத்து, நில அரசு—நிலத்தில்—பூமியில் உள்ள அரசர் முதல் நாட்டில் உள்ளார் யாவரும் அறியும்படியாகக் கட்டிற் படுக்கை போட்டவர்களாம் (வேசையர்கள்) செய்கின்ற தொழில்களின் (சூதை) அறியாமல் எனக்குள்ள அற்ப புத்தியால் எனது வாழ்க்கையின் (அருமையை) எண்ணுமல்—

(அந்த வேசையர்களுள்ள) தலம்—இடத்தை, அடைசு—நெருங்கிச்சென்று, அவர்களுடைய வீட்டு ஜன்னல் வாயில்களின் முன்புறத்தில் காத்துநின்று — பின்னர், (அவர்களால் அழைக்கப்பட்டவுடன்) நிறைந்த (பவுசு) ஐசுவரியமும், அரசவாழ்வும், சத்யப்பேறும் கிடைத்தன போல மகிழ்ந்து, மனம் உருகி, அவர்கள் வீட்டுக்குள் ஓடி, உள்ளே இருக்கும் கொஞ்ச நேரத்துக்குள் அவ் வேசையர்களுடன் பேசும் பேச்சும் தடுமாறி—(அவர்களைத்)

தழுவியநு ராகமும்வி ளைத்துமா யாக்கை
தனையுமரு நாளையும வத்திலே போக்கு
தலையறிவி லேனைநெறி நிற்கநீ *தீக்ஷை தரவேணும்;

†அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி
‡அருணைநகர் கோபுரவி ருப்பனே போற்றி
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி அவதான-

அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி
xஅகில தல மோடிவரு நிர்த்தனே போற்றி
oஅருணகிரி நாதஎனும் அப்பனே போற்றி அசுரேசர்;

---

* **தீட்சை**—நயன தீட்சை, பரிச தீட்சை, மானச தீட்சை, வாசக தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை என ஏழுவகைப்படும்.

(1) **நயன தீட்சை**–சீடனைக் குரு தனது அருட்பார்வையால் ஞானம் உண்டாகும்படிச் செய்வது:

(2) **பரிச தீட்சை**—தன் பரிசத்தால் குரு சீடனுக்கு ஞானம் உண்டாக்குதல்

(3) **மானச தீட்சை**—சீடனது மனத்துள் யோக சத்தியால் குரு பிரவேசித்து அவனுக்குச் சுத்தி செய்வித்தல்.

(4) **வாசக தீட்சை**—பஞ்சாக்ஷரத்தைப் பதினொரு மந்திரங்களுடன் உச்சரிக்கும் முறையைக் குரு சீடனுக்கு உபதேசித்தல்.

(5) **சாத்திர தீட்சை**—சிவாகம தத்துவங்களை ஆசிரியன் மாணவனுக்கு உபதேசிப்பது—(சைவாகமாதி சிவ சாத்திரப் பொருளைப் போதித்தல்):

(6) **யோக தீட்சை**—யோக மார்க்கத்தால் குரு சீடனது உடலுட் பிரவேசித்து அவனது ஆன்மாவைக் கிரகித்துச் சிவன் திருவடியிற் சேர்ப்பித்தல். (நிராதார யோகத்தை அப்பியாசம் பண்ணுவிக்கை—எனவும் கூறப்படும். நிராதாரயோகம் என்பது—ஆத்மா தற்போதம் இழந்து பற்றற நிற்கும் நிலை):

(7) **ஔத்திரி தீட்சை**—ஓமம் முதலிய கிரியைகள் செய்து குரு சீடனுக்கு ஞானம் ஊட்டுதல். இது கிரியாவதி, ஞானவதி என இருவகைப்படும்; கிரியாவதி — குண்ட மண்டலாதிகளையும் வேதிகளையும் புறத்தே அமைத்து ஆகமத்திற் கூறியபடி செய்யும் தீட்சை வகை; ஞானவதி—வேண்டும் சாதனங்களையும் கிரியைகளையும் குரு தனது பாவனையாற் செய்துகொள்ளும் தீட்சை வகை.

(தொடர்ச்சி-பக்கம் 433 பார்க்க)

தழுவிக் காமலீலைகளைச் செய்தவனாய்ச் சிறந்த என் உடலையும் அருமையான வாழ்நாளையும் வீணிலே போக்குகின்ற — (தலை அறிவிலேனை) உத்தம அறிவு இல்லாத நான் (அல்லது முதலில் அறியவேண்டிய ஆரம்ப அறிவும் இல்லாத நான்) நன்னெறியிலே நிற்கும்படி நீ (தயை புரிந்து) தீக்ஷை செய்தருளவேண்டும்.

அளவிலாத தமிழறிவால் உயர்ந்துள்ள சாமர்த்திய சாலியே போற்றி! திரு அண்ணாமலைப்பதிக் கோபுரத்தில் விரும்பி வீற்றிருப்பவனே போற்றி! வலிய மயிலை நடத்தி ஓட்டினதிற் பிரியம் வைத்தவனே போற்றி! (அவதானம்) மேன்மையான செயல்களைச் செய்த

ஆறுமுக சுவாமி என்னும் தலைவனே போற்றி! எல்லாப் பூமிகளிலும் ஓடிவந்த நிருத்த மூர்த்தியே போற்றி! 'அருணகிரிநாத' என்று என்னை அழைத்த அப்பா போற்றி! அசுரத் தலைவர்களின்

[432 ஆம் பக்கத் தொடர்ச்சி]

† தமிழால் உயர் சமர்த்தன்—சம்பந்தப் பெருமான், முத்தமிழ் விரகர்.

‡ தனக்கு அருளிய முருகவேளை அருணகிரியார் இங்கு குறிக்கின்றார். இவர் தான் "ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணபுரியில் நிற்கும் அடையாளக்காரன்" (வேளைக்காரன் வகுப்பு), 'அடலருணைத் திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு வட வருகிற் சென்று கண்டு கொண்டேன்...இளைய களிற்றினையே' (கந்தரலங்காரம்)—காப்புச் செய்யுள்—எனக் குறிப்பிக்கப்பட்டவர்.

x அகிலதலம் ஓடிவந்தது-பாடல் 184-பக்கம் 430-கீழ்க்குறிப்பு பாடல் 267 பக்கம் 164-கீழ்க்குறிப்பு.

o இந்த அடி '**நாதன்**' எனும் பட்டத்தைத் தந்து 'அருணகிரி **நாத**' என முருகவேள் தன்னை அழைத்த வரலாற்றைக் கூறுகின்றது (அருணகிரிநாதர் வரலாறு-பக்கம் 46, 231-பார்க்க).

பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி பெருவாழ்வாம்-

*பிரமனறி யர்விரத தக்ஷிணா மூர்த்தி
†பரசமய கோளரித வத்திறல் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே ‡யோக்யர் பெருமாளே. (க)

சோமநாதன்மடம்.

[ஆரணி தாலூக்காவில் உள்ள புத்தூரில் சோமநாதன் மடம் உளது.]

828. மௌனோபதேசம் பெற

தனதனன தான தான, தனதனன தான தான
தனதனன தான தான தனதான

x ஒருவழிப டாது மாயை யிருவினைவி டாது நாளு
முழலுமநு ராக மோக அநுபோகம்-

உடலுமுயிர் தானு மாயு னுணர்விலொரு காலி ராத
வுளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக் ;

oகிரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீர
மெனமொழியும் விசு பாச கனகோப-

---

* **பிரமனறியாவிரத தக்ஷிணாமூர்த்தி** —இது பிரணவப் பொருளை அறியாத பிரமனைச் சிறையிட்ட வரலாறு
—பாடல் 212-பக்கம் 42 கீழ்க்குறிப்பு.

† **பரசமயகோளரி**—ஞான சம்பந்தருக்கு ஒரு பெயர்—
"சைவரெல்லாம்—ஆர்கலியின் கிளர்ச்சியெனச்
சங்குதாரை அளவிறந்த பலவியங்கள் முழக்கி யார்த்துப்
பார்குலவு தனிக்காளம் சின்ன மெல்லாம்
பரசமய கோளரி வந்தானென் றூத..."
—பெரியபுரா-ஞானசம்-604.

‡ யோக்யர்—யோகியர்.

[தொடர்ச்சி 435 ஆம் பக்கம் பார்க்க.]

வலிமை அழிய வேலைச் செலுத்தின திருக்கரத்தாய் போற்றி! (கரதலத்தில்) கையில், கபாலம் ஏந்தியுள்ள குரு — சிவனுக்கும் — வித்தனே — ஞான (உபதேசப்) பண்டிதனாய் நின்றவனே போற்றி! பெருமைவாய்ந்த குறமாது அணையும் திருப்புயங்களை உடையவனே போற்றி! பெருஞ்செல்வப் பொருளாம்—

பிரமனும் அறியாத விரத தக்ஷிண மூர்த்தியே (உபதேச மூர்த்தியே)! பிற சமயங்களை (சமண—புத்த மதங்களை) அழிக்கவந்த சிங்கமே! தவச் செயலால் கிடைக்கும் (சுகத்தனே) சுகப்பெருமானே! **பெரியமடம்** என்னும் இடத்திலே விற்றிருக்கும் சுகப்பொருளே! யோகியர்தம் பெருமாளே!

(நீ தீக்ஷை தரவேணும்)

சோமநாதன் மடம்

828.

ஒரு வழியில் நிலைத்து நிற்க: முடியாமல் மாயைகளும் இருவினைகளும் என்னை விடாமல், நாள்தோறும் அலைச்சல் தருகின்ற காமலீலை மோக அனுபோகத்திற் பட்டு

உடலும் உயிருமே (எண்ணமதாய்), உன் உணர்ச்சி (நீ உள்ளாய் என்னும் உணர்ச்சி) ஒருகாலும் இல்லாத என் உள்ளமும் நெகிழ்ந்து கசியும்படி, அடியேனுக்கு

இரவும் பகலும் கடந்த ஞான பரமசிவ யோகமே தீரத்தைத் (தைரியத்தைத்) தருவது என மொழிந்து காட்டுவதும், வீசப்படுவதான பாசக்கயிற்றைக் கொண்ட பெருத்த கோபம் உள்ளவர்களான—

[434-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

x **மாயையின் வன்மை**—"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள் இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்"; "ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற் றொருவீர் வேண்டீர்"
—[அப்பர்-6-27-1, 2]

o இரவு பகல் போன ஞானம்
—பாட்டு 303-பக்கம் 250-கீழ்க்குறிப்பு.

*எமபடரை மோது மோன வுரையிலுப தேச வாளை
யெனதுபகை தீர நீயும் அருள்வாயே;

†அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ ருது பேணும் அறிவாளன்-

‡அமணர்குல கால னாகும் அரியதவ ராஜ ராஜன்
xஅவனிபுகழ் சோமநாதன் மடமேவும்;

முருகபொரு சூரர் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவோனே-

oமொழியுமடி யார்கள் கோடி குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவர் பெருமாளே. (௪)

---

* மோனவாள் எமபடரை மோத வல்லது:

"எனது மனசிற் பரம சுக மவுன கட்கமதை
யமன்முடி துணிக்க விதியா வைத்த பூபதியும்"
(வேடிச்சி காவலன் வகுப்பு)

"இறக்க எனதெதிர் நடக்கும் யமபடர்
கடக்க விடுவதொ ரியற்கை அருள்வதும்...
அறுமுக ஒருத்தன் அருளிய பெருத்த வசனமே"
(பெருத்த வசன வகுப்பு)

† திரு அண்ணமலையில் தேவி இறைவனது இடது பாகத்தைப் பெற்றதாக அருணசல புராணம் கூறுகின்றது:
—(பாடல் 301)-பக்கம் 246-ம் பார்க்க).

காஞ்சியில் தவஞ் செய்திருந்த தேவியைத் திருவண்ணமலைக்கு வா—அங்கே 'பாகம் தருவோம்' என இறைவன் கூறத், தேவி அங்ஙனமே சென்று கௌதமர் ஆசிரமத்தருகே தவஞ்செய்ய இறைவன் வெளிப்பட்டுத் தமது இடப்பாகத்தைத் தந்தருளினர். "முத்தி...தன்னை நினைத்தபேர்க் களிக்கும் மூதூர்...அங்கே வாரணி முலையாய் பாகம் தருகுவோம் வருதி என்றார்" 'மங்கையே நமதிடப்புறத் துறையென மகிழ்வுற் றங்கையா லணைத்தருளினன் உருகி ஒன்றனர்'—அருணசல புரா.-திருக்கண்-24; இடப்பாகம்-64;
—திருப்புகழ் 548-பக்கம் 248-கீழ்க்குறிப்பைப் பார்க்க.

‡ 'அமணர் குலகாலன் மேகம் அனைய கவிராஜ ராஜன் அவனிபுகழ் சோமநாதன் மனமேவும் முருக'—என்றும் பாடம்.

[தொடர்ச்சி 437 ஆம் பக்கம் பார்க்க.]

யமதூதர்களை மோதி வெருட்டத் தக்கதுமான மௌன நிலையதாய்ப், பேச்சிலாததான (ஞான) உபதேசம் என்கின்ற வாளை எனது உட்பகை புறப்பகை யாவும் ஒழிந்துபோக நீயும் (தயைகூர்ந்து)அருள்புரிதல் வேண்டும்;

தேவி ஒரு பாகமான அருணாசல மூர்த்தியின் பூஜையை (முறை) ஒழுங்கு தவறாமல் போற்றுகின்ற அறிவாளியும்—

சமணர் குலத்துக்கு ஒரு யமனாகத் தோன்றியவரும், அருமையான தவ ராஜ ராஜருமான உலகம் புகழும் 'சோமநாதன்' மடத்தில் விற்றிருக்கும்

முருகனே! சண்டைசெய்த சூராதிகளின் சேனை முறிபட்டு அழியவும், வடக்கில் உள்ள மேருமலை பொடிபட்டு விழவும், (முகரம்) பேரொலி செய்யும் (அல்லது சங்குகளைக்கொண்ட (சலராசி) கடல் வெந்து வற்றவும் கோபித்தவனே!

உன்னைத் துதிக்கும் அடியார்கள் கோடிக்கணக்கான குறைகளைக்கருதி உன்னிடம் முறையிட்டாலும் அவர்களின் எண்ணத்துக்கு மாறாக அவர்கள் மீது கோபிப்பது என்பதையே அறியாத தேவர் பெருமாளே!

(மோன ... உபதேசவாளை ... அருள்வாயே)

[436 ஆம் பக்கத் தொடர்ச்சி.]

x "அண்ணாமலையாரை ஆத்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு நியமந் தவறாது பூஜை செய்து வந்தவரும், அமணர் குலத்தைக் கண்டித்தவரும், அரியதவராஜ ராஜராக விளங்கினவரும், பெரும் புகழ் பெற்றவருமான 'சோமநாதன்' என்பவர் புத்தூரில் தமக்கு உரிய ஒரு மடத்தில் உள்ள முருகவேளை வழிபட்டு வந்தார். இந்தச் சோமநாத மடத்திலிருந்த முருகவேளையும் அருணகிரியார் பாடிச், சோமநாதரது பத்தியையும் தவப் பண்பையும் இப் பாடலிற் சிறப்பித்துள்ளார்.

புத்தூரில் உள்ள சிவாலயத் திருமதிலிற் காணும் சாசனம் ஒன்று (கி. பி. 1370) சோமநாத ஜீயர்க்கு இப் புத்தூர்க் கோயிலும் மடமும் உரிமையாக உதவப்பட்டனவாகத் தெரிவிக்கின்றது. (சாசனத் தமிழ்க்கவி சரிதம்—பக்கம் 125-126). "அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்"—பக்கம் 132-133.

o முருகன் கருணையைக் காட்டும் இந்த அருமை அடி மனப்பாடஞ் செய்யத் தக்கது.

த்ரியம்பகபுரம்.

[இது 'மதுரமாணிக்கம்' என்னுந் தலம் என்பர். திருவாரூரி லிருந்து 8-மைல்.]

829. மாதர் மீதுள மயக்கற

தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன. தனதான

உரையொ ழிந்துநின் றவர்பொரு ளெளிதென
வுணர்வு கண்டுபின் திரவிய இகலரு
ளொருவர் நண்படைந் துளதிரள் கவர்தொடு பொருள்தேடி-

உளம கிழ்ந்துவந் துரிமையில் நினைவுறு
சகல * இந்த்ர தந்த் ரமும்வல விலைமக
ளுபய கொங்கையும் புளகித மெழமிக வுறவாயே;

விரக வன்புடன் பரிமள மிகவுள
முழுகி நன்றியொன் றிடமல ரமளியில்
வெகுவி தம்புரிந் தமர்பொரு சமயம துறுநாளே-

விளை த னங்கவர்ந் திடு†பல மனதிய
ரயல்த னங்களுந் தமதென நினைபவர்
வெகுளி யின்கணின் றிழிதொழி லதுவற அருள்வாயே;

செருநி னைந்திடுஞ் சினவலி யசுரர்க
ளுகமு டிந்திடும் படியெழு பொழுதிடை
செகம டங்கலும் பயமற மயில்மிசை தனிலேறித்-

திகுதி குந்திகுந் திகுதிகு திகுதிகு
தெனதெ னந்தெனந் தெனதென தெனதென
திமிதி மிந்திமிந் திமிதிமி திமியென வருபூதம்;

---

* இந்த்ர தந்த்ரம்—இந்திர ஜாலவித்தை போல மயக்கவல்ல வித்தைகள், வஞ்சகச் சொற்கள், செயல்கள்; "இந்திரஜாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும் தந்திரம்"
—கந்தர்கலி வெண்பா.

† பல மனதியர்—"நூறுயிர மனமுடை மாபாவிகள்"
—திருப்புகழ் 583.

திரியம்பகபுரம்

829.

(உரை யொழிந்து நின்றவர்) பேசுதற்கு இயலாமல் விழித்து நிற்கின்ற இவரிடம் பொருள் (எளிது) அற்பமே எனத் தமது உணர்ச்சியினுல் அறிந்து, பின்பு (திரவிய இக்லருள் ஒருவர்) (திரவியம்)—பொருள், (இகலருள்)—வலிமை உடையவர்களுள்—பொருட் செல்வம் நிரம்பப் படைத்தவருள் ஒருவருடைய நட்பை அடைந்து, அவரிடத்துள்ள திரண்ட பொருளைக் கவரும் எண்ணம் கொண்டு அங்ஙனம் பொருளைத்தேடி—

உள்ளம் மகிழ்ந்து (உவந்து) களிப்புற்றுத் தமக்குள்ள உரிமையைக் காட்டத், தமக்கு ஞாபகமுள்ள எல்லாவித இந்திர ஜால வித்தைகளையும் காட்டவல்ல (விலைமகள்) பொதுமகளின் இரண்டு கொங்கைகளும் புளகம் கொள்ள நிரம்ப உறவு காட்டி—

(விரக அன்புடன்) காமத்தைக் காட்டும் அன்புடன் நறுமணம் மிக அந்தக் காம உள்ளத்திலேயே முழுகி, நன்றி பொருந்தினவராய், மலர்ப்படுக்கையில் பலவித லீலைகளைச் செய்து கலவிப்போர் செய்யும் சமயம் வாய்க்கும் அந்த நாளிலே—

பெருகியுள்ள தனம் — (செல்வத்தை) பொருள்களை அபகரிக்கும் பலவித எண்ணங்களை உடைய வேசியர், பிறருடைய சொத்துக்களையும் தம்முடையதே என்று நினைப்பவர்கள் ஆகிய (பொதுமகளிரின்) கோப மொழிகளில் (நின்று) அகப்பட்டு நிற்கும் இழிவுள்ள என் செயல் இனி அற்றுப்போக அருள்புரிவாயாக.

போரையே நினைந்திருக்கும் கோபமும் வலிமையும் கொண்டுள்ள அசுரர்கள், உகாந்த காலம்போல (யுகம் முடியும் காலம்போல) (போருக்கு) எழுந்த பொழுதினிலே, உலகம் முழுமையும் பயம் நீங்க, மயில் மேலே ஏறி—

திகுதி குந்திகுந் ... திமிதிமி திமியென வந்த பூதங்கள்,—

கரையி றந்திடுங் கடலென மருவிய
வுதிர மொண்டுமுண் டிடஅமர் புரிபவ
கலவி யன்புடன் குறமகள் தழுவிய முருகோனே-

க்னமு றுங்த்ரியம் பகபுர மருவிய
கவுரி தந்தகந் தறுமுக எனஇரு
கழல்ப ணிந்துநின் றமரர்கள் தொழவல பெருமாளே. (க)

சிக்கல்.

[ரெயில்வே ஸ்டேஷன். நாகபட்டினத்துக்கு மேற்கு 3-மைல். ஸ்வாமி சந்நிதி கட்டுமலைமே லிருக்கின்றது. திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

830. அருள்பெற

தன்ன தத்த தனத்த தானன
தன்ன தத்த தனத்த தானன
தன்ன தத்த தனத்த தானன தனதான

கன்ன லொத்த மொழிச்சொல் வேசியர்
வன்ம னத்தை யுருக்கு லீலையர்
கண்வெ ருட்டி விழித்த பார்வையர் இதமாகக்-

கையி லுற்ற பொருட்கள் யாவையும்
வையெ னக்கை விரிக்கும் வீணியர்
கைகள் பற்றி யிழுத்து மார்முலை தனில்வீழப்;

பின்னி விட்ட சடைக்கு ளேமலர்
தன்னை வைத்து முடிப்பை நீயவி
ழென்னு மற்ப குணத்த ராசையி லுழலாமற்-

*பெய்யு முத்தமி ழிற்ற யாபர
என்ன முத்தர் துதிக்க வேமகிழ்
†பிஞ்ஞ கர்க்குரை செப்பு நாயக அருள்தாராய்;

வன்னி யொத்த படைக்க லாதிய
துன்னு கைக்கொ ளரக்கர் மாமுடி
மண்ணி லற்று விழச்செய் மாதவன் மருகோனே-

---

* 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்'
—கந்தரலங்-22.

† சிவனுக்கு உபதேசித்தது — பாடல் 327-பக்கம் 314-கீழ்க்குறிப்பு.

கரை கடந்து எழுந்த கடல்போல் உள்ள ரத்தத்தை மொண்டு உண்ணும்படிப் போர் புரிந்தவனே! சேர்க்கையன்பு பூண்டு குறமகள் வள்ளியைத் தழுவின முருகனே!

பெருமை தங்கிய திரியம்பகபுரம் என்னும் தலத்தில் விற்றிருக்கும் பார்வதி தேவி அருளிய கந்தனே! ஆறுமுகனே என்று உனது இரண்டு திருவடிகளையும் பணிந்து நின்று தேவர்கள் தொழுதற்குரிய பெருமாளே!

(இழிதொழி லதுவற அருள்வாயே)

சிக்கல்

830.

கற்கண்டு (அல்லது கரும்பு) போல இனிக்கும் பேச்சுக்களைப் பேசும் வேசியர், கடினமான மனத்தையும் உருக்கவல்ல லீலைகளைச் செய்பவர்கள், கண்கொண்டு வெருட்டி விழிக்கின்ற பார்வையர், இனிய வழியில் பக்குவமாகக்—

'கையில் உள்ள பொருள்கள் முழுமையும் வைத்திடு இப்படி' என்று கூறிக் கையை விரிக்கின்ற வீணினர் (பயனற்றவர்), கைகளைப் பிடித்து இழுத்து மார்பிற் கொங்கைமீது விழும்படியும்,

பின்னி வைத்துள்ள கூந்தலிலே மலர்களை வைத்துப், (பொருள்) முடிப்பை நீ அவிழ்ப்பாயாக என்று கூறுகின்ற அற்ப குணத்தராகிய அவ் வேசையர்களின் ஆசையில் நான் அலைச்சல் உறுமல்—

'சொல்லப்படும் இயல் இசை நாடகம் எனப்படும் முத்தமிழில் ஆசை கொண்டவனே' என்று முத்தி நிலை அடைந்த பெரியோர்கள் போற்றிசெய்ய மகிழ்கின்ற நாயகனே! (அல்லது மகிழ்கின்ற பிஞ்ஞகர்க்கு (சங்கரிக்கும்) சிவனுக்கு உபதேசச் சொல் சொல்லும் (நாயகனே) தலைவனே! அருள் தருவாயாக.

அக்கினிக்கு ஒப்பான படைக்கலங்கள் முதலிய பொருந்தும் கைகளை உடைய அரக்கர்களின் பெரிய தலைகள் பூமியில் அற்றுவிழும்படிச் செய்கின்ற திருமாலின் மருகனே!

மன்னு பைப்பணி யுற்ற நீள்விட
மென்ன விட்டு முடுக்கு சூரனை
மல்லு டற்று முருட்டு மார்பற அடைவாகச்;
சென்னி பற்றி யறுத்த கூரிய
மின்னி லைத்த திறத்த வேலவ
செய்ய பொற்புன வெற்பு மானணை மணிமார்பா-
*செம்ம னத்தர் மிகுத்த மா தவர்
நன்மை பெற்ற வுளத்தி லேமலர்
செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே. (க)

831. கண்பார்த்து வாழ்வருள்

தனதன தத்தத் தந்தான தானன
தனதன தத்தத் தந்தான தானன
தனதன தத்தத் தந்தான தானன தனதான

புலவரை ரக்ஷிக் குந்தாரு வேமது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய திக்கெட் டும்போயு லாவிய புகழாளா-
பொருவரு நட்புப் பண்பான வாய்மையி
லுலகிலு னக்கொப் புண்டோவெ னாநல
பொருள்கள் நிரைத்துச் செம்பாக மாகிய கவிபாடி;
விலையில்த மிழ்ச்சொற் குன்போலு தாரிகள்
எவரென மெத்தக் கொண்டாடி வாழ்வெனும்
†வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர-
மிகவரு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையு மருள்வாயே;

---

* 'அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற் றைம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்'—சம்பந்தர் 1-132-6.

செம்மனத்தர்—'செம்மனக்கிழவோர்'—என்றார் திருவிசைப் பாவில்-14-6.

† 'மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை'—சுந்தரர் 7-34-2.

பொருந்திய படத்தை உடைய பாம்பினுடைய பெரிய விஷம் என்று சொல்லும்படி (வேலாயுதத்தைச்) செலுத்தி முடுகி எதிர்வந்த சூரனை அவனது மற்போற் செய்யும் கரடு முரடான மார்பு பிளக்கவும்—தக்கவகையில்—

அவனது தலையைப் பற்றி அறுத்த கூர்மை கொண்ட மின்போல ஒளிரும் பராக்ரமம் வாய்ந்த வேலாயுதத்தை உடையவனே! செம்மை வாய்ந்த அழகிய தினைப்புனமுள்ள (வள்ளி) மலையில் இருந்த மான்போன்ற வள்ளியை அணைந்த அழகிய மார்பனே!

செம்மை வாய்ந்த மனத்துப் பெரியோர்கள், பெருந்தவம் மிக்கவர், ஆகிய இவர் தம் நல்ல எண்ணம் கொண்ட உள்ளத்திலே விளங்கி நிற்கும் செல்வனே! **சிக்கல்** என்னும் நகரிலேவீற்றிருக்கும் பெருமாளே! (அல்லது, உள்ளத்திலே விளங்கி நிற்கும் பெருமாளே! செல்வம் நிறைந்த சிக்கல்...மேவிய பெருமாளே!) (அருள் தாராய்)

831.

புலவர்களை ஆதரித்து ரக்ஷிக்கும் கற்பக விருக்ஷமே! இனிமை மிக்க குணம் கொண்ட மலைக்கு நிகரான மாதர் கொங்கையில் திளைக்கும் புயத்தவனே! திசை எட்டிலும் போய் உலாவுகின்ற புகழாளனே!

ஒப்புவமை அற்ற நட்புத்தன்மை கூடிய சத்திய நிலையில் உலகிலே உனக்கு ஒப்பாவார் ஒருவர் உளரோ என்று நல்ல பொருட் சொற்களை வரிசையாக வைத்துச் செவ்விய முறையில் அமைந்துள்ள பாடல்களைப் பாடி—

விலைமதிப்பைக் கடந்த தமிழ்ச்சொல்லை ஆதரிப்பதற்கு உனைப்போல (உதாரிகள்) சிறந்த கொடையாளிகள் யார்தான் உள்ளார்கள் என்று நிரம்பக் (கொண்டாடி)ப் புகழ்ந்து—(தமது) வாழ்வே பெரிது என்னும் (வெறிகொள்)—தீவிர உணர்ச்சி கொண்டுள்ள (லுத்தர்க்கு) லோபிகளிடம் என் (பாடு) வருத்தங்களைப் போய் முறையிடும் (வறுமை) தரித்திர நிலை நீங்க—

மிக்க அருமைப்பாடுடனே—பிரயாசையுடனே உனது பாத தாமரைகளைப் புகலிடம் எனப் பற்றியுள்ள பேதையாகிய என்மீது நீ திருக்கண் அருள் வைத்துக் குறைவிலா வாழ்வை (பேரின்பவாழ்வை)த் தந்தருளுக.

இலகிய வெட்சிச் செந்தாம மார்புய
சிலை நுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே-

இளையகொ டிச்சிக் குப்பாக சாதன
னுதவுமொ ருத்திக் குஞ்சில நாயக
*எழிலியெ ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே;

அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி யிசையாலே-

அழகிய† சிக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே. (உ)

நாகபட்டினம்

[ரெயில்வே ஸ்டேஷன். மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

832. முத்திபெற

தான தத்த தத்த தந்த, தான தத்த தத்த தந்த
தான தத்த தத்த தந்த தனதான

‡ஓல மிட்டி ரைத்தெ ழுந்த வேலை வட்ட மிட்ட இந்த
ஊர்மு கிற்ற ருக்க ளொன்று மவராரென்-

* 'வண்ணமுகி லன்ன எழில் அண்ணல்'—சம்பந்தர் 3-74-9.

† சிக்கல் முருகவேளின் திருப்பெயர்—சிங்காரவேலவர்.
"சிக்கலம் பதிமேவு சிங்காரவேலனுந்
தேவர் நாயகன் வருகவே"
—க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்.

‡ பொருள் வேண்டிப் பொருள் உள்ளோரிடம் தான் ஓலமிட்டு (அபயங்கூறி)ச் செல்வதால், கடல் இரைந்து திரை புரள்வதும் கடல் ஏதோவேண்டி ஓலமிட்டு ஒருவரிடம் முறையிடுவது போலத் தன் கருத்துக்குத் தோன்றுகின்றபடியால் "ஓலமிட்டு இரைத்தெழுந்த வேலை"—என்றார்.

(தொடர்ச்சி-பக்கம் 445 பார்க்க)

விளங்குகின்ற வெட்சிப் பூவாலாய சிவந்த மாலை அணிந்த மார்பும் புயமும் கொண்டவனே! வில்லைப்போன்ற புருவத்தையும், மைபூசிய கண்களையும், குங்குமப்பொட்டு அணிந்த ஒளிவீசும் நெற்றியையும் கொண்ட இமயமலைப் புத்திரியாகிய பார்வதிக்கு மைந்தனாக வந்த குழந்தையே!

இளையவளும் (கொடிச்சி) மலைநாட்டுப் பெண்ணுமாகிய வள்ளிக்கும், (பாகசாதனன்) இந்திரன் பெற்ற ஒப்பற்றவளாகிய தேவசேனைக்கும் உரிய பரிசுத்த நாயகனே! (எழிலி) மேகத்தின் அழகைக் கொண்ட திருமேனியை உடைய திருமாலின் மருகனே!

மலர்கின்ற புஷ்பத்தில் உண்டாகின்ற வாசனையானது (திசைகள் தோறும்) எட்டுத் திசைகளிலும் முப்பத்தெட்டு காதம் வரை (380 மைல்) வரை வீசுகின்ற அழகிய நந்தவனங்களில் சஞ்சரிக்கும் வண்டின் இசை ஒலியால்—

அழகு பெற்று விளங்கும் சிக்கல் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிங்கார வேலனே! போரிடையே மிகவும் பொங்கிக் கோதிப்புடனே வந்த அசுரர்களை வெட்டிச் சங்கரித்த பெருமாளே!

(குன்றாத வாழ்வையும் அருள்வாயே)

நாகபட்டினம்

832.

ஓலமிடுவதுபோல (அபயக்குறியுடன்) ஒலிசெய்து (அல்லது—சப்தமிட்டுப் பேரொலி செய்து) திரை எழுகின்ற கடல் வட்டத்துக்குள் உள்ள (இந்தப் பூமியில் உள்ள) ஊர்களில், (முகில்) ஒன்று—மேகம்போலக் (கைம்மாறு கருதாது கொடுக்கும் பிரபுக்கள்), (தருக்கள்) ஒன்று கற்பகவிருக்ஷம் போலக் (கேட்டதைக் கொடுக்கும் பிரபுக்கள்) யார் உள்ளார்கள் என்று (தேடிப்போய்)—

[444 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அல்லது - தன்னிடையே கிடந்த மாமரமாம் சூரனைக் கொல்ல எழுந்த முருகவேளின் வேல் வருவதைக்கண்டு ஓலமிட்டு அஞ்சி இறைஞ்சின கடல் எனலுமாம்; உக்கிரபாண்டியன் கடல் சுவறவேலை விட்டபோது ஓலமிட்டதையும் குறிக்கலாம். (திருவிளை-புராணம்).

* றாம ரைப்ர சித்த ரென்று மூட ரைச்ச மர்த்த ரென்றும்
ஊன ரைப்ர புக்க ளென்று மறியாமற் ;
கோல முத்த மிழ்ப்ர பந்த மால ருக்கு ரைத்த நந்த
கோடி யிச்சை செப்பி வம்பி லுழல்நாயேன்-
கோப மற்று மற்று மந்த மோக மற்று னைப்ப ணிந்து
கூடு தற்கு முத்தி யென்று தருவாயே ;
வாலை துர்க்கை சத்தி யம்பி லோக கத்தர் பித்தர் பங்கில்
மாது பெற்றெ டுத்து கந்த சிறியோனே-
வாரி பொட்டெ ழுக்ர வுஞ்சம் வீழ நெட்ட யிற்று ரந்த
வாகை மற்பு யப்ர சண்ட மயில்வீரா ;
†ஞால வட்ட முற்ற வுண்டு ‡நாக மெத்தை யிற்று யின்ற
xநார ணற்க ருட்சு ரந்த மருகோனே-
நாலு திக்கும் வெற்றி கொண்ட சூர பத்ம னைக்க லைந்த
நாக பட்டி வத்த மர்ந்த பெருமாளே. (க)

833. மறவேன் என்பது

தான தந்ததன தந்ததன தந்ததன
தான தந்ததன தந்ததன தந்ததன
தான தந்ததன தந்ததன தந்ததன தந்ததான

மார்பு ரம்பினளி னங்கிரியெ னுந்தனமொ
டார மும்படித ரம்பொறியு டன்பணிகள்
மாலை யொண்பவள மும்பரிமளங்கலவை தொங்கலாட-

---

* 'முற்றிலாதானை முற்றனே யென்று மொழியினும் கொடுப்பாரிலை', 'நொய்ய மாந்தரை விழுமிய, தாயன்றே புலவோர்க் கெலாம் என்று சாற்றினும் கொடுப்பாரிலை'—சுந்தரர் 34-9, 7.

† பூமியை உண்டது—பாடல் 267-பக்கம் 164-கீழ்க்குறிப்பு.

‡ "நாகமூர்த்தி சயனமாய் நலங்கடல் கிடந்து"
—திருச்சந்த விருத்தம் 17.
"நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே"
—திருவாய் மொழி 4-3-3.

x விஷ்ணுமூர்த்திக்குச் சிவசாரூப்பிய மளித்தது—பாடல் 458-பக்கம் 27—கீழ்க்குறிப்பு. திருத்தணிகையில் வேலனைப் பூசித்துச் சக்கரம், சாரங்கம் இவைகளை நாரணர் பெற்றார் :—'ஆதி சார்ங்கமும்...சாமியளித்தனன் ; தணிகைப் புராணம் — நாரணன் அருள்பெறு படலம்-22.

o மார்புரம் பின் — புரம் பின்மார்புரம் — உடல், பின் — இடம், மார்—மார்பு; உரம் மார்பு — வலிய மார்பு இடம்.

பேசவும் வாய்வராத பேர்வழிகளை மகா கீர்த்தி வாய்ந்த பிரபு என்றும், முட்டாளைச் சமர்த்தர் இவர் என்றும், (ஊனரை) குற்றம் குறை உள்ளவரை பிரபு இவர் என்றும், என்னுடைய அறிவீனத்தால்—

அழகிய முத்தமிழ் நூல்களை (உலக) ஆசை கொண்டுள்ள பேர்வழிகளிடம் சொல்லிநின்று, கணக்குக் கடந்த (எண்ணிலாத) கோடிக் கணக்கான என் விருப்பங்களைத் தெரிவித்து வீணே திரிகின்ற அடியேன்—

கோபம் என்பதை ஒழித்து, பின்னும் அந்த ஆசை எனப்பட்டதையும் ஒழித்து, உன்னைப் பணிந்து (உன் திருவடியைக்) கூடுதற்கு முத்தியை என்று தந்தருளுவாய்!

வாலை (என்றும் இளையாள்), துர்க்கை, சத்தி, அம்பிகை, உலக கர்த்தா ஆகிய பித்தராம் சிவபிரானது (இடது) பாகத்திலே உள்ள தேவி—பெற்று எடுத்து மகிழ்ந்த சிறியோனே!

கடல் வற்றிப்போகக், கிரவுஞ்சம் தூள்பட்டு விழ, நெடிய வேலைச் செலுத்தின வெற்றி பொருந்திய, மற்போருக்குத் தக்கதான புயங்களைஉடைய வலிமைவாய்ந்த மயில் வீரனே!

பூமி மண்டலம் முழுமையும் உண்டு, ஆதிசேடன் என்னும் பாம்புமெத்தையில் துயில் கொண்ட நாராயணனுக்கு அருள் பாலித்த மருகனே!

நான்கு திசைகளிலும் ஜயம்கொண்ட சூரபத்மாவை அடக்கி ஒடுக்கிய (பெருமாளே)! நாகபட்டினத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(முத்தியென்று தருவாயே)

833.

வலிய மார்பிடத்தில் — நளினம் — தாமரை மொக்கு எனவும், கிரி—மலை எனவும் (சொல்லத்தக்க) தனமொடு— கொங்கையோடு, (ஆரமும்) முத்துமாலையும், படிந்த மேன்மையான தேமலுடன் ஆபரணங்களும் மாலையாயமைந்த ஒள்ளிய பவளமும், நறுமணச் சந்தனக் குழம்புடன் (பூ) மாலை அசைய—

வாள்ச ரங்கணிய லுங்குழைத ளம்பளக
பார தொங்கலணி பெண்கள்வத னங்கள்மதி
வாகை யென்ப*இத ழுஞ்சலச மென்பகள சங்குமோக ;

சார மஞ்சள்புய முங்†கிளிமு கங்களுகிர்
பாளி தம்புனை துவண்டிடையொ டின்பரச
தாழி யென்பஅல்கு லுந்துளிர ரம்பைதொடை ரம்பைமாதர்-

தாள்ச தங்கைகொலு சுங்குலசி லம்புமணி
யாடல் கொண்டமட மங்கையரு டன்‡கலவி
தாக முண்டுழல்கி னுங்கழலு றுங்கழல்ம றந்திடேவே ;

வீர வெண்குடையமு ழங்கவரி சங்குமுர
சோடு பொன்பறைத தும்பவிதி யுஞ்சுரரும்
வேத விஞ்சையரு டன்குமுற வெந்துகவ டர்ந்தசூரன்-

வீற டங்கமுகி லுங்xகமற oநஞ்சுடைய
ஆயி ரம்பகடு கொண்டவுர கன்குவடு
மேகொ ளுந்தபலசி ரந்தனையெ றிந்து°°நட னங்கொள்வேலா ;

†† நார சிங்கவடி வங்கொடுப்ர சண்டிரணி
யோன டுங்கநட னஞ்செய்துஇ லங்கைவலி
ராவ ணன்குலம டங்கசிலை கொண்டகரர் தந்தமூல-

---

* 'செங்கமலம் ஒப்புக் கண்டு மொழிந்தா ரீரிதழ்க்கும்'
—உசிதசூடாமணி.

† 'விரலுகிர்க்குக் கருதுங்கிளிமூக் கொப்பாமே'
—உசிதசூடாமணி.

‡ **கலவி தாகத்தினும் உன்கழல் மறவேன்** "காமக் கலவிக் கள்ளை மொண்டுண்டயர்கினும் வேல் மறவேன்"—(கந் அலங்-37)

"மடவார்தோள்...புணர்ந்துமதி மயங்கினும்...நின்பதங்கள் மறவேன்"—திருப்புகழ் 1275.

x கமற—வேக—"கடல் தீவுகள் கமற வெந்தழல் வேல்விடு சேவக"—திருப்புகழ் 856.

o **ஆதிசேடன் வலிமை :** "பாரம் அனைத்தும் ஒரு மலர்போல் முடிமேல் தரிக்கும் பணிவேந்தன், ஓராயிரஞ் செம்முடி மணிகள் கதிராயிரம் போல் ஒளி பரப்ப"
—செவ்வந்தி புராணம்—திருமலைச் சருக்கம் 28.

°° இந்த நடனம் குடைக்கூத்து
—பாடல் 354-பக்கம் 396 கீழ்க்குறிப்பு.

†† இரணிய சம்மாரம்-பாடல் 327-1-பக்கம் 317-கீழ்க்குறிப்பு.

வாள்போல (சரம்) அசைகின்ற கண்ணனது பொருந்திய (காதில் உள்ள) குழைகளைத் தள்ளும் அம்பு என்னும்படியும், (அளகபாரம்) கூந்தற் பாரத்தில், தொங்கல்—பூமாலையை அணிந்துள்ள பெண்களின் முகங்கள் சந்திரனையும் (வாகை) வெற்றி கொண்டன என விளங்க, வாயிதழும் தாமரை இதழ்போல விளங்க, (களம்) கழுத்து—சங்குபோல விளங்க, கா தலை

எழுப்பும் மஞ்சள் பூசப்பட்ட தோளும், கிளியின் முகம் (மூக்குப்போன்ற) நகங்களும், பட்டாடை அணிந்து துவட்சி அடைந்துள்ள இடையுடனே, இன்பரசம் பொதிந்துள்ள (தாழி) பாண்டம் என்று சொல்லத்தக்க அல்குலும், தழைத்துள்ள (அரம்பை) வாழை என்னும்படியான தொடைகளையும் உடைய ரம்பை என்னும் தெய்வப்பெண் போன்ற மாதர்கள்—

காலில் உள்ள சதங்கை, கொலுசு, சிறந்த சிலம்பு இவைகளைப் பூண்டு அழகிய நடனத்தைச் செய்யும் (அல்லது ஆடல்கள்—காமலீலைகள் செய்யும்) அழகிய பெண்கள் — இவர்மீது காமதாகம் கொண்டு நான் திரிந்தபோதிலும் போற்றப்படும் உனது திருவடிகளை நான் மறக்கமாட்டேன்;

வீர (வெண்டையம்) காலணி ஒலிக்க, (வரி) இசையை எழுப்பும் (அல்லது—ஒழுங்கான வரிசையில்) சங்கு, முரசு, அழகிய பறை—இவை பேரொலி செய்ய, பிரமனும், தேவர்களும், வேதம் ஓதவல்ல (விஞ்சையருடன்) கலைஞானம் உள்ளவருடன் (குமுற) — கலந்து ஓசையை எழுப்ப, வெந்து அழிய நெருங்கிவந்த சூரனுடைய

(வீறு) கொழுப்பு—கர்வம்—அடங்க, மேகமும் (கமற) மிக ஒலிக்க (அல்லது சூடேறிவேக), விஷத்தைக்கொண்ட ஆயிரம் யானையின பலம்கொண்ட ஆதிசேடனுடைய (குவடு) மலையன்ன உச்சிகள் (கொளுந்த) வேக, (அசுரர்களின்) பல தலைகளை அறுத்தெறிந்து நடனம் கொண்ட வேலனே!

நரசிங்க வடிவத்தைக் கொண்டு, கடுமை கொண்ட இரணியனை நடுங்கவைத்து நடனம் செய்து, இலங்கையில் வலிமை வாய்ந்த ராவணனுடைய கூட்டம் அடங்கி அழிய கோதண்டம் என்னும் வில்லை ஏந்திய கரங்களை உடைய திருமால் பெற்ற—மூல

*ஞான மங்கையமு தஞ்சொருபி யென்றனொரு
தாய ணாங்குகுற மங்கையைம ணந்தபுய
நாகை யம்பதிய மர்ந்துவளர் நம்பர்புகழ் தம்பிரானே. (உ)

---

834. திருவடியைக் கூட

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனதான

விழு†தா தெனவே கருதா துடலை
வினைசேர் வதுவே புரிதாக-
விருதா வினிலே ‡யுலகா யதமே
விடவே மடவார் மயலாலே;
அழுதா கெடவே அவமா கிடநா
ளடைவே கழியா துணையோதி-
அலர்தா ளடியே னுறவாய் மருவோ
ரழியா வரமே தருவாயே;
தொழுதார் வினைவே ரடியோ டறவே
துகள்தீர் பரமே தருதேவா-
சுரர்பூ பதியே கருணா லயனே
சுகிர்தா வடியார் பெருவாழ்வே;
xஎழுதா மறைமா முடிவே வடிவே
லிறைவா எனையா ளுடையோனே-
oஇறைவா எதுதா வதுதா **தனியே
இணைநா கையில்வாழ் பெருமாளே. (௩)

---

* "ஞான தனத்தி...குறத்தி" திருப்புகழ் 646.
"ஞான குறமாது"—திருப்புகழ் 98, 987.
ஞானபத்தினி—திருப்புகழ் 1218.

† தாது—சுக்கிலம்.

‡ உலகாயதம் — தேகமே ஆத்மா, போகமே மோக்ஷம் என்னும் மதம்.

x எழுதா மறை—வேதம்: எழுதப்படாமல் வாய் மூலமாகவே தலை முறை தலை முறையாக வந்தமையால் எழுதாமறை எனலாயிற்று; எழுதும் மறை—தேவாரம்.

[தொடர்ச்சி 451 ஆம் பக்கம்]

ஞான மங்கை, அமுத உருவினள், எனது ஒப்பற்ற தாய், தெய்வப்பெண் ஆகிய குறப்பெண்ணை (வள்ளியை) மணந்த திருப்புயத்தை உடையவனே! **நாகபட்டினத்தில்** அமர்ந்து விளங்கும் (நம்பர்) சிவன் புகழும் தம்பிரானே! (அல்லது அமர்ந்து விளங்கும் தம்பிரானே! (நம்பர்) சிவபிரான் புகழும் தம்பிரானே! (கழல் மறந்திடேனே)

834.

விழுகின்ற (தாது) சுக்கிலம் என்று (கருதாது உடலை)— உடலைக் கருதாமல், வினையின் சேர்க்கையே — வினை பெருகுதலையே விரும்புவதாய்—

வீணுக, (உலகாயதம்) — போகமே மோக்ஷம் என்னும் புத்திமேவிட்டதனுல் மாதர்களின் மயல் காரணத்தால்—

(அழுது ஆகெடவே)-(நான்) அழுதும் ஐயோ கெட்டுப்போயும் (அவமாகிட) வீணுக, (நாள் அடைவே)—என் வாழ்நாள் முழுமையும் (கழியாது) கழிந்து போகாமல் உன்னைப் புகழ்ந்து துதித்து

மலருற்ற உன் திருவடியே அடியேனுக்கு உற்ற உறவாகக் கூட்டிவைக்கும் ஒப்பற்றதும் அழியாததுமான வரத்தைத் தந்தருளுக.

தொழுகின்ற அடியார்களுடைய வினையின் வேர் அடியோடு அற்றுப்போகக் குற்றமற்ற மேலாம்பதவியையே தருகின்றதேவனே!

தேவர்களுக்கு அரசே! கருணைக்கு இருப்பிடமானவனே! (சுகிர்தா) புண்ணியனே! அடியார்களுடைய பெருவாழ்வே!

(எழுதாமறை) வேதத்தின் சிறந்த முடிவுப் பொருளே! கூரியவேலை ஏந்தும் இறைவனே! என்னை ஆட்கொண்டுள்ளவனே! (ஆளாக உடையவனே)!

இறைவனே! (ஏதுதா அதுதா) நீ எதைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகின்ருயோ அதைக் கொடுத்தருளுக (எனக்கு என்று ஒரு விருப்பம் வேண்டாம்); (தனையே இணை) தனக்குத்தானே (இணையான) நிகரான **நாகபட்டினத்தில்** வாழ்கின்ற பெருமாளே!

(அழியாவரமே தருவாயே)

"எழுதாச் சுருதி எழுதுஞ் சுருதி செழுமாத் திருச்செவியுட் சேர்த்தி" — பூவணநாதருலா 61. "எழுதா மறையும் எழுதும் மறையும் வழுவாது கேட்டு மகிழ்ந்து—திருவிடை மருதூருலா 197.

o "வேண்டத் தக்க தறிவோய் நீ" —திருவாச-குழைத்த-6.

[** தொடர்ச்சி 452-ஆம் பக்கம் பார்க்க.]

எட்டிகுடி.

[இது நாகபட்டினத்துக்குச் சமீபத்தி லுள்ள கீழ்வேளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 7-மைல் தூரத்தி லுள்ள 'திருக்கோளிலி' என்னும் ஸ்தலத்துக்குச் சமீபம். சுப்பிரமணிய க்ஷேத்திரம். இங்குச் சித்திராபௌர்ணமி யன்று அநேகங் காவடிகள் வருகின்றன,

835. மாதர்மீது மயக்கு அற

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனதான

*உரமுற் றிருசெப் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடமாயே-
உடைசுற் றுமிடைச் சுமையொக் கஅடுத்
தமிதக் கெறுவத் துடன்வீறு;
தரமொத் துபயக் களபத் †தளமிக்
கவனத் தருணத் தனமீதே-
சருவிச் சருவித் தழுவித் தழுவித்
தவமற் கவிடுத் துழல்வேனோ;
அரிபுத் திரசித் தசஅக் கடவுட்
கருமைத் ‡திருமைத் துனவேளே-
அடல்குக் குடநற் கொடிகட் டியனர்த்
தசுரப் படையைப் பொருவோனே;
பரிவுற் றவருக் கருள்வைத் தருள்வித்
தகமுத் தமிழைப் பகர்வோனே-
பழனத் தொளிர்முத் தணியெட் டிகுடிப்
பதியிற் குமரப் பெருமாளே. (க)

* இந்தத் திருப்புகழ்ப் பாடலும் 125-ஆம் பாடல் "இருசெப்பென" எனத் துவக்கும் அதுவும் சொல்லும் பொருளும் பெரிதும் ஒத்திருப்பது கவனிக்கற் பாலது. † தளம்—செஞ்சாந்து —"தளத் தேந்திள முலையார்" —சம்பந்தர் 2-17-3.

‡ முருகவேள் காமனுக்கு மைத்துனர் :- பாடல் 816-பக்கம் 406.

[பக்கம் 451 தொடர்ச்சி.]

○ "கற்றுமிக் குணர்ந்தீர் இந்நகர்க் குவமை கரைதரின் அதுவலாலியாதே" —நாகைபுரா.—நகரப்படலம் 10.

எட்டிகுடி

835.

மார்பிலே பொருந்தி, இரண்டு சிமிழ்களாமென வட்ட வடிவுகொண்டு, குழைவு கொண்டு, புளகாங்கிதம் கொண்டு வலிமை கொண்டு,

ஆடை சுற்றி அணியப்படும் இடைக்குச் சுமையாக (பாரமாக) ஒக்க அடுத்து—நன்கு பொருந்தி, (அமிதக் கெறுவத்துடன்)—அளவுகடந்த கர்வத்துடன் மேம்பட்டு விளங்கும்

தன்மை கொண்டனவான (உபய) இரண்டு (களபம்) கலவைச் சாந்தும் (தளம்) செஞ்சாந்தும் நிரம்பின (வனம்) அழகுவாய்ந்த, தருணத் தனமீதே—இள முலைகள் மீது—

(சருவிச் சருவி) பழகிப் பழகி, தழுவித் தழுவி, தவத்தை (அற்க விடுத்து) நிலையாக விடுத்து—வேரோடு விடுத்துத்—திரிவேனோ!

திருமாலுக்குப் புத்திரனை (சித்தசன்) மன்மதன் என்னும் அந்தக் கடவுளுக்கு அருமையான திரு மைத்துனனே! வேளே!

வலிமை வாய்ந்த நல்ல சேவற்கொடியைக் கட்டி, (அனர்த்த அசுரப் படையை) துன்பம் விளைவித்து வந்த அசுர சேனையுடன் சண்டை செய்தவனே!

அன்புவைத்த அடியார்கள்மேல் கருணைவைத்துத் திருவருளைப் பாலிக்கும் ஞான மூர்த்தியே! முத்தமிழைச் சொன்னவனே (சம்பந்த மூர்த்தியாய்த் தேவாரப் பாக்களை அருளியவனே)!

வயல்களிற் பிரகாசிக்கின்ற முத்துக்களைக் கொண்ட **எட்டிகுடி** என்னும் பதியில் வீற்றிருக்கும் குமரப் பெருமாளே!

(தவமற்க விடுத் துழல்வேனோ)

836. ஆண்டருள

தாந்த தந்தன தான தனத்தம் தனதான

ஓங்கு மைம்புல னோடு நினைத்தின் பயர்வேனை-
ஓம்பெ றும்ப்ரண வாதி யுரைத்தெந் தனையாள்வாய்;
வாங்கி வெங்கணை சூரர் குலக்கொம் புகடாவி-
வாங்கி நின்றன*ஏவி லுகைக்குங் குமரேசா;
†மூங்கி லம்புய வாச மணக்குஞ் சரிமானு-
மூண்ட பைங்குற மாது மணக்குந் திருமார்பா;
காங்கை யங்கறு‡பாசில் மனத்தன் பர்கள்வாழ்வே-
x காஞ்சி ரங்குடி ஆறு முகத்தெம் பெருமாளே. (உ)

837. திருவடியைப் பெற

தனதத்த தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த தனதான-

oகடலொத்த விடமொத்த கணையொத்த பிணையொத்த
கயலொத்த மலரொத்த விழிமானார்-

---

* ஏ—மிகுதி—பெருக்கம். "எவார் மலையே சிலையா"
—சம்பந்தர் 2-62-2.

† மூங்கிலம்புயம்—"வேயுறுதோளி"—சம்பந்தர் 2-85-1.

‡ பாசு—பாசம்
"பாசற்றவர் பாடி நின்றாடும் பழம்பதி"—(சுந்தரர்-50-7)

x 'காஞ்சிரங் குடி' என்பது 'எட்டி குடி'. தலத்துப் பெயரை இங்ஙனம் மாற்றிக் கூறுவது அருணகிரியார்க்கு ஒரு மகிழ்ச்சி. பிறிதோ ருதாரணம்—பந்தணை நல்லூரைக் கந்துகாபுரி என்பர்—(பாடல் 860); கந்துகம்—பந்து.

o இந்த அடி சொற்பொருட் பின்வரு நிலையணி.

836.

பெருகி வளரும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்— என்னும்) ஐந்து புலன்களும் என்னை இழுத்துக்கொண்டு ஓட—அவ் வழியே நான் ஓட நினைத்து இன்பம் கொண்டு அயர்ச்சி (தளர்ச்சி) கொள்பவனாகிய எனக்கு

'ஓம்' என்னும் பிரணவப் பொருள் ஆதிய மந்திரங்களை உபதேசித்து அடியேனை ஆண்டருளுக;

(வாங்கி) வில்லை வளைத்து, (வெங்கணை) கொடிய அம்புகளைக்கொண்ட, (சூரர் குலம் கொம்புகள் தாவி)— சூரர்களாகிய சிறந்த வீரக் கிளைஞர்கள் பாய்ந்துவர— (அல்லது, வில்லைவளைத்துக் கொடிய அம்புகளைச் சூரர்களின் சிறந்த கூட்டங்களின்மீது—கடாவி—செலுத்தி—)

(வாங்கி நின்றன) வளைந்து நின்ற (சேனை) மீது நிரம்பப் பிரயோகிக்கும் குமரேசனே! அல்லது (எவில் உகைக்கும்) அம்புகொண்டு செலுத்தின குமரேசனே!

மூங்கில் போன்ற அழகிய புயங்களை உடைய நறுமண முள்ள (குஞ்சரி மானும்) யானைமகள்— தேவசேனையும்—

காதல் மூண்டெழ நீ சென்று உறவாடிய (அல்லது பக்தி மூண்டிருந்த) அழகிய குறமாது வள்ளி மணந்த (அல்லது வள்ளியை) மணந்த திருமார்பனே!

(காங்கை) வெப்பம்—மனக்கொதிப்பு—அங்கு (அற்ற)— இல்லாத, (பாசு) பாசங்கள்—ஆசைகள் இல்லாத மனத்தராகிய அன்பர்களின் செல்வமே!

(காஞ்சிரம் குடி) எட்டிகுடி என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் ஆறுமுகத்து எம் பெருமாளே! (எமதாறுமுகப் பெருமாளே)

(எந்தனை ஆள்வாய்)

837.

கடல் போலவும், விஷம் போலவும், அம்பு போலவும், மான் போலவும், மீன் போலவும், தாமரை மலர்போலவும் உள்ள கண்ணை உடைய மாதர்களின்—

கனசெப்பு நளினத்து முகைவெற்பை நிகர்செப்பு
கதிர்முத்து முலைதைக்க அகலாதே;

மிடலுற்ற கல்விக்கு ளுளநச்சி வளமற்று
மிடிபட்டு மடிபட்டு மனமாழ்கி-

மெலிவுற்ற தமியற்கு ஸிருபத்ம சரணத்தை
மிகநட்பொ டருள்தற்கு வருவாயே;

* தடையற்ற கணைவிட்டு மணிவஜ்ர முடிபெற்ற
தலைபத்து டையதுட்ட னுயிர்போகச்-

† சலசத்து மயிலுற்ற சிறைவிட்டு வருவெற்றி
தருசக்ர தரனுக்கு மருகோனே;

திடமுற்ற கனகப்பொ துவில்நட்பு டனடித்த
சிவனுக்கு விழியொத்த புதல்வோனே-

செழுநத்து மிழுமுத்து வயலுக்குள் நிறைபெற்ற
திகழெட்டி குடியுற்ற பெருமாளே. (கூ)

---

838. அலைச்சல் அற

தத்தன தத்தன தானா தானா
தத்தன தத்தன தானா தானா
தத்தன தத்தன தானா தானா தனதான

மைக்குழ லொத்தவை ‡நீலோ மாலோ
அக்கணி கணைக்கிணை சேலோ வேலோ
மற்றவர் சொற்றெளி பாலோ பாகோ வடிதேனோ-

---

* "தடையற்ற கணைவிட்டு" இக் கருத்தை "எடுத்த வேல் **பிழை புகல் அரிதென** எதிர் விடுத்து ராவணன் மணிமுடி துணிபட" —எனவரும் 842-ஆம் பாடலிலும் காண்க.

† சலசத்து மயில்—சீதை; சலசம்—தாமரை.

‡ நீலம்—இந்திர நீலம், கருங்குவளை, "அறல் இந்திர நீலம்... குழலுக் கிணையாமே"—உசிதசூடாமணி; நீலம்—இருள் எனலுமாம். மால்—கருமை.

(கனசெப்பு) பொற்சிமிழ், தாமரையின் மொட்டு, மலை இவைக்கு நிகர் என்று சொல்லப்படும், ஒளிகொண்ட முத்துமாலை அணிந்துள்ள கொங்கை (மனத்திலே) தைக்க (அழுந்திப்பதிய) — அந்த எண்ணம் மனத்தைவிட்டு நீங்காமல்—

வலிமை வாய்ந்த கலவியின்பத்தில் (புணர்ச்சியில்) உள்ளம் (மனது) நச்சி (விருப்பம் கொண்டு), அதனால் வளம்—செல்வம்—உடல்நலம் ஆகிய வளப்பங்கள் அழிந்து, வறுமையை அடைந்து, சோம்பல் அடைந்து, மனம் மயங்கி அழிந்து—

மெலிவு அடைந்துள்ள தனியனாகிய எனக்கு உனது தாமரையன்ன திருவடியை மிக்க அன்புடனே அருளுவதற்கு வந்துதவுக.

தடையேயிலாத (குறிதவறாத) அம்பைச் செலுத்தி மணி, வஜ்ரம் இவை பதிக்கப்பெற்ற கிரீடத்தைக் கொண்ட தலை பத்து இருந்த துஷ்டன்—ராவணனுடைய உயிரை மாள்வித்துத் (போகச்செய்து)

தாமரையில் விற்றிருக்கும் மயில்—லக்ஷ்மி—சீதை— இருந்த சிறையை நீக்கிவந்த வெற்றியைக் கொண்ட (சக்ரதரனுக்கு) சக்ராயுதம் ஏந்தின திருமாலுக்கு மருகனே!

மெய்ம்மை வாய்ந்த—(அல்லது உறுதி பயக்கும் (கனகப்பொதுவில்) பொன்னம்பலத்தில் (பதஞ்சலி வியாக்ரபாதர் மீதுள்ள) அன்புடனே நடஞ்செய்த சிவபிரானுக்குக் கண்போல இனிய புதல்வனே!

செழிப்புள்ள (நத்து) — சங்கு ஈன்ற முத்துக்கள் வயலிலே நிறைந்து விளங்கும் **எட்டிகுடியில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(அருள்தற்கு வருவாயே)

838.

கரிய குழலுக்கு ஒப்பானவை கருங்குவளையோ! (மாலோ) கருமையோ! அந்தக் கண்கள் இரண்டுக்கும் ஒப்பானவை சேல்மீனோ! வேலோ! பின்னர், அப் பெண்களின் சொல்லுக்கு இணை தெளிவுள்ள பாலோ, வெல்லமோ! வடித்த தேனோ!

வத்கிர மெய்ச்சசி தாஹே நாணு
குத்துமு லேக்கிள நீரோ மேரோ
வைப்பதி டைக்கிணை நூலோ *மேலோ வெனமாதர் ;

தக்கவ றுப்பினுள் மாலே மேலாய்
லச்சைய றப்புணர் வாதே காதே
†சைச்சையெ ன்த்திரி நாயே னேயா தலையாதே-

‡தற்பொறி வைத்தருள் பாராய் தாராய்
தற்சமை யத்தxக லாவே ளைதா
தத்தும யிற்பரி மீதே நீ நான் வருவாயே ;

முக்கணர் மெச்சிய பாலா சீலா
oசித்தசன் மைத்துன வேளே தோளார்
மொய்த்தம ணத்தது ழாயோன் மாயோன் மருகோனே-

முத்தமிழ் வித்ஙவி னோதா கீதா
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்திகொ டுத்தடி யார்மேல் மர்மால் முருகோனே ;

இக்குநி ரைத்த**வி ராலூர் சேலூர்
செய்ப்பழ நிப்பதி யூரா வாரூர்
மிக்கவி டைக்கழி வேளூர் தர்ரூர் வயலூரா-

---

* மேல்—ஆகாயம், இடைக்கு ஆகாயம் உவமை, 'மருங்குநிட்கள ஆகாசம் நேரென'—(திருப்புகழ் 506) "துடி, விண், மின்......இடைக்கு ஒப்பாம்"—உசிதசூடாமணி.

† சை—இகழ்ச்சிக் குறிப்பு.

‡ தற்பொறி—பாடல் 413-பக்கம் 544-கீழ்க்குறிப்பு.

x கலை—ஒளி.

o சித்தசன் மைத்துன வேளே—பாடல் 835-கீழ்க்குறிப்பு.

oo விராலூர்—விராலியூரை (விராலி மலையைக்) குறிக்கலாம்.

முகமானது உண்மையாகவே சந்திரன் தானே; வெட்குதலின்றி எழுந்துள்ள குத்துமுலைகளுக்குஒப்பானவை இளநீரோ, மேருமலையோ: (வைப்பதிடைக் கிணை) இடைக்கு இணை வைப்பது—இடைக்கு ஒப்பாகக் கூறப்படுவது நூலோ, அதனிலும் மேலான (நுண்ணியதான) ஒன்றோ! (அல்லது மேலோ — ஆகாசமோ) என்றெல்லாம் மாதர்களுடைய

மனத்தைக் கவரத்தக்க அவயவங்களுள் காம மயக்கம் மிக்கவனாய், கூச்சமில்லாமல் (புணர்) சேர்கின்ற (வாது ஏகாதே) போட்டிச் சண்டையில் நுழையாமல், சீசீ எனப் பிறர் சொல்லும்படி திரிகின்ற நாயேன் ஓய்வின்றி அலையாமல்—

உனது (பொறி) இலச்சினையை — முத்திரையை — (வேல் — மயில் அடையாளத்தை என்மேற் பொறித்து வைத்துக் கண்பார்த்தருளுக, (தற்சமயத்த) கௌமார சமயத்தவனே (அல்லது சிவசமயத்தவனே!) (கலா—வேல்—நாதா) ஒளிவேல் ஏந்தும் நாதனே! தத்து மயிற்பரி) தாவிச் செல்லும் மயில் வாகனத்தின் மேலே நீதான் வந்தருளவேணும்.

(முக்கண்ணர்) சிவபிரான் மெச்சின பாலனே! சீலனே (தூயவனே)! மன்மதனது மைத்துன வேளே! தோள்கள் நிரம்ப மொய்த்துள்ள நறுமணமுள்ள துழாய் (துளசி) மாலை அணிந்தவனும் திருமாலின் மருகனே!

முத்தமிழ்ப் புலமை வாய்ந்த விநோதனே! இசைஞானியே! பிறர் எவரும் (உனக்கு) நிகராகாத (உருவத்தனே) உருவ அழகனே! ஒளிவளர் விளக்கே! முத்தியைத் தந்து அடியார்மேல் மிக்க ஆசை கொள்ளும் முருகனே!

கரும்பு வரிசையாயுள்ள (விராலியூர் அல்லது) (விரால்) வரால்மீன்கள் ஊர்வதும், சேல்மீன்கள் ஊர்வதுமான (செய்) வயல்கள் உள்ள பழநிப்பதி ஊரனே! திருவாரூர், சிறப்புற்ற திரு இடைக்கழி, (புள்ளிருக்கு) வேளூர், தார்—பூ அரும்புகள் ஊர்—அடர்ந்து நிறைந்துள்ள **வயலூர்** என்னும் தலங்களில் வீற்றிருப்பவனே!

*எச்சுரு திக்குளு நீயே தாயே
சுத்தவி றற்றிறல் வீரா தீரா
எட்டிகு டிப்பதி வேலா மேலோர் பெருமாளே. (ச)

எண்கண்

[இது திருவாரூரி லிருந்து நீடாமங்கலம் போகும் வழியில் உள்ள திருமதிக்குன்றம் ரெயில்வே ஸ்டேஷக்குச் சமீபம். †எண்கண், எட்டிகுடி, சிக்கல் மூன்றிலும் உள்ள முருகக்கடவுளின் திருவுருவங்கள் ஒரே சிற்பியினுடைய கைவேலை என ஆன்றோர் கூறுவர்.]

839. பணிய

தந்த தந்த தந்த தந்த, தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்த தந்த தனதான

சந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்கு மங்க டம்பி லங்கு
சண்ப கஞ்செ றிந்தி லங்கு திரடோளுந்-
தண்டை யஞ்சி லம்ப லம்ப வெண்டை யஞ்ச லன்ச லென்று
‡ சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச மயிலேறித்;
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த னந்த னென்று
சென்ற சைந்து கந்து வந்து க்ருபையோடே-
xசிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
செம்ப தம்ப ணிந்தி ரென்று மொழிவாயே;
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த ழிந்தி டும்ப கண்டன்
அங்க முங்கு லைந்த ரங்கொள் பொடியாக-

---

* எச்சமயத் தார்களுமெம் மிறையிறை யென் றேத்தவவர்க்
கச்சமயந் தோறுஞ் சென் றருள்புரிவா ளுகினையே
—(கதிர்காமக் கலம்பகம் 1)

† எண்கண் (839), எட்டிகுடி (835) சிக்கல் (830) இம் மூன்று தலங்களையும் ஆன்றோர் ஒன்று படுத்திக் கூறுவர்: முருகவேளின் அழகிய திருவுருவை ஒரு சிற்பி 'எண்கண்' என்னும் தலத்துக்கு அமைக்க, அத்தகைய அழகிய உரு வேறொன்று செய்யாதிருக்க வேண்டி அரசன் அச் சிற்பியின் ஒரு கையை வெட்டிவிட்டான் என்றும், அந்தக் குறையுடனே அதனிலும் அழகான முருகன் உருவை 'எட்டிகுடியில்' அந்தச் சிற்பி அமைத்தான் எனவும், அரசன் சிற்பியின் மற்றொரு கையையும்

[தொடர்ச்சி 461 ஆம் பக்கம் பார்க்க.]

எத்தகைய வேதத்துக்குள்ளும் நீயே தாய்போல மூலப்பொருளாய் நிற்கின்றாய்! பரிசுத்த பராக்ரம திறமைவாய்ந்த வீரனே! தீரனே! எட்டிகுடிப்பதியில் வீற்றிருக்கும் வேலனே! வானோர் (அல்லது பெரியோர்க்குப்) பெருமாளே! (நீ தான் வருவாயே)

எண்கண்

839.

சந்தனத்தை நிரம்பப்பூசிச் சேர்த்து, குங்குமம், கடம்பு, விளங்கும் சண்பகம், இவை நெருங்கி விளங்கும் திரண்ட தோள்கள் விளங்க—

தண்டையும் அழகிய சிலம்பும் ஒலிசெய, வெண்டையம் (வீரக்காலணி) சலன்சல் என்று ஒலிக்க, (சஞ்சு இதம்—உருவம் இனிதாக அமைந்துள்ள (சதங்கை) கிங்கிணி கொஞ்சுவது போல ஒலிக்க, மயில்மீது ஏறி—

திந்தி மிந்தி மிந்தி மிந்தி ... தனந்தனென்று (சென்றசைந்து) மெல்ல அசைந்து உகந்துவந்து — மகிழ்ச்சியுடன் வந்து கிருபையுடனே—(என்)

மனமாகிய அழகிய கோயிலிற் புகுந்து, 'எப்போதும் புகழ்ந்து, அறிந்து, செவ்விய பதங்களைப் பணிந்து இருப்பாயாக' என்று மொழிந்தருளுக.

அந்த மந்தி — பேர்போன அந்தக் குரங்கு அநுமாரைக்கொண்டு இலங்கை வெந்து அழியவும், இடும்ப—கொடுஞ்செயலைக் கொண்ட (கண்டன்)—வீரனும் ராவணனுடைய உடலம் அழிபட்டு, (அரங் கொள பொடியாக) அரத்தினால் ராவினதுபோலப் பொடியாக—தூளாக

வெட்டினான் என்றும், இரண்டு கையும் அற்ற நிலையிற் சிக்கலிற் பின்னும் அழகிய முருகன் உருவத்தை அந்தச் சிற்பி அமைக்க, முருகவேள் அச் சிற்பியின் மீது உகந்து—அவன் அமைத்த மயில் மீதிருந்தபடியே விண்ணில் அவனையும் அழைத்துப் பறந்து மறைந்தனர் எனவும் கர்ண பரம்பரைச் சேதி கூறும்.

‡ சஞ்சிதம்—சஞ்சு இதம்; சஞ்சு—சாயல்.

X சிந்தை அம் குலம்—மனமாகிய அழகிய கோயில்.

அம்ப*கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு ரிந்து நின்று
அம்பு கொண்டு வென்ற கொண்டல் மருகோனே ;
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை யுஞ்ச லம்பு னைந்தி
டும்†ப ரன்ற னன்பில் வந்த குமரேசா-
‡இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க டிந்த பின்பு
எண்க ணங்க மர்ந்தி ருந்த பெருமாளே. (க)

திருக்குடவாயில்.

[திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் போகும் வழியி லுள்ள குடாச்சேரி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 8-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.

840. கழல்பெற

தனனா தத்தன தனனா தத்தன
தனனா தத்தன தனதான

அயிலார் மைக்கடு விழியார் மட்டைகள்
அயலார் நத்திடு விலைமாதர்-
அணைமீ திற்றுயில் பொழுதே ×தெட்டிக
ளவரே வற்செய்து தமியேனும் ;
மயலா கித்திரி வதுதா னற்றிட
மலமா யைக்குண மதுமாற-
மறையால் மிக்கருள் பெறவே யற்புத
மதுமா லைப்பத மருள்வாயே ;
கயிலா யப்பதி யுடையா ருக்கொரு
பொருளே கட்டளை யிடுவோனே-
கடலோ டிப்புகு முதுசூர் பொட்டெழ
கதிர் வேல் விட்டிடு திறலோனே ;

---

* கும்பன்—'கும்பகர்ணன்' என்பது குறுகிற்று. 'கும்பகன்' என்றார் 405, 965-ஆம் பாடல்களில்; 'கும்பாகன்' என்றார் 374-ஆம் பாடலில்; கும்பன் என்றும் ஒரு அரக்கன் உண்டு. "ராவணனுக்கு நண்பன்—சித்தர்களைச் சிறையிட்டவன். சுக்ரீவனாற் கொல்லப் பட்டவன்"—அபிதான சிந்தாமணி.

† "பரன்சி லம்ப மர்ந்த" என்றும் பாடம்; பரன் சிலம்பு—திருப்பரங்குன்றம்.

‡ இந்திரன் பதம்பெற அண்டர்தம் பயங்கடிந்து எனப் பிரிக்க.

× தெட்டிகள்—பாடல் 653-பக்கம் 534 கீழ்க்குறிப்பு.

அம்பு முதலிய பாணங்களைக் கொண்டிருந்த (கும்பனும்) கும்பகர்ணனும் உள்ளங்கலங்கக் கொடுங் கோபத்துடன் நின்று அம்பை ஏவி வெற்றிகொண்ட மேக வர்ணனும் திருமாலின் மருகனே!

பிறை, (கரந்தை) திருநீற்றுப் பச்சை, தும்பை, கொன்றை, (ஜலம்) கங்கை, இவைதமை அணியும் சிவபிரானுடைய (சிவபிரான் தேவர்கள் பால்வைத்த) அன்பால் தோன்றின குமரேசனே!

தேவேந்திரன் தன் பதத்தைப் பெறுமாறு தேவர்களுடைய பயத்தைத் தவிர்த்த பின்னர், **எண்கண்** என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் பெருமாளே!

(செம்பதம் பணிந்திரென்று மொழிவாயே)

திருக்குடவாயில்

840.

வேல் போன்ற, கரிய விஷம் போன்ற (அல்லது மைபூசிய விஷம் கொண்ட) கண்களை உடையவர்கள், (மட்டைகள்) — பயனற்றவர்கள், பக்கத்தில் வருபவர்கள் (அல்லது பிறர்) ஆசை கொள்ளும் விலைமாதர்கள் (விலைக்கு உடலை விற்பவர்கள்)

படுக்கையில் தூங்கும் பொழுதிலேயே (தெட்டிகள்) வஞ்சிப்பவர்கள்-(ஆகிய பொதுமகளிர்) ஏவின வேலைகளைச் செய்து அடியேனும்

மோக மயக்கம் கொண்டவனாய்த் திரிகின்றதுதான் ஒழிந்துபோக, ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களால் ஏற்படும் மாயைக்குணம் ஒழிந்துபோக—

மறைகளை—வேதங்களை ஓதுவதால் (ஓதி) நிரம்பத் திருவருளை நான் பெறுமாறு, அற்புதமான தேன் நிரம்பிய மாலைகள் அணியப்பட்ட உனது **திருவடியைத்** தந்தருளுக.

கயிலாயப்பதியை உடையவராகிய சிவனுக்கு ஒப்பற்ற பிரணவப் பொருளை மேல்நிலையில் நின்று உபதேசித்தவனே!

கடலில் ஓடிப் புகுந்த பழைய சூரன் அழிபட ஒளி வேலைப் பிரயோகித்த பராக்ரமசாலியே!

குயிலா லித்திடு*பொழிலே சுற்றிய
குடவா யிற்பதி யுறைவோனே-

குறமா தைப்புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் பெருமாளே. (க)

---

841. தன் சரிதம்

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தனதான

†சுருதி யாயிய லாயியல் நீடிய
தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்
தொடர்பு மாயடி யாய்நடு வாய்மிகு துணையாய்மேல்-

துறவு மாயற மாய்நெறி யாய்மிகு
விரிவு மாய்விளை வாயருள் ஞானிகள்
சுகமு மாய்முகி லாய்மழை யா‡யெழு சுடர்வீசும்;

பருதி யாய்மதி யாய்நிறை தாரகை
பலவு மாய்வெளி யாயொளி யாயெழு
பகலி ராவிலை யாய்நிலை யாய்மிகு பரமாகும்-

பரம மாயையி னேர்மையை யாவரு
மறியொ ணாதவை நீXகுரு வாயிது
பகரு மாறுசெய் தாய்முதல் நாளுறு பயனேதான்;

---

* 'பூஞ்சோலை வாசம் வீசும் குடவாயில்'—"பைம்பொழிலும் சூழ்ந்த குடவாயில்"—சம்பந்தர் 2-58-6, 5.

† மனப்பாடஞ்செய்யத்தக்க அருமையான பாடல்.

‡ சூரியனுடைய கிரணங்கள் ஏழு நிறங்கள் கொண்டன—சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா; சூரியனுடைய சுழுமுனைக்கதிர் சந்திரனுக்கும், அரிகேசம் நக்ஷத்திரங்களுக்கும், விச்வகன்மா புதனுக்கும், விச்சுவா வெள்ளிக்கும், சத்துவிசு செவ்வாய்க்கும், சருவாவசு வியாழத்துக்கும், சுவராடு சனிக்கும் ஒளிதரும். அமுதகதிர் மழை பொழிவிக்கும். (அபிதான சிந்தாமணி)

X அருணகிரியார் முருகவேளிடம் தான் பெற்ற உபதேசத்தின் பெருமையை நினைந்து வியக்கின்றார்.

குயில்கள் கூவுகின்ற சோலைகள் சூழ்ந்துள்ள **குடவாயில்** என்னும் நகரில் உறைபவனே!

(குறமாது) வள்ளியை அணைந்த (சதுரனே) சாமர்த்திய சாலியே! ஞான மூர்த்தியே! குறைவுபடாத உண்மைத் தவநிலையை உடையார்தம் பெருமாளே!

(பதம் அருள்வாயே)

841.

வேதமாய், (இயலாய்) ஆகமமாய் (அல்லது — இயற்றமிழாய்), அத்தகைய (ஆகமங்களின்)—இயற்றமிழின்— மிக்குள்ளதான பகுதியாய் — பலவுமாய் — அநேகம் (பாஷைகளில்) மொழிகளில் கொள்ளப்பட்ட சம்பந்தத்தை உடையதாய், அடிப்படையாய், நடுவாய், மிக்க துணையாய்ப் பின்னும்,

(துறவுமாய்) எல்லாவற்றையும் விட்ட நிலையதாய், தருமமாய், நல்லொழுக்க வழியாய், மிகுந்த விரிவு உடையதாய், விளைவுப் பொருளாய், அருள் நிரம்பிய ஞானிகள் அனுபவிக்கும் சுகப் பொருளாய், மேகமாய், மழையாய், எழுவகைச் சுடர்களைக் கிரணங்களை வீசும் (அல்லது எழுகின்ற ஒளியை வீசுகின்ற)—அல்லது உதயமாம் ஒளியை வீசும்—

சூரிய மூர்த்தியாய், சந்திரனாய், நிறைந்துள்ள நக்ஷத்திரங்கள் பலவுமாய், ஆகாய வெளியாய், சோதியாய், உண்டாகின்ற பகலும், இரவும் இல்லாததாய், நிலைத்துள்ளதாய் உள்ள, மிக்க மேலான பொருளான—

மகா மாயையின் (நேர்மையை) உண்மைத் தத்துவத்தை, உண்மை நிலையை, எவரும் அறிய முடியாததை, நீ குருவாக வந்து — அதை — இங்ஙனம் (உலகுக்கு) எடுத்து ஓதுமாறு (எனக்குத்) திருவருள் புரிந்தாய்! இந்த பாக்கியம் யான் முற்பிறப்புகளிற் செய்த தவத்தின் பயன்தானே!

* கருது மாறிரு தோள்மயில் வேலிவை
கருதொ ணாவகை யோரர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னுயுமை கனபாரக்-
களப பூண்முலை யூறிய பாலுணு
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னய்விளை யாடிடம் வாதிகள் கழுவேறக்;
குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட †நீறிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனை குலையா‡வான்-
குடிபு கீரென மாமது ராபுரி
யியலை யாரண வூரென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே. (உ)

வலிவலம்.

[திருவாரூருக்குத் தென்கிழக்கு 6-மைல். மூவர் பாடலும்பெற்றது.]

842. திருவடியைத் தொழ

தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன தனதான

தொடுத்த நாள்முதல் மருவிய இளைஞனும்
இருக்க வேறொரு பெயர்தம திடமது
துவட்சி யேபெறி லவருடன் மருவிடு பொதுமாதர்-

---

* இங்ஙனம் பன்னிருதோள், வேல், மயில் இவை தமை மறைத்து முருகவேள் சம்பந்தராய் வந்தார் எனக் கூறும் இப் பகுதி-
"சடை மறைத்துக் கதிர் மகுடந் தரித்து, நறுங் கொன்றை யந்தார் தணந்து வேப்பந், தொடை முடித்து, விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி, விடை நிறுத்திக் கயலெடுத்து, வழுதிமரு மகனகி மீன நோக்கின், மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம்"—என்னும் திருவிளையாடற் பாடலை நினைவூட்டுகின்றது.
ஞானசம்பந்தப் பெருமானது லீலை-பாடல் 181-பக். 420 குறிப்பு.
† "மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்களெல்லாம் தாயநீறணிந்து கொண்டார்"
"நீதியும் வேத நீதி யாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரந் தூய்மை செய்ய"-(பெரியபுரா-ஞானசம்-857,858.

(தொடர்ச்சி 467-ஆம் பக்கம்)

யாவராலும் கருதிப் போற்றப்படும் பன்னிரு தோள்கள், மயில், வேல் இவை தமை எவரும் கண்டு கருதா வகையில் (மறைத்து), (காழிப்பதி) அரசாக — வந்த கவுணிய குலத்தினருட் சிறந்த (வேதியனாய்) மறையோனாய், உமாதேவியின் மிக்க பாரமான—

கலவைச் சாந்து அணிந்த கொங்கையில் ஊறின பாலை உண்ட குழந்தையாய், மிக்க பாடல்கள் பாடுவதில் எவரினும் மேம்பட்ட கவிஞனாய்த் திருவிளையாடல்கள் செய்திருந்த சமயத்தில், வீண்வாதுக்கு வந்த (சமணர்கள்) கழுவிலேறவும்—

அவர்கள் ரத்தம் ஆறுகப் பெருகவும், வீதிகளில் எல்லாம் பூமாரி நிரம்பிவிடவும், திருநீற்றை யாவரும் இடும்படிச்செய்து,(கொடிய) மனக்கோட்டம் கொண்டிருந்த-செம்மைநெறி கோணி (வளைவுபட்டு)ச் சமண் சார்பிற் பட்டிருந்த பாண்டியனுடைய கூன் பட்ட உடல் நிமிர்ந்து விளங்கவும், (முனை) (சமண்) பகையை அழித்து, வானில் (பொன்னுலகில்)

குடி புகுவீர்களாக- எனச் சிறந்த மதுரைப் பட்டணத்தின் (முன்பிருந்த சமண்) நிலையை மாற்றி **வேதபுரி** என்னும்படியாக அந்த ஊரை நேர்மையான செந்நெறியிற் சேர்ப்பித்துத், திருக்**குடவாயில்** என்னும் பெரிய நகரத்தில் வாழ்வுகொண்டு விற்றிருக்கும் பெருமாளே!

(நீ குருவாய் இது பகருமாறு செய்தாய்)

வலிவலம்
842.

முதன் முதலாகப் பழக்கம் ஏற்பட்ட நாள் முதலாகத் தம்மிடம் பொருந்தியிருக்கும் ஓர் இளைஞன் இருக்கவும், வேறொரு பேர்வழி தமதிடத்தில் (காமத்தினால்) குழைவு கொண்டு வரப்பெற்றால் அவருடன் சேர்கின்ற பொதுமகளிருடைய

‡ "வான்குடி புகீரென (மதுராபுரி யியலை ஆரண ஊரென நேர் செய்து):—சமணரொடு செய்த வாதில் இறுதியாகப் பாடின திருப்பாசுரத்துப் பதிகப் பயனைக் கூறுமிடத்து

"பாசுரஞ் சொன்ன பத்தும் வல்லார்கள்
வானோர் உலகாளவும் வல்லரன்றே"

எனச் சம்பந்தப் பெருமான் அருளியுள்ளார்—சம்பந்தர் 3-54-12.

துவக்கி லேயடி படநறு மலரயன்
விதித்த தோதக வினையுறு தகவது
துறக்க நீறிட அரகர வெனவுள மையாதே ;

அடுத்த பேர்மனை துணைவியர் தமர்பொருள்
பெருத்த வாழ்விது சதமென மகிழ்வுறு
மசட்ட னுதுலன் அவமது தவிரநி னடியாரோ-

டமர்த்தி மர்மலர் கொடுவழி படஎனை
யிருத்தி யேபர கதிபெற மயில்மிசை
யரத்த மாமணி யணிகழ லிணைதொழ அருள்தாராய் ;

*எடுத்த வேல்பிழை புகலரி தெனஎதிர்
விடுத்து ராவணன் மணிமுடி துணிபட
எதிர்த்து மோர்கணை விடல்தெரி கரதலன் மருகோனே-

எருக்கு மாலிகை குவளையி னறுமலர்
கடுக்கை மாலிகை பகிரதி சிறுபிறை
யெலும்பு மாலிகை புனைசடி லவனருள் புதல்வோனே ;

† வடுத்த மாவென நிலைபெறு நிருதனை
அடக்க ஏழ்கட லெழுவரை துகளெழ
வடித்த வேல்விடு கரதல ம்ருகமத புயவேளே-

---

* முருகன் கைவேல் குறி தவறாது வெற்றி கொள்வதுபோல— இராமன் கை அம்பு குறி தவறாது வெற்றியே கொள்ளும் என்பர் "தடையற்ற கணைவிட்டு" என்றார் 837-ஆம் பாடலில்.

† மாமரமாய் நின்ற சூரன் தழையும் காயும் பழமும் தோன்ற நின்றான்—

"தழை புகையின் நல்கிப், பொன்னென இணர்கள் ஈன்று, மரகதம் புரையக் காய்த்துச், செந்நிற மணிகளென்னத் தீம்பழம் கொண்டு ... சூதமாய் அவுணன் நின்றான்"—கந்தபுரா 4-13-468.

வடுத்த — மாவடுவை வெளிக்காட்டும் மாமரம். வடுத்தல்— வெளிப்படுத்துதல்—பாடல் 406-பக்கம் 530 கீழ்க்குறிப்பு.

கட்டிலே (சிக்கலிலே) மாட்டிக் கொள்ளும்படியாக நறுமணமுள்ள (தாமரை) மலரில் வீற்றிருக்கும் பிரமன் விதித்த வஞ்சகத்தொடு கூடிய (அல்லது துக்கம் தருவதான) வினை பொருந்திய செயல்களை ஒழிக்கவும், திருநீறிடவும், ஹரஹர என்று வாய்விட்டுரைக்கவும் (என்னுடைய) (உள்ளம்) மனது பொருந்தாதோ !

[அடுத்தபேர்] உற்றூர்களும் [நட்பினரும்], மனைவியும், சகோதரிகளும், சுற்றத்தாரும், செல்வமும் ஆகிய இவை கூடிய பெரிய வாழ்வாகிய இதனையே [சதமென] நிலையானதென்று மகிழ்கின்ற [அசடன்] முட்டாள், [ஆதுலன்] வறிஞன் ஆகிய எனது வீணன வாழ்க்கை ஒழிய, உன்னுடைய அடியார்களோடு [என்னையும்]

[ஒருவனகச்] சேர்த்து நல்ல மலர்கொண்டு உன்னை வழிபடுமாறு என்னைத் [தவ நிலையில்] இருத்தி, மேலானகதியை [நான்] பெற, மயில்மீது விளங்கும் சிவந்த, சிறந்த ரத்னமணிகள் பொருந்திய வீரக்கழல்களணிந்த இரு திருவடிகளைத் தொழும்படியாக உனது திரு அருளைத் தந்தருளுக;

[நீ] எடுத்துச் செலுத்தின வேலாயுதமானது [குறி] தவறுதல் இல்லை என்பதுபோல எதிரே பிரயோகித்து, இராவணனுடைய ரத்ன முடிகள் சிதறுமாறு எதிர்த்தும் நேராகத் தனது ஒப்பற்ற ஓரம்பைச் செலுத்தத் தெரிந்த திருக்கரத்தை உடைய திருமாலின் மருகனே !

வெள்ளெருக்கு மாலை, [குவளையின்] கழுநீரின் நறுமணமுள்ள மலர்மாலை, கொன்றைமாலை, கங்கை, இளம்பிறை, எலும்புமாலை இவையெலாம் அணிந்துள்ள சடைப்பெருமான் அருளிய புதல்வனே !

பிஞ்சுவிட்ட மாவடுக்கள் வெளியே தோன்றும்படியமைந்த மாமரமாக நிலைபெற்று நின்ற அசுரனும் சூரனை அடக்கவும், எழுகடல், எழுமலை இவை வற்றவும், பொடியாகவும், கூரிய வேலாயுதத்தைச் செலுத்தின திருக்கரங்களை யுடையவனே! கஸ்தூரியணிந்த திருப்புயங்களையுடைய செவ்வேளே !

வனத்தில் வாழ்குற மகள்முலை முழுகிய
கடப்ப மாலிகை யணிபுய அமரர்கள்
மதித்த சேவக வலிவல நகருறை பெருமாளே. (க)

வேதாரணியம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருத்தருப்பூண்டி ஜங்ஷனிலிருந்து 21-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தல புராணங்கள் உள்ளன.]

843. திருவடியைச் சிந்திக்க

தானன தத்தத் தந்தன தந்தன தனதான

சூழும்வி னைக்கட் டுன்பநெ டும்பிணி கழிகாமஞ்-
சோரமி தற்குச் சிந்தைநி னைந்துறு துணையாதே:
ஏழையெ னித்துக் கங்களு டன்தின முழல்வேனை-
ஏதம கற்றிச் செம்பத சிந்தனை தருவாயே;
ஆழிய டைத்துத் *தங்கையி லங்கையை யெழுநாளே-
ஆண்மைசெ லுத்திக் கொண்டக ரும்புயல் மருகோனே;
வேழமு கற்குத் தம்பியெ னுந்திரு முருகோனே-
வேத வனத்திற் சங்கரர் தந்தருள் பெருமாளே. (க)

844. மாயை தொலைய

தான தனத்தன தந்த, தான தனத்தன தந்த
தான தனத்தன தந்த தனதான

சேலை யுடுத்துந டந்து மாலை யவிழ்த்துமு டிந்து
சீத வரிக்குழல் கிண்டி யளிமூசத்-

---

* 'எழுநாளே ஆண்மை செலுத்தி யிலங்கையைத் தம் கைக் கொண்ட கரும்புயல்' எனப் பிரித்துக்கொள்க.

[வள்ளிமலைத் திணைப்புனக்] காட்டில் வாழ்ந்த குறமகளின் கொங்கை முழுகிய [அல்லது கொங்கையில் முழுகிய] கடப்பமாலை அணிந்த திருப்புயனே! தேவர்கள் மதிக்கின்ற பராக்ரமசாலியே! வலிவலம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

[கழலிணை தொழ அருள் தாராய்]

வேதாரணியம்

843.

(என்னைச்) சூழ்ந்துள்ள வினை க்காரணமாக வருகின்ற துன்பம், நீண்ட நோய், [கழி] மிகுந்தகாமம்—

[சோரம்] களவு, வஞ்சனை இவைகளை மனத்தில் நினைவு கொண்டிருந்தால் எனக்கு உற்ற துணை எது உளது?

[ஏழையேன்] ஏழையாகிய நான் இத்தகைய துக்கங்களுடன் நாள்தோறும் அலைச்சலுறுவேனோ!

இந்தக் குற்றத்தினை நீக்கி உனது செம்மையான திருவடியைச் சிந்திக்கும் எண்ணத்தைத் தந்தருளுவாயாக!

சமுத்திரத்தை அணையாலடைத்து [தம் கை] இலங்கையை எழுநாளே] ஏழு நாளிலே இலங்கையைத் தமது கையில்—

தமது ஆண்மையைச் செலுத்தி, [கொண்ட] கைக்கொண்ட கரியமேக நிறத்துத் திருமாலின் மருகனே!

யானைமுகத்துக் கணபதியின் தம்பி எனச் சொல்லப்படும் அழகிய முருகனே!

வேதவனத்தில் [வேதாரணியத்தில்] வீற்றிருக்கும் சிவபெருமான் தந்தருளிய பெருமாளே!

[செம்பத சிந்தனை தருவாயே]

844.

ஆடையை உடுத்து நடந்தும், [கூந்தலிலுள்ள] மாலையை அவிழ்த்து முடிந்தும், குளிர்ந்த [அரி] அழகிய [அல்லது வரி—ஒழுங்கான] [கூந்தலைக்கிளறி] வண்டுகள் நெருங்கி மொய்க்க

தேனி லினிக்கமொ ழிந்து காமு கரைச்சிறை கொண்டு
தேச மனைத்தையும் வென்ற விழிமானர்;

மாலை மயக்கில்வி ழுந்து காம கலைக்குளு ளைந்து
மாலி லகப்பட நொந்து திரிவேனோ-

வால ரவிக்கிர ணங்க ளாமென வுற்றப தங்கள்
மாயை தொலைத்திட வுன்ற னருள்தாராய்;

* பாலை வனத்தில்ந டந்து நீல அரக்கியை வென்று
பார மலைக்குள கன்று கணையாலேழ்-

பார மரத்திரள் மங்க வாலி யுரத்தையி டந்து
† பால்வ ருணத்தலை வன்சொல் வழியாலே;

வேலை யடைத்துவ ரங்கள் சாடி யரக்கரி லங்கை
வீட ணருக்கருள் கொண்டல் மருகோனே-

‡ மேவு திருத்தணி செந்தில் நீள்பழ நிக்குளு கந்து
வேத வனத்தில மர்ந்த பெருமாளே. (உ)

---

* "விச்வாமித்திர முனிவருடன் சென்று அங்கநாடு கடந்து ஒரு பாலைவனங் கண்டு, அங்கு விச்வாமித்திரர் உபதேசித்த பலை, அதிபலை என்னும் மந்திரங்களைப் பெற்றுப் **பாலைவனம் கடந்து,** தாடகையை வதைத்து"—அபிதான சிந்தாமணி, பக்கம் 185.

"ஓர் சுடு சுரங் குறுகினர். 'எரிசுடர்க் கடவுளும் கருதில் வேம் உள்ளமும் காணில் வேம் நயனமும்"-(கம்பராமா-தாடகைவதை-4,5.

மராமரம் அட்டது, வாலியை அட்டது, கடலை அடைத்தது-விபீஷணருக்கு அருளியது—(பாடல் 231-பக்கம் 78; பாடல் 578. பக்கம் 322; பாடல் 659-பக்கம் 12; பாடல் 565-பக்கம் 288-பார்க்க)

† 'வழியினைத் தருதி என்றான் வருணனை நோக்கி வள்ளல்'
'செல்லுதி சேது என்றான் றியற்றியென் சிரத்தின்மேலாய்'
'குன்றிகொண் டடுக்கிச் சேது குயிற்றுதிர் என்று கூறிச்'
'சென்றன னிருக்கை நோக்கி வருணனு மருளிற் சென்றான்.
—கம்பராமா-வருணனை 82, 85.

'போகைக்கு நீவழிகாட் டென்று போய்'—கந்தரலங் 54.

‡ முருகவேளுக்கு உகந்த தலங்களென—திருத்தணி, செந்தில், பழநி—மூன்றையும் எடுத்துக் காட்டுகின்றார் (பாடல் 289 அடி-2 பார்க்க); மேவு திருத்தணி—(முருகன்) விரும்பும் திருத்தணி—
"உள மகிழ்ச்சியோடு திருத்தணி பற்றிய
பெருமாளே"—திருப்புகழ் 268-பக்கம் 168 கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 473 ஆம் பக்கம்.]

தேன்போல் இனிக்கும்படியான மொழிகளைப் பேசியும், காமப்பித்து உடையாரைச் [சிறைகொண்டு] தன் வசப்படுத்தியும் [இவ்வாறு] தேசம் முழுமையும் வெற்றிகொள்ளும் கண்களையுடைய [பொது] மாதர்களின் –

இருண்ட மயக்கத்தில் விழுந்து, காமநூல்களைப் படித்து வருந்தி, காம மயக்கத்தில் அகப்பட்டு மனம் நொந்து திரிவேனோ!

இளஞ்சூரியனுடைய கிரணங்கள்' என்று சொல்லும்படியான ஒளிகொண்டு விளங்கும் உனது திருவடிகள் என்னுடைய மயக்க அறிவைத் தொலைக்கும்படி உனது திரு அருளைத் தந்தருளுக;

பாலைவனத்தில் நடந்து கரியநிறங்கொண்ட அரக்கி — தாடகையை வதைத்து வென்று பெரிய மலையாம் சித்ரகூட பர்வதத்தினின்று நீங்கி அப்பாற் சென்று, அம்பு கொண்டு ஏழு

பெரிய மராமரங்களின் கூட்டத்தை அழிவு செய்து, வாலியினுடைய மார்பைப் பிளந்து [பால்] அப்பால் சென்று [அல்லது தன்னிடத்தில் அஞ்சி ஓடிவந்த] வருணராஜன் சொன்ன வழியின்படி—

சமுத்திரத்தை அணைகட்டி அடைத்து [வரங்கள் சாடி அரக்கர்கள் வாழ்ந்திருந்த [வரங்கள்] சூழல்களைச் [சாடி] அழிவுசெய்து, இலங்கை அரசாட்சியை விபீஷணருக்கு அருள்புரிந்த [அல்லது சூழல்களையும் இலங்கையையும் சாடி [அழித்து] விபீஷணருக்கு அருள் பாலித்த] மேகநிறத்துத் திருமாலின் மருகனே!

விரும்பத்தக்க திருத்தணிகை, திருச்செந்தூர், பெரிய பழநி இம் மூன்று தலங்களிலும் ப்ரீதி கொண்டு **வேதாரணியத்தில்** விற்றிருக்கும் பெருமாளே.

[மாயை தொலைத்திட உன்றன் அருள் தாராய்]

" அலைவாயுகந்த பெருமாளே "—திருப்புகழ் 44, 45, 84;
" செந்தில் மகிழ் தம்பிரானே "— ஷை 65;
" செந்திலில் இன்புறு தம்பிரானே " ஷை 86;
" செந்தில் உகந்தருள் பெருமாளே " ஷை 88;
" தென் பழநிமலை மேலுகந்த பெருமாளே ஷை 185
" பழநியில் அன்புற்றிருக்கும்...பெருமாளே ஷை 186

845. தவநெறி பற்ற

தானன தத்த தனந்த, தானன தத்த தனந்த
தானன தத்த தனந்த தனதான

நூலினை யொத்த மருங்குல் தேரினை யொத்த நிதம்பம்
நூபுர மொய்த்த பதங்கள் இவையாலும்-

*நூறிசை பெற்ற பதங்கொள் மேருவை யொத்த தனங்கள்
† நூல்வல்ம லர்ப்பொரு ‡ துண்டம் அவையாலும் ;

சேலினை யொத்திடு கண்க ளாலும மைத்திடு பெண்கள்
தேனித ழ் பற்றுமொ ரின்ப வலைமுழ்கிச்-

சீலம னைத்து மொழிந்து காமவி தத்தி லமுந்தி
தேறுத வத்தை யிழந்து திரிவேனே ;

வாலஇ ளப்பிறை தும்பை யாறுக டுக்கை கரந்தை
x வாசுகி யைப்புனை நம்பர் தருசேயே-

o மாவலி யைச்சிறை மண்ட ஒரடி யொட்டிய ளந்து
வாளி பரப்பியி லங்கை யரசானேன் ;

மேல்முடி பத்தும ரிந்து தோளிரு பத்தும ரிந்து
வீரமி குத்தமு குந்தன் மருகோனே-

மேவுதி ருத்தணி செந்தில் நீள்பழ நிக்குளு கந்து
வேதவ னத்தில மர்ந்த பெருமாளே. (௩)

---

* மேருவின் பெருமையைக் கந்தபுராணம் விந்தகிரிப்படலம் பாடல்கள் 3-7 பார்க்க.

† நூல் வல் மலர்—தாமரை. ‡ துண்டம்—முகம்.

x வாசுகி, ஆதிசேடன் இவைகளைச் சிவபிரான் அணிவதாகப் புராணங்கள் கூறும்—

'வாயு வான பஞ்சடைத்துத் திருமால் துயிலும் மலரணையே
யாய விடமாம் யாக்கையமைத் தரனு ரணியு மரும்பணியே
தாய ருதர மெனவுலகைத் தலையிற் சுமையாத் தரிப்போனே
தூய பொருளே உனக்குநிகர் உளரோ உலகிற் சொல்லாயே.

— தேவர்கள் ஆதிசேடனைத் துதித்தது — (செவ்வந்திப்புராணம்—திருமலை-30).

[தொடர்ச்சி 475 ஆம் பக்கம்]

845.

நூலுக்கு ஒப்பான இடை, தேருக்கு ஒப்பான அல்குல், சிலம்பு அணிந்த பாதங்கள் இவைகளாலும்

[நூல்திசை] நூல்கள் மூலமாகத் திசைகளிற் புகழ்பெற்ற தகுதிவாய்ந்த [அல்லது [நூறு இசை] நூற்றுக்கணக்கான [மிகுந்த] இசைபெற்ற கீர்த்திபெற்ற தகுதிவாய்ந்த] மேருமலையை ஒத்த கொங்கைகள், தாமரைமலரை ஒத்த முகம் அவைகளாலும்

சேல்மீனை ஒத்து நிற்கும் கண்களாலும் [ஆடவர்களை] அழைக்கின்ற பெண்களின் தேன்போல் இனிக்கும் வாயிதழைப் பற்றி அனுபவிக்கின்ற ஒரு இன்ப வலையில் நான் முழுகி—

என்னுடைய ஆசாரங்கள் அனைத்தையும் ஒழியவிட்டு, காமலீலைகளிலேயே அழுந்தினவனாய், தேர்ந்து அடையத்தக்க தவநிலையை இழந்து அலைச்சல் உறுவேனோ!

பால இளம்பிறை, தும்பை, கங்கை, கொன்றை, கரந்தை [திருநீற்றுப் பச்சை] வாசுகி என்னும் பாம்பு இவைகளை அணிந்துள்ள சிவபெருமான் பெற்ற குழந்தையே!

மகாபலிச் சக்கரவர்த்தி [பாதலத்தில்] சிறையில் ஒடுங்க, ஓரடியால் [ஒட்டி] பேசின பேச்சின்படி — வாக்குதத்தத்தின்படி, அளவிட்டும், அம்பைச் செலுத்தி இலங்கை அரசனை இராவணன்

[இராவணன்மேல் [வர்ளி பரப்பி] அம்பைச் செலுத்தி அவன் தலை பத்தையும் அரிந்தும், அவன் தோள இருபதையும் அரிந்தும், வீரம் மிக்குநின்ற திருமாலின் மருகனே!

விரும்பத்தக்க திருத்தணிகை, திருச்செந்தூர், பெரிய பழநி, இம் மூன்று தலங்களிலும் ப்ரீதிகொண்டு **வேதாரண்யத்தில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(தவத்தை யிழந்து திரிவேனோ)

"ஆனவாசுகி அன்றற வின்றும் ஞானமேனியர் மேனியனுக்கந் தானுறைந்திடு தன்மைய தாமே"-திருவொற்றியூர் புரா.-வாசுகி-37.

○ **மாவலியைச் சிறையிட்டது**—பாடல் 268-பக்கம் 166கீழ்க்குறிப்பு.

*845—1 நுதி

தானதனத் தான தந்த தானதனத் தான தந்த
தானதனத் தான தந்த தனதான

காதலுடைத் தாகி யன்று ஆரணியத் தேந டந்து
கானவர்பொற் பாவை கொங்கை அணைவோனே!

கோதில்தமிழ்க் கான†கும்ப மாமுனிவற் காம ணஞ்செய்
கோலமளித் தாளு‡மும்பர்... xமுருகோனே!

oகோகனகத் தான்வ ணங்கி...........
கோடிமறைக் காட மர்ந்த பெருமாளே! (ந-1)

கோடி (குழகர் கோயில்.)

[இது வேதாரணியம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த அகத்தியான்பள்ளி ஸ்டேஷனுக்குத் தெற்கு 5-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

---

* முழுப்பாடல் கிட்டாமல் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. வாக்கு அருமையாயுள்ளது; படித்து மகிழத்தக்கது. ஆதலின் இங்கு இப் பகுதி வெளியாகின்றது.

† இப் பகுதியில் வேதாரணியத்திற் சிவபிரான் அகத்தியர்க்குத் திருமணக்கோல தரிசனந் தந்த சரிதம் விளக்கப்பட்டுள்ளது.

சிவபிரான்—பார்வதி—இவர்தம் திருமணக் கோலத்தைக் காண முநிவர் தேவராதியோர் இமயமலையிற் கூடிய காரணத்தால் வடபால் தாழத் தென்பால் உயர்ந்திட்டது; பூவுலகைச் சமன் செய்யச் சிவன் அகத்தியரைத் 'தென்திசைக் கேகுக — வையம் நிலைபெறும்' என்றார்; அகத்தியர் 'ஐயனே! உனது மணவாளக் கோலத்தைக் காணாது எங்ஙனம் ஏகுவேன்' எனச், சிவபிரான் 'நீ செல்லுக: நீ இருக்கும் இடத்துக்கு வந்து நாம் மணவாளக் கோலம் காட்டுவோம்' என்றார். அங்ஙனமே அகத்தியர் செல்ல, அகத்தியர்க்குச் சிவபிரான் வேதாரணியத்தில் தனது மணவாளக் கோலத்தைக் காட்டினர்—என்பது புராண வரலாறு.

(தொடர்ச்சி-பக்கம் 477 பார்க்க)

845 — 1.

அன்பு பூண்டவனாகி — முன்பொருகாலத்தில் — (வள்ளிமலைக்) காடுகளிலே நடந்து, வேடர்கள் பெற்ற அழகிய நங்கை வள்ளியின் கொங்கையை அணைந்தவனே!

குற்றமில்லாத தமிழில் விருப்பம் நிறைந்த அகத்திய முனிவருக்காகத் தனது திருமணக் கோலக்காட்சியைத் தந்து அவரை ஆட்கொண்ட சிவபிரானது குழந்தையே!

பிரமன் வணங்கி......................கோடி என்னும் தலத்திற்கடுத்த வேதாரணியத்தில் அமர்ந்த பெருமாளே!

"சிந்தைய தழுங்க லின்றித் தென்மலைச் சேறி அங்கண்
வந்துநம் வதுவைக் காட்சி வழங்குதும் மகிழ்ந்து காண்டி"
—கந்தபுராணம் 1-10-59.

"என்னையோர் பொருளாய் வந்திங் கியன்மண வாளக் கோலந்
தன்னையின் றெனக் களித்த தாணுவே போற்றி திங்கள்
மன்னுசெஞ் சடையாய்போற்றி மறைதொழு மணாளா போற்றி
நன்னுதல் பாகா போற்றி நாதனே போற்றி யென்று
தாளில் வீழ கும்ப மீன்றோன் தனையுகந் தெடுத்து நாதன்" ...
—வேதாரணிய புராணம் (பரஞ்சோதி) மணவாள-63-4.

‡ உம்பர்—தேவராகிய சிவபிரான்.

x முருகோனே—குழந்தையே! இப் பொருளில் இச் சொல்லை அருணகிரியார் ஆள்வது வழக்கம்.
—பாடல் 93, பக்கம் 98 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

o கோகனத்தான்—பிரமன். பிரமன் பூசித்தது:

தான் படைத்த அழகி திலோத்தமையைக் கூடினதால் பிரமன் படைக்கும் ஆற்றலை இழந்தான்: வேதாரணியத்தில் சிவபிரானைப் பூசித்து அந்தத் தோஷம் நீங்கிப் படைக்கும் ஆற்றலையும் பிரமன் பெற்றான்—

"பெற்ற நன்மகள்தன் சாயற் பெருநலன் நுகர்ந்த வாற்றால்
அற்றறி வடங்கி மூட மாகியே அவலங் கூர்ந்து
மற்றறிதற் கென்கொல் சாந்தி என அவன் மதித்து முன்னும்
கற்றவன் சிருட்டி வேத வனத்தெனக் கருத்திற் கொண்டான்.
அரன்பாதம் போற்றித், துனியுறு தீமைநீங்கித் தோற்றமார்
தொழிலும் மேவி, இனிதென இருக்கை மேவி இன்பமுற்
றமர்ந்தா னன்றே"
—வேதாரணிய புராணம்—அகோரதேவர்—பிரமதீர்த்த-12, 17.

846. முருகா என

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தனதான

நீலமுகி லானகுழ லானமட வார்கள்தன
நேயமதி லேதினமு முழலாமல்-
நீடுபுவி யாசைபொரு ளாசைமரு ளாகியலை
நீரிலுழல் மீனதென முயலாமற் ;
காலனது *நா†வரவ வாயிலிடு தேரையென
காயமரு வாவிவிழ அணுகாமுன்-

* நா—வார்த்தை—'நம்பி நாவினுள் உலக மெல்லாம் நடக்கும்'
—சிந்தாமணி 316.

இங்கு வார்த்தை என்பது காலன் வைது உயிரை இழுத்துச் செல்லும் வார்த்தைகள்; அத்தகைய வைதற்சொற்கள் அணுகாமுன்- அருள் தாராய் என்றார்; காலன் திட்டுகின்ற—வைதற் சொற்களை பின்வரும் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகளின் பாடலிற் பரக்கக் காணலாம் :—

" என்ன செய்குவாய் மனமே—நாளை
எமனிடத்தில்—நீ என்ன செய்குவாய் மனமே !
நாளைக்—கறுத்த உருவமும் பருத்த உடலமும்
கனலைப்போல விழியும் தனதில்லாத மொழியும்
கண்டவ ரஞ்சிடு பாசமும்—இரு
தண்டகமாகிய சூலமும்—ஈட்டுக்
கருநிற மாகிய எருமைக் கடாவினில் ஏறி
ஒரு இமைப் பொழுதினிற் பெருவரை போலவே சீறிக்
கால தூதருடன் கூடியே—இந்த ஞாலந் தனிலே உன்னைத் தேடியே
கண்டு, அடியார்க்குத் தொண்டு, செய்யாமல் நித்தம் உண்டு,
உறக்கம் கொண்டு, பெண்டு பிள்ளைக் குழைக்கும் பேயே ! அட நாயே!
என்று கட்டிக் கரமதனல் கிட்டிச் சிரசுதனில்
குட்டித், திறமாகவே திட்டி, உலகுதனில்
ஒட்டிக் கிரட்டி யாகிய வட்டி வாங்கிப் பையில் கொட்டி,
அதை இருப்புப் பெட்டி தனிலே வைத்துக்
கெட்டி செய் திட்டு வைத்த மட்டி !

(தொடர்ச்சி 479-ஆம் பக்கம்)

கோடி (குழகர் கோயில்)

846.

கரியமேகம் போன்ற கூந்தலைக்கொண்ட மாதர்களின் கொங்கைமேலுள்ள ஆசையிலே நான் நாள்தோறும் அலைச்சல் உருமலும்,

நீண்ட (பெரிய) புவியாசை — உலக ஆசை, மண்ணுசை, பொருளாசை — பொருள்களின் மேலுள்ள ஆசை — பொன்னுசை, இவற்றில் மயக்கங்கொண்டு, அலை மிகுந்த கடல் நீரின் நடுவே அலைச்சலுறுகின்ற மீனைப்போல உழலும் பொருட்டு முயற்சி செய்யாமல்,

(காலனது நா) காலனது (என்னை விரட்டும்) பேச்சு என்கின்ற பாம்பின் வாயினுள் அகப்பட்ட தேரைபோல, (நான் கலங்க, காயம் மருவு ஆவி விழ—இவ்வுடலில் பொருந்தியுள்ள உயிரானது உடலை விட்டு நீங்கி அவன் கையிற் சிக்கி விழும்படி காலன் நெருங்கிவரும் முன்பு, (அல்லது — காலனுடைய நாவாகிய பாம்பின்வாயில் அகப்பட்ட தேரைபோல, (இந்த) உடலிலுள்ள உயிரானது அவன் கையில் அகப்பட்டு விழும்படி அந்தக் காலன் எனை அணுகுவதற்கு முன்பாக—)

அட ! **காசா**சை பிடித்த **பிசாசே**—நீ—எறித்திரி
கரிகள் எங்கே! பெரும் **பரிகள்** எங்கே!
தந்தக் **கட்டில்** எங்கே! தங்கத் **தொட்டில்** எங்கே!
பவுன் காசும் எங்கே! கொண்ட காத லெங்கே!
உத்தியோகம் எங்கே! வியாபாரம் எங்கே!
துறைத்தனமும் எங்கே! அதைக் காட்டு!
அரைக்கா சளவாகிலும் தாசருக் கீயாத **கருமீ**!
மிக்க **வறுமீ**!—கொண்ட கன்னி யிருக்கத்
தாசி தன்னிடைச் சுகித்த**சண்டாளா**!—என்றும்
கருத்திற் சிவநாமத்தைத் துதித்திடாமல்—வீண்
பொழுதைப் போக்குகின்ற **கழுதை**! எங்கள்
கடவுளைத் துதியாத **மடையா**! வா! எனத்தானே உதையானே!
—என்ன செய்குவாய் மனமே—நாளை
எமனிடத்தில்—நீ என்ன செய்குவாய் மனமே!"

[தொடர்ச்சி 480 ஆம் பக்கம் பார்க்க.]

*காதலுட னேதுமடி யார்களுட னடியொரு
காலமுருக வேளெனவு மருள்தாராய்;
சோலைபரண் மீதுநிழ லாகதினை காவல்புரி
தோகைகுற மாதினுட னுறவாடிச்-
சோரனென நாடிவரு வார்கள்வன †வேடர்விழ
சோதிகதிர் வேலுருவு மயில்வீரா;
கோல‡வழல் நீறுபுனை யாதிசரு வேசரொடு
கூடிவிளை யாடுமுமை தருசேயே-
x கோடுமுக வானைபிற கானதுணை வாகுழகர்
கோடிநகர் மேவிவளர் பெருமாளே. (க)

திருப்பெருந்துறை.

[இது அறந்தாங்கி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 8-மைல். தேவார வைப்பு ஸ்தலம். இங்கு மாணிக்கவாசக ஸ்வாமிகள் ஞானோபதேசம் பெற்றனர். இங்குச் சிவபிரானுக்குக் "குருந்த நீழற் குரு மூர்த்தி" என்னும் ஒரு திருநாமம் உண்டு; இவை "ஞானப்ரசங்கத் திருப்பெருந்துறை", "குருத்வ சங்கரர்" எனத் திருப்புகழிற் பாராட்டப்பட்டுள்ளன. ஸ்தலபுராணம் உண்டு.]

847. சடம் விட

தனத்த தந்தன தானன தந்தத்
தனத்த தந்தன தானன தந்தத்
தனத்த தந்தன தானன தந்தத் தனதான

இரத்த முஞ்°சியு மூளை யெலும்புட்
டசைப்ப சுங்குடல் நாடிபு ளைந்திட்
டிறுக்கு மண்சல விடுபு குந்திட் டதில்மேவி-

[479 ஆம் பக்கத் தொடர்ச்சி] † அரவவாயி விடுதேரையென—'பாம்பின்வாய்த் தேரையாய்'-சம்பந்தர் 2-79-6. 'பாம்பின் வாய்த் தேரைபோல'—அப்பர் 4-46-1. 'அராநுகர வாதையுறு தேரைகதி—திருப்புகழ் 207; நஞ்சு புசிதேரை—திருப்புகழ் 62.

° இந்த நாலாவது அடி மனப்பாடம் செய்யத்தக்கது.

† வேடர் விழ வேலேவிய விஷயத்தை விஜயமங்கலத்துக் குரிய பாடல்-940-ஏழாவது அடியிலுங் காண்க—பாடல் 341-பக்கம் 354, பாடல்-344, பக்கம் 362, 363 கீழ்க்குறிப்புக்களைப் பார்க்க.

‡ அழல் நீறு—"பூசும் சுடுநீறு"—"வெங்கனல் வெண்ணீறு" —சம்பந்தர்-1-85-6, 3-102-5.

[தொடர்ச்சி 481 ஆம் பக்கம்.]

அன்புடன் (உன்னை) ஓதுகின்ற அடியார்களுடன் விரும்பி, ஒரு முறையாவது "முருகவேள்" என்று நான் புகழுமாறு நின் திருவருளைத் தந்தருளுக.

(வள்ளிமலைக் காட்டிலுள்ள) சோலை மரங்கள் (தினைப்புனத்திலுள்ள) பரண்மீது நிழல்தரத் தினைப் பயிர்களைக் காவல்செய்துவந்த, மயில்போன்ற சாயலையுடைய, குறமகளாம் வள்ளியுடன் உறவு கொண்டாடி (நீ வள்ளியைக் கொண்டுசெல்ல)

கள்வன் என்று உன்னைத்தேடி வந்தவர்களான காட்டு வேடர்களெல்லாம் மாண்டுவிழ மிக்க ஒளி வீசும் வேலாயுதத்தைச் செலுத்தின மயில் வீரனே!

அழகுள்ளதும், (வினைகளை அழிப்பதில்) நெருப்புப் போன்றதுமான (அல்லது — பசுவின் சாணத்தை நெருப்பிலிட்டுச் சுட்டெடுக்கப்படும்) திருநீற்றை அணிந்துள்ள ஆதிப்பிரானும், எல்லாவற்றிற்கும் ஈசனுமான சிவபெருமானொடு கூடி விளையாடுகின்ற உமையம்மை பெற்ற குழந்தையே!

தந்தத்தை முகத்திற்கொண்ட (ஆனை) கணபதிக்குப் பின்வந்த துணைவனே! (தம்பியே)! குழகர் என்னும் திருநாமத்துடன் சிவபிரான் வீற்றிருக்கும் கோடி என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருக்கும் பெருமாளே!

(முருகவே ளெனவும் அருள் தாராய்)

திருப்பெருந்துறை

847

ரத்தமும், சீயும் (சீழும்), மூளை, எலும்பு, உள்ளே உள்ள (தசை) மாமிசம், பசிய குடல், நாடிகள் இவைகள் கொண்டு யாக்கப்பட்டு — கட்டப்பட்டு, (இறுக்கு) அழுத்தமாய்க் கட்டப்பட்டுள்ள மண்ணாலும், நீராலும் ஆன (வீட்டில்) உடலில் நுழைவு பெற்று, அதில் இருந்து—

---

x "கோடுமுக வானைபிற கானமயி லாசுருதி
கோடிவனம் வாழிளைய பெருமாளே"—எனவும்,
"கோடுமுக வானைபிற கானதுணை வாசுருதி
கூர் திருநெல் வேலியுறை பெருமாளே" எனவும் பாட பேதங்க ளுள்ளன. o சியும்—சீயும்.

இதத்து டன்புகல் சூதுமி குந்திட்
டகைத்தி டும்பொரு ளாசையெ னும்புட்
டெருட்ட வுந்தெளி யாதுப றந்திட் டிட*மாயா ;

பிரத்தம் வந்தடு வாதசு ரம்பித்
துளைப்பு டன்பல வாயுவு மிஞ்சிப்
பெலத்தை யுஞ்சில நாளுளொ டுங்கித்†தடிமேலாய்ப்-

பிடித்தி டும்பல நாள்கொடு மந்திக்
குலத்தெ னும்படி கூனிய டங்கிப்
‡பிசக்கு வந்திடு போதுபி னஞ்சிச் சடமாமோ ;

தரித்த னந்தன தானன தந்தத்
திமித்தி மிந்திமி தீதக திந்தத்
தடுட்டு டுண்டுடு டுடுடி மிண்டிட் டியல்தாளம்-

தனத்த குந்தகு தானன தந்தக்
கொதித்து வந்திடு சூருடல் சிந்தச்
சலத்து டன்கிரி தூள்படெ றிந்திட் டிடும்வேலா ;

சிரத்து டன்கர மேடுபொ ழிந்திட்
டிரைத்து வந்தம ரோர்கள் படிந்துச்
xசிரத்தி னுங்கமழ் மாலைம ணம்பொற் சரணோனே-

---

* மாயா பிரத்தம் வந்து-மாயை அதிகரித்து.

† 'தடிகொண்டு குரங்கெனவே நடந்து'
—பாடல் 554-பக்கம் 262.

‡ பிசகு—மரணம் (இடக்காடக்கல்).

x தேவர்கள் வணங்குவதால் அவர்களுடைய தலைமாலைகளின் மணம் முருகவேளின் திருவடிகளில் மணப்பது :
—பாடல் 513-பக்கம் 312.

"சுரர்மாமுடி...கமழும் கழலே"—கந்தரநுபூதி-44.

இன்பகரமாய்ப் பேசும் சூதான மொழிகள் மிகுதியாய் (அகைத்திடும்) கிளைத்து எழுகின்ற பொருளாசை என்கின்ற பறவை, பிறர் தெளிவு பெறச் சொன்னாலும்—அறிவுறுத்தினாலும் — தெளியாமல், மேலும் மேலும் பறப்பதாயிருக்க—பிரபஞ்சமாயை என்பது—

அதிகரித்து வந்து, உண்டாகின்ற வாதம், சுரம், பித்தம் இவைகளின் (உளைப்புடன்) வருத்துதலோடு—இவைகள் செய்யும் வேதனைகளுடன் — பலவகைய வாயுக்களும் அதிகரித்து, இருக்கின்ற பலத்தைச் சில நாள்களுக்குள் ஒடுக்கித், தடிமேல் கை ஊன்றுவதாய்ப்—

பிடித்து நடப்பதான பல நாள்கள் செல்ல, குரங்குக் கூட்டத்தவன் இவன் என்று சொல்லும்படியாக, உடல் கூனி, (சத்துக்கள்) அடங்கி, (இறுதியாக) பிசக்கு—பிசகு—அழிவு வந்திடும் சமயத்தில், (தைரியத்தை இழந்து) பின்பு அஞ்சுவதான இந்த (உடல்) தேகம் ஆமோ! (பிறவி வேண்டாம் என்றபடி)

தரித்த னந்தன...டுடுடி மிண்டிட் என ஒலிக்கின்ற தாளத்துடன்

தனத்த குந்தகு தானன தந்தக் கென்று கோபித்து எழுந்து வந்த சூரனுடைய உடல் அழியவும், (சலத்துடன்) கடல் வற்றிப்போவதுடன், (அல்லது நடுக்கத்துடன்) எழுகிரி, கிரௌஞ்சம் பொடிபடவும் செலுத்தி நின்ற வேலாயுதனே!

தலையுடன் (தலை வணக்கத்துடன்) கரம்—கையானது, ஏடு—மலர் ஏடுகளை (மலர்களை)ப் பொழிந்து, (இரைத்து வந்து) போற்றிசெய்யும் ஒலியுடன் வந்து தேவர்கள் (உன்னை) வணங்குவதால் அவர்களுடைய தலையில் மணக்கின்ற மாலைகளின் நறுமணத்தைப்பெற்ற அழகிய திருவடிகளை உடையவனே!

செகத்தி னின்குரு வாகிய தந்தைக்
*களித்தி டுங்குரு †ஞானப்ர சங்கத்
திருப்பெ ருந்துறை மேவிய கந்தப் பெருமாளே. (க)

848. பிறவி யற

தனத்தனந் தனதன தனத்தனந் தனதன
தனத்தனந் தனதன தனதான

‡வரித்தகுங் குமமணி xமுலைக்குரும் பையர்மன
மகிழ்ச்சிகொண் டிடஅதி விதமான-
வளைக்கரங் களிநெடு வளைத்திதம் படவுடன்
மயக்கவந் ததிலறி வழியாத;
கருத்தழிந் திடஇரு கயற்கணும் புரள்தர
களிப்புடன் களிதரு மடமாதர்-
கருப்பெருங் கடலது கடக்கவுன் திருவடி
களைத்தருந் திருவுள மினியாமோ;
பொருப்பகம் பொடிபட அரக்கர்தம் பதியொடு
புகைப்பரந் தெரியெழ விடும்வேலா-

---

* சிவனுக்கு உபதேசகுரு—பாடல் 327-பக்கம் 314.

† ஞான ப்ரசங்கம்—

மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றபோது (பாடல் 439-பக்கம் 601) திருப்பெருந்துறையில் சிவனே குருமூர்த்தியாக இருந்து அடியார்களுக்கு ஞானோபதேசம் செய்வதைக் கண்டு காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்புபோல இழுக்கப்பட்டுத் தாமும் அவ் வடியாரோடிருந்து உபதேசம் பெற்றனர்: அதனால் 'ஞானப்ரசங்கத் திருப்பெருந்துறை' எனப்பட்டது.

"பரிந்து மாணவர்கள் சூழப் பத்தனுர் வரவு பார்த்துப்
பெருந்துறைக் குருந்த நீழல் இருந்தனன் பெரிய ஆசான்"
"நோக்கினல் பாவகத்தால் நுவலரும் பரிசனத்தால்
காக்குமீ னுடலடக்கங் கமடமொண் பறவை யென்ன
ஆக்கினன் ஆக்கு முன்னர் அடைந்தது பரம ஞானம்
வாக்கில்நா மடந்தை சேர்ந்தாள் அகன்றன மலங்கள் மூன்றும்"
—திருவாலவாயுடை-27-(44-48)

[தொடர்ச்சி 485-ஆம் பக்கம் பார்க்க.]

உலகுக்கெல்லாம் குருவாய் விளங்கும் உனது தந்தைக்கு (உபதேசம்) அளித்த குருவே! உன் தந்தையார்—(சிவபிரான்) அடியார் கூட்டத்துக்கு—ஞானப் பிரசங்கம் செய்த இடமாகிய **திருப்பெருந்துறையில்** விரும்பி வீற்றிருக்கும் பெருமாளே!

(இச் சடமாமோ)

848.

(வரித்த) தொய்யில் எழுதப்பட்டதும் (அல்லது—சந்தனக்கலவை பூசப்பட்டதும்) குங்குமத்தை அணிந்ததுமான (முலைக் குரும்பையர்) குரும்பை முலையர்—தென்னங் குரும்பை யொத்த கொங்கையர் மனமகிழ்ச்சி கொள்ளுமாறு பல வகையான

வளையல்கள் அணிந்துள்ள (தமது) கரங்களால் (ஆடவர்களை) வசீகரித்து இழுத்து, (இதம்பட உடல்) வந்தவர்கள் உடலில் இன்பம் ஊறுமாறு, காம மயக்கத்தை ஊட்டும் செய்கைகளால், (சாதாரணமாய் அறிவு அழியாத—

கருத்தும் அழிவுபெற, இரண்டு கயல்மீன் போன்ற கண்களும் புரளச், சந்தோஷத்துடனே மகிழ்ச்சியைத் தருகின்ற இளவயதுள்ள மாதர்களால் (ஏற்படுகின்ற)

(கரு) பிறவி என்கின்ற பெருங்கடலைத் தாண்டுதற்கு உன்னுடைய திருவடிகளை (அடியேனுக்குத்) தருதற்கு (உனது) திருவுள்ளம் இனியேனும் கூடுமோ!

கிரவுஞ்சத்தின் உள்ளிடம் பொடிபடவும், அரக்கர்கள் தாமிருந்த ஊர்களுடன் புகை பரந்த எரியிற் பட்டழியவும் செலுத்தின வேலனே!

[பக்கம் 484 தொடர்ச்சி.]

‡ வரித்த—(தொய்யில் எழுதப்பட்ட)—தொய்யில் — மகளிர் தனங்களில் சந்தனக் குழம்பால் எழுதுங் கோலம் (பிங்கலம்).

"வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை"—சிந்தாமணி 2532.

"முலைமுதல் முற்றத்து வரித்த சாந்தின் வண்ணம்"

—பெருங்கதை 1-46-225.

—திருப்புகழ் பாடல் 665-பக்கம் 25 கீழ்க்குறிப்பையும் பார்க்க.

x "குரும்பை முலைமலர்க் குழலி"—சுந்தரர் 7-16-1.

புகழ்ப்பெருங் கடவுளர் களித்திடும் படிபுவி
பொறுத்த*மந் தரகிரி கடலூடே;

திரித்தகொண் டலு†மொரு மறுப்பெறுஞ் சதுமுக
திருட்டியெண் கணன்முத லடிபேணத்-

‡ திருக்குருந் தடியமர் xகுருத்வசங் கரரொ்டு
திருப்பெருந் துறையுறை பெருமாளே. (உ)

849. மாதர்மீது மயக்கு அற

தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன
தனன தந்தனந் தனதன தனதன தனதான

முகர வண்டெழுங் கருமுகி லலையவு
முதிய நஞ்சுமிழ்ந் தயில்விழி குவியவு
முகிள சந்திரன் பொருநுதல் வெயரவு மமுதூறும்-

முருகு தங்குசெந் துகிரிதழ் தெரியவு
மருவு சங்கநின் றொலிகொடு பதறவு
முழுது மன்புதந் தமளியி னுதவிய அநுராகச்;

oசிகர கும்பகுங் குமபுள கிததன
மிருபு யம்புதைந் திட**நடு விடை வெளி
தெரிய வின்றியொன் றிடவுயி ருயிருட னுறமேவித்-

திமிர கங்குலின் புதவிடு மவசர
நினைவு நெஞ்சினின் றறவவர் முகமது
தெரிச னஞ்செயும் பரிவற இனியருள் புரிவாயே;

---

* "மந்தராசலம் கடலிலே சுழன்றது மறுகி"
—செவ்வந்திப் புராணம் திருமலை-51.

† ஒருமறு—இறைவனை இகழ்ந்ததால் ஐந்து தலைகளுள் ஒருதலை கிள்ளப்பட்டுள்ள மறு—பாடல் 285 பக்கம் 209-கீழ்க்குறிப்பு.

‡ குருந்தமரம்— திருப்பெருந்துறையில் "கொழுமலர்ச் சோலைத் திருப்பெருந்துறையிற் குருந்தடி யிருந்தருள் பரனே"
—திருப்பெருந்துறைப் புராணம்—உபதேச-70.

x குருத்வ சங்கரர்—பாடல் 847-பக்கம் 484 குறிப்பு.

o சிகரம்—மலை.

** நடு இடைவெளி தெரியாதவாறு ஒன்றிடல் (அணைந்து சேருதல்)—
"தோளுந் தாளும் பிணைந்துருவொன் றெய்தி
நாளு நாகர் நுகர்ச்சி நலத்தரோ"—சிந்தாமணி 1347.

புகழ் மிகுந்த பெரிய (கடவுளர்) தேவர்கள் மகிழும்படி, பூமியைத் தாங்கும் மந்தரகிரியைக் கடலிடையே—

(மத்தாகச்) சுழலச் செய்த மேகநிறத்துத் திருமாலும், ஒரு (மாசு) குறையைப் பெற்ற (தனக்கிருந்த ஐந்து தலையில் ஒரு தலையை இழந்த குறையைப் பெற்ற) நான்கு முகங்களிலும் பார்வைகொண்ட எட்டுக் கண்ணனும் பிரமன் முதலான தேவர்கள் தமது பாதத்தை விரும்பிப் போற்ற—

திருக் குருந்த மரத்து அடியில் வீற்றிருந்தருளின குருமூர்த்தியாம் சங்கரருடனே **திருப்பெருந்துறை** எனனும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(கருக்...கடலது கடக்கத்...திருவுளம் இனியாமோ)

849.

ஒலிசெயும் வண்டுகள் (மலர் மணத்தேனை மோந்து உண்ணவந்த வண்டுகள்) எழுந்து மொய்க்கும் கரிய கூந்தல் அலைச்சல் உறவும், பெரு விஷத்தை உமிழ்கின்ற வேல்போன்ற கண்கள் குவியவும், அரும்பி மலரும் பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியில் வெயர்வு எழவும், இதழ் ஊறலாம் அமுது ஊறுகின்ற—

நறுமணம் தங்கும் செவ்விய பவளம்போன்ற வாயிதழ் தெரியவும், பொருந்திய சங்குபோன்ற கண்டம் (கழுத்திலிருந்து) வெளிப்படும் புட்குரல் ஒலியுடன் பதட்டம் உறவும், முழு அன்பையும் தந்து படுக்கையிற் காட்டின காமபபற்றுக் கிடமானதும்,

(சிகரம்) மலை போன்றதும், குடம் போன்றதும், குங்குமம் பூசியுள்ளதும், புளகாங்கிதம் கொண்டதுமான கொங்கைகள் இரண்டு புயங்களிலும் அழுந்திட, மத்தியிலே வெளியிடம் தெரியாத வண்ணம், ஒருவரை ஒருவர் இறுக் அணைந்திட, உயிரும் உயிரும் கலந்து பொருந்தக் கூடி—

இருண்ட இரவில் (இன்பு உதவிடும்) கலவி இன்பத்தைத் தந்து உதவும் (அவசர நினைவு) சமயங்களின் ஞாபகம் நெஞ்சிலிருந்து ஒழிந்துபோக, (அம் மாதர்களின்) முகதரிசனத்தைச் செய்ய விரும்பும் அன்பு ஒழிந்துபோக, இனி எனக்கு அருள்புரிவாயாக,

மகர நின்றதெண் டிரைபொரு கணை*கடல்
மறுகி யஞ்சிவந் தடிதொழு திடவொரு
வடிகொள் செஞ்சரந் தொடுபவ னிருபது புயவீரன்-

மடிய வங்குசென் றவனொரு பதுமுடி
முடிய முன்புமண் டமர்பொரு தமர்†நிழல்
மதிலி லங்கையும் பொடிபட அருளரி மருகோனே;

நிகரி லண்டமெண் டிசைகளு மகிழ்வுற
விரகு கொண்டுநின் றழகுறு மயில்மிசை
நினைவி னுந்தியம் புவிதனை வலம்வரு மிளையோனே-

நிலவ ரும்புதண் டரளமு மிளிரொளிர்
பவள மும்பொரும் பழனமு மழகுற
நிழல் குருந்தமுஞ் செறிதுறை வளர்வுறு பெருமாளே. (ரு)

திருத்துருத்தி.

[திருத்துருத்தி என்பது குற்றாலம். ரெயில்வே ஸ்டேஷன். மாயூரத்துக்குத் தென்மேற்கு 5½-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

850. திருவடியை நேசிக்க

தனத் தனத்தன தானன தானன
தனத் தனத்தன தானன தானன
தனத் தனத்தன தானன தானன தனதான

மலைக் கனத்தென மார்பினி லேயிரு
முலைக் கனத்துற வேயிடை நூலென
‡வளைத்து குப்பமை யார்குழல் தோளொடும் xஅலைமோத-

மயிற் குலத்தவ ராமென நீள்கலை
நெகிழ்த்து வித்திரு வார்விழி வேல்கொடு
மயக்கி நத்தினர் மேல்மறு பாடும விழியேவி;

---

* கடல் (வருணன்) அஞ்சி வரும்படி கடல்மீது அம்பு எவினது —பாடல் 177-பக்கம் 412 கீழ்க்குறிப்பு

† இராவணனுடைய ஆணைக்கு அஞ்சிச் சூரியன் இலங்கையிற் புகமுடியா திருந்தானதலின் 'நிழல் மதில் இலங்கை'—என்றார் எனலுமாம்—பாடல் 426-பக்கம் 572-கீழ்க்குறிப்பு.

‡ வளைத்து உகுப்ப—வளைத்துவிட.

x குழல் அலைமோத—பாடல் 754-முதலடி.

மகர மீன்கள் உள்ள தெள்ளிய திரைகள் மோதும் ஒலிகடல் (வருணன்) கலக்கத்துடன் பயந்து (தனது) திருவடியில் தொழுது வணங்கும்படி ஒரு கூர்மையான செவ்விய அம்பைச் செலுத்தினவனும், இருபது புயங்களைக் கொண்ட வீரன் (ராவணன்)

இறக்கும்படி (அங்கு) இலங்கைக்குப் போய் அவனுடைய ஒரு பத்து தலைகளும் அழிபட, முன்பு நெருங்கின போரைச் செய்து (அமர்நிழல்—நிழல் அமர்) ஒளி பொருந்திய மதில் சூழ்ந்த இலங்கை நகர் பொடிபட அருளினவனுமான திருமாலின் மருகனே!

நிகர்இல்—ஒப்பிலாத—சிறந்த அண்டங்களிலும் எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள் மகிழ்ச்சிகொள்ள, சாமர்த்தியத்துடன், ஏறி நின்று அழகு பொருந்திய மயிலை மனோவேகத்தினும் அதிவேகமாகச் செலுத்தி (அம்புவிதனை) (அழகிய) பூலோகத்தை வலம்வந்த இளையோனே!

நிலவொளிபோல வெள்ளொளி வீசும் குளிர்ந்த முத்துக்களும் விளங்கி ஒளிதரும் பவளமும் கலந்து இலங்கும் வயல்கள் அழகுதர, நிழல்தரும் குருந்தமரம் நிறைந்த (துறை) இடமாகிய **திருப்பெருந்துறையில்** விளங்கி வீற்றிருக்கும் பெருமாளே!

(அருள் புரிவாயே)

திருத்துருத்தி
850

மலைப்பாரம் போல மார்பில் இரண்டு கொங்கைகளும் பாரத்தைத் தருவதால், இடையானது நூலென்னும்படி வளைவுபெற, கருமை நிறைந்த கூந்தலானது தோள்மேலே அலை வீசுவதுபோலப் புரள,—

மயிற் பறவையின் கூட்டத்தவர்கள் போலப் பெரிய (தமது) ஆடைகளை நெகிழ்த்துவித்து—தளர்த்திவைத்து, இரண்டு நீண்ட கண்கள் என்னும் வேல்கொண்டு மயக்குவித்துத் (தம்மை) விரும்பி வந்தவர் மேல் (மறு) குற்றங்களை (பாடும்) கூறுவது போன்ற (அல்லது) (மறுபாடும்) மறுபடியும் (அல்லது) மாறுபாடுள்ள—பகைமை உள்ள) அந்தக் கண்களைச் செலுத்தி—

விலைக் கெனத்தன மாயிர மாயிர
முலைக்க ளப்பினு மாசைபொ தாதென
வெறுப்பர் குத்திர காரியர் வேசையர் மயல்மேலாய்-

*வெடுக் கெடுத்தும காபிணி மேலிட
முடக்கி வெட்கு மதாமத வீணனை
மினற் பொலிப்பத மோடுற வேயருள் புரிவாயே ;

அலைக் கடுத்த சுரார் பதி கோவென
விடப் பணச்சிர மாயிர சேடனும்
அதிர்த்தி டக்கதிர் வேல்விடு சேவக மயில்வீரா-

†அடைக் கலப்பொரு ளாமென நாயெனை
அழைத்து முத்திய தாமநு பூதியெ
னருட்டி ருப்புக ழோதுக வேல்மயி லருள்வோனே ;

---

* இது அருணகிரியாரின் வரலாற்றைக் குறிப்பது. அவர் ஆதியில் நோயிற்பட்டதைக் குறிக்கும். "மாதர் இருவிழியாகும் அம்புக்கும் மதனவேள் வாளிக்கும் நடுவாகியே மாலாகும் அருணகிரி"—என்றார் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழில்.

† இதுவும் அருணகிரியாரின் வரலாற்றுப்பகுதி. "இத்தலத்தில் முருகவேள் அருணகிரியாரது கனவில் தோன்றி "அன்ப! நீ எனக்கு அடைக்கலப் பொருள் ஆவாய்; அருணையிலும் (திருப்புகழ் 563), எட்டிகுடிப் பதியிலும் (திருப்புகழ் 838), பொதிய மலையிலும் (திருப்புகழ் 413) நீ விரும்பிய வண்ணம் இதோ (உன் தோளில்) நமது வேற்பொறி, மயிற் பொறியை இட்டோம். முத்தி தரவல்ல நமது அநுபூதியையும் அருள்மயமாம் நமது திருப்புகழையும் ஓதும் பணியையே நீ பணியாகக் கொள்வாயாக" என அருளி மறைந்தார். அருணகிரியாரும் விழித்தெழுந்து தமது தோளில் வேல் அடையாளம் மயில் அடையாளம் இருக்கக் கண்டு மெய் சிலிர்த்து உள்ளங் குளிர்ந்து. "முருகா! நாயனைய என்னையும் பொருட்படுத்தி அழைத்து, அடைக்கலப் பொருள்போல அருமை பாராட்டி வேற்பொறி மயிற்பொறி யிட்டனையே" என மகிழ்ந்து— ......"இறைவா! நான் வேசையர் மயலே மேலதாய், மகா பிணி மேலிட முடங்கி வெட்கமடைந்த மஹா மதவீணன்; இனி, எனக்கு அவ்வுறவு நேராதிருக்க உன் திருவடியின் உறவே உறவாகும் பாக்கியம் வேண்டும்......என வேண்டிப் பணிந்தனர்"

—(அருணகிரிநாதர் வரலாறு பக்கம் 108-109)

[தொடர்ச்சி 491 ஆம் பக்கம் பார்க்க]

கொடுக்கவேண்டிய (விலை) பொருளுக்காகத் (தனம்) பொன் ஆயிரமாயிரமாக அவர்தம் கொங்கையின் பொருட்டு அளந்து கொடுத்தாலும் அவர்கட்குள்ள ஆசையால் அவையும் போதாதென்றே வெறுப்பைக் காட்டுபவரும், வஞ்சனைச் செயலினரும் ஆன வேசையர் (விலைமாதர்களின்) (காம) மயக்கமே மேலோங்கிப் (பின்னர்)—

(வெடுக்கெடுத்து) திடீரென்று மிகக் கொடியதொரு பெருநோய் பிடிக்க ஒடுங்கி, வெட்கப்படுகின்ற, பெருத்த மதம் பிடித்த விணனாகிய நான் மின்னல்போல் ஒளி வீசுகின்ற உன்னுடைய திருவடியில் பொருந்திச் சேரவே அருள் புரிவாயாக.

கடலைப்போய் அடுத்த (கடலிலே புக்குநின்ற) (அசுரார்பதி) அசுரர் தலைவன்—சூரன் 'கோ' என்று அஞ்சி அலற, விஷமுள்ள படங்கொண்ட தலைகள் ஆயிரங் கொண்ட ஆதிசேடனும் அதிர்ச்சி உற—கலங்க, ஒளிவேலைச் செலுத்தின பராக்ரம சாலியே! மயில் வீரனே!

அடைக்கலம் வைக்கப்பட்ட பொருளைப் (பாதுகாப்பது போல) அடியேனைப் பொருட்படுத்தி) அழைத்து 'முத்தியைத் தரவல்ல திருவருட் பிரசாத ஞானத் திருப்புகழை நீ ஓதுவாயாக' எனத் திருவாய் மலர்ந்து வேல்பொறி மயிற்பொறி (வேல் அடையாளம், மயில் அடையாளம்) ஆகிய ரக்ஷைகளை அருளினவனே!

முருகவேளின் அடிமைப் பொருள் இவன் என்று இயமன் தெரிந்துகொண்டு தன்னை அணுகாதிருப்பதற்கு வேல் பொறி—மயில்பொறி கேட்கின்றார் அருணகிரியார். இவ்வாறு இடபப்பொறி, சூலப்பொறி வேண்டி அப்பர் பெருமான் சிவபிரானிடம் விண்ணப்பித்துள்ளார்.

'பொன்னார் திருவடிக்கொன் றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சை யுண்டேல் இருங்கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி, மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே"

'இடபம் பொறித்தென்னை என்று கொள்ளாய் இருஞ்சோலை திங்கள்
தடவும் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே"
—அப்பர் 4-109. 1, 10. பாடல் 413-பக்கம் 544-கீழ்க்குறிப்பு

சிலைக்கை முப்புர நீறெழ வேதிரு
வுளத்தி லற்பமெ ணுநினை தேசிகர்
சிறக்க முத்தமி ழாலொரு பாவக மருள்பர்லா-
*திருக் கடப்பலர் சூடிய வார்குழல்
குறத்தி கற்புட னேவிளை யாடியெர்ர்
திருத் துருத்தியில் வாழ்முரு காசுரர் பெருமாளே. (க)

திருவீழிமிழலை.

[இது குற்றாலத்துக்குத் தெற்கு 6-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

851. முருகா என ஓத

தனன தனன தனன தனன
தனன தனன தனதான

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி-
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல;
†ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே-
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்;
‡முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே-

---

* வள்ளியம்மைக்கும் கடப்பமலர் ப்ரீதி என்பது—'கடம்பு தொடை அரசி...வேடச் சிறுமி'
—பாடல் 636 ; பாடல் 712-பக்கம் 142 கீழ்க்குறிப்பு.

† "எனக்குத்தா யாகியாள் என்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகி யவளும் அதுவானுல் தாய் தாய்க் கொண்
டேகு மளித்திவ் வுலகு"—என்னும் நாலடியாரை நினைவூட்டுகின்றது இந்த அடி.

‡ "முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்"
—என்றார் கந்தர் அநுபூதியிலும் (15).

மேருமலையாம் வில் கையில் பிடித்தபடியே இருக்க—*அதை உபயோகப்படுத்தாது — முப்புரங்கள் தீயினால் நீறுபட்டழிய திருவுள்ளத்தில் சிறிதளவே நினைத்த தேசிகப் பெருமான் (குருமூர்த்திப் பெருமான்) பெருமை அடைய (முத்தமிழ் கொண்டு ஒப்பற்ற தியானக் கருத்துப் பொருளை (பிரணவப் பொருளை) உபதேசித்த குழந்தையே! (அல்லது முத்தமிழால் ஒப்பற்ற தியானத்துக்கும் கருத்துக்கும் உரியதான தேவாரப் பாக்களை அருளிய குழந்தையே!

அழகிய கடப்பமலர் சூடிய நீண்ட கூந்தலை உடைய குறத்தி வள்ளியின் கற்புக் குணங்களில் திளைத்து விளையாடி ஒப்பற்ற **திருத்துருத்தியில்** (குற்றாலத்தில்) வாழும் முருகனே! தேவர் பெருமாளே! (பதமோடுறவே அருள் புரிவாயே)

திருவீழிமிழலை
851.

(எருவாய்) உற்பத்திக்கு வேண்டிய எருவாய், (கருவாய்) கருப்பக் கருவாய், அதனில் நின்றும் உருவம் ஏற்பட்டு இவ் வுருவே பயிர் வளர்வதுபோல விளைவதாகி—விளைபொருளாகி—

இவர் இவர் என்று இன்று இருப்பவராய்ப் பின்பு (இறந்துபட்டு) அவர் அவர் என்று சொல்லும்படியாகி, அவர் அவர் என்று பேசப்பட்டவர் (பிறந்தபின்) இவர் இவர் என்று சொல்லும்படியாகி இங்ஙனமே ஒரு தொடர்ச்சியாய்—வெறி பிடித்ததுபோல

ஒரு தாயர், இரண்டு தாயர், பல கோடிக்கணக்கான தாய்மார்களை அடைந்தவனாய் வீணாக நான் அழிவுறாமல்—

ஒருமுறை (யேனும்) முருகா! பரமா! குமரா! எனது உயிரைக் காத்தருள் என உன்னைக் கூவி ஓதுமாறு உனது திருவருளைத் தந்தருளுக (ஏனென்றால்)

'முருகா' என ஒரே முறை ஓதுகின்ற அடியார்க்கு நீ அவர்கள் தலைமீது உனது இரண்டு திருவடிகளையும் வைத்து அருள்பவனாயிற்றே! திருவடி (தீக்ஷை செய்யும் கருணை வள்ளலாயிற்றே!)

---

* 'ஓரம்பே முப்புரம்...ஒன்றும் பெருமிகை உந்தீபற' —திருவாசகம்.

*முநிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுகு ரரமேல் விடும்வேலா ;
திருமால் பிரமா வறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே-
†செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே. (க)

திருவாவடுதுறை.

[மாயூரத்துக்கு மேற்கு 10-மைல் தூரத்திலுள்ள நாரசிங்கன் பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு $1\frac{1}{2}$-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

852. சலிப்பற

தத்ததன தான தனத்தனத் தத்த தத்த
தத்ததன தான தனத்தனத் தத்த தத்த
தத்ததன தான தனத்தனத் தத்த தத்த தனதான

‡சொற்பிழைவ ராம லுனைக்கனக் கத்துதித்து
நிற்பதுவ ராத பவக்கடத் திற்சுழற்றி
சுக்கிலவ தார வழிக்கிணக் கிக்களித்து விலைமாதர்-
துப்பிறைய தான இதழ்க்கனிக் குக்கருத்தை
வைத்துமய லாகி மனத்தைவிட் டுக்கடுத்த
துற்சனXமகாத கரைப்புவிக் குட்டழைத்த நிதிமேவு ;

---

* சூரனுக்கு அஞ்சி தேவர்கள் ஒலமிட்ட வகை :—
" நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்!
தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம் "
—கந்தபுராணம் 4-13-460, 461.

† திருவீழிமிழலை மதிலும்—பொழிலும் :
" வான் அணவு மாமதில்...வளங்கொள் பொழில்வாய்
...வீழி நகரே "—சம்பந்தர் 3-80-9.

மனப்பாடம் செய்யத்தக்க பாடல் இது: [தொடர்ச்சி 495-பக்கம்]

முநிவர்கள், தேவர்கள், முறையோ முறையோ என உன் முன்பு ஓலமிட, பழைய சூரனது மார்பின்மேல் செலுத்தின வேலனே!

திருமாலும் பிரமனும் அறியாதவராகிய சிவபிரானது மேன்மை(ச் சிறுவனே) புதல்வனே! திருமாலின் மருகனே!

செழிப்புள்ள அழகிய மதில் சூழ்ந்த அழகு நிறைந்த சோலை சூழும் திருவீழி மிழலையில் வாழும் பெருமாளே!

(முருகா, குமரா, உயிர்கா என ஓதருள் தாராய்)

திருவாவடுதுறை

852.

(‡துதிக்குஞ்) சொற்களில் பிழை ஒன்றும் வராமல் உன்னை நிரம்பத் தோத்திரம் செய்து, நிற்பது என்பதே வராத—ஓய்ந்து நிற்பது என்பதே இல்லாத—ஓயுதலின்றி மேலும் மேலும் வரும்—பிறப்பாகிய (கடத்தில்) காட்டில் சுழலுண்டு சுக்கிலம் மூலமாய் (அவதாரம் ஆகும்) பிறப்பு எடுக்கின்ற வழியில் இணங்கிப் பொருந்தி மகிழ்ச்சி பூண்டு விலைமாதர்களின்

(துப்பு இறையதான) பவளம் தங்குவதான—பவளம் போன்ற வாயிதழ் ஊறலாம் பழத்தின் ருசியில் (எனது) எண்ணத்தை வைத்து, காம மயக்கம் கொண்டு மனத்தை அந்தக் காம மயக்கத்தின் வழியே செலுத்தி, (கடுத்த) மிக்குள்ள (துற்சன) பொல்லாதவர்களான—துர்க்குணம் உடையவர்களான (மகா காதக்ர்களை) மகா கொடியவர்களை—இப் பூமியிலே வளப்பம் பொருந்தி செல்வம் நிறைந்த—

---

‡ சொற்பிழை வராத வண்ணம் பாடவேண்டும் என்பது அருணகிரியாரின் உபதேசமொழி; இங்ஙனமே எழுத்துப் பிழையும் வரக்கூடாது என்று கந்தரலங்காரத்தில் (2)—

"அயில்வேலன் கவியை அன்பால் எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்"—என உபதேசித்துள்ளார். இந்த உபதேச மொழிகளை அடியார்கள் அவசியம் பின்பற்றி நடக்கவேண்டும்.

x ம காதகரை—மகா காதகரை.

கற்பகஇ ராச னெனப்படைக் குப்பெருத்த
அர்ச்சுனந ராதி யெனக்கவிக் குட்பதித்து
கற்றறி*வி ஞவை யெடுத்தடுத் துப்படித்து மிகையாகக்-

கத்திடுமெ யாக வலிக்கலிப் பைத்தொலைத்து
கைப்பொருளி லாமை யெனைக்கலக் கப்படுத்து
கற்பனைவி டாம லலைத்திருக் கச்சலிக்க விடலாமோ;

† எற்பணிய ராவை மிதித்துவெட் டித்துவைத்து
‡பற்றியக ராவை யிழுத்துரக் கக்கிழித்து
xஎட்கரிப டாம லிதத்தபுத் திக்கதிக்கு நிலையோதி-

oஎத்தியப சாசின் முலைக்குடத் தைக்குடித்து
முற்றுயிரி லாம லடக்கிவிட் டுச்சிரித்த
யிற்கணையி ராமர் சுகித்திருக் கச்சினத்த திறல்வீரா:

**வெற்பெனம தாணி நிறுத்துருக் கிச்சமைத்து
வர்க்கமணி யாக வடித்திருத் தித்தகட்டின்
மெய்க்குலம தாக மலைக்கமுத் தைப்பதித்து வெகுகோடி-

---

* விஞ—சொல்.

† அராவைத் துவைத்து — இது காளிங்க நிர்த்தத்தைக் குறிக்கின்றது—பாடல் 245-2, பக்கம் 114 கீழ்க்குறிப்பு; பாடல் 402-பக்கம் 518 கீழ்க்குறிப்பு.

‡ கராவை (முதலையைக்) கிழித்தது
—பாடல் 110-பக்கம் 262 கீழ்க்குறிப்பு.

x எண்கரி — எட்கரி — என திரிந்ததென்றால் — மதிப்புக்கு உரிய யானை—எனப் பொருள்படும்.

o பேய்முலை உண்டது
—பாடல் 115, பக்கம் 274; பாடல் 408-பக்கம் 534-கீழ்க்குறிப்பு.

** 7, 8, அடிகள்—மயிலின் உடல் வர்ணனை; இவ்வாறே "பலநிற மிடைந்த விழுசிறை யலர்ந்த பருமயில்" (திருப்புகழ் 164), "ரத்னரேகை யொக்கச் சிறக்கு மாமயில்" (திருப்புகழ் 298), "மரகதத் தமனிய மயில் (திருப்புகழ் 382), "இரணிய சயிலம், ரசித சயிலம், மரகத சயிலம் என......நிழல் வீசி......கலப சக மயில், (திருப்புகழ் 1095)—வருவன காண்க.

கற்பகவிருக்ஷம் போன்ற ராஜனே (நீ) என்றும், படையிலே மிகச் சிறந்த அர்ச்சுனராஜனே (நீ) என்றும் துதித்து நான் பாடும் கவிகளிலே அங்ஙனம் அமைத்து, நான் கற்று அறிந்த (விஞவை) சொற்களை (எடுத்து) பொறுக்கி அமைத்து, (அடுத்துப் படித்து) அம் மனிதர்களை அண்டி — நெருங்கிப்போய் அவர்கள்மீது நான் அமைத்த கவிகளைப்) படித்து—அனுவசியமாக— அளவுக்கு மிஞ்சி—

(கத்திடும்) கூச்சலிடும் (மெய் ஆக) உடலைக் கொண்டவனாய், (வலி) வன்மைகொண்ட (நல்ல) (ஏனது) (கலிப்பை)—பொலிவைத் (தொலைத்து)—இழந்து, கையில் பொருள் இல்லாத காரணத்தால் என்னை கலக்கமுறச் செய்யும் (கற்பனைகளை) காரிய ஏற்பாடுகளில் (விடாமல்) ஓயுதலின்றி நான் அலைச்சலுறும்படியும், சலிப்புறும்படியும் என்னை நீ கைவிடலாமோ!

எற்பணி (எல்) ஒளி பொருந்திய (பணி அரர்வை) நாகப்பாம்பைக் (காலின்கீழ்) மிதித்து, வெட்டித் துவைத்து (உழக்கி)க் கலக்கி, (கஜேந்திரனைப்) பற்றியிழுத்த முதலையை வெளியே இழுத்து (உரக்கக்கிழித்து) பலமாகக் கிழித்தெறிந்து—(எள்) அவமதிப்புக்கு இடமான (கரி)— யானை—கஜேந்திரன்—படாமல்—அந்த முதலையின் வாயில் பட்டு அழியாமல், இதத்த—இதம் நன்மை—இன்பம் தரக்கூடிய புத்தி (கதிக்கு நிலை) அடையக்கூடிய (நிலையை) உறுதிப்பொருளை அதற்கு ஓதி—(சொல்லி)—

வஞ்சனை எண்ணத்துடன் வந்த (பசாசின்) அலகையின் கொங்கைக் குடத்தை—(உறிஞ்சிக்) குடித்து, முழுதும் உயிர் இல்லாத வகையில் அந்தப் பிசாசை அடக்கிவிட்டுச் (சிரித்த, அயில் கணை) கூரிய அம்பைக்கொண்ட (இராமர்) திருமால் சுகமாக இருக்கும்படி (சூரனதியரைக்) கோபித்து (அழித்த) பாரக்ரம வீரனே!

மலையென்னும் படியாய், (மதாணி) பொன் பதக்கம் ஒன்றை எடைபார்த்து உருக்கி உருவுசெய்து அதில் (வர்க்கமணி) பலவகையான ரத்னங்களை (வடித்திருத்தி) பொறுக்கி எடுத்து அமைத்து, (பொன்) தகட்டினுடைய சரியான கூட்டம் என்று பிரமிக்கும்படிச் செய்து, அதிலே முத்துக்களைப் பதிவுசெய்து, (அதனால்) பலகோடி

விட்கதிர தாக நிகர்த் தொளிக் கச்சிவத்த
ரத்தினப டாக மயிற்பரிக் குத்தரித்து
மிக்கதிரு வாவ டுநற்றுறைக் குட்செழித்த பெருமாளே. (க)

மருத்துவக்குடி,

[இஃது ஆடுதுறை ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 2-மைல்.]

853. உணர்ச்சி பெற

தனத்த தத்தன தானா தானன
தனத்த தத்தன தானா தானன
தனத்த தத்தன தானா தானன தனதான

கருத்தி தப்படு காமா லீலைகள்
விதத்தை நத்திய வீணா வீணிகள்
கவட்டு விற்பன மாயா வாதிகள் பலகாலுங்-

கரைத்து ரைத்திடு மோகா மோகிகள்
அளிக்கு லப்பதி கார்போ லோதிகள்
கடைக்க ணிற்சுழ லாயே பாழ்படு வினையேனை ;

உரைத்த புத்திகள் கேளா நீசனை
யவத்த *மெத்திய ஆசா பாசனை
யுளத்தில் மெய்ப்பொரு ளோரா மூடனை யருளாகி-

உயர்ச்சி பெற்றிடு மேலா †மூதுரை
யளிக்கு நற்‡பொரு ளாயே மாதவ
வுணர்ச்சி பெற்றிட வேநீ தாளிணை யருள்வாயே ;

செருக்கி வெட்டிய தீயோ ராமெனு
மதத்த துட்டர்கள் மாசூ ராதிய
சினத்தர் பட்டிட வேவே லேவிய முருகோனே-

---

* மெத்திய—மிகுந்த.

† மூதுரை—வேதம்—'எலாம் முற்று மோர்ந்தவர் மூதுரை வர்த்தமே'—தாயுமா—பொன்னை மாதரை-51.

‡ பொருள் — மகன், — "அசுரன் தாருகனைப் பொருது பொன்றுவித்த பொருளினை முன் படைத்துகந்த புனிதன்"
—சுந்தரர் 7-16-9.

விண்ணிலுள்ள சூரியனது ஒளி கூடியது போன்ற ஒளிவீசச், சிவந்த (ரத்னபடம்) ரத்னப்போர்வை போர்த்தது போன்ற (ஆகம்) உடலினைக் கொண்ட மயில் (அல்லது ரத்ன படாகம — (படகம்) — ரத்ன திரைச்சீலை கொண்டது போன்ற மயில்) வாகனத்தின்மீது அமர்ந்து மிகச் சிறந்த **திரு ஆவடுதுறை** என்னும் நல்ல பதியில் விளக்கமுறும் பெருமாளே!

(சலிக்க விடலாமோ)

மருத்துவக்குடி

853.

கருத்துக்கு இனிமை வாய்க்கும்படிக் காமலீலைகளில் (பல) விதங்களை விரும்பியுள்ள மகா வீணிகள் (கவட்டு விற்பன) வஞ்சக அறிவுடையவர் (அல்லது வஞ்சகப் பிரசங்கத்தால்) (மாயாவாதிகள்) மயக்கம் ஊட்டத்தக்க பேச்சினை உடையவர், பல முறையும்—

மனம் கரையும்படிப் பேசவல்ல (மோகா மோகிகள்) காமமயக்கம் மிகக் கொண்டவர்கள், (அளிக்குலம்) வண்டின் கூட்டங்கள் (பதி) வந்து பதிகின்ற—படிகின்ற, கரியமேகம் போன்ற கூந்தலை உடைவர்கள்—ஆகிய பொது மாதர்களின் கடைக்கண் (மயக்கிற்பட்டு) சுழலுதலாகிப் பாழாகப் போகின்ற வினைக்கு ஈடான என்னை—

(பெரியோர்கள்) சொன்ன நற்புத்திகளைக் கேளாத (நீசனை) இழிந்தோனை, (அவத்தம்) பயனற்றவையே மிகுந்த ஆசைகளிலே (பாசம்) பற்று உடையவனை, உள்ளத்தில் உண்மைப்பொருள் இன்னதென (ஓராத) ஆராய்ந்தறியாத மூடனை—உனது திருவருளைப் பெற்றவனாகி—

உயர்வு பெற்ற — மேலான (மூதுரை) வேதத்திற் குறிக்கப்பெற்ற நல்ல பிள்ளையாகி, சிறந்த தவஞானத்தைப் பெறுமாறு நீ உனது திருவடியிணையைத் தந்தருளுக;

கர்வம் கொண்டு பகைவர்களை வெட்டி யழித்த பொல்லார்கள் எனப்பட்ட மதங்கொண்ட துஷ்டர்களாம் பெரிய சூரனாதிய கோபங்கொண்ட அசுரர்கள் அழியும்படியே வேல் ஆயுதத்தைச் செலுத்தின முருகனே

சிவத்தை யுற்றிடு தூயா*தூயவர்
கதித்த முத்தமிழ் மாலா யோதிய
செழிப்பை நத்திய சீலா வீறிய மயில்வீரா ;

வரைத்த வர்க்கரர் சூலா பாணிய
ரதிக்கு ணத்தரர் தீரா தீர்த
†மனத்தி யற்படு ஞான தேசிக வடிவேலா-

வருக்கை யிற்கனி சாருய் ‡மேலிடு
தழைத்த செய்த்தலை யூடே பாய்தரு
மருத்து வக்குடி வாழ்வே தேவர்கள் பெருமாளே. (க)

திருப்பந்தணை நல்லூர்.

[இது திருவிடைமருதூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 7½-மைல். குற்றாலம் ஸ்டேஷனுக்கு வடமேற்கு 6-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

854. மாயை நீங்க

தனதந்தன தனதந்தன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தானத் தனதான

ˣஇதசந்தன புழுகுஞ்சில மணமுந்தக வீசி
யணையுந்தன கிரிகொண்டிணை யழகும்பொறி சோர
இருளுங்குழல் மழையென்ப஠ வரசங்கொளு மோகக்
குயில்போலே-

இடையுங்கொடி மதனன்தனை யிடுகுந்தள பார
இலையுஞ்சுழி தொடைரம்பையு மமுதந்தட மான
இயலுங்கடி தடமும்பொழி மதவிஞ்சைகள் பேசித்
தெருமீதே ;

---

* இது முருகவேளுக்குத் தமிழின்மீதுள்ள ப்ரீதியைக் காட்டும்.
† சிவபிரானது மனத்தே விளங்கும் தேசிகர்—வேலர்—
"மத்தச் சடைப் பரமர் சித்தத்தில் வைத்த கழலோனே"
"நட்டமிடும் உத்தமர் நினைக்கு மனமொத்த கழல் வீரா"
—(திருப்புகழ் 306, 312)
‡ மேலிடு—மேலிட்டு.
x 608-ஆம் பாடலின் சந்த இசை கொண்டது இப் பாடல்.
o நவரசமாவன :—சிங்காரம், ஆசியம், கருணை, ரௌத்திரம், வீரம், பயம், குற்சை (அருவருப்பு), அற்புதம், சாந்தம்.

சிவமங்களம் பொருந்திய பரிசுத்த மூர்த்தியே! பரிசுத்தங்கொண்ட பெரியோர்கள் அருளிய முத்தமிழ்ப் பாக்களை அன்புடன் ஓதுகின்ற வளத்தை விரும்புகின்ற ஒழுக்கம் கொண்டவனே! மேம்பாடுடன் விளங்கும் மயில் வீரனே!

(வரை) கயிலைமலையில் (வீற்றிருக்கும்) தவர்க்கு அரர்—தவத்தினர்க்கும் இறைவனும் பெரியோர், சூலத்தைத் திருக்கையிற் கொண்டவர், அதிக் குணத்து அரர்—மேம்பட்ட குணத்தை உடைய பெரியார், மிக்க தைரியமுள்ளவர்—ஆகிய சிவபிரானுடைய மனத்திலே பொருந்தி விளங்கும் ஞானதேசிக மூர்த்தியே! கூரிய வேலனே!

பலாப்பழங்கள் சாருகி மேலிட்டுத் தழைத்த வயல்களின் இடங்களிலே பாய்கின்ற மருத்துவக்குடியில் வாழ்கின்ற செல்வமே! தேவர்கள் பெருமாளே!

(தாளிணை அருள்வாயே)

———

திருப்பந்தணைநல்லூர்

854.

இன்பந்தருவதான சந்தனம், புனுகுசட்டம், இவை போன்ற சில வாசனைப் பொருள்கள் தக்கபடி வீச, அணைகின்ற கொங்கைமலைகள் இரண்டையும் கொண்டும், அழகிய (மெய், வாய், கண், மூக்கு, செவி) எனப்படும் இந்திரியங்கள் சோர்வு அடையவும், இருண்ட கூந்தல் மழை என்னும்படி நீண்டு விளங்கவும், நவரசங்களையும் கொண்ட (பேச்சுக்களாலும்) மோகத்தை ஊட்டும் குயில்போலப் பேசி—

இடையானது கொடிபோல விளங்க, மன்மதன் இடும் விலங்கோ எனும்படியான கூந்தல்பாரம் என்ன, (இலை) ஆலிலைபோன்ற வயிறு என்ன, சுழி—உந்திச்சுழி கொப்பூழ்) என்ன, தொடை அரம்பை—அரம்பைத் தொடை—வாழை போன்ற தொடை என்ன, அமுதந் தடமான—காம அமுதம் தங்கும் இடமான தன்மைகொண்ட அழகிய அல்குல் என்ன, இவைகளைக் கொண்டு, மன்மத லீலைக்கலை வித்தைப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு, தெருவிலே—

பதபங்கய மணியும்பரி புரமங்கொலி விச
நடைகொண்டிடு மயிலென்பன கலையுஞ்சுழ லாட
பரிசும்பல மொழியுஞ்சில கிளிகொஞ்சுகை போலப்
பரிவாகிப்-

*பணமுண்டென தவலம்படு நினைவுண்டிடை சோர
இதுகண்டவர் மயல்கொண்டிட மனமுஞ்செயல் மாற
பகலுஞ்சில இரவுந்துயில் சிலவஞ்சகர் மாயைத்
துயர்தீராய் ;

திதி திந்திமி தனதந்தன டுடு டுண்டுடு பேரி
டகுடங்குகு டிகுடிங்குகு படகந்துடி வீணை
செகணஞ்செக வெனவும்பறை திசையெங்கினு மோதக்
கொடுசூரர்-

சிரமுங்கர வுடலும்பரி யிரதங்கரி யாளி
நிணமுங் குடல் தசையுங்கட லெனசெம்புன லோட
சிலசெம்புள்கள் கழுகுஞ் சிறு நரியுங்கொடி யாடப்
பொரும் வேலா ;

†மதவெங்கய முரிகொண்டவர் மழுவுங்கலை பாணி
யிட மன்பொடு வளருஞ்சிவை புகழ்சுந்தரி யாதி
வளருந்தழ லொளிர் சம்பவி பரைவிண்டிள தோகைத்
தருசேயே-

---

* 'பணம் உண்டென எனது'—'பணமுண்டெனது'—எனக் குறுக்கம்.

† யானையை உரித்தது—பாடல் 286, பக்கம் 210 கீழ்க்குறிப்பு
மான்மழு ஏந்துவது— ஷை
இடதுபாகம் தேவி—பாடல் 301, பக்கம் 246 கீழ்க்குறிப்பு.

பாத தாமரையிற் சேர்ந்துள்ள (பரிபுரம்) சிலம்பு— அங்கு (ஒலிவீச) சப்திக்க, நடக்கின்ற மயில்கள் என்னும்படி ஆடையும் சுழன்று ஆட, ஒழுங்கு விதம் பலவாக, சில பேச்சுக்களுடன் கிளி கொஞ்சுவதுபோலப் பேசி அன்பு பூண்டு—

(பணம் உண்டெென) பணம் இருக்கிறதென்று, பணம் இருக்கிறதென்று — (எனது அவலம்படு) என்னுடைய வேதனைப்படும் நினைவிலே நான் (எண்ணம் பூண்டிருக்க), இடை—மத்தியிலே (சோர) (பணம்) வற்றிப்போய்த் தளர்ச்சியுற, இந் நிலையைக் கண்டு அவ் விலைமாதர் (மயல் கொண்டிடு அம் மனமும்) மோகம் கொண்டிருந்த அந்த (தங்கள்) மனமும் நேசச் செயலும் மாறுதல் கொள்ள, அதனால் (பகலும் சில இரவும்) சில பகலும் இரவுமே துயில் கொள்ள (இணங்கும்) சில வஞ்சக மாதர்கள் மீதுள்ள (காம) மாயைத் துயரைத் தீர்த்தருளுக.

திதி திந்திமி தன தந்தன டுடு டுண்டுடு எனப் (பேரி) போர்முரசு ஒலிக்க, டகுடங்குகு டிகு டிங்குகு எனப் (படகம்) சிறுபறை, (துடி) உடுக்கை, வீணை இவை ஒலிக்க, செகணஞ் செக எனப் பறை திசைகள் எங்கும் சத்திக்க, கொடிய சூரர்களின்

தலையும், கையும், உடலும், குதிரையும், தேரும், யானையும், யாளியும்—கொழுப்பும், குடலும், சதையும் (அறுபட்டதனால்) கடல்போலச் சிவந்த ரத்தம் பெருகி ஓட, சில பருந்து போன்ற சிவந்த பறவைகள், கழுகு, சிறிய நரிகள், (கொடி) காக்கைகள் (உணவு கிடைக்கும் களிப்பினால்) ஆடச், சண்டை செய்த வேலனே!

மதம்கொண்ட கொடிய யானையை உரித்தவர், மழுவையும், மானையும் (பாணி) கையிற் கொண்டவர்— ஆகிய சிவனது இடது பாகத்தில் அன்புடன் இருந்து விளங்கும் சிவை, புகழப்படும் அழகி, ஆதிதேவதை, வளர்ந்தோங்கும் நெருப்புப்போலச் சிவந்து விளங்கும் சாம்பவி, (பரை) பராசக்தி, (விண்டு) திருமாலின்— இளந்தோகை) இளைய மயிலனையாள் — இளையவள் — தங்கை—தந்த குழந்தையே!

வதனஞ்சசி யமுதம்பொழி முலை நன்*குற மாதொ
டிசையுஞ்சுரர் தருமங்கையொ டிதயங்களி கூர
வருபந்தணை நகர்வந்துறை விமலன்குரு நாதப்
பெருமாளே. (க)

855. கழல் பெற

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதான

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச மலமாய-

எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறித் ;

திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல-

சிவசிவ என்று தெளிவுறு†நெஞ்சு
திகழந டஞ்செய் கழல்தாராய் ;

‡மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகிழரி விண்டு மருகோனே-

---

* வள்ளியுடன் இசைந்து — மனம் பொருந்தும் தேவி — தேவசேனை. வள்ளியின் வரலாற்றை முருகவேள் சொல்லக் கேட்ட தேவசேனை மனமிக மகிழ்ந்து என் தங்கையுடன் கூடப் பெற்றேனே என மகிழ்கின்றாள். 'வள்ளி...வணக்கம் செய்ய...பொருக்கென எடுத்துப் புல்லி ஈங்கொரு தமியளாகி இருந்திடுவேனுக் கின்றோர் பாங்கி வந்துற்றவாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்'.

குறவர் பாவை.. தௌவை தன்திருப் பதங்கள் தம்மைத் தாழ்தலும் எடுத்துப் புல்லி இன்றுனைத் துணையாப் பெற்றேன்— என்றாள்.—கந்தபுராணம் 6-24-235, 254.

† நெஞ்சு திகழ, கழல் தாராய்—"நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்"—(சுந்தரர் 7-1-1).

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்" (அப்பர் 4-1-2)—என—இடையறாத பத்தி நிலையைப் பெறுதற்கு வேண்டிய வரமாகும்.

‡ மருதை—அழித்தது பாடல் 143-பக்கம் 332-கீழ்க்குறிப்பு.

கஞ்சனை மாய்த்தது—பாடல் 397-பக்கம் 502-கீழ்க்குறிப்பு.

[வதனம் சசி] சசி—சந்திரன் போன்ற [வதனமும்] திருமுகமும், பால் அமுதம் பொழியும் கொங்கையும் கொண்ட நல்ல குறப்பெண்-வள்ளியுடனும், அவ்வள்ளியுடன் [இசையும்] அன்பு பொருந்தும் [தேவர் வளர்த்த மங்கை] தேவசேனையுடனும் உள்ளம் மகிழ்ச்சி மிக, வளர்ச்சியுறும் **திருப்பந்தணை நல்லூர்** என்னும் தலத்தில் வந்து வீற்றிருக்கும் சிவபிரானது **குருமூர்த்திப்** பெருமாளே! [மாயைத் துயர்தீராய்]

855.

பெரிய எனது பழைய வினை [சஞ்சித வினை] பயப்படும்படியும் [அல்லது—*சஞ்சிதவினை, பிராரத்தவினை இரண்டும் அஞ்ச-பயப்பட], வருவினை-ஆகாமியவினை-வந்து இனித் தாக்கவேண்டிய வினைகளும்—நாங்கள் வரவில்லை எனக் கெஞ்சிக் கூத்தாடி விலக, இருண்ட நோய்வகைகள் வர்ராது மடிய, மலம்—ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும், மாய—அழிந்தொழிய

என்னுடைய வருத்தமெல்லாம் குறைந்து ஒழிய, உன்னுடைய திருவருள் மேம்பட்டுப் பெருக—இசையுடனே பரிசுத்தமான உனது திருப்புகழை ஓதி—

[திருமுக சந்த்ர] சந்திரன்போன்ற குளிர்ந்த அழகிய திருமுகத்தை உடையவனே! முருகா! கடம்பா! சிவ குமாரா! கந்தா! குகா! வேலா!

சிவ சிவ—என்று கூறி—அதனால்—தெளிவுபெற்ற எனது நெஞ்சு பொலிவுபெற, நடனம்புரியும் உனது திருவடியைத் தந்தருளுக;

மருதமரம், கம்சன்—இவர்தம் உயிரைப் பலி கொண்டு [மாய்த்து] மகிழ்ந்த அரி—திருமாலின் மருகனே!

---

* **சஞ்சிதவினை**—பழவினையுள்—அனுபவித்தது போக எஞ்சிநிற்பது. இது குருவின் திருநோக்கால் அழிந்துபோம்.

பிராரத்தம்—இம்மையிற் பயனளிக்கும் பழவினை. "தனுவி-னெடுக்கும் பிராரத்தம்"—விநாயகபுரா-83-19.

ஆகாமியம்—இனி உறும் பிறப்பில் வரும் புண்ணிய பாவங்கள் "மேல்வரும் ஆகாமியமும்"

—திருக்காளத்தி-புரா-12-28.

"சஞ்சிதம் எல்லாம் ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கும் இஞ்சிலா காமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும் விஞ்சின பிராரத்வத்தின் வினை அனுபவித்துத் தீரும்"—கைவல்யநவ—

வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற
 வலம்வரு செம்பொன் மயில்வீரா ;

அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
 மமலனு கந்த முருகோனே-

அருள் செறி பந்த ணைமயிலிரு மங்கை
 *அமளிந லங்கொள் பெருமாளே. (உ)

856. முருகா என

தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன தனதான

†எகினி னம்பழி நாடக மாடிகள்
 மயிலெ னுஞ்செய லா‡ரகி நேரல்குல்
 இசையி டுங்குர லார்கட ளிகள் வெகுமோகம்-

எனவி ழுந்திடு வார்முலை மேல்துகில்
 அலைய வுந்திரி வாரெவ ராயினும்
 இளகு கண்சுழல் வார்விலை வேசியர் வலைவீசும் ;

அகித வஞ்சக பாவனை யால்மயல்
 கொடுவி ழுந்திட ராகமு நோய்பிணி
 யதிக முங்கொடு நாயடி யேனினி யுழலாமல்-

அமுத மந்திர ஞானொப தேசமும்
 அருளி யன்புற வேமுரு காவென
 அருள்பு குந்திட வேகழ லார்கழல் அருள்வாயே ;

---

* இந்த 855-ஆம் பாடலின் தொடக்கத்தையும் முடிவையும் 543-ஆம் பாடலொடு ஒப்பிடுக.

† எகின்—அன்னம்—"மடலவிழ் மரைமாட்டு எகின் என" சோணசைலமாலை 5.

‡ அகி—பாம்பு.

உயிர்களுக்கு வதை புரிந்த — உயிர்களைக் கொன்ற அசுரர்கள் ஒடுங்கி அடங்க, வெற்றி கொண்ட [அல்லது உலகை வலம்வந்த] செம்பொன் மயில்மீது விளங்கும் வீரனே !

பக்கத்திலுள்ள தேவி — பார்வதியுடன் ரிஷபவாகனத்தைச் செலுத்தும் அமலன்—குற்றமற்ற சிவன் ப்ரியப்படும் குழந்தையே !

அருள் நிறைந்த **பந்தணை நல்லூர்** என்னும் தலத்தில் [வள்ளி—தேவசேனை என்னும்] இரண்டு தேவிமார்களின் படுக்கை இன்பத்தை அனுபவிக்கும் பெருமாளே !

[நடஞ்செய் கழல் தாராய்]

856.

(எகின் இனம்பழி) அன்னப் பறவைகளின் கூட்டத்தைப் பழிக்கவல்லவராய் நாடகம் நடிப்பவர்கள், [நடை முதலிய பாவனைகளில்] மயில் என்று சொல்லத்தக்க செயலினை உடையவர்கள், பாம்புக்கு ஒப்பான அல்குலைக் கொண்டவர்கள், [இசை] பண்களைக் காட்டும் குரலினை உடையவர்கள், கடன் கொள்ளுபவர்கள், மிக்க மோகம்

கொண்டுளோம் என்பவர் போல [மேலே] விழுபவர்கள், கொங்கைமேல் ஆடை அலையும்படித் திரிபவர்கள், யாரா யிருந்தபோதிலும் இரங்குபவர்போல நெகிழ்ச்சியைக் காட்டும் கண்களைச் சுழற்றுபவர்கள், விலைக்கு [உடலை விற்கும்] வேசியர்—காம வலையை வீசுகின்ற

தீமையைத் தருவதான வஞ்சக நினைப்புள்ள நடத்தையால் மயங்கி நான் மோகம் கொண்டு [அவர்கள் வீசினவலையில்] விழ, அதனால் பின்னர், ராகம் [ஆசை], நோய், பிணி இவைகளை நிரம்பக்கொண்டு நாயனைய அடியேன் இனிமேலும் அலைச்சலுறாமல்—

அமுதம் அனைய [ஆறெழுத்து] மந்திரத்தையும் ஞான உபதேசத்தையும் எனக்கு அருளி, [நான்] அன்பு கூடிய மனத்துடனே [உன்னை] **முருகா** என்று சொல்லும்படியான திருவருள் எனக்குக் கூடுமாறு கழல் அணிந்த உனது திருவடியைத் தந்தருளுக.

ககன விஞ்சையர் கோவென வேகுவ
டவுணர் சிந்திட வேகடல் தீவுகள்
கமற வெந்தழல் வேல்விடு சேவக முருகோனே-

கரிநெ டும்புலி தோ லுடை யா*ரெனை
யடிமை கொண்டசு வாமிச தாசிவ
கடவு ளெந்தையர் பாகம் விடாவுமை யருள்பாலா;

†செகமு மண்டமு மோருரு வாய்நிறை
நெடிய அம்புயல் மேனிய னரரி
‡திருவு றைந்துள மார்பக னர்திரு மருகோனே-

தினைவ னந்தனில் வாழ்வளி நாயகி
வளர்த னம்புதை மார்பழ காமிகு
திலக பந்தணை மாநகர் மேவிய பெருமாளே. (ரு)

857. வணங்க

தந்தன தனத்த தந்தன தனத்த
தந்தன தனத்த தனதான

கும்பமு நிகர்த்த கொங்கையை வளர்த்த
கொஞ்சுகிளி யொத்த மொழிமாதர்-

xகுங்கும பணிக்குள் வண்புழுகு விட்ட
கொந்தளகம் வைத்த மடவார்பால்;

வம்புகள் விளைத்து நண்புகள் கொடுத்து
மங்கிநர கத்தில் மெலியாமல்-

* அருணசலேசுரரும் அருணகிரியாரை ஆட்கொண்டனர் என்பது இதனாற் பெறப்படும்—"அருணகிரிநாதர் வரலாறு— பக்கம் 11-12; சிவபிரான் இவரை ஆட்கொண்டு திருநீறும் அளித்தார் என்பதைத் திருப்புகழ் 568-ஆம் பாடலிற் காண்க.

† "எங்கும் உளன் கண்ணன்"—திருவாய்மொழி 2-8-9.
"ஏழுலகமும் துன்னி முற்றுமாகி நின்றசோதி" ஷை 4-3-8.

‡ " திருவாழ் மார்வன் தன்னை "—பெரிய திருமொழி 7-6-7.
" திருக்கலந்து சேரும் மார்ப தேவ தேவ தேவனே "
—சந்த விருத்தம் 103.

x குங்கும பணி - குங்குமபரணி—எனக் கொள்ளலாம்; பரணி- பணி—இடைக்குறை; தாதகி—தாகி என்புழிப் போல.

விண்ணிலுள்ள [விஞ்சையர்] வித்தியாதரர் 'கோ' [எனவே]–கோவென்று அலறி இரங்க, [குவடு] கிரவுஞ்சமும் எழுகிரியும், அவுணர்களும் அழியுமாறும், கடலும், தீவுகளும் [கமற] மிக வேகுதல் உறக், கொடிய நெருப்பை வீசும் வேலாயுதத்தைச் செலுத்தின பராக்ரம சாலியே! முருகனே!

யானை, பெரிய புலி இவைகளின் தோலைப் புனைந்தவர், என்னை அடிமையாகக் கொண்ட சுவாமி சதாசிவ மூர்த்தி, கடவுள், என் தந்தை, ஆகிய சிவபிரானது (இடது) பாகத்தை விட்டுப் பிரியாத உமாதேவி அருளிய குழந்தையே!

உலகம், அண்டங்கள் இவை முழுதிலும் ஒரு உருவாய் நிறைந்து விளங்கும் பெரிய அழகிய மேக நிறத்து மேனியராம் அரி, லக்ஷ்மி வாசம் செய்கின்ற மார்பை உடையவர்—ஆகிய திருமாலின் மருகனே!

தினைப் புனத்தில் வாழ்ந்த வள்ளி நாயகியின் வளர்ச்சி மிகும் கொங்கையிற் படிந்த—அழுந்திய மார்பழகனே! மிகுந்த [திலகம்] சிறப்பு வாய்ந்த **பந்தணைநல்லூர்** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

[கழலார் கழல் அருள்வாயே]

857.

சூடத்தை ஒத்த கொங்கையை வளர்த்துள்ளவர்களும், கொஞ்சுகின்ற கிளி போன்ற பேச்சினை உடையவர்களும் ஆன மான் அனைய மாதர்கள்

குங்குமம் ஆதிய அலங்காரத்துடன் (அல்லது குங்கும பரணிக்குள் இருந்த) நல்ல புனுகை விட்டு வாரப்பட்ட [கொந்தளகம்] [கொந்து] பூங்கொத்துக்கள் உள்ள [அளகம்] கூந்தலை உடைய மாதர்கள் — இவர்களிடத்தே—

வீண் செயல்களைச் செய்து நட்புச் செயல்களைக் காட்டி அழிந்து நரகில் மெலியாதவாறு [நலிவு உறுதவாறு]

வண்*கயிலை சுற்றி வந்திடு பதத்தை
வந்தனைசெய் புத்தி தருவாயே;
பம்புநதி யுற்ற பங்கொருச மர்த்தி
பண்டுள தவத்தி லருள்சேயே-
பைம்புய லுடுத்த தண்டலை மிகுத்த
பந்தணை நகர்க்கு ளுறைவோனே;
†சம்புநிழ லுக்குள் வந்தவ தரித்த
சங்கரர்த மக்கு மிறையோனே-
சங்கணி கரத்த ரும்பர்பய முற்ற
சஞ்சல மறுத்த பெருமாளே. (௪)

858. வினை கெட

தந்ததன தந்தனந் தனதனத்
தந்ததன தந்தனந் தனதனத்
தந்ததன தந்தனந் தனதனத் தனதான

‡கெண்டைகள்பொ ருங்கண்மங் கையர்மலர்க்
கொண்டைகள்கு லுங்கநின் றருகினிற்
கெஞ்சுபலு டன்குழைந் தமளியிற் கொடுபோய்வண்-

* கயிலையிலிருந்த தந்தை கூற, கயிலையிலிருந்து உலகெலாம் வலம் வந்தது—பாடல் 184-பக்கம் 430 கீழ்க்குறிப்பு; " கார்மயிற்பரி நடாவி யோய்வினெர் கணந்தனிற் கயிலை மேவினன் "
—பழநித்தல புராணம்—திருவாவினன்குடி-46.

† சம்பு—நாவல்மரம்—சம்பு நிழலில் இறைவன் வீற்றிருத்தல்:- இவ் வரலாற்றை பாடல் 501 பக்கம் 140-கீழ்க்குறிப்பிற் பார்க்க. திரு ஆனைக்காவுலாவிற் பின்வருமாறு காணலாகும்—(8-18)

" இருடி ஒருவன்...சம்பு தருவின் அடியிற்றவமே புரியக், கரத்தில் தவளக் கனியொன்று வீழ...கனியைக் கயிலையிற் போய் நக்கன் தனக்களிப்ப...முக்கணன்...அருந்தி விதை மாமுனிக்கு நல்க, முனி தாங்கி அருந்த...உடலில் வேராய்...வெண்ணுவலாய்

[தொடர்ச்சி 511 ஆம் பக்கம் பார்க்க.]

வளப்பமுள்ள கயிலைமலையைச் சுற்றி வந்த திருவடியை [வந்திக்கின்ற] வணங்கிப் போற்றி செய்கின்ற புத்தியைத் தந்தருளுவாயாக;

[பம்புநதி, பங்கு உற்ற ஒரு சமர்த்தி) (சடையிற்) செறிந்துள்ள கங்கை நதி, (சிவனார்) பாகத்திற் பொருந்தியுள்ள ஒப்பற்ற சாமர்த்தியம் உள்ள பார்வதிதேவி இவர்கள் இருவரும் தத்தமது பழைமையுள்ள [நல்ல] தவப்பேற்றால் அருளின குழந்தையே!

பசிய மேகங்கள் படியும் சோலைகள் மிக்குள்ள **பந்தணை நல்லூர்** என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே!

[சம்பு] (நாவல்மர) நிழலில் வந்து தோன்றிய சங்கரர்க்கும் [சிவனுக்கும்] தலைவனே!

சங்கை ஏந்தின திருக்கரத்தர் [திருமாலும்], தேவர்களும் [சூராதியர்களிடம் கொண்ட] பயத்தினால் ஏற்பட்ட மனக்கவலையை—துன்பத்தை — நீக்கி ஒழித்த பெருமாளே!

[வந்தனை செய் புத்தி தருவாயே]

858.

கெண்டைமீன்கள் போன்ற கண்களையுடைய மாதர்கள், மலர் அணிந்த தமது கொண்டைகள் குலுங்க நின்று, சமீபத்திலிருந்து தாழ்ந்த குரலுடன் பற்கள் தெரியும்படி வேண்டிக் குழைந்து [இளகின] மனமுடையவராய்ப்—படுக்கையிற் கொண்டுபோய்; நல்ல—

எழுந்து, சாகையொடு தழைப்பத் தானோங்கி ஓகையுடன், நின்று பரவ நிருத்தன் கருத்துடனே, இன்று முதற் சம்புமுனி இப்படிப் போய்—நளின முனி பூசித்த ஞான பூமிக்கண்...இருப்பாய் உன் நீழலிலே யாமுறைவோம் என்ன, விருப்பால் அவன் வந்து விட்டான்"

x இப் பாடல் 47-ஆம் பாடலின் சந்தத்தைக் கொண்டது.

கெந்தபொடி யும்புனைந் துறவணைத்
இன்பவச னந்தருந் தொழிலடுக்
கின்றமய லின்படுந் துயரறப ப்ரபைவீசுந் ;

தண்டைகள் கலின்கலின் கலினெனக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனத்
*தண்கொலு சுடன்சிலம் பசையவுட் பரிவாகிச்-

சந்ததமும் வந்திரும் பரிமளப்
பங்கய பதங்களென் கொடுவினைச்
சஞ்சல மலங்கெடும் படியருட் புரிவாயே ;

தொண்டர்கள் சரண்சரண் சரணெனக்
கொம்புகள் குகுங்குகுங் குகுமெனத்
துந்துமி திமிந்திமிந் திமினெனக் குறுமோசை-

சுந்தரி மணஞ்செயுஞ் சவுரியக்
கந்தகுற வஞ்சிதங் கருவனத்
துங்க மலை யும்புரந் தமரருக் கிடர்கூரும் ;

பண்டர்கள்பு யங்களும் பொடிபடக்
கண்டவப்ர சண்டகுஞ் சரியெழிற்
பைந்தருவ னம்புரந் தகமெழியிற் புடைசூழும்-

---

* தண்—அருள். "தண்கலந்த சிந்தையோடு"—சேது புரா- சீதை-5. என்புழிப்போல; "தண் கழல்"— திருப்புகழ் 16. "தண்ணமர் திண்கொடி"—அப்பர் IV-4-5.

வாசனைத் தூள்களைப்பூசித் தம்மீது படும்படியணைத்து, இன்பகரமான பேச்சுக்களுடன் கூடிய செயல்களால் உண்டாகின்ற காம மயக்கில் படுகின்ற துன்பம் நீங்க, ஒளி வீசுகின்ற [உனது]

[காலில் அணிந்துள்ள] தண்டைகள் கலின் கலின் கலின் என்று ஒலிசெய்ய, கிண்கிணியானது கிணின், கிணின், கிணின் என்று ஒலிசெய்ய, அருளைப்பாலிக்கும் கொலுசும், சிலம்பும் அசைந்தொலிக்கத் திருவுள்ளத்தில் அன்பு கூர்ந்து [நீ]

எப்போதும் [என்முன்] வந்து, பெருமை தங்கிய நறுமணமுள்ள தாமரையன்ன திருவடிகளை—என்னுடைய பொல்லாதவினை, கவலை, மலம் [ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள்] இவை யாவும் அழிந்து போம்படி அருள்புரிவாயாக;

அடியார்கள் சரணம் சரணம் சரணம் என்று வணங்கவும், ஊது கொம்புகள் குகும் குகும் குகும் என்று ஒலி செய்யவும், துந்துமி வாத்தியம் [பேரிகை] திமிந் திமிந் திமின் என்று ஒலி செய்யவும், இவ்வாறு [அணுகிக்] குறுகும் ஓசை ஒலிக்க

(சுந்தரி) அழகி தேவசேனையைத் திருமணஞ்செய்த பராக்ரமம் உள்ள கந்தனே! (அல்லது) அழகிய வள்ளியை மணஞ்செய்த திறல் வாய்ந்த கந்தனே! அந்தக் குறக்கொடியாம் வள்ளி தங்கியிருந்த அரிய வனம் (தினைக்காடு) உள்ள பரிசுத்தம் வாய்ந்த வள்ளிமலையையும் காத்துத், தேவர்கட்கு துன்பத்தை மிகவும் விளைத்த

பண்டர்கள் — வண்டர்கள் — (மிண்டர்களாகிய) அசுரர்களுடைய கைகள் அறுபட்டொழிய (கண்டவ) செய்தவனே! ப்ரசண்ட (மிகச் சிறப்புவாய்ந்த) குஞ்சரி (ஐராவதயானையால் வளர்க்கப்பட்ட) தேவசேனை வளர்ந்த அழகிய பசுமைவாய்ந்த கற்பக மரக்காடுகள் உள்ள தேவலோகத்தைப் (புரந்து) காத்தளித்து (அகழ்) அகழியும், (எயில்) மதிலும் பக்கத்தில் சூழ்ந்துள்ள—

*பந்திவரு மந்திசெண் பகம்கிற்
சந்துசெறி கொன்றைதுன் றியவனப்
பந்தணையில் வந்திடுஞ் சரவணப் பெருமாளே. (ரு)

859. திருவுருவைத் தியானிக்க

தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன தந்ததான

தேனி ருந்தஇத ழார்ப ளிங்குநகை
யார்கு ளிர்ந்தமொழி யார்ச ரங்கள்விழி
சீர்சி றந்தமுக வாரி ளம்பிறைய தென்புருவர்—

தேன மர்ந்தகுழ லார்க ளங்கமுகி
னார்பு யங்கழையி னார்த னங்குவடு
சேர்சி வந்தவடி வார்து வண்ட†இடை புண்டரீகம்;

சூனி யங்கொள்செய லார ரம்பைதொடை
யார்ச ரண்கமல நேரி ளம்பருவ
தோகை சந்தமணி வாரு டன்கலவி யின்பமூடே—

---

* பந்தி வரு மந்தி—குரங்குகள் கூட்டமாய் இனத்துடன் இருத்தல்.

"நெருங்கி இனமாய்...நின்று கருமந்தி விளையாடு காளத்தி மலையே; "குரக்கினம் விரை பொழிலின்மீது கனியுண்டு"—(சம்பந்தர் 3-69-3; 2-34-8).

† இடை சூனியம்:—
இடையில்லை என்றே சொல்லும்படி அவ்வளவு நுண்ணியது.
'இராத இடை'—திருப்புகழ் 201.
'வேதாவானேன் எழுதினன்—இலையோ'—திருப்புகழ் 150.
புண்டரிகம்—அல்குலுக்கு உவமை—
'பெருகிய அல்குல் மணித்தடங் கமலம்'
—தணிகைப் புராணம்-களவு-43.

புண்டரிகம்—ஒரு பாம்பு என்பர். புண்டரீகம் (பாம்பு-அரவு) போன்ற இடை—எனவும் கொள்ளலாம்—'அரவிடை' 'அரவேரிடை'—என வருவன காண்க—சம்பந்தர் 3-7-6, 3-3-5.

(பந்தி) கூட்டமாய் (வரிசையாய்) (மந்தி) குரங்குகள் வருகின்ற செண்பகம், அகில், சந்தனம், நெருங்கிய கொன்றை இவை (துன்றியவனம்) பொருந்திய சோலை (சூழ்ந்த) — **திருப்பந்தணை நல்லூர்** என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சரவணப் பெருமாளே!

(வினை...கெடும்படி யருட் புரிவாயே)

859.

தேன் (தேன் என இனிக்கும் வாயூறல்) உள்ள வாயிதழ்களை யுடையவர், பளிங்கு போன்ற வெண் பற்களையுடையவர், குளிர்ந்த பேச்சையுடையவர், அம்புகள் போன்ற கண்களையும், அழகு சிறந்த (முகவார்) முகத்தையும், உடையவர், (இளம்பிறையது) இளம்பிறை போல்வது (என்) என்று சொல்லத்தக்க (புரூவர்) நெற்றிப்புருவத்தை யுடையவர்—

வண்டுகள் பொருந்திய கூந்தலை உடையவர், (களங் கமுகினர்) கமுகு களத்தினர்—கமுகு போன்ற மெல்லிய கழுத்தினை உடையவர், (புயங்கழையினர்) மூங்கில் –கரும்பு–போன்ற தோளையுடையவர், கொங்கைகள் மலையை நிகர்க்க (சிவந்த வடிவார்) சிவந்த நிறத்தினையுடையவர், துவட்சியுற்ற இடையையும், புண்டரீகம் (தாமரை போன்ற) அல்குலையும் கொண்டவர்,*

(சூனியங்கொள் செயலார்) (சூனியம்) மயக்கும் மந்திரத்தை (மாரண வித்தையைக்) கொண்ட தொழிலினை உடையவர், (அரம்பை) வாழை போன்ற தொடையை யுடையவர், (சரணகமல நேர்—கமலநேர் சரண்) தாமரை ஒத்த பாதத்தை உடையவர், இளம் பருவத்தையுடைய (இள) மயில் போன்றவர், சந்தன முதலிய பூசிக் கொள்பவர்— இத்தகையாருடன் செய்யும் சேர்க்கை இன்பத்திலே

* இடை-சூனியம்கொள் செயலார், புண்டரீகம் சூனியம்கொள் செயலார்—இடை (சூனியம்) இல்லை என்றே சொலத் தக்கவர்; அல்குலை விற்கும் தொழில் சம்பந்தமாகச் சூனியம் வைப்பவர்,— எனவும் பொருள் தொனிக்கும்.

சோக முண்டுவினை யாடி னுங்*கமல
பாத மும்புயமி ராறு மிந்துளபல்
தோட லங்கலணி மார்ப மும்பரிவு ளங்கொள்வேனே;

ஓத மந்தசிவ ரூபி யஞ்சுமுக
நீலி கண்டிகலி யாணி விந்துவொளி
யோசை தங்குமபி ராமி யம்பிகைப யந்தவேளே-

ஓல மொன்றவுணர்†சேனை மங்கையர்கள்
சேறு டன்குருதி யோட எண்டிசையும்
ஓது கெந்தருவர் பாட நின்றுநட னங்கொள்வேலா;

ஏனல் மங்கைசுசி ஞான ரம்பையென
தாயி சந்த்ரமுக பாவை வஞ்சிகுற
மானெ டும்பர்தரு மான ணைந்தழகி லங்குமார்பா-

ஏர்க ரந்தையறு‡கோடு கொன்றைமதி
யாற ணிந்தசடை யார்வி ளங்குமெழில்
ஈறில் பந்தணைந லூர மர்ந்துவளர் தம்பிரானே. (சு)

860. சந்தத் தமிழ்பாட

தனனந் தத்தன தனந்த தானன
தனனந் தத்தன தனந்த தானன
தனனந் தத்தன தனந்த தானன தனதான

மதியஞ் சத்திரு நிறைந்த மாமுக
மயிலஞ் சக்கிளி யினங்க ளாமென
மதுரஞ் செப்பிய மடந்தை மேன்கை ரதிபோல-

* 'கண்டுண்ட சொல்லியர்' என்னும் கந்தரலங்காரச செய்யுளின் (37) கருத்து இது.

† சேனை—கூட்டம்—'குரிசிலை விடாத சேனையே'
—கம்பராமாய-தைல-8

‡ சிவபிரான் ஓடு அணிந்துள்ளது :
'ஓடு முடிக்கிலர் போலும்'—2-65-10.

சோர்வு கொண்டு (நான்) பொழுது போக்கினும், (உன்னுடைய) தாமரையன்ன திருவடிகளையும், தோள்கள் பன்னிரண்டையும், (இந்துளம்) கடம்பு முதலிய பல மலர்களாலாய மாலை அணிந்த திருமார்பையும் (பரிவு உளம்) அன்பு நிறைந்த (எனது) மனதில் (கொள்வேன்) (நான்) தியானிப்பேன் (அன்புடன் நான் தியானிப்பேன்).

ஓம் நம (சிவாய) என்னும் அந்த சிவத்துடன் கலந்த உருவத்தினள், அஞ்சு திருமுகங்களைக் கொண்ட நீலி, கண்டி கலியாணி—ரத்னமாலை அணிந்துள்ள கலியாணி, (விந்து)–சிவஞான சக்தி, ஒளி ஓசை இவைக்கு ஆதாரமாம் அபிராமி, அம்பிகை ஆன உமை பெற்ற (செவ்) வேளே!

அபயக்குறிப்புடன் எழுந்த சத்தம் இட்ட அசுரர்களின் கூட்டமும் அவர்களின் மங்கையர்களும் (இறந்துபட) அவர்தம் உடற்சேறுடன் (மாமிசச் சேறுடன்) ரத்தம் புரண்டு ஓட, எட்டுத் திசையிலும் இருந்து புகழும் கந்தருவர்கள் பாட, நின்று நடனம் கொண்ட வேலனே!

தினைப்புனத்து மங்கை, பரிசுத்தமான ஞானமய ரம்பை, எனது தாய், சந்திரன் போன்ற திருமுகம் கொண்ட பாவை, வஞ்சிக்கொடி போல்வாள், ஆகிய குறமான்— வள்ளியையும், தேவர் வளர்த்த மான் தேவசேனையையும் அணைந்து அழகு விளங்கும் திருமார்பனே!

அழகிய (கரந்தை) திருநீற்றுப் பச்சை, அறுகு, தலையோடு, கொன்றை, நிலா, கங்கையாறு இவைகளை அணிந்த சடையை உடையவர் எழுந்தருளியுள்ளதும், அழகுள்ளதும், அழிவிலாததுமான **திருப்பந்தணைநல்லூர்** என்னும் தலத்தில் வீற்றிருந்து விளங்கும் தம்பிரானே!

(கமலபாதமும்...மார்பமும்...உளங்கொள்வேனே)

860.

சந்திரனும் அஞ்சி நாணும் படியான பொலிவு நிறைந்த அழகிய முகத்துடன், மயிலும் (இவர்களின் சாயலின்முன் நமதுசாயல் எந்தமூலை) என பயப்படக், கிளியின் கூட்டங்கள் போல விளங்கி, இனிமை தரும்படியான மொழிகளைப் பேசும் மேனகை, ரதி எனப்படும் தேவலோகத்து அரம்பை போல விளங்கி,

மருவும் பொற்குட மெழுந்த மாமுலை
வளர்வஞ் சிக்கொடி நடந்த வாறென
வருதுங் கக்கட லணங்கு போல்பவர் தெருவூடே;
நிதமிந் தப்படி யிருந்து வாறவர்
பொருள் தங்கப்*பணி கலந்து போய்வர
நெறிதந் திட்டவர் வசங் களாமென வுழலாதே-
†நிதிபொங் கப்பல தவங்க ளாலுனை
மொழியும் புத்திகள் தெரிந்து நானுனை
‡நிகர்சந் தத்தமிழ் சொரிந்து பாடவு மருள்தாராய்;
நதிமிஞ் சச்சடை விரிந்த நாயக
னுமையன் பிற்செயு மிகுந்த பூசனை
நலமென் றுட்குளிர் சிவன்ப ராபர னருள்பாலா-
xநவகங் கைக்கிணை பகர்ந்த மாமணி
நதிபங் கிற்குலவு**கந்து காபுரி
நகர்பொங் கித்தழைய வந்து வாழ்வுறு முருகோனே;
கெதிதங் கத்தகு கணங்கள் வானவர்
††அரிகஞ் சத்தவர் முகுந்தர் நாவலர்
கிளைபொங் கக்க்ருபை புரிந்து வாழ்கென அருள்நாதா-

---

* பணி—பண்ணி.

† இந்த நாலாவது அடி அருமையான வேண்டுகோளைக் கொண்டுள்ளது. மனப்பாடம் செய்யவேண்டியது.

‡ இது அருணகிரியாரின் வரலாற்றுக் குறிப்புக்கு உதவுவது. இந்த வேண்டுகோள் அவருக்கு வயலூரிற் சித்தித்தது.

'திருப்புகழ் நித்தம் பாடும் அன்பது செய்ப்பதியில்
தந்தவன் நீயே''—(திருப்புகழ் 105)

—அருணகிரிநாதர் வரலாறு-பக்கம் 70.

x நவகங்கைக் கிணையானது மண்ணி நதி—

ஒன்பது கங்கை நதி கூடினுல் ஒத்த பெருமையது மண்ணி நதி—என்றும் பொருள்படும். மண்ணியாறு முருகவேளால் வரவழைக்கப்பட்டு 'சுப்பிரமணிய நதி' என்றும் பெயர் கொண்டிருந்தது.

'மொழிதரு குடிஞை யாய பலவுளும் முருகப் புத்தேள்
பொழிதரு கருணை யாலே யழைத்திடப் போந்த மண்ணி
வழிதரு வெள்ள மேன்மை வகுப்பவர் யாவர் அன்னேன்
செழிதரு முருவுஞ் சீரும் எனச்சிறந் தோங்கு நாளும்'

—(மண்ணிப் படிக்கரைப் புரா-நாட்டுப் 11.)

[தொடர்ச்சி 519-ஆம் பக்கம்]

பொருந்தியுள்ள தங்கக்குடம் போல எழுந்துள்ள அழகிய கொங்கைகளுடன், விளங்கும் வஞ்சிக்கொடி நடந்து உலவுவது போல நடந்து, (துங்கக் கடல்வரு அணங்கு போல்பவர்) உயர்ந்த கடலில் தோன்றி எழுந்த தேவி இலக்குமி போன்ற அழகினர், தெருக்களிலே

தினந்தோறும் இந்த மாதிரி இருந்து (தம்மிடம்) (வாறவர்) வருபவர்களுடைய பொருள்களையும் தம்மிடமே தங்கும்படியாகப் பண்ணி, அவர்களுடன் கலந்து, போகவும் வரவும் வழி கொடுப்பவர்களின் வசப்பட்டவன் என்று சொல்லும்படியாக நான் திரியாமல்—

செல்வம் (பொருட்டிரள்) பொங்கவும், பல தவப்பேற்றின் பயனால் உன்னைப் புகழும்படியான அறிவு புலப்பட்டு நான் உன்னை ஒளிவீசும் சந்தத் தமிழ்ப்பாக்களை நிரம்பப் பொழிந்து பாடவும் உன்னுடைய திருவருளைத் தந்தருளுக;

கங்கை பொங்கியெழும் சடைவிரிந்த தேவர், உமை அன்போடு செய்த சிறந்த பூஜையை 'நன்று இது' எனக் கொண்டு உள்ளங் குளிர்ந்த சிவன், பராபரமூர்த்தி அருளிய குழந்தையே!

புதுமை நிறைந்த கங்கை நதிக்கு ஒப்பாகும் என்று சொல்லப்பட்டுள்ள **மண்ணி** யாற்றின் பக்கத்தே விளங்குகின்ற (கந்துகாபுரி) **பந்தணைநல்லூர்** என்னும் திருப்பதியானது செல்வங்களெல்லாம் மேம்பட்டு விளக்கமுறும் வண்ணம் (அத்தலத்துக்கு) வந்து வாழ்வு கொள்ளும் முருகனே!

நற்கதி நிலை தம்மிடம் தங்குதற்கு வேண்டிய பெருமை பொருந்திய பதினெண் கணங்கள், (வானவர்) தேவர், (அரி) இந்திரன், (கஞ்சத்தவர்) பிரமன், (முகுந்தர்) திருமால், நாவலர் (புலவர்கள்) — இவர் தம் (கிளை) கூட்டம் சிறப்புற்று விளங்க, அருள்பாலித்து, வாழுங்கள் என்று அருளிய நாதனே!

O மணிநதி—மண்ணியாறு.

ºº கந்துகாபுரி—பந்தணை நல்லூர்; கந்துகம்—பந்து.

†† அரி—இந்திரன்.

கெருவம் பற்றிகல் விளைந்த சூரொடு
தளமஞ் சப்பொரு தெழுந்து* தியுகள்
கிரவுஞ் சக்கிரி வகிர்ந்த வேலுள பெருமாளே. (எ)

திருப்பனந்தாள்.

[கும்பகோணத்துக்கு வடகிழக்கு 10-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

861. நற்பொருள் பெற

தந்தா தத்தன தந்தா தத்தன
தந்தா தத்தன தனதான

கொந்தார் மைக்குழ லிந்தார் சர்க்கரை
யென்றே செப்பிய மொழிமாதர்-
கொங்கார் முத்துவ டந்தா னிட்டத
னந்தா னித்தரை மலைபோலே;
வந்தே சுற்றிவ ளைந்தா லற்பம
னந்தா னிப்படி யுழலாமல்-
†மங்கா நற்பொரு ‡ளிந்தா ×அற்புதம்
என்றே ௦யிப்படி அருள்வாயே;

---

* தியுகள் கிரவுஞ்சம் — கிரவுஞ்சன் என்னும் அவுணன் மாயையால் மலை உரு எடுத்துப் பல மாயைகள் புரிந்தனன். அகத்திய முநிவரை அவ்வாறு தன் மாயையால் மயக்க, அவர் கோபித்து 'எ! வெய்யோய்! நீ மலையாகவே கிடந்து முருகவேளின் வேலால் இறந்துபோகக் கடவை' எனச் சபித்தார்.

"அடலெரி கனைந்துகுழ...மாயை சூழ்ந்தான்"
—கந்தபுரா 2-24-8.

† மங்கா நற்பொருள் :
'அந்தமில் பொருள்'—சம்பந்தர் 3-114.11.
'பன்னு நன்பொருள்' ஷை 2-102-1.
'ஆயுநன் பொருள்...நுண் பொருள் ஆதியே' ஷை 3-114-1.

[தொடர்ச்சி 521 ஆம் பக்கம்.]

கருவம்கொண்டு பகைமை பூண்ட சூரனுடன் அவனுடைய சேனையும் பயப்படும்படி சண்டைசெய்து, கிளம்பித் தீ தாவி எழும் கிரவுஞ்ச மலையைப் பிளவுபடுத்தின வேலாயுதத்தைக் கொண்ட பெருமாளே !

(சந்தத்தமிழ் சொரிந்து பாடவும் அருள் தாராய்)

திருப்பனந்தாள்.

861.

பூங்கொத்துக்கள் நிறைந்த கரிய கூந்தலையும், [இந்தார்] சந்திரன் போன்ற முகத்தையும் [அல்லது சந்திரனைக் கண்டதுபோலக் கண்களைக் குளிரச்செய்யும் வனப்பையும்] கொண்டவர்கள், சர்க்கரை என்றே சொல்லப்பட்ட மொழிகளை உடையவர்கள் ஆகிய மாதர்களின்—

வாசனை கொண்டதும், அந்த முத்துமாலை பூண்டுள்ள அந்த (தனம்) கொங்கையானது இப் பூமியில் உள்ள மலைபோல—

எதிர்வந்து தோன்றிச் சுற்றி (என் மனத்தை) வளைந்தால்— மனத்தைச் சூழ்ந்து கவர்ந்து பற்றினல், அதனல் இந்த ஏழை மனமானது (இழிவானவற்றையே நாடும் இம் மனமானது) (மோக மயக்கம் அடைந்து) இப்படியே (அலைந்தலைந்து அலைச்சலுறும்; இங்ஙனம்) அலைச்சல் உறுமல்—

மங்குதல்-அழிதல் இல்லாத சிறந்ததொரு உபதேசப் பொருள் 'இதோ இருக்கின்றது பெற்றுக்கொள்; இது ஒரு அற்புதப்பொருள்' என்று நீ கூறி இவ் வண்ணம்—இப்போதே—அருள் புரிவாயாக.

[பக்கம் 520 தொடர்ச்சி.]

‡ **இந்தா** - ஒரு அருமைப் பிரயோகம்; 330-ஆம் பாடலிற் போல 'இதோ பெற்றுக்கொள்' என்னும் பொருளில் வந்துளது.

'இந்தா இஃதோர் இளங்குழவி யென்றெடுத்து...தேவிகையில் ஈந்தனனே'—கந்தபுரா 6-24-35.

x **நற்பொருள் இந்தா அற்புதம்:**

'வள்ளிகோன் அன்று எனக் குபதேசித்த தொன்றுண்டு கூறவற்றே'—(கந்தரலங்-9) என்னும் அற்புதத்தது.

o இப்படி—பாடல் 33-பக்கம் 97 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

இந்தோ டக்*கதிர் கண்டோ டக்கடி
மண்டா நற்றவர் குடியோட-

எங்கே யக்கிரி யெங்கே யிக்கிரி
யென்றே திக்கென வருசூரைப்;

பந்தா டித்தலை விண்டோ டக்களம்
வந்தோ ரைச்சில ரணகாளிப்-

பங்கா கத்தரு கந்தா மிக்கப
வந்தா ஞற்றருள் பெருமாளே. (க)

திருவிடைமருதூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். கும்பகோணத்துக்கு வடகிழக்கு 5-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

862. வினை—மலம் அற

தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானன தான தானன
* * * தனதன தனதான

†அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்

அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்

அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய் அவரொரு பெரியோராய்-

---

* சூரனது திக்குவிசயத்தின்போது—சூரன் வருதலைக் கண்டு—
'காந்து வைகினன் ஆழியந் தேருடைக் கதிரோன்'
—கந்தபுரா 2-12-28.

† பனியனையதுளி—திருப்புகழ் 241-பக்கம் 98; பாடல் 565 பக்கம் 288 கீழ்க்குறிப்பு. இத்தகைய வர்ணனையைப் பட்டினத்தார் அருளிய 'உடற் கூற்று வண்ணத்திற்' காண்க.—திருப்புகழ் பாடல் 162-ம் பார்க்க.

சந்திரன் பயந்து ஓடவும், சூரியன் அதைக் கண்டு தானும் ஓடவும், (கடம் மண்டா) காட்டிலும் (மண்டி) நெருங்கிச்சென்று (அங்குள்ள) நல்ல தவசிகளும் குடும்பத்துடன் ஓடவும்

எங்கே அந்த மலையில் (ஒளித்திருப்பவர்கள்), எங்கே இந்த மலையில் (ஒளித்திருப்பவர்கள்) என்று கூறியே (திக்கென) அங்கங்கே உள்ளவர்களின் உள்ளம் திக் எனும்படி—திடுக்கிடும்படியாக வந்த சூரனைப்—

பந்தடிப்பது போல அடித்து வெருட்டியும், தலையற்றுப் போய்ச்சிதறி விழவும், போர்க்களத்தில் வந்தவர்களை (வந்த அசுரர்களை)ச் சில ரண தேவதைகளுக்கு—(ரண காளி முதலிய சில ரண தேவதைகளுக்குப்)

பங்கிட்டுத் தந்த கந்தனே! (சிறப்பு) மிக்க (திருப்) **பனந்தாவில்** விற்றிருந்தருளும் பெருமாளே!

(பொருள் இந்தா...என்றே...அருள்வாயே)

திருவிடைமருதூர்
862.

அறுகம் புல்லின் நுனியில் உள்ள பனிபோலச் சிறிய துளி (ஒன்று) பெரியதான ஒரு உடலை அடைந்ததாகி, ஒரு குழந்தை உருவம் கொண்டு வெளிவர, அந்த அருமைக் குழந்தையின் மழலை மொழிகளிற் கனிவுகொண்டு மனம் உருகி (அவருடைய) அக் குழந்தையுடைய தாயும் தந்தையும் அதன்மீது (மாய மோகமாய்)ப் பிரபஞ்ச மாயையின் வசப்பட்டு ஆசை பூண்டவராய்,—(அருமையினில் அருமையிட) அருமையிலும் அருமையாய்—வெகு வெகு அருமையாக (அன்பு காட்டி வளர்க்க), மொளு மொளு என்று உடலும் வளர, (ஆளாகி) ஆளும் (மேளமாய்)—கவலையற்ற இன்ப வாழ்க்கையராய், இளம்பருவ உருவத்தை அடைந்து, அவர் ஒரு பெரியவராகி—

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
*விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
†அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ‡ஊசி வாசியாய் அவியுறு சுடர்போலே;

வெறுமிடிய ரொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணியார்சொலே மேல தாயிடா விதிதனை நினையாதே-

மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோனமு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலா யாளி வாயராய் மிடையுற வருநாளில்;

---

* 'ஊனுலா முடைகொள் ஆக்கை உடைகல மாவ தென்றும்
மானுலா மழைக்க ணார்தம் வாழ்க்கையை மெய்யென்
றெண்ணி' அப்பர் 4-67-6.

† தவிடும் இக—இகுதல்—தாழே விழுதல்
'மாரியின் இகுதரு...கடுங்கணை' மலைபடு 226.
'தவிடனற் பிளவு எனினும் எற்பவர் தாழா தீயேன்'
திருப்புகழ் 1062, 'சிறுமிக் குமரகிர் வீர்பகிர'—கந்தரந்தாதி 97.
'அணு அளவு தவிடுமிகள்' என்றும் பாடம் (தவிடு-உமிகள்).

‡ ஊசிவாசியாய்—ஊசி எவ்வாறு தனக்குள் அமைய நூல் ஒன்றையே விடுகின்றதோ அவ்வாறு தனக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் இடம் தருங் குணத்தனாய்—(பிறருக்கு உபகாரம் செய்யாதவனாய்):

அழகு விளங்கும் நடையைக் கொண்டவராய், ஒய்யாரத்தைக் காட்டும் பேச்சுக்களிற் பழகினவராய், உயிர்போல அருமைவாய்ந்த மனைவிமாருடன், விழப் போகின்ற சுவரை மாதர்கள் என்னும் பெருங்குழியை— என்றும் நிலைத்திருக்கும் சுகம் என எண்ணி, வீடும் வாசலும் மாடமும் கூடமும் கட்டி யனுபவித்து, அணு அளவு தவிடும் (இக) — தாழேவிழ — தாழேவிழுந்து சிதறக் கூடாதென மனம் அழுத்தம் அடைந்து, ஆசைக்கு ஆளாகி, ஊசியின் தன்மை பூண்டவராய், அவிந்து போவதற்கு முன் ஒளிவிட்டு எரியும் சுடர் (தீபம்) போல—(பின்வரும்கேடு தெரியாது மகிழ்ந்திருந்து)

சுத்த தரித்திரன் ஒருவனோ, ஒரு தவபுருஷனோ அமுது படையுங்கள் என்று கேட்ட உடனே 'மேலை வீட்டுக்குப் போய்க் கேள்', 'கீழை வீட்டுக்குப் போய்க் கேள்', எனச் சொல்லிக்கொண்டு திடுதிடென்று நடந்து போய்ப், பிச்சை கேட்ட அவர் (வீட்டுக்குள்) நுழைவதற்கு முன்பாகவே எதிரே வேகமாகச் சென்று, அவர்கள் மேல்–மிகக் கோபித்து நாய்போல மேலே பாய்ந்து விழுந்து, தமது சாமர்த்தியத்தால் சேர்த்த பொருள்கள் வற்றிப்போவதற்கான பேச்சுக்களைப் பேசும் ஒரு வீணர்களின் பேச்சே நல்லதென மேற்கொள்ளப்பட்டதாகி, வரப்போகும் விதியின் போக்கை (சற்றும்) யோசிக்காமலே—

மினுகு மினுகு என்று செழிப்புற்றிருந்த தேகம் முற்றும் வளைவுற்று நெகிழ்ச்சி அடைந்து, வீண் பொழுது போக்குபவர்களின் தரிசனத்தையே மேற்கொண்ட பாவியாகி, மறுபிறப்பு உண்டே — அம் மறுபிறப்பில் துன்பம் நேரும்–என அறவுரை கூறுபவரை—விடும்–உமது பேச்சை நிறுத்தும்—விழலை யதனின் வருவார்கள்— போகுவார்–கோரைப்புல் போலத் தோன்றி மறைபவர்கள்– (மறுமை என்ற ஒன்றை) காண்பார்களா என்ன! என்று எதிர்த்துப் பேசியும், பாசங்களை விட்ட துறவிகளாயுள்ள பெரியவர்களையும், வேதியர்களையும் வெடு வெடு என்று கடுமையாகப் பேசி, (மேளமே சொலாய்) தவில் வாத்தியம் போலப் பேரொலியுடன் இரைந்து பேசி, யாளி போலத் திறந்த வாயினனாய், (மாதர்களுடன்) புணர்ச்சி பொருந்திக் காலங் கழித்து வருநாளில்—

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி*படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழுவழென உமிழுமது கொழுகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய் மனையவள் மனம்வேறாய்-

†மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
‡மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள் மனிதர்கள் பலபேச;

xஇறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் 0எரிதனி லிடும்வாழ்வே-

---

* 'தொழு நொய்வர' என்றும் பாடம்
'கனைகொள் இருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனைய பலவும் மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்'
—சம்பந்தர் (2-100-4)

† "வனமனையில் மனைவியர்கள்"—என்றும் பாடம்

‡ "ஏலவார் குழலினர் இகழ்ந்துரைப்பதன் முனம்"
—சம்பந்தர் 2-97-9.

x "இறுதிதனை அறுதியென"—என்றும் பாடம்.

0 "மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிட மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத உடம்பை
நம்பு மடியேனை யினி யாளுமே"
—பட்டினத்தார்-உடற்கூற்று வண்ணம்

வறுமைகள் (தரித்திர திசை) நெருங்கிவர, கையில் உள்ள பொருள்கள் விலகி ஒழிய, சிலவகையான (வாதநோய்) வாயு சம்பந்தமான நோய்கள், ஊது காமாலே (உடல் வீக்கம் தரும் காமாலே), (சோகை நோய்) — ரத்த மின்மையால் முகம்வெளுத்து ஊதுமாறு செய்யும் நோய், (பெருவயிறு) மகோதர நோய், வயிற்றுவலி, (படுவன்)— ஒருவகைப் புண்கட்டி — இவையெலாம்வர, இரண்டு கண்களிலும் பீளை ஒழுக்குஉற, (ஈளை) கோழை மேலிட்டு எழ, வழவழ என்று உமிழ்கின்ற (கோழை) கொழ கொழ என்று ஒழுகிவிழ, (ஊனெலாம் வாடி)— தேகத்தில் உள்ள சதையெல்லாம் வற்றிப்போய், நாடியும் பேதப்பட்டு வேருகி, மனையவள் மனம் வேருய்— மனையாளும் (இனி எப்படி இவர் பிழைப்பது என) மன உறுதி வேறுபட்டு (தைரியத்தை இழந்து)—

(மறுக) கலக்கம்உற, வீட்டில் உள்ளவர்களும் (நணுகும் நணுகும்) சமீபித்துப்போய்ப் பாருங்கள், சமீபித்துப் போய்ப் பாருங்கள் என்று சொல்லும்போது, (மாதர்) பெண்கள் சீ என வெறுக்க, (வாலர்) குழந்தைகள் சீ என வெறுக்க, கனவிலே தேர்வருவது போலவும், குதிரை வருவது போலவும் காட்சிகள் ஏற்பட, பெரிய சுடுகாடு வா வா என்று கூப்பிட, (வாழ்ந்திருக்கும்) வீடு போ போ என்று வெருட்டி அனுப்ப,(வலது) சாமர்த்தியம் எல்லாம் அழிந்து ஒடுங்க, (விரகு அழிய) உற்சாகம் எல்லாம் அழிந்து ஒடுங்க, பேச்சு குழறிப் போக, கண்கள் சொருகிப்போக, (வாயு மேலிடா) மேல் மூச்சு எழ, உயிர் (உடலேவிட்டுக்) கழியும் நாளில், மனிதர்கள் பல பேச்சுக்கள் பேச—

இவர் முடிவோடு நமது எல்லா வளமும் அற்றதென்று சுற்றத்தார்கள் கதறியழ, அறியாமை கொண்ட மாதர்கள் (தலையில்) அடித்துக்கொண்டு மேலே விழ, என்னுடைய பொருள், என்னுடைய அடிமை ஆள்கள் என்கின்ற அறிவு சிறிதளவும் இல்லாது ஒழிய, ஈக்கள் மொலேல் என்று மொய்க்க, வாயை ஆ என்று திறந்து (உயிர் கழிந்ததும்), ஒடுங்கின ஒலி செயும் பறை, சிறு பஃறைகள், (திமிலே) பறைவகை, (தவில்) மேளவகை—இவைகள் ஒலிக்கச் சுடுகாட்டுப் பிரதேசத்துக்கே (சேர்க்கப்பட்டு)ப் பேய்களாற் சூழப்பட்டு எரியில் இடப்படும் வாழ்வே இது; இத்தகைய வாழ்க்கையை—

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற *இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை †பரமசுக மதனையருள் விடைமருதில்
‡ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே. (க)

863. வழிபட

தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன தந்ததான

இலகு குழைகிழிய வூடு போயுலவி
யடர வருமதன னூல வாவியெதி
ரிளைஞ ருயிர்கவர ஆசை நேர்வலைபொ திந்தநிலம்-

இனிமை கரைபுரள வாகு லாவுசரி
நெறிவு கலகலென வாசம் வீசுகுழ
லிருளின் முகநிலவு கூர மாணுடைய கன்றுபோக;

மலையு மிதழ்பருகி வேடை தீரவுட
லிறுக இறுகியநு ராக போகமிக
வளரு மிளகுதன பார மீதினில்மு யங்குவேனை-

---

* இறப்பு — பிறப்பை — இறவி பிறவி — என்றது அருமைப் பிரயோகம்—
'பிறவி யிறவி யிலாதார் போலும்'—அப்பர் 6-28-9.
'பெருந்தகை பிறவி னெ டிறவு மானன்'-சம்பந்தர் 1-110-1.

† "பரமசுக மதனையருளியசுருதி" என்றும் பாடம்.

‡ இடைமருதீசர்—'ஏகநாயகர்'—எனப்படுவார்.
"தேறுபுகழ் இடைமருதில் உறையேக நாயகன்
செய்ய தாளும்"—மருதவன புராணம்.

உனது இரண்டு திருவடிகளைப் போற்றி செய்யும் உன்னுடைய அடியவர்கள் பெறுவதென்றால் அங்ஙனம் அவர்கள் பெறுவதை (உலகத்தவர்) இகழமாட்டார்களா—ஏ! பாச நாசம் செய்யும பெருமானே! ஆதலால்-(நல்வினை தீவினை என்னும்) இருவினையும், ஆணவம், கன்மம், மாயை—(எனப்படும்) மும்மலங்களும் நீங்கவும், இறப்பொடு பிறப்பு என்பது ஒழியவும், ஒரே இன்பநிலையில், நீயும் நானும் ஒன்றுபட்டு அழுந்திக் கலக்கும் வகை வருமாறு பேரின்ப நிலையதனை அருள்புரிவாயாக! திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் தனிநாயகனே! லோக நாயகனே! தேவர்கள் பெருமாளே!

(பரமசுகம் அதனை அருள்)

863.

விளங்குகின்ற (குழை) காதணி தாக்குண்ணும்படி அதனிடையே போய் உலவி நெருங்கி வந்தும், காம சாத்திரத்தை ஆய்ந்தாய்ந்து தன் எதிரே வரும் இளைஞர்களின் உயிரைக் கவர்வதற்கு ஆசை கூடிய வலையாக அமைந்தும் உள்ள நீலோற்பலம் போன்ற கண்கள்—

இனிமை என்பது (கரைபுரண்டு) மிக்கெழுந்து ஒழுக, தோளில் (கையில்) விளங்கும் (சரி) வளைவகை ஒன்றோடொன்று நெரிப்புண்டு கலகல என்று ஒலிக்க, நறுமணம் கமழும் கூந்தல் என்னும் இருளில் முகம் என்னும் நிலாவொளி மிக்கு எழுந்து விளங்க, சிறந்த ஆடை விலகிப் போக—

எதிர்ப்பட்டு பொருதற்குரிய—எதிர்த்து மோதும்—வாயிதழ் ஊறலை உண்டு, காமதாகம் அடங்கவேண்டி, உடலை அழுந்தக் கட்டி அணைத்து, காமப்பற்றால் ஏற்படும் (போகம்) இன்பசுகம் நன்றாக வளர்ந்தும், நெகிழ்ச்சியுறும் கொங்கைப் பாரங்களின் மேலே தழுவிப் புணரும் எனக்கு—

*மதுர கவியடைவு பாடி வீடறிவு
முதிர அரியதமி ழோசை யாகவொளி
வசன முடையவழி பாடு சேருமருள் தந்திடாதோ;

கலக அசுரர்கிளை மாள மேருகிரி
தவிடு படவுதிர வோல வாரியலை
கதற வரியரவம் வாய்வி டாபசித ணிந்தபோகக்-

கலப மயிலின்மிசை யேறி வேதநெறி
பரவு மமரர்குடி யேற நாளும்விளை
கடிய கொடியவினை வீழ வேலைவிட வந்தவாழ்வே;

†அலகை யுடனடம தாடு ‡தாதைசெவி
நிறைய மவுனவுரை யாடு நீபஎழில்
அடவி தனிலுறையும் வேடர் பேதையைம ணந்தகோவே-

xஅமணர் கழுவில்விளை யாட வாதுபடை
கருது குமரகுரு நாத ஒநீதியுள
தருளு மிடைமருதில் மேவு மாமுனிவர் தம்பிரானே. (உ)

---

* இவ் வேண்டுகோள் வயலூரிற் சித்தித்தது.

"அன்ப! நீ பந்தணை நல்லூரில் "சந்தத்தமிழ் சொரிந்து பாடவும் அருள்தாராய்" (860) என்றும், திருவிடை மருதூரில் "மதுரகவி யடைவு பாடி...வழிபாடு சேரும் அருள் தந்திடாதோ" (863) என்றும், கும்பகோணத்தில் 'சித்ரத் தமிழாலுன் செம்பொனூர்வத்தைப் பெறவேனோ' (870) என்றும், சப்தஸ்தானத் திருப்புகழில் "திருப்புகழ் தணிய ஓசையில் ஓத எனக்கருள் புரிவாயே"(890)என்றும் வேண்டிய வண்ணமே, மதுரமும் சித்ரமும் செறிந்த சந்தத் திருப்புகழ்ப் பாக்களைப்......பாடும் வரத்தை அருளினோம்; இனி நீ நித்தம் அத்தகைய திருப்புகழ்ப் பாக்களைப் பாடவேண்டும்..." எனக் கட்டளையிட்டு மறைந்தார்.

—அருணகிரிநாதர் வரலாறு-பக்கம் 70.

† சிவபிரான் பேய்களுடன் ஆடுதல்:
'பேய்க்கணஞ்சூழ...ஆடுமெம் அடிகள்'—சம்பந்தர் 1-77-3.

‡ தந்தைக்கு உபதேசித்தது:
—பாடல் 628-பக்கம் 462 கீழ்க்குறிப்பு.

x சமணரைக் கழு ஏற்றியது:
—பாடல் 181-பக்கம் 422 கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 531 ஆம் பக்கம்]

இனிமை நிரம்பிய பாடல்கள் எல்லாவகையினவும் பாடி, வீட்டின்ப ஞானம் நிரம்ப உண்டாக, அருமையான (செந்) தமிழ் ஓசை பிறக்க, ஒளி வசனம்—அறிவு மொழிகள் பொலிகின்ற வழிபாட்டு நெறியிற் சேரும்படியான பாக்கியத்தை உனது திருவருள் பாலிக்காதோ!

(கலகம்) போர் செய்யும் அசுரர்களின் கூட்டம் அழிய, மேருமலை தவிடு பொடியாக, ரத்த வெள்ளம் மாம் ஓலமிடும் கடல்—சத்தமிடும் கடலின் அலைகள் பேரொலியிட, கோடுகள் பொருந்திய பாம்பை வாயினின்றும் விடாது தன்—பசி அடங்கின இன்பம் கொண்ட

தோகை மயில்மேல் ஏறி, வேத சன்மார்க்கத்தைப் போற்றும் தேவர்கள் (பொன்னுலகிற்) குடியேற, நாள்தோறும் விளைகின்ற—ஏற்படுகின்ற—மிகப் பொல்லாத வினை வீழ்ந்தழிய, வேலை ஏவுதற்கு எனத் தோன்றிய (என்) செல்வமே!

பேய்களுடன் நடமாடும் தந்தை (சிவனுடைய) காது நிரம்ப மவுன உபதேசம் செய்த கடப்ப மாலையை அணிந்தவனே! அழகிய (வள்ளிமலைக்) காட்டில் வாசம் செய்த வேடர் மகளை மணந்த தலைவனே!

சமணர்கள் கழுவில் துள்ளிக்குதிக்க வாதுப் போர் கருதிச் செய்த குமரனே! குருநாதனே! நீதியுள்ளனவற்றை அருளிச் செய்யும் தம்பிரானே! திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் தம்பிரானே! சிறந்த முனிவர்களுக்குத் தம்பிரானே!

(வழிபாடு சேரும் அருள் தந்திடாதோ)

---

o நீதி அருளுவதால் இறைவனை—நீதி—என்றே கூறுவர் சம்பந்தர்.

"வெண்ணியில் நீதியை நினையவல்லார் வினை நில்லாவே"
"நீதீ நின்னை யல்லால் நெறியாது நினைந்தறியேன்"
—சம்பந்தர் 2-14-2 ; 3-55-6.

864. தவநெறி பற்ற

தனதனன தனதனன தந்தனந் தந்தனந்
தனதனன தனதனன தந்தனந் தந்தனந்
தனதனன தனதனன தந்தனந் தந்தனந் தந்ததான

*படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
†தமரசது மறையமரர் சங்கமுஞ் ‡சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
xசெம்பொன்மேனிப்-

பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு முளரியொடு திங்களுங் கொன்றையும்
0பரியகுமி ழறுகுகன தும்பையுஞ் °°செம்பையுந்
துன்றுமூலச் ;

சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில்வருமுதலி††கொந்தகன்கந்தனென் றுய்ந்துபாடித்-

தணிய‡‡வொலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
xxபகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பண்படுங் கங்கணஞ் ००சிந்தியாதோ;

---

* படியை அளவிட்டது—பாடல் 268-பக்கம் 166.

† தமர சதுமறை :—
"தமரமதுடன் வளர் சதுமறை எனவும்"
—கம்பராமா-திருஅவதார 126.

‡ சம்பு—பிரமன்.

x 'பொன்னொளி கொள்மேனி'—சம்பந்தர் 1-71-6.

0 பரிய குமிழறுகு—ஒருவகைய பெரிய அறுகம்புல் வகை.

°° செம்பை — சிற்றகத்தி — 'அகத்தியோடு வன்னி கொன்றை...சடைப் பெய்தாய்' சம்பந்தர்—2-98-2.

†† கொந்தகன்—படைத்தலைவன் (தேவசேனபதி)
"கொந்தகப் பெருமான் என்றே நன்னெறிப்
பட்டங் கட்டி நல்கினன் பரிவட் டங்கள்"
—திரு ஆலவாய்—39-27.

[தொடர்ச்சி 533 ஆம் பக்கம் பார்க்க.]

864.

பூமியைத் தனது காலால் அளவிட்ட பெரிய மேகநிறங் கொண்ட திருமாலும், (சண்டனும்) யமனும், அல்லது சூரியனும், (தமரம்) ஒலியுடன் ஓதப்படும் (சதுமறை) நான்கு வேதங்களும், தேவர் கூட்டமும், பிரமனும் போற்றுதற்கு அரிய அரசன், சாமார்த்தியம் உள்ளவன், (சுடும்) சுட்டழிக்கும், சம்பன்னன்—சம்பத்து உடையவன் (அழித்தல் தொழில் மூர்த்தி), செம்பொன் போன்ற மேனியை உடைய—

பரமன், அழகு கொண்ட பாம்புகளையும், கங்கையையும், லக்ஷமிதேவி வாசம்செய்யும் தாமரையையும், நிலவையும், கொன்றையையும், பருத்த குமிழம்பூவையும், அறுகம் புல்லையும் பெருமை வாய்ந்த தும்பை மலரையும், (செம்பையும்) சிற்றகத்தி மலரையும், நெருங்கிப் பிரதானமாக இருக்கின்ற

சடைமுடியில் அணிந்துள்ள நல்ல சங்கரன் (சிவபிரான்) வணங்குகின்ற குமரன், ஆறுமுகத்தன், இனிமைபயக்கும் செவ்விய சொற்களை உடையவன், (கங்கையில்) சரவண மடுவில் வந்த முதல்வன், (தேவ) சேனுபதி, கந்தன் என்று ஈடேறும்படிப் பாடிக்

குளிர்ந்த சொற்களைச் சொல்லும் வழி ஒன்றிலும் போகின்றேன் இல்லை; பங்கிட்டு (ஒருவருக்கு ஒன்று ஈய) கொடுக்க ஒரு தினை அளவு ஈகைக் குணத்தையும் கொண்டு (கிட்டுகின்றேன் இல்லை) அணுகுதல் கிடையாது; அப்படிப்பட்ட எனக்குத் தவவழியில் ஒழுகி நல்வழியில் சீர்பெறும் பிரதிக்ஞை—ஒரு பிடிப்பான முயற்சி யெண்ணம் உதிக்காதோ! (எண்ணம் உதிக்க உன் திருவுளம் நினைக்காதா)!

---

‡‡ ஒலி — சொல்—'நின்னுருவமும் ஒலியும் ஆகாயத்துள'; —பரிபாடல் 4-31.

XX "பகிர நினைவொரு தினையள விலுமிலி" —திருப்புகழ் 1009.

00 "வேண்டிக் கொள்வேன் தவநெறியே"—சுந்தரர் 7-13.

கடுகுபொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்பரமங் கண்டுசேரக்-

கழுகுநரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
*றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந் துங்கவேலா;

†அடல்புனையு மிடைமருதில் வந்திணங் குங்குண
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி வுறைகுமரி சந்திலங் குந்தனந் தங்குமார்பா-

அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே. (ங)

அலகைகள்-பறை முதலிய வாத்தியங்களை முழங்கிப் பேய்கள் மாமிசத்தைப் புசித்தலும், ரத்தத்தைப் பருகுதலும்—

"குருதிக் கடலைப் பெருகப் பருகிக்...களிக்கும் ஒரு திரள்
கொடு கொட்டி படத்துடி கொட்டி...வளைத்திருக்கும் ஒருதிரள்
சதையைச் சில கைக் கொள பறிக்கும் ஒரு திரள்
......அறுமுகன் தயித்தியர் பட்டுவிழப்
பொருதிட்ட செருக் களத்தில் அலகையே"
—(செருக்களத் தலகை வகுப்பு)

† அடல்—தல விசேட வெற்றி—

"மருதவாணன்...விருப்பம் அமைத்த—மிடைசீர்
மருதவட்ட மான்மியம் போல் மற்றொன் றுண் டென்று
கருதவட்ட ஞாலத்துக் காணேன்—கருதி, தன்பால்
வந்து புகுந்த பதம் வான்பத மெல்லாம் புகுதும்,
முந்துதெரி கண்ணிரண்டு மூன்றாகும்.........
—திருவிடை மருதூர் உலா 679.

"இடைமரு தீசனைப் பணிதற் கொருவ ரெண்ணுற்
றெழுந்திடலங் கவர்வினையும் எழுந்து நிற்கும்,
நடையுறிலவ் வூர்நோக்கிப் புறவூர் நோக்கி
நடக்குமது சொல்லாமல், அவர்க ளேகத்
திடமிலரா யடனொருகால் திரும்பி னலும்
திரும்பாது சென்றவினை சென்ற தேயாம்,
புடவிபுகழ் காசியினுற் றிலகு கங்கைப்
புனல்படிந்து வருபலன்மற் றவருக் கெய்தும்"

(தொடர்ச்சி-பக்கம் 535 பார்க்க)

கடுகுபோலப் பொடிப் பொடியாய்த் தவிடுபடும்படி மந்திரமும் தந்திரமும் பயின்று வந்த அசுரர்களின் உடல்களைப் பிளந்தும், (அம்பரம்) கடல் கதறி நிரம்ப ரத்த ஆறு பொங்கி ஓடும்படியான களிப்புக்கிடமான நிறைவை (நிறைந்த உணவைக் கண்டு) அப்போர்க்களத்தில் சேரும் படி—

கழுகும், நரியும், (கொடி) காக்கையும், கருடனும் அங்கு வந்து கூடி எங்கும் நிற்கவும், பேய்கள் பல (கூடி)—(திமிலை) பம்பைமேளம்—ஒருவகைப் பறை கொண்டு தந்தனம், தந்தனம என (கருதியிசை) இசை கருதி—இசைகளைக் கருதி எழுப்பி, (பொசியும்)—(கிணத்தை) உட்கொள்ளும் (நசை) ஆசையைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியுறுகின்ற பரிசுத்த வேலனே!

வெற்றி விளங்கும் **திருவிடைமருதூரில்** வந்து பொருந்தியிருக்கும் குணத்திற் சிறந்த குருபரனே! குமரனே! யானைகள் போய் (அடங்கும்) உறங்கும் — தூங்கும் (வள்ளிமலைக்) காட்டில் வாசஞ்செய்த குமரி — வள்ளியின் சந்தனம் விளங்கும் கொங்கையிற் படியும் திருமார்பனே!

சிவந்த ரத்னங்கள் ஒளிவீசி விளங்கும் தண்டைகள் அணிந்த அழகிய தாமரை போன்றதும், கருணை பொழிவதுமான கழல்களின் (திருவடிகளின்) அழகே (நமக்குத்) (தம்பம்) பற்றுக்கோடாம் என்று (அல்லது திருவடிகளே நமக்கு முடிவான பற்றுக்கோடாமென்று) (உணர்ந்து) (உறுதி பூண்டு) (நெறி அழகு பெற வருடி)—அந்த நன்னெறியையே அழகு வாய்க்கத் தடவிப் பற்றி (மெதுவாகக் கைப்பிடித்து)—தேவர்களும் தொண்டு பூண்டுள்ள தம்பிரானே!

(தவநெறியில்...பண்படும் கங்கணம் சிந்தியாதோ)

("முத்திதந் தருளிடு தலங்கள்...அனேகம் உண்டு...அவற்றிடைமரு ததிகமாய்க் குலவும், யாதினலெனில் அநாதியா யிலங்கலின்"—
—மருதவனப் புராணம்-தலவிசேட 28, 13.

இவ்வாறு இத் தலத்தின் பெருமை முருகவேளால் வசிட்டராதிய முனிவர்களுக்கு எடுத்து ஓதப்பட்டது.

மதுரையில் வரகுண பாண்டியனுக்கு உற்ற பிரமகத்தி தோஷம் திருவிடை மருதூரில் விலகிற்று — [வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல்].

865. சிவஞானம் பெற

தனதனதன தான தானன, தனதனதன தான தானன
தனதனதன தான தானன தந்ததான

புழுகொடுபனி நீர்ச வாதுட னிருகரமிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையானை-

பொதுவினில்விலை கூறு மாதர்கள் மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே;

மெழுகெனவுரு காவ ஞர்தம திதயகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதனை கொண்டுநாயேன்-

மிடைபடுமல மாயை யால்மிக கலவியஅறி வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்;

எழுகிரிநிலை யோட வாரிதி மொகுமொகுவென வீச மேதினி
யிடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக-

இமையவர்சிறை மீள நாய்நரி கழுகுகள்கக ராசன் மேலிட
ரணமுககண பூத சேனைகள் நின்றுலாவச்;

*செழுமதகரி நீல கோமள அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவளர் கந்தவேளே-

†திரைபொருகரை மோது காவிரி வருபுனல்வயல் வாவி சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே. (௪)

---

* முருகவேளுக்கு யானை வாகனமும் உண்டு, அந்த யானை பிணிமுகம் எனப்படும்-பாடல் 207-பக்கம் 28, பாடல் 474-பக்கம் 71 கீழ்க்குறிப்பு.

† 'எறிதிரை கரை பொரும் இடைமருது' - சம்பந்தர் 1-122-2.
'பொழிலும் வயலுஞ் சூழ்ந்த இடைமருது' ஷை 2-56-8.

865.

புனுகு சட்டத்தொடு பன்னீர், ஜவ்வாது இவைகளுடன் இரண்டு கைகளிலும் நிரம்பினதாய், மார்பில் லேபனம்—(சந்தனம் கஸ்தூரி இவைகளின்) பூச்சு, (பூசுதல் கொண்டதாய்), புளகாங்கிதம் கொண்டதாய், அழகுள்ளதாய், அலங்காரம் பூண்டதாய் உள்ள கொங்கை யானை—யானை போற் பெரிய கொங்கைகளைப்—

பொதுவாகப் பலர்க்கும் விலை கூறும் மாதர்கள் (வேசையர்களின்) ரத்னம் பதித்துள்ள குழைகளின்மீது (தாவடி) போர் புரிவனவான அம்புகள் போன்ற (விலோசனம்) கண்கள் (உண்டுபண்ணும்) (வந்தியாலே)—கஷ்டத்தாலே—கொடுமையாலே—

(தீயிலிட்ட) மெழுகுபோல உள்ளம் உருகி, (அன்னார் தமது இதய கலகமோடு) அவ் வேசையர்களின் உள்ளத்தே தோன்றும் சச்சரவால் மனமயக்கம் கொண்டவனாய்ப், பலவிதமான—பரிதபிக்கத்தக்க—மனவேதனை — துன்பம் அடைந்து அடியேன்—

நெருங்கிவரும் மும்மலங்களின் மாயை வசத்தால் மிகவும் (கலவிய)—கலந்து—கலக்கம் கொண்ட என் அறிவானது ஏக (தொலைந்து அழிய), சாமீ (கடவுளே)! உனது (விதரணம்) கொடையாக சிவஞானோபதேசத்தை நீ எழுந்தருளிவந்து தந்து உதவுக;

எழுகிரிகள் நிலைபெயர்ந்தோட, கடல் மொகுமொகுஎன்று கலங்கி அலைகள் வீச—மண்ணுலகத்தவரின துன்பங்கள் கெட, அசுரத் தலைவர்களின் சேனையெல்லாம் தோற்று ஓட—

தேவர்கள் சிறையினின்றும் விடுபட, நாய், நரி, கழுகுகள்,(ககராஜன்)பக்ஷிராஜனும் கருடன் மேலேவட்டமிட, போர்க்களத்தில் பூதகண சேனைகள் நின்று உலவ—

செழுமை வாய்ந்த (மதகரி)—பிணிமுகம் என்னும் யானைமீதும், நீல நிறமுள்ள அழகிய, புதிய மயில்மீதும் ஏறுகின்ற பராக்ரம சாலியே! ஜெய ஜெய, முருகா! குகா! புகழோங்கு கந்தவேளே!

அலைகள் ஒன்றோடொன்று மோதிக் கரையில் மோதுகின்ற காவிரியில் வரும் நீர் பாயும் வயல்களும், குளங்களும் சூழ்ந்துள்ள **திருவிடைமருதூரில்** வீற்றிருக்கும் தம்பிரானே! (சிவஞானபோதகம் வந்து தாராய்).

திரிபுவனம்,

[இது திருவிடைமருதூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 2-மைல். தேவார வைப்பு ஸ்தலம்.]

666. திருவடியைப் பெற

தனதன தனதன தனதன தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன தந்ததான

தனுநுதல் வெயர்வெழ விழிகுழி தரவளை
சத்திக் கச்சில தித்திக் கப்படும் அன்புபேசித்-
தழுவிய மகளிர்த முகிழ்முலை யுரமிசை
தைக்கச்*சர்க்கரை கைக்கப் பட்டன தொண்டையூறல் ;
கனவிலு நுகர்தரு கலவியின் வலையிடை
கட்டுப் பட்டுயிர் தட்டுப் பட்டழி கின்றதோ தான்-
கதிபெற விதியிலி மதியிலி யுனதிரு
கச்சுற் றச்சிறு செச்சைப் பத்மப தம்பெறேனோ ;
முனைமலி†குலிசைதன் ம்ருகமத புளகித
முத்தச் சித்ர தனத்துக் கிச்சித அம்புராசி-
முறையிட முதுநிசி சரர்திரள் முதுகிட
முட்டப் பொட்டெழ வெட்டிக் குத்தும டங்கல்வீரா ;
அனுபவ மளிதரு நிகழ்தரு மொருபொருள்
அப்பர்க்‡கப்படி யொப்பித் தர்ச்சனை கொண்டநாதா-
அகிலமு மழியினு நிலைபெறு திரிபுவ
னத்துப் பொற்புறு சித்திச் சித்தர்கள் தம்பிரானே. (க)

கும்பகோணம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

---

* வாயூறல்—சர்க்கரை—“ இதழ் சர்க்கரைப் பழமொடுறழூறல் ”—திருப்புகழ் 928.

† “ குலிசாயுத குஞ்சரவா ”—கந்தரநுபூதி 45.

‡ “ அப்படி ” — சொற் பிரயோகம்—பாடல் 33-பக்கம் 97 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

திரிபுவனம்

866.

வில்லைப் போன்ற நெற்றியில் வெயர்வு உண்டாக, கண்கள் குழியிட்டுச் சுருங்க, வளையல்கள் சப்திக்க, சில ருசிகரமுள்ள அன்புப் பேச்சுக்களைப் பேசித்—

தழுவுகின்ற (பொது) மகளிருடைய அரும்புவிட்டுத் தோன்றும் கொங்கை மார்பின்மேல் தைக்க, சர்க்கரையும் கசக்கின்றது என்று சொல்லும்படியான வாயிதழ் ஊறலைக்—

கனவிலும் பருகுகின்ற புணர்ச்சி என்கின்ற வலையிலே (நான்) கட்டுப்பட்டு, (என்) உயிரானது தட்டுப்பட்டு (மாட்டிக்கொண்டு) அழிந்து போகின்றது தானோ (எனக்கு இட்ட விதி)!

நல்ல கதியைப் பெறுதற்கு வேண்டிய விதிப் பயன் இல்லாதவன் (நான்), அறிவு இல்லாதவன் (நான்)— அத்தகைய நான்) உன்னுடைய இரண்டு (கச்சு உற்ற) கால் பட்டிகை அணிந்துள்ள, சிறிய, வெட்சி, தாமரை அணிந்துள்ள திருவடியைப் பெறுவேனோ!

கூர்மை மிக உள்ள குலிசாயுதனுகிய இந்திரனது மகள் தேவசேனையின் கஸ்தூரி யணிந்ததும், புளகம் கொண்டதும், முத்துமாலை அணிந்ததும், அழகியதுமான கொங்கை மீது (இச்சித) ஆசை கொண்டவனே! கடல்—

ஓலமிட்டுக் கதறவும், பழைமைவாய்ந்த அசுரர்களின் கூட்டம் பின்னிட்டு ஓடவும், முற்றிலும் பொடிபட, வெட்டிக் குத்தின சிங்க வீரனே!

ஞானனுபவத்தை, (அளிதரும்) கொடுக்க வல்லதாய் (நிகழ்தரும்) உள்ள ஒப்பற்ற உபதேசப் பொருளை (பிரணவப் பொருளை) தந்தையாம் சிவபிராற்கு அந்த அருமையான வகையில் (அல்லது அந்த க்ஷணமே) உபதேசித்து அவரால் பூசிக்கப்பெற்ற (குருமூர்த்தியாம்) தலைவனே!

எல்லாப் பொருள்களும் அழியுங் காலத்தும் தான் அழியாது நிலைபெற்று நிற்கும் **திரிபுவனம்** என்னும் ஸ்தலத்தில் அழகு கொண்ட சித்திகளில் வல்ல சித்தர்களுக்கெல்லாம் தம்பிரானே!

(செச்சைப் பதம் பதம் பெறேனே)

867.

தந்ததனத் தானதனத் தந்ததனத் தானதனத்
தந்ததனத் தானதனத் தனதான

*இந்துகதிர்ச் சேரருணப் பந்திநடுத் தூணொளிபட்
டின்பரசப் பாலமுதச் சுவைமேவு-

†எண்குணமுற் றோனடனச் சந்த்ரவொளிப் பீடகமுற்
றெந்தை‡நடித் தாடுமணிச் சபையூடே;

xகந்தமெழுத் தோடுறுசிற் கெந்தமணப் பூவிதழைக்
கண்டுகளித் தேயமுதக் கடல்மூழ்கிக்-

oகந்தமதித் **தாயிரவெட் டண்டமதைக் கோல்புவனக்
கண்டமதைக் காணஎனக் கருள்வாயே;

இந்ததிமித் தீதகுடட் டுண்டுமிடட் டாடுடுடிட்
டிந்தமெனக் காளமணித் தவிலோசை-

---

* "உடுபதியை முட்டி யமுதூறல் உருகிவர"—எனவரும் 547-ஆம் பாடலைப் பார்க்க. இனி, இந்த முதலடிக்கு—

"சந்திரனும் சூரியனும் சேர்ந்த இடைகலை பிங்கலை நாடிகள் ஒன்று சேர்ந்த செந் நிறத்தின் வரிசை போன்ற நடுவிலுள்ள தூணின் ஒளிபட்டு (சுழுமுனை நாடியின் ஒளிபட்டு," — எனப் பொருள் காண்பர் கொழும்புப் பெரியார் மு. திருவிளங்கம் அவர்கள்; இப் பொருளுக்கு—"இந்து கதிர்...ஓடும் அந்த கால் நடுதூணில் தங்க"—எனவரும் 766-ஆம் பாடலைப் பார்க்க.

† 'எண்குண முற்றோன்'— 'எண்குண சுவாமி'—பாடல் 766.

‡ நடித்தாடு...சபை — "அமுதத்தை உண்டொரு கோடி நடனப் பதஞ்சபை"—என்றார் 647-ஆம் பாடலில்.

x "கந்தம் எழுத்தோடுறு—மூல மொழியோடு பொருந்திய—மூலமொழி என்பது பிரணவம்; சிற்கெந்த மணப்பூ இதழை—ஞானமாகிய மணம் கமழும்பூ இதழை"

—[இது திருவிளங்கம் அவர்கள் உரை]

'கெந்த மணப்பூ இதழ்'—இறைவன் பூ வண்ணத்தன்—
'மருவாய் மலராய்'—கந்தரநுபூதி 51.
'பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்ப
மாவண்ண மெய் கொண்டவன்'-திருவிளையாடல்; பாயிரம்.

[தொடர்ச்சி 541 ஆம் பக்கம் பார்க்க]

கும்பகோணம்

867.

சந்திரமண்டல ஒளியை·முட்டி (அங்கே) அந்த செவ்விய ஒழுங்கான திரட்சியுள்ள சோதி ஸ்தம்பத்தின் நடுப்பாகத்தே தாக்குண்பதால் பெருகிவரும் இன்பரசப் பாலமுதம் (இன்பச்சுவை தரும் பாலனைய அமுத ஊறலின் இனிய சுவையை மேவு (மேவி)—அனுபவித்து—

எண் குணம் கொண்ட இறைவன் நடனம் இயற்றும் நில ஒளிவீசும் பெருமை வாய்ந்த இடத்தைத் தரிசித்து, அங்கே எந்தை சிவபிரரன் நடனஞ்செய்து கூத்தாடும் அழகிய சபையின்கண்—

(கந்தம்) கூட்டமான (எழுத்தோடுறு) ஐம்பத்தொரு அக்ஷரங்களோடு (அல்லது பெருமை மணம்கொண்ட பிரணவ எழுத்தோடு) (சித் கெந்த மண) அறிவு என்கிற மிக்க நறுமணம் கொண்ட (பூ இதழை) இதழ்ப் பூவை—ஞான இதழ்கொண்ட மலரை—ஞானவாசம் வீசும் நறுமணப் பூவை—கண்டு களித்து (அறிவை அறிவால் அறிந்து)—அமுதக் கடலில் முழுகி—(ஆனந்தவாரியில்) முழுகி—

அந்த நறுமணத்தைப் போற்றிசெய்து, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வளைத்துக் கொண்டுள்ள (புவனக் கண்டமதை) ஈரேழுபுவனப் பகுதிகளை-பதினுலுலகங்களையும்-காணும்படி எனக்கு அருள்புரிவாயாக

திந்ததிமித் திதகுடட் டுண்டுமிடட் டாடுடுடிட் டிந்தம் என்று எக்காளம், மணிகள், (தவில்) மேள வகைகள் இவைகளின் ஓசை

---

o கந்த மதித்து—'கந்தவேளே! (நீ) நன்கு மதித்து'—என்பது ஆசிரியர் திருவிளங்கம் அவர்கள் உரை.

oo 'ஆயிரவெட் டண்டமதைக்கோல் புவனக் கண்டமதைக்காண'- 'அமுதவாரி உண்டு உலகு ஈரேழு கண்டு விளையாடி' 'லோகங்கள் வலமதாட' 'அகில புவனதியெங்கும் வெளியுற' — என வருவன காண்க —திருப்புகழ் 766, 179, 141-பார்க்க.

இனி, ஆயிரத்தெட்டு அண்டம் அதை — என்பதற்கு — ஆயிரத்தெட்டு இதழோடு பொருந்திய கமலத்தை உடைய துவாத சாந்த வெளியை எனவும், 'கோல புவனக் கண்ட மதை' என்பதற்கு- அழகிய அந்த துவாதசாந்த வெளியை'—எனவும் பொருள் கொள்வர் ஆசிரியர் திருவிளங்கம்.

சிந்தைதிகைத் தேழுகடற் பொங்கவரிச் சூர்மகுடச்
செண்டுகுலைத் தாடு*மணிக் கதிர்வேலா;

குந்தியரித் தாழ்துளபச் செந்திருவைச் சேர்களபக்
கொண்டல்நிறத் தோன்மகளைத் தரைமீதே-

கும்பிடகைத் தாளமெடுத் தம்பொனுருப் பாவைபுகழ்க்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே. (க)

868. மாதர்மீதுள்ள மயக்கு அற

தந்ததனத் தானதனத் தந்ததனத் தானதனத்
தந்ததனத் தானதனத் தனதான

தும்பிமுகத் தானைபணைக் கொம்பதெனத் தாவிமயற்
றெருந்தமெனப் பாயுமுலைக் கனமாதர்-

†தும்பிமலர்ச் சோலைமுகிற் கங்குலிருட் காரினிறத்
தொங்கல்மயிற் சாயலெனக் குழல்மேவிச்;

செம்பொனுருக் கானமொழிச் சங்கினொளிக் காமநகைச்
செங்கயலைப் போலும்விழிக் கணையாலே-

சிந்தைதகர்த் தாளுமிதச் சந்த்ரமுகப் பாவையர்தித்
திந்திமெனுற் றூடுமவர்க் குழல்வேனோ;

---

* 'மணிக்கதிர் வேலா'—பாடல் 286-பக்கம் 212 பார்க்க.
'மணிவேற் சேவலங் கொடியோன்'—கல்லாடம். 56

† "சிறைவண்டினஞ், சோலை, இருள்...குழலுக் கிணையாமே"
(உசித சூடாமணி)

(அசுரர்களின்) மனம் திகைக்கும்படியும் ஏழுகடல்களும் பொங்கி எழுமாறும், சிங்கம்போன்ற சூரனுடைய மணிமுடியிலுள்ள (செண்டு) பூச்செண்டை அழித்துத் தள்ளி விளையாடின மணிகட்டிய ஒளி வேலனே!

(குந்தியரித்தாழ்) அரி குந்தித் தாழ் — வண்டுகள் மொய்த்துக் குந்தி விரும்புகின்ற துளபமாலை அணிந்தவனும், செவ்விய இலக்குமியைச் சேர்பவனும் ஆன, (களபம்) கலவைச் சாந்து அணிபவனும், மேக நிறத்தவனும் ஆன—திருமாலின் மகளாம் வள்ளியை இப் பூமியின் கண்ணே—

கும்பிடும்பொருட்டுக் கைத்தாளம் போட்டு (அந்த) அழகிய பொன்—பொலிவு—உருவத்தவளாம் (அல்லது (பொன்) லக்ஷ்மியின் உருவ அழகைக் கொண்ட) பாவை வள்ளியைப் புகழ்ந்து போற்றின (அல்லது, வள்ளி புகழ்ந்து போற்றின) பெருமாளே! **கும்பகோணத்தில்** வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமாளே! (எனக்கு அருள்வாயே)

868.

து திக்கையை உடைய முகத்தைக்கொண்ட ஆனையின் பெருத்த கொம்புபோல வெளித் தோன்றிக், காம இச்சைக்குச் சம்பந்தம் உடையதென மேலெழுகின்ற கொங்கையைக் கொண்ட பெருமை வாய்ந்த மாதர்கள்—

வண்டுகளின் கூட்டம், மலர்ச்சோலை, மேகம், இரவு, இருள், இவற்றின் கார் (கரு) நிறத்தைக்கொண்டு, (தொங்கல்) தோகை மயிலின் சாயல்—அழகு இதென்று சொல்லும்படியான கூந்தலை உடையவர்களாய்—

செம்பொன் இளகி விழுகின்றதோ என்னும்படியான மொழியுடன், சங்கின் வெள்ளொளி போன்று காமத்தை ஊட்டும் பற்களுடன், செவ்விய கயல்மீன் போன்ற கண்களாம் அம்புகள் கொண்டு

(கண்ட ஆடவர்களின் மனத்தை) நொறுக்கிச் சிதற வைத்து ஆள்கின்ற இன்பத்தை ஊட்டும் சந்திரன் போன்ற முகத்தைக் கொண்ட (பாவையர்) பதுமை போன்றவர்கள், தித்திந்திம் எனப் பொருந்தி நடனம் ஆடுபவர் — அத்தகையோர் பொருட்டு நான் அலைச்சல் உறுவேனோ!

தம்பிவரச் சாதிதிருக் கொம்புவரக் கூடவனச்
சந்தமயிற் சாய்விலகிச் சிறைபோகச்-
சண்டர்முடித் தூள்கள்படச் சிந்தியரக் கோர்கள்விழத்
*தங்கநிறத் தாள்சிறையைத் தவிர்மாயோன்;
கொம்புகுறிக் †காளமடுத் திந்தமெனுற் ருடிநிரைக்
கொண்டுவளைத் தேமகிழச் சுதனீண-
கொஞ்சுசுகப் பாவையிணைக் கொங்கைதனிற் ருவிமகிழ்க்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே. (உ)

869. ஞானம் பெற

தந்தன தத்ததன தந்தன தத்ததன
தந்தன தத்ததன தனதான

கெண்டைநே ரொத்தவிழி மங்கைமோ கக்கலவை
கெந்தவா சப்புழுகு மணநாறுங்-
கிம்பு‡ரீ சக்களப கொங்கையா னைச்சிறிது
xகிஞ்சுகா ணப்பெருகி யடியேனும்;
மண்டிமோ சக்கலவி கொண்டுகா மித்துருகி
0வண்டன கப்புவியி லுழலாமல்-
வந்துஞா னப்பொருளி லொன்றுபோ தித்துனது
மஞ்சுதா ளைத்தினமு மருள்வாயே;

---

* சீதையின் நிறம்—
"என்னிறம் உரைக்கேன்......பொன்னிறங் கறுக்கும்
என்றால் மணிநிறம் உவமை போதா"
—கம்பராமா-நாடவிட்ட-65.

† யமுனை நதியில் ஒரு மடுவில் தன் விஷாக்கினியால் கலக்கின காளியன் என்னும் ஐந்துதலை நாகத்தைத் தண்டிக்கக் கண்ணபிரான் அருகிலிருந்த கடப்ப மரத்திலிருந்து அப் பாம்பின் தலைமேற் குதித்துத் துவைத்து நிர்த்தனம்செய்து அதன் வலியை அடக்கினர். நாக கன்னிகைகளின் வேண்டுகோளின்படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற்சென்று வாழும்படி விட்டருளினர்.
—பாடல் 245-2-பக்கம் 114; பாடல் 402-பக்கம் 518-கீழ்க்குறிப்பு.

‡ ஈசன்—பச்சைக் கற்பூரம்.

x கிஞ்சு — சிறிதான — 'ஆனந்த வாக்காலே கிஞ்சளவு கேட்கலுமாகும்' (ஒழிவிலொ—பொது-24.

0 வண்டன்—தீயோன் 'வண்டர் மும்மதில் மாய்தர எய்தவன்'
—சம்பந்தர் 1-58-7; திருப்புகழ் 805-ம் பார்க்க.

(தம்பி) தம்பியாம் இலக்குமணன்கூட வர, (சாதி) தன்மையிற் சிறந்த (திருக்கொம்பு) கொம்புபோல மெலிந்த திரு—இலக்குமி அனைய சீதை உடன்வர அவளைக் கண்டு காட்டில் உள்ள அழகிய மயில்களெல்லாம் இவள் சாயலின் முன் நமது சாயல் எந்த மூலை என ஒதுங்கி விலகி (சிறை) ஒருபுறம் போக

(சண்டர்) கடுங்கோபம் உடையவர்களாம் அரக்கர்களின் முடிகள் தூள்களாமாறு சிதறவைத்து (அந்த) அரக்கர்கள் மாண்டு விழும்படிச் செய்து, தங்க சொரூப முள்ளவளாம் சீதையின் சிறையை நீக்கின ஸ்ரீராமபிரானும் திருமால்—

ஊதுகொம்பை (புல்லாங்குழலை) குறி (தனக்கு) அடையாளமாகக் கொண்டு, (காளம்) விஷம் நிரம்பின (மடு) மடுவில் திந்தம் என்று பொருந்தி நடனம் செய்தவனும், (நிரை) பசுக் கூட்டங்களை ஒன்று கூட்டி வளைத்து ஓட்டி மகிழ்ந்தவனுமான (அச்சுதன்) கண்ணபிரான்—(ஈண) பெற்ற—

கொஞ்சும் (சுகம்) கிளிபோன்ற பாவை—பதுமை வள்ளியின் இரண்டு கொங்கைகள் மீது தாவி மகிழும் பெருமாளே! **கும்பகோணத்து** ஆறுமுகப் பெருமாளே!

(ஆடுமவர்க் குழல்வேனே)

869

கெண்டைமீன் போன்ற கண்களை உடைய மாதர்கள் மீதுள்ள ஆசைக் கலப்பானது—மிக்க நறுமணமுள்ள புனுகு சட்டத்தின் வாசனை வீசுவதும்—

கிம்புரி—தந்தத்திற் பூணணிந்தது போற் பூணணிந்ததும் ஈசக்களபம்—பச்சைக் கர்ப்பூரக் கலவை யணிந்ததுமான கொங்கை என்னும் யானையைச் சிறிதளவு கண்டதும் (காமம்) பெருகுற்று—அதிகமாகி, அதனால் அடியேனும்

விரைந்து சென்று மோசக்கலவி — வஞ்சகத்துக்கு இடமான புணர்ச்சியின்பம் கொண்டு, காம உணர்ச்சியிலே உள்ளம் உருகி (வண்டனை) தீயோனைப் பூமியில் (நான்) அலைச்சல் உறுமல்—

(நீ) வந்து ஞானப் பொருளில் ஒன்றை (எனக்கு) உபதேசித்து உன்னுடைய அழகிய திருவடியை நாள்தோறும் தந்தருளுக;

அண்டர்வா ழப்பிரபை சண்ட*மே ருக்கிரிய
ஊர்ந்துவீ ழப்பொருத கதிர்வேலா-

†அஞ்சுவா யிற்பரனை நெஞ்சிலூ றித்தவசி
‡னன்புளா ரைச்சிறையி டசுரோரைக் ;

கொண்டுபோய் xவைத்தகழு நெஞ்சிலே றக்கழுகு
கொந்தியா டத்தலையை யரிவோனே-

கொண்டல்சூ ழக்கழனி சங்குலா விப்பரவு
கும்பகோ ணத்திலுறை பெருமாளே. (ரு)

870. சித்ரத் தமிழ்பாட

தந்தன தத்தத் தனதான

oபஞ்சுசேர் நிர்த்தப் பதமாதர்-
பங்கமார் தொக்கிற் படியாமற் ;
செஞ்சொல்சேர்**சித்ரத் தமிழா லுன்-
செம்பொனூர் வத்தைப் பெறுவேனோ ;
††பஞ்சபா ணத்தற் பொருதேவர்-
பங்கில்வாழ் சத்திக் குமரேசா ;
குஞ்சரீ வெற்புத் தனநேயா-
கும்பகோ ணத்திற் பெருமாளே. (சு)

---

* "வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே"
—கந்தரலங்-62.

† அஞ்சு வாயில்—பஞ்சேந்திரிய வழிகளாலும்.

‡ அன்புளார்—, சிவபக்தர்கள்—தேவர்கள்
—பாடல் 765-பக்கம் 278 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

x வைத்த—கூர்மையாகிய, கழு—சூலம் (திவாகரம்)

o "பஞ்சொக்கும் அடிகள்"—கம்பராமா—மாரீசன் 70.

** சித்ரத்தமிழ் கொண்டு பாட வேண்டினது — இவ் வேண்டுகோள் வயலூரில் சித்தித்தது
—பாடல் 860, 863-பக்கம் 530 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

†† பஞ்சபாணத்தன்
—மன்மதன்—பாடல் 19-பக்கம் 60-கீழ்க்குறிப்பு.

தேவர்கள் வாழவேண்டி, ஒளிவீசுவதும் வலிமை கொண்டதுமான மேருமலை (கிரவுஞ்சம்) கலக்குண்டு விழும்படிப் போர்புரிந்த ஒளி வேலனே!

பஞ்சேந்திரிய வழிகளாலும் சிவபிரானை உள்ளத்தில் ஊறவைத்து (அழுந்தவைத்து)த் தவநெறியில் அன்புள்ள (தேவர்களை)ச் சிறையிலிட்ட அசுரர்களை—

கொண்டுபோய்க் கூர்மைகொண்ட (கழு) சூலம் அவர்கள் நெஞ்சில் ஏறிப் பாயவும், கழுகுகள் கொத்தி விளையாடும்படியும் அவர்கள் தலையை அரிந்தவனே!

மேகங்கள் சூழ்ந்த அந்த வயல்களிற் சங்குகள் உலவிப் பரவும் (பரந்திருக்கும்) **கும்பகோணத்தில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(தாளைத் தினமும் அருள்வாயே)

870.

பஞ்சுக்கு ஒப்பானதும் நடனம் செய்வதுமான பாதத்தை உடைய மாதர்களின்—

பாவம் (அல்லது குற்றம்) நிறைந்த உடம்புத் தோலிலே நான் படியாமல்—

செம்மையான சொற்கள் அமைந்துள்ள சித்ரத் தமிழால்—(அழகிய தமிழால்) உன்னுடைய

செம்பொன்னுக்கு ஒப்பான அன்பைப் பெற மாட்டேனோ!

ஐந்து மலர்ப் பாணங்களைக் கொண்ட மன்மதனைப் பொருதழித்த தேவர் (சிவபிரானது)

(இடது) பாகத்தில் வாழ்கின்ற (பரா)சத்தியின் குமரனும் தலைவனே!

யானை-ஐராவதத்தால்=வளர்க்கப்பட்ட தேவசேனையின் மலைபோன்ற கொங்கையை விரும்புவனே!

கும்பகோணத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(உன் ஆர்வத்தைப் பெறுவேனோ)

871. நாமவிசேடம்

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான

மாலை தனில் வந்து வீதி தனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி-
வாரிருத னங்கள் பூணொடுகு லுங்க
மால்பெருகி நின்ற மடவாரைச் ;
சாலைவழி வந்து போமவர்க ணின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்-
தாகமயல் கொண்டு மாலிருள மூந்தி
சாலமிக நொந்து த்வியர்மற் ;
*காலையிலெ ழுந்து னமமொ ழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்-
†காலமுமு ணர்ந்து ஞானவெளி கண்கள்
காணஅரு ளென்று பெறுவேனோ ;
கோலமுட னன்று சூர்படையின் முன்பு
கோபமுட னின்ற குமரேசா-
கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோணநகர் வந்த பெருமாளே. (ரு)

872. பிறப்பற

தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத் தனதான

கறுத்த குஞ்சியும் வெளிறி யெழுங்கொத்
துருத்த வெண்பலு மடைய விழுந்துட்
கருத்து டன்திகழ் மதியு மருண்டுச் சுருள்நோயாற்-
கலக்க முண்டல மலமுற ‡வெண்டிப்
பழுத்தெ ழும்பிய முதுகு முடங்கக்
கழுத்தில் வந்திளை யிருமலொ துங்கக் கொழுமேனி;

---

* "காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக் கண்டா"—சுந்தரர் 7-41-5. "சோதி நாமமே ஓதி உய்ம்மினே" —சம்பந்தர் 1-96-3.

† இறைவன் திருநாமங்களை ஓதுவதால் (ஞான) உணர்வும், ஞானக்கண்ணும் பெறலாகும்: 'உமை அலர்கொடு ஓதியர் உணர்வுடையோரே' — சம்பந்தர் 3-94-2 ; 'உமை உணர்பவர் கண்மதி மிகுவது கடனே' சம்பந்தர் 3-98-1. ‡ வெண்டி-நீர்வற்றி.

871.

மாலைப் பொழுதில் வந்து வீதியிலே நின்று, நறுமணம் உள்ள மலர்களைச் சிந்தும் கூந்தலைச் சிவிச் சிக்கெடுத்து

ரவிக்கை அணிந்த இரண்டு கொங்கைகளும் (அணிந்துள்ள) ஆபரணங்களுடன் குலுங்க, ஆசை-காமம் பெருகி நின்ற மாதர்களைத்—

தெருவின் வழியே வந்து போகின்ற ஆடவர்கள் நின்று (கண்டு) அம் மாதர்களின் தாழ்ந்து தொங்கும் கூந்தலைப் பார்த்து (உள்ளம்) தடுமாறிக்

காம மயக்கம் கொண்டு ஆசை இருளிலே அழுந்தி மிக மிக (மனம்) நொந்து (தவிப்பதுபோலத்) தவிப்பு உறாமல்

காலையில் எழுந்து, உன்னுடைய திருநாமங்களையே மொழிந்து, அன்பார்ந்த உமையின் குமரனே என்று ஓதி,

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப்படும் மூன்று காலங்களையும் உணரும்படியான சக்தியை அடைந்து, ஞானாகாச வெளியை (நான்) ஞானக் கண்கொண்டு காண, (உனது) திரு அருளை என்று பெறுவேனோ!

போர்க் கோலத்துடன் அன்று சூரனது சேனைகளின் முன்பு கோபத்துடன் நின்ற குமரேசனே!

மாதர்கள் (வள்ளி—தேவசேனை) இரண்டு பக்கங்களிலும் விளங்கக் (கல்வி, செல்வம்) வளரும் **கும்பகோணப்** பதியில் வந்து வீற்றிருக்கும் பெருமாளே! (அருளென்று பெறுவேனோ)

872.

கறுத்த மயிரும் வெளுத்துப்போய், எழுந்து வரிசையாய் உருவு கொண்டிருந்த வெள்ளைப் பற்களும் எல்லாம் விழுந்துபோய், உள்ளே கருத்துக்களுடன் விளங்கி யிருந்த புத்தியும் மருட்சி அடைந்து—மயக்க அறிவாகி, [உடலைச்] சுருட்டி மடக்கும் நோயால்—

கலக்கம் அடைந்து [இவ் வாழ்க்கை] போதும் போதும் என்னும் மனநிலை வர, நீர்வற்றிப் பழுத்த பழமாய், நிமிர்ந்தோங்கி இருந்த முதுகு வளைவு உறக், கழுத்திலே வந்து கோழையும் இருமலும் ஒதுங்கி நிற்கக், கொழுத்திருந்த மேனியானது—

அறத்தி ரங்கியொர் தடிகை நடுங்கப்
பிடித்* தி டும்புறு †மனைவியு நிந்தித்
தடுத்த மைந்தரும் வசைகள் விளம்பச் சடமாகி-
அழுக்க டைந்திடர் படுமுடல் பங்கப்
பிறப்பெ னுங்கட லழிய லொழிந்திட்
டடுத்தி ருந்திரு வடிதனை யென்றுற் றிடுவேனோ ;

புறத்த லம்பொடி படமிக வுங்கட்
டறப்பெ ருங்கடல் வயிறு குழம்பப்
‡புகட்ட ரங்கிய விரக துரங்கத் திறல்வீரா-
பொருப்பு ரம்படர் கிழிபட வென்றட்
டரக்கர் வன்றலை நெரிய நெருங்கிப்
புதைக்கு றுந்தசை குருதிகள் பொங்கப் பொரும்வேலா ;

சிறுத்த தண்டைய மதலையொ ரஞ்சச்
சினத்து மிஞ்சரி திரிதரு குன்றத்
தினைப்பு னந்திகழ் குறமகள் கொங்கைக் கிரிமேவிச்-
செருக்கு நெஞ்சுடை முருக சிகண்டிப்
பரிச்சு மந்திடு குமர கடம்பத்
திருக்கு டந்தையி லுறைதரு கந்தப் பெருமாளே.(சு)

---

* இடும்பு—அவமதிப்பு.

† "மனையவள் மனம் வேறாய்...மாதர் சீயென
வாலர் சீயென"—திருப்புகழ் 862.

‡ புகட் டாங்கிய—புகவிட்டு அரங்கிய ; அரங்கிய—அரக்கிய.

மிகவும் [திரங்கி]—வற்றிச் சுருங்கி, ஒரு தடியைக் கையிலே நடுக்கத்துடன் பிடித்து, அவமதிப்புக் கிடமான மனைவியும் [நிந்தித்து] இகழ, பக்கத்திலுள்ள—அடுத்துள்ள பிள்ளைகளும் [வசைகள் விளம்ப] பழிக்க, அறிவில்லாத பொருள் போலாகி.

உடலெலாம் அழுக்கு சேர, வேதனைப்படும் உடலுக்கு இடமாம் சேறுபோன்ற—[அல்லது பாவத்துக்கு இடமான] பிறப்பு என்கின்ற கடலில் அழிந்து போவது ஒழிந்து, [அடுத்திருந் திருவடி தனை] இரும் திருவடிதனை அடுத்து—பெருமை வாய்ந்த [உனது] திருவடிகளை அடுத்து—சரண்புக்கு என்று நான் பொருந்தி இருப்பேனோ!

வெளியிடங்கள் எல்லாம் பொடிபட்டு மிகவும் நிலை கலங்கவும், பெரிய கடலும் அதனது உட்புறமெல்லாம் குழம்பிக் கலங்கவும், [ஆங்காங்குள்ள] அசுரர்கள்மீது புகவிட்டு அவர்களை அரக்கிய—தேய்த்துச் சிதைத்த சாமர்த்தியமுள்ள குதிரையாகிய மயிலேறும் பராக்ரம சாலியாகிய வீரனே!

[பொருப்பு] கிரௌஞ்சகிரியின் [உரம்]—[படர்] படர் உரம்—பரவியிருந்த வலிமை [பரந்த திண்மை] பிளவு உண்டு அழிந்து போகும்படி வெற்றியடைந்து, [பகைவர்களை] அட்டு—கொன்று, அரக்கர்களின் வலிமை கொண்ட தலைகள் நெரிபட்டு [அழிய]—நெருங்கிச் சென்று உள்ளடங்கியுள்ள சதை, ரத்தம் இவைகள் [பொங்க] மேலெழப் போர்செய்த வேலனே!

சிறிய தண்டைகளை அணிந்தவனே! [மதலையோர்] பிள்ளைகள் பயப்படும்படி [அல்லது சிறிய தண்டைகள் அணிந்த [வேட்டுவக்] குழந்தைகள் பயப்படும்படி] [சினத்து மிஞ்சு அரி] கோபம் மிக்க சிங்கம் திரிகின்ற [வள்ளி] மலையில் தினைப்புனத்தில் விளங்கியிருந்த [குறமகள்] வள்ளியின் கொங்கையாம் மலையை [மேவி] விரும்பி, அடைந்து [அதனுல்]

செருக்கு—மகிழ்ச்சிகொண்ட நெஞ்சத்தை உடைய முருகனே! மயில் என்னும் குதிரை சுமக்கின்ற குமரனே! கடம்பனே! திருக் குடந்தையில் [கும்பகோணத்தில்] வீற்றிருக்கும் கந்தப் பெருமாளே!

[திருவடிதனை யென்றுற் றிடுவேனே]

873. ஞானம் பெற

தனத்த தந்தன தானன தானன
தனத்த தந்தன தானன தானன
தனத்த தந்தன தானன தானன தனதான

செனித்தி டுஞ்சல*சாழலு மேழலும்
விளைத்தி டுங்குடல் பீறியு மீறிய
செருக்கொ டுஞ்சதை பீளையு மீளையு முடலூடே-

தெளித்தி டும்பல சாதியும் வாதியும்
இரைத்தி டுங்குல மேசில கால்படர்
சினத்தி டும்பவ நோயென வேயிதை யனைவோருங்;

கனைத்தி டுங்கலி காலமி தோவென
வெடுத்தி டுஞ்சுடு காடுபு காவென
கவிழ்த்தி டுஞ்சட மோபொடி யாய்விடு முடல்பேணிக்-

கடுக்க னுஞ்சில பூடண மாடைகள்
இருக்கி டுங்கலை யேபல வாசைகள்
கழித்தி டுஞ்சிவ யோகமு ஞானமு மருள்வாயே;

தனத்த னந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து துந்துமி தாரைவி ராணமொ டடல்பேரி-

சமர்த்த மொன்றிய தானவர் சேனையை
வளைத்து வெஞ்சின வேல்விடு சேவக
சமத்து ணர்ந்திடு மாதவர் பாலருள் புரிவோனே;

---

* சாழல் — கூத்துவகை ; மகளிர் விளையாட்டு—

'நல்லார்தந் தோள்வீச்சு நற் சாழல்'— (சிலப் 3-13-உரை);

873.

(செனித்திடும்) பிறப்பு என்கிற [சலம்] பொய்ம்மையோடு கூடிய [சாழலும்] சாழல் விளையாட்டுப் போன்ற ஒரு விளையாட்டாகிய கூத்து என்ன, [ஊழலும்] அந்தப் பிறப்புடன் கூடிய [ஊழலும்] ஆபாசம் என்ன, பிறப்பில் ஏற்படும் குடல், அந்தக் குடலைக் கிழித்தெழுவது போல மேனோக்கி எழுகின்ற ஆணவம் என்ன! [உடலூடே சதை பீளையும் ஈளையும்] [அந்த உடலில் உள்ள] சதை, பீளை, கோழை என்ன!

ஏற்பட்ட பல ஜாதி என்ன! [தங்கள் ஜாதி மேற்பட்டதென்று] வாதிப்பவர் என்ன! கூச்சலிட்டுப் பேசும் குலத்தவர் என்ன! இங்ஙனம் [சிலகால்]—சில சமயங்களில் [படா] துன்பம்—வருத்தம்; [சினத்திடும்] கோபித்து எழுவதுபோல மிகுந்து எழும் [பவநோய்]—பிறப்பு ஒரு நோய் என்றே இவ் வாழ்வை எல்லாரும்

ஒலித்து எழும் கலிகாலத்தின் கூத்தோ இது என்று கூறுவதும், [பிணத்தை] எடுங்கள் சுடுகாட்டுக்குப் போக என்று [கூறுவதும்], அங்கேபோய்க் கவிழ்க்கப்படுவதுமான இந்த உடல் [தீயால்] பொடியாகச் சாம்பலாய்விடும்; அத்தகைய உடலை நான விரும்பிப் போற்றி—

[அவ்வுடலை அலங்கரிக்க] கடுக்கன் ஆதிய சில ஆபரணங்களை அணிவது என்ன! [ஆடைகள்] உடைகள் அணிவது என்ன, [இருக்கு] வேத மந்திரங்களாற் பெறப்படும் [கலை] சாத்திர நூல்கள் படிப்பது என்ன, பல திறத்த ஆசை வகைகளைக் கொண்டிருப்பது என்ன!—ஆக இவை எல்லாவற்றையும் ஒழிக்கவல்ல சிவ யோகத்தையும் சிவ ஞானத்தையும் அருள் புரிவாயாக.

தனத்த னந்தன தானன தானன...தகுத்து என்று (துந்துமி), பறை, (தாரை) நீண்ட ஊதுங்குழல், (விராணம்) வீராணம்—பெரிய பறை, இவையுடன் (அடல் பேரி)—வெற்றி முரசு இவைகளுடன் கூடிப்

(பொருதலுக்கு) போருக்கு என்று கூடி வந்த அசுரர் சேனையை வளைத்துக் கொடிய கோபங்கொண்ட வேலாயுதத்தைச் செலுத்தின பராக்ரமசாலியே! (உனது) (சமத்து) திறமையைத் தெரிந்துள்ள மாதவர் பால்—முநிவர்களுக்கு அருள் பாலிப்பவனே!

இணைப்பு ணந்தனி லே*மய லாலொரு
மயிற்ப தந்தனி லேசர ணுமென
திருப்பு யந்தரு மோகன மானினை யணைவோனே—

சிவக்கொ ழுஞ்சுட ரேபர னாகிய
தவத்தில் வந்தருள் பாலக்ரு பாகர
திருக்கு டந்தையில் வாழ்முரு காசுரர் பெருமாளே. (எ)

சோமீச்சுரம்.

[இது சோமநாதர் கோயில். கும்பகோணத்தி லுள்ள சிவாலயங்களி லொன்று. தேவார வைப்பு ஸ்தலம்.]

874. ஒத

தனன தன தனன தன தானன தான தன
தனன தன தனன தன தானன தான தன
தனன தன தனன தன தானன தான தன தன தான

கழிய குழல் சரியமுகம் வேர்வாட வாசமுறு
களபமுலை புளகமெழ நேரான வேல்விழிகள்
கயல்பொருது செயலதென நீள்பூச லாடநல கனிவாயின்—

கமழ்குமுத அதரவிதழ் தேனூறல் பாயமிகு
கடலமுத முதவியிரு தோள்மாலை தாழவளை
கலகலென மொழிபதற மாமோக காதலது கரைகாணு;

தெரியலுறு மெழுகுபத மாய்மேவி மேவியிணை
யிருவருட லொருவரென நாணாது பாயல்மிசை
†யிளமகளிர் கலவிதனி லேமூழ்கி யாழுகினு மிமையாதே—

---

* 'பணியா என வள்ளி பதம் பணியும் தணியா அதி மோக தயாபரனே'! (கந்-அநுபூதி-6).

† மனப்பாடஞ் செய்யவேண்டிய அருமைப் பாகம் இது முதல்.

'மகளிர் கலவிதனிலே மூழ்கி யாழுகினும்...இருபதமும் யானோத ஞானமதை யருள்வாயே' என இப் பாடலிற் கேட்டவர் "மடவார் தோள் ... புணர்ந்து மதிமயங்கினும் ... நின்பதங்கள் மறவேனே" என 1275-ஆம் பாடலிலும், 'மங்கையருடன் கலவி தாமுண் டுழல்கினும்...கழல் மறந்திடேனே' என 833-ஆம் பாடலிலும், 'மெல்லியர் காமக்கலவிக்கள்ளை மொண்டுண்டயர்கினும் வேல் மறவேன்' எனக் கந்தரலங்காரத்திலும் (37) திடத்துடன் கூறியுள்ளார்.

இனைப்புனத்திலே—காம இச்சையால்—ஒப்பற்ற மயில் போன்ற வள்ளியின் பாதத்தில் (சரண் நான என) அடைக்கலம் நான் என்று (நீ) கூறத், தனது திருப்புயங்களை உனக்குத் தந்த மயக்கவல்ல மான வள்ளியை அணைபவனே!

(சிவக்கொழுஞ்சுடரே) சிவத்தினின்றும் தோன்றிய செவ்விய சுடரே! (பரனாகிய தவத்தில் வந்தருள் பால க்ருபாகர) தவத்தில் வந்தருள் பரனாகிய பால க்ருபாகர—தவஞ்செய்வோர் பொருட்டுப் பரமனாக வெளித்தோன்றி வந்து அருளும் குழந்தைக் க்ருபாகரனே! திருக்குடந்தை (கும்பகோணத்தில்) — வாழும் முருகா! தேவர்கள் பெருமாளே!

(சிவயோகமும் ஞானமும் அருள்வாயே)

சோமீச்சுரம்

874.

கறுத்த கூந்தல் சரிந்துவிழ, முகம் வேர்வுகொள்ள, நறுமணம் உள்ள (களபமுலை) கலவைச்சாந்து அணிந்துள்ள கொங்கை புளகாங்கிதம் கொள்ள, செவ்வையான வேல் போன்ற விழிகள் கயல்மீன்கள் பொருகின்ற (சண்டை செய்கின்ற) செயலை ஒக்கப் பெரிய பூசலைச் செய்ய (காதுகளோடு பொர), நல்ல கொவ்வைக்கனி போன்ற வாயில்—

நறுமணம் உள்ள குமுதமலர் ஒத்த அதரம் எனப்படும் இதழினின்றும் தேன் அனைய ஊறல் பாய, அது நிரம்பக் கூடலமுதம் போன்ற அமுதத்தை உதவ, இரண்டு தோள்களிலும் மாலை தாழ்ந்து புரள, வளைகள் கலகல என்று ஒலிக்க, மொழிகள் பதற, மிக்க காம ஆசையானது கரைகடந்து பெருகி

எரியிற்பட்ட மெழுகின் நிலையை (மேவி—அடைந்து, மேவி இணை) இணையாக ஒன்றுபட்டு, இருவர் உடலும் ஒருவர் உடல்போல இணைந்து, கூச்சமில்லாமல், படுக்கையில் இளம் பெண்களுடன் புணர்ச்சியின்பத்தில் நான் முழுகி ஆழ்ந்திருந்தாலும், கண் இமை கொட்டுதலின்றி

இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை யீரா று தோள்நிரையும்
இருபதமு மறுமுகமும் யானோத ஞானமதை யருள்வாயே;

*உரிய தவ நெறியில்நம நாராய ணாயவென
ஒருமதலை மொழியளவி லோரா த கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னோதாய டாவெனுமு
னுறதூணில்-

உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிரல்
உகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
†உவணபதி நெடியவனும் வேதாவும் நான்மறையு
முயர்வாக;

‡வரியளிக ளிசைமுரல வாகான தோகையிள
மயிலிடையில் நடனமிட ஆகாச மூடுருவ
வளர்கமுகின் விரிகுலைகள் பூணார மாகியிட மதில்சூழும்-

x மருதரசர் படைவிடுதி வீடாக நாடிமிக
மழவிடையின் மிசையிவரு சோமீசர் கோயில்தனில்
மகிழ்வுபெற வுறைமுருக னேபேணு வானவர்கள்
பெருமாளே. (க)

---

* இரணிய சம்மாரம்
—பாடல் 327-1 பக்கம் 317-கீழ்க்குறிப்பைப் பார்க்க.

† 'உபநிடத னெடியவனும்' என்றும் பாடம்.

‡ ஏழாவது அடி—ஒரு நாடகக்காட்சி—பாடல்-வண்டு, ஆடல்—மயில், கமுகு—ஆடல் பாடலுக்கு ஆபரணங்கள் இனும் தரும் தலைவர்.

x முற்காலத்தில் கோயில்கள் மன்னர்களின் படை வீடாக உபயோகப் பட்டனவாம்.

"படைவீடு என்பது இன்னதென்று பத்துப் பாட்டில் ஒன்றாகிய மலைபடு கடாத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. சேயாற்றங் கரையில் நவிரம் என்னும் மலையில் காரியுண்டிக் கடவுளின் கோயில் சேனைகளாற் சூழப்பட்டிருந்ததென்று சொல்லியிருத்தல் இக்

[தொடர்ச்சி 557 ஆம் பக்கம் பார்க்க.]

இரவில் தூங்கினாலும், யாருடனாவது பேசிக்கொண்டு இருந்தாலும், உன்னுடைய இளமையையும் உன்னுடைய அழகு பூண்டுள்ள பன்னிரண்டு தோள் வரிசையையும், இரண்டு திருவடிகளையும், ஆறுமுகங்களையும், நான் ஓதும்படியான ஞானத்தை அருள்புரிவாயாக;

சரியான தவநெறியிலிருந்து "நம நாராயணாய" என்று ஒரு பிள்ளை (பிரகலாதன்) சொன்னவுடனே ஆராய்ச்சி அறிவு இல்லாத கோபத்துடன் "உன் கடவுள் எதனில் உளன் சொல்லடா" என்று கேட்டு முடியுமுன்னே அங்கிருந்த தூணில்—

வலிமையுடைய (நர) சிங்கத்தின் உருவமாய் (இரணியன்மேல்) மோதி அவனை விழச்செய்து, தனது விரல்களின் நகம் புதைய அவனுடைய மார்பைக் கிறிப் பிளந்து வெற்றி சூடினவனும், கருடனுக்குத் தலைவனும், நெடியவனும் (மாவலியின் பொருட்டு நீண்டவனும்) ஆன திருமாலும், பிரமனும், நான்கு வேதங்களும் மேன்மை பெற—

ரேகைகள் உள்ள வண்டுகள் இசை எழுப்ப, அழகுள்ள தோகை வாய்ந்த இளமயில் நடுவில் நடனம் செய்ய, ஆகாசத்தையும் ஊடுருவிச் செல்லும் அளவுக்கு வளர்ந்துள்ள கமுகமரத்தின் விரிந்த குலைகள் பூணுதற்குரிய ஹாரம் போல — ஆபரணமாக விளங்க, மதில் சூழ்ந்துள்ளதும்,

மருதரசர் (மருதநிலத்து மன்னர்கள்) (படைவிடுதி) பாசறையிடத்துக்குத் தக்க தலம் என மிக விரும்பத் தக்கதுமான (**சோமீசர் கோயிலில்**), இளமை வாய்ந்த இடபத்தின்மேல் ஏறிவரும் சோமீசர் என்னும் திருநாமமுடைய சிவபிரானது கோயிலில் — மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் முருகனே! விருப்பி நிற்கும் தேவர்கள் பெருமாளே!

(ஓத ஞானமதை அருள்வாயே)

கருத்தைப் புலப்படுத்தும் * * நன்னன் என்பான் அந்த ஸ்தலத்தைப் பாதுகாத்தற்குப் படைகளை அங்கே வைத்திருந்தான்"

—சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்-பக்கம் 57.

இந்த ஈற்றடியின் பொருள் பின்னும் ஆராயத் தக்கது.

கொட்டையூர்.

[இது கும்பகோணத்துக்கு மேற்கு 2-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.

875. அடியார்களொடு கூட

தத்ததனத் தத்ததனத் தத்ததனத் தத்ததனத்
தத்ததனத் தத்ததனத் தனதான

பட்டுமணிக் கச்சிறுகக் கட்டியவிழ்த் துத்தரியப்
பத்தியின்முத் துச்செறிவெற் பிணையா*மென்-

†பற்பமுகைக் குத்துமுலைத் தத்தையர்கைப் புக்குவசப்
பட்டுருகிக் கெட்ட வினைத் தொழிலாலே;

துட்டனெனக் ‡கட்டனெனப் பித்தனெனப் xப்ரட்டனெனச்
சுற்றுமறச் சித்தனெனத் திரிவேனைத்-

துக்கமறுத் துக்கமலப் பொற்பதம்வைத் துப்பதவிச்
சுத்தியணைப் பத்தரில்வைத் தருள்வாயே;

சுட்டoபொருட் கட்டியின்மெய்ச் செக்கமலப் பொற்கொடியைத்
துக்கமுறச் **சொர்க்கமுறக் கொடியாழார்-

சுத்தரதத் திற்கொடுபுக் குக்கடுகித் தெற்கடைசிச்
சுற்றுவனத் திற்சிறைவைத் திடுதீரன்;

---

* என்—என்று சொல்லும். † பற்பம்—பத்மம், தாமரை.

‡ "கட்டராய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்க வேண்டா"
—அப்பர் 4-11-2.

"சிறு நாயினுங் கடையாய வெங்கட்டனேனையும்"
—திருவாசகம் 30-2.

x ப்ரட்டன்—ப்ரஷ்டன்—
"அழுக்கரைக் கழுக்களாய பிரட்டரைக் காணு கண்"
—திருவிசைப்பா 4-3.

o பொருட்கட்டி—பொற்கட்டி. சீதையைத் 'தங்க நிறத்தாள்' என்றார்—868-ஆம் பாடலிலும்.

** சொர்க்க முறக் கொடி யாழார் சுத்த ரதம்—ஆகாயத்தை அளாவும் யாழ் (வீணைக்) கொடியைப் பெற்ற (ராவணனது) ரதம்.

(தொடர்ச்சி-பக்கம் 559 பார்க்க)

கோட்டையூர்

875.

பட்டாலாகிய அழகிய ரவிக்கையை அழுத்தமாகக் கட்டியும் அவிழ்த்தும், (உத்தரியப் பத்தியின்) மேலாடையின் வரிசையின் கீழ் முத்து (மாலை) நெருங்கிய மலை யிரண்டாகும் என்று சொல்லத் தக்கனவும்—

தாமரை மொட்டுப் போன்றனவுமான குத்து முலைகளை உடைய கிளி போன்ற வேசையர்களின் கையில் அகப்பட்டு, அவர் தம் வசத்திலே சிக்கி உருகிக் கேடு தருவதும் வினையைப் பெருக்குவதுமான செயல்களிலே—(ஈடுபட்டுத்)—

துஷ்டன் என்றும், துன்பத்துக்கு ஆளானவன் என்றும், பித்தன என்றும், (பிரட்டன்) நெறியினின்று வழுவினவன் என்றும், எங்கும் திரியும் (மறச்சித்தன்) பாவ எண்ணங்களை உடையவன் என்றும் திரிகின்ற என்னுடைய

துக்கங்களை ஒழித்துத், தாமரையன்ன அழகிய திருவடியில் என்னைச் சேர்த்தும், (பதவிச் சுத்தி) சுத்திப்பதவி—பரிசுத்தமான நல்ல பதவியை அணைந்துள்ள பக்தர் கூட்டத்திற் சேர்ப்பித்தும் அருள்புரிவாயாக.

சுட்ட தங்கக்கட்டி போன்ற தேகத்தை உடையவளும், செங்கமலத்தில் வீற்றிருக்கும் இலக்குமியுமேயான அழகிய கொடிபோன்ற சீதையைத் துக்கப்படும்படிச் செய்து, ஆகாயத்தை அளாவும் (யாழ்) வீணைக்கொடி விளங்கும்—

தூய்மை வாய்ந்த தேரில் (அவளை) எடுத்துக் கொண்டுபோய் வேகமாகத் தெற்குத் திசையை (அடைசி) நெருங்கி, வளைந்தமைந்த (அசோக) வனத்திற் சிறையில் வைத்த (ராவணன்) என்னும் தைரியசாலியின்

ராவணனுக்கு வீணை (யாழ்) கொடி:

(சடாயு) ராவணனுடைய "காண்டகு நீண்ட வீணைக் கொடிப் பற்றி யொடித்துயர் வானவர் ஆசி கொண்டான்"

—கம்ப ராமா-சடாயு உயிர்-107.

கோட்டமறப் *புற்றரவச் செற்றமறச் சத்தமறக்
குற்றமறச் சுற்றமறப் பலதோளின்-
கொற்றமறப் பத்துமுடிக் கொத்துமறுத் திட்டதிறற்
†கொற்றர்பணிக் கோட்டைநகர்ப் பெருமாளே. (க)

சிவபுரம்

[கும்பகோணத்துக்குத் தென்கிழக்கு 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

876. ஞானநெறி பெற

தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன தனதான

‡மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புன லு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி xமூணெழு வகையாலே-
வருசு கந்துய ராசையி லேயுழல்
மதியை வென றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனினி வருள்சேராய்;
செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி யெண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா;

---

* ராவணனுக்குப் "புற்றரவச் செற்றம்"—(பாம்பின் கோபம்)—
'தீவிடத் தரவந்தானே, உருகெழு சீற்றம் பொங்கிப்
பணம்விரித் துயர்ந்த தொத்தான்'—கம்பராமா-சடாயு-65.

† கோட்டையூரில் திருமால் (சிவனைப்) பூசித்து வணங்கினது:
"ஓணத்தவன் போற்ற இட்டத்தன்"
"மால்பரவி வணங்கு தென்கோடீச் சுரவள்ளல்"
—கோடீச்சுரக் கோவை 137, 389.

‡ "ஐம்பூதத்தான் ஆகியதோர் ஆக்கைக் குகையுட் படுமுயிர்"
—வேற்பத்து-9.

x பதிமூணு எழு வகை—(தத்துவம் 96; இதிற் சிவதத்துவம் 5-நீங்க மற்ற) 91-தத்துவக்கூட்டம்—(பாடல் 157-பக்கம் 366-367.

[தொடர்ச்சி 561 ஆம் பக்கம்]

(கொட்டம்) இறுமாப்பு அழிவடைய, புற்றுப் பாம்பின் கோபம்போலக் கோபிக்கும் கோபம் அற்று ஒழிய, (சத்தம்) குரல் ஒலியும் அடங்க, சுற்றத்தார்கள் யாவரும் மாண்டுபோக, அவனுக்கு இருந்த பல தோள்களின்

வீரம் குலையப் பத்துமுடிக் கூட்டத்தை அறுத்துத் தள்ளின வீரம்கொண்ட (கொற்றர்) கொற்றவர் — வெற்றியாளராம் ஸ்ரீ ராமர் (திருமால்) பணிந்து பூசித்த **கோட்டையூரிற்** பெருமாளே!

(பத்தரில் வைத் தருள்வாயே)

சிவபுரம்

876.

மனமென்னும் ஒரு பொருளுடனே (வான்) ஆகாயம், (அறைகால்) எறிகின்ற காற்று, நெருப்பு, நீர், இவையுடன் (புவி) மண் (ஆகப் பஞ்சபூதங்கள்) கூடியதான ஒரு தேகம் என்னும் உருவத்தைக் கொண்டு, அதிலே (13×7) 91 தத்துவக் கூட்டங்களின் கூறுபாடுகளாலே—

ஏற்படுகின்ற இன்பம், துன்பம், ஆசை எனும் இவற்றிலே அலைச்சலுறுகின்ற என் புத்தியை நான் ஜெயித்து அடக்கி மிக மேலானதான ஞானமென்னும் நன்னெறியைப் பெறும்படியாக, நாயனைய அடியேனுக்கு உன்னுடைய திருவருளைக் கூட்டுவிப்பாயாக!

(ஜெனனி) (உலகங்களின்) தோற்றத்துக்கு ஆதாரமானவள், சங்கரி, (ஆரணி) வேத முதல்வி (அல்லது) ஆத்திமலரணிந்தவள், நாராயணி, (விமலி) குற்றமற்றவள், எண் குணங்களும் நிறைந்தவள், எவற்றிற்கும் காரணமானவள், சிவை, பராபரை ஆகிய பார்வதிதேவி அருளிய குழந்தையே!

---

o எண்குணம்—பாடல் 766-பக்கம் 282 கீழ்க்குறிப்பு.

எண் குணங்களாவன—தன் வயத்தனாதல், தூய உடம்பின னாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை (திருக்குறள் (9) உரை).

சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
*சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே;

†கனக னங்கையி னுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே-

கதற வென்றுடல் கீணவ னுருயி
ருதிர முஞ்சித ருதமு தாயுணு
கமல வுந்திய னாகிய மால்திரு மருகோனே;

தினக ரன்சிலை வேளருள் மாதவர்
சுரர்க ளிந்திர னுரர காதிபர்
திசைமு கனசெழு மாமறை யோர்புக ழுமகோனே-

‡திருமடந்தையர் நாலிரு வோர்நிறை
அகமொடு டம்xபொனி னுலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக பெருமாளே! (க)

திருநாகேச்சுரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். கும்பகோணத்துக்குக் கிழக்கு 4-மைல். மூவர் பாடலும் பெற்றது.]

877. கடையய பிறப்பினர்

தானன தானத் தனத்த தத்தன
தானன தானத் தனத்த தத்தன
தானன தானந் தனத்த தத்தன தனதான.

ஆசார வினக் குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னானைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்-

---

* முருகவேளுக்குச் சிவபிரான் வேல் தந்தது:
"அவர் தந்தரு ளும் போர் வேலவ"
பாடல் 779-பக்கம் 314 கீழ்க்குறிப்பு.

† இரணிய சம்மாரம்:—பாடல் 327-1. பக்கம் 317 கீழ்க்குறிப்பு.

‡ திருமடந்தையர் நாலிருவோர்—அஷ்ட லக்ஷ்மி-தனலக்ஷ்மி, தானிய லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, வீர லக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி, கீர்த்தி லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, ராஜ்ய லக்ஷ்மி.

[தொடர்ச்சி 563 பக்கம்.]

சிறையி லடைபட்டிருந்த தேவர்களும், பெரிய முனிவர்களும் மேலான சுக நிலையைப்பெற, அசுரர்களுடைய கூட்டமெல்லாம் வேரற்றழியச் சிவபெருமான் மகிழ்ந்து (உனக்கு) அருளிய கூர்மைகொண்ட வேலைச் செலுத்தின முருகனே!

(கனகன) இரணியன் தனது அங்கையால் அறைந்த தூணினின்றும் (மனித சிங்கமதாய்) நரசிங்கமாய், மலை, பூமி, திசைகள், கடல் இவையாவும் கலக்கம் கொள்ளும்படித் (தோன்றி) (அந்த இரணியனுடன்) போர்செய்து நகத்தின் நுனியாலே

(அந்த இரணியனைக்) கதறியழும்படிச் செயங்கொண்டு அவன் உடலைக் கீறிப் பிளந்து, அவனது அரிய உயிரை இரத்தம் சிதறுதவண்ணம் அமுதாக உண்ட தாமரை போலும் (உந்தி) கொப்பூழை உடையவனாகிய திருமாலின் அழகிய மருகனே!

சூரியன், (கரும்பு) வில்கொண்ட (வேள்) மன்மதன், அருள் நிறைந்த முனிவர்கள், தேவர்கள், இந்திரர்கள், நாகலோகத்துத் தலைவர்கள், பிரமன், செழுமிய சிறந்த அந்தணர்கள்—போற்றிப் புகழும் அழகனே!

அஷ்ட லக்ஷ்மிகள் நிறைந்த வீடுகளுடன், அழகிய பொன்னால் ஆய (ஆலயம்) கோயில் சிறப்புற்று விளங்கும் **சிவபுரம்** என்னும் தலத்தில் வாழ்கின்ற குருமூர்த்தியே! பெருமாளே! (ஞானநல் வழிபெறும்படி...அருள் சேராய்).

திருநாகேச்சுரம்

877.

ஆசார ஒழுக்கங்களில் குறைபாடு உடையவர்களாய் விதண்டாவாதம் (முறைகெட்ட தருக்கம்) செய்பவரான துஷ்டர்கள், தாய் தந்தையரைப் பழிக்கின்ற துஷ்டர்கள், (ஆமா) பசுவின் மாமிசத்துக்காக அதைக் கொல்லும் துஷ்டர்கள், பிறன் மனைவியை—

x அகமோ டம்பொனின் ஆலயம்:

'நகமதில் கனம் மருவிய சிவபுரம்' (கனம்—பொன்). சம்பந்தர் 1-21-5.

ஆகாதெ னுமற் பொசித்த துட்டர்கள்
நாளுவு பாயச் சரித்ர துட்டர்கள்
ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள் தமியோர்சொங் ;

ஊசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை-

கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப்பி றப்பினி லுழல்வாரே ;

*வீசாவி சாலப் பொருப்பெ டுத்தெறி
பேராழ வாரச் சமுத்தி ரத்தினில்
மீளாம லோடித் துரத்தி யுட்குறு மொருமாவை-

வேரோடு வீழத் தறித்த டுக்கிய
போராடு சாமர்த் தியத்தி ருக்கையில்
வேலாயு தா†மெய்த் திருப்பு கழ்ப்பெறு வயலூரா ;

நாசாதி ப்ரார தத்துக்க மிக்கவர்
மாயாவி காரத் தியக்க றுத்தருள்
ஞானோப தேசப் ப்ரசித்த சற்குரு வடிவான-

---

* **வீசா விசாலப் பொருப்பு எடுத்தெறி...சமுத்திரம் :**

'மலைக்கு நிகரொப்பன வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி... அலைக்குங் கடல்'—சுந்தரர் 7-4-1.

'மலைக் குவடெனத் திரை'—சம்பந்தர் 3-76-1.

† அருணகிரியார் தடுத்தாட்கொள்ளப்பட்டுத் திருப்புகழ்சித்தம் ஓதும் பேற்றினைப் பெற்ற தலம்—வயலூர்
—திருப்புகழ் 105, 135 பார்க்க.

(இச்சித்தல்) கூடாது என்னும் நல்லறிவு இல்லாமல் (பெசித்த) அனுபவித்த துஷ்டர்கள், பலவித தந்திரச் செயல்களைச் செய்த வரலாற்றை உடைய துஷ்டர்கள், (ஆவேச நீரை)க் கள்ளைக் குடித்த துஷ்டர்கள், (தமியோர்) திக்கற்றவர்களின் (சொம்) சொத்தைக்—

கூச்சப்படாமல் தமக்குச் சேரும்படி பிடுங்கின துஷ்டர்கள், ஊரார்களுடைய (எல்லாருடைய) ஆசைகளையும் (தாமே கொண்டு) அறிவின்றிக் குழறும் துஷ்டர்கள், (கோலால) கோலாகல—ஆடம்பரத்துடன் வாள் போரிலும் விற்போரிலும் அகந்தை பூண்டு (தீயன செய்யும்) துஷ்டர்கள்—குருவின் சேவை

கிடைக்கப்பெறுத (பாவத்து அவத்த) பாவமும் கேடும் கொண்ட துஷ்டர்கள், ஒருவருக்கும் கொடுக்காமல் தேடித் தேடிப் (பொருளைப்) புதைத்து—மறைத்துச் சேகரிக்கும் துஷ்டர்கள்—ஆகிய இந்தத் துஷ்டர்கள் யாவரும் (கோமாள நாயில்) கும்மாளம் போடும் நாயின் இழிவான பிறப்பை அடைந்து அதில் அலேச்சல் உறுவார்கள்—

வீசிப் பெரிய (மலையை எடுத்து) மலைபோன்ற அலைகளை எடுத்து எறிகின்ற மிக்க ஒலியைப் பெருக்கும் கடலில் (பகைவன் — சூரன்) திரும்பமுடியாத வகையில் ஓடி (அவனைத்) துரத்திப், பயம்கொண்ட அந்த ஒப்பற்ற மாமரமாம் சூரனை—

வேருடன் விழும்படியாக வெட்டிக் குவித்த போரினைச் செய்த திறமை வாய்ந்ததும் (உனது) திருக்கையில் உள்ளதுமான வேலாயுதனே! மெய்ம்மையே வாய்ந்த (உனது) திருப்புகழை (யான் ஓதி நீ) பெறவைத்த வயலூரனே!

(நாசம்) கேடு முதலிய தீயன பயக்கும் (பிராரத்த துக்கம்) இம்மையில் அனுபவிக்கவேண்டிய பழவினையால் வரும் துக்கம் மிக்கவர்களுடைய மாயை சம்பந்தமாய்க் கவலையைத் தரும் மயக்கத்தை ஒழித்தருளும் ஞான உபதேசம் செய்த கீர்த்தியைக் கொண்ட சற்குரு வடிவமான

நாதாவெ னுமுற் றுதித்தி டப்*புவி
யாதார மாய்கைக் கு†முட்ட முற்றருள்
நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே. (௧)

கூந்தலூர்.

[இது கும்பகோணத்துக்குத் தென்கிழக்கு 7-மைல் தூரத்தி லுள்ள 'பேணு பெருந்துறை' என்னுந் தலத்துக்கு அருகி லுள்ளது. தேவார வைப்பு ஸ்தலம்.] அரிசிலாற்றின் தென்கரையில் உளது; வடகரையில் 'கருவிலி' என்னும் தலம் உளது.

878. பூசிக்க

தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன தனதான

தரையினில் வெகுவழி சார்ந்த மூடனை
வெறியனை நிறைபொறை வேண்டி டாமத
சடலனை மகிமைகள் தாழ்ந்த வினனை மிகுகோபி-
தவநெறி தனைவிடு தாண்டு காலியை
யவமதி யதனில்பொ லாங்கு தீமைசெய்
‡சமடனை வலியஅ சாங்க மாகிய தமியேனை;
விரைசெறி குழலியர் விம்பு நாரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை போகியர்
விழிவலை மகளிரொ டாங்கு கூடிய வினையேனை-
xவெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுற பரிவொடு வீழ்ந்து தாடொழ அருள்வாயே;

---

* புவி ஆதாரமாய்கைக்கு — உலகுக்கெல்லாம் ஆதாரமாய்ப் பயன் படும்படியான ஒரு நீதிநெறி விளக்கம். அத்தகைய விளக்கப் பொருளை முருகவேள் சிவனுக்கு உபதேசித்தார். அங்ஙனம் சிவபிராற்கு அவர் உபதேசித்த பொருள் 'வள்ளிச் சன்மார்க்கமாம்' என்று அருணகிரியார் 317-ஆம் பாடலில் விளக்கியுள்ளார்; ஆதலால் உலகினோர் உய்வதற்கு ஆதாரம் அந்த வள்ளிச் சன்மார்க்கத்தைக் கைப்பற்றுதலேயாம். —(பாடல் 317-பக்கம் 288-கீழ்க்குறிப்பு).

† "முட்ட முற்றருள்"—பிரணவப் பொருள் முழுமையும் விவரித்து விளக்குதல்—"பிரணவ முதுபொருட் செறிவெலாம் மொழிதரக் கேட்டான்"—தணிகைப் புராணம்-வீராட்ட-117.

‡ சமடன்—மசடன் — என்பதன் திரிபு எனக் கொள்ளலாம்; சமடன்—மடமையொடு கூடினவன் எனவும் பொருள் காண்பர்.

x இந்த அடி மனப்பாடஞ் செய்யத்தக்க அருமையான அடி.

நாதனே !'—என்று முன்னொருகாலத்தில் (உன்னை உன் தந்தை) துதிசெய்ய, புவி ஆதாரம் ஆய்கைக்கு—உலகினருக்கு ஒரு ஆதரவுச் சாதனம் (பிரமாணம்) ஆகும் பொருட்டு—முழுதும நன்றாக நீ அருளிய 'நாகேசன்' என்னும் திருப்பெயரை உடைய தந்தையால் (சிவபிரானால்) மெச்சப்பெற்ற பெருமாளே !

(துட்டர்கள்...கடைப்பிறப்பினில் உழல்வாரே)

கூந்தலூர்

878.

இந்தப் பூமியிலே ஒரு நல்ல நெறியில் நில்லாது பல (தீய) வழிகளிலும் சார்ந்துள்ள மூடனாகிய எனை, குடிவெறி கொண்டவன் போன்ற பித்தனை, (நிறை) மனத்தைக் கற்புவழியில் நிறுத்துதல், (பொறை) பொறுமை அடக்கம் இவை இருக்கவேண்டும் என்கின்ற விருப்பமே இல்லாத (மத சடலனை) செருக்குக் கொண்ட அறிவிலாப் பொருள் போன்றவனை, ஒருவித பெருமையும் இல்லாது தாழ் நிலையில் இருக்கும் வீணனை, நிரம்பின கேள்வி,

தவவழி இவைகளை விட்டுத் (தாண்டு காலியை) கண்டவழியில் திரிபவனை, (அவமதியதனில்) கெட்ட புத்தியால்—பயனற்ற புத்தியால்—(பொல்லாங்கு) கேடு, தீமை செய்கின்ற (சமடனை) மசடனை—குணங்கெட்டவனை, வேண்டுமென்றே சாதியில் விலக்கப்பட்டவனைக் கதியற்றவனை (அல்லது, ஒழுக்கம் இல்லாத கதியிலியை)

நறுமணம் நிறைந்த கூந்தலை உடையவர், பிடிவாதமுள்ள மாதர், சந்திரனை ஒத்த முகத்தை உடைய மாதர், விருப்பத்தை எழுப்பும் காமமயக்கிகள், கண் என்னும் வலையை வீசும் மகளிர்—இத் தகையோருடன் அவ்வச் சமயங்களில் கூடிய தொழில் உடையவனாகிய நான்—

நிரம்ப மலர்கொண்டு விரும்பிப் பூசித்தாகிலும், அல்லது ஒரு பூவோ ஒரு இலையோ கொண்டாகிலும், (உன்னை) நினைத்து, நல்ல வகையான அன்புடன் கீழே வீழ்ந்து உனது திருவடியைத் தொழுமாறு அருளுவாயாக ;

ஒருபது சிரமிசை போந்த ராவண
னிருபது புயமுட னேந்து*மேதியு
†மொருகணை தனிலற வாங்கு மாயவன் மருகோனே-

உனதடி யவர்புக ழாய்ந்த நூலின
ரமரர்கள் முனிவர்க‡ளீந்த பாலகர்
உயர்கதி பெறஅரு ளோங்கு மாமயி லுறைவோனே;

குரைகழல் பணிவொடு கூம்பி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்
குலமுழு தனைவரு மாய்ந்து தூளெழ முனிவோனே-

xகொடுவிட மதுதனை வாங்கி யேதிரு
மிடறினி லிருவென ஏந்து மீசுரர்
குருபர னெனவரு கூந்த லூருறை பெருமாளே. (க)

திருச்சத்திமுத்தம்.

[கும்பகோணத்துக்குத் தென்மேற்கு 4-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

879. மாதர்மீது மயக்கு அற

தனதனன தத்தத்த தத்தத்த தத்ததன
தனதனன தத்தத்த தத்தத்த தத்ததன
தனதனன தத்தத்த தத்தத்த தத்ததன தனதான

கடகரிம ருப்பிற்க திர்த்துப்ர மிக்கமிக
oவுரமிடநெ ருக்கிப்பி டித்துப்பு டைத்துவளர்
கனகுடமொ தத்துக்க னத்துப்பெ ருத்தமணி யணியாலே-

---

* எதி—வாள்.
† ஒரு கணை வாங்கினது—பாடல் 452-பக்கம் 6 கீழ்க்குறிப்பு.
‡ ஈந்த பாலகர்—கொடுத்து ரக்ஷிப்போர்.
x சிவபெருமான் விடத்தை வாங்கி உண்டது—
"அழல்கான்ற நஞ்சை எனத்தா என வாங்கியதுண்ட கண்டன்"—சம்பந்தர் 2-19-10.
"நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவும் நன்மைப் பொருள் போலும்"—சம்பந்தர் 1-69-2.

[தொடர்ச்சி 569-ஆம் பக்கம் பார்க்க]

ஒப்பற்ற பத்துத் தலைகளுடன் (போருக்கு) வந்த ராவணன், இருபது கரங்களுடன் ஏந்தின வாளானது தனது ஒரே பாணத்தால் அற்றுவிழும்படி (பாணத்தைச்) செலுத்தின திருமாலின் மருகனே!

உன்னுடைய அடியார்களுடைய புகழை ஆராய்ந்த நூல் வல்லவர்களும், அல்லது உனது அடியார்களும், [உனது] திருப்புகழை ஆய்ந்த • நூல் வல்லவர்களும், தேவர்களும், முனிவர்களும், கொடையால் ரக்ஷிப்போர்களும், உயர்ந்த நற்கதியைப்பெற, அருள் விளங்கும் அழகிய மயிலில் வீற்றிருப்பவனே!

ஒலிக்கின்ற உனது திருவடியைத் தாழ்மையுடன் கும்பிடாதவர்களும், சண்டை செய்யும் போர்க்களத்தே தருமநெறியைக் கைவிட்டவர்களுமான சூராதிகளின் குல முழுமையும் — அ சு ர ர் க ள் யாவரும்—மாண்டுபோய்ப் பொடியாகும்படிக் கோபித்தவனே!

பொல்லாத விஷத்தைக் 'கொடு' என வாங்கி அழகிய கழுத்தினில் 'இரு' என்று அதை நிறுத்தி, அங்கேயே அதைத் தாங்கி நிலைக்கவைத்த சிவபிரானுக்குக் குருமூர்த்தி என வந்துள்ள பெருமாளே! **கூந்தலூர்** என்னும் தலத்தில் உறைகின்ற பெருமாளே!

(தாள் தொழ அருள்வாயே)

திருச்சத்திமுத்தம்.

879.

(கடகரி) காட்டுயானையின் (அல்லது) மதயானையின், தந்தம்போலக் (கதிர்த்து) — ஒளியுடன் வெளிப்பட்டு யாவரும் மிகவும் பிரமிக்கத்தக்கவகையில், மார்பிடம் முழுமையும் நெருக்கமாக ∘ அடைத்துப் பருத்து வளர்கின்றதும், பொற்குடம் போன்றதும், பெரிதாயுள்ள ரத்னாபரணத்தாலே கனம் கொண்டுள்ளதும்,

---

∘ **உரம் இடம் நெருக்குதல் :**

"ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்"
—திருவாசகம்-போற்றி 34.

"இடையீர்போகா இளமுலை"—சம்பந்தர் 1-54-2.

ஒளி விளங்கும் சிமிழ்போல நன்கு தோன்றும்படி பொருத்திவைக்கப்பட்டு, மகிழ்ச்சியை ஊட்டும் தாமரையின் மொட்டைப்போல அன்புடன் பாராட்டப்பட்டு அமைந்துள துமான கொங்கையை, நறுமணம் வீசும் வாசனைகொண்ட செந்நிறமுள்ள (கலப்பை) கலவைச் சாந்து (பொதிந்துள்ள) நிரம்பியுள்ள கொங்கையை — விட்டு நீங்காது—

விஷத்தையும், மாவடுவையும் போன்று (வில்) புருவமான வில்லின் கீழ்ச் சிக்கவைத்த செயலுக்கு ஒப்ப நின்று, (நிறம் இயற்றிக் குயிற்றி) ஒளி தருதலைச் செய்து— ஒளிவீசிப் புரள்வதாய் எழுகின்ற கயல்மீன் போன்ற கண்கள் வெருட்டியும், ஓட்டியும், காதில் உள்ள குழையின்மீது பாய—(அதனால்)

க(ள்)ள மதனுக்கு — திருட்டுத்தனம் உள்ள மன்மதனுக்கு வெற்றியைத் தந்து உலவுகின்ற கடுமையான சொற்களை (அல்லது விஷம் போன்ற மொழியை) அதிகமாகப் பேச அதனால் நான் களைத்துச் சோர்வு உற்று அந்தக் (கொடிச்சியர்களின்) கொடிபோன்ற பெண்களின் (கணியினில்) க(ண்)ணியினில் — வலையில் அகப்பட்டு (அந்தச் சிக்கு) என்னை அழுத்துவதால் துன்பப்படுவதை ஒழிக்க மாட்டேனோ! நீக்கேனோ!

சாம்பல் பூசும் முக்கண் பெருமானுக்குப் பொருள் சொல்லி அரிய மறைப்பொருளை உபதேசித்து, உலகத்தைப், பெருத்த மயிலை முன்பு நடத்தி, ஒரு கணப்பொழுதிற் சுற்றி வந்த அழகனே!

(அபகடம்) பொல்லாங்கு—வஞ்சகப் பேச்சைப் பேசி, (அத்தம்) பொருட்செல்வம் நிரம்ப உடையவராய், உலகிலே எளியோரைப் பயமுறுத்தி மயக்கிப் பூமியிற் பிழைக்க எண்ணுகின்ற மூடர்களின் மனத்தைக் கலக்கியும், (துணித்தும்) வெட்டிப் பிளந்தும், நெருக்கும் அதி சூரனே!

விஷங்கொண்ட பாம்பணையில் துயில் கொள்ளும் கிருபா மூர்த்தி, யானை (கஜேந்திரனுடைய) (செப்பை) செப்புதலை—கூச்சலிட் டழைத்ததைக் காதில் நன்கு ஏற்று மிக்க வேகத்துடனே கருடன்மீது விளங்கிப் பிரியத்துடனே வந்த ஒப்பற்ற திருமால்—

விழைமருக கொக்கிற்ச முத்ரத்தி லுற்றவனே
நெறுநெறென வெட்டுக்ர சத்தித்த னிப்படைய
விடையவர்தி ருச்சந்தி முத்தநத்தி னிற்குலவு பெருமாளே.(௧)

திருவலஞ்சுழி.

[கும்பகோணத்துக்கு மேற்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

880. மாதர் உறவு அற

தனன தந்தன தானு தானன
தனன தந்தன தானு தானன
தனன தந்தன தானு தானன தனதான

மகர குண்டல மீதே மோதுவ
*வருண பங்கய மோபூ வோடையில்
மருவு செங்கழு நீரோ †நீவிடு வடிவேலோ-

மதன்வி டுங்கணே யோவா ளோசில
கயல்கள் கெண்டைக ளோசே லோகொலை
மறலி யென்பவ னோமா னோமது நுகர்கீத;

முகர வண்டின மோவான் மேலெழு
‡நிலவ ருந்துபு ளோமா தேவருண்
முதிய வெங்கடு வோதே மாவடு வகிரோபார்-

xமுடிவெ னுங்கட லோயா தோவென
வுலவு oகண்கொடு நேரே சூறைகொள்
முறைய றிந்தப சாசே போல்பவ ருறவாமோ;

---

* வருணம்—எனக் கொண்டால், நிறமுள்ள அல்லது நீரில் உள்ள—எனப் பொருள் காணவும்.

† நீ விடுவேல்—பாடல் 1154-பார்க்க.

‡ நில அருந்து புள்—பாடல் 926-பார்க்க.

x "கடலினும் பெரிய கண்கள்"—கம்பராமா-மாரீசன்-70.

o முதல் நான்கு அடிகள் "கண்" வர்ணனை—பாடல்கள் 99, 126, 552, 578, 926, 943, 1049-போன்றது.

அன்பு கொள்ளும் மருகனே! (கொக்கில்) மர்மரமாகக் கடலில் நின்ற சூரனை நெறு நெறென வெட்டின உக்ர வேலாயுதம் என்னும் ஒப்பற்ற படையை உடையவனே! இடபவாகனங் கொண்ட சிவபிரான் (வீற்றிருக்கும்) **திருச்சத்திமுத்தம்** என்னும் தலத்தில் விளங்கும் பெருமாளே!

(துயர்ப்படுவ தொழியேனோ)

திருவலஞ்சுழி
880.

மகரமீன்போலச் செய்யப்பட்ட (குண்டலம்) காதணியின் மேலே வந்து தாக்குவனவாய் (அருண பங்கயமோ பூ ஓடையில்)—தாமரைக்குளத்தில் உள்ள சிவந்த தாமரையோ, பொருந்திய செங்கழுநீர்ப் பூவோ, நீ செலுத்தும் கூரிய வேலோ,

மன்மதன் செலுத்தும் பாணமோ, வாளோ, சில கயல்மீன்களோ, கெண்டைமீன்களோ, சேல்மீன்களோ, கொலைத் தொழில் புரியும் யமன் என்னப்பட்டவனோ, மானோ, தேன் உண்டு இசை

ஒலிக்கும் வண்டின் கூட்டமோ, ஆகாயத்தின் மீது எழுந்து நிலவை—சந்திரிகையை உண்ணும் புள்ளோ—சகோரப்பக்ஷியோ (நிலாமுகிப் புள்ளோ), மகாதேவர்—சிவபிரான்—உண்ட பழைய கொடிய (ஆலகால) விஷமோ, (தேமா) தித்திக்கும் மாவின் வடுவின் பிளப்போ, உலகு

முடியும்போதெழும் கடலோ, (பின்) எதுவோ என்று சொல்லும்படி உலவுகின்றதான கண்கள் கொண்டு நேரே கொள்ளையடிக்கும் வழியைத் தெரிந்துள்ள பிசாசே ஒத்தவரான (பொதுமகளிரின்) சம்பந்தம் ஆமோ! (சம்பந்தம் கூடாது என்றபடி)

*நிகரில் வஞ்சக மாரீ சாதிகள்
தசமு கன்படை கோடா கோடிய
நிருத ரும்பட †வோரே வேவியெ யடுபோர்செய்-

நெடிய னங்கனு மானே ‡டேயெழு
பதுவெ ளங்கவி சேனு சேவித
நிருப னம்பரர் கோமான் ராகவன் மருகோனே;

சிகர வும்பர்கள் Xபாகீ ராதிகள்
பிரபை யொன்றுபி ராசா தாதிகள்
சிவச டங்கமொ டிசா னுதிகள் சிவமோனர்-

தெளியு மந்த்ரக லாபா யோகிகள்
அயல்வி ளங்குசு வாமீ காமரு
திருவ லஞ்சுழி வாழ்வே தேவர்கள் பெருமாளே. (க)

திருப்பழையாறை.

[கும்பகோணத்துக்குத் தென்மேற்கு 4-மைல் தூரத்தி லுள்ள பட்டீச்சுரத்திலிருந்து வடதளி, பம்பைப்படை என்னும் ஊர்கள் வழியாக 1-மைல் சென்றால் இந்தத் தலத்தை யடையலாம். திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

---

* மாரீசன்—நிகரில் வஞ்சகன்—இவன் மாயையில் வல்ல ஓர் அரக்கன். தாடகைக்கும் சுந்தன் என்ற இயக்கர் தலைவனுக்கும் குமாரன். சுபாகுவின் உடன் பிறந்தவன். அகத்தியருக்கு இடையூறு செய்ய அவரது சாபத்தால் அரக்கனானவன். ராவணனுக்கு மாமன் முறை பெற்றவன். ராவணன் சீதையைக் கவருதற்கு வஞ்சனைச் சூழ்ச்சி சொல்ல மாரீசன் அவனுக்குத் துணையாகப் பொன்மான் உருவம் கொண்டு சீதைமுன் உலவச், சீதை அந்த மானைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டினள். ராமரும் மானைப் பின் தொடர்ந்து சென்று, அது மாயமான் என்றறிந்து அதனைத் தன் அம்பினால் வீழ்த்த அது "ஹா! சீதா லக்ஷ்மணா" என்று இராமர் குரலாற் சத்தமிட்டு விழுந்து இறக்க, அந்தக் குரல் தனது கணவன் குரல் என எண்ணிச் சீதை தனக்குக் காவலாயிருந்த இலக்குமணனை "நீ சென்று நாதனைப் பார்த்துவா"—என

[தொடர்ச்சி 575-ஆம் பக்கம் பார்க்க]

ஒப்பில்லாத வஞ்சகச் செயலில் வல்ல மாரீசன் முதலிய அரக்கர்கள், ராவணன், அவனுடைய கோடா கோடிக் கணக்கான சேனை அரக்கர்கள் இவர்கள் யாவரும் அழியும்படி ஒரு (ஏ) அம்பைச் செலுத்திக் கொல்லும் போரை, அல்லது அடுத்துவந்த போரைச், செய்த

(நெடியன்) (மாயோன்), அங்கு அநுமாருடன் எழுபது வெள்ளம் குரங்குப் படையால் வணங்கப்பெற்ற அரசன், (அம்பரர்) தேவர்களுக்குத் தலைவன், ராகவனாய் அவதரித்தவன்—ஆகிய திருமாலின் மருகனே!

மேலான தேவர்கள், பகீரதன் முதலிய அடியார்கள், (ஞான) ஒளி பொருந்திய (பிராசாதாதிகள்) அநுக்கிரகம் (வரப்பிரசாதம்) பெற்றவர்கள், சிவ சம்பந்தமான கிரியைகள் வல்ல ஈசானன் முதலியோர், சிவ மௌனிகள்—

தெளிந்துள்ள மந்திரகலா—மந்திர சாத்திரத்தில்–பாய் யோகிகள்—மனத்தைச் செலுத்தின யோகிகள்—இவர்கள் யாவரும் பக்கத்திலே விளங்கநின்ற சுவாமியே! [அல்லது, சிவமௌனிகள்—இவர்கள் தெளிந்துள்ள பிரணவ மந்த்ர ரூபமான (கலாபா) கலாப மயிலனே! யோகிகள் பக்கத்திலே விளங்கும் சுவாமியே! அழகிய **திருவலஞ்சுழியிற்** செல்வனே! தேவர்கள் பெருமாளே! (பசாசே போல்பவர் உறவாமோ)

வெருட்டி அனுப்பித் தனித்திருந்தபொழுது—இராவணன் சந்யாசி வேஷத்துடன் வந்து சீதையை வஞ்சித்து அவளிருந்த நிலத்தைப் பேர்த்து அப்படியே தேரில்வைத்து இலங்கைக்குச் சென்று சீதையை அசோகவனத்திற் சிறையில் வைத்தான். சீதையை இழந்த ராமபிரான் சுக்ரீவன் என்னும் குரங்கின் தலைமையில் அநுமன் முதலான எழுபது வெள்ளம் சேனையுடன் சென்று, ராவணனைக் கொன்று, சீதையை மீட்டனர்.

† ஒரு ஏ (அம்பு)—பாடல் 452-பக்கம் 6-கீழ்க்குறிப்பு.

‡ எழுபது வெள்ளம் சேனை — பாடல் 811-பக்கம் 390; பாடல் 515-பக்கம் 130 கீழ்க்குறிப்பு.

x **பகீரதன்**—சூரிய வமிசத்து அரசன்; சாம்பலாய்ப் போன தன் மூதாதையர்களான சகரர்கள் நற்கதி அடைய வானத்தினின்று கங்கையை வரவழைத்தவன்; முருகவேளை வல்லக் கோட்டையிற் பூசித்தவன்; வெள்ளிக்கிழமை விரதம் பூண்டு தன்னை வென்ற கோரன் என்னும் அசுரனைக் கொல்வித்தவன்—[கந்தபுராணம்-6-23-(4-7)].

881. திருவடியைப் பெற

தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன தனதான

தோடுற்றுக் காதள வோடிய
வேலுக்குத் தானிக ராயெழு
சூதத்திற் காமனி ராசத விழியாலே-
சோடுற்றத் தாமரை மாமுகை
போலக்கற் பூரம ளாவிய
தோல்முத்துக் கோடென வீறிய முலைமானார்;
கூடச்சிக் காயவ ரூழிய
மேபற்றிக் காதலி ஞேடிய
கூளச்சித் தாளனை மூளனை வினையேனைக்-
கோபித்துத் தாயென நீயொரு
போதத்தைப் பேசவ தாலருள்
கோடித்துத் தானடி யேனடி பெறவேணும்;
வேடிக்கைக் காரவு தாரகு
ணபத்மத் தாரணி காரண
வீரச்சுத் தாமகு டாசமர் அடுதீரா-
வேலைக்கட் டாணி*ம காரத
சூரர்க்குச் சூரனை வேல்விடு
†வேழத்திற் சீரரு ளூறிய இளையோனே;

* மகாரத சூரன் — அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனத் தேர் வீரர்—நால்வகைப் படுவர்; அதிரதர்—இவர் ஒரு தேரில் நின்று தேர், குதிரை, சாரதிகளுக்கு அழிவு வராமல் காத்துப் பல ஆயிரம் தேரோடு எதிர்த்து வேறு துணையில்லாமலே போர் செய்து வெல்லும் வல்லமை உடையார்; மகாரதர் — பதினுயிரம் தேர் வீரரொடு பொருபவர்; சமரதர்—ஒரு தேர் வீரனெடு தாமும் ஒருவராய்த் தோலாமற் போர்புரிய வல்லவர்; அர்த்தரதர்—போர் புரிந்து பின்னடையும் தேர் வீரர்; இவர் இருவர் சேர்ந்தால் ஒரு சமரதனுக்கு ஒப்பாவர்;

"இற்றைநாள் அதிரதர் மகாரதர் சமரதாதியர் எவரொடும், கொற்ற வஞ்சி மிலைச்சி எகுக குருநிலத்திடை என்னவே"

—வில்லிபாரதம்-அணிவகுப்பு-1

† முருகவேளின் குழந்தைப் பருவத்துத் திருவிளையாடலின் போது அவரை முருகவேள் என உணராத இந்திரன், ஐராவதம்,

[தொடர்ச்சி 577-ஆம் பக்கம் பார்க்க]

திருப்பழையாறை

881.

(காதில் உள்ள) தோட்டினைச் சேர்ந்து காதுவரைக்கும் ஓடி, வேலுக்கு ஒப்பாக விளங்கி, (சூதத்தில்) சூது அதில்— உபாயத்தில் மன்மதனது ரஜோகுணம் அடங்கின கண்கள்—

(சோடு) இரட்டையாய்ப் பொருந்தி, தாமரையின் அழகிய மொட்டுப் போன்று, பச்சைக்கற்பூரம் சேர்ந்த கலவையை அணிந்து, (தோல்) தோலும், முத்து மாலையும் கொண்ட மலைபோல (அல்லது யானையின் முத்து உள்ள தந்தம்போல) மேலிட்டெழுந்த கொங்கைகளை உடைய மாதர்கள்—

கூடுதற்குச் சிக்கலாயிருப்பவர்-எளிதில் அகப்படாதவர்- (தடை பல செய்பவர்) அத்தகைய வேசையர்க்கு (ஊழியமே பற்றி) பணிவிடைகளே—(தொண்டே) செய்து, ஆசையுடன் காலங் கழிக்கும் (கூளனை) குப்பை போன்று உபயோகம் இல்லாத (சித்து — ஆளனை) அறிவுகொண்ட என்னை, (மூளனை)—அத்தகைய சிற்றறிவுடன் முயற்சிகள் செய்ய முற்படும் என்னை, வினைக்கு ஈடான என்னை—

(நீ) கோபித்து — கண்டித்து, தாய் போல நீ ஒப்பற்றதான ஞானத்தை உபதேசிக்க, (அதால்) அங்ஙனம் ஞானம் பெற்றமையால் உன்னுடைய திரு அருளைக் (கோடித்து) புகழ்ந்து (உன்னை)ப் பிரார்த்தித்து, அடியேன் (உன்னுடைய) திருவடியைப் பெறவேண்டும் ;

விநோதமான திருவிளையாடல்களைச் செய்பவனே! (உதாரகுண) தாராளகுணம் உடையவனே (கொடை-யாளனே)! தாமரை மலர்மாலை அணியும் மூலபுருஷனே! (தலைவனே)! வீரம் பொருந்திய பரிசுத்த மூர்த்தியே! கிரீடம் அணிந்தவனே! போரிற் கொல்லும் தீரனே!

வேலையில் (கட்டாணி) சமர்த்தனே! (அல்லது) வேலையில் சமர்த்தனும், (அல்லது கடலில் மாவாய் நின்ற சமர்த்தனும்) மகாரத சூரர்களுக்கெல்லாம் சூரனுமாகிய சூரன்மீது வேலைச் செலுத்தின (இளையோனே)! (வேழத்தில்) ஐராவதம் என்னும் யானையின்மீது சீரான திருவருள் ஊறின இளையோனே!

மற்றும் வானவர் யாவரும் அவரொடு பொருது மாண்டனர். பின்னர் பிரகஸ்பதி வந்து முருகனை வேண்ட, யாவரும் உயிர்பெற்று எழ, முருகவேள் அருளினர் [தொடர்ச்சி 578-ஆம் பக்கம் பார்க்க]

ஆடத்தக் காருமை பாதியர்
*வேதப்பொற் கோவண வாடையர்
ஆலித்துத் தானரு ளூறிய முருகோனே-

†ஆடப்பொற் கோபுர மேவிய
ஆடிக்கொப் பாமதிள் சூழ்பழை
யாறைப்பொற் கோயிலின் மேவிய பெருமாளே. (க)

திருச்சக்கிரப்பள்ளி

[தஞ்சாவூருக்கு வடகிழக்கு 11-மைல் தூரத்தி லுள்ள ஐயம் பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கு அரைமைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

882. கலவியிச்சை அற

தத்த தத்தன தத்தன தத்தன
தத்த தத்தன தத்தன தத்தன
தத்த தத்தன தத்தன தத்தன தனதான

திட்டெ னப்பல செப்பைய டிப்பன
பொற்கு டத்தையு டைப்பன வுத்தர
திக்கி னிற்பெரு வெற்பைவி டுப்பன வதின்மேலே-

[577-ஆம் பக்கத் தொடர்ச்சி]

"வேள் செலுத்துங்கணை...அயிராவதம் நெற்றியுள் மேவி
ஆவிகொண்டு புறம்போத...அது மாண்டதன்றே"
"பொன்னவன் வேண்டிட....மன்னவனுதியர்
மால்களிற் ருேடும் அங்கிலை எழும்வகை
அருள் செய்தானரோ"—கந்தபுராணம் 1-14-50, 78.

இனி, வேழம் — ஆனை — என்பது வேழ மங்கையைக் குறிக்குமாயின் தேவசேனைபால் அருள் ஊறியவன் எனப் பொருள்படும்; தேவசேனையை—ஆனை என்றே ('ஆனைதன் நாயக' 'குறத்தி ஆனையொடு' என) 235, 431-ஆம் பாடல்களிற் கூறியுள்ளார்.

---

* **வேதக் கோவணம்:** "அரையில் தஞ்ச மாமறைக் கோவண ஆடை"—பெரிய புராணம்-அமர்நீதி-8.

வேதம்—சிவபிரானுக்குப் பீடிகை, பாதுகை, வாகனம்,

[தொடர்ச்சி 579-ஆம் பக்கம் பார்க்க]

கூத்தாட வல்லவர், உமாதேவிக்குத் தமது உடலிற் பாதிபாகம் கொடுத்தவர், வேதத்தையே அழகிய கோவண ஆடையாகக் கொண்டவர், (ஆலித்து) களித்து மகிழ்ச்சி பூண்டு திருவருள் சுரந்து தந்த குழந்தையே!

(ஆடப் பொற் கோபுரம்) ஆடகப் பொற் கோபுரம்—பொன்மயமான அழகிய கோபுரத்தைக் கொண்டதும், பொருந்திய (ஆடி) கண்ணாடிக்கு (அல்லது பளிங்குக்கு) ஒப்பான மதில் சூழ்ந்துள்ளதுமான **பழையாறை** என்னும் தலத்தில் அழகிய திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமாளே!

(அடியேன் அடி பெறவேணும்)

திருச்சக்கிரப்பள்ளி

882.

*(செப்புக்குடத்தை உவமை கூறலாம் என்றால்) திட் திட் என்று செப்புத்தகட்டை அடிபடும்படிச் செய்வன; பொற்குடத்தை உவமை கூறலாம் என்றால் அந்தக் குடத்தை உடைபடும்படிச் செய்வன; (மேருமலையை ஒப்பிடலாம் என்றால்) தோற்றதற் கடையாளமாக —(அந்தப்) பெருத்த மேருமலை †வடக்குத்திசையில் கொண்டுபோய்த் தவஞ்செயத் தள்ளி விடப்பட்டது;—அதற்குமேல் உவமை தேடிச்

நூபுரம், கோவணம், விழி, மொழி, வடிவு.

"மறையே நமது பீடிகையாம் மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமாம் மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமாம் மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகும் மறையே நமது வடிவாகும்"
—திருவிளை-உலவாக்கிழி-9.

"மறை நான்கே வான் சரடாத் தன்னையே
கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ"
திருவாசகம்-சாழல்-2.

† ஆடம்—"ஆடகம்"—இடைக்குறை.

---

* இது கொங்கை வர்ணனை—உவமிக்கப்படும் பொருள்கள் எல்லாம் உபமேயப் பொருளாம் கொங்கைக்கு இன்ன காரணத்தால் இணையாகா — இழிவுடையன — என விளக்கும் முறையில்

[தொடர்ச்சி 580-ஆம் பக்கம் பார்க்க]

செப்ப*வத்திம ருப்பையொ டிப்பன
புற்பு தத்தையி மைப்பி லழிப்பன
செய்த்த லேக்கம லத்தைய லேப்பன திறமேய;
†புட்ட ணக்கக னத்தில்வி டுப்பன
சித்த முற்பொர விட்டுமு றிப்பன
‡புட்ப விக்கன்மு டிக்குறி யுய்ப்பன இளநீரைப்-
புக்கு டைப்பன முத்திரை யிட்ட த
னத்தை விற்பவர் பொய்க்கல விக்குழல்
புத்தி யுற்றமை யற்றிட எப்பொழு தருள்வாயே;
துட்ட நிக்ரக சத்தித ரப்ரப
லப்ர சித்தச மர்த்தத மிழ்த்ரய
துட்க ரக்கவி தைப்புக லிக்கர செனுநாமச்-

[579-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைந்துள்ள பாடல் இது. இத்தகைய பாடல்கள் 345, 550; கந்தர் வர்ணனையில் இத்தகைய—பாடல் எண் 126.

செப்புக்குடம் கன்னன் உலேக்களத்தில் அடிபடும்; பொன்குடம் உடைத்தால் உடைபடும்; தன் தோல்விக்கு அடையாளமாக மேரு வடக்கே தவம் கிடக்கும்; யானையின் தந்தம் ஒடிபட்டதுண்டு; நீர்க்குமிழி ஒரு நொடியில் அழிவுறும்; தாமரையோ தடாகத்தில் அலையில் அலேச்சல் உறும்; சக்கரவாகம் பறந்து உயர ஓடிப்போம்;...மன்மதனுடைய முடி எரிபட்டு விழும்; இளநீர் உடைபடும்: இங்ஙனம் இந்த உவமைப் பொருள்கள் எல்லாம் கொங்கைமுன் தோல்வியுற்றன என்னும் விஷயம் முத்திரையிட்ட பத்திரம்போல விளங்குகின்றது. இவ்வாறு பெருமைவாய்ந்த கொங்கைகளை விற்பவராம் விலேமாதர்களின் அற்ப இன்பச் சேர்க்கையிற்படும் புத்தி அழிந்து நற்புத்தி வா அருள்வாயே—என்றபடி.

† **உத்தர திக்கில் விடுப்பன**: வடக்கிருத்தல் என்பது உயிர் துறக்கும் துணிவுடன் வடக்கு நோக்கியிருந்து பிராயோபவேச விரதத்தை மேற் கொள்ளுதல். பிராயோபவேச விரதம்—உயிர் விடுதற் பொருட்டு தருப்பையில் உணவின்றி யிருக்கும் மகா விரதம்:
"புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"—புறநா-66.

° கம்சன் ஏவின குவலயாபீடம் என்னும் யானையின் தந்தங்களைப் பறித்து எடுத்து அவற்றால் யானையையும் பாகனையும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கொன்றனர்.

—பாடல் 120 பக்கம் 286 கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 581-ஆம் பக்கம் பார்க்க]

சொல்ல — யானையின் தந்தம் (உண்டு) — (அந்தத் தந்தத்தையும்) ஒடித்துத் தள்ளுவன; நீர்க்குமிழியை — ஒப்பிடலாம் என்றால் — அதை இமைப்பொழுதில் அழியும்படிச் செய்வன; வயல்களில் உள்ள தாமரை மொட்டை உவமிக்கலாம் என்றால் அதை நீரில் அலையச் செய்வன; சாமர்த்தியம் உள்ள

சக்கிரவாகப்பக்ஷியை உவமிக்கலாம் என்றால் அதை ஆகாயத்தில் பறக்க விடுவன; (ஆடவர்களின்) உள்ளத்தைத் தன்னொடு சண்டை செய்யவிட்டு அதை அழியச் செய்வன; புஷ்ப பாணத்தையும் கரும்பு வில்லையும் கொண்ட மன்மதனுடைய கிரீடத்தை உவமிக்கலாம் என்றால் அந்த முடியையும் குறிவைத்துத் தள்ளுவன (சிவனது நெற்றிக்கண்ணால் எரிபட்டுத் தொலைவன)— இளநீரை (உவமிக்கலாம் என்றால்) அதுவும்

எடுத்து உடைக்கப்படுவதாம் — (இங்ஙனம் எதுவும் தமக்கு உவமையாக முடியா என்னும் உண்மையை) முத்திரையிட்டு விளக்கும் கொங்கைகளை (விலைக்கு) விற்பவராம் பொதுமகளிரின் நிலைத்திராத — பொய்யான — புணர்ச்சியின்பம் வேண்டித் திரியும் புத்தி எனக்குப் பொருந்தியுள்ளதே! அது அற்றுத் தொலைய (நீ) எனக்கு எப்பொழுது அருள்புரிவாய்!

துஷ்டர்களை அடக்கும் சத்திவேலைத் தரிப்பவனே! பிரபலமும், பிரசித்தமும் கொண்ட (மஹா கீர்த்திகொண்ட சமர்த்தனே! (தமிழ்த்ரய) முத்தமிழில் (துஷ்கரம்) முடிப்பதற்கு (யாத்தற்கு) அருமையானவையான பாடல்களைத் (திருஞான சம்பந்தராய்)ப் (புகலீ) சீகாழிக்கு அரசு என்னும் (நாமம்) புகழ் பெற்று—

[580-ஆம் பக்கத் தொடர்ச்சி]

† புள்—சக்ரவாகப்புள்.

+ புட்ப இக்கன்—மன்மதன்—சிவபிரான் மன்மதனை எரித்தது —பாடல் 399-பக்கம் 510 கீழ்க்குறிப்பு.

சொற்க நிற்கசொ லட்சண* தட்சண
குத்த ரத்தில †கத்திய னுக்கருள்
சொற்கு ருத்வம கத்துவ சத்வஷண் முகநாத;

தட்ட றச்சமை யத்தைதவ ளர்ப்பவ
ளத்தன் முற்புகழ் செப்ப‡வ நுக்ரக
சத்து வத்தைய ளித்திடு செய்ப்பதி மயிலேறி-

xசட்ப தத்திரள் மொய்த்தம ணப்பொழில்
மிக்க ரத்நம திற்புடை சுற்றிய
சக்கி ரப்பளி முக்கணர் பெற்றருள் பெருமாளே. (க)

திருக்குரங்காடுதுறை.

[வட குரங்காடுதுறை என்னும் தலம் கும்பகோணத்துக் கடுத்த ஐயம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து 4-மைல். வழியில் திருச்சக்கிரபபள்ளி என்னும் ஸ்தலம் இருக்கின்றது. திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.

தென் குரங்காடுதுறை என்பது ஆடுதுறை. ரெயில்வே ஸ்டேஷன். திருவிடைமருதூருக்குக் கிழக்கு 2½-மைல்; திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

883. திருவுருவ அலங்காரத் துதி

தனந்தான தனத்தனனத் தனந்தான தனத்தனனத்
தனந்தான தனத்தனனத் தனதான

அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக் கவசத் திரடோளும்-

---

* தட்சண — கு — தெற்கில் உள்ள பூமி "குப்பாவை கொண்டாள் கலை" தணிகை உலா 253. குத்தரம்—குதரம்—மலை; தட்சண குதரம்—பொதியமலை—

† அகத்தியருக்கு உபதேசித்தது
—பாடல் 185-பக்கம் 433 கீழ்க்குறிப்பு.

"வேல் இறைவன் இயம்பிய ஞான முற்றுணர்ந்து
...பொதியம்...அடுத்து...இருந்தனன் முநிவன்"
—தணிகைப் புராணம்-அகத்-அருள்-512.

[தொடர்ச்சி 583 ஆம் பக்கம் பார்க்க.]

(அப் பாடல்களைக் கற்பவர்களுக்கு) சொர்க்கம் நிற்க—வானுலகம் நிலைத்து நிற்கும்படி (சொல் லக்ஷண) சொன்ன அழகை உடையவனே! (தட்சணம்) தெற்குத் திசையில் உள்ள—(கு) பூமியாகிய—பொதிய மலையில் உள்ள அகத்திய முனிவருக்குத், தரத்தில் — மேன்மையான வகையில் — உபதேசச் சொல்லைச் சொன்ன குருமூர்த்தியாம் பெருமையை உடைய ஷண்முக நாதனே!

(தட்டு அற) தடையிலாத—குற்றமிலாத வகையில் (சமயத்தை) சைவ சமயத்தை — சிவ மதத்தை — வளர்ப்பவளாகிய தேவி பார்வதி, (அத்தன்) சிவபிரான்—(முன்) இவர்களின் திருக்கோயில் சந்நிதானத்தில், (அல்லது முன்பு) புகழ் செப்ப—உனது திருப்புகழைப் பாடும்படியான (அநுக்ரக சத்துவத்தை) திருவருள் (சத்துவத்தை) சாரத்தை—வலிமையை எனக்குப் பிரசாதித்த வயலூர் என்னும் தலத்தில் மயில் வாகனனாய் விளங்குபவனே! (அல்லது—சிவபிரான் முன்பு உன்னைப் (புகழ் செப்ப) புகழும்படியாக அவருக்குக் (குருமூர்த்தியாய்) உண்மைப் பொருளை அவருக்கு அனுக்கிரகம் செய்த (உபதேசித்த) வயலூர் மயில்வாகனா!

(சட் பதத்திரள்) அறுகால் கொண்ட வண்டின் கூட்டம் மொய்க்கின்ற நறுமணச்சோலை மிக்குற்று விளங்குவதும், ரத்னமயமான மதில் பக்கங்களிற் சுற்றியுள்ளதுமான **சக்கிரப் பள்ளி** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் முக்கண்ணராம் சிவபிரான் பெற்றருளிய பெருமாளே!

(கலவிக்கு உழல் புத்தி... அற்றிட... அருள்வாயே)

திருக்குரங்காடுதுறை.

883.

அலங்காரமான கிரீடம், ஒளி திரண்டுள்ள ஆறுமுகங்களிலும் அழகுடன் அசைந்தாடுகின்ற குழைகள், கவசம், திரண்ட தோள்களின்மேல்—

---

‡ அருணகிரியார் வயலூரில் அனுக்கிரகம் பெற்றது —பாடல் 105-பார்க்க. (அருணகிரியார் வரலாறு—பக்கம் 64).

x "வண்டறை மலர்மலி...சக்கரப்பள்ளி"—சம்பந்தர் 3-27-4.

அலந்தாம மணித்திரளைப் புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வளைக் கடகச் சுடர்வேலுஞ் ;

சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணத்த மலர்ப் புனைபாதந்-

திமிந்தோதி திமித்திமிதித் தனந்தான தனத்தனனத்
தினந்தோறு நடிப்பது *மற் புகல்வேனே ;

இலங்கேசர் வனத்துள்வனக் †குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தாது மலர்த் திருவைச் சிறை‡மீளும்-

இளங்காள முகிற் கடுமைச் சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கான நடக்குமவற் கினியோனே ;

குலங்xகோடு படைத்தசுரப் பெருஞ்சேனை யழிக்கமுனைக்
கொடுந்தாரை வெயிற் கயிலைத் தொடும்வீரா-

* மன்—நிரம்ப—"ஊன் உண் எனும் உரை கூறு, மன்னிய "—திருப்புகழ் 1210,

† இலங்கையில் அநுமார் நெருப்பிட்டது
—பாடல் 704-அடி 5-பார்க்க.

இராவணன் ஏவலால் அநுமாரின் வாலில் அரக்கர்கள் நெருப்பை ஊட்ட, அநுமார் தன் வாலைப் பரப்பி இலங்கை ஊரைச் சுட்டெரித்தார்.

'பாதகர் இருக்கை பற்ற...வயங்கெரி மடுப்பன் என்னுப்
பொன்னகர் மீதே தன் போர் வாலினைப் போகவிட்டான்'
—கம்பராமா. பிணிவீட்டு-135.

"முடியச் சுற்றி முழுது முருக்கிற்றால்
கடிய மாமனை தோறுங் கடுங்கனல்"
—கம்பராமா-இலங்கையெரி-1.

‡ மீளும்—மீட்கும். x கோடு—கொடுமை.
"கோடற வைத்த கோடாக் கொள்கை"
—பதிற்றுப்-37-11.

திருப்தி தரும்படியான (அல்லது போதுமான) (தாமம்) பூமாலைகள், ரத்னமணிக்கூட்ட (மாலைகள்) புரண்டாடும் (காட்சி) வரிசையாய் அமைந்தனவும், திருக்கரங்களில் அணியப் பட்டனவுமான மோதிரம், புனைந்துள்ள வீரகடகம்—கங்கணம், ஒளிவீசும் வேல்—

சிலம்பு, அழகிய வேத ஒலி காட்டும் (சலங்கு) சலங்கை—சதங்கை—இவைகள் ஓசை மிகுந்த ஒலி செய்யச் செந்நிறம் மிக்கு நறுமணம் வீசும் மலர்கள் புனைந்துள்ள திருவடிகள் –

திமிந்தோதி திமித்திமிதித் தனந்தான தனத்தனன என்னும் வகையில் நாள்தோறும் நீ நடனம் செய்யும் அழகு—ஆக இவைகளை எல்லாம் (மன்) நன்ருக—நிரம்ப—நான் சொல்லுவேனே—சொல்லித் துதிக்க மாட்டேனே!

இலங்கைக்குத் தலைவனுன ராவணனுடைய (அசோக) வனத்தில், (வனம்) அழகுள்ள (அல்லது காட்டில் வாசம் செய்யும்) குரங்கை (அநுமாரை) அனுப்பி, அவரால் இலங்கையில் நெருப்பின் புகையைக் கிளம்பவைத்து, மென்மை வாய்ந்த பூந்தாதுகளை (மகரந்தப் பொடியைக்) கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் லக்ஷ்மியாம் சீதையின் சிறையை மீட்ட—

இளமை வாய்ந்தவரும், கரிய மேகநிறங் கொண்டவரும், [கடுமை] கொடிதான [சரம்] அம்பையும், [கோடு] வளைந்த வில்லையும் [அல்லது கடுமை, கோடு சரம், கடுமையும் [கோடு] கொடுமையும் கொண்ட அம்பைக்] கையிற் கொண்டவரும், [தந்தையின் சொல்வழியே] இருண்ட பெரிய காட்டில் நடந்து வனவாசம் செய்தவருமான [ஸ்ரீராமருக்கு – திருமாலுக்கு] இனியவனே! [உகந்தவனே]!

[குலம்] கூட்டமான இனத்தாரையும், [கோடு] கொடுமையையும் கொண்டிருந்த அசுரர்களின் பெரிய சேனையை அழிக்கப் போர் முனையில், கொடியதும், கூர்மை உடையதும், வெயிற்கு — ஒளிக்குப் பேர் போனதுமான [அயிலை] வேலாயுதத்தைப் பிரயோகித்த வீரனே! [அல்லது சேனையை அழிக்க [முனை] போர்க்களத்தில் கொடிய முன்னணிப் படையின் [வெயிற்கு] வெயில் போன்ற கொடுமையைக் குலைக்க வேலைச் செலுத்தின வீரனே!]

*கொழுங்காவின் மலர்ப்பொழிலிற் கரும்பாலை புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக் குமரப் பெருமாளே. (க)

884. மாதர்மீது மயக்கு அற

தனத்தனந் தான தனதன
தனத்தனந் தான தனதன
தனத்தனந் தான தனதன தனதான

குறித்தநெஞ் சாசை விரகிகள்
நவிற்றுசங் கீத மிடறிகள்
குதித்தரங் கேறு நடனிகள் எவரோடுங்-

குறைப்படுங் காதல் குனகிகள்
†அரைப்பணங் கூறு விலையினர்
கொலைக்கொடும் பார்வை நயனிகள் நகரேகை ;

பொறித்தசிங் கார முலையினர்
வடுப்படுங் கோவை யிதழிகள்
பொருட்டினந் தேடு கபடிகள் ‡தவர்சோரப்-

புரித்திடும் பாவ சொருபிகள்
உருக்குசம் போக சரசிகள்
புணர்ச்சிகொண் டாடு மருளது தவிர்வேனே ;

நெறித்திருண் டாறு பதமலர்
மணத்தைபைங் கோதை வகைவகை
நெகிழ்க்குமஞ் சோதி வனசரி மணவாளா-

---

*"குரையார் பொழில்சூழ் குரங்காடு துறையே"
—சம்பந்தர் 2-35-8.

† "அரைப்பணம் கூறு விலையினர்" —இது இருபொருள் தருகின்ற சிலேடை, விலை அரைப்பணம் (அரைக்காசு) என்று சொல்பவர்கள்—என்னும் பொருளும் தொனிக்கும்,

‡ தவர் சோர்தல்—புணர்ச்சி கொண்டாடு மருள் :—
'துறவினர் சோரச் சோர நகைத்து'—திருப்புகழ் 158.
'துறந்தவர்க்கும் உடல்முழுதுந் தோல்திரைந்த முதுமையர்க்கும்
அறந்தலைநின் றுக்குநர்க்கும் அழிபிணியில் உழக்குநர்க்கும்

[தொடர்ச்சி 587-ஆம் பக்கம் பார்க்க]

செழிப்புள்ள சோலையிலும் பூஞ்சோலைகளிலும் கரும்பு ஆலைகள் (புணர்க்கும் இசை) வேலை செய்யும் ஒலி கேட்கும் **குரங்காடுதுறையில்** குமரப் பெருமாளே!

(நடிப்பதுமற் புகல்வேனே)

884.

(பொருளைக்) குறித்த நெஞ்சில் ஆசை கொண்ட காமிகள், பாடும் சங்கீதம் அமைந்த கண்டத்தினர், குதித்து நாடக மேடையில் ஏறி நடனம் செய்பவர்கள், யாரோடும்

தங்கள் குறைகளை அடுத்துச் சொல்லிக் காதலை ஊட்டிக் கொஞ்சிப் பேசுபவர்கள், (அரைப்பணம்) அரையில் உள்ள பாம்பன்ன அல்குலை விலை பேசி விற்பவர்கள், கொலைத் தொழிலைக் காட்டும் கொடிய கண்பார்வை உடையவர்கள், நகத்தின் குறிகள்—

பதியப்பெற்றுள்ள அழகிய கொங்கையை உடையவர்கள், காயத் தழும்புள்ளதும் கொவ்வைக்கனி போன்றதுமான வாயிதழை உடையவர்கள், பொருளைத் தினந்தோறும் தேடுகின்ற வஞ்சக நெஞ்சினர், தவசிகளும் சோர்ந்து போகும்படிச்

செய்கின்ற பாப உருவத்தினர், மனத்தையும் உடலையும் உருக்கவல்ல (சம்போக சரசிகள்) புணர்ச்சி லீலை செய்பவர்கள்—அத்தகையோர்களின் சேர்க்கையை விரும்பி மகிழும் மயக்கத்தை ஒழிக்கமாட்டேனே!

(நெறித்து) குழற்சியடைந்தும்—சுருண்டும், (இருண்டும்) கருநிறம் கொண்டும், (ஆறுபதம்) அறுகால்—வண்டுகள் மொய்க்கும் மலர்களின் நறுமணம் கொண்டும் விளங்கும் புதிய மாலைகள் வகை வகையாகக் கட்டு தளரும் (மஞ்சு ஓதி) கருமேகம் போன்ற கூந்தலை உடைய (வனசரி) வேடப்பெண் வள்ளியின் மணவாளனே!

சிறந்த பரத்தையர்கலவி செய்யாமை யுறுமேனும்
மறந்தழையும் அவர் விழிக்கு வாடாத மனமில்லை'
—விநாயக புரா-திருநகர-82.

நெருக்குமிந் ராதி யமரர்கள்
வளப்பெருஞ் சேனை யுடையவர்
நினைக்குமென் போலு மடியவர் பெருவாழ்வே;

செறித்தமந் தாரை மகிழ்புனை
மிகுத்ததண் *சோலை வகைவகை
தியக்கியம் பேறு†நதியது பலவாறுந்-

திரைக்கரங் கோலி நவமணி
கொழித்திடுஞ் சாரல் வயலணி
திருக்குரங் காடு துறையுறை பெருமாளே. (உ)

885. பிறப்பின் பயன் பெற

தனந்த தனத்தான தனந்த தனத்தான
தனந்த தனத்தான தனதான

குடங்கள் நிரைத்தேறு தடங்கள் குறித்தார
வடங்கள் ‡அசைத்தார செயநீலங்-

xகுதம்பை யிடத்தேறு வடிந்த oகுழைக்காது
குளிர்ந்த முகப்பார்வை வலையாலே;

உடம்பு மறக்கூனி நடந்து மிகச்சாறி
யுலந்து மிகக்கோலு மகலாதே-

**உறங்கி விழிப்பாய பிறந்த பிறப்பேனு
முரங்கொள போற்பாத மருள்வாயே;

---

* "சோலைசூழ் கொத்தலர் குரங்காடுதுறை"—அப்பர் 5-63-2.
† "தரங்காடும் தடநீர்ப் பொன்னித் தென்கரைக்
குரங்காடுதுறை."—அப்பர்—5-63-1.
‡ அசைத்தார—அசைத்தவர்களுடைய.
x குதம்பை—காதுவளர்க்குந் தக்கை.
o குழைக் காது—குழையைக் காதுகின்ற.
** "உறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி" — சுந்தரர் (திருவாரத்துறை) தேவாரம்—7-3-4.
"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"—திருக்குறள் 339.

கூட்டமாயுள்ள இந்திரன் ஆதிய தேவர்களுக்கும், வளப்பம் கொண்டுள்ள பெரிய சேனையை உடையவர்களாம் அரசர்களுக்கும், (அல்லது, வளப்பெருஞ் சேனை உடையவர்களாகிய இந்த்ராதி யமரர்களுக்கும்), நினைத்துத் துதிக்கும் என்னைப் போன்ற அடியார்களுக்கும் பெருஞ் செல்வமாய் விளங்குபவனே!

நிறைந்துள்ள மந்தாரைமலர், மகிழம்பூ இவைகளைக் கொண்டு நிரம்பி விளங்கும் குளிர்ந்த சோலைகள் வகை வகையானவையும், கலக்கி ஜலம் நிறைந்துவரும் ஆறுனது பல துறைகளிலும்—

அலையர்கிய கரங்களை வளைத்துப் புதிய மணிவகைகளைக் கொண்டு தள்ளுகின்ற பக்கங்களையும், வயல்களையும் அணிந்துள்ள **திருக்குரங்காடுதுறை** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(மருளது தவிர்வேனே)

885.

குடங்கள் (இரண்டு) வரிசையாய் அமையப் பெற்றது போல விளங்கும் (தடங்கள்) கொங்கையிடங்களைக் கருதி, ஆங்கே (ஆரவடங்கள்) முத்து மாலைகள் பொருந்த அசைத்தவர்களுடைய — (செய்ய) செம்மை வாய்ந்த அல்லது (ஜெய) வெற்றி விளங்கும் (நீலம்) நீலோற்பலம் போன்ற கண்கள்—

காது வளர்க்கும் தக்கை (அல்லது காதணி) உள்ள இடத்திலே விளக்கமுற்று, (வடிந்த) நீண்ட குழைகளைக் (காதுகின்ற) வெட்டுவதுபோலப் பாய்கின்ற குளிர்ந்த முகதரிசனம் (முகத்தோற்றம்) என்னும் வலையாலே—

உடம்பானது (கெட்டு) மிகவும் கூன் அடைந்து, நடையும் மிகச் சரிந்து, (உடலும்) மிகக் கெட்டுக், கையிற் கோலும் நீங்காமல்—

தூங்கி விழித்துக் கொண்டதுபோன்ற (இப்போது) பிறந்துள்ள இப் பிறப்பாவது திண்மை (ஞானம்) பெறும்படியாக உனது அழகிய திருவடியைத் தந்தருளுக.

விடங்கள் கதுப்பேறு *படங்க ணடித்தர் †ட
விதங்கொள் முதற்பாய லுறைமாயன்-
‡விலங்கை முறித்தோடி யிடங்கள் வளைத்தேறு
விளங்கு முகிற்கான மருகோனே ;
தடங்கொள் வரைச்சாரல் நளுங்கு மயிற்பேடை
தழங்கு மியற்பர்டி யளிசூழத்-
தயங்கு வயற்சாரல் குரங்கு குதித்தாடு
x தலங்க ளிசைப்பான பெருமாளே. (ரு)

காவளூர்.

[இது சோழநாட்டில் திட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 6-மைல்.]

886. மோகம் ஒழிய

தான தானன தத்தன தந்தன
தான தானன தத்தன தந்தன
தான தானன தத்தன தந்தன தனதான

மானை நேர்விழி யொத்தம டந்தையர்
பாலை நேர்மொழி யொத்துவி ளம்பியர்
வாச மாமலர் கட்டும ரம்பைய ரிருதோளும்-
மார்பு மீதினு முத்துவ டம்புரள்
காம பூரண பொற்கட கம்பொர
வாரி நீலவ ளைக்கைபு லம்பிட அநுராகம் ;

---

* படங்கண் நடித்து ஆடு—காளிங்கனது படத்தின்மீது ஆடி நடிக்கும். காளிங்கன்மீது நடனம்—பாடல் 245-2 பக்கம் 114 x-குறிப்பு; பாடல் 402-பக்கம் 518 கீழ்க்குறிப்பு.

† அவிதம் கொள் முதல் பாயல்—அத்தகைமைகொண்ட சர்ப்ப சயனம்.

‡ வில் அங்கை முறித்து—வில்லைக் கையால் முறித்து; சீதையை மணக்க, சனக மகாராஜர் சபையில் வில்லை ஸ்ரீராமர் முறித்தனர்—

"ஆடக மால்வரை யன்னது தன்னை * *
ஏடவிழ் மாலையி தென்ன எடுத்தான்......
** கையால் எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்"
—கம்பராமா-கார்முகப் 33, 34

ஓடி—சென்று—"திரைகட லோடியும் திரவியம் தேடு"
—என்புழிப்போல (கொன்றைவேந்தன்)

[தொடர்ச்சி 591 ஆம் பக்கம் பார்க்க.]

விஷம் கவுளில் (கன்னத்தில்) ஏறக் (காளிங்கனது) படத்தின்மீது ஆடி நடிக்கும் அத் தகைமை கொண்ட சிறந்த சர்ப்ப சயனப் பாயலிற் பள்ளிகொள்ளும் மாயன் —

வில்லை அங்கையால் முறித்துச் சென்று, தாம் செல்லும் இடங்களை எல்லாம் சிறப்பாக்கி வைத்து விளங்கின மேகநிற அண்ணல் ஸ்ரீராமர் — ஆகிய திருமாலுக்குப் பிரியமான மருகனே!

(தடம்) நீர் நிலைகளைக் கொண்ட மலைச்சாரல்களில் நடுங்குகின்ற மயிலும் அதன் பெடையும் சூழ, ஒலி செய்யும் தகுதியுடன் பாடி வண்டுகள் சூழ—

விளங்கும் வயற் பக்கங்களைக் கொண்ட, குரங்குகள் குதித்து விளையாடும் தலங்களில், மனம் உவந்து வீற்றிருக்கும் பெருமாளே!

(பொற்பாதம் அருள்வாயே)

காவளூர்

886.

மானுக்கொத்த கண்ணொடு கூடிய மங்கையர், பாலுக்கொத்த மொழியொடு கூடிய பேச்சினர், நறுமணமுள்ள நல்ல மலரை அணிந்துள்ள, (அழகில்) தெய்வமகளிரை ஒத்தவராகிய வேசையர் - இவர்களின் இரண்டு தோள்கள் மீதிலும்—

மார்பின் மீதிலும், முத்துமாலை புரள, (காமபூரண) காம இச்சைக்குப் பூரண இடம் தரும் தங்கக் கடகம் என்னும் வளை பொருந்த, (அல்லது ஒளி வீச), கடல் நீலநிறமுள்ள (வளைக்கை—கைவளை) வளையல் ஒலிசெய, காமப் பற்று—

[590-ஆம் பக்கத் தொடர்ச்சி]

x "தடங் **கதலிக்கான**" என்றும் பாடம்; கதலிக்கானம் என்பது திருக்கழுக்குன்றம். குரங்கு குதித்தாடு தலங்கள்—வட குரங்காடுதுறை—தென் குரங்காடுதுறைத் தலங்கள்.

ஆன நேரில்வி தத்*திர யங்களும்
நாண மாறம யக்கியி யம்பவும்
ஆடை சோரநெ கிழ்த்தியி ரங்கவும் உறவாடி-

ஆர வாரந யத்தகு ணங்களில்
வேளி னூல்கனை கற்றவி ளம்பவும்
ஆகு மோகவி பத்துமொ ழிந்துனை யடைவேனோ ;

சான கீதுய ரத்தில ருஞ்சிறை
போன போதுதொ குத்தசி னங்களில்
தாப சோபமொ ழிப்பஇ லங்கையு மழிவாகத்-

† தாரை மானொரு சுக்கிரி பன்பெற
வாலி வாகுத லத்தில்வி ழுந்திட
சாத வாளிதொ டுத்தமு குந்தனன் மருகோனே ;

கான வேடர்சி றுக்குடி லம்புன
மீதில் வாழித ணத்திலு றைந்திடு
காவல் கூருகு றத்திபு ணர்ந்திடு மணிமார்பா-

கர்வு லாவிய பொற்கமு கின்திரள்
பாளை வீசம லர்த்தட முஞ்செறி
காவ ளூர்தனில் முத்தமி ழுந்தெரி பெருமாளே. (க)

தஞ்சை.

[இது தஞ்சாவூர். ரெயில்வே ஸ்டேஷன். தேவார வைப்பு ஸ்தலம்.]

887. மாதர் மீதுள மயக்கு அற

தந்தன தானன தனதான

அஞ்சன வேல்விழி மடமாதர்-
அங்கவர் மாயையி லலைவேனோ ;

---

* விதத்திரயங்கள்—முச்சலீவிகை வகைகள்
—பாடல் 230-பக்கம் 74 கீழ்க்குறிப்பு.

† தாரையைச் சுக்கிரீவனுக்கு அளித்தது, வாலியை அட்டது
—பாடல் 578-பக்கம் 322 கீழ்க்குறிப்பு.

பிடிக்கும் சமயத்தில் (விதத்திரயங்களும்) முச்சலீலிகை மருந்து வகைகளைக் கொண்டு, நாணம் ஒழியும்படித் (தம்மிடம் வந்தவரை) மயக்கிப் பேச்சுக்களைப் பேசவும், இடையில் அணிந்துள்ள ஆடை தளர நெகிழ்த்தி இரக்கம் காட்டுதல் போல உறவாடியும்—

ஆடம்பரமான வகையொடு கூடிய குணத்துடனும், நயத்தொடு கூடிய குணத்துடனும், காமநூல் சாத்திரங்களில் (கொக்கோக சாத்திரத்தில்) தாம் கற்றுள்ள நுணுக்கங்களை எல்லாம் எடுத்துச் சொல்வதனால் ஏற்படும் (மோக விபத்தும்) காம மோகத்தால் வரும் ஆபத்தும் ஒழிந்து உன்னைச் சேர்வேனோ!

ஜானகி துன்பத்துடன் அரிய சிறையிற்பட்டு இருந்தபோது உண்டான கோபத்துடன் (தனது தாப சோபம்) துன்பத்தையும் துக்கத்தையும் நீக்குதற் பொருட்டு, இலங்கை அழியவும்,

தாரை என்னும் மாதினை ஒப்பற்ற சுக்கிரீவன் பெறவும், வாலிவெற்றி (அழிந்து) பூமியில் மாண்டுவிழவும், தோன்ற (காணும்படி) எடுத்த அம்பினைச் செலுத்தின திருமாலின் நல்ல மருகனே!

காட்டு வேடர்களின் சிறிய குடிசையிலும், அழகிய தினைப்புனத்திலும், அதன் மீது இருப்புக்காக அமைந்த பரணிலும் வீற்றிருந்து காவலை (மிகுதியாக) மிக நன்றாகச் செய்த குறத்தி (வள்ளி) அணைந்திடும் அழகிய மார்பனே!

சோலையிலுள்ள அழகிய கமுக மரங்களின் கூட்டம் தமது பாளைகளை வீசுவதும், நீர்ப்பூ உள்ள குளங்கள் நிறைந்துள்ளதுமான **காவளூர்** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் (பெருமாளே!) (இயல், இசை, நாடகம் என்னும்) முத்தமிழும் தெரிந்த பெருமாளே!

(மோக விபத்தும் ஒழிந்துனை அடைவேனோ)

தஞ்சை

887.

மை பூசின வேலன்ன கண்களை உடைய அழகிய மாதர்களாம்

அவர்களிடத்தில் மாயை மயக்கில் நான் அலைச்சல் உறுவேனோ!

விஞ்சு று மாவுன தடிசேர-
விம்பம தாயரு ளருளாதே ;
நஞ்சமு தாவுணு மரணர் தம்-
நன்கும ராவுமை யருள்பாலா ;
தஞ்சென வாமடி யவர்வாழத்-
தஞ்சையில் மேவிய பெருமாளே. (க)

888. பிரமை தீர

தந்த தானனத் தந்த தானனத்
தந்த தானனத் தனதான

அம்பு ராசியிற் கெண்டை சேலொளித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்-
அங்க ணாரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினாலே ;
எம்பி ரானுனைச் சிந்தி யா*தொழித்
திந்த்ர சாலஇப் ப்ரமைதீர-
இங்கு வாவெனப் பண்பி னாலழைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய் ;
கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல்குழற் கனமேருக்-
குன்று போல்முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா ;
†சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா-

---

* ஒழித்த இந்த்ரசால எனப்பிரிக்க.

† சம்பராரி — மன்மதன் : சம்பரன்—ஒரு அசுரன். இவன் கிருஷ்ணனுக்கு ருக்குமணியிடத்துப் பிறந்த பிரத்தியும்நனைத் தனக்குப் பகைவன் என எண்ணி சிசுவாயிருக்கையில் கடலில் இட்டனன். அந்தச் சிசுவை ஒரு மீன் விழுங்கிற்று; அம் மீன் ஒரு வலைஞன் வலையில் அகப்பட்டது. அவன் அதைச் சம்பரனிடம் கொடுத்தான். சம்பரன் மனைவி மாயாவதி அதைக் கறிசெய்ய அரிந்தபோது அதனுள்ளேயிருந்து கிடைத்த குமரனை அவள் வளர்த்தாள் : அவன் வளர்ந்த பின் சம்பரன்தான் தன்னைக்

[தொடர்ச்சி 595-ஆம் பக்கம் பார்க்க]

(விஞ்சுறுமா—விஞ்சுறுமாறு) நான் மேம்பட்டு விளங்கவும் உனது திருவடியைச் சேரவும்

ஒளிவகையில் உனது திருவருள் எனக்கு அருளாதோ!

விஷத்தை அமுதாக உண்ட சிவபிரானுடைய

நல்ல குமரனே! உமை அருளிய குழந்தையே!

சரண் நீயே எனக் கொண்டுள்ள அடியார்கள் வாழத்

(தஞ்சை) **தஞ்சாவூரில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(அருள் அருளாதோ)

888.

கடலில் உள்ள கெண்டை மீன், சேல் மீன் இவை (ஒளித்து அஞ்சவே) அஞ்சி—பயந்து ஒளித்திடுமாறு, ரத்னக் குழைகள் அளவும் வீசி விளங்கும்—

அழகிய கண்களை உடைய மாதர்கள்பாற் கிடைக்கும் இன்பக் கடல்போன்ற நெருப்பில் முழுகும் காம விருப்பால்

எம்பெருமானே! உன்னை நான் தியானிக்காத வண்ணம் என்னைப் பிரிக்கும் இந்திரஜாலம் (மாயவித்தை) போன்ற இந்த மயக்க அறிவு நீங்க—(நீ என்னை)

இங்கேவா என்று (ஆட்கொள்ளும்) முறையில் அழைத்து எங்கும் நிறைந்துள்ள தான உண்மைப் பொருளைத் (தந்தருளுக) உபதேசித்தருளுக;

கொம்பு போன்ற மெல்லிய இடை, கொவ்வைக் கனி போன்ற வாயிதழ், மேகம் போன்ற கூந்தல், பருத்த மேரு

மலை போன்ற கொங்கை—இவைகளை உடைய அழகிய வேட்டுவப்பெண் வள்ளியை (மணம்) கொண்ட அழகிய சற்குண வேலனே!

(சம்பராரி) மன்மதனைக் கொல்வித்த நெருப்புக் கண்ணை உடைய (சம்பு) சிவனுக்கு உபதேசம் செய்த குருமூர்த்தியே!

கடலில் இட்டவன் என உணர்ந்து (அக்குமரன்) அவனை (சம்பரனைக்) கொன்றான். இவன் முற்பிறப்பில் மன்மதன். மாயாவதி ரதிதேவி; சம்பரனைக் கொன்ற காரணத்தால் மன்மதனுக்குச் சம்பராரி எனப் பெயர். மீன் வயிற்றில் உதித்ததால் மீனக்கொடி (மன்மதனுக்கு).

மன்மதனை எரித்தது—பாடல் 399, பக்கம் 510.

சிவனுக்கு உபதேசித்தது—பாடல் 628, பக்கம் 462.

சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே * (உ)

889. ஞானம் பெற

தந்த தானன தான தான தத்த தந்த
தந்த தானன தான தான தத்த தந்த
தந்த தானன தான தான தத்த தந்த தனதான

கந்த வார்குழல் கோதி மாலை யைப்பு னைந்து
†மஞ்ச ளாலழ காக மேனி யிற்றி மிர்ந்து
கண்ட மாலைக ளான ஆணி முத்த ணிந்து தெருவூடே-

கண்ட பேரையெ லாம வாவி னிற்கொ ணர்ந்து
வண்ப யோதர பார மேரு வைத்தி றந்து
கண்க ளாகிய கூர வேலை விட்டெ றிந்து விலைகூறி ;

வந்த பேர்களை யேகை யாலெ டுத்த ணைந்து
கொண்டு தேனித ழூறு வாயை வைத்த ருந்தி
மந்த மாருதம் வீசு பாய லிற்பு ணர்ந்து மயல்பூணு-

மங்கை மாரநு போக தீவி னைப்ப வங்கள்
மங்கி யேகிடு மாறு **ஞான வித்தை தந்து**
வண்டு லாவிய நீப மாலை சற்றி லங்க **வருவாயே ;**

‡இந்த்ர தாருவை ஞால மீதி னிற்கொ ணர்ந்த
சங்க பாணிய னாதி கேச வப்ர சங்க
னென்று வாழ்மணி மார்பன் வீர விக்ர மன்றன் மருகோனே-

---

* இப் பாடல் மனப்பாடம் செய்யத் தக்கது.

† "முட்டற்ற மஞ்சளை எண்ணெயிற் கூட்டி முகமினுக்கி"
—பட்டினத்தார்-திரு ஏகம்ப 29.

‡ தேவலோகத்துப் பாரிஜாத விருக்ஷத்தைக் கண்ணபிரான் பூவுலகுக்குக் கொணர்ந்தது
—பாடல் 15-பக்கம் 507 ; பாடல் 1279 பார்க்க.

இதன் விவரம் :—"கண்ணபிரான், நரகாசுரனைக் கொன்று அவனால் முன்னே கவர்ந்துகொண்டு போகப்பட்ட (இந்திரன் தாயான) அதிதியின் குண்டலங்களை அவளுக்குக் கொடுப்பதற்காகக் கருடன்மேல் சத்தியபாமையுடன் தேவலோகத்திற்குச் செல்ல, அங்கு இந்திரன் மனைவி இந்திராணி பாரிஜாதப் பூ மானிடப் பெண்ணும் சத்யபாமைக்குத் தகாதென்று கொடாதிருக்கச், சத்திய பாமையின் வேண்டுகோளின்படி கருடனைக் கொண்டு அந்தப்

[தொடர்ச்சி 597-ஆம் பக்கம் பார்க்க]

வலிமை—திண்மை வாய்ந்த கோபுரமும் செம்பொன் விளங்கும் மாளிகைகளையும் கொண்ட **தஞ்சை** மாநகரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(ப்ரமைதீர மெய்ப்பொருள் தாராய்)

889

*ந*றுமணமுள்ள நீண்ட கூந்தலைச் சிக்கெடுத்துவாரி, மாலையைச் சூடிக்கொண்டு, மஞ்சளை அழகுடன் உடலில் நிரம்பப் பூசிக், (கண்டம்) கழுத்தில் மாலையாக ஆணி முத்துமாலையை அணிந்து, தெருவிலே

பார்த்த பேர்வழிகளை எல்லாம் (அவாவினில்) ஆசையுடன் அழைத்துக் கொண்டுவந்து, வளப்பம் உள்ள கொங்கைப் பாரமாகிய மேரு மலையைத் திறந்து வெளியிற் காட்டி, கண்கள் என்னும் கூரிய வேலாயுதத்தை வேகமாகச் செலுத்தித் (தனக்குச் சேரவேண்டிய தொகை இவ்வளவு என்று) விலைபேசி—

வந்தவரைக் கையால் எடுத்து அணைந்துகொண்டு, தேன்போல இனிக்கும் வாயிதழ் ஊறலை வாயை வைத்துப் பருகி, (மந்த மாருதம்) தென்றல் வீசும் பாயலிலே புணர்ந்து காமமயக்கம் கொள்ளும்—

மாதர்களுடன் அனுபோகம் செய்வதால் வரும் கொடிய வினைகளுடன் கூடிய பிறப்புக்கள் எல்லாம் குலைந்து தொலைந்து போம்படி **ஞான** வித்தையை அடியேனுக்குத் தந்து, (நீயும்) வண்டுகள் உலாவும் **கடப்பமாலை சற்றே என்முன் விளங்க வருவாயே.**

இந்த்ரலோகத்துக் கற்பக விருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்த (பாஞ்ச சன்னியம் என்னும்) சங்கத்தைக் கையில் ஏந்தியவன், ஆதிகேசவன் என்னும்—ப்ரகியாதி (கீர்த்திப் பெயர்) பெற்றவன், (என்று) சூரியனுடைய ஒளிபோன்ற ஒளிதங்கி விளங்கும் கவுத்துவம் என்னும் மணியை மார்பில் அணிந்துள்ளவன், வீர பராக்ரமன்—ஆகிய திருமாலின் மருகனே!

பாரிஜாத மரத்தையே வலியப் பறித்து வந்து சத்யபாமையின் வீட்டு முற்றத்தில் நட்டருளினர். அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் கண்ணபிரானொடு போர் செய்யக், கண்ணபிரான் தனது சங்க நாதத்தினாலே அவர்களை மோகித்து விழும்படிச் செய்தனர்.

[தொடர்ச்சி 598-ஆம் பக்கம் பார்க்க]

எண்டி சாமுக வேலை ஞால முற்று மண்டு
கந்த தாருக சேனை நீறு பட்டொ துங்க
வென்று பேரொளி சேர்ப்ர காசம் விட்டிலங்கு கதிர்வேலா;

சந்த்ர சேகரி நாக பூஷ ணத்தி யண்ட
முண்ட நாரணி யால போஜ னத்தி யம்பை
தந்த பூரண ஞான வேள்கு றத்தி துஞ்சு மணிமார்பா-

சண்ட நீலக லாப வாசி யிற்றி கழ்ந்து
கஞ்சன் வாசவன் மேவி வாழ்ப திக்கு யர்ந்த
தஞ்சை மாநகர் ராஜ கோபு ரத்த மர்ந்த பெருமாளே. (ரு)

சப்தஸ்தானம்.

[இவை திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த் தானம் என்னும் எழு ஸ்தலங்கள். ஒவ்வொன்றும் பாடல் பெற்றது. திருவையாற்றுப் பஞ்சநதேஸ்வரர் ஏனைய ஆறு ஸ்தலங்களுக்கும் வந்து காக்ஷி கொடுத்தருளும் சப்த ஸ்தான உற்சவம் சித்திரை பௌர்ணமியிற் கொண்டாடப்படும்.]

890. திருப்புகழ் ஓத

தனன தானன தான தனத்தன
தனன தானன தான தனத்தன
தனன தானன தான தனத்தன தனதான

மருவு லாவிடு மோதி குலைப்பவர்
சமர வேலெனு நீடு விழிச்சியர்
மனதி லேகப டுரு பரத்தைய ரதிகேள்வர்-

[597-ஆம் பக்கத் தொடர்ச்சி]

"என் நாதன் தேவிக்கன் றின்பப்பூ ஈயாதாள்
தன் நாதன் காணவே தண்பூ மரத்தினை
வன்னுதப் புள்ளால் வலியப் பறித்திட்ட
என்நாதன் வன்மையைப் பாடிப் பற—
—எம்பிரான் வன்மையைப் பாடிப் பற—
"கற்பகக் காவு கருதிய காதலிக்கு
இப்பொழு தீவனென்று இந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்
[தொடர்ச்சி 599-ஆம் பக்கம் பார்க்க]

எட்டுத் திக்கிலும் உள்ள கடல் (கடலால் சூழப்பட்ட) பூமி முற்றிலும் நிறைந்து விளங்கும் கந்தனே! தாருகனும் அவன் சேனையும் (அல்லது, முற்றிலும் அண்டு உகந்த— நெருங்கி மகிழ்ந்த தாருகன் சேனை) தூள்பட்டு அழிய ஜெயித்து பெரும்புகழ் கொண்ட ஒளி பரப்பி விளங்கும் ஒளி வேலனே!

சந்திரனைச் சூடினவள், பாம்பை ஆபரணமாகக் கொண்டவள், பூவுலகை உண்ட நாரணி (வைஷ்ணவி), விஷத்தை உண்டவள், அம்பிகை—ஆகிய பார்வதி பெற்ற ஞான பூரணனும் வேளே! குறத்தி—வள்ளி துயில் கொள்ளும் அழகிய மார்பனே!

அதிவேகம் கொண்டதும், நீலநிறத் தோகை உள்ளதுமான மயிலாம் குதிரைமீது விளங்கிப், பிரமன்— இந்திரன் வீற்றிருந்துவாழும் பதிகளாகிய (தலைநகராகிய) மனோவதி, அமராவதி என்னும் ஊர்களினும் மேம்பட்டதான **தஞ்சை** (தஞ்சாவூர்) என்னும் பெரும் பட்டணத்தில் உள்ள ராஜ கோபுரத்தில் அமர்ந்தருளும் பெருமாளே! (நீபமாலை சற்றிலங்க வருவாயே)

சப்தஸ்தானம்
890

நறுமணம் உலவும் கூந்தலைக் கலைத்து அவிழ்ப்பவர்; போருக்கு உற்ற வேல் என்று சொல்லத்தக்க நீண்ட கண்களை உடையவர்கள்; மனதிலே வஞ்சனை ஊறும் பரத்தையர்; ரதியின் கணவனாகிய

[598-ஆம் பக்கத் தொடர்ச்சி]

உய்த்தவன் என்னைப் புறம்புல்குவான்"
உம்பர்கோன் என்னைப் புறம் புல்குவான்"
—பெரியாழ்வார் 3-9-1; 1-9-9;

'அருட்கொண்டல் அன்ன அரங்கர் சங்கோசையில் அண்டமெல்லாம்,
வெருட்கொண் டிடர்ப்பட மோகித்து வீழ்ந்தனர் வேகமுடன்
தருக்கொண்டு போகப் பொருதே தொடருஞ் சதுர்முகனும்
செருக்கொண்ட முப்பத்து முக்கோடி தேவருஞ் சேனையுமே.'
—(பிள்ளைப் பெருமாளையங்கார்).

*மதன ைேடுறழ் பூச லிடைச்சியர்
இளைஞ ராருயிர் வாழு முலைச்சியர்
மதுர மாமொழி பேசு குணத்தியர் தெருமீதே ;

சருவி யாரையும் வாவெ னழைப்பவர்
பொருளி லேவெகு ஆசை பரப்பிகள்
சகல தோதக மாயை படிப்பரை யணுகாதே-

†சலச மேவிய பாத நினைத்துமுன்
அருணை நாடதி லோது திருப்புகழ்
தணிய வோகையி லோத எனக்கருள் புரிவாயே ;

‡அரிய கானக மேவு குறத்திதன்
இதணி லேசில நாளு மனத்துடன்
அடவி தோறுமெ வாழியல் பத்தினி மணவாளர்-

அசுரர் வீடுகள் நூறு பொடிப்பட
உழவர் சாகர மோடி யொளித்திட
அமரர் நாடுபொன் மாரி மிகுத்திட நினைவோனே ;

---

* மதனனேடு உறழ் இடை—மன்மதனைப் போல உருவம் இல்லாதது இடை.

† அருணகிரியாரின் இவ் வேண்டுகோள் வயலூரில் நிறைவேறிற்று—பாடல் 105 அடி 4-பார்க்க.

‡ பரண்மீதும், காடுகளிலும் வள்ளி வாழ்ந்தனள் ; அந்தக் காடுகள் சண்பகக் காடு, சந்தனக் காடு முதலியன ;

"செண்ப காடவி யினுமித ணினுமுயர்
சந்த னடவி யினுமுறை குறமகள்"—திருப்புகழ் 289.

மன்மதனுக்கு ஒப்பானதும், (காமப்) போருக்கு உற்றதுமான இடையை உடையவர்கள், இளைஞர்களின் அரிய உயிர் தங்கி வாழ்கின்ற கொங்கையை உடையவர்கள், இனிமை வாய்ந்த பெரிய பேச்சுக்களைப் பேசும் குணத்தினர், தெருவில்

(சருவி) கொஞ்சிக் குலவி யாரையும் வா என்று அழைப்பவர், பொருள் பெறுவதில் மிக்க ஆசை பரந்துள்ள நெஞ்சினர், எல்லாவித வஞ்சகமான மாயை வித்தைகளையும் கற்பவர், (இத்தகைய) வேசையர்களை நான் நெருங்காமல்—

தாமரைக்கு ஒப்பான உனது திருவடியைத் தியானித்து, முன்பு திருவண்ணமலைப் ப்ரதேசத்தில் நான் ஓதின சந்தப் பாவாம் திருப்புகழை உள்ளங் குளிர்ந்த மகிழ்ச்சியுடனே (எப்போதும்) ஓதும்படியான பாக்கியத்தை எனக்கு நீ அருள்புரிவாயாக !

(செல்லுதற்கு) அரிய (வள்ளிமலைக்) காட்டில் இருந்த குறத்தி தனது (தினைப்புனத்துப்) பரண்மீதில் சில நாளும், (மனத்துடன்) மனம் வைத்து ஆசையுடன், (அடவிதோறுமே) (சந்தனக்காடு, செண்பகக்காடு முதலிய) காடுகள் தோறுமே வாழ்ந்து உலவின, உழுவலன்புடைய பத்தினித்தேவியாகிய வள்ளியின் மணவாளனே !

அசுரர்கள் இருப்பிடங்கள் எல்லாம் தூளாகிப் பொடியாக (அல்லது நூற்றுக்கணக்காகப் பொடிபட), (உழவர்) (அசுரப்) படைவீரர்கள் (பயந்து) கடலுள் ஓடி ஒளித்துக்கொள்ள, தேவர்களின் நாடு (பொன்னுலகம்) பொன்மழை மிகச் சொரிய—நினைந்து உதவினவனே !

*திருவின் மாமர மார்பழ னப்பதி
அயிலு †சோறவை யாளுது றைப்பதி
திசையி னுன்மறை தேடிய முற்குடி விதியாதிச்-
சிரமு மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதும நாயகன் வாழ்பதி நெய்ப்பதி
திருவை யாறுட னேழுதி ருப்பதி பெருமாளே. (க)

திருவையாறு.

[தஞ்சாவூருக்கு வடக்கு 7-மைல். சப்த ஸ்தானங்களுள் முதன்மையானது. மூவர் தேவாரமும் பெற்றது.]

891. வீடுற

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தனதான

சொரியு மாமுகி லோஇரு ளோகுழல்
சுடர்கொள் வாளிணை யோபிணை யோவிழி
சுரர்த மாரமு தோகுயி லோமொழி யிதழ்கோவை-
துவர தோஇல வோ‡தெரி யாஇடை
துகளி லாவன மோபிடி யோநடை
துணைகொள் மாமலை யோமுலை தானென உரையாடிப்;
பரிவி னுலெனை யாளுக நாளொரு
பழுதி லானென வானுத லாரொடு
பகடி யேபடி யாவொழி யாஇடர் படுமாயப்-

---

* திருப்பழனமும் மாமரமும்:
"காவேரி நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண் டெதிருந்தி...திரைமுன் சேர்க்கும் பழன நகர்"—சம்பந்தர் 1-67-5.

† சோறவை யாளு துறைப்பதி—திருச்சோற்றுத்துறை.
நான்மறைதேடிய முற்குடி-திருவேதிகுடி. விதி சிரம் வீழ்தரு பதி—திருக்கண்டியூர். பதுமநாயகன் வாழ் பதி—திருப்பூந்துருத்தி. நெய்ப்பதி—திருநெய்த்தானம்.

திருச் சோற்றுத் துறை-இந்த ஸ்தலம்-சிவபக்தனை அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்தும்போது, சுவாமி அவனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத சோறு அளித்தருளிய ஸ்தலம். வேதம் பூசித்த தலம் **வேதிகுடி**. வைரவரால் பிரமனது சிரம் துண்டிக்கப் பட்ட தலம் **கண்டியூர்**. சூரியன் பூசித்ததலம் போலும். **திருப்பூந்துருத்தி**— [தொடர்ச்சி 603 ஆம் பக்கம் பார்க்க]

லக்ஷ்மீகரம் பொருந்திய மாமரங்கள் நிறைந்த **திருப்பழனம்** என்னும் ஊர், உண்பதற்குஉரிய (சோறவையாளு துறைப்பதி) **திருச் சோற்றுத்துறை**, திசைகள் தோறும் நான்கு வேதங்கள் (ஈசனைத்) தேடிய (தேடி அடைந்த) பழம்பதியாகிய **திருவேதிகுடி**, பிரமனுடைய முதல்

தலை (உச்சித்தலை) பெரிய பூமியில் கிள்ளப்பட்டு வீழ்த்தப்பட்ட உண்மை நகரமாம் **திருக்கண்டியூர்**, தாமரையின் நாயகனும் சூரியன் பூசித்து வாழ்ந்த ஊராகிய **திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், திருவையாறுடன்** ஆக ஏழு திருப்பதிகளிலும் வாழ்கின்ற பெருமாளே!

(திருப்புகழ்...ஓத எனக்கருள் புரிவாயே)

திருவையாறு

891.

சொரிந்து மழையாய் விழும் இருண்ட மேகமோ அல்லது இருள்தானோ கூந்தல், ஒளிகொண்ட வாள்கள் இரண்டோ அல்லது மானோ கண்; தேவர்களின் அருமையான அமுதம் தானோ அல்லது குயிலின் குரல்தானோ மொழி; வாயிதழானது கொவ்வைக்கனி தானோ (அல்லது)

பவளமோ, இலவமலரோ; தெரியா—கண்ணுக்குத் தெரியாத உருவத்ததோ இடையானது; குற்றம் இல்லாத அன்னமோ, பெண் யானையோ (அன்ன நடையோ—பெண் யானை நடையோ) நடையானது, இரட்டையாயுள்ள பெரிய மலைகளோ கொங்கைகள்—என்றெல்லாம் உவமைகள் எடுத்துப் பேசி,

'அன்புடன் என்னை ஆண்டருளுக, நான் ஒரு குற்றமு மில்லாதவன்' என்று ஒள்ளிய நெற்றியை உடைய மாதர்களுடன் (பகடியே) வெளி வேஷப் பேச்சுக்களையே பேசிப் படித்து, நீங்காத துன்பத்திற்கு இடமான (இந்தப் பிறவி யென்னும்) மாயக்—

[602 ஆம் பக்கத் தொடர்ச்சி]

‡ 'தெரியா இடை'—பாடல் 201 (இராத இடை)

பரவை மீதழி யாவகை ஞானிகள்
பரவு நீள்புக ழேயது வாமிகு
பரம வீடது சேர்வது மாவது மொருநாளே ;
கரிய மேனிய னினிரை யாள்பவன்
அரிய ராவணே மேல்வளர் மாமுகில்
*கனகன் மார்பது பீறிய வாளரி கனமாயக்-
கபடன் மாமுடி யாறுட னலுமொர்
கணையி னல்நில மீதுற நூறிய
கருணை மால் †கவி கோபக்ரு பாகரன் மருகோனே ;
‡திரிபு ராதிகள் தூளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
xதெரிவை பாதியர் சாதியி லாதவர் தருசேயே-
சிகர பூதர நீறுசெய் வேலவ
திமிர oமோகர வீரதி வாகர
திருவை யாறுறை தேவக்ரு பாகர பெருமாளே. (சு)

திருப்பூந்துருத்தி.

[தஞ்சாவூருக்கு வடமேற்கு 8-மைல். சப்தஸ்தானங்களுள் ஒன்று. திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

892. ஞானசாரம் பெற

தாந்த தத்தன தான தானன
தாந்த தத்தன தான தானன
தாந்த தத்தன தான தானன தந்ததான

வீங்கு பச்சிள நீர்போல் மாமுலே
சேர்ந்த ணைத்தெதிர் மார்பூ டேபொர
வேண்டு சர்க்கரை பால்தே னேரிதழ் உண்டுதோயா-

* இரணியன் மார்பைக் கிழித்தது —பாடல் 327-1-பக்கம் 317-கீழ்க்குறிப்பு.
† கவி கோப—வாலியைக் கோபித்தது; வாலியை அட்டது. —பாடல் 231-பக்கம் 78 கீழ்க்குறிப்பு.
‡ திரிபுராதிகளை எரித்தது —பாடல் 285-பக். 206 கீழ்க்குறிப்பு.
x தெரிவை பாதியர்—பாடல் 301-பக்கம் 246 கீழ்க்குறிப்பு.
o மோகரம்—மயக்கம்.

கடலிலே அழியாதபடி, ஞானிகள் போற்றுகின்ற பெரும் புகழே உருவான சிறந்த (பரம வீடது) மேலான மோக்ஷ வீட்டைச் சேர்வதும் (அங்ஙனம் சேரத்) தகுந்தவனுவதுமான ஒரு நாள் (எனக்குக்) கிடைக்குமா!

கரிய நிறத்தினன், பசுக் கூட்டத்தை மேய்த்து ஆள்பவன், (அரி) திருமால், பாம்பணையின் மேல் துயில் வளர் கரிய முகில், பொன்னிறத்தனும் இரணியனுடைய மார்பைக் கிழித்த (வாளரி)– ஒளிவீசும் (அரி), (அல்லது ஆளரி) நரசிங்கம், பலமான மாயங்களில் வல்ல—

வஞ்சகனும் (ராவணனுடைய) பெரிய முடிகள் (ஆறும் நாலும்) பத்தும் * ஒரே பாணத்தால் நிலத்தின்மீது விழும்படித் தூளாக்கிய கருணை நிறைந்த திருமால், (கவி) வாலி எனும் குரங்கைக் கோபித்து (அழித்த) கிருபைக்கு இடமானவன் (ஆன திருமாலின்) மருகனே!

திரிபுர அசுரர்கள் தூளாமாறு (சாம்பலாமாறு), தேவர்கள் விளங்கும்பொருட்டு (முனியா) திரிபுராதியர்மேல் கோபித்துத் (தேவர்களுக்கு) அருள் மிகப் பாலித்தவர், தேவிக்குத் தன் உடலிற் பாதி கொடுத்தவர், சாதி என்பதே இல்லாதவர்–ஆன சிவபிரான் தந்த குழந்தையே!

சிகரங்களை உடைய (கிரௌஞ்ச) மலையைத் தூளாக்கி அழித்த வேலனே! இருள்—அஞ்ஞானம் (என்பதைப் போக்கவல்ல) வீர சூரியனே! **திருவையாற்றில்** எழுந்தருளி யிருக்கும் தேவனே! கிருபாகர மூர்த்தியே! பெருமாளே!

(வீடது சேர்வதும் ஆவதும் ஒரு நாளே)

திருப்பூந்துருத்தி
892.

பருமை கொண்டுள்ள பச்சை இளநீர் போல உள்ள பெரிய கொங்கைகளைச் சேர்ந்து அணைத்து எதிரில் உள்ள மார்பில் அழுந்தும்படிப் பொருந்தவைத்து, விரும்பத்தக்க சர்க்கரை, பால், தேன் இவைகளுக்கு ஒப்பான வாயிதழ் (ஊறலை) உண்டு தோய்ந்து

---

* ஒரே பாணம் — பாடல் 452, பக்கம் 6 - கீழ்க்குறிப்பு.

வேண்டு ரைத்துகில் வேருய் மோகன
வாஞ்சை யிற்களி கூரா வாள்விழி
மேம்ப டக்குழை மீதே மோதிட வண்டிராசி;

ஓங்கு மைக்குழல் *சாதா வீறென
†விந்து ‡புட்குரல் கூவா வேள்கலை
யோர்ந்தி டப்பல க்ரீடா பேதxமு யங்குமாகா-

0ஊண்பு ணர்ச்சியு மாயா வாதனை
தீர்ந்து னக்கெளி தாயே மாதவ
மூன்று தற்குமெய்ஞ் ஞான சாரம்வ ழங்குவாயே;

தாங்கு **நிற்சரர் ††சேனு ‡‡நீதரு
ஞங்கு ருத்ரகு மாரா கோஷண
தாண்ட வற்கருள் கேகி வாகன துங்கவீரா-

XXசாங்கி பற்சுகர் சீநா தீசுர
ரேந்த்ரன் மெச்சிய வேலா போதக
சாந்த வித்தக ஸ்வாமீ நீபவ லங்கன்மார்பா;

---

* சாதா—சதா. † வீந்து—விழுந்து.

‡ புட்குரல்—பாடல் 197-பக்கம் 6-கீழ்க்குறிப்பு.

x முயங்கு—முயங்குதல்—தொழிற் பெயர் விகுதி ஈறு கெட்டு 'முயங்கு' என நிற்கின்றது.

0 ஊண்—ஆன்மாவின் சுக துக்கானுபவம்—"ஊண் ஒழியாது உன்னின்" (சிவப்பிர-19).

** நிர்ச்சரர்—சைன விரதத்தினர்: நிர்ச்சரம்—சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய சைன விரதம். (சிவஞான பாடியம்—அவையடக்கம்—ஆருகதம்)

†† சேனு-சேனை-கூட்டம்—பாடல் 859-பக். 516 கீழ்க்குறிப்பு.

‡‡ நீதர்—நீசர்—'நீதரல்லார் தொழு மாமருகல்'—சம்பந்தர் 1-6-10.

நீதர் உன்னியது: சம்பந்தப் பெருமான் மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளின்படி மதுரைக்கு வந்தவுடனே சமணர்கள் பலவித தீய கனவுகளைக் கண்டு கவலைபூண்டு மனம் நொந்தனர்—"கண்களும் இடமே ஆடி மேல்வரும் அழிவுக்காக வேறு காரணமும் காணுர், மாலுழந் தறிவு கெட்டு மயங்கினர் அமணர் எல்லாம்"—பெரியபுரா-ஞானசம்-633.

XX சாங்கிபற் சுகர் சீனுதீசுரர்—

'சார்ங்க கைத்தலன் வானு டாளம ரேந்த்ரன் மெச்சிய' எனவும்,

[தொடர்ச்சி 607 ஆம் பக்கம் பார்க்க]

விரும்பத்தக்க (உரை) பேச்சுக்களைப் பேசி, ஆடையும் வேருக, காம மயக்க ஆசையில் மகிழ் கூர்ந்து, ஒளி பொருந்திய கண்கள் மேலிட்டுக் காதில் உள்ள குழைகள்மீது மோத, வண்டின் கூட்டங்கள்

மிக்குள்ள கரிய கூந்தல் (சாதா) சதா—எப்போதும் ஈறென வீந்து (விழுந்து)—முடிவு வரைக்கும் விழுந்து (அல்லது வீறென வீந்து—பொலிவுடனே விழுந்து), புட்குரல் ஒலியைக் கூவச்செய்து காம சாத்திர நூல்களை அறியும்படி பலவகையான (காம) லீலைகளின் பேதங்களை (வகைகளை) (நான்) (முயங்கும்) (முயங்குதல்) முயற்சி செய்தல் (ஆகா) கூடாது.

(ஊண்) ஆன்மா அனுபவிக்க வேண்டிய சுக துக்க நுகர்ச்சி— (புணர்ச்சி) கூடுதலும், மாயை சம்பந்தமாய் ஏற்படும் துன்பங்களும் ஒழிந்து, (உனக்கு) உன் திருவடிக்கே—(திருவடித் தியானத்தில்) எளிதான வகையிலேயே—சிறந்த தவநிலை ஊன்றிப் பொருந்துவதற்கு மெய்ஞ்ஞான ஆசார ஒழுக்கத்தைப் பிரசாதித்து அருளுவாயாக.

(சைனமதக் கொள்கைகளை அநுட்டித்துத்) தாங்கி நின்ற (நிர்ச்சரர்) சைன விரதத்தினராம்—சைனக் குருக்கள் மார்களின் (சேனு) கூட்டமாகிய (நீதர்) நீசர்கள்—(உன் ஆங்கு) ஆங்கு (மதுரையில்) உன்—உன்னுதலுக்கு—ஏதோ தீங்குவரப் போகிறதென்று நினைப்பதற்கு இடமாய் நின்ற, ருத்ரகுமாரா—சிவகுமரனே! கோஷண தாண்டவற்கு—வாத்தியங்களின் கோஷத்துடன்—பேரொலியுடன் தாண்டவம் செய்யும் சிவபிராற்கு (உபதேசப் பொருளை) அருளிய (கேகிவாகன) மயில்வாகனனே! உயர்ந்த வீரனே!

சாங்கிபர்—ஆத்ம தத்வத்தை விவரிக்கும் சாங்கிய யோகம் பயின்றவர்கள், சுகப்பிரமரிஷி, சீநாதர்—லக்ஷ்மியின் நாதர் (திருமால்), ஈசுரர்—சிவபிரான், தேவேந்திரன் மெச்சின வேலனே; (போதக) உபதேச குருவே!—(சாந்த) சாந்த மூர்த்தியே! (வித்தக)ப் பேரறிவாளனே! சுவாமியே! கடப்பமாலை அணிந்த மார்பனே!

'சார்ங்க கைத்தல மாலோ டீச மகேந்த்ரர் மெச்சிய' எனவும் பாடங்கள் பிற பதிப்புக்களில் உள்ளன.

[தொடர்ச்சி 608 ஆம் பக்கம் பார்க்க]

பூங்கு ளத்திடை தாரா வோடன
மேய்ந்த செய்ப்பதி நாதா மாமலே
போன்ற விக்ரக சூரா ரீபகி ரண்டரூபா-
பேர்ந்த பத்தர்பொ லாநோய் போயிட
வேண்ட நுக்ரக போதா மேவிய
பூந்து ருத்தியில் வாழ்வே தேவர்கள் தம்பிரானே. (க)

திருநெய்த்தானம்.

[இதுவும் சப்தஸ்தானங்களில் ஒன்று. திருவையாற்றுக்கு மேற்கு 1-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

893. திருவடி மறவாமை

தனனத் தானத் தனதன தனதன
தனனத் தானத் தனதன தனதன
தனனத் தானத் தனதன தனதன தனதான

முகிலேக் காரைச் சருவிய குழலது
சரியத் *தாமத் தொடைவகை நெகிழ்தர
முளரிப் பூவைப் பனிமதி தனைநிகர் முகம்வேர்வ-
முனையிற் காதிப் பொருகணை யினையிள
வடுவைப் பானற் பரிமள நறையிதழ்
முகையைப் போலச் சமர்செயு மிருவிழி குழைமோதத்;
துகிரைக் கோவைக் கனிதனை நிகரிதழ்
பருகிக் காதற் றுயரற வளநிறை
துணைபொற் றேளிற் குழைவுற மனமது களிகூரச்-
சுடர்முத் தாரப் பணியணி ம்ருகமத
நிறைபொற் பாரத் திளகிய முகிழ்முலை
†துவளக் கூடித் துயில்கினு முனதடி மறவேனே;

[607 ஆம் பக்கத் தொடர்ச்சி]

'சாங்கிபற்சுகர்' – சார்ங்கி — இடைகுறைந்து சாங்கி என நின்றது—சார்ங்கி—திருமால், பல்சுகர்—பேரின்ப ரூப சிவன், சினே — சிரஞ்சீவிகளான - இது வடமொழிச் சொல், அதீசுரர் - கடவுளர், இந்திரன்'—எனப் பிரித்துப் பொருள் காண்பர் ஸ்ரீலஸ்ரீ ஈசுர சுவாமிகள் (திருவண்ணுமலே).

* தாமம்—18 கோவையுள்ள மாதர் இடையணி.

† 833, 859, 1099, 1275 எண்ணுள்ள பாடல்கள் இத்தகைய கருத்தைக் கொண்டன.

தாமரைப்பூ உள்ள [அல்லது அழகிய] குளத்தில் [தாரா] குள்ள வாத்துடனே அன்னப்பறவைகள் மேய்கின்ற **வயலூர்ப்** பெருமானே! பெரியமலை போன்ற (விக்ரகம்) உருவத்தைக் கொண்டிருந்த சூரனுக்கு [அரி] பகைவனே! [பகிரண்டம்] வெளியண்டங்களாய் நிற்கும் உருவத்தனே!

[உன்னடியை வேண்டிப்] போந்த [வந்த] பக்தர்களின் பொல்லாத நோய்கள் எல்லாம் ஓடிப்போக, வேண்டிய அனுக்கிரகப் பிரசாதங்களைத் தரும் [போதா] அறிஞனே! பொருந்திய **திருப்பூந்துருத்தி** என்னும் தலத்துச் செல்வனே! தேவர்கள் தம்பிரானே!

[ஞானசாரம் வழங்குவாயே]

திருநெய்த்தானம்

893.

(முகிலை) மேகத்தையும், (காரை) இருள் அல்லது கருமையையும், (சருவிய) பழகிய—கூடி நின்ற கூந்தலானது சரிந்துவிழத், (தாமம்) இடையணியும், (தொடை) பூமாலை வகைகளும் தளர்ந்து நெகிழ, தாமரை மலரையும், குளிர்ந்த சந்திரனையும் ஒத்த முகமானது வேர்வைதர—

முனையினல்- நுனியால் வெட்டுதல்போல முட்டுகின்றதும், போருக்கு உற்றதுமான (கணையினை) அம்பை, இளமாவடுவை, கருங் குவளையை, நறுமணமும் தேனும் நிறைந்த [முகை இதழை] தாமரை மொட்டின் இதழைப்போல விளங்கிப் போர்புரியும் இரண்டு கண்களும் காதில் உள்ள குழைகளை மோதப்—

பவளத்தையும், கொவ்வைக் கனியையும் ஒத்த வாயிதழ் ஊறலை உண்டு, காம வருத்தம் நீங்க, வளப்பம் நிறைந்த இரண்டு அழகிய தோள்களிலும் (மனமது குழைவுற) மனம் உருகி நின்று மகிழ்ச்சி மிக

ஒளிவீசும் முத்துமாலையாம் ஆபரணத்தை அணிந்துள்ளதும், கஸ்தூரி நிறைந்ததும், அழகுள்ளதும், பாரமுள்ளதும், நெகிழ்ச்சி கொண்டதும், குவிந்து தோன்றுவதுமான கொங்கை துவட்சியுறும்படி (நான்) (வேசையரொடு) கூடித் தூங்கினும் உன்னுடைய திருவடியை மறக்க மாட்டேன்.

குகுகுக் கூகுக் குக்குகு குகுவென
திமிதித் தீதித் திமிதியென் முரசொடு
குழுமிச் சீறிச் சமர்செயு மசுரர்கள் களமீதே-

குழறிக் கூளித் திரளெழ வயிரவர்
குவியக் கூடிக் கொடுவர அலகைகள்
*குணலிட் டாடிப் பசிகெட அயில்விடு குமரேசா ;

செகசெச் சேசெச் செகவென முரசொலி
திகழச் சூழத் திருநட மிடுபவர்
செறிகட் காளப் பணியணி யிறையவர் தருசேயே-

சிகரப் பாரக் கிரியுறை குறமகள்
கலசத் தாமத் தனகிரி தழுவிய
† **திருநெய்த் தானத்** துறைபவ சுரபதி பெருமாளே. (க)

திருப்பழுவூர்.

[திருவையாற்றுக்கு வடக்கு 10-மைல். அரியலூருக்குப் போகும் பாதை. திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

894. வேசியர் உறவு அற

தனன தந்தன தாத்த தானன
தனன தந்தன தாத்த தானன
தனன தந்தன தாத்த தானன தனதான

விகட சங்கட வார்த்தை பேசிகள்
அவல மங்கைய ரூத்தை நாறிகள்
விரிவ டங்கிட மாற்றும் வாறென வருவார்தம்-

விதம்வி தங்களை நோக்கி யாசையி
லுபரி தங்களை மூட்டி யேதம
‡இடும ருந்தொடு சோற்றை யேயிடு விலைமாதர் ;

---

* குணலை—ஆரவாரத்துடன் நடிக்கும் கூத்து-'குருதிக் கடலைப் பெருகப் பருகிக் குணலைத் திறனிற் களிக்கும் ஒரு திரள்...... செருக்களத்தில் அலகையே'—திருவகுப்பு (8)

† "திருநெய்த் தானச் சுரர்பதி பரவிய"—என்றும் பாடம்.

‡ இடுமருந்து—பாடல் 230-பக்கம் 74-கீழ்க்குறிப்பு.

குகுகுக் கூகுக்...குகு என்றும், திமிதித் தீதித் திமிதி என்றும் முரசவாத்தியத்துடன் (பறையுடன்) ஒன்று கூடிக் கோபாவேசத்துடன் போர் புரிந்த அசுரர்களின் போர்க்களத்திலே

(குழறி) கூச்சலிட்டுக் (கூளி) பெருங்கழுகுகளின் (அல்லது பேய்களின்) கூட்டம் கூட, (ரணகள) அட்ட பைரவர்கள் குவிந்து-ஒன்று கூடிக்கொண்டுவரப்-பேய்கள், (குணலையிட்டு ஆடி)க் கொக்கரித்து ஆரவாரத்துடன் ஆடித் தமது பசியை ஆற்றிக்கொள்ள வேலாயுதத்தைப் பிரயோகித்த குமரேசனே!

செக செச் சேசெச் செக என்று முரசு (பறை) ஒலி முழங்கித் தம்மைச் சூழத் திருநடனம் செய்பவர், (செவி உணர்ச்சியும்) கூடிய கண்களையும் விஷத்தையும் கொண்ட பாம்பை அணியாகக்கொண்ட இறைவர்-சிவபிரான் அருளிய குழந்தையே!

சிகரங்களை உடையதும், பருத்துப் பாரமுள்ளதுமான (வள்ளி) மலையில் இருந்த குறமகளாம் வள்ளியின் கலசம் (குடம்) போன்றதும், (தாமம்) பூமாலை யணிந்ததுமான கொங்கை மலைகளைத் தழுவிய (பெருமாளே!) **திருநெய்த்தானம்** என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே! தேவர் தலைவன்—இந்திரனுக்குப் பெருமாளே! (உனதடி மறவேனே)

திருப்பழுவூர்
894

ஆசியமானதும் (பரிகாசமானதும்), சங்கடம் தரக் கூடியதுமான பேச்சுக்களைப் பேசுபவர்கள், துன்பத்துக்கு ஏதுவான மாதர்கள், அழுக்கு நாற்றம் வீசுபவர், (விரிவு) செல்வப் பெருக்கு ஒடுங்கி (நிலை) மாறுதற்கு வாய்ப்பு இஃதென்னும்படித் தம்மிடம் வருபவர்களுடைய (தம்முடைய செல்வத்தை இழக்க வருவார்களுடைய)—அல்லது—செல்வப் பெருக்கை (மாற்றும் வாறு) ஒழிக்கும் அலகுமாறு என்னும் வகையில் வருவார்களுடைய)—

அப்போதைக் கப்போது உள்ள நிலைமையைக் கவனித்து, தங்களுக்கு உள்ள ஆசை காரணமாக (உபரிதங்களை) சுரத விசேடங்களை—காம இச்சையை மூளச்செய்து தாங்கள் இடுகின்ற மருந்தொடு சோற்றைக் கலந்து கொடுக்கின்றவர்களாகிய விலை மாதர்கள்—

சகல மஞ்சன மாட்டி யேமுலை
படவ ளைந்திசை மூட்டி யேவரு
சரச இங்கித நேத்தி யாகிய சுழலாலே-

சதிமு ழங்கிட வாய்ப்ப ணுனது
மலர வுந்தியை வாட்டி யேயிடை
தளர வுங்கணை யாட்டும் **வேசிய** **குறவாமோ ;**

*திகிரி கொண்டிரு ளாக்கி யேயிரு
தமையர் தம்பியர் மூத்த தாதையர்
திலக மைந்தரை யேற்ற சூரரை வெகுவான-

செனம டங்கலு மாற்றி யேயுடல்
தகர அங்கவர் கூட்டை யேநரி
திருகி யுண்டிட ஆர்த்த கூளிக ளடர்பூமி ;

அகடு துஞ்சிட மூட்டு †பாரத
முடிய அன்பர்க ளேத்த வே‡யரி
யருளு மைந்தர்கள் வாழ்த்து மாயவன் மருகோனே-

அமர ரந்தணர் போற்ற வேxகிரி
கடல திர்ந்திட நோக்கு மாமயில்
அழகொ டும்பழு வூர்க்குள் மேவிய பெருமாளே. (க)

---

* சக்கரத்தால் சூரியனை மறைத்தது
—பாடல் 350-பக்கம் 380-கீழ்க்குறிப்பு.

† பாரதம் முடிய வைத்தவர்—திருமால்—
"நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல் வண்ணா!"
—வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூது-34.

‡ அரி அருளு மைந்தர்—தரும வீம அருச்சுனர் ;
அரி—இயமன் : வாயு : இந்திரன்.

x "கால் பட்டசைந்தது மேரு, அடியிட எண்டிசை வரை
தூள்பட்ட அத் தூளின் வாரி திடர்பட்டதே"—கந்தரலங் 11.

எல்லாவித நீராடல்களையும் ஆடிக், கொங்கை மேலே படும்படி (வளைந்து) இணங்கி, இசை ஞானத்தைக் காட்டி அதனால் உண்டாகும் காமசேஷ்டை வகையதான இனிமையான, (நேத்தி) — நேதியாகிய — முறைப்பட்ட சுழற்சியான ஆடலாலே—

(சதி) தாள ஒத்து முழங்க, வாயில் இசைப்பாடல்கள் பிறக்க, (உந்தியை) வயிற்றை (வாட்டி); இடை தளரக் கண்களை ஆட்டி அசைக்கும் வேசியர்கள்— இவர்களுடைய சம்பந்தம் ஆமோ—சம்பந்தம் கூடாது என்றபடி,

சக்கரத்தைக் கொண்டு (பகலை) இருளாக்கி, இருதமையர்—கர்ணன், துரியோதனன் ஆகிய இரண்டு தமையன்மார்களையும், ஏனைய தம்பிமார்களையும், (துரியோதனனுடைய தம்பியர்களையும்), மூத்த தாதையர்— திருதராஷ்டிரன், பீஷ்மர் ஆகிய தந்தை, பாட்டன் நிலையில் உள்ள பெரியோர்களையும், துரியோதனன் பிள்ளை இலக்கண குமரனாதிய சிறந்த பிள்ளைகளையும், போரை ஏற்றுவந்த சூரர்களான பகைவர்களையும் — அதிகமான (நிறைந்த)

பகைவராம் ஜனங்கள் எல்லாரையும் அழிவு செய்து, அவர்கள் உடல் பொடியாக, அவர்களுடைய தேகங்களை நரிகள் திருகி உண்ணப், பேரொலி செய்யும் பேய்கள் (அல்லது கழுகுகள்) நிறைந்த போர்ப்பூமியில்—

(அகடு) நடுவு நிலைமை குறைய மூள்வித்த பாரதப்போர் முடிய, அன்பர்கள் துதி செய்ய, (அரி) இயமன், வாயு, இந்திரன் ஈன்ற மைந்தர்களான தருமன், வீமன், அருச்சுனன் இவர்கள் வாழ்த்தித் துதிக்கும் திருமாலின் மருகனே!

தேவர்களும், அந்தணர்களும் துதிக்கவே, மலையும் கடலும் அதிர்ச்சி கொள்ளும்படி நோக்கவல்ல (செய்யவல்ல) சிறந்த மயில்மேல் அழகுடனே பழூவூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(வேசியர் உறவாமோ)

பெரும்புலியூர்.

[இது திருவையாற்றுக்கு மேற்கு 2½-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

895. திருவடியைப் பெற

தனந்தனன தானத் தனந்தனன தானத்
தனந்தனன தானத் தனதான

சதங்கைமணி வீரச் சிலம்பினிசை பாடச்
சரங்களொளி வீசப் புயமீதே-
தனங்கள்குவ டாடப் படர்ந்தபொறி மால்பொற்
சரங்கண்மறி காதிற் குழையாட;
இதங்கொள்மயி லேரொத் துகந்தநகை பேசுற்
றிரம்பையழ கார்மைக் குழலாரோ-
டிழைந்தமளி யோடுற் றழுந்துமெனை நீசற்
றிரங்கியிரு தாளைத் தருவாயே;
சிதம்பரகு மாரக் கடம்புதொடை யாடச்
சிறந்தமயில் மேலுற் றிடுவோனே-
சிவந்தகழு காடப் பிணங்கள்மலை சாயச்
சினந்தசுரர் வேரைக் களைவோனே:
*பெதும்பையெழு கோலச் செயங்கொள்சிவ காமிப்
ப்ரசண்டஅபி ராமிக் கொருபாலா-
பெரும்புனம தேகிக் குறம்பெணொடு கூடிப்
பெரும்புலியூர் வாழ்பொற் பெருமாளே. (க)

---

* பெதும்பை—8 முதல் 11 வயது வரையுள்ள பெண்
"அந்தரி நீலி அழியாத கன்னிகை"—அபிராமி அந்தாதி-8.
"அகிலாண்ட கோடி யீன்ற அன்னையே பின்னையும்
கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே"
—தாயுமானவர்—மலைவளர்-5.
"பெற்றாள் சக தண்டங்கள் அனைத்தும் அவை பெற்றும்
முற்றா முகிழ் முலையாள்"
—வில்லிபாரதம் அருச்சுன தீர்த்த-15.

பெரும்புலியூர்
895.

(சதங்கை) கிங்கிணி, ரத்னங்கள் அமைக்கப் பெற்ற வீரச் சிலம்பு—இவை யிரண்டும் இசை பாடக், (கழுத்தில் அணிந்துள்ள) (சரங்கள்) மணி வடங்கள் ஒளியைப் பரப்பத், தோள் மேலே—தோள்மேல் ஒளி பரப்பி விளங்க,

(தனங்கள் குவடாடப் படர்ந்த பொறி) பொறி படர்ந்த தனங்கள் குவடாட — தேமல் படர்ந்துள்ள கொங்கை மலைகள் அசைந்தாட, (மால்) ஆசையை விளைக்கும் அழகிய அம்பு போன்ற கண் (மறி) தடுத்துத் தாக்குகின்ற காதில் குழைகள் ஆட

இனிமை வாய்ந்த மயிலின் (சாயல்) அழகைக் கொண்டு, மகிழ்ச்சியைக் காட்டும் சிரிப்புடன் பேசி, ரம்பை போன்ற அழகினை உடையவர்களும், கரிய கூந்தலை உடையவர்களுமான (மங்கையருடனே) (அல்லது ரம்பையின் அழகு போன்ற அழகு நிறைந்த மைக்குழலாருடனே)

நெருங்கிப் பழகி, படுக்கையே இடமாகப் பொருந்தி அதிலே அழுந்திக் கிடக்கும் என்மீது நீ சற்று இரங்கி உனது இரண்டு தாளைத் தந்தருளுவாயாக.

சிதம்பரேசராம் சிவபிரானது குமாரனே! கடப்பமாலை அசைந்தாடச், சிறப்புற்ற மயில்மேல் வீற்றிருப்பவனே!

சிவந்த கழுகுப் பறவைகள் (களிப்புடன்) ஆடப், பிணங்கள் மலை மலையாகச் சாய்ந்து குவியும்படிக் கோபித்து அசுரர்களின் வேரைக் களைந்து எறிந்தவனே!

பெதும்பைப் பருவத்தின் இளமை அழகு தன்னிடத்தே வெற்றியுடன் விளங்கும் சிவகாமி, வீரம் விளங்கும் அபிராமி—ஆகிய தேவியின் ஒப்பற்ற (பாலனே) குழந்தையே!

பெரிய (வள்ளிமலைத் தினைப்) புனத்துக்குச் சென்று குறப்பெண்—வள்ளியுடன் கூடிப் — **பெரும் புலியூர்** என்னும் தலத்தில் வாழ்கின்ற அழகிய பெருமாளே!

(இருதாளைத் தருவாயே)

நெடுங்களம்.

[திரிசிராப்பள்ளிக்கு அடுத்த திருவெறும்பியூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 7-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

896. கவலை யற

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததான

பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனஎ ரிந்துபொடி யங்கமாகிப்-

பண்டறவு டன்*பழைய தொண்டர்களு டன்பழகி
†பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக்;

குஞ்சரமு கன்குணமொ டந்த‡வனம வந்துலவ
xகொஞ்சியசி லம்புகழல் விந்துநாதங்-

கொஞ்சமயி லின்புறமெல் வந்தருளி யென்கவலை
கொன்றருள்சி றைந்தகழ லின்றுதாராய்;

எஞ்சியிடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொங்கைகர முங்கொளாமல்-

oஎந்தவுடை சிந்தபெல மிஞ்சியமு தம்புரள
இந்துநுத லும்புரள கங்குல்மேகம்;

---

* தொண்டர்களுடன் பழகினல் வினை பொடியாகும்— "விண்டொழிந்தன நம்முடை வல்வினை...தொண்டரோ டினிதிருந் தமையாலே"—சம்பந்தர் 2-106-2.

† பஞ்சவர் வியன்பதி—பாண்டியர்களின் பெருமைத் தலைநகர்—கூடல்—ஆதலால் (பஞ்சவர் வியன்பதியுடன்) கூடலுடன்—குலாவ—கூடிக் குலவ—என்றும் ஒரு பொருள் கிடைக்கின்றது.

‡ வனம்—உறைவிடம்.

x ஆறாதாரங் கடந்த பெருவெளியில் சிலம்போசை முதலிய ஒலிக்கும்—என்பது—பாடல் 179-பக்கம் 416 கீழ்க்குறிப்பு.

o எந்த—மீற.

நெடுங்களம்

896.

(சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம்) என்னும் ஐம்புலன்களும் பழைமையாக வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும், பிணிநோய்களும் பஞ்சு எரிவது போல எரிந்து பொடி உறுப்பு அல்லது பொடி வடிவம் ஆகி

பண்டு அற — முதலிலேயே அற்றுப்போக, உடன் — தாமதமின்றிப் — பழைய அடியார்களுடன் இணங்கிப் பழகிப், பஞ்சவர் வியன்பதி உடன் குலாவ — சுவாதிஷ்டானத்தில் பிரமனும், மணிபூரகத்தில் திருமாலும், அநாகதத்தில் உருத்திரரும், விசுத்தியில் மகேசுரரும், ஆக்ஞையில் சதாசிவமும் விளங்க (ஆறுவது ஆதாரமாகிய மூலாதாரத்தில்)

(குஞ்சரமுகன்)—(குணமொடந்த வனம் வந்து உலவ)- விநாயகரும் வந்து உலவ, ஆக — விநாயகராதி சதாசிவாந்தமாகிய மூர்த்திகளின் திருக்கோலங்கள் குணமொடு—சீருடனே—நன்றாக — (அந்த வனம்) — அவரவர்க்கு உரிய உறைவிடங்களில்— ஆறுதாரங்களில்— வந்து உலவ — வந்து விளங்க — அப்போது கொஞ்சுவதுபோன்ற இனிய சிலம்பின் ஓசை, கழலின் ஓசை, விந்து சம்பந்த நாத ஒலி—இவையெலாம்—

இனிமையுடன் ஒலிக்க, மயிலின் முதுகின்மேல் நீ வந்து காட்சி தந்து, எனது கவலையை ஒழித்து, திருவருட் ப்ரசாதம் நிறைந்த உனது திருவடியை இன்று தந்தருளுக ;

இடையும் எஞ்சி சுழல—இடையும் மெலிவுற்றுச் சுழல— நைய, அம்பு போன்ற கண்களும் சுழல, இன்பச்சாறு (சுவை) நிறைந்த கொங்கைகளைக் கரத்திற் கொள்ள முடியாதவகையில், அடங்காவகையில், (எந்த) மீறிப் பூரிக்க (அல்லது, கொங்கைகளைக் கரத்திற் கொளா—கொண்டு— (மல்) கலவிப் போர்)

(எந்த) மீற—பெருக—ஆடை குலைய—பெலம் மிஞ்சி— அதிவேகத்துடன் அமுதம்—அமுதரசம்—பெருக—பிறை போன்ற நெற்றியும் (புருவமும்)—சுருங்க—இருளும் மேகமும் (அல்லது இருண்ட மேகமும்)

அஞ்சுமன கம்புரள மென்குழைக ளும்புரள
  *அம்பொனுரு மங்கைமண முண்டபாலா-
அன்பர்குல வுந்திருநெ டுங்களவ ளம்பதியில்
  அண்டரய னும்பரவு தம்பிரானே. (க)

குறட்டி.

[புதுக்கோட்டைக்குக் கிழக்கு 5-மைல்.]

897. மாயை ஒழிய

தானன தனத்த தான, தானன தனத்த தான
  தானன தனத்த தான தனதான

கூரிய கடைக்க ணாலு மேருநிக ரொப்ப தான
  கோடதனில் மெத்த வீறு முலையாலுங்-
கோபவத ரத்தி னாலு மேவிடு விதத்து ளால
  கோலவுத ரத்தி னாலு மொழியாலும்;
சீரிய வளைக்கை யாலு மேகலை நெகிழ்ச்சி யேசெய்
  சீருறு நுசுப்பி னாலும் விலைமாதர்-
சேறுதனி னித்த மூழ்கி நாளவ மிறைத்து மாயை
  சேர்தரு முளத்த னாகி யுழல்வேனோ;
தாரணி தனக்குள் வீறி யேசமர துட்ட னான
  ராவணன் மிகுத்த தானை பொடியாகச்-
சாடுமுவ ணப்ப தாகை நீடுமுகி லொத்த மேனி
  தாதுறை புயத்து மாயன் மருகோனே;

---

* பொன் உரு மங்கை—பொன்—பொலிவு எனக் கொண்டு தெய்வக் கோலம் பெற்றுளாதலின்—வள்ளியையும் பொன் உரு மங்கை என்று கூறலாம்—

"வள்ளல்...நங்கை தனை அருளொடு நோக்க—
குறவர் மாதர் குயிற்றிய கோலம் நீங்கி
முன்னுறு தெய்வக் கோல முழுதொருங் குற்றதன்றே"
—கந்த புரா-6-24-197.

பச்சைக் குறத்திபோலவே, பச்சை நிறத்துப் பார்வதியையும் "தங்க நிறம்" என்பர்—"தங்கப் பவளொளி...பரமேசுரி"—பாடல் 656..[சீதையையும் "தங்க நிறத்தாள்" எனக் கூறி உள்ளார்—பாடல் 868].

அஞ்சும்படி அவ்வளவு கறுத்த கூந்தல் புரண்டு அலைய, மென்மைவாய்ந்த குழைகளும் புரள, அழகிய பொன் உருவம் விளங்கும் மங்கை (தேவசேனையைத்) திருமணஞ் செய்து கொண்ட குமரனே!

அன்பர்கள் விளங்கும் **திருநெடுங்களம்** என்னும் வளப்பம் உள்ள ஊரில் தேவர்களும் பிரமனும் பரவிப் போற்றும் தம்பிரானே!

(கவலை கொன்று...கழல் இன்று தாராய்)

குறட்டி
897.

கூர்மை கொண்ட கடைக்கண் பார்வையாலும், மேரு மலைக்கு ஒப்பான மலைபோல மிகவும் மேம்பட்டு எழுகின்ற கொங்கையாலும்,

(இந்த்ர) கோபம் (தம்பலப்பூச்சி) போன்ற வாயிதழ்களாலும் (உதடுகளாலும்), பொருந்தியுள்ள மாதிரியில்—தன்மையில்—ஆல்—ஆலிலை போன்ற அழகிய வயிற்றினாலும், பேச்சினாலும்,

சிறந்த வளையல்களை அணிந்துள்ள கைகளாலும், (மேகலை) இடையணியை நெகிழ்ந்து விழும்படிச் செய்கின்ற அழகு அமைந்த இடையினாலும், (விலைமாதர்) வேசையர் என்கின்ற

சேற்றிலே (நான்) தினந்தோறும் முழுகி, (என்னுடைய) வாழ்நாளை வீணிலே செலவழித்து, மாயை பொருந்திய—மாயை அறிவு கொண்ட—மனத்தனாகித் திரிவேனோ!

பூமி யதனில் மேம்பாடு உடையவனாகிப் போர் செயும் துஷ்டனான ராவணனும் அவனுடைய மிகப் பெருஞ் சேனைகளும் பொடிபட்டு அழியச்

(சாடும்) தாக்கி அழித்த, கருடக் கொடிகொண்ட, பெரிய (கரு) மேகம் ஒத்த திருமேனியையும், (தாது) மலர்மாலை அணிந்துள்ள புயங்களையும் கொண்ட திருமாலின் மருகனே!

* வாரண முரித்து †மாதர் மேகலை வளைக்கை நாண
மாபலி முதற்கொ ணுதன் முருகோனே-

வாருறு தனத்தி ஞர்கள் சேருமதி ஞப்ப ரீகை
வாகுள குறட்டி மேவு பெருமாளே. (க)

898. பிறப்பு அற

தானன தனத்த தான தானன தனத்த தான
தானன தனத்த தான தனதான

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு முளநோய்கள்-

நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை தசைதோல்சீ ;

பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை நரிநாய்பேய்-

பாருெடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி லுழல்வேனோ ;

---

* சிவபிரான் யானையை அட்டுத் தோலை உரித்தது :
—பாடல் 286-பக்கம் 210 கீழ்க்குறிப்பு.

† மாதரிடம் பலிக்குச் சென்றது :

தாருகா வனத்து முனிவர்கள் கடவுளிடத்தில் அன்பு இல்லாதவர்களாகி வேள்விகள் பல செய்து வந்தனர். இவர்களுடைய தருக்கை அடக்க வேண்டிச் சிவபிரான் திருமாலை மோகினிவேடம் கொள்ளும்படிச் சொல்லித் தாமும் பலிக்கலன்-பிச்சைப் பாத்திரமும். சூலமும் கையில் ஏற்றுத் தாருகா வனத்துக்குச் சென்றார். திருமால் தமது பெண் வேடத்தால் முநிவர்களை மயக்கினர். சிவபிரான் இசை பாடி ஐயம் (பிச்சை) ஏற்க, முநிவர்களின் வீடுகள் உள்ள தெருவிற் சென்றனர். இவர் அழகைக் கண்ணுற்ற இருடி பத்தினிகள் இவர்மீது மோகங்கொண்டு நாணம், கைவளை, ஆடை மூன்றையும் இழந்து வருந்தினர்—

"கண் ணுறு மாதர் யாரும் காமன் ஐங் கணையின் மூழ்கி
உண்ணிகழ் உணர்வு மாழ்க உயிர்பதை பதைத்துச் சோர
அண்ணல்தன் காதல் என்னும் ஆழ்திரைப் பட்டார் அன்னுர்"

[தொடர்ச்சி 621-ஆம் பக்கம் பார்க்க]

யானையைச் சங்கரித்து அதன் தோலை உரித்து, (தாருகா வனத்து இருடி) பத்தினிகளின் இடையணி, கைவளைகள், நாணம் — இவை மூன்றையும் அழகிய பிச்சையால்—பிச்சையாக முன்னாளிற் கொண்ட (நாதன்) சிவபிரானது குழந்தையே!

ரவிக்கையை அணிந்த கொங்கைகளை உடையவர்கள் (அல்லது பெருஞ் செல்வர்கள்) சேர்ந்து வாழும் மதிலையும் மேல் மாடங்களையும் கொண்ட அழகுள்ள **குறட்டி** என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற பெருமாளே!

(மாயை...உளத்தனுகி உழல்வேனே)

898

நீரிழிவு, குஷ்டநோய், (ஈளை) கோழை, (வாதம்) வாயு இவையுடன் பித்தநோய், மூலநோய், நெடிதாக நிகழும் குளிர்நோய், சுரநோய், வேறும் உள்ள நோய்கள்—

கூடியதாய், புழுக்களுக்கு இருப்பிடமானதாய்ப், பிரமன் உண்டாக்கின வீடு, நெடிதாய்ப் பரவியிருக்கும் ரத்தம், மூளை, தசை (மாமிசம்) தோல், சீ (சீழ்)

பருத்துள்ள ஒன்பது துவாரங்கள், நாறும்— தோன்றும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் (ஆறு) வழியாக (பாய்பிணி) ஏற்படுகின்ற பிணிவகைகளோடு (இயற்றப்பட்ட) ஆக்கப்பட்ட ஒரு பொம்மை (பதுமை), நரியும், நாயும், பேயும்—

பருந்தும், கழுகுகளும், (கூகை) கோட்டான்களும்— இவை தாம் உண்ணுதற்கு உரிய பாழான (இந்த) தேகத்தை நான் எடுத்து வீண்பொழுது போக்கித் திரிவேனே!

[620-ஆம் பக்கத் தொடர்ச்சி]

"பூணி லங்கிய பொற்றொடி சங்கினம்
மாணு றுந்துகில் மற்றிவை சோர்தலும்
காணு கின்றனர் கைநெரித் தஞ்சியே
நாணி வீதி நடுவிருந் தார்சிலர்"
"தெரிவையர் யாரையும்
கொல்லு கின்றது வேபலி கொள்வதோ
சொல்லு மென்று தொடர்ந்திடு வார்சிலர்"
—கந்தபுரா 6-13-46, 52, 75.

நாரணி யறத்தி னரி *ஆறுசம யத்தி†பூத
நாயக ரிடத்து காமி ‡மகமாயி-
நாடக நடத்தி கோல நீலவரு ணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி திரிசூலி;
வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுத லளித்த வீர மயிலோனே-
மாடமதில் முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு பெருமாளே. (உ)

அத்திப்பட்டு.

[புதுக்கோட்டைக் கடுத்த கந்தர்வ கோட்டையி லிருந்து 7-மைல். தென் ஆற்காடு ஜில்லா திருவெண்ணெய் நல்லூர், குறிஞ்சிப்பாடி ஆகிய சப்டிஸ்டிரிக்டுக்களிலும், வடஆற்காடு ஜில்லா செங்கம் சப்டிஸ்டிரிக்டிலும், செங்கற்பட்டுஜில்லா சைதாப் பேட்டை சப்டிஸ்டிரிக்டிலும் 'அத்திப்பட்டு' எனப் பெயரிய கிராமங்கள் உள்ளன.]

899. திருவடியைப் பெற

தனதனன தனதனன தத்தத் தத்ததன
தனதனன தனதனன தத்தத் தத்ததன
தனதனன தனதனன தத்தத் தத்ததன தனதான

கருகியறி வகலவுயிர் விட்டுக் கிக்கிளைஞர்
கதறியழ விரவுபறை முட்டக் கொட்டியிட
கனகமணி சிவிகையில மர்த்திக் கட்டையினி
லிடைபோடாக்-

---

* "ஆறு சமயத்தி"—
"சமயம் ஆறும் தலைவி இவளாயிருப்ப தறிந் திருந்தும்"
—அபிராமி அந்தாதி 63.
"உத்தமி முன் காத்த மதம் ஆறும்"—கச்சி ஆனந்த-தூது-45.
"ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும்"
—பெரியபுரா-திருக்குறிப்பு-84.
"சமயம் ஆறினையும் தாயென வளர்த்து"—கந்த-நகர-78.

[தொடர்ச்சி 623 ஆம் பக்கம் பார்க்க]

நாரணி, (32) அறங்களைப் புரிந்த (நாரி) தேவி, ஆறு சமயங்களையும் காத்து வளர்ப்பவள், (பூதநாயகர்) பூத கணங்களுக்குத் தலைவரான சிவபிரானது இடது பாகத்தில் விரும்பி இருப்பவள், மகமாயி

திருவிளையாடல்களை இயற்றுபவள் (நடனம் ஆடுபவள்), அழகிய நீலநிறம் உடையவள், வேதத் தலைவி, உமையம்மை, (நீலி) மூலாதாரத்தில் கரிய நிறத்தோடும் 'சாகினி' என்னும் திருநாமத்தோடும் உள்ளவள், முத்தலைச் சூலத்தைக் கொண்டவள்,

ரவிக்கையை அணிந்த கொங்கையை உடையவள், ஞானம் பூரணமாகக் கொண்டவள், கலைகளுக்குத் தலைவி, (நாகம்) மலை (மகளாம்) (வாணுதல்)—ஒள்ளிய நெற்றியைக் கொண்ட தேவி—பெற்ற வீர மயில்வாகனனே!

மாடங்களும் (மெத்தைவீடுகளும்), மதில்களும், முத்து இழைத்த மேடான தளங்களும், கோபுரங்களும், நறுமணம் வீசும் சோலைகளும் கொண்டு அழகு வாய்ந்துள்ள குறட்டி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(பாழுடலெடுத்து வீணில் உழல்வேனோ)

அத்திப்பட்டு

899.

(உடல்) வற்றித் தீந்தது போலாகி, அறிவும் நீங்கி, உயிர் பிரிந்தவுடன், (உக்கிக் கிளைஞர்) கிளைஞர்—சுற்றத்தார் உக்கி—உள்ளம் நைந்து கதறி அழ, (விரவு) வந்து சேர்ந்த பறைகள் யாவும் சப்திக்க, பொன்—மணி, (பொன் அழகு) துலங்கு பல்லக்கில் (உடல்) இடப்பட்டு (சுடுகாட்டில்) விறகுக் கட்டைகளின் மத்தியிலே போடப்பட்டு—

[622 ஆம் பக்கத் தொடர்ச்சி]

† **பூத நாயகர்:**

பூதகணங்களின் தலைவர்—"பூதபதயேநம"

—சிவ அட்டோத்தரம்.

"பொங்கழல் உருவன் பூதநாயகன்"—சம்பந்தர் 3-120-1.

"பூதநாயகர் புற்றிடங் கொண்டவர்"

—பெரிய புரா-திருக்கூட்ட-1.

‡ மகம்—ஆயி—யாக முதல்வி எனலுமாம்.

கரமலர்கொ டரிசியினை யிட்டுச் சித்ரமிகு
கலையையுரி செய்துமறைகள் பற்றப் பற்றுகனல்
கணகணென எரியவுடல் சுட்டுக் கழியவர் வழியேபோய்;

மருவு*புனல் முழுகிமனை புக்குத் துக்கமறு
மனிதர்தமை யுறவுநிலை சுட்டுச் சுட்டியுற
மகிழ்வுசெய்து அழுதுபட வைத்தத் துட்டன் மதன்
மலராலே-

மயல்விளைய அரிவையர்கள் கைப்பட் டெய்த்துமிக
மனமழியு மடிமையைநி னைத்துச் சொர்க்கபதி
வழியையிது வழியெனவு ரைத்துப் பொற்கழல்கள்
தருவாயே;

பொருவின்மலை யிறையனருள் பச்சைச் சித்ரமயில்
†புரமெரிய இரணியத னுக்கைப் பற்றியியல்
புதியமுடு கரிய‡தவ முற்றுக் கச்சியினி லுறமேவும்-

புகழ்வனிதை தருபுதல்வ பத்துக் கொத்துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக் கைக்கடவுள்
பொறியரவின் மிசைதுயிலு சுத்தப் பச்சைமுகில்
மருகோனே;

அரியமர கதமயிலி லுற்றுக் கத்துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக் கட்டையற
அமரர்பதி யினியகுடி வைத்தற் குற்றமிகு மிளையோனே-

---

* புனல் முழுகி...துக்கம் அறுதல்
—பாடல் 162-பக்கம் 376-கீழ்க்குறிப்பு.

† தேவி புரம் எரித்தது—பாடல் 304-பக்கம் 256-கீழ்க்குறிப்பு.

‡ தேவி கச்சியில் தவம் செய்தது—
— பாடல் 460-பக்கம் 34 கீழ்க்குறிப்பு.

(உறவினரின்) மலரன்ன கைகளால் அரிசி யிடப்பட்டு அழகுள்ள துணியும் எடுபடப்பட்டு, உடலின் மறைவான இடங்களில் எல்லாம் (பற்றப் பற்று கனல்) பற்றுகனல் பற்ற—பிடிக்கின்ற நெருப்பு பற்றிக் கணகணென்று எரிய, உடலானது (இங்ஙனம்) சுடப்பட்டு பக்கத்தில் இருந்தவர்கள் தாம் வந்த வழியே திரும்பிப்போய்

பொருந்திய நீரில் முழுகி, வீட்டுக்குப் போய்த் துக்கம் நீங்குகின்றூர்கள் மனிதர்கள்—(இத்தகைய மனிதர்களை) இன்ன உறவு இவர் என்று உறவு முறையைக் குறித்துக் குறித்து அத்தகைய குறிப்பால் (அவர் பொருட்டு) மகிழ்ச்சி பூணவும், அழுது படுதலும் ஏற்படவும், துஷ்டனான மன்மதனது மலரம்பால்—

காம உணர்ச்சி உண்டாகப் பெண்களின் கையில் அகப்பட்டு, இளைத்து, மிகவும் மனம் நொந்தழிதலையும் கொண்ட அடிமையை நீ நினைத்துச் சொர்க்கலோக ஊருக்கு போகும் வழியை 'இதுதான் வழி'யெனக் காட்டிச் சொல்லி உனது அழகிய திருவடியைத் தந்தருளுக;

(பொருவில்) தனக்கு நிகரில்லாத — மலையரசன் — பர்வதராஜன்—பெற்ற பச்சை அழகு மயில், திரிபுரம் எரிபட (மேருவாம்) பொன் வில்லைக் கைப்பற்றினவள், (இயல்) உழுவலன்புடன் (புதிய) அதிசயமானவகையில் ஊக்கத்துடன் அருமையான தவத்தை மேற்கொண்டு காஞ்சிப்பதியிற் பொருந்தி விளங்கும்

புகழ்பெற்ற தேவி (பார்வதி) அருளிய புதல்வனே! (இராவணனுடைய) பத்துக் கொத்தான தலைகளும், புயம் இருபதும் அற்று விழச் செலுத்தின சக்ராயுதக் கையனை கடவுள், புள்ளிகளைக் கொண்ட ஆதிசேடன் என்னும் பாம்பின்மேல் துயில் கொள்ளும் சுத்தமான பச்சைநிற மேக வண்ணன் (திருமாலின்) மருகனே!

அருமையான மரகதநிற மயில்மீது வீற்றிருந்து, ஒலிக்கும் கடல் சுவறவும், அசுரர் கூட்டம் அழிபட்டு (கட்டையற—கட்டற) கட்டோடு ஒழிய, தேவர் தலைவன் இந்திரன் சுகத்துடன் (குடி வைத்தற்கு உற்ற) குடி ஏறுதற்குத் தக்கபடி வைத்த மிக்க இளையவனே!

அருணமணி வெயில்பரவு பத்துத் திக்குமிகு
மழகுபொதி மதர்மகுட தத்தித் தத்திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப் பட்டிவுறை
பெருமாளே. (க)

அத்திக்கரை.

[புதுக்கோட்டையைச் சார்ந்த அத்திப்பட்டுக்கு 3-மைலில் 'அத்திக்கரை' என்னும் ஒரூர் உண்டு.]

900. முத்தி உற

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன தனதான

*தொக்கைக்கழு விப்பொற் றகுமுடை
சுற்றிக்கல னிட்டுக் கடிதரு
சொக்குப் †புலி யப்பிப் புகழுறு களியாலே-

சுத்தத்தைய கற்றிப் பெரியவர்
சொற்றப்பிய கத்தைப் புரிபுல
சுற்றத்துட னுற்றிப் புவியிடை யலையாமல்;

முக்குற்றம கற்றிப் பலகலை
கற்றுப்பிழை யற்றுத் தனையுணர்
முத்தர்க்கடி மைப்பட் டிலகிய அறிவாலே-

முத்தித்தவ சுற்றுக் கதியுறு
சத்தைத்தெரி சித்துக் கரையகல்
முத்திப்புண ரிக்குட் புகவரு ளருள்வாயே;

---

* இப் பாடல் 'முத்தைத்தரு' என்னும் முதற்பாட்டின் சந்தத்தில் அமைந்தது—பாடல் 1171-ம் இந்தச் சந்தமே.

† புலி—நால்வகைச் சாந்தி லொன்று; பீதம், கலவை, வட்டிகை, புலி—என்பன நால்வகைச் சாந்துகள்.

செம்மணிகள் (பத்துத் திக்கும் வெயில் பரவு) பத்துத் திக்குகளிலும் ஒளி வீசி மிக்க அழகு நிறைந்து, (மதர்) செழிப்புடன் விளங்கும் (மகுட!) (கிரீடம்) மணி முடியை உடையவனே! குதித்துக் குதித்து (தாவித் தாவி) வளர்கின்ற (அணிய) வரிசையாக உள்ள (அல்லது அழகிய) கயல்மீன்கள் தாவிக் குதிக்கும் வயல்கள் உள்ள **அத்திப்பட்டில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(பொற் கழல்கள் தருவாயே)

அத்திக்கரை

900.

(தொக்கை) உடலின் தோலைக் கழுவி, (பொன் தரும் உடை) அழகு உள்ள ஆடையைக் கட்டிக்கொண்டு, (கலன் இட்டு) ஆபரணங்களை அணிந்து, (கடி தரு) வாசனை வீசுகின்ற—சொக்குப்புலி—மயக்கி வசப்படுத்தவல்ல (புலி) சாந்தை அப்பி—(அப்பிக் கொள்பவர்களை)—நிறையப் பூசிக் கொள்பவர்களாகிய மாதர்களைப்—புகழ்ந்து அதனல் வரும் களிப்பால்—களிப்பு மயக்கால்—

பரிசுத்தமான நிலையை நீக்கி—கைவிட்டு, பெரியோர்கள் சொல்லும் புத்திமதியை அநுசரியாது நடந்து, (அகத்தை) பாபச் செயல்களைச் செய்யும் ஐம்புலன்கள் முதலாய் பல சுற்றத்துடன் உற்று—ஐம்புலன்கள் முதலாய் பல சுற்றம் போகும் வழியே போய்—(புலன்களை அறிவு கொண்டு அடக்காமல் விட்டு) இந்தப் பூமியின்கண் நான் அலைச்சல் உறாமல்—

(காமம், வெகுளி, மயக்கம் எனப்படும்) முக் குற்றங்களையும் நீக்கிப் பல கலைநூல்களையும் கற்றுப் பிழையான வழிகளை நீக்கி—ஒழித்துத், தன்னை அறிந்த பரிசுத்த ஞானிகளுக்கு அடிமை பூண்டு அத்தகைய ஒழுக்கத்தால் விளக்கமுறும் அறிவு கொண்டு

முத்தியை அடையக்கூடிய தவநிலையை அடைந்து, கதி (மோக்ஷம்) தரக்கூடிய (சத்தை) உண்மைப் பொருளைத் தரிசித்துக், கரையிலாத — எல்லைக்குட்படாத — முத்தி என்னும் கடலுள் (நான்) புகுமாறு வரம் தந்தருளுவாயாக.

திக்கெட்டும டக்கிக் *கடவுள
 ருக்குப்பணி கற்பித் தருள று
 சித்தத்தொட டுத்துப் படைகொடு பொருசூரர்-
செச்சைப்புய மற்றுப் புகவொரு
 சத்திப்படை விட்டுச் சுரர்பதி
 சித்தத்துயர் கெட்டுப் பதிபெற அருள்வோனே;
†அக்கைப்புனே கொச்சைக் குறமகள்
 அச்சத்தையொ ழித்துக் கரிவரும்
 ‡அத்தத்தி லழைத்துப் பரிவுட னணேவோனே-
அப்பைப்பிறை யைக்கட் டியசடை
 அத்தர்க்கரு மைப்புத் திர விரி
 அத்திக்கரை யிச்சித் துறைதரு பெருமாளே. (க)

கந்தனூர்.

[புதுக்கோட்டைக்குத் தெற்கு 3-மைல்.]

901. ஞானம் பெற

தந்தன தத்ததன தந்தன தத்ததன
 தந்தன தத்ததன தந்ததான

விந்துபே தித்தவடி வங்களா யெத்திசையு
 மின்சரா சர்க்குலமும் வந்துலாவி-

---

* சூரபதுமன் திக்கு விஜயம் செய்தபிறகு தேவர்களுக்கெல்லாம் வெவ்வேறு வேலைகள் வைக்கின்றான்—

திருமால்—சூரன் அழைக்கும் போதெல்லாம் உடனே வந்துபோக வேண்டும்;

பிரமன்—பஞ்சாங்கம் நாளும் சொல்லிப் போகவேண்டும்.

சூரியன்—இளங்கதிரே பரப்பவேண்டும்.

சந்திரன்—குறைதல் வளர்தல் இல்லாது நாளும் பூரண சந்திரனாய் வந்துபோதல் வேண்டும்.

அக்கினி—தனது ஊரில் யார் நினைத்தாலும் உடனே அவர்கள் இட்ட பணியைச் செய்யவேண்டும்; தொட்டால் குளிர்ந்திருக்க வேண்டும்.

யமன்—தனது ஊரில் எந்த அவுணன் உயிரையும், யானை, குதிரை இவைதம் உயிரையும் கொல்ல நினைக்கக் கூடாது.

காற்று—நறுமண வாசத்தை வீசிச் செல்லவேண்டும்.

(தொடர்ச்சி-பக்கம் 629)

திக்கு எட்டையும் அடக்கி வெற்றி கொண்டு, தேவர்களுக்கெல்லாம் (பணி கற்பித்து) வேலைகளைக் கட்டளையிட்டு—தேவர்களை வேலையிட்டு ஏவல் கொண்டு, கருணை என்பதே இல்லாத (கடின) மனத்துடன் அணுகிப் படை கொண்டு சண்டை செய்த சூரர்களின்—

(ரத்தத்தால் சிவந்த) புயங்கள் எல்லாம் அற்றுப் பூமியில் (புக)—விழும்படி, ஒப்பற்ற (சத்தி) வேற்படையைச் செலுத்தித் தேவர் தலைவனும் இந்திரன் மனத்துயரம் நீங்கித் தனது ஊரைப் (பொன்னுலகைப்) பெறுமாறு அருளியவனே!

சங்குமணியை அணிந்த இழிகுலத்தளாம் குறமகள் வள்ளியின் பயத்தை நீக்கி, யானை எதிரில் வந்த சிறு வழியில் அவளைத் தன் மாட்டு அழைத்து அன்புடன் அணைந்தவனே!

கங்கை நீரையும், பிறைச் சந்திரனையும் முடித்துள்ள சடைப் பெருமானுக்கு அருமைப் பிள்ளையே! விளக்க முற்றுப் பொலியும் அத்திக்கரை என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருக்கும் பெருமாளே!

(முத்திப் புணரிக்குட் புகவரம் அருள்வாயே)

கந்தனூர்

901.

(விந்து) சுக்கிலம் வெவ்வேறான உருவங்களாய் எல்லாத் திசைகளிலும் ஒளிபெறும் சராசரக் குலமும் (சரம்—அசையும் பொருள், அசரம்—அசையாப் பொருள்) என்னும் கூட்டமாய் (இவ் வுலகில்) வந்து காலம் கழித்து—

(தொடர்ச்சி:—) **வருணன்**—பன்னீரில் நறுமணம் கலந்து இடங்கள் தோறும் தூவவேண்டும். ஈரத்தைக் காற்று துடைக்கவேண்டும்.

இந்திரன்—தேவர் கூட்டங்களுடனும் முனிவர் கூட்டங்களுடனும் வந்து இட்ட வேலையைச் செய்யவேண்டும்.

தேவர்கள்—நாள்தோறும் மீன்களை உணவுக்குக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். கந்த புராணம் 2-17-(1)-(9); 18-(3).

† அக்கு—சங்குமணி.

‡ அத்தம்—சிறுவழி. யானையை வரவழைத்து வள்ளியை அச்சமுறச் செய்து வள்ளியை அணைந்தது

—பாடல் 680, 719, 748; 606-பக்கம் 400-கீழ்க்குறிப்பு.

விண்டுபோய் விட்டவுடல் சிந்தைதா னுற்றறியு
மிஞ்சநீ விட்டவடி வங்களாலே;

வந்துநா யிற்கடைய னெந்துஞா னப்பதவி
வந்துதா இக்கணமெ யென்றுகூற-

*மைந்தர்தா விப்புகழ தந்தைதா யுற்றுருகி
வந்துசே யைத்தழுவல் சிந்தியாதோ;

அந்தகா ரத்திலிடி யென்பவாய் விட்டுவரு
மங்கிபார் வைப்பறையர் மங்கிமாள-

அங்கைவேல் விட்டருளி யிந்த்ரலோ கத்தின்மகிழ்
அண்டரே றக்கிருபை கொண்டபாலா;

†எந்தனு விக்குதவு சந்த்ரசேர் வைச்சடையர்
எந்தைபா கத்துறையு மந்தமாது-

எங்குமாய் நிற்குமொரு கந்தனூர் சத்திபுகழ்
எந்தைபூ சித்துமகிழ் தம்பிரானே. (க)

வாலிகொண்டபுரம்.

[திரிசிராப்பள்ளியி லிருந்து 4-மைல் சென்று திருவானைக் காவைச் சேர்ந்து, அங்கிருந்து 28-மைல் சென்று பெரம்பலூரைச் சேர்ந்து, அங்கிருந்து 8-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம்.]

902. தொண்டனுக

தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன தந்ததான

ஈயெ றும்புநரி நாய்க ணங்கழுகு
காக முண்பவுட லேசு மந்துஇது
ஏல்வதென் றுமத மேமொ ழிந்துமத ‡வும்பல்போலே-

---

* இந்த அடி 277-ஆம் பாடலின் 3, 4 அடிகளின் கருத்தைத் தழுவும்.

† இது அருணகிரியார்க்கு அருணசலேசுரரே உதவிய வரலாற்றைக் குறிக்கும்—பாடல் 856-பக்கம் 508-கீழ்க்குறிப்பு.

‡ உம்பல்—யானை.

[விண்டுபோய்] பின்பு பிரிந்து [அழிந்துபோய்] உடலை விடுவதை [என்] மனது ஆய்ந்து அறியும்; [இங்ஙனம்] நிரம்ப நீ எனக்கு அளிக்கும் வடிவங்களில் பிறப்புக்களில்—

(நான்) வந்து நாயினுங் (கடையனாய்)க் கீழ்ப்பட்டவனாய் மனம் நொந்து ஞானநிலையை இந்த க்ஷணமே வந்து கொடு என்று உன்னிடம் முறையிடும்போது

குழந்தைகள் (பெற்றோர்களிடம்) தாவி நின்று புகழ்ந்தால் தந்தையும் தாயும் (அம் மொழிகளைக் கேட்டு) மனம் உருகி வந்து அக் குழந்தைகளைத் தழுவிக் கொள்வதை உன் உள்ளம் சிந்தியாதோ — நீ (சற்று) நினைக்கக் கூடாதா—(நீ எனக்குத் தந்தை தாய் ஆயிற்றே — என் முறையீட்டைக் கேட்டு என்னை ஆதரிக்கக் கூடாதா என்றபடி), (அல்லது, என் உள்ளம் சிந்தியாதோ— தழுவிக் கொள்வதை நினைத்துநீயும் அங்ஙனம் என்னை ஆதரிப்பாய் என்னும் உண்மை என் சிந்தையிற் புலப்படாதோ)

[அந்தகாரத்தில்] பேரிருளில் இடி இடிப்பதுபோல வாய்விட்டு வரும்—கூச்சலிட்டு வருகின்ற [அங்கி பார்வை] தீப் போன்ற கண்களை உடைய பறையர்—இழிகுலத்தராம் அசுரர்கள் ஒடுங்கி மாண்டுபோக—

அழகிய திருக்கை வேலைச் செலுத்தி அருளி, இந்த்ர லோகத்தில் மகிழ்ச்சியுடன் தேவர்கள் குடியேற அருள் புரிந்த குமரனே!

எனது ஆவிக்கு உதவி புரிந்தவரும், சந்திரனைச் சேர்த்து வைத்துள்ள சடையரும், எந்தையும் ஆன சிவபிரானும், அவரது [இடது] பாகத்து அமர்ந்துள்ள அந்தப் பார்வதி தேவியும்—ஆக இருவரும்—

எங்கும் நிறைந்து வீற்றிருக்கும் ஒப்பற்ற **கந்தனூரில்** [சத்தி] தேவி புகழும் எந்தை சிவபிரான் பூசித்து மகிழ்ந்த தம்பிரானே! [ஞானப் பதவி வந்து தா]

வாலி கொண்டபுரம்

902

ஈ, எறும்பு, நரி, [நாய்கணம்] நாய்க்கூட்டம் [அல்லது— நாய், [கணம்] பேய், கழுகு, காகம் இவைகள் உண்ணும் [இந்த] உடலை நான் சுமந்து, இது தக்கது என்று [நினைத்து] ஆணவ மொழிகளையே பேசி மதயானைபோல

ஏது மென்றனிட கோலெ னும்பரிவு
மேவி நம்பியிது போது மென்கசில
ரேய்த னங்கள் தனி வாகுசிந்தை தவச னங்கள்பேசிச் ;

சீத தொங்கலழ காவ ணிந்துமணம்
வீச மங்கையர்க ளாட வெண்கவரி
சீற கொம்புகுழ லூத தண்டிகையி லந்தமர்கச்-

சேர்க னம்பெரிய வாழ்வு கொண்டுழலு
மாசை வெந்திடவு னைசை மிஞ்சிசிவ
சேவை கண்டுனது பாத தொண்டனென அன்புதாராய் ;

சூதி ருந்தவிடர் மேயி ருண்டகிரி
சூரர் வெந்துபொடி யாகி மங்கிவிழ
*சூரி யன்புரவி தேர்ந டந்துநடு பங்கினூடச்-

சோதி யந்தபிர மாபு ரந்தரனு
மாதி யந்தமுதல் தேவ ருந்தொழுது
சூழ மன்றில்நட மாடு மெந்தைமுத லன்புகூர ;

வாது கொண்டவுணர் மாள செங்கையயி
லேவி யண்டர்குடி யேற விஞ்சையர்கள்
மாதர் சிந்தைகளி கூர நின்று†நட னங்கொள்வோனே-

---

* சூரியன் தேர்...நடு பங்கினூட—"நமது ஊர்க் கோட்டை மதில்மேல் உன்னல் போக முடியாது ; கீழ் மேலாக உள்ள கோபுரத்துக்குள் நுழைந்து அவ் வழியே புகுந்து இளங்கதிர் பரப்பி நீ போவாயாக" என்பது சூரன் சூரியனுக்கு இட்ட கட்டளை—

"..........அருக்கனை நோக்கி நம்மூர்ப்,
புறத்தினில் அரணமீதாய்ப் போகுதல் அரிது கீழ்மேல்
நிறுத்திய சிகரியூடு நெறிக்கொடு புக்கு வான்போய்
எறித்தனை திரிதிநாளும் இளங்கதிர் நடாத்தி என்றான்"
—கந்தபுரா-2-17-3.

சூரசம்மாரம் ஆன பின்புதான் சூரியன் தேர் நடு நேராகப் போக முடிந்தது.

† இந்த நடனம் அசுரர்களைச் சங்கரித்தபின் முருகவேள் போர்க்களத்தில் குடையைத் தாழ்த்து ஆடிய 'குடைக்கூத்து'

"படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும்"—சிலப்பதி 6-52.

எதுவும்—எல்லாம் என்னுடைய [கோல்]—ஆட்சியில் [அடங்கியது] என்னும்படி [பரிவு மேவி] இன்ப நிலையை—சுக நிலையை அடைந்து, [அந்த நிலை நிலைத்து நிற்குமென] நம்பி—இது போதும்—இந்த ஆடம்பரங்கள் போதுமா இவர்க்கு என்று சிலர் கூறும்படி—பொருந்திய தனங்கள் [பொருட் செல்வம்], ஒப்பற்ற [வாகு] அழகிய [சிந்தை] எண்ணங்கள், கொண்டு, பேச்சுக்கள் பேசி,

குளிர்ந்த மாலைகளை அழகாக அணிந்து, நறுமணம் வீச, மங்கையர்கள் நடனம் ஆட, வெள்ளைச் சாமரங்கள் மேலெழுந்து வீச, ஊதுகொம்பு, புல்லாங்குழல் முதலியன ஊதிவர, பல்லக்கில் அழகாக—

வீற்றிருக்கும் பெருமை கூடிய பெரிய வாழ்வைக் கொண்டு திரியும் ஆசையானது வெந்து அழிய, உன்மீது ஆசை மிகுந்து, [சிவ] மங்களகரமான உனது தரிசனத்தைப் பார்த்து உன் திருவடித் தொண்டனெனும் படியான அன்பைத் தருவாயாக.

[சூது] வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமாயிருந்த [விடர்] மலைப்பிளவுகளைக் கொண்டிருந்த இருண்ட மலை [கிரௌஞ்சமும்], அசுர சூரர்களும் வெந்து பொடியாகி அழிந்து விழ, சூரியனுடைய குதிரைகள் பூட்டிய தேர் [சூரன் ஆட்சிக்காலத்தின் முன் போனது போல] சென்று [நடு பங்கின் ஓட] நேர்வழியில் நடுப்பாகத்தில் ஓட—

[பொன்] ஒளி பொருந்திய அந்தப் பிர்மாவும், இந்திரனும், முதல் தேவர் முதல் கடைத் தேவர் வரை எல்லாத் தேவர்களும் வணங்கிச் சூழ்ந்து நிற்கக் [கனக] சபையில் நடமாடும் எந்தை சிவபிரான் முதலாக யாவரும் அன்பு மிக்கு நிற்க [அல்லது நடமாடும் முதல்வனை எந்தை—சிவபிரான் அன்பு மிக்கு நிற்க]

போருக்கு என்று வாது செய்துவந்த அசுரர்கள் மாண்டு அழிய, செவ்விய திருக்கையில் உள்ள வேலாயுதத்தைச் செலுத்தித், தேவர்கள் [பொன்னுலகிற்] குடியேற, [விஞ்சையர்கள்] வித்தியாதரர்களின் மாதர்கள் மனம் மிக மகிழ நின்று நடனம் புரிபவனே!

வாச கும்ப தன மானை வந்து* தினை
காவல் கொண்டமுரு காஎ ஹும்பெரிய
வாலி கொண்டபுர மேய மாந்துவளர் தம்பிரானே. (க)

திருமாந்துறை.

[திரிசிராப்பள்ளிக்கடுத்த திருவானைக்காவுக்கு வடகிழக்கு 10-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல்பெற்றது.]

903. திருவடியைப் பெற

தாந்தன தனந்த தாந்தன தனந்த
தாந்தன தனந்த தனதான

ஆங்குடல் வளைந்து நீங்குபல்நெ கிழ்ந்து
ஆய்ஞ்சுதளர் சிந்தை தடுமாறி-
ஆர்ந்துள கடன்கள் வாங்கவு மறிந்து
ஆண்டுபல சென்று கிடையோடே;
ஊங்கிருமல் வந்து வீங்குகுடல் நொந்து
ஓய்ந்துணர் வழிந்து உயிர்போமுன்-
ஓங்குமயில் வந்து சேண்பெறஇ சைந்து
ஊன்றிய பதங்கள் தருவாயே;
வேங்கையு முயர்ந்த தீம்புன மிருந்த
வேந்திழையி னின்ப மணவாளா-
வேண்டுமவர் தங்கள் பூண்டபத மிஞ்ச
வேண்டிய பதங்கள் புரிவோனே;
†மாங்கனி யுடைந்து தேங்கவயல் வந்து
மாண்புநெல் விளைந்த வளநாடா-
‡மாந்தர் தவ ரும்பர் கோன்பரவி நின்ற
மாந்துறை யமர்ந்த பெருமாளே. (௧)

---

* முருகவேள் தினை காத்தது :
—பாடல் 768-அடி 7 : பக்கம் 289 கீழ்க்குறிப்பு.

† "மந்தமார் பொழில் மாங்கனி மாந்திட மந்திகள்"
"நன்று மாங்கனி கதலியின் பலங்களும்...வாரி...
நேர்வரு காவிரி வடகரை மாந்துறை—சம்பந் 2-110-8, 10.

‡ "மாந்துறைப் புனிதனெம் பெருமானைப்
பரிவினலிருந் திரவியும் மதியமும் பார்மன்னர்
பணிந்தேத்த மருத வானவர் வழிபடு மலரடி வணங்குதல்
செய்வோமே"—சம்பந்தர் 2-110-6.

நறுமணம் உள்ளதும், குடம் போன்றதுமான கொங்கையை உடைய மான்போன்ற வள்ளியிடம் வந்து தினைப்புனத்தைக் காவல் பூண்ட முருகா! [எண்ணும்] மதிக்கத்தக்க, பெரிய, வாலிகொண்ட புரத்தில் பொருந்தி வீற்றிருந்து இலகும் தம்பிரானே!

[உனது பாத தொண்டனென அன்பு தாராய்]

திருமாந்துறை

903.

(ஆம்) நன்ருயிருந்த, குடல் வளைவுற்றுக் கூனி—விழவேண்டிய பற்கள் தளர்ச்சியுற்று, ஆய்ந்து ஓய்வுறும் மனம் தடுமாற்றம் அடைந்து

நிறைய இருந்த கடன்கள் வாங்க வேண்டுவனவற்றை அறிந்து (வாங்கி), பல வருஷங்கள்—(இங்ஙனம்) செல்லப் படுக்கையிலேயே (கிடந்து)

நிரம்ப (அல்லது அவ்விடத்தில்) இருமல் நோய் ஏற்பட்டு, வீங்கும் குடலும் நோவுற்று, சோர்வு அடைந்து, உணர்ச்சியும் அடங்கி, அழிந்து, உயிர் போவதற்கு முன்பு—

விளங்கி நிற்கும் மயில் (மேல் நீ) வந்து, (அடியேன்) விண்ணுலகை அடைவதற்கு நீ மனம் உவந்து ஒப்பி (கிருபைகூர்ந்து), நிலைபெற்ற உனது பதங்களைத் (திருவடியைத்) தந்தருளுக.

வேங்கை மரங்களும் உயர்ந்தோங்கியுள்ள இனிய தினைப்புனத்தே இருந்த மாதேவி—வள்ளியின்—இனிய மணவாளனே!

வேண்டிக்கொள்ளும் அடியார்கள் கொண்டுள்ள (பதம் மிஞ்ச) பதவி மேம்பட்டு விளங்க, அவர்கள் விரும்பின (பதவிகளை அல்லது) திருவடியை அருள்புரிபவனே!

மாம்பழம் உடைந்து அதன் சாறு (வயலில் தேங்கவந்து) வயலில் நிறைந்து தங்கும்படி சேர்ந்து (அதனுல்) மாண்பு நெல்—நல்ல அழகிய நெல் விளையும் வளப்பமுள்ள (சோழ) நாடனே!

மனிதர்களும், தவசிகளும், தேவேந்திரனும் பரவிப் போற்ற நின்ற, மாந்துறையில் வீற்றிருக்கும், பெருமாளே!

(ஊன்றிய பதங்கள் தருவாயே)

* வயலூர்.

[இது திரிசிராப்பள்ளிக்குத் தென்மேற்கு 6-மைல். வழியில் 2½-மைலில் 'உய்யக்கொண்டான்' என வழங்குந் 'திருக்கற்குடி' என்னுந் தேவாரமும் திருப்புகழும் பெற்ற ஸ்தலம் இருக்கின்றது. வயலூருக்கு 'மணப்பாறை' ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து போகலாம். வயலூர் ராஜகெம்பீர வளநாட்டைச் சார்ந்தது; திருக்கற்குடி- ராஜகெம்பீரன் மலை-பாடல் 390-தலைப்பைப் பார்க்க. அருணகிரியார் திருப்புகழ் நித்தம் பாடும் அன்பை வயலூரில் அநுக்கிரகிக்கப் பெற்றனர்; 105-ஆம் பாடலைப் பார்க்க.]

904. உபதேசம் பெற

தனதன தானன தானந், தனதன தானன தானந்
தனதன தானன தானந் தனதான

அரிமரு கோனே நமோவென் றறுதியி லானே நமோவென்
றறுமுக வேளே நமோவென் றுனபாதம்-

அரகர சேயே நமோவென் றிமையவர் வாழ்வே நமோவென்
†றருண சொரூபா நமோவென் றுளதாசை;

பரிபுர பாதா சுரேசன் றருமக ளுதா வராவின்
பகைமயில் வேலா யுதாடம் பரநாளும்-

பகர்தலி லாதாளை யேதுஞ் சிலதறி யாவேழை நானுன்
‡பதிபசு பாசோப தேசம் பெறவேணும்;

---

* இத் தலத்துக்குச் சம்பந்தப் பெருமான் அருளியதும் "கணி" எனத் துவக்குவதுமான ஒரு பதிகம் உண்டு என்பதும், அப் பதிகத்தில் தமது வரலாற்றைச் சம்பந்தர் கூறி மகிழ்ந்தன ரென்பதும், வயலூரில் இருந்தபோது திரிசிராமலை அப்பர் சம்பந்தருடைய கனவில் தோன்றி அவரைச் சிராமலைக்கு வா எனப் பணித்து மறைந்தன ரென்பதும், அங்ஙனமே சம்பந்தர் திரிசிராப் பள்ளிக்குப் பொழுது விடியாமுன் புறப்பட்டுச் சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடினரென்பதும் — அருட்கவி சேது ராமனுருக்கு உதித்த பாடல்களால் தெரிகின்றன; கீழ்க்காட்டிய அடிகள் அப் பாடல்களில் வருவன.

1. கணியெனத் துவக்கி வயலியிற் சரித்ர
கவிசொலிச் சிரித்து—விளையாடும்
கவுணியப் ப்ரசித்த........
—(18-5-54 தேதியிற் பாடிய பாடல்)

[தொடர்ச்சி 637 ஆம் பக்கம் பார்க்க]

வயலூர்

904.

திருமாலின் மருகனே உன்னை வணங்குகின்றேன் என்றும், முடிவு (அந்தம்) இல்லாதவனே உன்னை வணங்குகின்றேன் என்றும், ஆறுமுக வேளே உன்னை வணங்குகின்றேன் என்றும், உன்னுடைய திருவடியை

அரகர! சேயே! வணங்குகின்றேன் என்றும், தேவர்களின் செல்வமே! உன்னை வணங்குகின்றேன் என்றும், செந்நிறச் சொரூபனே! உன்னை வணங்குகின்றேன் என்றும், துதித்து வணங்க எனக்கு ஆசை இருக்கின்றது,

சிலம்பணிந்த பாதனே! தேவேந்திரன் தரும் மகள் தேவசேனையின் கணவனே! பாம்புக்குப் பகையான மயில் (வாகனத்தையும்) வேலாயுதத்தையும் கொண்ட ஆடம்பரனே! (கோலாகலனே)! ஒருநாளேனும்

(பகர்தல் இலா தாளை) (நான் நினைத்துச்) சொல்லுதல் இல்லாத—சொல்லாத (உன்) திருவடியைச் சற்றேனும்—சிறிதளவேனும் — அறியாத ஏழையாகிய நான்—உன் (திருவாயால்) பதி, பசு, பாசம் எனப்படும் திரிபதார்த்தங்களாகிய நித்தியப் பொருள்களின் இலக்கணங்களைப் பற்றிய உபதேச மொழிகளைப் பெறவேண்டும்.

(தொடர்ச்சி) 2. கணியெனுத் தொடங்கி வயலி போய்த் தொடர்ந்த
கவியினுற் புகழ்ந்து பெருமானைக்
கருதிவாழ்த் துகந்து திரிசிராச் சிலம்பர்
கனவு தோற்றி வந்து வருமாறே
பணியிடாக் கரந்த வுடனிராப் படர்ந்த
பகலி லார்த் தெழுந்து பதியேகிப்
பனுவல் பாட் டறிந்து பதிகமேற் பயின்று
பரவியேத்தி நின்ற பெருமாளே.
—(31-8-54 தேதியிற் பாடினது).

† முருகவேள் செந்நிறத்தவன். 'செய்யன் சிவந்த ஆடையன்'- திருமுருகாறு. 'சிவப்பின் செக்கர் நிறமாயிருக்கும் பெருமாளே.
—திருப்புகழ் 275.

‡ பதி—கடவுள்; பசு—சீவான்மா; பாசம் — மும்மலம்: பதி ஞானம்—இறைவனைப் பற்றிய அறிவு; பசு ஞானம்—ஆன்ம

[தொடர்ச்சி 638 ஆம் பக்கம் பார்க்க]

கரதல *சூலாயு தாமுன் சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் டியுமாடக்-
கரிபரி மேலேறு வானுஞ் செயசெய சேனு பதீயென்
களமிசை தானேறி யேயஞ் சியசூரன் ;
குரல்விட நாய்பேய்கள் பூதங் கழுகுகள் †கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும் பலதோளா-
‡குடதிசை வாராழி போலும் படர்நதி காவேரி சூழுங்
குளிர்வய லூரார மேவும் பெருமாளே. (க)

905. மாதர்மீது மயக்கு அற

தானதன தாத்த தானதன தாத்த
தானதன தாத்த தனதான

ஆரமுலை காட்டி மாரகிலை காட்டி
யாடையணி காட்டி அநுராக-
ஆலவிழி காட்டி ஓசைமொழி காட்டி
ஆதரவு காட்டி எவரோடும் ;
ஈரநகை காட்டி நேரxமிகை காட்டி
யேவினைகள் காட்டி யுறவாடி-

[637-ஆம் பக்கத் தொடர்ச்சி]
சொரூப ஞானம்; பாச ஞானம் — வாக்குகளாலும், கலாதி ஞானத்தாலும் அறிவும் அறிவு;

"பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி"—சிவஞான சித்தி-சுபக்-9-1.

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே"—திருமந்திரம் 115.

---

* முருகவேளுக்குச் சூலாயுதமும் உண்டு—பாடல். 35, 750 பார்க்க.
† கோமாயு—நரி.
‡ காவேரி கடலுக்கு ஒப்பிடப் பட்டது :
"கடல் போற் காவேரி"—சம்பந்தர் 1- 67-5.
"திரைக்கடற் பொரு காவிரி மாநதி"—திருப்புகழ் 923.

[தொடர்ச்சி 639 ஆம் பக்கம் பார்க்க]

கையிற் சூலாயுதம் கொண்டவனே! முன்பு (சலபதி) கடல் போல (ஆரவாரம்) பேரொலியும், கொடிய (சுராபானம்) கள் குடித்தலும் உடைய (சாமுண்டி) துர்க்கை, (பயிரவி) ஆட—

யானையாகிய (பரி) வாகனத்தின்மேல் ஏறுவானும் (இந்திரனும்) ஜெயஜெய சேனைபதியே என்று ஆரவாரிக்க போர்க்களத்தில் (நீ) புக்குப், பயந்திருந்த சூரன்—

(அழுகைக்) கூச்சலிடவும், நாயும், பேய்களும், பூதங்களும், கழுகுகளும், நரியும், காக்கையும் (அவனது) குடலைக் கீறித் தின்னவும், சண்டை செய்தபல தோள்களைக் கொண்டவனே! (அல்லது) பலமான – வன்மை கொண்ட– தோளனே!

மேற்குத் திசையிலிருந்தும் பெரிய கடல்போலப் பரவி வருகின்ற ஆறு-காவிரி (காவிரியாறு)-சூழ்ந்துள்ள குளிர்ந்த **வயலூரில்** உள்ளம் நிறைந்து வீற்றிருக்கும் பெருமாளே!

(உபதேசம் பெறவேணும்)

905.

முத்துமாலை அணிந்துள்ள கொங்கையைக் காட்டி, (மார) மார்பினுடைய தன்மையைக் காட்டி, (மாரனிலை— மன்மதனுடைய கலை—கொக்கோக சாத்திரத்தில் உள்ள காம நிலைகளைக் காட்டி), ஆடை ஆபரணங்களைக் காட்டி காம இச்சையை ஊட்டும்

விஷம் கொண்ட கண்களைக் காட்டி, (பண்) ஓசை கொண்ட சொற்களைக் காட்டி, அன்பினைக் காட்டி, யாரோடும்

குளிர்ந்த சிரிப்பை (தயையைக் காட்டும் சிரிப்பைக்) காட்டி, பொழுதெலாம் (மிகை) தீச் செயலைக் காட்டியே— செய்த — வினைகளைப் பெருக்கி, (அல்லது அவர்) தொழிலுக்கு உரிய செயல்களைக் காட்டிச் சினேகம் செய்து (நட்பைக் காட்டி),

---

தொடர்ச்சி:— x மிகை—தீச்செயல்.
"குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகை பல செய்தேன்"—சுந்தரர் 7-69-6.

ஏதமயல் காட்டு மாதர்வலை காட்டி
பீடழிதல் காட்ட லமையாதோ ;
*வீரவப ராட்டு சூரர்படை காட்டில்
வீழனலை யூட்டி மயிலூர் தி-
†வேலையுறை நீட்டி ‡வேலைதனி லோட்டு
வேலைவிளை யாட்டு வயலூரா ;
சேரமலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சீலிகுற வாட்டி மணவாளா-
தேசுபுகழ் தீட்டி யாசைவரு கோட்டி
தேவர்சிறை மீட்ட பெருமாளே. (உ)

906. சிவ அறிவுவரக்—காத்தருளுக

தனதனன தனதனன தத்தத்த தத்ததன
தத்தத்த தத்ததன

.... தந்ததான

இகல்கடின முகபடவி சித்ரத்து திக்கைமத
மத்தக்க ளிற்றையெதிர்
புளகதன மிளகஇனி தெட்டிக்க ழுத்தொடுகை
கட்டிப்பி ணித்திறுகி
யிதழ்பொதியி னமுதுமுறை மெத்தப்பு சித்துருகி
முத்தத்தை யிட்டுXநக தந்தமான-

---

* வீர அபராட்டு : அபரம்—எதிர்; ஆட்டு—வல்லமை.

† வேலுக்கு உறை — ஆயுதக்கூடு உண்டென இதனால் தெரிகின்றது.

‡ வேலையில் வேலை விட்டது. கடல் சுவற வேலை விட்ட திருவிளையாடல்: (முருகவேள்) உக்கிர பாண்டியராய் அசுவமேதம் தொண்ணூற்றாறு செய்தபொழுது இந்திரன் பொறாமைகொண்டு வருணனை நோக்கி நீ கடலாய் உருத்துச் சென்று மதுரையை அழிப்பாயாக என்றான். வருணனும் அங்ஙனமே கடலை மதுரைமேற் பொங்கிவரச் செய்தான்; உக்கிர பாண்டியருடைய கனவிலே இறைவன் தோன்றி 'உனது வேற்படையை எறிந்து வெற்றிகொள்' என்றனர்; (இவ் வேல் சிவபிரான் உக்கிர பாண்டியனுக்கு அளித்தது); பாண்டியனும் அவ்வாறே அந்தவேலைப் பொங்கிவரும் கடல்மீது செலுத்தக் கடல் கஃறென வறண்டு கால் மட்ட அளவுக்குச் சுருங்கி நின்று அடங்கிற்று.

"கருங்கடல் பொரிய ஒருங்குவேல் விடுத்த
அதற்கருள் கொடுத்த முதற்பெரு நாயகன்" —கல்லாடம் 75.

[தொடர்ச்சி 641 அம் பக்கம் பார்க்க]

(ஏதம்) கேடு விளைக்கும் (மயல்) காம மயக்கத்தைக் (காட்டும்) ஊட்டும் மாதர்கள் தமது காம வலையை விரித்து (எனது) வலிமை யெல்லாம் தொலைந்து போகும்படி செய்வித்தல் அடங்காதா! இல்லையாகாதா!

(வீர அபர ஆட்டு) வீரத்துடன் எதிர்க்கும் வல்லமை கொண்ட சூரர்களின் சேனை என்னும் காட்டில் நெருப்பு விழும்படிப் புகுவித்து மயில் வாகனத்தை ஊர்ந்தவனே!

வேலாயுதத்தை அதன் உறையினின்றும் எடுத்து நீட்டி கடலிலே செலுத்தின (வேலை) செய்கையாம் விளையாட்டை மேற்கொண்ட வயலூர்ப் பெருமானே!

மலைநாட்டில் சேர — வள்ளிமலைப் ப்ரதேசத்தில்(சேர) சேர்ந்து, (வாரமுடன்) அன்புடனே நீ விரும்பின (சீலம்) நல்லொழுக்கத்தைப் பூண்டிருந்த குறத்தி — வள்ளியின் மணவாளனே! (அல்லது (உன்னைச்) சேர (சேருதற்கு) வள்ளிமலைப் ப்ரதேசத்தில் அன்புடனே விரும்பியிருந்த நல்லொழுக்கத்தளாகிய குறத்தியின் மணவாளனே!)

(உனது) ஒளி வாய்ந்த புகழை விளக்கமுறச் சொல்லி ஆசை மிகும் (கோட்டி) கூட்டத்தாராகிய தேவர்களின் சிறையை நீக்கின் பெருமாளே! (ஈடழிதல்...அமையாதோ).

906.

(இகல்) வலிமை, (கடினம்) கடுமை, முகபடம் முகத்துக்கு இடும் அலங்காரத்துணி, (விசித்ரம்) பேரழகு, துதிக்கை, மதஜலம், மதம் இவைகளைக் கொண்ட யானையை எதிர்க்கும் திறத்ததாய்ப் புளகங்கொண்ட கொங்கை நெகிழ்ச்சியுற. (இனிது) ஆசையுடன் (எட்டி) தாவிக் கழுத்தைக் கைகொண்டு கட்டி அணைத்து அழுத்தி, வாயிதழாம் (பொதியின்) நிறைவினின்றும் (கிடைக்கும்) அமுதை-வாயூறலை (காம) சாத்திரப்படி நிரம்ப உண்டு உருகி முத்தமிட்டு நகத்தைக் கொண்டும், பற்களைக் கொண்டும்

தொடர்ச்சி:—இனிக் கடலில் வேலைவிட்டது கடல்நடுவே மாமரமாய் நின்ற சூரன்மீது முருகவேள் வேலை ஏவினதையும் குறிக்கும்;

"மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் அரண்"—(இரும்பல் காஞ்சி).

"கடல்மாக் கொன்ற தீப்படர் நெடுவேல்"—கல்லாடம் 41.

x நகக்குறி, (தந்தம்) பற்குறி—நகத்தால் இட்ட குறி, பல்லால் இட்ட குறி.

இடுகுறியும் வரையையுற நெற்றித்த லத்திடையில்
எற்றிக்க லக்கமுற
இடைதுவள வுடைகழல இட்டத்த* ரைப்பையது
தொட்டுத்தி ரித்துமிக
இரணமிடு முரணர்விழி யொக்கக்க றுத்தவிழி
செக்கச்சி வக்கவளை செங்கைசோர ;

அகருவிடு ம்ருகமதம ணத்துக்க னத்தபல
கொத்துக்கு ழற்குலைய
†மயில்புறவு குயில்ஞிமிறு குக்கிற்கு ரற்பகர
நெக்குக்க ருத்தழிய
‡அமளிபெரி தமளிபட வக்கிட்டு மெய்க்கரண
வர்க்கத்தி னிற்புணரு மின்பவேலை-

அலையின்விழி மணியின்வலை யிட்டுப்பொ ருட்கவர
கட்டுப்பொ றிச்சியர்கள்
மதனகலை விதனமறு வித்துத்தி ருப்புகழை
யுற்றுத்து திக்கும்வகை
அபரிமித சிவஅறிவு சிக்குற்று ணர்ச்சியினில்
ரக்ஷித்த ளித்தருள்வ தெந்தநாளோ ;

திகுடதிகு தகுடதகு திக்குத்தி குத்திகுட
தத்தித்த ரித்தகுட
செகணசெக சகணசக செக்கச் செகச்செகண
சத்தச்ச கச்சகண
திகுதிகுர்தி தகுதகுர்த திக்குத்தி குத்திகுர்தி
தக்குத்த குத்தகுர்த திங்குதீதோ-

---

* அரைப்பை—அல்குல்.

† மயில் புறவு—புட்குரலுக்கு உரிய புட்கள்
—பாடல் 323-பக்கம் 300-கீழ்க்குறிப்பு.

‡ அமளி அமளிபட—பாடல் 189, 510, 1099-பார்க்க.

இடப்பட (குறிகள்) அடையாளங்கள் (வரையை உற)— ரேகைகள் போலத் தெரிய, நெற்றியாகிய இடத்திலே (முகத்தோடு முகம் அணைவதாய்)த் தாக்கிக் கலக்கம் கொள்ளும்படி, இடை நெகிழவும், ஆடை கழன்று போகவும், (இட்டத்து) ஆசையுடனே (அரைப் பை யது) (அரையில் உள்ள பாம்புப் படம் போன்ற) அல்குலைத் தொட்டு — பரிசித்து — திரிந்து மிக — (அதை) மிகவும் அலைத்து — (இரணம் இடும்) போர் புரியும் (முரணர்) பகைவர்களின் கண் போல (இயற்கையாகக் கறுத்திருக்கும் விழியானது) மிகச் சிவந்த நிறத்தை அடையவும், வளை அழகிய கையில் நெகிழவும்—

(அகரு) அகிலும் அதனுடன் சேரும் கஸ்தூரியும் ஒன்று சேர்ந்து நறுமணம் வீச, (கனத்த) மேகம் போன்ற அல்லது பாரமான — அடர்த்தியுள்ள பல விதமான (கொத்து) பூங்கொத்துக்களைக் கொண்ட கூந்தல் கலைந்து விழ, மயில், புறா, குயில், வண்டு, (குக்கில்) செம்போத்து, ஆகிய புட்களின் குரலைக் காட்டி, உளம் நெகிழ்ந்து உணர்ச்சி அழியப் படுக்கையில் நிரம்ப (அமளிபட) (ஆரவாரம்) எழ, வக்கிட்டு—வதக்கப்படுவது போலச் சூடேற—மெய் (உடல் சம்பந்தப்பட்டு செய்யப்படும்) (கரணம்) கலவி—(வர்க்கத்தினில்) வகைகளில், புணர்ச்சி செய்து சுகம் அனுபவிக்கும் அச் சமயத்தில்—

(அலையின்) கடல்போற் பெரிய கண்ணின் மணியாம் வலையை வீசி, (எனது) பொருளைக் கொள்ளை கொள்ளப் பாசம் (விளைக்கும்) பொறிச்சியர்கள்) தந்திரக்காரர்களின் (மதனகலை) மன்மதனது சாத்திரமாம் கொக்கோக சாத்திர அறிவால் வரும் [அல்லது காமலீலைக் குரிய—புணர்ச்சிக்கு உரிய கரணங்களால் ஏற்படும்] (விதனம்) துக்கத்தை (அறுவித்து) அழித்துத் தொலைத்து, உனது திருப்புகழில் நாட்டம் வைத்துத் துதிக்கும்படி, எல்லை கடந்த சிவஞானம் சிக்குற்று உணர்ச்சியினில் — (உணர்ச்சியினில்) என் அறிவிலே பெறப் படும்படியாக (நீ என்னை)க் காப்பாற்றிக் காத்தளித்து—என் சோர்வை நீக்கி அருள்வது எந்த நாளிலோ! (எந்நாள் எனைப் புரப்பாய்—என்றபடி)

திகுடதிகு தகுடதகு... தக்குத்த குத்தகுர்த திங்குதீதோ

திரிரிதிரி தரிரிதரி தித்தித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி
டிகுடடகு டகுடடிகு டிட்டிட்டி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட
தெனதிமிர்த தவில்மிருக டக்கைத்தி ரட்சலிகை
பக்கக்க ணப்பறைத வண்டைபேரி ;
வகைவகையின் மிகவதிர வுக்ரத்த ரக்கர்படை
பக்கத்தி னிற்சரிய
*எழுதுதுகில் முழுதுலவி †பட்டப்ப கற்பருதி
விட்டத்த மித்ததென
வருகுறளி பெருகுகுரு திக்குட்கு ளித்துழுது
தொக்குக்கு னிப்புவிட வென்றவேலா-
வயலிநகர் பயில்குமர பத்தர்க்க நுக்ரகவி
சித்ரப்ர சித்தமுறு
அரிமருக அறுமுகவ ‡முக்கட்க ணத்தர்துதி
தத்வத்தி றச்xசிகர
வடகுவடில் நடனமிடு 0மப்பர்க்கு முத்திநெறி
தப்பற்று ரைக்கவல தம்பிரானே. (ஙு)

---

* கொடிகள் பல உலவுதலால் சூரியன் (வெயில்) மறைவு படுதல்—இருளாதல் :—
"பல்வேறு கொடியும் படாகையு நிரைஇ
* * காரிருள் கழுமி விண்ணுற் றியங்கும்
வெய்யோன் அழுங்க"—பெருங்கதை 2-6-21.
"பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையா"—பட்டினப்பாலை 182.
"கொடியின் மிடைவால் வெயிற் புரிவிலாத...(புகலி)
—சம்பந்தர் 2-122-4.

† கண்ணபிரான் சூரியனைச் சக்கரத்தால் மறைத்து அஸ்தமித்ததுபோலக் காட்டினது பாடல் 350-பக். 380-கீழ்க்குறிப்பு

‡ முக்கட் கணத்தர்—பதினொருகோடி உருத்திரர்—இவர்கள் "இமையா முக்கண் அண்டர்தம் பெருமான் என்ன அமைந்த தொல் வடிவமுள்ளார்". தான் பரம் என்று அகந்தை கொண்டதனால் தனது படைப்புத் தொழில் முட்டுப்பாடுறுவதைக் கண்ட பிரமன் இறைவனை வேண்டிப் பல காலம் தவமியற்றப் பிரமன் நெற்றியிலிருந்து இறைவன் திரு அருளால் பதினொரு ருத்திரர்கள் பிரமனுக்கு உதவி செய்யத் தோன்றினார்கள். அந்தப் பதினொரு

[தொடர்ச்சி 645-ஆம் பக்கம் பார்க்க]

திரிரிதிரி தரிரிதரி...டட்டட்ட குட்டகுட என்று (திமிர்த) ஒலிசெய்யும் (தவில்) மேளவகை, மிருக டக்கை—(மிருகம்) — வேட்டைக்கு (இங்கு அசுர வேட்டைக்கு உரித்தான) இடக்கை — பெரு முரசுவகை, கூட்டமான (சலிகை) பெரும் பறைவகை, (பக்கங்களிலே வரும் (கணப்பறைகள்) தோற் கருவி வகை, (தவண்டை) பேருடுக்கை, (பேரி) முரசு—(இவை)

வகை வகையாக மிகவும் ஒலி எழுப்ப, உக்ரமுடன்—கோபமுடனே அரக்கர்களின் சேனை பக்கங்களிலே சரிந்து விழ, (எழுது) சித்திரம் வரைந்த (துகில்) விருதுக் கொடியானது போர்க்களம் முழுதும் உலவி பட்டம் பகலில் (பருதி) சக்ராயுதத்தை விடுத்து அஸ்தமிக்க வைத்ததுபோல இருளாக்க, (அங்கு—போர்க்களத்தில்) வந்துள்ள குறளிகள்—பிசாசுகள் பெருகிவரும் ரத்தங்களிற் குளித்து, (உழுது) திளைத்து விளையாடி, (தொக்கு) உடல், (குனிப்புவிட) வளைவை விட — நிமிர்ந்தெழும்படி வெற்றி பெற்ற வேலனே!

வயலூரில் எப்போதும் மகிழ்ந்து வீற்றிருக்கும் குமரனே! பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்பவனே! விநோதமான கீர்த்திகளைக் கொண்ட திருமாலின் மருகனே! ஆறு திருமுகத்தனே! முக்கட் கணத்தர்—சிவ சாரூபக் கூட்டத்தினர்—(அல்லது ருத்ர மூர்த்திகள்) துதிக்கும் அறிவுத் திறம் கொண்டவனே! சிகரங்களை உடைய (வடகுவடில்) வடக்கே உள்ள கயிலை மலையில் நடம்புரியும் தந்தை சிவபிராற்கு முத்தி மார்க்கத்தை — முத்தி அடையும் வழியை (மூலப் பொருளை)ப் பிழையிலா வகையிற் போதிக்கவல்ல தம்பிரானே! (அல்லது—அப்பர்க்கு தந்தையாகிய சிவனை அடைவதற்கு (வேண்டிய) முத்திவழியைச் சம்பந்தராகத்—'திருநெறிய தமிழ்,' எனப்படும் தேவார வாயிலாகத் — தப்பிலாத வகையில் உரைக்கவல்ல — சொல்லவல்ல தம்பிரானே! (ரக்ஷித்தருள்வதெந்தநாளோ)

ருத்திரர்கள் உயிர்களைச் சிருட்டிக்க அவர்களின் உருவு கொண்ட பதினொருகோடி உருத்திரர்கள் தோன்றினர். அதன் பின் பிரமனும் சிருட்டிக்கும் ஆற்றல் பெற்றான்.

(—கந்தபுரானம்-உருத்திரர் கேள்விப்படலம் 2-14).

[தொடர்ச்சி 646-ஆம் பக்கம் பார்க்க]

907. மாதர்மீதுள்ள மயக்கு அற

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

இலகு முலைவிலை யசடிகள் கசடிகள்
*கலைகள் பலவறி தெருளிகள் மருளிகள்
எயிறு கடிபடு முதடிகள் பதடிகள் எவரோடும்-
இனிய நயமொழி பழகிக ளழகிகள்
மடையர் பொருள்பெற மருவிகள் சருவிகள்
†யமனு மிகையென வழிதரு முழிதரும் விழிவாளால் ;
உலக மிடர்செயு நடலிகள் மடலிகள்
சிலுகு சிலரொடு புகலிக ளிகலிகள்
உறவு சொலவல துரகிகள் விரகிகள் பிறைபோலே-
உகிர்கை குறியிடு கமுகிகள் சமுகிகள்
பகடி யிடவல கபடிகள் முகடிகள்
உணர்வு கெடும்வகை ‡பருவிக ளுருவிக ளுறவாமோ ;

[645-ஆம் பக்கத் தொடர்ச்சி]

x கயிலையில் அக்கினி காந்தச் சிகரங்களாய் 1001-சிகரங்கள் உண்டு. அவைகளில் நடேசர் மூர்த்தம் 108-என்பர்.

"இவை புடை சூழ்ந்த சிகரமா யிரத்தொன்று
எரிதழற் காந்தமா யிலங்கும்
அவைகளில் நடேசன் மூர்த்தநூற் றெட்டு" ஞான உபதேச 30

o அப்பர்க்கு முத்திநெறி—அப்பரை அடைவதற்கு—எனவும் பொருள் காணலாம்—'மதுரைக்கு வழி' என்புழிப் போல.

* கலை—புணர்ச்சிக்கு உரிய கரணங்கள்; மகளிர்க் குரியவாக மணிமேகலை 2-ஆம் காதையிற் (வரி 19-32) கூறிய கலைகள். —சிந்தாமணி 1625. உரை ;

இனி, பரத்தையர்க்குரிய கலைகள் 64 :—

"யாழ் முதலாக அறுபத் தொரு நான்கு
ஏரிள மகளிர்க் கியற்கை யென் றெண்ணிக்
கலையுற வகுத்த காமக் கேள்வி"—பெருங்கதை 1-35-84.

"எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற பண்ணியன்
மடந்தையர்"—சிலப்பதி 22-138.

"எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்"-சிலப்-14-167.

(தொடர்ச்சி 647 பக்கம்)

907.

விளங்கும் கொங்கையை விலைக்கு விற்கின்ற மூடர்கள், குற்றம் உள்ளவர்கள், (கலைகள்) புணர்ச்சிக்கு உரிய கரணங்கள் பலவற்றையும் அறிந்துள்ள விளக்கத்தை—தெளிவை—உடையவர்கள், (மருளிகள்) மருட்டுபவர்கள்—மயக்குபவர்கள், பற்கடிகள் அடையப் பெற்ற–பற்குறிகளைக் கொண்ட உதட்டை உடையவர்கள், பதர்கள்—அற்பர்கள் யர்ரோடும்—

இனிமையான நயமான பேச்சுகளைப் பேசப் பழகினவர்கள், அழகுடையவர்கள், முட்டாள்களுடைய பொருளைப் பெறுதற்கு அவர்களுடன் சேருபவர்கள், (சருவிகள்) கொஞ்சிக் குலாவுபவர்கள், யமனும் அனுவசியம் அதிகமே என்னும்படியான அழிதரும்—அழித்தல் தொழிலைச் செய்வதும் (அல்லது வழிதரும்—வழியைக் காட்டுவதும்) அங்கும் இங்கும் திரிகின்றதுமான—சுழலுகின்றதான—கண் என்னும் வாள் கொண்டு

உலகத்துக்கே துன்பம் ஊட்டும் (நடலிகள்) செருக்கு உள்ளவர்கள்—(அல்லது பாசாங்கு செய்ய வல்லவர்கள்), (மடலிகள்) மடல் ஊரும்படிச் செய்பவர்கள் (அல்லது பனங்கருக்குப் போல்பவர்கள்), (சிலுகு) சண்டைப் பேச்சு சிலரோடு பேசுபவர்கள், பகைமை பூண்பவர்கள், உறவுமுறை (மாமா, அத்தான் என்னும் உறவுமுறை) கூறவல்ல துரோகிகள், சாமர்த்திய சாலிகள், பிறைபோல—

(உகிர்கை) கை உகிர்—கைந் நகத்தால் அடையாளக் குறியை இடுபவர்கள், (கமுகிகள்) — கமுக்கம் — ரகசிய அடக்கம் உள்ளவர்கள், (சமுகிகள்) பேட்டி யளிப்பவர்கள் (அல்லது ஒரு கூட்டத்தினர்), (பகடியிடவல) வெளிவேஷம் போடவல்ல வஞ்சக நெஞ்சினர், (முகடிகள்) மூதேவிகள், நல்ல அறிவு கெட்டுப் போகும்படிப் (பருவிகள்) அரிப்பு அரிப்பவர்கள், (உருவிகள்) கையிற் பொருள் வரும்படி சரசமாகப் பேசுபவர்கள்–ஆகிய விலைமாதர்களின் சம்பந்தம் நல்லதா (நல்லதல்ல என்றபடி).

தொடர்ச்சி :— † "நன்மனைதோறும் பெண்களைப்படைத்து, நமனை என் செயப் படைத்தனையே" தனிப்பாடல் (விவேக சிந்தாமணி-82)

‡ பருவி—பருவுதல்—அரித்தல்— 'பருவிக் குறவர் புனத்திற் குவித்த பருமாமணி முத்தம்'—சம்பந்தர் 1-69-5.

அலகை புடைபட வருவன பொருவன
கலக கணநிரை நகுவன தகுவன
அசுரர் தசைவழி நிமிர்வன திமிர்வன *பொடியாடி-

அலரி குடதிசை யடைவன குடைவன
†தரும வநிதையு மகிழ்வன புகழ்வன
அகில புவனமு மரகர கரவென அமர்வேள்வி;

திலக நுதலுமை பணிவரு செயமகள்
கலையி னடமிட ‡வெரிவிரி முடியினர்
திரள்ப லுயிருடல் குவடுக ளெனநட மயிலேறிச்-

சிறிது பொழுதினி லயில்விடு குருபர
அறிவு நெறியுள அறுமுக இறையவ
த்ரிசிர கிரியயல் **வய**லியி லினிதுறை பெருமாளே x. (ச)

908. எல்லாம் அவன் செயலே

தன்ன தனத்தன தன்ன தனத்தன
தன்ன தனத்தன தந்ததான

என்னல் பிறக்கவும் என்ன விறக்கவும்
என்னல் துதிக்கவும் கண்களாலே-

என்ன லழைக்கவும் என்னல் நடக்கவும்
என்ன விருக்கவும் பெண்டிர்வீடு;

° படைகளின் தூளிஎழ அதில் சூரியன் மறைதலுறுவது,
'அருக்கன் வெருண்டே பூழிவான் முகடு போர்த்தெழல் காண
வாழி என்றதில் மறைந்து படர்ந்தான்—கந்தபுரா 4-3-51.

சூரியன் மேற்குக் கடலில் முழுகுவது—
"அருக்கனும்...மேற்றிசை வேலை மூழ்கி"
—வில்லி பாரதம் 16-ஆம் போர் 91.

† "சலதி யுடைபட முதிர்வன எதிர்வன" என்றும் பாடம்.

‡ "எரி விரி முடியினர்" — அரக்கர்—அசுரர்—இவர்களுக்கு எரி போன்ற தலைமுடி; இவர்கள் விரித்த தலை மயிரினர்.

"எரியன மணிமுடி இலங்கைக்கோன்"—சம்பந்தர் 3-19-8.
"விரித்த குஞ்சியர் எனும் அவுணர்"—திருப்புகழ் 5.
"தானவர்...செய்ய பங்கியும்"—கந்தபுரா 4-5-25.

x இந்தப் பாடலில் "அடிகள் கசடிகள்" என்பது போன்ற வழி எதுகை நிரம்ப வருவன காண்க.

பேய்க்கூட்டங்கள் பக்கங்களிற் சேரும்படி வரவும், சண்டை செய்யவும், கலகம் செய்யும் (கணம்) பேய்களின் வரிசை சிரிக்கவும், மேம்பட்டு விளங்கவும், (இறந்துபட்ட) அசுரர்களின் (தசைவழி) மாமிசக் குவியல் கிடைத்தபோது அதை (உள்ளம் குளிர்ந்து) தின்று நிமிரவும், திமிர்வன (விறைப்பு) விடவும், (போர்ப்) புழுதிகளிற் குளித்து—

சூரியன் மேற்குத் திசையிற் சேரவும், (மேற்குக் கடலில்) (புழுதிபோக) முழுகவும், தரும தேவதை மகிழ்ச்சியுறவும், புகழை எடுத்துக் கூறவும், எல்லா உலகங்களும் அரகரஅர என்று துதித்துப் போற்றவும், போர்க்கள வேள்வியில்— போர்க்களச் சாலையில்—

பொட்டணிந்த நெற்றியைக் கொண்ட உமாதேவிக்குப் பணி செய்யும் (செயமகள்) துர்க்கை, சாத்திரப்படி (அல்லது தனது மான் வாகனத்தின்மீது) நடனமிட, (எரிவிரி முடியினர்) நெருப்புப்போலச் சிவந்ததும், விரித்துள்ளதுமான தலைமயிர் முடியை உடைய (அசுரர்) கூட்டம் பலவற்றின் உயிர் (வாசம் செய்திருந்த) உடல்கள் (குவடுகள் என) மலைபோற் குவிய (பிணக்குவியல் மலைபோலெழ), நடனம் வல்ல மயிலில் ஏறி—

கொஞ்சம் நேரத்திலே வேலைச் செலுத்தின குருபரனே! ஞான மார்க்கத்தைக் கொண்டுள்ள ஆறுமுகனே! இறைவனே! திரிசிராப்பள்ளிக்குச் சமீபத்தில் உள்ள (பக்கத்தில் உள்ள) **வயலூரில்** இன்பமுடன் வீற்றிருக்கும் பெருமாளே!

(உணர்வு கெடும்வகை...உருவிகள் உறவாமோ)

908.

என் திறத்தால் நான் பிறப்பதற்கும், என் திறத்தால் நான் இறப்பதற்கும், என் திறத்தால் நான் துதிப்பதற்கும், என் கண் கொண்டு

ஒருவரைப் பார்த்து நான் அழைப்பதற்கும், என் கால் கொண்டு நான் நடப்பதற்கும், என் திறம் கொண்டு நான் ஓரிடத்தில் இருப்பதற்கும், மாதர்கள், வீடுகள் (இவற்றை)

என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை-
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் * இங்குநானார் ;
†கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் தந்தகோவே-
‡கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
xகண்ணா டியிற்றடம் கண்டவேலா ;
oமன்னான தக்கனை முன்னாளுமு டித்தலை
வன்வாளி யிற்கொளும் ** தங்கரூபன்-

° முதல் நான்கு அடிகள்—எல்லாம் ஈசன் செயல் என்பதை விளக்குகின்றன :—

"வெய்யவினை என்னிச்சையோ அருணை ஈசா
படைத்தளிக்கும் உன்னிச்சை யன்றோ உரை"
—அருணகிரியந்தாதி 99.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே...காண்பாரார்
கண்ணுதலாய் காட்டாக் காலே" —அப்பர் 6-95-3.

"ஊட்டுவிப் பானும் உறக்குவிப் பானுமிங் கொன்றொ டொன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப் பானும் முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப் பானும் ஒருவனுண் டேதில்லை யம்பலத்தே"
—பட்டினத்தார்-திருத்தில்லை-11.

"நானா ரொடுங்க நானார் வணங்க நானார் மகிழ்ந்து உனைஓத
நானார் இரங்க நானார் உணங்க நானார் நடந்து விழ நானார்"
—திருப்புகழ் 1220.

† "கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான்"-திருவாசகம் 11-9.

‡ "கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்"—சம்பந்தர் 3-40-3.

x திருமுருகன்பூண்டி யென்னுந் தலத்தில் முருகபிரான் வேல் கொண்டு தடம் (தீர்த்தம்) கண்டதைத் திருமுருகன்பூண்டிப் புராணம் உபதேசச் சருக்கம்-33-ஆம் பாடலிலும், தீர்த்தச் சருக்கம்-4, 5-ஆம் பாடலிலும் காண்க.

'தோட்டு நாண்மலர்க் கடுக்கையந் தொங்கலார்க் கன்பா
யாட்ட நீர்த்தட மண்மையி லின்றிய வதனால்
நீட்டு பொற்றிருக் கைத்திரு வேலையந் நிலத்தில்
காட்டி னானிலங் கீண்டது நாகமுண் ணடுங்க.' (33)

[தொடர்ச்சி 651 ஆம் பக்கம் பார்க்க.]

நான் அநுபவித்துச் சுகிப்பதற்கும், (இது வேண்டும் அது வேண்டும்) என்று நான் கிலேசித்து மெலிதற்கும், இதுபோதும் என்று நான் அலுப்பு உறுவதற்கும் (சோர்வு அடைதற்கும்),வாதபித்தசிலேட்டுமங்கள் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதால் வருகின்ற நோய்களை (அல்லது வினைச் சேர்க்கையால்— புணர்ச்சியால்—வரும் நோய்களை)

நான் எரித்துத் தள்ளுதற்கும், பல நினைவுகளையும் நான் நினைப்பதற்கும், இன்ப துன்பங்களை தாங்குதற்கும் நான் இங்கு நான் ஆர் (எனக்கு என்ன திறம்—என்ன சுதந்திரம்—உண்டு—ஒன்றும் இல்லை என்றபடி)

கல்லினின்றும் நார் உரிப்பதுபோல (என் நெஞ்சக்கன கல்லைக்கனிவித்த(கசியப்பண்ணின) அரசே! அடியேனுக்கு, நல்ல, செவிக்கு அமிர்தம்போன்ற, (பதம்) உபதேச மொழியை அருளின (உபதேசித்த) தலைவனே!

உன்னைக் கற்றறியாதார் நெஞ்சங்களில் நிற்பது என்பதையே நினைக்காத மனத்தை உடையவனே—நெஞ்சில் தங்காதவனே! கண்ணாடிபோல மிகத் தெளிவு உள்ள (தடம்) நீர் நிலையை வேல் கொண்டு கண்டவனே!

அரசாய் விளங்கின தக்ஷப்பிரஜாபதியை முன்பு (அவனுடைய) முடியையும் தலையையும (அல்லது கிரீடம் அணிந்த தலையை) கொடுமை வாய்ந்த அம்பினாற் கொய்த தங்க சொரூபனான சிவனுக்கு—

தொடர்ச்சி:—'பழுத்த கொற்றவேற் படைமிகு விரைவினாற் பாய்ந்த வழித்த லத்திடை வந்ததோர் மாசறு தீர்த்தம்'. (34)

இவ் வண்ணம் வயலூரிலும் முருகவேள் தீர்த்தங் கண்டதாக ஐதிகம் இருப்பதால் இப் பாடலிற் குறிக்கப்படுவது வயலூர்த் தடாகமே. 'சத்தி தீர்த்தம்' எனப்படும் இந்தத் தீர்த்தத்தின் பெயரே வேலால் தோன்றியது என்பதை விளக்கும்; இதன் நீர் பளிங்கு போன்றது. அதனால் 'கண்ணாடியில் தடம்' என இந்தப் பாடலிலும், 'ஒத்த நிலாவீசு நித்தில நீராவி...வயலூரா'—எனத் திருப்புக்கொளியூர்த் திருப்புகழிலும் (950) அருணகிரியார் இந்தத் தீர்த்தத்தைப் புகழ்ந்துள்ளார்.

○ தக்கனை வீட்டியது—பாடல் 390-பக்கம் 484 குறிப்பு.

○○ தங்கரூபன் — சிவன் :— "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி...ஈசனுக்கே" — பொன்வண்ணத் தந்தாதி 1.

மன்ன குறத்தியின் மன்ன வயற்பதி
மன்ன *மூவர்க்கொரு தம்பிரானே.† (ரு)

909. மாதர்மீதுள்ள மயக்கு அற

தனனத் தனதன தனனத் தனதன
தனனத் தனதன தனதான

கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுகிரிதழ் எழிலாகும்-
கரிபோற் கிரிமுலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியரை யெனவாகும்;
உடல்கட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கெறுவித நடையாலும்-
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ;
குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப் பலஅல கைகள்பேய்கள்-
கொலைபோர்க் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக வுயர்‡தாழை;
மடல்கீற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே-
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே. (சு)

---

* மூவர்க்கும் மன்னன் முருகவேள்-"சிலைமகள் நாயன் கலைமகள் நாயன் திருமகள் நாயன் தொழும் வேலா"—திருப்புகழ் 261.

† இப் பாடலுக்குத் 'தன்ன தனத்தன தந்ததான' என்பதே சந்தம்; 'தன்ன தனத்தனம்' என வரும் அடிகளில் 'ம்' ஒசை அழுந்தல் இல்லை. இதை 'ஆரிடத்தின்' பாற் படுத்துக.
—பாடல் 169-பக்கம் 390 கீழ்க்குறிப்பு.

‡ "மடல்விண்ட முடத்தாழை", "மொட்டலர்த்த, தடந்தாழை முருகுயிர்க்கும்", "நறவிரிவு நற்றாழை"
—சம்பந்தர் 2-48-4; 2-41-4; 1-136-6.

அரசே! குறத்தி (வள்ளியின்) தலைவனே! **வயலூர்** அரசே! பிரமன், மால், அரன் மூவர்க்கும் ஒப்பற்ற அரசாய் விளங்குபவனே! (இங்கு நான் ஆர்)

909.

(கடல் கணை போல் விழி) கடல் போலவும், அம்பு போலவும் உள்ளன கண்கள்; (சிலை) வில்லைப் போலவும், (பிறை) பிறைச் சந்திரன் போலவும் உள்ளது நெற்றி; கொவ்வைக் கனிபோலவும் பவளம் போலவும் உள்ளது வாயிதழ்; அழகு பொருந்திய

யானைபோலவும், மலைபோலவும் உள்ளன கொங்கைகள்; கொடிபோலவும், துடி (உடுக்கை) போலவும் உள்ளது இடை; (கடி) காவலிடம் போலவும், (பணி) பாம்புபோலவும் உள்ளது (அரை) அல்குல் என்று உவமானம் சொல்லத்தக்க—

தேகத்தைக் காட்டும் இன்ப நிலைக்கு (எழில் பாத்திரம் இவள்) இவளே அழகிய எடுத்துக் காட்டான பாத்திரம்—கொள்கலம் (எனமயங்கி) அவளது ஆடை அழகிலும், செருக்கு—கருவமுடைய நடை அழகிலும்—(அவளை விட்டு)

ஒருநாள் பிரிவதுகூட அரிதாக—முடியாத காரியம் என்று (அவள் மயக்கிலேயே) சுழற்சியுறும் (இந்த) தொலையாத—நீங்காத—துன்பத்தைத் தொலைக்க மாட்டேனே!

அசுரர்களின் உடலினின்றும் குடலை இழுத்து வெளிப்படுத்திக், காக்கைகள், நரிகள், பல கொள்ளிவாய்ப் பிசாசுகள், பேய்கள்,

கொல்லுதல் (நிறைந்த) போர்களத்திலே நாள்தோறும் அந்தக் குடலை (ஏற்று) அடைந்து உண்ணத், தேவர்களை (விண்ணுலகிற்) குடியேற்றினகுகனே! உயரமாக வளர்ந்துள்ள தாழையின்

(மடல் கீற்றினில்) மடல் (ஏட்டுத் துண்டுகளில் எழுகின்ற (உண்டாகின்ற) நறுமணம் உள்ள பூ (தாழம்பூ) நிறைந்த சோலைகள் நிரம்பியுள்ள **வயலூர்ப்** பதியில் வீற்றிருப்பவனே!

மலைமேலேயே குடித்தனம் செய்து வசிக்கும் கொடிய வேடர்களுடைய மகள்—வள்ளியின்மீது—பிரியங் கொண்டுள்ள பெருமாளே! (துயரது தவிரேனோ)

910. மாதர்மீதுள்ள மயக்கு அற

தனனத் தான தான தனதன
தனனத் தான தான தனதன
தனனத் தான தான தனதன தனதான

கமலத் தேகு லாவு மரிவையை
நிகர்பொற் கோல மாதர் மருள்தரு
கலகக் காம நூலை முழுதுண ரிளைஞோர்கள்-
கலவிக் காசை கூர வளர்பரி
மளகற் பூர தூம கனதன
கலகத் தாலும் வானி னசையுமி னிடையாலும்;
விமலச் சோதி ரூப இமகர
வதனத் தாலு நாத முதலிய
விரவுற் *ருறு கால்கள் சுழலிருள் குழலாலும்-
வெயிலைப் போதும் வீசு மணிவளை
அணிபொற் றோள்க ளாலும் வடுவகிர்
விழியிற் பார்வை யாலு மினியிடர் படுவேனோ;
சமரிற் பூதம் யாளி பரி †பிணி
கனகத் தேர்கள் யானை யவுணர்கள்
தகரக் கூர்கொள் வேலை விடுதிற லுருவோனே-
சமுகப் ‡பேய்கள் வாழி யெனஎதிர்
புகழக் கானி லாடு பரிபுர
சரணத் தேக வீர xஅமைமன மகிழ்வீரா;
அமரர்க் கீச னான சசிபதி
மக்கள்மெய்த் தோயு நாத குறமகள்
oஅணையச் சூழு நீத கரமிசை யுறுவேலா-

---

* ஆறு கால்கள்—வண்டுகள். † பிணி—பிணித்த: கட்டிய.
‡ "காவியங்கண் மடவாளொடும் காட்டிடை...ஆடுதிர்"
"சுரிகுழல் நல்லதுடி யிடையோரடு...காட்டிடை ஆடுதிர்"
"காட்டில்...பேய்கள் நகைசெய நட்டம் நவின்றோன்"
—சம்பந்தர் 3-124-6,5; 2-68-5.

x அமை—அம்மை.
o வள்ளியின் பத்தி நிலையைச் சோதிக்கப் பல மாயைகள் முருகவேள் செய்தனர்; சோதித்து ஆள்வதே இறைவன் கைக் கொண்டுள்ள நீதியாதலின் 'குறைகள் அணையச் சூழும் நீத' என்றார்.
'இவள்பாற் போய்ப் பொருந்தியும் வேட்கை புகன்றும் அகன்றும் வருந்தியும் வாழ்த்தியும் மாயைகள் செய்தேம்'—கந்தபுரா 6-24-248.

910.

தாமரையில் விளங்கும் அரிவை—மாது லக்ஷ்மிக்கு—ஒப்பான அழகிய அலங்காரம் உள்ள மாதர்கள் மீது மருட்சியை (மோகமயக்கத்தைத்) தருகின்றதும், கலக்கம் தருவதுமான காமசாத்திரத்தை (கொக்கோக சாத்திரத்தை) முற்றும் உணர்ந்துள்ள இளைஞர்களின்—

புணர்ச்சி யின்பத்துக்கு ஆசை மிக்கெழ நிரம்பிய நறுமணமுள்ள பச்சைக்கற்பூரம், (தூமம்) அகிற்புகை போன்ற நறும்புகை—இவைதமைக் கொண்டுள்ள கனத்த கொங்கைகள் எழுப்பும் மனக்கலக்கத்தாலும், ஆகாயத்தில் அசைகின்ற மின்னல் போன்ற இடையாலும்,

களங்கம் இல்லாத ஒளிமயமான (பனிக்கிரணம் கொண்ட) சந்திரபிம்பம் ஒத்த முகத்தாலும், (பாட்டு) ஓசை முதலிய கலந்து எழச் செய்யும் வண்டுகள் சூழ்ந்து சுழலும் இருள் நிறமான (கரிய) கூந்தலாலும்,

ஒளியை எப்போதும் வீசுகின்ற ரத்னவளைகளை அணிந்துள்ள அழகிய கைகளாலும், மாவடுவின் கீற்றனைய கண்களின் பார்வையாலும், இனி வருத்தம் உறுவேனோ!

போரில் பூதம், யாளி, குதிரை இவைகள் கட்டப்பட்டுள்ள பொன்மயமான தேர்களும், யானைகளும், அசுரர்களும் பொடிபட்டழியக் கூர்மை கொண்ட வேலாயுதத்தைச் செலுத்தின பராக்ரம உருவத்தனே!

கூட்டமான பேய்கள் "வாழி" என்று எதிர் நின்று புகழக் காட்டில் (சிவனுடன்) நடனம் செய்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை உடைய (தனிவீரம்) நிகரிலாத வீரம் வாய்ந்த அம்மை — பார்வதி மனம் மகிழ்கின்ற வீரனே!

தேவர்களுக்குத் தலைவனும் இந்திராணியின் கணவனுமான இந்திரனுடைய மகள் தேவசேனையின் உடலைத் தழுவும் காதனே! குறமகள் வள்ளி உன்னை அணைவதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்த நீதிமானே! திருக்கையிற் கொண்ட வேலாயுதனே!

*அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியின்
அழகுக் கோயில் மீதில் மருவிய பெருமாளே. (எ)

911. ஞானம் பெற

தனதத்த தானன தனதத்த தானன
தனதத்த தானன தந்ததான

கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
களையுற்று மாயாது மந்த்ரவாதக்
கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டுபூணுஞ்;
சமயத்த †ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளேநாளு நண்புளோர்செய்-
சரியைக்ரி யாயோக நியமத்தின் மாயாது‡
சலனப்ப டாஞானம் வந்துதாராய்;
அமரிற்சு ராபான திதிபுத்ர xராலோக
மதுதுக்க மேயாக மிஞ்சிடாமல்-

---

* வயலூரில் கணபதியின் திருநாமம் 'பொய்யாக் கணபதி'; இவரே 'வித்தக மருப்புடைய பெருமாள்'; இவரே 'செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பு' என அருணகிரியார்க்கு அருளினவர். அருணகிரிநாதர் வரலாறு—பக்கம் 63, 64 பார்க்க.

வயலூரிற் சிவபிரான் திருநாமம்—அக்னீசுரர் (அக்கீசர்)
—திருப்புகழ் 209-ம் பார்க்க.

† "வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடி ஞான மென்னவ்து"—சம்பந்தர் 2-2-11.

‡ (கடவுளை அடைவதற்கோ, ஞானம் பெறுதற்கோ) எந்த வழி எளிதானதோ—அதையே அருணகிரியார் வேண்டுவார், அதையே உபதேசிப்பார்—உதாரணமாக

"காட்டிற் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின் வீட்டிற் புகுதல் மிக எளிதே" என்னும் கந்தரலங்காரத்தையும் (85), "உலக கலைகளும் அலம் அலம்" (திருப்புகழ் 912), "சிவநூலின்... யந்த்ரத்துக் கேள்வி அலம் அலம் வம்பிற் சுற்றுது பரகதி அருள்வாயே" (திருப்புகழ் 945) என வருவனவற்றையும் காண்க.

விரதம், சரியை, கிரியை முதலியன சுற்றுவழி, கஷ்டமான வழி என்பது—'விரத முதலாய பல மெய்த்தவத்தின் உண்மைச் சரியை கிரியா யோகம் சார்வித்து......ஆலோகம் தன்னை அகற்று

[தொடர்ச்சி 657-ஆம் பக்கம்]

திருஅருள் பாலிப்பதிற் புகழ் பொய்ம்மையுறாத கணபதியும் ("பொய்யாக் கணபதி" என்னும் பெயருடைய விநாயகப் பெருமானும்), அழகிய "அக்னீசுரர்" என்னும் திருநாமம் கொண்ட சிவபிரானும் வாழ்கின்ற வயலூரில் உள்ள அழகு நிறைந்த கோயிலுள் வீற்றிருக்கும் பெருமாளே! (இனி இடர் படுவேனே)

911.

பொறுமை யில்லாத (சீர் கெட்டவர்களும்) ஒழுங்கீனர்களும், நிரம்பத் தருக்கம் பேசும் ஆடம்பரவாதிகளுமான (மனிதர்களால்) நான் களைப்பு (சோர்வு) உற்று மடியாமலும், மந்த்ரவாதம் செய்யும்

மிக இழிவு நிலையில் உள்ள தாழ்மை வாய்ந்த சித்திரப் பேச்சு—அலங்காரப் பேச்சு—பொய்ப் பேச்சுப் பேசிக் கொண்டாட்டம் போடுபவர்களின் செய்கைக்ளிற் சிக்கி மடியாமலும், மேற்கொண்டு ஒழுகும்

(அவ்வச்) சமயங்களுக்கு உரிய ஆசார நியமங்களிற்—கட்டுப் பாடுகளிற் பட்டு மடியாமலும், உருவ வழிபாடு செய்து நாள்தோறும் அன்பு வைத்துள்ளோர்கள் புரியும்—

சரியை, கிரியை, யோகம் எனப்படும் ஒழுக்கங்களை மேற்கொண்டு மடியாமலும், (நேரே) எவ்வித சஞ்சலங்களுக்கும் உட்படாத ஞானத்தை (நீ) வந்து எனக்குத் தந்தருளுக.

போரில், கட்குடியரான (திதி புத்திரர்) அசுரர்களின் அறியாமையானது (உலகுக்குத்) துக்கத்தையே தர (அந்தத் துக்கம்) வளர்ச்சி யுறுதவழிக்கு—அந்தத் துக்கத்தை ஒழிக்க

வித்து......மலபரிபாகம் வருமளவிற் பன்னுள் அலமருதல் கண்ணுற்று அருளி ... அறிவிற் காணரிய மெய்ஞ்ஞானக் கண் காட்டி"— என வரும் கந்தர்கலி வெண்பாவாற் பெறப்படும்.

x ஆலோகம்—தெளிந்த அறிவு. ஆலோகம் என்பது அலோகம் என்பதன் விகாரம் எனக் கொண்டால்—அலோகம்—அறியாமை எனப் பொருள்படும்—

"ஆலோகந் தன்னை அகற்றுவித்து"

—கந்தர் கலிவெண்பா (உ. வே. சா.—குறிப்புரை) 20.

*அடமிட்ட வேல்வீர திருவொற்றி யூர்நாதர்
அருணச்சி காலீல கண்டபார ;

மமபட்ச மாதேவ ரருமைச்சு வாமீகி
மலகிட்க ளாமாயை †விந்துநாதம்-

வரசத்தி மேலான பரவத்து வேமேலே
வயலிக்குள் வாழ்தேவர் தம்பிரானே. (அ)

912. அறிவு பெற

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு ‡மலமல மழகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை xமடைபாயல்-

குளிரி லறையக மிவைகளு மலமல
மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களு மலமல மொருநாலு ;

சுருதி வழிமொழி 0சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி யயலார்பால்-

* அடமிட்ட வேல்—அதனால் '(அசுர விதரபர) சரத விரத அயில்' என்றார் 692-ஆம் திருப்புகழிலும்.

† 'விந்து—நாதம்—சத்தி —மேலான — பரவத்துவே' — இது முருகவேளை 'ஏகநாதன்' எனக் குறிக்கின்றது. 'சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன், உவந்தருள் உருத்திரன்தான் மாலயன் ஒன்றி னொன்றாய்ப், பவந்தரும் அருவ நாலிங் குருவநா லுபய மொன்றாய், நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்'
—சிவஞானசித்தி சுபக் 164.

இறைவன்-ஏகநாதன்; சிவம், சத்தி, நாதம், விந்து-என அருவத் திருமேனி நான்கு; மகேசன், உருத்திரன், மால், அயன்-என உருவத் திருமேனி நான்கு, சதாசிவம்—என அருவுருவத் திருமேனி—ஆக இவ் வொன்பது வர்க்கத்தினும் வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழில்களைச் செய்வன், இதனை 'நவந்தருபேதம்' என்பர்.

[தொடர்ச்சி 659 ஆம் பக்கம் பார்க்க]

(அடம் இட்ட) சஞ்சாரம் செய்த—செலுத்தப்பட்ட அல்லது—பிடிவாதம் பிடித்த வேலை ஏந்திய வீரனே! திருவொற்றியூர் நாதர் (தலைவர்), சிவந்த (சிகா) சடையையும், நீல கண்டத்தையும், (பாரம்) பெருமையையும் கொண்டவரும்

என்மீது அன்புள்ளவருமான மகா தேவர் — சிவபிராற்கு அருமையாக வாய்ந்த (குரு) சுவாமியே! மாசில்லாதவனே! உருவமில்லாதவனே! மாயை, விந்து, நாதம்—

வரங்களைத் தரும் சத்தி இவைகளுக்கு மேலான பரம்பொருளாம் (வஸ்துவே) பொருளே! (ஏகநாதனே)! மேலை **வயலூர்** என்னும் தலத்தில் வாழ்கின்ற தேவர் தம்பிரானே!

(ஞானம் வந்து தாராய்)

912

ரத்தம், புழுக்கள், ஜலம், மலம், மயிர், மாமிசம்—சதை, இவை பொருந்திய உருவமாம் இவ்வுடல் எடுத்தது போதும் போதும், அழகொடு விளங்கும் பலவிதமான ஆபரணங்களும், நறுமண முள்ளனவும், ஆறுவித சுவைகள் கூடியுள்ளனவுமான சோறு, படுக்கை,

குளிருக்கு அடக்கமான அறைகளை உடைய வீடு— இவைகளும் போதும் போதும், மனைவி, குழந்தைகள், (அனை) தாயார், கூடப் பிறந்தவர்கள் (தம்பிகள்), உறவு முறை கூறிக் கொஞ்சிக் குலவும் சுற்றத்தினர், இவர்களும் போதும் போதும், ஒரு நான்கு—

வேதங்களின் மார்க்கங்களை எடுத்துக் கூறும் சைவ சித்தாந்த நூல்கள் தவிர வேறு உலக சம்பந்தமான நூல்களை ஓதுதலும் போதும் போதும், விளங்கி நிற்பவனும், அழிவிலாதவனுமான உன்னை நினைப்பவர்களுடைய நட்புத் தவிர இனி அயலார்களிடத்தே

தொடர்ச்சி:—‡ அலம் அலம்—போதும் போதும். இங்ஙனம் 'அலம் அலம்' என வரும் பிறிதொருபாடல் 510.

x மடை—சோறு.

o சிவ கலை—சைவசித்தாந்த நூல்.

சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை யெனதுள மகிழ்வுற அருள்வாயே;

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
*முகுற †ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட-

விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும் வடிவேலா;

‡மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை யவிராலி-

மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு பெருமாளே. (கூ)

913. மெய்ம்மை உணர

தனதானன தனதானன தனதானன தனதானன
தனதானன தனதானன தந்ததான

குயிலோமொழி அயிலோவிழி கொடியோஇடை பிடியோநடை
குறியீர்தனி செறியீரினி யென்றுபாடிக்-

குனகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலையாவல்கு லளையாவிரு கொங்கைமீதிற்;

* முகுற—குமுற; எழுத்து நிலைமாறல்.
† கக பதி—கருடன்.
‡ மருது முறிபட்டது — பாடல் 143-பக்கம் 332 கீழ்க்குறிப்பு.

சுற்றித் திரிவது நல்லதென்று அவர்கள் வசப்பட்டு அவர்களைப் பின்பற்றி வழிபடுகின்ற நட்பும் போதும் போதும், (உனது) திருவருள் அலைகள் வீசும் கடலின் கால்களின் துறை வழியில் செல்லும் அறிவை என்னுடைய உள்ளம் மகிழ்ச்சிபெற அருள் புரிவாயாக,

(விருது) வெற்றிச் சின்ன முரசுகள் (பறைகள்) மொகு மொகு மொகு என்று (குமுற) பேரொலி செய்ய, கருடன் மேகம் விளங்கும் (உச்சியில்) ஆகாயத்தில் அகன்ற தனது இறகுகளைக்கொண்டு(பறையிட)வட்டமிட,பேய்கள் நடமாட-

தேவர்கள் ஹரஹர சிவசிவ சரணம் என்று ஒலி எழுப்பப், பொருந்திய சூரியனும், (இமம் முதிர்கரன்) பனி—குளிர் நிறைந்த கிரணங்களை உடைய சந்திரனும் வலம்வர, (வினை) தீச் செயலைக் கொண்ட அசுரர்கள் பொடிபட்டழியப் போர் செய்த கூரிய வேலனே!

மருதமரம் நெறு நெறு நெறு என்று முறிபடும்படி உருண்டு சென்ற உரலுடனே தவழ்ந்து சென்ற கண்ணபிரான்—திருமாலின்—மருகனே! (செவ் வனசம்) செந்தாமரை மலருகின்ற சுனையும், புலி நுழையும் குகையும் கொண்ட விராலி—

மலையில் வீற்றிருக்கின்ற ஆறுமுகனே! குருபரனே! கயல்மீன்களும், (மயிலை) 'மயிலை' எனப்படும் மீன்களும், (மகரமும்) மகர மீன்களும் (உகள்) தாவித் திரியும் செந்நெல் (வயல்களைக் கொண்ட ஊரில்) **வயலூர்ப்** பதியில் இறைவனே! திரு அருள் பாலிக்கும் பெருமாளே!

(அறிவினை...மகிழ்வுற அருள்வாயே)

913.

(உங்கள் பேச்சின் குரல்) குயிலின் குரலோ, உங்கள் கண் வேலோ, உங்கள் இடை கொடியோ, உங்கள் நடை—பெண் யானையின் நடையோ—இவ் வழகைத் தெரிந்து கொள்ளுங்கள், தனியாக வந்து நெருங்கிப் பழகுங்கள் இனி, என்றெல்லாம் (வேசையரைப்) புகழ்ந்து பாடிக்

கொஞ்சிப் பேசி, அவர்தம் காலைப் பிடித்தும், வாயிதழைக் கடித்தும், நகம் கொண்டு கீறியும், ஆடையைக் கலைத்தும், அல்குலைக் கலந்து திளைத்தும் (அனுபவித்தும்), இரண்டு கொங்கைகள் மீதிலும்—

பயிலாமன மகிழ்மோகித சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நினையாதுற நண்புகூரும்-
*பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணகர
பதிநேருநி னருளால் மெயு ணர்ந்திடேனோ ;
வெயில்வீசிய கதிராயிர †வருணோதய விருணசன
விசையேழ்பரி ரவிசேயெனு மங்கராசன்-
விசிகாகவ மயல்பேடிகை படுபோது‡சன் னிதியானவன்
விதிxதேடிய திருவாளிய ரன்குமாரா ;
oஅயலூருறை மயிலாபல கலைமானுழை புலி **தோல்களை
††யகிலாரம தெறிகாவிரி வண்டல்மேவும்-

---

* பசுபாசமும் அகிலாதிக...பதி — பதி அணுகில் பசுவும் பாசமும் ஒழிவனவாம்;

"பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாசம் நிலாவே"—(திருமந்திரம் 115)

† அருணன்—சூரியன் சாரதி ;

"அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்......"—திருவாசகம்—பள்ளியெழுச்சி :

‡ **போர்க்களத்தில் கர்ணனுக்குத் திருமால் தரிசனம் தந்தது**—போரில்—அருச்சுனன் எவின அம்பால் உயிர் தடுமாற்றம் அடைந்து கர்ணன் கலங்கும்போது கண்ணபிரான் ஒரு வேதியனாகிக் கர்ணனிடம் சென்று—நான் வறுமைப் பெருந்துயர் அடைந்துளேன்; உன்னால் கூடிய பொருளைக் கொடு எனக் கேட்கக், கர்ணன் உனக்கு வேண்டிய பொருள் எது என்றான். அப்போது கண்ணபிரான் 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக' என்றார். அங்ஙனமே கர்ணனும் தந்தனன். கண்ணபிரான் மகிழ்ந்து தனது தெய்விக உருவைக் கர்ணன் காணும்படி அருளினர்.

"போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரி மொண் டெழுந்த கார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்ச ஆயுதமும்
வயங்குகைத் தலங்களுமாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன்"
—வில்லிபாரதம் 17-ஆம் போர் 244.

[தொடர்ச்சி 663 ஆம் பக்கம் பார்க்க]

நெருங்கிப் பொருந்திப் பழகியும், மனம் களிப்பதற்கு இடமாயுள்ள வரும், (மோகிதம்) காம மயக்கச் சுகக் கடல் போலுள்ளவருமான மாதர்கள் — பகைத்து விலக்கத் தக்கவர்களே என்று நான் நினையாமல் இருப்பதற்கு ஆதரவை மிகக் காட்டும்

(பசு) ஜீவான்மா, (பாசம்) தளை—மும்மலக் கட்டு, (அகிலம்) ஆக எல்லாவற்றுக்கும் அதிகனே — மேம்பட்டவனே! நிறைபொருளே! (புரணம் ஆகர) ஒளிக்கு இருப்பிடமானவனே! கடவுளாகிய உன்னிடத்தில் (நேரும்) உள்ள திருவருளால் (மெய்)—உண்மைப் பொருளை நான் உணர மாட்டேனோ!

ஒளி வீசுகின்ற ஆயிரக் கணக்கான கிரணங்களை வீசுபவனும், உதய காலத்தில் இருளை ஒழிக்க வல்லவனும், (தன் தேரில் பூட்டபட்டனவும்) வேகமாகச் செல்ல வல்லனவுமான ஏழு குதிரைகளைக் கொண்டவனுமான சூரியனுடைய பிள்ளை எனப்பட்ட அங்க தேசத்து அரசனான கர்ணன்—

அம்புகள் நிறைந்த போரில், (அயல்)— தனக்குப் புறம்பாயிருந்த—பகையாயிருந்த (பேடி) அருச்சுனனுடைய—(கை) கை அம்பால் (படுபோது) இறந்து படும்போது (சன்னிதியானவன்) (அந்தக் கர்ணனுக்குப்) பிரத்யக்ஷமாய்த் தரிசனந் தந்தவனும் (திருமாலும்), (விதி) பிரமனும் ஆக இருவரும் தேடின — தனது அடிமுடியைத் தேடிய (திருவாளி) செல்வ நாயகனான (அரன்) சிவபிரானது குமரனே!

பக்கங்களில் உள்ள ஊர்கள் எல்லாவற்றிலும் வீற்றிருக்கும் மயில் வாகனனே! பலவகையான கலைமான், (உழை) பிறவகைய மான்(அல்லது பசு), புலி, யானைகளையும், அகில், சந்தனம், இவைகளையும் தள்ளி வீசிக்கொண்டுவரும் காவிரிநதியின் (வண்டல்) நீர்மண்டிய பொடிமண் உள்ளதும்,

---

தொடர்ச்சி :—x அடிமுடி தேடிய வரலாறு :
—பாடல் 319, பக்கம் 292; பாடல் 535-பக் 222 கீழ்க்குறிப்பு.

o அயலூர்—பக்கத்தில் உள்ள ஊர்கள்—
"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"—திருமுருகாற்.

[தொடர்ச்சி 664 ஆம் பக்கம் பார்க்க]

அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசுர
அமராபதி யதில்வாழ்பவர் தம்பிரானே. (௩௦)

914. கழல் பெற

தான தான தனத்தந் தான தான தனத்தந்
தான தான தனத்தந் தனதான

கோவை வாயி தழுக்குந் தாக போக மளிக்குங்
கோதை மாதர் முலைக்குங் குறியாலும்-
கோல் மாலை வளைக்குந் தோளி னாலு மணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்;
ஆவி கோடி யவிக்குஞ் சேலி னாலு மயக்குண்
டாசை யா*யினு நித்தந் தளராதே-
ஆசி லாத †மறைக்குந் தேடொ ணாதொரு வர்க்கொன்
றுடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே;
சேவி லேறு நிருத்தன் தோகை பாக ‡னளிக்குந்
xத்யாக சீல குணத்தன் திருமாலும்-
०தேடொ ணாத பதத்தன் ** தீதிலாத மனத்தன்
††தேயு வான நிறத்தன் புதல்வோனே;

[663-ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதுகையை நோக்கும்போது—அயிலூர்—என இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. அயிலூர்—வேலூர் எனப் பொருள்படும்.

०० தோல்—யானை.

†† ''களிற்றிள மருப்பொடு...சந்தமாரகிலொடு ...உந்துமா காவிரி''—சம்பந்தர் 3-91-2-

''மண்டிய வண்டல் மிண்டி வருநீர பொன்னி''
—சம்பந்தர் 2-83-4.

---

* இனும்—இன்னும்.

† ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே''—''அப் பெருமறை தேடிய அரும்பொருள்'' -திருவாசகம் 1-34; 41-3.

‡ ''உலகங் காக்க நின்ற கண்ணுதல்''—சம்பந்தர் 1-65-2.

x ''வரமும் ஆயிரம் உடையார்''—சம்பந்தர் 2-94-5.

[தொடர்ச்சி 665-ஆம் பக்கம் பார்க்க]

அதிக மனோகரமானதும் ஆன வயலூரில் உலவும் பராக்ரம சாலியே! முருகனே! ஈசுரனே! தேவர் தலைநகராம் அமராவதியில் வாழும் தேவர்கள் தம்பிரானே!

(நின் அருளால் மெய் உணர்ந்திடேனோ)

914

கொவ்வைக் கனிபோன்ற வாயிதழுக்கும், காம தாகத்தையும் இன்பத்தையும் கொடுக்கின்ற, — மாலை புனைந்துள்ள மாதர்களின் கொங்கைக்கும், பெண் குறியாலும் (அல்குலாலும்)—

அழகிய மாலையை வளையப் புனைந்துள்ள தோள்களாலும், வாசனை கொண்டதும், அழகாகச் சிக்கெடுத்து வாரி முடிக்கின்ற கூந்தலாலும்,

கோடிக்கணக்கான (ஆவி) உயிர்களை அழிக்கின்ற சேல்மீன் போன்ற கண்ணாலும், நான் காம மயக்கம் கொண்டு ஆசை பிறந்தவனாய் இனியும் தினந்தோறும் சோர்வு அடையாமல்—

குற்றமில்லாத வேதங்களாலும் தேடிக் காண முடியாத (ஒருவர்க்கு) சிவபிரானுக்கு (ஒன்று)ம் பொருந்திய (மனதுக்கு உவந்த) (ஆடல் தாள்கள்) வெற்றி பொருந்திய திருவடிகளை (அல்லது நடனப் பதங்களை) எனக்கு இன்று தந்தருளுக;

இடப வாகனத்தில் ஏறும் நடன மூர்த்தி, மயிலனைய பார்வதி தேவியைப் பாகத்திற் கொண்டவன், காத்தளிக்கும் கொடையருட்குணம் கொண்ட தூய ஒழுக்கமான குணங் கொண்டவன், திருமாலும்

தேடமுடியாத திருவடியை உடையவன், தீமையே இல்லாத மனத்தை உடையவன், நெருப்பின் நிறம் உடையவன்—ஆய—சிவனது குமாரனே!

[664-ஆம் பக்கத் தொடர்ச்சி]

o "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை" —திருவாசகம் 11-1.

oo "நன்றுடையானைத் தீயதில்லானை"—சம்பந்தர் 1-98-1.

†† அழல் திகழ் நிறத்தர்—1-78-5.

காவிடாத திருச்செங் கோடு நாடு தனக்குங்
காவி சூழ் வயலிக்கும் ப்ரியமானாய்-
காதி மோதி யெதிர்க்குஞ் சூர தீரர் ப்ரமிக்குங்
கால னுடல் தவிர்க்கும் பெருமாளே. (கக)

915. அன்பை மறவேன்

தானன தனத்த தானன தனத்த
தானன தனத்த தனதான

*தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பி லடியேனைத்-
தாதவிழ் கடுக்கை நாக மகிழ் கற்ப
தாருவென †மெத்தி யவிராலி ;
மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவென அழைத்தென் மனதாசை-
மாசினை யறுத்து ஞானமுத வித்த
வாரமினி நித்த மறவேனே ;
காமனை யெரித்த தீநயன நெற்றி
‡காதிய சுவர்க்க நதிவேணி-
கர்னிலுறை xபுற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா ;
சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலையுடை சுற்று வயலூரா-

---

* முதல் நான்கு அடிகள் அருணகிரிநாதரின் வரலாற்றை விளக்குகின்றன.

† மெத்திய—மிகுந்த.

‡ **காதிய சுவர்க்க நதி** : அழிக்க வல்ல வேகத்துடன் வந்த ஆகாச கங்கை—(பாடல் 446-பக்கம் 622-கீழ்க்குறிப்பு.)

"இதுவோர் நீத்தம்...யாண்டும் கல்லென விரைத்தி யாரும் முடிவுறு திறத்தால் அண்டம் முழுவதுங் கவர்ந்த முன்னாள் விடமெனப் பரித்தே ஈது விமல நீ காத்தி என்றார்"; "மேதினி அண்ட முற்றும் விழுங்கிய கங்கை"—கந்தபுராணம் 6-13-371, 373.

x "புற்றில் நாகம் அணிந்தவன்"—சம்பந்தர் 3-5-7.

பணியிட்ட காது : (பாம்பே குழையும், தோடும் சிவனுக்கு) 'படந்தாங்கிய அரவக் குழைப் பரமேட்டி'—சம்பந்தர் 1-9-3. "தோடரவத் தொரு காதன்"—1-62-2.

சோலைகள் (நீங்காத) நிறைந்த திருச் செங்கோடு ப்ரதேசத்திலும், கருங்குவளை மலரும் (நீர் நிலைகள்) சூழ்ந்துள்ள **வயலூரிலும்** பிரியங் கொண்டுள்ளவனே!

கொன்று மோதி எதிர்த்துப் போர் புரியும் சூர தீரர்கள் எல்லாம் பிரமிக்கும்படியான பெருமாளே! காலனுடைய கூத்தைக் (கொல்லுந் தொழிலை) அவனுக்கு இல்லாமற் செய்த — காலனுக்கு வேலை யில்லாதபடித் தானே (அசுரர்களின்) உயிரை மாய்த்த—பெருமாளே!

(ஆடல் தாள்கள் எனக்கின் றருள்வாயே)

915.

தாமரையின் நிரம்ப நறுமணமுள்ள மலருக்கு ஒப்பான (உனது) திருவடி யிரண்டின் நினைப்பே இல்லாத அடியேனை

"மகரந்தப்பொடி விரியும் கொன்றை, சுரபுன்னை, மகிழமரம் இவைகள் கற்பக விருக்ஷங்கள் என்னும்படியாக நிறைந்துள்ள விராலி என்கின்ற

பெருமை வாய்ந்த (அல்லது அழகிய) மலையில் யாம் வீற்றிருக்கின்றோம்; நீ (அத்தலத்தை) நினைப்பில் வைத்து வருவாயாக" எனக் கூறி அழைத்து என்னுடைய மனத்தில் உள்ள ஆசைகள்,

குற்றங்கள் இவைகளை (அல்லது—ஆசை என்கின்ற குற்றத்தை) ஒழித்து ஞான அமுதப் பிரசாதத்தைத் தந்த (உனது) அன்பை இனி எந்நாளும் மறக்கமாட்டேன்;

மன்மதனை எரித்த நெருப்புக் கண்ணையுடைய நெற்றியையும், (காதிய) எவற்றையும் அழிக்க வல்லதாய்ப் பாய்ந்து வந்த ஆகாய கங்கையைச் சூடியுள்ள சடையையும்,

காட்டில் இருக்கும் புற்றில் படமெடுத் தாடுகின்ற பாம்பை அணிந்துள்ள காதையும் கொண்ட அப்பர்— சிவபிரானுக்குக்—குருநாதனே!

சந்திரனொடு சூரியனும் நக்ஷத்திரங்களும் உலவுகின்ற (அளவுக்கு) உயர்ந்த சோலை, பக்கங்களிற் சுற்றியுள்ள (சுற்றுப் பக்கங்களில் உள்ள), **வயலூரனே!**

சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த பெருமாளே. (கஉ)

916. திருவுருவை மறவேன்

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான

*திருவு ரூப நேராக அழக தான மாமாய
திமிர மோக மானார்கள் கலைமூடுஞ்-
†சிகரி யூடு தேமாலை யடவி யூடு போயாவி
செருகு மால னுசார வினையேனைக்;
கருவி மூது சிரோதி யடிமை பூண லாமாறு
‡கனவி லாள்சு வாமிநின் மயில்வாழ்வுங்-
கருணை வாரி கூரேக முகமும் வீர மாரு த
கழலு நீப வேல்வாகு மறவேனே;
சருவ xதேவ தேவாதி நமசி வாய நாமாதி
சயில நாரி பாகாதி புதல்வோனே-
oசதம கீவல் போர்மேவு குலிச பாணி மால்யானை
சகச மான சாரிசெ யினையோனே;

---

* 'இந்திரையுஞ் சரி சொல ஒணாத மடந்தையர்'-திருப்புகழ் 23.

† கொழுமணி யேர் நகையார் கொங்கைக் குன்றிடைச்
சென்று குன்றி விழும் அடியேனை''—திருவாசகம் 6-27.

''குழற்காட்டில் கண்ணிவைப்போர் மாயங் கடக்கு நாள் எந் நாளோ'' தாயுமானவர். திருப்புகழ் 934-அடி 3-ம் பார்க்க.

‡ அருணகிரியாரின் வரலாறு கூறுவது இது: ஏகமுகத்துடன் முருகவேள் மயில் வாகனத்தின் மீது கடப்ப மாலையும் வேலாயுதமும் விளங்கத் தமது கனவில் வந்து தம்மை ஆண்டதைக் குறிக்கின்றது.

x 'தேவதேவன்', 'நமசிவாய', இவை சிவபிரானுடைய திருநாமங்களைக் குறிப்பன :—

''ஏரார் இளங்கிளியே...திருநாமம் தேர்ந்துரையாய்...
எம்பெருமான் தேவர் பிரான்''—திருவாசகம்-தசாங்கம்.
''தேவ தேவன் மன்னும் ஊர் திருந்து காழி சேர்மினே''
—சம்பந்தர் 2-97-2.
''நக்கர்தம் நாமம் நமச்சிவாய என்பார் நல்லரே''
—சம்பந்தர் 3-9-9.

o சதமகன்—இந்திரன்—பாடல் 232-பக்கம் 82.

(தடக்கை சூடிய வேல்கொடு) அகன்ற திருக்கரத்தில் ஏந்திய வேல் கொண்டு — அதைச் செலுத்தி — சூரனது தலையை வெட்டித் துணித்த பெருமாளே!

(ஞானமுதளித்த வாரமினி நித்த மறவேனே)

916.

லக்ஷ்மியினுடைய உருவத்துக்கு நிகரான அழகைக் கொண்ட மகா மாய இருளான காம இச்சையை ஊட்டும் (மான் அன்ன) பொது மாதர்களின் ஆடை மூடியுள்ள—

மலை (கொங்கை)யிற் சம்பந்தப்பட்டும், இனிய பூமாலை அணிந்துள்ள அடவி—காடு (கூந்தலிற்) சம்பந்தப்பட்டும், (ஆவி போய் செருகும்)—உயிரே போய்ச் சிக்கிக் கொள்ளும் (மால்) காம மயக்கம் உள்ள (அனுசார வினையேனை) ஒழுக்கம் இல்லாத தொழிலனாகிய என்னைக்

கருவில் (பிறப்பில்) விழாத வண்ணம் (சீரோதி) உன்னுடைய (சீர்) திருப்புகழை நான் ஓதி (அல்லது சீர்—சிறப்பான பொருளை நீ உபதேசித்து) உனக்கு அடிமை பூணும் வகை வரும்படி எனது கனவில் (வந்து) ஆண்டருளிய சுவாமியே! மயில்மேல் வீற்றிருக்கும் (நின்) உனது (வாழ்வும்) திருவோலக்க தரிசனத்தையும்

கருணைக்கடல் போல மிக்க ஒளிவீசும் உனது ஒற்றைத் திருமுகத்தையும், வீரம் என்றும் (மாறுதலில்லாத) நீங்காத உனது திருவடியையும், கடம்பையும், வேல் ஏந்திய திருப்புயத்தையும் (அல்லது வேல் அழகையும்) நான் மறவேன்;

எல்லாத் தேவர்களுக்கும் தேவனாய் விளங்குபவனும், ஆதிப்பிரானும், 'நமசிவாய' என்னும் திருநாமத்தை உடைய முதல்வனும், மலைப் பெண்ணும் பார்வதி பாகனாகிய முதல்வனுமான சிவபிரானது குமாரனே!

நூறு மகங்களை யாகங்களை முடித்த-ஆற்றலுடையவனும், வலிய போரில் ஊடாடுபவனுமான வஜ்ராயுதகரன் (இந்திரனுடைய) பெரிய ஐராவதம் என்னும் யானையின்மீது (சகசமான—சகஜமான வழக்கமான — உரித்தான, (சாரீ) உலாவுதல் செய்யும் ஓடுதலைச் (சவாரி) செய்யும் இளைஞனே!

மருவு லோக மீரேழு மளவிடாவொ ணுவான
வரையில் *வீசு தாள்மாயன் மருகோனே-
†மநு நியாய சோணாடு தலைமை யாக வேமேலை
வயலி மீது வாழ்தேவர் பெருமாளே. (கரு)

917. திருவடியை மறவேன்

தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா தனதான

‡நெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பத்ம நறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ பிணையோ இனிதூறும்-
நெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ அறவேதெய்ந்;
தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்-
இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ந பரிபுர xஇருகா லொருகால் மறவேனே;
०புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகஏ டுயவே உமையாள் தன்-

---

* திருமால் உலகளந்தது :
—பாடல் 268-பக்கம் 166-பாடல் 458 பக்கம் 24-கீழ்க்குறிப்பு.

† மநு நியாய சோணாடு : மநுநீதிச் சோழன் நீதியோடும் ஆண்ட சரிதத்தை நினைப்புப் படுத்துவது இது :
—பாடல் 825-பக்கம் 426 கீழ்க்குறிப்பு.

‡ 151-ஆம் திருப்புகழ் முதல் இரண்டடிகள் போல அமைந்துள்ளன இப் பாடலின் முதல் மூன்றடிகள்.

x "நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்"—என்னும் திருமுருகாற்றுப் படைத் தனிப் பாடலை இது நினைவூட்டுகின்றது.

० சம்பந்தர் லீலை—பாடல் 181-பக்கம் 420-பாடல் 841-பக்கம் 466-கீழ்க்குறிப்பு. [தொடர்ச்சி 671 ஆம் பக்கம் பார்க்க]

பொருந்திய உலகங்கள் பதினுன்கினும், அளவிடுதற்கு முடியாத எல்லை அளவுக்குத், (தனது) தாள்வீசு மாயன்— திருவடியை நீட்டின (மாயன்) திருமாலின் மருமகனே!

மநுநீதிச் சோழன் நீதியொடு ஆண்ட சோழநாடு சிறந்த நிலையை அடையும் பொருட்டே **மேலை வயலூர்** **என்னும்** தலத்தில் வந்து வாழும் பெருமாளே! வாழும் தேவர்களுக்குப் பெருமாளே!

(கழலு நீப வேல் வாகும் மறவேனே)

917.

எண்ணெய் நெய்ப்பு கொண்டதும், சுருண்டுள்ளதுமான கூந்தலானது கருமணலோ, மேகமோ! தாமரை மலரின் நறுமணம் வீசும நெற்றியானது வில்லோ, பிறைச் சந்திரனே! நீண்ட இரு கண்களும் அம்போ, மானே! இனிப்புடன் ஊறி—

நெகிழ்ந்து வரும் வாயூறலாம் அமுதத்தைத் தரும் இதழ்வாய் கொவ்வைக் கனியோ, பவளமோ! பரிசுத்தமான கழுத்தானது சங்கோ, கமுகோ! தாழாது நிற்கின்ற இள முலையானது குடமோ, மலையோ! அடியோடு தேய்ந்துபோய்

இளைத்துள்ள இடையானது கொடியோ, உடுக்கையோ! சிறந்த அழகிய (அரை) அல்குலானது பாம்போ, தேரோ! இந்த அழகிய அடி யிரண்டும் மலரோ, தளிரோ! என்றெல்லாம் மோகம் கொண்டவனுய்—

காம இச்சையுடன் பெண்களுடனே (செப்ப) பேசுதற்கு வேண்டி, அந்த மயக்கமாகவே (அல்லது செப்பம் செவ்வையான—பூரணமான—மயக்கத்துடனே) (அவமே) வீணுகத் திரிகின்ற நான் ரத்னச் சிலம்பணிந்த உனது இரண்டு திருவடிகளையும் ஒருகாலும் மறக்க மாட்டேன்;

புத்தர்கள், சமணர்கள், மிகவும் அழிவுற, தெற்கு (பாண்டி நாட்டு) அரசன் திருநீறு இட, இடப்பட்ட (அனல் வசம்) நெருப்பினிடையே நல்ல வண்ணம் ஏடு (எரிபடாது பச்சையாய்) ஊறு இலாது விளங்க, உமை யம்மையின்

"புக்க அனல் புனல் திரு ஏ டயவே" என்றும் பாடம்.
—பாடல் 500-அடி 5-ம் பார்க்க.

*புத்ர னென இசை பகர் நூல் மறை நூல்
கற்ற தவமுனி †பிரமா புரம்வாழ்
பொற்ப ‡கவுணியர் பெருமா னுருவாய் வருவோனே ;

x சத்த முடையஷண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா oயுளையா யொளிகூருஞ்-

சக்ர தரஅரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
** தட்ப முளதட **வயலூ** ரியலூர் பெருமாளே. (கச)

918. வேசையர் உறவு அற

தனன தத்தன தானன தானன
தனன தத்தன தானன தானன
தனன தத்தன தானன தானன தனதான

மூலம றைக்கவும் வாசலி லேதலை
மறைய நிற்கவும் ஆசையு ளோரென
முகிழ்ந கைச்சிறு தூதினை யேவவு முகமோடே-

முகம ழுத்தவும் ஆசைகள் கூறவு
நகம ழுத்தவும் லீலையி லேயுற
முறைம சக்கவும் வாசமு லாமல ரணைமீதே ;

கலைநெ கிழ்க்கவும் வாலிப ரானவர்
உடல்ச ளப்பட நாள்வழி நாள்வழி
††கறைய ழிக்கவு நானென வே‡‡யணி விலையீதே-

* "புத்ரன் என உரை நுகர்வோன்"—என்றும் பாடம்.
† பிரமாபுரம்—சீகாழி—பாடல் 773-பக்கம் 301 கீழ்க்குறிப்பு.
‡ சம்பந்தர்—கவுணியர் கோத்திரம்—
"கவுணியர் கோத்திரம் விளங்கச் செப்பு நெறி
வழிவந்தார் சிவபாத இருதயர்"—பெரியபுரா-சம்பந்தர்-15.
x சத்தம்—சக்தம்.
o "ஏறூர்ந்தான் ஏறே உளையாய் என் உள்ளத்துறை"
—திருமுருகா-தனிப்பாடல்.
oo தட்பம்—குளிர்ச்சி.
†† கறை—ரத்தம்—"புறங்கறை யொழுகு செம்புண்"
—(பிரபுலிங். துதி-15)
‡‡ அணி—அண்ணி : சார்ந்து.

பிள்ளையென்று சொல்லும்படி, இசைத்தமிழால் சொல்லப்பட்ட நூலை, வேதம் அனைய நூலை உணர்ந்து (திருநெறித் தமிழ் என்கின்ற தேவாரத்தை) ஓதிய தவமுனியே! பிரமாபுரம் என்று பேருள்ள சீகாழியில் வாழ்ந்த அழகனே! கவுணியர் குலத்துப் பெருமான் என்னும் திருவுருவத்துடனே வந்தவனே!

(சத்தம்) சக்தம்—சக்தி வாய்ந்த ஆறுமுகனே, குகனே! (வெற்பில் அயிலா! எறிசுடர் அயிலா) மலைகளில்வீற்றிருக்கும் வேலனே! சுடர் எறி அயிலா—ஒளிவீசும் வேலாயுதனே! அல்லது, வெற்பில்—எறிசுடர் அயிலா—(கிரௌஞ்ச) மலைமீது விட்ட ஒளிவேலனே! மயில்வாகனனே! சக்திவாய்ந்த கணபதிக்குத் தம்பியே! (உளையாய்) என்றும் எங்கும் உள்ளவனே (அல்லது அழிதல் இல்லாதவனே)!—ஒளி மிக வீசும்

சக்ராயுதத்தை ஏந்திய திருமாலின் மருகனே! முருகனே! உக்ர மூர்த்தியாகிய இறைவன்—சிவனது—புதல்வனே! முதல்வனே! குளிர்ச்சி பொருந்திய (தடம்) நீர் நிலைகள் உள்ள வயலூரில் தகுதியுடன் வீற்றிருக்கும் பெருமாளே!

(இருகால் ஒருகால் மறவேனே)

918.

கொங்கையை மறைக்கவும், ஒரு வாசற்படியருகில் தலை மறையும்படி நிற்கவும், ஆசை கொண்டுள்ளார் போல புன்னகை என்கின்ற ஒரு சிறிய தூதை அனுப்பவும், முகத்துடனே

முகத்தை (வைத்து) அழுத்தவும், ஆசை மொழிகளைப் பேசவும், நகங்கொண்டு அழுத்தவும், காம லீலையிற் பொருந்துமாறு மாமா, அத்தான் என உறவு முறை கூறி மயக்கவும், நறுமணம் உலவும் மலர்ப் படுக்கையின் மேலே—

ஆடையை நெகிழ்ச்சியுறச் செய்தும், இளைஞர்களாயுள்ளோர்களின் உடலானது (சளப்பட) துன்பப்படும்படி, நாள்போக நாள்போக — வரவரக் — (கறை அழிக்கவும்) அவர்களது — ரத்தத்தைக் கெடச்செய நானுள்ளேன் என்பது போல (அண்ணி) சார்ந்து நெருங்கி (எனக்குத் தரவேண்டிய) பொருள் இதுவே—

கடிய சத்திய மாமென வேசொலி
யவர்கொர் டப்பண மாறிட வீறொடு
கடுக டுத்திடு வாரொடு கூடிய **தமையாதோ;**
மலையை மத்தென வாசுகி யேகடை
கயிறெ னத்*த்திரு மாலொரு பாதியு
மருவு மற்றது வாலியு மேலிட அலையாழி-
வலய முட்டவொ ரோசைய தாயொலி
திமிதி மித்திமெ னுவெழ வேயலை
மறுகி டக்கடை யாவெழ மேலெழு மமுதோடே;
†துலைவ ருத்‡திரு மாமயில் வாழ்வுள
வயலை யற்புத னேவிணை யானவை
தொடர றுத்திடு மாரியx கேவலி மணவாளா-
துவள்க டிச்சிலை oவேள்பகை வா**திரு
மறுவொ ரெட்டுட னுயிர மேலொரு
துகள றுத்தணி யாரழ காசுரர் பெருமாளே. (கரு)

---

* **திருமாலும் வாலியுமாகக் கடல் கடைந்தது :**
—பாடல் 122-பக்கம் 288-கீழ்க்குறிப்பு, பாடல் 956-ம் பார்க்க.
(வாலி...) "தேவர் வேண்ட வேலையை விலங்கல் மத்தில்
சுற்றிய நாகம் தேய அமுதெழக் கடைந்த தோளான்"
—கம்ப ராமா-உருக்காட்டு 30.

இந்திரன் முதலிய தேவர்கள் கடைவதற்குச் சக்தி யில்லாது மயங்கினபொழுது—வாலி உதவினன்.

"பெயர்வுற வலிக்கவும் மிடுக்கில் பெற்றியார்
அயர்வுறல் உற்றதை நோக்கி யானது
தயிரெனக் கடைந்தவர்க் கமுதந் தந்தவும்
மயிலியற் குயில்மொழி மறக்க லாவதோ"
—கம்பராமா-வாலிவதை-18.

† துலை வரு—ஒப்பாக வந்த.

‡ திரு மா மயில்—லக்ஷ்மி. கடல் கடைந்தது; அமுதுடன் லக்ஷ்மி தோன்றினது—பாடல் 604-பக்கம் 396.

x கேவலி—முத்தியைத் தரவல்ல தெய்வயானை. தேவசேனை—முத்திமாது--பாடல் 764-பக்கம் 276 கீழ்க்குறிப்பு.

o வேள் பகைவன் — மன்மதன் தரத்தக்க சிற்றின்பத்துக்கு எதிரிடையாகிய பேரின்பத்தைத் தருபவன்.

** திரு மறு—சிறப்பான மச்சரேகை. ஆயிரத்தெட்டு மறு: இது இறைவனுக்கு ஓர் அழகு—உத்தம லக்ஷனம். ஜைன மூர்த்திக்கும் இது உண்டு. 'மார்பிற் செம்பொறி'—திருமுருகா-104.

[தொடர்ச்சி 675 ஆம் பக்கம் பார்க்க]

(நான் கூறுவது) கண்டிப்பான உண்மை மொழியாம்—என்றெல்லாம் சொல்லி அவர்கள் கொடுத்து வருகின்ற அந்தப் பணம் (மாறிட) வருதல் இல்லாது மாறியவுடன் அல்லது ஆறிட—குறைய, (வீறுடு) வெறுப்பும் கர்வமும் கலந்த மனப் பன்மையோடு (கடுகடுத்திடுவாரொடு) சிடுசிடு என்று சினந்து பேசுபவரோடு சேர்ந்து ஒழுகினது (இனியேனும்) முடிவு அடையாதோ!

(மந்தர) மலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் பாம்பைக் கடைகின்ற கயிறாகக் கொண்டு, திருமால் ஒரு பாதிப்புறமும், பொருந்திய மற்றொரு பாதிப் புறத்தை வாலியுமாக முற்பட்டு, அலை வீசும் கடலை—

பூவலய முழுமையும் (பூமிவட்டம்) முழுமையும்) ஒரே பேரொலியாய்ச், சப்தம் திமி திமித்தெம் என்று கிளம்பவும், கடல் கலங்கவும் கடைதலை மேற்கொள்ள, (அப்போது) மேலே எழுந்த அமுதுடனே

ஒப்பாக வந்த திருமாமயில்—மயிலனைய லக்ஷ்மியின், வாழ்வுள-வாழ்க்கைக்கு இடமான-லக்ஷ்மீகரம் விளங்குகின்ற-வயலூரில் அற்புத மூர்த்தியே! (அல்லது (திரு) அழகிய லக்ஷ்மியின் (மாமயில்) சிறந்த மயிலனைய மகளான வள்ளியின் (வாழ்வுள) வாழ்வுக்குப் பங்காளனை **வயலூர்** அற்புத மூர்த்தியே! வினைகளின் (தொடர்) தொடர்கை (தொடருவதை) அறுத்தெறியும்-(ஆரிய) அழகு-மேன்மை இவை கொண்ட (கேவலியின்) முத்தியைத் தரவல்ல தேவசேனையின் மணவாளனே!

(துவள்) வளைந்துள்ள (கடி) புதுமை வாய்ந்த (அல்லது சிறப்புள்ள) (சிலை) கரும்பு வில்லைக் கொண்ட (வேள்) காம வேளாம் மன்மதனுக்குப் (பகைவா) எதிரியாய் அவன் தரும் சிற்றின்பத்துக்கு எதிரான பேரின்பத்தைத் தரும் செவ்வேளே! அழகிய (மறு) மச்சரேகை ஆயிரத்தெட்டு மேலாகக்கொண்டு, ஒப்பற்ற குற்றமெலாம் அறுத்தெறியும் அழகைக் கொண்ட அழகனே! தேவர்கள் பெருமாளே!

(கடு கடுத்திடு வாரொடு கூடிய தமையாதோ)

"செம்பொன் வரைமேல் பசும்பொன் எழுத்திட்டதே போல்
அம்பொன் பிதிர்வின் **மறுஆயிரத் தெட் டணிந்து**
வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி விண்ணோர்
அம்பொன் முடிமேல் அடித்தாமரை சென்னி வைப்பாம்"- சிந்தா. 2.

919. வேசையர் மீது ஆசை அற

தானன தனத்தத் தாத்த, தானன தனத்தத் தாத்த
தானன தனத்தத் தாத்த தனதான

மேகலை நெகிழ்த்துக்*காட்டி வார்குழல் விரித்துக் காட்டி
வேல்விழி புரட்டிக் காட்டி யழகாக-
மேனியை மினுக்கிக் காட்டி நாடக நடித்துக் காட்டி
வீடுக ளழைத்துக் காட்டி மதராசன்;
ஆகம முரைத்துக் காட்டி வாரணி தனத்தைக் காட்டி
யாரொடு நகைத்துக் காட்டி விரகாலே-
ஆதர மனத்தைக் காட்டி வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக் காட்டி யழிவேனோ;
மோகன விருப்பைக் காட்டி †ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா-
‡மூவுல களித்துக் காட்டி சேவலை யுயர்த்திக் காட்டு
x ஊரிவில் மதற்குக் காட்டு வயலூரா;

---

* "காட்டி, காட்டி" என வரும் பிற பாடல்களின் எண் :— 90, 446, 905, 1175, 1257.

† ஞானமும், தமிழும் அகத்தியருக்கு முருகவேள் உபதேசித்தது :—

"செந்தமி ழென்னும் திருத்தகு பாடை
தந்தருள் ஞானமுந் தந்தரு ளென்றான்"
"செழுந்தமி ழுஞ்சிவ ஞானமும் வேட்பின்
எழுந்துயர் காவி யிருங்கிரி யண்மின் தழுந்தா முண்டு"
"வேலிறைவன் இயம்பிய ஞான முற்றுணர்ந்து
......பொதியம் அடுத்து முத்தமிழை வளர்த்து
வாழ்ந்திருந்தனன் முனிவன்"

—தணிகைப்புரா-அகத்தியன் 4, 5, 512.

‡ "சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே"

—குறுந்தொகை-கடவுள் வாழ்த்து.

x மன்மதன் வில்லின் வன்மைக்குத் தம்மை ஒரு குறிப் பொருளாக உலகுக்குக் காட்டினார் முருகவேள்—காமன் வில்லினாற் படுபவர்கள் எவ்வாறு துடிப்பார்கள் என்பதைத் தாமே வள்ளிபாற் செய்த லீலைகளிற் காட்டினார்—

[தொடர்ச்சி 677-ஆம் பக்கம் பார்க்க]

919.

அணிந்துள்ள (மேகலை) இடையணியை தளர்த்திக் காட்டி, நீண்ட கூந்தலை விரித்துக் காட்டி, வேல் போன்ற கண்களைப் புரட்டிக் காட்டி, அழகு பொலியும்படி—

(மேனியை) உடலை மினுக்கிக் காட்டி, கூத்துக்களை நடித்துக் காட்டித், தமது வீடுகளுக்கு அழைத்துக் காட்டி, மன்மத ராஜனுடைய

சாத்திர நூலை (கொக்கோக சாத்திரத்தை) விளக்கி எடுத்துரைத்துக் காட்டி, ரவிக்கை அணிந்த கொங்கையைக் காட்டி, எல்லாருடனும் சிரித்துக் காட்டி, உபாய வகையிலே (தந்திர வகையாலே)—

அன்பு வைத்துள்ளது போன்ற தமது மனத்தைக் காட்டி—(இங்ஙனம் எல்லாம்) வேசையர்கள் காம மயக்கம் ஊட்ட, நான் எனது ஆசையை அவர்களிடம் காட்டி அழிந்துபோகக் கடவனோ!

ஆசை மிக்க விருப்பத்தைக் காட்டி (விருப்பத்துடனே) ஞான சாத்திரங்களை விரித்து எடுத்து உரைத்துக் காட்டி, பழந்தமிழ் வல்ல அகத்திய முநிவருக்கு அந்த ஞானத்தைக் (கூட்டுவித்த) உபதேசித்த குருநாதனே! (அல்லது—ஞானமும் காட்டி, பழந்தமிழை (அதன் இலக்கணம் முதலியவற்றை) அவருக்குத் தெளிவித்த குருநாதனே)!

மூன்று உலகங்களையும் காத்துக் காட்டி, சேவற் கொடியை உயர்த்திக் காட்டும் வயலூரனே! (மூரி) வலிமை கொண்ட (கரும்பு) வில்லை மன்மதனுக்கு படையாகத் தந்து உதவின **வயலூர்ப்** பெருமானே! (அல்லது—மூரிவில் வலிமை கொண்ட (கரும்பு) வில்லை ஏந்தின மன்மதனுக்கு (காட்டு) குறிப் பொருளாக இருந்த வயலூர் முருகனே! (மன்மதனுடைய வில்லின் வலிமை எவ்வளவினது என்று உலகோர் தெரிவதற்கு—முருகவேள் வள்ளிபால் கொண்ட மையலே ஒரு எடுத்துக் காட்டாக—இருந்தது என்றபடி)

(தொடர்ச்சி) :—''கன்று காமநோய்க் கவலை யுள்வைத்தான்;
''மையல் மானுட வடிவந் தாங்கினன்;
''கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றே அறுமுகன் ஆடல் எல்லாம்''

[தொடர்ச்சி 678 ஆம் பக்கம் பார்க்க]

வாகையை முடித்துக் காட்டி கானவர் சமர்த்தைக் காட்டி
*வாழ்மயில் நடத்திக் காட்டு மிளையோனே!

மாமலை வெதுப்பிக் காட்டி தானவர் திறத்தைக் காட்டி
வானவர் சிரத்தைக் காத்த பெருமாளே. (கசு)

920. வேசையர்மீது மயக்கு அற

தான தனதன தந்தன தந்தன
தான தனதன தந்தன தந்தன
தான தனதன தந்தன தந்தன தனதான

வாளின் முனையினு நஞ்சினும் வெஞ்சம
ராஜ நடையினு மம்பதி னும்பெரு
வாதை வகைசெய்க ருங்கணு மெங்கணு மரிதான-

வாரி யமுதுபொ சிந்துக சிந்தசெ
வாயு நகைமுக வெண்பலு நண்புடன்
வாரு மிருமெனு மின்சொலு மிஞ்சிய பனிநீருந்;

தூளி படுநவ குங்கும முங்குளி
ரார மகில்புழு கும்புனை சம்பரம
சோதி வளர்வன கொங்கையு மங்கையு †மெவரேனுந்-

தோயு மளறெனி தம்பமு முந்தியு
மாயை குடிகொள்கு டம்பையுள் மன்பயில்
தூலி யரையெதிர் கண்டும ருண்டிட லொழிவேனோ;

‡காளி திரிபுரை யந்தரி சுந்தரி
நீலி கவுரிப யங்கரி சங்கரி
காரு ணியசிவை குண்டலி சண்டிகை த்ரிபுராரி-

[677 ஆம் பக்கத் தொடர்ச்சி]
"மாமடல் ஏறி நம்மூர்த் தெருவதனில்
ஒட்டுவேன் இது நாளையான் செய்வதென் றுரைத்தான்"
"குமரற் கிது திருவிளை யாடல் போலாம்"
"வேட்கை புகன்று...மாயைகள் செய்தேம்"
—கந்தபுரா 6-24-64, 65, 73, 136, 160, 248.

---

* **மயில் நடத்திக் காட்டியது**:-பாடல் 267-பக்கம் 164-குறிப்பு.

† 'எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை' பட்டினத்தார்.

‡ தேவியின் துதி நிரம்பவரும் பாடல் இது; இது போன்ற பாடல்களின் எண்—23, 337, 434, 464, 526, 1001, 1129, 1133.

(வாகையை) வேடர்களுக்குத் தெரியாதவாறு வள்ளியைக் கவர்ந்ததால்— தமது வெற்றியைக் காட்டிக், (கானவர்) வேடர்களின் திறம் (தமது திறத்தின் முன்பு எவ்வளவு சிறிது என்பதைக் (காட்டி) தெரிவித்து— நல்வாழ்வு பெற்ற (சூரனும்) மயிலை (உலகெலாம்) நடத்திக் காட்டின இளையோனே!

பெரிய கிரவுஞ்சமலை வெந்து போம்படிச் செய்து காட்டி, அசுரர்களுடைய திறமையெல்லாம் இவ்வளவுதான் என்பதையும் காட்டித், தேவர்களுடைய தலையைக் காத்த பெருமாளே! (தேவர்களின் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்—என்றபடி).

(ஆசையை அவர்க்குக் காட்டி அழிவேனோ!

920.

வாலின் நுனியைக் காட்டிலும், விஷத்தைக் காட்டிலும், கொடிய யமராஜனுடைய தொழிலைக் காட்டிலும், அம்பைக் காட்டிலும், பெருத்த வேதனை வகைகளைச் செய்கின்ற கரிய கண்ணும், எங்கும் கிட்டுதற்கு அரிய

கடல் அமுது வெளிப்பட்டு வடியும் செவ்வாயும், சிரித்த முகமும், வெண்மைநிறப் பல்லும், நட்பைக் காட்டி 'வாரும், இரும்' எனக் கூறுகின்ற இனிய மொழியும், மிகுந்த பன்னீரும்—

பூந்தாதுடன், புதிய செஞ்சாந்தும், குளிர்ச்சிதரும் சந்தனமும், அகிலும், புனுகு சட்டமும் அணிகின்ற ஆடம்பரத்துடன் கூடிய ஒளி பெருகுவதான கொங்கையும், அழகிய கையும், யாராயிருந்த போதிலும் (வந்து)

தோய்கின்ற சேறு என்னத்தக்க அல்குலும், கொப்பூழும், உலகமாயை குடிகொண்டுள்ள (இந்த) உடலில் நன்கு காலங்கழிக்கும் (சூளையரை) வேசியரை எதிரே கண்டு மருட்சி நான் அடைதலை (நான் மயங்குவதை) ஒழிக்க மாட்டேனோ!

காளி, (திரிபுரை) [மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள்] [அந்தரி] பராகாசவடிவை உடையவள், [சுந்தரி] அழகி, [நீலி] கரியநிறத்தி—சாகினி, கவுரி, பயங்கரி [பயத்தைத் தருபவள்—பயத்தைப் போக்குபவள்], சங்கரி, கருணை நிறைந்த சிவாம்பிகை, [குண்டலி] சுத்தமாயையாம் சத்தி, [சண்டிகை] துர்க்கை, திரிபுரத்தைப் பகைத்து எரித்த சிவனது,

காதல் மனைவிப ரப்பரை யம்பிகை
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை
கான நடனமு கந்தவள் *செந்திரு அயன்மாது;
வேளி னிரதிய ருந்ததி யிந்திர
தேவி முதல்வர்வ ணங்குத்ரி யம்பகி
மேக வடிவர்பின் வந்தவள் தந்தரு ளிளையோனே-
†வேலு மயிலுநி னைந்தவர் தந்துயர்
தீர வருள்தரு கந்தநி ரந்தர
மேலை வயலையு கந்துள நின்றருள் பெருமாளே. (கஎ)

921. முத்தி பெற

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தத்தத்த தத்ததன தத்தத்த தத்ததன
....
.... தந்ததான

விகட பரிமள ம்ருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு
மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்
கலவி விதவிய னரிவையர் மருள்வலை
யிட்டுத்து வக்கியிடர் பட்டுத் தியக்கியவர்
விரவு நவமணி ‡முகபட எதிர்பொரு
புரண புளகித இளமுலை யுரமிசை
தைக்கக் கழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி யன்புகூர-

* லக்ஷ்மி, சரஸ்வதி, ரதி, இந்திராணி இவர்களால் வணங்கப் படுபவள் தேவி—என்பதை 337-ஆம் பாடலிலுங் காண்க.

† 'வேலுமயிலு நினைந்தவர் தந்துயர் தீர அருள்தரு கந்த'— என்பது வேலும் மயிலும் என்னும் திருமந்திரத்தின் சக்தியைக் காட்டுகின்ற மகுடப் பகுதி—மனப் பாடத்துக்கும் அநுட்டானத்திற் கொண்டுவருதற்கும் உரியது.

‡ முகபட—முகப்படுதல்—முன் தோன்றுதல்—
'விழியிணைக்கு முகப்பட்டிடும்' (பாரத—நச்சு—19).

ஆசைமனையாட்டி, [பரம்பரை] முழு முதல் தேவி, அம்பிகை, முதல்வி, மலைமகள், [மங்கலை] என்றும் சுமங்கலியாயிருப்பவள், [பிங்கலை] பொன்னிறம் படைத்தவள், காட்டில் நடனத்தில் பிரியங்கொண்டவள்—செம்மையான இலக்குமி, [அயன்மாது] சரஸ்வதி,

மன்மதன் மனைவி ரதி, [வசிட்டர் மனைவி] அருந்ததி, [இந்திரன் தேவி] இந்திராணி, முதலிய தேவதைகள் வணங்கும் முக்கண்ணி,—மேகநிறங்கொண்ட திருமாலின் [பின் வந்தவள்] தங்கை—ஆகிய பார்வதி அருளிய இளையோனே!

வேலையும் மயிலையும் நினைக்கின்ற அடியார்களுடைய துன்பம் திரும்படியாக அருள்பாலிக்கின்ற கந்தனே! [நிரந்தர] முடிவில்லாதவனே—கடவுளே! **மேலை வயலூர்** என்னும் தலத்தில் [உகந்து உளம்] உள்ளம் உகந்து—மகிழ்ந்து நின்றருளும் பெருமாளே!

[மருண்டிடல் ஒழிவேனே]

921.

(விகட) மிகுதியான—நிரம்ப, நறுமணம் வீசும், கஸ்தூரி, [இமசலம்] பனிநீர்—பன்னீரை, வகிர — பங்கு கொண்ட—பன்னீர் கலந்த [படிரமும்] சந்தனமும் இவை கலந்துள்ள கலவையைப் பூசிக்கொண்டு, மலர் மாலையை முடித்துக்கொண்டு, தெருவின் முன்புறத்தில் உலாவி, இளைஞர்களின் பொருளுடனே அவர்களின் உயிரையும் கவர்கின்ற [கலவி விதம்] புணர்ச்சிவகைகளைக் காட்டும், [வியன்] வியக்கத்தக்க மாதர்கள் தமது மயக்கவலையில் இட்டு கட்டிப்போட்டு, வேதனைப் படும்படி [தியக்கி] மயங்கச் செய்து, அவர்களுடைய—பொருந்திய நவமணிமாலை—நவரத்தினமாலை—முக[ப்]பட—முன் தோன்ற—எதிரில் [பொர] முட்டுகின்ற [புரணம்] நிறைவு அல்லது ஒளிகொண்டதும், புளகாங்கிதம் கொண்டதுமான இளங் கொங்கைகள் மார்பின் மீது அழுத்தம் உறப் பதியக், கழுத்திலே கைசேரக் கட்டி அழுத்தி அன்பு மிக்கெழ—

விபுத ரமுதென மதுவென அறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை
துய்த்துக்க ளித்துநகம் வைத்துப்ப லிற்குறியின்
வரையு முறைசெய்து *முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை
தொட்டுக்கு லைத்துநுதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி
கற்றிட்ட †புட்குரல்மி டற்றிற்ப யிற்றிமடு வுந்திமூழ்கிப்;

புகடு வெகுவித கரணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென
ஒப்பித்த நெய்த்தபல புட்பக்கு ழற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை
சித்தத்த ழுத்தியநு வர்க்கத்து ருக்கி‡யொரு
பொழுதும் விடலரி தெனுமநு பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
தத்துப்ரி யப்படந டித்தத்து வட்சியினில் நைந்துசோரப்-

---

* முனிவர் மனவலி கரைதல்
—பாடல் 158-பக்கம் 368-கீழ்க்குறிப்பு.

† புட்குரல்—பாடல் 197-பக்கம் 6-கீழ்க்குறிப்பு.

‡ ஒருபொழுதும் விடலரிது எனும் அனுபவம்—
'மா அநுபவம் இது சற்றும் விடவோ
இயலா தியலாதே'—திருப்புகழ் 1140.

தேவர்கள் (கடைந்தெடுத்த) அமுதம் எனவும், (மது) தேன் எனவும், அறுசுவையும் அளவற்ற வகையிற் கூடியதெனவும், இலவ மலர் ஒத்த செவ்விதழை (வாயூறலை) (முறை முறை) பலமுறை அல்லது முறைப்படி அனுபவித்து மகிழ்ந்து, நகக் குறிகளை வைத்து, பற்குறி வரையும் முறையே குறிகளை வைத்து, முனிவர்களும் தமது மனத்திண்மை கரைந்து குலையுமாறு, (அரிசனம்) மஞ்சள் பூசப்பட்ட இடங்களைத் தொட்டும், பிரியமாய் அணிந்துள்ள ஆடையைத் தொட்டுக் கலைத்தும், நெற்றியில் உள்ள பொட்டை அழியச் செய்தும், செருக்கு அல்லது மகிழ்ச்சி கொண்ட கண்கள் காதிலுள்ள குழைகள் வரையும் எட்டி முட்ட, நிலாப்போன்ற முகத்தில் வெயர்வு உண்டாக, மொழிகள் பதறிப் பதறி வர, (ரதிபதி) ரதியின் கணவன்—மன்மதனுடைய—சாத்திர வழியிலே (கொக்கோக சாத்திரத்திற் கூறியவாறு) கற்றுள்ள புட்குரல்களைக் (கண்டத்தில்) கழுத்திற் பயில்வித்து, மடுப்போன்ற (நீர் நிலைப்பள்ளம் போன்ற) கொப்பூழில் முழுகிப்—

புகடு—புகட்டப்பட்ட—செய்யப்பட்ட பலவிதமான—கலவித் தொழில்களைப் பொருந்திய முறைகளில் (கரு) மேகம் என்றும், இருள் என்றும், காடு என்றும் ஒப்புமை கூறப்பட்டதும், நெய்ப்பு பளபளப்பு உள்ளதும், பல பூக்களை அணிந்துள்ளதுமான கூந்தல் சரிந்து விழ, அந்த (அமுத நிலை) இன்பகரமான நிலையை மலரன்ன அடி முதல் முடிவரையும் (குமுதபதி கலை) சந்த்ரகலையில் குறை கலை முதல் நிறைகலை வரையும்—கிருஷ்ணபக்ஷம் முதல் சுக்லபக்ஷம் முடிய—(எப்போதும் என்றபடி), மனத்திலே அழுத்தி, அனுவர்க்கத்து உருக்கி—(அந்தச் சிற்றின்ப வழியையே) அனுசரித்து—அனுட்டித்து அதிலேயே மனம் உருகி, ஒரு பொழுது கூட அந்த வழியை விட்டு விலகுதல் அரிதென்னும்படியான அனுபவமானது அடியோடு நீங்குதல் இல்லாமற் பொருந்திய (கலவி) புணர்ச்சியில் (இதத்துப் பிரியப்பட) இன்பகரமாய் ஆசையுடனே (நடித்து) ஆட்டம் ஆடி—அந்தத் (துவட்சியினில்) சோர்வினில் மனம் நைந்து வாட்டமடையச்—

புண்ரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு திரிமலம்
அற்றுக்க ருத்தொருமை யுற்றுப்*பு லத்தலையில்
மறுகு பொறிகழல் நிறுவியெ சிறிதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருஜக
வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மநுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொளியையு மறிசிவ
தத்வப்ர சித்திதனை முத்திச்சி வக்கடலை யென்றுசேர்வேன் ;

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்றுபேரி-

திமிலை கரடிகை பதலைச லரிதவில்
தமர முரசுகள் குடமுழ வொடுதுடி
சத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர
அசுரர் குலஅரி அமரர்கள் ஜயபதி
குசல பசுபதி குருவென விருதுகள்
ஒத்தத்தி ரட்பலவு முற்றிக்க லிக்கஎழு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென
†எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற நப்பிளிற நின்றசேடன் ;

---

* புலத்தலையில் மறுகு பொறி—
'பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாள்...
நம்முடைய மம்மராணை நடாத்துகின்றீர்'—அப்பர் 6-27-9.
'ஓர ஒட்டார் ஒன்றை உன்ன ஒட்டார்...ஐவர்'
—கந்தரலங்-4.

† எட்டுத் திசைக்களிறு—பாடல் 554-பக்கம் 265.

சேர்கின்ற இந்தச் சுகம் அற்ப சுகமென உணர்ந்து, இகத்தின் நன்மையையும் பரத்தின் நன்மையையும் உணர்ந்து அறியக்கூடிய அறிவு இல்லாத நான், மயக்கத்தைத் தரும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கப்பெற்று, எண்ணம் (பலவிதமாகச் சிதருமல்) ஒரு வழிப்பட்டு, ஐம்புலன்களின் வாயிலில் அகப்பட்டுக் கலங்குகின்ற அறிவை (உனது) திருவடியில் நிலைநிறுத்திச், சற்று உண்மை உணர்ச்சி அறிவில் ஏற்பட, குற்றமெல்லாம் ஒழிய, ஒப்பற்ற இவ் வுலக வித்தைகளையும், முக்குணங்களையும் (நிர்த்தத்து வைத்து) நான் ஆட்டுவித்தபடியே ஆடவைத்து—(என் வசமாக்கி, வேதங்கள் சொல்லுகின்ற அனுபோக உருவினை, அளவு கடந்த முழுப் பெரு வெளியையும் ஒளியையும் அறியக்கூடிய சிவானுபவ உண்மைக் கீர்த்திப் பொருளை, முத்தி என்னும் சிவ சமுத்திரத்தை நான் என்று கூடுவேன்!

திகுட திகுகுட திகுகுட திகுகுட, தகுட தகுகுட தகுகுட தகுகுட ... ... திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்று பேரி (முரசு) வாத்தியம்

(திமிலை) பறைவகை, (காடிகை) காடி கத்துவது போன்ற ஓசையையுடைய பறைவகை, (பதலை) மத்தளவகை, (சல்லரி) சல் என்னும் ஓசையுடைய பறை (அல்லது) கைத்தாளம்), (தவில்) மேளவகை, (தமரம்) ஒலி செய்யும் (முரசுகள்) பறைவகைகள், (குடமுழ) முழவு வாத்தியவகை இவைகளுடன் (துடி) உடுக்கை யென்னும் பறைவகை, சப்தம் செய்கின்ற (கணப்பறைகள்) தோல் கருவிப் பறைகள் நிரம்ப ஒலிசெய்து அதிர்ச்சியுறச் செய்ய, அசுரர் கூட்டத்துக்குப் பகைவன், தேவர்களின் ஜயவீரத் தலைவன் (வெற்றிச் சேனுபதி), நன்மையையே தரும் பசுபதி—சிவபிராற்குக் குரு—என்று வெற்றிச் சின்னங்கள் ஒரே கூட்டமாய்ப் பலவும் நிரம்பி ஒலிசெய்ய, அவ் வொலியின் எழுச்சியால், (சிகரம்) மலைகளின் (கொடுமுடி) உச்சிகள் எல்லாம் கிடு கிடு கிடு என்று அதிர, மகர மீன்கள் வாழும் (சலநிதி) கடலானது மொகு, மொகு, மொகு என்று கலக்கமுற, எட்டுத் திசைகளிலும் உள்ள யானைகள் (மட்டற்று அறப் பிளிற) அளவு கடந்து மிகவும் (பிளிற) கூச்சலிட, (உலகைத் தாங்கி நிற்கும்) ஆதிசேடனுடைய —

மகுட சிர தலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமும் ஹரஹர ஹரவென
நக்ஷத்ர முக்கிவிழ **வ**க்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலைசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்
பக்கப்ப ழுத்தவுடல் செக்கச்சி வத்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்
பக்ஷித்து நிர்த்தமிட ரக்ஷித்த லைப்பரவி யும்பர்வாழ-

மடிய அவுணர்கள் குரகத கஜரத
கடக முடைபட வெடிபட எழுகிரி
அற்றுப்ப றக்கவெகு திக்குப்*ப டித்து†நவ
நதிகள் குழைதர இபபதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை
அக்குக்கு டக்கொடிசெ ருக்கப்பெ ருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
‡இயலு மிசைகளு நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கஸ்த்யர்க்கு ணர்த்தியருள்
தம்பிரானே. (கஅ)

திருத்தவத்துறை.

[திரிசிராப்பள்ளிக் கடுத்த திருவானைக்காவி லிருந்து 12-மைல். இது ‘லாலிகுடி’ என வழங்குகின்றது. தேவார வைப்பு ஸ்தலம்.]

922. மாதர்மீதுள்ள மயக்கு அற

தானன தந்தன தத்த தத்தன
தானன தந்தன தத்த தத்தன
தானன தந்தன தத்த தத்தன தனதான

காரணி யுங்குழ லைக்கு வித்திடு
கோகன கங்கொடு மெத்தெ னப்பிறர்
காணவ ருந்திமு டித்தி டக்கடு விரகாலே-

---

* படித்து—படிந்து.
† நவ நதிகள்—பாடல் 147-பக்கம் 342 கீழ்க்குறிப்பு.
‡ “இலக்கணத் திலக்கியத் தமிழ்த்ரயத் தகத்தியற் கறிவோதும் சமர்த்தரிற் சமர்த்த”—திருப்புகழ் 958.
“அகத்திய முநிக்கொரு தமிழ்த்ரயம் உரைத்தவன்”—சித்துவகுப்பு.

கிரீடம் (படம் கொண்ட) தலையிடங்கள் நெறுநெறு நெறு என்று முறிய, சகல உலகங்களும் ஹர, ஹர, ஹர என்று ஒலிசெய, நக்ஷத்திரங்கள் எல்லாம் உதிர்ந்து விழ, (வக்கிட்ட) வேகுதல் போன்ற துஷ்ட குணத்தை உடைய் அசுரர்களின் தலைகள் அற்றுவிழ, அவர்களின் மலை போன்ற உருவத்திலிருந்தும் சொரிகின்ற ரத்தப் ப்ரவாகத்தில் முழுகினதால் கழுகுகளின் புறமும், பழுத்துள்ள—முதிர்ந்த உடலும் ஒரே சிவப்பு நிறமாக, (அசுரர்களின்) வயிற்றினின்றும் சரிந்த குடலை நரிதின்ன, மாமிசத்தைப் பற்களை உடைய பேய்களும் நீண்ட (குறளிகள்) பிசாசுகளும் உண்டு நடனம் செய்யும்படி நீ காப்பாற்றின செயலைப் போற்றித் தேவர்கள் வாழவும்,

அசுரர்கள் இறந்தொழியவும், குதிரை, யானை, தேர் (கடகம்) காலாட்படைச் சேனைகள் இவையெலாம் உடைபடவும், (வெடிபட) பிளவு படவும், (சூரனுக்கு அரணயிருந்த) எழுகிரிகள் உருக்குலைந்து தூள் பறக்கப் பல திக்குகளிலும் அத் தூள்கள் படிந்து நவநதிகளும் குழைவு பெற (இளகுபதம் பெற), (இப பதி) (வெள்ளை) யானையின் தலைவனான இந்திரன் மகிழ்ச்சியுறவும் போரினைச் செய்து, வேலாயுதம் திருக்கையில் ஒளி வீச, மயிலின் மீது விளங்கி, அந்தக் கோழிக்கொடி பெருமையுடன் விளங்கப் (பெருக்கமுடன்) செல்வ வளர்ச்சியுடன் **வயலூரில்** வீற்றிருக்கின்ற சரவணபவனே! குகனே! இயல், இசை, நாடகம் எனப்பட்ட முத்தமிழையும் பிரிவு பிரிவாக உண்மையான முறையில் இனிமையுடனே அகத்திய முனிவருக்குப் போதித்து அருளின தம்பிரானே!

(முத்திச் சிவக்கடலை என்று சேர்வேன்)

திருத்தவத்துறை

922

மேகத்தை நிகர்க்கும் கூந்தலைக் (குவித்து) ஒன்று சேர்த்து, அதில் (இடு) அணியும் தாமரை இதழ் கொண்டு பக்குவமாகப் பிறர் காணும்படியாகச் சிரமப்பட்டு முடித்திடக், கடு விரகாலே—விஷத்தை உட்கொண்ட தந்திரத்தால்—அல்லது கடிய உபாயத்தால்—

காதள வுங்கய லைப்பு ரட்டிம
ஞுதிகள் வஞ்சமி குத்தி டப்படி
காமுக ரன்புகு வித்த கைப்பொரு ளுறவாகிப் ;

பூரண கும்பமெ னப்பு டைத்தெழு
சீதள குங்கும மொத்த சித்திர
பூஷித கொங்கையி லுற்று முத்தணி *பிறையான-

†போருவை யொன்றுநெ கிழ்த்து ருக்கிமெய்
யாரையும் நெஞ்சைவி லைப்ப டுத்திடு
பூவையர் தங்கள்ம யக்கை விட்டிட அருள்வாயே ;

வீர புயங்கிரி யுக்ர விக்ரம
பூத கணம்பல நிர்த்த மிட்டிட
வேக முடன்பறை கொட்டி டக்‡கழு கினமாட-

xவீசிய பம்பர மொப்பெ னக்களி
வீசந டஞ்செய் oவிடைத்த னித்துசர்
வேதப ரம்பரை யுட்க ளித்திட வரும்வீரா ;

சீரணி யுந்திரை தத்து முத்தெறி
காவிரி யின்கரை மொத்து மெத்திய
சீர்புனை கின்றதி ருத்த வத்துறை வரும்வாழ்வே-

சீறியெ திர்ந்தவ ரக்க ரைக்கெட
மோதிய டர்ந்தருள் பட்ச முற்றிய
தேவர்கள் தஞ்சிறை வெட்டி விட்டருள் பெருமாளே. (க)

---

* பிறை—மகளிர் தலையணி வகை—'தண்ணம் பிறையும் தலைபெற நிறுத்துக' (கல்லா. 14)

† போருவை—போர்த்தலை—தரித்தலை—
'ஆரம் போர் திருமார்பை' -கம்பராமா-ராவணன் வதை-240.

‡ "கழுதினமாட"—என்பது பாடமாயின் 'பேய் வகைகளாட' எனப் பொருள் படும்.

x பம்பரம் போல நடம்—இது நடனச் சுழற்சியின் வேகத்தைக் காட்டும். "பம்பரமே போல ஆடிய சங்கரி"—திருப்புகழ் 66.

o விடைத் தனித் துசர்—விடைக் கொடி யுடைய சிவபிரான்.

காதுவரைக்கும் கயல்மீன் போன்ற கண்ணை ஒரு புரட்டுப் புரட்டி, (மனுதிகள்) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக் கரணங்களில் எல்லாம் வஞ்சனை எண்ணமே அதிகரிக்கத் தங்களிடம் வந்து படியும் (கீழ்ப்படியும்) காமிகள்—காமங்கொண்ட புருஷர்களின் (அன்பு) ஆசை மயக்கம் கொண்டுவந்து கொட்டுகின்ற கைப் பொருளினால் (உறவு) சம்பந்தம் ஏற்பட்டுப்

பூரண குடம்போலப் பருத்து எழுகின்ற குளிர்ந்த செஞ்சாந்து ஒத்தப்பட்டுள்ள (பூசப்பட்டுள்ள) அழகிய அலங்கரிக்கப்பட்ட கொங்கை பொருந்தி, முத்துக்களால் ஆய பிறையான தலையணி (தலை ஆபரணமான)

(போருவை) தரித்திருத்தலை (அலங்காரம்) ஒன்றைத் தளர்த்திக், (காண்பேரர்) (மெய்) உடலை உருக்கி, யாராயிருந்தாலும் அவர்தம் மனத்தைத் தமக்கு விற்பனையாகும்படிச் செய்கின்ற — (தம் வசப்படுத்துகின்ற) (பொது) மாதர்கள் மீதுள்ள காம மயக்கத்தை விட்டுத் தொலைக்கும்படி அருள் புரிவாயாக;

வீரம் வாய்ந்த புயமலையை உடைய ஊக்கமிக்க பராக்ரம சாலியே! பூதகணங்கள் பல நடனம் செய்ய வேகத்துடனே பறைவாத்தியங்கள் முழங்கக், கழுகுக் கூட்டங்கள் ஆட —

வீசி எறியப்பட்ட பம்பரம்போல மகிழ்ச்சி பொங்க நடனம் செய்த விடைக் கொடியை உடைய ஒப்பற்ற சிவபிரானும், வேத—(பரம்பரை)—முதல்வி — பார்வதியும் உள்ளம் களிப்புற வருகின்ற வீரனே!

ஒழுங்கு அல்லது ஓசை பொருந்திய அலைகள் புரண்டு முத்துக்களை வீசுவதுமான (காவிரியின் கரை) காவிரி கரையில், காவிரி கரைமேல், மோதி நிரப்புகின்ற அழகைக் கொண்டுள்ள **திருத்தவத்துறையில்** எழுந்தருளியுள்ள செல்வமே!

கோபித்து எதிர்த்து வந்த அரக்கர்கள் கெட்டு அழியும்படி அவர்களை மோதி (அடர்ந்து) நெருக்கி அருள் பாலித்த பெருமாளே! அன்பு நிறைந்த தேவர்களின் சிறையை வெட்டி நீக்கி அருளிய பெருமாளே!

(மயக்கை விட்டிட அருள்வாயே)

923. கதி பெற

தனத்த தத்தன தானன தானன
தனத்த தத்தன தானன தானன
தனத்த தத்தன தானன தானன தனதான

நிரைத்த நித்தில நீள்மணி மாலைகள்
பொறுத்த வெற்பிணை மார்முலை மேலணி
நெறித்த நெய்க்குழல் வாள்விழி மாமதி முகமானார்-

நெளித்த சிற்றிடை மேல்கலை யாடையை
யுடுத்தி யத்தமு ளோர்தமை யேமயல்
நிரப்பி நித்தமும் வீதியில் நேருறு நெறியாலே ;

கரைத்தி தக்குயில் போல்மொழி மாதர்கள்
வலைக்கு ளிற்சுழ லாவகை யேயுன
கழற்று தித்திடு வாழ்வது தான்மன துறமேவிக்-

கதித்த பத்திமை சாலடி யார்சபை
மிகுத்தி ழிக்குண பாதக னேனுயர்
கதிக்க டுத்துயர் வாகவு மேயரு ளுரையாதோ ;

வரைத்த நுக்கரர் மாதவ மேவின
ரகத்தி டத்தினில் வாழ்சிவ னார்திரு
மணிச்செ விக்குள் *மெய்ஞ் ஞானம தோதிய வடிவேலா-

மதித்த முத்தமி ழாய்வினர் மேலவ
ருரைத்து ளத்திரு வாசக மானது
மனத்து †ளெத்தழ கார்புகழ் வீசிய மணிமாடத் ;

‡திரைக்க டற்பொரு காவிரி மாநதி
பெருக்கெ டுத்துமெ பாய்வள நீர்பொலி
செழித்த நெற்செநெல் வாரிக ளேகுவை குவையாகச்-

---

* சிவபிரானுக்கு உபதேசித்தது
—பாடல் 327-பக்கம் 314 கீழ்க்குறிப்பு.

† எத்து—வத்து.

‡ காவிரி—கடலுக்கு ஒப்பிடப் பட்டது
—பாடல் 904-அடி 8 பார்க்க.

923

வரிசையாயுள்ள முத்து (மாலைகளையும்) நீண்ட ரத்னமாலைகளையும் தாங்கியுள்ளதும், மலைக்கு இணையானதும், மார்பில் விளங்குவதுமான கொங்கை, மேலே ஆபரணங்களைக் கொண்டுள்ளதும், குழற்சியானதும், நெய்ப்பு உள்ளதுமான (குழல்) கூந்தல், வாள்போன்ற கண், அழகிய சந்திரன்போன்ற முகம்–இவைகளைக் கொண்டுள்ள மாதர்கள்

நெளியும் சிறிய இடையின்மேல் மேகலை பூண்ட ஆடையை உடுத்து, (அத்தம் உளோர்) பொருள் உள்ளவர் தமக்கே காம இச்சை நிரப்பித், தினந்தோறும் தெருவில் (நேருறு நெறியாலே) பக்குவமான வழியிலே—

(கரைத்து) கூப்பிட்டழைத்து, (இதம்) நன்மை தரும் குயில்போல மொழி பேசுகின்ற மாதர்களின் வலைக்குள்ளே சுழலாதவகைக்கு, உன்னுடைய திருவடியைத் துதிக்கின்ற வாழ்வே மனத்திற் பொருந்த இருந்து—

உண்டாகும் பத்திநிலை (சால்) நிரம்பியுள்ள அடியார்களின் (சபை) கூட்டத்தை மிக இழிவாகப் பேசும் குணம்கொண்ட பாவியாகிய நான், உயர்ந்த நற்கதியை அடுத்து—நாடி, மேன்மை அடையவே உன்னுடைய திருவருள் ஒரு மொழி உபதேசிக்காதோ! (அல்லது மேன்மை அடையவே நீ அருளும் உபதேசமொழி எதுவோ!)

(வரைத்தனு) (மேரு) மலையை (தனு) வில்லாக ஏந்தின திருக்கரத்தை உடையவர், நல்ல தவத்தை மேற்கொண்டவர்களின் உள்ளமாகிய இடத்தில் வாழ்கின்றவர்–ஆகிய சிவபிரானுடைய (திருமணி) சிறப்பும் அழகும் கொண்ட காதில் மெய்ஞ்ஞானத்தை உபதேசித்த கூரிய வேலனே!

போற்றத்தக்க முத்தமிழை ஆய்ந்தவர், மேலோர், சொல்லியுள்ள திருவாசகம்—அழகிய உபதேச மொழிகளை (அடியார்கள்) மனத்தில் ஏத்துகின்ற, அழகு நிறைந்த, புகழ் விளங்கும் மணி மாடங்களை உடைய (செய்ப்பதி)—

அலைவீசிக் கடலுக்கு நிகரானதான காவிரிப் பெரு நதியின் வெள்ளம் பெருகிப் பாய்கின்ற வளப்பமுள்ள நீரால் பொலிவு விளங்கும் செழிப்புள்ள நெல், செந்நெல் (வாரிகளே) விளைவுகளே கும்பல் கும்பலாகப்

செருக்கு செய்ப்பதி வாழ்முரு கா* அறம்
வளர்த்த நித்யகல் யாணிக்ரு பாகரி
திருத்த வத்துறை மாநகர் தானுறை பெருமாளே. (உ)

பூவாளூர்

[இது திருத்தவத்துறைக்கு வடக்கு உ-மைல். ஸ்தல புராணம் உண்டு.]

924. ஆண்டருள

தான தாத்தன தான தானன
தான தாத்தன தான தானன
தான தாத்தன தான தானன தனதான

காலன் வேற்கணை யீர்வா ளாலமு
நேர்க ணாற்கொலை சூழ்மா பாவிகள்
காம சாத்திர வாய்பா †டேணிக ளெவரேனுங்-

காத லார்க்கும்வி னாவாய் கூறிகள்
‡போக பாத்திர மாமூ தேவிகள்
காசு கேட்டிடு மாயா ரூபிக ளதிமோக;

மாலை மூட்டிகள் வானூ டேகிமிர்
ஆனை போற்பொர நேரே போர்முலை
மார்பு காட்டிகள் நாணா பேதக மெனமாயா-

மாப ராக்கிக ளோடே சீரிய
போது போக்குத லாமோ நீயினி
வாவெ னாப்பரி வாலே யாள்வது மொருநாளே;

xபால ருத்திரு வாயா லோதிய
ஏடு நீர்க்கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிரு ०நாலா மாயிர சமண்மூடர்-

---

* காஞ்சியில் அறம் வளர்த்தது—பாடல் 460-அடி 8.
† வணிகள்—பாடல் 785-பக்கம் 228 கீழ்க்குறிப்பு.
‡ "மோக பாத்திரம்" என்றும் பாடம்.
x சம்பந்தர் லீலை
—பாடல் 181-பக்கம் 420 பாடல் 841-பக்கம் 460-கீழ்க்குறிப்பு.
० சமணர் எண்ணாயிரத்தர்
—பாடல் 332-பக்கம் 334 கீழ்க்குறிப்பு.

பெருகிக் கிடக்கும் (செய்ப்பதி)—வயலூரில் வாழ்கின்ற முருகனே! (காஞ்சியில்) அறம் வளர்த்த நித்ய கல்யாணியும், கிருபாகரியுமான தேவி உறைகின்ற **திருத்தவத்துறை** என்னும் பெரிய ஊரில் வீற்றிருக்கும் பெருமாளே!

(உயர்வாகவுமே அருளுரையாதோ)

பூவாளூர்

924.

யமன், வேல், அம்பு, அறுக்கும் வாள், விஷம்—இவைகளுக்கு ஒப்பான கண்கொண்டு கொலைத் தொழிலையே செய்யச் சூழ்ச்சி செய்கின்ற மகா பாவிகள், காம சாத்திரத்தை (கொக்கோக சாத்திரத்தை) வாய் பாடாகக் கொண்டவர்கள் (கரதலப் பாடமாகக் கொண்டவர்கள்), ஏணியின் தன்மை கொண்டவர்கள், (அல்லது ஏண்—கர்வப்பேச்சுப் பேசுபவர்கள்), யாராயிருந்தாலும் அவருடனே—

காம இச்சை நிறைந்த (வினை) சொற்களை வாய்கொண்டு பேசுபவர்கள், காம இன்பத்துக்குப் (பாத்திரம்) கொள் கலமான—இடமான—மகா மூதேவிகள், பொருள் தா எனக் கேட்கின்ற மாய சொரூபிகள், அதிக ஆசை

மயக்கத்தை மூட்டுபவர்கள், ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கும் ஆனை போலச் சண்டை செய நேராகப் போருக்கெழும் கொங்கை மார்பைக் காட்டுபவர்கள், பலவிதமான (பேதகம்) வேறு பாடுகளைக் கொண்டதான—மாயைகளைச் செய்யவல்ல—

மகா பராக்குக் காரிகளுடனே—பெரிய நோக்கத்தை உடையவர்களுடனே—உத்தமமான என் பொழுதைப் போக்குதல் நல்லதாகுமோ (நல்லதாகாது ஆதலால்) நீ இனி என்னை வா என்று அன்புடனே அழைத்து ஆள்வதான ஒரு நாள் எனக்குக் கிடைக்குமா!

தேவியின் முலைப்பால் நீங்காத திருவாயால் நீ பாடின பா ஏடு (வைகையாற்றின்) நீரை எதிர்த்துப் போக, வாது செய்த பாடலுக்குத் தோற்ற எண்ணாயிரம் சமண மூடர்களும்—

பாரின் மேற்கழு மீதே யேறிட
நீறி டாத்தமிழ் நாடி டேறிட
பாது காத்தரு ளாலே கூனிமி றிறையோனும் ;
ஞால மேத்திய தோர்மா தேவியும்
ஆல வாய்ப்பதி வாழ்வா மாறெணு
*ஞான பாக்கிய பாலா வேலவ மயில்வீரா-
†ஞான தீக்ஷித சேயே ‡காவிரி
யாறு தேக்கிய கால்வாய் மாமழ
நாடு போற்றிய பூவா ளூருறை பெருமாளே. (க)

திருப் பராய்த்துறை.

[திரிசிராப்பள்ளிக் கடுத்த எழுமனூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து வடமேற்கு 1½-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

925. ஈசன் உடலிடங் கொள்ள

தானன தந்தன தாத்த தத்தன
தானன தந்தன தாத்த தத்தன
தானன தந்தன தாத்த தத்தன தனதான

வாசனை மங்கையர் போற்று சிற்றடி
பூஷண கிண்கிணி யார்ப்ப ரித்திட
மாமலை ரண்டென நாட்டு மத்தக முலையானை-
வாடைம யங்கிட நூற்ற சிற்றிழை
நூலிடை நன்கலை தேக்க இக்குவில்
மாரன்வி டுங்கணை போற்சி வத்திடு விழியார்கள் ;
நேசிகள் வம்பிக ளாட்ட மிட்டவர்
தீயர்வி ரும்புவர் போற்சு ழற்றியெ
நீசனெ னும்படி யாக்கி விட்டொரு பிணியான-

* ஞான பாக்கியர்-சம்பந்தர்.—பாடல் 332-பக்கம் 334 குறிப்பு.
† ஞான தீக்ஷிதர்—அருணகிரியார்க்கும், சிவனுக்கும் ஞான தீக்ஷை செய்தவர். — பாடல் 814 பக்கம் 398 குறிப்பு; பாடல் 925 அடி 7, 8
அகத்தியர்க்கும் ஞான தீக்ஷை செய்தார்-பாடல் 919-அடி 5.
"நாத கார்த்திகை சேயே"—என்றும் பாடம்.
‡ காவிரி கால்வாய்—பூவாளூர் திருக்கோயிலுக்கு வடக்கே ஒரு சிற்றாறு ஓடுகிறது. அது பங்குனி நதி என்னும் பெயர் கொண்டது. 'கயா பல்குனி' எனவும் வழங்கும்.

(மதுரைப்) ப்ரதேசத்தில் கழுமேல் ஏறவும், திருநீற்றை இடாதிருந்த தமிழ் நாடு (மதுரை) ஈடேறவும் பாதுகாத்து உனது திருவருளாலே தனது கூன் நிமிரப்பட்ட அரசன் (பாண்டியன்) நெடுமாறனும்—

உலகெலாம் போற்ற நின்ற ஒப்பற்ற மாதேவி பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியும், திரு ஆலவாய் என்னும் திரு நகரத்தில் உள்ளவர்களும், நல் வாழ்வு அடையும்படி (எணும்) திருவுள்ளத்தில் நினைத்தருளின ஞான பாக்கிய பாலனே! (ஞானச் செல்வக் குழந்தையே)! வேலவனே! மயில் வீரனே!

ஞானதீக்ஷை செய்தவனே! குழந்தையே! காவிரியாறு நிறைந்து வரும் கால்வாய் உள்ளதும், சிறந்த *மழநாட்டுப் பகுதியில் சிறப்புடன உள்ளதுமான பூவாளூரில் வீற்றிருக்கும் பெருமாளே! (பரிவாலே ஆள்வதும் ஒரு நாளே)

திருப்பராய்த்துறை
925.

நறுமணங் கொண்ட மாதர்களின் விரும்பத்தக்க சிற்றடியில் ஆபரணமாய் விளங்கும் (கிண்கிணி) பாத சதங்கை ஒலிசெய்ய, அழகிய மலை இரண்டு என்று சொல்லும்படியாக ஸ்தாபிக்கப்பட்டு (நிலை நிறுத்தப்பட்டு) (மத்தகயானை) மத்தகத்தைக் (கும்பஸ்தலத்தைக்) கொண்ட யானை போன்ற கொங்கையின்—

(வாடை) (சுகந்த) வாசனை (மயங்கிட) கலந்து சேர, நூற்கப்பட்ட மெல்லிய இழைநூல் ஒத்த இடையில் அழகிய ஆடை நிறைந்து விளங்க, கரும்பு வில்லை ஏந்திய மன்மதன் செலுத்தும் மலர்ப் பாணமாகிய (செந்)தாமரை போலச் சிவந்து திகழும் கண்களை யுடையவர்கள்—

நேசம் பாராட்டுபவர்கள், பயனிலிகள், பலவித கூத்தாட்டங்களை ஆட்டுவிப்பவர், பொல்லாதவர், விரும்பி நேசிப்பவர் போல அலையவைத்து, 'இழிந்தோன்' எனும்படி (என்னை) ஆக்கிவிட்டு ஒரு நோய்க்கிடமான— நோயாளன் என்னும்படியான—

---

* "மா மழ நாடு போற்றிய பூவாளூர்"—சோழ நாட்டின் பழங்காலப் பிரிவுகளுள் மேல்மழ நாடு என்பதைச் சார்ந்தது பூவாளூர்: 'மாவள நாடு போற்றிய பூவாளூர்'—என்றும் பாடம்.

நீரின்மி குந்துழ லாக்கை யிற்றிட
யோகமி குந்திட நீக்கி *யிப்படி
†நீயக லந்தனில் வீற்றி ருப்பது மொருநாளே;

தேசம டங்கலு மேத்து மைப்புய
லாயநெ டுந்தகை வாழ்த்த ‡வச்சிர
தேகமி லங்கிய தீர்க்க புத்திர முதல்வோனே-

தீரனெ னும்படி சாற்று விக்ரம
சூரன டுங்கிட வாய்த்த வெற்புடல்
தேயந டந்திடு கீர்த்தி பெற்றிடு கதிர்வேலா;

மூசளி பம்பிய நூற்றி தழ்க்கம
லாசனன் வந்துல காக்கி வைத்திடு
xவேதன கந்தையை மாற்றி முக்கண ரறிவாக-

மூதறி வுந்திய தீக்ஷை செப்பிய
ஞானம்வி ளங்கிய மூர்த்தி யற்புத
மூவரி லங்குப ராய்த்து றைப்பதி பெருமாளே. (க)

தென்கடம்பந்துறை.

[“கடம்பந்துறை” என்பது “கடம்பர்கோயில்”. திரிசிராப்பள்ளிக்கு மேற்கேயுள்ள குழித்தலை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 1-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. ஸ்தலமான்மியம் இருக்கின்றது.]

---

* இப்படி—பாடல் 33-பக்கம் 97-கீழ்க்குறிப்பு.

† அகலந்தனில் வீற்றிருப்பது—உடலிடங் கொள்வது—
“இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனி யுன்னை என்னிரக் கேனே”—திருவாசகம் 22-5.

‡ சிவபிரான்—“தமக் கென்றும் கேடிலார்”
—சம்பந்தர் 3-64-7.

x பிரமன் அகந்தையை மாற்றினது—சிவனுக்கு உபதேசித்தது—பாடல் 325, 327-பக்கம், 308, 314; பாடல் 628-பக்கம் 462-கீழ்க்குறிப்பு.

(நீரில்—நீர்மையில்) குணத்தில்- தன்மையில் நிரம்பவும் சுழன்று வேதனைப் படுகின்ற இந்த (ஆக்கையில்) உடலில் (திடயோகம்) கலங்காத (சிவ) யோக நிலை மேம்பட்டு எழ (அல்லது ஆக்கை இற்றிட—உடல் தன்மை பாசம்—முடிவு பெற—(சிவ) யோகம் மிக்கெழ), (என்னை) மேற் சொன்ன தீ நெறியினின்றும் நீக்கி (விலக்கி), (இப்படி) இந்த க்ஷணமே இந்த அற்புதமான வகையில்—நீ (கருணை கூர்ந்து) அகலந்தனில்—(எனது) மார்பகத்தில் (என் உடலிடத்தே) வந்து வீற்றிருக்கும் படியான ஒப்பற்ற நாளொன்று எனக்குக் கிடைக்குமா!

தேசங்களெல்லாம் போற்றுகின்ற கரியமேக நிறத்தனை பெருந்தகை (திருமால்) வாழ்த்த, (வச்சிரதேகம்) அழியாத திருமேனி விளங்கும் (தீர்க்க புத்திர) பூரணனும் சிவனுடைய புத்திரனே! முதல்வனே!

தீரன் என்று சொல்லும்படிப் பேர் பெற்றிருந்த பராக்ரம சாலியாகிய சூரபத்மா (நடுங்க) பயங்கொள்ள, அவனுக்கு (வரத்தினால் கிடைத்த) வெற்புடல்—மலை போன்ற (வஜ்ர) தேகமும் தேய்ந்து ஒழியப், (போரை) நடத்திப் புகழ் பெற்றுள்ள ஒளி வேலனே!

மொய்க்கின்ற வண்டுகள் நிறைந்த நூறு இதழ்களைக் கொண்ட தாமரை ஆசனன் (தாமரையில் வீற்றிருப்பவனும் தோன்றி உலகங்களைச் சிருஷ்டித்து வைத்துள்ளவனுமான (வேதன்) பிரமனுடைய ஆணவத்தை அகற்றி, முக்கணராம் சிவபிரான் தெரிந்து கொள்ளும்படி—

பேரறிவு விளங்கின (தீக்ஷை) உபதேச மொழியைச் சொன்ன ஞானம் ஒளிசெயும் மூர்த்தியே! அற்புத கடவுளராகிய (பிரமன், திருமால், சிவன்) மூவரும் (அல்லது—அற்புத ஆடல்கள் செய்த நாயன்மார் — சம்பந்தர் — அப்பர் — சுந்தரர் மூவரும்) விளங்குகின்ற **திருப்பராய்த்துறைப்பதிப் பெருமாளே!**

(நீ அகலந்தனில் வீற்றிருப்பதும் ஒரு நாளே)

926. திருவடியைச் சேர

தனதனன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனதனன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனதனன தந்தனந் தந்தனந் தந்தனத் தனதான

புணரியும னங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலினெடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புது*நிலவ ருந்தியுந் திஞ்சுநஞ் சும்பொருப் பெறிவேலும்-

பொருவெனஇ கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்
றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புவியிளைஞர் முன்பயின் றம்பொனின் †கம்பிதக் குழைமோதிக்;

குணலையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய்து‡சங்கொடுஞ் சிங்கிதங் குங்xகடைக் கணினர்பால்-

குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்தநின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற் றமைவேனோ;

* நில வருந்தி—சகோரபட்சி—பாடல் 880 பார்க்க.
"பனிக்கதிர் உண்ணச் சகோரம் பசிப்ப"—கல்லாடம் 94.

† கம்பிதம்—அசைதல்.

‡ சங்கு—ஒரு ஆயுதம்.
"எழுக் கொடு முத்தலை எஃகம்வில் நாஞ்சில்
கழுக்கடை சங்கொடு கப்பணம் வெவ்வாள்
மழுக்கதை சக்கரம் வச்சிர மாதி
விழுப்படை யாவும் விராவிய கையார்"—கந்தபுரா 3-16-7.

x முதல் மூன்றடி கண் வர்ணனை (பாடல் 880-ம் பார்க்க)—கண்ணில் வெண்மை, கருமை—அகலம்—உண்டு.

"ஈசற்கி யான் வைத்த அன்பின் அகன்று, அவன் வாங்கிய என் பாசத்திற் காரென்று, அவன் தில்லையின் ஒளி போன்று, அவன் தோள் பூசத்திரு நீறெனவெளுத்து, அவன் பூங்கழல் யாம், பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங் கண்களே"
—திருக்கோவை-109.

தென்கடம்பந்துறை

926.

(புணரியும்) கடலும், (அனங்கன் அம்பும்) மன்மதனுடைய பாணங்களும், (சுரும்பும்) வண்டும், கரிய கயல்மீனும், கெண்டைமீனும், (சண்டனும்) யமனும், (கஞ்சமும்) தாமரையும், புதிய நிலவைச் சந்திரிகையை உண்ணும் சகோரபட்சியும், இறத்தலைச் செய்விக்கும் விஷமும், கிரௌஞ்சத்தைத் தூளாக்கின (உனது) வேலும்–

ஒக்கும் என்னும்படி (இகன்று) பகை பூண்டதாயும், அகலம் கொண்டதாயும், அங்கும் இங்கும் சுழல்வதாயும், மத்தியிலும் ஓரத்திலும் சிவந்ததாயும், வஞ்ச எண்ணத்தை அடக்கினதாயும், (இங்கிதம்) இனிமையைப் பூமியிலுள்ள இளைஞர்கள் முன்பு (பயின்று) திறமையுடன் காட்டி, அழகிய பொன்னால் அமைந்து அசைகின்ற (காதிலுள்ள) குழைகள்மீது மோதி—

(குணலையொடும்) ஆரவார நடிப்புடன், (இந்திரியம்) ஐம்பொறிகளும் துன்பம் காணும்படி கலகப்போர் செய்து, கொடிய வேதனை உண்டாகும்படி எப்போதும் கொடுமை செய் துசம் கொடும்—கொடுமை செய்யும் துவசம்—கொடி கொண்டும், கொடுமை செய்வதற்கே (துசம்) கொடியேந்தியுள்ளதும், விஷம் தங்குவதுமான கடைக் கண்ணியரிடத்தே (அல்லது) கொடுமை செய்து — கொடிய செயல்களைச் செய்து—தீமை செய்து, (சங்கொடு) சங்கின் வெண்ணிறத்தோடு (அல்லது சங்கு என்னும் ஆயுதமும்), சிங்கி—விஷமும் (விஷத்தின் கருமையும்) தங்குகின்ற கடைக்கண் பார்வை கொண்ட மாதர்களிடத்தே—

விளங்கும் பலவகையான செவ்விய (தனம்) பொருள்களைக் கொடுத்துக் கொடுத்து மகிழ்ச்சி அடைகின்ற (மனம், வாக்கு, காயம் என்னும்) மூன்று வகையான கருவிகளும், கந்தவேளே! உனது செம்மை நிறைந்த திருவடியை அணுகுதற்கு—சேர்வதற்குண்டான வழியை (அந்தியும் சந்தியும்) காலையும் மாலையும்—தொந்தம் அற்று—பிரபஞ்சத் தொடர்பு நீங்கி—உலகபாசம் அற்று — அமைதியுடன் ஒருமைப்பட்டு இருக்க மாட்டேனே!

* துணர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகு†மச லம்பசுஞ் சந்தனங் குங்குமந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத் திருதோளுந்-

தொலைவில்சண் முகங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழநிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமெ யன்பதர் தஞ் சிந்தையுஞ் சென்று‡செய்ப் பதிவாழ்வாய் ;

கணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக் குருநாதா-

கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
Xகுறுமுனி கமண்டலங் கொண்டு முன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் **தென்கடம் பந்துறைப்** பெருமாளே.(க)

° கடம்பந்துறை—(கடம்பர் கோயில்)—சிவபிரான் கண்ணுவ முனிவருக்கும், தேவர்களுக்கும் கடம்ப விருக்ஷத்தில் தோன்றிக் காக்ஷி கொடுத்த தலம் ; கடப்ப மரமே ஸ்தல விருக்ஷம் ; இது பற்றியே **கடப்பமாலை** இங்குக் கூறப்பட்டது போலும்.

† அசலம் பசுஞ் சந்தனம்—பொதியமலைச் சந்தனம் முருக வேளுக்குப் ப்ரீதி—என்பதை—

"கார் **மலையச் சந்தனமும்** வட இமயக் காரகிலும் போர் மலையக் கடவதொரு பிள்ளைக்குப் போக்குதியே" என வருமிடத்துக் காண்க—தக்கயாகப் பரணி 228.

‡ செய்ப் பதி—வய லூர்.

X காவிரி—குடகு மலையில் தோன்றினதும், அகத்தியர் சிவபிரானிடம் பெற்று வந்த கமண்டலத்தினின்று பெருகியதும்—

"கோதிலாத குறுமுனி தன்னொடும் போதல் வேண்டும் பொருபுனற் காவிரி மாது நீ"—எனச் சிவபிரான் காவிரிக்குக் கட்டளை யிட்டனர்.

"நீடு காவிரி நீத்தத்தை நீ யினிக், கோடி உன் பெருங் குண்டிகைப் பாலென, நாடி யத்திறம் செய்தலும் நன்முனி, மாடு சேர்ந்தனள் மாநதி என்பவே"

"அகத்தியன் கொங்கின்பால் வந்து அருச்சனை புரிந்து மேவும்...............

குண்டிகை அதனைத் தள்ளிக் குளிர் புனற் கன்னி......பாரில் நீ படர்தி என்றான்"—கந்தபுரா 2-23-20, 26; 2-27-32, 36.

[தொடர்ச்சி 701 ஆம் பக்கம் பார்க்க]

பூங்கொத்துக்கள் விரிந்துள்ள கடப்ப மரத்தின் மலர்களாலாய மென்மையான மாலையும், நிறைந்துள்ள புனுகும், (பொதிய) மலையில் விளையும் பசுமை வாய்ந்த சந்தனமும், குங்குமமும் கூட்டப்பட்ட (களபமும்) கலவைச் சாந்தும், ஒன்றுகூடி நெருங்கிப் பொதிந்துள்ளனவும் எப்போதும் நன்மையே பாலிப்பவைகளுமான — பன்னிரண்டு தோள்களும்—

அழிவு – சோர்வு – இலாத உனது ஆறு முகங்களையும், தந்திர மந்த்ரங்களையும்-உனது பூசனைக்கு உரிய நூல்களையும், மந்திரங்களையும், பழநிமலையையும், திருப்பரங்குன்றத்தையும் திருச்செந்தூரையும், துதி செய்து போற்றுகின்ற மெய்யன்பர்களுடைய சிந்தையிற் புகுந்தும், வயலூர் என்னும் தலத்து வீற்றிருந்தும்—வாழ்பவனே !

கூட்டமான படங்களுடைய பாம்பும், கங்கையும், சந்திரனும், குராமலரும், அறுகம்புல்லும், சிறிய தும்பை மலரும், கொன்றை மலரும், நறுமணம் கமழும் சடையை உடைய சிவபிரானும் கும்பிட்டு வணங்கும் தகுதி — பெருமையைக் கொண்டுள்ள குருநாதனே !

பெருமை தங்கிய குடகில் (குடகு தேசத்தில்—Coorg)— உள்ள மலையில்—குடகுமலையினின்று தோன்றி வரும்— (காவிரி), சிவபிரான் தர (அல்லது—சிவனுக்கு இணையான சிவனை வழிபடும்) (குறுமுனி) அகத்தியர் கொண்டுவந்த கமண்டலத்திலிருந்து முன்பு தோன்றி வெளிவந்த நதியாகிய காவிரி — வந்து பொருந்தும் **தென் கடம்பந்துறை** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே !

(தொந்தமற நமைவேனோ)

தொடர்ச்சி :—நாரதர் செய்த சூழ்ச்சியால் விந்தமலை மேருமலைக்குப் போட்டியாக பிரமலோகம்வரை உயர்ந்து வழியை அடைத்தது. தேவர்கள் அகத்தியரை வேண்ட, அகத்தியர் சிவபிரானை வேண்டி விந்தத்தை அடக்கும் ஆற்றலைப் பெற்றார். அப்போது சிவபூஜைக்குத் தீர்த்தம் வேண்டுமென அகத்தியர் வேண்ட, சிவபிரான் காவிரியை அழைத்து ஒரு குண்டிகையில் அடங்கச் செய்து அகத்தியருடன் அனுப்பினர். அந்தக் குண்டிகை நீருடன் அகத்தியர் தென்திசைக்கு வரும்போது—வழியில் கிரவுஞ்ச கிரியையும், விந்தத்தையும் அடக்கிக், கொங்கு தேயத்துக்கு அருகே (குடகில்) தங்கிச் சிவபூஜை

[தொடர்ச்சி 702 ஆம் பக்கம் பார்க்க]

கருவூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். திரிசிராப்பள்ளிக்கு மேற்கு 45-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. இதுவே "வஞ்சி" என்பாருமுளர்.]

927. சிவஞானம் பெற

தனதானத் தனதான

மதியால்வித் தகனாகி—மனதாலுத் தமனாகிப்;
பதிவாகிச் சிவஞான—பரயோகத் தருள்வாயே;
*நிதியேநித் தியமேயென்—நினைவேநற் பொருளாயோய்;
†கதியேசொற் பரவேளே—கருவூரிற் பெருமாளே. (க)

928. பொது மாதர்களின் இணக்கம் அற

தனனத் தனத்தனன தனனத் தனத்தனன
தனனத் தனத்தன தனதான

இளநிர்க் குவட்டுமுலை யமுதத் தடத்தைகனி
யிரதக் குடத்தையெனு மரபோடே-
இருகைக் கடைத்துஇடை துவளக் குழற்சரிய
இதழ்சர்க்க ரைப்பழமொ டுறவூறல்;
‡முளரிப்பு வொத்தமுக முகம்வைத் தருத்திநல
முதிரத்து வற்பஅல்குல் மிசைமூழ்கி-

[701-ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்து வந்தனர். அப்போது சீகாழியில் இருந்த இந்திரன் தனது சிவ பூஜைக்கு நீரில்லாது வருந்த, நாரதர் கூறிய தந்திரத்தின்படி விநாயகரை அவன் பூசித்து வணங்க, அவர் எதிர் தோன்றி வேண்டிய வரம் யாதென—"அகத்திய முனிவரின் கமண்டலத்திற் காவிரி நதி அடங்கியுள்ளது. அந்தக் கமண்டலத்தை நீங்கள் கவிழ்த்துவிட்டால் பரவிவரும் நதி என் நந்தவனத்துக்கு வேண்டிய நீரைத் தரும்" என, விநாயகரும் அங்ஙனமே கவிழ்க்க, காவிரி பெருகி வந்து இந்திரனுடைய நந்தவனத்துக்கு வேண்டிய நீரைத் தந்தது என்பது வரலாறு:

* "நிதியொப்பானை நிதியிற் கிழவனை......
கதியொப்பானைக் கண்டீர் நாம் தொழுவதே-அப்பர் 5-3-6.

[தொடர்ச்சி 703 ஆம் பக்கம் பார்க்க]

கருவூர்

927.

என் புத்திகொண்டு நான் ஒரு பேரறிவாளனாகி, என் மனம் நன்னெறியையே பற்ற அதனால் நான் ஒரு உத்தம புருஷனாகி—சிரேஷ்டனாகி

(சிவஞான பதிவாகி) சிவ ஞானத்தில் என் மனம் ஊன்றுவதாகி, மேலான யோக வழியை (நான் பற்றும்படி) அருள் புரிவாயாக.

(என் செல்வமே! அழிவிலாப் பொருளே! என் தியானப் பொருளே! சிறந்த பேரின்பப் பொருளானவனே! (அல்லது—நன்மை தருங் கடவுளே!).

என் புகலிடமே! (சொல்) எல்லாராலும் புகழப்படும் மேலான செவ்வேளே! **கருவூர்த்** தலத்துப் பெருமாளே!

(பரயோகத் தருள்வாயே)

928.

இளநீர் போன்றதும், மலை போன்றதுமான கொங்கையாகிய அமுதம் பெருகும் இடத்தை, கனிரசம் அடங்கியுள்ள குடத்தை, (எண்ணும்) மதிக்கும் (மரபோடே) வழக்க முறையில் (அல்லது கொக்கோக சாத்திர முறைப்படி—

(இருகைக்கு அடைத்து) இரண்டு கைகளிலும் அடையச் செய்து, இடை நெகிழவும், கூந்தல் சரியவும், வாயிதழினின்றும் சர்க்கரை போலவும், பழம் போலவும், ஊறும் ஊறலை—

தாமரை மலர் போன்ற முகத்தோடு முகத்தை வைத்துப் (அருத்தி) பருகி—உண்டு, (நலம்—முதிர—து)— நலம்—இன்பம், (முதிர)—முற்றுவதால் உண்டாகும், (து) அனுபவத்துடன்—இழிந்த அல்குலிடத்தே முழுகி—

---

* தொடர்ச்சி:—"நிதியினை பவளத் தூணை நெறியினால் நினையவல்லார் கதியினை"—திருமங்கையாழ்வார்—குறுந்தாண்டகம் 1.

† "கதியாய் விதியாய்க் குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"—கந்தரநுபூதி 51.

‡ முளரிப் பு—முளரிப் பூ.

மொழிதத்தை யொப்பகடை விழிகட்*சிவப்பமளி
முழுகிச்சு கிக்கும்வினை யறஆளாய் ;
நளினப் பதக்கழலு மொளிர்செச்சை பொற்புயமெ
†னயனத்தி லுற்றுநட மிடும்வேலா-
நரனுக் கமைத்தகொடி யிரதச்‡சு தக்களவ
னறைபுட்ப நற்றுளவன் மருகோனே ;
களபத் தனத்திசுக சரசக் குறத்திxமுக
0கமலப் புயத்துவளி மணவாளா-
கடலைக் குவட்டவுணை யிரணப் படுத்தியுயர்
கருவைப் பதிக்குளுறை பெருமாளே. (உ)

929. அனுபூதி பெற

தனனா தனனத் தனனா தனனத்
தனனா தனனத் தனதான

தசையா கியகற் றையினால் முடியத்
தலைகா லளவொப் பனையாயே-

---

* சிவப்ப அமளி எனப்பிரிக்க.

† பக்தர்களுடைய கண்களிலே கடவுள் பொலிவர்; நடமிட்டுப் பொலிதல் பின்னும் விசேடம்; இது அருணகிரியாரின் பத்திப் பெரு நிலையை விளக்கும், அவர் வரலாற்றைக் குறிக்கும்.

"என் கணிலாடு தழல்வேணி எந்தையர்" — என வரும் இடத்துக் கீழ்க் குறிப்பைப் பார்க்க (திருப்புகழ் 98-பக்கம் 230).

‡ சுதக் களவன்—சூதக் களவன் ; சூதன்—(அருச்சுனனுக்குத்) தேர்ப்பாகன்; கண்ணபிரான்.

களவன்:— கள்வன் – (வெண்ணெய்) திருடினது அல்லாமல் அவர் செயலெலாம் கள்ளத்தன்மையது. உதாரணம்—

1. "நவநீதமுந் திருடி"—திருப்புகழ் 109.

2. "கள்ளக் குழவியாய்க் காலால் சகடத்தைத் தள்ளி உதைத்திட்டு"—பெரிய திருமொழி 10-5-9.

3. "கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து"
—பெரிய திருமொழி 5-1-2.

4. "கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த கள்ளப் பிள்ளை"
—சுந்தரர் 7-57-8.

[தொடர்ச்சி 705-ஆம் பக்கம்]

பேச்சு—கிளியின் பேச்சுக்கு ஒப்பாக, கடைவிழிகள்—கடைக்கண்கள் — செந்நிறம் கொள்ள — படுக்கையில் முழுகிச் சுகிக்கின்ற (இன்பம் அனுபவிக்கும்) தொழில் தொலையும்படி (என்னை) ஆண்டருளுக.

தாமரை போன்ற திருவடியில் உள்ள வீரக் கழலும், விளங்குகின்ற வெட்சிமாலை அணிந்த அழகிய திருப்புயங்களும், என்னுடைய (நயனத்தில்) கண்களில் இடம் பெற்று விளங்க நடனம் செய்கின்ற வேலனே!

(நரனுக்கு) அருச்சுனனுக்கு அமைத்த—ஏற்பட்டிருந்த (அநுமக்) கொடி பறக்கும் தேரில்—(சூதன்) தேர்ப்பாகனாக விளங்கின (களவன்) திருடன் — அல்லது களாப்பழத்து நிறங்கொண்டவன், (நறை) தேன் கொண்ட மலர்களையும் சிறந்த துளவமாலையையும் அணிந்தவன்—ஆகிய திருமாலின் மருகனே!

கலவைச் சாந்து அணிந்துள்ள கொங்கையை உடையவள், இன்பகரமான காமலீலைகள் இயற்றும் குறத்தி, கமலமுக — கமலபுயம் — தாமரையன்ன முகத்தையும், தாமரையன்ன திருக்கரங்களையும் உடைய வள்ளியின் மணவாளனே!

கடலை, (கிரௌஞ்ச) மலையை, (அவுணை)—அவுணனும் சூரனை—(இரணப்படுத்தி) புண்படுத்தி அழித்து, உயர் பெருமாளே—பேர்பெற்ற பெருமாளே! (அல்லது) உயர்—மேலான **கருவூர்ப் பதி**க்குள் வீற்றிருக்கின்ற பெருமாளே!

(அமளி முழுகிச் சுகிக்கும் வினை அற ஆள்வாய்)

929.

மாமிசமாகிய திரளால் முழுமையும்—தலை முதல் கால் அளவும் — (ஒப்பனையாயே) அலங்காரமாகவே (அமையப் பெற்று)

(தொடர்ச்சி) களவன் — களாப்பழத்தின் நிறம் கொண்டவன், களவம் — களா.

✓ "கனிக் **களவத்** திருவுருவத் தொருவனையே கழல் தொழுமா கல்லீர்களே"—பெரிய திருமொழி 11-6-4.

x வள்ளியின் முகம், கரம் இரண்டும் கமலம்: 'திருமுகங் கமலம் ...துணைக்கரம் கமலம்' —தணிகைப் புராணம்-களவு 43.

ㅇ கமலம்—இடைநிலைத் தீவகம்.

தடுமா றுதல்சற் றொருநா ளுலகிற்
றவிரா வுடலத் திணைநாயேன் ;
*பசுபா சமும்விட் டறிவா லறியப்
படுபூ ரணநிட் களமான-
பதிபா வனையுற் †றநுபூ தியி‡லப்
படியே யடைவித் தருள்வாயே ;
xஅசலே சுரர்புத் திரனே குணதிக்
oகருணோ தயமுத் தமிழோனே-
அகிலா கமவித் தகனே துகளற்
றவர்வாழ் வயலித் திருநாடா ;
**கசிவா ரிதயத் தமிர்தே மதுபக்
††கமலா லயன்மைத் துனவேளே-

---

* பசு பாசம்—பசு—ஜீவான்மா : பசு கரணம் — தற்போதச் செயல்கள். பாசவினை—பந்தத்திற்கு ஏதுவாகிய வினைகள்.

3, 4 அடிகள் சன்மார்க்க நிலையைத் திருமந்திரத்தில் (1486) உள்ளவாறே விளக்குகின்றன :—

"பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே"

† இந்த அநுபூதி அருணகிரியார் அடையப்பெற்றார் என்பது- "ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி யநுபூதி அடைவித்த தொரு பார்வைக் காரனும்.........குறத்தி திருவேளைக்காரனே"— என்னும் திருவகுப்பால் அறியக் கிடக்கின்றது.

‡ அப்படியே—என்பது "மீளா அடிமை உமக்கே ஆளாய்"— என்பது போல—(சுந்தரர் 7-95-1)

x சூரியகுலத்துச் சமற்காரன் என்னும் அரசன் துறவறம் பூண்டு திருவாரூரிற் பெருந்தவஞ் செய்யப் ப்ரத்யக்ஷமான சிவபெருமானை "இத் தலத்தோர் சிவலிங்கம் தாபிக்க யான் காதல் வைத்தனன் ; அச் சிவலிங்க மாமணியில் உலகுய்ய...நீ முதல்வி யொடும் நித்தலும் நீங்காதுறைய வேண்டும்" என வேண்டிக் கொண்டான். அவ் வரத்தைச் சிவபிரான் அளித்தனர். அதன்படி அரசன் தாபித்துப் பூசித்த லிங்கமே—"அசலேசர்" :

"மன்னவன் தவம் புரிந்து வேண்டிய வரத்தால் வள்ளல்,
இன்னருளோடு நீங்கா தென்றும் வீற்றிருத்த லாலே,

[தொடர்ச்சி 707 ஆம் பக்கம் பார்க்க]

தடுமாறுதல்—தடுமாற்றம் அடைதல்—சஞ்சலம் உறுதல்—கொஞ்சமேனும் ஒருநாள் கூட இந்த உலகத்தில் நீங்காத—என்றும் சஞ்சலத்துக்கே இடமான—(இந்த) உடம்பை உடைய அடியேன்—

(பசு) தற்போதத்தையும் — அகங்காரத்தையும், (பாசம்) பந்தங்களையும் விட்டு, ஞானத்தால் (அறியப்படு) அறியப்படுகின்ற 'பூரணமானதும்', உருவமில்லாததுமான

(பதிபாவனை) — பரம்பொருளாம் கடவுள் தியானத்தை மேற்கொண்டு அனுட்டித்து, (அநுபூதியில்) அந்த அனுபவ ஞானத்தில் (அப்படியே) மறுபடி மீளாவண்ணம் (என் சிந்தனை மாருதவண்ணம்— அந்தத் தியான நிலையிலேயே) என்னை ஒப்படைத்துச் சேர்ப்பித்து அருள்புரிவாயாக,

(அசலேசுரர்) (கயிலை) மலைக் கடவுளாம் சிவனது புத்திரனே (அல்லது—அசைவற்றிருக்கும் ஈசனும்-தாணுவாம்—சிவனது புத்திரனே)! குணதிக்கு—கிழக்குத் திசையில் தோன்றும் (அருணோதய) உதய சூரியனது ஒளிபோன்ற ஒளியை உடையவனே! முத்தமிழ்க் கடவுளே!

சகல ஆகமங்களிலும் வல்லவனே! குற்றமற்றவர்கள் வாழும் வயலூர் என்னும் அழகிய ப்ரதேசத்தில் வீற்றிருப்பவனே!

உள்ளங் கசிபவர்களுடைய மனத்தில் ஊறுகின்ற அமிர்தமே! (மதுபம்) வண்டு மொய்க்கின்ற தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டுள்ள பிரமனுக்கு மைத்துன முறையில் உள்ள வேளே!

அன்னதோர் இலிங்க மூர்த்திக் கசலேசன் என்னும் நாமம்,
உன்னருந்தவத்தின் மிக்கீர் உலகினிற் பொலிந்த தன்றே"
—(திருவாரூர்ப் புராணம்—அசலேசச் சருக்கம்) 28.

o "கதிராயிர அருணோதய!"—திருப்புகழ் 913.
"ஞாயிறு கடற் கண்டாஅங் கோவற இமைக்கும் சேண் விளங்கவிர் ஒளி"—திருமுரு. 'சதகோடி சூரியர்கள் உதய மென...சோதி'—சீர்பாத வகுப்பு.

oo "கருதுவார் இதயத்துக் கமலத் தூறும் தேனவன் காண்"
"உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை"
—அப்பர் 6-87-1 6-84-3.

†† பிரமன் மைத்துன வேள்—பாடல் 823-பக். 422 கீழ்க்குறிப்பு

கருணு கரசற் குருவே குடகிற்
கருவூ ரழகப் பெருமாளே. (௩)

930. உயர் வாழ்வுற

தத்தத் தனதன தானன தானன
தத்தத் தனதன தானன தானன
தத்தத் தனதன தானன தானன தனதான

நித்தப் பிணிகொடு மேவிய காயமி
*தப்புப் பிருதிவி வாயுவு தேயுவு
நிற்பொற் ககனமொ டாமிவை பூதக லவைமேவி-

நிற்கப் படு†மல காளவு மாகரி
டத்தைக் கொளவுமெ னாடிடு மோடிடு
நெட்டுப் பணிகலை பூணிடு ‡நானெனு மடவாண்மை;

எத்தித் திரியுமி தேதுபொ யாதென
வுற்றுத் தெளிவுண ரா்துமெய் ஞானமொ
டிச்சைப் படஅறி யாதுபொய் மாயையி லுழல்வேனை-

எத்திற் கொடுxநின தாரடி யாரொடு
முய்த்திட் டுனதரு ளாலுயர் 0ஞானமு
திட்டுத் திருவடி யாமுயர் வாழ்வுற இனிதாள்வாய்;

தத்தத் தனதன தானன தானன
தித்தித் திமிதிமி தீதக தோதக
டத்தக் குடகுகு தாகுட திகுட வெனபேரிச்-

---

* "ஐம்பூதத்தால் ஆயது உடல்—பாடல் 876-அடி 1. பார்க்க.

† உலகாளவும் நாடுவர் — "ஐம்பெருமா பூதங்காள்! இவ் வவனியெல்லாம் உம்பரமே உம் வசமே ஆக்கவல்லீர்". "ஐயோ வையகமே போதாதே"—அப்பர் 6-27-2,4.

‡ "நான் நான் இங்கெனும் அகந்தை எனக்கேன் வைத்தாய்" —தாயுமா-பன்மாலை 5. நானு எனவரு முத்திரை—திருப்புகழ் 1146.

x "அடியாரொடு சேர்ப்பாயலையோ" — என்றூர் 685-ஆம் பாடலிலும்; இந்த வேண்டுகோள் அருணகிரியார்க்குக் கை கூடிற்று என்பது

"போதமிலேனை அன்பாற் கெடுதலிலாத் தொண்டரிற்
கூட்டியவா......வேலோன்"—என்னும்

[தொடர்ச்சி 709 ஆம் பக்கம் பார்க்க]

கருணாகரனே! சற்குரு மூர்த்தியே! (குடகு) மேற்குத் திசையில் உள்ள **கருவூரில்** வீற்றிருக்கும் அழகுப் பெருமாளே!

(அநுபூதியில்...அடைவித் தருள்வாயே)

930.

நாள் தோறும் பிணியுடன் கூடிய தேகம் இது; இது (அப்பு) நீர், (பிருதிவி) மண், வாயு, (தேயு) அக்கினி, (நில்) உள்ளதான (பொன்) பொலிவுள்ள (ககனம்) ஆகாயம் எனப்படும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் உண்டாகி

நிற்கப்படும்—நிற்கின்ற தொன்ருகும்; உலகமெல்லாம் ஆளவேண்டும், (மாகர்) விண்ணவர் இடத்தையும் (மேலுலகத்தையும்) கொள்ளவேண்டும்—என்னும் ஆசை கொண்டு (நாடிடும்) அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளும்; ஓடிடும்—அதற்காக அங்கும் இங்கும் ஓடி அலையும்; (நெட்டு) செருக்குடன் ஆபரணங்களையும், ஆடைகளையும் அணிந்து கொள்ளும்; "நான்" என்கின்ற முட்டாள்தனமான (ஆண்மை) அகங்காரத்துடன்

வஞ்சித்துத் திரியும்; இது ஏது—இது என்ன! அல்லது — இந்நிலை ஏதும் சற்றும் பொய்யாது — பொய்யாகாது, நிலைத்திருக்கும், என்று திடமாக நினைத்துத் தெளிவான உண்மையை உணராமல், மெய்ஞ்ஞானத்தை விரும்ப அறியாமல், பொய்யான மாயையிலேயே அலைச்சல் உறுகின்ற என்னை

(எத்தில் கொடு) தந்திரமாக ஆட்கொண்டு உன்னுடைய அடியார்களுடன் என்னைக் கொண்டு சேர்ப்பித்து, உன் திருவருளால் சிறந்த ஞான அமுதத்தை (இட்டு) அளித்து, (உனது) திருவடியாகிய மேலான வாழ்வை நான் அடையும்படி இனிதே ஆண்டருளுக;

தத்தத் தனதன தானன தானன......தாகுட தீகுட என்று (ஒலிக்கும்) பேரி—முரசின்

கந்தரலங்காரச் செய்யுளால் (100) தெரிகின்றது; அடியாரொடு கூடப் பெறுதலே பெரும் பேற்றினுட் பேறு.

"அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே"—என்ருர் மணிவாசகரும்-

o அருணகிரியார்க்கு இங்கு விரும்பியவாறே ஞான அமுது கிடைக்கப் பெற்றதைப் பாடல் 814-கூறும்.

சத்தத் தொலிதிகை தாவிட வானவர்
திக்குக் கெட்வரு சூரர்கள் தூள்பட
சர்ப்பச் சதமுடி நாணிட வேலதை யெறிவோனே;

வெற்றிப் பொடியணி மேனியர் *கோகுல
சத்திக் கிடமருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணிய ரருள்பாலா-

வெற்புத் தடமுலை யாள்வளி நாயகி
சித்தத் தமர்கும ராஎமை யாள்கொள
வெற்றிப் புகழ்கரு வூர்தனில் மேவிய
பெருமாளே. (௨)

931. மாதர்களின் சேர்க்கை யற

தத்தன தத்த தனதன, தத்தன தத்த தனதன
தத்தன தத்த தனதனத் தனதான

முட்டம ருட்டி யிருகுழை தொட்டக டைக்க ணியலென
மொட்பைவி ளைத்து முறையளித் திடுமாதர்-

முத்தமி ரத்ந மரகதம் வைத்தவி சித்ர முகபட
மொச்சிய பச்சை யகில்மணத் தனபாரம்;

கட்டிய ணைத்து நகநுதி பட்டக ழுத்தி விறுகிய
கைத்தல மெய்த்து வசனமற் றுயிர்சோருங்-

கட்டமு யக்கி னநுபவம் †விட்டவி டற்கு நியமித
கற்பனை பக்ஷ முடனளித் தருளாதோ;

---

* கோகுலம்-கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி. 'ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய அஞ்சன வண்ணன்'—பெரியாழ்வார் 1-7-11.

"மாலை இடப்பாகத்தே மருவக் கொண்டார்"—அப்பர் 6-96-3.

† 'விட்டு விடற்கு' என்றும் பாடம். (விட்டு விடற்கு-விடுதற்கு)

(சத்தத்தொலி) — பேரொலி திசைகளைக் கடந்து தாவிச் செல்ல, தேவர்கள் வாழும் திசைகள் கலங்கிக் கெட, வந்த சூரர்கள் தூளாகச், (சர்ப்பம்) (ஆதிசேடனது நூற்றுக் கணக்கான பணமுடிகள் (நாணிட) அச்சம் கொள்ள வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

ஜெயத்தையே தரும் திருநீற்றை அணிந்த திருமேனியர், (கோகுல சத்தி) ஆயர்பாடியில் வளர்ந்த சத்தி (கிருஷ்ணனுக்குத்—திருமாலுக்குத்—தமது இடது பாகத்தைத் தந்தருளிய ஆத்திமாலைச் சடையர், வெற்புப் புரம்—மலை போன்ற திரிபுரங்கள் சாம்பலாம்படிக் கண்டவர்—ஆகிய சிவபிரான் அருளிய குழந்தையே!

மலைபோன்ற பெரிய கொங்கையளாம் வள்ளி நாயகியின் உள்ளத்தில் வீற்றிருக்கும் குமரனே (அல்லது வள்ளிநாயகி உனது உள்ளத்தில் இருக்கப்பெற்ற குமரா)! எம்மை ஆட்கொள்ள ஜெயப் புகழ் விளங்கும் **கருவூரில்** வீற்றிருக்கும் பெருமாளே! (உயர் வாழ்வுற இனி தாள்வாய்)

931.

முழுதும் (மருட்டுவதாகி) மயக்குவதாகி இரண்டு காதின் குழைகளையும் தொடுகின்ற கடைக் கண்ணின் தன்மை யிதுவே என்று (காண்பார்தம்) (உள்ளத்தில் மொள்ளுதலை உண்டுபண்ணி), உள்ளத்தை மொண்டு கவர்ந்து, (முறை) உறவு முறையைக் கூட்டி வைக்கின்ற (பொது) மாதர்களின்——

முத்து, ரத்னம், மரகதம் இவை வைத்து ஆக்கப்பட்ட (விசித்ரமான) விநோதமான (முகபடம்) முன்னே அணிந்துள்ள ஆடை—மேலாடை (மொச்சிய) நெருங்கிச் சுற்றியுள்ளதும், பசிய அகிலின் நறுமணம் கொண்டதுமான கொங்கைப் பாரங்களைக்

கட்டியணைத்து, நகங்களின் நுனி பட்டுள்ள கழுத்தில் அழுத்தமாக அணைத்த கைகள் சோர்ந்து, பேச்சும் சோர்ந்து, உயிரும் சோரும்படியான—

கஷ்டமான (முயக்கின்) புணர்ச்சித் தொழிலின் அனுபவத்தை விட்டு ஒழித்த இந்த விடற்கு—(விடனுக்கு) தூர்த்தனுக்கு — காமுகனுக்கு — [நியமித] வகைப்பட்ட [கற்பனை] சங்கற்பம் ஒன்றை — ஒழுக்க நெறி ஒன்றை அன்புடனே தந்தருளாதோ [உனது திருவருள்]!

வெட்டிய கட்க முனைகொடு வட்டகு ணத்து ரணமுக
விக்ரம வுக்ர வெகுவிதப் படைவீரா-
வெற்றியை யுற்ற குறவர்கள் பெற்றகொ டிக்கு மிகமகிழ்
வித்தக *சித்த †வயலியிற் குமரேசா;
கிட்டிய பற்கொ டசுரர்கள் மட்டற வுட்க வடலொடு
‡கித்திர டக்கு மலகைசுற் றியவேலா-
xகெட்டவ ருற்ற துணையென நட்டருள் சிட்ட oபசுபதி
**கெர்ப்பபு ரத்தி லறுமுகப் பெருமாளே. (ரு)

932. விதியை நினைந்து ஒழுக

தந்தன தனன தனதாத்தன
தந்தன தனன தனதாத்தன
தந்தன தனன தனதாத்தன தனதான

சஞ்சல சரித பரநாட்டர்கள்
மந்திரி குமரர் படையாட்சிகள்
சங்கட மகிபர் தொழஆக்கினை முடிசூடித்-

---

* சித்தன்—இது முருகக் கடவுளின் ஆயிர நாமத்துள் ஒன்று. "சித்தன் வாழ்வு" என்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி யென்று பெயர் பெற்ற தென்றுமாம்; "சித்தன் என்பது...பிள்ளையாருக்குத் திருநாமம்" (திருமுருகாற்று ... உரை); பிள்ளையார்—முருகவேள்; 'சித்த' பாடல் 355-ல் "விராலி சித்ர மலைமேல் உலாவு சித்த"—என்றார்.

† கருவூருக்குக் கிடைத்த எழு பாடல்களில் 4 பாடல்களில் வயலூர் வருவதால்—வயலூரைத் தரிசித்த அண்மைப் பொழுதிற் கருவூரை அருணகிரியார் தரிசித்திருத்தல் வேண்டும்.

‡ கித்தி—"கித்தி நின்றாடும் அரிவையர் தெருவிற்
கெழுவு கம்பலை செய் கீழ்க் கோட்டூர்
—திருவிசைப்பா 10-11.

x கெட்டவர் - 'நான்' என்பது கெட்டவர்; ஆணவம் அற்றவர் -
"ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ"
—திருவாசகம் 11-18.
"அற்றவர்கள் நற்றுணைவன்"—சம்பந்தர் 3-68-2.

o கருவூரிற் சிவபிரான் திருநாமம் 'பசுபதீசுரர்'. பசு—காமதேனு பூசித்துச் சிருட்டித் தொழில் செய்ய வரம் பெற்று

[தொடர்ச்சி 713 ஆம் பக்கம் பார்க்க.]

வெட்டவல்ல [கட்கம்] வாளின் முனை கொண்டு—அட்ட குணத்து — [பகைவர்களை] அழித்த குணங்கொண்ட (விக்ரம)! [ரணமுக] போர் முகத்து—[போரில்] (விக்ரம) பராக்ரமனே! [உக்ரனே] கோபம் கொள்பவனே! பலவிதமான ஆயுதங்களை உடைய வீரனே!

ஜெயம் பெறுபவர்களான குறவர்கள் பெற்ற, கொடி—கொடி போன்ற வள்ளியின்மீது மிக்க மகிழ்ச்சி கொள்ளும் [வித்தகனே] பேரறிவாளனே! சித்த மூர்த்தியே! வயலூரில் வீற்றிருக்கும் குமரேசனே!

[கிட்டிய பற்கொடு] அச்சத்தால் [தங்கள்] பல் ஒன்றோடொன்று பட்டு இறுகும்படி அசுரர்கள் அளவு கடந்து பயப்பட, [அடலொடு] வலிமையோடு [அல்லது வெற்றியுடன்] கித்தி நடக்கும்] ஒற்றைக்காலால் தாவி நடக்கும் பேய்கள் சூழ்ந்துள்ள வேலனே!

[கெட்டவர்] ஆணவம் அழிந்தவர்களுக்கு உற்ற துணையாக இருந்து அவர்களை விரும்பி நட்பு பூண்டு திருவருள் பாலிக்கும் சிட்டனே! [சிரேஷ்டமானவனே]! பசுபதீசுரர் என்னும் திருநாமங்கொண்ட சிவபிரானது தலமாகிய கெர்ப்ப புரத்தில் (கருவூரில்) வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமாளே!

[நியமித கற்பனை ...அளித்தருளாதோ]

932.

துன்ப சரித்திரத்தைக் கொண்ட [பர நாட்டர்கள்] பிறதேசத்தவர்களும், மந்திரிகளும், குமரர்படையாட்சிகள்—இள வீரர்களைக் கொண்ட படைத் தலைவர்களும், கஷ்ட நிலையில் இருந்த அரசர்களும், தொழுது நிற்க, [ஆக்ஞை] கட்டளை செலுத்த வல்ல [ஏக சக்ராதிபதியெனும்] திருமுடியைச் சூடிக்கொண்டு

அகிலமும் அளித்த காரணத்தால், ஊர் 'கருவூர்' என்றும், சுவாமி "பசுபதி" என்றும், கோயில் 'ஆநிலை' என்றும் பெயர் பெற்றன.

"ஆனடுத்துயர் பூசனை யாற்றி அகிலமும்
தானளித் தலினுற் கருவூ ரெனத் தக்கது
வானடுத் தெழும் வஞ்சி பசுபதி யாயினர்
பான நஞ்சினர் பாழியும் ஆனிலை ஆயிற்றே"

—பேரூர்ப் புராணம்-குழகன் குளப்பு-120.

°° கெர்ப்ப புரம்—கரு வூர்.

தண்டிகை களிறு பரிமேற்றனி
வெண்குடை நிழலி லுலவாக்கன
சப்ரம விபவ சவுபக்கிய முடையோராய்க் ;

குஞ்சமும் விசிற இருமாப்பொடு
பஞ்சணை மிசையி லிசையாத்திரள
கொம்புகள் குழல்கள் வெகுவாத்திய மியல்கீதங்-

கொங்கணி மகளிர் பெருநாட்டிய
நன்றெனமனது மகிழ்பார்த்திபர்
கொண்டய னெழுதும் யம*கோட்டியை புணராரே ;

†பஞ்சவர் கொடிய வினை நூற்றுவர்
வென்றிட சகுனி கவருற்பொருள்
பங்குடை யவனி பதிதோற்றிட அயலேபோய்ப்-

பண்டையில் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருஷ முறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு வருளாலே ;

வஞ்சனை நழுவி நிரைமீட்சியில்
முந்துத முடைய மனைவாழ்க்கையின்
வந்தபி னுரிமை யதுகேட்டிட இசையாநாள்-

மண்கொள விசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருக வயலூர்க்குக
வஞ்சியி லமரர் சிறைமீட்டருள் பெருமாளே. (சா)

---

* யமலோகத்திற் படவேண்டிய துன்பங்கள். கோட்டி-துன்பம்

† பின் நான்கு அடிகள் 'பாரத கதை'ச் சுருக்கமாம். துரியோதனுதிகள் சகுனியின் உதவி கொண்டு சூதாட்டத்திற் பஞ்ச பாண்டவர்களை வென்றதும், (நாடிழந்த) பாண்டவர்கள் சூதாட்டத்திற் செய்த சபதம் தவருதபடி பன்னிரண்டு வருஷம் காட்டிற் காலங் கழித்துப் பதின்மூன்ரும் வருஷம் அஞ்ஞாதவாசம் செய்ததும், அஞ்ஞாதவாசம் முடிந்தபின் விராடன்நாட்டில் துரியோதனன் படைகளால் கவரப்பட்ட நிரையை அருச்சுனன் மீட்டதும், பின்பு பாண்டவர்கள் தங்கள் பாகத்தைத் துரியோதன னிடம் கேட்க, அவன் இணங்காததால் இருதிறத்தார்க்கும் போர் நிகழ, அப்போது அருச்சுனனுடைய தேரிற் சாரதியாக அமர்ந்து கண்ணபிரான் தேரைச் செலுத்தினதுமான வரலாறு இங்கு கூறப் பட்டுளது.

(தண்டிகை) பல்லக்கு, யானை, குதிரை, இவைகளின் மேல் ஏறி வீற்றிருந்து, தனிப்பட்ட—ஒப்பற்ற—வெள்ளைக் குடை நிழலிற் செல்பவராய்ப், பெருமை தங்கிய சிறப்புற்ற, செல்வ வாழ்வான, மிக்க பாக்கிய நிலையைக் கொண்டவராய்

(குஞ்சமும்) ஈயோட்டி எனப்படும் விசிறி வீசச், செருக்குடனே பஞ்சணை மெத்தையில் வீற்றிருந்து, நிரம்பின ஊது கொம்புகள், குழல்கள் முதலான பலவித வாத்தியங்களினின்றும் எழுகின்ற இசை ஒலி பெருக—

நறுமணம் கமழும் பெண்களின் விசேட நாட்டியங்களைப் பார்த்து, இவை நன்றாயுள்ளன என்று மனம் மகிழும் பெரிய ராஜாக்கள் — (அயன்) பிரமன் (கொண்டு) இவர்களைத் தனது கணக்கிற் கொண்டு (உட்படுத்தி) எழுதியுள்ள (யமகோட்டியை) யமன் படுத்தப் போகின்ற துன்பங்களை மனத்தில் அறிகின்றாரில்லையே (அல்லது) அறிகின்றாரில்லையோ)

தருமன் முதலாய பஞ்ச பாண்டவர்கள்-கெட்டசெயலைக் கொண்ட துரியோதனாதிகள் நூற்றுவரும் வெற்றிகொள்ளச் சகுனி என்பவன் ஆடிய சூதாட்டத்தினால் தங்கள் பொருளையும், பாகமாய் இருந்த பூமியையும் ஊர்களையும், தோற்றுப்போனதால், நாட்டைக்கடந்து வேற்றிடத்துக்குச் சென்று,

பழைய தமது வினையை நினைத்துப் பன்னிரண்டு வருஷம் அங்கே காலம் கழித்து, பலவகைப்பட்ட விதங்களில் (மறைவின் முறையால்) அஞ்ஞாத வாசமாகத் (தாங்கள், இருக்கும் இடம் யாவரும் அறியாத வகையில் வாசஞ் செய்து) (இறைவன்) திருவருளால்—

(வஞ்சனை) சபத நாள் (13 ஆண்டும்) நழுவி—நழுவ—நீங்க (முடிவு பெற), நிரைமீட்சியில் — (கவரப்பட்ட) பசுக்களை மீட்டபின், முன்பு தங்களுக்கு இருந்த இல்லற நிலையில் வந்த பின்பு, தங்களுக்கு உரிய பாகத்தைக் கேட்க, அதற்குத் (துரியோதனன்) இசையா(த) நாளில்—இணங்காத நாளில்—இணங்காதபோது—

அவர்கள் பாகத்துப் பூமியைப் பெறும்படி, அருச்சுனன் விட்ட தேரின் குதிரையைச் செலுத்தின (திருமாலின்) மருகனே! வயலூர்க் குகனே! (வஞ்சியில்) **கருவூரிற்** பெருமாளே! தேவர் சிறை மீட்டருளிய பெருமாளே!

(பார்த்திபர் யமகோட்டியை உணராரே)

933. சொரூப தரிசனம் பெற

தனதன தந்தன தாத்தன, தனதன தந்தன தாத்தன
தனதன தந்தன தாத்தன தனதான

முகிலள கஞ்சரி யாக்குழை யிகல்வன கண்சிவ வாச்*சிவ
முறுவல்மு கங்குறு வேர்ப்பெழ வருபோக-

முலைபுள கஞ்செய வார்த்தையு நிலையழி யும்படி கூப்பிட
முகுளித பங்கய மார்க்கர நுதல்சேரத்;

துயரொழு குஞ்†செல பாத்திர மெலியமி குந்துத ராக்கினி
துவளமு யங்கிவி டாய்த்தரி வையர்தோளின்-

துவயலி னின்றன வ்யாத்தமும் ‡வயலியல் வஞ்சியில் மேற்பயில்
சொருபமு நெஞ்சிலி ராப்பகல் மறவேனே;

சகலம யம்பர மேச்சுரன் மகபதி யுய்ந்திட வாய்த்தருள்
சரவண சம்பவ தீர்க்கஷண் முகமார்கிச்-

சருவுக்ர வுஞ்சxசி லோச்சய முருவவெ றிந்தகை வேற்கொடு
சமர முகந்தனில் oநாட்டிய மயிலேறி;

அகிலமு மஞ்சிய வாக்ரம விகடப யங்கர ராக்கத
அசுரர கங்கெட **வார்த்திடு கொடிகூவ-

---

* சிவம்—சந்தோஷம்.

† செலம்—நீர்—'செல சரமாகிய பலவும்'
—கம்பராமா-சடாயுகாண் 28.

‡ 'வயலியில்' என்றும் இருந்திருக்கலாம்.

x சிலோச்சயம்—மலை—(பாடல் 990-அடி 5.)

o 'நடநவில் மரகத துரகதம்', நடமிடு மா, நடன விதமயில்
—(பாடல் 1246, 422, 692 பார்க்க).

** ஆர்த்திடு கொடி கூவ:—'எரி தழற் பண்ணவன், வாவு குக்குட, மாண்கொடி யாகியே, தேவ தேவன் திருநெடுந் தேர்மிசை, மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட'—கந்தபுரா 4-13-206.

933.

மேகம் போன்ற கூந்தல் சரிய, (காதிலுள்ள) குழையொடு பகைத்து வருவன போன்ற கண்கள் (சிவவா) சிவக்க, மகிழ்ச்சியைக் காட்டும் புன்சிரிப்புடன் கூடிய முகத்திற் சிறு வியர்வை தோன்ற—இன்ப நுகர்ச்சிக்கு இடமான—

கொங்கைகள் புளகம் கொள்ள, பேசும்பேச்சும் நிலைத்து நில்லாத வழியில் எழ—பதறுவது போல எழ — (முகுளித பங்கயமா) குவிந்த தாமரையாக – தாமரை போலக் கைகள்– அல்லது தாமரைபோன்ற அழகிய கைகள்-நெற்றியிற் சேரத்

(துயர் ஒழுகும்) துன்பமே பெருகுவதும், (செல பாத்திரம்) நீரொடு கூடியதுமான (பாத்திரம்) கொள்கலமாம், இந்த உடல் மெலிந்து (உதராக்கினி மிகுந்து) வயிற்றில் எரி அதிகமாகித் துவண்டுபோகும் அளவுக்கு — துவட்சி — சோர்வு உறும் அளவுக்கு—(முயங்கி) தழுவிப் புணர்ந்து, (விடாய்த்து) களைப்பு அடைந்து, (அவ்வாறு) மாதர்களின் தோள்களில்

(துவயலி) துவையல் போல உழக்கப்பட்ட அரைபட்ட நான், (நின்தன) உன்னுடைய (வியாத்தமும்) எங்கும் நிறைந்துள்ள தன்மையையும்—கீர்த்தியையும், (வயலியல்) வயல்கள் பொருந்திய (வஞ்சியில்) மேல் — **கருவூரில்** (பயில்) பொருந்தி விளங்கும் உனது (சொரூபமும்) வடிவழகையும் (எனது) நெஞ்சில் இரவும் பகலும் மறக்க மாட்டேன்;

எங்கும் நிறைந்த பொருளாம் பரமேசுரன் (மகபதி) இந்திரன் உய்யும் பொருட்டு நேர்ந்து அருளின (தோற்றுவித்த) சரவணபவனே! (தீர்க்க) அறிவுத் தெளிவும் வசீகரமும் காட்டும் ஆறு திருமுகங்களைக் கொண்டவனாகி—

(சருவு) போராடிய கிரவுஞ்ச (சிலோச்சயம்) மலையை ஊடுருவிச் செல்லும்படி எறிந்த திருக்கை வேல் கொண்டு, (சமர முகந்தனில்) போர்க்களத்திலே (நாட்டிய மயில்) நடனம் செய்யும் மயிலில் ஏறினவனாய்

எல்லாரும் பயப்படும்படியான ஆக்ரம — ஆக்ரமித்தலையும் (வலிய கவர்தலையும்), அல்லது அக்ரமத்தையும் — அநீதத்தையும், (விகடம்) தொந்தரையையும், (பயங்கரம்) அச்சத்தையும் தந்த ராக்ஷத அசுரர்களின் அகங்காரம் அழிய (கொடியில் விளங்கின) கோழி கூவ—

அமரர டங்கலு மாட்கொள அமரர்த லங்குடி யேற்றிட
அமரரை யுஞ்சிறை மீட்டருள் பெருமாளே. (எ)

நெருவூர்.

[கருவூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 6-மைல்]

934. திருவடி மறவேன்

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

குருவு மடியவ ரடியவ ரடிமையு
மருண மணியணி கணபண விதகர
குடில *செடிலினு நிகரென வழிபடு குணசீலர்

குழுவி லொழுகுதல் தொழுகுதல் விழுகுதல்
அழுகு தலுமிலி நலமிலி பொறையிலி
குசல கலையிலி தலையிலி நிலையிலி விலைமாதர்;

†மருவு முலையெனு மலையினி லிடறியும்
அளக மெனவள ரடவியில் மறுகியு
மகர மெறியிரு ‡கடலினில் முழுகியு முழலாமே-

xவயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே;

---

* செடில்—பிரார்த்தனைக்காக முதுகின் தோலில் கொக்கியைச் செலுத்தி அந்தக் கொக்கியை அதற்கென நாட்டப்பெற்ற நீண்ட கழையில் மாட்டி ஒருவனைத் தூக்கியாட்டுங் கருவி.

† 'சிகரியூடு தேமாலை அடவியூடு' என்றார் முன்னும் (பாடல் 916-அடி 2). ‡ கடல்-கண்-'கடல்போற் கணை விழி'-பாடல் 909.

x இது அருணகிரியாரின் வரலாற்றை அறிவிப்பது; அவரது நன்றி மறவாமையையும் விளக்குவது.

தேவர்கள் எல்லாரையும் ஆட்கொள்ளவும், தேவர் தலமாம்—பொன்னுலகத்தில் (அவர்களைக்) குடியேற்றிடவும், தேவர்களைச் சிறையினின்றும் மீட்டருளிய பெருமாளே!

(சொருபமும்... இராப்பகல் மறவேனே)

நெருவூர்

934.

ஆசாரிய நிலையினும், அடியவர் — சீடனாயிருக்கும் நிலையினும், (அடியவர் அடிமையும்) அந்தச் சீடருக்கு அடிமையாயிருக்கும் நிலையினும், சிவந்த ரத்தினங்களைக் கொண்டுள்ள கூட்டமான படங்களை உடைய பாம்பின் (விதகர) தன்மை அமைந்த—(மிகக் கொடிய என்றபடி) (குடில) வளைவுள்ள (செடிலினும்) செடிலாட்டக் கருவியிலிருக்கும் நிலையினும்—(நிகரென)—ஒப்ப நினைக்கும்—மனம் அடங்கி ஒருமைப்பட்டு நின்று—உன்னையே வழிபடுகின்ற நற்குண சீலர்களுடைய—

கூட்டத்தை அனுசரித்துக் நடத்தல், போற்றுதல், விழுந்து வணங்குதல், அங்குப் [பத்திப் பரவசத்தால்] அழுதல், இவை ஒன்றும் இல்லாதவன், நன்மை ஒன்றும் பெறுதற்கிலாதவன், பொறுமையில்லாதவன், க்ஷேமத்தைத் தரும் நூல்களைப் படியாதவன், (தலையிலி) சிறப்பானது ஒன்றும் (அல்லது மூளை) இல்லாதவன், நிலைத்த புத்தியில்லாதவன், பொதுமாதர்கள்

கொண்டுள்ள கொங்கையென்னும் மலையினில் இடறி விழுந்தும், கூந்தல் என்னும் பெயரொடு வளர்கின்ற காட்டில் மனம் கலக்கமுற்றுத் திரிந்தும், மகரமீன் போன்ற குழைகளைத் தாக்கும் இரண்டு [கண் எனும்] கடலில் முழுகியும், அலைச்சல் உருமல்—

வயலூர்ப் பதியில் [அடியேன்] உனது திருவருளைப் பெற்று மகிழ, நீ மயில்மீது வந்து உதவின—அளித்ததான—நறுமணம் வீசுவதும், [வெகுவித மதுகரம்] பலவிதமான வண்டுகள் மொய்ப்பதுவுமான [உனது] தாமரை மலர் போன்ற திருவடியைக் கனவிலும் மறவேன், நனவிலும் [விழித்திருக்கும்போதும்] மறவேன்; [சொப்பன நிலையினும் சாக்கிர நிலையினும்—எப்போதும் என்றபடி] மறவேன்.

*உருவு பெருகயல் கரியதொர் முகிலெனு
மருது நெறிபட முறைபட †வரைதனில்
உரலி னுடுதவழ் விரகுள இளமையு மிக‡மாரி-

உமிழ நிரைகளி னிடர்கெட வடர்கிரி
கவிகை யிடவல மதுகையு நிலைகெட
xவுலவில் நிலவறை யுருவிய வருமையு மொருநூறு-

நிருப ரணமுக வரசர்கள் வலிதப
0விசயன் ரதமுதல் நடவிய வெளிமையு
நிகில செகதல முரைசெயு மரிதிரு மருகோனே-

நிலவு சொரிவளை வயல்களு நெடுகிய
குடக தமனியு நளினமு மருவிய
நெருவை நகருறை திருவுரு வழகிய பெருமாளே. (க)

---

* கண்ணபிரான் மருது முறியத் தவழ்ந்தது
—பாடல் 143-பக்கம் 332 கீழ்க்குறிப்பு.

† 'வரைதனில் உரல்'—"பெருமா உரலிற் பிணிப்புண்டிருந்து, இருமா மருதம் இறுத்த இப் பிள்ளை"—பெரியாழ்வார் 1-2-10. 'பொய்ம்மாய மருதான அசுரரைப் பொன்றுவித்து'—பெரியாழ்வார் 3-1-3.—(அசுரர்-கரிய நிறத்தவர்).

‡ மலை குடையாக நிரை காத்தது :
—பாடல் 145-பக்கம் 336 கீழ்க்குறிப்பு.

x கண்ணபிரான் நிலவறை உருவியது :—பாண்டவருக்காகக் கண்ணபிரான் துரியோதனனிடம் தூது சென்றபோது, துரியோதனன் குழியொன்று பறித்து, அந்தக் குழியில் அரக்கர்களையும் மல்லர்களையும் இருத்தி, அந்தக் குழியின் மேல் ஆசனம் வகுத்து அவரை இருக்க என்றான் ; அவர் அதன் மிசை இருத்தலும் அந்த ஆசனம் நெறு நெறெனை அந்த நில அறையிற் புக்கது. இந்த மோசத்தைக் கண்ட கண்ணபிரான் கோபங் கொண்டு, விசுவரூபம் கொண்டு, அங்கிருந்த மல்லர், அரக்கர் முதலிய வீரர்கள் யாவரையும் சின்ன பின்னமாக்கி அழித்தனர்.

"தவிசி னிருத்தலுமே, நெறு நெறெனக் கொடு நில அறையிற் புக நெடியவன் அப்பொழுதே...வஞ்சனை நன்றிதெனு... வெகுண்டு...உலகொன்று படும்படி நின்று நிமிர்ந்தனனே. நிலத்தறை மேவிய வீரரெலாம்...கல்லென உட்கினர் தத்தம் உடற் பல கால் கொடுதைத்திடவே; ஆயிரம் ஆயிரம் அங்கை புறப்பட அண்டரு மாதவரும், பாயிர நான்மறை பாடி வியந்து பணிந்து புகழ்ந்தனரே." வில்லி-கிருஷ்ணன் தூது 191-208.

[தொடர்ச்சி 721 ஆம் பக்கம் பார்க்க]

உருவம் பெரியதாய், [அயல்] பக்கத்திலிருந்த கரிய ஒரு மேகம் போன்ற மருதமரம் தாம் செல்லும் வழியில் ஒடிபட்டுவிழ, [முறைபட] அதனால் நீதி வெளிப்பட, மலை போன்ற உரலினுடன் தவழ்ந்து சென்ற சாமர்த்தியம் கொண்ட இளமை அழகையும், நிரம்ப [மாரி] மழை

பொழியப், பசுக் கூட்டத்தின் துயர் நீங்க, நெருங்கிய (கோவர்த்தன) மலையைக் (கவிகை) குடையாகப் பிடிக்கவல்ல (மதுகையும்) வலிமையையும், நிலை தடுமாற உலவுதற்கு வழியில்லாததுமான பாதாள அறையில் விசுவரூபத்துடன் தோன்றி எழுந்த அருமையையும் (பெருமையையும்), ஒப்பற்ற நூறு-

(நிருபர்) அரசர்கள் (துரியோதனாதியர் நூறு பேரும்) போர்க்களத்தில் உற்ற மற்ற அரசர்களும் வலிமை கெட்டொழிய அருச்சுனனுடைய தேரை முன்பு செலுத்தி ஓட்டின சௌலப்பியத்தையும் (அடியார்க்கு உதவும் எளிமைக் குணத்தையும்), எல்லாப் பூமிகளும் புகழ்ந்து உரைக்கும் திருமாலின் திருமருகனே!

ஒளி வீசுகின்ற சங்குகள் உள்ள வயல்களும், நீண்டுள்ளனவும் மேற்குத் திசையில் உள்ளனவுமான (தமனியும்) வன்னிமரங்களும், தாமரையும் (அல்லது தண்ணீரும்) பொருந்திய **நெருவூர்ப்** பதியில் வீற்றிருக்கும் பெருமாளே! திருவுருவம் அழகிய பெருமாளே!

(மலரடி கனவிலு நனவிலு மறவேனே)

(தொடர்ச்சி) ο துரியோதனன், அருச்சுனன் இருவரும் போரில் நீ துணை செய்ய வேண்டுமென்று கண்ணபிரானை வேண்டினர். அப்போது துரியோதனன் "போரில் நீ (படை) ஆயுதம் ஒன்றும் எடுக்காமல் இருக்கவேண்டும்" எனக் கண்ணபிரானை வேண்டினன். கண்ணபிரான் சரி என்று ஒத்துக்கொண்டு அருச்சுனனைப் பார்த்து உனக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டனர். அருச்சுனன் "ஐயனே! நீ எனக்குத் தேர்ப்பாகனாக இருந்தால் யான் யாரையும் வெல்வேன்" என்றனன். கண்ணபிரான் துரியோதனனை நோக்கி, 'நான் இந்த அருச்சுனனுக்குத் தேர்ப்பாகன் வேலை செய்வது தவிர, ஆயுதம் செலுத்தி உங்களோடு போர் செய்வதில்லை' எனக் கூறித் தம்மைத் தவிர யாதவசேனை அனைத்தையும் துரியோதனனுக்கு உதவியாகத் தந்து துரியோதனனை அனுப்பினர்.

"நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற் கூர்வ தன்றி
மிடைபடை எவி நும்மோ டமர் செயேன் வேந்த என்றான்"
—வில்லி பாரதம்-வாசுதேவர் படைத்துணை-16.

திருவெஞ்சமாக்கூடல்.

[கருவூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 12-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]*

935. அறிவு பெற

தந்தனத் தானத் தனதான

*வண்டுபோற் சாரத் தருள்தேடி-
†மந்திபோற் காலப் பிணிசாடிச்;
‡செண்டுபோற் பாசத் துடனோடிச்-
xசிந்தைமாய்த் தேசித் தருள்வாயே;
**தொண்டராற் காணப் பெறுவோனே-
††துங்கவேற் கானத் துறைவோனே;

* இறைவன் திரு அருளைப் பெறுதற்கு — அவர் மாலையைப் பெறுதற்கு—வண்டுதான் சரியான தூது என்று புலவர்கள் 'வண்டு விடு தூது' பாடுவர். மலர்த்தேன் சாரத்தை வண்டு நன்கு பருகும். "தண்துளித்தேன் வாய் மடுத்துத் தேக்கெறிந்து மன்னுகளி மிக்கு" —என்றார் கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூதில் (353). அந்த வண்டு போல உனது திருவருளை நாடிப் பருகி நான் களிக்கவேண்டும் — என்றபடி. இனி இறைவன் திருமேனியில் உள்ள மாலை மலர்களின் தாதில் ஆடும் தவம் வண்டுக்குத் தானே உண்டு. ஆதலால் அது செய்த தவம் பெரிதே! அத்தகைய தவத்தை நான் தேடவேண்டும் — எனலுமாம்; இறைவனது மார்பகத்துப்

'பொலங் கடுக்கைத் தாமத்தின் விரைத்தா தாடிப் பொன்திரண்ட
தென இருக்கும் பொறிவண்டு செய்தவமென் புகலுவீரே'

—என்றார் குமரகுருபரர் :—காசிக் கலம்பகம் 54.

† குரங்கு குதித்தெழுந்து தாவுதல் :

"செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்,
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்"—குறுந்தொகை 385.

‡ செண்டு : பிரம்பு போன்ற ஒரு ஆயுதம், அதன் தலைப்பில் இரண்டு வளைவுகள் உண்டு. இந்த ஆயுதம் ஐயனருக்கு உண்டு. இந்த ஆயுதத்தால் தான் உக்கிர பாண்டியன் மேரு மலையைப் புடைத்தது—

[தொடர்ச்சி 723 ஆம் பக்கம் பார்க்க]

திருவெஞ்சமாக்கூடல்

935.

வண்டு எவ்வாறு மலர்த்தேனை (சாரத்தை) நாடிப் பருகிக் களிக்கின்றதோ அவ்வாறு நான் உன் திருவருள் என்னும் தேனை நாடவும்—

(மந்தி) குரங்கு எவ்வாறு மரக்கிளைகளைத் தாண்டித் திரிய வல்லதா யிருக்கின்றதோ அவ்வாறு நான் காலன் பிணிப்பை—யமன் என்னைப் பாசத்தினால் பிணிப்பதைக்—கட்டுவதைக்—தாண்ட வல்லவனுமாறும்—

செண்டாயுதத்தை எறிந்தால் எவ்வாறு பகையை அது மாய்க்குமோ அவ்வாறு நான் பாசங்களுடன் போராடி (வெல்லுமாறும்)—

(என்) மனத்தை (நீ) (மாய்த்து) அழியவைத்து—சும்மா இருக்கும் நிலையைத் தந்து—மெய்யறிவை அருள்வாயே;

அடியார்களாற் காணப் பெறுவோனே—அடியார்களுக்குக் காட்சி அளிப்பவனே!

பரிசுத்தமான (வேற்கானம்) திருவேற்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவனே!

(தொடர்ச்சி) 'மேரு...செருக்கு மாற...செண்டினால் அடித்துநின்றான் அடித்தலும் அசையா மேரு அசைந்து...துடித்தது'
—திருவிளை-மேருவை-25.

x சிந்தை மாய்தல்—மலர்ப்பூஜை மனத்தை மாய்க்கும்
"மனம் பாழ் படுக்கும் மலர்ப்பூசனை செய்து வாழ்வார்"
—சம்பந்தர் 2-116-7.

o அறிவு பெறுதல் :
"உமை உணர்பவர் கண்மதி மிகுவது கடனே"
—சம்பந்தர் 3-98-1.

oo தொண்டர் காணப் பெறுதல் :
"பேணி வழிபாடு பிரியா தெழுந் தொண்டர்
காணும்...காரோணத்தானே"—சம்பந்தர் 1-84-5.

†† வேற்காடு—பாடல் 684, 685 ஸ்தலக் குறிப்பைப் பார்க்க—பக்கம் 76.

*மிண்டராற் காணக் கிடையானே-
வெஞ்சமாக் கூடற் பெருமாளே. (க)

திருப்பாண்டிக்கொடுமுடி :

[ரெயில்வே ஸ்டேஷன். ஈரோட்டுக்குத் தென்கிழக்கு 23-மைல். கருவூருக்கு மேற்கு 17-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

936. கதிபெற

தனதனத் தனனத் தனதான

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி-
இடர்கள்பட் டலையப் புகுதாதே;
திருவருட் கருணைப் ப்ரபையாலே-
திரமெனக் கதியைப் பெறுவேனோ;
†அரியயற் கறிதற் கரியானே-
‡அடியவர்க் கெளியற் புதநேயா;
xகுருவெனச் சிவனுக் கருள்போதா-
கொடுமுடிக் குமரப் பெருமாளே. (க)

937. மாதர்மீதுள மயக்கு அற

தாந்தத் தனதன தாந்தத் தனதன
தாந்தத் தனதன தனதான

°காந்தட் கரவளை சேந்துற் றிட**மத
காண்டத் தரிவைய ருட††னுசி-

---

* "மிண்டரை விலக்கிய விமலன்"—சம்பந்தர் 1-112-10.
"கரப்பாய் பத்தி செய்யாதவர் பக்கல்"—சம்பந்தர் 3-119-2.
† 'அரியும் நற்பிரமனும்...அளவிட அரியவர்'—சம்பந். 3-89-9.
‡ "அன்பு செய்வாரவர்க் கெளியவர்"—சம்பந்தர் 2-108-6.
x சிவகுரு—பாடல் 628-பக்கம் 462-கீழ்க்குறிப்பு.
o காந்தள்—கரத்துக்கு உவமை—
"மென் காந்தள் கையேற்கும் மிழலை"—சம்பந்தர் 1-132-4.
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட"—திருவாசகம் 3-75.
கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்—பரிபாடல் 19-76.
கைவிரிந்தன காந்தளும்—சூளாமணி-நாட்டு-11.

[தொடர்ச்சி 725 ஆம் பக்கம் பார்க்க.]

மிண்டர்களால்—மதங்கொண்டவர்களால்—ஆணவம் மிக்கோர்களாற் காணக் கூடாதவனே — மிண்டர்களின் புலனுக்கு அகப்படாதவனே!

வெஞ்சமாக்கூடல் என்னுல் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! (சித் அருள்வாயே)

திருப்பாண்டிக்கொடுமுடி.

936.

நல்வினை—தீவினை என்னும் இருவினை காரணமாகத் தோன்றும் பிறவி என்கின்ற கடலில் மூழ்கி

வேதனைகளில் அவஸ்தைப் பட்டு அலையுமாறு புகாமல்

உனது திருவருளாம் கருணை ஒளியாலே

(ஸ்திரமான வகையில்) நிலையானவகையில் — (நான்) நல்ல கதியைப் பெறுவேனே!

திருமாலும் பிரமனும் அறிதற்கு அரியவனே!

அடியார்களுக்கு எளியவனாய்க் கிடைக்கும் அற்புத நண்பனே!

குருமூர்த்தியாய்ச் சிவபிராற்கு அருளிய ஞானசாரியரே!

கொடுமுடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் குமரப் பெருமாளே!

(கதியைப் பெறுவேனே)

937.

காந்தள் மலர்போலுள்ள (கர்வளை) வளைகரம்—வளையல் அணிந்துள்ள கைகள் (சேந்துற்றிட) சிவக்க, (மதகாண்டத்து) — காம காண்டத்து — காமனுடைய வில்லுக்குப் பயன்படும்— மாதர்களுடன், ஊசிக்கும்—

(தொடர்ச்சி): ∞ மதகாண்டம்—காம காண்டம்; மன்மதனுடைய வில்—கரும்புவில், பூவில், இரும்பு வில் என மூன்று.

"கயக்கணின்ற பூவின்மிக்க காம காண்டம், கன்னல் வில்,
இயக்கமான பாரவில் எடுத்து மொய்ம்பில் ஏந்தியே" **
(கந்தபுரா 1-4-62)

[தொடர்ச்சி 726 ஆம் பக்கம் பார்க்க]

காந்தத் துறவென வீழ்ந்தப் படி*குறி
காண்டற் கநுபவ விதமேவிச் ;
சாந்தைத் தடவிய கூந்தற் கருமுகில்
சாய்ந்திட் டயில்விழி குழைமீதே-
தாண்டிப் பொரவுடை நீண்டித் தனகிரி
தாங்கித் தழுவுத லொழியேனோ ;
மாந்தர்க் கமரர்கள் வேந்தற் †கவரவர்
வாஞ்சைப் படியருள் வயலூரா-
‡வான்கிட் டியபெரு மூங்கிற் புனமிசை
மான்சிற் றடிதொழு மதிகாமி ;
பாந்தட் சடைமுடி யேந்திக் குலவிய
பாண்டிக் கொடுமுடி யுடையாரும்-
பாங்கிற் பரகுரு வாங்கற் பணியொடு
பாண்சொற் பரவிய பெருமாளே. (உ)

[725-ஆம் பக்கத் தொடர்ச்சி]

(1) கரும்பு வில்–'வேழச்சிலை**காம வேள்'-திருப்புகழ் 1108 (வேழம்—கரும்பு) "வெண் கரும்பு" — "காமனார் வெள்ளைக் கருப்பு வில்" அழகர் கலம்பகம் 71.

(2) பூ வில்—இதைக் காம காண்டம் (மத காண்டம்), காம நூல், மன்மத தந்திரம் என்பர்—சிலப்பதி 2-42-5 உரை.
"அலரின் நீள்சிலை", "பூங்குலை சிலையாக்
கொண்டவர்"—மதுரைக் கலம்பகம் 20,74.
காமனைப் "புஷ்ப தந்வா" என்பர் வட நூலார்.
"காம காண்டம்"—மறைசை அந்தாதி 7.

(3) இரும்பு வில்–'இயக்கமான பாரவில்'—கந்தபுரா 1-4-62.
தேவர்மேல் எய்வது பூவில், மாநுடர்மேல் எய்வது கரும்புவில், இராக்கதர்மேல் எய்வது இரும்புவில்.
"கதியுடைத் தேவர்மேல் பூவில், மாநுடரின் மேற் கருப்புவில், இராக்கதரின் மேற் காமுறும் இருப்புவில்"
—ஆசிரிய நிகண்டு—முதற் றொகுதி 6
(செந்தமிழ்—தொகுதி 7-பகுதி 1. பக்கம் 63)

†† "இரும்பைக் காந்தம் இழுக்கின் றவாறு"
—தாயுமானவர் 'பொன்னை' 24.

---

* குறி—பாடல் 914 அடி 1-பார்க்க.

[தொடர்ச்சி 727 ஆம் பக்கம் பார்க்க]

காந்தத்துக்கும் உள்ள உறவு போல உறவாடி (அக் காம மயக்கில்) விழுந்து, அந்த நிலையிலே பெண் குறியைக் காணுதற்கு வேண்டிய அனுபவ வழிகளை நாடிப் பொருந்தி—

நறுஞ்சாந்து தடவப்பட்டுள்ள (கூந்தற் கருமுகில்) கரிய மேகம் போன்ற கூந்தலின்மீது சாய்ந்து படுத்து, வேல் போன்ற கண்ணனது (காதில் உள்ள) குழைகளின் மீது—

தாவிச் சென்று தாக்கும்படி, ஆடையைத் தொட்டு, (தனகிரி) மலையன்ன கொங்கைகளைப் பிடித்துத் தழுவும் அச் செயலை ஒழிக்க மாட்டேனோ!

(மாந்தர்க்கு) மனிதர்களுக்கும், (அமரர்கள் வேந்தற்கு) தேவர் அரசனும் — இந்திரனுக்கும், அவரவர் விரும்பியபடியே அருள்பாலிக்கும் வயலூரனே!

ஆகாயத்தைக் கிட்டி நெருங்கும் பெரிய மூங்கிற் காடு உள்ள (வள்ளிமலைத் தினைப்) புனத்தின் மீதிருந்த மான் போன்ற வள்ளி நாயகியின் சிறிய பாதங்களைத் தொழுத காம மிக்கவனே!

பாம்பைத் தமது சடைமுடியில் தாங்கி விளங்குபவரும், **பாண்டிக் கொடுமுடி** என்னும் தலத்தை உடையவருமான சிவபிரானுக்கும்

உரிய முறையில் மேலான குருவான சங்கற்பத்தோடு (ஏற்பாட்டுடன்), பண் போன்ற சொற் கொண்டு—(இசைப் பாட்டுப் போன்ற இனிய (சொல்) உபதேசச் சொல்லைப்) (பரவிய) வெளிப் படுத்தின—உபதேசித்த பெருமாளே!

(தனகிரி தழுவுதல் ஒழியேனோ)

[726-ஆம் பக்கம் தொடர்ச்சி]

† "அடியவ ரிச்சையில் எவை எவை யுற்றன
அவை தருவித்தருள் பெருமாளே"
—என்றூர் பாடல் 727-லும்.

‡ வான் கிட்டிய மூங்கிற் புனம் — இது வள்ளிமலை மூங்கிற் புனம்—

'தேனைப் பருக மர்க்கட சமூகம் அமை தொட்டிருல் எட்டுவரை மன்றற் **பைம்புனத்தாள்**'—(அமை — மூங்கில்)—பூத வேதாள வகுப்பு.

சேலம்.

[ரெயில்வே ஸ்டேஷன்.]

938. அகப் பொருள்—அணைந்தருளுக

தனதன தானத் தனதன தானத்
தனதன தானத் தனதான

பரிவுறு நாரற் றழல்மதி வீசச்
சிலைபொரு காலுற் றதனாலே-
பனிபடு சோலைக் குயிலது கூவக்
குழல்தனி யோசைத் தரலாலே;
மருவியல் மாதுக் கிருகயல் சோரத்
தனிமிக வாடித் *தளராதே-
மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள்முரு காவுற் றணைவாயே;
கிரிதனில் வேல்விட் டிருதோளை யாகத்
தொடுகும ராமுத் தமிழோனே-
†கிளரொளி நாதர்க் கொருமக னகித்
திருவளர் ‡சேலந் தமர்வோனே;
பொருகிரி சூரக் கிளையது மாளத்
x தனிமயி லேறித் திரிவோனே-
○புகர்முக வேழக் கணபதி யாருக்
கிளையவி னோதப் பெருமாளே. (க)

---

* நிலவு, தென்றல், குயில், குழல் இவை விரகதாபம் கொண்டவர்களுக்கு வேதனை தருவன
—பாடல் 218-பக்கம் 53 கீழ்க்குறிப்பு.

† சிவன்—'ஒளிகொள் மேனி உடையாய்'—சம்பந்தர் 2-61-6.

‡ "சோலைக் கமர்வோனே" என்றும் பாடம்; சோலை—சோலைமலை—பழமுதிர் சோலை.

x 'தனிமயிலேறிப் பொருவோனே' என்றும் பாடம்; மயிலேறி உலகை வலம் வந்தது—பாடல் 267-பக்கம் 164-கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 729 ஆம் பக்கம் பார்க்க]

சேலம்

938

இரக்கம் கொண்ட (நார்) அன்பு—(அற்று) சற்றும் இல்லாமல்—(அழல்) நெருப்பை நிலவு வீசுவதாலும், (சிலே) பொதியமலேயினின்றும் பொருந்தி வரும் (கால்) தென்றற் காற்று வந்து மேலே படுவதாலும்,

குளிர்ச்சியுள்ள சோலேயிற் குயில் கூவுதலாலும், குழல் (புல்லாங்குழல்) ஒப்பற்ற இன்னிசையைத் தருவதாலும்—

தனியே பொருந்திய தன்மையில் உள்ள இந்தப் பெண் தனது இரண்டு (கயல்மீன் போன்ற) கண்களும் சோர்வுறும் படித், தனியே கிடந்து மிகவும் வாட்டமுற்றுத் தளர்ச்சியுருமல்—

மனம் ஒருமைப்பட்டு (நிம்மதியாக) வாழும் பொருட்டு [உனது] அழகிய ரத்னமாலேயணிந்த மார்பிடத்தே — கிருபாகர மூர்த்தியாகிய முருகா!—நீ வந்து அணேந்தருளுவாயாக,

கிரௌஞ்ச மலேமீது வேலாயுதத்தைச் செலுத்தி அது பெருந் தொளேபட்டழியும்படிச் செய்த குமரனே! இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழ்ப் பெருமானே!

பேரொளிச் சொரூபனும் தேவனுகிய சிவபெருமானுக்கு ஒப்பற்ற பிள்ளேயாகி, லக்ஷ்மீகரம் பெருகி ஓங்கும் **சேலம்** என்னும் பதியில் வீற்றிருப்பவனே!

போருக்கு எழுந்த எழுகிரியும் சூரனும் அவன் சுற்றத்தினரும் இறக்க, ஒப்பற்ற அந்தச் சூரனும் மயில் மீதேறி (உலகை) வலம் வந்தவனே!

புள்ளியை உடைய முகத்தைக் கொண்ட யானேயின் திருமுகத்தைக் கொண்ட கணபதிப் பெருமானுக்கு இளேய பெருமாளே! அற்புதப் பெருமாளே!

(அணேவாயே)

(தொடர்ச்சி) ○ புகர் முகவேழம் - 'புதல்வரை...புகர்முக வேழத்து... எற்றி'—மணிமேகலே 3-142.

''யானேப் புகர் முகம்''—குறுந்தொகை 284.

ராஜபுரம்.

[இது சேலம் (சூரமங்கலம்) ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 20-மைல். இங்கு ஸ்வாமி இருதேவிமார் சமேதராய் ஆறு திரு முகங்களுடன் வீற்றிருக்கின்ருர். இத்தலத்துக்கு மேற்கு 3-மைலிற் 'கொங்கணகிரி' இருக்கின்றது.]

939. நரஸ்துதி வேண்டாம்

தந்த தானன தத்தன, தந்த தானன தத்தன
தந்த தானன தத்தன தனதான

சங்கு வார்முடி பொற்கழல் பொங்கு சாமரை *கத்திகை
தண்டு மாகரி பெற்றவன் வெகுகோடிச்-
சந்த பாஷைகள் கற்றவன் மந்த்ர வாதிச துர்க்கவி
சண்ட மாருத மற்றுள கவிராஜப்;
†பங்கி பாலச ரச்வதி சங்க நூல்கள்வி தித்தப்ர
பந்த போதமு ரைத்திடு புலவோன்யான்-
பண்டை ‡மூவெழு வர்க்கெதிர் கண்ட நீயுமெ னச்சில
x பஞ்ச பாதக ரைப்புகழ் செயலாமோ ;
○வெங்கை யானை வனத்திடை துங்க மாமுத லைக்குவெ
ருண்டு மூலமெ னக்கரு டனிலேறி-

---

* கத்திகை—விருதுக்கொடி.

† கவிராஜ பங்கி—கவிராஜன் என்னும் பட்டத்தைத் தனக்கு உரிய பங்காகத்—தனக்கே உரிமையாகக்—கொண்டவன்.

‡ அருணகிரியார் காலத்தில் புலவர்கள் இவ்வாறு விருது களுடன் உலவினர் போலும்—பாடல் 80-அடி 4 பார்க்க: அவர் காலத்தில் இருந்த வில்லிபுத்தூரார் என்னும் பெரும் புலவர் போலிப் புலவர்களைக் கண்டித்தன ரென்பதும் பின் வரும் பாடலால் தெரிகின்றது.

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனீங் கில்லை, குறும்பி யளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை, இரண்டொன்று முடிந்து தலை யிறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை, விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித் தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு, தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே" (தனிப்பாடல்).

‡ மூவெழுவர்—தலை யிடை கடைப்படு 21-வள்ளல்கள்.
—பாடல் 304-பக்கம் 255 கீழ்க்குறிப்பு.

x பஞ்சமா பாதகங்கள் :—பாடல் 79-முதலடி.

[தொடர்ச்சி 731 ஆம் பக்கம் பார்க்க]

ராஜபுரம்
939.

தின்னுடைய விருதை [வெற்றிச் சின்னத்தை] எடுத்து ஓதும் சங்கமென்ன, நீண்ட கிரீடம் என்ன, பொன்னாலாய வீரக் கழல் என்ன, மேலெழுந்து விளங்கும் சாமரங்கள் என்ன, விருதுக்கொடி என்ன, [தண்டு] சிவிகை–பல்லக்கு என்ன, மா—குதிரை என்ன, கரி—யானை என்ன இவை யெலாம் கொண்டவன், பல கோடிக் கணக்கான

அழகிய பாஷைகளைக் கற்றவன், மந்த்ரவாதத்தில் வல்லவன், [ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனப்படும்] நான்கு வகைக் கவிகளிலும் வல்லவன், சண்டமாருதம்—கொடுங்காற்றுப் போலப் பேச வல்லவன், மற்று, பட்டப் பேர்களாக உள்ள 'கவிராஜ

பங்கி' 'பால சரஸ்வதி' என்னும் பட்டங்களைக் கொண்டவன், சங்க நூல்களிற் சொல்லப்பட்டுள்ள பிரபந்த அறிவு உரைகளை எடுத்து ஓதவல்ல புலவன் நான்—

பழைய, தலை, இடை, கடை எனப்படும் [மூ ஏழு 21] வள்ளல்களுக்கு ஒப்பானவன் நீ — என்றெல்லாம் சில ஐம்பெரும் பாதகங்களைச் செய்தவரைப் புகழ்கின்ற செயல் நன்று—[அங்ஙனம் புகழும் செயல் ஒழிவதாக என்றபடி]

[வெம்] விரும்பத்தக்க துதிக்கையை உடைய [யானை] கஜேந்திரன் — [வனத்திடை] ஜலத்தினிடையே உயர்ந்த பெரிய முதலை [வாய்ப்பட்டு] மருட்சியுற்று [பயந்து] 'மூலமே' [என] என்று கூச்சலிட்டபோது, கருடன்மேல் ஏறி—

---

o வனத்திடை—ஜலத்தினிடத்தில்; கஜேந்திரன் வரலாறு —பாடல் 110-பக்கம் 262 கீழ்க்குறிப்பு.

இந்திரத்யும்நன் என்னும் அரசன் விஷ்ணு பூஜை செய்கையில் அகத்தியர் வர, அரசன் கருத்தைப் பூசையில் இருத்தி வைத்த காரணத்தால் அவர் வருகையை உணராதிருக்க, அவர் தம்மைக் கவனிக்கவில்லை என்று நினைத்து 'நீ யானையாகக் கடவை' என அரசனைச் சபித்தனர்; யானையான பின்னும் விஷ்ணு பூஜையை அந்த யானை விடாது செய்து வந்தது. ஒரு நாள் தாமரைத் தடாகத்திற் பூப் பறிப்பதற்கு அந்த யானை இறங்கின பொழுது, தேவலன் என்னும் முனிவர் நீர் நிலையில் நின்று தவஞ் செய்தவரின் காலை 'ஹூ ஹூ' என்னும் கந்தருவன் இழுத்த

[தொடர்ச்சி 732 ஆம் பக்கம் பார்க்க]

விண்ப ராவஅ டுக்கிய மண்ப ராவஅ தற்குவி
தம்ப ராவஅ டுப்பவன் மருகோனே ;
கொங்க ணுதித ரப்பெறு கொங்கி னூடுசு கித்திடு
கொங்கின் வீரக ணப்ரிய குமராபொற்-
கொங்கு லாவுகு றக்கொடி கொங்கை யேதழு விச்செறி
கொங்கு ராஜபு ரத்துறை பெருமாளே.

939 A—பவானி கூடல்

[பாடல் 968-கீழ்க் குறிப்பைப் பார்க்க.]

939 B—சென்னிமலை

[பாடல் 339—பக்கம் 348—கீழ்க் குறிப்பைப் பார்க்க]

சென்னிமலை: கோயமுத்தூர் ஜில்லா ஈங்கூர் ரெயில் ஸ்டேஷனுக்குச்சமீபம்; இது 'சிரகிரி' எனவும் சொல்லப்படும். திரிசிராப்பள்ளிப் பாடல்களில் 332, 334, 339 எண்ணுள்ள பதிகங்களில் 'சிரகிரி' என வருகின்றது ; 332-ஆம் பாடலில் 'நன்றுடையானை' என்னும் திரிசிராப்பள்ளித் தேவாரக் குறிப்பு இருப்பதாலும், 334-ஆம் பாடலில் வயலூருடன் அயலில் உள்ள சிரகிரி இணைக்கப்பட்டுள்ளதாலும்—இந்த இரண்டு பாடல்களிலும் வரும் 'சிரகிரி' என்பது 'திரிசிரகிரி'—திரிசிராப்பள்ளி எனக் கொள்ளவேண்டும்—339-ஆம் பாடலை மாத்திரம் சென்னிமலைக்கு உரியதாகவும் வைத்துக் கொள்ளலாம்.

—அருணகிரிநாதர் வரலாறு பக்கம்-59, 60.

939 C—கதித்தமலை

[பாடல் 186-பக்கம் 436-கீழ்க் குறிப்பைப் பார்க்க]

[731 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரணத்தால்—அவரது சாபத்தால் அந்தத் தடாகத்தில் முதலையாய்க் கிடந்தவன்—அந்த யானையின் காலைப் பற்றி இழுக்க, யானை 'ஆதிமூலமே' என்று கூவி அழைக்க, திருமால் கருடன் மீதேறி வந்து சக்கரத்தைச் செலுத்தி முதலையைத் துணித்து, யானையை அதன் வாயினின்றும் மீள்வித்து இறுதியில் அதற்கு முத்தி அருளினர் என்பது வரலாறு—

"தாழைதண் ணும்பல் தடம் பெரும் பொய்கைவாய்
வாழு முதலை வலைப்பட்டு வாதிப்புண்

[தொடர்ச்சி 733 ஆம் பக்கம் பார்க்க]

விண்ணுலகம் போற்றவும், [அடுக்கடுக்காயுள்ள] பதினுலுலகம் போற்றவும், [அதற்கு] அந்த அந்த உலகத்துக்கு [இதம்] நன்மை [பராவ—அடுப்பவன்] பரவ—பெருகும்படி அடுத்து உதவுபவனை திருமாலின் மருகனே!

*கொங்கணுதி — கொங்கண ரிஷியாம் முதல்வரால் (பொன்) தரப்பட்ட [கொங்கினூடு] கொங்கு நாட்டில் சுகமாயிருக்கின்ற [கொங்கின் வீர] பூந்தாதுக்கள் [உள்ள மாலை] அணிந்த வீரனே! பதினெண் கணங்களும் ப்ரியப்படுபவனே! குமரனே! அழகிய

[கொங்கு] நறுமணம் வீசும் குறக்கொடி [வள்ளியின்] கொங்கைகளையே அணைந்து நெருங்கும் பெருமாளே! †கொங்கு மண்டலத்தில் உள்ள [ராசிபுரம் என வழங்கும்] **ராஜபுரத்தில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(பஞ்ச பாதகரைப் புகழ் செயலாமோ)

(தொடர்ச்சி): வேழம் துயர்கெட விண்ணோர் பெருமானுய்
ஆழிபணி கொண்டானுல் இன்று முற்றும்
அதற்கு அருள் செய்தானுல் இன்று முற்றும்"[3]
—பெரியாழ்வார் 2-10-8.

---

* **கொங்கணுதி தரப் பெறு கொங்கு**—கொங்கு நாட்டில் இருந்த கொங்கணச் சித்தர் தாமிர முதலிய லோகங்களைப் பொன் செய்து விரும்பினோர்க்குக் கொடுத்தனர்; ஆதலால் அவருக்கும் கொங்கு நாட்டுக்கும் சம்பந்தம் உண்டு எனத் தெரிகின்றது

"தோற்றிய செம்பு தரா ஈயம் பித்தளை சூழ் பச்சிலைச்
சாற்றுட ஞக ரசங்கந் தகமிட்டுத் தந்திரமாய்த்
தேற்றுந் தவம்பெற்ற **கொங்கணச் சித்தர்**முன் செம் பொன் செய்து
மாற்றுரை கண்டது பொன்னூதி யூர் **கொங்கு மண்டலமே.**
(கொங்கு மண்டல சதகம் 37)

'கொங்கணவர் நாடு கொங்கு நாடா யிருக்கலாம்'
—அபிதான சிந்தாமணி

'கொங்கணுதி தரப் பெறு' என்பதும் பாடமா யிருக்கலாம்:

'கோதைகம ழுங்கவிகைக் **கொங்கனென** விள்ளுங்
கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு'
—பேரூர்ப் புராணம்-நாட்டுப்-2.
(கோதை—சேரன்).

† கொங்கு மண்டலத்து 24 நாடுகளுள் ஒன்று—ராசிபுர நாடு.

விஜயமங்கலம்.

[இது ஈரோட்டுக்கும் திருப்பூருக்கும் மத்தியில் உள்ளதொரு ரெயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷனுக்கு வடக்கில் இரண்டு மைல் தூரத்தில் விஜயமங்கலம் ஊர் உள்ளது; திருப்புகழ்ப் பாடல் 185-பக்கம் 436-கீழ்க்குறிப்பைப் பார்க்க.

940. மறவேன்

தனன தந்தனத் தானன தானன
தனன தந்தனத் தானன தானன
தனன தந்தனத் தானன தானன தனதான

கலக சமப்ரமத் தாலேவி லோசன
மலர்சி வந்திடப் பூணார மானவை
கழல *வண்டெனச் சாரீரம் வாய்விட அபிராமக்-

கனத னங்களிற் கோமாள மாகியெ
பலந கம்படச் சீரோடு பேதக
கரண முஞ்செய்துட் பாலூறு தேனித் ழமுதூறல்;

†செலுவி மென்பணைத் தோளோடு தோள்பொர
நிலைகு லைந்திளைத் தேராகு மாருயிர்
செருகு முந்தியிற் போய்வீழு மாலுட னநுராகந்-

தெரிகு மண்டையிட் டாராத சேர்வையி
லுருகி மங்கையர்க் காளாகி யேவல்செய்
திடினு நின்கழற் சீர்பாத நாளினி மறவேனே;

‡உலக கண்டமிட் டாகாச மேல்விரி
சலதி கண்டிடச் சேXராய மாமவ
ருடன்ம டிந்திடக் Oகோபாலர் சேரியில் மகவாயும்-

உணர்சி றந்தசக் ராதார நாரணன்
மருக மந்திரக் காபாலி யாகிய
உரக கங்கணப் பூதேசர் பாலக வயலூரா;

---

* இது புட்குரல்—பாடல் 197-பக்கம் 6-கீழ்க்குறிப்பு.

† செலுவி—செலுத்தி.

‡ உலக்கையை ராவினதும், ஆயர் எல்லாம் மடிந்ததும் :— வராலாற்றைப் பாடல் 268-பக்கம் 166, 167, 169-கீழ்க்குறிப்பிற் பார்க்க. உலக-உலகை-உல(க்)கையை. X ஆயம்—கூட்டம்.

O வடமதுரையில் கம்ஸனுடைய சிறைக் கூட்டத்திலே பிறந்த கண்ணபிரான்-கம்ஸனுக்குத் தப்பி ஆயர்பாடியில் நந்தகோபருடைய திருமாளிகையில் வளர்ந்தார்.

விஜயமங்கலம்

940.

(கலவியில் சேர்க்கையில் உண்டாகும்) ஊடற் கலக பரபரப்பால் கண் மலர் சிவக்க, பூண்டுள்ள முத்துமாலை முதலிய மாலைகள் கழன்று விழ, [புட்குரல்] வண்டு முதலியவற்றின் [சாரீரம்] ஒலிகளை வெளிப்படுத்த, அழகிய

பருத்த கொங்கைகளைக் கண்டு [கோமாளம் ஆகி] பெருங்களிப்புடன் குதித்து மகிழ்பவனாய்—பல நகக்குறிகள் உண்டாகச் சிறந்த, வெவ்வேறு வகையான [கலவி] புணர்ச்சிகளைச் செய்து — உள்ளத்தில் — பால்போலவும் தேன்போலவும் இனிக்கும் வாயிதழ் அமுதன்ன ஊறலைச்—

செலுத்தி, மெல்லிய வேய் [மூங்கிலனைய] தோளோடு தோள் இணைந்துபட, நிலைமை தளர்ந்து, இளைத்து ஏராகும் ஆருயிர் அழகாயிருக்கும் [நல்ல] அரிய உயிர் [இளைத்து] சோர்வு அடைந்து, பொருந்திய [உந்தியில்] வயிற்றின்மீது போய் விழுகின்ற காமபப்பற்று

வெளிக்காட்டும் (குமண்டை இட்டு) களிப்புக் கூத்தாடி, தணிவுபெறாத—அடங்காத—கூட்டுறவில் உள்ளம் உருகி, மாதர்களுக்கு அடிமைப்பட்டு அவர்கள் இட்ட வேலைகளைச் செய்தபோதிலும், உனது [வீரக்] கழலணிந்த சிறப்புற்ற திருவடிகளை நான் இனி மறக்கமாட்டேன்;

உலக்கையைக் (கண்டம் இட்டு) துண்டு துண்டாகப்—பொடிப் பொடியாக ராவித் தூளாக்கி, ஆகாயம் மேலே விரிந்துள்ள (நடுக்) கடலில் அப் பொடிகளைச் சேரும்படிச் செய்து, கூட்டமான ஆயர் அனைவரும் ஒரு சேர (அல்லது தம்முடன்) மடிய—இறந்துபடக், கோபாலர் சேரியில்—இடையர் சேரியில் குழந்தையாய் வளர்ந்தும்—

(விளையாடின) ஞானம் சிறந்த சக்ராயுதக் கையனை அல்லது — சக்கரத்தை ஏந்தியவரும், ஆதாரம் — காப்பவருமான நாராயண மூர்த்தியின் மருகனே! (ஐந்தெழுத்து) மந்திரத்தின் (பஞ்சாட்சரத்தின்) மூலப் பொருளானவரும், (பிரம கபாலத்தைக் கையில் ஏந்தினவரும், பாம்பைக் கையிற் (கங்கணமாக) வளையாகக் கொண்டவரும், பூதகணங்களைக் கொண்ட தலைவருமான ஈசனுடைய பிள்ளையே! வயலூரனே!

*விலைத ருங்கொலைப் போர்வேடர் கோவென
இனையு மங்குறப் பாவாய்வி யாகுலம்
விடுவி டென்றுகைக் கூர்வேலை யேவிய இளையோனே-

விறல்†சு ரும்புநற் கீதேசி பாடிய
விரைசெய் பங்கயப் பூவோடை மேவிய
விஜய மங்கலத் தேவாதி தேவர்கள் பெருமாளே.(க)

சிங்கை (காங்கேயம்.)

[இது ஈரோட்டு-திருப்பூர் மார்க்கத்தில் உள்ள ஊற்றுக்குழி ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 14-மைல்.]

941. வினையற மயில்மீது வர

தந்ததன தந்த தந்தத்ன தந்த
தந்ததன தந்த தனதான

சஞ்சரியு கந்து நின்றுமுரல் கின்ற
தண்குவளை யுந்து குழலாலுந்-

தண்டரள தங்க மங்கமணி கின்ற
சண்டவித கும்ப கிரியாலும்;

நஞ்சவினை யொன்றி தஞ்சமென வந்து
நம்பிவிட நங்கை யுடனுசை-

நண்புறெனை யின்று நன்றில்வினை கொன்று
நன்று**மயில் துன்றி வரவேணும்;**

கஞ்சமலர் கொன்றை தும்பைமகிழ் விஞ்சி
கந்திகமழ் கின்ற கழலோனே-

---

* வேடர்மீது வேல் விட்டது—வரலாற்றைப் பாடல் 341-பக்கம் 354; பாடல் 344-பக்கம் 362, 363; பாடல் 846-பக்கம் 480-கீழ்க்குறிப்புக்கள்.

† வண்டுகள் 'தேசி' ராகம் பாடுவது—பாடல் 351-அடி 7.

(விலை தரும் கொலை) கொலை தரும் வி(ல்)லை—கொலை செய்யும் வில்லைக் கொண்டு போர் புரியும் வேடர்கள் (கோவென) கோ என்று பேரொலியிட்டுக் கூவி நெருங்க, (அதைக் கண்டு வருந்திய வள்ளியை நோக்கி) "வருந்துகின்ற அழகிய குறப்பாவையே! நீ வருத்தத்தைக் (கவலையை) விடு, விடு" என்று கூறிக் கையிலிருந்த கூரிய வேலாயுதத்தைச் செலுத்தின இளையோனே!

வீரம் வாய்ந்த வண்டுகள் நல்ல முயற்சியுடன் "தேசி" ராகத்தைப் பாடிடும் நறுமணம் கொண்ட தாமரைப் பூக்களைக் கொண்ட நீர் நிலைகள் உள்ள '**விஜயமங்கலத்தில்**' வீற்றிருக்கும் பெருமாளே! தேவாதி தேவர்களுக்குப் பெருமாளே!

(சீர்பாதம் நானினி மறவேனே)

சிங்கை (காங்கேயம்)

941.

(சஞ்சரி) சஞ்சரீகம்—வண்டு மகிழ்ந்து நின்று ரீங்காரம் செய்யும் குளிர்ச்சி பொருந்திய குவளைமலர் விளங்கும் கூந்தல் மூலமாகவும்—

குளிர்ந்த முத்து (மாலை), (தங்கம்) பொன் மாலை உடலில் அணிந்துள்ள (சண்டம்) வலிமை கொண்ட குடம் போன்ற மலையாம் கொங்கை மூலமாகவும்—

விஷம் கொண்ட செயலைப் பொருந்தி நீயே தஞ்சம் என்று (வெளி வேஷத்துடன்) — வந்து நம்பிவிட — வந்து என்னை நம்பி நிற்க— (அல்லது, நான் நம்பும்படி வர), அந்த மாதுடனே ஆசை—

நட்புவைக்கின்ற என்னைக் (காத்தருள)—இன்றே— இந்நாளே—(நன்று இல் வினை) தீயவினைகளை அழித்து— (என்னுடைய தீயவினைகளை இந்நாளே அழித்து) நன்மைதரும் மயிலிற் பொருந்தி வரவேணும்;

தாமரை மலர், கொன்றைமலர், தும்பை மலர், மகிழம்பூ, இவைகள் நிறைந்து நறுமணம் கமழும் திருவடியை உடையவனே!

*கன்றிடுபி ணங்கள் தின்றிடுக ணங்கள்
கண்டுபொரு கின்ற கதிர்வேலா;

†செஞ்சொல்புனை கின்ற எங்கள்குற மங்கை
திண்குயம ணைந்த திருமார்பா-

செண்பகமி லங்கு மின்பொழில்சி றந்த
சிங்கையில மர்ந்த பெருமாளே. (க)

942. வினை அற

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான தனதான

சந்திதொறு நாண மின்றியகம் வாடி
உந்தி பொரு ளாக அலைவேனை-

சங்கைபெற நாளு மங்கமுள மாதர்
தங்கள்வச மாகி அலையாமற்;

சுந்தரம தாக எந்தன்வினை யேக
சிந்தைகளி கூர அருள்வாயே-

தொங்குசடை மீது திங்களணி நாதர்
மங்கைரண காளி தலைசாயத்;

தொந்திதிமி தோதி தந்திதிமி தாதி
என்றுநட மாடு மவர்பாலா-

துங்கமுள வேடர் தங்கள்குல மாதை
மங்களம தாக அணைவோனே;

கந்தமுரு கேச மிண்டசுரர் மாள
அந்தமுனை வேல்கொ டெறிவோனே-

---

* பேய்கள் பிணம் தின்பது
"எழுங்கடற் பகைப் பிணத்தும் ரவி திகந்த எல்லைபோய்
விழுங்கடற் பகைப் பிணத்தும் ஓடி யுண்டு மீள்பவே"
—தக்கயாக-124.

† "செஞ்சொல் புனைகின்ற...குறமங்கை" — வள்ளியின் வசனத்தை" "இந்தளாம்ருத வசனம்" என்றார்.
—பாடல் 289-பக்கம் 220-அடி 7-கீழ்க்குறிப்பு பார்க்க.

(கன்றிடு பிணங்கள்) வாடி அழுகின பிணங்களைத் தின்னும் (கணங்கள்) பேய்கள் (அல்லது—நாய், நரி, காக்கை, பருந்து முதலியவற்றின்) கூட்டங்கள் காணும்படிச் சண்டை செய்யும் ஒளி வேலனே!

செவ்விய சொல்லை உடைய—பண் அனைய சொல் அமைந்துள்ள—எங்கள் குறமங்கை—வள்ளியின் வலிய (குயம் அணைந்த) கொங்கையை அணைந்த அழகிய மார்பனே!

செண்பக மலர்கள் விளங்கும் இனிய சோலைகள் சிறப்புடன் மிளிரும் **சிங்கை** என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் பெருமாளே!

(மயில் துன்றி வரவேணும்)

942.

(சந்திதொறும்) காலையும் மாலையும் வெட்கமில்லாமல், உள்ளம் சோர்வு உற்று, வயிறே காரியமாக, அலைச்சல் உறுவேனோ!

(சங்கை பெற நாளும்) நாளும்—தினந் தோறும் அச்சங்கொண்டு (அங்கம்) உடல் அழகுள்ள மாதர்களின் வசப்பட்டுத் திரியாமல்—

அழகுபெற, என்னுடைய வினை தொலைந்து ஒழிய, என் மனம் மகிழ்ச்சியுற (அல்லது நீ மகிழ்ந்து) அருள்புரிவாயாக.

தொங்கும் சடையின்மேல் சந்திரனை அணிந்துள்ள பெருமான், மங்கையும் போர்க் கெழுந்தவளுமாகிய காளி நாணித் தலைகுனியத்

தொந்திதிமி தோதி தந்திதிமி தாதி என்று நடனம் ஆடின பெருமான்—ஆகிய சிவனது குமாரனே!

உயர்ந்த (தவம் பெற்ற) வேடர்களின் குலத்தில் வளர்ந்த மாது—வள்ளியை மங்களகரமாக அணைந்தவனே!

கந்தனே! முருகேசனே! (மிண்டு) நெருங்கிப் போரிட வந்த அசுரர்கள் இறக்க (அந்தம்) அழகிய (அல்லது) அந்த, (கூரிய) முனை கொண்ட (அல்லது போர்) வேல் கொண்டு எறிந்து அழித்தவனே!

கம்பர்கயி லாசர் மைந்தவடி வேல
சிங்கைநகர் மேவு பெருமாளே. (உ)

பட்டாலியூர்.

[இது 'பட்டாலி சிவமலை' என வழங்கும். காங்கேயத்துக்குச் சமீபம். ஸ்தலபுராணம் உண்டு.]

943. திருவடி பெற

தனதன தனனத் தான தானன
தனதன தனனத் தான தானன
தனதன தனனத் தான தானன தனதான

*இருகுழை யிடறிக் காது மோதுவ
பரிமள நளினத் தோடு சீறுவ
இணையறு †வினையைத் தாவி மீளுவ வதிசூர-
எமபடர் படைகெட் டோட நாடுவ
அமுதுடன் விடமொத் தாளை யீருவ
ரதிபதி கலைதப் பாது சூழுவ ‡முநிவோரும்;
உருகிட விரகிற் பார்வை மேவுவ
பொருளது திருடற் காசை கூறுவ
யுகமுடி விதெனப் பூச லாடுவ வடிவேல்போல்-
உயிர்வதை நயனக் காதல் மாதர்கள்
மயல்தரு கமரிற் போய்வி ழாவகை
உனதடி நிழலிற் சேர வாழ்வது மொருநாளே;
முருகவிழ் தொடையைச் சூடி Xநாடிய
மரகத கிரணப் பீலி மாமயில்
முதுரவி கிரணச் சோதி போல்வய லியில்வாழ்வே-

---

* முதல் நான்கு அடிகள்—கண் வர்ணனை—பாடல் 880 போல.

† தாவி மீளுவ — என்றதனால் — தாவ வேண்டும் மீளவும் வேண்டும்; எனவே, வினையினும் இருமடங்கு வலியன கண்கள் என்பது பெறப்பட்டது

‡ முநிவரும் உருகுதல்—பாடல் 158, 362, 921, 1277 பார்க்க.

X நாடிய மாமயில்—மயிலாகி முருகவேளுக்கு வாகனமாகத் (தனது முற்பிறப்பில்) விரும்பினவன் சூரன்—"விசாகனருள் சிந்தை செய்த சூரன்...கலாப மயிலாகி மற்றிவனை ஏந்திட மனந்தனில் நினைந்தான்"— உபதேச காண்டம் 98. திருப்புகழ் 442-பக்கம் 610-கீழ்க்குறிப்பு.

(கச்சி) கம்பர்—ஏகாம்பரநாதர், கயிலாயர் ஆகிய சிவனது பிள்ளையே! கூரிய வேலாயுதத்தை உடையவனே! **சிங்கை நகரில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(வினை ஏக அருள்வாயே)

பட்டாலியூர்

943.

காதிலுள்ள இரண்டு குழைகளையும் எற்றிக் காதுகளை மோதுவன, நறுமணம் உள்ள தாமரை மலர்களை (எங்களுக்கு நீ உவமையா என்று) சீறிக் கோபிப்பன, தனக்கு நிகரே இல்லாத வினையையும் தாவி மீள்வன, மகா சூரத்வம் உடைய

யமதூதர்களின் சேனை (இவைகளின் கொடுமை முன் நமது கொடுமை எவ்வளவு என்று அஞ்சிப் பின்னடைந்து ஓடும்படி வழி தேடுவன, அமுதும் விஷமும் கலந்தன போல் நின்று ஆளையே அறுத்துத் தள்ளுவன, ரதி கணவனுடைய (மன்மதனுடைய) சாத்திர நூல் பொய்யாகாத வண்ணம் வழிதேடுவன, முனிவர்களும்

உருகும்படியாகத் தந்திரத்துடன் கூடிய பார்வையை உடையன, (வந்தவனுடைய) பொருளைக் கவரும் பொருட்டு ஆசை மொழிகளைப் பேசுவன, யுக முடிவு தானோ இது என்னும்படி கலாம் (போர்) விளைவிப்பன,— (இத்தகையனவாய் அமைந்து) கூரிய வேலாயுதம் போல

உயிரை வதைக்கும் கண்களை உடைய ஆசை மாதர்களின் காம மயக்கம் தருகின்ற நிலப் பிளப்பில் நான் போய் விழாத வகைக்கு உனது திருவடி நீழலிற் பொருந்த வாழும்படியான வாழ்க்கை கிடைக்கும் ஒரு நாள் எனக்கு வாய்க்குமா!

நறுமணம் வீசும் மாலையை அணிந்து, உனக்கு வாகனமாகும்படி விரும்பின பச்சை ஒளி வீசும் தோகை கொண்ட சிறந்த மயில்மீது (முதுரவி) முற்றின ஒளி கொண்ட சூரியனைப் போல விளங்கி **வயலூரில்** வாழும் செல்வனே!

முரண்முடி யிரணச் சூலி மாலினி
சரணெனு மவர்பற் றுன சாதகி
முடுகிய *கடினத் தாளி வாகினி †மதுபானம் ;

பருகினர் பரமப் போக மோகினி
அரகர வெனும்வித் தாரி ‡யாமளி
பரிபுர சரணக் காளி கூளிகள் நடமாடும்-

பறையறை xசுடலைக் கோயில் நாயகி
oஇறையொடு மிடமிட் டாடு காரணி
பயிரவி யருள்பட் டாலி யூர்வரு பெருமாளே. (க)

944. இளமையிலே அடிமை செய

தத்தான தனன தனதன, தத்தான தனன தனதன
தத்தான தனன தனதன தனதான

கத்தூரி யகரு ம்ருகமத வித்தார படிர இமசல
கற்பூர களப மணிவன மணிசேரக்-

கட்டார வடமு மடர்வன கிட்டுர கலக மிடுவன
கச்சோடு பொருது நிமிர்வன தனமாதர் ;

* கடினத்தாளி வாகினி :—தாளி—பனை; இங்கு பனை போன்ற கால்களை உடைய பேய்கள் ; பேய்களின் காலும் கையும் பனங்காடு போல இருக்கும். "கரு நெடும் பனங்காடு முழுமையும் காலும் கையும் உடையன போல்வன"- கலிங்கத்துப் பரணி 6-2; வாகினி—படை ; தேவி பேய்க் கணங்களைப் (படையாக) உடையவள்—

'தொல்லை நாயகி யுடைய பேய்க் கணங்கள்'-தக்க. பரணி 120.

ஆளிவாகினி:—ஆளி—யாளி சிங்கம், தேவிக்கு யாளி வாகனம்; சிங்கவாகனம் இரண்டும் உண்டு :

(1) 'யாளி யூர்தி துர்க்கா பரமேசுவரி'-தக்கயாக-729 உரை.
(2) 'சிங்கவாகனி வந்து செந்திருமா தொடிருக்கவே'
—கலிங்-பரணி. 11-8.

'தேவி வன்மானுகைத்த கொடி'—தக்க. 76-உரை.

† "மதுபானம் பருகினர் பரமப் போக மோகினி" — சத்தி உபாசனை முறையைக் கூறும் ஆகமமாம் வாம தந்திரப்படித் தேவியை வழிபடுபவர்கள் மதுபானம் கொள்வர். வாம மார்க்கப் பெண்களும் நறவு உண்பார்கள். மது, மச்சம், (மாங்கிசம்) மாமிசம், முத்திரை, மைதுனம்—இவற்றை "மகார பஞ்சகம்" என்று கூறுவர் வாம மதத்தினர். தக்கபரணி 24, 51 உரை. ‡ யாமளி-யாமள சாத்திரம் என்பது சக்தி பூசையைப் பற்றிக் கூறும் ஒரு தாந்திரிக நூல். அதற்கு உரியவள் யாமளி. [தொடர்ச்சி 743 ஆம் பக்கம் பார்க்க]

(முரண்) வலிமை வாய்ந்த முடியை உடைய போர்க்கு உற்ற சூலாயுதத்தை ஏந்தினவள், (மாலினி) *மாலையை அணிந்தவள், (அல்லது அக்ஷரங்களின் தெய்வமாக இருப்பவள்—துர்க்கை), நீயே (சரணம்) தஞ்சம் என நிற்கும் அடியார்களுக்குப் பற்றாக இருக்கும் குணத்தினள், வேகமாகச் செல்லும் கடினமான (தாளி) பனையன்ன கால்களை உடைய பேய்ப் படையை உடையவள் (அல்லது கடினத்து ஆளி வாகினி — கடிய யாளிவாகனம் — சிங்கவாகனம்— உடையவள், மதுபானம் (கள்ளுணவை)—

உண்பவர்களுக்கு (வாம தந்திரப்படி) உபாசிப்பவர்களுக்கு, அல்லது, மதுபானம் பருகினர்— அமுது பருகின தேவர்களுக்கு (பரம போக மோகினி) மேலான போகத்தை அளிக்கும் மோகனங்களை (அழகி), 'அரகர' என்று விஸ்தாரமாக—நிரம்ப ஒலி செய்பவள், (யாமளி) சியாமள நிறத்தை உடையவள், சிலம்பணிந்த கால்களை உடைய காளி, பேய்கள் நடிக்கின்றதும்

பறைகள் ஒலிப்பதுமான சுடுகாட்டுக் கோயிலில் இருக்கும் தேவி, (இறை) பரசிவனுடன் இடம் கண்டு நடனம் செய்யும் காரணி (காரணமாக நடிப்பவள்), பயிரவி — ஆகிய தேவி பெற்ற பெருமாளே! பட்டாலியூரில் எழுந்தருளியுள்ள பெருமாளே! (உனதடி நிழலிற் சேர வாழ்வதும் ஒருநாளே)

944.

கஸ்தூரி, (அகரு) அகில், (ம்ருகமதம்) கஸ்தூரி மஞ்சள், நிறைய சந்தனம், (இமசலம்) பன்னீர், பச்சைக் கற்பூரம் கலவைச் சாந்து இவைகளை அணிவதாய், ரத்னங்களுடன் சேர்க்கப்பட்டுக்—

கட்டார வடமும் — கட்டப்பட்ட — ஆரவடமும் — முத்துமாலையும் நெருங்கினதாய் — (நீட்டூர) கொடிய கலகங்களை விளைவிப்பதாய், ரவிக்கையுடன் முட்டி நிமிர்வதாய் உள்ள கொங்கையை உடைய மாதர்களின்

(தொடர்ச்சி) x 'சுடலை நாரியொர் பாகமாக நடமாட வல்ல...நம்பன்' —சம்பந்தர் 2-87-1.

o "இடமிட்டாடுதல்"—"புன்சடை இடம் பெறக் காட்டகத் தாடிய வேடத்தர்"—சம்பந்தர் 2-108-3.

---

* அபிராமி அந்தாதி உரை—செய்யுள் 77.

கொத்தூரு நறவ மெனவதரத்தூறல் பருகி யவரொடு
கொற்சேரி *யுலையில் மெழுகென வுருகாமே-
†கொக்காக நரைகள் வருமுன மிக்காய விளமை யுடன்முயல்
குற்றேவல் அடிமை செயும்வகை யருளாதோ ;
‡அத்தூர புவன தரிசன் நித்தார கனக நெடுமதி
லச்சான வயலி நகரியி லுறைவேலா-
xஅச்சோவெ னவச வுவகையி லுட்சோர்த லுடைய பரவையொ
டக்காகி விரக பரிபவ மறவேபார் ;

---

* 'எரியுறு மெழுகின் உள்ளம் சோர'—பெருங்கதை 1-46-249.

† இந்த அடியால், இந்தப் பாடல் பாடின பொழுது அருணகிரியார் இளவயதினர் என்பது தெரிகின்றது.

'கொக்காக நரை'—'தலைமயிர் கொக்குக்கு ஒக்க நரைத்து' —திருப்புகழ் 447.

இளமை முதற் கொண்டே பத்தி செய்ய வேண்டும், கடவுளுக்கு அடிமை பூணவேண்டும் என்னும் அரிய நீதியும் புலப்படுகின்றது. இதனாலன்றோ இளவயதினராகிய சுந்தரர்— 'பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன் பொத்தின நோய்' (7—51—1) என்றார். 'இளமை கழியாமை எய்திய நாளில் இசையினால் எத்துமின்'—திருமந்திரம் 186.

‡ தூரத்தில் வரும்பொழுதே — வயலூர் திருக்கோயிலின் மதில்—கோயிலுக்கு அடையாளமாக நின்று தரிசிப்பதற்கு உதவுகின்றது என்கின்றார்: தூர தரிசன தலங்களைப்பற்றி —பாடல் 311-பக்கம் 272, 273 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

x சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு ஒற்றியூரிற் சங்கிலி நாச்சியாரைத் திருமணஞ் செய்து கொண்டார் எனக் கேள்வியுற்ற (அவர் முதல் மனைவி) திருவாரூர்ப் பரவையார்—சுந்தரர் திருஆரூருக்கு வந்தவுடன்—அவரைத் தமது இல்லத்தில் ஏற்றுக்கொள்ள மறுக்கச், சுந்தரர் பரமனையே தமக்காகத் தூது சென்று பரவையை இணங்கும்படி செய்ய வேண்டுமென வேண்டினர். பரமனும் தூது செல்ல இணங்கிக் கோயில் அர்ச்சகர் போலப் போய்ப் பரவையாரை வேண்ட, அவர் பரமன் வேண்டுகோளுக்கு இணங்க இல்லை. ஆதலால், சுந்தரர் மறுமுறையும் மிக வேண்டப் பரமன் இரண்டாவது முறை தமது சுயரூபத்துடன் தூது சென்றார். நம்மிடம் அருச்சகராக வந்தவர் பரமன் தானே என்று பரவையார் அதிசயத்துடனும் அச்சத்துடனும் உள்ளம் சோர்ந்திருக்கும் சமயத்திற் பரமன் காட்சி தந்து பரவையை நோக்கி 'நீ சுந்தரன் உன்னிடம் வர இசைதல் வேண்டும்' எனப், பரவையாரும் 'தங்கள்

[தொடர்ச்சி 745 ஆம் பக்கம் பார்க்க.]

(கொத்து) திரளாக ஊர்கின்ற—பூங்கொத்தினின்று வடிகின்ற, (நறவம்) தேன் என்று சொல்லும்படி ஊறும் வாயிதழ் ஊறலை உண்டு, அந்த மாதர்களோடு, கொல்லன் சேரியில் உள்ள நெருப்பு உலையில் (அடுப்பில்) விழுந்த மெழுகுபோல நான் உருகி அழியாமல்—

கொக்குப்போல வெண்ணிறமாக நரைகள் வருமுன்பு (கிழவனாவதற்கு முன்பு), இந்த உடலின் இளம்பருவம் இருக்கும் பொழுதே, முயற்சி செய்து, உனக்குப் பணிவிடைகளை அடியேன் செய்யும் வழியை உனது திருவருள் எனக்குக் கூட்டுவிக்காதா!

(அத் தூர புவன தரிசனம்) அந்தத் தூர பூமியிலிருந்தே (தூரத்திலிருந்தே) தரிசனத்தை (நித்தாரம்) நிச்சயமாகத் தருவதான பொன் னெடுமதிலை (அச்சான) அடையாளமாகக் கொண்ட வயலூர்ப் பதியில் வீற்றிருக்கின்ற வேலனே!

(அச்சோ) சுந்தரருக்குத் தூதாக (இறைவன் தான் அருச்சகராக வந்து போனரோ! இது) என்ன அதிசயம் என்று தன்வச மழிந்த மகிழ்ச்சியில் உள்ளம் சோர்வு அடைந்திருந்த பரவைமீது (அக்காகி) கண்ணும் கருத்துமாயிருந்த (சுந்தரருடைய) விரக பரிபவம்— பர்வையை விட்டுப் பிரிந்திருப்பதால் ஏற்பட்ட கவலை (அறவே) நீங்குதற்கு, பார்—இந்தப் பூமியில் (திருவாரூர்ப் ப்ரதேசத்தில்)

கட்டளைக்கு இணங்கினேன்' என்று கூறி வணங்கினள்—என்பது வரலாறு; அங்ஙனம் 'அச்சோ' என்றும், அவசம் அடைந்தும், பரவையார் உள்ளம் சோர்ந்தார் என்பதை—

'அதிசயம் பலவுந் தோன்ற அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பி ரான்முன் என்செய மறுத்தேன் என்பார்;
கண்டுயில் எய்தார் வெய்ய கையற வெய்தி யீங்கின்
றண்டர்தம் பிரானர் தோழர்க் காகஅர்ச் சிப்பார் கோலங்
கொண்டணைந் தவரை யானும் கொண்டிலேன் பாவி யேனென்
ருெண்சுடர் வாயி லேபார்த் துழையரோ டழியும் போதில்,

—எனவரு மிடத்துக் காண்க. (பெரியபுரா-ஏயர்கோன்-359.)

தூது வந்தவர் இறைவனே என்றறிந்ததும் பரவையார் சுந்தரர் தம்மிடம் வருதற்கு இணங்கினர் என்பது

"அளிவரும் அன்பர்க் காக அங்கொடிங் குழல்வீ ராகில்
எளிவரு வீரு மானல் என் செய்கேன் இசையா தென்ருர்"

—என விளக்கப்பட்டுளது. (பெரிய புரா-ஏயர்கோன்-366)

*பத்தூரர் பரவ விரைவுசெல் †மெய்த்தூதர் விரவ வருடரு
பற்றுய பரம பவுருஷ குருநாதா-
பச்சோலை குலவு பனைவளர் மைச்சோலை மயில்கள் நடமிடு
பட்டாலி மருவு மமரர்கள் பெருமாளே. (உ)

945. முத்தியை எளிதிற் பெற

தந்தத்தத் தான தனதன, தந்தத்தத் தான தனதன
தந்தத்தத் தான தனதன தனதான

‡சங்கைக்கத் தோடு சிலுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
சங்கற்பித் தோதும் வெகுவித கலைஞானச்-
சண்டைக்குட் கேள்வி xயலமல மண்டற்குப் பூசை யிடுமவர்
சம்பத்துக கேள்வி யலமல மிமவானின் ;
மங்கைக்குப் பாக னிருடிக ளெங்கட்குச் சாமி யெனவடி
வந்திக்கப் பேசி யருளிய சிவநூலின்-
மந்த்ரப்ரஸ்த் தார தரிசன யந்த்ரத்துக் கேள்வி யலமலம்
oவம்பிற்சுற் றுது பரகதி யருள்வாயே ;

---

* பத்து ஊரர்:-அடியார்களுக்கு உரிய பத்து இலக்கணங்களையும் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். பத்து இலக்கணம் —பாடல் 612-பக்கம் 419 கீழ்க்குறிப்பு: ஊரன்—சுந்தரமூர்த்தி களைக் குறிக்கும்; 'சடையனவன் சிறுவன் **பத்தனூரன்**' [சுந்தரர் 7-7-11] எனச் சுந்தரரே தம்மைக் குறிக்கின்றார்.

† தூதர் :—பக்கம் 744 குறிப்பு - x-பார்க்க.

‡ சமய சண்டைகளை அருணகிரியார் வெறுப்பர் :
—பாடல் 492-பக்கம் 114-கீழ்க்குறிப்பு.

x அலம் அலம்—போதும் போதும்-பாடல் 510, 912 பார்க்க.

o வம்பிற் சுற்றுது பரகதியை எளிதில் பெறும் வழியையே அருணகிரியார் விரும்புகின்றார்—

"காட்டிற் குறத்தி பிரான்பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுதல் மிக எளிதே"
என்றார் கந்தரலங்காரத்திலும் (85).

இங்ஙனமே, குமர குருபரரும் எளிய வழியையே விரும்பினர் :—

"சத்திநி பாதநின் சந்நிதிப் பட்ட
இத்திறத் தெளிதினில் எய்திய தெனக்கே—அதனாற்
சரியையில் தாழ்க்கலை கிரியையிற் பணிக்கலை
யோகத் துய்க்கலை பாகமு நோக்கலை

[தொடர்ச்சி 747 ஆம் பக்கம் பார்க்க]

பத்தூரர் (பத்து ஊரர்) அடியார்க்கு உரிய பத்து இலக்கணங்களும் பொருந்திய (ஊரர்) சுந்தரர் தம்மைப் பரவிப் போற்ற, வேகமாகத் (தூது) சென்ற உண்மைத் தூதர், தம்முடன் (விரவ) உள்ளம் கலக்கத் திருவருளைப் பாலிப்பவரும், (பற்று) உற்ற துணையாக இருப்பவருமான பரமர் (சிவபிரானுக்குப்) (பவுருஷம்) ஆண்மைக்குணம் நிறைந்த குருமூர்த்தியே! (தூதர் கலந்து கேட்க, அவருக்குப்...பரம—மேலான குருநாதனே எனலுமாம்.)

பசிய ஓலைகளைக் கொண்டு விளங்கும் பனைமரங்கள் வளர்ந்துள்ள (மை) இருண்ட சோலைகளில் மயில்கள் நடனம் செய்கின்ற **பட்டாலியூரில்** வீற்றிருக்கும் பெருமாளே! தேவர்கள் பெருமாளே! (வீற்றிருக்கும் தேவர் பெருமாளே)!

(குற்றேவல் அடிமை செயும் வகை அருளாதோ)

945.

(சங்கை) சந்தேகக் (கத்தோடு) கூச்சலோடு (சிலுகிடு) வாதம் செய்யும்—சண்டை செய்யும், (சங்கி) (கூட்டமாயுள்ள) கூடியுள்ள ஆறுவித சமயத்தினர்களும் தாம் தாம் உறுதி செய்துகொண்டு பேசுகின்ற பலவிதமான சாத்திர ஞானச்

சண்டைக்கு வேண்டிய கேள்வி அறிவு போதும் போதும்; (அண்டற்கு) கடவுளுக்கென்று பூஜை செய்பவர்களுடைய செல்வமாம் கேள்வி அறிவும் போதும் போதும், இமயராஜனது—

பெண்ணும் பார்வதிக்குப் பாகர் என்றும், ரிஷிகள் எல்லாம் எங்களுக்குச் சுவாமி என்றும், தமது திருவடியைத் துதிக்க, ஓதி விளக்கியுள்ள சிவநூல்களிற் கூறப்பட்ட

மந்த்ர — மந்திரங்களின் (பிரஸ்தார) கணக்குப் பிரமாணக் காட்சியை விளக்கும் மந்த்ர சக்கரங்களைப் பற்றிய ஆராய்ச்சி அறிவும் போதும் போதும்—(இங்ஙனமெல்லாம்) வீணான சுற்றான வழிகளில் நான் சுற்றி அலையாமல் (பரகதியை) மோக்ஷத்தை நீ தந்து அருளுவாயாக;

(தொடர்ச்சி): நாளையின் றெனஒரு வேளையு நவிற்றலை
ஈண்டெனக் கருளுதி இறைவ!
பூண்டு கொண் டிருப்பனின் பொன்னடித் துணையே''
—பண்டார மும்மணிக் கோவை-29.

வெங்கைச்சுக் ரீபர் *படையையி லங்கைக்குப் போக விடவல
வென்றிச்சக் ரேசன் மிகமகிழ் மருகோனே-
†வெண்பட்டுப் பூணல் வனகமு கெண்பட்டுப் பாளை விரிபொழில்
விஞ்சிட்டுச் சூழ ‡வெயில்மறை வயலூரா;
கொங்கைக்கொப் பாகும் வடகிரி செங்கைக்கொப் பாகு நறுமலர்
கொண்டைக்கொப் பாகு முகிலென வனமாதைக்-
கும்பிட்டுக் xகாதல் குனகிய இன்பச்சொற் பாடு மிளையவ
oகொங்கிற்பட் டாலி நகருறை பெருமாளே. (ரு)

திருமுருகன்பூண்டி.

திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 5-மைல், சுந்தர மூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. அவருக்குச் சேரமான் கொடுத்த பொருளைச் சிவபிரான் தமது கணங்களை வேடர்களாக அனுப்பிப் பறித்துப் பின்னர் அவருக்குத் திருப்பிக் கொடுத்த தலம். ஸ்தல புராணமுண்டு.

946, திருவடியைப் பூண

தனதனனந் தாந்தத் தனதான

அவசிய††முன் வேண்டிப் பலகாலும்-

---

* கடலைக் கடந்தது: பாடல் 754-பக்கம் 248 கீழ்க் குறிப்பைப் பார்க்க.

† வெண்பட்டுப் பூணல் கமுகு...பாளைவிரி பொழில்: இது கமுகின் பாளையின் மென்மையைக் குறிக்கின்றது—
"கமுகின் இணைப்பொதி யவிழ்ந்த அம்மென்
பாளை"—பெருங்கதை 3-4-49.
கமுகின் பாளை விரிதல் :—"வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை விரிபூங் கமுகு"—முத்துக் குமார-பிள்ளைத் தமிழ்-சிற்றில் 4.

‡ பொழில் வெயிலை மறைப்பது :—"வெயிற்கு எதிர்ந்து இடங் கொடாது அகங் குளிர்ந்த பைம்பொழில்"—சம்பந்தர் 2-98-6.

x "காதல் குனகிய இன்பச்சொல்"
—பாடல் 209-அடி 7, 8-பார்க்க.

o பட்டாலியூர்—கொங்கு மண்டலத்தில் காங்கேய நாட்டுப் பகுதியைச் சேர்ந்தது. "கந்தர் மேவிய பட்டாலி...கங்கா குல நாட்டார் செழிக்கும் காங்கேய நாடெங்கள் நாடே"—கொங்கு மண்டல ஊர்த்தொகை-7.

[தொடர்ச்சி 749 ஆம் பக்கம் பார்க்க]

வெங்கை — விரும்பத்தக்க ஒழுக்கத்தைக் கொண்ட அல்லது (வெம்) பராக்ரமம் பொருந்திய (கை) ஆற்றலை உடைய சுக்ரீவருடைய (வானர) சேனையை இலங்கைக்கு (கடல் கடந்து) போகும்படி விட வல்லவனும், ஜயத்தையே தரு சக்கரத்தை ஏந்தினவனுமான பெருமானும் திருமால் மனம் மிக மகிழும் மருகனே !

வெள்ளைப்பட்டு அணிந்துளது போல நல்ல, (வனம்) அழகிய (கமுகமரம்) பாக்குமரங்கள் (எண்பட்டு) மதிக்கத்தக்க வகையில் பாளைகளை விரிக்கின்ற சோலைகள் மிக்குச் சூழ்வதால் வெயில் மறை படுகின்ற வயலூரில் வீற்றிருப்பவனே !

உன் கொங்கைக்கு ஒப்பாவது (வடகிரி) மேருமலையே என்றும், உன் செங்கைக்கு (செவ்விய கைக்கு) நிகராவது நறுமணத் தாமரையே என்றும், உன் கூந்தலுக்கு இணையாவது (கரு) மேகமே என்றும் (வள்ளிமலைக்) காட்டிலிருந்த மங்கை—வள்ளியைக்

கும்பிட்டு வணங்கி ஆசையுடன் கொஞ்சிப் பேசி இனிய சொற்களைக் கொண்டு (அந்த வள்ளியைப்) பாடிப் பரவின இளையவனே! கொங்கு நாட்டுப் பட்டாலி நகரில் வீற்றிருக்கும் பெருமாளே !

(வம்பிற் சுற்றுறு பரகதி அருள்வாயே)

திருமுருகன் பூண்டி

946.

(உன்னைப் பணிவது இன்றியமையாதது என உணர்ந்து) அவசியமென அறிந்து, உன்னைப் பணிந்து (வேண்டிப் பலகாலும்) பலகாலும் வேண்டி—பல முறையும் பிரார்த்தித்து

தொடர்ச்சி : ‡ "சுந்தரர்க்குப், பறித்தபொருள்கள் அனைத்தினையும் பரிசு கொடுக்கும் பரமர்திரு, முருகன் பூண்டி யினிதுறையும் முருகா தாலோ தாலேலோ" (க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்)

திருமுருகன் பூண்டி கொங்கு மண்டலத்தைச் சார்ந்தது :—

"சுந்தரர் சொற்றமிழ்க்கா, அனத்தின் நடையுடை யாள்பாகன் தென்முரு காபுரிசூழ், வனத்தில் அடித்துப் பறித்தது வும் கொங்கு மண்டலமே"—கொங்கு மண்டல சதகம்-15.

†† உன் வேண்டி—உன்னை வேண்டி.

அறிவினுணர்ந் *தாண்டுக் கொருநாளில் ;
தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்-
சரணமதும் பூண்டற் கருள்வாயே ;
சவதமொடுந் தாண்டித் †தகரூர்வாய்-
‡சடுசமயங் காண்டற் கரியானே ;
xசிவகுமரன் பீண்டிற் பெயரானே-
திருமுருகன் பூண்டிப் பெருமாளே. [க]

அவிநாசி.

[திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 8-மைல். சுந்தர மூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு].

947. வீடு பெற

தனதானத் தனதான

இறவாமற் பிறவாமல் - எனையாள்சற் குருவாகிப் ;
oபிறவாகித் **திரமான - பெருவாழ்வைத் தருவாயே ;
குறமாதைப் புணர்வோனே - குகனேசொற் குமரேசா ;
அறநாலைப் புகல்வோனே - அவிநாசிப் பெருமாளே. (க)

---

* **ஆண்டுக் கொருநாளில் தவசெபம் தீண்டுதல்:** இங்ஙனம் ஆண்டுக் கொரு முறையேனும் ஆண்டவனைத் தரிசிக்கும் அநுட்டானத்தை இப்போது ஆண்டு தோறும் டிசம்பர் இறுதி நாளில் இரவு திருத்தணியில் கூடிப் பாடுவதில் அன்பர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். [அருணகிரிநாதர் வரலாறு-பக்கம் 75, 127]

† ஆட்டு வாகனம்:—பாடல் 677-பக்கம் 58 கீழ்க்குறிப்பு.

‡ "அறுவரும்...தெரிவரும் சத்யம்"—திருப்புகழ் 456.
"சமய பஞ்சபாதகர் அறியாத...சரண புண்டரீகம்"
—திருப்புகழ் 674.

x 'சிவகுமர அன்பு ஈண்டில் பெயரானே' எனப் பிரித்துக் கொள்க.
"உள்ளம் உருகில் உடனாவார்"
—சம்பந்தர் 2-111-3; திருவுந்தியார் 7.

o பிறவாகி—"ஊரே பேரே பிறவே"—திருப்புகழ் 954.

** திரம்—முத்தி.

என்னுடைய அறிவில் உன்னை யுணர்ந்து, வருஷத்திற்கு ஒரு தினமாவது

தவ ஒழுக்கத்தையும் ஜெப ஒழுக்கத்தையும் மேற்கொண்டு உள்ளங் கனிந்து—

உன்னுடைய திருவடியையும் (மனத்தே) தரிப்பதற்கு நீ அருள்புரிவாயாக.

(சவதமொடும்) 'இதை அடக்குவேன்' என்னும் ப்ரதிக்ஞையொடு குதித்து ஆட்டின்மீது ஏறி அதை (ஊர்வாய்) செலுத்துவாய்;

ஆறு சமயத்தவராலும் காணுதற்கு அரியவனே!

சிவகுமரனே! அன்பு கொண்டு நெருங்கில், அங்ஙனம் நெருங்கினவரை விட்டுப் பிரியாதவனே!

திருமுருகன் பூண்டி என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(சரணமதும் பூண்டற் கருள்வாயே)

அவிநாசி

947.

இறவா வரந்தந்தும், பிறவா வரந்தந்தும்— எனையாண்டருளும் குருவாகியும்,

வேறு துணையாகியும் (ஸ்திரமான) நிலையான— அழியாததான (அல்லது முத்தியாகிய)—பெருவாழ்வை —மோக்ஷவீட்டைத் தந்தருளுவாயாக,

குறமாது (வள்ளியை)ச் சேர்பவனே!—குகனே! (எல்லாராலும்) புகழப்படுகின்ற குமரேசனே!

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் உபதேசிப்பவனே—**அவிநாசியில்** வீற்றிருக்கும் பெருமாளே!

(பெருவாழ்வைத் தருவாயே)

948. திருவடியை மறவேன்

தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன தனதான

பந்தப்பொற் பாரப யோதர
முந்திச்சிற் றுடகை மேகலை
பண்புற்றுத் *தாளொடு மேவிய துகிலோடே-

பண் †டெச்சிற் சேரியில் வீதியில்
கண்டிச்சிச் சாரொடு மேவியெ
பங்குக்கைக் காசுகொள் வேசியர் பனிநீர்தோய்;

கொந்துச்சிப் பூவணி கோதையர்
சந்தச்செத் தாமரை வாயினர்
கும்பிட்டுப் பாணியர் வீணிய ரநுராகங்-

கொண்டுற்றுப் பாயலின் மூழ்கினு
மண்டிச்செச் சேயென வானவர்
கொஞ்சுற்றுத் தாழ்பத தாமரை மறவேனே;

அந்தத் ‡தொக் காதிய xமாதியும்
வந்திக்கத் தானவர் வாழ்வுறும்
அண்டத்துப் பாலுற மாமணி யொளிவீசி-

oஅங்கத்தைப் பாவைசெய் தாமென
சங்கத்துற் றார்தமி ழோதவு
வந்து**க்கிட் டார்கழு வேறிட வொருகோடிச்;

---

* "சேலை காலில் விழ விட்டு"—பாடல் 964.

† வேசையரை — "பலர் எச்சிற் காசைக் காரிகள்' என்று ராதலின் (488-ஆம் பாடல்) எச்சிற் சேரி-வேசியர் சேரியாகும்.

‡ தொக்கு ஆதி—சரீர சிருட்டிக்குத் தலைவ னன பிரமன்.

x ஆதி—'ஆதிமூலம்' என்னும் விஷ்ணு.

o எலும்பைப் பெண்ணுக்கினது
—பாடல் 697-பக்கம் 108 கீழ்க்குறிப்பு.

** கழுவேறினது—பாடல் 181-பக்கம் 420 கீழ்க்குறிப்பு.

948.

(பந்தம்) ரவிக்கையால் கட்டப்பட்ட (அல்லது திரண்ட), அழகிய, கனத்த, (பயோதரம்) கொங்கை, உந்தி வயிற்றில் கட்டப்பட்டுள்ள, சிறிதாக ஆடு அகை (அசைந்து விளங்கும்) மேகலை (இடையணி, இவை நன்கு பொருந்தி, பாதம் வரைக்கும் தொங்குகின்ற ஆடையுடனே

பழமையாயிருக்கும் (எச்சில் சேரியில்) பரத்தையர் சேரியில் உள்ள தெருவில் (நின்று) (வருபவர்களை)க் கண்டு—பார்த்து, இச்சிச்சரொடு — தம்மை இச்சித்து விரும்புபவர்களுடன் [மேவியே] பொருந்தியே, தம்முடைய பங்குக்குரிய (உடல் விற்பனைக்கு உரிய) காசைப் பறிக்கின்ற வேசையர்—விலைமாதர், பன்னீர் தோய்ந்துள்ள

(கொந்துச்சி) உச்சியில் (முடியில்) கொந்துப்பூ அணி—பூங்கொத்தாகிய மலர்களை [அல்லது பூங்கொத்தையும், உச்சிப்பூ என்னும் தலையணியையும்] அணிந்துள்ள கோதையர் (பெண்கள்), அழகிய செந்தாமரை போன்ற வாயிதழை உடையவர், (கும்பிட்டுப்பாணியர்) வணக்கத்தைக் காட்டும் கைகளை அல்லது சொற்களை உடையவர் (கும்பிட்டுப் பேசுபவர்கள்), வீண் காலம் போக்குபவர்கள்—(இத்தகையோர்மீது) காம இச்சை

(நான்) கொண்டு அவர்களிடமே பொருந்தி அவர்களுடைய படுக்கையில் முழுகினபோதிலும், (மண்டிச் செச்சேயென வானவர்) தேவர்கள் (மண்டி) உனை நெருங்கி ஜேஜே என்று (வாழ்த்தி)க் கொஞ்சுதல் செய்து—தாழும் — வணங்குகின்ற உன்பாத தாமரையை (நான்) மறவேன்;

அந்தத் (தொக்காதியும்) சரீர ஸ்ருஷ்டிக்குத் தலைவனை பிரமனும், (ஆதியும்) ஆதிமூலமெனுந் திருமாலும், வந்திக்கத்தான்—வணங்கித் துதிக்கவேதான்—துதிக்கும்படி அவரவர் வாழ்கின்ற (அண்டத்துப் பாலுற) அண்டங்களாகிய இடங்களில் சேர்ந்து வாழவும், (மாமணி ஒளிவீசி) அழகிய ரத்னமாலையின் ஒளிவீச—

எலும்பினின்றும் பெண்ணைப் படைக்கின்றோம் என்று சங்க காலத்துப் புலவர்களின் தமிழ் போன்ற செந்தமிழ்ப் பாடலை நீ ஓதவும், (உவந்து கிட்டார்) உன்னுடைய அருமை பெருமை தெரிந்து மகிழ்ந்து உன்னைச் சேராதவர்களாகிய சமணர்கள் கழுவிலேறவும், ஒரு கோடிக்கணக்கான

சந்தச்செக் காளநி சாசரர்
வெந்துக்கத் தூளிப டாமெழ
சண்டைக்கெய்த் தாரம ராபதி குடியேறத்-

தங்கச்*செக் கோலசை சேவக
†கொங்கிற்றிருக் காரவி நாசியில்
தண்டைச்‡சிக் காரயில் வேல்விடு பெருமாளே. (உ)

949. யமபயம் அற வரவேணும்

தனத்த தந்தன தானன தானன
தனத்த தந்தன தானன தானன
தனத்த தந்தன தானன தானன தனதான

மனத்தி ரைந்தெழு மீளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி-

வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னல்மிக வேதின நகையாட;

எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ றிந்தழல் வாய்விட வேபய முறவேதான்-

இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்;

---

* செக்கோல்—செங்கோல்.

† அவிநாசி—கொங்கு மண்டலத்தைச் சார்ந்தது—
"பூவென்ற சீரடி யாரூர்ப் பரவைதன் போகங்கொளும்
பாவென்ற செந்தமிழ்ச் சுந்தரன் பாடிப் படர்குளத்தில்
ஆவென்ற வாயின் முதலைகொள் பிள்ளையை யன்று கொண்டு
வாவென் றழைத்த அவிநாசி சூழ்கொங்கு மண்டலமே"
—கொங்கு மண்டல சதகம் 16.

‡ சிக்கார—சிங்கார.

(சந்தச்)—செ—(ரத்தம் ஒழுகுவதால்) சிவந்த—(சந்தம்) நிறத்தைக் கொண்டவர்களும், (காளம்) விஷகுணங் கொண்டவர்களுமான (நிசாசரர்) அசுரர்கள், (தீயைக் கக்கும்) பாணங்களால் வெந்து சிதறவும், (போர்க்களத்தில்) தூசி (படாம் எழ) போர்வைபோல்—திரைச்சீலைபோல மேலே தூசி கிளம்பி எழவும், போரில் (எய்த்தார்) இளைத்தவர்களான தேவர்கள் அவர்களுடைய ஊராகிய அமராவதியில்—பொன்னுலகில்—குடியேறவும்

தங்கமயமான செங்கோல் (ஆட்சியை) அசை—புரிந்த (சேவக) பராக்ரமசாலியே! கொங்கு நாட்டில் (தொக்கு) சேர்ந்துள்ள **அவிநாசி** யென்னுந் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! தண்டையணிந்த பெருமாளே! (சிங்கார) அழகிய (அயில்) கூரிய வேலாயுதத்தைச் செலுத்தும் பெருமாளே!

(பததாமரை மறவேனே)

949.

மனம் (திரைந்து) சுருங்கி வேதனைப்படும்படி எழுகின்ற (அல்லது நெஞ்சில் இரைந்து ஒலியுடன் எழுகின்ற) (ஈளை) கோழை அதிகரிக்கவும், கருநிறமுள்ள தலைமயிர் நரை கொண்டு வெளுக்கவும், தாமரை மலர்போன்றகண் (அண்டு இருளாகி) இருள் அண்டுதலாகி—கண் பஞ்சடைந்து—பார்வை குறையவும், நடை தடுமாற்றம் அடைவதாகியும்,

துன்பத்தைத் தர, தாய், மனையாள், குழந்தைகள் வெறுத்திடு அம் கிளையோர்—வெறுப்புக் கொள்ளும் நல்ல சுற்றத்தார், அவருடன் மற்றெல்லாரும் பழிக்கும்படியான சொற்களைச் சொல்வதால் — பேச்சினைப் பேசி — நிரம்ப நாள்தோறும் பரிகசித்துச் சிரிக்க—

என்னைக் (கடந்திடு) அடக்கி வெற்றி கொள்ளும் பாசக்கயிறு கொண்டு கோபத்துடனே வந்து எதிர்த்துச் சூலத்தைக் கையில் எடுத்து அதை என்மேல் வீசி, அழல்—நெருப்பை வாய் கக்க, நான் பயங் கொள்ளும்படியே,

(என்னை) இழுக்கவந்திடும் (எம) தூதர்களானவர் (என்னை)ப் பிடிப்பதற்கு முன்பாக (நீ) உன்னுடைய தாள் தாமரையாகிய இருதிருவடிகளையும் அடியேனுக்குத் தரும் பெருட்டு மயில் மேல் வந்தருள வேண்டும்;

*கனத்த செந்தமி ழால்நினை யேதின
நினைக்க வுந்தரு வாயுன தாரருள்
†கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்-
கடற்ச லந்தனி லேயொளி சூரனை
‡யுடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா ;
xஅனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
0அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா ;
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு **வாரம ராய்புரி
யருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே. (௩)

---

* இந்த மகுட அடி மனப்பாடம் செய்யத் தக்கது. பண்பார்ந்த செந்தமிழால் முருகனைப் பாடவேண்டும் என்பது அருணகிரியாரின் பேராசை:

"வேலுஞ்செஞ் சேவலும் செந்தமிழாற் பகரார்வம் ஈ"
—கந்தரலங்காரம் 52.

(1) "செந்தமிழ் வழுத்தியுனை அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே" ;
(2) "சித்திர நித்தத் தமிழாலுன் நாமத்தைக் கற்றுப் புகழ்கைக்குப் புரிவாயே" ;
(3) "தமிழ்ச் சுவையிட்டு...எய்த்திட...அருள்வாயே"
(4) "செஞ்சொல் சேர் சித்ரத் தமிழாலுன் செம்பொனூர் வத்தைப் பெறுவேனோ ;"
(5) "சரணாரவிந்தமது பாட வண்டமிழ் விநோதம் அருள்வாயே ;"
(6) "தமிழால்...பாடென்று ஆட்கொ டருள்வாயே ;"
(7) "தமிழிசையதாகவே மொழி செய்தே நினைந்திடுமாறு * * அருள்வாயே ;"
(8) "சுத்தச் சித்தித் தமிழைத் திட்டத்துக்குப் புகலப் பெறுவேனோ ;"
(9) "தமிழ்க் கொற்றப் புகழ்ச் செப்பித் திரிவேனோ ;"
(10) "செந்தமிழ் பாடும் புலப்பட்டம் கொடுத்தற்கும் * * க்ருபைச் சித்தம் புரிவாயே ;
(11) "எனக் கென்றப் பொருட் டங்கத் தொடுக்குஞ் சொற் றமிழ்த்தந்திப் படி யாள்வாய்."

—(திருப்புகழ் 398, 1303, 1024, 870, 758, 680, 584, 475, 468, 34, 33).

[தொடர்ச்சி 757 ஆம் பக்கம் பார்க்க]

பொருள் கனத்த—பொருள் செறிந்த செந்தமிழால் உன்னையே தினந்தோறும் நினைக்கவும் (தருவாய் உனதாரருள்) உன்னுடைய நிறைந்த திருவருளைத் தந்தருள வேண்டும்; (கருத்திருந் துறைவாய் எனதாருயிர் துணையாக) என்னுடைய அருமை உயிர்க்குத் துணையாக நீ என்கருத்திலேயே பொருந்தி வீற்றிருந்தருளவும் வேண்டும்;

கடல் நீரிலே ஒளித்திருந்த சூரனுடைய உடலைப் பிரிவு செய்ய அது இரண்டு கூறுகத் தோன்றி எழுந்து ஒப்பற்ற சேவலும் அழகிய மயிலும் ஆகும்படி செலுத்திய வேலாயுதத்தை உடையவனே!

(அனத்தனும்) அன்னவாகனமேறும் பிரமனும், (கமலாலயமீதுறை) செந்தாமரைக் கோயிலின்மீது வீற்றிருக்கும் (திரு) இலக்குமி சேர்ந்துள்ள திருமாலும், ஆக இருவரும் அடி (முடி) தேடிய (அரற்கு) சிவபெருமானுக்கு அரிய பொருளை விளக்கி உபதேசித்த குமரேசனே!

அற நெறியை உபதேசிப்பவரும் (தருமோபதேசம் செய்பவரும்) பெருமை பொருந்திய அந்தணர்களும் உன்னை நாள்தோறும் தொழுபவர்களாய் (அமராய்புரி) அமர்ந்திருத்தலை விரும்பியுள்ள—(அவிநாசியுள் மேவிய பெருமாளே)! திருவருள் நிறைந்து–(அடியார்களுக்கு அருள் நிறையப் பாலித்து) **அவிநாசி** யென்னுந் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே. (மயில் மீதினில் வரவேணும்)

(தொடர்ச்சி): முருகவேளின் குழந்தைத் திருவிளையாடல்களைக் கூறுமிடத்து அவர் "செந்தமிழ் வடாதுகலை சேர்ந்துழி உலாவும்"—என்றார் கந்தபுராணத்தில் 1-14-5.

† 'நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்' —சுந்தரர் 7-1-1.

‡ சூரன் இரு கூறுனது:
"போரவுணன் அங்கம் இருகூறாய் அடல் மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்" -கந்தர் கலிவெண்பா.
திருப்புகழ் 737-பக்கம் 204-கீழ்க்குறிப்பு.

x அயனும் அரியும் சிவபிரானது அடிமுடி தேடினது:
—பாடல் 319-பக்கம் 292-கீழ்க்குறிப்பு.

o சிவனுக்கு உபதேசித்தது —பாடல் 327-பக்கம் 314-கீழ்க்குறிப்பு.

ஃஃ அமராய்புரி—அமர்தலை உடையராய், புரி—புரிதல்.
—அமர்—அமர்தல்—முதனிலைத் தொழிற் பெயர்.

திருப்புக்கொளியூர்.

[இஃது அவிநாசிக்குச் சமீபம். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் முதலைவாயினின்றும் பிராமணப் பிள்ளையை மீட்டுக் கொடுத்தருளிய ஏரிக்குத் தெற்கில் இவ்வூர் இருந்ததாம். இப்பொழுது கொல்லை வெளியா யிருக்கின்றது.]

950. திருவடியை மறவேன்

தத்தன தானன தத்தன தானன
தத்தன தானன தனதான

பக்குவ வாசார லட்சண சாகாதி
பட்சண மாமோன சிவயோகர்-
பத்தியி *லாறாறு தத்துவ மேல்வீடு
பற்று†நி ராதார நிலையாக;
அக்கண மேமாய துர்க்குணம் வேறாக
‡அப்படை யேஞான வுபதேசம்-
அக்கற வாய்பேசு சற்குரு நாதாவு
னற்புத சீர்பாத மறவேனே;
உக்கிர வீராறு மெய்ப்புய னேநீல
வுற்பல வீராசி மணநாற-
ஒத்தxநி லாவீசு நித்தில நீராவி
யுற்பல ராசீவ வயலூரா;
பொர்க்கமி லாவீர விக்ரம மாமேனி
oபொற்ப்ரபை யாகார அவிநாசிப்

---

* ஆறாறு தத்துவம்—பாடல் 294-பக்கம் 232 கீழ்க்குறிப்பு.

† பற்று நிராதார நிலையாக:—
"ஆதாரத்தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல உந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற"—திருவுந்தியார் 8.

‡ "அப் படையே ஞான உபதேசம்"—இது "பரமசுக மவுன கட்கம்" (வேடிச்சி காவலன் வகுப்பு), "மோன உரையில் உபதேச வாள்" திருப்புகழ் 828, "தனி ஞானவாள்" கந்தரலங்காரம் 69, 'ஞானவாள் ஏந்தும் ஐயர்' (திருவாசகம் 46-1) என்றெல்லாம் குறிக்கப் பட்டுளது.

x நீராவியின் நிலாவீசு நித்திலத் தன்மை—இதனைக் "கண்ணாடியில் தடம்" என்றார் 908 ஆம் பாடலில்.

[தொடர்ச்சி 759 ஆம் பக்கம் பார்க்க.]

திருப்புக்கொளியூர்

950.

பக்குவமான—தக்கதான—ஆசார நிலையில் நின்று, லட்சணமான—பொருந்தியதான (சாகாதி) பச்சிலை முதலான உணவையே உண்டு, சிறந்த மோன நிலையில் நிற்கும் சிவயோகிகள்—

(தங்களுடைய) பக்தி நிலையில் முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டதாயுள்ள மோக்ஷ வீட்டைப் பற்றுவதானதும், எப்பற்றுக்களும் அற்றதானதுமான, (நிலையாக) நிலையை நான் அடைவதாய்

அந்தக்ஷணமே, (அந் நிலையை அடைந்தவுடனே)—மாயமாகவந்து (என்னைப் பற்றியுள்ள) துர்க்குணம் எல்லாம் (வேருக) என்னை விட்டொழிய (அல்லது துர்க்குணம் எல்லாம் மாய்ந்து என்னை விட்டுப் பிரிய), (அப்படையே ஞான உபதேசம்) அந்த ஞான உபதேசமே படையாக—ஞானமே (வாட்) படையாக

அக்கு—அற) (பாசத்தின்) உரிமை எல்லாம் அற்றுப்) போம்படி (வாய்பேசு) உபதேசமொழியை வாய்விட்டுரைத்த சற்குரு நானே! உன் அற்புத (அழகிய) திருவடிகளை நான் மறவேன்;

உக்கிர (ஊக்கம் மிக்க) பனிரண்டு புயங்களையுடையவனே! மெய்ப் புயனே—உண்மை நெறியைக் காட்டும் புயங்களை உடையவனே! நீலோற்பல (வீ)மலர்களின் (ராசி) கூட்டங்களின் நறுமணம் வீச

பொருந்தினதாயுள்ள நிலவொளி வீசுவதும், முத்துப்போல் தெளிவு உள்ளதுமான (நீராவி) நீர் நிலைகள் (உற்பலம்) குவளைமலரையும் (ராசீவம்) தாமரையையும் கொண்ட வயலூர்ப் பெருமானே!

(பொக்கம்) பொய் இல்லாத—மெய்ம்மையான வீரங் கொண்டவனே! விக்ரம—பராக்ரமசாலியே! (மாமேணி) அழகிய மேனி (நிறம்) பொன்னொளி வீசும் தேகத்தையுடையவனே! அவிநாசி என்னும் தலத்தில்

(தொடர்ச்சி): ○ முருகவேள் "பொற் ப்ரபை ஆகாரம்"—
"மாழைபொரு மேனியவ", "செம்பொன் மேனிய"
—திருப்புகழ் 161, 1304.

*பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
புக்கொளி யூர்மேவு பெருமாளே. (க)

951. துதி

தனத்தத்தன தானன தானன
தனத்தத்தன தானன தானன
தனத்தத்தன தானன தானன தந்ததான

†மதப்பட்டவி சாலக போலமு
முகப்பிற்சன வாடையு ‡மோடையு
மருக்கற்புர லேபல லாடமு x மஞ்சையாரி-
ovயிற் றுக்கிடு சீகர பாணியு
**மிதற்செக்கர்வி லோசன ††வேகமு
‡‡மணிச்சத்தக டோரபு ரோசமு மொன்றுகோல;
விதப்பட்டவெ ளானையி லேறியு
நிறைக்கற்பக நீழலி லாறியும்
விஷத்துர்க்கன சூளிகை மாளிகை யிந்த்ரலோகம்-

* இது கலியுகத்தில் நிகழ முடியாத ஒரு அற்புத நிகழ்ச்சியாய்க் கலியுகத்தின் பொய்ம்மையை வெருட்டி நீக்கி, முதலை உண்ட பிள்ளையை முதலை வாயினின்றும் சுந்தரமூர்த்திப் பெருமான் மீட்டுக் கொடுத்த நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. பாட்டு 398 பக்கம் 506. இந்த நிகழ்ச்சி கலியின் பொய்ம்மையை விலக்கி, இறைவன் திருவருளின் மெய்ம்மையை நாட்டிற்று—என்கின்றார்

† முதலிரண்டடியில்(ஐராவதம்)வெள்ளை யானையின் வர்ணனை.

‡ ஓடை—யானை நெற்றிப் பட்டம்.
"அண்ணல் யானை அணிந்த பொன்செய் ஓடை"
—புறநானூறு 326.

x மஞ்சு—யானை முதுகு; ஆர்தல்—பொருந்துதல்.

o வயிற்றுக்கிடு சீகர பாணி — பாணி — பறை; சீகரம்— செல்வச் செழிப்பு; யானை மீது பறை எற்றி வெற்றியைத் தெரிவித்தல் வழக்கம்:
"வையம் அறிய...யானைப் பிணர் எடுத் தேற்றிப்
பறை விட்டன்றால்"—பெருங்கதை 3-27-219.

** மிதல்—மிதத்தல்—மிகுதல்:

†† யானையின் வேகம்—வாயு வேகம், மனோ வேகம் போன்ற தென்பர்—
"கால் கிளர்ந்தன்ன வேழம்"—திருமுரு—82 (கால்-வாயு)

[தொடர்ச்சி 761 ஆம் பக்கம் பார்க்க]

(பொய்க்கலி போமாறு) கலியின் பொய்ம்மை (அசத்திய நிலை) நீங்குமாறு, இறைவனுடைய திருவருளின் மெய்ம்மை நிலை சீரோங்கி-புகழோங்கி விளங்கினதுமான **திருப்புக்கொளியூர்** என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே.

(உன் அற்புத சீர்பாத மறவேனே)

951.

மதம் பெருகுவதற்கு இடமானதும், விசாலமானதுமான (கபோலமும்) கதுப்பும் (மதம் பாயும் இடமும்), முன் புறத்தில் (சன்ன ஆடையும்) நுண்மையான முகபடாமும், (ஓடை) நெற்றிப் பட்டமும், மரு (வாசனை பொருந்திய) பச்சைக் கற்பூரம் கூடிய (இலேபம்) பூச்சு (கலவையைக்) கொண்ட (லலாடமும்) நெற்றியும் (மஞ்சையாரி) மஞ்சை—யானையின் முதுகை—முதுகில்—ஆரி—பொருந்தும்படி—

வயிற்றில் இடுகின்ற செல்வச் செழிப்பைக் காட்டும் (பாணியும்) பறையும் (முரசும்), (மிதல்) மிதத்தலைக் காட்டும்—மிகவும் சிவந்த கண்களும், அதிவேகமாகச் செல்லும் செலவும், மணிகளின் சப்தம் மிகப் பலமாகக் கேட்கும்படிக் கட்டப்பட்ட கழுத்துக் கயிறும்—இவையெலாம் பொருந்திய அழகிய—

கோலத்தைக் கொண்ட வெள்ளையானை (ஐராவதத்தின்) மீது ஏறி பவனி வந்தும், நிறைந்து செழிப்பு உற்ற கற்பக விருக்ஷ நீழலில் அமைதியா யிருந்தும், விஷத்துர்க்கன—(விஷம்) விடம், துர்க்கம், அன்ன—(விடம்) மலை, (துர்க்கம்) மலைக் கோட்டை, (அன்ன) போன்ற—மலைக் கோட்டை போன்றனவும், (சூளிகை) — நிலா முற்றங்களை உடையனவுமான (மாளிகை) அரண்மனைகளை உடைய தேவேந்திர லோகத்தில்—பொன்னுலகத்தில்—

''சிந்தையின் ஒழிக்கும் செலவிற் ருகி * *
இந்திரன் களிற்றெரு டிணைந்துடன் பிறந்த
இரும்பிடி—பெருங்கதை 1-42-215-19.

‡‡ மணி—''கயிறு பிணிக்கொண்ட கவிழ்மணி
மருங்கிற் பெருங்கை யானை''—புறநானூறு 3.

புரோசம் — புரோசை — யானை கழுத்திலிடும் கயிறு — ''மணியும் புரோசையும்'' ''வீக்குறு புரோசை''
—பெருங்கதை 1-53-33 ; 1-49-12.

விளக்கச்சுரர் சூழ்தர வாழ்தரு
பிரப்புத்வகு மாரசொ ரூபக்
*வெளிப்பட்டெனை யாள்வய லூரிலி ருந்தவாழ்வே;

இதப்பட்டிட வே†கம லாலய
வொருத்திக்கிசை வானபொ னுயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய தொண்டர்தாள-

இசைக்கொக்கவி ராசத பாவனை
யுளப்பெற்றெடு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென வந்துகானிற்;

றிதப்பட்டெதி ரே‡பொதி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியி லேவரு
திசைக்குற்றச காயனு மர்கிம றைந்துபோர்முன்-

---

* இது வயலூர் முருகன் அருணகிரியாரின் கனவில் வந்து அருளிய வரலாற்றைக் குறிப்பது: திருப்புகழ்—பாடல் 916, 105, 271 (அடி எட்டின் பாடபேதம்—பக்கம் 176 கீழ்க்குறிப்பு) பார்க்க.

† கமலாலய ஒருத்தி—திருவாரூரிற் பரவையார்.

திருவிழாக் காணவரும் அடியார்களுக்குப் பொன், மணி, துணி, அமுது முதலியன கொடுத்து உபசரிப்பது பரவையாரின் வழக்கம். அந்தப் பணி நிறைவேறுதற் பொருட்டே சுந்தரர் இறைவனிடம் பொன் வேண்டுவார்.

சுந்தரர் பொன் வேண்டின இடங்கள்: (1) திருப்புகலூர்.

"செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் தரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர்
இறைவர் பாதம் பணிய எழுந் தருளிச் சென்றங் கெய்தினர்"
—பெரிய புரா. ஏயர்கோன்-46.

(2) திருப்பாச்சிலாச்சிராமம்.

"நன்று பெருகும் பொருட்காதல் நயப்புப் பெருக காத ரெதிர்
நின்று பரவி"—பெரிய புரா. (ஏயர்கோன்-79.)

(3) விருத்தாசலம். (திருமுதுகுன்றம்)

"நாதர்பாற் பொருள்தாம் வேண்டி...குறிப்பொடும் பரவும் போது,
* * பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயிரம் பொன்...
நல்கிட (பெரிய புரா-ஏயர்கோன்-106, 107)

இந்தப் பன்னிரண்டாயிரம் பொன்னும் பரவையாரின் பொருட்டே:

[தொடர்ச்சி 763 ஆம் பக்கம் பார்க்க]

(விளக்க) புகழ் கொண்ட தேவர்கள் சூழ்ந்து பணிய வாழ்கின்ற—பிரபுவாம் தன்மை கொண்ட—ஆட்சி புரியும்— இளைஞனும் திருவுருவம் உடையவனே! பிரத்யக்ஷமாக (என் முன் வந்து) என்னை ஆண்டருளிய வயலூரில் வீற்றிருந்தருளும் செல்வனே!

இன்பம் அடையுமாறு திருவாரூரிலிருந்த பரவையாருக்கு ஏற்ற தர்ன பொன் ஆயிரத்தைச் சம்பாதிக்க—பெறவேண்டித்—தலங்கள் தோறும் சென்று தரிசித்த தொண்டர் (அடியராம் சுந்தரர்), தாளத்தின்

இசைக்குப் பொருந்தும்படி (ராசத பாவனை) உறுதியான முயற்சித் தெளிவுடன், உள்ளப் பெருக்கத்துடன் (நிறைந்த பத்தியுடன்), பதிகம் பாடி வருகையில், (வேடையில்) கோடைக்கால வெப்பத்தால் அவருக்கு உண்டான இளைப்பு (உக்கிட) நீங்க, (வார்) நேர்மையான (அல்லது ஆர்—அருமையான) மறையவர் கோலத்துடன் (சுந்தரர் வந்து கொண்டிருந்த) காட்டிலே வந்து—

திதப்பட்டு—நிலையாக்வே—ப்ரத்யக்ஷமாய் (சுந்தரரின்) எதிரே தோன்றித் (தாம் கொண்டுவந்த) கட்டுச் சோற்றை அவிழ்த்துத் தந்தவரும், அவிநாசித் தலத்துக்கு (சுந்தரர் வரும்போது) திசை தடுமாறி அவர் மயங்கினபோது—அவருக்குச் செல்லவேண்டிய திசையைக் காட்டச் சகாயனாய் வந்து உதவி செய்து மறைந்து போனவரும், (சில ஆண்டுகளுக்கு) முன்பு

"எனக்குச், செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன் றமர்ந்தீர்
வம்பமருங் குழலாள் பரவை யிவள் வாடுகின்றாள்
எம்பெருமா னருளீர் அடியே னிட்டளங்கெடவே"-(சுந். 7-25-2)

‡ மறையோனாய் வந்து சுந்தரருக்குப் பொதிசோறு அளித்ததும், திசைக்குற்ற துணை செய்ததும்:

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவிநாசி என்னும் தலத்தைத் தரிசிக்கும் பொருட்டுக் காட்டு வழியிற் செல்லும்போது வெப்பத்தினால் இளைப்பும் பசியும் அவரை வருத்தின. அப்போது சிவபிரான் மறையவர் திருக் கோலத்துடன் சுந்தரரின் எதிர் தோன்றி அவருக்குப் பொதிசோறும் நீரும் தந்து அவரது இளைப்பை ஆற்றினர்.

[764 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செறிப்பித்த *கராவதின் வாய்மக
வழைப்பித்தபு ராணக்ரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே. (உ)

952. ஞானம் உற

தனத்தத்தன தான தான தானன
தனத்தத்தன தான தான தானன
தனத்தத்தன தான தான தானன தந்ததான

வனப்புற்றெழு கேத மேவு கோகிலம்
அழைக்கப்பொரு மார னேவ தாமலர்
மருத்துப்பயில் தேரி லேறி மாமதி †தொங்கலாக-

மறுத்துக்கடல் பேரி மோத வேயிசை
பெருக்கப்படை கூடி மேலெ ழாவணி
வகுத்துக்கொடு சேம மாக மாலையில் வந்துகாதிக்;

கனக்கப்பறை தாய ளாவ நீள்கன
கருப்புச்சிலை காம ரோவில் வாளிகள்
களித்துப்பொர வாசம் வீசு வார்குழல் மங்கைமார்கள்-

[763-ஆம பக்கத் தொடர்ச்சி]

''கரதல கமண்ட லத்திற் கங்கைநீர் கவினத் தூக்கி
விரதவே தியர்போல் நேரே விரைந்தெழுந் தருளி யந்தோ
பரதவித் திளைத்து வந்தீர் பாதேயம் உளது சற்றிங்
கிரதமின் றெனினும் உண்பீர் பசிக்கின்பம் எய்தும் என்றார்''

பின்னர் சுந்தரர் ''ஐயா! புக்கொளியூர் அவிநாசிக்குப் போகும் திசை தெரியவில்லை; எத்திசை போகவேண்டும் அருளுக'' என்று அந்த மறையவரைக் கேட்க, அவர் ''இதோ! இந்த மேற்குத் திசை நெறியிலே போகவும்'' எனக் கூறிப் புக்கொளித்தனர்.

''கொங்கில்வா ரணவா சிக்கு, நெறியெது என்று கேட்ப
நேர் குட திசைபோ என்று, பிறிதிணை யில்லா வாய்மை
பேசிநின் றொளித்தா ரன்றே''—

''குறைந்த புன் மதியி னேற்குக் கொணர்ந்தமு தளித்தாய் போற்றி
உறைந்தபுக் கொளிசென் றேற உயர்நெறி உரைத்தாய் போற்றி
மறைந்த வான் பொருளே போற்றி''

—அவிநாசிப் புரா-சுந்தர-244, 246, 247.

---

* முதலை வாயினின்றும் பிள்ளையை மீட்டது:
—பாடல் 398-பக்கம் 506, பாடல் 446-பக்கம் 621.

[தொடர்ச்சி 765 ஆம் பக்கம் பார்க்க]

(ஏரியிற்) சேர்ந்திருந்த முதலையின் வாயினின்றும் (அது உண்ட) பிள்ளையைச் (சுந்தரர் பாட்டுக்கு இணங்கி) (அது கரையிற் கக்கும்படி) வரச் செய்தவருமான பழையராம் கருணைகரமூர்த்தி, **திருப்புக்கொளியூர்** என்னும் தலத்தை உடையவராய் வாழ்பவர்—ஆகிய சிவமூர்த்தி புகழும் தம்பிரானே!

952.

அழகு. கொண்டு எழுகின்றதும், துக்கம் விளைவிப்பதுமான (எக்காளமான) குயில் அழைக்க, (பொருதற்கு) போரிடுவதற்கு வரும் மன்மதன் தனது பாணங்களாகிய மலர் கொண்டு, தென்றற்காற்றாகிய தேரில் ஏறிக்கொண்டு, அழகிய சந்திரன் வெண் குடையாக விளங்க,

(அலைகள் மாறி மாறிவரும்) கடலானது முரசப்பறையாய் மோத, புல்லாங்குழல் இன்னிசையைப் பெருகச்செய்ய, (படைகூடி) சேனையாகிய மகளிர்கூடி மேலெழுந்து புறப்பட்டு, அணிவகுத்ததுபோல வரிசை வரிசையாக வகுத்துக் கொண்டு, நன்றாக மாலை நேரத்தில் வந்து கொல்லுவது போலக்

(கனக்க) மிகுதியாக பறையொலி விரிந்து பரவுதலாக, நீண்ட பெருமைவாய்ந்த (கருப்புச்சிலை காமர்) காமர் கருப்புச்சிலை—அழகிய தனது கரும்பு வில்லில், ஓவில் (ஓவுதலில்லாது) — இடையறாது (வாளிகள்) அம்புகளைக், களிப்புடனே—மகிழ்ச்சியுடன் வீசிப் (பொர) என்னுடன் போர் செய்வதால் நறுமணம் பரந்து நீண்ட கூந்தலையுடைய மாதர்களின்

(தொடர்ச்சி:) † தொங்கல்—வெண்குடை. மன்மதனுக்குக் குயில்—எக்காளம்; பாணம்—மலர்கள்; தென்றல்—தேர்; சந்திரன்—குடை; கடல்—முரசு; மகளிர்—படை, சேனை; கரும்பு—வில்; மாலை—இலஞ்சி, மகிழம்பூ; மஞ்சள் சோலை—படை வீடு; கமுகம் பாளை—கவரி; மல்லிகை—தம்பலம் துப்பும் கலசம்; தாழம்பூ—வாள்.

'தொடை இலஞ்சி; மஞ்சளிளஞ் சோலை படை வீடு;
படைமங்கை யர்கமுகம் பாளை—யிடுகவரி;
காளாஞ்சி மல்லிகையாம்; காரிகையீர் மாரனுக்கு
வாளாமோ லைப்பூவு மால்

இரத்தினச் சுருக்கம்.—பாடல் 555-பக்கம் 266-கீழ்க்குறிப்பு.

கலைக்குட்படு பேத மாகி மாயும
துனக்குப்ரிய மோக்ரு பாக ரா்இது
கடக்கப்படு நாம மான ஞானம தென்றுசேர்வேன் ;

புனத்திற்றினை காவ லான கா்ரிகை
தனப்பொற்குவ டேயு மோக சாதக
குனித்தப்பிறை சூடும் வேணி நாயகா் நன்குமாரா-

*பொறைக்குப்புவி போலு நீதி மாதவர்
சிறக்கத்தொகு பாசி சோலை மாலைகள்
புயத்துற்றணி பாவ சூர னுருயிர் கொண்டவேலா ;

சினத்துக்†கடி விசி மோது மா‡கட
லடைத்துப்பிசி தாச னுதி மாமுடி
தெறிக்கக்கணை யேவு வீர மாமனும் xஉந்திமீதே-

செனித்துச்சதுர் வேத மோது நாமனு
மதித்துப்புகழ் சேவ காவி ழாமலி
திருப்புக்கொளி யூரில் மேவு தேவர்கள் தம்பிரானே. (ந)

பேரூர்

[கோயமுத்தூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல். தேவார வைப்புஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

953. ஞானேபதேசம் பெற

தானத் தனதான

தீராப் பிணிதீர - சீவாத் துமஞான ;

---

* பொறுமைக்குப் பூமியை உதாரணமாக எடுத்துக் காட்டுவர்.
"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"—திருக்குறள் 151.
"பொறையுடைய பூமி நீரானாய் போற்றி" - அப்பர் 6-56-1.

† கடி—விரைவாக.

‡ கடலை அடைத்தது—பாடல் 754-பக்கம் 248-கீழ்க்குறிப்பு.

x திருமாலின் உந்தியில் (நாபியில்) உதித்தவன் பிரமன் :—
"மாலும் மொய்யொளி உந்தியில் வந்திங் கருமறை யீந்த
உரவோனும்"—சம்பந்தர் 1-100-9.

கலைக்குள் (ஆடையுள்—அல்லது அவர்கள் சம்பந்தமான கொக்கோக சாத்திரத்துள்) படு—அகப்பட்டு, (அல்லது கலைக்கு உட்படு—கலைக்கு உட்பட்டு) பேதமாகி—மனம் வேறுபட்டு, நான் இறந்து படுவது உனக்குப் பிரியந்தானோ! கருணாகரனே! இந்த என் தலை விதியைத் தாண்டிக் கடக்கக் கூடியதும், பெருமை பொருந்தியதுமான ஞான நிலையை நான் என்று கூடுவேன்!

(வள்ளிமலை)த் தினைப் புனத்தில் காவல் செய்து வந்த பெண்ணின் வள்ளியின் கொங்கையாகிய பொன் மலையில் பொருந்தின மோகத்தை (ஆசையைக்) கொண்ட ஜாதகத்தையுடையவனே! வளைவுள்ள பிறையைச் சூடும் சடையையுடைய பெருமானுடைய நல்ல புதல்வனே!

பொறுமைக்குப் பூமியைப் போலும் என்றபடி (பொறுமையுள்ள) நீதி கொண்ட மகா தவசிகள் சிறப்புற்று வாழ, நெருங்கிய பசிய (பசுமை பொருந்திய—குளிர்ந்த) சோலையிலுள்ள மலராலாய மாலைகளைப் புயத்திலணிந்துள்ளவனும், பாவியுமான சூரனுடைய அரிய உயிரை வவ்விய வேலனே!

கோபித்து வேகமாக அலைகளை வீசி மோதுகின்ற பெரிய கடலை (அணையிட்டு) அடைத்து (பிசிதாசனாதி) பிசித—அசன—ஆதி—மாமிசமுண்ணும் அரக்கர் முதல்வனான ராவணனுடைய சிறந்த தலை முடிகள் அற்றுவிழப் பாணத்தை ஏவின வீரம் பொருந்திய மாமனாகிய திருமாலும், அவருடைய கொப்பூழிலே—

உதித்து நான்மறையோதும் (நாமன்) பெருமை பொருந்திய பிரமனும் நன்மதிப்பு வைத்துப் புகழ்கின்ற பராக்ரமசாலியே! திருவிழாக்கள் நிறைந்து பொலியும் **திருப்புக்கொளியூர்** என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் தம்பிரானே! தேவர்கள் தம்பிரானே!

(ஞானமதென்று சேர்வேன்)

பேரூர்

953.

முடிவே இல்லாத பிணி (பிறவி நோய்) முடிவு பெற—சிவனாகிய ஆத்துமாவைப் பற்றிய இந்தச் சிற்றுயிர்க்கு உற்ற ஞான நிலையைத் தருவதும்—

ஊராட் சியதான - ஓர்வாக் கருள்வாயே ;

பாரோர்க் கிறைசேயே - பாலாக் கிரிராசே;

பேராற் பெரியோனே - பேரூர்ப் பெருமாளே. (க)

954. வீடு பெற

தத்த தானன தத்த தானன
தானா தானா தானா தானா தனதான

மைச்ச ரோருக நச்சு வாள்விழி
மானா ரோடே நாணா நீயா ரெனுமாறு-

வைத்த போதக சித்த யோகியர்
வாணாள் கோணாள் வீணாள் காணா ரதுபோலே ;

நிச்ச மார்கவு மிச்சை யானவை
நேரே தீரா*வூரே பேரே பிறவேயென்-

நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே ;

---

* "ஊர், பெற்றதாய், சுற்றமா யுற்றதாள்"—திருப்புகழ் 1036.
'பிறவே !—'குருவாகிப் பிறவாகி'—திருப்புகழ் 947.

உலக முழுவதையும் ஆட்சி செய்யக்கூடியதுமான—ஓர் (ஒப்பற்ற) உபதேச மொழியொன்றை (எனக்கு) உபதேசித்தருளுக;

உலகோர்க்குத் தலைவனை சிவனது குமாரனே! (அல்லது உலகோர்க்கு (இறை) தலைவனே! சேயே—செவ்வேள்)—பாலா—இளையோய், மலையரசே—(குறிஞ்சிவேந்தே)!

புகழாற் பெரியவனே!—**பேரூர்ப்** பெருமாளே!

(ஓர்வாக் கருள்வாயே)

954.

மை பூசியுள்ளதும், (சரோருகம்) தாமரை போன்றதும், (நஞ்சு) விஷம் போன்றதும், வாள் போன்றதுமான கண்களைக் கொண்ட பெண்களுடனே, நான் யார் நீ யார் என்னும் வகையில் (மாதர் மயக்கால் சிறிதேனும் தாக்கப் படாதவராய்)

(தங்கள் மன நிலையை) வைத்துள்ள ஞானத்துடன் கூடிய நெஞ்சினராகிய (அல்லது சித்தராம்) யோகிகள் தமது வாழ் நாள், கோள் நாள் (கோளாலும், நாளாலும்) கிரகதோஷத்தாலும் நக்ஷத்திர தோஷத்தாலும், வீணாகப் போம்படியான நாளாகக் காணமாட்டார்(யோகியர் தங்கள்வாழ்நாளை க்ரஹ சேஷ்டையால் தாக்குண்டு வீணாகப் போக விடமாட்டார்); அது போலவே

(நிச்சமாகவும்) உறுதியாக (அல்லது எப்பொழுதும்) (இச்சையானவை) மண், பெண், பொன் என்னும் மூவாசைகள் (நேரே தீரா) ஒரு வழியாக முடிவு பெறுவதில்லை;—ஆதலால் (ஊரே, பேரே, பிறவே) எனது சொந்த ஊர்போல் இனியவனே! என் பேர் போல இனியவனே! (பிறவே)—எனக்கு இனிய பிற பொருள்களும் ஆனவனே! (நிஷ்கராதிகள் என்முன் புகாது) என்னை

(நிஷ்கராதிகள்) நிச்சயமாய்ப் பிடிக்கின்றவைகளாகிய மூவாசைகள், மும்மலங்கள், முக்குற்றங்கள், முக்குணங்கள் முதலிய) எவையும் முற்பட்டு என்னைத் தாக்காதபடி, இனிமேல், நீயே தாய்போல் என்மீது அன்பு பாராட்டி அடியேன் இறந்துபோகா வண்ணம் அருள் புரிவாயாக;

*மிச்ச ரோருக வச்ர பாணியன்
 வேதா வாழ்வே நாதா நீதா வயலூரா-
வெற்பை யூடுரு வப்ப டாவரு
 வேலா சீலா பாலா காலா யுதமாளி;
†பச்சை மாமயில் மெச்ச வேறிய
 பாகா சூரா வாகா போகா தெனும்வீரா-
‡பட்டி யாள்பவர் xகொட்டி யாடினர்
 பாரூ ரொசூழ் பேரூ ராள்வார் பெருமாளே. (உ)

[690-ஆம் பாடலையும் இத்தலத்துக்கு உரியதாகக் கொள்ளலாம்.]

---

* 'வனச மேல்வரு தேவா!'—திருப்புகழ் 150.
இந்திரன்—ஆயிரங் கண்ணனை வரலாறு
—பாடல் 413 பக்கம் 546 கீழ்க்குறிப்பு.

† சூரனும் மயிலை அடக்கி அதன்மீது முருகவேள் ஏறி விளங்குவதைக் கண்டு தேவர்கள்—

"ஆர்த்தனர் எழுந்து துள்ளி ஆடினர் பாடா நின்றார் * *
சுடர்வேல் கொண்ட தீர்த்தனை எய்திச் சூழ்ந்து
சிறந்துவாழ்த் தெடுக்க லுற்றார்."—கந்தபுரா 4-14-1,2.

‡ திருமால் தில்லைத் திருநடனத்தைத் தரிசிக்க விரும்பின போது, சிவபிரான் திருமாலை நோக்கிச் 'சிதம்பர தரிசனம் பதஞ்சலி வியாக்ரபாதருக்குச் சுதந்திரமாக்கினோம். நீ விராட்புருடனுக்கு விந்து ஸ்தானமாயுள்ள மேலைச் சிதம்பரம் எனப்படும் பேரூரில்—வெள்ளியம்பலத்தில் — (காலவமுனி, காமதேனு — இவர்களுடன்) 'கோமுனியாய்' வந்து நடன தரிசனம் செய்வாயாக' என்றனர்.

பிரமன் படைப்புத் தொழில் வாராது வருந்திச் சிவபிரானிடம் முறையிட அவர், நீ 'பட்டி முனியாய்ப்' பேரூரில் வந்து பத்தி செய்வாயாகில் எமது நடனத்தையும், எண்ணுற்ற வரத்தையும் பெறலாம் என்றனர். அங்ஙனமே, திருமால்—'கோமுனிவனாகவும்', பிரமா — 'பட்டிமுனிவ'னாகவும் பேரூரில் வழிபட்டு நடராஜப் பெருமானுடைய ஆடலைக் கண்டு மகிழ்ந்தனர் — என்பது பேரூர்ப் புராணம்.

"பத்திசெய் கோமுனி பட்டி மாமுனி
உத்தமர் இருவரும்...வித்தக னடங்தொழும் நியம மேவினார்"
—பேரூர்ப் புரா—திருத்தப்-133.

x **கொட்டி யாடினர்**—
"திரிபுரம் எரியத் தேவர் வேண்ட...இமையவன்
ஆடிய கொடு கொட்டி ஆடல்"—சிலப்பதி 6-40.

[தொடர்ச்சி 771 ஆம் பக்கம் பார்க்க.]

(மிச்ச ரோருக) சரோருகமீ—தாமரைமீது விளங்கினவனே! (அல்லது—சரோருகம்—தாமரை போன்ற கண்களை (மி) மீ—உடலெல்லாம் கொண்டுள்ள) (வச்சிரபாணியன்) குலிசாயுத மேந்திய கையனுகிய இந்திரன், (வேதா) பிரமன் இவர்கள் போற்றும் செல்வமே! (நாதாதீதா) நாத ஒலிக்கு மேல்நிலையிலுள்ளவனே! வயலூரனே!

கிரௌஞ்சகிரியை உள்ளூடுருவும்படித் தொளைத்துச் சென்ற வேற்படையை உடையவனே! பரிசுத்தனே! பாலனே! (காலாயுதமாளி) காலே ஆயுதமாகக் கொண்டுள்ள கோழியைக் கொடியாக ஆள்பவனே!

பச்சை நிறமுள்ளதும், அழகுள்ளதுமான (சூரனும்) மயில்மீது, (தேவர்கள் முதலானோர்) மெச்சும்படி ஏறின பாகனே! (நடத்துபவனே)! அடா! சூரனே! ஆஹா! அப்புறம் போகாதே, (நில்) என்று சொன்ன வீரனே!

(பட்டியாள்பவர்) (பிரமனும்) பட்டிமுநிக்கு அருள் செய்தவர், (கொட்டியாடினர்) கொடு கொட்டி என்னும் நடனத்தை ஆடினவர், பாரூர் பூமியில் ஊராகத் திகழும் (பேரூரை), ஆ சூழ் பேரூர்—ஆ (காமதேனு) சூழ் (வலஞ் செய்து பூசித்த) பேரூரை, ஆள்வார்—ஆண்டருள்பவராகிய சிவபெருமானுக்குப் பெருமாளே!

(நாயேன் மாயாதருள்வாயே)

(தொடர்ச்சி): "படுபறை பல இயம்பப் பல்லுருவம் பெயர்த்து நீ கொடு கொட்டி யாடுங்கால்"

—கலித்தொகை—கடவுள் வாழ்த்து.

o ஆ சூழ்—காமதேனு பூசித்த தலம் பேரூர்:

பிரமதேவர் படைப்புத் தொழில் செய்ய எண்ணிச் சிவலோகத்தில் இருந்த பொழுது தீய ஊழினுல் நித்திரை செய்தனர்; அப்போது திருமால் காமதேனுவை நோக்கி 'நீ தவம்புரிந்து சிவனுர் அருள் பெற்றுச் சிருட்டித் தொழில் செய்வாயாக' என்றனர்; அங்ஙனமே, காமதேனு பேரூரில் தவஞ்செய்து கொண்டிருந்தபோது அதனுடைய இளங்கன்று அங்கிருந்த புற்றினை மிதித்தது; அதன் அடி புற்றினுள் இருந்த ஆதிலிங்க மூர்த்தியின் திருமுடியிலே அழுந்திப் பெயர்க்கக் கூடாமையால், கொம்புகளாற் குத்தி அது அப் புற்றை உடைத்தது. கொம்புகளும், கால் குளம்பும் பட்டதனுல் இலிங்கம் திருமுடியில் குளம்புச் சுவடு, கொம்புச் சுவடு

[தொடர்ச்சி 772 ஆம் பக்கம் பார்க்க]

கொடும்பாளூர்.

[திரிசிராப்பள்ளிக் கடுத்த விராலிமலையிலிருந்து 3-மைல். "கோனாட்டுக் கொடும்பாளூர்"—கொங்குமண்டல சதகம்-பக்கம் 27. கோனாடு-பாடல் 350 பக்கம் 381-கீழ்க்குறிப்பு.

பரமகுடிக்குத் தென் மேற்கு 10 மைலிலும், பாத்திபனூருக்குத் தெற்கு 10 மைலிலும் "கொடுமளூர்க் குமரன்கோயில்" என்னும் ஒரு சுப்பிரமணியர் சந்நிதி — இரண்டு உடை மரங்களின் (குடைவேல்மரங்களின்) கீழ்-இருக்கின்றது.]

955. உபதேசம் பெற.

தனதனனந் தத்தத் தனதனனந் தத்தத்
தனதனனந் தத்தத் தனதான

கலைஞரெனுங் *கற்புக் கலியுகபந் தத்துக்
கடனபயம் பட்டுக் கசடாகுங்-

கருமசடங் கச்†சட் சமயிகள்பங் கிட்டுக்
கலகலெனுங் கொட்புற் றுடன்மோதும்;

அலகில்பெருந் தர்க்கப் பலகலையின் பற்றற்
றரவியிடந் தப்பிக் குறியாத-

‡அறிவையறிந் தப்பற் றதனினெடுஞ் சற்றுற்
றருள்வசனங் கிட்டப் பெறலாமோ;

கொலைஞரெனுங் கொச்சைக் குறவரிளம் பச்சைக்
கொடிமருவுஞ் செச்சைப் புயமார்பா-

கொடியநெடுங் கொக்குக் குறுகவுணன் பட்டுக்
குரைகடல்செம் பச்xசக் கரவாளச்;

[771 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றது. இந் நிகழ்ச்சியை அறிந்த காமதேனு மிக்க கவலைப்பட, இறைவர் இந்தக் குளப்படிச் சுவடும் கோட்டுச் சுவடும் குதூகலத்தோடு கொண்டுள்ளோம் என்று கூறிக் காமதேனுக்கு நடன தரிசனமும் முடிவில் முத்தியையும் அளித்தனர். காமதேனு பட்டி (தொழு — மாட்டுக் கொட்டில்) அமைத்துப் பேரூரில் தங்கித் தொழுதமையால் பேரூருக்குக்—காமதேனுபுரம், பட்டிபுரி எனவும், சுவாமிக்குப் பட்டி நாதர் எனவும் பெயர் போந்தன. பேரூர் முத்தித் தலமாதலால் சிருட்டித் தொழில் செய்யும் ஆற்றலை வஞ்சித் தலத்தில் (கருவூரில்) சிவபிரான் காமதேனுக்கு அருளினர்.

[*, †, ‡, x—773 ஆம் பக்கம் பார்க்க]

கொடும்பாளூர்
955.

கலை வல்லோர் எ(ண்)ணும் — மதிக்கும் (கற்பு) கல்வியிலும், கலியுக சம்பந்தமான கட்டுக்களில் ஏற்படும் (கடன்) கடமைகளிலும் (அபயம்பட்டு) அடைக்கலம் புகுந்தது போலச் சிக்கி, (கடன பயம்பட்டு) கடமைகள் சம்பந்தமாய் அச்சம் அடைந்து, குற்றமுள்ள தான (பயனற்ற)

(கரும) செயலாம் (சடங்கம்) சடங்குகளைக் கூறும் ஆறு சமயத்தாரும் தத்தமக்குள் (வாதப் பேச்சைப்) பங்கிட்டுக் கொண்டுக் 'கலகல' என்னும் ஒலிக் குறிப்புடன் (கொட்புற்று) மனம் சுழன்று அலைந்து ஒருவரோடொருவர் தாக்கும்—

கணக்குக்கு அடங்காத (அளவு கடந்த) பெரிய தர்க்கத்துக்கு (வா த த் து க் கு) இடந்தரும் பல கலை நூல்களிலும் (பற்றற்று) ஆசையை விட்டொழிந்து, (அரவியிடம்) (அந்தத் தர்க்க வாதங்கள்) ஒலிக்கும் இடங்களினின்றும் தப்பிப் பிழைத்துக், குறியாத (சுட்டிக் காட்ட முடியாத)

அறிவு இன்னதென்பதை அறிந்து, அந்த (அறிவை) அறிந்த அந்தப் பற்றுடனே சிறிது காலம் நிலைத்திருந்து, (உனது) திருவருள் வாக்கு (உபதேசம்) கிடைக்கப் பெறுவேனோ! (கிடைப்பது கூடுமா!)

கொலைஞர்கள் என்னப்பட்ட (கொச்சை) இழிஞர்களான குறவர்களிடம் (வளர்ந்த) இளம் பச்சைக் கொடி (இளமை வாய்ந்த பச்சை நிறத்துக் கொடிபோன்ற வள்ளி அணியும் வெட்சிமாலைப் புயத்தையும் மார்பையும் கொண்டவனே!

கொடுமை வாய்ந்த பெரிய மாமரமாகி நெருங்கின அசுரன்—சூரன் அழிபட்டு ஒலிக்கும் கடல் (செம்ப) (செம்முதல் உற) கலங்க, சக்கரவாள

(தொடர்ச்சி): ° கற்பு—கல்வி—"உலகந் தாங்கிய மேம்படு கற்பு"
"தொலையாக் கற்ப"—பதிற்றுப் 59-8, 80-17;

† **சமயங்களின் வாதக் கூச்சல்**:—பாடல் 492, 945 பார்க்க.

‡ அறிவை அறிதல்
—பாடல் 509-அடி 8; பாடல் 718-அடி 4 பார்க்க.

x "சக்ரகிரி முதுகு நெளியப் புவியை வளையவரும்
விக்ரம கலாபச் சிகாவலனும்" - வேடிச் சிகாவலன் வகுப்பு

சிலைபகளண் டிக்குத் திகிரிகளும் பத்துத்
திசைகளினுந் தத்தச் செகமேழுந்-
திருகுசிகண் டிப்பொற் குதிரைவிடுஞ் *செட்டித்
திறல கொடும் பைக்குட் பெருமாளே. (க)

கீரனூர்.

[பழநிக்கு வடக்கு10-மைல். தாராபுரம் போகும் வழி.]

956. வேசையர் மீதுள மயக்கு அற

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன தனதான

†ஈர மோடுசி ரித்துவ ருத்தவும்
நாத கீதந டிப்பிலு ருக்கவும்
ஏவ ராயினு மெத்திய ழைக்கவு மதராஜன்-
‡ஏவின் மோதுக ணிட்டும ருட்டவும்
வீதி மீதுத லைக்கடை நிற்கவும்
ஏறு மாறும னத்தினி ணைக்கவும் விலைகூறி;
ஆர பார தனத்தைய சைக்கவு
மாலை யோதிகு லைத்துமு டிக்கவும்
ஆடை சோரவு விழ்த்தரை சுற்றவும் அதிமோக-
ஆசை போல்மன இஷ்டமு ரைக்கவு
மேல்வி ழாவெகு துக்கம்வி ளைக்கவும்
ஆன தோதக வித்தைகள் கற்பவ ருறவாமோ;
xபார மேருப ருப்பத மத்தென
நேரி தாகஎ டுத்துட னட்டுமை
பாக ராரப டப்பணி சுற்றிடு கயிறுகப்-

---

* செட்டி — முருகவேளுக்கு ஒரு பெயர் "முருகன் வேள் செட்டி யாறு முகன் குகன் குழகன் மாயோன் மருகன்"—சூடாமணி நிகண்டு. "செட்டி யெனுமொர்திரு நாமக்கார"—திருப்புகழ் 1026. —பாடல் 215, பக்கம் 48-கீழ்க்குறிப்பைப் பார்க்க.

† ஈரம்—அன்பு "ஈரமும் குருசீர்பாதசேவையும்" பாடல் 100; "ஆனைக்காவுடை ஆதியை நாளும் ஈரமுள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே"—சுந்தரர் 7-75-7. ‡ ஏவின்—அம்பு போல.

x கடல் கடைந்த வரலாறு:- பாடல் 509-பக் 162 கீழ்க்குறிப்பு.

மலை பிளவுபட, எட்டுத் திசைகளில் உள்ள மலைகள் *பத்துத் திசைகளிலும் (தத்த) சிதற (செகம் ஏழும்) எழு உலகங்களிலும்

முறுக்கி விடப்பட்ட மயில் என்கின்ற அழகிய குதிரையைச் செலுத்திவிடும் செட்டியாம் [திறல] செட்டி எனப் பெயர் கொண்ட பராக்ரம சாலியே! கொடும்பை [கொடும்பாளூர்] என்னும் தலத்துள் வீற்றிருக்கும் பெருமாளே! [அருள் வசனம் கிட்டப் பெறுவேனோ]

கீரனூர்

956.

கருணை நிறைந்த முகத்துடனே சிரித்து [வருத்தவும்] அழைப்பதற்கும், ஒலி நிறைந்த இசையாலும், நடனத்தாலும் மனத்தை உருக்குதற்கும், யாராயிருந்த போதிலும் வஞ்சித்து அழைப்பதற்கும், மன்மத ராஜனுடைய—காமனுடைய

அம்புபோலத் தாக்குகின்ற கண்கொணடு [மருட்டவும்] மயக்குதற்கும், தெருப்பக்கத்தில் தலைவாசற் படியிடத்தே நிற்பதற்கும், தாறுமாறான எண்ணங்களை மனத்தில் நினைப்பதற்கும், [தங்கள் உடலை விற்பதற்கு] விலை பேசி

முத்துமாலை யணிந்ததும், கனத்ததுமான கொங்கையை அசைப்பதற்கும், பூமாலை அணிந்துள்ள கூந்தலை அவிழ்த்து முடிப்பதற்கும், ஆடை நெகிழும்படி அவிழ்த்து இடுப்பிற் சுற்றுதற்கும், அதிக மோகங்கொண்ட

ஆசை யுள்ளவர்கள் போலத் தங்கள் மனதாசைகளை — தங்கள் இஷ்டங்களை—எடுத்துச் சொல்வதற்கும், மேலே விழுந்து மிக்க துக்கத்தை உண்டு பண்ணுதற்கும், வேண்டியதான [தோதக வித்தைகள்] வஞ்சனை வித்தைகளைக் கற்றுள்ளவர்களான வேசையர்களின் சம்பந்தம் நல்லதாகுமா? [ஆகாது என்றபடி]:

கனத்த மேருமலையை மத்தாகச் செம்மையாக எடுத்து [உடனே அதை] நட்டு [நாட்டி], உமை பாகர்—உமையைப் பாகத்திற் கொண்டுள்ள சிவபிரானது, ஆர படம்பணி — மாலையாக விளங்குவதும், படங்களைக் கொண்டதுமான பாம்பை அந்த மத்துக்குச் சுற்ற வேண்டிய கயிறாகப் பூட்டிப்

* பத்துத்திசை — எட்டுத்திசைகளுடன் கீழும் மேலும் சேர்த்துப் பத்துத் திசை.

*பாதி வாலிபி டித்திட மற்றொரு
பாதி தேவர் பிடித்திட †லக்ஷ்மி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு ;
ஈர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தைய ளித்தக்ரு
பாளு வாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே-
கேடி லா‡வளை கைப்பதி யிற்பல
மாட கூடம லர்ப்பொழில் சுற்றிய
கீர னூருறை சத்தித ரித்தருள் பெருமாளே. (க)

———

குளந்தைநகர்.

[‘குளந்தைநகர்’ என்பது ‘பெரியகுளம்’. மதுரைஜில்லா “கொடைக்கானல் ரோட்” என்னும் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 28-மைல்.]

957. யமபயம் அற

தனந்த தானனத் தனதன தனதான

தரங்க வார்குழற் றருநுதல் விழியாலந்-
தகைந்த மாமுலைத் துடியிடை மடமாதர் ;
பரந்த மாலிருட் படுகுழி வசமாகிப்-
பயந்து காலனுக் குயிர்கொடு தவியாமல் ;
வரந்த ராவிடிற் பிறரெவர் தருவாரே-
மகிழ்ந்து xதோகையிற் புவிவலம் வருவோனே ;
oகுரும்பை மாமுலைக் குறமகண் மணவாளா-
குளந்தை மாநகர்த் தளியுறை பெருமாளே. (க)

---

* பாதி வாலி பிடித்தது—கடல் கடைந்தது —பாடல் 918-பக்கம் 674 ; பாடல் 122-பக்கம் 288 கீழ்க்குறிப்பு.

† இலக்குமி முதலியோர் வரப் பெற்றது: பாடல் 918-பக்கம் 674 ; பாடல் 604-பக்கம் 396-கீழ்க்குறிப்பு.

‡ அளகாபுரியை ஒப்பிட்டது — அந்தத் தலத்தின் செல்வ வளப்பத்தைக் காட்டுதற்கு—பாடல் 730-அடி 8 பார்க்க.

x பாடல் 267-பக்கம் 164 கீழ்க்குறிப்பு.

o “குரும்பை முலை மலர்க் குழலி”—சுந்தரர் 7-16-1.

ஒரு பாதி வாலி பிடிக்க, மற்றொரு பாதியைத் தேவர்கள் பிடித்திட, இலக்குமி, பாரிஜாதம் முதலான பல [சித்திகள்] அரும் பொருள்கள் வெளிப்பட்டு வரும்படிப்—

பாற்கடலைக் கடைவித்த அதிகாரியாய் [தலைவனாய்] அமுதத்தைத் [தேவர்களுக்கு] அளித்தருளிய கிருபா மூர்த்தியாகிய பச்சை நிறத் திருமாலின் மருகனே!

அழிவில்லாத [குபேரன் நகராகிய] அளகாபுரி போலப் பல மாட கூடங்கள், மலர்ச் சோலைகள் சூழ்ந்துள்ள **கீரனூர்** என்னும் தலத்தில் வேல் ஏந்தி அருளும் பெருமாளே!

[தோதக வித்தைகள் கற்பவர் உறவாமோ]

குளந்தை நகர்

957.

அலைபோலப் புரளுகின்ற நீண்ட கூந்தல், வில்லைப் போன்ற நெற்றி, [ஆலம் விழி] விஷம் அனைய கண்—

[தகைந்த] காண்போர் மனத்தைக் கவரும் — வசப்படுத்தும் — சிறந்த கொங்கை, துடி [உடுக்கை] போன்ற இடை—இவை தமை உடைய அழகிய பெண்கள் மீதுள்ள—

நிரம்பிய மோகம் என்னும் இருள் நிறைந்த பெரிய குழியில் அகப்பட்டு—வசப்பட்டு—

[இறுதிக் காலத்தில்] [காலனுக்குப் பயந்து] — யமனுக்கு அஞ்சி உயிர் நடுங்கத் தவியாமல் — [நான் நல்லபடி இருக்கும்படியான]—

வரத்தை நீ கொடுக்கா விட்டால் வேறு எவர் தரம் கொடுப்பார்கள்?

மகிழ்ச்சியுடன் மயில் மீதேறி பூமியை வலம் வந்தவனே!

குரும்பை [தென்னங் குரும்பை] போன்ற அழகிய கொங்கையைக் கொண்ட குறமகள் வள்ளியின் மணவாளனே!

குளந்தை [பெரிய குளம்] என்னும் பெரிய ஊர்க் கோயிலில் வீற்றிருக்கின்ற பெருமாளே!

[வரம் [நீயன்றி] வேறு எவர் தருவார்]

தனிச்சயம்.

[இது மதுரைக்கு மேற்கே யுள்ளது. சோழவந்தான் சப் டிஸ்டிரிக்டைச் சேர்ந்தது. "ஐயங்கோட்டை தனிச்சயம்" என வழங்கும். பாண்டியன் தனித்து நின்று இந்திரனை ஜயித்த இடம்.]

958. பிறப்பற

தனத்தனத் தனத்தனத் தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத் தனதான

*இலைச்சுருட் கொடுத்தணைத் தலத்திருத்தி மட்டைகட்
கிதத்த†புட்கு ரற்கள்விட் டநுராகம்-
எழுப்பிமைக் கயற்கணைக் கழுத்தைமுத் தமிட்டணைத்
தெடுத்திதழ்க் கடித்துரத் திடைதாவி ;
அலைச்சலுற் றிலச்சையற் றரைப்பைதொட் டுழைத்துழைத்
தலக்கணுற் றுயிர்க்களைத் திடவேதான்-
அறத்தவித் திளைத்துறத் தனத்தினிற் புணர்ச்சிபட்
டயர்க்குமிப் பிறப்பினித் தவிராதோ ;
கொலைச்செருக் கரக்கரைக் கலக்குமிக் கருக்குடக்
கொடித்திருக் கரத்தபொற் பதிபாடுங்-
‡குறித்தநற் றிருப்புகழ்ப் ப்ரபுத்துவக் கவித்துவக்
குருத்துவத் தெனைப்பணித் தருள்வோனே ;
xதலைச்சுமைச் சடைச்சிவற் கிலக்கணத் திலக்கியத்
தமிழ்த்ரயத் தகத்தியற் கறிவோதுஞ்-

---

* இலைச்சுருள்—சுருட்டிய வெற்றிலை—"இலைச்சுருள் எடுத்துக் கட்டுவர்"—தக்கயாக. 757. விசேடக் குறிப்பு.

† புட்குரல்—பாடல் 197-பக்கம் 6-கீழ்க்குறிப்பு.

‡ அருணகிரியாரின் வரலாற்றைக் குறிப்பது; திருப்புகழ் பாட அருளிய கருணையை எடுத்துக் கூறுவது.

x சிவனுக்கு உபதேசம் பாடல் 327. பக். 311 ; அகத்தியருக்கு உபதேசம்; பாடல் 185-பக்கம் 433 ; பாடல் 882-பக்கம் 582; பாடல் 921-பக்கம் 686 குறிப்பு ; முருகவேள் சிவனுக்கும், அகத்தியருக்கும் ஞானோபதேசம் செய்ததை அருணகிரியார் இங்குக் கூறுகின்றார். ஒரு பெரியார் (முருகரந்தாதி பாடிய ஞானியார்) இவர்கள் இருவருடன் அருணகிரியாரையும் சேர்த்துப் பின் வரும் அருமைப் பாடலைப் பாடியுள்ளார்.

[தொடர்ச்சி 779 ஆம் பக்கம் பார்க்க]

தனிச்சயம்

958.

சுருட்டிய வெற்றிலையைக் கொடுத்து [அணைத்தலத்து] படுக்கை யிடத்தில் இருக்க வைத்தும், [மட்டைகட்கு] பயனற்ற முட்டாள்களுக்கு இன்பம் தரக்கூடிய புட்குரல்களை விடும்படிக் காமப்பற்றை

எழுப்பியும், மை பூசப்பட்டதும், கயல்மீன் போன்றதுமான கண்ணிலும் கழுத்திலும் முத்தம் தந்து அணைத்தும், எடுத்தும், வாயிதழைக் கடித்தும், மார்பிடத்தே தாவியும்

அலைச்சலுற்று, நாணத்தை விட்டு, அரைப்பை [அரையை] [பாம்பின் படம்போன்ற அல்குலைத்] தொட்டு, [அந்தக்காமலீலைகளிலேயே] உழைப்புற்று உழைப்புற்று, துன்பம் அடைந்து உயிர் களைத்துப் போகும் அளவுக்கு—

மிகவும் தவிப்பு அடைந்து இளைப்பு உற (மாதர்களின்) கொங்கையிற் சேர்க்கையுற்று அலுத்துப்போகும் இந்தப் பிறப்பு இனியேனும் ஒழியாதோ—நீங்காதோ!

கொலை செய்வதிற் பெருமை கொள்ளும் அரக்கர்களைக் கலங்கச் செய்த [திருக்கரத்த]! மேம்பட்ட கோழிக் கொடியைத் திருக்கரத்தில் உடையவனே! அழகிய தலங்கள் தோறும் (உன்னைப்) பாடும்படியான

நோக்கத்தைக் கொண்ட நல்ல திருப்புகழிற் பிரபுஸ்தானமான (மிக மேம்பட்ட நிலையதான) கவிபாடும் குருஸ்தானத்தில் என்னை நிலைக்கவைத்துக் கட்டளையிட்டு அருள் புரிந்தவனே!

தலையிற் சுமைபோற் பாரமான சடையைக் கொண்ட சிவபிரானுக்கும், உன்னிடத்தே இலக்கணம்—இலக்கியம் எல்லாம் கற்ற, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வல்ல அகத்திய முனிவருக்கும், ஞானோபதேசம் செய்த

"வேலா சரணஞ் சரணமென் மேல்வெகு ளாமலினி
மேலா யினுங்கடைக் கண்பார் பருப்பத வேந்தன்மகள்
பாலா குறுமுனி யார்க்குந் திருப்புகழ் பண்ணவர்க்கும்
ஆலால முண்டவர்க் கும்முப தேசித்த ஆண்டவனே".

சமர்த்தரிற் சமர்த்தபச் சிமத்திசைக் குளுத்தமத்
தலிச்சயத் தினிற்பிளைப் பெருமாளே. (௧)

959. இறந்துபோம் அன்று அருளுக

தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத் தனதான

உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்
கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்
தொலித்தி டுஞ்செவி செவிடுற வொண்கட் குருடாகி-

உரத்த வெண்பலு நழுவிம தங்கெட்
டிரைத்து கிண்கிணெ னிருமலெ ழுந்திட்
டுளைப்பு டன்தலை கிறுகிறெ னும்பித் தமுமேல்கொண் ;

டரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்து ளஞ்செயல் வசனம் வரம்பற்
றடுத்த பெண்டிரு மெதிர்வர நிந்தித் தனைவோரும்-

அசுத்த னென்றிட வுணர்வது குன்றித்
துடிப்ப துஞ்சிறி துளதில தென்கைக்
கவத்தை வந்* துயி ரலமரு மன்றைக் கருள்வாயே ;

திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்
டுடுட்டு டுண்டுடு டுடுடுடு டுண்டுட்
டிகுட்டி குண்டிகு டிகுடிகு டிண்டிட் டிகுதீதோ-

திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை துந்துமி முரசு முழங்கச்
செருக் களந்தனில் நிருதர் தயங்கச் சிலபேய்கள் ;

---

* "உயிர் போகும் அந்த நாளில் எனக்கு அருளுக"—இவ் வேண்டுகோளை அப்பர் பெருமானும் விண்ணப்பிக்கின்றார் :—
"மிழலையுள்ளீர் இறக்கின்று நம்மை மறக்கினும் என்னைக் குறிக் கொண்மினே"—அப்பர் 4-95-10.

சமர்த்தரிற் சமர்த்தனே! (சாமர்த்தியத்தில் முதல் ஸ்தானத்தில் இருப்பவனே!) (பச்சிமத்திசைக்குள்) மேற்குத் திசையில் உள்ளதும், உத்தமமான ஸ்தலமுமான **தனிச்சயம்** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பிள்ளைப் பெருமாளே!

(இப் பிறப்பினித் தவிராதோ)

959.

எல்லாரும் புகழும்படியாக (சம்பிரமமாக) மிக ஒழுங்காக இருந்த வடிவமானது திரங்கி — வதங்கல் உற்று — சுருங்கலுற்று, கறுப்பாயிருந்த தலைமயிரும் வெளுத்துப் பஞ்சுபோலாகி, நன்றாக ஒலிகளைக் கேட்டிருந்த காது செவிடாகி, ஒளி பொருந்தியிருந்த கண் குருடாகி—

பலத்துடன் அழுத்தமாயிருந்த வெண்ணிறப் பல்லும் நழுவி விழுதலுற்று, மதம்—நான் என்றிருந்த இறுமாப்பு நிலை அழிந்து, மூச்சு வாங்கி, கிண்கிண் என்னும் ஒலியுடன் இருமல் உண்டாகி, வேதனையுடன் தலை கிறுகிறு என்னும் பித்தமும் மேல் கொண்டு எழ—

ரத்தம் இல்லாத புழுவைக் காட்டிலும் அதிகமாக (உடல்) வெளுத்து, மனம், செயல், வாக்கு இவைகள் ஒரு அளவு கடந்து — ஒழுங்கினமான நிலையை அடைந்து, சேர்ந்துள்ள மாதர்களும் எதிரே வர இகழ்ந்து தூஷித்து, யாவரும்

(இவன்) அசுத்தன்—அழுக்கன் என்று சொல்லும்படியாக, உணர்ச்சி குறைந்துபோய், நாடி துடிப்பதும் சிறிதே இருக்கின்றது—இல்லை என்றே சொல்லலாம்— என்னும்படியான கஷ்டநிலை வந்து கூடி உயிர் வேதனைப்படும் அந்த நாளில் நீ எனக்கு அருள் புரிவாயாக.

திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்......டிகுடிகு டிண்டிட் டிகு தீதோ—

திமித்தி மிந்திமி திமிதிமி யென்று ஒலிக்கும்படி (இடக்கை) இடக்கையாற் கொட்டும் தோற்கருவி, (துந்துமி) பேரிகை, (முரசு) பறைப் பொது இவையெலாம் ஒலிக்க, போர்க்களத்தில் அசுரர்கள் திகைக்க—கலக்கம் கொள்ளச், சில பேய்கள்

*தரித்து மண்டையி லுதிர மருந்தத்
திரட் பருந்துகள் குடர்கள் பிடுங்கத்
தருக்கு சம்புகள் நிணமது சிந்தப் பொரும்வேலா-

†தடச் சிகண்டியில் வயலியி ‡லன்பைப்
படைத்த நெஞ்சினி லியல்செறி கொங்கிற்
றவிச்ச யந்தனி லினிதுறை கந்தப் பெருமாளே. (௨)

மதுரை.

[இஃது ஆலவாய், கூடல் எனவும் பெயர்பெறும். பொற்றாமரைத் தீர்த்தம். சிவபெருமான் சங்கப்புலவர்களுடன் வீற்றிருந்து தமிழை வளர்த்தருளிய திருப்பதி. பஞ்ச சபைகளில் ரஜத சபையை (வெள்ளியம்பலத்தைக்) கொண்டுள்ள நற்பதி. திருஞான சம்பந்த ஸ்வாமிகள் சமணரை வாதில் வென்ற வளம்பதி. ஸ்ரீமாணிக்கவாசக ஸ்வாமிகள் பொருட்டுச் சிவபிரான் நரிபரியாக்கிய திருநகர். அவர் இதுபோல் 64-திருவிளையாடல்களை இயற்றியருளிய அருநகர். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணங்கள் உள்ளன. —725-ஆம் பாடலின் பாட பேதத்தையும் பார்க்க. பக்கம் 175 கீழ்க்குறிப்பு.]

960. ஞான நிலைப் பெருமை

தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன தந்ததான

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதொளை யுருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக-

அடியென முடியிற் கொண்ட ×கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக்கென்பெ லாமுரு கன்புறுதோ;

---

* "குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரல்...கழிமுடைக் கருந்தலை"—திருமுருகாற் 52.
"இரத்த நதியிடை குடித்தும்"—பொருகள-வகுப்பு.
"குருதிக் கடலைப் பெருகப் பருகி"—செருக்கள வகுப்பு.

† "தழைத்த கண்டியில் வயலியி லன்பை" என்றும் பாடம்.

[தொடர்ச்சி 783 ஆம் பக்கம் பார்க்க]

(தரித்து மண்டையில்) மண்டை ஓட்டை எடுத்து ஏந்தி அதில் ரத்தத்தைப் பிடித்துப் பருகக், கூட்டமான பருந்துகள் குடல்களைப் பிடுங்க, (கிடைக்கும் உணவைக் கண்டு, களிப்புறும் நரிகள் தாம் உண்ணும் மாமிசத்தைச் சிந்திச் சிதறப் போர் செய்த வேலனே!

(தடம்) பெருமை வாய்ந்த மயில் மீதும், வயலூர் என்னும் தலத்திலும், அன்பு பொருந்தியுள்ள (அடியார்களின்) நெஞ்சகத்தும், தகுதி நிறைவுற்ற கொங்கு நாட்டில் **தவிச்சயம்** என்னும் தலத்திலும் இன்பத்துடனே வீற்றிருக்கும் கந்தப் பெருமாளே!

(உயிர் அலமரும் அன்றைக் கருள்வாயே)

மதுரை

960.

கணக்கற்ற அசுரர்களைக் கொன்று அழித்த **தோள்**— என்று (உனது தோளைப்) புகழ்ந்தும், கிரவுஞ்ச மலையைத் தொளை படும்படி ஊடுருவிச் சென்ற வேல்—என்று (உனது வேலைப்) புகழ்ந்தும், அழகிய பொன்னுலாய தண்டை சூழ்ந்துள்ளதும், தாமரை போன்றதுமான

அடி என்று (உனது திருவடியைப்) புகழ்ந்தும், (முடியிற் கொண்ட கூதளம் என) கூதாளம் கொண்ட முடி என—வெண்தாளியினது தண்ணிய பூவை அணிந்துள்ள முடி என்று (உனது திருமுடியைப் புகழ்ந்தும், (வன்சரி) வேட்டுவச்சியாம் வள்ளியை அணைந்த மார்பு என்று (உனது திருமார்பைப்) புகழ்ந்தும், ஆறுமுகம் என்று (உனது ஆறு திருமுகங்களைப்) புகழ்ந்தும், உள்ளம் நெகிழ்ந்து, என்னுடைய எலும்பெல்லாம் உருகும்படியான அன்பு எனக்குக் கூடாதோ! (கிட்டாதா என்றபடி)

(தொடர்ச்சி) தடம்—பெருமை (திவாகரம்) "அருளினன் தடமிகு நெடுவாள்"—சம்பந்தர் 3-119-8.

‡ "நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுளானே"
"அன்பரானவர் வாயினு ளத்தனே"
—சம்பந்தர் 1-119-4 ; 3-115-11.

x கூதளம்—"வெண் கூதாளத்துத் தண்பூ"—
'வெண்தாளியினது தண்ணிய பூ' - பட்டினப்பாலை உரை 85.

[தொடர்ச்சி 784 ஆம் பக்கம் பார்க்க]

*கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவுங்-

கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு ருதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென் ;

இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரானொரு கொம்பினாலே-

†எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய ‡பவளக் குன்று தாதையை யன் றுசூழ ;

xவலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண முண்டுலாவு-

மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் ०சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ரார்தொழு ** தம்பிரானே(க)

[783 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முருகருக்கு உகந்த மலர்களுள் ஒன்று—கூதளம் :
"கூதாள! கிராத குலிக்கு இறைவா" கந்தரநுபூதி-38
"கூதள கந்த மாலிகை தோய்தரு...கழல்"
"முருகவிழ் கூதாள மாலிகை தழுவிய சீர்பாத"
—திருப்புகழ் 99, 1137.

० பத்தியால் என்பும் உருக வேண்டும். "என்னை உன்பாத பங்கயம் பணிவித்து, என்பெலாம் உருகநீ எளிவந்து உன்னை என்பால் வைத்து" – திருவிசைப்பா 11-8.
"என்பு நைந்துருகி"—திருவாசகம்-480.

---

* சமய கலை—வாதம் இவைகளை அருணகிரியார் வெறுத்தல்
—பாடல் 945-பார்க்க.

† விநாயகர் பாரதக் கதையை எழுதினது :
—பாடல் 441-பக்கம் 608 கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 785 ஆம் பக்கம் பார்க்க]

கல கல கல என்னும் பேரொலியுடன் கண்ட பேர்களுடனே கூச்சலிட்டுச் சமயக் குற்றங்களை எடுத்துப் பேசி வாதம் செய்வோர்கள் உரக்கக் கத்தும் பல சொற்களாம் சேறு அல்லது குற்றம் ஆகும் (பொங்கு அளாவும்) கொதிப்பைப் பொருந்திய

சாத்திர நூல் உணர்ச்சியெல்லாம் ஒழிந்து நீங்க, பஞ்சபூதங்களால் (மண், நீர், தீ, காற்று, விண் எனப்படும்) ஐம்பூதங்களின் செயல்களும் அடங்கி நீங்கச், சொல்லப் புகின் (எப்போதும் தனது சேஷ்டை) துஞ்சுரு தன— ஓய்தல் இல்லாத (கரணம்) (அந்தக் கரணம்) மனம் ஒடுங்கி ஒழிய, நீ எனக்கு உபதேசித்தருளிய ஞானத்துக்கு உள்ள பெருமை தான் என்ன ஆச்சரியகரமா யுளது!

நல்ல விளக்கமுள்ள கடலை, கற்கண்டு, தேன், இவைகளுடன் ருசிகரமான (தினைப்பிண்டி) தினைமாவு, வெல்லம் இவற்றை மகிழ்ச்சியுடன் உண்ணுதலைச் செய்யும் எம்பெருமான், ஒற்றைக் கொம்பால்—

'எழுதியருளுக' என (வியாச முனிவர்) வேண்ட, முன்பு பாரதக் கதையை, வடக்கே உள்ளதும் கனத்த சிகரங்களை உடையதுமான செம்பொன் மலையாம் மேரு மலையில் எழுதினவனும், பவளமலை அனையவனும் ஆகிய கணபதி அன்று தாதையைச் (சிவபெருமானை)ச் சுற்றிவந்து

வலம் வரும் நேரத்துக்குள் மிகக் கொடிய காற்றின் வேகத்தினும் மேம்பட்ட வேகத்துடன் எட்டுத் திசை-யிடங்களைக் கொண்ட உலகம் முழுவதையும் பார்த்து, பாம்பை உண்டு உலவுகின்ற

பச்சைத் தோகையைக் கொண்ட செம்மையுற்ற பட்சியாகிய மயில் வாகனத்தின் மீது வந்த முருகச் சரபமே! என்று புகழ்ந்து **மதுரைத்** தலத்தில் வழிபட்டுத் தேவர்கள் தொழுகின்ற தம்பிரானே! (ஞான மிருந்தவாறென்)

(தொடர்ச்சி) ‡ விநாயகர்-பவள நிறத்தினர்-பாடல் 441-பக்கம் 608 கீழ்க்குறிப்பு. ‡ X உலகை வலம் வந்தது—பாடல் 184-பக்கம் 430 கீழ்க்குறிப்பு. o சிம்புள் — சிங்கத்தைக் கொல்லவல்லதாகக் கூறப்படும் எண்காற் புள்.

oo இந்தப் பாடலில் (ஒவ்வோரடியின் ஈற்றுச் சந்தத்துக்கு முன் சந்தம்) தொங்கலொடு பொருந்தும் வழியெதுகை அழகைக் காண்க.

961. திருவடியைப் பெற

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான

ஆனைமுக வற்கு நேரிளைய பத்த
ஆறுமுக வித்த கமரேசா-
*ஆதியா னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா;
தானவர் குலத்தை வாள்கொடு துணித்த
சால்சதுர் மிகுத்த திறல்வீரா-
தாளிணைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே;
வா†னெழு புவிக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கு மறியாத-
மாமதுரை ‡சொக்கர் மாதுமை களிக்க
மாமயில் நடத்து முருகோனே;
xதேனெழு புனத்தில் ₀மான்விழி குறத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா-
தேவர்கள் கருத்தில் மேவிய பயத்தை
**வேல்கொடு தணித்த பெருமாளே. (உ)

962. சீர்பாத வகுப்பைப் பாட

தனன தனந்தன தனன தனந்தன
தனன தனந்தன தனதான

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
††பவனி வரும்படி யதனாலே-

* பிரமனுக்கும் சிவனுக்கும் வேதப்பொருள் உரைத்தது—பாடல் 327-பக்கம் 314; பாடல் 628-பக். 462-கீழ்க்குறிப்பு. ††

† மேலுலகேழு—கீழுலகேழு —பாடல் 157-பக்கம் 364, 365 கீழ்க்குறிப்பு.

‡ சொக்கர்—மதுரைச் சிவனது திருநாமம். "திரு ஆலவாய்ச் சொக்கன் என்னுள் இருக்கவே"—சம்பந்தர் 3-39-11.

x 'தேன் எழு புனம்'—'தேன் வரை வள்ளி'—கல்லாடம் 56.

0 "மானருள் குறத்தி சேர மகிழ்வுற்ற"—என்னும் பாடம்.

** "தீர விடுவித்த பெருமாளே"—என்றும் பாடம்.

[தொடர்ச்சி 787 ஆம் பக்கம் பார்க்க]

961.

ஆனை முகத்தைக் கொண்ட கணபதிக்கு நேராகப் பின் தோன்றிய இளையவனும் அன்பனே! ஆறு திருமுகங்களைக் கொண்ட (வித்தக) ஞானியே! தேவர்களுக்கு அரசாம் தலைவனே!

முதல்வராம் சிவபெருமானுக்கும், வேதத் தலைவனும் பிரமனுக்கும் வேதப்பொருள் உபதேசித்த குருநாதனே!

அசுரர் குலத்தை வாள்கொண்டு வெட்டி அழித்த (சால்சதுர் மிகுத்த) சதுர் சால் மிகுத்த—சாமர்த்தியம் நிறைந்து மிகுந்துள்ள பராக்ரமம் வாய்ந்த வீரனே!

உனது திருவடிகள் இரண்டையும் தியானித்துப் பொருந்துதலைக் கொண்ட பதவியில் நல்வாழ்வுடன் (நான்) விளங்கும்படி அருள்புரிவாயாக;

விண்ணுலகம் ஆதிய எழுவகைப்பட்ட உலகத்தினர்க்கும், திருமாலுக்கும், பிரமனுக்கும், வேறு எவர்க்கும் அறிய முடியாத—

சிறந்த **மதுரைத்** தலத்துச் சொக்கேசரும், மாது பார்வதியும் மகிழ்ச்சியுறும்படி, அழகிய மயிலைச் செலுத்தி நடத்தும் முருகனே!

தேன் உண்டாகும் (வள்ளிமலைக்) காட்டில் மான்போலும் கண்ணைக் கொண்ட குறத்தி — வள்ளி (உன்னைச்) சேரும்படி (அவளிடம்) அணுகிய திரண்ட தோளனே!

தேவர்களின் உள்ளத்தில் (சூரன் பொருட்டு) இருந்த பயத்தை வேலாயுதங் கொண்டு நீக்கிய பெருமாளே!

(வாழ்வொடு சிறக்க அருள்வாயே)

962.

எல்லாராலும் போற்றப்படும் நீண்ட கிரணங்களை உடைய சூரியன் உலகெலாம் விரும்பும்படி உலாவரும் காட்சி தானோ (இது) இந்தத் திருவடி — என்று சிறப்பித்தும்—

†† (தொடர்ச்சி) சூரியன் உலகோர் விரும்பும் உலாவருவதனால் (பகர வளங்கள்) அழகிய வளங்கள் பலவும் இலகி விளங்குகின்றன;

[தொடர்ச்சி 788 ஆம் பக்கம் பார்க்க.]

பகர வளங்களு நிகர விளங்கிய
*இருளை விடிந்தது நிலவாலே ;
†வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசை தரும்‡பத மதுபாடி-
வளமொடு செந்தமி ழுரைசெய xஅன்பரு
மகிழ வரங்களு மருள்வாயே ;
அரஹர சுந்தர அறுமுக என்றுனி
அடியர் பணிந்திட மகிழ்வோனே-
அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
குறமக ளிங்கித மணவாளா ;
கருதரு திண்புய சரவண oகுங்கும
களபம ணிந்திடு மணிமார்பா-
**கனக மிகும்பதி மதுரை வளம்பதி
யதனில் வளர்ந்தருள் பெருமாளே. (ரு)

[787-ஆம் பக்கத் தொடர்ச்சி]

நில வொளியால் இருள் ஒழிகின்றது: (அதுபோல—சூரியனது ஒளியையும் சந்திரனுடைய ஒளியையும் கொண்ட உன் திருவடி சகல வளங்களையும் தந்து, அஞ்ஞான இருளையும் ஒழிக்கும் என்பது முதலிரண்டடிகளின் கருத்தாகும். "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங் கோவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி" (திருமுருகாற்), "சதகோடி சூரியர்கள் உதயமென...இருளகல ஒரு சோதி வீசுவதும் மணநாறு சீறடியே" (சீர்பாத வகுப்பு) என்றதனால் சூரியனது ஒளியைக் கொண்டது முருகன் திருவடி என்பதும், 'சந்திர நிறங்களும்,' 'பலகோடி வெண்மதி போல' (திருப்புகழ் 6, 1185) என்றதனால் சந்திர ஒளியையும் கொண்டது திருவடி என்பதும் பெறப்படுகின்றன.

பவனி வரும்படி யதனாலே — பவனிவருந் தரத்தைச் சிறப்பித்தும்.

---

* இருளை விடிந்தது நிலவாலே—இருளைப் போக்கி உதய மாகுஞ் சந்திரனைச் சிறப்பித்தும்.

† 'குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே'—திருமுரு. 217.
'பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே'—திருப்புகழ் 233.

‡ 'பதமது பாடி...தமிழ் உரை செய'—இதே வேண்டுகோளை "நின்பதயுகப் ப்ரசித்தி என்பன வகுத்துரைக்க நின்பணி தமிழ்த் த்ரயத்தை அருள்வாயே" எனப் பிறிதோரிடத்தும் (பாடல் 1233) விண்ணப்பித்துள்ளார். இங்ஙனம் இங்குக் கேட்டவரம் சித்தித்ததின்

[தொடர்ச்சி 789 ஆம் பக்கம் பார்க்க]

சொல்லக்கூடிய வளப்பங்களுக்கெல்லாம் ஒப்பாக விளங்குகின்றதும் இருளைப் போக்கி உதயமாவதுமான நில வொளிதானோ இது—இந்தத் திருவடி என்று சிறப்பித்தும் மலையிடங்களில் எவ்விடத்தும் உலாவி நிறைந்து (வரிசை தரும்) ஒழுங்கான காட்சியைத் தருகின்ற (பதம்) உனது திருவடிகளை (நான்) பாடி—

(சொல்வளம் பொருள்) வளம் கூடிய — செழுமை வளத்துடன் செந்தமிழ்ப் பாவால் (உன்னை உரைசெய)— உன்னைச் சொல்லிப் புகழுதற்கும், அப் பாடல்களைக் கேட்டு அன்பர்கள் மகிழவும் வரங்களைத் தந்து அருள்புரிவாயாக;

ஹர ஹர! அழக! ஆறுமுகத்தவனே! என்றெல்லாம் (உனி) உன்னி-தியானித்து அடியார்கள் (உன்னை) வணங்க மகிழ்ச்சி கொள்பவனே!

(இமய) மலையில் தோன்றிய பெருமை வாய்ந்த கொடியனைய அ(ம்)மை உமையின் பிள்ளையே! (குறமகள்) வள்ளிக்கு இனிமை வாய்ந்த மணவாளனே!

நினைத்தற்கும் அருமையான திண்ணிய புயங்களை உடையவனே! சரவணபவனே! செஞ்சாந்துக் கலவை அணிந்துள்ள அழகிய மார்பனே!

(பொன்னொளி) பொன் மாடங்கள் நிரம்பிய நகராகிய **மதுரை** என்னும் செழிப்புள்ள தலத்தில் விளங்கி வீற்றிருந்தருளும் பெருமாளே!

(பதமதுபாடி...உரைசெய அருள்வாயே)

பயன்தான் அருணகிரியார் பின்னர், 'சீர்பாத வகுப்பு' முதலானது பாடினது.

X தமது பாடலை அன்பர்கள் கேட்டும், பாடியும் மகிழ வேண்டும், அவர்களும் கரையேற வேண்டும் என்னும் 'கருணை' நோக்கம் அருணகிரியார்க்கு உண்டு; 'அன்பினலே ஏனேரும் ஓதுமாறு தீதற நான் ஆசுபாடி' என்றார் பிறிதோரிடத்து (பாடல் 1129); இதனாலும் 'கருணைக் கருணகிரி' எனப் பெயர் பெற்றனர்.

"காசுக்குக் கம்பன், கருணைக் கருணகிரி",
ஆசுக்குக் காளமுகில் ஆவனே,—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன், உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு"—(தனிப்பாடல்)

O மார்பில் **குங்குமம்**:—
பரந்த மார்பிற் குங்குமம் நிலவிய தென்ன'—கல்லாடம் 17.

∞. 'ஆடக மாடம் நெருங்கு கூடல்'-(ஆடகம்-பொன்) சம்பந்தர் 1-7-1

963. அடியாரோடு கூட

தனத்த தாத்தன தனதன தனதன
தனத்த தாத்தன தனதன தனதன
தனத்த தாத்தன தனதன தனதன தனதனத் தனதான

பழிப்பர் வாழ்த்துவர் சிலசில பெயர்தமை
ஒருத்தர் வாய்ச்*சுரு ளொருவர்கை யுதவுவர்
பணத்தை நோக்குவர் †பிணமது தழுவுவர்
அளவளப் பதனாலே-

படுக்கை வீட்டினு ‡ளவுஷத முதவுவர்
அணைப்பர் xகார்த்திகை வருதென வுறுபொருள்
பறிப்பர் மாத்தையி லொருவிசை வருகென
அவரவர்க் குறவாயே;

அழைப்ப ராஸ்திகள் கருதுவ ரொருவரை
முடுக்கி யோட்டுவ ரழிகுடி யரிவையர்
அலட்டி னூற்பிணை யெருதென மயலெனு
நரகினிற் சுழல்வேனோ-

அவத்த மாய்ச்சில படுகுழி தனில்விழும்
விபத்தை நீக்கியு **னடியவ ருடனேனை
அமர்த்தி யாட்கொள மனதினி லருள்செய்து
கதிதனைத் தருவாயே;

---

* சுருள்—வெற்றிலைச் சுருள்—திருப்புகழ் 163, 958-அடி 1.

† "பெருகு பொருள் பெறில் அமளியில் இதமொடு குழைவோடே பிணமும் அணைபவர்"—திருப்புகழ் 60.

‡ மருந்திடுதல்:-பாடல் 230-பக்கம் 74 கீழ்க்குறிப்பைப் பார்க்க

x இது—அருணகிரியார் காலத்தில் (15-ஆம் நூற்றாண்டில்) கார்த்திகைத் திருநாள் சிறப்பாக இருந்தது என்பதைக் காட்டுகின்றது; ஏழாம் நூற்றாண்டில்—சம்பந்தர் காலத்திலேயே, இந்தத் திருநாள் பெண்களாற் கொண்டாடப்பட்டது—

"தொல் கார்த்திகை நாள் தளத்தேந் திளமுலையார்
தையலார் கொண்டாடும் விளக்கீடு"—சம்பந்தர் 2-47-3.
"குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன"—சிந்தாமணி 256.

திருவண்ணாமலையே இந்தத் திருநாளுக்கு முக்கிய தலம் அன்றும் இன்றும்.

[தொடர்ச்சி 791 ஆம் பக்கம் பார்க்க]

963.

(பழிப்பர் வாழ்த்துவர் சில சில பெயர்தமை,) சில பெயர்தமைப் பழிப்பார்கள், சில பெயர்தமை வாழ்த்துவார்கள், பொருள் கொடாவிட்டால் சில பேரைப் பழித்துப் பேசுவார்கள், பொருள் கொடுத்தால் சிலபேரை வாழ்த்திப் புகழ்வார்கள், ஒருத்தர் வாய்க்கென்று (அல்லது வாயில்) வைத்த வெற்றிலைச் சுருளைப் பிறிதொருவர் கையிற் கொடுத்து உதவுவார்கள், பணத்தின் மேலேயே நோக்கமாய் இருப்பார்கள், பிணத்தையும் (பொருள் கிட்டினால்) தழுவுவார்கள், கலந்து பேசிக்கொண்டே, பேசிக்கொண்டிருக்கும் போதே—

படுக்கை வீட்டுக்குள் மருந்திடுவார்கள், அணைத்துக் கொள்வார்கள், கார்த்திகைப் (பண்டிகை) வருகின்றதே (செலவுக்கு வேண்டுமென்று) பொருளைப் பறிப்பார்கள், மாதத்துக்கு ஒரு முறையாவது நீங்கள் வந்து போகவேண்டுமென்று தம்மிடம் வந்த ஒவ்வொருவரிடமும் உறவு பாராட்டுபவர்களாய்

அழைப்பார்கள், தம்மிடம் வருபவர்க்குள்ள ஆஸ்தி அத்தனையும் பறிக்க எண்ணுவார்கள் (தாம் ஆஸ்தி சேர்க்க எண்ணுவார்கள்); (பொருள் கொடாத ஒருவரை) வெருட்டி ஓட்டி விடுவார்கள் — இங்ஙனம் (அழிகுடி அரிவையர்) குடியையே அழிக்கின்ற பொதுமாதர்களின் (அலட்டினால்) உபத்திரவத்தால் (மற்றொரு மாட்டுடன்) இணைத்துக் (கட்டப்பட்ட) எருது போலக் காமப் பித்து என்னும் நரகத்தில் சுழற்சி அடைவேனோ!

(இவ்வாறு) பயனற்றுக் கேடுறுவதாய்ச் சில படுகுழியில்(பெருங்குழியில்)விழும் ஆபத்தினின்றும்என்னை நீக்கிக் காத்து உன்னுடைய அடியார்களுடன் என்னையும் கூட்டி அமர்த்தி— நிலையாயிருக்கச் செய்து, ஆட்கொள்ளும் வகைக்கு உன் திருமனதில் அருள் கூர்ந்து (நினைத்து) (எனக்கு) நல்லக்தியைத் தந்தருளுவாயாக;

[தொடர்ச்சி] ㅇ முடுக்கி ஓட்டுவர்—"பொருள்தீரில் முறுக்கியே உதைகொடு வசை யுரைதரு மனத்துரோகிகள்" —திருப்புகழ் 801.

ㅇㅇ அடியார் கூட்டுறவை விரும்புதல்
—பாடல் 930-பக்கம் 708-கீழ்க்குறிப்பு x.

தழைத்த சாத்திர மறைபொரு ளறிவுள
குருக்கள் போற்சிவ நெறிதனை யடைவொடு
*தகப்ப னார்க்கொரு செவிதனி லுரைசெய்த
முருகவித் தகவேளே-

சமத்தி னற்புகழ் சனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கத னுடலது துணிசெய்து
சயத்த யோத்தியில் வருபவ னரிதிரு
மருமகப் பரிவேள்னே ;

செழித்த வேற்றனை யசுரர்க ளுடலது
பிளக்க வோச்சிய பிறகம ரர்கள்பதி
செலுத்தி யீட்டிய சுரபதி மகள்தனை மணமதுற் றிடுவோனே;

திறத்தி னற்பல சமணரை யெதிரெதிர்
†கழுக்க ளேற்றிய புதுமையை யினிதொடு
திருத்த மாய்ப்புகழ் மதுரையி லுறைதரும்
அறுமுகப் பெருமாளே. (௪)

964. திருவடியிற் பக்தி பெற

தான தானதன தத்தன தத்தன
தான தானதன தத்தன தத்தன
தான தானதன தத்தன தத்தன தத்ததான

சீத வாசனைம லர்க்குழல்பி லுக்கிமுக
மாய வேல்விழிபு ரட்டிநகை முத்தமெழ
தேமல் மார்பினிள பொற்கிரிப ளப்பளென தொங்கலாரஞ்-

---

* சிவபிராற்கு உபதேசித்தது —பாடல் 327 பக். 314 குறிப்பு.

† கழுவில் ஏற்றியது — சமணர் கழு ஏறின (ஸ்)தம்பம்—
"போற்று சீர்ப் பிள்ளையார் தம் **புகழ்ச் சயத்** தம்ப மாகும்"
—பெரிய புரா—சம்பந்தர்-856.

சமண் அழித்த சம்பந்தரின் புகழ் பெருகியது :—
"சமணை நீக்கி உலகெலாம் உய்யக் கொண்ட
ஞானசம்பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி யோங்கத்
தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே"
—பெரிய புரா-சம்பந்த-859.

மதுரைவாசிகள் சம்பந்தரைப் புகழ்ந்தது :—

"பிள்ளையார்...மதுரை மூதூர்...வந்தருளக் கண்டு ... துன்னிய மாதர் மைந்தர் விடிவதாய் முடிந்த திந்த வெஞ்சமண் இருளும் என்பார்"—பெரிய புரா-801, 805.

விரிவாகத் தழைந்துள்ள சாத்திரங்களில் மறை பொருளாயுள்ள ரகசியங்களை ஞான நிறைந்த குருமூர்த்திபோல விளங்கிச் சிவ சன்மார்க்கங்களை முறையோடு— தக்கபடி (உனது) தந்தையாகிய சிவபிரானது ஒப்பற்ற திருச் செவியில் உபதேசித்த முருக! ஞானியே! செவ்வேளே!

தன்னுடைய சாமர்த்தியத்தால், புகழ் பெற்ற ஜானகியை (சீதையை)த் துன்பத்துக்கு ஆளாக்கிய திருட்டு ராக்ஷதனும் ராவணனுடைய உடலைத் துண்டு படுத்தி அழித்துச், (சயத்து) வெற்றி நிலையில் அயோத்தி நகருக்கு வந்தவராகிய (ஸ்ரீ ராமரின்) திருமாலின் அழகிய மருமகனாய் அன்பு கூர்ந்தவனே!

செழுமைவாய்ந்த வேலாயுதத்தை அசுரர்களின் உடல்கள் பிளக்கும்படிச் செலுத்தின பின்னர்த், தேவர்களை அவர்களுடைய பதி—ஊராகிய பொன்னுலகுக்கு அனுப்பிவைத்து, (ஈட்டிய) ஈண்டிய—நெருங்கி நின்ற— அண்டி நின்ற—தேவர் தலைவனும் இந்திரனது மகள்— தேவ சேனையைத் திருமணஞ் செய்து கொண்டவனே!

சாமர்த்தியத்தாற் பல சமணர்களை எதிர் எதிராய் அமைக்கப்பட்ட கழுமரங்களில் (நீ) ஏறவைத்த அற்புத நிகழ்ச்சியை இன்பகரமாய்த், தத்தம் பிழை திருந்தின நிலையினராய், யாவரும் புகழ்ந்த மதுரை மாநகரில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமாளே! (கதிதனைத் தருவாயே)

964.

குளிர்ந்த வாசனையுள்ள மலரணிந்த கூந்தலை அலங்கரித்து, முகத்தில் உள்ள, மயக்குவதான, வேல் போலும் கண்களைப் புரட்டி, புன்சிரிப்பு முத்துப்போன்ற பற்களினின்றும் தோன்ற (அல்லது முத்தம்—பிரியத்தை— மகிழ்ச்சியைத் தெரிவிக்க), தேமல் படர்ந்த மார்பில் உள்ள (இள பொற்கிரி) பொன் இளகிரி—அழகிய இளமை விளங்கும் மலையன்ன கொங்கையின் மீது (தொங்கல் ஆரம் பளப்பளென) தொங்கல் ஆரம்-(ஆரத் தொங்கல்)— முத்துமாலை—பளபள என்று விளங்க (அல்லது* கொங்கை பளபள என்று விளங்க—அதன்மீது முத்துமாலை)—

* 'மடமாதர் மார்படைத்த கோடு பளீர் பளீரென' -திருப்பு. 441.

*சேரு மோவியமெ னச்சடமி னுக்கிவெகு
வாசை நேசமும்வி ளைத்துஇடை யுற்றவரி
†சேலை காலில்விழ விட்டுநடை யிட்டு‡மயி லின்கலாபச்;

சாதி யாமெனவெ ருட்டிநட மிட்டுவலை
யான பேர்தமையி ரக்கவகை யிட்டுகொடி
சாக நோய்பிணிகொ டுத்திடர்ப டுத்துவர்கள் பங்கினூடே-

தாவி மூழ்கிமதி கெட்டவல முற்றவனை
பாவ மானபிற விக்கடலு ழப்பவனை
தாரு லாவுபத பத்தியிலி ருத்துவது மெந்தநாளோ;

xவாத வூரனைம தித்தொருகு ருக்களென
ஞான பாதம்வெளி யிட்டுநரி யிற்குழுவை
வாசி யாமெனந டத்துவகை யுற்றரச னன்புகாண-

மாடை யாடைதர பற்றிமுன கைத்துவைகை
யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தனருள் கந்தவேளே;

---

* "ஊருவிற் றோன்றிய உயிர் பெய் ஓவியம்" என்றார் ஊர்வசியை—கம்ப-ராமா—மாரீசன்-22.

† "தாளொடு மேவிய துகில்"—பாடல் 948-அடி 1.

‡ "மயிலின் குழாஅம் எய்ப்ப"—பெருங்கதை 2-7-93.

x மாணிக்கவாசகர் வரலாறு:—பாடல் 439 - பக்கம் 601 கீழ்க்குறிப்பு; பாடல்கள்-4, 653-ம் பார்க்க.

சேர்ந்துள்ள சித்திரப் பதுமையோ இவ் வுருவம் என்று சொல்லும்படி உடலை மினுக்கி மிக்க காமப் பற்றையும் நட்பையும் வரப்பண்ணி, அரையிற் கட்டியுள்ள (வரி) கோடுகள் உள்ள (அல்லது அரி—அழகுள்ள) புடைவை கணுக்கால் அளவும் தொங்கும்படி விட்டு, (அழகாக) நடந்து (கலாப மயிலின்) தோகை விளங்கும் மயிலின்—

இனமாமென்று சொல்லும்படி வந்தவர்களை வெருட்டியும், நடித்தும், தங்கள் வலையில் விழும் பேர்வழிகளைத் தம்மை இரந்து வேண்டும்படியான வழிக்குக் கொண்டுவர (இட்டுகொடி) கொடியிட்டு — துவசம் கட்டியும்—முயன்று நின்றும்—சாதற்கே, நோயும் பிணியும் தந்து—(நோய்பிணி வரும்படிச் செய்து), துன்பம் உண்டு பண்ணுபவர்களாம் (வேசையர் தம்) பக்கத்தே—வேசையரிடத்தினுள்—வேசையர்பால்—

பாய்ந்து, (காமத்தில்) முழுகி, அறிவு கெட்டு, துன்பம் அடைந்தவனை, பாவத்துக்குக் காரணமான பிறவிக் கடலில் உழன்று பிரயாசைப் படுபவனை, மாலைகள் விளங்கும் உனது (பதபத்தியில்) திருவடிப் பத்தியில்—திருவடியைப் பத்தி செய்யும் நிலையில்—என்னை நீ இருத்தி வைப்பதும் எந்த நாளிலோ! என்றைக்கோ!

திருவாதவூரில் அவதரித்த மாணிக்க வாசகரைக் குறிக்கொண்டு, ஒரு குருமூர்த்தியாக நின்று, ஞான பாதத்தை—(முத்திக்கு வழிகளான சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்ற நால் வகையான சைவ சமய மார்க்கங்களுள்) ஞான மார்க்கத்தை அவருக்கு (வெளியிட்டு) வெளிப்பட உபதேசித்தும், நரிகளின் கூட்டத்தைக் குதிரைகளாம்படி (நடத்தின) (நடத்து) ஒரு திருவிளையாடலில் (உவகை உற்று) மகிழ்ச்சி பூண்டும், பாண்டியன் (தனது) அன்பு தோன்ற

(மாடையாடை) பொன்னுடை தர, அதை வாங்கிக் கொண்டு, முன் சிரித்தும், வைகை யாற்றங்கரை மீது கூத்தாடி, மண் எடுத்து மகிழ்ந்தும், (மாது வாணி) பிட்டு வாணிபம் செய்த மாது—வந்தியம்மையார்—தந்த பிட்டை உண்டும் (விளையாடின) பித்தனுர் (சிவபிரான்) பெற்றருளிய கந்த வேளே!

வேத லோகர்பொனி லத்தர்தவ சித்தரதி
பார சீலமுனி வர்க்கமுறை யிட்டலற
வேலை யேவியவு ணக்குலமி றக்கநகை கொண்டசீலா-

*வேத மீணகம லக்கணர்மெய் பச்சைரகு
ராம ரீண மயி லொக்கமது ரைப்பதியின்
மேவி வாழம்ரர் முத்தர்சிவ பத்தர்பணி தம்பிரானே. (ரு)

965. திருவடி பணிய

தனனத் தந்தன தந்தன தனதன
தனனத் தந்தன தந்தன தனதன
தனனத் தந்தன தந்தன தனதன தனதான

புருவச் செஞ்சிலை கொண்டிரு கணைவிழி
யெறியக் கொங்கையி ரண்டெனு மதகரி
பொரமுத் தந்தரு மிங்கித நயவித மதனாலே-

புகலச் சங்கிசை கண்டம தனிலெழ
உருவச் செந்துவர் தந்தத ரமுமருள்
புதுமைத் தம்பல முஞ்சில தரவரு மனதாலே;

பருகித் தின்றிட லஞ்சுக மெனமன
துருகிக் குங்கும சந்தன மதிவியர்
படியச் சம்ப்ரம ரஞ்சித மருள்கல வியினாலே-

பலருக் குங்கடை யென்றெனை யிகழவு
மயலைத் தந்தரு மங்கையர் தமைவெகு
பலமிற் கொண்டிடு வண்டனு முனதடி பணிவேனோ;

---

* திருமால் வேதத்தைத் தேடித் தந்தது—மச்சாவதாரத்தில்
—பாடல் 245-பக்கம் 108-கீழ்க்குறிப்பு.

"ஆரணற்கு மறைதேடி யிட்ட திருமால்" என்றார் 580-ஆம் பாடலில்.

வேத லோகர் — வேதமோதும் நன் மக்கள், (பொன் நிலத்தர்) பொன்னுலகத்துத் தேவர்கள், தவசிகள், சித்தர்கள், மிக்க பெருமை வாய்ந்த ஒழுக்கம் நிறைந்த முனிகணங்கள் — இவர்களெல்லாம் முறையிட்டுக் கூச்சலிட்டலற வேலாயுதத்தைச் செலுத்தி (அவுணக்குலம்) அசுரர் கூட்டம் இறக்கும்படிச் சிரித்த (சீலனே) தூயனே!

(அசுரனாற் கவரப்பட்ட) வேதத்தை மீட்டுத்தந்த (கமலக்கண்ணர்) தாமரை போன்ற கண்களை உடையவரும், உடல் பச்சை நிறமுள்ளவருமான (ரகுராமர்) திருமால் தந்த (மயில்) பெண்களான — தேவசேனை — வள்ளி இவர்கள் இருவருடனும் (அல்லது வள்ளியுடன்) **மதுரைப்பதியில்** வீற்றிருந்து வாழ்கின்ற தம்பிரானே! தேவர்களும், ஜீவன் முத்தர்களும், சிவபத்தர்களும் வணங்குகின்ற தம்பிரானே!

(பத பத்தியில் இருத்துவதும் எந்த நாளோ)

965.

புருவமாகிய நல்ல வில்லை ஏந்தி, இரண்டு கண்களாகிய அம்புகளை வீசிக், கொங்கைகளாம் இரண்டு மதயானைகள் சண்டை செய்ய, முத்தத்தைத் தருகின்ற இனிமை வாய்ந்த உபசார வழிகளாலே—

பேசச், சங்கின் ஒலி போன்ற ஒலி கழுத்தில் உண்டாக அல்லது சங்கு போன்ற கழுத்தில் (இசை) ஒலி எழ— (புட்குரல் எழ), உருவம்—நிறம், செம்மை வாய்ந்தசாய்த் துவர் தந்த அதரம் — பவளம் போன்ற தான வாயிதழ் (கீழுதடு) தருகின்ற எழில் வாய்ந்த தாம்பூல எச்சில் சிலவற்றையும் கொடுக்க, (உணர்ச்சி) எழும் மனதுகொண்டு— (அந்த எச்சிலைக்)

குடித்து உண்ணுதல் நல்ல சுகமாம் என்று மனம் உருகிக், குங்குமமும் சந்தனமும் அதிக வேர்வையினால் கலந்து படிய, களிப்பையும், (ரஞ்சிதம்) இன்பத்தையும் தருகின்ற புணர்ச்சித் தொழிலாலே—

பலருக்கும் கடையன் (கீழானவன்) இவன் என்று என்னை இகழும்படியாகக் காம மயக்கத்தைத் தருகின்ற அரிய மாதர்களை மிக்க பலமாக நம்பிப் பிடித்துக் கொண்டுள்ள (வண்டன்) தீயனாகிய நானும் உன்னுடைய திருவடியைப் பணிவேனோ!

திருவைக் கொண்டொரு தண்டக் வனமிசை
வரவச் சங்கொடு வந்திடு *முழையுடல்
சிதறக் கண்டக வெங்கர னொடுதிரி சிரனொடு-

திரமிற் றங்கிய †கும்பக னொருபது
தலைபெற் றும்பரை வென்றிடு மவனொடு
சிலையிற் கொன்றமு குந்தன லகமகிழ் மருகோனே;

மருவைத் துன்றிய பைங்குழ லுமையவள்
சிவனுக் கன்பரு ளம்பிகை ‡கவுரிகை
மலையத் தன்தரு சங்கரி கருணைசெய் முருகோனே-

xவடவெற் பங்கய லன்றணி குசசர
வணையிற் றங்கிய பங்கய முகதமிழ்
மதுரைச் oசங்கிலி மண்டப இமையவர் பெருமாளே. (சூ)

966. திருவடியைப் பெற

தனன தான தானத் தனந்த
தனன தான தானத் தனந்த
தனன தான தானத் தனந்த தன்தான

மூக்மெ லாநெய் பூசித் தயங்கு
நுதலின் மீதி லேபொட் டணிந்து
முருகு மாலை யோதிக் கணிந்த மடமாதர்-

முதிரு மார பாரத் தனங்கள்
மிசையி லாவி யாய்நெக் கழிந்து
முடிய மாலி லேபட் டலைந்து பொருள்தேடிச்;

---

* உழை—மானுருக்கொண்ட மாரீசன். மாரீசன் — கரன் — இவர்கள் வரலாற்றைப் பாடல் 231-பக்கம் 78-கீழ்க்குறிப்பிற் பார்க்க.

திரிசிரன் — இவன் சூர்ப்பணகையால் தூண்டப்பட்டு இராமபிரானிடம் யுத்தத்துக்கு வந்து இரண்டு தலை யிழந்து பிறகு ஒரு சிரத்துடன் மாயத்தால் யுத்தம் செய்து இறந்தவன். இவனுக்கு மூன்று சிரம். (அபிதான சிந்தாமணி)

லக்ஷ்மணரால் மூக்கு அரியப்பட்ட சூர்ப்பணகையின் உடன் பிறந்தவன் கரன். தூஷணன், திரிசிரன், கரன் இவர்கள் மூவரும் சூர்ப்பணகையின் தூண்டுதலால் ராமரொடு பொருது இறந்தவர்கள்.

† கும்பகன்—கும்பகர்ணன் இராவணன் தம்பி.—பாடல் 839-பக்.462 கீழ்க்குறிப்பு. ‡ கவுரிகை-கவுரி-பாடல் 303-அடி 6 பார்க்க.

[தொடர்ச்சி 799 ஆம் பக்கம் பார்க்க]

லக்ஷ்மியாம் சீதையை அழைத்துக் கொண்டு ஒப்பற்ற தண்டகாரணியத்தில் வந்திருந்தபொழுது, பயத்தோடு வந்து உலவின (உழை) மாரீச மானின் உடல் பாணம் பட்டுச் சிதறி அழியத், துஷ்டர்களான கொடிய கரன், திரிசிரன் என்னும் அரக்கர்களையும்—

(திரம்) வலிமை கொண்டிருந்த (அல்லது மலைபோல இருந்த) கும்பகர்ணனையும், ஒப்பற்ற பத்துத் தலைகளைப் பெற்றுத் தேவர்களை வென்றவனுன (அவனும்) ராவணனையும், தமது கோதண்டம் என்னும் வில்லேந்திக் கொன்ற முகுந்தன்—திருமாலின் நல்ல உள்ளம் மகிழ்கின்ற மருமகப் பிள்ளையே!

வாசனை கொண்ட மருக்கொழுந்தைச் சூடியுள்ள அழகிய கூந்தலை உடைய உமையவள், சிவபிராற்குத் தனது அன்பைக் காட்டும் அம்பிகை, கௌரி, மலையரசன் (இமவான்) பெற்ற சங்கரி (பார்வதி) தனது கருணையை அன்பைக்) காட்டும் குழந்தையே!

வடவெற்பு—வடக்கே உள்ள இமயமலைக்கு அங்கு அயல்—அங்கு சமீபத்தில் உள்ள (அன்று) முன்பு அழகிய குச சரவணையில் — (குசம்) தருப்பைகள் வளர்ந்து சூழ்ந்திருந்த (அல்லது — குசம் — நீர் நிறைந்திருந்த) சரவண மடுவில் தங்கியிருந்த தாமரையன்ன திருமுகத்தை உடையவனே! தமிழ் (வளர்ந்த) மதுரையிற் சங்கிலி மண்டபம் எனப்படும் மண்டபத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! தேவர் பெருமாளே! (உனதடி பணிவேனே)

966.

முகம் முழுமையும் வாசனைத் தயிலத்தைப் பூசியும், விளங்கும் நெற்றியில் பொட்டு இட்டுக்கொண்டும், வாசனையுள்ள பூமாலையைக் கூந்தலிலே அணிந்துள்ள அழகிய மாதர்களின்—

முற்றினதும், முத்துமாலை அணிந்ததும், கனத்ததுமான கொங்கைகளின் மேல் (ஒரே) உயிராய், உள்ளம் நெகிழ்ந்து அழிந்து, எப்போதும் காம மயக்கிலே அகப்பட்டு (அதனால்) (வேசையர்க்குப் பொருள் கொடுக்க வேண்டி) நான் அலைந்து, பொருள் தேடி—

x 'இமையச் சாரல் தங்கிய கமலம்பூத்த சரவணம்' கந்தபுரா. 1-11-90.
0 சங்கிலி மண்டபம்-இது 'கிளி மண்டபம்'என இப்போதுவழங்கும்.

செகமெ லாமு லாவிக் கரந்து
திருட ஞகி யேசற் றுழன்று
திமிர ஞகி யோடிப் பறந்து திரியாமல்-

தெளியு ஞான மோதிக் கரைந்து
சிவபு ராண நூலிற் பயின்று
செறியு மாறு தாளைப் பரிந்து தரவேணும்;

*அகர மாதி யாமக்ஷ ரங்க
ளவனி கால்வி ணூரப் பொடங்கி
அடைய வேக ரூபத்தி லொன்றி முதலாகி-

அமரர் காண வே†யத்த மன்றில்
அரிவை பாட ஆடிக் கலந்த
அமல நாத ஞர்முற் பயந்த முருகோனே;

சகல வேத சாமுத்ரி யங்கள்
சமய மாறு லோகத்ர யங்கள்
தரும நீதி சேர்தத் துவங்கள் தவயோகம்-

---

* அகரமாதி...அக்ஷரங்கள் முதலாகி — அக்ஷரங்கள் ஐம்பத்தொன்று — அகாராதி க்ஷகாராந்தம் ஐம்பத்தொன்ருகும் — (மூலாதாரம்-4, சுவாதிஷ்டானம் 6; மணி பூரகம் 10, அனுகதம் 12, விசுத்தி 16; ஆஞ்ஞை-3;—தொகுதி 3-பக்கம் 549-ன் பின்புறமுள்ள அநுபந்தத்தைப் பார்க்க): "இணையார் கழலிணை ஐம்பத்தொன்ருகும்" [திருமந்திரம் 898]—"ஆதி எழுத்தவை ஐம்பதோடொன்றென்பர்" [திருமந்திரம் 963]

"ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே."-(திருமந்திரம் 2698)

—இதனல் எல்லாம் ஆயின ஐம்பதெழுத்துக்களே என்ப; இவ்வெழுத்துக்களுட் சிறந்தன ஐந்தெழுத்துக்களே என்பதும் விளக்கமாகின்றன. இந்த ஐந்தெழுத்தைக் கொண்டே மண், நீர், காற்று, தீ, விண் என்னும் ஐந்து பூதங்களும் படைக்கப்பட்டன, பல யோனிகளும் படைக்கப்பட்டன, யாவும் காக்கப் படுகின்றன, இறைவன் ஏகரூபத்தில் ஐந்தெழுத்திலே அமர்ந்து விளங்குகின்ருன் -

(தொடர்ச்சி 801-ஆம் பக்கம் பார்க்க)

உலகம் முழுமையும் உலவித் திரிந்தும், ஒளித்தும், திருட்டுத் தொழிலஞகி சற்று அலேந்து, மந்தஞகி, அங்கும் இங்கும் ஓடிப் பறந்து திரியாமல்—

தெளிவைத் தரும் ஞான நூல்களை ஓதி ஒலித்தும், சிவபுராண நூல்களிற் பயின்றும், மனம் நெருங்கிப் பொருந்துமாறு உனது திருவடியை அன்பு கூர்ந்து தரவேண்டும்.

அகரம் முதலானவையாம் (51) அக்ஷரங்கள் பூமி, (கால்) காற்று, விண், (ஆர்) நிறைந்த (அப்பு) நீர், இவையுடன் (அங்கி) தீ இவையெலாம் கூடிட, ஏக ரூபத்தில்—ஒரு உருவமாகக்—கூத்தனுய் — நடராஜப் பெருமானுய்) அமைந்து—முதற் பொருளாக விளங்கி—

தேவர்கள் தரிசிக்கப்பொன்னம்பலத்தில் (தில்லையில்—சிதம்பரத்தில்) தேவிபாட அங்கு ஆடி விளங்கின— மலமற்றவராம் (நாதனுர்) நடராஜப் பெருமானுர் முன்பு தந்த குழந்தையே!

சகல வேதங்களிலும் கூறப்பட்ட (சாமுத்ரியங்கள்) லக்ஷணங்கள், ஆறு சமயங்கள், மூன்று லோகங்கள், தரும நீதிகளுடன் சேர்ந்த உண்மைகள், தவம், யோகம், இவையெலாம் சிறந்து ஓங்கும்படிப்

(தொடர்ச்சி:) "அஞ்செழுத் தாலேந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் ருனே"
—திருமந்திரம் 966.

"அகார முதலாக ஐம்பத்தொன் ருகி * * நகார முதலாகும் நந்திதன் நாமமே"-திருமந்திரம் 2699; பாடல் 652-ன் குறிப்புக்களைப் பார்க்க. திருப்புகழ் பாடல் 1127-ம் பார்க்க.

பூதங்கள் ஐந்திற் புணர்ந்து ஆடுபவர்— நடராஜப் பெருமான்;
'பூதங்கள் ஐந்திற் புணர்ந்தாடும் சித்தனே'-திருமந்திரம் 2730.

† அத்த மன்று—பொன்னம்பலம். அரிவை பாட ஆடுவது :
"கீதம் உமைபாட...வேத முதல்வன் நின்ருடும்"
—சம்பந்தர் 1-46-7.

தேவர்கள் காணத் தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடுதல்,
"இமையவர் துதிசெய...தில்லை மன்றில் ஆடலதுடையார்"
—சம்பந்தர் 2-94-9:

தவறி லாம லாளப் பிறந்த
தமிழ்செய் *மாறர் †கூன்வெப் பொடன்று
தவிர ஆல வாயிற் சிறந்த பெருமாளே. (எ)

967. மாதர் மீதுள மயல் அற

தானத்தன தானன தானன
தானத்தன தானன தானன
தானத்தன தானன தானன தனதான

‡ஏலப்பனி நீரணி மாதர்கள்
கானத்தினு மேயுற வாடிடு
மீரத்தினு மேவனீ சேர்கர மதனுலும்-
xஏமக்கிரி மீதினி லேகரு
நீலக்கய மேறிய னேரென
ஏதுற்றிடு மாதன மீதினு மயலாகிச்;
சோலைக்குயில் போல்மொழி யாலுமெ
தூசுற்றிடு நூலிடை யாலுமெ
தோமிற்கத லீநிக ராகிய தொடையாலும்-
சோமப்ரபை வீசிய மாமுக
சாலத்திலு மாகடு வேல்விழி
சூதத்தினு நானவ மேதின முழல்வேனே;
oஆலப்பணி மீதினில் மாசறு
மாழிக்கிடை யேதுயில் மாதவ
**ஞானக்கினி தாயுத வீயருள் நெடுமாயன்-

* நின்றசீர் நெடுமாற நாயனர்—(கூன்பாண்டியன்):—
"நெடுமாற ஞர்பெருமை யுலகேழு நிகழ்ந்ததால்"
"தென்னுடு சிவம்பெருகச் செங்கோலுய்த் தறமளித்துச்
சொன்னமெ நெறிபோற்றி...பொலிகின்ருர்."
"திருநீற்றின் நெறிவிளங்க உரைசெய் பெரும்
புகழ் விளக்கி ஓங்குநெடு மாறனுர்"
—பெரிய புராணம்-நின்றசீர்நெடுமாற 1, 2, 9.

† "கூன்வெப்பு நீங்கப் பெற்றது:
—பாடல் 181-பக்கம் 420-2 கீழ்க்குறிப்பு.

‡ ஏலம்—மயிர்ச்சாந்து 'ஏலமார் தரு குழல்'—சம்பந்தர் 3-32-4.

x கொங்கைக்கு—மேரு மலையும்; முலைக் காம்புக்கு—கரிய நீல யானையும் உவமை கூறப்பட்டுளது.

[தொடர்ச்சி 803 ஆம் பக்கம் பார்க்க]

பிழையிலா வகையில் ஆட்சி செய்வதற்கே தோன்றிய தமிழ் வளர்த்த (கூன்) பாண்டியரின் சுரத்தொடு கூனும் அன்று நீங்கத் (திரு ஆலவாயில்) மதுரைத் திரு ஆலவாய்த் திருக்கோயிலில் சிறந்து வீற்றிருக்கும் பெருமாளே!

(தாளைப் பரிந்து தரவேணும்)

967.

ஏலப் பனி நீர்—(ஏலம்) மயிர்ச் சாந்தும், பன்னீரும் மேற்கொள்ளும் மாதர்களின் இசை(ப்) பாடல் மீதும், அவர்கள் உறவாடிப் பேசும் (ஈரத்தினும்) அன்பு மொழிகள் மீதும், வளையல் அணிந்த கரங்களின் மீதும்

(ஏமக்கிரி) பொன்மலை (மேருமலை) மேலே, கரிய நீல (கயம்) யானை ஏறிய தன்மையதாமென்னும்படிப் (பொன்னிறக் கொங்கைகளின் மீது கரிய நீல முலைக்காம்புகள்) பொருந்தினவாய் விளங்கும் அழகிய கொங்கைகளின் மீதும் காம இச்சை பூண்டு—

சோலையில் உள்ள குயிலின் குரல் போன்ற பேச்சுக்களாலும், ஆடை அணிந்துள்ள நூல் போன்ற இடையாலும், குற்றமில்லாத வாழைக்கு ஒப்பான தொடையாலும்,

நிலவொளி வீசிடும் அழகிய முகத்தின் மினுக்கு நடிப்பாலும், பெருமை வாய்ந்ததும் விஷம் கொண்டதுமான (அல்லது அழகியதும், கடுமை வாய்ந்ததுமான) வேல் போன்ற கண்களின் சூது (அதினும்) சூதிலும், நான் வீணாகவே நாள்தோறும் அலைச்சல் உறுவேனோ!

விஷங்கொண்ட பாம்பின் (ஆதிசேடன்) மேலே (அல்லது ஆல்—ஆலிலையில் அந்தப் பாம்பின் மேலே) குற்றமற்ற (பாற்) கடலிடையே அறிதுயில் கொண்டுள்ள மாதவன்—(பெரியோன்) கஜேந்திரனுக்கு அன்புடனே உதவி செய்தருளிய பெரிய மாயன்—

(தொடர்ச்சி) ० "ஆலத் திலையான் அரவின் அணைமேலான் நீலக் கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான்"
—பெரியாழ்வார் 2-6-6.

०० கஜேந்திரனுக்கு உதவியது
—பாடல் 939-பக்கம் 731 கீழ்க்குறிப்பு.

*ஆதித்திரு நேமியன் †வாமன
நீலப்புயல் நேர்தரு மேனியன்
ஆரத்துள வார்திரு மார்பினன் மருகோனே;

‡கோலக்கய மாவுரி போர்வையர்
xஆலக்கடு வார்கள நாயகர்
oகோவிற்பொறி யால்வரு மாசுத குமரேசா-

**கூர்முத்தமிழ் வாணர்கள் வீறிய
சீரற்புத மாநக ராகிய
கூடற்பதி மீதினில் மேவிய பெருமாளே. (அ)

968. ஞான வாழ்வு பெற

தனதான தானத் தனதான

கலைமேவு ஞானப் பிரகாசக்-கடலாடி ஆசைக் கடலேறிப்;
பலமாய வாதிற் பிறழாதே-பதிஞான வாழ்வைத் தருவாயே;
மலைமேவு ††மாயக் குறமாதின்-மனமேவு வாலக் குமரேசா;

---

* 'ஆதி ஆதி ஆதி நீ' — நாலாயிரப்பிரபந்தம் — திருச்சந்த விருத்தம் 34.

† 'வாமனன் என் மரதக வண்ணன்'—திருவாய்மொழி 2-7-8.
வாமனவதாரம்—பாடல் 458-பக்கம் 24 கீழ்க்குறிப்பு.

‡ யானைத்தோல் போர்வை
—பாடல் 236-பக்கம் 210-கீழ்க்குறிப்பு.

x விஷம் உண்டது—பாடல் 509-பக்கம் 162 கீழ்க்குறிப்பு.

o "முக்கட் பரஞ்சோதி... ஐந்துமுகத்தோ டதோ
முகமுந் தந்து திருமுகங்கள் ஆறுகிச் செந்தழற்கண் ஆறும்
* * தீப்பொறி ஆறுய்ப்ப— * * சரவணத்தில் * *
உய்ப்பத் திருவுருவாய்"—கந்தர்கலி வெண்பா.

"தொல்லைத் திருமுகம் ஆறுங் கொண்டான் ° ° திருமுகம் ஆறு
தன்னில் பொற்புறு நுதற்கண் தோறும் புலிங்க
மொன்றொன்று தந்தான்; ° ° மூவிருபொறிகள் தோன்றி
மூதண்டங் காறுஞ் சென்ற...சரவணம் எனும்தடந்
தன்னிற் சேர்த்தனன் °° ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய"—கந்தபுரா 1-11 (43-92).

[தொடர்ச்சி 805 ஆம் பக்கம்]

ஆதிமூர்த்தியாய் விளங்கும் அழகிய சக்ராயுதன், (அல்லது ஆதிமூர்த்தி, திருநேமியன்), வாமனரூபம் (குறள்வடிவம்) எடுத்தவன், நீலமேகம் போன்ற திருமேனியை உடையவன், மாலையாகத் துளவத்தை நிரம்பக் கொண்ட அழகிய மார்பை உடையவன்—ஆகிய திருமாலின் மருகனே !

அழகிய யானையின் பெரிய உரித்தோலைப் போர்வையாகக் கொண்டவர், ஆலகால விஷம் நிறைந்த கண்டத்தைக் (கழுத்தைக்) கொண்ட தலைவர் — ஆகிய சிவபிரானுடைய (கோவிற்பொறி) கண்களினின்றும் வந்த தீப் பொறிகளினின்றும் வெளிவந்த அழகிய பிள்ளையாம் குமரேசனே !

சிறந்த முத்தமிழ்ப் புலவர்கள் விளங்கின சிறப்பைக் கொண்ட அற்புத மகா நகரமாம் கூடற்பதியில் (மதுரை நகரில்) வீற்றிருக்கும் பெருமாளே !

(நான் அவமே தினம் உழல்வேனோ !)

968.

கலைகள் எல்லாம் தன்னுள் அடங்கியுள்ள ஞான ஒளியான—கடலிடையே திளைத்துக் குளித்து, மூவாசை எனப்படும் கடலைத் தாண்டிக் கடந்து,

பலத்ததான (சமய) வாதங்களில் மாறுபட்டுக் கிடக்காமல்-(பதி ஞான வாழ்வை) கடவுளைப் பற்றிய ஞான வாழ்வை—சிவஞான வாழ்வைத் தந்தருளுவாயாக.

(வள்ளி) மலையில் இருந்த ஆச்சரியத் தோற்றத்தைக் கொண்ட குறப்பெண் வள்ளியின் மனத்திலே வீற்றிருக்கும் இளங் குமரேசனே !

(தொடர்ச்சி) °° மதுரை—முத்தமிழ் வாணர்கள் வீறிய நகர்—

"முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலம்"

—மீனாட்சி பிள்ளைத்தமிழ் 5.

"சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய வங்கண் மூதூர்"

—பெரிய புரா-மூர்த்தி-5.

"முத்தமிழோர் எண் மதுரை"

—திருவிளையாடற் பயகரமாலை 56.

†† 'முகமாயமிட்ட குறமாது'—பாடல் 199-பக்கம் 12.

*சிலேவேட சேவற் கொடியோனே – †திருவாணி கூடற்
பெருமாளே. (கூ)

969. அன்பு நிலை கூட

தானத் தனதான

நீதத் துவமாகி– நேமத் துணையாகிப்;
‡பூதத் தயவான– xபோதைத் தருவாயே;
[0நாதத் தொனியோனே – ஞானக் கடலோனே;
கோதற் றமுதானே – கூடற் பெருமாளே. (கo)

970. திருவடியைக் கூட

தனதன தத்தந் தான தானன
தனதன தத்தந் தான தானன
தனதன தத்தந் தான தானன தனதான

மனநினை சுத்தஞ் சூது காரிகள்
அமளிவி ளைக்குங் கூளி மூளிகள்
மதபல நித்தம் பாரி நாரிக ளழகாக-
வளைகுழை முத்தும் பூணும் வீணிகள்
விழலிகள் மெச்சுண் டாடி பாடிகள்
வரமிகு வெட்கம் போல வோடிகள் தெருவூடே;

---

* 'சிலை வேடனது'—பொய்யா மொழிக்காக வேடனது:
—பாடல் 422-பக்கம் 562-கீழ்க்குறிப்பு.

வள்ளிக்காக வேடனது:—'வனசர் கொம்பினைத் தேடி ஒரு வேட வடிவு கொண்டு பித்தாகி'—திருப்புகழ் 1230.

''வரிவில் வாளியன் நீலக்குஞ்சியன் நெடியன் வேட்டுவக்
கோலத்தைக் கொடு குமரன் தோன்றினன்'' -கந்தபுரா. 6-24-66.

† திருவாணிகூடல்-திருமகளும் கலைமகளும் விளங்கும் கூடல்-
''திருமகட்கொரு தாமரைக் கூடமே; திருமால்
மருமகட்குவெண் டாமரை மாடமே...இப் பேரூர்''
—திருவிளையாடல்-திருநகர 4.

குறிப்பு: இந்த 968-ஆம் பாடல் பவானித் தலத்துக்கு உரியது, 'திருவானிகூடற் பெருமாளே' என்பதே சரியான பாடம் என்பர். வானி என்பது பவானி. வானிநதி—பவானி நதி; வானிகூடல்—காவிரியாற்றுடன் வானி என்னும் பவானியாறு கூடுவதால்,
[தொடர்ச்சி 807 ஆம் பக்கம் பார்க்க.]

(பொய்யா மொழிப் புலவர் பொருட்டு) வில்லேந்திய வேடனாய் விளங்கினவனே! (அல்லது, வள்ளியின் பொருட்டு வில்லேந்திய வேடனது உருவம் கொண்டு சென்றவனே)! சேவற் கொடியைக் கொண்டவனே! இலக்குமியும் சரஸ்வதியும் (செல்வமும் கல்வியும்) விளங்கும் கூடற் பெருமாளே ! (மதுரை நகர்ப் பெருமாளே)!

(பதிஞான வாழ்வைத் தருவாயே)!

969.

(நீதத்வம்) நீதித்தன்மை கொண்டதாய் (அல்லது (நீதம்)–நீதியில் (துவம்) நிலை பெற்றதாய்)–நியமமான–சீரிய ஒழுக்கத்தில் ஒழுகுவதற்குத் துணை செய்வதாய்,

உயிர்வர்க்கங்களின் மீது கருணை செய்வதாய் விளங்கும் —(போதை) மூதறிவை— பெரிய ஞானத்தைத் தந்தருளுக.

ஒலியும் ஓசையுமாய் விளங்குபவனே–ஞானசமுத்திரமே!

குற்றமிலாத அமுதம் அனையவனே! கூடற்பெருமாளே! (மதுரை நகர்ப் பெருமாளே) (போதைத் தருவாயே)

970.

மனத்தில் நினைக்கின்ற முற்றின சூதான எண்ணங்களையே கொண்டவர்கள், ஆரவாரம் (அமர்க்களங்களைச்) செய்யும் பேயன்ன விகாரத்தினர்கள், (மதபலம்) ஆணவ பலத்தை–அகங்காரத்தை நாள்தோறும் (பாரி) பாரிக்கின்ற — விரித்துக் காட்டுகின்ற மாதர்கள் அழகாக—

(கை)யில் வளையல், (காதிற்) குழைகள், (மார்பில்) முத்துமாலை இவைகளைப் பூணும் வீணிகள் (வீண்பொழுது போக்குபவர்கள்), (விழலிகள்) பயனற்றவர்கள், மெச்சப் படுதலில் ஆசைபூண்டு ஆடுபவர்கள் பாடுபவர்கள், வருவதற்கு மிக்க வெட்கம் கொண்டவர்கள் போல ஓடுபவர்கள், தெருவிலே

'வானிகூடல்' எனப் பெயர். "குடகில் வருங் காவிரி புகு வானிக் கொழு நாடு"—அவிநாசிப் புராணம். கல்வெட்டுக்களில் 'திருவானி கூடல்' எனும் பெயர் வருகின்றது. (செந்தமிழ்ச் செல்வி-சிலம்பு 13 —பரல் 5-பக்கம் 239 ; (பவ-மார்கழி ;)

[தொடர்ச்சி 808 ஆம் பக்கம் பார்க்க]

குனகிகள் பக்ஷம் போல பேசிகள்
தனகிக ளிச்சம் பேசி கூசிகள்
குசலிகள் வர்க்கஞ் சூறை காரிகள் பொருளாசைக்-

கொளுவிக ளிஷ்டம் பாறி வீழ்பட
அருளமு தத்தின் சேரு மோர்வழி
குறிதனி லுய்த்துன் பாத மேறிட அருள்தாராய்;

தனதன தத்தந் தான தானன
டுடுடுடு டுட்டுண் டூடு டூடுடு
தகுதிகு தத்தந் தீத தோதக எனபேரி-

தவில்முர சத்தந் தாரை பூரிகை
வளை துடி பொற்கொம் பார சூரரை
சமர் தனில் முற்றும் பாறி நூறிட விடும்வேலா;

தினைவன நித்தங் காவ லாளியள்
நகைமுறை முத்தின் பாவை மான்மகள்
திகழ்பெற நித்தங் கூடி யாடிய முருகோனே-

திரிபுர நக்கன் பாதி மாதுறை
யழகிய *சொக்கன் காதி லோர்பொருள்
செலவரு ளித்தென் கூடல் மேவிய பெருமாளே. (கக)

[807 ஆம் பக்கத் தொடர்ச்சி]

‡ பூதத்தயவு :—'எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள் செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பதென்னாளோ' தாயுமானவர்.

x போதை — பேரறிவு. 'போதையார் பொற்கிண்ணத் தடிசில்' சம்பந்தர்—3-24-2.

o 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'—அப்பர் 6-38-1. 'ஓசை—அனர்த்த சத்தம்; ஒலி—அர்த்த சத்தம்' என்பர்.

---

* சிவபிரானுக்கு உபதேசித்தது :
—பாடல் 327-பக்கம் 314-கீழ்க்குறிப்பு.

கொஞ்சிப் பேசுபவர்கள், அன்பு கொண்டவர்கள் போலப் பேசுபவர்கள், (தனகிகள்) சரசஞ் செய்பவர்கள் (அல்லது) சண்டையிடுபவர்கள், (இச்சம்) இச்சை—தங்கள் விருப்பத்தைப் பேசிக் கூச்சம் கொள்பவர்கள்—(அல்லது—விருப்பமான வார்த்தைகளைப் பேசிக் கூசுபவர்கள்—நாணம் கொள்பவர்கள்) ; (குசலிகள்) தந்திரம் உள்ளவர்கள் (வர்க்கம்) பிசாசு அனையவர்கள், கொள்ளைக் காரிகள், பொருளாசை .

கொண்டவர்கள்-(இத்தகைய வேசையர்மீது) எனக்கு உள்ள ஆசை சிதறுண்டு விழுந்து தொலையவும், உனது திருவருளாம் அமுதத்தைச் சேரும்—பருகும்படியான ஒரு வழியைக் காட்டும் அடையாளத்தில் எலனேச் சேர்ப்பித்து உனது திருவடியைக் கூடுதற்குத் திருவருளைத் தந்தருளுக;

தனதன தத்தந் தான தானன...தகுதிகு தத்தம் தீத தோதக என்று பேரி (பறை)

(தவில்) மேளவகை, (முரசு) போர்ப்பறை, சத்தம் ஒலி செய்யும் (தாரை) நீண்ட ஊதுங்குழல், (பூரிகை) ஊதுகுழல், (வளை) சங்கு, (துடி) உடுக்கை, (பொற் கொம்பு) பொலிவுள்ள ஊது கொம்பு—இவையெலாம் (ஆர) நிறைந்து ஒலிசெய, சூரராம் அசுரர்களைப் போரில் யாவரும் சிதறுண்டு அழிந்து பொடிபடச் செலுத்தின வேலனே!

தினைப் புனத்தை நாள்தோறும் காவல் செய்து கொண்டிருந்தவள், பற்களின் (முறை) வரிசை முத்துப் போல உள்ள பதுமை போன்ற அழகி, மானின் வயிற்றிற் பிறந்தவள்—ஆகிய—வள்ளி—விளக்கம்பெற நாள்தோறும் அவளுடன் கூடி விளையாடின (முருகனே) இளைஞனே!

முப்புரங்களை எரித்த (நக்கன்) நிர்வாணி, பாதி பாகத்தில்—இடது பாதியில் மாது—பார்வதிதேவி உறைகின்ற அழகிய சொக்கன் (சொக்கநாதப் பெருமான்) ஆகிய சிவனது காதில் ஒப்பற்ற (பிரணவப்) பொருளைப் புகும்படி ஓதி அருளித் (தென்) மதுராபுரியில் வீற்றிருக்கும் பெருமாளே!

(பாதமேறிட அருள் தர்ராய்)

971. சிவம் பெற

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தனதான

*முத்துநவ ரத்நமணி பத்திநிறை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு வெனவோதும்-
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
†முப்பதுமு வர்க்கசுர ரடிபேணி;
பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி
‡பற்குனனை வெற்றிபெற ரதமூரும்-
பச்சைநிற முற்றபுய லச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே;
தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்த்ததென தெனஞன-
திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை யெனஆடும்;
xஅத்தனுட னொத்தநட நித்ரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா-

---

* இந்த 971-ஆம் பாடலின் முதல் நாலடிகளின் கருத்து 'முத்தைத்தரு பத்தித் திருநகை' எனத் துவக்கும் முதற் பாடலின் முதல் நாலடியின் கருத்தை ஒருவாறு தழுவும்.

† முப்பத்து மூன்று வகைத் தேவர்கள்:
"நால் வேறியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்"—என வரும் திருமுருகாற்றுப்படை உரையில்—ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவன்என நான்குகூறாய்ப் பகுக்குங்கால்,ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர்—ஆக முப்பத்து மூவராயினர்—எனவிளக்கம் தரப்பட்டுளது.

‡ பற்குனனை—பற்குனன்: அருச்சுனன். அருச்சுனனுக்குத் திருமால் தேர்ச் சாரதியானது—பாடல் 229-பக்கம் 72-குறிப்பு ‡

x அத்தனுடன் ஒத்த நடனி:
"அணங்கினொ டாடல் புரி எந்தை"—
"இணைபிணை நோக்கி நல்லாளோ டாடும் இயல்பினராகி"
—சம்பந்தர் 1-133-1; 3-101-6.

971.

முத்தும், நவரத்ன மணிகளும் வரிசையாக நிறைந்து விளங்கும் (சத்தி) பார்வதி தேவி தமது இடது பாகத்தில் நெருங்கியுள்ள (கிரி) மலையன்ன சிவன், முத்திக் கனியை அளிக்கும் (தரு) விருக்ஷம், என்றெல்லாம் சிறப்பித்து ஓதப்படும் — (அல்லது — முத்தும், நவரத்ன மணிகளும் வரிசையாய் நிறைந்துள்ள (சத்தி) — கிரியாசக்தியாம் தேவசேனை இடதுபாகத்தில் விளங்க நின்றமலையே! முத்திக் கனியைத்தரும் கற்பக விருக்ஷமே! என்று ஓதிப்பணிந்த)—

முக்கண் மூர்த்திக்கும் அருள் பாலித்து உபதேசித்த முருகக் கடவுளே! முப்பத்து மூன்று வகையான தேவர்களாலும் திருவடி விரும்பிப் போற்றப் படுபவனே! (அல்லது—முப்பத்து மூன்று வகைத் தேவர்களும் தமது திருவடியைப் பேணி—பேண—போற்றி விரும்ப)

(ராவணனுடைய) பத்துத் தலைகளும் சிதறுண்ணும்படி தமதிடமிருந்த அம்பைச் செலுத்தின அரி (திருமால் அல்லது பகைவன்), அருச்சுனன் ஜெயம்பெறும் வகையில் அவனது தேரைச் செலுத்தின—

பச்சைநிறம் கொண்ட மேகநிறப் பெருமான்—ஆகிய திருமால் (சூரன்—அவன் தம்பியர் சிங்கமுகன், தாரகன் இவர்களிடத்தில்) வைத்திருந்த பயத்தை நீங்கவைத்த—நீக்கின (பொருள்) கடவுளே! பக்தர்கள் மனத்தில் பொருந்தி விளங்கும் சிவமே! அருள்வாயே! (அல்லது) (சிவம்) மங்களகரத்தை—மங்கலத்தை அருளுவாயே!

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு...... தெய்த்ததெ தன தெய்த்ததெ தன தெனனுன—

திக்குவென — திக்கு என்று மத்தளம், (இடக்கை) இடது கையால் அடிக்கப்படும் ஒரு தோற்கருவி, (துடி) உடுக்கை இவையெலாம் தத்தகுகு செச்சரிகை செச்சரிகை என்று ஒலிக்க, நடனமாடும்

பெரியோன் சிவனுடன் அவரது நடனத்துக்கு ஒத்ததான (நடமி) நடனத்தைப் புரிபவள், (த்ரிபுவனத்தி) மூன்று லோகங்களையும் ஈன்றவள் (மூன்று லோகங்களுக்கும் முதல்வி), (நவசித்தி) புதுமையான — அற்புதகரமான சித்திகளை — வரப் ப்ரசாதங்களை அருள்பவள் ஆகிய (சத்தி) தேவி ஈன்றருளிய குழந்தையே!

*அற்பவிடை †தற்பமது முற்றுநிலை பெற்றுவள
‡ரற்xகனக பத்மபுரி பெருமாளே. (கஉ)

ஸ்ரீ புருஷமங்கை.

[இது 'நாங்குநேரி' என வழங்கும். திருநெல்வேலியி லிருந்து தெற்கே 19-மைல்.] வானமாமலை, 'தோதாத்ரி' எனவும் இத் தலத்துக்குப் பெயர் உண்டு. சிரீவரமங்கை—என்பது இத் தலத்தில் எழுந்தருளியுள்ள நாச்சியாரின் திருநாமத்தால் வந்த பெயர். நம்மாழ்வார் மங்களா சாஸநம்.

972. பரம் பொருளை உணர

¶தானதன தந்த தந்தன
தானதன தந்த தந்தன
தானதன தந்த தந்தன தனதான

ஆடல்மத னம்பின் மங்கைய
ராலவிழி யின்பி றங்கொளி
யாரமத லம்பு கொங்கையின் மயலாகி-
○ஆதிகுரு வின்ப தங்களை
நீதியுட னன்பு டன்பணி
யாமல்மன நைந்து நொந்துட லழியாதே ;
**வேடரென நின்ற ஐம்புல
னுலுகர ணங்க ளின்தொழில்
††வேறுபட நின்று ணர்ந்தருள் பெறுமாறென்-

---

* அற்ப இடை—நுண்ணிய இடையையுடைய மாதர்கள்.
† தற்பம்—மெத்தைவீடு. ‡ அல்—மதில்.
x கனக பத்மம்—பொற் றாமரை.

இத் தீர்த்தத்தின் பெருமை: இத் தீர்த்தம் மதுரைத் திருக்கோயிலுள் உள்ளது. "எண்டிசைய நதி வாவி வடிவான மா தீர்த்தம் எல்லாம் இப் பொற், புண்டரிக தடத்தில் ஒருகோடியிலோர் கூறு நிகர் போதா ஈது, கண்டசனல் அறம், தீண்டப் பெற்றதனல் நற்பொருள், அங்கையால் அள்ளிக், கொண்டதனல் இன்ப நலம், குடைந்தசனற் பேரின்பம் கொடுக்கு மன்றே"-திருவிளை-தீர்த்த 32.

"எண்ணில் பெரும் பாவம் இமைப்பளவில் நீக்குவிக்கும்
புண்ணியநன் னீர்பொலியும் பொற்றாமரை"
—திருவாலவாய்-புராணம் 27-23.

[தொடர்ச்சி 813 ஆம் பக்கம் பார்க்க]

நுண்ணிய இடையை உடைய மாதர்களின் மெத்தை வீடுகள் எல்லாம் நிலை பெற்றனவாய் உயர்ந்த மதில்களுடன் விளங்குகின்றதும் — பொற்றாமரைக் (குளம்) விளங்குகின்றதுமான (அல்லது நுண்ணிய இடை மாதர்கள் மெத்தை வீடுகளில் எல்லாம் நிலையாக வாழ்ந் தோங்குகின்றதும், மதில்கள் சூழ்ந்துள்ளதும், பொற்றாமரைக் குளம் விளங்குவதுமான) (புரி) பட்டணமாம் மதுரையில் (வீற்றிருக்கும்) பெருமாளே! (சிவம் அருள்வாயே)

ஸ்ரீ புருஷமங்கை
972.

போர்க்கெழுந்த மன்மதனது (மலர்ப்) பாணங்களாலும், மாதர்களின் விஷம் கொண்ட கண்களாலும், (அல்லது) மங்கையர்—மாதர்களுடைய, ஆடல் மதன் அம்பின் போர்க்கெழுந்த மன்மதனுடைய அம்பு போன்றதும், விஷம் கொண்டதுமான (விழியின்) கண்களாலும்), விளக்கம் கொண்டு பிரகாசிப்பதும், (ஆரம் அது அலம்பு) முத்துமாலை (அலம்பு) அசைவதுமான கொங்கையாலும் (நான்) மோகம் கொண்டவனாகி—

ஆதிகுரு—ஆதியாகிய சிவபிரானுக்கும் குருவாகிய (உனது) திருவடிகளை (அல்லது முதற்குருவாம் சிவனது, அல்லது குலமுதற் குருவின்-திருவடியை) உண்மையுடனும்-அன்புடனும் ஒழுக்க நெறியில்—(மெய்யன்புடன்) பணிந்து வழிபடாமல், மனம் சோர்வடைந்து வருந்தி, என் உடல் அழிவுறாமல்—

வேடர்கள் போல நிற்கும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம்) எனப்படும் ஐவகை உணர்ச்சிகளின் செய்கைகளும், (மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படும்) நான்கு கரணங்களின் செய்கைகளும் (வேறுபட நின்று)—என்னைத் தாக்குறுவகையில் நான் வேறுபட்டு நின்று (உன்னை) உணர்ந்து (உனது) திருவருளைப் பெறுமாறு, என்னுடைய

o "ஆதி, ஆதிப்பிரான், ஆதியாய அடிகள்"—(சிவன்)
—சம்பந்தர் 1-3-6, 2-10-7, 1-135-3.

oo 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை'— சிவஞானபோதம் 8-சூத்திரம்.

†† "உடலம் வேறு, யான் வேறு, கரணம் வேறு வேறாக உதறி"—
திருப்புகழ் 1047.

வேடைகெட வந்து சிந்தனை
மாயையற வென்று துன்றிய
வேதமுடி வின்ப ரம்பெரு — ளருள்வாயே ;

*தாடகையு ரங்க டிந்தொளிர்
மாமுனிம கஞ்சி றந்தொரு
தாழ்வறந டந்து திண்சிலை — முறியாவொண்-

ஜாநகித னங்க லந்தபின்
†ஊரில்மகு டங்க டந்தொரு
தாயர்வ சனஞ்சி றந்தவன் — மருகோனே ;

‡சேடன்முடி யுங்க லங்கிட
xவாடைமுழு தும்ப ரந்தெழ
தேவர்களம கிழ்ந்து பொங்கிட — நடமாடுஞ்-

சீர்மயில மஞ்சு துஞ்சிய
○சோலைவளர் **செம்பொ னுந்திய
ஸ்ரீபுருட மங்கை தங்கிய — பெருமாளே. (க)

---

* தாடகையைக் கடிந்தது, யாகத்தைப் புரந்தது, வில்லைமுறித்தது, சீதையை மணந்தது—பாடல் 431-பக்கம் 582 கீழ்க்குறிப்பு.

† தாய் சொற்படி மகுடம் துறந்தது : பரதனே ஆளவேண்டும், நீ பதினன்கு வருடம் காட்டிற் காலம் கழிக்க வேண்டும், இது அரசன் சொன்னது என்று கைகேயி ஸ்ரீ ராமருக்கு உரைத்தபோது, அவ் வாசகத்தைக் கேட்ட ஸ்ரீ ராமரின் திருமுகம் — 'அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா' என்றார் கம்பர். (கைகேசி சூழ் 108). 'தாயே! அரசன் பணியே இல்லாது உன் பணியா யிருந்தாலும் நான் மறுப்பனோ' என்றாராம் ஸ்ரீ ராமர் :—

"மன்னவன் பணியன் றாகி னும்பணி மறுப்ப னோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னினி யுறுதி யப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும்
கொண்டேன். (கம்பராமா-கைகேசி சூழ் 110).

‡ மயில் நடமாட சேடன்முடி கலங்குவது :
"சேடன்முடி திண்டாட ஆடல்புரி...மயில்"-மயில் விருத்தம் 2.

x மயிலின் வேகத்தால் காற்று பரவுதல்
"வாசி விசை கொண்ட வாகனப் பீலியின் கொத்து
அசைபடு கால் பட்டசைந்தது மேரு" —கந்தரலங்-11.

(தொடர்ச்சி 815-ஆம் பக்கம் பார்க்க)

[வேடை கெடவந்து] ஆசைகள் எல்லாம் அற்றுப் போம்படி, [வந்து சிந்தனை] நீ என் எண்ணத்தே வந்து கலந்து, [எனக்குள்ள] மாயை அற—மாயா சக்திகள் ஒடுங்கும்படி—மயக்க அறிவு நீங்க—[என்று] எப்போது—பொருந்தியுள்ள வேதங்களின் முடிவில் விளங்கும் பரம் பொருளை அருளுவாய் [உபதேசிப்பாய்]! [அல்லது ஆசைகள் அழியும்படி வந்து, [எனது] எண்ணங்களில் உள்ள [மாயை] வஞ்சனை, பொய் இவைகள் அழியும்படி வென்று—ஜெயித்துப், பொருந்திய வேதமுடிவில் உள்ள பரம்பொருளை [உதவி] அருள்வாயாக,

தாடகை என்னும் அரக்கியின் [உரம்] வலிமையைக் [கடிந்து] அழித்து, விளங்கிநின்ற பெருமை கொண்ட முநி — விசுவாமித்திர முநிவரின் யாகத்தைச் சிறப்புற்று விளங்கவைத்து, ஒருவித [தாழ்வும்] குறையும் இல்லாத வகையில் நடந்து, [மிதிலையில்—சனகராஜன் முன்னிலையில் வலிய வில்லை முறித்து, [ஒண்] இயற்கை அழகு பெற்ற—

[ஜானகி] ஜனகமகாராஜன் மகளாம் சீதையின் கொங்கையை அணைந்த பின்னர் [திருமணத்துக்குப் பின்பு] [ஊரில்] அயோத்தியில் ராஜமகுடத்தை—பட்டாபிஷேகத்தைத் துறந்து, ஒப்பற்ற தாய் [கைகேயியின்] சொற்படி நடந்த சிறப்பைக் கொண்டவரான [ஸ்ரீ ராமரின்] திருமாலின் மருகனே!

ஆதிசேடனுடைய முடிகளும் கலக்கம் கொள்ள, [வாடை] காற்று எங்கும் பரவி வீசத், தேவர்களுக்குக் களிப்பு மேற்கிளர்ந்து எழ, நடனத்தை செய்யும்

அழகிய பெருமைவாய்ந்த மயில் வாகனனே! மேகங்கள் படிந்துள்ள சோலைகள் விளங்குவதும், செவ்விய [பொன்] செல்வம் [பொலிவு] பெருகி நிற்பதுவுமான **ஸ்ரீ புருட மங்கை** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! அல்லது, [சோலைவளர் பெருமாளே] சோலைமலையில் — பழமுதிர் சோலையில் வீற்றிருக்கும் பெருமாளே! செம்பொன்னிறம் [உந்திய] விளங்கும் பெருமாளே! ஸ்ரீ புருடமங்கை தங்கிய பெருமாளே!] [பரம்பொருள் அருள்வாயே]

---

o சோலை—சோலைமலை—பாடல் 938-கீழ்க்குறிப்பு.

oo முருகவேள்—செம்பொன் நிறம்—பாடல் 950-கீழ்க்குறிப்பு.

973. மாதர் மீதுள்ள மயக்கு அற

தானதன தந்த தந்த தானதன தந்த தந்த
தானதன தந்த தந்த தனதான

கார்குழல்கு லைந்த லைந்து வார்குழையி சைந்த சைந்து
காதலுறு சிந்தை யுந்து மடமாதர்-

காமுகர கங்க லங்க போர்மருவ முந்தி வந்த
காழ்கடிய கும்ப தம்ப இருகோடார்;

பேர்மருவு மந்தி தந்தி வாரணஅ னங்க னங்க
பேதையர்கள் தங்கள் கண்கள் வலையாலே-

பேரறிவு குந்து நொந்து காதலில லைந்த சிந்தை
பீடையற வந்து நின்ற னருள்தாராய்;

ஏர்மருவு *தண்டை கொண்ட தாளசைய வந்த கந்த
ஏகமயி லங்க துங்க வடிவேலா-

†ஏமனுமை மைந்த ‡சந்தி சேவலணி கொண்டு அண்டர்
ஈடெறஇ ருந்த செந்தில் நகர்வாழ்வே;

தேருகள்மி குந்த சந்தி வீதிகள ணிந்த கெந்த
சீரலர்கு ளுந்து யர்ந்த xபொழிலோடே-

---

* தண்டைத்தாள் அசைய வந்த கந்த — இது அருணகிரி யாருடைய வரலாற்றைக் குறிக்கும்
–(பாடல் 331, 916, 513, 515, 289 முதலியன பார்க்க)

† 'ஏ விளங்கும் நுதல்...பாகம் ** மேவிய புண்ணியரே'; 'ஏவார் மலை'—ஏ—பெருமை—சம்பந்தர் 1-117-3; 2-62-2.

‡ சந்தித்த சேவல்—"மாறிவரு சேவற் பகையைத் திறல்சேர்
பதாகையென மேவத் தனித்துயர்த்த மேலோனே"
—கந்தர்கலி வெண்பா.

"சேவலோடு பிணிமுக வுருவாய் வந்து பெருந்தகை
முன்னம் புக்கான்" —கந்தபுராணம் 4-13-493.

x "தேன மாம்பொழில் தண் சிரீவர மங்கலத்தவர்"
—திருவாய்மொழி 5-7-6. சீபுருட மங்கையானது சிரீவர மங்கை, சிரீவர மங்கை நகர் எனப்படும்.

973.

மேகம் போன்ற கூந்தல் கலைந்து அலைவதாலும், நீண்ட குழை அதற்கு ஒக்கவே அசைவுறுவதாலும், காம இச்சை கொண்ட [சிநதை] எண்ணத்தை மேலெழுப்பும் இளம் பெண்கள்—

[காமுகர்] காம இச்சை கொண்ட ஆண்களின் உள்ளம் கலங்கும்படிச் சண்டை யிடுவதற்கு முந்தி வந்ததுபோல முன்னே எதிர்ப்பட்டு வருவதும், வயிரம் [உறுதியும்] கடினமும் கொண்ட குடம்போலவும், [தப்பா] யானைத்தறி [அல்லது கவசம்] போலவும் உள்ள இரண்டு மலையன்ன கொங்கைகளை உடையவர்கள்

பேர் கூறப்புகின், மந்தி [அவர் தம் சேஷ்டையால்] பெண்குரங்கு, தந்தி [அவர் தம் விஷக் குணத்தால்] பாம்பு, வாரணம் [அவர் தம மதம்—ஆணவத்தால்] யானை என்னத் தக்கவர்கள், [அனங்கன்] மன்மதனுக்கு [அங்கம்] *படையாய்] உறுப்பு உள்ள பேதையர்கள் — மாதர்கள் — இத்தகையோரின் கண்கள் என்னும் வலையாலே

சிறந்த என் அறிவு [உகுந்து] சிதறிப்போய், மனம் நொந்து, காம இச்சையில் அலைப்பு உண்ட மனத்தின் [பிடை அற] துன்பம் அற்று ஒழிய, நீ வந்து உன்னுடைய திருவருளைத் தந்தருளுக;

அழகு பொருந்திய தண்டையை அணிந்த திருவடி அசைய [என்] எதிர் வந்த கந்தனே! [ஏக மயில்] ஒப்பற்ற [சூரனும்] ஒரு மயிலை [அங்க] அடையாளமாக—[அல்லது வாகன] உறுப்பாகக் கொண்டவனே! பரிசுத்தமும் கூர்மையும் கொண்ட வேலனே!

(ஏமன் உமை) பெருமை பொருந்திய உமாதேவியின் பிள்ளையே! (சந்தி) சூரனது இருகூறில் ஒன்ருய் (உன்னைச்) சந்தித்த கோழியை(அணி)கொடியாகக்கொண்டு, தேவர்கள் ஈடேற வீற்றிருந்த செந்தில் நகர்ச் செல்வனே!

தேர்கள் நிரம்பின (தெருக்கள்) கூடும் சந்தி இடங்களமைந்த வீதிகளைக் கொண்டதும், நறுமணம் கொண்ட சிறந்த (அலர்) மலர்கள் (குளுந்து) குளிர்ச்சியுடன் மேம்பட்டு விளங்கும் சோலைகளுடனே—

---

* மன்மதனுக்குப் படை-மகளிர்-பாடல் 952-பக்கம் 765 குறிப்பு.

சேரவெ யிலங்கு துங்க வாவிக ளிசைந்தி ருந்த
ஸ்ரீ புருட மங்கை தங்கு பெருமாளே. (உ)

974. கதி பெற

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான

வேனின்மத *ஐந்து பாணம்விட நொந்து
வீதிதொறு நின்ற மடவார்பால்-
வேளையென வந்து தாளினில் விழுந்து
வேடைகெட நண்பு பலபேசித் ;
தேனினு மணந்த வாயமுத முண்டு
சீதள தனங்க ளினின்மூழ்கித்-
தேடிய தனங்கள் பாழ்பட முயன்று
†சேர்கதிய தின்றி யுழல்வேனோ ;
‡ஆனிரை துரந்து xமாநில மளந்தொ
oராலிலையி லன்று துயில்மாயன்-
**ஆயர்மனை சென்று பால்தயி ரளைந்த
ஆரண முகுந்தன் மருகோனே ;
††வானவர் புகழ்ந்த கானவர் பயந்த
மானொடு விளங்கு மணிமார்பா-

---

* ஐந்து பாணம்—பாடல் 19-பக்கம் 60 கீழ்க்குறிப்பு.
† 'சேர்கதி யகன்று திரிவேனோ';—என்றும் பாடம்.
‡ ஆனிரை துரந்தது. "ஆனிரை மேய்க்க நீ போதி"
—பெரியாழ்வார் 2-7-1; இது கண்ணபிரான் ஆனிரை மேய்த்ததைக் குறிக்கும்.
x மாநிலம் அளந்தது—பாடல் 268-பக்கம் 166 கீழ்க்குறிப்பு ‡
o ஆலிலையில் துயில்வது :
"ஆலத் திலையான் அரவின் அணை மேலான்
நீலக் கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான்"
—பெரியாழ்வார் 2-6-6.
** ஆயர் மனையில் பால்தயிர் அளைந்தது-பாடல் 362-அடி 5 பார்க்க.
†† வானவர் புகழ்ந்த கானவர் :
[வேடரிடத்தே வளர்ந்த வள்ளியை முருகவேள் தாமே சென்று வலிய ஆட்கொண்டு மணஞ்செய்யும் கோலத்தைக் கண்ட தேவேந்திரன் 'என்னே இந்த வேடராஜன் செய்த புண்ணியம்' என்று வியந்து புகழ்ந்தான்.]

[தொடர்ச்சி 819 ஆம் பக்கம் பார்க்க]

ஒரு சேரவே — பொருந்தி விளங்கும் பரிசுத்தமான தடாகங்கள் பொருந்தியுள்ள ஸ்ரீ புருஷமங்கையில் வீற்றிருக்கும் பெருமாளே! (நின்றன் அருள் தாராய்)

974.

(வேனின் மதன்)—வேனிலான்—மன்மதன் தனது மலர்ப் பாணங்கள் ஐந்தையும் செலுத்த, மனம் வேதனை அடைந்து வீதிகள் தோறும் நின்றுள்ள மாதர்களிடத்தே

இதுவே சமயம் என்று வந்து அவர்கள் காலில் விழுந்து, ஆசைதீர நட்பான பல பேச்சுக்களைப் பேசித்

தேனைவிட அதிக நறுமணம்—நறுஞ்சுவை கொண்ட வாயிதழ் அமுத ஊறலைப் பருகி, (அம் மாதர்களின்) தண்ணிய கொங்கைகளில் முழுகித்

தேடின பொருள் எல்லாம் அழிய, முயற்சி செய்து, அடையவேண்டிய கதியை (மோக்ஷ வீட்டை) அடைதலில்லாமல் (வீணாக) அலைந்து திரிவேனோ!

பசுக் கூட்டங்களைத் (தூரந்து) ஓட்டிச் செலுத்தியும், பெரிய பூமியைத் (திருவடி கொண்டு) அளந்தும், ஒரு ஆலிலையில் (ஊழி) அன்று துயில் கொண்டவனுமான மாயன்,

இடையர் வீடுகளிற் போய்ப் பாலையும் தயிரையும் (அளைந்த) கலந்து பருகின—வேதம் (போற்றும்) முகுந்தன்—ஆகிய திருமாலின் மருகனே!

வானவர் புகழ்ந்த மானொடு — கானவர் பயந்த மானொடு—தேவர்கள் புகழ்ந்து போற்றிய மான்—தேவசேனையுடனும், வேடர்கள் மகளாய் வளர்த்த மான் — வள்ளியுடனும்—விளங்கும் அழகிய மார்பனே! (அல்லது வானவர் — தேவர்களும் புகழ்ந்த—'என்னே! இந்த வேடர்களின் பாக்கியம்' என்று ஆச்சரியத்துடன் புகழ்ந்த—வேடர்களின் மகளாய் வளர்ந்த—வள்ளியுடன் விளங்கும் அழகிய மார்பனே!

(தொடர்ச்சி): "எத்துணை யறங்கள் சால ஈட்டினன் வேடர் கோமான்
பத்தியிற் பலநாள் தாழ்ந்தென் பாவையை யளிப்ப வற்ற
உத்தமன் தானே அண்மி ஒளியில ஞகித் தாழ்ந்து
புத்திரி செங்கை பற்ற என்றனன் புலவர் கோமான்"

[தொடர்ச்சி 820 ஆம் பக்கம் பார்க்க.]

*மாமறை முழங்கு ஸ்ரீபுருட மங்கை
மாநக ரமர்ந்த பெருமாளே. (௩)

இலஞ்சி.

[இது தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 3½-மைல் தூரத்தி லுள்ள 'குற்றாலம்' என்னும் ஸ்தலத்துக்குச் சமீபத்தி லுள்ளது. இத் தலத்துத் தல விருக்ஷம் இலஞ்சி—மகிழமரம்]. 'திரு இலஞ்சி முருகன் உலா' அச் சேறி யுள்ளது. குற்றாலத்தில் இருந்த திருமாலின் ஆலயம் திருமுற்றம் எனப்படும். அகத்தியர் அங்குச் செல்ல அவரைக் கண்ட வைணவர்கள் அவரை அங்கு வர ஒட்டாது வெருட்டினர். அகத்தியர் இந் நிகழ்ச்சியை இலஞ்சி முருகனிடம் விண்ணப்பிக்க அவர் ஓதிக் கொடுத்த தந்திரப்படி வைணவ வேடம் பூண்டு அகத்தியர் சென்று குற்றாலத்தில் இருந்த திருமாலைக் குறுகு குறுகு என்று கூறி † மகா லிங்கமாக்கினர். (கந்த புராணம் 2-28).

975. யமன் வராதொழிய நீ வருக

தனந்த தனதன தனந்த தனதன
தனந்த தனதன தனதான

கரங்க மலமின தரம்ப வளம்வளை
களம்ப கழிவிழி மொழிபாகு-
கரும்ப முதுமுலை குரும்பை ‡குருகுப
கரும்பி டியினடை யெயின்மாதோ';

[819 ஆம் பக்கத் தொடர்ச்சி]

(தொடர்ச்சி) [திருமாலும் வேடராஜனை வியந்து "மாதவன் என்று எனக்குப் பேரே ஒழிய மாதவம் ஒன்றும் எனக்கு இல்லை; உண்மையான மாதவன் இந்திரனே; இந்திரனிலும் பெரிய மாதவன் இந்த வேடராஜன்" எனப் புகழ்ந்தார்.]

"மாதவன் எனும் பேரல்லால் மாதவம் ஈங்கொன் றில்லை
மாதவன் புலவர் கோமான்; மற்றவன் தன்னிற் சால
மாதவன் புளினர் கோமான்° என்றனன் மதுவை அட்டோன்"

[புலவர் கோமான் — இந்திரன்; புளினர் கோமான் — வேடராஜன்; மதுவை அட்டோன்—திருமால்].

—தணிகைப் புராணம் வள்ளி திருமண 176-177.

° "தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர் வாழ் சிரீவர மங்கல நகர்", 'வேத வேள்வியருச் சிரீவர மங்கலநகர்', திருநான் மறைகள் வல்லார் மலிதண் சிரீவர மங்கை"—திருவாய்மொழி 5-7-3, 4, 7, 9.

[தொடர்ச்சி 821 ஆம் பக்கம் பார்க்க]

பெருமை வாய்ந்த வேதங்கள் ஒலிக்கின்ற (வேத ஒலி முழங்கும் **ஸ்ரீ புருட மங்கை** என்னும் மகா நகரத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(சேர் கதியதின்றி உழல்வேனோ)

இலஞ்சி

975.

திருக்கரம் — (கமலப்) தாமரைக்கு நிகராகும்; மின் அதரம்—ஒளி பொருந்திய வாயிதழ் பவளத்துக்கு ஒப்பாகும்; வளை—சங்குக்கு ஒப்பாகும் (களம்) கழுத்து; பகழி—அம்புக்கு ஒப்பாகும் கண்; மொழி—சர்க்கரை,

கரும்பு, அமுது (இவைகளுக்கு ஒப்பாகும்); கொங்கை—தென்னங்குரும்பைக்கு ஒப்பாகும்; (குருகு) இளமை (பகரும்) விளங்கும் (பிடி) பெண் யானையின் நடைக்கு (அல்லது (குருகு) பறவைகளில் அன்னம், (பகரும்) சொல்லப்படும் (பிடி) பெணயானை—இவைகளின நடைக்கு) நிகராகும் நடை; (இத்தகைய) வேடர்மாது—வள்ளியின்

---

† திருமாலை லிங்கமாக்கினது :

"குருவா யகத்தியர் உன்னைப் பணிந்திடக்
கூடும் வைணவர் நாணவே
குளிர்சித்தி ராநதிக் குற்றால மாகுதிரி
கூடாச லப்பதிக்குள்
மருவார் துழாய் மௌலி யுஞ்சங்கு சக்கரமும்
மணிவண்ண முங்காணவே
வளர்நெடிய மால்வடிவு குறுகு குறு கென்றே
மகாலிங்க வடிவ மாக்கிப்
பெருவான மதிநதி முடிக்குஞ் சடாடவிப்
பெம்மானை யம்மானிடம்
பிரியாத எந்தைதனை யைந்தான னத்தனைப்
பெருமானை அர்ச்சியென்றே
திருவாய் மலர்ந்தருள்செய் தென்னிலஞ் சிக்குமர!
செங்கீரை யாடி யருளே.
சிறியனேன் அறிவினுட் குடிகொண்ட தெய்வமே!
செங்கீரை யாடி யருளே.
(க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்)

‡ குருகு—குருத்து, இளமை—(சூடாமணி) 'சிங்கக் குருகு'—சிங்கக்குட்டி.

டரங்க நககன தனங்கு தலையிசை
யலங்க *நியமுற மயில்மீதே-
அமர்ந்து பவவினை களைந்து வருகொடி
யவந்த கனகல வருவாயே ;
தரங்க முதியம கரம்பொ ருததிரை
†சலந்தி நதிகும ரெனவான-
தலம்ப ரவ‡மறை புலம்ப வருசிறு
சதங்கை யடிதொழு பவராழி ;
இரங்கு xதொலை திரு வரங்கர் மருக oப
னிரண்டு புயமலை கிழவோனே-
இலங்கு தரதமிழ் விளங்க வருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே. (க)

976. திருவடியைப் பெற

தந்தன தான தனந்தன தானத்
தந்தன தான தனந்தன தானத்
தந்தன தான தனந்தன தானத் தனதான

**கொந்தள வோலை குலுங்கிட வாளிச்
சங்குட ஞழி கழன்றிட மேகக்
கொண்டைகள் மாலை சரிந்திட வர்சப் பனிநீர்சேர்-

---

* நிய(ம)ம்—இடைக்குறை—நிச்சயம்—பிங்கலம்.

† 'சலதி'—சந்தம் நோக்கி 'சலந்தி' என ஆயிற்று.
சலதிநதி—கடல் போலும் கங்கை—என்றூர்—
'ஆழ்கடல் எனக் கங்கை', 'திரைக் கங்கை வெள்ளம்'
—சம்பந்தர் 1-57-4 ; 3-106-1.

‡ சதங்கை—மறை ஒலி ஒலிப்பது—"மறை சதுர் விதந்
தெரிந்து வகைசிறு சதங்கை கொஞ்சு மலரடி"
—திருப்புகழ் 50.

x தொலை—தொல்லை. 'தொல்லையஞ்சோதி'
—திருவாய்மொழி 8-2-6.

o 'பனிரண்டு புய' என்பதற்கு ஏற்பப்—
'பாடுந் திருப்புகழைப் பன்னிரண்டு நற்புயமும்
சூடுங் கருணைச் சுவாமி'
—என்றூர் திரு இலஞ்சி முருகன் உலாவில் (68).

** கொந்திள ஓலை—என்றிருத்தல் வேண்டும்
—பாடல் 632-பக்கம் 471-கீழ்க்குறிப்பு

(அரங்க நக கன தனம்) நக—கன—தனம் அரங்க (நகம்) மலைபோன்ற—கனத்த—கொங்கைகள் (நீ அணைந்து வருவதால்) அரங்க—அழுந்துதல் உற, குதலை இசை—மழலைச் சொல்போலவும் இன்னிசை கூடிய (அவ் வள்ளியின் மொழி) (அலங்க) அசைவுபெற — அசைவுற்று வெளிவர, (நியம் உற) நியமம் உற—நிச்சயமாகவே — திண்ணமாக, மயிலின் மேல்—(நீ)—

ஏறி வீற்றிருந்து (எனது) பிறப்பாகிய வினையை ஒழித்து, (என்னைப்பிடிக்க) வரும் (கொடிய அந்தகன் அகல) பொல்லாத யமன் என்னை அணுகாது நீங்கும்படி வந்தருளுவாயாக;

(தரங்க...நதி, முதிய மகரம் பொருத திரை சலந்தி நதி) (தரங்கம்) அலைகளைகொண்ட நதி (கங்கை), (முதிய) முற்றின மகரமீன்கள் சண்டையிட்டு விளையாடுவதும், (திரை) அலைகள் வீசுவதுமான (சலந்தி)—சலதி அல்லது சலநிதி போன்றதும், கடல் போன்றதுமான—நதி (ஆகிய) கங்கையின் குமரனே! (காங்கேயனே!) என்று வான (தலம்)–

வானுலகத்தவர்–விண்ணவர்–போற்றிப் பரவ, வேதம் ஒலி செய்து போற்ற, எழுந்தருளும் சிறிய கிண்கிணிகள் அணிந்துள்ள (உனது) திருவடிகளைத் தொழுபவரும், கடலிடையே

(இரங்கு) கருணையுடன் பள்ளி கொண்டுள்ள (தொல்லை) பழையவாரம் (திரு அரங்கர்) (சீரங்கத்துப் பெருமானும்) ஆகிய திருமாலின் மருகனே! பன்னிரண்டு திருப்புயங்களை உடையவனே! குறிஞ்சி நிலத்துக்கு உரியவனே [குறிஞ்சி வேந்தே]!

விளக்கம் பூண்டுள்ள தமிழ்மொழி விளங்க வந்த [சம்பந்தராய்த் தண்டமிழ் மொழிந்த] பெருமாளே! திரு இலஞ்சி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

[அந்தகன் அகல வருவாயே]

976.

(கொந்தள ஓலை) தலைமயிர்ச் சுருளின் கீழ்க் காதோலைகள் குலுங்கி அசைய, (வாளி) வாளி என்னும் காதணியும், (சங்கு) சங்கு வளையலும், (ஆழி) மோதிரமும் கழல, (கரு) மேகம் போன்ற கூந்தலில் உள்ள பூமாலை சரிய, நறுமணப் பன்னீர் சேர்ந்த—

கொங்கைகள் மார்பு குழைந்திட வாளிக்
கண்கயல் மேனி சிவந்திட கோவைக்
கொஞ்சிய வாயி ரசங்கொடு மோகக் கடலூடே ;

*சந்திர ஆர மழிந்திட நூலிற்
பங்கிடை யாடை துவண்டிட நேசத்
தந்திட மாலு ததும்பியு ழுழ்குற் றிடுபோதுன்-

†சந்திர மேனி முகங்களு நீலச்
‡சந்த்ரகி மேல்கொ டமர்ந்திடு பாதச்
xசந்திர வாகு **சதங்கையு மோசற்** றருள்வாயே ;

oசுந்தரர் பாட லுகந்திரு தாளைக்
கொண்டுநல் தூது நடந்தவ **ராகத்
தொந்தமொ டாடி யிருந்தவள் ஞானச் சிவகாமி-

††தொண்டர்க ளாக மமர்ந்தவள் நீலச்
சங்கரி மோக சவுந்தரி கோலச்
சுந்தரி காளி பயந்தரு ளானைக் கிளையோனே ;

இந்திர வேதர் பயங்கெட சூரைச்
சிந்திட வேல்கொ டெறிந்துநல் தோகைக்
கின்புற மேவி யிருந்திடு ‡‡வேதப் பொருளோனே-

---

* சந்திர ஆரம் — சந்திரன் போன்ற வட்டமான தங்க வளையங்கள் கோக்கப் பெற்ற மாலை வகை.

† சந்திர மேனி—'சந்திர நிறங்களும்'—பாடல் 16.

‡ சந்த்ரகி—மயில்.

x சந்திர வாகு சதங்கை—சுகத்தைச் செய்கின்ற திரமான அழகையுடைய சதங்கை.

o 'சுந்தரருக்காகத் தூது சென்றது :
---பாடல் 944-பக்கம் 744-கீழ்க்குறிப்பு.

** சிவனது ஆகத் தொந்தமொ டாடி—சிவனுடைய உடலிற் சேர்ந்தவளாய் நடன மாடினவள்—

"ஆடுவர் தூமுறுவல் துளங்கும் உடம்பினராய்"
"நாரியொர் பாகமாக நடமாட வல்ல நம்பன்"
—சம்பந்தர் 3-102, 4 ; 2-87-1.

†† சிவபிரான் 'போற்றி யென்பாரவர் தங்கள் ஆகம் உறைவிடமாக அமர்ந்தவர்'—சம்பந்தர் 2-69-5.

‡‡ "நாலந்த வேதத்தின் பொருளோனே"—திருப்புகழ் 1295.

கொங்கைகள் மார்பில் துவள, (வாளி) அம்பு போன்றதும், (கயல்கண்) கயல்மீன் போன்றதுமான கண்ணும் மேனியும் சிவக்கக், கொவ்வைப்பழம் போலிருந்து கொஞ்சும் வாயிதழ் இனிப்பு ஊறலைக் கொடுக்கக், காம இச்சைக் கடலிடையே—

சந்த்ரஹாரம் எனப்பட்ட பொன்மாலை அலைந்து குலைய, நூல் போன்ற பாகமான இடையில் ஆடை குலைந்து துவட்சியுற, (நேசம்) அன்பு (தந்திட) தரும்படி, (மாலு) மால்—காம இச்சை, (ததும்பியும்)—பொங்கி எழுந்து—(அந்த இச்சையில் நான்) முழுகுகின்ற சமயத்தில், உன்னுடைய

நிலவொளி மேனியையும், திருமுகங்களையும், நீல மயில் மேல் ஏறி அமர்ந்திடும் திருவடியில் உள்ளதும் (சந்திர) நிலவொளியையும் (அல்லது சம் திர — சுகத்தைச் செய்கின்ற திரமான) (வாகு) அழகையும் கொண்டதுமான (சதங்கை) கிங்கிணியையும் (நான் காணும்படி) சற்று அருள்வாயே.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பாட்டில் மகிழ்ந்து தமது இரண்டு திருவடிகள் கொண்டே (கால்நடையாய்) நல்ல தூது நடந்தவருடைய (சிவனுடைய) ஆகத் தொந்தமொடாடி—தேகத்திற் சேர்ந்தவளாய் நடனமாடியிருந்தவள், ஞானவல்லியாம் சிவகாமியம்மை,

அடியார்களுடைய உடலிடத்தே இடங்கொண்டு அமர்ந்தவள், நீல்நிறச் சங்கரி, (மோக சௌந்தரி) மோக அழகி, அழகிய சுந்தரி, காளி, பெற்றெடுத்த யானைக்கு கணபதிக்கு—இளையவனே!

இந்திரர்கள், பிரமர்கள் இவர்கள் அடைந்த பயம் நீங்கச், சூரன் அழிந்தடங்க, வேலைச் செலுத்தி, நல்ல மயில்மேல் இன்பகரமாக வீற்றிருக்கும் — வேதப் பொருளானவனே!

எண்புன மேவி யிருந்தவள் மோகப்
பெண்திரு வாளை *மணந்திய லார்சொற்
கிஞ்சியளாவு மிலஞ்சி விசாகப் பெருமாளே. (உ)

977. திருவடியைப் பெற

தனந்த தனந்த தனந்த தனந்த
தனந்த தனந்த தனதான

சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரங்கெதறி கின்ற விழிவேலால்-
சுழன்று சுழன்று துவண்டு துவண்டு
சுருண்டு மயங்கி மடவார்தோள் ;
விரும்பி வரம்பு கடந்து நடந்து
மெலிந்து தளர்ந்து மடியாதே-
விளங்கு கடம்பு விழைந்தணி தண்டை
விதங்கொள் சதங்கை யடிதாராய் ;
பொருந்த லமைந்து சிதம்பெற நின்ற
†பொலங்கிரி யொன்றை யெறிவோனே-
புகழ்ந்து மகிழ்ந்து வணங்கு குணங்கொள்
புரந்தரன் வஞ்சி மணவாளா ;
இரும்புன மங்கை பெரும்புள கஞ்செய்
குரும்பை மணந்த மணிமார்பா-
‡இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று
இலஞ்சி யமர்ந்த பெருமாளே. (௩)

---

* மணந்தியல்—மணந்த இயல்.

† 'பொன்னஞ் சிலம்பு புலம்பவரும் எங்கோன்'-கந்தர் அலங் 89.
"குருகு பெயர் பெற்ற கனவடசிகரி"
—வேடிச்சி காவலன் வகுப்பு (கனம்—பொன்).
பொன்னஞ் சிலம்பு—மேரு எனக் கொண்டால் 'மேருவைச் செண்டாலடித்த திருவிளையாடற் கருத்தாகும்.
—பாடல் 2-பக்கம் 23 கீழ்க்குறிப்பு.

‡ "இலஞ்சி—மடு, குளம் ; இலஞ்சியம் — குளத்தில் உற்பவித்தவன் ; குளத்தில் தோன்றினதால் 'குளவன்' என்று முருகவேளுக்கு ஒரு பேர்; 'குளவன் குன்ற(ம்)' — கல்லாடம் 50. "உமையாள் பயந்த இலஞ்சியமே"—கந்தரலங்காரம் 22.
"மன்னிலஞ்சி சூழும் மலரிலஞ்சி யுஞ்சூழ்ந்த
தென்னிலஞ்சி வாழும் திருக்குமரன்"
[இலஞ்சி—குளம், மகிழமரம்]—திரு இலஞ்சி முருகன் உலா-74.

மதிக்கத்தக்க தினைப் புனத்தில் மேவியிருந்தவள், (மோகப்பெண்) (உனக்கு மோகம் தந்த) நங்கை, (திருவாள்)— லக்ஷ்மீகரம் நிறைந்தவள்—ஆகிய வள்ளியைத் திருமணஞ் செய்த (இயல் ஆர்) தகுதி நிறைந்த (சொற்கு) புகழுக்கு (அல்லது— இயலார் — இயற்றமிழ்ப் புலவர்களின் சொல்லுக்கு) உரிய பெருமாளே! [இஞ்சி அளாவும்] மதில்கள் ஓங்கி உயர்ந்துள்ள இலஞ்சித் தலத்தில் வீற்றிருக்கும் விசாகப் பெருமாளே! [அல்லது— இயற்றமிழ்ப் புலவர்களின் சொற்கு—சொல்லின் பெருக்கம் போல உயர்ந்து பெருகியுள்ள மதில்கள் உயர்ந்துள்ள இலஞ்சியில் விசாகப் பெருமாளே!]— [சதங்கையுமோ கற்றருள்வாயே.]

977.

(அணிந்துள்ள மலரின்மேல் வண்டுகள் உள்ள கருமேகம் போன்ற நீண்ட கூந்தலைப் பார்த்தும், செலுத்தி வீசப்பட்ட வேல் போன்ற கண்ணைப் (பார்த்தும்)—

(என்) மனம் சுழற்சியடைந்து கலங்கிக் கலங்கித், துடித்துத் துடித்து (வருந்தி வருந்தி) (சுருண்டு) சோர்வுற்று, மயக்கம் உற்று, மாதர்களின் தோளை—

விரும்பி, அளவு கடந்து நடந்து, மெலிந்தும், தளர்ந்தும் (நான்) இறந்து போகாமல்—

விளங்குகின்ற உனது கடப்ப மாலையை விரும்பி அழகிய தண்டையையும் பல இன்னிசை வகைகளை ஒலிக்கும் கிண்கிணியையும் அணிந்த திருவடியைத் தந்தருளுக.

நன்றாய்ப் பொருந்தி அமைந்து (உசிதம் பெற) மேன்மை பெற நின்ற பொன்கிரியாம் கிரவுஞ்சத்தை எறிவோனே — அழித்தவனே! (அல்லது பொன் மலையாம் மேருவைச் செண்டால் அடித்தவனே)!

(உன்னைப்) புகழ்ந்தும் உனது ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தும், (உன்னை) வணங்கியும் வழிபட்ட குணத்தைக் கொண்ட இந்திரனுடைய மகள் (வஞ்சிக் கொடிபோன்ற நங்கை) தேவசேனையின் மணவாளனே!

பெரிய (தினைப்) புனம் காத்த மங்கை (வள்ளியின்) நிரம்பப் புளகாங்கிதம் கொண்ட (தென்னங்குரும்பை போன்ற) கொங்கையை அணைந்து கலந்த அழகிய மார்பனே!

(இலஞ்சியில்) குளத்தில், வந்த காரணத்தால் (இலஞ்சியம்) குளத்தில் உற்பவித்தவன் — குளவன் — என்று திருப்பெயர் கொண்டு இலஞ்சி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! (சதங்கை அடிதாராய்)

978. (அகப் பொருள்)

தான தனந்த தான தனந்த
தான தனந்த தனதான

*மாலையில் வந்து மாலை வழங்கு
†மாலை யநங்கன் மலரா லும்-
வாடை யெழுந்து வாடை செறிந்து
வாடை யெறிந்த அனலா லுங் ;
கோல மழிந்து சால மெலிந்து
கோமள வஞ்சி தளரா முன்-
கூடிய கொங்கை நீடிய அன்பு
கூரவு மின்று வரவேணும் ;
‡கால னடுங்க வேலது கொண்டு
கானில் நடந்த முருகோனே-
xகான மடந்தை நாண மொழிந்து
காத லிரங்கு குமரேசா ;
சோலை வளைந்து சாலி விளைந்து
சூழு மிலஞ்சி மகிழ்வோனே-

---

* மாலையில் வந்து—
"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்"—திருக்குறள் 1227.

† மாலை அனங்கன்—மன்மதனுக்கு மாலை 'மகிழம்பூ மாலை'
—பாடல் 952-பக்கம் 765 கீழ்க்குறிப்பு.
மாலை—சமயம்—எனவும் பொருள் செய்யலாம்
"வஞ்சமென் றுணர்ந்த மாலை வாய்"
—(கம்ப ராமா-திரு அவ-51).

‡ "மானவேல் முட்டை"யாக முருகவேள் கானகத்தே பொய்யா மொழிப் புலவரை வழி மறித்த வரலாறு—
—பாடல் 422 அடி 6; பக்கம் 562 கீழ்க்குறிப்பு-பார்க்க.

x "வள்ளி நாணும்படியாக (மொழிந்தது)—பேசினது :
"வள்ளி ! நீ தினைப்புனம் காத்திடல் இழிவான தொழில் ; என்னுடன் வருவாயாக ; விண்ணுலகத்து நங்கையர் யாவரும் உன்னை வணங்கும்படியான வாழ்வைத் தருவேன்" என்று பல உபசார மொழிகளை முருகவேள் கூறினபோது—'இவர் கூறுவது நன்றாயிருக்கின்றது' என எண்ணி நாணத்துடன் வள்ளி—

[தொடர்ச்சி 829 ஆம் பக்கம் பார்க்க]

978.

(மாலையில்வந்து) மாலைப்பொழுதில்-அந்திப்பொழுதில்-இரவில் வந்து, (மாலை) காம இச்சையை (வழங்கு) தருகின்ற (மாலை) (மகிழம்பூ) மாலை (அணிந்த) (அனங்கன்) (அல்லது மாலை—சமயம் தெரிந்துவரும்) அனங்கன்—மன்மதன் (எய்கின்ற) மலர்ப் பாணங்களாலும்

வாடைக்காற்று எழுந்து, அதனுடன் கலந்துவரும் வாடை—(மலர்) வாசனைகள் மிகுந்து—அந்த மணத்துடன் வரும் அந்த வாடைக் காற்றானது —(வாடை) வடவா முகாக்கினி போல வீசி எறியும் நெருப்பாலும்—

(தனது) அழகெலாம் அழிந்து, மிகவும் மெலிந்து, இந்த இளமை வாய்ந்த பெண் சோர்வு அடையா முன்பு

(கூடிய கொங்கை) இவளது கொங்கையைக் கூடிட (நீ) குன்றுது நீளும் அன்பு மிக்குஎழ இன்று வந்தருளவேண்டும்;

காலனும் அஞ்சும்படி வேல் ஏந்திக் காட்டில் (பொய்யாமொழி வரும் காட்டில் வேடனாய்) நடந்த முருகனே!

(வள்ளிமலைக்) காட்டில் (தினைப்புனத்தில்) இருந்த பெண்—வள்ளி நாணும்படி, அவளுடன் பேசி அவள்மீது உனக்கிருந்த காதலை வெளிப்படுத்தி (அல்லது மடந்தை முன் (நீ) நாணம் ஒழிந்து—வெட்கத்தை விட்டு அவளிடம் காதல் மொழிகளை உருகத்துடன் பேசி) மனம் உளைந்த குமரேசனே!

சோலைகள் சூழ்ந்து நெற்பயிர் விளைந்து சூழ்ந்துள்ள இலஞ்சி என்னும் தலத்தில் மகிழ்ச்சி கொண்டவனே!

"ஐயரே! நானோ இழிகுலத்தவரான வேடர் பாவை! நீரோ முழுதுலகாளும் முதல்வர்; என்னைத் தழுவ வேண்டி உம்மைத் தாழ்த்தி நீர் பேசுதல் பழிக்கு இடமாகுமே ஒழிய நல்ல தன்று— "புலி பசித்தால் புல்லை உண்ணுமா"—என்றாள்.

"குமரன் சிந்தையில் ஒன்றிய கருத்தினை உற்று நோக்கியே நன்றிவர் திறமென நாணிக் கூறுவாள்"

"இழிகுல மாகிய எயினர் பாவை நான், முழுதுல கருள்புரி முதல்வர் நீரெனத், தழுவுதல் உன்னியே தாழ்ச்சி செப்புதல், பழியது வேயலால் பான்மைத் தாகுமோ"—

* * "என் கலவியை விரும்புதல் கடன தன்றரோ
புலியது பசியுறில் புல்லுந் துய்க்குமோ"—கந்தபு 6-24-89-9.

முருகவேள் தமது நாணத்தை விட்டுப் பரிதபிக்கப் பேசினர்.

—பாடல் 209, 261, 1002, 1003.

*சூரிய னஞ்ச வாரியில் வந்த
சூரனை வென்ற பெருமாளே. (௬)

திருக்குற்றாலம்.

[தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு மூன்றரை மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. பஞ்ச சபைகளுள் சித்திர சபையை உடைய தலம். 485 ஆம் பாடலின் [பக்கம் 98 கீழ்க்குறிப்பு] பாட பேதத்தையும் பார்க்க. ஸ்தல புராணம் உண்டு.]

979. ஆதரவு பெற

தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன தனதான

ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடைநி லாவிய
ஏதப்பொற் றோள்மிசை மூடிய கரமாதர்-
ஏதத்தைப் பேசுப ணாளிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
†ஏறிட்டிட் டேணியை வீழ்விடு முழுமாயர் ;
மாடொக்கக் கூடிய காமுகர்
மூழ்குற் றுக் காயமொ டேவரு
வாயுப்புற் சூலைவி யாதிக ளிவைமேலாய்-
மாசுற் றுப் பாசம் விடாசம
னூர்புக்குப் பாழ்நர கேவிழு
மாயத்தைச் சீவியு னாதர வருள்வாயே ;

---

* சூரன் மாமரமாய்க் கடலில் நின்றபோது—அதன் அளவையும் பரப்பையும் கண்டு சூரியன் முதலான தேவர்கள் அஞ்சினர் :—

"அம்புவியும் நீத்தம் அடுங்கதிர் படைத்த கோவும் ** கடாவிற் செல்லும் மடங்கலும் வெருவச் சூரன் மாவுருக் கொண்டுநின்றான்"—கந்தபுரா 4-13-471; மா—மாமர உருவம்; மா—பெரிய உருவம் :

† ஏறிட்டு ஏணியை விழ்த்தி விடுபவர் :

—பாடல் 785-பக்கம் 328-கீழ்க்குறிப்பு † பார்க்க.

இறைவன் ஏணியிட்டு விண்ணுலகு ஏற உதவுதலை அப்பரும்—"பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால் ஏணிப் படிநெறி யிட்டுக்" கொடுப்பர் என்றார். 4-92-16.

சூரியனும் (தான் உதிப்பதெப்படி என்று) அஞ்சும்படியாகக் கடலில் நின்று கொண்டிருந்த சூரனை (அட்டுச்) செயித்த பெருமாளே!

(இன்று வரவேணும்)

திருக்குற்றாலம்

979.

இதழ்களை உடைய கொத்தான மலர்களைக் கொண்ட நீண்ட கூந்தல் அசைந்தலைய, (நிலாவிய ஏதப்பொற்றோள் மிசை பட்டாடை மூடிய மாதர்)—விளங்குவதும், (காணும் ஆடவர்களுக்கு) ஏதம்—துன்பம் தருவதுமான அழகிய தோள்மேலே பட்டாடை மூடியுள்ள மாதர்கள், (கரமாதர்) (கரம்) விஷம்—பொருந்திய மாதர்கள் (அல்லது பட்டாடை பொருந்திய...தோள்மேல் மூடியுள்ள கைகளைக் கொண்ட—கைகொண்டு தோள்களை மூடியுள்ள—மாதர்கள்—

குற்றம் கண்டே பேசுகின்றவரும், பண ஆட்சியிலேயே நோக்கம் வைத்துள்ளவர்களும், (வீசத்துக்கு ஆசை கொண்டு ஆடிகள்)—ஒரு மாகாணி அளவே (உண்மை) ஆசை கொண்டவர்களாய் நடிப்பவர்களும், ஏறவிட்டபின் ஏணியை வீழ்த்தித் (தள்ளி) விடுபவர்களும், முழு (மாயர்) வஞ்சகர்களும்

மாடுபோலக் கூடும் காமங் கொண்டவர்களும் (ஆகிய பொது மாதர்கள் வசம்) முழுகுதல் உற்று — முழுகி அதனால் (காயமோடே) உடலிலே வந்த (வாயுப்புற் சூலை) புல் — இழிவான — கெட்டதான வாயுசூலை — ஒருவகைச் சூலை நோய் — (வயிற்றுளைவு) நோயாதிகளான இவை அதிகப்பட்டு—

(மாசு உற்று) கேடு அடைந்து (மாண்டு), பாசக் கயிற்றை விடாத யமனுடைய (ஊரை) லோகத்திற் புகுந்துப், பாழான—இழிவான அல்லது கேட்டைத்தரும் நரகத்திலே விழும் (மாயத்தை) தீமையைச் (சீவி) செதுக்கிக் கழித்து உன்னுடைய (ஆதரவை) அன்பை—உதவியைத்—தந்தருளுக.

தாடுட்டுட் டுடுடு டிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத ஞவென வெகுபேரி-
தாஞெத்தப் பூதப சாசுகள்
*வாய்விட்டுச் சூரர்கள் சேனைகள்
சாகப்பொற் றேருகையி லேறிய சதிரோனே;
கூடற்கச் சாலைசி ராமலை
காவைப்பொற் காழிவெ ளூர்திகழ்
கோடைக்கச் சூர்கரு வூரிலு முயர்வான-
கோதிற்†பத் தாரொடு ‡மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே. (க)

980. பேரின்ப வாழ்வை உற

தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன
தானத்தத் தானன தானன தனதான

xவேதத்திற் கேள்வி யிலாதது
போதத்திற் காண வொணாதது
0வீசத்திற் றார மிலாதது கதியாளர்-
விதித்துத் தேடரி தானது
**ஆதித்தற் காய வொணாதது
††வேகத்துத் தீயில் வெகாதது சுடர்கானம்;

---

* வாய்விட்டு—வாய்விட † பத்தார்—பத்தர்கள்.

‡ "மாமுனிவர் கோடீர மாதவஞ்செய் குற்றாலம்"—(கோடீர-கோள்தீர) குற்றாலச் சிலேடை வெண்பா-27.

x "நான்மறை எட்டிற் றெட்டாதது"—திருப்புகழ் 489.
"வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்"—கந்தபுரா 3-21-127.
"நால் வேதத்தாலும் அறிவொண்ணா நடை"
—சம்பந்தர் 1-131-1.

0 "தேடொணாத் தேவனை என்னுளே தேடிக்
கண்டு கொண்டேன்" — (அப்பர் 4-9-12) என்றதனால் ஆயினர் கடவுள்.

[தொடர்ச்சி 833 ஆம் பக்கம் பார்க்க.]

தாடுட்டுட் டூடு டீடிமி......தான தணு என்று பலபேரி வாத்தியங்கள்—முரசப் பறைகள்—

தாஞெத்து—அப்பூத பசாசுகள்—(முரசப் பறைகளை ஒத்தனவாய்—முரசப் பறைகள் போன்று அங்கிருந்த பூதங்களும் பேய்களும் (வாய்விட) ஒலிசெய்ய, சூரர்களின் படைகள் எல்லாம் (அல்லது) — சூரர்களும் படைகளும் (சாக) இறக்க, அழகிய மயிலில் ஏறிய பெருமை வாய்ந்தவனே (அல்லது) அழகனே!

(கூடல்) மதுரை, (கச்சாலை) கச்சிக் கச்சாலை, (சிராமலை) திரிசிராப்பள்ளி, (காவை) திருஆனைக்கா, அழகிய சீகாழி, [புள்ளிருக்கு] வேளூர் [வைத்தீசுரன் கோயில்], விளங்கும் [கோடை] வல்லக் கோட்டை, திருக்கச்சூர், கருவூர் ஆகிய தலங்களிலும், மேன்மை வாய்ந்தவர்களும்,

குற்றமில்லாதவர்களுமான பக்தர்களுடனே, மகா தவஞ்செய்த பரிசுத்தர்களான சித்தராதிய பெரியோர்கள் கருதிவந்து வலம்வரும் அழகிய திருக் **குற்ருலம்** என்னும் தலத்திலும் உல்வுகின்ற பெருமாளே!

[உன் ஆதரவு அருள்வாயே]

980.

வேதங்களிலே ஆராயப் படாதது; அறிவு கொண்டு காண முடியாதது; [வீசம்] மாகாணி தூரங்கூட இல்லாதது [நமது உள்ளத்துளேயே இருப்பது]; நற்கதியடைய விரும்புவோர்—

[வீதித்து]·பகுத்து ஆராய்ந்து தேடுதற்கு முடியாதது, சூரியனுல் காய முடியாதது, [சுடர்கானம் வேகத்துத் தீயில் வேகாதது] — கானம் சுடர் — காட்டு நெருப்பின் கடுமை கொண்ட—தீயிலும் வேகாதது,

---

[832-ஆம் பக்கத் தொடர்ச்சி]

°° "பரிதி காயில் வாடாது"—திருப்புகழ் 1052.

†† "வடவை மூளில் வேகாது"—திருப்புகழ் 1052.

*வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு-
மாயத்திற் காய மதாசல
†தீதர்க்குத் தூரம தாகிய
‡வாழ்வைச்சற் கரம தாஇனி யருள்வாயே ;
xகாதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணார்-
காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே ;
கோதைப்பித் தாயொரு வேடுவ
ருபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே-
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் ருலமு லாவிய பெருமாளே. (௨)

---

* "பவனம் வீசில் வீழாது சலியாது"—திருப்புகழ் 1052.

† "மாசர்க்குத் தோணுதது"—திருப்புகழ் 343.

‡ இதனைப் "பரம ஞான வீடு" என்ருர் திருப்புகழ் 1052-ல். பரம்பொருளின் இத்தகைய இலக்கணத்தை 343, 489, 501, 741, 1052—எண்ணுள்ள பாடல்களிற் காணலாம்.

x கா—தத்தில்—தத்தில் கா—இந்த (தத்தில்) ஆபத்தான நிலையில், கா—காப்பாற்றுங்கள் ; காயம் அது ஆகும்—உடலாகின்ற, அ—அந்த, (தீ) நெருப்பு (சுரவெப்பம்) நிறைந்த தித்தி—தோல்பை—தீது இது தீது என — துன்பம் தருவது துன்பம் தருவது என்று—(சமண குருக்கள் மாருடன்) கூன் பாண்டியன் அன்புவைத்து (ஓதியுமே) முறையிட்டும் கூட, விடுகதி-(அந்தச்) சுரம் விட்டு நீங்கும் வழியைக் காணுதவர்களான சமண குருக்கள்மார்—

யாவரும் காணும்படியே — கழுமுனையில் மிக்க நோய் கொண்டு வேதனைப்பட்டே தங்களுடைய அறிவின் தீமை (ஈனம்) நீங்காமலே கெட்டுத் தடுமாறி அழியும்படி அவர்களைச் (சம்பந்த மூர்த்தியாய்) அழித்தவனே !

—5, 6 அடிகளுக்கு இப்படிச் சிறப்பான பொருள் காணலாம்.

[கூன் பாண்டியனுடைய சுரம் தீர்த்தது ; சமணரைக் கழு வேற்றினது—வரலாறு—பாடல் 181-பக்கம் 420 கீழ்க்குறிப்பு.]

[வாதத்துக்கே] காற்றினால் [தன் ஒளி], அவிந்து போகாதது, [வாசத்திற் காதத்திற் பூ இயலானது]—நறுமணம் வீசுவதில் ஒரு காததூரம்—பத்துமைல் தூரம் நறுமணம் வீசும் மலரின் தன்மை வாய்ந்தது, பெரிய ஜோதியாய் விளங்குவது, ஆணவ மதம் ஊறுகின்ற

மாயம் பொருந்திய [இந்த] காயம்—உடலில் மதாசல தீர்க்கு—மதசலம்—ஆணவம் என்னும் மதநீர் உள்ள—குற்றம் வாய்ந்தவர்களுக்கு — எட்ட முடியாத தூரத்தில் இருப்பது—ஆன—இத்தகைய பெருவாழ்வைச் சற்காரமதா)—அடியேனை மதித்துப் பொருட்படுத்தி இனி அருளுவாயாக.

(காதத்திற்] கொலைத்தொழிலில் [காயமதாகும்] காழ்ப்பு [உறைப்புக்] கொண்டதான [மதீ] [மதி] அறிவைத் [தித்தி]—திருத்தி, [தீது இது தீது என] [இங்ஙனம் கொலைத்தொழில் செய்வது] தீயது இது, தீயது இது என்று—கெடுதல் இது என்று [ஒரு முறைக்கு இருமுறை] அன்பு வைத்து [ஓதியும்] புத்தி சொன்னபோதிலும், [மேவிடு] உள்ளதான நற்கதியைக் காணுதவர்கள்—

பிரத்யக்ஷமாகவே பொல்லாத நோய் கொண்டு வேதனைப்பட்டே, அறிவின் தீமை நீங்காமல்[கெட்ட புத்தி நீங்காமல்] கேடுற்றுத் தடுமாறும்படி *[அவர்களை வருத்துபவனே!

(கோதை) பெண்மேல், காமப்பித்துடன் ஒப்பற்ற †வேட உருவத்தைத் தாங்கிக் காட்டு வேடர்களின் (கூடத்துக்கே) கூட்டத்தினடுவே—வீட்டுக்கே—குடியாக வந்த முருகனே!

குற்றமற்ற பக்தர்களுடனே சிறந்த ‡தவம் ஒழுக்கம் வாய்ந்த சித்தர் முதலானோர் வந்து வலம்வரும் அழகிய **குற்றாலம்** என்னும் தலத்தில் உலாவும் பெருமாளே!

(வாழ்வை...அருள்வாயே)

---

* இந்த 5-6-அடிகள் அசுரர்களுக்கும், புலால் உண்பவர்களுக்கும் பொருந்தும். 'அருளாட்சி யாங்கில்லை ஊன் தின்பவர்க்கு' (திருக்குறள் 252) என்றாதலின்.

† **வள்ளியைக் காண முருகன் வேடுவரூபம் கொண்டது:**
—பாடல் 968-பக்கம் 806-கீழ்க்குறிப்பு. *

‡ மாதவ சித்தாதியர் சூழுந் தலம் — குற்றாலம்:—"தவமுனிவர் கூட்டரவும் அவரிருக்குத குகையும், சஞ்சீவி முதலான விஞ்சைமூலிகையும், கவனசித்த ராதியரும் மவுனயோ கியரும், கத்திருக்குங் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே" —குற்றாலக் குறவஞ்சி 48 (6-7).

981. திருவடியைத் தொழ

தத்தான தனத்த தத்தன
தத்தான தனத்த தத்தன
தத்தான தனத்த தத்தன தனதான

முத்தோலை தனைக்கி ழித்தயி
லைப்போரிக லிச்சி வத்துமு
கத்தாமரை யிற்செ ருக்கிடும் விழிமாதர்-
முற்றாதிள கிப்ப ணைத்தணி
கச்சார மறுத்த நித்தில
முத்தார மழுத்து கிர்க்குறி யதனாலே;
*வித்தார கவித்தி றத்தினர்
பட்டோலை நிகர்த்தி ணைத்தெழு
வெற்பான தனத்தில் நித்தலு முழல்வேனோ;
†மெய்த்தேவர் துதித்தி டத்தரு
பொற்பார்கம லப்ப தத்தினை
மெய்ப்பாக வழுத்தி டக்கிருபை புரிவாயே;
‡பத்தான முடித்த லைக்குவ
டிற்றாட வரக்க ருக்கிறை
பட்டாவி விடச்செ யித்தவன் மருகோனே-

* வித்தார கவி: 'வித்தார கவியாவான் மும்மணிக் கோவையும் பன்மணிமாலையும் மறமும் கலிவெண்பாவும் மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத்தமும், கதை முதலாகிய செய்யுளும், இயலிசை நாடகங் களோடும் கலை நூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவி யெனக் கொள்க'—யாப்பருங்கல விருத்தியுரை.

தனத்துக்கு வித்தாரகவியின் பட்டோலையை உவமையாகக் கூறினது — அருணகிரியாரின் கவித் திறத்தைக் காட்டுகின்றது. கொங்கை — மலைக்கு, மேருவுக்கு ஒப்பாகும் என்பதெல்லாம் சாதாரண கவிகள் எடுத்துக்கூறும் உவமை. அருட் கவிகளுக்கே இத்தகைய அரிய உவமைகள் உதிக்கும். வித்தார கவியின் கவிப் பெருக்கத்துக்கு ஓர் அளவே கூறமுடியாது; அது போலக் கொங்கையின் பெருக்கத்துக்கும் ஓரளவே கிடையாது—என்பதை ஓர் அரிய அழகிய உவமையால் விளக்கியுள்ளார் அருணகிரியார்: இத்தகைய அரிய உவமை அருட்கவிகளே எடுத்தாள வல்லார்கள் என்பதைக் "கண்ணுக்கு" மணிவாசகனார் எடுத்துக் காட்டின உவமையிலும் [பாடல் 926 "(ஈசற்கியான் வைத்த)" என்னும்

[தொடர்ச்சி 837 ஆம் பக்கம் பார்க்க]

981

முத்தாலாகிய ஓலை தனை (முத்துக் கம்மலைக்) கிழித்து—தாக்கி, அயிலை—வேலாயுதத்துடன், போர்—போரில், இகலி—மாறுபட்டுப் பகைத்து, சிவந்த நிறம் கொண்டு, முகமாகிய தாமரை மலரில், (செருக்கிடும்) கர்வித்து நிற்கும்—அகந்தை கொண்டிருக்கும் கண்களை உடைய மாதர்களின்—

முற்றுமல், நெகிழ்ச்சி உடைய தாய்ப், பெருத்துள்ள தாய், அழகிய [அல்லது அணிந்துள்ள) ரவிக்கை மேலுள்ள, ஆரம்—மாலையை, அற்றுப் போம்படிச் செய்த — (நித்தில முத்தாரம்) நல்ல முத்துமாலை கொண்டதும், அழுத்துவதால் உண்டான நகக் குறியைக் கொண்டதும்—

விஸ்த்தார கவிகளைப்பாட வல்ல திறமை வாய்ந்த புலவர்களின் (பட்டோலை) ஓலைப் புத்தகத்துக்கு (நிகர்த்து இணைத்து) ஒப்பாய் இணையுற்றதாய் எழுந்துள்ள மலை போன்ற கொங்கைகளில் தினந்தோறும் அலைச்சல் உறுவேனோ!

உண்மைத் தேவர்கள் போற்ற அவர்களுக்கு உதவும் (உனது) அழகு நிறைந்த தாமரையன்ன திருவடியை (மெய்ப்பு ஆக) உண்மைப் பத்தியுடனே (அல்லது புகழ்ந்து) நான் (வழுத்திட) போற்ற நீ கிருபைபுரிந்து அருளுவாயாக;

பத்து முடிகளைக் (கிரீடங்களைக்) கொண்ட தலையாம் மலைகள் அறுபட்டு அசைந்துவிழ, அரக்கர்களுக்குத் தலைவனான ராவணன் போரில் அழிந்து உயிர் விடும்படி வெற்றி கொண்டவனான (ஸ்ரீராமன்) திருமாலின் மருமகனே!

பாட்டு—பக்கம் 698 கீழ்க்குறிப்பு], கொங்கையின் பெருக்கத்தைக் கல்லாடனார் "திருவடி புகழுநர் செல்வம் போலும் அண்ணுந்தெடுத்த அணியுறு வனமுலை" [கல்லாடம் 41] எனக் காட்டிய உவமையிலும், கம்பர்—கோதாவிரி ஆற்றைச் "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி" [கம்ப ராமா-சூர்ப்ப-1] என அருமையாக உவமித்துள்ள இடத்தும் காணலாகும்.

† தேவர்களை—மெய்த்தேவர்—என்பது—

"பற்றறநான் பற்றிநின்ற மெய்த்தேவர் தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ"—திருவாசகம்-கோத்தும்பி 5.

‡ ராவணன் தலை—மலைக்கு ஒப்பிட்டது

—பாடல் 278-பக்கம் 190 கீழ்க்குறிப்பு ‡ பார்க்க.

*பற்பாசன்மி கைச்சி ரத்தைய
றுத்†தா தவ னச்சி னத்துறு
பற்போகவு டைத்த தற்பரன் மகிழ்வோனே ;

கொத்தார்கத லிப்ப ழக்குலை
வித்தாரவ ருக்கை யிற்சுளை
கொத்தோடுதி ரக்கு தித்தெழு ‡கயலாரங்-

கொட்டாசுழி யிற்கொ ழித்தெறி
சிற்றாறுத னிற்க ளித்திடு
குற்றாலரி டத்தி லுற்றருள் பெருமாளே. (௩)

ஆய்க்குடி.

[தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 5-மைல். சிறந்த சுப்ரமணிய ஸ்தலம். பால் பாயச நிவேதனம் விசேஷம். கொங்கு நாட்டிலும் ஆய்க்குடி என்றொரு ஊர் உண்டு. [பாடல் 1181-ம் பார்க்க]

982. பிறவியற

தாத்தனத் தானதன தாத்தனத் தானதன
தாத்தனத் தானதன தனதான

வாட்படச் சேனைபட வோட்டியொட் டாரையிறு
மாப்புடைத் தாளரசர் பெருவாழ்வும்-

மாத்திரைப் போதிலிடு காட்டினிற் போமெனஇல்
வாழ்க்கைவிட் டேறுமடி யவர்போலக் ;

கோட்படப் பாதமலர் பார்த்திளைப் பாறவினை
கோத்தமெய்க் கோலமுடன் வெகுளுபக்-

---

* பற்பாசன் — பத்மாசனன்: பிரமன். பிரமனது சிரத்தை அறுத்தது :—பாடல் 285-பக்கம் 209-கீழ்க்குறிப்பு ;

† சூரியன் பற்களைத் தகர்த்தது
—பாடல் 390-பக்கம் 486 கீழ்க்குறிப்பு.

‡ முத்துக்களைக் கொழிக்கும் ஆறு :
"பொருந்து சித்ர நதித்துறைகள் பொன்னு முத்துக் கொழிக்கும்"—குற்றாலக் குறவஞ்சி 48-9.

பத்ம பீடத்திலிருக்கும் பிரமனுடைய அதிகமாயிருந்த ஐந்தாவதான தலையை அறுத்துச், சூரியனைக் கோபித்து அவனுடைய பற்கள் உதிரும்படி உடைத்தெறிந்த (தற்பரன்) பரம்பொருளாம் சிவபிரான் மகிழ்ச்சி கொள்ளும் பெருமானே!

கொத்தாயுள்ள (கதலிப் பழக்குலை) வாழைப் பழக்குலைகளும், விரிந்துள்ள பலாப் பழங்களின் சுளைகளும், கொத்தாக (அப்படியே) உதிரும்படிக் குதித்துத் தாவுகின்ற *கயல்மீன்கள்—(ஆரம்) முத்துக்களைக்

(கொட்டா) கொட்டி நீர்ச்சுழிகளில் தெள்ளி ஒதுக்கி வீசும் சிற்றாற்றினில் மகிழ்கின்ற திருக் குற்றாலத்துச் சிவபிரான் அருகே வீற்றிருந்தருளும் பெருமாளே!

(பதத்தினை வழுத்திடக் கிருபை புரிவாயே)

ஆய்க்குடி
982.

வாள் வீச்சு படுவதால் சேனைகள் அழியும்படி (ஓட்டி ஒட்டாரை) (ஒட்டாரை) பகைவர்களை ஓட்டி வெருட்டி, இறுமாப்பு — செருக்குக் கொண்ட (தாள்) முயற்சியை உடைய †அரசர்களின் பெரிய வாழ்வும்—

ஒரு நொடிப் பொழுதில் சுடுகாட்டில் (அழிந்து) போகும் என (உணர்ந்து), இல்லற வாழ்க்கையை (விட்டுத்) துறந்து (ஏறும்) கரையேறும் அடியார்களைப் போலக்—

(கோள்பட) ஒரு கோட்பாட்டை — ஒரு துணிவான முடிவை மேற்கொள்ளவும் (அல்லது கிரக சேஷ்டை அழியவும்) (உனது) திருவடி மலரைக் கண்டு (இளைப்பாறவும்)—‡வினையினால் (கோத்த) ஏற்படுகின்ற தேகம் என்னும் கோலத்துடன—பல உருவங்களாம்—

---

* **கயல் புனலிற் குதித்தெழுதல்**: 'வரிகொள் செங்கயல் பாய்புனல், 2-1-9. 'செங்கயில்—குதி கொளும் 2-92-10.

† அரசன் வாழ்வும் அழிபடுதல்—பாடல் 778 பார்க்க.

‡ 'வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால் தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்'—பட்டினத்தார்-பொது.

கோப்புடைத் தாகியல மாப்பினிற் பாரிவரு
கூத்தினிப் பூரையிட அமையாதோ;
*தாட்படக் கோபவிஷ பாப்பினிற் பாலன்மிசை
சாய்த்தொடுப் பாரவு†நிள் கழல்தாவிச்-
சாற்றுமக் கோரவுரு கூற்றுதைத் தார்‡மவுலி
தாழ்க்கவஜ் ராயுதனு மிமையோரும்;
ஆட்படச் சாமபர மேட்டியைக் காவலிடு
மாய்க்குடிக் காவலவு ததிமீதே-
ஆர்க்குமத் தானவரை வேற்கரத் தால்வரையை
ஆர்ப்பெழச் சாடவல பெருமாளே. (க)

திருப்புத்தூர்.

[மதுரைக்கு வடகிழக்கு 39-மைல். அறந்தாங்கி ரெயில் ஸ்டேஷனிலிருந்து 27-மைல். காரைக்குடி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 12-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு. திருப்புத்தூருக்கு வடமேற்கு 15-மைலிற் 'பிரான்மலை' என்று வழங்கும் கொடுங்குன்றமும், திருப்புத்தூருக்குக் கிழக்கு 7-மைலிற் குன்றக்குடியும் இருக்கின்றன.]

---

* சிவபிரான் மார்க்கண்டருக்காக யமனை உதைத்தது:
—பாடல் 399-பக்கம் 510 கீழ்க்குறிப்பு †.

பாம்பின் கோபம்—"அரவு வெகுண்டன்ன"
—புறநானூறு 376. சிந்தாமணி 1878.

† 'நீள்' என்பது 'நிள்' எனக் குறுகியது.

‡ சிவபிரான் மவுலி தாழ்த்தது—
முருகவேளிடத்தில் உபதேசம் பெற்றபோது சிவபிரான் வணங்கிக் கேட்டார் அந்த மறை மொழியை:

"எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயின்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலாம் மொழிதரக் கேட்டனன்"
—தணிகைப் புரா-வீராட்ட-117.

—பாடல் 327-பக்கம் 314 கீழ்க்குறிப்பு.

[தொடர்ச்சி 841 ஆம் பக்கம் பார்க்க]

(கோப்பு உடைத்தாகி) அமைப்பு—அலங்காரங்களைப் பெற்று, (அலமாப்பினில்) துன்பங்களில், பாரிவரு கூத்தின்-பாரித்துவரும்—வளர்ந்துவரும் ஆட்டத்தில், இனியேனும் இந்தப் (பூரை) பயனற்றவனை — இட—நீ இடுதல் — நீ தள்ளுதல் (அமையாதோ) போதாதோ — ஒரு முடிவு பெருதோ! (அல்லது—பாரிவரு கூத்து—வளர்ந்து வரும் ஆட்டம் இனி (பூரையிட) (பூர்த்தியாக) முடிவு பெறுதல் (அமையாதோ) பொருந்தலாகாதோ (கூடாதோ)!

கால் பட்டால் கோபித்துச் சீறும் விஷப் பாம்பு போல, (பாலனும்) மார்க்கண்டன்மீது (சாய்—தொடுப்பு) குறிக் கொண்டு தொடர்தல் மிக்கவுடன் — குறித்துப் பிடிக்கத் தொடர்ந்தவுடன், (தமது) நீண்ட திருவடியை நீட்டி—

*(உன்னை விடேன் பார் என்று) பேசின அந்தக் கோர ரூப யமனை உதைத்த பரமசிவன் தமது முடியைத் தாழ்க்கவும், குலிசாயுதனும் இந்திரனும் தேவர்களும்

ஆட்பட்டு நிற்கவும், †(சாமம்) பொன்னிறமுடைய ‡(பரமேட்டியை)ப் பிரமனைக் (காவலிடும்) சிறையிலிட்ட **ஆய்க்குடி** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அரசே! கடலிலே-

(ஆர்க்கும்) போர்புரிந்த அந்த சூரனாதி அசுரர்களையும் வேற்கரத்தால்—திருக்கரத்து வேலாயுதத்தால், (வரையை) அவ் வசுரர்கள் இருப்பிடமாக இருந்த எழுகிரியையும் (ஆர்ப்பு எழ) பேரொலி உண்டாகும்படிச் (சாடவல்ல) கொல்ல (அழிக்க)வல்ல பெருமாளே!

(கூத்தினிப் பூரையிட அமையாதோ)

---

* யமன் கூறுவது—'தேவர் காப்பினும்...மூவர் காப்பினும்... எவர் காப்பினும்...ஆவி கொண்டன்றி மீண்டும் அகல்வனே' —கந்தபுரா 2-5-238.

"மறலியா ரெதிராகில் உய்கிலர் வருக" —திருவெண்காட்டுப் புராணம்-சுகவேத-10.

† சாமம்—பொன்: 'சாமவரை வில்லாக ** மதிலெய்தான்' —சம்பந்தர் 2-44-6.

‡ பரமேட்டி — பிரமன் (பிங்கலம்). பிரமன் பொன்னிற மேனியன் — "பொன்னிற நான்முகன்", "செம்பொனின் மேனியனும் பிரமன்"—சம்பந்தர் 3-7-9; 1-107-9.

பிரமனைக் காவலில் (சிறை) இட்டது—பாடல் 212-பக்கம் 42.

983. சரியை, கிரியை, நெறி பற்ற

தனத்தத் தான தனன தனதன
தனத்தத் தான தனன தனதன
தனத்தத் தான தனன தனதன தனதான

கருப்புச் சாப னனைய இளைஞர்கள்
ப்ரமிக்கக் காத லுலவு நெடுகிய
கடைக்கட் பார்வை யினிய வனிதையர் தனபாரங்-
களிற் றுக் கோடு கலச மலிநவ
மணிச்செப் போடை வனச நறுமலர்
கனத் துப் பாளை முறிய வருநிக ரிளநீர்போற்;
பொருப்பைச் சாடும் வலியை யுடையன
அறச்சற் றுன இடையை நலிவன
புதுக்கச் சார வடமொ டடர்வன எனநாளும்-
புகழ்ச்சிப் பாட லடிமை யவரவர்
ப்ரியப்பட் டாள வுரைசெ யிழிதொழில்
*பொகட்டெப் போது †சரியை கிரியைசெய் துயிர்வாழ்வேன்;
‡இருட்டுப் பாரில் xமறலி தனதுடல்
பதைக்கக் கால்கொ டுதைசெய் தவன்விழ
oஎயிற் றுப் போவி யமர ருடலவர் தலைமாலை-
**எலுப்புக் கோவை யணியு மவர்மிக
அதிர்த் துக் ††காளி வெருவ நொடியினில்
எதிர்த்திட் டாடும் வயிர பயிரவர் ‡‡நவநீத;

* பொகட்டு—போகவிட்டு.
† சரியை கிரியை-விளக்கம்—பாடல் 331-பக். 330-கீழ்க்குறிப்பு
‡ பார் இருள் கொண்டது என்பது :—"எங்கும் உலகம் இருள் நீங்க இருந்த எந்தை"—சிந்தாமணி-2812.
x யமனை உதைத்தது—பாடல் 399-பக்கம் 510 கீழ்க்குறிப்பு †
o எயில் துப்பு ஒவி—திரிபுரங்களின் வலியைத் தொலைத்து; திரிபுரம் எரித்த வரலாறு—பாடல் 285-பக்கம் 206 கீழ்க்குறிப்பு.
** "எலும்பும் அணிந்த விடையூர்தியான்",
"பூணல் வெள்ளெலும்பினன்"—சம்பந்தர் 2-117-3; 2-99-7:
†† காளியொடாடல்: 'காளியைக் குணஞ்செய் கூத்துடையோன்" 'காளிகதம் ஒவநின்று நடமாடி'—சம்பந். 3-119-1; 2-32-5.

[தொடர்ச்சி 843 ஆம் பக்கம் பார்க்க]

திருப்புத்தூர்
983.

(கருப்புச் சாபன்) கரும்பு வில்லையுடைய மன்மதன் போன்ற இளைஞர்கள் பிரமித்து மயங்கும்படி காம இச்சை உலவுகின்றதும், நீண்டதுமான கடைக்கண் பார்வையை உடைய இனிமை வாய்ந்த மாதர்களின் கொங்கைப் பாரங்கள்—

"யானையின் தந்தம், குடம், நிறைந்த நவரத்னச் செப்பு (சிமிழ், கரகம்), (ஓடை) நீர் நிலையில் மலர்ந்துள்ள (வனச நறுமலர்) தாமரையின் நறுமணமலர், பாரத்துடன் தென்னம் பாளையும் முறியும்படி எழுந்துள்ள (நிகர்) ஒளியுள்ள இளநீர் போன்று

மலையையும் மோதிச் செயிக்கவல்ல வலிமையைக் கொண்டன, (அறச் சற்றுன) மிகவும் (சற்றுன) அற்பமாயுள்ள — இளைத்துள்ள இடையை மெலியும்படிச் செய்வன, புதிய ரவிக்கையுடனும், (ஆரவடம்) முத்துமாலையுடனும் நெருங்குவன"—என்றெல்லாம் நாள்தோறும்—

புகழும் பாடல்களை (அம் மாதர்களுக்கு) அடிமைப்பட்ட (அவரவர்) அந்த அந்தக் காதலர்கள் ஆசையுடன் எடுத்தாண்டு பேசப் பாடுகின்ற (அல்லது—அடிமையாகிய நான் (அவரவர்) அந்த அந்த மாதர்கள் அன்புகொண்டு என்னை ஏற்கும்படிப் பேசும) இழிவான தொழிலைச் செய்கையைப் போகவிட்டு, (நான்) எப்போது சரியை, கிரியை மார்க்கங்களில் நின்று உழைத்து உயிர் வாழ்வேன்!

அஞ்ஞானம் நிறைந்த (இந்தப்) பூமியில் யமனுடைய உடல் பதைக்கும்படிக் கால் கொண்டு (விழ உதை செய்தவன்) விழும்படி அவனை உதைத்தவர், (எயில்) திரிபுரங்களின் வலியைத் தொலைத்தவர், தேவர்களின் உடல், அவர்களின் தலைமாலை (சிரங்களாலாய மாலை) ஆகிய

எலும்பு வடத்தை மாலையை அணிந்தவர், மிகவும் நடுங்கச்செய்து, முழக்கம்செய்து, காளியானவள் அஞ்சும்படி ஒரு நொடிப்பொழுதில் எதிர்த்து நடனம் புரிந்த வயிர பயிரவர்—பயிரவமூர்த்தி, வெண்ணெயைத்

(தொடர்ச்சி) ‡‡ நவநீத திருட்டுப பாணி—கண்ணபிரான்—
"தாழியில் வெண்ணெய் தடங்கை யார விழுங்கிய
பேழைவயிற் றெம்பிரான்"—பெரியாழ்வார் 1-4-9.

திருட்டுப் பாணி *யிடப முதுகிடை
சமுக்கிட் டேறி யதிர வருபவர்
செலுத்துப் †பூத மலகை யிலகிய படையாளி-

செடைக்குட் ‡பூளை மதிய மிதழிவெ
ளெருக்குச் சூடி குமர xவயலியல்
திருப்புத் தூரில் மருவி யுறைதரு பெருமாளே. (க)

984. தீவினை ஒழிய

தான தாத்த தனத்தத் தானன
தான தாத்த தனத்தத் தானன
தான தாத்த தனத்தத் தானன தனதான

வேலை தோற்க விழித்துக் காதினில்
ஓலை காட்டி நகைத்துப் போதொரு
வீடுகாட்டி யுடுத்தப் போர்வையை நெகிழ்வாகி-

மேனி காட்டி வளைத்துப் போர்முலை
யானை காட்டி மறைத்துத் தோதக
வீறு காட்டி யெதிர்த்துப் போரெதிர் வருவார்மேல்;

கால மேற்க வுழப்பிக் கூறிய
காசு கேட்டது கைப்பற் றுஇடை
காதி யோட்டி வருத்தப் பாடுடன் வருவார்போல்-

காதல் போற்று மலர்ப்பொற் பாயலின்
மீதணைப்பு மசட்டுச் சூளைகள்
காம நோய்ப்படு சித்தத் தீவினை யொழியேனோ ;

---

* திருமால் இடபமாய்ச் சிவபிரானைத் தாங்கியது :
—பாடல் 786-பக்கம் 333 கீழ்க்குறிப்பு.

† சிவபிரானது படை பூதமும் பேயும் :
''பலபூதப் படையான்''—சம்பந்தர் 1-37-7.
''பல் படை பேயவை''—சம்பந்தர் 1-117-6.

‡ 'பூளையும் வன்னியும்...சடை வைத்தவர்'—சம்பந்தர் 3-43-4.
'வெள்ளெருக் கரவம் விரவுஞ் சடை...அரன்'-அப்பர் 5-79-1.

x 'வயலியில்' என்றும் பாடம் இருக்கலாம் — 984-ஆம் பாடலிலும் வயலூர் வருவதால்.

திருடின கரங்களை உடைய (திருமாலாம்) இடபத்தின் முதுகின்மேல் (சமுக்கு இட்டு) சேணம் போட்டு ஏறி முழக்கத்துடன் வருபவர், செலுத்தப்படும் பூதம், பேய்க்கணம்—இவை விளங்குகின்ற படையாளி (இவைகளைப் படையாகக் கொண்டவர்)

சடையில் பூளைப்பூ, நிலவு, கொன்றை, வெள்ளெருக்கு இவைகளைச் சூடியுள்ளவர்—ஆகிய—சிவபிரானது குமரனே! வயல்கள் பொருந்திய **திருப்புத்தூர்** என்னும் தலத்திற் பொருந்தி வீற்றிருக்கும் பெருமாளே!

(எப்போது சரியை கிரியை செய்துயிர் வாழ்வேன்)

984.

வேலாயுதமும் தோற்றுப் போகும்படிக் கண்கொண்டு பார்த்து, காதில் உள்ள ஓலையைக் காட்டி, சிரித்து, போகவேண்டிய ஒரு வீட்டையும் காட்டி, அணிந்துள்ள மேலாடையை (நெகிழ்வாகி) நெகிழும்படி விட்டு—

(மேனி) உடலைக் காட்டி, (வளைத்து) (ஆடவர்களின்) மனத்தைக் கவர்ந்து, போருக்கு எழுந்தது போன்ற கொங்கையாம் யானையைக் காட்டியும், மறைத்தும், (தோதகம்) வஞ்சகத்தின் (வீறு) முழு சக்தியையும் காட்டி — உபயோகப்படுத்தி, எதிர்த்துச் சண்டையிட்டு எதிரே வருபவர்களிடத்தே—

காலத்துக்குத் தக்கபடி—சமயத்துக்குத் தக்கவாறு—(உழப்பி) பேசும் வார்த்தைகளை மழுப்பி, தாம் சொன்ன காசைக் கேட்டு அதை (முதலில்) கைப்பற்றிப் பின்பு மத்தியிலே—(காதி) (மனம் வேறுபட்டுப்) பிரிந்து (அவர்களை வெருட்டி) ஓட்டிப் (பின்னும் அவர் பொருள் தந்தால்—வருத்தப்பாடுடன் வருவார்போல்—தாம் முன்பு வெருட்டி ஓட்டின செய்கைக்கு வருந்தி வந்தவர்கள் போல நடித்துத்)

தமது (காதலை) அன்பைக் காட்டும் மலர் விரித்த அழகிய படுக்கையில் (அணுப்பும்) ஏமாற்றுகின்ற (அசட்டுச் சூளைகள்) மூட. வேசிகள் மீது காம இச்சை என்னும் நோய் வாய்ப்படும் மனத்தால் ஏற்படும் தீவினையை விலக்கேனோ! தீவினையினின்றும் நீங்கிப் பிழையேனோ!

ஆல கோட்டு மிடற்றுச் சேர்திக
பாலி *பார்ப்பதி பக்ஷித் தால்நட
மாடி †தாத்திரி பட்சித் தாவென வுமிழ்‡வாளி-
ஆடல் கோத்த சிலைக்கைச் சேவக
னோடை பூத்த தளக்கட் xசானவி
யாறு தேக்கிய கற்றைச் சேகர oசடதாரி ;
சீல மாப்பதி மத்தப் **பாரிட
சேனை போற்றிடு ††மப்பர்க் கோதிய
சேத னார்த்தப்ர சித்திக் கேவரு முருகோனே-
சேல ருக்கயல் தத்தச் சூழ்வய
லார வேற்கர ‡‡விப்ரார்க் காதர
தீர xxதீர்த்த திருப்புத் தூருறை பெருமாளே. (உ)

---

* பார்வதி பக்கத்திருக்க நடமாடல்
'நாரியொர் பாகமாக நடமாட வல்ல...நம்பன்'-சம்பந்தர் 2-87-1.

† பூமியைத் திருமால் உண்டு உமிழ்ந்தது
—பாடல் 267-பக்கம் 164-கீழ்க்குறிப்பு. †
'வையம் எழுங் கண்டாள் பிள்ளை வாயுளே'—பெரியாழ். 1-1-6.

‡ திரிபுரம் எரித்தபோது—திருமால் அம்பாக அமைந்தது
—பாடல் 285-பக்கம் 206 கீழ்க்குறிப்பு.

x 'சானவி' — கங்கையாறு — பகீரதச் சக்கரவர்த்தி தன் பிதுர்க்களின் சாபம் நீங்கத் தவம் புரிந்து கங்கையை வரவழைத்தனன். கங்கை தமது ஆச்சிரமத்தின் வழியில் வருவதை அறிந்த சந்து முனிவர் அதனை ஆசமனஞ்செய்தனர். பகீரதன் அவரைவேண்ட அவர் அதைத் தமது காதின் வழியாக வெளியே விட்டனர். அவர் காதின் வழியாய் வெளிவந்ததால் கங்கை சானவி எனப் பெயர் பெற்றனள்.

"சகரர் தம்பொருட் டருந்தவம் பெரும்பகல் தள்ளிப்
பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகிரதி யாகி
மகித லத்திடைச் சன்னுவின் செவிவழி வரலால்
நிகரில் சானவி எனப் பெயர் படைத்ததிந் நீத்தம்"
—கம்பராமா-அகலிகை 61.

o சடாதாரி—சடாரி எனக் குறுகிற்று. கங்கையைச் சூடிய வரலாறு—பாடல் 446-பக்கம் 622 கீழ்க்குறிப்பு.

** பாரிட சேனை போற்றிடும் அப்பர் :
"குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்து"
"பாரிடம் போற்றிசைப்ப"—சம்பந்தர் 2-27-1 ; 1-64-7.

[தொடர்ச்சி 847 ஆம் பக்கம் பார்க்க]

(ஆலகோடு) விஷத்தின் வரம்பு—அடையாளத்தைக் காட்டும் கழுத்தை உடைய ஜோதிப் பெருமான்—(பிரம) கபாலத்தைக் கையில் ஏந்தினவன், பார்வதி அன்புவைத்து மகிழ (அல்லது பார்வதி பக்கத்திலிருக்க) நடனமாடுபவன், (தாத்திரி) பூமியைப் (பட்சித்து) உண்டு, ஆவென்று வாய்திறந்து உமிழ்ந்து விளையாடின (திருமாலை) (வாளி) அம்பாகத் (திரிபுர சம்மார)

(ஆடல்) போரில், (கோத்த) அமைத்துக் கொண்ட (சிலை) மேருவாகிய மலை வில்லைக் கையில் ஏந்திய பராக்ரம சாலி, (ஓடை பூத்த தளக்கள்) நீர்நிலைகளிற் பூத்த பூ இதழ்களின் மது கலந்த (சானவி) கங்கையாறு நிறைந்து தோன்றும் திரண்ட முடியாம் சடையைத் தரித்துள்ளவன்,

(சீலம்) பரிசுத்தத்தை உடைய (மா) சிறந்த (பதி) கடவுள், (மத்தம்) களிப்பு நிறைந்த (பாரிட சேனை) பூதப்படைகள் போற்றிநிற்கும் அப்பர்,—ஆகிய சிவனுக்கு—(ஓதிய சேதன அர்த்த ப்ரசித்திக்கே வரு) (சேதன அர்த்தம்) ஞானப்பொருளை உபதேசித்த (ப்ரசித்திக்கே வரு) கீர்த்தியே மிகக் கொண்டுள்ள முருகனே!

சேல்மீன்களும், நீங்காத கயல்மீன்களும், (தத்த) குதிக்கச் சூழ்ந்துள்ள வயலூரில் வீற்றிருப்பவனே! வேல்கொண்ட திருக்கரத்தனே! (விப்பிரர்க்கு) அந்தணர்க்கு (ஆதர) பற்றுக் கோடாய் உள்ளவனே! தீரனே! (தீர்த்த) பரிசுத்த மூர்த்தியே! (அல்லது, சிவகங்கை, சீதளி என்னும் தீர்த்தவிசேடங்களை உடைய) திருப்புத்தூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(தீவினை ஒழியேனே)

(தொடர்ச்சி) †† சிவபிரானுக்கு உபதேசித்தது
—பாடல் 327-பக்கம் 314 கீழ்க்குறிப்பு.

‡‡ 'விப்ரர்க் காதர'—'அந்தணர் வெறுக்கை'—திருமுருகாற்: 'வேதியர் வெறுக்கையும் அனுதி பரவஸ்துவும்' — வேளைக்காரன் வகுப்பு; 'விப்ரகுல யாகச் சபாபதி'—வேடிச்சி காவலன் வகுப்பு.

XX திருப்புத்தூர்ச் சிவனையும் "தீர்த்தன்" என்றார் அப்பர் பெருமான்: 'தீர்த்தன் காண்...திருப்புத்தூரில் திருத்தளியான் காண்' —அப்பர் 6-76-1. 'அத்தடம் கமலையாற் சீதளிப் பெயர்த்தாம்'
—திருப்புத்தூர்ப் புராணம்.

திருவாடானை.

[மானாமதுரை ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து, சிவகங்கை, காளையார்கோயில் என்னும் ஊர்கள் வழியாகப் போனால் 44-மைல். காளையார் கோயிலுக்குக் கிழக்கு 21-மைல். பரமகுடி, இராமநாதபுரம், அறந்தாங்கி ஆகிய ரெயில்வே ஸ்டேஷன்களி லிருந்து 30-மைல்; ஆனால் இவ் வழிகள் கஷ்டம். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

985. அருள் பெற

தானன தத்ததன தானன தத்ததன
தானன தத்ததன தனதான

ஊனுரு முட்பிணியு மானகை வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனால்-
ஊரார் குவித்துவர ஆவா வெனக்குறுகி
ஓயா முழக்கமெழ அழுதேர ;
நானு விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாறு தெடுத்தடவி யெரியூடே-
நாணமல் வைத்துவிட நீறுமெ னிப்பிறவி
நாடா தெனக்குனருள் புரிவாயே ;
*மானக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே-
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானேரு மட்டகுல கிரியாவும் ;
ஆனு வரக்கருடன் வானர் பிழைக்கவரு
†மாலால முற்றவமு தயில்வோன்முன்-
‡ஆசார பத்தியுடன் ஞானக மத்தையருள்
ஆடானை நித்தமுறை பெருமாளே. (க)

---

* காளிங்கன் மீது நிர்த்தம் :— பாடல் 245-2 பக்கம் 114 கீழ்க்குறிப்பு x; பாட்டு 402-பக்கம் 518; பாட்டு 868-பக்கம் 544-கீழ்க்குறிப்பு † பார்க்க.

† சிவபிரான் நஞ்சை உண்டது
—பாடல் 509-பக்கம் 162 கீழ்க்குறிப்பு ‡ பார்க்க.

‡ ஆசார பத்தியுடன் உபதேசம் பெற்றது
—பாடல் 982, பக்கம் 840-கீழ்க்குறிப்பு.

திருவாடானை

985.

(ஊன்) மாமிசமும், (ஆரும் உள் பிணியும்) நிறைந்து உள்ளே இருக்கும் நோய்களும், (ஆறு) நீங்காது (கவித்த) வளைய மூடப்பட்ட (இந்த) உடல் (ஊதாரிபட்டு) கேடுற்று (ஒழிய) நீங்கும்படி—அழியும்படி—உயிர் போய் விட்டால்

ஊரார்கள் கும்புகூடிவர, ஐயோ என்று கூறி அவர்கள் அணுகி, (ஓய்விலாத கூச்சல் உண்டாகும்படி அழுது, பின்னர் (ஓய) அழுகை அடங்கப்—

பலவிதமான பல்லக்கின்மேலே (பிணத்தைக்) கிடத்தி, அது (நாறுது) துர்நாற்றம் வீசுமுன் (அல்லது தெரியாதபடி (உடலை) மூடி எடுத்துக் கொண்டுபோய்) (அடவி) சுடுகாட்டில் எரியின் மத்தியிலே

கூசாமல் வைத்து விட்டுவிட (அவ் வுடல்) சாம்பலாகும் என்ற விதியுள்ள இந்தப் பிறவியை (நான் விரும்பாதபடி எனக்கு உன் திருவருளைத் தருக.

(மால் நாகம்) காளிங்கன் என்னும் பெரிய பாம்பின் (துத்தி) புள்ளிகள் உள்ள படத்தின் மேலே நடனம் செய்த திருமாலும், தேன் ஒழுகும் (தாமரை) மலர்மேல்

வாழ்வு கொண்டிருக்கும் ஒப்பற்ற பிரமனும், எட்டுத் திசைகளில் உள்ளவர்களும், தேவர்களும், சிறந்த எட்டு மலைகள் (அஷ்டகிரிகளில்) உள்ளவர்களும்—

(ஆறு அரக்கருடன்) (கடல் கடைந்தபோது அங்கு) நீங்காது நின்ற அசுரர்களுடன் வானத்துள்ள கணங்கள் பிழைக்கும்படி — எழுந்த ஆலகாலவிஷம் (முற்ற) அத்தனையும்-(அல்லது உற்ற-தமக்குக் கிடைத்த) அமுதமாக உண்ட சிவபிரான் முன்பு—

*ஆசாரத்துடனும் பக்தியுடனும் (கேட்க அவருக்கு) (அல்லது சிவபிரானது முன்னிலையில் †சாத்திர முறைப்படி) ஞான ஆகமப்பொருளை—வேதாகமங்களின் ஞானப் பொருளை—(அருள்)—உபதேசித்த பெருமாளே! திருஆடானை என்னும் தலத்தில் நாள்தோறும் வீற்றிருக்கும் பெருமாளே! (எனக்கு உன் அருள்புரிவாயே)

---

* பாடல் 982-பக்கம் 840 கீழ்க்குறிப்பு; † 'அப்பொருள் பொழுதிட மறிந் தியல்புளித் தந்திடத் தக்கது'—தணிகைப்புரா-வீராட்ட 111. 'மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப இற்றென இயம்பலாமோ மறையினல் இசைப்ப தல்லால்-கந்தபுரா 1-17-38.

உத்தரகோசமங்கை.

[ராமநாதபுரம் ரெயில்வே ஸ்டேஷனி லுருந்து 7-மைல். இது மாணிக்கவாசக ஸ்வாமிகளால் மிகப் பாராட்டப்பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

986. ஞானம் பெற

தத்தன தானத் தனதன தந்தத்
தத்தன தானத் தனதன தந்தத்
தத்தன தானத் தனதன தந்தத் தனதான

கற்பக ஞானக் கடவுண்மு னண்டத்
திற்*புத சேனைக் கதிபதி யின்பக்
கட்கழை †பாகப் பமமுது வெண்சர்க் கரைபால்தேன்-
கட்டிள நீர்முக் கனிபய றம்பொற்
றெப்பையி னேறிட் டருளிய தந்திக்
கட்டிளை யாய்‡பொற் பதமதி றைஞ்சிப் பரியாய;
பொற்சிகி யாய்கொத் துருண்மணி தண்டைப்
பொற்சரி நாதப் பரிபுர என்றுப்
பொற்புற வோதிக் கசிவொடு சிந்தித் தினிதேயான்-
பொற்புகழ் பாடிச் சிவபத மும்பெற்
றுப்பொருள் ஞானப் பெருவெளி யும்பெற்
றுப்புக லாகத் xதமுதையு முண்டிட் டிடுவேனோ;

---

* புத சேனை—தேவசேனை. † பாகு அப்பம் அமுது.

‡ 'பொற்பதம் இறைஞ்சிச் சூரன் முருகவேளுக்கு மயில் வாகனமானது:—

சூரன், பதுமன், சிங்கமுகன், தாரகன் என்னும் நான்கு பூதர்கள் முருகவேளின் சேவல், மயிலுடன் சேர்ந்து கயிலை வாயிலில் கருடனுதிய ஊர்திகளை வதைத்தார்கள். தேவர்கள் முறையிட்டால் இதை அறிந்த முருகவேள் இந் நான்கு பூதர்களையும் 'அசுரர்களாகுக' எனச் சபித்தார். அப்பொழுது சூரனும் பதுமனும் 'அண்ணலே! நாங்கள் மயிலும் சேவலுமாகித் தங்களுக்குப் பணி செய நெடுங்காலமாகத் தவம் புரிகின்றோமே' என விண்ணப்பிக்க, 'நீங்கள் இருவரும் ஒரு வடிவாகி 'சூரபத்மா' என்னும் அசுரனாய் எம்முடன் போர் புரியும்போது எமது ஆணையால் மயிலும் சேவலும் ஆவீர்கள்' என முருகவேள் அருள் புரிந்தார்.

"பரம்! வாரணம் மயில்ஆக, உன்னருங் கோடி தவமிழைக்கின்றோம் உதித்திடும் அசுரர் தோற்றத்தின், பின்னரெக் காலம் விடுதலை

[தொடர்ச்சி 851 ஆம் பக்கம் பார்க்க]

உத்தரகோச மங்கை

986.

'கற்பக விருக்ஷம்போல (அடியார்க்கு) அவர்கள் வேண்டுவதை ஈயும் ஞான மூர்த்தியாம் கடவுளே! முன்பு விண்ணுலகத்தில் வளர்ந்த (புதசேனைக்கு) தேவசேனைக்குத் தலைவனுயிருப்பவனே! (அல்லது தேவர்களின் படைத் தலைவனே)! இன்பரசமான (கள்) தேன் சுவை கொண்ட கரும்பு, (பாகு) வெல்லம், அப்பம், (அமுது) உணவு (சோறு), வெள்ளைச் சர்க்கரை, பால், தேன்—

(கட்டு) நிரம்ப இளநீர்—அல்லது (கட்டி—இளநீர் (கல்கண்டு—இளநீர்), (முக்கனி) வாழை, மா, பலா என்னும் முப்பழம், பயறு ஆகிய இவைகளை அழகிய பொலிவுள்ள வயிற்றில் ஏற்றுக்கொண்டருளும் யானையாகிய கணபதியின் (கட்டிளையாய்) வலிமை நிறைந்த இளைஞனே! உன் திருவடியை வணங்கி வேண்டி உனக்கு வாகனமான

அழகிய மயிலையுடையவனே! திரளாக உள்ளதும், உருட்சியுள்ளதுமான ரத்நம் பதித்த தண்டையையும், அழகும் ஒழுங்கும் உள்ளதாய் ஒலிக்கின்றதான சிலம்பையும் அணிந்தவனே!' என்றெல்லாம் அழகாக உன்னைத் துதித்து மனங்கசிந்து தியானித்து நன்ருக நான்

உனது அழகிய திருப்புகழைப் பாடிச், சிவநிலையையும் பெற்று மெய்ஞ்ஞானப் பெருவெளியாம் (சிதாகாச) உயர் நிலையைப் பெற்று, (அப்போது உண்டாவதாகச்) சொல்லப்படுகின்ற உடலில் ஊறும் ஞான அமுதை உண்ணப் பெறுவேனே!

[850 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எமக்குப் பெறுமெனக் குமரவேள் உரைக்கும்." "நீவிர்தாம் இருவிர் ஒரு வடிவாகி நிருதரிற் சூரபத்மா என், ரேவிலா விறல் கூர் பெயர் தரித் திமையோர்க் குறுபகையா யுடற்றிடுநாள், தாவில்சீர் எமதாணையால்...பசுஞ்சிறகர் மாயூரம் சேவலாம் வடிவுண்டாம் என...உரைத்தனுப்பினுல்"

—உபதேச காண்டம் (ஞான வரோதயர்) 83, 84.

x அமுதம்—சிவ அமுதி

—பாடல்கள் 563, 593-அடி 1-பார்க்க.

*தெற்பமு ளாகத் திரள்பரி யும்பற்
குப்பைக ளாகத் தசுரர்பி ணந்திக்
கெட்டையு மூடிக் குருதிகள் †மங்குற் செவையாகித்-
‡திக்கய மாடச் சிலசில பம்பைத்
தத்தன தானத் தடுடுடு வென்கச்
செப்பறை தாளத் தகுதொகு வென்கச் சிலபேரி;
Xஉற்பன மாகத் 0தடிபடு **சம்பத்
தற்புத மாகத் தமரர்பு ரம்பெற்
றுட்செல்வ மேவிக் ††கனமலர் சிந்தத் தொடுவேலா-
‡‡உட்பொருள் XXஞானக் குறமக ளும்பற்
சித்திரை நீடப் பரிமயில் முன்பெற்
றுத்தர கோசத் தலமுறை கந்தப் பெருமாளே. (க)

இராமேசுரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

987. யாக்கையைப் பழித்தல்

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன தனதான

வாலவய தாகியழ காகிமத ஞகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிழ் யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகி00மட கூடமொடு பொருள்தேடி-

---

* தெற்பம்—போர்ச் செருக்கு. † மங்குல்—திசை.

‡ திக் கஜங்கள் — அஷ்ட கஜங்களின் பெயர் (கிழக்காதி முறையே)—பாடல் 554-பக்கம் 265 கீழ்க்குறிப்பிற் காண்க.

X உற்பனம்—தோற்றம். 0 தடி—மின்னல். ⁰⁰ சம்பம்—இடி.

†† கனமலர் சிந்துதல்—தேவர்கள் பொன்மாரி சொரிதல் —பாடல் 645-பக்கம் 510-கீழ்க்குறிப்பு.

‡‡ உட்பொருள் ஞானக் குறமக ளும்பொற்
சித்திர நீலப் பரிமயி லுஞ்சுற்
றுத்தர கோசத் தருள்கொடு கந்தப் பெருமாளே.—
என்றும் பாடம். XX ஞானக் குறமகள்—'ஞான குறமாது' —பாடல் 98, 833, 987-பார்க்க.

00 மட கூடம்—மாட கூடம்.

போர்ச் செருக்குள்ள தேகத்தையுடைய கூட்டமான (பரி) குதிரைகளும், (உம்பல்) யானைகளும், (இறந்து) குப்பைகளாகவும், அசுரர்களுடைய பிணங்கள் எட்டுத்திக்குகளையும் மூடி அவர்களின் ரத்தத்தால் திசைகளெல்லாம் செந்நிறமடையவும்,

(எட்டுத்) திக்குகளிலுள்ள யானைகள் (அஷ்ட கஜங்கள்) அயர்ந்து அசைவு உறச், சிலசில பம்பை (பறைவகை) என்னும் வாத்தியங்கள் தத்தன தானத் தடுடுடு என்று ஒலிக்க, (செப்பறை தாளம்—தாளம் செப்பு அறை) தாளங்கள் ஒலிக்கும் ஒலி தொகு தொகு என்று ஒலிக்கச், சிலபேரி (முரசு) வாத்தியங்கள்

(தடிபடு சம்பத்து உற்பனமாக) இடி இடிப்பதுபோலவும், மின்னல் மின்னுவதுபோலவும் தோற்றம் கொடுக்க— காட்சியை அளிக்க, அற்புதமான (மாகத்து) விண்ணுலகத்துத் தேவர்கள் தங்கள் ஊர் (பொன்னுலகத்தைத்) திரும்பப் பெற்று, அவ்வூர்க்கு உள்ள செல்வங்களையுமடைந்து (புஷ்பமாரியாகப்) பொன் மலர்களைச் சிந்தச், செலுத்தின வேலாயுதத்தை யுடையவனே!

உண்மைப் பொருளை அறிந்த ஞானியாம் குறமகள் வள்ளியும், (உம்பல்) யானை (ஐராவதம்) வளர்த்த (சித்திரை) அழகை உடையவளாம் தேவசேனையும், (நீடு) மேம்பட்ட அந்த வாகனமாம் மயிலும், சந்நிதியில் விளங்கப் பெற்று **உத்தர கோசமங்கை** என்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற கந்தப் பெருமாளே! [ஞான அமுதை உண்டிட்டிடுவேனோ]

இராமேசுரம்

987.

பால்ய வயதை (கட்டிளமை வயதை) அடைந்து, அழகு நிரம்பப் பெற்று, (மதனுகி) மன்மதன்போல விளங்கி, பணி வாணிபமொடு ஆடி,—வாணிபப் பணியொடு ஆடி— ஊதியத்தை—(லாபத்தைத்) தரவல்ல பல தொழில்களை மேற்கொண்டு நடத்தி, (மருளாடி) மருட்சி — மயக்க அறிவைப் பெற்றுக், (கலவியிற்) காலம் போக்கி, விழல் வாழ்வு சதமாகி—பயனற்ற வாழ்க்கையையே நித்தியமெனக் கொண்டு, அத்தகைய வாழ்விலேயே மனது உறுதிபெற்று, மாடகூடம் கொண்ட செல்வனாய்ப் பொருளைத் தேடி—

வாசபுழு கேடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்;

தோல்திரைக ளர்கிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறி*தடி யோடுதிரி யுறுநாளிற்-

சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ;

நாலுமுக ஞதியரி யோமென †அ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே-

நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதை‡தினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா;

---

* 'தடிகொண்டு நடத்தல்'—முதுமை வர்ணனை —பாடல் 554-அடி 3-4; பக்கம் 262-கீழ்க்குறிப்பு x.

† அதாரம்—ஆதாரம். பிரமனைக் குட்டியது—பாடல் 608 பக்கம் 406-கீழ்க்குறிப்பு †† பார்க்க. 'ஓம்' என்பதன் பொருள் தெரியாது பிரமன் மயங்கினன்—

"குமரவேள் * * ஓமெனப்படும் மொழிப்பொருள் இயம்புகென் றுரைத்தான்"

"தாமறைக் கெலாம் ஆதியும் அந்தமும் சொல்லும்
ஓமெனப்படும் ஓரெழுத் துண்மையை உணரான்
மாமலர்ப் பெருங் கடவுளும் மயங்கினன்"

...கந்தபுரா 1-16-9, 13.

‡ காவில் மணம் மேவியது: "இளைய மங்கையை இருளை எனவின், விளைதரும் புனம் மெல்ல நீங்கியே, அளவில் மஞ்ஞைகள் அகவும் மாதவிக், குளிர் பொதும்பரிற் கொண்டு போயினள். ...எடுத்தனன் புல்லினன் இன்பம் எய்தினன்"

(பொதும்பர்—இளமரக்கா.)—கந்தபுரா 6-24-140, 143.

நறுமணம் உள்ள புனுகு, (ஏடுமலர்) இதழ்களோடு கூடிய மலர் இவைகளில் (மனமாகி) மனத்தைச் செலுத்தினவனாய், மகிழ்ச்சியுடன் வாசனைப் பொருள்கள் முதலியவற்றை அணிந்தவனாய், காமப் பற்றைக் கொண்டு, பொது மகளிரை விரும்பி, அவர்கள் மீது கொண்ட ஆசையிலே சுழல, அங்ஙனம் சில நாள் போக—

உடலின் தோல் சுருங்கலுற்று, (மயிர்) வெண்ணிறம் பூண்டு, குருடனாகி, இரண்டு கால்களும் தடுமாற்றம் அடைந்து, காது (மாறி) கேட்குந்தொழில் அற்று, (பசு, பாசம், பதி—) (உயிர், தளை, கடவுள்) என்னும் முதற் பொருள்களைப் பற்றிய அறிவு (பசு ஞானம், பாச ஞானம், பதி ஞானம்)—என ஏற்பட்டிருந்த அறிவு வழிகள் யாவும் மறைதலுற்று, சுகமெலாம் கெட்டுத் தடிகொண்டு நடந்து திரியும் நாள்களில்—

சூலைநோய், சொறிநோய், ஈளைநோய் [கோழை], வலிகள் [இழுப்புக்கள்], வாதம் [வாயு மிகுதலால் வரும் பிணிகள்], நீரிழிவு, [சோகை] ரத்தமின்மை, கண்டமாலை [கழுத்தில் வரும் நோய்], சுரம், இவைகளுடன் சேர்ந்துள்ள [தூறிருமல்] கிளைத்தெழுகின்ற இருமல் இவையெலாம் சூழ்ந்து பற்ற, அடிக்காரணமாம் [கசுமாலம்] ஆபாச மென்னும்படியான [உடல்நாறி] இந்த உடல் துர்நாற்றம் அடைந்து அழிதல் உறுவேனோ!

நான்கு முகங்களைக் கொண்டவனும், "ஆதி அரி ஓம்" என்பதற்கு ஆதாரமான பொருளைச் சொல்லத் தெரியாதவனும் ஆகிய பிரமாவை விழும்படித் தாக்கிப் பொருளைச் [சரியானபொருளைச்] சொல்லுக என்று அவனது நான்கு தலைகளும் குடுமிகளும் சிதறுண்டு அலையத் [தாளமிடு] தாளமிடுவது போலக் குட்டின இளையோனே!

நறுமணம் வீசும் கொன்றையை அணிந்த [வேணி] சடையர்—[அல்லது சடைச்சி], சிவரூபத்திலே [சிவனது இடதுபாகத்தில்] அமைந்துள்ள கலியாணி—பார்வதி இவர்—முதலில் ஈன்ற மகவு—குழந்தையாகிய யானை-கணபதி மகிழும் [தோழ] சகோதர நட்பாளனே! [அல்லது] கலியாணி முன்பு ஈன்ற [மகவு] குழந்தையே! [ஆனை] தேவசேனை மகிழும் தோழனே! [வள்ளிமலைக் காட்டிலே] பொருந்தி இருந்த ஞானகுறமாதாகிய வள்ளியைத் தினைப்புனச் சோலையில் மணம பூண்ட புகழ் வாய்ந்த மயில் வீரனே!

*ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக-

---

* (1) தாடகை சுவாகு வதம் — பாடல் 431-பக்கம் 582-கீழ்க்குறிப்பு ; பாடல் 508-பக்கம் 158-கீழ்க்குறிப்பு.

தாடகை ஓலமிட்டு ஆர்ப்பரித்துச் சப்தத்துடன் வந்தாள்—
"வானோர் இடங்களும் நெடுந்திசையும் ஏழுலகு மெங்கும்
அடங்கலு நடுங்க வருமஞ்ச னணியார்த்தாள்"

ஆர்த்துவந்த அரக்கியை 'நீ கொல்லுக; அது அறச்செயலே' என்று விசுவாமித்திரர் கூற இராமபிரான்...தமது பாணத்தால் கொன்றனர்: பாணம்பட்டு அவள் விழுந்ததை—

"கடையுகத் தெழுந்த மேகம் மின்னொடும் அசனியோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்"—என்றார் கம்பர்.

—கம்ப-ராமா-தாடகை வதை 50, 74.

(2) ஏழுமரம்—மராமாங்களை ஸ்ரீராமர் அட்டது :

—பாடல் 231-பக்கம் 78 கீழ்க்குறிப்பு.

(3) வாலிவதம்—பாடல் 231-பக்கம் 78, பாடல் 287-பக்கம் 214 கீழ்க்குறிப்பு; பாடல் 631-பக்கம் 470 கீழ்க்குறிப்பு.

(4) நீலி—நீலி—என்பது கறுத்த நிறம் கொண்ட அரக்கி—சூர்ப்பணகை, அல்லது அயோமுகி என்பவளைக் குறிக்கின்றது போலும்; தாடகையை "நீல அரக்கி" என்றார் 844-ஆம் பாடலில்;

"அல்லின் மாரி யனைய நிறத்தவள்"

—என்றார் கம்பர்-கம்பராமா-தாடகை 71.

(1) ராவணன் தங்கை சூர்ப்பணகை ராம லக்ஷ்மணர்களைக் கண்டு, காதல் கொண்டு, தன்னை மணஞ் செய்யுமாறு வேண்ட அவர்கள் மறுத்தமையால் சீதையை எடுத்துச் செல்ல அவள் தொடங்குகையில் இலக்குமணர் அவளது மூக்கு, முலை, காதுகளை அறுத்துத் துரத்தினர்.

(2) அயோமுகி என்னும் அரக்கி இலக்குமணரைக் கண்டு மோகம் கொண்டு தன்னை அணையும்படி வேண்ட இலக்குமணர் மறுக்க, அவரை மோகன மந்திரத்தால் மயக்கி எடுத்துக் கொண்டு செல்ல, மயக்கம் தெளிந்தவுடன் லக்ஷ்மணர் அவளுடைய மூக்கைத் துணித்து மீண்டனர்.

(5) பகன்—கண்ணனைக்கொல்லக் கம்சனால் அனுப்பப்பட்ட (பகம்) கொக்கு உருக்கொண்ட அசுரன், கண்ணபிரானால் வாய் பிளவுண்டு இறந்தான். யமுனைக் கரையில் பகாசுரன் கண்ணனை

[தொடர்ச்சி 857 ஆம் பக்கம் பார்க்க]

கூச்சலிட்டு வந்த தாடகை, சுவாகு, வளர்ந்திருந்த மராமரங்கள் ஏழு, வாலி, நீலி, பகன், ஒப்பற்ற விராதன், எழுந்து அலைகள் வீசும் கடல், வலிமை மிக்க ராவணன்—அவனைச் சேர்ந்த அரக்கர் கூட்டங்கள் யாவரும் போரிற் பொடிபட்டழிய—

[856 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விழுங்க, அவன் நெஞ்சில் கண்ணன் நெருப்புப்போல எரிக்க, அவன் கண்ணனை உமிழ்ந்து மூக்கால் குத்த நினைக்கையில், அந்தக் கொக்கின்வாய் அலகுகளை இரு கைகளாலும் பற்றிக் கண்ணன் அப் புள்ளைக் கிழித்தெறிந்தான்.

"பள்ளத்தில் மேயும் பறவை யுருக்கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான்கண்டு
புள்ளிது என்று பொதுக்கோ வாய்கீண்டிட்ட பிள்ளை"
—பெரியாழ்வார் 2-5-4.

கும்பகர்ணனைக் — கும்பாகன் (பாடல் 374), கும்பன் (பாடல் 839), கும்பகன் (பாடல் 965) என்றார்; அவனையே இங்கு 'பகன்' என்றார் எனவும் கொள்ளலாம். திருமாலின் பல அவதாரச் செயல்களை ஒன்று சேர்த்துங் கூறுவர் அருணகிரியார் —பாடல் 775 பார்க்க.

(6) **விராதன்**—இவன் வீணை வாசிக்கும் தம்புரு என்னும் கந்தருவன்; ரம்பையுடன் காம விகாரத்தால் ஊடல் கொள்ள குபேரன் இவனை அரக்கனும்படிச் சபித்தனன். இராமபிரான் காட்டில் வாசஞ் செய்தபோது சீதையை இந்த அரக்கன் தூக்கிச்செல்ல இராம இலக்குமணரால் கையறுப்புண்டு ராமர் தாள்பட்ட பாக்கியத்தால் சுவர்க்கம் அடைந்தான்.

"விராத னெனுமக், கோர வெங்கணுரு மேறன கொடுந் தொழிலினன்...மலரன்னம் அனையாளை ஒருகைச், சொல்லும் எல்லையில் முகந்து உயர் விசும்பு தொடர" * *
'சேவடியினால் அமலன் உந்துதலுமே' சாபம் விட்டு ° ° விளங்கினன்.

"கரக்கவந்த காமநோய், துரக்க வந்த தோமினால்,
இரக்கமின்றி யேவினன், அரக்க மைந்தனுயினேன்"
"வேதநூல், பூண்டநின் பொலங்கொள் தாள்,
தீண்டலின்று தேரினேன்"
—கம்பராமா. விராதன்வதை 19, 20, 45, 46, 66, 70.

(7) கடலை அட்டது:—பாடல் 177-பக்கம் 412 கீழ்க்குறிப்பு பாடல் 754-பக்கம் 248 கீழ்க்குறிப்பு.

ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவெ
யோதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமாளே. (௧)

988. மாதர்மீதுள மயக்கு அற

தானா தனத்ததன தானா தனத்ததன
தானா தனத்ததன தனதான

வானோர் வழுத்துமது *பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை யறியாதே-
மானார் வலைக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே யணைத்துதவு மதனாலே;
தேனே கருப்பிலெழு பாகோ விதற்கிணைக
ளேதோ வெனக்கலவி பலகோடி-
தீரா மயக்கினொடு நாகா படத்திலெழு
சேருடல் பெற்றதுய ரொழியேனோ;
மேனாடு பெற்றுவளர் சூராதி பற்கெதிரி
னூடேகி நிற்குமிரு கழலோனே-
†மேகார வுக்ரபரி தானேறி வெற்றிபுனை
வீரா குறச்சிறுமி மணவாளா;
‡ஞான பரற்கினிய வேதாக மப்பொருளை
நாணா துரைக்குமொரு பெரியோனே-
நாரா யணற்குமரு காவீறு பெற்றிலகு
ராமே சுரத்திலுறை பெருமாளே. (௨)

---

* பாதாரம்—பாதாரவிந்தம்
—பாடல் 220-பக்கம் 56-அடி 1 பார்க்க.

† மேகாரம்—பாடல் 149-அடி 4 பார்க்க.

‡ சிவபிராற்கு முருகவேள் உபதேசித்தது
—பாடல் 327-பக்கம் 314 கீழ்க்குறிப்பு.

களிப்புடன் நெருப்பு வீசும் அம்பைச் செலுத்தின, [கையை உடையவன்], வலிமை வாய்ந்த வில், சக்கரம், சங்கு இவைகளை ஏந்தின கையை உடையவன், இலக்குமி வாசம் செய்யும் திருமார்பை உடையவன், அரி, [கேசன்] கேசவன், ஆகிய திருமாலின் மருகனே! என்று மறைகள் ஓதிப்புகழும் **ராமேசுரத்தில்** வீற்றிருக்கும் குமரனே! தேவர் பெருமாளே!

[நாறி உடல் அழிவேனோ]

988.

தேவர்கள் போற்றுகின்ற உன்னுடைய திருவடித் தாமரையாம் மலர் மேலே பணி செய்யும் வகையை உணராமல்—

[மான் விழியராம்] மாதர்களின் கண்வலையிலே [பட்டு] [தூளி] பூந்தாதுகள் நிறைந்த மெத்தையினில்—ஊடே—மெத்தைப் படுக்கையிலே—அணைத்துப் பெறும் அந்த [சிற்றின்ப] நிகழ்ச்சியால்—

தேனே, கரும்பிலிருந்து வரும் சர்க்கரைக் கட்டியோ, இதற்குச் சமமாவன பின் எவை தானோ—என்று கூறிப் புணர்ச்சி பல கோடிக் கணக்காக—பலவாகத்—

[தீராத] அடங்காத மோகத்தோடு [நாகபடம் போன்ற] அல்குற் சேற்றில் விளையாடுதலால் அடைந்துள்ள துயரத்தை விலக்க மாட்டேனோ!

மேல் நாடாகிய விண்ணுலகத்தையும் [போரில்] வென்று அடைந்து, மேம்பட்ட சூராதிபனாகிய சூரபத்மாவின் எதிரே போரிற் புகுந்து நின்ற இரண்டு திருவடிகளை உடையவனே!

மயில் என்கின்ற உக்ரமான வாகனத்தில் ஏறி அமர்ந்து வெற்றி பெற்ற வீரனே! குறச்சிறுமி [வள்ளியின்] மணவாளனே!

ஞானபரன்—ஞானப் பரம்பொருளாகிய சிவபிரானுக்கு இனிமையான வேதாகமங்களின் பொருளை—வேதப் பொருளையும் ஆகமப் பொருளையும்—கூசாமல் எடுத்து உபதேசித்த ஒப்பற்ற பெரியோனே!

நாராயண மூர்த்திக்கு மருமகனே! [வீறு] சிறப்பு பெற்று விளங்கும் **ராமேசுரத்தில்** வீற்றிருக்கும் பெருமாளே!

[துயர் ஒழியேனோ]

இடம் விளங்காத ஸ்தலங்கள்.

1. இந்தம்பலம்.

989. திருவடியைப் பெற

தனன தனதனன தந்தந் தனத்தன
தனன தனதனன தந்தந் தனத்தன
தனன தனதனன தந்தந் தனத்தன தனதான

அமல *கமலவுரு †சங்கந் தொனித்த ‡மறை
அரிய பரமவெளி யெங்கும் பொலித்தசெய
xலளவு மசலமது கண்டங் கொருத்தருள வறியாத-

oதகர் முதலுருகொ ளோம்பந் தொரக்ஷரமொ
டகில புவனநதி யண்டங் களுக்குமுத
லருண கிரணவொளி யெங்கெங் குமுற்றுமுதல் நடுவான;

கமல துரியமதி லிந்துங் கதிர்ப்பரவு
கனக நிறமுடைய பண்பம் **படிக்கதவ
ககன சுழிமுனையி ††லஞ்சுங் களித்தமுத ‡‡சிவயோகம்-

கருணை யுடனறிவி தங்கொண் டிடக்கவுரி
குமர குமரகுரு வென்றென் றுரைப்பமுது
கனிவு வரஇளமை தந்துன் பதத்திலெனை யருள்வாயே;

---

* கமலம்—1008 இதழோடு கூடிய குருகமலம்
—பாடல் 439 பக்கம் 598 கீழ்க்குறிப்பு o-பார்க்க.

† சங்கம்—சங்க ஒலி—பாடல் 179-பக்கம் 416 கீழ்க்குறிப்பு; இந்த ஒலி யோகியர்க்கே தெரிவது.

"கடலொடு மேகம் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லால்தெரி யாதே" - திருமந்திரம் 607.

‡ மறை—இரகசியம். x அளவும்—அளவிட் டறியும்.

o "அகர முதலான 51 அக்ஷரங்கள்"—
—பாடல் 966-பக்கம் 800 கீழ்க்குறிப்பு-திருப்புகழ் 1127-ம் பார்க்க.

[தொடர்ச்சி 861 ஆம் பக்கம் பார்க்க]

இந்தம்பலம்
989.

(அமல) மாசு இல்லாததாய், (கமல உரு)—[ஆறு தாரங்களுக்கு அப்பால் உள்ளதாய் 1008 இதழோடு கூடிய]—குருகமல உருவிடத்தே (பிராண வாயுவைச் செலுத்த அப்போது உண்டாகும்) சங்கம் தொனித்த மறை—சங்க நாதம்—சங்கஒலி உண்டாகும் (மறை) ரகசியமாய், அருமையாய், மேலான தான ஞான வெளி எங்கும் பொலிவுறும் செயலை அளவிட்டறியும் (அசலம் அது கண்டு) நிலை பெற்றதான தன்மையை உணர்ந்தும், அவ் விடத்தில் எவராலும் தனது (உளவு) உண்மைத் தன்மையை அறிய முடியாததாய்—

அகாராதி க்ஷகாராந்தம் உருக் கொண்டுள்ள ஐம்பத்தொரு அக்ஷரங்களுக்கும், சகல லோகங்களுக்கும், நதிகளுக்கும், அண்டங்களுக்கும் முதன்மை பெற்றதாய், செந்நிறச் சுத்த சோதிப்பேரொளியை எல்லா இடங்களிலும் வீசிப் பொருந்தியதாய், முதலும் நடுவுமாய்—

(கமல துரிய மதில்) துரியம்—யோகியர் தன் மயமாய் நிற்கும் உயர் நிலையாம் பிரமரந்திர கமலத்தில் சந்திரகாந்தி பரந்துள்ளதும், பொன்னொளி வீசும் தன்மை கொண்டதும், அழகிய ஸ்படிக நிறமான சுத்த வாயிலைக் கொண்ட ஆகாய வெளியில் — பரவெளியில்,—சுழிமுனை நாடியின் உச்சியில் (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) பஞ்சேந்திரியங்களும் இன்பம் பெறக்கூடியதாய் (விளங்கும்) அமுதம்போல இனிக்கும் சிவயோக நிலையை

உனது கருணையால் அறியும்படியான வழியை (நான்) அடையவும், 'பார்வதியின் குமரனே! குமர குருவே' (என்றென்று) என்று பலமுறை கூற—முதிர்ந்த கனிந்த பத்தி நிலை வர—அதற்கு வேண்டிய பால்ய வலிமையைத் தந்து உன் திருவடியில் என்னைச் சேர்த்தருளுவாயாக.

°° படிக் கதவம்—படிகக் கதவு. "இந்து ஒளிர் சோதிவிண் படிகம்"—பாடல் 766 அடி 2.

†† அஞ்சும்—பஞ்சேந்திரியங்களும்.

‡‡ சிவயோகத்தின் நிலை—பாடல் 357-அடி 1-3-பார்க்க.

திமிலை பல*முருடு திந்திந் திமித்திமித
டுமுட டுமுடுமுட டுண்டுண் டுமுட்டுமுட
திகுட திகுடதிகு திந்திந் திகுர்த்திகுர்த திகுதீதோ-
செகண செகணசெக செஞ்செஞ் செகக்கணென
அகில முரகன்முடி யண்டம் பிளக்கவெகு
திமிர்த குலவிருது சங்கந் தொனித்தசுரர் களமீதே;
அமரர் குழுமிமலர் கொண்டங் கிறைத்தருள
†அரிய குருகுகொடி யெங்குந் தழைத்தருள
அரியொ டயன் முனிவ ரண்டம் பிழைத்தருள விடும்வேலா-
அரியின் மகள் தனமொ டங்கம் புதைக்க முக
அழகு புயமொடணை யின்பங் களித்துமகிழ்
அரிய மயிலயில்கொ டிந்தம்'பலத்தின் மகிழ் பெருமாளே. (க)

---

2. எழுகரை நாடு.

---

990. பேரின்பப் பொருளைப் பெற

தனதன தாத்தன தனதன தாத்தன
தனதன தாத்தன தந்ததான

‡விரகற நோக்கியு முருகியும் வாழ்த்தியும்
xவிழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்-

---

* முருடு—ஒரு வாத்தியம்.

† 'கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி வாழியபெரிதென் றேத்தி', 'வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ', 'மாண்டலைக் கொடியொடு மண்ணி'—திருமுருகாற்-38, 219, 227.

‡ விரகு—தந்திரம்—வஞ்சனை—துரியோதனன் பாண்டவர்கள் இருக்க அரக்குமாளிகை வகுத்தது—
'மெழுகினல் நமக்காலயம் வகுத்ததும் விரகே'
—வில்லிபாரதம்-வாரணாவ 119.

x "கண்ணில் ஆனந்த வெள்ளம் மெய்யெலாம் பொழிய"
"கண்ணும் பொழி மழை யொழியாதே"
"கண்ணி லானந்த அருவி நீர் சொரிய"
—பெரிய புரா-சம்பந்-865; திருநாவு-167; சுந்தரர்-தடுத்தாட் 107.

[தொடர்ச்சி 863 ஆம் பக்கம் பார்க்க.]

(திமிலை) பறையும், (பல முருடு) பல மத்தள வகைகளும் இந்திந் திமித்திமித...திந்திந் திகுர்த்திகுர்த திகுதீதோ

செகண செகண செக செஞ்செஞ் செகக்கண் என்று ஒலிக்கவும், பிரபஞ்சம் எல்லாமும், ஆதிசேடன் முடிகளும், அண்டங்களும் பிளந்து போம்படி மிக்க (திமிர்தம்) பேரொலியை எழுப்பும் (கூட்டமான) பல வெற்றிச் சின்னங்களைச் சங்கங்கள் (தொனித்து) ஒலி எழுப்பவும், அசுரர்களோடு பொருத போர்க்களத்திலே—

தேவர்கள் ஒன்றுகூடி (பொன்) மலர்கள் கொண்டு அங்கே இறைத்தருள (பூமாரி பொழிய), அருமைவாய்ந்த கோழிப்பறவையின் கொடி எங்கும் பரந்து விளங்கத், திருமாலும், பிரமனும், முனிவர்களும், அண்டங்களும் பிழைத்து உய்யச் செலுத்தின வேலாயுதனே (வேலைச் செலுத்தினவனே)!

திருமாலின் புதல்வி வள்ளியின் கொங்கைகளிலே உனது உடல் புதையும்படிக் கூடித், திருமுக அழகுடன் திருப்புயங்களால் அவளை அணைத்து இன்பச் சுகத்தில் திளைத்து மகிழ்கின்ற பெருமாளே! அருமை வாய்ந்த மயிலுடனும் வேலாயுதத்துடனும் **இந்தம்பலம்** என்னும் தலத்தில் மகிழ்கின்ற பெருமாளே!

(உன் பதத்தில் எனை அருள்வாயே)

---

2. எழுகரை நாடு

990.

(விரகு) தந்திரம் இன்றி உண்மை நிலையுடன் உன்னைக் கருதியும், (உன்னை நினைந்து) உருகியும், (உன் திருநாமங்களைக் கூறி உன்னை) வாழ்த்தியும், கண்களில் நீர் நிறைந்து வழிய, அன்பு மேலும் மேலும்

[862-ஆம் பக்கத் தொடர்ச்சி]

"என்னை யாண்டாய்க்கு உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளந்தான் பாயாதால்"—திருவாசகம்-சதகம் 21.

மிகவு*மி ராப்பகல் பிறிதுப ராக்கற
†விழைவுகு ராப்புனை யுங்குமார ;
முருக‡ஷ டாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி-
மொழிகுழ ருத்தொழு xதழுதழு தாட்பட
0முழுதும லாப்பொருள் தந்திடாயோ ;
**பரகதி காட்டிய விரகசி லோச்சய
பரமப ராக்ரம ††சம்பராரி-
படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே ;

° "இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்"
—அப்பர் 4-1-1.

† குரவு—முருகருக்கு உகந்த மலர் — திருவிடைக்கழியிலும் பழநியிலும் குராவடி வேலர் விளங்குவர்..."திருவிடைக்கழியில் திருக்குரா நீழற் கீழ்நின்ற வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்" — திருவிசைப்பா-7-1. "அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்த அன்பால், குராப் புனை தண்டையந் தாள் தொழல் வேண்டும்"—கந்தர் அலங்-74.

‡ சடாக்ஷரம்—ஆறெழுத்து—பாடல் 326, 327 (பக்கம் 310, 315) கீழ்க்குறிப்புக்களைப் பார்க்க. (பாடல் 191-ம் பார்க்க).

ஆறெழுத்தில் ஒரு எழுத்து மோக்ஷத்தைத் தரும் ; ஒரு எழுத்து வஜ்ர தேகத்தைத் தரும் ; ஒரு எழுத்து செல்வத்தைத் தரும்; ஒரு எழுத்து திருவருளைத் தரும் ; ஒரு எழுத்து ஞானத்தைத் தரும்; ஒரு எழுத்து திருவடியைத் துதிக்கும் அறிவைத் தரும்—என்பர்.

"கதிகாட்டும் ஓரெழுத் தோரெழுத் தேவஜ்ர காயந்தரும்
நிதிகாட்டும் ஓரெழுத் தோரெழுத் தேயுள் நிரப்புமருள்
மதிகாட்டும் ஓரெழுத் தோரெழுத் தேயென்னுள் வைத்த
பொற்றாள்
துதிகாட்டும் மே ; குக ! நின்னா றெழுத்துள்ள சூத்திரமே"
—ஆறெழுத்தந்தாதி.

x அழுதழுது ஆட்பட்டால் தான் இறைவனை அடைதல் கூடும்-
"அழுதால் உன்னைப் பெறலாமே"—திருவாசகம்-சதகம் 90.

0 முழுதும் அல்லாப் பொருள்—உலகப்பொருள் யாவற்றையுங் கடந்த பொருள்.

[தொடர்ச்சி 865 ஆம் பக்கம் பார்க்க]

பெருகவும், இரவும் பகலும் உன்னை நினைக்கும் நினைவு தவிர வேறு சிந்தனைகள் அற்று ஒழிய, '(உன்) விருப்புக்குரிய குராமலரை அணியும் குமர மூர்த்தியே!

முருகனே! சடாக்ஷர மூர்த்தியே (ஆறெழுத்தண்ணலே)! சரவண (பவனே)! கார்த்திகை மாதர்களின் கொங்கை (முலைப்பாலை)ப் பருகின அரசே!' (என்றெல்லாம்) பாடி

மொழிகள் குழறும்படி (உன்னைத்) துதிசெய்து வணங்கி, அழுது அழுது—ஓயாமல் அழுது—நான் உனக்கு ஆளாக— (எதுவும் அல்லாததான பொருளை) உலகப் பொருள் யாவற்றையும் கடந்த (ஞானப்) பொருளை—இது என்று சுட்டிக்காட்ட இயலாத அந்தப் பொருளை—அடியேனுக்குத் தரமாட்டாயா! (தந்தருளுக என்று வேண்டியதாகும்);

[உலகோர்க்குத் தேவார மூலமாய், (அல்லது அடியேனுக்கு உபதேச மூலமாய்)ப்] பரகதியை—மோக்ஷ வீட்டைக் காட்டின (விரக) சாமர்த்தியசாலியே! (சிலோச்சய) மலையரசே! மகா பராக்ரமசாலியே! (சம்பராரி) மன்மதன்

அழிய, (நெற்றிக்)கண் கொண்டு அவனை எதிர்த்தழித்த (பசுபதி) சிவபிரான் போற்றித் துதித்த (வாழ்வே)! பகவதியாம் பார்வதி ஈன்றருளிய (வாழ்வே) செல்வமே!

[864 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முழுதுமலாப் பொருள்:

"வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரியன்று சரீரியன்றே"-கந்தரலங்-9.

"உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே"—கந். அநுபூதி 13.

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை, மலையல்லை கடலல்லை
வாயுவல்லை, எண்ணலல்லை, எழுத்தல்லை எரியும் அல்லை
யிரவல்லை, பகலல்லை யாவும் அல்லை"—அப்பர் 6-45-9.

°° பரகதி காட்டினது: இதை அருணகிரியாரின் வரலாற்றுக் குறிப்பாகவும் கொள்ளலாம்.

†† சம்பராரி-மன்மதன்-பாடல் 888-பக்கம் 594 கீழ்க்குறிப்பு.
மன்மதனைச் சிவபிரான் எரித்தது—பாடல் 399 பக்கம் 510.
சிவபிரான் கந்தவேளைப் போற்றினது-உபதேசம் பெற்றபோது-
—பாடல் 982-பக்கம் 840 கீழ்க்குறிப்பு.

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
*எழுகிரி யார்ப்பெழ வென்றவேலா-
†இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
‡எழுகரை நாட்டவர் தம்பிரானே. (க)

---

3. ஒடுக்கத்துச் செறிவாய்.

---

991. நல்ல புத்தியைப் பெற

தனத்தத் தத்தன தாத்த தத்தன
தனத்தத் தத்தன தாத்த தத்தன
தனத்தத் தத்தன தாத்த தத்தன தனதான

வழக்குச் சொற்பயில் வாற்ச ளப்படு
xமருத்துப் பச்சிலை தீற்று மட்டைகள்
வளைத்துச் சசித்தச **சாத்தி ரக்கள வதனாலே-
மனத்துக் கற்களை நீற்று ருக்கிகள்
சுகித்துத் தெட்டிக ளூர்த்து திப்பரை
மருட்டிக் குத்திர வார்த்தை செப்பிகள் மதியாதே;
கழுத்தைக் கட்டிய ணுப்பி நட்பொடு
சிரித்துப் பற்கறை காட்டி கைப்பொருள்
††கழற்றிக் கற்புகர் மாற்று ரைப்பது கரிசாணி-

---

* எழுகிரியைச் சாடினது
—பாடல் 257-பக்கம் 140 கீழ்க்குறிப்பு.

† குடி எற்றினது — சூரசம்மாரம் ஆனபின்பு முருகவேள் அழிபட்ட பொன்னுலகை முன்போல ஆக்கும்படித் தெய்வத் தச்சனிடம் கூற, அவனும் பொன்னுலகைப் பொன்னுலகாக்க, அவர் இந்திரனுக்கு முடிசூட்டி மகிழ்வித்தார்-என்பது கந்தபுராணம்-
"இந்திரன் அனைய காலை எம்பிரான் முன்னர் எகி
வந்தனை புரிந்து போற்றி வளமலி துறக்க நாடு
முந்துள அரசுஞ் சீரும் முழுதொருங் களித்தி எந்தாய்
உய்ந்தனன் இதன்மேல் உண்டோ ஊதியம் ஒருவர்க்
கென்றான்" —கந்தபுரா 5-3-42.

‡ எழுகரை நாடு கொங்கு மண்டலத்தைச் சேர்ந்தது. கொங்குமண்டல சதகம்-பக்கம் 61.

எழுகரைநாடு என்று ஒரு தனித்தலமும் குடகு நாட்டில் உளதென்பர். [தொடர்ச்சி 867 ஆம் பக்கம் பார்க்க]

ஒலிக்கின்ற கடல் எரிபடவும், அசுரர்கள் அலறிக் கூச்சலிடவும், எழுகிரிகளும் பேரொலியிட்டுக் கூச்சலிடவும் ஜெயித்த வேலனே!

தேவர்களின் உலகில் (பொன்னுலகில்) தேவர்கள் யாவரையும் நிறைவுற்ற குடியாக அமரும்படி குடியேற்றின தம்பிரானே! எழுகரை நாடு என்னும் தலத்தவர் தம் தம்பிரானே (முழுது மலாப் பொருள் தந்திடாயோ)

---

3. ஒடுக்கத்துச் செறிவாய்

991

வழக்காடும் சொற்களிற் பயின்றுள்ள தால், (சளப்படு) வஞ்சனைக் கிடமான மருந்துப் பச்சிலைகளைத் (தீற்றும்) ஊட்டுகின்ற — உண்ண வைக்கின்ற — (மட்டைகள்) பயனிலிகள், (ஆடவர்களைத் தமது வலையில்) இழுத்து வளைத்து மன்மத சாத்திரத்தில்-கொக்கோக சாத்திரத்திற் கூறியுள்ள (களவதனாலே) வஞ்சன வழியாலே—

(தம்மிடம் வந்தவர்களின்) கல் போன்ற மனத்தையும் பொடிபடுத்தி உருக்க வல்லவர்கள், சுகத்தையடைந்தே (தெட்டிகள்) வஞ்சிப்பவர்கள், ஊரில் தம்மைத் துதித்துப் போற்றுபவர்களை (மருட்டி) மயக்கி, (குத்திர வார்த்தை) வஞ்சக வார்த்தைகளைப் பேசுபவர்கள், மதிப்புவைக்காமலே-

கழுத்தைக் கட்டி (அணுப்பி) ஏமாற்றி, நண்பு காட்டிச் சிரித்து, பல்லில் (வெற்றிலை உண்ட) (கறை) நிறத்தைக் காட்டிக், கையில் உண்டான பொருளைப் பிடுங்கிக், (கல்) ரத்னக்கல் (கிடைத்தால்) அதன் (புகர்)—நிறம், குற்றம் முதலியனவற்றையும், (மாற்று) தங்கம் (கிடைத்தால்) (உரைப்பு அது) அதன் மாற்றறிய உரைக்கை, (கரிசு) குற்றம் இவை தமை அறிய (ஆணி) உரையாணி (பொன் உரைக்கும் கல்) கொண்டும்

(தொடர்ச்சி) x மருத்துப் பச்சிலை-பாட்டு 230-பக்கம் 74 குறிப்பு.

o சித்தசன் (மனத்தில் தோன்றுபவன்) மன்மதன்.

oo "சாத்திரக் கடல் வழியாலே"—என்றும் பாடம்.

†† 'கழற்றிக் கைப்புக மாற்றி முப்பது கரிசாணி' என்றும் பாடம்.

கணக்கிட் டுப்பொழு தேற்றி வைத்தொரு
பிணக்கிட் டுச்சிலு காக்கு பட்டிகள்
கலைக்குட் புக்கிடு **பாழ்த்த புத்தியை** **யொழியேனோ ;**

*அழறகட் டப்பறை மோட்ட ரக்கரை
நெருக்கிப் பொட்டெழ †நாக்கி யக்கணம்
அழித்திட் டுக்குற வாட்டி பொற்றன கிரிதோய்வாய்-

‡அகப்பட் டுத்தமிழ் தேர்த்த வித்தகர்
சமத்துக் கட்டியி லாத்த முற்றவன்
அலைக்குட் கட்செவி மேற்ப டுக்கையி லுறைமாயன் ;

* 'அழுக்குப் பப்பர' என்றும் பாடம்.

† 'நோக்கி' என்றும் பாடம். [பாடல் 263-பக்கம் 155 குறிப்பு †]

‡ தமிழ் வித்தகர் சமத்தில் ஆத்தம் உற்றவன் திருமால் என்பது அவர் திருமழிசை ஆழ்வாரின் சொற்படி நடந்த வரலாறு:—பாடல் 3-பக்கம் 26-கீழ்க்குறிப்பு-இதன் விவரம் :—

காஞ்சியில் திருமழிசை ஆழ்வாரிடம் கணிகண்ணன் என்பவர் பணிவிடை செய்து வந்தனர். ஒரு கிழவி ஆழ்வார் இருந்த இடத்தில் அலகிடுதல், மெழுகுதல் ஆதிய வேலை செய்து வந்தாள். ஆழ்வார் அனுக்கிரகத்தால் அவள் முதுமை நீங்கி அழகிய இளமை வாய்ந்த சுந்தரியானுள். இவ் வரலாற்றை அறிந்த அரசன் அவளைத் தன் பட்டமகிஷி ஆக்கிக்கொண்டு தானும் இளமை அடைவதற்கு வழி யாதென்று அவளை வினவ, அவள் 'ஆழ்வாருக்கு அந்தரங்க நண்பர் கணிகண்ணர் என்பவர். அவர் இங்கு பிக்ஷைக்கு வருவார். அவர் மூலமாகக் காரியத்தை நிறைவேற்றலாம்' என்றனள். அரசன் கணிகண்ணரைக் கண்டு தனது எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும்படி வேண்ட, அவர் அரசன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. கணிகண்ணர் திருவாக்கால் தன்னைப் பாடப்பெற்றால் நன்மை பிறக்கும் என்றெண்ணித் தன்மீது கவிபாட வேண்டும் என்று அரசன் அவரை வேண்ட 'அவர் நான் நரஸ்துதி செய்ய மாட்டேன்-நாராயண ஸ்தோத்திரம் தான் சொல்வேன்' என்று கூறி—

'ஆடவர்கள் எங்ஙன் அகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் பொழிற் கச்சி மாண்பு' — என்று பாட அரசன்

சினந்து 'நம்மைப் பாடு என்றால் நகரத்தைப் பாடினாய்—நீ இவ்

(தொடர்ச்சி 869-ஆம் பக்கம் பார்க்க)

கணக்குப் பார்த்துக் காலம் கடத்தி வைத்துப் (பொழுது போக்கி)—(அதன் காரணமாக) ஒரு பிணக்கு இட்டு (சண்டையிட்டுச்), சிலுகு ஆக்கு—குழப்பம் உண்டு பண்ணும் (பட்டிகள்) வியபிசாரிகளின் (கலைக்குள்) புணர்ச்சிக்கு உரிய கரணங்களுள் நுழைகின்ற பாழான புத்தியை விலக்கமாட்டேனே!

(அழல் கண்) நெருப்புப் போன்ற கண்ணையும், (தப்பறை) பொய்யையும் சூதையும் கொண்ட (மோட்டு) மடமை கொண்ட அசுரர்களை (நெருக்கி) நசுக்கி, அவர்கள் (பொட்டெழ) பொடியாம்படி, (நூக்கி) முறித்துத் தள்ளி, அந்த க்ஷணமே அவர்களை அழித்துப், (பின்னர்) குறப்பெண் வள்ளியின் அழகிய கொங்கை மலையில் (தோய்ந்தவனே) அணைந்தவனே!

(தமிழ் தேர்ந்த வித்தகர் அகப்பட்டு (அல்லது — தேர்ந்த வித்தகர் தமிழ் அகப்பட்டு)—தமிழில் வல்ல அறிஞர்களிடத்தே (அகப்பட்டு) வசப்பட்டு — அல்லது சிறந்த அறிவாளிகளின் தமிழிலே வசப்பட்டு, (அப் புலவர்களின்) (சமத்துக் கட்டியில்) சாமர்த்தியமான இறுகிய பொருளில் (ஆத்தம்) இஷ்டம் கொண்டவன், கடலிலே (ஆதிசேடன் என்னும்) பாம்பின்மேற் படுக்கை கொண்டிருக்கும் (மாயோன்) திருமாலாம் (சிவமுனிவர்க்கு)

[868 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஊரை விட்டுப் போ' என அவரை வெருட்ட, கணிகண்ணர் ஆழ்வாரிடம் இந் நிகழ்ச்சியைக் கூற—ஆழ்வார் 'நாமும் உம்முடன் வருவோம்—பெருமாளையும் அழைத்துச் செல்வோம்' என்று கூறி-

'கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவொன்றிச்
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்'—என்று பாடினர்.

பெருமாளும் அவர் சொல்லுக் கிணங்க, மூவரும் அவ்வூரை விட்டு விலகப், பல திருக் கோயில்களில் இருந்த பெருமான்களும் ஊரை விட்டு விலகினார்கள்; காஞ்சி இருளடைந்தது. அரசன் நடு நடுங்கிக் கணிகண்ணரிடம் ஓடி வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டுமெனப் பணிய, அவரும் ஆழ்வாரிடம் இதை விண்ணப்பிக்க, ஆழ்வார்—

[தொடர்ச்சி 870 ஆம் பக்கம் பார்க்க]

உழைக்கட் பொற்கொடி மாக்கு லக்குயில்
விருப்புற் றுப்புணர் தோட்க்ரு பைக்கடல்
*உறிக்குட் கைத்தல நீட்டு மச்சுதன் மருகோனே-
†உரைக்கச் செட்டிய ஞய்ப்பன் முத்தமிழ்
மதித்திட் டுச்செறி ‡நாற்க விப்பணர்
ஒடுக்கத் துச்செறி வாய்த்த லத்துறை பெருமாளே. (க)

4. காமத்தூர்.

992. (அகப் பொருள்—நற்றுயிரங்கல்)

தானத் தானத் தானத் தானத்
தானத் தானத் தனதான

ஆகத் தேதப் பாமற் சேரிக்
கார்கைத் தேறற் கணையாலே-
x ஆலப் பாலைப் போலக் கோலத்
தாயக் காயப் பிறையாலே ;

[869 ஆம் பக்கத் தொடர்ச்சி]

'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கோள்'—என்று முன்பு பாடிய பாட்டை மாற்றிப்பாட மூவரும் முன்போல காஞ்சியிற் சேர்ந்து காஞ்சிக்குப் பொலிவு உண்டாக்கினர் — என்பது வரலாறு. இங்ஙனம் ஆழ்வார் சொன்னபடி பெருமாள் செய்ததால் பெருமாளுக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்று தமிழிலும், 'யதோக்தகாரீ' என்று வடமொழியிலும் பெயர் எற்பட்டது. இம் மூவரும் ஒரு இரவு தங்கியிருந்த ஊருக்கு 'ஓரிரவிருக்கை' எனப் பெயர் வந்தது. இது 'ஓரிகரை' என மருவி வழங்கப்படுகிறது.

* 'உறியை முற்றத்து உருட்டிநின் றுடுவார்
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்'—பெரியாழ் 1-1-4.

† செட்டியாய்த் தமிழ் மதித்தது: பாடல் 350-பக்கம் 378-கீழ்க்குறிப்பு † பார்க்க.

‡ முருகவேள் நாற்கவிப் புலவர்—கடவுட் புலவர்-என்பது—
'வாமன முனிக்கொரு தமிழ்த்ரயமும் அபரிமிதமாக
விவரித்த கடவுட் புலவன்'—பூதவேதாள வகுப்பு.

[தொடர்ச்சி 871 ஆம் பக்கம் பார்க்க.]

(உழைக்கண்) இலக்குமியாம் மானின் இடத்தே பிறந்த (பொற்கொடி) பொன் கொடி போன்ற அழகு சிறந்த குயிலனைய வள்ளிமீது காதல் கொண்டு அவளை அணைந்த தோளையுடைய கருணைக் கடலே! (வெண்ணெய், தயிர் வைத்திருந்த) உறிக்குள்ளே கையை நீட்டின அச்சுதன்—திருமாலின் மருகனே! (அல்லது, கட்செவிப் படுக்கையில் உறை மாயன், உழைக்கட் பொற்கொடி—மானுருவில் வந்த பொன்கொடி போன்றவளும், அழகு சிறந்த குயில் போன்றவளுமான இலக்குமியின் தோளை அணைந்த கருணைக்கடல், உறிக்குள் கையை நீட்டின அச்சுதன்—ஆகிய திருமாலின் மருகனே!)

உண்மைப் பொருளைத் தெரிவிக்கச் (செட்டியனாய்) ருத்ர ஜன்மர் என்னும் பெயர் கொண்ட செட்டிப் பிள்ளையாய்ப், பல சங்கப் புலவர்கள் கூறிய முத்தமிழ்ப் பொருள்களை ஆய்ந்து மதித்து நிறைந்த ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனப்படும் நால்வகைக் கவிகளிலும் வல்ல (கவிகளுடன்)—புலவர்களுடன் அணைந்த—சங்கப் புலவர்களுடன் கூடியிருந்த—பெருமாளே! அல்லது நால்வகைக் கவிகளும் கூடிய — நால்வகைக் கவிகளிலும் வல்ல பெருமாளே! **ஒடுக்கத்துச்செறிவாய்** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

(பாழ்த்த புத்தியை ஒழியேனே)

4. காமத்தூர்
992.

(ஆகத்தே) உடலிலே (தப்பாமல்) குறி தவறாது (சேர்) வந்து படுகின்ற (இக்கு ஆர் கை) கை ஆர் இக்கு—(மன்மதனது) கையில் உள்ள கரும்பு வில்லினின்றும் புறப்படும் (தேறல்) மது நிறைந்த (மலர்ப்) பாணங்களாலும்—

(ஆலம்) விஷம் கொண்டதாய், (பாலைப்போல) பால் போலும் வெண்ணிறத்ததாய், (கோலத்து ஆய) அழகு வாய்ந்ததான (காயம்) உடலை உடைய நிலவாலும்—

'பலர்புகழ் நன்மொழிப் புலவரேறே'-திருமுருகாற்றுப்படை.
'பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவன்'—கல்லாடம்.
'கொழுந்தமிழ் உணரு முதற் புலமைக் குக
கொட்டுக சப்பாணி'—திருவிடைக்கழி பிள்ளைத்தமிழ்.

போகத் தேசற் றேதற் பாயற்
பூவிற் றீயிற் கருகாதே-

போதக் காதற் போகத் தாளைப்
பூரித் தாரப் புணராயே;

தோகைக் கேயுற் றேறித் தோயச்
சூர்கெட் டோடப் பொரும்வேலா-

*சோதிக் காலைப் போதக் கூவத்
தூவற் சேவற் கொடியோனே;

பாகொத் தேசொற் பாகத் தாளைப்
†பாரித் தார்நற் குமரேசா-

பாரிற் காமத் தூரிற் சீலப்
பாலத் தேவப் பெருமாளே. (க)

---

5. முள்வாய்.

சித்தூரிலிருந்து பலமனேரி போகும் வழியில் ஏழாவது மைலில் இவ்வூர் உளதென்பர்.

993. இறைவன் உளம்புக

தன்ன தனந்த தந்த, தன்ன தனந்த தந்த
தன்ன தனந்த தந்த தனதான

மின்னார் பயந்த மைந்தர் தன்னொ டினங்கு விந்து
வெவ்வே றுழன்று ழன்று மொழிகூற-

---

* சோதி—சூரியன். 'புணரி யெழுஞ் சூரியனைப் புலரிக் காலைச்...சிறையடித்துத் தினந் தினமும் அழைத்துலவுஞ் சேவலே' —சேவற்பத்து.

† பாரிப்பு—விருப்பம்.

(போகத்து) புணர்ச்சி இன்பத்தில் (ஏசற்றே) ஆசைப்பட்டே (அல்லது புணர்ச்சி வேண்டி வருத்தமுற்று அதனால் (தன் பாயல்) (தன்) படுக்கையில், (தீயில் பூவில் நெருப்புப்பட்ட பூப்போலக் கருகிப் போகாமல்)

(போத) பிழைத்துப் போம்படி (காதல்) ஆசை வைத்துள்ள (போகத்—தாளை) இன்பத்துக்கு இடமாம் (உனது) தாளில்—திருவடியில்—பூரித்து ஆர—(என்மகள்) உள்ளத்து மகிழ்ச்சி நிறைந்து (ஆர) திருப்தி அடைய (அவளைச்) சேர்த்தருள மாட்டாயோ! [அல்லது—போதக் காதல்—(போதம்) நல்ல ஞானத்துடன் கொண்ட காதலை உடைய (போகத்தாளை)—இன்ப அநுபவத்துக்கு உரிய இவளை (என் மகளை) பூரித்து—உள்ளம் பூரித்து—உள்ள மகிழ்ச்சியுடன் ஆர—நன்கு கூடியருளமாட்டாயோ—நன்கு கூடியருளுக—என்றபடி]

தோகைக்கே உற்று ஏறி--(இந்திரனாகிய) மயில் மேற் பொருந்தி ஏறித், (தோயம்) கடல் நீரில் நின்ற சூரன் அழிந்து போம்படிப் போர் செய்த வேலனே!

(சோதி) சூரியனைக் காலையில் (போத) வரும்படி கூவுகின்றதும் அத் (தூவல்) அந்த இறகினை உடையதுமான கோழிக் கொடி கொண்டவனே!

(பாகு) சர்க்கரைக்கு ஒப்பான இனிமை கொண்ட சொற்களின் (பாகத்தாளை) பக்குவம் உடைய வள்ளியைப் (பாரித்து ஆர் நற் குமரேசா) விரும்பி உள்ளம் பூரித்த நல்ல குமரேசனே!

இப் பூமியில் **காமத்தூர்** என்னும் தலத்தில் (சீலம்) தூய்மை கொண்ட குழந்தைப் பெருமாளே! தெய்வப் பெருமாளே! (ஆரப் புணராயே)

———

5. முள்வாய்

993.

(உயிர் போகும் சமயத்தில்) (வீட்டிலுள்ள) மாதர்கள், பெற்ற மக்கள், (நான்) இருக்கும் (நாடு) ஊரார், (இனம்) சுற்றத்தினர் — (இவர்கள் யாவரும்) கும்புகூடியும், தனித் தனியாகவும், அங்கும் இங்கும் சென்று சென்று, (என்னைப் பற்றிப்) பேச்சுக்கள் பேச—

விண்மேல் நமன்க ரந்து மண்மே *லுடம்பொ ருங்க
மென்னு ளறிந்த டைந்து உயிர்போமுன்;
†பொன்னார் சதங்கை தண்டை மூந்நூல் கடம்ப ணிந்து
‡பொய்யார் மனங்கள் தங்கு மதுபோலப்-
பொல்லே னிறைஞ்சி ரந்த சொன்னீ தெரிந்த முங்கு
xபுன்னா யுளுங்க வின்று புகுவாயே;
oபன்னா ளிறைஞ்சு மன்பர் **பொன்னா டுறங்கை தந்து
பன்னா கணைந்து சங்க முறவாயிற்-
பன்னூல் முழங்க லென்று ††விண்ணோர் மயங்க நின்று
பண்ணூது கின்ற கொண்டல் மருகோனே;
முன்னாய் மதன்க ரும்பு வின்னேர் தடங்தெ ரிந்து
முன்னோர் பொருங்கை யென்று முனையாட-
மொய்வார் நிமிர்ந்த கொங்கை மெய்ம்மா தர் வந்தி றைஞ்சு
முள்வாய் விளங்க நின்ற பெருமாளே. (க)

---

* 'உடம்பு ஒருங்கு அமெல் நாள்' எனப் பிரிக்க; ஒருங்கல்—அடங்கல்.

† முருகவேளின் அணிகலன்கள்
—பாடல் 1277-அடிகள் 5-7 பார்க்க.

‡ 'மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே'—சம்பந்தர் 1-50-4.

x 'புல்நாய்'—'நாயிற் கடையாம் நாயேனை'
—திருவாசகம்-குழைத்த-8.

கவின்று—'கிளைக் கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு'
—(கவின்று—அழகு பெற்று)—திருமுருகா-29.

o பன்னாள் (தேவர்கோன்—இந்திரன்) இறைஞ்சினது:
'நிமலனை உன்னிப் பன்னாள் நெடுந்தவம் உழத்த லோடும்'
'நொந்தனை அளப்பில் காலம் நோற்றனை'
—கந்தபுரா. 1-3-32, 33.

°° 'பொன்னாடு உற அம் கை தந்து' எனப்பிரிக்க.

†† தேவர்கள் மயங்கச் சங்க நாதம் செய்தது—
"அரங்கர் சங்கோசையில் அண்டமெல்லாம்
வெருட்கொண் டிடர்ப்பட மோகித்து வீழ்ந்தனர்"
இவ் வரலாற்றைத் திருப்புகழ் 889-பக்கம் 596-599 கீழ்க் குறிப்பிற் பார்க்க.

மேலே — ஆகாயப் பரப்பிலிருந்து யமன் (கரந்து) கண்ணுக்குத் தெரியாமல் மறைவாக, மண்மேல் உள்ள இந்த உடம்பினின்றும் (உயிர்) அடங்கி நீங்கவேண்டிய அந்த மெலிவு நாளைத் தெரிந்துவர, என் உயிர்போவதற்கு முன்—

பொன்மயமான சதங்கை, தண்டை, முந்நூல் [முப்புரிநூல்—பூணூல்], கடம்பு இவைகளை அணிந்து, [பொய்யார்] பொய்யே பேசாத — மெய்ம்மையாளர்களின் மனங்களில் நீ வாசம் செய்து (அவர்களுக்கு உதவுவது) போல—

இந்தப் பொல்லாதவனாகிய நான் வணங்கி உன்னை வேண்டுகின்ற சொற்களையும் நீ [பொருட்படுத்தித்] தெரிந்துகொண்டு, [அழுங்கு] மனம் வருந்தும் இந்தப் [புல் நாய் உள்ளும்] இழிந்த நாயாகிய [அடியேன்] உள்ளத்திலும் [கவின்று] அழகுபெறப் புகுந்தருளுவாயாக.

பல நாள்களாக வணங்கி வரும் அன்பர்களாகிய [தேவர்கள்] தமது [பொன் நாடு] பொன்னுலகத்தை [உற] மீண்டும் அடைய—அங்கை தந்து—[அவர்கள் அழகிய கைவசம்] கொடுத்து உதவி செய்து, பன்னகணைந்து— பன்னகம்—பாம்பணையில் [அணைந்து] [படுக்கை கொண்டு], சங்கம்—[பாஞ்ச சன்னியம் என்னும்] சங்கை [உறவாயில்— வாயில் உற] வாயில் வைத்துப்—

பல நூல்களும் — பல சாத்திரங்களும் இச் சங்கத்தொனியில் முழங்குகின்றது என்னும்படித், தேவர்களும் மயங்கும்படியாக நின்று [பலவித] பண்களையும் ஊதின மேக வண்ணனும் திருமாலின் மருகனே!

முன்னாய் மதன்—மதன் முன்னாய்—மன்மதன் முன்னாக நின்று, தனது [கரும்பு வில்] — தனது கரும்புவில்லை நேர்தடம் தெரிந்து—நேராக [எய்ய வேண்டிய] இடத்தை அறிந்து, முன்பாக [ஓர்] ஒரு [பொருங்கை] [பொருகை] போர்செய்யும் தொழிலை மேற்கொண்டதுபோல, [முனையாட] போர்த்தொழிலைப் புரிய — மன்மதன் காலமும் இடமும் அறிந்து தனது போர்த்தொழிலைப் புரிய — அதாவது காம இச்சையை ஊட்ட

நெருங்கி ரவிக்கையுள் நிமிர்ந்துள்ள கொங்கையை உடைய உண்மைக் குணம் கொண்ட மாதர்கள் வந்து வணங்குகின்ற **முள்வாய்** என்னும் தலத்தில் விளக்கமுற நிற்கும் பெருமாளே! (நாய் உள்ளம் கவின்று புகுவாயே)

6. வாகைமா நகர்.

[திருவோத்தூர் சப்டிஸ்ட்ரிக்டில் **வாகை** என்னும் ஒரூர் இருக்கின்றது.] பாடல் 365-கீழ்க்குறிப்பு ‡பாடபேதத்தைப் பார்க்க.

994. காம இச்சை அற

தான தான தனத்த, தான தான தனத்த
தான தான தனத்த தனதான

*ஆலை யான மொழிக்கு மாளை யூடு கிழிக்கு
மால கால விழிக்கு முறுகாதல்-
ஆசை மாத ரழைக்கு மோசை யான தொனிக்கு
மார பார முலைக்கு மழகான;
ஒலை மேவு குழைக்கு மோடை யானை நடைக்கு
†மோரை சாயு மிடைக்கு மயல்மேவி-
ஊறு பாவ வுறுப்பி லூறல் தேறு கரிப்பி
லூர வோடு விருப்பி **லுழல்வேனை**;
‡வேலை யாக வளைக்கை வேடர் பாவை தனக்கு
மீறு காத லளிக்கு xமுகமாய-
மேவு வேடை யளித்து நீடு oகோல மளித்து
**மீள வாய்மை தெளித்து மிதண்மீது;

---

* ஆலை—கரும்பு 'ஆலையஞ் சிலைவேள் ஆகம் அழல்பட'
—கந்தபுரா 1-4-90.

† ஓரை—குரவைக்கூத்து—(பிங்கலம்)

‡ முருகவேள் வளையல் செட்டியாய் வள்ளியிடம் வந்தது
—பாடல் 612-பக்கம் 422 கீழ்க்குறிப்பு.

x 'முகமாயம்'—'வாவியில் உதித்த முக மாயக்காரனும்'
—வேளைக்காரன் வகுப்பு, பாடல் 199-பக்கம் 12 கீழ்க்குறிப்பு x.

** **நீடு கோலம் அளித்தது**—வேட்டுவக் கோலம், செட்டிக் கோலம், வேங்கைமரக் கோலம், தவக்கிழவர் கோலம், தெய்வ உருவம் ஆகிய கோலங்கள்.

(1) "**வேட்டுவக் கோலத்தைக்** கொடு குமரன் தோன்றினன்"
"**மாநுட நல்வடி வங்**கொடு நின்றான்"
—கந்தபுரா. 6-24-66, 82.

(2) "**செட்டி வடிவைக்** கொடு தினைப்புனமதிற் சிறுகுறப் பெண் அமளிக்குள் மகிழ்செட்டி"—திருப்புகழ் 215-அடி 8.

(3) "**வேங்கையின் உருவமாகி** வேற்படை வீரன் நின்றான்"
—கந்தபுரா. 6-24-75.

[தொடர்ச்சி 877 ஆம் பக்கம் பார்க்க]

6. வாகை மாநகர்

994.

(ஆலே) கரும்பு போன்ற மொழிக்கும், ஆளையே உள்ளூடறுக்கும் ஆலகால விஷம் போன்ற விழிக்கும்— காம இச்சை என்னும்

ஆசையைக்கொண்ட மாதர்கள் அழைக்கின்ற ஓசை கொண்ட குரலின் தொனிக்கும், முத்து மாலே அணிந்த பாரமான கொங்கைக்கும், அழகான

காதோலேக்கும், பொருந்திய குழையணிக்கும், நெற்றிப் பட்டம் அணிந்துள்ள [பெண்] யானையின் நடைபோன்ற நடைக்கும், [ஓரை] குரவைக் கூத்தில் சாய்வதுபோலச் சாய்ந்துள்ள இடைக்கும், நான் மோகம் கொண்டவனுகி,

(ஊறு) காம ஊறல் பாவு அவ் உறுப்பில்–பரவும் அந்த [உறுப்பில்] அவயவத்திலும், [அந்த] ஊறலேத் [தேறும்] அறியும் [கரிப்பில்] காரமான அநுபவத்திலும், [ஊர ஓடு] தினவுகொண்டு வேகமாகச்செல்லும் ஆசையிலேயே அலேச்சல் ஊறுவேனே!

வேலேயாக வளேக்கை [கைவளே வேலேயாக] கையில் வளேயலிடும் வேலேயைப் பூண்டவனுகி—வளே விற்கும் செட்டியாய் — வேடர்பாவை தனக்கு — வேடர் மகளாம் வள்ளிக்கு—மீறு காதல்—மிக்கெழும் ஆசையை ஊட்டின [முகமாய] மாயமுக!. மாயம் பூண்ட [மாயத்தால் மாநுட உருவம் பூண்ட] திருமுகத்தை உடையவனே!

பொருந்தும்படி [வேடை] வேட்கையை—காமநோயைத் தந்தும், பெருமை வாய்ந்த [கோலம்] அழகு உருவங்களேக் காட்டியும், மீண்டும் [இறுதியாக] உண்மையை அறிவித்தும், பரண் மீதிலே—

(தொடர்ச்சி) (4) "சைவநெறி நற்றவ விருத்த வேடமது கொண்டு
வரும் வேடரெதிர் சென்றுன்"—கந்தபுரா 6-24-94.

(5) "கருணே செய்து தொல் லுருவம் காட்டினனே"
"முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கொன்னர்வை வேலும் குலிசமும் ஏனேப்படையும்
பொன்னர் மணிமயிலும் மாகப் புனக்குறவர்
மின்னுள்கண் காண வெளிநின் றனன் விறலோன்"
—கந்தபுரா 6-24-115, 116.

[தொடர்ச்சி 878 ஆம் பக்கம் பார்க்க.]

மாலை யோதி முடித்து *மாது தாள்கள் பிடித்து
†வாயி லூறல் குடித்து மயல்தீர-

வாகு தோளி லணைத்து மாக மார்பொழி லுற்ற
வாகை மாநகர் பற்று பெருமாளே. (க)

---

7. ‡விசுவை.

995. திருவடியைப் பெற

தனன தனந்த தனன தனந்த
தனன தனந்த தனதான

திருகு செறிந்த குழலை வகிர்ந்து
முடிமலர் கொண்டொ ரழகாகச்-

செயவரு துங்க முகமும் விளங்க
முலைகள் குலுங்க வருமோக;

அரிவையர் தங்கள் வலையில் விழுந்து
அறிவு மெலிந்து தளராதே-

[877 ஆம் பக்கத் தொடர்ச்சி]

** வள்ளியிடம் வாய்மை தெளித்தது — "நீ முற்பிறப்பில் திருமாலின் மகள். எம்மை அணையவேண்டித் தவஞ் செய்தாய்; அதனால் இப்போது உன்னை அடைந்தேன்"—என முருகவேள் உண்மையை வள்ளிக்கு விளக்கினார்.

"உம்மை யதனில் உலகமுண்டோன் தன் மகள்நீ
நம்மை அணையும்வகை நற்றவஞ் செய்தாய்; அதனால்
இம்மை தனிலுன்னை எய்தினோம் என்றெங்கள்
அம்மை தனைத்தழுவி ஐயன் அருள்புரிந்தான்"
—கந்தபுரா 6-24-119.

---

* "குறமகள் பாதம் வருடிய மணவாளா"
"குறத்தி பதத்துணை வருடி"—திருப்புகழ் 225,296.

† "வாயிதழின் சுவையால்"—திருப்புகழ் 1002.

‡ இது வடக்கே உள்ள விசாக பட்டினம் தானோ வேறு தலமோ தெரியவில்லை: அருணகிரியார் வட நாட்டுத் தலங்களையும் தரிசித்தனர் என்பதை அவருடைய பாடல்கள் 655-659

[தொடர்ச்சி 879 ஆம் பக்கம் பார்க்க]

மலர் மாலையை வள்ளியின் கூந்தலிலே முடித்தும், (அந்த) மாது—வள்ளியின் காலை வருடியும், அவள் வாயிதழ் ஊறலைப் பருகியும்—மோகம் தீர—

அழகிய தோள்களில் (அவளை) அணைத்தும், ஆகாயத்தை அளாவும் சோலைகள் உள்ள **வாகை** மாநகரில் வந்து விருப்புடன் வீற்றிருக்கும் பெருமாளே!

(விருப்பில் உழல்வேனே)

---

7. விசுவை

995.

திருகுபில்லை அணிந்துள்ள கூந்தலை (வகிர்ந்து) வாரி வகுத்து, முடியில் மலர் அணிந்து, ஒருவகையான அழகு விளங்கச்

செய்வதால் வரும் சிறப்பான முகம் விளக்கம் தர, கொங்கைகள் குலுங்க வருகின்ற, மோகத்தைத் தரும்

மாதர்களின் வலையிலே விழுந்து, அறிவு மெலிவுற்று, (நான்) சோர்வு அடையாமல்

தெளிவாக்குகின்றன. மேலும் பாடல் 819-ல் **வட விஜயபுரந்**தனில் மேவிய பெருமாளே'' என்ற அடியில், 'வட' என்ற குறிப்புளதால் இந்தத் தலம் விஜயவாடா என இப்போது வழங்கும் (**Bezwada**) என்றும் தோன்றுகின்றது. இங்கே மலையடிவாரத்தில் 'அறுமுகனார்' கோயில் ஒன்று இருக்கின்றது. அருட்கவி சேதுராமனார் அந்த முருகரைத் (22—8—1954 தேதியில்) தரிசித்தபொழுது பின்வரும் அடிகள் அவர் பாடல்களில் உதித்துள.

1. ''அஜவாகன லக்ஷண! **உத்தர**
விஜயாபுரி மெத்தவு மெச்சிய மந்தகாசா''
2. ''கிருட்டி ணாநதி நீளலை மோதிட
வடக்கில் வாழ்**விஜ யாபுரி** மேவிய பெருமாளே''

மேலும், இந்த வட விஜயபுரத்தைத்தான் அருணகிரியார் பாடியுள்ளார் என்பதும்—

'அருணகிரி பரவுமலை அடிவாரத்—
தறுமுகவ விஜயபதி மருகோனே:
வருமடியர் தொழுதமயில் மிசையோனே!
வட விஜய புரமருவு பெருமாளே'

என வரும் சேதுராமனார் வாக்கால் தெளிவாகின்றது.

அமரர் மகிழ்ந்து தொழுது வணங்கு
னடியிணை யன்பொ டருள்வாயே ;

வரையை முனிந்து விழவெ கடிந்து
வடிவெ லெறிந்த திறலோனே-

*மதுரித செஞ்சொல் குறமட மங்கை
நகிலது பொங்க வரும்வேலா ;

விரைசெறி கொன்றை யறுகு புனைந்த
விடையரர் தந்த முருகோனே-

விரைமிகு †சந்து பொழில்கள் துலங்கு
விசுவை விளங்கு பெருமாளே.

* வள்ளியின் செஞ்சொல் — 'இந்தளாம்ருத வசனம்', 'சஞ்சிதாம்ருத வசனம்'; 'பண்கள் தங்கு அடர்ந்த இன்சொல்'; 'நல்ல கொல்லியைச் சேர்க்கின்ற சொல்' [திருப்புகழ் 289, 79, 96, கந்தரலங்காரம் 10] என்றெல்லாம் வியக்கப்பட்டுளது.

† "சந்தமர் பொழிலணி சண்பை"—சம்பந்தர் 3-18-11.



தேவர்கள் மகிழ்ச்சியுற்றுத் தொழுது வணங்குகின்ற உனது திருவடியிரண்டையும் அன்புடனே (எனக்குத்) தந்தருளுவாயாக ;

கிரௌஞ்சகிரிமேற் கோபித்து, அது அழிபட்டு விழும்படிக் கண்டித்துக், கூரிய வேலை அதன்மேற் செலுத்தின திறமை வாய்ந்தவனே !

இனிமை வாய்ந்த செவ்விய சொற்களை உடைய குறமகளாம் அழகிய வள்ளியின் (நகில்) கொங்கைகள் பூரிக்க அவ்விடம் சென்ற வேலனே !

நறுமணம் கொண்ட கொன்றை, அறுகு இவைகளைச் சூடியுள்ள இடபவாகனராம் (அரர்) சிவபிரான் அருளிய குழந்தையே !

வாசனை கொண்ட சந்தன மரச் சோலைகள் விளங்கும் **விசுவை** என்னும் தலத்தில் விளங்கி வீற்றிருக்கும் பெருமாளே !

(அடியிணை அன்பொ டருள்வாயே)

வேலுமயிலுந் துணை.

உ

வேலு மயிலுந் துணை.

முருகவேள் பன்னிரு திருமுறை

பொருளடக்கம் — (தொகுதி 3, 4.)

ஆக—பாடல் 340+2

ஆக மொத்தம் பாடல் 544+5

உ

வேலு மயிலுந் துணை.

முருகவேள் பன்னிரு திருமுறை — தொகுதி 4.

✹

பாட்டு முதற்குறிப் பகராதி.

உ

வேலு மயிலுந் துணை.

முருகவேள் பன்னிரு திருமுறை

விஷய ஆராய்ச்சி — (தொகுதி 3, 4.)

ராமாயண விஷயங்கள்

ராவணன்

❀ ❀ ❀

தொகுதி 4 : பிழைதிருத்தம் முதலிய

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
12	—	1	மர்காணத்திற்ஞ்	மாகாணத்திற்
14	660	13	குணரசசிதர்	குணர்சசிதரர்
24	—	4	கிளளே	கிள்ளை
33	— குறிப்புவரி	16	மாறுடப்	மாநுடப்
,,		,,	பெண்டினர்க்	பெண்டிரைக்
35	,,	1	சாங்கம்	சார்ங்கம்
49 —		வரி 26	அசைந்தொலிக்கம்	அசைந்தொலிக்கப்
64	679	1	காட்டி	காடடி

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
77	—	19	ரௌ்வதால்	கொள்வதால்
92	690	1	கநிய	கரிய
104	697	1	கொறற	கொற்ற
,,	— குறிப்புவரி	4	சூரருங்	சூருரங்
119	—	26	முனோர்ள்க	முனோர்கள்
151	—	21	அணைந்தவளே	அணைந்தவனே
170	— குறிப்புவரி	20	அம்ப	அம்பு
,,	—	27	பக்கம் 170	பக்கம் 171
172	—	1	எள	என்
214	—	18	குமார	குமரா
218	743 குறிப்புவரி	2	658	668
224	746	4	பொடடணி	பொட்டணி
228	—	1	மகோரர்	மகேசுரர்
,,	—	2	அரீ	அரி
230	வரி 1-ல் சேர்க்க		திருவெண்ணெய் நல்லூர் ரோட் ஸ்டேஷனிலிருந்து வடக்கு 4 மைல்	
246	வரி 13-ல் சேர்க்க		'திருப்புகழ்' எண் 234 பாடலையும் இத்தலத்துக்கு உரியதாகக் கொள்ளலாம்.	
312	—	6	பேரால்	போரால்
314	— குறிப்புவரி	4	வேலா	வேலவ
320	—	வரி 16	கெர்ண்டல்	கொண்டல்
322	782 ஈற்றடிக்குக் கீழ்க்குறிப்பு சேர்க்க.		'கரியவ னிளையத் தேவி பார்ப்பதி யருள்செய்த குமரக்கீரர் பாட்டியல் கருணைகொடருளிப் பாடல் கேட்-டருள்பெருமாளே' என்றும் பாடம்	
491	— குறிப்புவரி	8	முவிலைச்	மூவிலைச்
494	—	வரி 8	வடகிழக்கு	தென்கிழக்கு
598	—	வரி 14	காக்ஷி	காட்சி
616	896	6	வனம	வனம்
648	— குறிப்புவரி	13	அடிகள்	அசடிகள்
644	— குறிப்புவரி	9	குறைகள்	குறமகள்

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
665	— குறிப்புவரி	4	1–78–5	சம்பந்தர் 1–78–5
700	— குறிப்புவரி	3	க்ாக்ஷி	காட்சி
714	— வரி	3	சவுபக்கிய	சவுபாக்கிய
784	— குறிப்புவரி	9	480	4—80
827	— வரி	10	கற்றருள்வாயே	சற்றருள்வாயே
875	— கடைசிவரி		உள்ளம்	உள்ளும்
880	— குறிப்புவரி	1	சஞ்சி	ரஞ்சி

மதிப்புரைகள்

கலைமகள் — ஜூலை 1954

முருகவேளின் துதி நூல்களில் மிகச் சிறப்பானது திருப்புகழ். அருணகிரிநாதர் திருவாக்காகிய அது மனத்தை உருக்கும் தன்மையை உடையது. அவர் பதினாறாயிரம் திருப்புகழை அருளினார் என்று தெரிகிறது. ஆனால் அவ்வளவு பாடல்களும் கிடைக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க நீதிபதி வடக்குப்பட்டு த. சுப்பிரமணிய பிள்ளை என்ற முருகன் அடியார் திருப்புகழ்ப் பாடல்களைத் தொகுக்கத் தொடங்கினார். அவருடைய பக்தியும் விடா முயற்சியும் வென்றன. கிட்டத்தட்ட 1300 பாடல்களைத் தொகுத்துத் தக்க புலவர்களின் உதவியைக் கொண்டு வெளியிட்டார். அதன் பின் திருப்புகழைப் பாடுவது தமிழ் நாட்டில் அதிகமாயிற்று.

அவருடைய குமாரரும் நல்ல தமிழ்ப் புலவரும் திருத்தணிகை முருகன் திருவடி நினைவையே மூச்சுக் காற்றாகக் கொண்டிருப்பவருமாகிய தணிகைமணி திரு **வ. சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள்** திருப்புகழ்ப் பாடல்களை நன்கு ஆராய்ந்து தம் தந்தையாருக்குப் பின் புதிய பதிப்பைக் கொண்டு வந்தார். அதில் மிக அருமையான ஆராய்ச்சிகளைச் சேர்த்தார்.

இப்போது அப்பெரியார் திருப்புகழ் முழுமைக்கும் உரை எழுதும் பெரும் பணியை மேற்கொண்டிருக்கிறார். அவருடைய தமிழ்ப் புலமையும் பல காலம் திருப்புகழில் ஊறிய அநுபவமும் இந்தப் பணிக்கேற்ற தகுதியை அவருக்கு உண்டாக்கியிருக்கின்றன. இதை வெளியிடுவதை ஒருநல்லதொண்டாகக்கொண்டு **ஸ்ரீமதி மீனாட்சி கல்யாணசுந்தரம்** இரண்டாவது தெரு, கோபாலபுரம் நடத்தி வருகிறார்கள். திருப்புகழ் இரும்புக் கடலை போன்றது என்பவர்கள் கூட இந்த உரையைப் படித்தால் எளிதிலே பொருளைத் தெரிந்து கொள்ளலாம். அடிக் குறிப்பில் பல அரிய இலக்கிய மேற்கோள்களும் மரபுச் செய்திகளும் இப் பதிப்பில் வெளியாகின்றன.

தமிழ் நாட்டில் உள்ளார் ஆதரிக்க வேண்டிய தொண்டு இது.

கல்கி 11—7—1954

தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான் மீது எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் தீந்தமிழ்ப் பாமாலை புனைந்து மனம் உருகித் துதித்திருக்கின்றனர். அவர்களுள் தலை சிறந்த பக்த மணியான அருணகிரி நாதர் அகங் குழைந்து இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் அருமையான சந்தங்களில் அமைந்திருப்பதால் தனிச் சிறப்பு வாய்ந்தவை. திருப்புகழ்ப் பாடல்கள் ஓசை நயமும், பொருள் நயமும் கொண்டு முருகனடியார்களின் உள்ளங்களை எத்தனையோ காலமாகக் கனியவைத்து வருகின்றன. உரை யெழுதும் ஒப்பற்ற நற்பணியை மேற்கொண்டு தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை எம் ஏ. அவர்கள் தொண்டாற்றிவருகிறார்கள். பிள்ளையவர்கள் முருகனிடம் மாறாத நேயம் பூண்டவர்; தொன்மையான தமிழ் நூல்களும் பயின்றவர்; ஆராய்ச்சிப்புலமை மிக்கவர். அவரெழுதிய உரை சிறப்பியல்போடு விளங்குவதில் வியப்பில்லை யல்லவா?

ஆனந்தவிகடன் 30—10—1954

முருகவேளின் திருப்புகழில் ஈடுபட்ட அன்பர்கள் யாவரும் களிகொள்ளும் சந்தர்ப்பமாக இந்த அருமையான வெளியீடுகள் வந்துள்ளன. 'அழியாவரம் தரும்' ஆறுமுகன் அருளை அருணகிரியார் நமக்குத் திருப்புகழ் வாயிலாக அளித்திருக்கிறார். திருப்புகழ் எனும் பொக்கிஷம் பூஜையில் இருக்கும் வீடெல்லாம் மங்களம் பொங்கும், அதைப் போன்றதொரு ரக்ஷை வேறெதுவும் இல்லை என்பது முருகனிடம் உள்ளம்வைத்த நேயர்களின் அசையாத துணிபு

பாடப் பாட இன்பம் பயக்கும் திருப்புகழ்த் தேனை மூலமும் உரையுமாக வெளியிட்டு பக்தருலகுக்குப் பெரும் சேவைசெய்திருக்கிறார்கள்பதிப்பாளர்கள். இப்பதிப்புகளின் தனிப்பட்டவிசேஷங்கள் உரையும் ஆராய்ச்சிக்குறிப்புகளும். உரையாசிரியர் வாசக அன்பர்களின் நலம்பொருட்டு மிகுந்த சிரத்தை கொண்டு தத்துவ விளக்கங்கள், அரிய சரித்திர வரலாறுகளைச் சேகரித்துத் தந்திருக்கிறார். பழந் தமிழ்ச் சங்க நூல்களிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும், பிரபந்த நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டியும் பொருளைத் தெளிவாகவிளக்கிப் பக்திச்சுவையுடன் கூறியும் இந்தநூலை அனைவருக்கும் இன்றியமையாத ஒரு அருள்களஞ்சியமாக்கி இருக்கிறார். எளிதிலே பொருள் விளங்குகிறது. எந்தப் பக்கத்தைத்திருப்பினாலும் நாதபிந்துகலாதியும், தீபமங்கள ஜோதியுமான ஞானகுரு முருகவேளின் பெருமை, அருண

கிரியின் அருள்வர்க்கு, பதிப்பித்தோரின் தமிழ்த்தொண்டு இவைகளையேகாண்கிறோம். மூன்றுதொகுதிகள் வெளியாகியுள்ள சிறப்பு இதர தொகுதிகளையும் துரிதமாகக் காண ஆவலைத் தூண்டுமென்பதில் சந்தேகம்இல்லை. மிகுதியுள்ள திருமுறைகள் வெளிவர ஏனைய தமிழன்பர்களும் முருக பக்தர்களும் உதவ வேண்டும் என்றால், இந்தத் தொகுதிகளுக்குக் காண்பிக்கப்படும் ஆதரவிலேயே அது இருக்கிறது. நல்ல முயற்சிகளுக்குத் தமிழ் நாட்டில் என்றும் ஆதரவு குறைந்ததில்லை என்ற அஸ்திவாரத்திலே தோன்றிய இந்த நூல்களை வரவேற்கிறோம்.

H. R. KRISHNAN, I.C.S., New Delhi, 11-11-1954

'...... பெருமுயற்சியுடனும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும் எழுதப் பட்டுள்ள உரை ......'

J. M. Somasundaram Pillai B.A., B.L., Annamalai University

24—11—1953 :—'...... உயர்திரு. தணிகைமணி அவர்களது செம்பொருள் திருப்புகழுக்கு மிக்க ஒளியைக் கொடுக்கின்றது......'

அமிர்தசுரபி—மே. 1954

பக்திப் பாடல் திருப்புகழ். தமிழ் மணம் கமழும் அற்புதப் பாடல்கள். முருகனின் புகழை மட்டும் பாடுவதோடன்றி, முருகன் அருளைப் பெறும் வழி கூறும்—தீய வழியில் செல்வதா லுண்டாகும் பாப வினையைக் காட்டி அவனருள் பெற வழி கூறும்—பாடல்கள்.

இன்ப ஓசையின் சிறப்பை எப்படிக் கூறுவது? கம்பீரமான புரவியின் மீதமர்ந்து செல்லும் இன்பமும், யானை நடப்பது போன்ற அசைவும், மானின் துள்ளலும், மின்னலின் வெட்டும் திருப்புகழ்ப் பாடல்களில் காணலாம்.

எளிதான பதங்கள். ஆனால், சேர்ந்திருக்கும் தோற்றமோ, நம்மைப் பயங்காட்டும். பாடினாலோ சப்த ஜாலங்கள் எழும். பொருளோ வேதத்தின் சாரம்.

ஞானோபதேசம் நிறைந்த திருப்புகழ்ப் பொருள் கூறுபவர் யாரும் இல்லையோ எனப் பலர் ஏங்கியதுண்டு.

அருமைக் பொக்கிஷத்தின் பெருமை உயர அரும்பத உரை இருப்பின் நன்றன்றோ! அத் திருப்பணியைத் தான் தணிகைமணி **வ. சு. செங்கல்வராயப்பிள்ளை** அவர்கள் செய்ய முற்பட்டிருக்கிறார். தமிழ் வாழ, வளர அதுவன்றோ வழி. இந்தப் பணி மகத்தானது. தமிழ்ச் செல்வத்தைத் தமிழ் மக்கள் அநுபவிக்க இத்தகைய தொண்டே உதவும்.